ஜைன முனிவர்கள் இயற்றிய

நாலடியார்

மூலமும்

செம்பூர் வித்துவான்

வீ. ஆறுமுகஞ்சேர்வை அவர்கள் இயற்றிய

விரிவுரையும்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

UG 7214

ஜைன முனிவர்கள் இயற்றிய

நாலடியார் மூலமும்

செம்பூர் வித்வான்

வீ. ஆறுமுகஞ் சேர்வை அவர்கள் இயற்றிய

விரிவுரையும்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

ISBN : 978-81-7090-438-0

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 395

திருவள்ளுவராண்டு 2044, ஆனி - சூலை - 2013

நூல்	:	ஜைன முனிவர்கள் இயற்றிய நாலடியார் மூலமும் செம்பூர் வித்வான் வீ. ஆறுமுகஞ்சேர்வை அவர்கள் இயற்றிய விரிவுரையும்
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு - சூலை 2013
பக்கம்	:	16 + 960
தாள்	:	டிஎன்பிஎல் மேப்லித்தோ 16 கிலோ
அளவு	:	டெம்மி 1/8
நூற்கட்டு	:	முழுக் காலிக்கோ கட்டு
படிகள்	:	1200
விலை	:	உரூ. 680.00
ஒளியச்சு	:	முல்லைபாரதி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ், தெற்கு வீதி, தஞ்சாவூர்.
அச்சு	:	பவர்மேன் பிரிண்டர்ஸ், சென்னை.

முனைவர் ம. திருமலை
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

அணிந்துரை

தமிழின் தொன்மைமிக்க நூல்களாகிய தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் ஆகியவற்றையடுத்துப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சிறப்பு வாய்ந்தவை. நீதிநூல்கள் எனப் பேசப்படும் இப்பதினெட்டு நூல்களுள் தலைமை வாய்ந்ததும், காலத்தை வென்று நிற்பதும், மிகப்பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதும், உலகப்பொதுமறை எனப் போற்றப்படுவதுமாகிய திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்தும் எல்லோருடைய உள்ளங்களிலும் நின்று நிலைத்து ஆட்சி செய்யும் பெற்றித்தாய்த் திகழ்கிறது.

இதனையடுத்து ஏனைய பதினேழு நூல்களுள் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்று ஒளிரும் நூல் நாலடியார் என்பதில் ஐயமில்லை. சைன முனிவர்கள் பலரால் எழுதப்பட்ட பாடல்கள் அடங்கிய இந் நீதிநூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பால்களை உடையது; நாற்பது அதிகாரங்களில் நானூறு பாடல்களைக் கொண்டிலங்குவது. பாடல்களனைத்தும் வெண்பாக்களாலானவை. எளிய பதம், இனிய உவமைகள், படித்தவுடன் பளிச்சென உள்ளத்தில் பதியும் கருத்துகள், உலகியலை உள்ளபடி எடுத்துக்கூறி உயர்வுக்கு வழிகாட்டும் நீதிநெறிகள் ஆகியவற்றால் எல்லோராலும் பேசப்படும் பெருமை நாலடியாருக்கு உண்டு. இதற்கு உரைகள் பல இருப்பினும் செம்பூர்

வித்துவான் வீ. ஆறுமுகஞ்சேர்வை அவர்கள் எழுதியுள்ள உரை தனிச்சிறப்பு வாய்ந்த உரையாகும். ஒவ்வொரு பாடலுக்குமுரிய பொருளைச் சொல்லிச் செல்வதோடு மட்டும் இது அமைந்துவிடவில்லை. ஒவ்வொரு அதிகாரத் திற்கும் உரிய பெயர் - பொருள் விளக்கம் அதிகாரத் தொடக் கத்திலேயே விரிவாகத் தரப்படுகிறது. இதனால் ஒவ்வொரு அதிகாரமும் கூற முற்படும் மையக்கருத்தினை முதலிலேயே தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிகிறது. பின்பு ஒவ்வொரு பாடலும் அம் மையக்கருத்தினைக் காரண காரியங்களோடு விரித்துக் கூறும் பாங்கையறிந்து நன்கு பயன்கொள்ளும் வாய்ப்பு அமைகிறது. பாடல் ஒவ்வொன்றிற்கும் பதவுரை, கருத்துரை, தெளிவுரை, விரிவுரை, இலக்கணக் குறிப்புகள், ஒப்புமைப் பாடல்கள் என அனைத்தையும் அளித்துள்ளார் உரையாசிரியர். இஃது அவரின் ஆழ்ந்த புலமையை எடுத்துக் காட்டுகிறது. அத்துடன் நாலடிப்பாடல் நவிலும் கருத்தை ஐயந்திரிபற நாம் அறிந்துகொள்ளவும் உதவுகிறது. சான்றுக்கு ஒரு பாடலின் உரைவளத்தில் ஒரு பகுதியை மட்டுமாவது இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

"அரும்பெறல் யாக்கையை..." என்று தொடங்கும் நான்கு வரிப் பாடலுக்கு (இயல் - 1, அதிகாரம் - 4 - அறன் வலியுறுத்தல், பாடல் எண். 34) உரையாசிரியரால் அளிக் கப்பட்டிருக்கும் உரை, விளக்கம் மட்டும் இந்நூலில் நான்கு பக்க அளவில் அமைந்துள்ளது. பாடலில் உள்ள ஒவ்வொரு சொல்லிற்கும் பதவுரை அளிக்கும் உரையாசிரியர் அடுத்து, "மனிதர் பெறுதற்கரிய உடம்பினைப் பெற்ற பேற்றினால் அஃதழியுமுன் பெரிய பயனாகிய தர்மத்தைத் தேடிக் கொள் ளக் கடவர்; ஏனெனில் அத்தருமமானது கரும்பிலுள்ள சாற் றினைப் போலப் பின்னர்ப் பல இன்பங்களைத் தந்து உதவி செய்யும்; உடம்பானது சாற்றையுதவி ஒழியும் கரும்பின்

சக்கையைப் போன்று தருமப் பயன் நிற்க அழிந்துபோகும் என்பது இதன் கருத்து'' என்று கருத்துரையைத் தருகிறார். இக்கருத்துரையை மேலும் தெளிவுறுத்தும்விதமாக, ''கரும்பானது உற்பத்தியாகும்போது மதுரமான சாற்றை உடன் கொண்டு வளர்கின்றது; முதிர்ந்தபின் தன்னை வளர்த்தார்க்குப் பயனாகிய சாற்றைக் கொடுத்துவிட்டுச் சக்கையாகி விடுகின்றது; அச்சாறு பின்னால் அவர்க்கு வெல்லமாகியும், கற்கண்டாகியும் பலவழிகளில் பயன் பட்டு இனிமையைத் தருகின்றது; சக்கையோ ஒரு பயனு மின்றிக் கழிந்து போகின்றது. இதைப்போல் மனிதர் பெற்ற தேகமானது அறத்தைத் தேடுதற்கிடனாயிருந்து, சேர்த்து, முடிவில் அதனை நிலைபெறச் செய்து பிணமாகிவிடும்; அத் தருமமானது அவர்க்கு மறுமையில் சுவர்க்காதி இன்பங் களையெல்லாம் நல்கும்; இறந்தவுடம்போ ஒரு பயனு மின்றி ஒழிந்துபோகும். ஆதலின், அவ்வுடம்புக்குக் கரும் பின் சக்கையும் தருமத்திற்குக் கரும்பின் சாறும் உவமை யாகக் கூறப்பட்டன. இங்ஙனம் கூறியது உவமையணி....'' என்றெல்லாம் விளக்கமளிக்கிறார். இதனைத் தொடர்ந்து இக்கருத்தினை உறுதிப்படுத்தும் முகத்தான் சீவகசிந்தா மணி, ஔவையார் பாடல், பழமொழி நானூறு, அறநெறிச் சாரம், வளையாபதி ஆகியவற்றிலிருந்தெல்லாம் ஒப்புமைச் செய்யுள்களை எடுத்துக்காட்டுகிறார். இதனையடுத்து இலக் கணக் குறிப்புகளையும் பொருள்கோள் முறைமைகளையும் விளக்குகிறார். இங்ஙனம் ஒவ்வொரு பாடலுக்கும் இவர் எழுதியுள்ள உரையும் விளக்கமும் ஒரு கருவூலமாய்த் திகழ் கிறது. இந்தக் கருவூலத்தில் நிறைந்து கிடக்கும் தமிழ்ச் செல்வங்களை அனைவரும் அடைந்து இன்புறல் வேண்டும் எனும் சீரிய நோக்கில் தமிழ்ப் பல்கலைக்கழகம் இந் நூலினை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறது.

தமிழறிந்தோர் இதனுட் புகுந்து கொள்ளை இன்பம் பெறலாம்; தமிழறிய முனைவோர் ஐயந்திரிபற அறிந்து புலமை பெறலாம்; தமிழிலக்கிய இலக்கணக் கடலில் நீந்த விரும்புவோர் நீந்திக் களிக்கலாம்; மூழ்கி முத்துமெடுக்க லாம்; அறநெறியுணர்ந்து வாழ்க்கையை அழகிதாய் ஆக்கிக் கொள்ள விழைவோர் அங்ஙனமே பயனுறலாம். இவ்வகையில் நாலடிப் பாடல்களும் செம்பூர் வித்துவான் வீ. ஆறுமுகஞ்சேர்வை அவர்களின் உரைவளமும் தெவிட் டாத தேன்பாகாய் - தெள்ளமுதாய் - செந்தமிழாய் இனிக் கின்றன. எனவே, நூலுள் நுழையுங்கள்; தமிழின்பம் நுகருங் கள் என அனைவரையும் அன்போடு அழைக்கிறேன். அச்சுப் பணியில் ஆர்வங் காட்டிப் பணியாற்றிய பதிப்புத்துறை இயக்குநர் திரு. வை. கண்ணபுரக்கண்ணன், பணியாளர்கள், கணினியச்சு செய்த நிறுவனத்தார், அச்சகத்தினர் அனைவருக் கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முகவுரை

'நாலடியார்' என்னும் இந்நூலானது, ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்ததாகும். முன்னொரு காலத்தில், தமிழ் நாட்டில் ஜைன மதம் மிகச் செல்வாக்கடைந்து தமிழ் நாட்டரசர்களாலும் ஆதரிக்கப் பட்டு வந்தபோது, ஜைனர் குடியேறியிருந்த நாடுகளில் கொடிய பஞ்சமுண்டாயிற்று. அப்பஞ்சத்தின் கொடுமை யைச் சகிக்க முடியாமல் ஜைன முனிவர் எண்ணாயிரவர் தங்கள் நாடுகளைவிட்டு வெளியேறித் தங்களை ஆதரிக்கத் தக்கவன் பாண்டியனே யென்றுணர்ந்து, பாண்டி நாடடைந் தனர். அவர்கள் எல்லோரும் தமிழிலும், வடமொழியிலும் மிக்க பாண்டித்தியமுடையவர்கள். ஆதலின், பாண்டியன் அவர்களுடைய இரு மொழிக் கல்வித்திறமையை யுணர்ந்து அவர்களை வரவேற்று அன்புடன் ஆதரித்துத் தனது சபைக்கு அலங்காரமாயிருக்குமாறு செய்தனன். பன்னாட்கள் சென்ற பின் அம்முனிவர்களுடைய நாடுகளிற் பரவியிருந்த பஞ்சம் நீங்கிச் செழிப்புண்டாயிற்று. அப்போது அவர்கள், தங்களின் இருப்பிடங்கட்குச் செல்ல விருப்பமுற்று அக் கருத்தினைப் பாண்டியனுக்குத் தெரிவித்தனர். பாண்டியன், அவர்களைப் பிரிவதற்கு மனமிசையாததால் அவர்களுக்கு விடை கொடாது காலங் கடத்திவந்தனன். அஃதுணர்ந்த அம் முனிவர்கள், பாண்டியனிடம் சொல்லாமலே போய்விடத் துணிபு கொண்டு, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கினையும் பற்றிய கருத்துக்களில்

ஒவ்வொரு செய்யுளும் ஒவ்வொரு கருத்தை விளக்கத்தக்க விதத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வெண்பாவைப் பாடி ஒவ்வொரு சிறிய ஏட்டில் எழுதி, ஒரு நாளிரவில் தங்கள் தங் களுடைய பீடத்தின் கீழ் வைத்துவிட்டு ஒருவருமறியாமல் தங்கள் நாடுகளுக்குச் சென்றுவிட்டனர்.

மறுநாட் காலையில் பாண்டியன், அவர்களைக் காணாமலும், அவர்கள் சென்றவிடம் தெரியாமலும் வருந்தி, அவர்கள் தங்கியிருந்த இடத்தை ஏவலாளரைக் கொண்டு பரிசோதிக்கும்படி செய்தான். அவ்வாறு பரிசோதித்தபோது, அம்முனிவர்களால் செய்யுட்கள் எழுதிவைக்கப்பட்ட ஏடுகள் அவர்களுடைய ஆசனங்களின் கீழ் அகப்பட்டன. அவற்றைப் பாண்டியன் பார்த்து, அவர்களைப் பிரிந்த வருத்தத்தால், வையையாற்றின் வெள்ளத்தில் எறியும்படி பணியாளர்க்குக் கட்டளையிட்டான். அவர்களால் அவ் வாறே அவ்வேடுகள் எறியப்பட்டன. அங்ஙனம் எறிந்த போது அவற்றில் நானூறு பாடல்களுள்ள ஏடுகள் வெள்ளத் தில் எதிரேறிச் சென்றன. அவற்றின் மகிமையைப் பாண்டி யன் கண்டு வியப்புற்று, அவற்றை எடுத்துச் சேர்த்து ஒரு நூலாக அமைத்து, அந்நூலுக்கு 'நாலடியார்' என்று பெயர் சூட்டினன். அதுவே இந்நூலாகும். இவ்வரலாற்றினை,

''மன்னன் வழுதியர்கோன் வையைப் பேராற்றின்
எண்ணி யிருநான்கோ டாயிரவர்-உன்னி
எழுதியிடு மேட்டி லெதிரே நடந்த
பழுதிலா நாலடியைப் பார்.''

என்னும் ஒரு தனிச் செய்யுள் விளக்கும்.

இக்காலத்தில், ஏடுகள், வெள்ளநீரில் எதிரேறிச் சென்றனவென்பதில் சிலருக்கு நம்பிக்கையில்லாதிருக்க லாம். இஃதெவ்வாறாயினும் ஆகுக. எண்ணாயிரம் செய்யுட் களிற் சிறந்தனவாகக் காணப்பட்ட நானூறு செய்யுட்களைப்

பாண்டியன் தேர்ந்தெடுத்துக் கொண்டானெனக் கொள்வது நேர்.

பிற்காலத்தில், 'பதுமனார்' என்னும் சிறந்த புலவரொருவர், இந்நூலுக்கு, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களும், பதினொரு இயல்களும், பப்பத்துச் செய்யுட்களைக் கொண்ட நாற்பது அதிகாரங்களும் வகுத்துச் சிறந்த உரை யொன்றும் இயற்றியருளினார். இவ் வரலாற்றினை, பழைய ஏட்டுப் பிரதியொன்றில், பிற்காலத்துப் புலவர் ஒருவரால் எழுதப்பட்டிருந்த,

"வளங்கெழு திருவொடு வையக முழுதும்
உளங்குளி ரின்பத் தின்ப முவப்ப
வண்ண பெருஞ் சிறப்பின் மாதவம் புரிந்தாஅங்
கெண்பெருங் குன்றத் திருந்தவ முனிவர்
அறம்பொரு ளின்பம் வீடெனு மிவற்றின்
திறம்பிற ரறியுந் திறத்தை நாடிப்
பண்புற வெடுத்துப் பாங்குறப் பகர்ந்த
வெண்பா வியலெண் ணாயிர மவற்றுட்
பாரெதிர் கொண்டு பரவி யேத்த
நீரெதிர் வந்து நிறையணி பெற்ற
மேனாற் றகையின் விதிமுறை பிழையாஅ
நானூ றவற்றி னயந்தெரிந் தோதிய
மதுமலர்த் தண்டார்ப் பதுமன் றெரிந்த
வையமில் பொருண்மை யதிகா ரந்தாம்
எய்யா நலத்த வெண்ணைந் தவற்றுள்
அறவியல் பதின்மூன் றரசர்க் குரிய
பொருளிய லிருபத் தொருநான் கின்ப
மான்ற வகையைம் மூன்றெை மொழிந்தனன்
சான்றோ ரேத்துந் தருமத் தலைவனே."

என்னும் அகவற்பா உணர்த்தும்.

இந்நூலிலுள்ள நானூறு செய்யுட்களும் தனித்தனிச் செய்யுட்களாகப் பலரால் எழுதப்பட்டனவாதலின், அதிகாரம் ஒன்றிற்குப் பப்பத்துச் செய்யுட்களாகச் சேர்த்து அதிகாரங்கள் வகுக்கப்பட்டதில், சில செய்யுட்கள் அதிகாரப் பொருண்மைக்குச் சரியான பொருத்தமின்றி வருந்திப் பொருள்கொண்டு பொருத்தப்பட்டிருக்கின்றன.

இந்நூலுக்கு, 'நாலடி நானூறு' என்று மற்றொரு சிறப்புப் பெயரும் வழங்கி வருகின்றது. இந்நூலின் பெருமை அளவிடற்கரியதாகும். இது, உலகத்தில் பல தேசத்தாராலும், பல சமயத்தாராலும் மதவேறுபாடின்றிக் கொண்டாடப்படுவது; 'திருக்குறள்' என்னும் உலகப் பொதுநூலோடு ஒப்புமையுடையது; மனிதர்க்குப் பயன்தரத் தக்க நூல்களுள் இது சிறந்ததாகும்; மனிதர் அடைய வேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கையும் அடைதற்கு இது வழிகாட்டியாகும்; பொதுவாகத் தமிழ் மக்கள் எல்லோரும் படித்துப் பயன்கொள்ளத் தக்கதாகும்;

''நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலையொ டாங்கீழ்க் கணக்கு''

என்ற செய்யுளிற் கூறியபடி, கடைச்சங்க மருவிய, நாலடியார், நான்மணிக் கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணையைம்பது, ஐந்திணை யெழுபது, திணைமொழி யைம்பது, திணை மாலை நூற்றைம்பது, முப்பால் (திருக்குறள்), திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி, கைந்நிலை என்னும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் சேர்ந்ததும், முதன்மை பெற்றதுமாகும். இங்ஙனம் இது, பதினெண் கீழ்க்கணக்கில் சேர்க்கப்பட்டிருப்பதால், கடைச்சங்க காலத்திற் செய்யப்பட்டு, அச்சங்கத்தில்

அரங்கேற்றப்பட்டதென்பதும், ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்கட்கு முற்பட்ட தென்பதும் துணியப்படும். இது மனிதர்க்கு உறுதி பயக்கக்கூடிய தென்பதும், திருக்குறளோ டொப்புமையுடைய தென்பதும், அரிய சொற்பிரயோகங் களை யுடையதென்பதும், ''ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலுமிரண்டும் சொல்லுக்குறுதி'' ''பழகு தமிழ்ச், சொல் லருமை நாலிரண்டில்'' என்ற வாக்கியத் தொடர்களால் நன்குணரலாகும். இன்னும்,

''வெள்ளாண் மரபுக்கு வேத மெனச்சான்றோர்
எல்லாருங் கூடி யெடுத்துரைத்த-சொல்லாய்ந்த
நாலடி நானூறு நன்கினிதா வென்மனத்தே
சீலமுட னிற்க தெளிந்து''

எனப் பிற்காலத்திருந்த ஒரு புலவர் பாடிய செய்யுளாலும் இந்நாலடியாரின் பெருமை நன்கு விளங்கும். இது, வேறொரு நூலின் வழியே செய்யப்படாமல், 'வினை யினீங்கி விளங்கிய அறிவை'யுடைய ஜைன முனிவரால் செய்யப்பட்ட தாதலின், முதல், வழி, சார்பு என்னும் மூவகை நூல்களுள் முதனூலின் பாற்படும். ஜைன சமயத்தினராகிய திருத்தக்க தேவரால் செய்யப்பட்ட பெருங் காப்பியமாகிய சீவக சிந்தாமணியிலும், நீலகேசி முதலிய ஜைன நூல்கள் பிறவற்றிலும் ஜைனமதக் கொள்கைகளுக்கு உதாரணமாக இந்நூலின் செய்யுட்பொருள்களும், அடிகளும் எடுத்தாளப்பட்டிருத்தலின், இந்நூல் ஜைன சமயத்தா ராலேயே செய்யப்பட்ட தென்பது உறுதியாகும். இன்னும், நச்சினார்க்கினியர், அடியார்க்குநல்லார், பரிமேலழகர் முதலிய பெரிய உரையாசிரியர்கள் பலரால் எடுத்தாளப் பட்ட உதாரண நூல்களுள் இதுவும் ஒன்றாய்ச் சிறந்ததாகும். இறையனாரகப்பொருள் நக்கீரருரையிலும், தொல்காப் பியம் நச்சினார்க்கினியர் உரையிலும், பிறவற்றிலும், ''தலைச்சங்கத்தார்க்கு அகத்தியம் மாத்திரமும், இடைச் சங்கத்தார்க்கு அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், பூத

புராணம், இசை நுணுக்கம் முதலியவைகளும், கடைச்சங்கத் தார்க்கு அகத்தியம் தொல்காப்பியம் என்னும் நூல்கள் மாத்திரமும் இலக்கணமாம்'' என்பது கூறப்பட்டிருத்த லானும், கடைச்சங்க காலத்தில் பெரும்பான்மையும் தொல்காப்பியமே வழங்கி வந்ததாலானும், தொல்காப்பியம் அகத்தியத்தின் வழி நூலாதலானும் கடைச்சங்க காலத்தில் வெளியான இந்நாலடியார் பெரும்பான்மையும் தொல் காப்பிய இலக்கணத்தையே உடையதாகும்.

திருவள்ளுவரால் குறள் வெண்பாக்களாற் செய்யப் பட்ட முப்பால் நூல், 'குறள்' என்ற பெயர் பெற்றாற்போல, ஜைன முனிவரால் நான்கடிகளைக் கொண்ட வெண் பாக்களாற் செய்யப்பட்ட இந்நூல், 'நாலடி' என்னும் பெயர் பெற்றது; சிறப்புப் பற்றி, 'ஆர்' விகுதிபெற்று, 'நாலடியார்' என வழங்கலாயிற்று. 'திருக்கோவையார் சிவஞானசித்தி யார், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார்' என்ற நூல்களின் பெயர்களைப்போல இதுவும் கொள்ளப்படும். நாலடி-பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப் பெயர்; 'நான்காகிய அடிகளையுடையது' என்று பொருள்படும். 'நாலடி' என்பது நான்கடிகளையுடைய விருத்தம் முதலிய பல பாக்களையும் குறிக்குமெனினும், நால்வகைப்பாக்களில் முதன்மை பெற்றது வெண்பாவே யாகலானும், ஒரு கூட்டத்தின் பொதுப்பெயர் சிறந்த பொரு ளையே குறிக்குமாகலானும், இங்கு நான்கு அடிகளை யுடைய வெண்பாவையே உணர்த்தி நின்றது. இங்ஙனம், 'நாலடி' என்பது நான்கடிகளையுடைய வெண்பாக்களையே உணர்த்துவதால், அவற்றாலாகிய இந்நூலுக்குக் கருவியாகு பெயருமாம்.

இத்தகைய பெருமைவாய்ந்த இந்நூலுக்கு மேற் கூறியவாறு பதுமனார் எழுதிய பழைய உரையிருப்பதோடு, பிற்காலத்துச் சிறந்த புலவர் சிலரால் எழுதப்பட்ட சில புத்துரைகளும் இருக்கின்றன. எனினும், அவ்வுரைகள்,

உயர்தமிழ்க் கல்வியிற் சிறந்த புலவரே படித்துணரத்தக்க பண்டைத் தமிழ் நடையில் அமைந்து, ஆரம்பக் கல்வியுடை யாரும், மற்றைய தமிழார்வமுடையாரும் தாமே படித்துணர முடியாமல், சிறந்த ஆசிரியரிடம் பாடங்கேட்டுத் தெரிந்துக் கொள்ளக்கூடியனவா யிருக்கின்றன. மேலும் சில செய்யுட் களின் உரைகளில் முன்னுக்குப் பின் முரணாகப் பொருள் பட்டு ஐயப்பாடுகள் உண்டாகின்றன; சிலவற்றில் உயரிய கருத்துக்கள் அமைந்திருந்தும் அவை விளக்கி எழுதப்படா மலுமிருக்கின்றது. நான் இளமையில் கல்விகற்குங் காலத் திலேயே மேற்கூறிய ஐயங்கள் எனக்குண்டாகி என் ஆசிரிய ராயிருந்த மதுரை அமெரிக்கன் ஹை ஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் - திருவாளர் பாலகிருஷ்ணன் நாயுடு அவர்களிடத்திற் கேட்டும், பிற்காலத்தில் வேறு சில பண்டிதர்களிடத்தில் வினவியும் அவர்களால் அவ் வையப்பாடுகள் நீங்கின பாடில்லை. ஆதலின், எவ்வாறாயினும் இந்நூலைப் பலரி டத்துக் கேட்டும், நன்காராய்ந்தும் மேற்கூறிய ஐயங்களை நீக்கிச் சிறந்த பொருள்களை விளக்கிப் பழைய உரைப் பகுதிகளையும் விரித்து, உயர்ந்த பல இலக்கண இலக்கிய உதரணங்களோடு எவரும் படித்துணரத்தக்க எளிய தமிழில் விரிவுரையொன்று புதிதாக இந்நூலுக்கெழுதி வெளியிட வேண்டுமென்னும் பேரவா என்னுளத்தில் இளமைதொட் டுண்டாகி விருத்தியடைந்துவந்தது;அவ்விருப்பத்தால் நான் பல ஆண்டுகளாகப் பல புலவர்களிடத்தும் இந்நூலுக்குப் பொருள் கேட்டு ஆராய்ச்சி செய்து வந்தேன். அம் முயற்சி யால் மேற்கூறிய ஐயப்பாடுகள் நீங்கின; புதிய புதிய கருத் துக்கள் பலவும் தோன்றின; சில ஜைனப் பெரியார்களால் இந் நூலில் உள்ள ஜைனமதக் கருத்துக்கள் நன்கு விளக்கப்பட் டன. அவர்களில் முக்கியமான சிலருடைய பெயர்களைக் குறிப்பிடுவது இன்றியமையாததாகின்றது. துறவொழுக்கம் பூண்ட ஜைனமதப் பெரியோராகிய, சுவாமிஜீ நேமிசாக வர்ணி அவர்களாலும், கும்பகோணம் காலேஜ் பிரின்ஸ் பால், திருவாளர் சக்கரவர்த்தி நயினார், M.A., அவர்களாலும், சென்னை ஜைனா கெஜட் பத்திராதிபர் திருவாளர்-மல்லிநாத

ஜைன் அவர்களாலும் ஜைனமதக் கொள்கைகள் எனக்கு நன்குணர்த்தப்பட்டன; எனது உண்மை நண்பரான திருவாளர் - ஸ்ரீநிவாச முதலியாரவர்கள், 'தம்மை யிகழ் வாரை' என்ற செய்யுளுக்கு நேரான உரையும், அதற்குதாரண மாக, 'கண்டறிவார் என்ற பழமொழிச் செய்யுளையும் விளக்கிக் காட்டினார்கள். 'முத்தரையர்' என்ற பெயருக்கு நேரான பொருளை, தஞ்சைக் கூடலூர் திருவாளர் - இராம சாமி வன்னியர் அவர்கள் உணர்த்தினார்கள்; உடுமலைப் பேட்டையைச் சார்ந்த கோமங்கலம் புதூர் திருவாளர் பண்டித லி. ராமசாமி நாயுடு அவர்களும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் திருவாளர்- சுப்பிர மணிய ஆச்சாரியார் அவர்களும் சில அரிய கருத்துக்களை வெளியிட்டார்கள்; இன்னும் பலர் பல ஐயங்களை நீக்கிப் பல சிறந்த பொருள்களையும் கூறினார்கள். இங்ஙனம் பல ருடைய உதவியாலும், என் ஆராய்ச்சியாலும் எனது விருப் பம் பூர்த்தியாகவே நான் இப் புதிய உரையை எழுதி முடிக்கத் துணிவுகொண்டேன். அதனோடு 'ஆனந்தபோதினி' பத்தி ராதிபர் திருவாளர் நா. முனிசாமி முதலியாரவர்களும், வேறு சில நண்பர்களும் இதனை எழுதி முடிக்குமாறு பன்னாளும் என்னை ஊக்கிவந்தனர். பின்னர் அவர்களுடைய விருப்பத் திற்கிசைந்து என் புத்திக் கெட்டிய அளவில் அரும்பிரயாசை எடுத்து இவ்வுரையை எழுதி முடித்தேன்.

இதில், என்னால் பதவுரையும், கருத்துரையும், விசேடவுரையும் எவர்க்கும் சந்தேகமுண்டாதபடி பொருள் களை நன்கு விளக்கிக் காட்டி மிகத் தெளிவாக எழுதப் பட்டிருக்கின்றன; பழைய உரைப் பகுதிகள் தெளிவுற விரித்தெழுதப்பட்டிருக்கின்றன; நூல் அமைப்பிற்கு விரோத மாகவும், முன்னுக்குப்பின் முரணாகவும் பொருள்பட்டுச் சந்தேகங்களை விளைவித்துக் கொணடிருந்த உரைப் பகுதி களில் ஐயம் நீங்குமாறு பொருத்தமான பொருள்கள் விளக் கப்பட்டிருக்கின்றன; புதிய உரைகளும் ஆங்காங்கே விரித் தெழுதப்பட்டிருக்கின்றன; சில செய்யுட்களின் சரியான

பொருள் விளங்காமல் மயக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருந்த உரைகள், வேறு நூல்களின் ஆதாரங்களைக் கொண்டு சந்தேகம் நீங்கச் சரியான விதத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன; வேறு நூல்களில் விளங்காதிருந்த பொருள்கள் இந்நூற் செய்யுளின் ஆதாரத்தைக் கொண்டு விளக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை இந்நூல் உரைகளிற் காட்டப்படாத பற்பல சிறந்த கருத்துக்கள் இவ்வுரையில் நூதனமாக எழுதப்பட்டிருக்கின்றன; இந்நூல் முதற் செய்யுளுரையில் ஜைன மதக் கோட்பாடுகள் மிகத் தெளிவாக எடுத்தெழுதப்பட்டிருக்கின்றன. இலக்கணக் குறிப்புக்களும், இலக்கியக் குறிப்புகளும் தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல்களின் சூத்திரங்களின் உதாரணங்களாலும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், கலித்தொகை, நீலகேசி, சூடாமணி நிகண்டு, பழமொழி, அறநெறிச்சாரம், திருநூற்றந்தாதி முதலிய இலக்கிய நூற்களின் செய்யுட்களின் உதாரணங்களாலும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப் பட்டிருக்கின்றன. இன்னும் இவ்வுரையில் செய்யப்பட்டிருக்கும் திருத்தமான வேலைகள் பல.

இங்ஙனம், நான் இவ்வுரையில் எடுத்துக்கொண்ட உழைப்பினை இந்நூலை முற்றுறப் படிக்கும் அறிஞர் நன்குணர்வர். இவ்வுரையைத் தமிழ் உலகம் விருப்புடன் ஏற்றுக்கொள்ளுமென்றே நான் நினைக்கின்றேன். பழைய உரைகள் உள்ள ஒரு நூலுக்குப் புதிய உரையொன்றை ஒருவர் எழுதின், குறுகிய நோக்கமுடைய சிலர், அங்ஙனம் எழுதினவரை, "இவர் பழைய உரையைப் புரட்டி எழுதியிருக்கின்றார்" என்று இகழ்ந்து கூறுதல் இக்காலத்தில் வழக்கமாயிருக்கின்றது. பண்டைய உரையுள்ள நூலுக்கு ஒருவர் உரையெழுதும்போது பதவுரையில் முந்திய உரையின் பதங்களே வருவதும், விசேட வுரையில் பழைய வுரையின் கருத்துக்களிற் சில வருவதும் இயற்கை. எனினும் புதிய உரைகாரரின் உழைப்பு அவர் எழுதிய நூதன உரைப் பகுதிகளிலேதான் அமைந்துகிடக்கும். அவற்றை ஆராயும் அறிஞர் அப்புதிய

உரைகாரரின் உழைப்பின் சிறப்பை நன்குணர்ந்து கொண்டாடுவர்; கல்வியின் இயற்கையை உணராதவர், பழைய உரையிலிருந்து புதிய உரையில் வரும் சில சொற்களையும், பொருள்களையும் கண்டமாத்திரத்தில் மேற்கூறியபடி குறை சொல்ல முற்படுவர். ஆகலின், இத்தகையினர் ஆராயாது கூறும் குறை ஒரு குறையாக அறிஞராற் கொள்ளப்படமாட்டாது.

இவ்வுரையில் என் அறியாமையாலோ, பிற காரணங்காளாலோ சில பிழைகள் காணப்படுதலும் கூடும். அவ்வாறு காணப்படின் அறிஞர் அவற்றை எனக்கு அறிவித்தால் வந்தனத்துடன் ஏற்று மறுபதிப்பில் திருத்திக் கொள்வேன். இதிலுள்ள குற்றங்களை நீக்கிக் குணத்தைக் கைக்கொள்வது கற்றறிந்த மாந்தர்கடனாகும்.

இவ்வுரை வெளிவருதற்கு ஊக்கமும், உதவியும் புரிந்த மேற்கூறிய அறிஞர்க்கும், இதனை அச்சிட்டுத் தமிழ் நாட்டுக்குதவிய 'ஆனந்தபோதினி' பத்திராதிபர் திருவாளர். நா. முனிசாமி முதலியாரவர்கட்கும் என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன். இவர்கள் செய்த நன்றி என்றென்றும் மறக்கற் பாலதன்று; போற்றற்பாலதே. இவர்கட்கு எல்லாம்வல்ல இறைவன் திருவருள் புரிவானாக.

நாலடியார் மூலமும் உரையும்

கடவுள் வாழ்த்து

வானிடு வில்லின் வரவறியா வாய்மையால்
கானிலந் தோயாக் கடவுளை- யாநிலம்
சென்னி யுறவணங்கிச் சேர்துமெம் முள்ளத்து
முன்னி யவைமுடிக வென்று.

(இதன்பொருள்) வான் - மேகத்தில், இடு - உண்டாகின்ற, வில்லின் - (இந்திர) தனுசை நிகர்த்த, வரவு - (மானிடதேகத்தின்) வருகையை. (அதாவது மானிடப்பிறப்புண்டாதலை), அறியா- தெரிந்து, எம் உள்ளத்து - எம்முடைய மனத்தில், முன்னியவை - சிந்தித்த நற்கருமங்கள், முடிக என்று - (எத்தகைய இடையூறுமின்றி இனிதின்) நிறைவேறுக என்று நினைத்து, வாய்மையால் - புண்ணியத்தால், கால் (தன்னுடைய) பாதங்கள், நிலம்-பூமியின் மேல், தோயா- படியாத, கடவுளை- (அருக) தேவனை, யாம்-நாம், நிலம்-தரையில், சென்னி-சிரமானது, உற- பொருந்தும்படி, வணங்கி - பணிந்து, சேர்தும்- (அவனடியைச்) சார்வோமாக; (என்றவாறு)

இந்நூல், ஜைனமுனிவர் பலரால் இயற்றப்பட்ட தனித்தனி நீதிச் செய்யுட்களானியன்றதாதலின், இதற்கு அவர்களால் தெய்வ வணக்கம் கூறப்படவில்லை. எனினும்,

பதுமனாரென்பவர், இதற்குப் பால், இயல், அதிகார அடைவு முதலியன வகுத்து, இதனைப் பாகுபாடு செய்து ஒழுங்குபெற அமைத்த காலத்தில், நூலமைப்பின் முறை தழுவி இக்கடவுள் வாழ்த்துச் செய்யுளை இயற்றினர். அறிஞர் நூல் முதலியன இயற்றவோ, வேறு நற்செயல்கள் புரியவோ தொடங்குங்காலத்தில், தாம் எடுத்துக்கொண்ட காரியம் இடையூறின்றி இனிது முடிதற்பொருட்டு வழிபடு கடவுளையாவது, எடுத்தகாரியத்திற் கேற்புடைக் கடவுளை யாவது வணங்குதல் மரபாகலின், இவ்வாழ்த்து ஆசிரியரால் கூறப்பட்டது. இஃதிங்குக் கூறிய இடண்டனுள் வழிபடு தெய்வ வணக்கமாகும். இஃது அருகக்கடவுளைக் குறித்த தாகலின், இதனை இயற்றிய பதுமனார் ஆருகத சமயத் தவரென்பது துணியப்படும். இங்ஙனம் தெய்வவணக்கங் கூறுதல் இன்றியமையாமை யென்பதை,

''வழிபடு தெய்வ வணக்கஞ் செய்து
மங்கல மொழிமுதல் வகுத்தெடுத்துக் கொண்ட
விலக்கண விலக்கிய
மிடுக்க ணின்றி யினிது முடியும்''

என்பதா லுணர்க. இதன்படி ஆசிரியர் தெய்வவணக்கங் கூறியதோடு, செய்யுளின் தொடக்கத்தில் 'வான்' என்னும் மங்கலச் சொல் வைத்திருப்பதும் உய்த்துணரற் பாலதாம். இனி, இச் செய்யுள் கடவுள் வாழ்த்தே யெனினும்,

''தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளும்
எய்த வுரைப்பது தற்சிறப் பாகும்''

என்றபடி இதில் தெய்வணக்கமும் செயப்படு பொருளும் அடங்கி யிருத்தலின் இதனைச் சிறப்புப்பாயிர மெனக் கோடலுமொன்று.

உடம்பின் வருகையை அறிந்து மனத்தில் செய்ய நினைத்தவை முடிக என்று, கால் நிலம்தோயாக் கடவுளை யாம் சென்னி நிலம் உற வணங்கிச் சேர்தும் என முடிக்க.

வானத்தில் படரும் மேகத்தில் தோன்றுகின்ற இந்திர தனுசானது 'இன்னகாலத்தில் இன்னவிதமாகத் தோன்றுவது' என்னும் நியமமின்றி, மனிதரால் எதிர்பார்க்கப்படாத வொருகாலத்தில் வெவ்வேறுருவினதாய்த் தோன்றி, உடனே உருமறைந்தொழிதல் போல; மனிதர் தேகமும் உண்டாகி நிலையின்றி மறைந்து போகக்கூடிய தாகலின் அவ்வுடம்பை அடைந்த நாம், அதன் நிலை யின்மையை நோக்கி, அஃதழியு முன்னரே நற்கருமங்களைச் செய்ய நாடி அவைமுற்றுறுமாறு கடவுளைச் சேர்வோமாக என்பது இதன் கருத்து. ஈண்டு ஆசிரியராற் கருதப்பட்டவை; இந்நூலமைத்தல், அறத்தின் வழிநிற்றல், தவமுஞற்றல், பிறப்பறுத்தல் முதலியனவாம். ஆசிரியரால் இந்நூலுக்கே இக்கடவுள் வாழ்த்துரைக்கப்பட்ட தாதலின், அவர் 'முன்னியவை' என்று குறித்தவற்றுள் நூலமைப்பை முதன்மையாகவும், மற்றவற்றை அதன் பின்னருங் கொள்ளுதல் முறைமையாம். நூன்முடிபு குறித்துத் தெய்வவழிபாடு கூறிய ஆசிரியர் அதன் பயன் களாகிய மற்றவற்றின் சித்திகளையும் அதனோடு கூட்டி யுரைத்தனரென்க. 'யாக்கை நிலையாமையை உணர்ந்து, முன்னியவை முடிகவென்று யாம் கடவுளை வணங்கு வோம்' என்றதனால், 'தேகம் அழியுமுன் கடவுளை வணங்கி இஷ்டசித்திகளைப் பெறுவோமென்பது தானே போதரும்.

இனி, திருத்தக்க தேவரியற்றிய சீவக சிந்தாமணி, குணமாலையா ரிலம்பகத்தில், அந்தணரால் அடியுண்டு பிராணன் நீங்குந்தறுவாயிலிருந்த சுணங்கனுக்கு, சீவகன் பஞ்சநமஸ்கார மந்திரத்தை யுபதேசித்ததால் அது சுதஞ்சண னென்னுந் தேவனாய்த் தோன்றிய வரலாறு கூறும்,

''கற்றவைம் பதங்க ணீராக் கருவினை கழுவப் பட்டு
மற்றவன் றேளவனாகி வானிடு சிலையிற் றோன்றி
இற்றத னுடம்பு மின்னா விட ரொழித் தினிய னாகி
உற்றவ னிலையு மெல்லா மோதியினுணர்ந்து
கண்டான்''

என்னும் 101-ஆம் செய்யுளில், ''மற்றவன் தேவனாகி வானிடு சிலையிற்றோன்றி'' என்ற அடிக்குப் பொருள் விளக்கு மிடத்து ஆசிரியர் நச்சினார்க்கினியர், ''நூல்கள் இந்திரவில் இன்னவாறு தோன்றுமென்று அதுதோன்று முறைமை கூறாவாகலின், அங்ஙனந் தோன்றுகின்ற தேவர்க்கு அஃது வமையாயிற்று. இக்கருத்தானன்றே, 'வானிடுவில்லின் வரவறியா' என்றார் பிறரும்'' என்று உரைத்துள்ளதனால் 'அறியா என்பதை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாகக் கொண்டு கடவுளுக்கு அடைமொழியாக்கி, ஆகாயத்தில் தோன்றுகிற இந்திரவில்போல இன்னவாறு தோன்றுமென்று முன்பு வருகையறியப்படாத கடவுளையென்று உரைத்தல் நச்சினார்க்கினியர் கருத்தெனத் தெரிகின்றது' என்று உரைப் பாருமுளர். இதனால், அருகக்கடவுள் 'வானிடு வில்லைப் போல வருகை உணரப்படாதவர்' எனப் பிறிதொருபொருள் உரைத்தற்கிடனாம். அருகக்கடவுள் ஓரிடத்தில் தோற்று முன்னரே இன்னகாலத்தில் எழுந்தருளுவார் என்பதற்கறிகுறி யாகச் சில முன்னறிவிப்புக்கள் நிகழுமென்பதும், மற்றத் தேவர் தோற்றமே வருகையறிய முடியாததென்பதும், அத்தேவர்களும் மனிதர்போலவே பிறப்பிறப்புக்களை யுடையவரென்பதும், அவர்க்குத் தேவத்தன்மை மாறுங் காலத்தில் சில தினங்களுக்கு முன் சில அறிகுறிகள், 'எல்லை மூவைந்து....' என்னும் சிந்தாமணிச்செய்யுளின்படி தோன்று வது மரபெனினும் அந்நிலைமாறி வேறுடம் பெடுக்குங்

காலம் உணரப் படாதென்பதும், ஜைனமதத்தின் கொள்கைகள். அவற்றைத் தழுவியே திருத்தக்க தேவர் சாமா்னிய தேவனாகிய சுதஞ்சணன் தோற்றத்திற்கு வானவில்லை உவமைகூறினார்; அதற்கிணங்க நச்சினார்க்கினியரும், ''தேவர் தோற்றம் வானிடுவில்லைப்போல வரவுணர முடியாதது'' என்று உரையில் விளக்கி, அத்தேவர்போலவே பிறப்பின் வருகை யுணர முடியாத மனிதரைப்பற்றிப் பதுமனார் இச்செய்யுளில் 'வானிடுவில்லின் வரவறியா' என்று கூறியதையும் உதாரணமாக எடுத்துக்காட்டி யிருக்கின்றார். இது, பிறப்புணர முடியாத தன்மையினையுடைய மற்றத் தேவர்களைக் குறிக்குமேயன்றி அருகதேவனைக் குறிக்காது. ஆதலின், அருகக்கடவுளை, 'வருகை யுணரப் படாத கடவுள், என்பது நச்சினார்க்கினியர் கருத்தென்பதும், அங்ஙனம் பொருள்கொள்ளத் துணிதலும் ஜைனமார்க்க கோட்பாடுகட்கு முற்றும் முரணானவைகளாம்.

தேவர், பிறப்பிறப்பு முதலியவற்றில் மனிதரை நிகர்த்தவரெனினும் அவர் தேவராயிருக்குமளவும் வடிவம் நிறம் முதலிய சில குணங்கள் அருகதேவனிடத் துள்ளன போல் அவர்களிடத்து முண்டு.

''திருவிற்போற் குலாய தேந்தார்த் தேவர்தந் தன்மை செப்பின்
கருவத்துச் சென்று தோன்றார் கால்நிலந் தோய்தல் செல்லார்
உருவமே லெழுத லாகா வொளியுமிழ்ந் திலங்கு மேனி
பருதியி னியன்ற தொக்கும் பன்மலர்க் கண்ணி வாடா''

என்னும், சீவகசிந்தாமணி முத்தியிலம்பகம் 202-ஆம் செய்யுளால் இவையுணரப்படும்.

அங்ஙனம் புண்ணியஞ் செய்வோரெல்லாரும் தேவ பதவியடைந்து, கால்நிலந் தோயாமை, கண்ணிமையாமை, மாலைவாடாமை முதலிய குணங்களைப் பெறுவரேனும் அப்புண்ணிய முடிவில் தேவவுடம்பினை நீத்து வேறுடம் பெய்துவர். இது,

''எல்லைமூ வைந்து நாள்க ளுளவென விமைக்குங் கண்ணும்
நல்லெழின் மாலை வாடும நஞ்சுடை யமிர்துண் டாரிற்
பல்பகற் றுய்த்த வின்பம் பழுதெனக் கவல்ப கண்டாய்
பில்கித்தேனொழுகும் பைந்தார்ப் பெருநில வேந்தர் வேந்தே''

என்னும் சிந்தாமணி முத்தி யிலம்பகம் 212ஆம் செய்யுளால் உணரப்படும். அருகதேவனுக்கோ அத்தெய்வத் தன்மை மாறாது. அச்சிறப்புநோக்கி, கால்நிலந் தோயாமை எப் பொழுதும் அவனுக்கே உரியதென்பது தோன்ற 'காலநிலந் தோயாக்கடவுள்' என்னும் சிறப்புப் பெயர் அவனுக்கு வழங்கலாயிற்று.

ஜைன நூல் வழக்கின்படி ஆத்மனுக்குக் காதிகர்மங் கள் நான்கு, அகாதி கர்மங்கள் நான்கு, ஆக எட்டுக்கர்மங்கள் உள்ளன. அவற்றுள் காதிகர்மங்களாவன: - ஞானாவரணீயம், தரிசனாவரணீயம், மோகநீயம், அந்தராயம் என்பனவாம். இவை ஆத்மனின் இயற்கைக் குணங்களைக் கெடுக்கும் கெட்ட சுபாவமுடையனவாம். அகாதிகர்மங்களாவன:- வேதநீயம், ஆயுஷ்யம், நாமம்; கோத்திரம் என்பனவாம். இவை ஆத்மாவின் இயற்கைக் குணங்களைக் கெடுக்கா தவை. இந்த இரண்டு வகைகளுள் காதிகர்மங்களை மாத்திரம் விட்டு அகாதிகர்மங்களோடு கூடியிருப்பவன்

அருகன்; காதி அகாதி என்னும் இரண்டு வகையிலுள்ள எட்டுக்கருமங்களையும் விட்டவன் சித்தன். சித்தபதவி அருகபதவிக்கு மேற்பட்டது; அதுவே முத்திஸ்தானமாகும். அருகனும் சித்தனும் ஜைனர்களால் வணங்கத்தக்கவ ரெனினும், அவர்கள், அருக தேவன் அருளிச்செய்த சாஸ்திரஞான வுணர்ச்சிகொண்டே தவமுதலியன ஆற்றித் தேவபதவிகளையும், சித்தபதவியாகிய முத்தி சாதனத்தையும் அடைதல் வேண்டு மாகலாயினும், அருகனே சித்த பதவிக்கு முரிய னாகலானும் அவனையே மூர்த்த தெய்வமாகக் கொண்டு சகலஜைனர்களும் எதற்கும் முதலில் வணங்குதல் மரபு. இம்மரபு பற்றியே ஜைன நூல்களில் விதிக்கப்பட்ட அருக சரணம், சித்தசரணம், சாதுசரணம், தன்மசரணம் என்னும் வணக்க முறைகள் நான்கனுள்ளும் அருக சரணம் முன் வைக்கப்பட்டது. இங்ஙனம் அருகவணக்கம் முதலாக நான்கு வணக்கங்களையும் சிலர் கூறுவர்; சிலர் அருகசரணத்தில் எல்லாம் அடங்கும் என்னும் பாவனையுடன் அருகக் கடவுள் வணக்க மாத்திரம் கூறுதலுமுண்டு. அங்ஙனமே பதுமனாரும் ஈண்டு அருகதேவ வணக்கமட்டுங் கூறினர். எனினும் மற்ற மூன்று வணக்கங்களும் இதில் அடங்குமெனக்கொள்க. சிந்தாமணி முதலிய நூல்களில் நான்கு சரணங்களும் கூறப்பட்டிருத்தலை உணரலாம்.

ஈண்டுரைத்தவாறு தவத்தால் காதிகர்மங்களைக் கெடுத்த அருகதேவனுக்கு, அக்கருமங்கள் கெட்ட ஞான்றே லோகாலோகங்களை ஏககாலத்தில் ஞானத்தினால் பார்க்கக் கூடிய சத்தியுண்டாகும்; அப்பொழுதே தேஜோமூர்த்தியைச் சரீரம் வந்தடைகிறது. அச்சாரீரம் அடைந்ததும் அருகதேவன், பூமியிலிருந்து ஐயாயிரம் தண்டத்திற்குமேல் ஆகாயத்தில் காதிகாபூமியை அடைகுவன். அங்ஙனம் அடைந்ததை, சௌதருமேந்திராதி நால்வகைத் தேவர்கள் குறிப்பினாலுணர்ந்து, அருகதேவனுக்கு ஸ்ரீகோயில் என்னும் ஸமவஸரணத்தை நிருமிப்பார்கள். இதற்குப் பூமியிலிருந்து

இருபதினாயிரம் படிகளுள்ளன. இங்ஙனம் கோயில் நிருமிக் கப்படுமென்பதை,

''என்னெஞ்ச மேயிட மேயுடைத் தேயிந்தி
ராதிவிண்ணோர்
முன்னஞ்செய் பன்னிரண் டோசனைத் தாய்முழு
மாமணித்தூண்
மன்னிஞ்சி மூன்றொடு மானாங் கணமுத
லேழ்நிலத்துப்
பொன்னின் சினாலய மாயிற்றன் றோவெங்கள்
புங்கவற்கே.''

என்னுந் திருநூற்றந்தாதி 18ஆம் செய்யுளால் உணரலாம். இன்னும் இவ்வாலயத்தின் இயல்பு முற்றும் மேருமந்தர புராணம், ஸ்ரீ புராணம் முதலியவற்றில் பரக்கக் காணலாம். இங்ஙனம் ஸ்ரீ கோவிலை தேவர்கள் நிருமித்து, அருகனுக்கு முக்குடை, அசோகு, அரியணை முதலியனவும் அமைத்து, அவருடைய பாதத்தினடியில் நான்கு அங்குலத்திற்குக் கீழ், நடுவில் நாயகமாக ஒரு தாமரைப்புஷ்பத்தையும், அதன்முன் ஏழு கமல மலர்களையும், பின்னேழு மலர்களையும் வரிசை பெற நிறுவி, அவனைத்துதித்து வணங்குவர். இத்தகைய கோவிலில் எழுந்தருளிய கடவுள் ஆகாயத்தில் செல்லுமிடங் கட்கெல்லாம் இவ்வாலயம் முதலியன அவருடன் செல்லும். அவர் சஞ்சரிக்குங் காலத்தில் பாதங்களை மாற்றிமாற்றி ஆகாயத்தில் எடுத்து வைக்குந்தோறும் முன்னுரைத்தவாறே அமைக்கப்பட்டிருக்கும் தாமரைமலர்கள் நாலங்குலத்திற் குக் கீழமைந்தபடியே அவற்றைத் தாங்கிச் செல்வன போன்று அவற்றினடியிற் செல்லும். இவ்வரலாறு, மகா புராணம் 25-வது பருவம், 271ஆம் சுலோகத்தால் உணரப் படும். இங்ஙனம் இவன் தாமரைப் புஷ்பங்களின் மீது நடத் தல் பற்றியே இவனுக்கு 'கமலவூர்தி' 'தாமரைமேல் நடந் தோன்' என்னும் திருநாமங்கள் வழங்கலாயின. இவன் தாமரைமலர்களின்மேல் நடப்பினும் இவனுடைய பாதங்

கள் அவற்றிற் பொருந்தாமல் நான்கங்குலத்திற்கு மேலாகவே யிருக்கும். இங்ஙனம் பங்கயமலர்களின்மீதும் அருகன் பாதங்கள் படாவெனவே, பூமியிற் படியாவென்பது சொல்லாமலே அமையும். இதனால் அருகமூர்த்திக்கு ''கால் நிலந்தோயாக் கடவுள்'' என்பது மிகப்பொருத்தமுடைத் தென்க. இவன், கால் நிலந்தோயாக் கடவுள் என்பதையும், இவனின் ஏனைய சிறப்புக்களையும்,

''பூரணை யாற்பதி னாற்கயிற் றொக்க
புவனமெல்லாம்
நீரணை மாருதந் தாங்கிய தொக்கு நிவந்தசிங்கப்
பேரணை யாற்கிணை யாருமில் லாப்பெரி
யோற்குவிண்ணோர்
பாரணை யாவடி தாங்கச் செந் தாமரை பாரித்ததே.''

என்னும் திருநூற்றந்தாதி 91ஆம் செய்யுள் விளக்கும்.

இனி, 'வானிடுவில்லின் வரவறியா வாய்மையால் என்பதை 'வானிடு வில்லின்வரவு வாய்மையால் அறியா' என மொழிமாற்றி 'வானிடு வில்லைப்போன்றபிறப்பின் வருகையைத் தத்துவஞானத்தால் உணர்ந்து' எனப் பொருளு ரைத்தலு மொன்று. இங்ஙனங் கொள்ளுமிடத்து, வாய்மை- மெய்ம்மை; அது மெய்யறிவுக்கு ஆகுபெயராயிற்றென்க. இன்னும், 'வாய்மையால் கடவுளைவணங்கிச் சேர்தும்' என இயைத்து, 'உண்மையோடு (அதாவது திரிகரணசுத்தியோடு) கடவுளைப் பணிந்து சேர்வாம்' என வுரைத்தலுமொன்று. உண்மையோடு பணிதலாவது- மன மொழி மெய்களால் மெய்யான பக்தியைச் செலுத்திப் பணிதலாம். 'வரவறியா' என்பதற்கு 'வரவறிந்து' எனப் பொருள் கொள்ளுமிடத்து, அறியா - உடன்பாட்டு இறந்தகால வினையெச்சம். இடு- வினைத்தொகை. வில்லின் என்பதில், இன்- ஐந்தனுருபு; ஒப்புப் பொருளது. தோயா- ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். (கடவுள்-என்பதற்கு, 'எவ்வகை பந்தத்தையும்

கடந்து நின்றவன்' என்பது பொருள்) இதில் உள்- பெயர் விகுதி. முன்னியவை- வினையாலணையும் பெயர். முடிக- வேண்டிக் கோடற் பொருளில்வந்த வியங்கோள். என்று - சொல்லெச்சம். ''நிலத்தில் கால்தோயாத கடவுளை யாம் நிலத்தில் சென்னியுற வணங்குவோம்'' என்றதனால் ஆசிரியர் கடவுளின் பெருமையையும், தமது பணிவையும் விளக்கினார்; இங்ஙனங் கூறியது முரண்தொடையின் பாற் படும்.

முதலாவது

அறத்துப்பால்

அறத்துப்பால் என்பதற்கு, 'தருமத்தை விளக்கும் பாகம்' என்பது பொருள்; இஃது இரண்டாம்வேற்றுமை யுருபும் பயனுமுடன்தொக்க தொகை. அறமாவது இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றையுந் தருவனவாய்த் தீர்த்தங் கரராலும் (அருகதேவனாலும்), கணதரர்களாலும், ஆசாரிய பரம்பரையார்களாலும் இயற்றப்பட்ட வேதாகம நூல்களில் தர்மத்தின் சார்பாக விதித்தனசெய்தலும், விலக்கியன விடுதலுமாம். அருகதேவனால் அருளிச்செய்யப்பட்டவை. பிரதமா நுயோகம், கரணா நுயோகம், சரணாநுயோகம், திரவ்யாநுயோகம் என்னும் நான்குவேதங்களாம். இவை பன்னிரண்டு அங்கங்களையுடையன. இவை அங்காகமங்க ளெனவும், முனைவன் கண்ட முதல் நூல்களெனவும் கூறப் படும். கணதரர்களால் அவற்றின் வழியாகப் பதினான்கு பூர்வாகமங்கள் செய்யப்பட்டன; அவை வழிநூல்களாம். ஆசாரிய பரம்பரையார்களால் அவற்றின் சார்பாகப் பதினாறு பஹூசுருதி யாகமங்கள் வகுக்கப்பட்டன. இவை சார்பு நூல்களாம். இக்கணக்கின்படி ஜைனாகமங்கள் நாற்பத்திரண் டாம். இவற்றுள், நான்குவர்க்கமான தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் புருடார்த்தங்களை அடைதற்கேது

வான நூற்றுக்கோடி மகாலிரதங்களும், பதினெண்ணாயிரம் சீலாசாரங்களும், எண்பத்து நான்கிலட்சம் குணவிரதங்களும் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் விதிவிலக்குகளும் ஏற்பட்டுள் ளன. அவற்றுள் தர்மத்தின் சார்பான நெறிகள்பல இதில் கூறப்படுகின்றன. ஆதலின், இதற்கு அறத்துப்பால் எனப் பெயரிடப்பட்டது. இது, துறவறவியல், இல்லறவியல் என்னும் இரண்டு பகுப்புக்களையுடையதாகும்.

1-வது துறவறவியல்

துறவறவியல் - என்பதற்கு, 'துறவறத்தைக் கூறும் பிரிவு' என்பது பொருள். இஃது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. அறமியற்றுதற்குரிய இல்லறம், துறவறம் என்னும் இருவகை ஆச்சிரமங்களுள் இல்லறம் முதலாவதும், துறவறம் இரண்டாவதுமாம். இம்முறைபற்றி இல்லறவியல் முன்னும், துறவறவியல் பின்னும் அமைக்க வேண்டும். எனினும், துறவறம் நித்திய மாகிய முத்தியையடைதற்கே துவாயிருத்தல் பற்றி ஜைனர் கள் இதனை முதன்மையாகக் கொள்ளுதல் இயல்பாகலின், ஜைனராகிய பதுமனார் இவ்வியலை முன்வைத்தனர். இதில் ஏழு அதிகாரங்கள் உள்ளன. துறவறமாவது - இல்லறத்தில் வழுவாது நடந்து, பிறப்புக்கஞ்சி முத்தியடைதற் பொருட் டுச் சகல பற்றுக்களையும் விடுதலாகிய ஒழுக்கமாம்.

அதிகாரம்-1

செல்வம் நிலையாமை

அதிகாரம் -அதிகரித்தல்; அஃதிருவகைப்படும். அவற்றுள் ஒன்று: வேந்தன் இருந்தவிடத்திலேயேயிருந்து, தன் ஆளுகைக்குட்பட்ட நிலம் முழுவதும், தன் ஆஞ்ஞை யின்படி நடக்கச் செய்தல்போன்று, ஒரு சொல் நின்றவிடத் திலேயே நின்று பலசெய்யுட்கள் தன் பொருளையே கூறி வரும்படி செய்வது; மற்றொன்று; இடங்கள் தோறும் சென்று அதிகாரத்தை நடத்தும் தண்டத்தலைவனைப் போன்று, ஓரிடத்துநின்ற சொல் பல செய்யுட்களோடும் சென்றியைந்து தன்பொருளையே அவை, தரச் செய்வது. இவற்றுள் ஈண்டுக் கூறியது முன்னதைச் சார்ந்தது. இனி அதிகாரம் என்பதற்கு - முறைமையெனப் பொருள் கூறுவது மொன்று இஃது ஆசிரியர் நச்சினார்க்கினியர் கருத்து.

செல்வம் நிலையாமை-என்பதற்கு 'செல்வத்தினது நிலையற்ற தன்மை' என்பது பொருளாம். நிலையில்லாத பொருள்களை உணர்ந்தாலன்றி நிலைத்தபொருளில் மனஞ் செல்லாதாதலின், முத்திப் பேற்றை அடைவதில் மானிடர்க்கு விருப்பமுண்டாதற்பொருட்டு நிலையில்லாத பொருள்களாகிய செல்வம், இளமை, யாக்கை என்பவற்றின் தன்மைகளை மூன்றதிகாரங்களால் உணர்த்தத் தொடங்கிச்

செல்வநிலையாமையை முன்வைத்தார் ஆசிரியர். இளமைக்கு வயதுமுப்பதும், யாக்கைக்கு வயதுநூறுமென அவ்விரண்டற்கும் காலநியமங்கள் உண்டு; இடையிலும் அவற்றிற்கு அழிவுண்டாவது இயல்பெனினும், அங்ஙனம் நேராவிடத்து, அந்தக் காலநியமங்களின்படி அவை இருத்தல் கூடும். செல்வமோ அத்தகைய கால நிர்ணயத்தையும் உடையதன்று. அஃதின்ன காலத்து, இன்னவரிடத்து, இன்ன ஏதுவால் சேருமென்பதும், அகலுமென்பதும் எவரானுந் துணியப்படா. இக்காரணத்தால், இதுநிலையின்மைத் தன்மையில் மற்ற இரண்டினும் மிகைப்பட்டு நிற்றலின், அச்சிறப்பு நோக்கி அவற்றிற்கு முன்வைக்கப்பட்டது. இங்ஙனம் யாதாயினுமொரு காரணங்குறித்து அதிகாரங் களை ஒழுங்குற நிறுத்துதல் 'ஒத்துமுறைவைப்பு' என்னும் உத்தியெனப்படும். செல்வ நிலையாமையையுணரின், அதனைப்பெற்றோர், அதுகிடைத்தஞான்றே விரைந்து அறஞ்செய்தலிற் கருத்துடையராவர். ஆதலின், முனிவரால் இது முதன்மையாக வற்புறுத்திக் கூறப்பட்டது.

1. *அறுசுவையுண்டி யமர்ந்தில்லா ளூட்ட*
மறுசிகை நீக்கியுண் டாரும்- வறிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.

(இதன்பொருள்) அறுசுவை- ஆறுவிதமான உருசி களையுடைய உண்டி- உணவை, இல்லாள் - மனைவி, அமர்ந்து - அன்பு பொருந்தி, ஊட்ட, (கவளம் கவளமாக எடுத்து) உண்பிக்க, மறுசிகை- முதற்கவளமேற்று அதற் கடுத்துவரும்) மறுகவளத்தை, (அதாவது இரண்டாவது கவளத்தை), நீக்கி - (போதும் போதும் என்று) தள்ளி, உண்டாரும் - உட்கொண்டவர்களாகிய செல்வமிக்கவர் களும், வறிஞர் ஆய்- (அச்செல்வமுற்றும் ஒருசமயத்தில் இழந்து) தரித்திரமுடையவர்களாகி, ஓர் இடத்துடதாமிருந்த இடத்தை விட்டு வேறொரிடத்தில், சென்று-போய், (உண

வின்றிப் பசிப்பிணி யின் கொடுமையால்), கூழ்-கூழினை, இரப்பர்- யாசித்து வாங்கிப் பருகுவார்கள்; எனின் - என்றால், செல்வம் - ஐசுவரியம் என்னும், ஒன்று- ஒருபொருள், உண்டு ஆக - நிலையாயிருப்பதாக, வைக்கல் பாற்று அன்று- (மனத்தில்) வைக்கும்படியான (அதாவது எண்ணும்படியான) தன்மையுடைய தன்று. என்றவாறு.

ஆறுசுவைகளையுடைய உணவை மனையாள் அன்புடன் அருகமார்ந்து ஊட்ட, முதற்கவளத்தை உண்டு மறுகவளத்தை வெறுத்துத் தள்ளித்தள்ளி அவ்வுணவை யுண்ட செல்வமிகுதியுள்ளாரும் அதனை இழந்து தரித்திரராய் வெளிப்பட்டுக் கூழிரந்து பருகுவராதலின், அச்செல்வம் நிலைபேறுடையதாகக் கருதத்தக்கதன்று என்றதனால். ஐசுவரியம் அழியும் பெற்றியதென்பதும், அதன்பற்றை யொழித்து நித்தியத்துவமான முத்திப்பேற்றையடைய முயலவேண்டுமென்பதும் உணரப்படும்.

அறுசுவை - தித்திப்பு, புளிப்பு, கார்ப்பு, கைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்பனவாம். இந்த ஆறு சுவைகளும் பொருந்தச் சமைத்த உணவே சிறந்ததும், செல்வந்தர்கள் விரும்பக்கூடியதுமாம். உணவு அறுசுவைகளையுடையதா யிருப்பினும், அதனை ஊட்டுவோர் விருப்பத்துடன் ஊட்டினால் மாத்திரமே அஃதினிமையுடையதாகும். ஆதலின், 'இல்லாள் அமர்ந்து ஊட்ட' என்றால் முனிவர். இனி அமர்ந்து - என்பதற்கு விரையாமல் என்றும் பொருள் கூறலாம். அமைதியுடனிருந்து உணவூட்டுதலும் இனிமை தரும். சிகை- உணவின்கவளம். மறுசிகை- ஊட்டுவோர், முதலில் ஒரு கவளங்கொடுத்து, உண்போர் உண்டபின் இரண்டாவதாகக் கொடுக்கும் மறுகவளம். மறுகவளத்தை நீக்கி உண்ணுதலாவது முதற்கவளத்தை உட்கொண்டு அடுத்த கவளத்தைத் தள்ளி, ஊட்டுவோர் மிகவும் வேண்டுதலுக்காக அதிருப்தியுடன் உண்ணுதலாம். செல்வமுடையார் உணவுண்ணுங் காலத்தில் மனைவியர் பல்வகை

உணவுகளையும் கவளம் கவளமாக எடுத்து அவர்க்கு ஊட்டு வர்; அவர் செல்வ மிகுதியால் எவ்வகை உயர்ந்த உணவு களிலும் ஆவலற்றவர்களாயும், பசி மிகுதியில்லாதவர்களாயு மிருப்பார்களாதலின், ஒவ்வொருவகை உணவிலும் ஒவ் வொரு கவளம் ஏற்று மறுகவளத்தைத் தள்ளிவிடுவார்கள்; உணவூட்டுவோர் மேலும் ஒருகவளம் உட்கொள்ளுமாறு அவரை வேண்டுவர்; அவ்வேண்டுகைக்காக அவர், கவளம் ஒன்றோ இரண்டோ உட்கொண்டு எழுந்துவிடுவர். செல் வந்தரிடத்தில் எல்லா உயர்ந்த ஆகாரப் பொருள்களும் சாதா ரணமாக நிறைந்திருக்கு மாதலின், அவர்களுக்கு அவற்றில் எதனிடத்தும் விருப்பமுண்டாவதில்லை; பசியும் அதிகரிப்ப தில்லை; பொருளருமையுள்ளவிடத்தே மனிதர்க்கு ஆகார வஸ்துக்களில் ஆவலும் பசியும் அதிகரிக்கும். ஆதலின், செல்வமிக்கார் ஆகார முட்கொள்வதில், இத்தகைய வழக் கத்தைக் கொண்டிருத்தல் இயல்பு. ஊட்ட - என்ற சொல் லால், 'செல்வமிக்கார் ஆகாரத்தைத் தம்கையால் வாங்கி யுண்ணா மல், மனைவியர் எடுத்துவாயிலிட உட்கொள்ளு வர்' என்பது விளங்கும். இதுவும், அவர்களின் ஐசுவரிய மிகுதிப்பாட்டை யுணர்த்தி நின்றது. இனி, சிகை-என்பதற்கு, இலையிலிடும் உணவெனப் பொருள்கொண்டு, 'மறுசிகை நீக்கி' என்பதற்கு, 'மறுமுறை இலையிலிடும் உணவை (அதாவது இரண்டாவது சோற்றைத்) தள்ளி' என உரை விரித்தலு மொன்று. ஐசுவரியமிக்கார் மறுமுறை பரிமாறப் படும் உணவைத் தள்ளுதல் இயல்பு. இன்னும் சிகை - என்ப தற்குக் கறிவகைகள் எனப் பொருள் கொண்டு, மறு சிகை நீக்கி என்பதற்கு 'குற்றமுள்ள கறிவகைகளைத் தள்ளி' என உரைவகுப்பாருமுளர். செல்வமிக்கார் இல்லில் பரிசாரகர் பலர் இருப்பினும் அவர்க்கின்பஞ் செய்தற்பொருட்டும், கற்பிலக்கணத்தை விளக்கற் பொருட்டும் மனைவியரே உணவூட்டுதல் இயல்பு; ஆதலின், இல்லாள் உண்டி அமர்ந் தூட்ட' என்றார் முனிவர். இல்லாள்- வீட்டிற்குரியவள்; (வீட்டிலிருந்து இல்லறத்தை நடத்தற் குரியவள்).

'சென்று' என்ற குறிப்பால், முன்னே அவர்கள் கால்களால் நடவாதவரென்பது விளங்கும். அன்னோர், முன்னே தாம் செல்வமிக்காராயிருந்த விடத்தில் இரப்பின் அவர்க்குப் பேரவமான முண்டாமாதலின் அவர், வேறொரிடத்திற் சென்று கூழிரப்ப ரென்க. இனி, 'ஓரிடத்து' என்பதற்கு, 'ஒரே இடத்தில் (அதாவது முன்னர்த்தாம் ஐசுவரிய மிக்காராய் வாழ்ந்த விடத்திலேயே)' எனப் பொருள் கோடலுமொன்று. கூழ் - புல்லரிசிமுதலிய தாழ்ந்த உணவு வகைகளின் மாவினால் சமைக்கப் பெற்ற கிழிந்த உணவு. இதனை உண்பார்- ஏழைகள். ஆதலின் 'கூழ் இரப்பர்' என்றதனால், 'ஏழை மனிதர்களிடத் தும் சென்று இழிந்த உணவை யாசிப்பார்கள்' என்பது பெறப் படும். ஒன்று உண்டாக- என்பதற்கு, 'சிறிதும் நிலையுள்ளதாக' எனப் பொருள் கூறினும் அமையும். இச்செய்யுட் கருத் தின்படி செல்வத்தால் உயர்ந்த நிலையிலிருந்தார், வறுமையால் தாழ்ந்த நிலையை அடைவர் என்பது,

''முல்லை முகைசொரிந்தாற் போன்றினிய
பாலடிசில்மகளிரேந்த
நல்ல கருணையால் நாள்வாயும் பொறகலத்து
நயந்துண்டார்கள்
அல்ல லடைய அடகிடுமினோட்டகத்தென்று
அயில்வார்க்கண்டும்.
செல்வம் நமரங்காள் நினையன்மின்செய்தவமே
நினைமின்கண்டீர்.''

என்னும் சீவகசிந்தாமணி முத்தியிலம்பகம் 25-ஆம் செய்யுளானும்

''ஆமின் சுவையவை யாறோ டடிசிலுண்
டார்ந்தபின்
தூமென் மொழிமடவா ரிரக்கப் பின்னுந் துற்றுவார்

ஈமி னெமக்கொரு துற்றென் றிடறுவ ராதலின்
கோமின் துழாய்முடி யாதியஞ் சோதி குணங்களே.''

என்னும் திருவாய்மொழியானும்,

''சிறப்புஞ் செல்வமும் பெருமையு முடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினு மடைவர்.''

என்னும் வெற்றிவேற்கைச் செய்யுளடிகளானும் உணரப் படும்.

அறுசுவை உண்டி- இரண்டாம் வேற்றுமை உருபும் பயனுமுடன் தொக்கதொகை. அறுசுவை- பண்புத்தொகை. உண்டி- உண்ணப்படுவது; இதில் உண்- பகுதி, இ- செயப் படு பொருள் விகுதி, ட்- எழுத்துப்பேறு. ஊட்ட - பிறவினை வினை யெச்சம்; இதில் ஊட்டு - பகுதி, அ- வினையெச்ச விகுதி. ஊட்டு- என்பதில், உண்- பகுதி, டு- பிறவினை விகுதி, முதல் நீட்சியும், ண்-ட் ஆனதும் விகாரம். மறுசிகை- பண்புத்தொகை. சிகை- மயிர்முடி; பிசைந்த உணவினின்றும் எடுக்கும்கவளம் சிகைபோன்றிருத்தலின் அதற்குச் சிகை உவமவாகுபெயராயிற்று. இஃது இந்நூல் 18ஆம் செய்யுளி லும், 'இருசிகையு முண்டீரோ'' என்ற தொடரிலும் வருதல் காண்க. சிகை- சிகா என்னும் வடமொழித்திரிபு. உண்டாரும் - என்பதில், உம்-உயர்வுசிறப்புப் பொருளது. வறிஞர்- என்பதில், ஞ் - பெயரிடைநிலை, அர்- பலர்பால் விகுதி; வறுமை என்னும் பண்புப்பகுதி ஈறுபோய் இடை உகரம் இகரமாயிற்று. எனின் - ஆதலால் என்னும் பொருள்பயந்து நின்றது. செல்வம்- என்பதற்கு (எவரிடத்திலும் நில்லாது) செல்லுந்தன்மையுடையது என்பது பொருள்; இதில், செல்- பகுதி, அம் - வினைமுதற் பொருள் விகுதி, வ்- எழுத்துப் பேறு. உண்டு - குறிப்பு முற்று. வைக்கல் - தொழிற்பெயர். பாற்று - பான்மை என்பதனடியாகப் பிறந்த ஒன்றன்பாற்

படர்க்கைப்பெயர். இச்செய்யுளின் பின்னிரண்டடிகளில் அமைந்த எதுகை இனவெதுகை யெனப்படும்.

2. *துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்*
பகடுநடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டு நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்.

(இ.ள்) செல்வம் - ஐசுவரியமானது, அகடுஉற- நடுவு நிலை பொருந்த, யார்மட்டும் - எவரிடத்திலும், நில்லாது- நிற்காமல், சகடம் கால்போல்- வண்டியின் சக்கரத்தைப் போல, வரும் - கீழ்மேலாகவும் மேல்கீழாகவும்) மாறிமாறித் தோன்றும், (ஆதலின்), துகள்தீர்- குற்றமில்லாத, பெருஞ் செல்வம் - அதிகரித்த ஐசுவரியம், தோன்றியக்கால் - (ஒருவ ரிடத்தே) உண்டானால், (அவர்), தொட்டு - (அங்ஙனம் உண் டானநாள்) தொடங்கி, பகடு நடந்தகூழ்- எருமைக்கடாக்கள்) ஏரைத்தாங்கி யிழுத்து) நடந்ததனால் (உண்டான பயிர்விளை வின் மூலம்) கிடைத்த உணவை, பல்லாரோடு - பல பேர்களு டனேகூடி (அவர்கட்கும் பகுத்திட்டு), உண்க- உண்ணக் கடவர். எ-று.

செல்வமானது, வண்டியின் சக்கரத்தைப்போன்று ஒருநிலையின்றி ஒருவரிடத்துத் தாழ்ந்து முயர்ந்தும் (அதாவது இல்லாமல் அழிந்தும் உண்டாகியும்) மாறிமாறி வரக்கூடியதாதலின், அஃதுண்டானபோதே அவர், நிலைத்த பேரின்பத்தை அடைதற் பொருட்டுத் தமக்குக் கிடைக்கும் உணவைப் பலருக்கும் பகுத்திட்டு உண்டு தானதருமங் களைத் தேடிக்கொள்ள வேண்டுமென்பது இதன்கருத்து. 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்றபடி பொருள் கிடைத்தபோதே அஃதழிவதற்குமுன் அறத்தைத் தேடிக் கொள்ளுதல் அறிவுடைமையாம். ஜைன நூல்களிற் கூறிய ஆகாரதானம், சாஸ்திரதானம், ஔஷததானம், அபயதானம் என்னும் நால்வகைத் தானங்களில் ஆகாரதானமே சிறந்ததாக

லின் இங்கு 'கூழ் பல்லாரோடுண்க' என அதனைக்கூறினார் முனிவர். இந்த ஆகாரதானத்தைச் செய்யின் மற்ற தருமங்கள் தாமே வந்தடையும்.

''அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.''

என்பதால் இவ்வாகாரதானத்தின் உயர் வுணரப்படும். கூழ் உணவின் பொதுவை உணர்த்தி நின்றது. தீய வழியில் வந்த பொருள் அறத்தையும் புகழையும் தேடுதற்குக் காரண மாகாதாதலால் அதனை நீக்குதற்கு 'துகள் தீர் பெருஞ் செல்வம்' என்றார் முனிவர். தீதின்றிவந்த பொருளே நற் காரியங்கட்குப் பயன்படத்தக்க தென்பதை,

''ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு
ளெஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித் - தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு''

என்று ஔவையார் கூறிய வெண்பாவில் 'தீவினைவிட்டு ஈட்டல் பொருள்' என்றுரைத்ததாலும்,

''அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்''

என்னும் திருக்குறட் செய்யுளானு முணர்க. பெருஞ்செல்வம் என்றது - செலவிடுந்தோறும் குறைவுபடாமல் மேன்மேலும் வருவாயுள்ள பொருள் என்பதை விளக்கும். வேறுதொழில் களால் அதிகரித்த செல்வமெய்தினார்க்கும், உழுதொழி லாளர் அத்தொழிலை நடத்துவதனாலேயே உணவு கிடைத் தல் இயல்பாதலின், 'பகடு நடந்தகூழ்' என்றார் முனிவர்.

இனி, பயிர்த்தொழில் சிறந்ததாகலின் அந் நன்முயற்சியால் அடைந்த உணவென்பதை விளக்கற்பொருட்டு இங்ஙனம் கூறினாரெனினுமாம். பகடுகள் ஏரிழுத்துச் செல்வதால் உணவு பெறப்படுகின்றமையின் அங்ஙனம் பலர்க்கும் பயன் படுவனவான பிராணிகளின் உழைப்பால் வந்தது ஒரு வனுக்கே சுதந்திரமுடைய தன்று; பலர்க்கும் உரியது என்பதை விளக்கற் பொருட்டுரைத்தாரெனலுமொன்று. பல்லார் - விருந்தினர், சுற்றத்தார் முதலியோர். இனி 'பகடு நடந்தகூழ்' என்பதற்கு, 'பெருமைபொருந்திய உணவு' என வும் பொருள்கூறலாம். பகடு - பெருமை என்பதை, ''பகடிபம் பெருமையேறு பஃறியாண் மேதியைம்பேர்'' என்னு நிகண்டடியாலுணர்க. அகடு - என்பதை வயிறெனக் கொண்டு, பல்லாரோடு அகடுறஉண்க' என இயைத்து 'பலருடனே கூடி உணவை வயிறு நிரம்ப உண்ணுக' எனப் பொருள் கோடலு மொன்று; அகடு - வயிறென்பதை, 'அகடென்ப நடுவேகுக்கி' என நிகண்டில் வருதலாலுணர்க.

தீர்-காலங்கரந்த பெயரெச்சம்; இது, தன்வினை பிறவினைகட்குப் பொதுவான முதனிலையாகும்; இங்குத் தன்வினையினின்றது; செல்வம் என்னும் பெயர்கொண்டு முடிந்தது. தீர்செல்வம்- வினைத்தொகை. தோன்றியக் கால்-கால் விகுதி பெற்ற எதிர்கால வினையெச்சம். இது வலிமிகா திருப்பின் பெயரெச்சத் தொடராகும். தொட்டு இதில், தொடு- பகுதி. பகடு - எருமைச்சாதி ஆண். நடந்த- பெய ரெச்சம்; இது காரணப் பொருளது. உண்க- விதித்தற் பொருளில் வந்த வியங்கோள். யார் மாட்டும்- என்பதில், யார்- யாவா; என்பதன் தொகுத்தல்; மாடு - ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு, உம்- முற்றும் பொருளது. நில்லாது - வினையெச்சம்; வரும்- என்னும் முற்று வினை கொண்டு முடிந்தது. சகடம்- வடமொழி. இடையில் நின்ற 'செல்வம்' என்னும் சொல், 'நில்லாது' என முதலிலும், 'வரும்' என ஈற்றிலும் சென்று கூடுதல் தாப்பிசைப் பொருள் கோளெனப்படும்.

இடைநிலை மொழியே ஏனையீ ரிடத்தும்
நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை''

என்பது (நன்.பொ.65) சூத்திரம்.

3. *யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்*
சேனைத் தலைவராய்ச் சென்றோரும்-ஏனை
வினையுலப்ப வேறாகி வீழ்வர்தாங் கொண்ட
மனையாளை மாற்றார் கொள.

(இள்.) யானை- யானையினது. எருத்தம்- பிடரானது, பொலிய (தாம் அமர்ந்திருத்தலால் அழகுடன்) விளங்கும் படி, (அதன் மீதேறி,) குடை நிழல்கீழ்-வெற்றி வெண்குடை யின் நிழலடியில், சேனை- நால்வகைப் படைகளையுடைய, தலைவர் ஆய்- இறைவராகி, சென்றோரும்- (வீதிகளில் வலமாக) உலாச் சென்ற செல்வமிக்காரும், ஏனை- (அச் செல்வ முண்டானதற் குரிய நல் வினைக்கு) மறுதலை யாகிய, வினை - தீவினையானது, உலப்ப (அச் செல்வத் தைக்) கெடுப்பதனால், வேறு ஆகி-(அச்செல்வ நிலையி னின்றும்) மாறுபாடான நிலையை அடைந்து (தரித்திர முற்று) தாம் கொண்ட - தாங்கள் மணம் புரிந்து கொண்ட, மனையாளை- மனைவியையும், மாற்றார் கொள்ள- பகைவர் அபகரித்துக் கொள்ளும்படி, வீழ்வர்-தாழ்வுறுவர். எ-று.

நல்வினையால் செல்வ மிக்குடையாராய் யானை மீதேறிக் குடை நிழற்கீழ்ப் படைகள் சூழ ஊர்வலஞ்சென்ற அரசரும் தீவினை சேர்ந்துழி அந்நிலை கெட்டுத்தம் மனை யாளையும் பகைவர் கைப்பற்ற வறிஞராய்த் தாழ்ந்த நிலையை அடைவர் என்பது இதன் கருத்து. இங்ஙனம் அரசரும் அழிவர் என்று கூறியதனால் செல்வம் நிலையற்ற தென்பதும், அஃதுற்ற போதே மனிதர் அறஞ் செய்து நிலைத்த பேரின்ப வாழ்க்கை யைத் தேடிக்கொள்ள வேண்டு மென்பதும் கூறாமலே விளங்கும். 'யானை எருத்தம்

பொலியச் சென்றோர்' என்றதனானும், 'சேனைத் தலைவராய்ச் சென்றோர்' என்ற தனானும், 'குடைநிழற்கீழ்ச் சென்றோர்' என்றதனானும் அங்ஙனஞ் சென்றோர் தாங்கள் ஏறி அமர்வதால் யானையின் பிடர்க்கும் அழகு செய்யத்தக்க வனப்புடையவ ரென்பதும், மாற்றரசர் பலரையும் வென்று உலக முழுவதையும் தம் மடிப்படுத்திப் பொதுவற ஆளும் ஏக சக்கராபதிக ளென் பதும் பெறப்படும். நால்வகைச் சேனைகளாவன: இரதம், கஜம், துரகம், பதாதி என்பனவாம். இத்தகைய செல்வத்தைத் தருவது புண்ணியமாகிய நல் வினையாம்; இதனை யொழிப் பது பாவமாகிய தீவினையாம். ஒருவனுக்கு முற்பிறப்பில் செய்த நல்வினைப் பயன் எய்தும் போது செல்வம், கௌரவம் முதலியன கைகூடும்; அது தீர்ந்து பழைய தீவினைப் பயன் வந்துறுங்கால் அச் சிறப்புக்கள் அழிவுறும். ஆதலின், அந்நல்வினைப் பயனாகிய செல்வத்தை ஒழிக்கும் தீவினை அதற்கெதிராதல் பற்றி 'ஏனைவினை' எனப்பட் டது. தீவினை கொடிதாதலின் முனிவர் அதனை வாயாற் கூறவும் அஞ்சி, இங்ஙனம், 'ஏனை வினை எனக் கூறினா ரெனலுமொன்று. இனி, ஏனை - என்பதை அசை நிலையெனத் தள்ளி, வினையுலப்ப - என்பதற்கு 'செல்வத்தை நல்கிய அந் நல்வினைகெட்' எனப் பொருளுரைத்தலு முண்டு; சிலப்பதிகாரத்தில் 'முதிர்வினை நுங்கட்கு முடிந்த தாகலின்' என்பதற்கு, அடியார்க்கு நல்லார், 'நுங்கட்கு முற்பட்ட நல்வினை முடிந்த தாமலான்' என உரை கூறி, அதற்குதாரணமாக இச் செய்யுளின் 'ஏனை வினை யுலப்ப' என்ற தொடரையே எடுத்துக் காட்டியிருத்தலான் இது துணியப்படும். இஃதன்றி, 'ஏனைவினை' என்பதை 'மேனைவினை' யெனப் பாடபேதங்கொண்டு அதற்கு 'முந்தியவினை' எனப் பொருள் கூறுவாறுமுளர். மேலை- என்பது, மேனை எனவந்த தென்பது இவர் கொள்கை.

நல்வினை தீர்ந்த விடத்துத் தாழ்வுவரு மென்பதை இந் நூலின் 51ஆம் செய்யுளில், ''நல்வினை தீர்விடத்து நிற்குமாந்தீது'' என்பதனானு முணர்க. மன்னர் மற்ற செல்

வங்களை யிழத்தலினும் மனையாளைப் பகைவர் கொள்ள விடுதல் அவர்க்கு மிக்க இழிவாதலின், அவ்வளவு தாழ்ந்த நிலையையும் அடைவர் என்பதைக் குறிப்பிடுதற்கு 'மனை யாளை மாற்றார் கொள்ள வீழ்வர்' என்றார் முனிவர். இங்கு வீழ்வர்- என்றது உயர்ந்த நிலையிலிருந்து தாழ்ந்த நிலை யடைதலை. இனி, வீழ்வர்- என்பதற்கு 'பகைவர் கையால் ஆவி சோர்ந்து யுத்த பூமியில் சாய்வர்' எனப் பொருளுரைத் தலும் அமையும்; இதற்குத் தக்க, ''யானை எருத்தம் பொலி யக் குடை நிழற் கீழ்ச் சேனைத் தலைவராய்ச் சென்றார். என்றதனானே 'நால்வகைப் படைகளுடன் யானை மீதேறி வெற்றிக்குடையின் கீழ்ப் பகையரசருடன் பொருதச் சென்ற மன்னரும், தம் செல்வத்தோடு மனையாளையும் மாற்றார் கொள அவர் கையால் மடிந்து வீழ்வர், என்பது விளங்கும். இத்தகைய செல்வச் சிறப்புடைய சக்கரவர்த்திகளும் தாழ் வுறுவர் எனவே, மற்றவர் இந்நிலையடைவ ரென்பது கூறா மலே அமையும். இங்ஙனம் தீவினையால் உயர்ந்தோரும் தாழ்வர் என்பது,

''உய்ம்மின் திறைகொணர்ந் தென்றுல
காண்டவரிம்மையே
தம்மின்சுவை மடவாரைப் பிறர்கொளத் தாம்விட்டு
வெம்மி னொளிவெயிற் கானகம் போய்க்
குமைதின்பர்கள்
செம்மின்முடித் திருமாலை விரைந்தாடி சேர்மினோ''

என்ற திருவாய் மொழியானும்,

''குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினு நண்ணுவர்''

''குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே யழியினு மழிவர்''

என்னும் வெற்றிவேற்கை யடிகளானும் உணரப்படும்.

எருத்தம் பொலிய - எழுவாய்த் தொடர்; ஏழாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டு, 'எருத்தத்தில் பொலிய' என விரிப்பினும் அமையும். எருத்து -கழுத்தின் மேற்புறம்; அதாவது பிடர்; அம்- சாரியை, பொலிய - வினை யெச்சம்; இது சென்றோர் என்பதற்குரியாகி நின்றது. கீழ்- ஏழனுருபு. சேனை- ஸேநா' என்னும் வட சொற்றிரிபு; இதில் ஆவீறு ஐயாயிற்று. சென்றோரும் - என்பதில், உம்மை- உயர்வு சிறப்புப் பொருளது. ஏனை- பிறிதென்னும் பொருள் தரு மிடைச்சொல். மனையாளை- என்றதில் இறந்தது தழு விய எச்சப் பொருளைத் தரும் உயர்வு சிறப்பும்மை விகாரத் தாற்றொக்கது; இது, 'மற்றைச் செல்வங்களையே யன்றி மனையாளையும், என விரியும். உலப்ப - சேறாகி என்பதற் குக் காரணப் பொருட்டாய் வந்த செயவெனெச்சம். கொள - செயவெனெச்சம்; வீழ்வர் என்பதற்குக் காரணமாய் நின்றது. மாற்றார்- மாறானவர்; மாறு- எதிர்; இது பகுதி.

4. *நின்றன நின்றன நில்லா வெனவுணர்ந்*
தொன்றின வொன்றின வல்லேசெயிற்செய்க
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று.

(இ-ள்) வாழ்நாள்- (மனிதரின் உயிர் தேகத்தோடு சேர்ந்து) வாழும் நாள்கள் (ஆயுள் நாட்கள்) சென்றன சென் றன- (கழிந்து) போயின போயின, கூற்று - யமன், செறுத்து - கோபங்கொண்டு, உடன்-(அங்ஙனம் ஆயுள் நாட்கள் கழிந்த) உடனே (அதாவது விரைந்து), வந்தது வந்தது - வந்து விட்டது வந்துவிட்டது. (ஆதலின்) நின்றன நின்றன- (கண்முன் நிலை யாக நிற்பன போன்று) நின்றவை நின்றவையாகிய செல்வம் முதலிய பொருள்களெல்லாம் நில்லா- நிலையாக நிற்க மாட்டா, என்- என்று, உணர்ந்து- (அவற்றின் நிலையற்ற தன்மையை) அறிந்து, ஒன்றின ஒன்றின- (மனிதர் நற்கதி

யடைதற்குப்) பொருந்தினவை பொருந்தினவையாகிய அறங்களெல்லாவற்றையும், செயின் - செய்யத் தொடங்கினால், வல்லே- விரைவில், செய்க- (மனிதர் ஒவ்வொருவரும்) செய்யக் கடவராக; எ-று.

மனிதர், நம் வாழ்நாட்கள் கழிந்துகொண்டே யிருக்கின்றன. நம் ஆவியை உடலைவிட்டுப் பிரித்தற்கு யமனும் விரைந்து வருவான்; ஆதலின், நம்முன் நிலைபெற்றிருப்பன போல், தோன்றுகின்ற பொருள்களெல்லாம் நிலைநிற்க மாட்டா வென்றுணர்ந்து, நற்கதியடைவதற்குப் பொருந்திய தருமங்களைச் செய்யப் புகுந்தால் விரைந்துசெய்க, என்பது இதன்கருத்து. இங்ஙனம் கூறியதனால், செல்வம், ஆயுள் முதலியன நிலைபெறா; ஆதலின் அத்தகைய செல்வம், ஆயுள் முதலியவற்றை நிலைநிற்குமென்று நம்பியிருந்து யமன் கைப்பட்டுத் துர்கதியடைந் தொழியாமல் நித்திய மாகிய பேரின்பத்தை அடைதற்குரிய தர்மங்களை விரைந்து செய்து மனிதர் உய்யவேண்டுமென்பது விளங்கும்.

இக்கருத்தினை,

''காலைச்செய் வோமென் றறத்தைக்
கடைப்பிடித்துச்
சாலச்செய் வாரே தலைப்படுவார்-மாலைக்
கிடந்தா னெழுபத லரிதான்மற் றென்கொ
லறங்காலைச் செய்யாத வாறு''

என்னும் அறநெறிச்சாரச் செய்யுளானுமுணரலாம்.

நின்றன- செல்வம், இளமை, ஆயுள்முதலியன; இவை அழியக் கூடியனவா யிருப்பினும், மனிதருக்கு நிற்பன போலத் தோன்றுவது உலகியற்கை. மனிதர் மாயை வயப் பட்டிருப்பவராதலின் அவர்க்கு அங்ஙனம் தோன்றும். அது பற்றியே முனிவர், 'நின்றன நின்றன' என்றார். நின்றன

நின்றன, ஒன்றின ஒன்றின என்னும் அடுக்குகள் - மிகுதிப் பொருளைக் காட்டவந்தன; சென்றன சென்றன, வந்தது வந்தது என்னும் அடுக்குகள் - விரைவுப் பொருளைக் காட்ட வந்தன. இவை தொல்காப்பியம் சொல்லதிகாரம், எச்சவியல் 5-வது சூத்திரத்தில்,

''இசைநிறை யசைநிலை பொருளொடு
புணர்தலென்
றவைமூன் றென்ப வொருசொல் லடுக்கே''

என வருதலால் உணரப்படும். நிகழ்காலத்தில் நடந்து கொண்டிருக்கும் வாழ்நாட்களை, சென்றன - என்று இறந்த காலத்தாற் கூறியதும், எதிர்காலத்தில் வரக்கூடிய கூற்றின் வருகையை, வந்தது என்று இறந்தகாலத்தாற் கூறியதும் விரைவு பற்றிவந்த கால வழுவமைதியாம்; இவை,

''வாராக் காலத்து நிகழுங் காலத்து
மோராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
யிறந்த காலத்துக் குறிப்போடு கிளத்தல்
விரைந்த பொருள வென்மனார் புலவர்''

என்னும் தொல்காப்பியம் சொல்லதிகாரம் வினையியல் 44ஆம் சூத்திரத்தால் தெளிவாம். வல்லே, உடன்- என்பன விரைவுப் பொருளைத் தரும் இடைச்சொற்கள். நான்- பால்பகா அஃறிணைப் பெயர்;

''பால்பகா வஃறிணைப் பெயர்கள்பாற்
பொதுமைய'

என்னும் நன்னூல் பெயரியல் -24ஆம் சூத்திரவிதிப்படி, இஃது ஒருமைப்பால் பன்மைப்பால்களின் விகுதிகளுள் ஒன்றை ஏலாது இரண்டிற்கும் பொதுவாய் நின்று, முன்னும் பின்னும் வரும் சொற்றால் பொதுமை நீங்கி இன்னபால்

என்று அறியக்கூடிய தாதலின், சென்றன என்னும் பன்மை வினைகொண்டு பன்மைப் பாலை விளக்கிற்று. தேவர்களை இருதிணையாகவும் கூறுவது இலக்கணமாதலின், இதில், 'கூற்று வந்தது' என்று யமனை அஃறினையாகக் கூறினார் முனிவர். கூற்று- என்பதற்கு, 'உடலையும் உயிரையும் வெவ் வேறாகக் கூறுபடுத்துவோன்' என்பது பொருள். அஃதாவது 'உயிரை உடம்பினின்றும் நீக்குபவன்' என்பதாம். தொல்காப்பியம் புறத்திணை- சூத்திரம் 24ல் ''கூற்று - வாழ் நாள் இடையறாது செல்லும் காலத்தினைப் பொருள்வகை யாற் கூறுபடுத்தும் கடவுள்'' என்பர் நச்சினார்க்கினியரும். இச்செய்யுளில் நான்காவது அடி இனவெதுகை.

5. *என்னானு மொன்றுதங் கையுறப் பெற்றக்கால்*
பின்னாவ தென்று பிடித்திரா-முன்னே
கொடுத்தா ருயப்போவர் கோடிறீக் கூற்றம்
தொடுத்தாறு செல்லுஞ் சுரம்.

(இ-ள்) என் ஆனும் ஒன்று - யாதாயினும் ஒரு பொருள், தம்கை- தங்கள் கையிலே, உறப்பெற்றக்கால் -கிடைக்கப் பெற்றால், பின் ஆவது என்று - (இதனைப் பிறர்க்குக் கொடுத்தல்) பின்னே ஆகக்கடவது என்று, பிடித்து இரா-(அதனைச் செலவிடாமல்) இறுகப்பிடித்து வைத்துக் கொண்டிராமல் - முன்னே, அஃதழிந்து தழிந்து போவதற்கு முந்தியே, கொடுத்தார் - (அப்பொருளினால் தானங் கொடுத்தவர்கள், கோடு இல்- (நடுநிலைமையை விட்டு சாய்தல் இல்லாத, தீ கூற்றம் - (குற்றம் செய்தாரைத் தண்டித் தல் கொடுமையை உடைய யமன்), தொடுத்து - (தம்மைப் பாசத்தால் கட்டி, செல்லும் - இழுத்துப் போகின்ற ஆறு- வழியிலே இருக்கின்ற, சுரம் - வெப்புநிலத்தினின்றும் (அதா வது பாலை நிலத்தினின்றும்), உய- (அத்தான மீதலாகிய நல்வினை வந்துதவுதனால்) தப்பி, போவர்- (நற்கதிசேர வேறு நல்ல வழியிற் றிரும்பிச் செல்லுவார்கள்; எ-று.

ஏதாவதொரு பொருளை அடைந்தால், தானதருமங் களைப் பின்னே செய்து கொள்ளலாமென்று அதனை இறுக்க மாகக் கையில் பிடித்து வைத்துக் கொண்டிராமல் உடனே நன்மார்க்கத்தில் செலவிடுவோர் யமன் கையிற் சிக்கி நரக துன்பத்தை அனுபவித்தற்கு அவனால் வருத்தமிகுவதாகிய வழியில் கொண்டு போகப்படாமல், சுவர்க்க இன்பத்தை அனுபவித்தற்கு வேறு நல்ல மார்க்கத்திற் செல்வர் என்பது இதன் கருத்து. தானதருமங்களைச் செய்யாதவர் யமன் கையிற் சிக்கி, அவனால் வருத்தமிக்க பாலை நிலவழியாகக் கொண்டு போகப்பட்டு நரக துன்பத்தை அடைவர்; அறங் களை இயற்றுவோர், அவ்வாதனைகளின்றி நன்மார்க்கத்திற் சென்று இன்பமிக்க சுவர்க்க பதவியை அடைவர். ஆதலின், மனிதர் பொருளைப் பெற்றபோதே பிறர்க்கும் கொடுக்க வேண்டுமென்பது இதில் வற்புறுத்திக் கூறப்பட்டது. ஆகவே நிலையற்ற பொருளைப் பெற்றார் நிலைத்த இன்பத்தை அடைதற்கான அறத்தைத் தேடிக்கொள்ள வேண்டுமென்பது இதனாற் பெறப்படும். 'கொடுத்தார் உயப்போவர்' என்றதால் 'கொடாதவர் யமவாதனைக் குட்படுவர்' என்பது கூறாமலே அமையும். பின்னாவது- என்பதற்கு, 'பிற்காலத்தில் (அதாவது முதுமைப் பருவத்தில்) உதவக்கூடியது என்று பொருளுரைத்தலு மொன்று.

என்-எவன் என்னும் குறிப்பு முற்றினாலணையும் பெயரின் விகாரம்; இடை குறைந்து நின்றது. ஆனும் - ஆயினும் என்னும் இடைச்சொல்லின் விகாரம்; விகற்பப் பொருளில் வந்தது. பெற்றக்கால்- காலீற்று வினையெச்சம். 'பின்னாவது' என்பதற்கு முன் 'இதனைப் பிறர்க்குக் கொடுத்தல்' என்பது இசையெச்சமாக வருவித்துரைக்கப் பட்டது. ஆவது-என்பது வியங்கோளாகக் கொள்ளற்பாலது. பிடித்து- என்பது பொருளைச் செலவிடாமல் வைத்துக் கொள்ளும் உலோபத்துவத்தை விளக்கும். இரா- ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்; 'கொடுத்தார்' என்பதனோடு முடியும். கொடுத்தார்- வினையாலணையும் பெயர். உய்ந்து-

என்னும் செய்தெனெச்சம், உய-எனச் செயவெனெச்சமாய்த் திரிந்து நின்றது. ''சொற்றிரியினும் பொருள் திரியா வினைக் குறை'' என்பது (ந-வி-27) சூத்திரம். கோடு-முதனிலைத் தொழிற்பெயர்; கோடுதல் - கோணுதல், அஃதாவது நடுவு நிலைமை தவறுதல். யமன் பாராபக்ஷமின்றி எப்பொழுதும் நடுவுநிலைமையில் நிற்கக்கூடியவ னாதலின் அவனை, 'கோடில் கூற்றம்' என்றார் முனிவர்; இதனை சமன், செங் கோற்கடவுள், தருமன் என்னும் பெயர்கள் அவனுக் கமைந் திருத்தலினாலும் உணர்க. இத்தகையனை, தீக்கூற்றம் என்றது, பாவஞ்செய்வோரைத் தண்டிப்பதில் அவன் மன மிரங்காமைபற்றி வந்தது. சுரம்- என்பது 'ஜ்வரம்' என்னும் ஆரிய மொழித்திரிபு. பாலைநிலமாவது- நீர் நிழல்கள் இல்லாதபூமி; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்துநிலங்களுள் ஒன்று. கொடுத்தார்-எழுவாய். போவர்- பயனிலை. (ரு)

6. *இழைத்தநா ளெல்லை யிகவா பிழைத்தொரீஇக்*
கூற்றங் குதித்துய்ந்தா ரீங்கில்லை- யாற்றப்
பொரும்பொருள் வைத்தீர் வழங்குமி னாளைத்
தழீஇந்தழீஇந் தண்ணம் படும்.

(இ-ள்) இழைத்த நாள் - (பழவினையால் மனிதர்க்கு) விதிக்கப்பட்ட ஆயுள் நாள்கள், எல்லை-தமக்குள்ள அளவை, இகவா- கடக்கமாட்டா, கூற்றம்- யமனிடத்தினின் றும், பிழைத்து- தப்பி, ஒரீஇ- நீங்கி, குதித்து-தாவியோடி, உய்ந்தார்- உயிர்பிழைத்தவர்கள், ஈங்கு- இவ்வுலகத்தில், இல்லை- எவருமில்லை, நாளை - நாளைக்கு (அதாவது சமீப காலத்திலேயே,) (நீங்கள் இறக்க,) தழீஇம் தழீ இம் - தழீ இம் தழீ இம் என்னும், தண்ணம்- சாப்பறையின் ஒலி யானது, படும் உண்டாகும், (அதாவது சாப்பறை முழங்கும்,) (ஆதலின் பெரும்பொருள்- மிகுந்த திரவியத்தை, வைத்தீர்- சேர்த்துவைத்திருக்கின்றவர்களே! (அத்தகைய மரணம் வருமுன் அப்பொருளை) வழங்குமின்- தானமாகக்

கொடுத்து நற்கதியடையுமாறு புண்ணியத்தைத் தேடிக் கொள்வீராக; எ-று.

மனிதர்க்குப் பழவினையின் பயனாக இறைவனால் விதிக்கப்பட்ட ஆயுட்காலம் அளவிற்குமேல் ஒரு நிமிடமும் கடவாது; யமனுடைய பாசப்பிணிப்பினின்றும் தவறியோடு தல் எவராலு மியலாது; அதனால் எவர்க்கும் விரைவில் மரணம் வருவது நிச்சயமாம். ஆதலின் மிகுந்த பொருளைத் தேடிவைத் திருப்பவர்கள் தானங்கொடுத்து மேற்கதியிற் செல்வதற்குப் புண்ணியத்தைத் தேடிக்கொள்ள வேண்டு மென்பது இதன் கருத்து. இதனால், பொருள் படைத்தோர் விரைந்து தேடிக்கொள்ளத் தக்கது புண்ணியமே என்பது துணியப்படும்.

ஆயுள் நாட்கள், தமக்கேற்பட்ட அளவில் குறுகவு மாட்டா, வளரவுமாட்டா; ஆதலின், 'எல்லை இகவா' என்றது பொதுவாய் இவ்விரண்டினையும் விளக்கி நின்றது. இச் செய்யுட் கருத்தின்படி மனிதர்க்கு மரணம் வருவது நிச்சய மென்பதையும், அதனால் மனிதர் விரைந்து அறஞ்செய்ய வேண்டு மென்பதையும்,

''கோட்டுநா ளிட்டுக் குறையுணர வாராதால்
மீட்டொரு நாளிடையுந் தாராதால்- வீட்டுதற்கே
வஞ்சஞ்செய் கூற்றம் வருதலா னன்றாற்றி
அஞ்சா தமைந்திருக்கற் பாற்று''

என்னும் அறநெறிச்சாரம் 109-ஆம் செய்யுளானு முணரலாம். ஒருவி- என்னுஞ்சொல் விகாரப்பட்டு, ஒரீஇ- என அள பெடுத்தது; இது சொல்லிசை யளபெடை. பெரும்பொருள்- என்பதற்கு, 'உயர்வைத்தரும் பொருள்' எனினும் அமையும். ''பிழைத்து ஒரீஇ'' என்பதை, 'இகவா' என்பதனோடு கூட்டி 'நாள், எல்லைபிழைத்து ஒரீஇ இகவா' என முடித்தலு மொன்று, படும் - என்பதற்கு 'முழங்கும்' எனப் பொருளு

ரைத்தலும் அமையும். உயர்ந்தார்- படர்க்கை வினையா லணையும் பெயர். ஆற்ற - வினையுரியா வந்த வினை யெச்சம். வைத்தீர் முன்னிலை வினையாலணையும் பெயர். வழங்குமின்- என்பதில் மின்- ஏவற் பான்மை விகுதி. அறநெறிச்சாரம் 69ஆம் செய்யுளில், ''சென்றநா ளெல்லை சிறு விரல்வைத் தெண்ணலாம் நின்ற நாள் யார்க்கு முணர் வரிது'' என்றபடி, மனிதர் ஆயுளுக்குச் சென்ற நாள்கள் போக இருக்கும் நாள்கள் இத்தனை யென்று அளவிடற்கரியன வாதலின் மனிதர்க்கு மரணம் வரும் நாள் இன்ன தென்று துணிந்து கூறாமல், பொதுப்படச் சமீபத்தில் வரும் என்பது தொனிக்க ''நாளைத் தண்ணம் படும்'' என்றார் ஆசிரியர். நாளை என்பது காலவிரைவைக் காட்டுமோர் குறிப்புச் சொல். தண்ணம் - பறைப்பொது; அஃதிங்குச் சாப்பறையை விளக்கி நின்றது; அது தன்னொலியை விளக்கி, அவ்வொலிக் குக் கருவியாகு பெயராயிற்று இனி, தண்ணம் - என்பதற்கு, 'சாப்பறையானது தழீஇம்தழீ இம் என்னும் ஓசையுண்டாகும் படி அடிக்கப்படுதல் கூடும்' எனப் பொருளுரைத்தலு மொன்று. தழீஇம் தழீஇம்- என்னும் அடுக்கு அனுகரண மாகிய ஒலிக்குறிப்பு; அனுகரணமாவது; ஒன்றன் உவமை, அல்லது ஒன்றன் செயலை விளக்கி நிற்பது; இஃதிரட்டைக் கிளவி யெனப்படும்; அதாவது ஒரே பொருள் குறித்த இரண்டு சொற்கள் சேர்ந்த அடுக்கு.

''இரட்டைக் கிளவி யிரட்டிற்பிரிந் திசையா''

என்னும் தொல்காப்பியம்- சொல்லதிகாரம்- கிளவி யாக்கம் 48வது சூத்திர விதிப்படி அமைந்ததிது; இதிலுள்ள அள பெடை இயற்கை யளபெடை யெனப்படும்; இன்னிசையள பெடை யெனலுமாம். மரணம் வருமென்பதை விளக்கி நின்ற 'தழீஇந்தழீ இந் தண்ணம் படும்' என்ற தொடர், சொல்லானன்றிச் சொல்லுவான் குறிப்பால் பொருளுணரப் படுவதாம்; இது,

''முன்னத்தி னுணருங் கிளவியு முளவே
இன்ன வென்னுஞ் சொன்முறை யான்''

என்னும் (தொல்-சொல்-எச்-63) சூத்திரத்தாலுணரப் படும்; இங்ஙனம் வந்த இது பிறிதினவிற்சியணி யெனவும் படும். இச்செய்யுள் பல விகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா.

7. *தோற்றஞ்சான் ஞாயிறு நாழியா வைகலுங்*
கூற்ற மளந்துநுந் நாளுண்ணு - மாற்ற
வறஞ்செய் தருளுடையீ ராகுமின் யாரும்
பிறந்தும் பிறவாதா ரில்.

(இ-ள்) (மானிடரே!) தோற்றம்சால்- (நாடோறும்) உதயமாதல் பொருந்திய, ஞாயிறு- சூரியனை, நாழிஆ- முகத்தல் அளவு கருவியாகும்படியாகக் கொண்டு, வைகலும்- தினந்தோறும், கூற்றம்- யமன், நும் நாள்- உம்முடைய வாழ்நாள்களை, அளந்து-அளவு செய்து, உண்ணும் உண்டு வருகிறான்(அதாவது கழித்து வருகிறான்), (அதனால், மனிதராயினார் நெடுங்காலம் உலகில் வாழ்தல் அரிதாகும்; அங்ஙனம் மனிதர் வாழ்க்கை நிலையற்றதாயிருத்தலின், இவ்வுலகில் பிறந்தவர்கள் உடம்பழியுமுன் அதன் பய னாகிய அறத்தைத் தேடிக்கொள்ளல் வேண்டும்; (அதனைப் புரியாவிடின்) யாரும்- எப்படிப்பட்டவர்களும், பிறந்தும்- (இவ்வுலகில் மானிடராய்த்) தோன்றியும், பிறவாதாரில்- பிறவாதவர் போலவே (ஆவர்), (ஆதலின் குறுகிய ஆயுளை யுடைய அவ்வுடம்பிருக்கும்போதே), ஆற்ற-மிகுதியாக, அறம்செய்து- (நற்கதி யடைதற்கேதுவாகிய) தருமத்தைப் புரிந்து, அருள் உடையீர் ஆகுமின்- (நீங்கள் சகல உயிர்களிடத்தும்) கருணையுடைய வர்களாவீர்களாக; எ-று.

மனிதர்களே! உங்களைப்பற்றிச் செல்லும் கூற்றுவ னானவன், உங்களுடைய ஆயுட்கால முடிவையுணர்ந்து

கோடற்குச் சூரியனையே, உங்கள் ஆயுள் நாட்களை அளக்கும் படியாகக் கொண்டு நாள்தோறும் அளந்து கழித்து வருகிறான். அங்ஙனம் அளந்துவந்து நுமது ஆயுள் முடிந்த அன்றே உங்களைக் கவர்ந்து சென்று விடுவான். அதனால் உங்கட்கு மரணம் விரைந்துவரக் கூடியதாயிருக்கின்றது. அது குறுகுவதற்குள் நீங்கள் நற்பேற்றினை எய்துதற்கு அறம், அன்பு முதலிய நற்கருமங்களைப் புரிதல் வேண்டும்; அங்ஙனம் புரியாத எவரும் உலகத்தில் பிறந்தும் ஒரு பயனை யும் அடையாராதலின், பிறவாதவரே யாவர், ஆதலின், ஒவ்வொருவரும், அறம் செய்து அருளுடையீராகக் கடவீராக என்பது இதன் கருத்து.

சூரியனே, தன்னுடைய தோற்றத்தாலும் மறை வாலும் பகலிரவுகளை யுண்டாக்கி அவற்றால் ஒவ்வொரு நாளையும் தோற்றுவித்துக் கழித்துவர அதனால், மனிதரின் ஆயுள் நாட்கள் ஒவ்வொன்றாகக் குறைந்து வருதலின், அவன், அந்நாட்களை அளக்கும் கருவியாகக் கூறப்பட்டான். யமன் மானிடருக்கேற்பட்ட ஆயுள் நாட்களை ஒவ்வொன் றாகக் கணக்கிட்டுக் கொண்டே யிருந்து அவை முடிந்தவுடன் அவர்களைப் பிணித்துக் கொண்டு செல்பவனாதலின், சூரிய னாகிய முகத்தலளவு கருவியைக் கொண்டு மனிதர் ஆயுள் நாட்களை அளந்து கழிக்கும் அளவுகாரனாகக் கூறப்பட் டான். மக்களுடம்பெடுத்தற்குப் பயன் அறஞ்செய்தருளு டையாராகி மேற்கதிக்குச் செல்லுதலாம்; அப்பயனுடை யாரே உலகிற்பிறந்தோராவர்; மற்றையர் பிறவாதவரே. ஆதலின், அங்ஙனம் அறம்புரியாதாரை, ‘பிறந்தும் பிறவா தார் போன்றவராவர்’ என்றார் முனிவர். பிறந்தும் பிறவாதார் போன்றிருத்தல் மனிதர்க்கு இழிந்த செய்கை யாதலின், அதனைவிடுத்து அவர் பிறந்ததனாற் பெறுபயனையடை தற்கு ‘அறஞ்செய் தருளுடையீராகுமின்’ என்றும் கூறினார். சூரியனே மனிதரின் ஆயுள் நாட்களை அளக்கும் கருவியா மென்பதையும், நாள்கள் கழிவதனால் மனிதர் ஆயுள் குறையு மென்பதையும், இந்நூல் 22ஆம் செய்யுளில்,

''வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படா தெழுதலால்..................''

என வருதலானும், திருக்குறளில்,

''நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாளதுணர்வார்ப் பெறின்''

என வருதலானும் உணர்க. அருளாவது பிரதிபயன் கருதாது எல்லா வுயிர்களிடத்தும் செலுத்தும் கருணை; பிறவுயிர்களைக் கொல்லாமை, அவற்றிற்குத் துன்பியற்றாமை, இதஞ்செய்தல் முதலியன இதனுள் அடங்கும்; இத்தகைய அருளே அறஞ்செய்தற்கு முக்கிய காரணமாதலின், இங்கு அறஞ்செய்தலில் அருளே சிறப்பித்துக் கூறப்பட்டது. இங்ஙனம் அருளே அறத்திற்குக் காரணமென்பதை,

''பொருளுடையான் கண்ணதே போக மறனும்
அருளுடையான் கண்ணதே யாகும் - அருளுடையன்
செய்யான் பழிபாவஞ் சேரான் புறமொழியும்
உய்யான் பிறர்செவியிற் குய்த்து''

என்னும் சிறுபஞ்சமூலச் செய்யுளானுணர்க. 'யாரும் பிறந்தும் பிறவாதாரில் ஆவர்' என்றது, அருள் பொருந்தி அறஞ் செய்யாதவர், பெறுதற்கரிய மக்களுடம்பு பெற்றும் அதன் பயன் பெறாமையால் அதனை அடையாதவராய்ப் பகுத்தறிவற்ற விலங்குகளை நிகர்ப்பரென்பதையும் விளக்கி நின்றது.

'பிறவாதாரில்' என்பதை 'இறவாதாரில்' என மாற்றிப் பாடபேதங்கொள்வாரு முண்டு. அங்ஙனங் கொள்ளுமிடத்து ''அறஞ்செய்தருளுடையீ ராகுமின், யாரும் பிறந்து மிறவாதாரில்'' எனக் கூட்டி, ''தருமம் புரிந்து கருணையுடையீராகுங்கள்; அங்ஙனஞ் செய்யின் எவரும் மானிடராகப்

பிறந்திருந்தாலும், என்று மழியாது மோக்ஷஸ்தானத்தி விருப் பார் வகுப்பிற்சார்வர்'' என்று பொருளுரைத்தல் வேண்டும்.

தோற்றஞ்சால்- என்பதற்குப் பிரகாசமிகுந்த எனப் பொருளுரைத்தலு மொன்று; கலித்தொகையில், இக் கருத் துடன், ''தோற்றஞ்சால் தொகுபொருள்'' என்ற தொடர் அமைந்திருத்தல் காண்க. தோற்றம்- தொழிற் பெயர்; தோன்று- பகுதி அம்- விகுதி, னகரவொற்று றகரவொற்றா னது வலித்தல் விகாரம். சால்- உரிச்சொல். 'வைகலும்' என்பதில், உம்-தொறுப் பொருளது. 'உண்ணும்' என்பது 'கழிப்பான்' என்னும் பொருளில் நின்றது. ஞாயிறு நாழியாக உருவகிக்கப்பட்டது; இதற்குத் தகக் கூற்றுவனை அளவு காரனாகவும், நாள்களைத் தானியங்களாகவும் உருவகப் படுத்தல் வேண்டும்; எனினும் அங்ஙனம் உருவகப்படுத் தாமல் ஞாயிறுமட்டும் உருவகிக்கப்பட்டது- ஏகதேசவுருவக வணியின் பாற்படும். பிறவாதாரில் என்பதில், இல்- ஐந்தனு ருபு; ஒப்புப் பொருளது; இஃதொப்பில் போலி யெனப் படும். ஆவர்-என்னும் வினைமுற்று வருவித் துரைக்கப் பட்டது. இனி, இல்- என்பதை ஏழனுருபாகக் கொண்டு, 'யாரும் பிறவாதாரில்' என்பதற்கு, 'எவரும் பிறவாதாரில் (வைத்து எண்ணப்படுவர்), என உரைத்தலுமொன்று. இஃதன்றி, 'யாரும் பிறந்தும் பிறவாதாரில் கூற்றம் அளந்து நும்நாளுண்ணும்' எனக் கூட்டி, 'எவரும் பிறந்தும் பிறவா தவர் போலாம்படி (அதாவது இறக்கும்படி) யமன் அளந்து உங்கள் நாளைக் கழிப்பான்' எனப் பொருள் கூறுவாருமுளர். உண்ணும் - செய்யுமென்றும் முற்று; நிகழ்காலமுணர்த்தி நின்றது. அறம் - மனிதர் செய்யத்தக்கதென நூல்களால் வரை யறுக்கப்பட்டது என்று பொருள்படும் காரணக் குறியாம்; இதில், அறு- பகுதி, அம்- செயப்படு பொருள் விகுதி; இதன் எதிர்மொழி மறம்; அதாவது அதர்மம்; இது 'செய்யத்தகாதது என நூல்களால் மறுக்கப்பட்டது' என்னும் காரணப்பொருள் தருவது; இதில், மறு- பகுதி, அம்- செயப்படுபொருள்

விகுதி. யாரும் என்பதில், உம்மை- முற்றுப்பொருளது. அறஞ்செய்து அருளுடையயீராகுமின்' என்பதை விகுதி பிரித்து, 'அருளுடையீராக அறஞ்செய்ம்மின்' எனக் கூட்டு தலுமொன்று. 'மானிடரே' என்னும் விளியும், உரையிடையில் பிறசொற்றொடர்களும் இசையெச்சமாக வருவித்துரைக் கப் பட்டன. (எ)

8. *செல்வர்யா மென்றுதாஞ் செல்வுழி யெண்ணாத*
புல்லறி வாளர் பெருஞ்செல்வ- மெல்லிற்
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போற்றோன்றி
மருங்கறக் கெட்டு விடும்.

(இ-ள்.) (மிகுந்த செல்வம் பெற்று,) யாம்- நாம், செல்வர் என்று - (இப்பொழுது) செல்வமுடையோம் என்று நினைத்து மகிழ்ந்து (தம்மைத்தாமே பெருமையுடையவராக மதித்து) தாம் செல்வுழி- தாம் சொல்லுமிடங்களில், (உள்ள வர்களை) எண்ணாத - மதியாத, புல் அறிவாளர்- அற்பமதி யுடையவர்களின், பெருஞ்செல்வம்- அதிகரித்த ஐசுவரிய மும், எல்லில் - (இருள்மிக்க) இராக்காலத்தில் கருங் கொண்மூ- கரியநிறமுள்ள மேகமானது, வாய்திறந்த - வாய் திறந்து வெளிவிட்டதனாலுண்டாகிய, மின்னுபோல்- மின்னலைப்போல், தோன்றி- (சிறிது நேரம்) காணப்பட்டு நின்று (விரைவில்), மருங்கு அற - (தான் இருந்த) இடமுந் தெரியாமல் போக, கெட்டுவிடும்- அழிந்துபோகும்; எ-று.

பூர்வ புண்ணியத்தால் மிக்க செல்வம் பெற்று, அதனால் 'நாம் செல்வமுடையவரா யிருக்கின்றோம்' என்று செருக்குற்றுத் தாம் செல்லுமிடங்களி லிருக்கும் மற்றவர் களை மதியாதாரான அற்பமதியினருடைய அப்பெருஞ் செல்வமானது, இராக்காலத்தில் மேகம் வெளிப்படுத்தும் மின்னலைப்போல சிறிது காலம் இருப்பதுபோல் தோன்றிப் பின்னர் இருந்தவிடமுந் தெரியாமல் அழிந்துவிடும் என்பது இதன் கருத்து.

இங்ஙனம், ஒருவர் பெற்ற பெருஞ்செல்வம் மின்னலைப்போல் தோன்றி உடனே மறையுமென்றதனால், அதனைப்பெற்றார், அது நிலைத்திருக்குமென்று நம்பிச் செருக்கடையலாகா தென்பதும், அஃதழியுமுன்னரே அறத்தைத் தேடிக்கொள்ளவேண்டுமென்பதும் குறிப்பால் விளங்கும். செல்வம் நிலையற்றதா யிருந்தும் அதன் பொருட்டுச் செருக்கடைவோர் அறிவற்றவராவர்; ஆதலின் அன்னாரைப் 'புல்லறிவாளர்' என்றார் முனிவர். இனி, 'தாம் செல்வுழி எண்ணாத' என்பதற்கு, 'மறுமையில் தாம் செல் லுங்கதியை நினைக்காத'எனப் பொருளுரைத்தலுமொன்று; செல்வந்தாற் செருக்கடையாமல் அறஞ்செய்வோர் மறுமை யில் நற்கதியெய்துவர்; செல்வச் செருக்கால் பிறரை மதியா மலும் தர்மம் புரியாமலு மிருப்போர் தீக்கதியுட்சேர்வர். ஆதலின், செல்வச் செருக்குற்று அறஞ்செய்யாமலும், அதனால் தீக்கதியுட் சேர்வதை ஆலோசியாமலு மிருப்போர் புல்லறிவுடையாரென்க. இருள் மிகுந்த இரவில் மின்னலின் ஒளி மிகுந்து பிரகாசிக்குமாதலின், 'எல்லில் கருங்கொண்மூ வாய்திறந்தமின்' என்றார் முனிவர். இரவில் மேகத்தில் தோன்றும் மின்னல் மிக்க பிரகாசத்தோடு விளங்கி உடனே மறைந்துவிடும்; மனிதரிடத்தே தோன்றும் பெருஞ்செல்வ மும் உண்டானபோது மிக்க சிறப்புடையதாக விளங்கி விரைவில் அழிந்தவிடும். ஆதலின் இத்தகைய செல்வத் திற்கு அம்மின்னல் தொழில் உவமையாயிற்று; இஃதுவமை யணி யெனப்படும். கொண்மூ- நீரைக் கொள்ளுதலால் வந்த காரணப் பெயரெனலாம்; இதில், கொள்- பகுதி, மூ - விகுதி, மேகத்தில் தோன்றும் மின்னல், அது வாயைத் திறக்க அதிலிருந்து வெளிப்படுவது போலப் பார்வைக்குக் காணப் படுதலின் கொண்மூ வாய்திறந்த மின்' என்றார் முனிவர். செல்வர் யாம் - தன்மை யிற் படர்க்கை வந்த இடவழு வமைதி;

''ஒருமையிற் பன்மையும்பன்மையி னொருமையும்
ஓரிடம் பிறவிடம் தழுவலு முளவே''

என்னும் (நன்-பொ- 29) ஆம் சூத்திரவிதி பெற்றது. செல் + உழி=செல்வுழி; இதனிடையில் வகரந் தோன்றியது; ''எகர வினாமுச்சுட்டின் முன்னர்'' என்ற (நன்-உயி13) ஆம் சூத்திரத் தில், 'நெறி' என்ற மிகையால் இதுபெறப்படும்; இங்ஙனம் தோன்றிய வகரமெய்-உடம்படு மெய்யல்லாதமெய். செல் வம் - என்பதில் உயர்வு சிறப்பும்மை தொக்கது. மின்னு- என்பதில், உ- சாரியை, திரிந்த பெயரெச்சம்; காரியப்பெயர் கொண்டது; காரியம்-மின் கெட்டுவிடும்- என்பதில், விடு- துணிவுப் பொருளுணர்த்தும் விகுதி.

9. *உண்ணா னொளிநிறா னோங்கு புகழ்செய்யான்*
துன்னருங் கேளிர் துயர்களையான்- கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும்.

(இள்.) (ஒருவன் பொருளைப் பெற்றவிடத்து), உண்ணான்- (தானும்) அனுபவியாதவனாயும், ஒளிநிறான்- (அதனால் பிறர்மதிக்கத்தக்க நற்கருமங்களைப் புரிந்து 'இவர் பெரியார்' எனப் பலரும் தன்னை நினைக்கும்) மதிப்பினை யும் நிலைபெறச் செய்யாதவனாயும் ஓங்குபுகழ்- மிகுந்த கீர்த்தியை, செய்யான்- தேடாதவனாயும், துன் அரும்- சேர்தற்கு அரிய, கேளிர்- சுற்றத்தாரது, துயர்- துன்பத்தையும், களையான்- நீக்காதவனாயும், வழங்கான் - தானங் கொடுக் காதவனாயும், கொன்னே - வீணாக, பொருள்- அப் பொருளை, காத்திருப்பானேல்- காவல்செய்து வைத்திருப் பானாயின், (அவன்) அ,ஆ- ஐயோ!, இழந்தான் என்று - (இந்தப் பொருளை) இழந்து விட்டான் என்று, எண்ணப் படும்- (யாவராலும்) நினைக்கப்படுவான்; எ-று.

செல்வத்தைப் பெற்றவன், தானும் அனுபவியாமல் புகழ்ச்சிக்குரிய காரியங்களிலும் செலவிடாமல், வீணே காத்திருப்பானாயின், அச்செல்வத்தால் ஒருபயனுமில்லை

யாதலின், அஃதவனிடத்திருந்தும் அவன் பொருளற்றவ னாகவே பலராலும் கருதப்படுவான் என்பது இதன் கருத்து.

ஒருவனுக்குப்பொருள் கிடைக்குமானால் அவன் அப்பொருளுதவிகொண்டு, நல்லுணவாதிகளை உண்டனு பவிப்பதும், ஆடையாபரணாதிகளை யணிந்தும், வேறு பல வகைப்பட்ட இன்பானுபவங்களை யடைந்தும் தன்னைச் செல்வமுடையான் என்று பிறர் நன்குமதிக்கும்படி செய்தல் வேண்டும். உலகத்தில் புகழ் நிலைத்திருக்கும்படி பேரறங் களை இயற்றுதல் வேண்டும்; சுற்றத்தாரின் துயர் களைதல் வேண்டும்; ஏழையர்க்குப் பொருட்கொடை நல்க வேண் டும். இவையே, பொருள் பெற்றதனால் அடையும் பயன் களாம். இவற்றுள் எதையும் செய்யாதவனிடத்துள்ள பொருள் எவ்வகையிலும் பயனற்றதாம்; அவன் பொருள் பெற்றிருப்பினும் இல்லாதவனேயாவன்; ஆதலின் அவனைப் பார்த்தவர்களெல்லோரும் பொருளிழந்தவ னென்றே கூறியிகழ்வார்கள்; அதுபற்றியே முனிவர் அத்தகை யனை ''அஆ இழந்தானென் றெண்ணப்படும்'' என்றார். உண்ணான்- என்பதற்கு, 'பொருளால் நல்லுணவுகளைத் தேடி யுண்ணாமலும்' எனப் பொருளுரைப்பினும் அமையும். மனிதர்க்கு ஒளியாவது - சிறப்பு விளங்குதலாம்; பொரு ளுடையார் உயர்ந்த உணவாதிகளை உண்டும், அணி ஆடை களைத் தரித்தும், உன்னத மாளிகைகளில் வசித்தும், பணி யாளரை ஆட்சி புரிந்தும், பரோபகார சிந்தனையை மேற் கொண் டொழுகியும், சிறந்த ஊர்திகளில் ஊர்ந்து வெளியில் உலாப்போந்து மிருப்பராதலின் அவர் சிறப்பு எவர்க்கும் தெரியும்; அதனால், அவர் பலராலும் நன்கு மதிக்கப் பெறுவர்; இங்ஙனம் நன்கு மதிக்கப்படும் அவரது சிறந்த தோற்றமே இங்கு ஒளியெனக் கூறப்பட்டது. இது,

''ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர்.''

என்னுந் திருக்குறட் செய்யுளுரையில் பரிமேலழகர், ஒளி-தாம் உளகாலத்து எல்லாரானும் நன்கு மதிக்கப்படுதல் என்றும்,

''ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற்
கஃதிறந்து வாழ்து மெனல்''

என்ற திருக்குறளுரையில் ''ஒளி-தான் உளனாயகாலத்து மிக்குத் தோன்றுதலுடைமை; ஒளிநிறான் ஓங்குபுகழ் செய்யான்' என்றார் பிறரும்'' என்றும் உரைத்து இச்செய்யுளி லுள்ள, 'ஒளிநிறான்' என்பதையே உதாரணங் காட்டி யிருத்த லாலுணரப்படும். இனி ஒளி - என்பதற்கு அறிவெனப் பொருள் கொண்டு ஒளி நிறான் என்பதற்கு 'அறிவு விளங்கத் தக்க செயல்களைப் புரிந்து அறிவின் பிரகாசத்தை நிறுத்தான் எனப் பொருள் கோடலுமொன்று. (தொல். பொரு. சூ. 35) உரையில் 'ஒளி யாவது - வெள்ளையின்மை' என்பர் ஆசிரியர் நச்சினார்க் கினியர்; வெள்ளை - நுணுகிய கருத்தின்மை. புகழ் - தேவாலயம், அன்னதான சத்திரம், முதலாக என்றும் நிலைபெறு வனவாய்ச் செய்த பல தர்மங்களால் உண்டாய் இம்மைப் பயனாக இவ்வுலகத்தில் என்றும் அழிவுறாது நிலைபெறுங் கீர்த்தி; அதாவது, பேரறங்களைச் செய்தார் இறந்தபின்னரும், அவைநிலைநிற்றல் கண்டு உலகத்தார், அவர்களை உயர்த்திக் கூறி வருதலாம். இது மறுமையின் பத்தையும் பயக்க வல்லதாதலின் 'ஓங்குபுகழ்' எனப்பட்டது;

''நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றாது புத்தேளுலகு.''

என்னும் திருக்குறளானும்,

''புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவனேவா வானவூர்தி
எய்துப வென்பதஞ் செய்வினை முடித்து''

என்னும் புறநானூற் றடிகளானும் இம்மையிற் புகழாற்றி னார்க்கு விண்ணுலகத் துயர்வுண்டென்பது விளங்கும். நிறான் - என்பதில், நிறு- பகுதி, ஆன்- விகுதி, எதிர்மறை ஆகாரம் புணர்ந்து கெட்டது, உண்ணான், நிறான், செய்யான், களையான், வழங்கான் என்பன முற்றெச்சங்கள். சுற்றச் சேர்க்கை உலகத்தில் எல்லோர்க்கும் கிடைத்தல் அரிதாக லின் 'துன்னருங்கேளிர் என்றார் முனிவர். கேளிர் என்பதற்கு, 'நலமுற வாழ்தலைக் கேட்பவர்' என்பது பொருளாம்; இதில் கேள் - பகுதி, இர் - பலர்பால் விகுதி; இது மகளிர்- என்பது போலமைந்ததென்க; இனி, கேள்- உறவு எனக் கொண்டு அதனையுடையார் 'கேளிர்' என வுரைத்தலு மொன்று. கொன்னே- பயனின்மைப் பொருள்தருமோ ரிடைச்சொல்; இதனை,

> *''அச்சம் பயமிலி காலம் பெருமையென்*
> *றப்பா னான்கே கொன்னைச் சொல்லே''*

ஒன்னும் (தொல்-சொல்-இடை-6) ஆம் சூத்திரத் தானுணர்க. 'கொன்னே' என்பதை, 'வழங்கான்' என்பத னோடுகூட்டி, கொன்னே வழங்கான்' என்பதற்கு, 'கைம் மாறு விரும்பாமல் பொருளைத் தானமுஞ் செய்யான்' எனப் பொருளுரைப்பினும் அமையும். அ ஆ-இரக்கத்தைக் குறிக்கு மிடைச்சொல். எண்ணப்படும்- என்பதில், செய்யுமென் முற்று ஆண்பாலுக்கு வந்தது,

> *''பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை*
> *யவ்வயின் மூன்று நிகழுங் காலத்துச்*
> *செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா''*

என்னும் (தொல்-சொல்-வினை.30) ஆம் சூத்திர விதியா லமையும். இச்செய்யுளில் முன்னடி யிரண்டும் இன வெதுகை. அ ஆ என்பது ''விட்டிசைத்தல்லான் முதற்கண் தனிக்குறில் நேரசை யென், றெட்டப்படாது'' என்னும்

யாப்பருங்கலக்காரிகை விதிப்படி விட்டிசைத்ததனால், தனிக்குறில் முதற்கண் நேரசையாய்த் தேமா (நேர்நேர்) ஆகி, அதற்குமுன்வந்த, 'இருப்பானேல்' என்னும் காய்ச்சீரோடி யைந்து வெண்டளை பிழையாது நின்றது. ''காய்முன்நேரும், விளமுன்நேரும், மாமுன் நிரையும் வருவது வெண்டளை'' என்பது சூத்திரம். முதல்கண் தனிக்குறில் விட்டிசைத்து நேரசையானதற்கு ''விட்டிசைத்தல்லான்......................'' என்று யாப்பருங்கலக்காரிகைச் செய்யுளில், 'உண்ணான் உதாரணம்' என்று இச்செய்யுளையே எடுத்துக்காட்டாகக் கூறியிருத்தலையும், அதன் உரையையும் உய்த்துணர்க. (கூ)

10. *உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்*
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்- கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட
உய்த்தீட்டுந் தேனீக் கரி.

(இ-ள்) வான்தோய்- (மேக மண்டலம்வரை உயர்ந் திருப்பதால்) மேகம் படிந்திருக்கப் பெற்ற, மலை - பர்வதங் களையுடைய, நாட- (பாண்டிய) நாட்டு மன்னனே! (தம் மிடம் சேர்ந்த பொருளினால்), உடாதும்- (நல்ல ஆடை களை) உடுக்காமலும், உண்ணாதும் - (உயர்ந்த உணவுகளை) உண்ணாமலும், தம் உடம்பு- தமது சரீரத்தை, செற்றும்- வருத்தியும், கெடாத - (எந்நாளும்பயன்) அழியாத, நல் அறமும் - சிறந்த தர்மங்களையும், செய்யார் - செய்யாதவ ராயும், கொடாது- (ஏழைகளுக்கு வேண்டியதைக்) கொடா மலும், வைத்து (அப்பொருளைக் காவல் காக்கச் செய்து) நிலைப்படுத்தி, ஈட்டினார். (மேலும் அதனோடு இன்னும் மிக்க ஊதியத்தைச்) சேர்த்தவர்கள், இழப்பர்- (அச்செல்வ முழுவதையும் ஒரே காலத்தில்) இழந்துவிடுவர், (அங்ஙனம் இழந்து விடுவார்களென்பதற்கு), உய்த்து- (பல மலர்களி னின்றும் தேனைக் கொண்டுபோய் இறாலில்) வைத்து, ஈட்டும்- (மேலும் மேலும்) சேர்க்கின்ற, தேனீ- தேனீக்கள், கரி- சாக்ஷியாம்; எ-று.

பொருளை நல்வழிகளில் செலவிடாமல் சேர்த்து வைப்பவர்கள், பல நாட்கள் முயன்று தேனைச் சேர்த்து வைத்து ஒரே சமயத்தில் இழந்துவிடும் தேனீக்களைப் போன்று ஏககாலத்தில் இழந்து விடுவரென்பது இதன் கருத்து.

தேனீக்கள் நாடோறும் பற்பல மலர்களிலிருந்து தேனைச் சிறிது சிறிதாக எடுத்துக் கொண்டுபோய்க் கூட்டில் சேர்த்து வேறு எவர்க்கும், எதற்கும் உதவாமல் பாதுகாத்து வரும். அத்தேனிறாலை வேடுவர் காணில் ஒரே நாளில் கவர்ந்துகொண்டு போய் விடுவர். இத்தேனீக்களைப் போலவே மனிதருள் உலோபத்துவமுள்ள சிலர், பொருள் செலவாகிவிடுமென்னுங் கருத்தினால் நல்லுணவாதிகளை யுண்ணாமலும், வேறு தருமங்களைச் செய்யாமலும் அதனைச் சேர்த்துவைப்பர்; அங்ஙனம், ஈட்டிய அப் பொருளை, அபகரித்தற்கே தோன்றிய திருடர் முதலிய தீயோர் காணின் ஒரே காலத்தில் முழுவதையும் கவர்ந்து செல்வர். ஆதலின், இவர்கட்கு அத்தேனீக்கள் உதாரண மாயின; இதே கருத்தினை,

''ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்''

என்னும், கொன்றைவேந்தன் சூத்திரத்தில் ஔவை யார் இரட்டுற மொழிதலாக விளக்கியிருத்தல் காண்க; இது, பொருளைத் தானமாகக் கொடாத உலோபிகளுடைய சம்பாத்தியத்தைக் கொடியோர் கைப்பற்றுவார் என உப மேயப் பொருளையும் ''ஈக்கள் தேடிவைத்த தேனாகிய செல்வத்தை தீக்கோல் பிடித்த வேடர் கவர்வர்'' என உபமானப் பொருளையும் இருவகையிற்றருவது உய்த் துணரற்பாலது; ஈக்களை, ஈயார் என்றது திணை வழுவமைதி. வேடர் தேனெடுக்குங் காலத்தில் ஒரு கோலில் நெருப்பைக் கொளுத்தி அதனை ஈக்களின் அருகில் காட்டுவர்; அதைக் கண்டு ஈக்கள் பறந்தோடிவிடும்; பின்னர் அவர்கள் அல்ல

லின்றித் தேனைக் கைப்பற்றுவர்; அக்காரணம் பற்றி அவர்கள் 'தீயார்' எனப்பட்டார். இங்ஙனம் தேனீக்களை, ஈயாத உலாபருக் குவமை கூறியது உவமை யணியாம். 'தம் முடம்பு செற்றும்' என்பதை, 'கெடாத நல்லறம்' என்பத னோடுகூட்டி, 'தம்முடைய உடம்பழிந்தும் எப்பொழுதும் அழியாதிருக்கின்ற நல்லறம்' எனப் பொருளுரைப்பினும் அமையும். உயர்ந்த அறங்களைச் செய்வாருடைய வாழ்க்கை அழிந்து போயினும் அத்தருமங்கள் உலகமுள்ளவரை நிலைத்திருப்பது இயற்கை. மனிதர், நல் லுணவுண்ணா மலும் நல்லாடை யணியாமலுமிருந்த உடம்பு வருந்தி அழகு கெடுமாதலின் உடாமலும் உண்ணாமலும் தம்முடம்பு செற்றும்' என்று அவர்கள் அவற்றான் உடம்பை வருத்திய தாகக் கூறினார் முனிவர். வைத்து ஈட்டினார் - என்பதை 'ஈட்டிவைத்தார்' என விகுதி பிரித்துக் கூட்டினும் அமையும்.

'மலைநாட்' என்ற விளிக்கேற்ப, அம்மலையிலேயே பெரும்பான்மையும் தங்கும் தேனீக்களை உதாரணமாக எடுத்துக் கூறினார் முனிவர். 'மலைநாட்' என்பது- ஆடுஉ முன்னிலை; அதாவது புருஷனை முன்னிலையாக்கிக் கூறு வது; இவ்வாறு பெண்களை முன்னிலைப்படுத்திக் கூறுவது முண்டு; அது மகடூஉ முன்னிலை யெனப்படும்; ஆசிரியர்கள் செய்யுளோ, நூலோ இயற்றுங்காலத்து இவ்விருவகை யாருள் ஒருவரை முன்னிலையாக்கிக் கூறுவது மரபு. இந் நூலில் வரும் செய்யுட்கள் ஜைனமுனிவரால் பாண்டி நாட்டில் பாண்டியன் பொருட்டியற்றப்பட்டன வாதலின் இதில் வரும் ஆடூஉ முன்னிலை அப்பாண்டியனையே குறித்ததாகும். ஒரு தலைவனைச் சிறப்பித்துக் கூறுமிடத்து அவனுடைய நான்கு நிலங்களுள் ஒன்றனைக் குறித்து அதற் குரியவனாகக் கூறுதல் மரபு; அம்மரபு பற்றி இங்கு அவனைச் சார்ந்த குறிஞ்சி நிலத்தில் சிறந்த மலையைக் கூறினார் முனி வர். இங்ஙனம் குறிஞ்சி நிலத்தைக் கூறியதில் மலையை எடுத்துக் கொண்டது அதன் உயர்வு நோக்கி யென்க.

''அளக்க லாகா அளவும் பொருளும்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே''

என்ற நன்னூல் பொதுப்பாயிரம் 28ஆம் சூத்திரப்படி மலை, அளக்கமுடியாத அளவும், பொருளும், அசைக்க முடியாத நிலையும், உயர்ந்த தோற்றமும் மழையில்லாமல் வறண்ட காலத்திலும் நீர்வளந்தருதலும் உடைத்தாதலானும், நாட்டிற்கு அவயவமாதலானும், நிலவளம் பெருகற்கு இன்றியமையாத நீர்வளத்திற்குக் காரணமாதலானும் சிறந்ததாம். இங்ஙனம் மலை, நாட்டிற்குறுப்பென்பதையும், சிறந்ததென்பதையும்,

'இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு''

என்னுந் திருக்குறளானும், அதன் உரையானும் உணரலாம். இன்னும் இக்குறளிற் கூறப்பட்ட மற்ற நாட்டுறுப்புக்களுள் யாதானு மொன்றையேனும் படைகளுள் ஒன்றையேனும், சுட்டித் தலைவன் சிறப்புக் கூறுதலுமுண்டு.

இதில் வந்த அளபெடைகள் மூன்றும் செய்யுளோசை நிறைக்க வந்தவை. இங்ஙனம் அளபெடைகள் அடுத்து வந்தது அளபுத்தொடை யெனப்படும். செற்று- என்பதில், செறு- பகுதி, தோய்மலை என்பதற்கு, 'ஆகாயத்தை அளாவி யுயர்ந்த மலை எனப் பொருளுரைத்தலு மொன்று. கெடாத- என்பதைப் பிறவினையாகக் கொண்டு, (தன்னை விரும்பிச் செய்தவர்களைக்) கெடுக்காத எனப் பொருள் கொண்டு அதனை அறத்தொடு கூட்டி, 'கொடுக்காத அறம்' என உரைத்தலு மொன்று. 'தேனீக்கரி' என்ற அல்வழி புணர்ச்சிக்கண்,

''ஈகார விறுதி யாகார வியற்றே''

என்ற (தொல்.எழுத்-உயிர்ம-17) ஆம் சூத்திர விதி பற்றி மிக்கது.

அதிகாரம்-2

இளமை நிலையாமை

இளமை நிலையாமையாவது-மனிதரின் இளமைப் பருவத்தினது நிலையற்ற தன்மையை விளக்குவதாம். இளமையாவது பதினாறு வயதிற்குமேல் முப்பத்திரண்டு வயதிற்குள்ளான இளமைப் பருவமாம்; அது, சிற்றின்ப நுகர்ச்சிகளில் மனிதரைச் செலுத்தும் யௌவனம். நிலை யற்ற உலக இன்பத்தில் மயங்கும் சிற்றறிவுடையார் மிகுதி யும் விரும்புவன முறையே அவ்வின்பத்திற் கேதுவாகிய செல்வ மும், அகனை நுகர்தற்குரிய இளமையும் அந்த யௌவனத்திற்கு இடமாயமைந்ததாகிய உடம்புமேயாக லின், அம்முறைப்படி முதலில் செல்வ நிலையாமையை வைத்து அதன் பின் இவ்விளமை நிலையாமையை வைத்தார் ஆசிரியர். இம்முறை திருக்குறள் 'நிலையாமை' என்னும் அதிகாரத்திலும் அமைந்திருத்தல் காண்க. இளமை - பண்புப் பெயர். நிலையாமை- தொழிற்பெயர்.

11. *நரைவரு மென்றெண்ணி நல்லறி வாளர்*
குழவி யிடத்தே துறந்தார்- புரைதீரா
மன்னா விளமை மகிழ்ந்தாரே கோலூன்றி
இன்னாங் கெழுந்திருப் பார்.

(இ-ள்) நரை- மூப்பானது, வரும் என்று - (விரைவில்) வந்துவிடும் என்று, எண்ணி- நினைத்து, குழவி இடத்தே- இளமைப் பருவத்திற்றானே, துறந்தார்- (உலகானுபவங்களை) நீக்கியவர், (தவஞ்செய்துபேரின்பத்தையடைவதனாலே), நல்லறிவாளர்-சிற்ந்த விவேகமுள்ளோராவர், (அங்ஙனமின்றி) புரை- (காமம், வெகுளி, மயக்கம் என்னும்) குற்றங்கள், தீரா - நீங்காததும், மன்னா - நிலை பெறாததும் (ஆகிய) இளமை - யௌவன பருவத்தில், (அதுவும், அக்காலத் தனுபவிக்கப்படும் இன்பங்களும் நிலைநிற்க மாட்டாவென்பதை மறந்து அவற்றின் பொருட்டு) மகிழ்ந்தாரே- (அந்நிலையற்ற சிற்றின்பங்களை அனுபவித்துக்) களித்த நல்லறிவில்லாதவர்களே, (விரைவில் அவையெல்லாம் மாறிவிடப் பேரின்பத்தையும் அடைதற் கேதுவில்லாமல் முதுமைப் பருவத்தை அடைந்து நடத்தற்கும் இயலாமல் தளர்ந்து), கோல் ஊன்றி- (நடப்பதற்கு ஆதரவாகும் பொருட்டு) கோலைக் கையிற் பிடித்துத் தரையில் ஊன்றிக் கொண்டு, இன்னாங்கு - வருத்தத்துடன், எழுந்திருப்பார்- எழுவார்கள்; எ-று.

இளமையும் இன்பமும்போய், முதுமைப்பருவம் மரணத்தையும் உடனழைத்து விரைந்து வருமென்றஞ்சி இளமைப்பருவத்திலேயே உலகப் பற்றினை யொழித்துத் தவஞ் செய்து நிலைத்த பேரின்பத்தையடைய முயற்சி செய்து நின்றவரே அம்முத்திப் பேற்றை அடையும் பேரறிவாளராவர்; அவ்விளமையையும் சிற்றின்பத்தையும் நிலையுள்ளனவென நம்பி அக்காலத்தே மகிழ்ந்திருந்தவர்கள், பின்னர் முதுமையடைந்து நடக்க முடியாமல் கோலூன்றி யெழுந்து மரணத்தையு மடைந்து பேரின்பத்தையிழந்து துன்புறும் சிற்றறிவுடையோராவர் என்பது இதன் கருத்து. ஒருவனுக்குச் சிறந்த அறிவுண்டானால் மாத்திரமே, அஃது, இளமையும், உலக இன்பமும் நிலையல்ல வென்பதை அவனுக்குணர்த்தி, நிலைத்த பேரின்பத்தை அவனடை

வதற்கு இளமைப் பருவத்திலேயே அவனைத் துறவடையச் செய்யும்; ஆதலின், அதனை நல்லறிவென்றும், அதனை யுடையாரை நல்லறிவாளரென்றும் நவின்றனர் முனிவர். அங்ஙனம் துறவாதவர் புல்லறிவாள ராவர்; அவரே மன்னா விளமை மகிழ்ந்தார். 'இளமையில் இன்பத்திற்கு மகிழ்ந்த வர் முதுமையடைந்து நடத்தற் கியலாமல் கோலூன்றி வருந்தி யெழுந்திருப்பார்' என்றதனாலேயே, அவர் மூப் படைந்து பேரின்பப் பயனை யிழந்து மாய்வரென்பதும் அவரே சிற்றறிஞரென்பதும் தெற்றென விளங்கும். இனி 'நல்லறிவாளர் நரைவரு மென்றெண்ணிக் குழவியிடத்தே துறந்தார்' என்று வினைப்பயனிலையால் முடித்தலு மொன்று. எண்ணி-என்பதற்கு 'துறவடைதலா லுண்டாம் நற் பயன்களையும், துறவாமையாலுண்டாம் இடர்ப்பாடுகளை யும் ஆராய்ந்து' எனப் பொருள் கூறினும் அமையும். இளமையே மனிதரை முக்குற்றங்களுள்ளும் புகுத்த வல்ல தாதலின் புரைதீரா இளமை' என்று கூறப்பட்டது; அது நிலை பெறாமைபற்றி, 'மன்னா விளமை' எனவும் பெயர் பெற்றது. இங்ஙனம் துறந்தார் சுகப்படுவார், துறவாதார் துயர்ப்படுவ ரென்பதை,

> *''தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி*
> *வலைப்பட்டார் மற்றை யவர்''*

என்னுந் திருகுறள் நன்கு விளங்கும். 'கோலூன்றி இன் னாங்கு எழுந்திருப்பார்' என்றதனால், 'நடத்தல் முடியா மையே யன்றிக் கோலூன்றி எழுந்திருப்பதற்கும் வருந்துவர்' என்பதும் விளங்கும். நன்-முதனிலைத் தொழிற்பெயர்; நரைத்தல்- என்பது, தல்லீறு கெட்டு நின்றது; நரைத்தலாவது உரோமம் வெளுத்தலாம்; இது, முதுமையினாலுண்டாகுங் காரியம்; அதன் காரணமான மூப்புக்கு ஆகுபெயராய் அதனை உணர்த்தி நின்றது. ஏகார மிரண்டும் பிரிநிலைப் பொருளன;

''தேற்றம் வினாவே பிரிநிலை யெண்ணே
ஈற்றசை யிவ்வைந் தேகா ரம்மே''

என்பது (தொல்-சொல்-இடை.9) சூத்திரம், குழ-இளமைப் பொருள்தரும் உரிச்சொல்,

''மழவுங் குழவு மிளமைப் பொருள''

என்பது (தொல்.-சொல்-உரி-15) சூத்திரம், இது, பகுதிப் பொருள் விகுதியாகிய இகாரமும் வகரவுடம்படுமெய்யும் பெற்றுக் குழவி என வந்தது. மன்னா-மன் என்னும் இடைச் சொல்லடியாகப் பிறந்த எதிர்மறைப் பெயரெச்சம்; இதுவும், தீரா என்னும் எதிர்மறைப் பெயரெச்சமும் அடுக்கி, இளமை - என்னும் பெயருடன் முடிந்தன; இங்ஙனமே சீவகசிந்தா மணிக் கடவுள் வாழ்த்துச் செய்யுளிலும், ''மூவர் முதலாக வும்'' என முடிதல் காண்க.

''பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியா தடுக்குந வரினு
முன்னது முடிய முடியுமன் பொருளே''

என்னும் (தொல்-சொல்-வினை-36) ஆம் சூத்திரவிதியால் இங்ஙனம் முடியுமென்க இன்னாங்கு- ஒருசொல்; பட்டாங்கு என்பது போன்றது. எழுந்திருப்பார் - ஒரு சொல். இதில், இரு - துணை வினையெனப்படும். இன்னும் இதனை 'எழுந்து இருப்பார்' என இரண்டு பதங்களாகப் பிரித்து 'எழுந்து நிற்க வியலாமல் மீண்டும் இருப்பார் என்று பொருளுரைப்பினும் பொருந்தும். முன்னிரண்டடிகளும் இனவெதுகை.

12. *நட்புநா ரற்றன நல்லாரு மஃகினா*
ரதற்புத் தளையு மவிழ்ந்தன- உட்காணாய்
வாழ்தலி னூதிய மென்னுண்டாம் வந்ததே
ஆழ்கலத் தன்ன கலுழ்.

(இ-ள்) (ஆத்மனே! உலகத்தில் முன்னே இளமைப் பருவத்தால் மகிழ்ச்சியடைந்து வாழ்ந்த பல மனிதர்களுக் கும் அவ்விளமை யகன்று முதுமை வந்ததால்), நட்பு- பல நட்பாளரின் சிநேகங்களாகிய, நார்-தளைகள், அற்றன- அறுபட்டு நீங்கிப் போயின, நல்லாரும்- (அவர்கள்மீது இளமையில் அப்பருவங்குறித்து அன்பு செலுத்திவந்த மனைவியர் முதலிய) பெண்களும் அஃகினார் அவ்வன்பிற் குறைந்தவர்களானார்கள். அன்பு - (அவர்கள் இளமைப் பருவத்தில் மனைவி, மக்கள் முதலியவர்களிடத்தும், வேறு விருப்பமுடையார்களிடத்தும் வைத்த) அன்புகளாகிய, தளையும் - கட்டுக்களும், (அவர்களுக்கு எவற்றினும் வெறுப்பு நிகழும் விருத்தாப்பியத்தின் இயற்கையால்) அவிழ்ந்தன-தளர்ந்துவிட்டன, (அங்ஙனம் எல்லாம் ஒடுங்கி மரணமுங் குறுகியதனால்), ஆழ்-கடலின் நடுவில் மூழ்கு கின்ற கலத்து அன்ன-மரக்கலத்திலுள்ளவர்களுக்கு நேர்ந்தது போன்ற, கலுழ்-துன்பமானது, வந்தது-எய்திற்று, அத்துன்பத் தோடு அவர்கள் மாண்டொழிந்தார்கள்; ஆதலின்) வாழ்த லின் (இளமைப் பருவம் எப்பொழுதும் நிலைத்திருக்கு மென்று களித்து மனிதர் இவ்வுலகில் தர்மங்களைப் புரியாது) வாழ்ந்திருப்பதனாலே என் ஊதியம் உண்டாம் - யாது பயன் உண்டாகும். (இவற்றையெல்லாம்), உள்- மனத்திலே, காணாய் - ஆலோசித்துப் பார்; எ-று.

ஆத்மனே! உலகத்தில் இளமைப் பருவத்தில் உற வினர், மனைவி மக்கள் முதலியவர்களுடைய சிநேகத்தை யும், அன்பையும் பெற்றுச் சிற்றின்பத்தையே விரும்பி அனுபவித்து வந்தவர்கள் விருத்தாப்பியடைந்து, தம்மீது அன்புடையரா யிருந்தவர்கள் வெறுப்படையத் தாமும் அன்பு செலுத்திய விடங்களில் வெறுப்புற்றனர்; பின்னர் அவர்க்கு நடுக்கடலில் கப்பல் கவிழும்போது அதிலிருந் தார்க் குண்டாகும் துன்பம் போன்ற மரணதுன்பமும் வந்தது. ஆதலின், அறஞ்செய்யாமல் இளமைப் பருவத்தை நம்பி

வாழ்வதால் யாது பயனுண்டாகும்? இதனை மனத்தில் ஆலோசித்துப் பார் என்பது இதன் கருத்து.

இது, பொதுத் தன்மையில் ஓர் ஆத்மனை விளித்து முன் இளமையோடிருந்து இன்பமனுபவித்து, முதுமை யடைந்து ஒரு பயனுமின்றி ஒழிந்தார் தன்மையை அவனுக் குக் கூறி இளமை நிலையாமையை விளக்கியதாகும். அவனுக்கே அந்நிலைமையெய்தி விட்டதென்று கூறியதாகக் கொள்ளினுமமையும். முனிவர்கள் பாண்டியன் பொருட்டே இந்நாலடிச் செய்யுட்களைஇயற்றினரென்பது பிரசித்தமாக லின் இச்செய்யுளை இயற்றினவர், பாண்டியனையே விளித்துக் கூறினரெனவுங் கொள்ளலாம். 'காணாய்' என்னும் ஏவலுக்குத்தக, 'ஆத்மனே!' என்னும் விளியும், பிற சொற் றொடர்களும் இசையெச்சமாக வருவித் துரைக்கப்பட்டன. மனிதர் இளமைப்பருவ முடையரா யிருக்கும்போது அவரால் உறவினருக்கும், மனைவி முதலியவர்களுக்கும் பற்பல நலங்களுண்டாகும்; அவற்றால் அவர்கள் அக் காலத்தில் அவர்மீது நட்புடையவராயும், அன்புடையராயு மிருப்பார்கள். முதுமையில் மனிதர் தம்மைச் சார்ந்தவர்க்கு அத்தகைய நலங்களைச் செய்யச் சக்தியற்றவராய் விடுவர். அங்ஙனம் சக்தி குறைந்தபோது அவரைச் சார்ந்தவர்க்கு அவர்மீது உறவும் அன்பும் நீங்குவது இயற்கை. ஆதலின், ''நட்புநாரற்றன நல்லாரு மஃகினார்'' என்றார் முனிவர். மனிதர் இளம் பருவமாயிருக்கும்போது இன்பந்தரத் தக்க இடங்களில் மிகுதியும் அன்பு செலுத்துவர்; முதுமை யடைந்தபோது இன்பானுபவங்களில் இச்சை அவர்க்குக் குறையுமாதலின் அவ்வன்பும் குறையும்; ஆதலின், முனிவர், ''அற்புத்தளையும் அவிழ்ந்தன'' என்றார். ''ஆழ்கலத் தன்ன கலுழ்வந்தது'' என்றதால் மரணமுங் குறுகிற்று என்பது தானே பெறப்படுமாதலின் மாண்டொழிந்தார்கள்' என்பது அதனுடன் கூட்டியுரைக்கப்பட்டது. இத்தகைய வாழ்க்கை ஒரு பயனுமின்றிக் கழிவதால், இளமையால் மகிழ்ந்து வாழும் வாழ்க்கை நிலையற்ற தென்பதும் அது கழிவுறாமுன்

மனிதர் அறஞ்செய்தல் வேண்டுமென்பதும் இதில் விளக்கப் பட்டன. மனிதர்க்கு வருந் துன்பங்களுள், அவர்களேறிச் செல்லும் மரக்கலம் கடலிற் கவிழும்போ துண்டாம் அல்லலே மிக்க கலக்கத்தை யுடையதாதலின், அஃதிங்கு மரண துன்பத்திற்கு உதாரணமாக எடுத்துக் கூறப்பட்டது; கலம்கவிழ்வதாலுண்டாம் துன்பம் பெரிதென்பதை,

''நல்லுயிர் நீங்கலு நன்மாண் புடையதோர்
புல்லுயிர் தன்னொடு நின்றுழிப் புல்லுயிர்
கல்லுயிர் காட்டிற் கரப்பக் கலங்கவிழ்த்
தல்லலுற் றாளுற்ற தாற்ற வுரைப்பாம்''

என்னும் சீவகசிந்தாமணி நாமகளிலம்பகம் 303-ஆம் செய்யுளால் உணரலாம்.

இனி, ஈற்றடியை 'ஆழ்கலத்தன்னகலி' எனப் பாடபேதங் கொள்வாருமுண்டு. அங்ஙனங் கொள்ளுமிடத்து 'கலி' என்பது துன்பமெனவும், ஒலியெனவும் பொருள்படு மாதலின், 'ஆழ்கலத்தன்னகலி வந்தது' என்பதற்கு, 'கப்பல் மூழ்கும்போது அதிலிருந்தார்க்கு குண்டாம் துன்பம் போன்ற துன்பம் வந்தது' என்றேனும், 'அப்போது அதிலுள்ளார் பயந்து கதறுவதா லுண்டாம் ஒலிபோல உறவினர் அழும் அழுகைக் குரலொலி வந்தது' என்றேனும் பொருளுரைத்தல் வேண்டும்.

நட்புக்கள் நார்களாகவும், அன்புகள் தளைகளாகவும் உருவகஞ் செய்யப்பட்டன; இங்ஙனம் உருவகப்படுத்துதல் உருவகவணி யெனப்படும். ஆழ்கலத்தல்லலை மரண துன் பத்திற் குவமை கூறியது உவமையணியாம். நண்பினரும், சுற்றத்தாரும் பலராகலின், நண்பும் அன்பும் பலவாகக் கூறப் பட்டன. நண்பும், அன்பும் பால் பகாவஃறிணைப் பெயர் களாதலின், அற்றன, அவிழ்ந்தன என்னும் பன்மை வினை களைக் கொண்டன. நட்பு- தொழிற் பெயர்; இதில், நள்-

பகுதி, பு- தொழிற் பெயர் விகுதி, உம்மைகள் இரண்டும்- எச்சப்பொருளன. ''நல்லா ளுடன் படிற்றானே பெருகும்'' என்பதில் 'நல்லாள்' என்பது இலக்கு மிக்கே கூறப்பட்டிருத்தலின், 'நல்லார்' என்பது ஆண் பெண் என்னும் இருபாலர்க்கும் பொதுவெனினும் பெரும் பான்மையும் பெண்களையே உணர்த்தும். அன்பு + தளை= அற்புத்தளை; இதில் அல்வழியில் மென்றொடர்க் குற்றிய லுகரத்தின் மெல்லொற்று வல்லொற்றாயிற்று; இது,

''வன்றொடர் மொழியு மென்றொடர் மொழியும்
வந்த வல்லெழுத் தொற்றிடை மிகுமே
மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம்
வல்லொற் றிறுதி கிளையொற் றாகும்''

என்னும் (தொல்-எழுத்-குற்றியலுகரப் புணரியல்-9) ஆம் சூத்திரவிதி பெறும். காணாய்- ஏவலொருமை வினைமுற்று; இதில், காண்-பகுதி; ஆய்-விகுதி. தளை-பந்தம்; அற்புத் தளை- பாசபந்தம். வாழ்தலின்- என்பதில், இன்-ஐந்தனுருபு; இஃதேதுப் பொருளது. என்-எவன் என்ற வினாப்பெயர் இடைகுறைந்து நின்றது; இஃதஃறிணையில் ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய இரண்டிற்கும் பொதுவாம். ஆழ்கலம்- வினைத்தொகை. கலம்- இடவாகு பெயராய் அதிலுள்ளாரை யுணர்த்திற்று. வந்ததே- என்பதில், ஏ- இரக்கப்பொருளது. கலுழ்தல்- என்னுந் தொழிற்பெயர் விகுதி கெட்டு கலுழ்- என முதனிலையாய் நின்றது. உண்டாம் என்பதில், ஆம்-அசை. கலத்தது அன்ன' என்பது 'கலத்தன்ன' எனத் தொகுத்தலாயிற்று.

13. சொற்றளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்ப்
பற்கழன்று பண்டம் பழிகாறு-மிற்செறிந்து
காமநெறிபடருங் கண்ணினார்க் கில்லையே
ஏமநெறிபடரு மாறு.

(இ-ள்) சொல்தளர்ந்து - (முதுமையால்) சொற்கள் தளர்ச்சியடைந்து நடுக்க முறப்பெற்று, கோல்ஊன்றி - (கையில்) தடியைப் பிடித்து ஊன்றிக் கொண்டு (அதனுதவி கொண்டு நடக்கத் தொடங்கி), சோர்ந்த நடையினராய்- தள்ளாடிய நடையையுடையவர்களாய், (நடந்து) பல் கழன்று - பற்கள் அசைந்து வீழ்ந்து, பண்டம் - (தம் உடலாகிய) பொருள், பழிகாறும்- (அதன் மூப்பினால் வந்த அருவருக்கத்க்க நிலைகண்ட பலராலும்) பழிக்கப்படு மளவும், (அதாவது தாம் மிகுந்த விருத்தாப்பிய மடையு மளவும்) இல்-இல்வாழ்க்கையிலேயே, செறிந்து- பொருந்தி யிருந்து, காமம்- ஆசையின், நெறிவழியிலே, படரும்- செல்லுகின்ற, கண்ணினார்க்கு-நோக்கமுடையவர்களுக்கு, ஏமம் - நிலைத்த சுகத்தைத் தருகின்ற, நெறி-மோக்ஷ மார்க்கத் தில், படரும்ஆறு- செல்லுந்தன்மை, இல்லை- உண்டாகாது; எ-று.

சொற்கள் தளர்ந்து, பற்கள் வீழ்ந்து நடையுஞ் சோர்ந்து, கோலூன்றி நடந்து மிக்க முதுமையடைந்து தம் முடைய உடம்பின் அருவருப்பான தன்மையைப் பார்த்துப் பலரும் பழிக்கும் வரையிலும் இல்வாழ்க்கையிலிருந்து சிற்றின்பத்தையே அனுபவித்துக் கொண்டிருப்பவர்க்கு முத்திமார்க்கம் சித்திப்பதரிது என்பது இதன் கருத்து.

மனிதர் நடக்கவும் முடியாத மூப்பினை யடைந்த போது, அவரின் சொற்கள் நல்ல உச்சரிப்பின்றிக் குளறுத லோடு வெளிவரும்; பற்கள் வீழ்ந்து வாயின் வனப்பைக் கெடுக்கும்; நடை தள்ளாடிக் கால்களின் இயற்கை யழகை யொழிக்கும்; இன்னும் நரைதிரை முதலியனவும் இளமை யில் அமைந்திருந்த சிறப்பைப் போக்கிவிடும். ஆதலின் மூப்படைந்தோரின் உடம்பு பலவகைகளிலும் அழகு கெட்டுத் தன்னைப் பார்ப்பவர்களால் பழிக்கப்படுமென்க. இங்ஙனம், மக்களுடம்பு முதுமையிற் பழிக்கப்படுமென் பதை,

''முதுகு பற்றிக் கைத்த லத்தால் முன்னொரு
கோலூன்றி
விதிர்வி திர்த்துக் கண்சுழன்று மேற்கிளை
கொண்டிருமி
இதுவென் னப்பர் மூத்த வாறென் றிளையவ
ரேசாமுன்
மதுவுண் வண்டு பண்கள் பாடும் வதரி வணங்
குதுமே''

என்னுந் திருவாய்மொழியானு முணரலாம். சொல் தளர்த லாவது- சொற்கள் நிரம்புதலின்றி வெளிவருதல். உடம் பினை, பண்டம்- என்றது, அதன் இழிவு நோக்கியென்க. கண்-நோக்கம்; அதாவது உள்ளக்கருத்து; இங்ஙனம் கருத்தை விளக்கி வரும் நோக்கம் என்னும் சொல்லிற்கு 'நோக்க னோக்கம்' எனப் பொருள் கூறுவர் ஆசிரியர் நச்சினார்க் கினியர்; நோக்கு+அல்+நோக்கம் = நோக்கனோக்கம்; அதாவது கட்பொறியால் பார்க்கப்படும் பார்வை யல்லாத பார்வை (மனநாட்டம்). இது, சீவகசிந்தாமணி - 352, 1004, 2293-ஆம் செய்யுட்களுக்கு நச்சினார்க்கினியர் காட்டியிருக் கும் உரைக் குறிப்புக்களால் இனிது விளங்கும். மேலும் கண் - கருத்து என்பதை, சீவகசிந்தாமணி - கேமசரி யாரிலம்பகம் 26ஆம் செய்யுளில், ''இன்று கண் விடுக்கப் பட்டோம்'' என்பதற்கு நச்சினார்க்கினியர், ''இன்று நின்னாலே அறிவுண் டாக்கப்பட்டோம்'' என்று பொருள் வரைந்திருத்தலாலு முணரலாம். ''கண்ணலே கருதல் பேணல் காணலே நுதலல் சுட்டல், எண்ணலே பகற லெட்டுங் குறித்திட லென்ன லாகும்'' என்ற சூடாமணி நிகண்டுச் செய்யுளடிகளுள் 'கண் ணல்' என்பது கருதுதற்கு வருதலானும் இது துணியப்படும்.

இனி ஆசையை விளைவிக்கும் செயல்களையும், பொருள்களையும் விளங்கச் செய்து அவற்றில் மனிதரைப் புகுத்திவிடுவது கட்பொறியாதலின், 'காமநெறிபடரும் கண்ணினார்க்கு' என்பதற்கு 'ஆசை வழியிலே புகுதற்குக்

காரணமாகிய நேத்திரங்களை உடையார்க்கு' - எனப் பொருளுரைப்பினும் அமையும். இன்னும், 'கண்ணின நார்க்கு' என் பதை, 'கண்+ இன்னார்க்கு' எனப்பிரித்து, 'கருத்து, அல்லது கட்பொறி கெட்டவர்களுக்கு' எனப் பொருள் கோடலு மொன்று; ஆசைநெறியிற் செல்வோரை மதிகெட்டவ ரென்றேனும், கண்கெட்டாரென்றேனும் கூறுதல் பொருத்த முடைத்தென்க. ஏமம் நெறி- என்பதற்கு, உயிர்க்குக் காவ லாகிய நல்ல நெறி' எனவும் பொருளுரைக் லாம்; அந்நெறி யாவது மனிதனை வினைகளினின்று மாற்றி, கூற்றத்தி னின்றுந் தப்புவித்து முத்தியிற் சேர்க்குந் துற வொழுக்க மாகும்; ஏமம்-காவல். தளர்ந்து, கழன்று என்னும் சினை வினைகள் முதலொடு முடிந்தன;

''அம்முக் கிளவியுஞ் சினைவினை தோன்றிற்
சினையொடு முடியா முதலொடு முடியினும்
வினையோ டனைய வென்மனார் புலவர்''

என்னும்(தொல்-சொல்.வினை-34) ஆம் சூத்திரவிதியால் இம்முடிபு கொள்ளப்படும். பழிகாறும்- செயப்பாட்டு வினைப் பொருளில் வந்த செய்வினை; காறு-எல்லையைக் குறிக்குமோ ரிடைச்சொல். இல்- வீடு; அஃதாகுபெயராய்த் தன்னிடத்திருந்து மனிதராற் செய்யப்படும் இல்லற வாழ்க்கையை யுணர்த்தி நின்றது. இல்லையே என்பதில், ஏகாரம்- தேற்றப் பொருளது; இரக்கப் பொருளதெனினு மாம். (௩)

14. *தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா*
வீழா விறக்கு மிவண் மாட்டுங்-காழிலா
மம்மர்கொண் மாந்தர்க் கணங்காகுந் தன்கைக்கோல்
அம்மனைக்கோ லாகிய ஞான்று.

(இ-ள்) தாழா- (உடல்) வளைந்தும் (அதாவது கூனுத லடைந்தும்) தளரா- (கட்டுவிட்டு) மெலிந்தும் தலை

நடுங்கா- தலை நடுக்கமுற்றும், தண்டு- தடியை, ஊன்றா- கையிற் பிடித்து) ஊன்றியும், வீழா- (நடைதள்ளாடிக் கீழே) வீழ்ந்தும், இறக்கும்-நடக்கின்ற, இவள் மாட்டும்- இத் தகைய மூப்புக்குணங்களை யடைந்த ஒருபெண்ணிடத்தும், தன் கைக்கோல் - (இவள் இப்பொழுது) தன்னுடைய கையில் (நடத்தற் காதராவாகப் பிடிக்கப்பட்ட) கொம் பானது, அம்மனைகோல் ஆகிய ஞான்று- (இவளுடைய) தாய்க்கு ஊன்றுகோலாயிருந்த காலத்தில், (அதாவது இவள் தாய் மூப்படைந்து கோலூன்றி நடக்க, தான் மங்கைப் பருவ முடையவளாயிருந்தபோது), காழ் இல்லா - (புத்தியை நன்னிலையில் நிறுத்தும்) மனவுறுதி யில்லாதவர்களும், மம்மர்கொள்காம மயக்கத்தைக் கொண்டவர்களுமாகிய, மாந்தர்க்கு -மனிதர்களுக்கு, அணங்கு ஆகும்- (மனதில் தோன்றிய விருப்பத்தால் வருத்தமுண்டாயிருக்கும்; எ-று.

உடல் வளைந்து தளர்ந்து தண்டூன்றி வீழ்ந்து நடக்கும் இத்தகைய குணங்களையுடைய கிழமாதினிடத்திலும், இவளுடைய தாய் கிழப்பருவமாய்க் கோலூன்றி நடக்க இவள் இளமைப் பருவ முடையவளா யிருந்தகாலத்தில், காமமயக்கத்தைக் கொண்ட ஆடவர்களுக்கு இவள்மீதுண் டான விருப்பத்தால் வருத்தமுண்டாகி யிருக்கும் என்பது இதன்கருத்து.

பார்த்தோர் அருவருக்கத்தக்க முதுமைப் பருவத்தை அடைந்த ஒருத்தியை, பெண்களின் இளமையை விரும்பு வோருக்குச் சுட்டிக்காட்டி, 'இத்தகைய இவளும் மங்கைப் பருவமுடைய வளாயிருந்த காலத்தில் உம்மைப்போன்ற மயக்கமுடைய மனிதர்க்கு விருப்பத்தை உண்டாக்கி வருத்த மிகச் செய்திருப்பாள்; அந்நிலையிலிருந்த இவளே இந் நிலைக்கு வந்திருக்கின்றாள்' என்று இளமை நிலை யாமையை வற்புறுத்திக் கூறுவதாக இச்செய்யுள் அமைந்தது. இங்ஙனங் கூறியதனால், மனிதரின் இளமையும் அழகும் நிலையற்றன வென்பதும், அவற்றில் மனிதர் மயங்கலாகா

தென்பதும் அவற்றை விரும்பாது பேரின்பத்தை அடைய முயல வேண்டுமென்பதும் விளங்கும். இவள்-என்றது, அண்மைச்சுட்டாதலின், இச்செய்யுளில், ''தாழாத்தளரா..... இறக்கும்'' என்ற குணங்களைச்சுட்டி, 'இவற்றையுடையாள்' எனப் பொருள் தரும். 'இறந்தகாலம்' என்பது - நடந்தகாலம், சென்றகாலம் எனப் பொருள்படுதலால், இங்கு 'இறக்கும்' என்பதற்கு, 'நடக்கும்' எனப் பொருள் கூறப்பட்டது; 'தண் டூன்றா' என்பதற்கேற்ப, இதற்கு, 'நடக்கும்' எனப் பொருளுரைத்தல் சிறப்பாகும்; இனி, இறக்கும்-என்பதற்கு, 'மரண துன்பத்தை அடையும்' எனப் பொருளுரைத்தலு மொன்று; அங்ஙனங் கூறுமிடத்து, தண்டூன்றி நடந்து வீழ்ந் திறக்குந் தறுவாயிலிருந்தாளை நோக்கிக் கூறியதாகக் கொள்ளவேண்டும். இஃதன்றி 'இறக்கும்' என்பதற்கு, 'தாழ்வுறும்' எனப் பொருள் கூறினும் அமையும். மனத்தை நன்னிலையில் நிறுத்தும் உறுதியற்றவர்க்கே பெண்ணாசை மயக்கமுண்டாமாதலின், அவரை, 'காழ் இல்லா மம்மர் கொள் மாந்தர்' என்றார் முனிவர்.

இனி, 'இவள்மாட்டும் காழிலா மம்மர்கொள் மாந் தர்க் கணங்காகும் தன்கைக்கோல் அம்மனைக் கோலாகிய ஞான்று' என்பதற்கு 'இவளிடத்தும் மனவுறுதியில்லாமல் காமமயக்கத்தைக் கொண்டமனிதருக்கு(இவள்) இளமை யுடையவளாயிருந்தபோது மோகினி யென்னும் தெய்வப் பெண்ணாயிருந்திருப்பாள்' எனப் பொருளுரைத்தலு மொன்று; இதற்கு 'இவள்' என்பது வருவித்தல் வேண்டும். அணங்கு- என்னுஞ்சொல் 'தெய்வமகள்' என்றும் பொருள் படு மாதலின் இங்ஙனமுரைத்தல் பொருந்துமென்க; இதற்காதாரமாக, ''ஆயுமறிவினரல்லார்க் கணங்கென்ப, மாயமகளிர் முயக்கு'' என்னும் குறளும், அதில் ''அணங்கு- அழகு என்றும் பொருள்தருதலின், அணங்காகும்- என்னும் பரிமேலழகர் உரையும் அமைந்திருத்தல் காண்க. இன்னும், அணங்கு- அழகு என்றும் பொருள்தருதலின், அணங் காகும்-என்பதற்கு 'அழகு செய்தவளாவள்' எனலுமொன்று.

இதற்கும் 'இவள்' என்பது வருவித்தல் வேண்டும். அணங்கு- என்னுஞ்சொல் 'தெய்வமகள்'' என்றும் பொருள்படுமாதலின் இங்ஙனமுரைத்தல் பொருந்துமென்க; இதற்காதாரமாக, ''ஆயுமறிவினரல்லார்க் கணங்கென்ப, மாயமகளிர் முயக்கு'' என்னும் குறளும், அதில் ''அணங்கு- காமநெறியான் உயிர்கொள்ளுந் தெய்வமகள்'' என்னும் பரிமேலழகர் உரையும் அமைந்திருத்தல் காண்க. இன்னும், அணங்கு - அழகு என்றும் பொருள்தருதலின், அணங்காகும்- என்பதற்கு 'அழகு செய்தவளாவள்' எனலுமொன்று. இதற்கும் 'இவள்' என்பது வருவித்தல் வேண்டும். இன்னும், 'தன்கைக் கோல் அம்மனைக்கோல் ஆகியஞான்று' என்பதை, 'அம்மனைக் கோல் தன்கைக்கோல் ஆகியஞான்று' எனமாற்றி மற்றைய சொற்றொடர்களோடு கூட்டி, '(இவள்) அம்மனைக் கோல் தன்கைக் கோலாகியகாலத்தில் (தன் தாயைப்போல் கோலூன்றி நடந்து முதுமையடைந்தபோது) தாழ்ந்து தளர்ந்து தலைநடுங்கித் தன்டூன்றி வீழ்ந்து இறப்பாள்; இவளிடத்தும் மனவுறுதி யில்லாத பேதைமையைக் கொண்ட மனிதர்க்கு ஆசை உண்டாகின்றது. (இஃதென் புதுமை!)' என்று இளம்பெண்ணொருத்தியைச்சுட்டி இகழ்ந்துரைத்ததாகப் பொருளுரைப்பினும் பொருந்தும்; இங்ஙனங் கூறுமிடத்தும் 'இவள்' என்னும் எழுவாய் வருவித்துரைத்தல் வேண்டும். இனி, பெண்கள் அம்மானைக்காயை ஒரு கோலின் மீதுவைத்து விளையாடுதலு முண்டாதலின், 'தன் கைக்கோல் அம்மனைக் கோலாகிய ஞான்று' என்பதற்கு, 'இவள் இப்பொழுது முதுமைத்தளர்ச்சியால் ஊன்றிக் கொண்டு போகும் கோலானது தனக்கு அம்மானையாடுகிற கோலாய் அமைந்தகாலத்தில் (தான் அம்மானையாடும் இளம்பருவத்தில்)' எனப் பொருள் கூறுவாருமுளர். அம்மானைக்காய்- பெண்கள் மேலெறிந்து கீழேவீழாமல் பிடித்து விளையாடற்பொருட்டு உருண்டைவடிவாக மரத்தாலோ கல்லாலோ செய்யப்பட்ட காய்; இதைக்கொண்டு மங்கையர் விளையாடுதலுக்கு 'அம்மானை, அல்லது அம்மனை' என்று பெயர்.

'இறக்கும்' என்பதை, 'விறக்கும்' எனப்பிரித்து, அதற்கு, 'வெருவும்' எனப் பொருளுரைப்பாரு முளர்; இஃதிப் பொருள் தருமென்பதை,

''அவற்றுள்,
விறப்பே வெரூஉப் பொருட்டு மாகும்''

என்னும் (தொல்-சொல்-உரி-52) ஆம் சூத்திரத்தா லுணர்க. தண்டு- தண்டமென்னும் ஆரியச்சொல்லின் விகாரம். ''தன் கைக்கோல் அம்மனைக் கோலாகிய ஞான்று,'' என்பது 'தான் இளமையா யிருந்தகாலத்தில்' எனக் குறிப்பால் வேறுபொருளுணர்த்தலின் பிறிதினவிற்சியணி யாம். தாழா, தளரா, நடுங்கா, ஊன்றா, வீழா என்பன செய்யா என்னும் வாய்பாட்டு இறந்த கால உடன்பாட்டெச்சங்கள்; இவற்றில், 'ஆ' என்னும் வினையெச்சவிகுதியே இறந்த காலம் காட்டிற்று. 'நடுங்கா' என்னும் சினைவினை முதலொடு முடிந்தது. மாட்டும்- என்பதில், உம்-இழிவு சிறப்புப் பொருளது. இலா, கொள் என்பன பெயரெச்சங்கள் 'காழ் இல்லாமல் மம்மர்கொண்ட மாந்தர்' எனப் பொருள் கொள்ளுமிடத்து, இலா- ஈறுகெட்ட எதிர்மறை வினை யெச்சம். கொள் மாந்தர் என்னும் வினைத்தொகையோடு முடியும். ''அம்மனைக்கோல்'' என்பதில் உயர்திணைப் பெயர் முன்வலிமிக்கது, பொதுப்பெயர்....'' என்னும் (நன் - உயிரீ-பு-9ஆம்) சூத்திரத்தில், ''சில விகாராமாமுயர் திணை'' என்பதனாற்பெற்றது. மாந்தர் - பன்மைப்பெயர்; இது, 'காழிலாமம்மர் கொள்' என்பதற்குத்தக, 'மந்தபுத்தி யுடையார்' என்ற பொருளையும் சொல்லாற்றலான் விளக்கும். இச்செய்யுளின் முதலடி முற்றுமோனைத் தொடையாக அமைந்தது; முற்றுமோனையாவது- எல்லாச் சீர்களிலும், மோனைவரத் தொடுப்பது. (ச)

15. எனக்குத்தா யாகியா ளென்னையீங் கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்றாள்- தனக்குத்தாய்
ஆகி யவளு மதுவானாற் றாய்த்தாய்க்கொண்
டேகு மளித்திவ் வுலகு.

(இ-ள்) எனக்குத்தாய்ஆகியாள்- எனக்கு அன்னையாகியிருந்தவள், ஈங்கு- இவ்வுலகத்தில், என்னைஇட்டு- என்னை வைத்துவிட்டு, தனக்குத்தாய் நாடி- தனக்கொரு தாயைத் தேடிக் கொண்டு, சென்றாள்- இறந்துபோய் விட்டாள், தனக்கு- (அங்ஙனம் இறந்துபோன) அவளுக்கு, தாய் ஆகியவளும் - மாதாவாயிருந்தவளும், அது- அச் செய்கையே (செய்தாள்); (அவளும் ஒரு தாயையே தேடிச் சென்றாள்), (இங்ஙனமே உலகிலுள்ள மற்ற தாய்மார்க ளெல்லோரும் தங்கட்குத் தாய்களைத்தேடிச் சென்று கொண்டே யிருப்பர்), ஆனால்- (இவர் செய்கைகளெல்லாம் இங்ஙனம்) ஆகுமெனில், (உலக இயலை ஆராயுமிடத்து), இ உலகு-இவ்வுலகத்திலுள்ள பிராணிவர்க்கமானது, (எத்த கைத்தென்றால் ஒவ்வொருபிறப்பிலும் இறந்து இறந்து), தாய்த்தாய்க் கொண்டு- தாயைத்தாயை (ஒவ்வொரு பிறப்பிற் கும் ஒவ்வொரு தாயாக வெவ்வேறு தாய்களைத்) தேடிக் கொண்டு, ஏகும்-போகின்ற, அளித்து- எளிமைத் தன்மையை யுடையதாகும்; எ-று.

எனக்குத்தாயா யிருந்தவள் என்னை இங்கே பெற்று வைத்து விட்டு இறந்து தனக்கொரு தாயைத் தேடிச் சென் றாள்; அப்படிச் சென்றவளுக்குத் தாயானவளும் அங்ஙனமே தனக்கொருதாயைத் தேடிப்போயினாள். இச்செய்கையையே மற்றவர்களும் செய்வார்கள். இவர்கள் செய்கை இங்ஙன மாகுமெனில், இவ்வுலகவியல் எத்தன்மைத்தென ஆராயு மிடத்து இவ்வுலகத்திலுள்ள பிராணிவர்க்கம் இறந்திறந்து ஒவ்வொருதாயைத் தேடிக் கொண்டு போகும் தாழ்ந்த தன்மையுடையதாகும் என்பது இதன்கருத்து.

தாய், தனக்குத்தாய் நாடிச்செல்லலாவது- அவளுடம்பை விட்டு மற்றொருத்தியின் வயிற்றிற் குழந்தையாய்ப் பிறப்பதாம். இங்ஙனம் ஒவ்வொருவரும் இச்செய்கையுடையவராவர். எனவே, மனிதர் இளமைநீங்கி மூப்படைந் தழிவர் என்பது விளங்கும். அதனால் இளமை நிலையாமை பெறப்படும். உலகத்திலுள்ள பிராணிகளின் கூட்டம் நிலையின்றி வெவ்வேறு பிறப்புக்களை யெடுத்தேகும் இழிவு நோக்கி, அது 'அளித்து' எனக் கூறப்பட்டது. தாய், தாய் என்னும் இரண்டாம் தொகைச்சொற்களின்முன் ''இயல்பின் விகாரமும்....'' என்ற (நன்-உரு-பு 16-ஆம்) சூத்திரவிதிப்படி வலிமிக்கது; ''பொதுப்பெயர்......'' என்ற (நன்-உயி-பு9ஆம்) சூத்திரத்தில் 'சிலவிகாரமாமுயர்திணை' என்றதனானும் இஃதமையும். இனி முதல்வரும் 'தாய்' என்பதை எழுவாயாகக் கொண்டு, 'தாய்த் தாய்க்கொண்டு' என்பதற்கு, 'ஒரு தாய் மற்றொருதாயைத் தேடிக்கொண்டு' எனவும் பொருளுரைக்கலாம்; இங்ஙனங் கொள்ளுமிடத்து முதலிலுள்ள எழுவாய்த் தொடர்க்குமுன் தகரம்மிக்கது, விரித்தல் என்னும் செய்யுள் விகாரமாகக் கொள்ளல் வேண்டும்; இதற்கு 'தாய்தாய்க்கொண்டு' எனப்பாடங்கொள்ளின் நேராம். இனி, 'தாய், தாய்' என்பவற்றை, தாவு என்பதனடியாகப் பிறந்த இறந்தகால வினையெச்ச அடுக்குக்களெனக் கொண்டு, 'தாய்த் தாய்க்கொண்டு ஏகும்' என்பதற்கு, 'தாவித்தாவிக் கொண்டு' (வெவ்வேறு தாய்களைத் தேடிச்) செல்லும்' எனப் பொருளுரைப்பினும் பொருந்தும்; இன்னும் முதல்தாயை எழுவாயாகவும், இரண்டாவது தாயை வினையெச்சமாகவுங் கொண்டு, 'ஒருதாய் (மற்றொரு தாயைத்) தேடித் தாவிக் கொண்டு' எனவும், முதல் தாயை இரண்டாம் வேற்றுமைத் தொகையாகவும் இரண்டாவதை வினையெச்சமாகவுங் கொண்டு, 'தாயை (உலகப் பிராணிகளின் கூட்டம்) தாவிக் கொண்டு (அதாவது ஒருதாயின் வயிற்றிற் பிறந்திறந்து அத்தாயைக் கடந்து கொண்டு)' எனவும் உரைக்கலாம்.

ஆகியாள், ஆகியவள் என்பன வினையாலணையும் பெயர்கள்; ஆகியாள்- என்பதில், ஆகு- பகுதி, ஆள்- விகுதி, இன்- இடைநிலை, ய்-உடம்படு மெய்ச்சந்தி, இடைநிலை யில் ஈற்று 'ன்' கெட்டது. ஆகியவள் - என்பதில், அள்- விகுதி யும், உடம்படு மெய்ச்சந்தியின்மேல் அகரச்சாரியையும் வந்தன. நாடியே- என்பதில், ஏ- அசை. 'அது' என்ப தற்குப்பின்' 'செய்தாள்' என்னும் சொல் இசை யெச்சமாக வருவித்துரைக்கப்பட்டது. உலகு - என்பது இடவாகு பெயராய்த் தன்னிடமுள்ள பிராணிகளின் தொகுதியை உணர்த்தி நின்றது. அளித்து- ஒன்றன்பாற் குறிப்பு முற்று; து- விகுதி.

இச்செய்யுள் பெரும்பான்மையும் யாக்கை நிலை யாமைக்கே பொருந்துவதாகும்; எனினும், அதிகாரச் செய்யுட்களின் தொகையைப் பூர்த்திசெய்தற் பொருட்டு இதன் கருத்தை வலிந்து இளமை நிலையாமைக்குப் பொருத்தி இஃதிங்குச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

16. *வெறியயர் வெங்களத்து வேன்மகன் பாணி*
முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க
மறிகுள குண்டன்ன மன்னா மகிழ்ச்சி
அறிவுடை யாளர்க ணில்.

(இ-ள்.) வெறி அயர்- (தேவராளர்) தெய்வ ஆவேசங் கொண்டு ஆடுகின்ற, வெம்- கொடிதாகிய, களத்து- (ஆடு முதலியவற்றைத் தெய்வங்களுக்குப் பலியிடுகின்ற) இடத் திலே, (அதாவது துஷ்டதேவதைகளின் கோவிலுக்கு முன் னுள்ள பலிபீடத்தில்), வேல்மகன் (ஆடு முதலியவற்றை வெட்டுகின்ற) ஆயுதத்தையுடைய பூசாரியினது, பாணி- கையிலுள்ள, (அதாவது ஓர் ஆட்டை வெட்ட நிறுத்தி அதன் கழுத்தில் போடுதற்கு அவன்கையில் வைத்திருக் கின்ற), முறி ஆர்- தளிர்கள் (இடையிடையே சேர்த்துத் தொடுக்கப் பட்டுப்) பொருந்தி யிருக்கின்ற, நறும்கண்ணி - (வாசனை

யுள்ள) நல்லபூமாலை, முன்னர் - (அதற்கு) எதிரில், தயங்க - விளங்க, மறி- அந்த ஆடானது, குளகு (அம் மாலை யிலுள்ள தளிராகிய) இரையை, உண்டன்ன- உண்டு அடைகின்ற மகிழ்ச்சிபோன்ற, மன்னா- நிலையில்லாத, மகிழ்ச்சி- (இளமையின்பத்தாலுண்டாம்) மகிழ்ச்சியானது, அறிவுடையாளர்கண் - உண்மைஞான முள்ளவர்களிடத்தில், இல்- இல்லை, (அவர்கள் இளமையின்பத்தை நிலையான தென்று நினைத்து மகிழாமல் அவ்விளமையிலேயே துறவடைவார்கள்); எ-று.

நிலையில்லாத இளமையின்பத்தைப்பற்றி மனிதர் மகிழ்வதானது, வெறியாட்டாளர் ஆவேசமாடும் துஷ்ட தேவதைகளின் கோவிலுக்கு முன்னுள்ள பலிபீடத்தில், பூசாரியால் வெட்டுதற்கு நிறுத்தப்பட்டு ஆடு, அவன் தன்னை வெட்டும்போது தன் கழுத்தில் போடுதற்குக் கையில் வைத்திருக்கும் தளிர்களோடு கூடிய பூமாலை யிலுள்ள தளிரை விருப்பத்தோடு இரையாகத்தின்று மகிழ்வதை நிகர்த்ததாகும்; இத்தகைய நிலையற்ற மகிழ்ச்சி அறிஞர்பாலுண்டாக மாட்டாது; அவர்கள் அதனை நிலை யானதெனக் கொள்ளாமல் இளமையிலேயே துறப்பர் என்பது இதன்கருத்து.

மனிதர் இளமையோடு கூடி இன்பமனுபவித்து மகிழும் மகிழ்ச்சியானது நீடித்து நிற்பதன்று; அவர் அம் மகிழ்ச்சியி லிருக்கும்போதே அவ்விளமை விரைவில் நீங்கி விடும், அல்லது யமன் அவருயிரைப் பிரித்துக்கொண்டு, போய்விடுவான். ஆதலின், அவருடைய அந்நிலையற்ற களிப்பானது பூசாரி கையாயுதத்தால் வெட்டுண் டிறக்குந்தறுவாயி லிருக்கும் ஆடானது தன்முன் தோன்றும் மாலை யிலுள்ள தளிரைத்தின்று மகிழ்வதற்கு நிகராயிற்று. இஃதுவமையணி. வெறி-தெய்வ ஆவேசம்; அதாவது தெய்வ ஆவி, அல்லது தெய்வவேடம்; இதனைத் தங்கள் மேலேற்றி ஆடுவோர் வெறியாட்டாளர் அல்லது தேவராளர்

என்று சொல்லப்படுவர்; தேவராளர்- தெய்வங்களுக் கடிமை யானவர். இங்ஙனம் ஆவேசங் கொண்டாடுதல் பூசாரிகளுக்கு முண்டு, தெய்வங்களுக் கடியாரான மற்றையர்க்கு முண்டு. பூசாரி - தெய்வங்களுக்குப் பூசனை இயற்றுவோன்; இவன் ஆடுகள் முதலியவற்றை வெட்டிப் பலியிடுதற்கு ஆயுதத் தைக் கையில்வைத்துக் கொண்டிருப்பவனாதலின் 'வேல் மகன்' எனப்பட்டான். இவனுக்கு வேலனென்னும் பெயரு முண்டு; ''வேலனார் வந்து வெறியாடும் வெங்களத்து'' எனச் சிலப்பதிகாரத்தில் வருதலால் இஃதுணரப்படும். வேலென் பது ஆயுதப் பொதுப்பெயராதலின் இங்கு ஆட்டைவெட்டும் வாளை உணர்த்திற்று; வேல் ஆயுதப் பொதுப்பெயரென் பதை ''படைதானை கழுமுளேவேல்படைக் கலஞ்சுதனந் துப்புக், கடுமேதி கருவியெஃகங் கடியமாயுதப் பொதுப் பேர்'' என்னும் சூடாமணி நிகண்டு செயற்கை வடிவப் பெயர்த்தொகுதி 16ஆம் செய்யுளடிகளானுணர்க. காளி, கருப்பன், வீரன், முனியன் முதலிய துஷ்டதேவதைகட்கு அடிமைப்பட்டமனிதர்பிரார்த்தனை செலுத்தும் நிமித்தமாக ஆடறுத்துப் பலியிடுதல் மரபு; அப்போது அவர்களால் கொண்டு வரப்பட்ட ஆட்டைப் பூசாரி வெட்டுதற்குப் பலி பீடத்தருகில் நிறுத்திவிட்டு அதன் கழுத்திலிடுதற்குக் கையில் மாலையைப்பிடித்து வேறு சில கிரியைகளைச் செய்துகொண்டிருப்பான், அப்போது அம்மறி அம்மாலை யினிடையிலுள்ள தளிரைக்கடித்துத் தின்று மகிழும். வெறியாட்டாடுமிடம் பலஜந்துக்களைப் பலியிடும் ஸ்தான மாதலின் 'வெங்களம்' எனப்பட்டது. 'மகிழ்ச்சி' என்பதில் இளமை குறிக்கப்படா விடினும் இவ்வதிகாரம் இளமை நிலையாமை பற்றியதாதலின், அதுகுறித்து, அதற்கு, 'இளமையின் பத்தாலுண்டாம் மகிழ்ச்சி' எனப் பொருளு ரைக்கப்பட்டது.

ஆர்கண்ணி - வினைத்தொகை. நறுங்கண்ணி- பண்புத்தொகை. முன்னர்- இடமுன். தயங்க -நிகழ்கால வினையெச்சம். குளகு- இலைதின்னும் விலங்கின் உணவு;

''இலைநுகர் விலங்குணாவேகுளகென வியம்பலாகும்'' என்னும் சூடாமணி நிகண்டு பல்பொருட்பெயர்த் தொகுதி 32-ஆம் செய்யுளடியால் இஃதுணரப்படும். 'உண்டதன்ன' என்பது 'உண்டன்ன' எனத் திரிந்து வந்தது. 'உண்டாலன்ன' என்பது இங்ஙனம் வந்ததெனவுங்கொள்ளலாம். களம், பாணி- வடசொற்கள். உடையாளர்- உடைமையை ஆள்பவர்; ஒரு சொன்னீர்மைத்து. இல்- விகுதிகெட்ட குறிப்பு முற்று.

17. *பனிபடு சோலைப் பயன்மர மெல்லாங்*
கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை- நனிபெரிதும்
வேற்கண்ண ளென்றிவளை வெஃகன்மின்
மற்றிவளும்
கோற்கண்ண ளாகுங் குனிந்து.

(இ-ள்) (உலகினரே!) இளமை- (மனிதரின்) இளமைப்பருவமானது, பனிபடு - குளிர்ச்சி பொருந்திய, சோலை - பொழிலில் உள்ள, பயன்-(கனிகள் முதலிய) பலன் களையுடையனவாயிருக்கின்ற, மரம் எல்லாம் - மரங்களெல் லாம், கனி உதிர்ந்து வீழ்ந்தற்று- (பழங்கள் உதிரும் பருவத் தையடைந்து) அப்பழங்கள் உதிர்ந்து வீழப் பயனற்றுப் போயினதைப் போன்ற நிலையில்லாத தன்மையையுடை யது, (ஆதலின்), இவளை- (இங்குக் கூறிய) இவ்விளமை யுடைய ஒரு பெண்ணை, (பார்த்து அவள் கண்ணழகு முதலிய சிறப்புக்களை யுடையவளா யிருப்பதை மனத்துட் கொண்டு), வேல்கண்ணள் என்று- (இவள்) வேல்போன்ற கண்களையுடையவள் என்றுசொல்லி, நனிபெரிதும்- மிகவும் அதிகமாக, வெஃகன்மின் - விரும்பாதீர்கள், இவளும்- இத்தகைய இளமை யழகுடையாளும், மற்று - (முதுமையடைந்த) பின்னர், குனிந்து - உடல் வளைந்து (கண்ணொளி மழுங்கி வழிகண்டு நடத்தற்கியலாமல்), கோல் கண்ணள் ஆகும்- ஊன்றுகோலையே கண்ணாக உடையவளாவாள்,(ஊன்றுகோலையே கண்ணாக கொண்டு

அதனால் தரையைத்தடவித்தடவிப்பார்த்து வழிகண்டு நடப்பவர்களாவாள் என்றபடி); எ-று.

மனிதரின் இளமையானது, கனிநிறைந்த மரங்கள் விரைவில் அவை உதிர்ந்து வீழப் பொலிவிழந்து போவது போல நிலையற்ற தன்மையுடையது; ஆதலின், உலகினரே! இவ்விளமையுடைய ஒரு பெண்ணைக்கண்டு, இவள் வேல் போன்ற கண்களையுடையவளென்று அவள்மீது விருப்பங் கொள்ளாதீர்கள்; இவளும் பின்னர்க் கிழப்பருவமடைந்து கூனிக் கண்தெரியாமல் ஊன்றுகோலையே கண்ணாகக் கொண்டு அதனால் பூமியைத் தடவிப்பார்த்து வழிகண்டு நடப்பவளாவாள் என்பது இதன் கருத்து.

ஒரு சோலையிலிருக்கும் மரங்கள் கனிகளை யுடையனவாயிருக்கும்போது மிக்க அழகுடையனவாயும், பலரும் விரும்பக்கூடியனவாயும் விளங்கும்போது மனிதர் அவற்றினிடம் நெருங்கிப் பயன் கொள்வர். அவ்வாறு பயனுகரும் போதே விரைவில் அக்கசனிகள் உதிர்ந்துவிடும். பின்னர் அத்தருக்கள் பொலிவிழந்தனவாம்; அந்நிலையில் எவரும் அவற்றின்பாலணுகார். அவற்றைப்போலவே ஒரு பெண்ணிடமுண்டாகும் இளமையில் பல உறுப்புக்களின் சிறப்புக்களும் விளங்கும்; அவற்றால் ஆடவர் பலரும் அவ்விளமையை விரும்புவர்; பின்னர் அவ்விளமை வனப்புக்கள் விரைந்து நீங்கிவிடும்; முதுமையெய்தும்; அந்நிலையில் எவரும் அதனை விரும்பமாட்டார்கள். ஆதலின், இளமையானது விரைவில் உதிர்ந்துபோம் கனிகளையுடைய மரங்களுக்கு நிகராகக் கூறப்பட்டது. இங்ஙனம் கூறியது உவமையணி. இச்செய்யுளில் முதலில் நிலையற்ற இளமையைக் கூறிப் பின்னர் 'இவளை' என்று சுட்டியதால் இதிலுள்ள அண்மைச் சுட்டாகிய இகரம் 'இங்குக் கூறிய இவ்விளமையுடையாளை' என்று பொருளுரைக்கப்பட்டது. இச்செய்யுள் பெண்களின் இளமை நிலையாமையைப் பற்றிக் கூறியதாகும். இங்ஙனம் இளமை நிலையாமை கூறவே பெண்

களின் வனப்பு அறிஞரால் விரும்பத்தக்கதன் றென்பதும், அவர், எவரும் அருவருக்கத்தக்க முதுமைப்பருவத்தை யடைவரென்பதும் துணியப்படும். ஆகலின் முனிவர் ''இவளை வேற்கண்ணளென்று வெஃகன்மின் மற்றிவளும் கோற்கண்ணளாகும் குனிந்து'' என்றார். கண்கள் எல்லா வுறுப்புக்களினும் சிறந்தனவாகலின், 'வேற்கண்ணள்' என்று அவற்றின் அழகைக்கூறியதனால் மற்ற அவயவங்களின் அழகினையும் கூறியதாகும்; இங்ஙனம் கூறுவது உபலக்ஷண மெனப்படும். பெண்கள் முதுமையிற் கோலைக்கண்ணாகக் கொண்டு நடப்பரென்பதை, ''கோற்கணெறிகாட்டக் கொல் கூற்றுழையதா'' என்னும் வளையாபதிச் செய்யுளடியானு முணரலாம்.

படுசோலை- வினைத்தொகை, பயன்மரம்- இரண் டனுருபும் பயனுமுடன் றொக்கதொகை. மரம்- பால்பகா வஃறிணைப்பெயர்; இங்குப் பன்மை குறித்து நின்றது; 'மரமெல்லாம் கனி உதிர்ந்து வீழ்ந்தற்று' என்பதில், 'கனி உதிர்ந்து' என்பது சினைவினை முதலொடு முடிந்ததாகும். வீழ்ந்து- வீழ்ந்தால் என்பதன் திரிபு. அற்று- அன் என்னும் உவமையிடைச் சொல்லடியாகப் பிறந்த குறிப்புமுற்று. நனிபெரிதும்- ஒரு பொருட்பன்மொழி; இது,

''ஒரு பொருட் பன்மொழி சிறப்பினின் வழா''

என்ற (நன்-பொது 47)-ஆம் சூத்திரவிதிபற்றிச் சிறப்பு நோக்கி வந்தது; இன்னும்,

''ஒருபொரு ளிருசொற் பிரிவில வரையார்''

என்னும் (தொல்-சொல்-எச்சவியல். 64-ஆம் -சூ) விதியும் பெறும். வெஃகன்மின்-எதிர்மறை ஏவற்பன்மை முற்று. இவளும் - என்பதில், உம்- உயர்வு சிறப்புப் பொருளது. மற்று - வினை மாற்றுமாம். 'இவளும் கிழப்பருவத்தை

அடைவாள்' என்பதை 'இவளும் குனிந்து கோற்கண்ண ளாகும்' என்றது பிறிதுமொழிதலணி. (எ)

18. *பருவ மெனைத்துள பல்லின்பா லேனை*
இருசிகையு முண்டிரோ வென்று-வரிசையால்
உண்ணாட்டங் கொள்ளப் படுதலால் யாக்கைக் கோள்
எண்ணா ரறிவுடை யார்.

(இ-ள்) (உலகத்தில் இளமையுட னிருந்து முதுமை யடைந்தவர்களை மற்றையர் நோக்கி 'இனி இவர்கள் விரைவில் மரணத்தையடைவார்கள்' என்று நினைத்து 'உங்களுடைய உடம்பின் நிலை எப்படி யிருக்கின்றது?' என்று வினவுதல் இயற்கை; அவ்வியற்கையின்படி அவர்கள் அம்முதியோரை வினவத்தொடங்கி 'பருவம்- (உம்முடைய) வயது, எனைத்து- (இப்போது) எவ்வளவு, உள-(வாயில்) உள்ள, பல்லின்பால் - பற்களின் குணங்கள், ஏனை- எத் தன்மை யுடையனவா யிருக்கின்றன, (நீர்), இருசிகையும்- (கடின ஆகாரக்கவளம் மெல்லிய ஆகாரக்கவளம் ஆகிய இரண்டுவகையான உணவுகளின் கவளங்களையும், உண் டிரோ- புசித்தீரோ,' என்று- என்று கேட்டு, (அவர்கள் 'வயது மிகுந்து விட்டது; பற்கள் கழன்றுவிட்டன' என்றுசொல்ல, அவர்களின் பரிதாப நிலையைப்பற்றி ஆராய்ந்து), வரிசை யால்- முறைமையால், உள்- மனத்திலே - நாட்டம் (அவர்கள் அழிந்து போவார்கள் என்ற) எண்ணம், கொள்ளப்படுதலால் - அவர்களால் கொள்ளப்படுவதனாலே, அறிவுடையார்- நற் புத்தியுடைய பெரியார், யாக்கை உடம்பினது, கோள்- இளமைக்குணத்தை, எண்ணார்- (நிலையுள்ளதென்று ஒரு பொருளாக) மதியார்; எ-று.

முதுமை யடைந்தவர்களை நோக்கி மற்றையர், 'இவர்கள் இன்னும் சிலதினங்களே உலகத்திலிருப்பார்கள்'

என்றுறுதி கொண்டு 'உம்முடைய் உடம்பு எந்நிலையி லிருக்கின்றது?' என்று வினவுதல் இயற்கை; அதன்படி அவர்கள் அம்முதியோரை விசாரிக்கத் தொடங்கி, 'உமக்கு வயது எவ்வளவாயிற்று? பல்லின் தன்மைகள் எத்தகை யனவா யிருக்கின்றன? கடின ஆகாரம், மெல்லிய ஆகாரம் ஆகிய இரண்டு வகைகளையும் நீர் உண்டீரா? அவை உமக்கு ஜீர்ணமாயினவா? என்று வினவி, அம்முதியோர், 'நாங்கள் விருத்தாப்பியராய் விட்டோம்' என்று சொல்லக் கேட்டு அவர்களுடைய நிலையை ஆராய்ந்து மனதிலே அவர்களின் அழிவை நினைப்பதால் அறிஞர், உடம்பின் இளமைத் தன்மையை ஒருபொருளாக மதியார் என்பது இதன்கருத்து.

முதியோரைப் பார்த்து அவரின் நிலைமையை விசா ரிக்கும் உரிமையுடையார், அவர் தளர்ச்சியுற்றதற்கிரங்கி, 'உமது வயது எவ்வளவாயிற்று? உடம்பின் நிலை எத் தன்மைத்தா யிருக்கின்றது?' என்று விசாரிப்பர்; அவர், 'தளர்ச்சி மிகுந்துளது' என்றுகூறுவர்; அதைக்கேட்டஉரியார் 'இவர்க்கு ஆயுட்காலம் குறுகி விட்டது' என்று அவரின் தளர்ந்தநிலையை எண்ணிக் கவலையடைவர். இஃதுலக வியற்கை. ஆதலின், மனிதரின் இளமை நிலையுள்ளதென அறிஞரால் மதிக்கத்தக்கதன்றாம். 'உள' என்பதை, 'எனைத்து' என்பதனோடு கூட்டி, 'எனைத்துள' எனக் கொண்டு, அதற்கு, 'எவ்வளவு ஆகியுள்ளன' எனப் பொருளு ரைத்தலுமொன்று. பல்லின் குணங்கள்- உணவுகளை மென்று தின்னுதற்குதவியாதலும், பேசுதற்குதவியாதலு மாம். உணவுகளில் கடினம், மென்மை என இரண்டு வகை யுண்டாதலின் 'இருசிகையும்' என்பது அவ்விருவகைகளை யுங் குறித்தது; இருவகை யுணவுகளையும் மெல்லுதல் பற்களின் தொழிலாகலின், அவற்றின் குணங்களை வினவிய பின், அவற்றின் தொழிலால் நிகழும் இருசிகையு முண்ணு தல் வின்வியதாகக் கூறப்பட்டது. இதனால், 'பற்கள் இரு வகைகளையும் மெல்லுதற்குத் தக்க வன்மை யுடையனவா யிருக்கின்றனவா?' என்று விசாரித்ததாகும். இனி, 'இரு

சிகையுமுண்டிரோ' என்பதற்கு 'இரண்டுவேளை ஆகார வளங்களையும் புசித்தீரோ' எனப் பொருளுரைத்தலு மொன்று; இதனால், 'பகல் இரவு என்னும் இரண்டு வேளைகளிலும் ஆகாரக வளங்களை உண்ணுகின்றீர்களா? அவை ஜீர்ணமாகின்றனவா?' என்று வினவியதாகும். முதியோர் நிலைமையை அவர்பால் விசாரித்தல் அவர்க் குரியாரின் கடன்மையாகலின், அவரால் அன்னார் நிலைமை நினைக்கப்படுதலை, 'வரிசையால் உள்நாட்டங் கொள்ளப் படுதலால்' என்றார் முனிவர்.

எனைத்து - எத்தனைத்து என்பதன் மரூஉ. ஏனை - வினாவடியாப்பிறந்த எவனென்கிற அஃறிணைக்குறிப்பு முற்று, இடைகுறைந்து முதல் நீண்டு ஐகாரச்சாரியை பெற்று நின்றது; எனைய என்பதன் விகாரமெனினும் அமையும். 'உண்டிரோ' என்பதில், ஓ-வினாப் பொருளது. நாட்டம்- தொழிற் பெயர்; நாடு- பகுதி, அம் - தொழிற்பெயர் விகுதி, டகர வொற்று- விரித்தல் விகாரம். கோள்- குணம்; அஃதிளமையை உணர்த்தி நின்றது. (அ)

19. *மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னாது*
கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்ம்மின்
முற்றி யிருந்த கனியொழியத் தீவளியால்
நற்கா யுதிர்தலு முண்டு.

(இ-ள்) (மனிதரே! நீவிர் இளமையுடையராயும், கைப்பொருளுடையராயு மிருக்கும்போது), நல்வினை - நற்காரியத்தை (அதாவது தருமத்தை), மற்று அறிவாம்- பின் னால் அறிந்துசெய்வோம், யாம் இளையம் -(இப்பொழுது) யாம் இளமைப்பருவ முடையேமா யிருக்கின்றோம், (ஆத லின் முதுமையடையும் வரையிலும் இன்பங்களை நுகர்ந்து கொண் டிருப்போம்), என்னாது - என்று நினையாமல், கைத்து - கைப்பொருள், உண்டாம்போழ்தே - (அங்ஙனம்) கிடைத்திருக்கும்பொழுதே, கரவாது (அதனைப்பிறர்க்குத

வாது) மறைத்துவைக்காமல், (நன்மார்க்கங்களிற் செல விட்டு), அறம்- தருமத்தை, செய்ம்மின்- புரிவீராக, (ஏனெனில்), முற்றியிருந்த (மரத்தில் பழுத்து) முதிர்ந்து உதிரும் பருவத் திருந்த, கனி ஒழிய - பழங்கள் (உதிராமல்) நீங்கிக் கிளைகளில் நிலைபெற்றிருக்க, தீவளியால் - கொடுங்காற்றால், நல்காய்- (உதிராப்பருவத்தையுடைய) நல்லகாய்கள், உதிர் தலும்- வீழ்தலும், உண்டு- உளது, (இதைப்போல இளமை யிலேயே நீங்கள் சாதலும் கூடும்); எ-று.

மானிடரே! பெருங்காற் றடிக்குங்கால் உதிரும் பருவத்தை யுடைய கனிகள் உதிராமல் மரத்திலிருக்க, அப்பருவமெய்தாக் காய்கள் உதிர்ந்துவிடலுமுண்டு; இதைப் போன்று நோய், வேறு பல இடர்கள் முதலியவற்றால் முதியோர் இறவாதிருக்க இளையோர் இறத்தலுமுளது. இதனால் இளமை நிலையாதென்பது துணியப்படும். ஆதலின், நீங்கள் இளம்பிராயமும் கைப்பொருளுமுடையரா யிருக்கும்போதே, 'இப்போது இளமை யின்பங்களை அனுபவித்து முதுமை யெய்தியபின் நற்காரியங்களைப் புரிவோம்' என் றெண்ணாமல் விரைந்து அறஞ்செய்து முத்திப்பேற்றினை யடையும் மார்க்கத்தைத் தேடிக் கொள்வீராக' என்பது இதன் கருத்து.

இங்ஙனம் கூறியதனால் மனிதர்க்கு இளமையும் பொருளும் நிலைநில்லாவென்பதும், அவர், அவைபெற்ற ஞான்றே அறஞ்செய்து புண்ணியத்தைத் தேடிக் கொள்ள வேண்டுமென்பதும், இன்றேல் நற்பேற்றினை யிழப்பரென் பதும் பெறப்படும். இச் செய்யுட்கருத்தினை,

''அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை''

என்னும் திருக்குறட் செய்யுளும்,

''மின்னு மிளமை யுளதா மெனமகிழ்ந்து
பின்னை யறிவென்றல் பேதைமை- தன்னைத்
துணித்தானுந் தூங்கா தறஞ்செய்க கூற்ற
மணித்தாய் வருதலு முண்டு''

என்னும் அறநெறிச்சாரம் 106-ஆம் செய்யுளும் விளக்குவன வாம். 'மற்றறிவாம் நல்வினை' என்பதில், மற்று- என்பது 'விரைந்து அறிவாம்' என்னும் வினையை நீக்கி, 'பின்னர் அறிவாம்' என்னும் வினையைத்தருதலால், வினைமாற்றுப் பொருளது;

''மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை
யப்பா லிரண்டென மொழிமனார் புலவர்''

என்பது (தொல்-சொல்- இடை-14) சூத்திரம். இங்ஙனம் 'பின்னர் அறிவாம்' என்றது, 'முதுமையில் செய்வோம்' என்றபடியாம். நல்வினையை அறிதலின் பயன் அதனைச் செய்தலேயாகலின் 'அறிவாம்' என்பது 'அறிந்து செய்வாம்' என்னும் பொருள்; பயந்துநின்றது. கைத்து- கையிடத்ததான பொருள் ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர். திருக்குறள் - ஊக்கமுடைமை என்னும் அதிகாரத்தில்,

''ஆக்க மிழந்தேமென் றல்லாவா ரூக்க
மொருவந்தங் கைத்துடை யார்''

எனவரும் செய்யுளில், கைத்து- என்பதற்கு, பரிமேலழகர் 'கையகத்தாய பொருள்' எனப் பொருள்கூறி ''கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ் செய்ம்மின்'' என்றார் பிறரும் என்று இச்செய்யுளடியையே உதாரணங்காட்டி இக்கருத்தினை விளக்கியிருத்தல் உய்த்துணரற்பாலதாம். 'போழ்தே' என்பதில், ஏ- தேற்றற்பொருளது; விரைவுப் பொருண்மையது மாம். 'கைத்துண்டாம்போழ்தே' என்றதனால் இளமை நிலை

யாமையோடு செல்வ நிலையாமையையும் வலியுறுத்திய தாயிற்று. இளையம் - தன்மைப் பன்மைக் குறிப்பு முற்று. உதிர்தலும் என்பதில், உம் - எதிர்மறைப் பொருளது. பின்னிரண்டடிகளும் எடுத்துக்காட்டாக நின்று 'வயதுமுதிர்ந்த விருத்தரேயன்றி' உடற்கட்டுடைய இளைஞரும் பிணி முதலியவற்றால் அழிதலுமுண்டு' என்னும் பொருளைத் தருதலின் பிறிது மொழிதலணியாம். இப்பாட்டு இன வெதுகை கொண்ட ஒரு விகற்ப இன்னிசை வெண்பா.

20. *ஆட்பார்த் துழலு மருளில் கூற் றுண்மையால்*
தோட்கோப்புக் காலத்தாற்கொண்டுய்ம்மின்- பீட்பிதுக்கிப்
பிள்ளையைத் தாயலறக் கோடலான் மற்றதன்
கள்ளங் கடைப்பிடித்த னன்று.

(இ-ள்) (அறிஞரே!) ஆள் - (ஆயுள்முடிந்த) மனிதரை, பார்த்து - (பிடித்துச் செல்வதற்குத் தேடிப்) பார்த்துக் கொண்டு, உழலும் - (உலகெங்கும் சஞ்சரித்துத்) திரிகின்ற, அருள் இல்- மனவிரக்கமில்லாத, கூற்று- யமன், உண்மை யால் - இருக்கின்றமையாலும், பீள்- (ஒரு பெண்ணிடத்தே யுள்ள வெளிப்படும் பருவமடையாத இளங்) கருப்பத்தை யும், (அதிலுள்ள சிசுவின் ஆயுள் முடிவுகண்டு), பிதுக்கி, வெளிப்படுத்தி, பிள்ளையை- (அதிலுள்ள) குழந்தையை, தாய் அலற- (அதன்) தாயாகிய அப்பெண் (பிரிவு குறித்து) அழும்படி, கோடலால்- கொண்டு செல்கின்றமையாலும், அதன் - அந்த யமனது, கள்ளம்- (இத்தகைய) சூதினை, கடைப்பிடித்தல்- உறுதியாக (மனத்திற்) பற்றுதல், (அதாவது மனத்தில் ஆராய்ந்தறிதல்), நன்று (மிகவும்) நல்லது, (ஆதலின், அங்ஙனம் அறிந்து அக்கூற்றின் கைப்படு முன்னரே நீர் நற்கதியடையச் செல்லும்வழிக்கு இன்றியமை யாத தாகிய) தோள் கோப்பு- (நல்வினையாகிய) கட்டுச் சோற்று மூட்டையை, காலத்தால் - (தேடிக் கொள்ளுதற் குரிய) காலத்திலேயே, (அதாவது இளமையிலேயே),

கொண்டு - (தேடி) வைத்துக்கொண்டு; (அதனுதவியால் நற்கதிக்குச் செல்லும் மார்க்கத்தில் இடர்ப்படாமற் போய் அதனையடைந்து இன்புற்று), உய்ம்மின் - கடைத்தேறு வீராக; எ-று.

மனிதரே! ஆயுள் முடிந்த மனிதரைப் பிடித்துச் செல்வ தற்கு யமன் எங்கும் திரிந்துகொண் டிருக்கின்றமையானும், கருவிலுள்ள சிசுவினையும் தாய்கதறக் கொண்டு செல்லு கின்றமையானும், நீங்கள் அக்கூற்றின் இரக்கமற்றதும் வஞ்சனையுள்ளதுமாகிய செயலினையுணர்ந்து, அதன் கைப்பட்டிறக்கு முன்னரே இளமைப் பருவத்திலேயே நற்கதிசேரும் வழிக்குத் துணையாயிருப்பதாகிய நல் வினையைத் தேடிக் கொண்டு பிழைப்பீராக என்பது இதன் கருத்து.

இங்ஙனங் கூறியதனால் இளமை நிலையற்ற தென்பதும், அவ்விளமையிலேயே மேற்கதி யடைதற்குத் துணையாகிய அறத்தை மனிதர் தேடிக்கொள்ளல் வேண்டு மென்பதும் பெறப்படும். வேற்றூர்க்குச் செல்வோர் கட்டுச் சோற்று மூட்டையைக் கொண்டு செல்லின் வழியில் பசி இளைப்பு முதலியன நேருங்காலத்து அதனையுண்டு அவற்றை நீக்கி இடரின்றிக் குறித்தவிடம்போய்ச் சேர்வர். இவர்போலவே நற்கதியடைந்துய்ய விரும்புவோர் நல் வினையைத் தேடிக்கொள்வாராயின், அக்கதியிற் சேருமுன் இடையில் நேரும் யமவாதனை முதலிய துன்பங்களை அதனால் நீக்கிக் கொண்டு முட்டுப்பாடின்றி ஆங்குப்போய்ச் சேர்ந்தின்புறுவர். இங்குக் கூறியபடி மறுமையில் உயர்கதி யெய்த விரும்புவோர் நல்வினையாகிய ஆற்றுணாவை முன்னரே தேடி வைத்துக்கொள்ளுதல் இன்றியமையாமை யென்பதை,

"வேற்றுவ ரில்லா நுமரூர்க்கே செல்லினும்
வெகுண்டிர் போல

ஆற்றுணாக் கொள்ளா தடிபுறத்து வைப்பீரே
யல்லீர் போலுங்
கூற்றங்கொண் டோடத் தமியே கொடுநெறிக்கட்
செல்லும் போழ்தின்
ஆற்றுணாக் கொள்ளீ ரழகலா தறிவொன்று
மிலிரே போலும்''

என்னும் சீவகசிந்தாமணி 1550-ஆம் செய்யுளானும், இந்நூல் புல்லறிவாண்மையில் ''இறுகிறுகத் தோட்கோப்புக் கொள் ளார்'' என்ற அடியினை யுடையதாய் வரும் 328ஆம் செய்யு ளானும் உணரலாம். வேற்றூர்க்குச் செல்வார்க்குக் கட்டுச் சோறு உதவியாதல்போல மேற்கதிக்குச் செல்வார்க்கு நல் வினை துணையாதலின் அது தோட்கோப் பெனக் கூறப் பட்டது. 'ஆள்பார்த்து உழலும் கூற்று' என்றதனால் அவன் வருகை தவறாதென்பது துணியப்படும். 'அருளில் கூற்று' என்பது அவனது இரக்கமற்ற தன்மையை விளக்கும்; அதற்கு அவன், பிள்ளையைத் தாயலறக் கோடலே திருஷ்டாந்த மாகும். பிள்ளை, பிறக்கும் பருவம் வருமுன் இறந்து கருப்பத்தினின்றும் வெளிப்படின் அதனால் தாய்க்கு மிக்க வேதனையுண்டாகும்; அதனோடு தன் சிசுவிறந்ததாலும் மனத்துயர் அதிகரிக்கும்; இவ்விரண்டினானும் அவள் மிகுந்து கதறுவாள்; ஆதலின் முனிவர், 'தாய் அலற' என்றார்.

'ஆட்பார்த்து' என்பதில் 'ஆள்' என்னும் உயர் திணைப் பெயரில் ''இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்......'' என்னும் (நன்-உருபு-பு-16) சூத்திரவிதிபற்றி ஈற்று ளகர வொற்று டகர வொற்றாகத் திரிந்துவந்தது. 'அருளில் கூற்று' என்பதில் வலிமுன் லகரவொற்று இயல்பானது, ''இல்லென்கிளவி......'' என்னும் (தொல்-எழுத்-புள்-ம-77-ஆம்) சூத்திரவிதியான் அமையும். கோப்பு-கோத்தல்; தொழிற்பெயர்; தோள்கோப்பு- தோளில் கோத்தல்; இது தொழிலாகுபெயர்; தோள்கோப்பு - தோளில் கோத்தல்; இது தொழிலாகுபெயராய்த் தோளில் கோக்கப்

படுவதாகிய கட்டுச்சோற்று மூட்டையை யுணர்த்தியதாகும். இத்தொழிலாகுபெயர் இங்கு உவமவாகுபெயராய் உயர்கதி மார்க்கத்திற்கு இன்றி யமையாததாகிய நல்வினையை உணர்த்திநின்றது. ஆகலின், 'தோள்கோப்பு' என்பது இருமடியாகுபெயராம். தோட்கோப்பு, பொதிசோறு, ஆற்றுணா என்பன - ஒருபொருட் சொற்கள். இவை ''அச்சமில் பொதிசோ றென்ப தாற்றுணா தோட்கோப் பும்பேர்'' என்னும் சூடாமணிநிகண்டு பல்பொருட் பெயர்த் தொகுதி 23-ஆம் செய்யுளடியான் உணரப்படும். 'காலத்தால்' என்பதில், ஆலுருபு- கருவிகருத்தாப் பொருள்களைத்தராமல் 'காலத்தில்' என இடப்பொருள் பயந்து நிற்றலின், உருபு மயக்கம்;

''காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது''

என்னும் (திருக்குறள்- செய்ந்நன்றியறிதல்-2ஆம்) செய்யுளிற் போல அமைந்தது;

''யாத னுருபிற் கூறிற்றாயினும்
பொருள்செ‌ன் மருங்கில் வேற்றுமை சாரும்''

என்னும் (தொல்-சொல்-வேற்றுமை மயங்கியல் -28-ஆம்) சூத்திரவிதியேற்றது. பிதுக்கி- பிறவினை; பிதுங்கி- தன்வினை இதில்மெல்லொற்று வல்லொற்றானது பிற வினைக்குறி. கோடல்- தொழிற்பெயர்; இதில், கொள்- பகுதி, தல்- தொழிற்பெயர்விகுதி, பகுதியின் முதல் நீட்சி- விகாரம், தகரம் டகரமானவிடத்து ளகரம் கெட்டது - சந்தி. மற்று-அசை.

அதிகாரம்-3

யாக்கை நிலையாமை

யாக்கை நிலையாமையாவது- உடம்பினது நிலையற்ற தன்மையை உணர்த்துவதாம். முதல் அதிகாரத்தின் தொடக்கத்திலும், இரண்டாவது அதிகாரத்தின் ஆரம்பத்திலும் கூறிய காரணங்களால் அதிகாரமுறைமை நன்கு விளங்கும். அம்முறைபற்றியே இளமை நிலையாமையின் பின் இந்த யாக்கை நிலையாமை நிறுத்தப்பட்டது. இன்னும் இளமையாகிய ஆதேயத்துக்கு யாக்கை ஆதாரமாதலின், அவ்விளமை நிலையாமையின் பின் அதற்காதாரமாகிய யாக்கை நிலையின்மை நிறுவப்பட்ட தெனினுமாம். ஆதாரம் - இடம்; ஆதேயம் அவ்விடத்து நிகழ்பொருள். யாக்கை - (எலும்பு, தசை, தோல், மூளை, சுக்கிலம், இரத்தம், இரதம் என்னும் எழுவகைத் தாதுக்களால்) யாக்கப்பட்டது; யாத்தல்- கட்டுதல். 'யாக்கை' என்பதைத் தொழிலாகு பெயராகக் கொள்ளின், கை- தொழிற்பெயர் விகுதி; செயப்படு பொருளாகக் கொள்ளின், ஐ- செயப்படு பொருள்விகுதி; கு- சாரியை; ககர வொற்றுத் தோன்றியது- சந்தி.

21. *மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்*
தலைமிசைக் கொண்ட குடையர்-நிலமிசைத்
துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினா ரிவ்வுலகத் தில்.

(இ-ள்) மலைமிசை - பர்வதத்தின்மேல், தோன்றும்- விளங்குகின்ற, மதியம்போல்- பூர்ணச்சந்திரன்போல, யானைத்தலைமிசை - பட்டத்துயானையினது சிரசின்மேல், கொண்ட (தங்கட்கு நிழல் செய்யுமாறு தங்களால்) கொள்ளப் பட்ட, குடையர்- வெண்கொற்றக்குடையையுடைய அரசர் களும், நிலம்மிசை- இப்பூமியில், (மரணமடைந்து), துஞ்சி னார் என்று - இறந்துபோனார்களென்று, எடுத்து (பிறர் அறியு மாறு) எடுத்துக்கூறி, (அதாவது வலிய ஓசைபடச்சொல்லி), தூற்றப்பட்டார் அல்லால் - (பலராலும்) இகழப்பட்டரல்லா மல், எஞ்சினார்- (அச்சாவினின்று) நீங்கி நிலைத்திருந்தவர் கள், இ உலகத்து - இந்த உலகத்தில், இல் - (எவரும்) இல்லை; (ஆதலின், மனிதர் இறக்குமுன் அறத்தைச் செய்தல் வேண்டும்); (எ-று)

பட்டத்து யானையின் தலைமிசை வெண்கொற்றக் குடை நிழற்ற வீற்றிருந்து பவனிவந்த அரசர்களும் இறந் தொழிந்து பலராலும் இகழப்பட்டார்களேயன்றி இவ்வுலகத் தில் நிலைபெற்றிருந்தா ரெவருமிலர் என்பது இதன் கருத்து.

தம் உடம்பில் பிணி முதலியன நேராதபடி அதனைப் பாதுகாத்துக் கொள்ளத்தக்க சௌகரியங்களையுடைய அரசரும் இறப்பர் என்றதனால், மற்றையர் இறப்பரென்பது கூறாமலே அமையும். இங்ஙனம் எவரும் இறந்தொழிவ ரென்றதனால் மனிதர் யாக்கை நிலையற்றதென்பதும், அஃதழியுமுன் அவர் முத்திப் பேற்றினை யெய்துதற்குரிய அறத்தைத் தேடிக்கொள்ள வேண்டுமென்பதும் பெறப் படும். அரசனைத் தாங்கும் பட்டத்து யானையும், அவ் வரசனால் கொள்ளப்படும் வெண்கொற்றக் குடையும்,

மலையைப் போன்றும், அதன்மீது விளங்கும் பூரணச் சந்திரனைப் போன்றும் தோன்றுவன வாதலின், அவை யானைக்கும் குடைக்கும் உவமையாகக் கூறப்பட்டன. அருவிநீர் பாயும் மலை, மதநீரொழுகும் யானைக்குவமை யாயிற்று; வட்டவடிவும், வெள்ளிய பிரகாசமு முடையமதி அக்குணங்களை யுடைய குடைக்குவமை யாயிற்று; இங்ஙனர் இவற்றை உவமித்துக்கூறியது உவமையணி.

மிசை-ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. 'மதியம்' என்பதில், அம்- சாரியை. 'குடையர்' என்பதில், உயர்வு சிறப்பும்மை தொக்கது. துஞ்சுதல்- தூங்குதல்; அஃதிங்கு இறத்தலைவிளக்கி நின்றது; இங்ஙனம் இறத்தலைத் துஞ்சுத லென்றது தகுதிபற்றி வந்தது; தகுதியென்பது ஒரு பொருளைக் கூறுமிடத்து அதற்குரிய சொல் நன்னீர்மை யுடைய தன்றெனின் அதனை நீக்கி, வேறு தக்கதோர் வாய்பாட்டாற் கூறுதல்; இது,

''தகுதியும் வழக்குந் தழீஇயின வொழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே''

என்னும் (தொல்-சொல்-கிளவி-17.) சூத்திரத்தா னுணரப் படும் இதனைத் தகுதி வழக்கைச் சார்ந்த மங்கலத்தின் பாற்படுத்துவர் நன்னூலார். இறத்தல் மீளவும் எழுந்திராத பெருந் துக்கத்தை நிகர்த்ததாதலின் அக்காரணம் பற்றி அது துஞ்சுதலெனக் கூறப்பட்டதெனினும் அமையும். எஞ்சுதல்- சேடித்தல். இல்- ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவாகிய குறிப்பு வினைமுற்று; வேறு, உண்டு என்பனவும் இது போன்றனவே.

''வேறில்லை யுண்டைம் பால்மூ விடத்தன''

என்பது (நன்-வினை20) சூத்திரம். இச்செய்யுட் கருத்தோடு

''கொலையானை மேலோர் குளிர்வெண்
குடைக்கீழ்ப்
பலயானை மன்னர் பலர்போற்ற வந்தான்
மலையாகம் போழாக மற்றிவனோ சாய்ந்தான்
நிலையாமை சால நிலைபெற்ற தன்றே.''

என்னும் சூளாமணிச் செய்யுட் பொருள் ஒப்பிடத்தக்கது. (க)

22. *வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டிலம்*
வீழ்நாள் படாஅ தெழுதலால்-வாழ்நாள்
உலவாமு னொப்புர வாற்றுமின் யாரும்
நிலவார் நிலமிசை மேல்.

(இ-ள்) வாழ்நாட்கு- (மனிதர் உலகத்தில் உயிரோடு கூடி) வாழ்கின்ற நாள்களுக்கு, (அதாவது மனிதரின் ஆயுளுக்கு) அலகு ஆ(க) - (ஓர்) அளவாக, வயங்கு - விளங்கு கின்ற, ஒளிமண்டிலம் - சூரிய மண்டலமானது, வீழ்நாள் படாது - (அஃது) உதித்தல் இல்லாதநாள் உண்டாகாதபடி, எழுதலால்- (தினந்தோறும்) தோன்றிவருதலால், (அதன் கணக்கின்படி அவ்வாயுள் நாட்கள் ஒவ்வொன்றாகக் கழிந்து முடிவுபெறும்; அதனால்) யாரும்- எவரும், நிலைமிசை- பூமியில், மேல், (அவ் வாழ்நாட்களுக்கு) அப்பால், (சிறிது நேரமும்), நிலவார் - வாழமாட்டார்கள், (ஆதலின் மானிடரே!) வாழ்நாள் - அவ்வாயுள் நாட்கள், உலவாமுன்- (அங்ஙனம்) கழிவதற்குமுன், ஒப்புரவு உபகாரத்தை, ஆற்றுமின்- (பிறர்க்குச்) செய்யுங்கள்; எ-று.

மனிதரே! சூரியன் நாள்தோறும் உதயஞ்செய்து உலகத்தவரின் ஆயுள் நாட்களின் கணக்கைக் காட்டிக் கொண்டு வருவதனாலே, அக்கணக்கின்படி அந்நாட்கள் முடிந்தவுடன் ஒவ்வொருவரும் இறந்தே தீருவர்; ஆதலின், அவ்வாயுள் நாட்கள் கழிவதன் முன் நீங்கள் பிறர்க்கு உபகாரஞ்செய்து மேற்கதிக்குச் செல்லும் மார்க்கத்தைத்

தேடிக்கொள்வீராக என்பது இதன் கருத்து.

சூரியன் உதித்து மறைந்து மீண்டும் தோன்றும் வரையிலுமுள்ளகாலத்தை ஒருநாள் என்றும், அத்தகைய நாள் முப்பது கொண்டதை மாதமென்றும், அம்மாதம் பன்னிரண்டு கொண்டதை ஆண்டென்றும் மனிதர் எண்ணி, அவர்களால் தங்கள் ஆயுள் நாட்கள் கணக்கிடப் படுதலால், அப்பரிதியின் தோற்றம் அந்நாட்களுக் களவாயிற்று. இதனை இந்நூலின் 7-ஆம் செய்யுளில், ''தோற்றஞ்சால் ஞாயிறு நாழியா வைகலும்'' எனவருதலானுமுணர்க. சூரியன் உதயஞ்செய்யாத நாள் உலகத்தில் இல்லையாதலின், ''வீழ்நாள் படாஅதெழுதலால்'' என்றார் முனிவர். ஒப்பு - (உலக) சம்மதம், உரவு - அறிவு, ஒப்புரவு - உலகம் சம்மதிக்கின்ற அறிவு; இங்கு ஒப்புரவு என்பது வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகையாய் 'உலகமொப்பும் அறிவினையுடைய செய்கை' என விரியும்; அஃதுபகாரத்தின் மேனின்றது; ஆகலின், 'ஒப்புரவு' என்பது ஒரு சொன்னீர்மைத்தாய், 'உபகாரம்' எனப் பொருள் பயந்து நின்றது; இவ்வுபகாரமானது, உலகநடையை அறிந்து அதற்கேற்பப் பிறர்க்குச் செய்யும் உதவியாம். இனி, துறவறமும் அறிவுள்ள செய்கையாதலின், ஒப்புரவு-என்பதைத் துறவற மெனக் கொண்டு, 'யாரும் நிலவார் நிலமிசை மேல்' என்பதை, 'யாரும் மிசை நிலமேல் நிலவார்' எனமாற்றி, அதற்கு, 'துறவறஞ்செய்யாத எவரும் எல்லாவுலகங்கட்கும் மேலாகிய மோக்ஷபூமியின்மேல் சேர்ந்து விளங்கமாட்டார்கள்' எனப் பொருளுரைத்து, 'ஒப்புரவாற்றுமின்' என்பதற்கு, 'ஆதலின், துறவறத்தைச் செய்யுங்கள்' எனப் பொருள் விரிப்பாருமுளர்; திருக்குறள் கடவுள் வாழ்த்தில்,

''மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்''

என்னும் 8-ஆம் செய்யுளில், 'நிலமிசை நீடுவாழ்வார்' என்பதற்குப் பரிமேலழகர் 'எல்லாவுலகிற்கும் மேலாய வீட்டுலகின்கண் அழிவின்றிவாழ்வார்' என்று பொருளுரைத்தது இக்கருத்தோடொற்றுமை யுடையதாகும்; இதில் 'நிலமிசை' என்பதை, 'மிசை நிலம்' எனமாற்றிப் பொருளுரைத்தல் வேண்டும்.

'அலகாக' என்பது 'அலகா' என விகாரப்பட்டு நின்றது. வயங்கொளி- வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகையாய்ச் சூரியனை உணர்த்தி நின்றது; 'விளங்குகின்ற ஒளியையுடையவன்' எனவிரியும். ஒளி, தனித்து நிற்பின் சூரியனுக்குக் குணவாகு பெயராகும். சூடாமணி நிகண்டு தெய்வப்பெயர் தொகுதி 55-ஆம் செய்யுளின் ''பரிதிபாற் கரனாதித்தன் பனிப்பகை சுடர் பதங்கன்'' என்ற அடியில் சூரியனுக்குச் 'சுடர்' என்று பெயர் கூறப்பட்டிருத்தல் காண்க. மண்டலம் வடசொல்; இது 'மண்டிலம்' என விகாரப்பட்டு வந்தது; இதற்கு, 'வட்டம் என்பது பொருளாம்; இது, சூரியனுடைய வட்டவடிவை விளக்கி நின்றது. வீழ்தல் - மறைதல்; அஃதிங்கு உதயமாகாமையின் மேனின்றது. படாஅது- என்பது செய்யுளோசை நிறைக்கவந்த உயிரளபெடை; இன்னிசையளபெடையெனவும்படும். 'உலவா' என்பதில், உல்-பகுதி, ஆ- எதிர்மறை விகுதி. நிலவுதல்- விளங்குதல்; அஃதிங்கு வாழுதற் பொருளுணர்த்தி நின்றது; நிலவார் என்பதில், நில-பகுதி, 'ஆற்றுமின்' என்ற ஏவல் முற்றிற்கேற்ப, 'மானிடரே!' என்றவிளி வருவித்துரைக்கப்பட்டது. 'மிசை மேல்' என்பதை ஒரு பொருட்பன்மொழியாகக் கோடலுமாம். (உ)

23. *மன்றங் கறங்க மணப்பறை யாயின*
அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப்- பின்றை
ஒலித்தலு முண்டாமென் றுய்ந்துபோ மாறே
வலிக்குமா மாண்டார் மனம்.

(இ-ள்) (இவ்வுலகத்தில் பெண்களைமணஞ்செய்து கொண்டிருப்பவர் அக்கலியாணப் பந்தலிலேயே இறந்து போதலுமுண்டு; அக்கலியாணத்திற்கு முழங்கிய வாத்தியங்கள் பிணத்திற்குரிய வாத்தியங்களாக மாறி முழங்குதலுமுண்டு. ஆதலின் கலியாணங்கள் நடக்குங்காலத்தில்), மன்றம் - (அக்கலியாணத்திற்குவந்த மனிதர் கூடியிருக்கும்) (சபை முழுவதும், கறங்க- முழங்கும்படி. மணப்பறை ஆயின- (அக்கலியாணங்கட்குரிய) வாத்தியங்களாய் அமைந்திருந்தவை, (அந்தமணமக்கள் அப்பொழுதே இறந்து போக), அன்று- அந்நாளிலேயே, அவர்கட்கே, ஆங்கே- அவ்விடத்திலேயே, பிணப்பறை ஆய்- பிணத்துக்குக் கொட்டும் நெய்தனில வாத்தியங்களாய், (மாறி), பின்றை- பின்னர், ஒலித்தலும்- முழங்குதலும், உண்டாம் என்று - உண்டாதல் கூடுமென்று (மனிதரின் யாக்கை நிலையாமையை) நினைத்து, மாண்டார்- மாட்சிமைப் பட்ட அறிவினையுடையாரது, மனம்- உள்ளமானது, உய்ந்து போம்- (தாங்கள்) ஈடேறி (நற்கதியிற்) போய்ச் சேர்தற்குக் காரணமான, ஆறே- (துறவறத்தின்) மார்க்கத்திலேயே, வலிக்கும்- உறுதியாகப் பற்றி நிற்கும்; எ-று.

மணஞ்செய்து களிப்பில் ஆழ்ந்திருப்பவர்களும் அப்பொழுதே இறந்து விடுதலுமுண்டு; இஃதுலக வியற்கை; ஆதலின் சிறந்த அறிஞர், மனிதர்யாக்கை நிலையாமையாகிய இவ்வியல்பினை உணர்ந்து, மேற்கதிக்குச் செல்லும் மார்க்கத்தினை உறுதியாகப் பற்றிநிற்பர் என்பது இதன் கருத்து.

இங்ஙனம் மணம்புரிவோர் அக்கலியாணம் நிகழும் காலத்தே மாள்வரென்பதை,

''மணவணி யணிந்த மகளி ராங்கே
பிணவணி யணிந்துதங் கொழுநரைத் தழீஇ
உடுத்தவாடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்''

என்னும் வெற்றிவேற்கை யடிகளானும்,

''மணமகனே பிணமகனாய் மணப்பறையே பிணப்பறையாய்
அணியிழையார் வாழ்த்தொலிபோ யழுகை யொலியாய்க்கழி
கணமதனிற் பிறந்திறுமிக் காயத்தின் வரும்பயனை யக்
உணர்வுடையார் பெறுவருணர் வொன்றுமிலர்க் கொன்றுமிலை''

என்னும் திருவிளையாடற் புராணம்- பழியஞ்சினபடலம் 40ஆம் செய்யுளானு முணர்க. இந்நிலையற்ற தன்மையை யுணர்ந்து, ''உய்ந்துபோம் ஆறேவலிக்குமாம் மாண்டார் மனம்'' என்றதால், அவ்வுணர்ச்சி யுடையாரே மாட்சிமைப் பட்ட அறிவினையுடையாரென்பதும், அஃதின்றி, தேகம் நிலைத்ததென் றெண்ணி மகிழ்வோர் புல்லறிவாள ரென்பதும் விளங்கும். பிணப்பறை - நெய்தற்பறை; இது துக்க காரியங்கட்கு முழக்கப்படுவது. பின்றை - என்பது அடுத்த சமையத்தை உணர்ச்சி நின்றது. 'ஒலித்தலும்' என்பதில், உம்- எதிர்மறைப் பொருளது. மன்றம்- என்பதில், அம்- சாரியை, மன்று- மணவினைகுறித்துச் சுற்றத்தார் - உறவினர் முதலாயினார் கூடிய கூட்டம். 'வலிக்குமாம்' என்பதில், ஆம்-அசை. மாண்டார்- இறந்தகால வினையா லணையும் பேர்; இதில், மாண்- என்னும் பண்படி பகுதி; ஆர்- விகுதி, ட்- இடைநிலை. இச்சொல், 'இறந்தார்' என்று பொருள் படும்போது இதன் பகுதி- 'மாள் என்பதாம். (௫.)

24. *சென்றே யெறிபவொருகால் சிறுவரை*
நின்றே யெறிப பறையினை- நன்றேகாண்
முக்காலைக் கொட்டினுண் மூடித்தீக்
கொண்டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து.

(இ-ள்) (உலகத்தில் தோன்றிய மனிதர்கள் இறந்து கொண்டே யிருப்பார்கள்; அங்ஙனம் இறக்கும்போதெல்லாம் பறைமுழக்குவோர்), சென்று - (அவர்கள் இறந்த விடத்திற்குப் போய், பறையினை- பிணவாத்தியத்தை, ஒருகால்- ஒருமுறை, எறிப- (முதலில் அடித்து) முழக்குவார்கள், (பின்னர்), சிறுவரை நின்று- சிறிதுநேரம் (அப்பறையை முழக்காமல்) சும்மாவிருந்து, எறிப- (இரண்டாம் முறையாகக்) கொட்டுவார்கள், (அதன்மேல் மூன்றாமுறையாக முழக்கத் தொடங்கி), முக்காலைக் கொட்டினுள் அந்த மூன்றாவது நேரத்தில் எழும் வாத்திய வொலிக்குள்ளே, செத்தாரை- அங்ஙனம் இறந்தவர்களை, சாவார் - பின்னர் இறக்க நின்றவர்கள், மூடி-(குளிப்பாட்டி அலங்கரித்துப் போர்வையால்) மறைத்து, (பாடையிலேற்றி), சுமந்து - (தோளில்) தாங்கிக் கொண்டு, தீகொண்டு- (அவர் உடம்பினை எரித்தற்கு) நெருப்பையும் உடனெடுத்துக் கொண்டு, எழுவர்- சுடுகாடு நோக்கிப் புறப்பட்டுப் போவார்கள். நன்றேகாண்- (இத்தகைய நிலையாமைச் செயல்களையுடைய இவ்வுலகவியற்கை) நன்றாயிருக்கின்றது; எ-று.

உலகத்தில் மனிதர் இறந்துகொண்டே யிருப்பார்கள்; அங்ஙனம் இறக்கும்போ தெல்லாம் பறைமுழக்குவோர், அவர் இறந்த வீடங்கட்குச் சென்று மூன்று முறையாகப் பிணப்பறையை முழக்குவார்கள். மூன்றாம் முறை அவரால் கொட்டப்படும் வாத்திய முழக்கத்துடன் இறந்தவர்களை, பின்னர் இறக்க நின்றவர்கள் போர்வையால் மூடிப் பாடையிலேற்றிச் சுமந்து சுடுதற்கு நெருப்புடன் சுடுகாடு நோக்கிச்

செல்வர்; இத்தகைய செயல்களையுடைய இவ்வுலகவியல் மிகக் கொடிது என்பது இதன் கருத்து.

இங்ஙனம் மனிதர் இறக்குந்தன்மை கூறியதனால் யாக்கை நிலையாமையும், விரைந்து அறஞ்செய்யவேண்டு மென்பதும் பெறப்படும். பிணந்தூக்கிச் செல்பவரும் பின்னர் மடிபவரே யாதலின், அவர்களையும், 'சாவார்' என்றார் முனிவர். இதனால் உலகத்தில் நிலைத்திருப்பவர் எவருமிலர் என்பது துணியப்படும். மனிதர் இறந்தவிடத் திற்குப் பறைமுழக்குவோர் சென்று முதலில் பேரொலி யுண்டாக ஒருமுறை பிணவாத்தியத்தைக் கொட்டி முழக்கி விட்டுச் சிறிதுநேரம் நிறுத்திவைப்பார்கள்; பின்னர் இரண்டாம் முறையாக முழக்கிக் கொஞ்சநேரம் நிறுத்தி வைத்து அதன்மேல் மூன்றாம் முறையாக மிக்க முழக்க முண்டாகுமாறு கொட்டுவார்கள். அப்போதுதான், பிணம் ஆங்குக் கூடிய மனிதர்களால் இடுகாட்டிற்குக் கொண்டு செல்லப்படும். இஃதன்றி மனிதர் இறந்த விடத்தில் வாத்தியக்காரர்கள் முதலிற் சென்றவுடன் மிக்க தொனி யுண்டாகுமாறு பறையை முழக்குவார்கள்; பின்னர்ப் பிணத்தைக் குளிப்பாட்டுதற்கு நன்னீர் கொண்டு வரும் போது ஒரு முறையும், சுற்றத்தாரால் அப்பிணம் சுடுகாட் டிற்குக் கொண்டு செல்லப்படும்போது ஒருமுறையும் அங்ஙனமே பெருமுழக்க முண்டாகக் கொட்டுவார்கள். இந்த மூன்று முறை வாத்திய முழக்கங்களையும் முனிவர் இங்குக் குறித்தார் எனினுமாம்.

சென்றே நின்றே என்பவற்றில் ஏகாரங்கள்- அசை நிலையில் வந்தன. எறிப- பலர்பால் வினைமுற்று; ப- பலர் பால் விகுதி; எதிர்காலங் காட்டிநின்றது. காலத்தை யுணத்தும் கால், காலை என்னுஞ் சொற்கள், 'முறை' என்ற பொருள் பயந்து நின்றன. வரை- அளவு; இஃதிங்கு நேரத்தையுணர்த்தி நின்றது. நிற்றற் பொருள்தரும், 'நின்று' என்னுஞ்சொல் வாத்தியமுழக்குந் தொழிலை நிறுத்தியிருந்ததை விளக்கி

நின்றது. 'எழுவர்' என்பது எழுந்து நிற்பர்' என்னும் பொருள் தருவதேனும் இங்குப் 'போவர்' என்னும் பொருள்பயந்து நின்றது. உயிர்நீங்கிய உடலை, 'செத்தார்' என உயர்திணை யாகக் கூறியது இழிவுபற்றி வந்த திணைவழுவமைதியாம். நன்றே- இகழ்ச்சி; இதனீற் றேகாரம், உடன்படாமைப் பொருளதாய் 'தீது' என்னுங் குறிப்புணர்த்தி நின்றது.

''நன்றீற் றேயு மன்றீற் றேயு
மந்தீற் றோவு மன்னீற் றோவு
மன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும்''

என்னும் (தொல்-சொல்- இடை 34) சூத்திரத்தா லிஃதுணரப் படும். காண் - அசை; இனி, 'நன்றேகாண்' என்பதற்கு, 'நன் றாக ஆராய்ந்துபார்' எனப் பொருளுரைப்பினும் அமையும். (ச)

25. *கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்*
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க்கண்டு -
மணங்கொண்டீ
ண்டுண்டுண்டுண் டென்னு முணர்வினாற் சாற்றுமே
டொண்டொண்டொ ணென்னும் பறை.

(இ-ள்) (உலகத்தில் தினந்தோறும் ஆயுள் முடிந்தோர் இறக்க, அச்சாவு குறித்துச் சுற்றத்தாரழ அவர்களின் பிணங் களைச் சில உறவினர் சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்று கொண்டே யிருப்பர்; இச்செய்கை நிகழ்வதைப் பார்த்தும் அறிவில்லாதவன் மண முதலியவற்றை செய்து உலகவாழ்வு நிலைத்திருக்குமென்று நினைத்து மகிழ்வான். ஆதலின், அங்ஙனம்), சுற்றத்தார்- பந்துவர்க்கத்தினர், கணம்கொண்டு- கூட்டத்தைக் கொண்டு - (கூட்டங்கூடி), கல் என்று அலற - கல்லென்றஓசை யுண்டாம்படி வாய்திறந்து அழ, பிணம் கொண்டு- இறந்தபிணங்களை எடுத்துக்கொண்டு, (போய்), காடு- சுடுகாட்டில், உய்ப்பார்- சேர்க்கின்றவர்களை,

கண்டும்- (கண்கூடாகப்) பார்த்திருந்தும், (யாக்கைநிலை யின்மையை உணராமல்), மணம்கொண்டு - (பெண்ணைக்) கலியாணம் செய்துகொண்டு, ஈண்டு- இவ்வுலகத்தில், (நிலைத்த இன்பமானது) உண்டு உண்டு உண்டு என்னும்- உள்ளது உள்ளது உள்ளது என்று நினைத்து மயங்குகின்ற, உணர்வினான்- சிற்றறிவுடையவனுக்கு, (அவ்வாறு சிலரால் இடுகாட்டுக்குக் கொண்டு போகப்படும் பிணங்களுக்குப் பறையரால் முழக்கப்பட்டு) டொண் டொண் டொண் என்னும்- டொண் டொண் டொண் என்று ஒலிக்கின்ற, பறை- பிணப்பறையே, சாற்றும்- (மனிதர் தேகத்தின் நிலையின்மை யைக்) கூறித்தெரிவிக்கும்; (ஆதலின், எவரும் மனிதர்வாழ்வு நிலத்ததென்று கருதலாகாது;) எ-று.

இவ்வுலகில் சுற்றத்தார்கதற இறந்த பிணங்களைச் சிலர் எடுத்துக் கொண்டுபோய்ச் சுடுகாட்டில் சேர்த்துக் கொண்டே யிருப்பார். இச்செய்கை நாடோறும் நடந்து வருவதைப் பார்த்தும் மூடனாயிருப்பவன் உலக வாழ்க்கை நிலையற்ற தென்பதை யுணராமல் தனக்கு விருப்பமான பெண்ணை மணந்து மகிழ்ந்திருப்பான்; அத்தகையனுக்கு, அச்சாவுகளின் பொருட்டுப் பறையறைவோரால் முழக்கப் படும் மரணவாத்தியமே மனிதர்யாக்கை நிலையற்ற தென்பதை யுணர்த்தும் என்பது இதன்கருத்து.

சாப்பறையானது மனிதரின் மரணத்தையே விளக்கக் கூடியதாதலின் அதனொலியைக் கேட்டவுடன், யாக்கை நிலைத்திருக்குமென்று கருதியிருக்கும் மூடனுக்கும் 'மனிதர்க்குச் சாவுண்டு' என்னும் நினைவுண்டாகும். ஆதலின், அஃதன்னவனுக்கு யாக்கை நிலையாமையைச் சாற்றும் என்றார் முனிவர்; இங்ஙனம் 'பறை சாற்றும்' என்று கூறியது தற்குறிப்பேற்ற வணி; அப் பறை முழக்கத்தால் மனிதர்வாழ்வு நிலையற்றதென்பதை அறிந்து கொள்ளலாம் என்பது இதன்கருத்து. இங்ஙனங் கூறியதனால், எவரும்

உலகவாழ்க்கை நிலையற்றதென்பதை யுணர்ந்து புண்ணியத்தைத் தேடிக் கொள்ள வேண்டுமென்பது பெறப்படும்.

கணம்- வடசொல். சுற்றத்தார்- ஒருவனுக்கு நன்மை தீமையான காரியங்கள் நடக்கும்போது வந்து அவனைச் சுற்றிநிற்பவர். கல், டொண் டொண் டொண் என்பன- ஒலிக் குறிப்புக்கள். இவற்றுள் கல்- அழுமோசைக்குறி, மற்றவை- பறையோசைக் குறிகள். 'உய்ப்பார்க்கண்டும்' என்பதில் (தொல்-எழுத்-தொகை- 15,) ஆம் சூத்திரவிதியால் ஐயுருபு தொக்குக் ககரவொற்று மிக்கது. உண்டு உண்டு உண்டு- துணிவுபற்றி ஒருசொல் மும்முறை அடுக்கிவந்தது; (தொல்- சொல்-எச்-15) ஆம் சூத்திரம்பார்க்க. உணர்வினாற் சாற்றும்- நான்காம் வேற்றுமைத் தொகை. 'சாற்றுமே' என்பதில் ஏ- பிரசித்தியை யுணர்த்தி நின்றது. (ரு)

26. *நார்த்தொடுத் தீர்க்கிலெ னன்றாய்ந் தடக்கிலென்*
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
தோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டக் கால்.

(இ-ள்) (மனிதர் உடம்பு நிலையற்றதா யிருந்தும் உயர்வு தாழ்வுகளை அடையக் கூடியதாகத் தோற்றுகின்றது; எனினும் அதன் நிலையற்றதன்மையை ஆராயுமிடத்து அதற்கு அவ்விரண்டு மில்லையென்பது விளங்கும். அஃதங்ஙனமிருந்தும் 'சிலர் அதனிடத்து மிக்க அன்பு செலுத்துகின்றனர்; அதன் தன்மையே அவ்வாறிருப்ப அதிலுள்ள உயிர்நீங்கி அது பிணமான பின்னரும் அதற்குப் பிரேதபூசை முதலிய மரியாதைகளைச் செய்கின்றனர்; இவர் இங்ஙனம் செய்தல் அறிவற்ற செயலாகும்); தோல்பையுள் நின்று- தோலினால் செய்யப்பட்ட பையாகிய உடம்பில் தங்கி, தொழில்- பற்பல தொழில்களை, அற-மிகுதியாக, செய்து- இயற்றி, ஊட்டும்- (அத்தொழில்களின் பயன்களை நிலையற்ற அத்தேகத்திற்கும் தனக்கும்) ஊட்டுகின்ற, கூத்தன்-

(உயிராகிய) கூத்தாடி, புறப்பட்டக்கால்- (அதை விட்டு) வெளிச் சென்றுவிட்டால் (அது பின்னும் மிக இழிந்த தன்மையை அடைந்து விடும். அத்தகைய அந்த உயிரற்ற உடற்பிணத்தை, மனிதர்) நார்தொடுத்து ஈர்க்கில் என்- கயிற்றினாற் கட்டி நன்காட்டுக்கு இழுத்துக் கொண்டு போனாலென்ன?, நன்று ஆய்ந்து- நன்றாகச் சுத்தஞ்செய்து, (தூக்கிக்கொண்டுபோய்), அடக்கில் என்-குழியில் அடக்கஞ் செய்தாலென்ன?, பார்த்த உழி- கண்டவிடத்தில், பெய்யில் என்- எறிந்துவிட்டா லென்ன?, பல்லோர்- (அதைப் பார்த்த) பலர், பழிக்கில் என்- நிந்தித்தா லென்ன?, (இவற்றாலெல் லாம் அதற்குச் சிறப்புமில்லை, இழிவுமில்லை; ஆதலின், மனிதர், யாக்கையின் எந்நிலையிலும் அதன்மீது பற்றுவைத் தல் கூடாது; அதன் அபிமானத்தை யொழித்து நிலைத்த பேரின்பத்தைத் தருவதாகிய புண்ணியத்தைத் தேடிக் கொள்ளுதல் வேண்டும்); எ-று.

மனிதர் யாக்கை நிலையற்றதா யிருந்தும் உயிருட னிருக்கும்போது உயர்வுதாழ்வுக் கிடமாவதுபோல் விளங்கும். எனினும் அதன் நிலையாமையை ஆராயும்போது அதற்கவற்றில் எதுவுமில்லை யென்பது விளங்கும். அஃதங்ஙன மிருந்தும் அறிவற்றார் சிலர் அது நிலைத்திருக்கு மென்று நினைத்து அதன்மீது மிக்க பற்றுடையவராயிருக் கின்றனர்; அதன்நிலையே அங்ஙன மிருப்ப, அது நன்மை தீமைகளை அனுபவிப்பது போலத் தோற்றுமாறு செய்யும் உயிர்நீங்கிய பின்னரும் அதில் ஏதோ உயர் விருப்பதாக நினைத்து அதற்கு அம்மனிதர் சில மரியாதைகளைச் செய் கின்றனர். இவர் செய்கை மிக்கபேதைமை யுடையதாகும்; உயிரற்ற பிணத்திற்கு மனிதர் சிறப்புச்செய்து அதனை அடக்கஞ் செய்தாலும் அஃதெவ்வித மேன்மையையும் அடையமாட்டாது; அதனைக் கயிற்றிற் கட்டி யிழுத்துக் கொண்டுபோய் இடுகாட்டிற் சேர்த்தாலும், எதிர்ப்பட்ட எந்தத் தாழ்ந்த விடத்தில் எறிந்துவிட்டாலும் அதற்கிழி வொன்றும் உண்டாகாது. ஆதலின் யாக்கையின் எந்நிலை யிலும் அதனிடத்து மனிதர் பற்றுவைக்கலாகாது; அதன்

நிலையாமையையும் இழிந்த தன்மையையும் நோக்கி அஃதுள்ள போதே என்று மழியாப் பேரின்பத்தை அடைதற்குக் காரணமாகிய அறத்தைத் தேடிக்கொள்ளுதல் வேண்டும் என்பது இதன் கருத்து.

இச்செய்யுள், யாக்கை நிலையாமையை உணராமல் உயிரற்ற பிணத்திற்கும் சிறப்புச்செய்யும் பேதையரை நோக்கிக் கூறியதாகும். இங்ஙனம் கூறியதனால் யாக்கை அழிவுறத்தக்கதென்பதும் எந்நிலையிலும் அது மனிதரால் எவ்வித தகவுடையதாகவும் கருதற்பாலதன்றென்பதும் விளங்கும். உயிர் நீங்கியபின் உடலுக்கு உயர்வு தாழ்வுகள் இல்லையென்றதனால், உயிரிருக்கும்போது அவையுள வென்பதும், இருப்பினும், அவ்வுடம்பு நிலையற்றதாதலின் அவையும் இருப்பனபோல் காணப்பட்டு அறிஞர் ஆராயுமிடத்து இல்லாமற் போகத்தக்கன வென்பதும் பெறப்பட்டன. ஆதலின், இதனோடு உயிருள்ள உடம்பும் இழித்துக் கூறப்பட்டது. 'நார்த்தொடுத்தீர்க்கிலென்' 'பார்த்துழிப் பெய்யிலென்' 'பல்லோர் பழிக்கிலென்' என்பன 'இழிவில்லை' என்பதையும் 'நன்றாய்ந்தடக்கிலென்' என்பது 'உயர்வில்லை' என்பதையும் விளக்கிநின்றன. கூத்தர்கள் பல வேடங்களைத் தரித்து அவ்வவ் வேடங்கட்குத் தக்கவாறு பற்பல தொழில் களைச் செய்வது போல, ஆத்மாவும் பல தேகங்களை எடுத்து அவ்வவ்வுடம்புகட்கேற்றபடி பல்வேறு தொழில்களைப் புரிதலால் அது கூத்தனாகவும், தோற்பையானது வாயுவை வெளியில்விட்டு உள்வாங்குதல் போல, உடம்பும் மூச்சினை வெளிவிட்டு உள்வாங்குதலால் அது தோற்பையாகவும் உருவகிக்கப்பட்டன. இங்ஙனம் உருவகப்படுத்தியது உருவகவணியாம். உடம்பினைத் தோற்பையென்பது, ''உறுப்புக்கள்தா முடன்கூடி யொன்றாயிருந்த பெரும்பை'' என்ற குண்டலகேசி ஆசிரியர் கூற்றானும் பெறப்படும். 'பார்த்த உழி' என்பது இடத்தின் இழிவுகுறித்து நின்றது; இதனை 'உழிபார்த்து' என மொழிமாற்றி, அதற்கு

'இடம் பார்த்து' எனப்பொருள் கோடலுமாம். இனி 'பார்த் துளிப் பெய்யில் என்' எனப் பாடங்கொண்டு, 'பூமியைத் தோண்டிப் புதைத்தாலென்ன?' எனப் பொருளுரைப்பாரு முளர்; இதனை இங்ஙனங் கொள்ளுமிடத்து பார்+துள்ளி- எனப் பிரித்தல் வேண்டும்; 'துள்ளி' என்பதற்கு 'தோண்டி' எனப்பொருள் கொள்வர் அன்னார். அப்பொருள் அத்துணைச் சிறப்பன்றென்க. 'நன்றாய்ந்து அடக்கிலென்' என்பதற்கு 'உடலை நன்றாக எரித்துச் சுத்தஞ்செய்து எலும்பை எடுத்து நல்லிடத்திற் புதைத்து மறைத்தா லென்ன?' எனப் பொருள் கூறுவர். ஒருசாரார்.

ஈர்க்கில், அடக்கில், பெய்யில், ப்ழிக்கில் என்பன- எதிர்கால வினையெச்சங்கள். 'எவன்' என்னும் குறிப்பு வினைமுற்று இடைகுறைந்து, 'என்' எனநின்றது. 'பார்த்த உழி' என்பது 'பார்த்துழி' எனத் தொகுத்தலாயிற்று; 'பார்த்த' என்பதன் ஈற்றுகரந் தொக்கது; உழி- இடம். 'பல்லோர்' என்பதில் ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாயிற்று;

''ஆவோ வாகும் பெயருமா ருளவே
யாயிட னறிதல் செய்யு ளுள்ளே''

என்னும் (தொல்-சொல்-பெய-41) ஆம் சூத்திரம் பார்க்க.

''உருவக வுவமையில் திணைசினை முதல்கள்
பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே''

என்னும் (நன்-பொது-59) ஆம் சூத்திரவிதிப்படி, உயிர், உருவகத்தில் 'கூத்தன்' என உயர்திணைச் சொல்லாற் கூறப் பட்டது. இச்செய்யுள்களின் முதலிரண்டடிகளில் அமைந்த எதுகை, ஆசிடையிட்ட எதுகையாம்; மூன்றாமடியிலுள்ளது இனவெதுகை. (சூ)

27. படுமழை மொக்குளிற் பல்காலுந் தோன்றிக்
கெடுமிதோர் யாக்கையென் றெண்ணித்- தடுமாற்றந்
தீர்ப்பேம்யா மென்றுணருந் திண்ணறி வாளரை
நேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல்.

(இ-ள்) (யாக்கை நிலையாமையைக் கருதி அறிஞர் அஃதழியுமுன் அறத்தைத் தேடிக்கொள்ளுதல் வேண்டும்; அங்ஙனம் தேடத் தொடங்கி உடம்பினை நோக்கி), மழை- நீரிலே, படு- உண்டாகின்ற, மொக்குளின்- குமிழியைப் போல, பல்காலும்- பலமுறையும், தோன்றி- உண்டாகி, கெடும்- (உடனே) அழிந்து போகு மியல்பினையுடைய, ஓர் யாக்கை இது என்று- ஓருடம்பிது வென்று, எண்ணி- நினைத்து, தடுமாற்றம் - (அவ்வுடம்பை எடுத்தெடுத்துப் பல பிறவிகளிலே) தடுமாறுவதை, யாம்- நாம், தீர்ப்பேம்- நீக்கிவிடுவோம், என்று உணரும்- என்று அறிந்து அப்பிறவி கள் நீங்குதற்கான அறத்தைச் செய்கின்ற, திண்- உறுதியனை, அறிவாளரை - விவேகமுடையவர்களை, நேர்ப்பார் - ஒப்பவர்கள், நீள் நிலத்தின்மேல் - இப்பெரிய பூமியில், யார் - எவருளர்? (யாருமில்லை; அவரே மனிதரிற் சிறந்தவ ராவார்); எ-று.

உடம்பின் நிலையற்ற தன்மையை யுணர்ந்து விரைந்து அறஞ்செய்தல் அறிஞர்க் குரியதாதலின், அவ் வுடம்பினை, நீர்க்குமிழி போல் தோன்றிமறையும் அற்ப மானதேகமிது வென்றெண்ணி அதன் பற்றினை யொழித்துப் பிறவிகளை யெடுத்துழலும் தடுமாற்றத்தைத் தீர்ப்போ மென்று அதற்குரிய அறத்தைச் செய்வோரே இவ்வுலகில் மனிதரிற் சிறந்தவராவ ரென்பது இதன்கருத்து.

நீரில் தோன்றும் குமிழியானது சிறிதுநேரம் கழிவதற் குள் அழிந்துவிடும்; அதுபோலவே மனிதர் எடுக்கும் உடம்பும் விரைந்தொழியும்; ஆதலின் அவ்வுடம்பிற்கு நீர்க்குமிழி உவமையாயிற்று; இங்ஙன மமைந்தது உவமை

யணி. இங்ஙனம் நீர்க்குமிழிபோல் பிறந்தும் இறந்தும் அழிதல் உடம்பின் இயற்கையாதலின், அதனை விளக்கற்கு, ''மொக்குளிற் பல்காலுந்தோன்றிக் கெடுமிதோர் யாக்கை யென் றெண்ணி'' என்றார் முனிவர்; இங்குக்கூறியவாறு தேகம் நீர்க்குமிழிபோல் தோன்றி மறைவதென்பது, சீவக சிந்தாமணி -2754ஆம் செய்யுளில் ''மின்னு மொக்குளுமென'' என்று கூறப்பட்டிருத்தலானுந் துணியப்படும். யாக்கை நிலையாமையை உணர்ந்து அறஞ்செய்வோரே உயர்ந்த அறிவினரும், மனிதருட் சிறந்தோருமாகலின், அவரைத் திண்ணறிவாள ரென்றும், அவரை நிகர்ப்பாரெவரு மில ரென்றும் கூறினார் முனிவர். இங்ஙனம் இத்தகையரை உயர்த்திக் கூறியதனால் உலகத்தில் உயர்வடைய விரும்பு வோரனைவரும் இவ்வுணர்ச்சி யுடையாராய் அறமியற்றுதல் வேண்டுமென்பது பெறப்படும். தடுமாற்றம் - நிலை கெடுதல்; அதாவது- இன்பமிக்க ஓரிடத்தில் நிலைத்திராமல் பற்பல பிறவிகளை யெடுத்தலைதலாம்; தடுமாற்றந் தீர்த்தலாவது - துறவறம்பூண்டு தவஞ்செய்து, அதனால், அத்தடுமாற்றமுள்ள பிறப்புக்களை யொழித்து முத்திவீட்டில் நிலைபெறுதலாம்.

'மழைபடு மொக்குள்' என மொழிமாற்றிப் பொருள் கௌ்க; இங்ஙனங் கொள்ளுதல் மொழிமாற்றுப் பொருள் கோ ளெனப் படும்; இது,

> ''மொழிமாற் றியற்கை
> சொன்னிலை மாற்றிப் பொருளெதி ரியைய
> முன்னும் பின்னுங் கொள்வழிக் கொளா அல்''

என்னும் (தொல்-சொல்-எச்.13.) ஆம் சூத்திரவிதியால் அமையும். மழை-நீர்; இதனை, ''பயமழை யுதகந்தோயம் பயசுசம் பரம் பானீயம்............'' என்னும் சூடாமணி நிகண்டு தெய்வப்பெயர்த் தொகுதி 54ஆம் செய்யுளடியில், நீருக்கு, மழை- என்னும் பெயர் கூறப்பட்டிருத்தலால்

உணர்க. மழை- நீருக்கு ஆகுபெயர். மழை படு- ஏழாம் வேற்றுமைத் தொகை; இனி, நீரிற்குமிழி தோன்றுதல் பெரும்பான்மையும் மழை பெய்யுங்காலத்தே நிகழுமாத லின், 'மழைபடு' என்பதை மூன்றாம் வேற்றுமைத் தொகை யாகக் கொண்டு, 'நீர்' என்னும் ஒருசொல்வருவித்து 'மழை யால் நீரில் தோன்றுகின்ற' என்று பொருள் விரிப்பினுமாம்; இங்ஙனம் மொழிமாற்றாது 'படு மழைமொக்குள்' என்பதை இருந்தவாறே வைத்து, அதற்கு 'பெய்கின்ற மழைநீரில் உண்டாகின்ற குமிழி' எனப் பொருள் கோடலுமொன்று; இங்ஙனங்கொள்ளுமிடத்து, படுமழை- வினைத்தொகை; மழைமொக்குள்- ஏழா வேற்றுமையுருபும் பயனு முடன் தொக்க தொகை. முன்னுரைத்த இருவகைகளுள்ளும், படுமொக்குள்- வினைத்தொகை. ஓர்- என்பது உடம்பின் இழிவுகுறித்து நின்றது. யார்- என்ற வினாவினைக் குறிப்பு முற்று இன்மைக்குறித்து நின்றது. தடுமாற்றம்- தொழிற் பெயர். மொக்குள்- முகுளம் என்னும் வடசொற்றிரிபு. மொக்குளின்- என்பதில், இன்- என்னும் ஐந்தனுருபு ஒப்புப் பொருளது. (எ)

28. *யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர்தாம் பெற்ற*
யாக்கையா லாய பயன்கொள்க- யாக்கை
மலையாடு மஞ்சுபோற் றோன்றிமற் றாங்கே
நிலையாது நீத்து விடும்.

(இ-ள்.) யாக்கை - மனிதர் தேகமானது, மலை- பர்வதத்தின்மேல், ஆடும்- அசைந்துதிரிகின்ற, மஞ்சுபோல்- மேகத்தைப்போல், (அதாவது, அம்மேகம் தோன்றி விரைவில் மறைந்து விடுவதுபோல), தோன்றி- (உயிரோடு சேர்ந்து இன்னநேரத்தில் தோன்று மென்னும் நியமமின்றி, மனிதரால் நிச்சயிக்க முடியாத ஏதோ ஒரு நேரத்தில்) பிறந்து, மற்று- பின்னர், ஆங்கே- அவ்வாறே, (அதாவது கால நியம மின்றிப் பிறந்தது போலவே), நிலையாது - நிலைபெறாமல், (ஏதோ ஒரு சமயத்தில்), நீத்துவிடும் (அவ்வுயிரைவிட்டுப்)

பிரிந்து மறைந்து விடும், (ஆதலின்), யாக்கையை- அவ் வுடம்பை, யாப்பு உடைத்து ஆ- உறுதியுடையதாக, பெற்றவர்- (ஊழ்வினையால்) அடைந்தவர்கள், தாம்பெற்ற- தாங்கள் அங்ஙனம் அடைந்த, யாக்கையால்- அவ்வுடம் பினால், ஆய- அடைதற்குரிய, பயன்- (பேரின்பமாகிய) பேற்றினை, கொள்க- (அவ்வுடம்பிருக்கும் போதே) தேடிக் கொள்வாராக- எ-று.

மானிடதேகமானது, மலைமேல் தோன்றி மறையும் மேகத்தைப் போலப் பிறந்திறந் தொழியும்; ஆதலின், அவ் வுடம்பினைப் பெற்றார் அஃதழியுமுன் அதனால் தேடிக் கொள்ளத் தக்கதாகிய முத்திப் பயனை அடைவாராக என்பது இதன் கருத்து.

மலையின்மீது மேகமானது, 'இன்னகாலத்தில் இவ்விதம் தோன்றும்' என்று மனிதரால் அறியப்படுதலின்றி ஏதோ ஒருநேரத்தில் தோன்றி அங்ஙனமே மற்றொரு நேரத்தில் விரைந்து மறைந்து விடும்; அதுபோலவே மனிதர் உடம்பும்தோன்றி மறையும்; ஆதலின் அதற்கு அம்மஞ்சு உவமையாகக் கூறப்பட்டது; இஃதுவமையணி. யாக்கை இங்ஙனம் தோன்றி மறைவதெனினும், மறையுங்காலம் நேரும்வரையிலும் நிலைபெறுவதாயிருக்கும்; அதிலும் சிலருக்கு உடற்குறையின்றியும், நோயின்றியு மிருக்கும்; அவர் நினைத்த காரியத்தைச் செய்து முடிக்கும் ஆற்றலுடைய தாயுமிருக்கும்; அஃதிவ்வகை நிலைகளையடைந்து உறுதிப் பாட்டு டனிருக்கும்போது அதனைப்பெற்றார் அதனுதவி யால் முத்திக்குரிய பேரறங் களைத் தேடிக்கொள்ளலாம். அங்ஙனம் பெறாவிடின் அவ்வுடம் பழிந்தபின் பெறுதல் இயலாது. ஆதலின் முனிவர், அதன் நிலையாமையை விளக்கி, அஃதுறுதி பெற்றிருக்கும் போதே அதனைப் பெற்றார், அதனாலாம் முத்திப் பயனை அடையுமாறு இதில் வற்புறுத்திக்கூறினார். தோன்றியபொழுதே இறப்பாரும்,

பிறந்தது முதல் இறக்கும் வரை பிணியிடைப்படுவாரும், உடற்குறையுள்ளாரும் யாக்கைப்பயன் கொள்ள இயலாமல் அதனைவிடினும், மேற்கூறிய வகைகளான் அமைந்த உடற்கட்டுடையார் விட லாகாதென்பது தோன்றவே, ''யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர்.... பயன்கொள்க'' என்றார் முனிவர். யாப்பு- கட்டு, தொழிற்பெயர்; அஃதிங்கு ஆகுபெயராய் அதனாலாம் உறுதியின் மேனின்றது; உறுதி- மேற்கூறிய உடற்குறை யின்மை, பிணியின்மை, கருதியது முடிக்கும் ஆற்றல் முதலியனவாம். இனி 'யாப்பு' என்பதை- 'சேர்க்கை' எனக் கொண்டு, ''யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர்'' என்ப தற்கு, 'உடம்பைச்சார்தல் உடைத்தாகப் பெற்றவர்' என்று பொருள்கொள்ளினும் அமையும்; 'உடம்பு சிறிதுகாலம் இருத்தலைப்பெற்றார்' என்பது இதன் திரண்டபொருள். மனிதர் உடம்பின்றித் தவஞ்செய்தல் இயலாது; தவமின்றி முத்திபெறல் முடியாது; அதனால் யாக்கையின் பயன் முத்தியென்பது துணியப்படும்.

யாக்கை - இதில், யா- பகுதி, ஐ - விகுதி, கு- சாரியை, ககர வொற்று மிக்கது விகாரம். ஆய- ஆகிய என்பதன் இடைக்குறை; இனி இதனை 'ஆய' என்றேகொண்டு, இதில், ஆ- பகுதியென்றும், ய்- இறந்தகால இடைநிலை யென்றும், அ- பெயரெச்ச விகுதியென்றும் கொள்ளலாம். மற்று- வினைமாற்று; அசை- யெனினுமாம். அவ்வாறே என்பது அவ்விதமே என்று விதம் என்னுமோர் பொருள் நிலையைச் சுட்டி நிற்றலின் 'ஆங்கு' என்பது உவமைப் பொரு ளுணர்த்திற் றென்க; அசையெனினுமாம்; இதிலுள்ள ஏ- தேற்றம்; அசையெனவுங் கொள்ளலாம். 'நீத்து விடும்' என்பதில், விடு- துணிவுப் பொருளுணர்த்தும் விகுதி. *(அ)*

29. *புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி*
இன்னினியே செய்க வறவினை- இன்னினியே
நின்றா னிருந்தான் கிடந்தான்றன் கேளலறச்
சென்றா னெனப்படுத லால்.

(இ-ள்.) (மனிதர் உலகத்தில் நாடோறும் இறப்பது இயற்கையாயிருக்கின்றது; அப்படி இறப்பவர்களின் தன்மையைப் பற்றிப் பலரும் பலவிதமாகப் பேசுவதும் வழக்கமாயிருக்கின்றது; அங்ஙனம் பேசுவோரால், இறக்கும் ஒவ்வொருவனும்), இன்னினியே- இப்பொழுதுதான், நின்றான்- நின்றுகொண்டிருந்தான், இருந்தான்- உட்கார்ந்திருந்தான், கிடந்தான்- படுத்திருந்தான், (நமக்குமுன் இங்ஙனமிருந்தவன் உடனே இறந்து உடம்பைப் பிணமாக்கி இங்கேபோட்டு விட்டு), தன்கேள் அலற- தன்சுற்றத்தார் (தன்பிரிவுகுறித்துக்) கதறி அழும்படி, சென்றான்- (மறைந்து) போய்விட்டான், எனப்படுதலால்- என்று கூறப்படுதலாலே, புல்நுனிமேல்- புல்லினது நுனியில், (விடியற்காலத்திலிருக்கின்ற), நீர்போல்- பனிநீரைப்போல, நிலையாமை- (அவ்வுடம்பினது) நிலையற்ற தன்மையானது, (ஆகும்), என்று எண்ணி- என்று நினைத்து, (அஃதழியுமுன்), இன்னினியே- இப்பொழுதே, அறவினை- தருமகாரியத்தை, செய்க- (உலகத்திலுள்ள ஒவ்வொருவரும்) செய்து உயர் கதிக்குச் செல்வாராக எ-று.

உலகத்தில் மனிதர் இறந்து கொண்டேயிருத்தலால், அங்ஙனம் இறக்கும் ஒவ்வொருவனையும், எஞ்சியிருப்பவர் பார்த்து 'இப்பொழுதுதான் இவன் நின்றான், இருந்தான், படுத்திருந்தான்; இவ்வளவு விரைவில் இறந்து விட்டானே' என்று வியந்து கூறுதலின் மனிதர் யாக்கை புல்நுனியில் தோன்றும் பனிநீர்போல் நீடித்துநில்லாமல் மறைந்துவிடத் தக்கதென்று ஒவ்வொருவரும் அதன் நிலையாமையைச் சிந்தித்து உடனே அறஞ்செய்தல் வேண்டு மென்பது இதன் கருத்து.

காலையில் புல்லின் நுனியில் துளியாகத் தோன்றும் பனிஜலமானது சூரியோதயங் கண்டவுடன் வறண்டு மறைந்துவிடும்; அதைப்போல் மனிதர் யாக்கையும்

தோன்றுங்காற் றோன்றி முடிவுகாலம் குறுகலும் ஒழியும்; ஆதலின் அதற்கு அந்நீர் உவமையாக உரைக்கப்பட்டது; இஃதுவமையணி. ஒருவன் இறந்தபோது பலரும் அவன் தன்மையைப் பற்றிப் பேசத்தொடங்கு மிடத்துச் சிலர், 'இப்பொழுதுதான் இம்மனிதன் வீட்டின் புறத்தே நின்றான்; இவ்வளவு விரைவில் இறந்து விட்டானே' என்பர்; சிலர், 'ஒருநாழிகைக்கு முன்புதான் இவன் வீட்டிற்குள் இருந்தான்; இப்பொழுது மரித்துவிட்டானே!' என்று வியப்புறுவர்; வேறு சிலர், 'இவன் அரைநாழிகைக்குமுன் படுக்கையில் படுத்திருந்தான்; நாங்கள் வெளியிற்போய்வருமுன்னர் இவனுயிர் போய்விட்டதே' என்று துக்கமொழி சாற்றுவர். இங்ஙனம் பலரும் கூறுதலால் யாக்கை விரைந்தொழிதல் ஒவ்வொருவராலும் உணர்ந்து கொள்ளப்படும். ஆதலின், ஒவ்வொருவரும் அவர் அங்ஙனங் கூறுதலால் உடம்பின ழிவைத் தெரிந்துவிரைந்தறஞ் செய்தல் வேண்டு மென்றார் ஜைனமுனிவர்.

இதில் இசையெச்சமாகச் சில சொற்றொடர்கள் வருவித்துரைக்கப்பட்டன. புல்நுனி- ஆறாம் வேற்றுமைத் தொகை. 'இன்' என்பது, 'இக்காலம்' எனக் கால அண்மை யையும் விரைவையும் குறிக்கும் இடைச்சொல்; அஃதப் பொருள்களை மிகைப்படுத்திக் காட்டற்கு 'இன் இன்' என அடுக்காகி ஈற்றில் இகரச்சாரியைபெற்று 'இன்னினி' என்றாயது' இதனீற் றேகாரம் தேற்றப்பொருளது. 'அறம்' என்பதில் மகரங்கெட்டது;

''அல்வழி யெல்லா மெல்லெழுத் தாகும்''

என்னும் (தொல்-எழுத்-புள்-19) ஆம் சூத்திரவுரைபார்க்க. அறவினை- இருபெயரொட்டுப் பண்புத்தொகை. நின்றான், இருந்தான்........ என்னும் முற்றுச் சொற்கள் அடுக்கி 'ஒருமனிதன்' என்னும் பெயர் கொண்டு முடிந்தன;

''அவைதாம்
தத்தங் கிளவி யடுக்குந வரினும்
எத்திறத் தானும் பெயர்முடி பினவே''

என்பது (தொல்-சொல்-எச்-33-ஆம்) சூத்திரம். (கூ)

30. *கேளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி*
வாளாதே போவரான் மாந்தர்கள்- வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து.

(இ.ள்) மாந்தர்கள்- மனிதர்கள், (ஒரு குடும்பத்தி லுள்ளவரிடத்தில்), கேளாதே- (இங்கே வரலாமா? என்று) கேளாமலே, இல்-அவர்களின் வீட்டில், வந்து-, கிளைகள் ஆய்- (அவர்க்கு) உறவினர்களாய், தோன்றி - பிறந்து, (சிறிது கால மிருந்து), வாளாதே-வீணாக, சேக்கை-(தமது) கூடு, மரன் ஒழிய- மரத்திலே அழிந்து போகும்படி, (அதனைப் போட்டுவிட்டுப் பறந்து), சேண்நீங்கு-= ஆகாயத்தில் போய் மறைகின்ற, புள்போல- பறவைகள் போல, யாக்கை- உடம்பு, தமர்க்கு- சுற்றத்தாரிடத்தே, ஒழிய- கிடந்தழிய, நீத்து-(அதனை)-நீக்கிவிட்டு, வாளாதே- ஒரு பயனுமின்றி, போவர்-(இறந்து) போவார்கள்; (ஆதலின் மனிதரின் யாக்கை நிலையற்றதாம்; இதனையுணர்ந்து அறிஞர் அறஞ் செய்தல் வேண்டும்); எ-று.

மரத்தில் கூடுகட்டி அதில் வாழும் பறவைகள் நீங்குங் காலம் வந்தவுடன் அதனை விட்டுப்பறந்து செல்லுதல் போல, ஒரு குடும்பத்தில் வந்து அக்குடும்பத்தார்க்குச் சுற்றத் தவராய்ப் பிறக்கும் மனிதர்களும் சிறிதுகாலஞ்சென்று தம்முடம்பை அங்கே போட்டுவிட்டு இறந்துபோவார்கள்; ஆதலின் மனிதர்யாக்கை நிலையற்றது. அஃதிருக்கும்போதே அறிஞர் விரைந்து அறத்தைத் தேடிக்கொள்ள வேண்டு மென்பது இதன்கருத்து.

சில பறவைகள், கருவுயிர்க்கும் பருவம் வந்தவுடன் மரக்கிளையில் கூடுகட்டி அதில் முட்டையிட்டுக் குஞ்சு களைப் பிறப்பித்து வளர்த்து அவற்றிற்குப் பறக்கும் பருவம் வந்தவுடன் அக்கூட்டை விட்டு அவற்றை அழைத்துக் கொண்டு ஆகாயத்திற் பறந்துபோய்விடும்; இவற்றைப் போலவே மனிதரும் ஒரு குடும்பத்திலுள்ளவர்க்குச் சுற்றத் தாராய் அவ்வீட்டில் தேகத்தோடு பிறந்து சிறிதுகாலம் வாழ்ந்து அவ்வுடம்பினை அக்குடும்பத்தாரிடம் போட்டு விட்டு இறந்து போவர். ஆதலின் இத்தகையினர்க்கு அப் பறவைகள் உவமையாகக் கூறப்பட்டன; இஃதுவமையணி. உடம்பிற்கும் உயிருக்குமுள்ள பற்றினதியல்பினை இத் தகைய உவமையால் விளக்குதல் பெரியாரியல்பு; இதனை,

''குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு''

என்னுந் திருக்குறட்பா நன்கு விளக்கும். மனிதர், 'இன்னவர் வந்து நமக்குறவினராய்ப் பிறத்தல் வேண்டும்' என்று விரும்புவது மில்லை, நினைப்பது மில்லை; அங்ஙனமிருப்ப அவர் குடும்பத்திற் பிறப்போர் தாமேவந்து தோன்றுவர்; ஆகலின் 'மாந்தர்கள் கேளாதேவந்து கிளைகளாயிற்றோன்றி' என்றார் முனிவர். இறக்கும் மனிதரால், இருப்பவர்க்கு ஒரு பயனுமின்றாகலின், 'மாந்தர்கள் வாளாதேபோவர்' என்றுங் கூறினார். பறவைகள் பறந்து போனபின் கூடு மரத்திலிருந்து பயனற்றழியு மாதலின், 'வாளாதே சேக்கைமரனொழிய' என்று கூறப்பட்டது. மரம் - குடும்பத்திற்கும், மரக்கிளைகள் - குடும்பத்திலுள்ளவர்க்கும், கூடு - உடம்பிற்கும், பறவை கள் - உயிருக்கும் உவமைகளாம். பறவைகளால் நீக்கப்படும் கூடு மரக்கிளைகளில் இருந்து அவற்றால் அசைத்துத் தள்ளப் பட்டொழிதல்போல, உயிரால் நீக்கப்பட்ட உடம்பு சுற்றத் தாரிடம் கிடந்து அவரால் எரித்தழிக்கப் படுமென்க.

கேளாது, வாளாது, என்பன- வினையெச்சங்கள்; இவற்றின் ஈற்றேகாரங்கள்- அசைகள். கிளைகள்- ஒரு மரத்தில் தோன்றிச் சூழம் கவர்கள்; அவற்றைப்போலவே உறவினரும் ஒருவனைச் சார்ந்திருத்தலால், கிளைகள் என்பது உவமவாகுபெயராய்ச் சுற்றத்தாரையுணர்த்தி நின்றது. வாளா-பயனின்மைப் பொருளைத்தரும் இடைச்சொல்; இது துச்சாரியைபெற்று 'வாளாது' எனவந்தது. மரன்- மரம்; இதன் ஈற்று மகரவொற்று னகர வொற்றாக மயங்கிநின்றது. ''மகரத் ....'' என்னும் (தொல்.எழுத்-மொழி-49) ஆம் சூத்திரவுரைபார்க்க. ''மகர விறுதி யஃறிணைப் பெயரின், னகர மோடுறழா நடப்பனவுளவே'' என்னும் (நன்- எழுத்- 67) ஆம் சூத்திரப்படி இது மொழியிறுதிப்போலி யெனவும் படும். தமர்- தம்மவர். 'நீத்து' என்பதில், நீ-பகுதி, உ-விகுதி, த் - இடைநிலை, த்- சந்தி. 'போவரால், என்பதில், ஆல் - அசை. (க0)

அதிகாரம் 4

அறன்வலியுறுத்தல்

அறன்வலியுறுத்தலாவது - இம்மையில் தேடிக் கொள்ளத்தக்க அறம், பொருள், இன்பம், என்பவற்றுள் அறம் உறுதிப்பாட்டுடைய தாகலின், அத்தருமத்தை வற்புறுத்திக் கூறுவதாம். தருமமானது செல்வம், இளமை, யாக்கை என்பவைபோல் அழிந்ததுவிடக் கூடியதன்றாக லானும், அம்மூன்றும் இருக்குங்காலத்தே விரைந்து அவற்றால் அவசியம் செய்யத்தக்கதாதலானும், இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றிடங்களினும் பெறத்தக்க இன்பங்களை நல்கற்பாலதாகலானும் செல்வம் முதலிய அம்மூன்றின் நிலையாமைகட்கு பின்னர் இது கூறப்படு கின்றது.

31. *அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கிப்*
புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத்
தவத்தாற் றவஞ்செய்யா தார்.

(இ-ள்) மேலைத்தவத்தால்- முற்பிறப்பிற் செய்த தவத்தினாலே, (அடுத்த பிறப்பில்), தவஞ்செய்யாதார் - தவத்தைச்செய்யாதவர்கள், (அவ்விறப்பிற்கு அடுத்த

பிறப்பில் வறிஞராய்த் தோன்றிப் பலரிடத்தும் பொருள் இரக்குந் தொழிலினராய்த் திரிந்து செல்வந்தர் வீட்டைக் கண்டு), அகத்தாரே- இவ்வீட்டிலுள்ளவரே, வாழ்வார்- (இன்பம் பெற்று) வாழ்பவராவர், என்று- என்று நினைத்து, (ஏக்கமுற்று), அண்ணாந்து நோக்கி - (அவ்வீட்டின் மேற்பாகத்திலுள்ள சிறப்புக்களைத்) தலைதூக்கிப்பார்த்து, (ஆங்குள்ளார்பால்பொருளிரத்தற்கு அம்மாளிகைக்குள் நுழையத்தொடங்கி(வாயில் காப்போரால் தடுக்கப்பட்டு), தாம் புகப்பெறார்- தாம் அங்ஙனம் நுழையமுடியாதவர் களாய், கடைபுறம் பற்றி- (அவ்வீட்டு) வாயிலின் வெளிப் பக்கத்தைச்சார்ந்து, மிகவருந்தி இருப்பர் - மிகுதியாக வருத்த மடைந் திருப்பார்கள்; எ-று.

ஒருபிறப்பில் தவஞ்செய்து அதன்பயனாக அடுத்தப் பிறப்பிலும் அத்தவத்தைத் தேடிக்கொள்ளாதவர்கள், அதற்கு மறுபிறப்பில் தரித்திரராய்த் தோன்றிப் பலரிடத்தும் பொருள் யாசிக்கத்தொடங்கிச் செல்வமிக்கார் வீட்டை நோக்கி, 'இவ்வீட்டிலிருப்போரே இன்புற்றுவாழத் தக்கவர்' என்று அவ்வீட்டின் உப்பரிகையிலுள்ள சிறப்புக்களை அண்ணாந்து பார்த்து அவ்வில்லினரிடத்தும் ஏதேனும் பெறவிரும்பி அதற்குட் புகமுயன்று வாயில்காப்போரால் தடுக்கப்பட்டு நுழைய முடியாமல் வெளிப்புறத்தில் நின்று வருந்துவர் என்பது இதன் கருத்து.

மனிதன் ஒருபிறப்பில் தவஞ்செய்யின் அத்தவ மானது மறுபிறப்பிலும் அவன் தவமுடையனாகவே பிறக்கச் செய்யும்; அதிற் செய்யும் தவத்தால் அவன் அதற்கடுத்த பிறப்பில் செல்வமுடையனாய்த் தோன்றி அறம்பொருள் இன்பங்களைப்பெற்று முடிவில் மேற்கதியிற் சேர்வான். இங்ஙனம் ஆத்மன் பிறவிகள் தோறும் செய்யும் தவமானது படிப்படியாக அவனை உயர்கதிகளுட் சேர்த்துக் கொண்டே செல்லுதலானும், பொருளின்பங்களைப் பெறுதற்குரிய தவங் கைகூடற்குந் தவமே காரணமாகலானும், அத்தவத்

தினைப் பிறவிகள் தோறும் செய்யாதார் மேலும் மேலும் இழிந்த பிறப்புக்களிற் றோன்றித் தூர்க்கதிகளுட் சேர்வராத லானும் ''மேலைத்தவத்தால் தவஞ்செய்யாதார்............ வருந்தி யிருப்பார்'' என்றார் முனிவர். மனிதரை உயர்கதியிற் சேர்க்கும் தவமும் முன்னைத் தவமுடையார்க்கே கைகூடும் என்பது,

''தவமுந் தவமுடையார்க் காகுமவமதனை
அஃதிலார் மேற்கொள் வது''

என்னும் திருக்குறட் செய்யுளான் விளங்கும். இங்ஙனம் தவஞ்செய்யாதார் வருந்தியிருப்பாரெனவே, செய்வார் மேலும் மேலும் உயர்கதிகளிற்சேர்ந்து முடிவில் முத்தி யடைவரென்பது கூறாமலே அமையும். முன்னே தவஞ்செய் திருப்பார்க்கே செல்வங் கைகூடுமென்பது, ''மேலைத் தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வம்'' என்னும் மூதுரைச் சொற்றொடர்களானுந் தெளிவாம். இச்செய்யுளில் இங்ஙனம் தவமில்லாதார் வருந்தியிருப்பர் என்று கூறிய தனால் மனிதராயினார், தவத்தைச் செய்யாதிருந்து இழிந்த பிறவிகளையெடுத்துழலாமல் தவஞ்செய்து இம்மை மறுமையின்பங்களை யனுபவித்து முடிவில் அவற்றையும் நீத்து நிலைத்த இன்பத்தைத் தருவதாகிய முத்தியைப் பெற வேண்டுமென்பதை விளக்கி அறப்பயனை வலியுறுத்திக் கூறியதாகும்.

இனி 'அகத்தாரே வாழ்வார்' என்பதை, அகத்து + வாழ்வார்+ ஆரே எனப்பிரித்து 'ஆரே' என்பதை வியப்பு வினாவாகக் கொண்டு 'இத்தகைய சிறந்தவீட்டில் வாழ்பவர் எத்தகைய புண்ணியஞ்செய்தவர்களோ (இவர்களே செல்வ வான்கள்)' என்று அவ்வறிஞர் வியந்துரைத்தனரென்று பொருள்கூறினும் பொருந்தும். இன்னும், ஒரு செல்வந்தர் வீட்டினுள் அவர் யாசகர்க்குப் பொருளுதவுங்காலத்துச் சிறிது தவஞ்செய்தோர் அப்புண்ணிய விசேஷத்தால் அதையேனும்

ஏற்றுக்கொள்ளும் பாக்கியம்பெற்று அதனைப்பெற அங்குப் போய்க் கூடியிருக்க, அச்சிறுவதமுஞ் செய்யாதவறிஞர் அதனையும் பெறுதல் இயலாதவராய்ப்பின் சென்று, யாசகர் உட்புகும் சமயம்கழிந்ததால் வாயிற்காவலரால் தடுக்கப் பட்டு அவ்வீட்டின் வெளிப்பக்கத்தில் நின்று, 'முன்னரே உட்சென்ற யாசகர்தாம் பொருள்பெற் றின்புற்று வழ்வர்; நமக்கந்தப் பாக்கியம் கைகூடாமற் போயிற்று' என்று வருந்தினாரென்று கொண்டு, அதற்கேற்ப 'அகத்தாரே வாழ்வார்' என்பதற்கு 'முன்னரே இவ்வீட்டினுட் சென்றி ருக்கும் யாசகரே பொருள்பெற்று வாழ்வார்' என்றுரைத்தலு மொன்று. 'மேலைத்தவத்தால் தவஞ்செய்யாதார்' என்பதற்கு 'மனிதனாய்ப் பிறத்தற்குரிய உயர்ந்த தவத்தோடு செல்வம் பெறற்குரிய தவத்தைச் செய்யாதார்' எனப் பொருளுரைப் பினுமாம்; உயர்ந்த தவத்தினாலேயே பிறப்புக்களுட் சிறந்த மக்கட் பிறப்புண்டாகும். அம்மக்கட் பிறப்படைந்தவன் பொருள் பெறற்குரியதவத்தை அதனுடன் செய்திருந்தால் மட்டுமே அச்செல்வத்தையும் பெறுவான். மேலை- உயர்வு; இதில், ஐ- பண்புப்பெயர் விகுதி; 'தொல்லை' என்பதி லுள்ளது போன்றது. இங்ஙனம் சாதாரண தவத்தைத் தவ மென்றலும், உயர்தவத்தைச் சிறப்புச் சொல்லடை கொடுத் துக் கூறலும் மரபு; இது ''நற்றவஞ்செய் வார்க்கிடம் தவஞ் செய்வாக்கு மவ்விடம்'' என்னும் சீவகசிந்தாமணி நாமகளி லம்பகச் செய்யுளடியில் நற்றவமெனப்து உயர்ந்த தவத்தை யும், மற்றது அதனிற்குறைந்த தவத்தையும் விளக்கி நிற்ற லால் உணரப்படும்.

'அகத்தாரே' என்பத னீற்றேகாரம்- பிறர்வாழார் என் பதைக் குறித்தலால் பிரிநிலை; இரண்டாவதாகக் கூறிய பொருளில் வினா. 'அண்ணாந்து' என்பதில், அண்ணா - பகுதி, உ- தெரிநிலை வினையெச்ச விகுதி, த்- இடைநிலை, த்-சந்தி, சந்தியால் வந்த தகரவொற்று நகர வொற்றானது- விகாரம். பெறாஅர்- செய்யுளிசை நிறைக்கவந்த அளபெடை. 'கடைப்புறம்' என்பது, 'புறங்கடை' எனப் பின்முன்னாக

மாறிவந்தது; இஃதிலக்கணப்போலி. மூன்றாமடியில், தாம் -அசை. ஏ- இரக்கத்தோடு தேற்றம்; அசையுமாம். 'மேலை' என்பதை 'முன்' எனப்பொருளுரைக்கு மிடத்து, அதனீற்றி லுள்ள ஐ- சாரியை. தவம்- தபஸ் என்னும் வடசொற்றிரிபு. இச்செய்யுள் இருவிகற்ப இன்னிசை வெண்பா. (க)

32. *ஆவாநா மாக்க நசைஇ யறமறந்து*
போவாநா மென்னாப் புலைநெஞ்சே-ஓவாது
நின்றுஞற்றி வாழ்தி யெனினுநின் வாழ்நாள்கள்
சென்றன செய்வ துரை.

(இ-ள்) (விவேகமற்ற மனிதனிடத்தே மிக்க முதுமை யடைந்தும் உலகவாழ்வு நிலையுள்ள தென்றெண்ணி வாழ்கின்ற), புலை நெஞ்சே- அற்பத்தன்மையுள்ள மனமே!, (நீ அங்ஙனம் எட்டுணையும் நிலையில்லாத), ஆக்கம்- செல்வத்தை, நசைஇ- விரும்பி, நாம் ஆவாம் - நாம் (மேன் மேலும் ஐசுவரிய முடையவர்) ஆகுவோம், (செல்வத்தைச் செலவழிப்பது அங்ஙனம் ஆதலைக் கெடுத்துவிடக் கூடிய தாதலின் அச்செல்வக் கேட்டிற் கேதுவாகிய), அறம்- தருமத்தை, நாம்மறந்து போவாம்- நாம்மறந்து விடக்கட வோம், என்னா - என்று நினைத்து, ஓவாது- ஒழிவின்றி, நின்று- (பொருள்தேடும் மார்க்கத்திலேயே) நிலைபெற்று, உஞற்றி- (அப்பொருளைத் தேடுதற்குப்பற்பல) முயற்சி களைச் செய்து, வாழ்தி எனினும்- வாழ்வாயானாலும், நின் வாழ்நாள்கள்- உன்னுடைய ஆயுள் நாட்கள், சென்றன- கழிந்து விட்டன, (ஆதலின் நீ இனி இறந்தே தீரவேண்டும்; இம்மரணத்தி னின்றும் நீங்குதற்கு), செய்வது உரை-செய்யத் தக்கதைச் சொல்வாயாக;எ-று.

அறிவற்று உலகவாழ்வு நிலையுள்ளதென் றெண்ணு கின்றவனும்; முதுமையடைந்தவனும், பொருளைத் தரும மார்க்கத்திற் செலவிடாத உலோபியுமாகிய மனிதனிடத்தில், அவன் செய்கைக் கனுகூலமாக அறவிருப்பின்றி வாழ்கின்ற

அற்பமனமே! நீ அங்ஙனம் நிலையற்றதை நிலையென்றெண்ணி 'நாம் செல்வத்தைச் செலவழித்து விட்டால் விருத்தியடைய மாட்டோம்; ஆதலின் அது செலவாதற் கேதுவாகிய தருமத்தை மறந்துவிட்டுப் பொருளைத் தேட வேண்டும்' என்றுறுதிகொண்டு அதனை விரும்பி, இடைவிடாது பொருள் சேர்த்தற்குப் பல முயற்சிகளைச் செய்து வாழ்ந்தாலும் உன் ஆயுள் நாட்கள் கழிந்துவிட்டனவே; இனி நீ மடிவதுதிண்ண மாயிற்றே இதற்குச் செய்வதென்ன கூறு என்பது இதன் கருத்து.

இது, உலகத்தில் அறஞ்செய்யாது, வாழ்வை நிலையென்றெண்ணிப் பொருளைச்சேர்த்து வாழ்ந்து முதுமைப் பருவ மடைந்த ஒருவனுடைய மனத்தை விளித்துக் கூறியதாக அமைந்தது. மனிதனுடைய மனிதனுடைய செயல்களை நடத்துவிப்பது மனமேயாதலின், அதன்மேல் மனிதன் தொழில்கள் ஏற்றிக் கூறப்பட்டன. இங்ஙனம் ஒருவனுடைய மனத்தை விளித்துக் கூறியது இத்தகைய குணமுடைய எல்லோருக்குமே கூறியதும், அறிவுறுத்தியதுமாகும். இதனால் மனிதர் வாழ்வு நிலையற்ற தென்பதும், அவர் உயிருடனிருக்கும்போதே அறஞ்செய்து மேற்கதிக்குச் செல்லும் மார்க்கத்தைத் தேடிக் கொள்ளவேண்டுமென்பதும் பெறப்படும். மனிதன் எவ்வளவுசெல்வத்தோடு கூடிவாழினும் அறம் புரியாமல் இறப்பானாயின் துர்க்கதியிற் சேர்வது நிச்சயமாதலின் ''வாழ்நாள்கள் சென்றன, செய்வதுரை'' என்றார் முனிவர்.

இனி, ''ஆவா நாமாக்க நசைஇ யறமறந்து, போவாநாமென்னாப் புலை நெஞ்சே'' என்பதற்கு, ''அந்தோ! நாம் செல்வத்தை விரும்பி அறத்தைமறந்து (வாழினும் முடிவில் அழிந்தே) போவோம் என்று நினைந்து தருமஞ்செய்யாத அற்பமனமே!'' என்று பொருள் கொண்டு பின்னிரண்டடிகளின் கருத்தோடு அதனைக்கூட்டி முடிப்பாருமுளர். இங்ஙனம் பொருள் கொள்ளுமிடத்து, 'ஆஆ' என்னும்

இரக்கக்குறிப்பிடைச்சொல் 'ஆவா' என வந்ததாகக் கோடல் வேண்டும். 'என்னா' என்பதை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமெனக் கொள்ளல் வேண்டும்.

'ஆவாம்' என்பது 'மேன்மையாகக்கடவோம்' என்னும் பொருள்பயந்து நின்றது. இந்நூல் *181* ஆம் செய்யுளில் ''ஆது நாமென்னுமவா'' எனவரும் சொற்றொடரில் வரும் 'ஆதும்' என்பதும், திருக்குறள் 653 ஆம் செய்யுளில் ''ஆதுமென்னுமவர்'' என வரும் சொற்றொடரில் வரும் 'ஆதும்' என்பதும் இப்பொருளே தந்து நிற்றல்காண்க. ஆவாம், போவாம் - என்பன தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்றுக்கள்; உளப்பாட்டில் வராமல் தனித்துவந்தன. ஆக்கம்-ஆகுதல் என்னும் தொழிற்பெயர்; இஃதிங்குக்காரியவாகு பெயராய், இம்மையில் உயர்வுறுதற்குக் காரணமான செல்வத்தை யுணர்த்தி நின்றது. 'நசை' என்னும் பெயர்ச் சொல், 'விரும்பி' என வினையெச்சச் சொல்லாதற் பொருட்டு, 'நசைஇ' என அளபெடுத்து நின்றது; இது சொல்லிசையளபெடை யெனப்படும். 'நசைந்து' என்ற வினையெச்சம் 'நசைஇ' என விகாரப்பட்டு அளபெடுத்த தென உரைப்பாருமுளர். புலை- பண்புப்பெயர்; இதில், புல்- பகுதி, ஐ- விகுதி. 'மறந்து போவாம்'[1] என்பதில் 'போவாம்' என்பது இங்குத் துணிவுப்பொருளை யுணர்த்தி நின்றது. (உ)

33. ***வினைப்பயன் வந்தக்கால் வெய்ய வுயிரா***
மனத்தி னழியுமாம் பேதை- நினைத்ததனைத்
தொல்லைய தென்றுணர் வாரே தடுமாற்றத்
தெல்லை யிகந்தொருவு வார்.

(இ-ள்.) பேதை- அறிவில்லாதவன், வினைப்பயன்- (தான் முற்பிறப்பிற் செய்த) தீவினைப்பயனாகிய (துன்பம்), வந்தக்கால்- (இப்பிறப்பில் தன்பால்) வந்து சேர்ந்தால் (இஃதூழ்வினைப் பயனென்று நினைத்து அதனை மனத்திற் கொள்ளாமல் தள்ளி வருபிறப்பில் நன்மையுறுதற்கான

அறத்தைச் செய்யாமல்), வெய்ய உயிரா -வெப்பமாக மூச்சு விட்டு (அதாவது, பெருமூச்சுவிட்டு), மனத்தின் - மனத்திலே, அழியும்- வருந்துவான், (இங்ஙனம் வருந்தி அறஞ்செய்யா திருப்பின் மேலும் அவனுக்குத் துன்பமே சேரும்; ஆதலின் அவன் அத்துன்பத்தைப் பழவினைப் பய னென்று நினைத்துத்தள்ளித் தருமைத்தைச் செய்தல் வேண் டும்; அங்ஙணம்), அதனை-(பழவினைப் பயனால் வரும்) அத்துன்பத்தை, நினைத்து- சிந்தித்து, தொல்லையது என்று- (இது) பழவினைப்பயனால் வந்தது என்று, உணர்வாரே- தெரிந்து கொள்பவர்களே (அறிந்து கொண்டு அதன் பொருட்டு வருந்தாமல் அறத்தைச் செய்பவர்களே), தடுமாற்றத்து எல்லை- (பிறவியினாலுண்டாம்) கலக்கத்தின் எல்லையை, (அதாவது பிறவித்துன்பத்தை), இகந்து ஒருவுவார்- விட்டுநீங்குவார்கள்; எ-று.

பழவினைப்பயனாகிய துன்பம் வந்தவிடத்து அறி வில்லாதவன் அதன் தன்மையை உணராமல் அதன் பொருட்டு வருந்தித் தருமத்தைக் கைவிட்டிருப்பான்; அதனால் அவனுக்கு மேல்வரும் பிறப்பிலும் துன்பமே அதிகரிக்கும்; ஆகலின் ஒருவனுக்குத் தீவினைப் பயன் வந்தாலும் அவன் அதனை அனுபவித்துக்கொண்டு அதன் பொருட்டு வருந்தாமல் அறமே புரில் வேண்டும். அங்ஙனம் புரிவோரே பிறிவித் துன்பத்தினின்று நீங்குவர் என்பது இதன் கருத்து.

ஒருவன் முற்பிறப்பில் செய்த வினயையால் தனக்குத் துன்பம் வந்தவிடத்து, 'இது பழவினைப்பயன்' என்று அதனைத் தள்ளாமல் அதன் பொருட்டு வருந்துவானாயின், அம் மனக்கலக்கத்தால் வேறு அறநெறிகளிற் புகான்; அதனால் அவனுக்குப் பிறவித்துன்பங்கள் அதிகரிக்கும்; ஆதலின் அவன் - பேதையெனப்பட்டான். இவனைப் போலன்றித் தமக்குவரும் துன்பங்களைப் பழவினைப் பயனால் வந்தன வென்றுணர்ந்து, அவற்றிற்கு வருந்தாமல்

மேலும் துன்ப முறாதிருக்குமாறு அறங்களைப்புரிவார் பிறவித்துன்த்தை யடையார். ஆதலின் அவரை 'தடுமாற்றத் தெல்லையிகந் தொருவுவார்' என்றார் முனிவர். இங்ஙனம் கூறியதனால் மனிதர்க்குப் பழவினையால் துன்பம் வரினும் அவர் அதனை யனுபவித்துக் கொண்டு மேலும் அல்லலுறா திருக்கும் பொருட்டு அறத்தைச் செய்ய வேண்டுமென்பதும், அங்ஙனம் செய்வாரே பிறவித்துன்பத்தினின்றும் நீங்குவ ரென்பதும், மற்றையர் துக்கமெய்வது ரென்பதும் விளங்கும். இதனால் அறன் வலியுறுத்தல் அமையும்.

வினைப்பயன், நல்வினைப்பயனாகிய இன்பம், தீவினைப் பயனாகிய துன்பம் என்னும் இரண்டற்கும் பொது வெனினும் இங்கு 'அழியும்' எனப் பின் வருவதுநோக்கித் தீவினைப்பயனாகிய துன்பத்தை உணர்த்தி நின்றது. பேதை மனத்தின் அழிதல் தருமஞ்செய்யாதிருத்தற்குக் காரணமாத லின் 'அறத்தைச் செய்யாமல்' என்பது அதன்முன் இசை யெச்சமாகக்கூட்டி யுரைக்கப்பட்டது. துன்பத்தைத் தொல்லையதென் றுணர்தல் மேல் அறஞ் செய்தற்கேது வாதலின், 'உணர்வார்' என்பதற்குப்பின் தருமஞ்செய்தல் கூட்டி 'அறிந்து அறத்தைச் செய்பவர்களே' என்று பொருளுரைக்கப்பட்டது. வெய்ய- வெம்மை யென்னும் பண்பினடியாகப் பிறந்த குறிப்பு வினையெச்சம்; பைய, மெல்ல என்பன போன்றதாம்; இஃதிங்கு வினையுரியாய் நின்றது. இனி இதனை வெம்மையினடியாகப் பிறந்த பலவின்பாற் பெயராகவுங் கொள்ளலாம்; இங்ஙனங் கொள்ளுமிடத்து 'வெய்யனவாகிய மூச்சுக்கள்' எனப் பொருள் விரித்து இதனை 'உயிர்த்து' என்பதனோடு கூட்டி 'மூச்சுக்களை உயிர்த்து' என முடித்தல் வேண்டும். இன்னும் பலவின்பாற் குறிப்பு முற்றெச்சமாகக் கொண்டு 'வெம்மை யுடையனவாக' என விரிப்பினுமாம். உயிரா - செய்யா வென் னும் வாய்பாட்டு வினையெச்சம். 'மனத்தின்' என்பதில், இன்- ஏழனுருபு. 'அழியுமாம்' என்பதில், ஆம்- அசை. தொல்லை - பண்புப்பெயர்; தொல்லையது- தொல்லை

யென்னும் பண்பின்மேல்வந்த குறிப்புவினை முற்று; இதில், து- விகுதி, அ-சாரியை. 'உணர்வாரே' என்பதன் ஏ- பிரிநிலை யோடு தேற்றப் பொருள்தரும். 'பேதைமை' என்னும் பண்புப் பெயர் மையீறுகெட்டு 'பேதை' என நின்றது; இதற்கு 'ஒன்று மறியாமை' என்பது பொருளாம்; இது பண்பாகுபெயராய் அறியாமையுடையவனை யுணர்த்தி நின்றது. தடுமாற்றம்- தடுமாறுதல்; தொழிற் பெயர்; அதாவது வழிதெரியாமல் சுற்றிக்கலங்குவது; அஃது வமையாகு பெயராய் முத்தி மார்க்க முணராமல் பல பிறப்புக்களை யெடுத்துக்கலங்கும் துன்பத்தை யுணர்த்தி நின்றது. (ரு)

34. அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தாற்
பெரும்பயனு மாற்றவே கொள்க- கரும்பூர்ந்த
சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோற் போகு முடம்பு.

(இ-ள்). (மனிதர்) அரும்பெறல் யாக்கையை- அருமையாகிய பெறுதலையுடைய மானிடதேகத்தை, பெற்ற- அடைந்த, பயத்தால்-பயனால், (அதாவது பேற்றி னால்), பெரும்பயனும்- பெரியபயனாகிய தருமத்தையும், ஆற்றவே -மிகுதியாகவே, கொள்க- தேடிக்கொள்வாராக, பெரும்பயனும் - அந்தப் பெரிய பயனாகிய தருமமும், கரும்பு ஊர்ந்த சாறுபோல்- கரும்பிற்சேர்ந்திருக்கும் சாற்றைப்போல, சாலவும்- மிகவும், பின்- பின்னாதல், உதவி - துணையாம், உடம்பு - (அத்தருமஞ் செய்வதற்கிடமா யிருந்த) தேகமானது, அதன்கோதுபோல் - அக்கரும்பின் சக்கையைப்போல, போகும் - (அத்தருமமாகிய பயனை நிலைக்கச்செய்துவிட்டு) நீங்கிச் சென்றுவிடும்; எ-று.

மனிதர், பெறுதற்கரிய உடம்பினைப்பெற்ற பேற்றி னால் அஃதழியுமுன் பெரிய பயனாகிய தர்மத்தைத் தேடிக் கொள்ளக் கடவர்; ஏனெனில் அத்தருமமானது கரும்பிலுள்ள

சாற்றினைப்போல பின்னர்ப் பல இன்பங்களைத் தந்து உதவி செய்யும்; உடம்பானது, சாற்றையுதவி ஒழியும் கரும்பின் சக்கையைப் போன்று தருமப்பயன் நிற்க அழிந்து போகும் என்பது இதன் கருத்து.

கரும்பானது உற்பத்தியாகும்போது மதுரமான சாற்றை உடன்கொண்டு வளர்கின்றது; முதிர்ந்தபின் தன்னை வளர்த்தார்க்குப் பயனாகிய சாற்றைக் கொடுத்துவிட்டுச் சக்கையாகிவிடுகின்றது; அச்சாறு பின்னால் அவர்க்கு வெல்லமாகியும், கற்கண்டாகியும், பல வழியிலும் பயன் பட்டு இனிமையைத் தருகின்றது; சக்கையோ ஒரு பயனு மின்றிக் கழிந்து போகின்றது. இதைப்போல் மனிதர் பெற்ற தேகமானது அறத்தைத் தேடுதற்கிடனாயிருந்து சேர்த்து முடிவில் அதனை நிலைபெறச்செய்து பிணமாகிவிடும்; அத் தருமமானது அவர்க்கு மறுமையில் சுவர்க்காதி இன்பங் களையெல்லாம் நல்கும்; இறந்த வுடம்போ ஒரு பயனு மின்றி ஒழிந்துபோகும். ஆதலின், அவ்வுடம்புக்குக் கரும்பின் சக்கையும் தருமத்திற்குக் கரும்பின் சாறும் உவமை யாகக் கூறப்பட்டன. இங்ஙனம் கூறியது உவமையணி. இதனால், பெரும் பயனை நல்கிக் கழியும் உடம்பிருக்கும் போதே மனிதர் அதனைத் தேடிக்கொள்ள வேண்டுமென்ப தும், அவ்வாறு தேடாவிடில் இம்மை மறுமைப் பயன்களை அடைதல் முடியாதென்பதும் பெறப்படும். இங்குக் கூறிய படி உடம்பு இகபரசாதனங்களை நல்கக்கூடியதாயிருத்தலின் பெறுதற் கரிய தென்பதையும், அதனையடைந்தபொழுதே மனிதர் புண்ணியத்தைத் தேடிக்கொள்ள வேண்டுமென்பதை யும்,

''பரவை வெண்டிரை வடகடற் படுநுகத் துளையுட்
டிரைசெய் தென்கட லிட்டதோர் நோன்கழி சிவணி
யரைச வத்துளை யகவயிற் செறிந்தென வரிதாற்
பெரிய யோனிகள் பிழைத்திவண் மானிடம்
பெறலே''

என்னும் சீவகசிந்தாமணி(2749) ஆம் செய்யுளானும்,

''அரிதரிது மானிடராத லரிது''

என்னும் ஔவையார் திருவாக்கானும்,

''தோற்ற மரிதாய மக்கட் பிறப்பினால்
ஆற்றுந் துணையு மறஞ்செய்க- மாற்றின்றி
அஞ்சும் பிணிமூப் பருங்கூற் றுடனியைந்து
துஞ்ச வருமே துயக்கு''

என்னும் பழமொழி (365) ஆம் செய்யுளானும்,

''மக்க ளுடம்பு பெறற்கரிது பெற்றபின்
மக்க ளறிவு மறிவரிது - மக்க
ளறிவறிந்தா ரென்பா ரறத்தின் வழுவார்
நெறிதலை நின்றொழுகுவார்''

என்னும் அறநெறிச்சாரம் (212) ஆம் செய்யுளானும்,

''வினைபல வலியினாலே வேறுவே றியாக்கை
யாகி
நனிபல பிறவி தன்னுள் துன்புறூஉம் பல்லுயிர்க்கு
மனிதரி னரியதாகுந் தோன்றுதல் தோன்றி னாலும்
இனியவை நுகர வெய்துஞ் செல்வமு மன்ன
தேயாம்''

''உயர்குடி நனிஉள் தோன்றல் ஊனமில் யாக்கை
யாதல்
மயர்வறு கல்வி கேள்வித் தன்மையால் வல்ல ராதல்
பெரிதுண ரறிவே யாதல் பேரறங் கோட லென்றாங்
கரிதிவை பெறுத லேடா பெற்றவர் மக்க ளென்பார்''

என்னும் வளையாபதிச் செய்யுட்களானும் உணர்க. 'அரும் பெறல் யாக்கை' என்பதை 'பெறல் அரும் யாக்கை' என மொழி மாற்றி யுரைப்பினும் அமையும். தருமஞ்செய்து உயர் கதியுறுதற்குக் காரணமான மானிடதேகத்தைப் பெறுதல் முற்பிறப்பில் செய்த நல்வினையாலன்றி ஒருவர்க்குக் கைகூடாததாதலின் அதனை, 'அரும் பெறல் யாக்கை' என்றார் முனிவர். 'பெரும்பயன்' என்றது துறவறத்தைக்குறிக்கும். இதிலுள்ள உம்மை -இறந்தது தழுவியது. 'யாக்கையைப் பெற்றபயத்தால்' என்பதற்கு, 'உடம்பை அடைந்ததற்குக் காரணமான பூர்வபுண்ணியத்தால்' எனினுமாம். ஆற்ற- வினையெச்சம்; இங்கேவினையுரி. கொள்க- வியங்கோள். ஊர்ந்த- பெயரெச்சம். சாறு- ஸாரம் என்னும் வடசொற்றிரிபு; ஸாரம்- ரஸம். சால- மிகுதிப்பொருளைக் காட்டும் உரிச் சொல்; இதில், உம்-அசை. 'பெரும்பயன்' என்பது 'கொள்க' 'உதவியாம்' என்னும் இரண்டனோடும் கூட்டி முடிக்கப் பட்டது; இங்ஙனம் கெண்டு முடித்தது தாப்பிசைப் பொருள் கோளெனப்படும்; இதனை 'மத்திமதீபம்' என்பர் வட நூலார். உதவி- உதவுவது; பெயர்; இதனோடு 'ஆம்' என்னும் ஆக்கச்சொல் கூட்டி யுரைக்கப்பட்டது. பின்-மறுமையை உணர்த்தி நின்றது. 'ஆற்றவே' என்பதில், ஏ-அசை. மற்று- அசை.

இனி, இச்செய்யுளின் தனிச்சீரையும் பின்னிரண் டடிகளையும் 'உடம்பு கரும்பூர்ந்த சாறுபோல்....... பின் உதவி மற்றதன் கோது போற்போகும்' எனமாற்றி 'உடம் பானது கரும்பிலுள்ள சாற்றைப் போலத் தன்னிடத்துள்ள மறுமைப்பயனாகிய தருமத்தைத் தேடிக் கொடுத்துவிட்டுப் பின்பு அக்கரும்பின் சக்கையைப்போலக் கழிந்து போகும்' எனப் பொருள் கோடலு மொன்று; இங்ஙனங் கொள்ளு மிடத்து 'பின்' என்னும் இடைச்சொல் பெயர்த் தன்மைத் தாய்ப் பின்னுக்கு (மறுமைக்கு) உதவும் பயனுக்கு ஆகு பெயராய் வந்ததெனவும், உதவி- செய்தென்னும் வாய்

பாட்டு வினையெச்சமெனவுங் கொள்க. இச்செய்யுளின் பின்னடியிரண்டும் இனவெதுகையா யமைந்தன. (ச)

35. *கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்*
துரும்பெழுந்து வேங்காற் றுயராண் டுழவார்
வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர்.

(இ-ள்) கரும்பு- கரும்பானது, சிறுகு- (சிதைந்து தன்னுடைய திரட்சி) குறைதற்குக் காரணமான, ஆலை- ஆலையில், கரும்பு- அக்கரும்பினை, (இட்டு), ஆட்டி - ஆட்டி (அதன் சாற்றையெடுத்துக் காய்ச்சிப் பாகாக்கி), கட்டி - வெல்லக்கட்டியாக, கொண்டார்- கொண்டவர், துரும்பு- (அக்கரும்பின்) சக்கை, எழுந்து-(குவியலாகக் குவிக்கப் பட்டு) உயர்ந்து, (அக்கரும்பின் சாற்றைக்காய்ச்சுதற்கு நெருப்பிலிட்டெரிக்கப்பட்டு), வேம்கால்- வேகுங்காலத்தில் ஆண்டு-அவ்விடத்தில், (அதன் அழிவுகுறித்து), துயர் உழவார்- துன்பத்தால் வருந்தார்கள், (அவர்களைப் போலவே), வருந்தி- (விரதம் முதலியவற்றால் உடம்பினை வாட்டி அதனால்) வருத்தமுற்று, உடம்பின் தேகமெடுத்ததாலுண்டாம், பயன்-பிரயோசனமாகிய தருமத்தை, கொண்டார் - கைக்கொண்டவர்கள், கூற்றம் வரும்கால்-(உயிரைக் கொண்டுபோதற்கு) யமன் வருங்காலத்தில், (உடம்பு அழிந்துபோவதைக் குறித்து), பரிவது இலர் - வருந்துதல் இல்லாராவர், எ-று.

கரும்பை ஆலையிலிட்டாட்டி அதன் சாற்றையெடுத்துக் காய்ச்சி வெல்லக் கட்டியாக்கிக்கொண்டு இன்புறுவோர், அக்கரும்பின் சக்கை மனிதரால் நெருப்பிலிட் டெரிக்கப்படுங்காலத்தில் அது குறித்து வருந்தார்; அவர்களைப் போலவே உடம்பினை வாட்டித் தவம் விரதம் முதலியனசெய்து அதன் பயனாகிய தருமத்தைத் தேடிக் கொண்டவர்கள், கூற்றுவன்வந்து உயிரைப்பிரிக்க அவ்வுடம்

பினுக் கழிவு வருங்காலத்தில் அதன்பொருட்டு வருந்தமாட்டார்கள் என்பது இதன் கருத்து.

மனிதர், கரும்பை ஆலையிலிட்டு ஆட்டி அதன் சாற்றையெடுத்துக்கொண்டு சக்கையை ஒருபக்கத்தில் உயரமாகக் குவித்துவிடுவார்கள்; பின்னர் அச்சாற்றை அடுப்பேற்றிக் காய்ச்சி வெல்லக்கட்டியாக்கும்போது அச் சக்கையையே அவ்வடுப்பிலுள்ள நெருப்பிற் போட்டெரிப்பார்கள். அங்ஙனம் எரிக்கும்போது அச்சக்கை தமக்கினிமை தருவதாகிய சாற்றைக் கொடுத்துச் சாரமற்றுப்போய்விட்டதாதலின் அஃதெரிந்து சாம்பராதற்குக் கவலையடைய மாட்டார்கள். உடம்பின் உதவியால் அறத்தைத் தேடிக் கொண்டவர்களும், அவ்வுடம்பு உயிரைவிட்டு நீங்கிப் பிணமானபோது எவ்வித பயனுமற்றதாய் விடுதலின் அது மனிதரால் சுடுகாட்டில் எரிக்கப்பட்டாலும் அதன்பொருட்டு வருந்தமாட்டார்கள். இங்ஙனம் அறத்தைத் தேடிக்கொண்டவர் வருந்தார் எனவே மற்றையர் துக்கமுறுவா ரென்பதும், அவர் விவேகமற்றவரென்பதும் பெறப்படும்.

இச்செய்யுட்பொருள் எடுத்துக்காட்டுவமையாக அமைந்தது; எடுத்துக்காட்டாவது- உபமான உபமேயங்களைப் பிம்பப் பிரதிபிம்ப பாவந்தோன்றத் தனித்தனி வாக்கியங்களாக நிறுத்தி அவற்றினிடையில் உவமவுருபு விரிக்காமற் கூறுவது. கரும்பு- உடம்பினுக்கும், அதனை ஆட்டல் - விரதங்களால் உடம்பினை வருத்துதற்கும், கருப்பஞ்சாற்றாலாய வெல்லக்கட்டி-உடம்பின் பயனாகிய தருமத்திற்கும், வெல்லக்கட்டி கொண்டார்-உடம்பின் பயன் கொண்டார்க்கும், கரும்பின் சக்கைவேதல்- யமன்வருகையால் உடம்பு ஈமத்தில் எரிதற்கும், கருப்பங்கட்டி கொண்டார் வருந்தாமைக்கும் உவமைகளாயின.

சிறுகு-என்னும் பெயரெச்சம், 'கரும்பு சிறுகுதற்குக் காரணமான' என ஏதுப்பொருண்மை யுடையதாய் 'ஆலை'

யென்னும் பெயர்கொண்டு முடிந்தது; இதற்கேற்ப கரும்பு என்னுஞ் சொல்இதன் முன்னும், ஆலைக்குப் பின்னுமாக இரண்டிடங்களினும் மத்திம தீபமாக்கிக் கூட்டப்பட்டது; 'கரும்புசிறுகு ஆலை' என்பது 'நோய் தீரும் மருந்து' என்பது போன்றதெனக் கொள்க. ''நிலனும் பொருளும்....'' என்னும் (தொல்.சொல்வினை-37) ஆம் சூத்திரவுரை பார்க்க.

இனி, 'சிறுகாலை' என்பதற்கு, 'முன்நேரத்தில்' எனப் பொருளுரைத்தலுமொன்று; சிறுகாலை- சிறுபொழு தாகிய காலைநேரத்தில் குறைந்தது; அதாவது ஆரம்பமான காலைநேரம்; சூரியன் தோன்றிநடக்கும் கால அளவில் ஆரம்பகாலை நேரம் குறைந்த அளவுடையதாகலின் 'சிறு காலை' எனப்பட்டது; இச்சிறுபொழுதாகிய காலை நேரத்தை முன்னேரமென்றும், மாலைக்காலத்தைப் பின் னேரமென்றும்சொல்வது உலக வழக்கம். கரும்பாட்டுந் தொழில் காலையிலேயே தொடங்கப்படுமாகலின் 'சிறு காலை ஆட்டி' என்றார் முனிவர் என்க. மனிதர் காலையிற் செய்யுங் காரியத்தை 'முன்னேரத்திலேயே செய்தேன்' என்பது உலகவழக்காதலின், காலைப்பொழுதைக் குறிக்கும் 'சிறுகாலை' என்பதற்கு, 'முன்னேரம்' எனப் பொருளுரைத் தல் அமையுமென்க. இப்பொருள்பட இச்சொல், ''சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து'' என்ற திருப்பாவையில் வருதல் காண்க.

உடம்பினாலாகிய பயனாவது- துறவறம் பூண்டு தவஞ்செய்தலாம். இச்செய்யுளிற் கூறியவாறு உடம்பினா லாகும் அறப்பயனைக் கொண்டவர்கள் அவ்வுடம்பின் அழிவுகுறித்து வருந்தாரென்பது,

''அதிசோக மோடய லார்களைப் போலடுங்
கூற்றம்வந்தால்
மதிசோர் தரமயங் கிக்கிட வோமலர் மேல்நடந்தார்

துதிசே ரிணையடி யாந்துணை யோடவர்
தொல்லறமாம்
பொதிசோ றுடைய மிடையோ மினித்தனிப்
போநெறிக்கே''

என்னும் திருநூற்றந்தாதி (68ஆவது) செய்யுளானு முணரப் படும்.

''வேகும்' என்னும் செய்யு மென்னும் வாய்பாட் டெச்சம் ஈற்றுயிர் மெய்யாகிய கு- கெட்டு 'வேம்' என நின்றது. இலர்- சிறப்பை விளக்கும் குறிப்பு வினைமுற்று; 'பரிவது' என்பது இதற்குச் செயப்படுபொருள். இதிலுள்ள இன்மைப்பொருளைக் காட்டும் 'இல்' என்னும் சொல் ஒரு பொருளின் சம்பந்தத்தை நீக்குமிடத்துச் செயப்படுபொருள் குன்றா வினையாகவும், அப்பொருளையே நீக்குமிடத்துச் செயப்படுபொருள் குன்றிய வினையாகவும் வரும்; 'குடம் நீரில்லாதது' என்பது செயப்படுபொருள் குன்றாதது; 'குட மில்லை' என்பது செயப்படு பொருள் குன்றியது. (ரு)

36. *இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது*
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம்.

(இ-ள்) (மானிடரே! ஒவ்வொருவரும் மரணமடை வது நிச்சயமாயிருக்கின்றது; ஆதலின் உங்களுடைய உயிரைக்கொண்டு போதற்கு யமன்வருதல்), இன்று கொல்- இன்றைக்கேயோ?, அன்றுகொல்- அன்றைக்கோ?, என்று கொல் - என்றைக்கோ?, என்னாது- என்று ஐயங்கொள்ளா மல், கூற்றம்- (அந்த) யமன், (நம் ஆவியைக் கவர்ந்து செல்லு தற்கு), பின்றையே நின்றது- பின்னாலேயே வந்துமறைந்து நிற்கின்றது, என்று எண்ணி-என்றுநினைத்து, (மரணங்குறுகு

வதற்குள்), தீயவை-(உங்களைத் துர்க்கதியிற் சேர்க்கும்) பாவச்செயல்களி னின்றும், ஒருவுமின்- நீங்குங்கள்(பாவங் களைச் செய்யாதீர்கள்), (நீங்கள் நற்கதியடையும் பொருட்டு), மாண்டார்- மாட்சிமைப்பட்ட அருகதேவரது (அவரால் நூல்களிற்கூறப்பட்ட), அறம்- தருமத்தை, ஒல்லும் வகையால்- (உங்களால்) கூடிய மட்டில், மருவுமின் - அடையுங்கள் (செய்யுங்கள்); எ-று.

மானிடரே! நீங்கள் 'நமக்கு மரணம் சமீபத்திலேயே இருக்கின்றது' என்று நினைத்து அஃதுங்கள்பால் வருதற்கு முன்னரே உங்களைத் தீக்கதியுட் சேர்க்கும் பாவச் செயல் களை யொழித்து உயர்கதியுட் புகுத்தும் அறத்தைச் செய் வீராக என்பது இதன்கருத்து.

இங்ஙனங் கூறியதனால் நிலையற்ற வாழ்க்கையை யுடைய மனிதர் விரைந்து புண்ணியத்தைத் தேடிக்கொள்ள வேண்டு மென்பது பெறப்படும். இக்கருத்தினை,

''கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான்
குறுகுதன்முன்
உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே-வெள்ளம்
வருவதற்கு முன்ன ரணைகோலி வையார்
பெருகுதற்க ணென்செய்வார் பேசு''

என்னும் நன்னெறி (30) ஆம் செய்யுளும் விளக்குதல் காண்க.

அறங்கூறினார் அருகக்கடவுளென்பது ஜைனமதக் கொள்கையாதலின், 'மாண்டார்' என்பதற்கு, 'அருகதேவர்' எனப் பொருள் கூறப்பட்டது. இதற்கேற்ப அருகக்கட வுளுக்கு, அறவாழிவேந்தன் நீதிநூலின் முனைவன், தரும ராசன் என்றபெயர்கள் சூடாமணி நிகண்டு தெய்வப் பெயர்த் தொகுதி 1,5 செய்யுட்களில் வருதல் காண்க. ஒல்லும் வகை யான் அறஞ்செய்தலாவது: இல்லறம் பொருளளவிற் கேற்ப

வும், துறவறம் யாக்கை நிலைக்கேற்பவும் செய்தலாம்; இதனை,

''ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்''

என்னும் 33 ஆம் திருக்குறட் செய்யுளானும், அதனுரையானு முணர்க. இன்று-இளமையையும், அன்று-முதுமையையும், என்று-இடைநின்ற பருவத்தையும் குறிப்பன. கொல்- ஐயப் பொருளில் வந்தது; ''கொல்லே ஐயம்'' என்னும் (தொல்-சொல்- இடை.20-ஆம்) சூத்திரம் பார்க்க. 'மாண்டார் அறம்' என்பதில் தொக்குநின்ற ஆறனுருபு செய்யுட்கிழமைப் பொருளது; திருக்குறள் 350ஆம் செய்யுளில் 'பற்றற்றான் பற்று' என்பதிலுள்ளது போன்றது. ''இயற்கையி.........'' என்னும் (தொல்-சொல்-வேற்று-19ஆம்) சூத்திரவுரை பார்க்க. இச்செய்யுள்- இருவிகற்ப இன்னிசைவெண்பா. (கூ)

37. *மக்களா லாய பெரும்பயனு மாயுங்கால்*
எத்துணையு மாற்றப் பலவானாற்- றொக்க
உடம்பிற்கே யொப்புரவு செய்தொழுகா தும்பர்க்
கிடந்துண்ணப் பண்ணப் படும்.

(இ-ள்) ஆயும்கால்- (மனிதர் உடம்பின் தன்மையை) ஆராயுமிடத்து, மக்களால்- மனிதரின் சரீரங்களால், ஆய- ஆகிய, பெரும்பயனும்- பெரியபயன்களும், ஆற்றப்பல - மிகப் பலவாம், ஆனால் (அங்ஙனம்பல) ஆனாலும், (அவை குறித்து மனிதர் அத்தகைய உடம்பினைப்போற்ற வேண்டு மென்று நினைத்து அறஞ்செய்வதைமறந்து), தொக்க- (முற்பிறப்பிற் செய்ததவத்தால் அறஞ்செய்தற் கேதுவாய்ச்) சேர்ந்த, உடம்பிற்கே - அவ்வுடம்பினுக்கே, எத்துணையும்- எவ்வளவும், ஒப்புரவு- ஏற்றகாரியங்களை, செய்து ஒழுகாது - செய்து கொண்டு (அவற்றின்வழியின்) நடவாமல், உம்பர்க் கிடந்து- மேலுலகத்தில் இருந்து உண்ண- (இன்பத்தை)

அனுபவிக்கும்படி, பண்ணப்படும்- (உயர்ந்த அறங்களைப்) புரியவேண்டும்; எ-று.

மனிதர் உடம்பினால், அறம்புரியப்படுதல்-காரண மாகப் புண்ணியப்பயன்கள் பல உண்டாயிருப்பினும் அவைகுறித்து அதனைப் போற்ற நினையாமல், மேலுலகத் தின்பத்தை அனுபவித்தற்குக் காரணமான தருமங்களைச் செய்யவேண்டு மென்பது இதன் கருத்து.

மானிடர்தேகம், அவர் அறங்களைச் செய்து பேரின் பத்தையடைதற்குக் காரணமான புண்ணியங்களைத் தேடிக் கொள்வதற்குத் துணையாயிருக்கின்றது; எனினும் விரைவில் அழியும்இயல்பினையுடையது; ஆதலின் அவர், அஃதிருக் கும்போதே அதனைத் தவம் நோன்பு முதலியவற்றால் வருத்தி அறத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். அங்ஙன மின்றி அவ்வும்பு புண்ணியப்பயனைத் தருவதா யிருக்கின்ற தென்று நினைத்து அறத்தைமறந்து அதனையே போற்றும் வேலையிலிருப்பின் அறப்பயனிற் சிறிதும் அடைதல் இயலாது. இது குறித்தே முனிவர், 'சரீரங்களா லுண்டாம் பயன்கள் பலவானாலும் அவ்வுடம்பைப் பேணாது அறத்தைப் பேணவேண்டும்' என்று கூறினார். மனிதர்பால் உடற்பற்றுச் சிறிதிருப்பினும் அறஞ்செய்தற் கூறுண்டாமாக லின், 'உடம்பிற்கே எத்துணையும் ஒப்புரவு செய்தொழுகாது' என்று முரைத்தனர். இதனால் சடத்தைப்போற்றாது அறத் தைப் போற்ற வேண்டுமென்பது வற்புறுத்திக் கூறப்பட்டது.

'தொக்க' என்பதற்கு, 'எழுதாதுக்களும் பொருந்திய' எனவும் பொருளுரைத்தல் அமையும்; இது- பெயரெச்சம்; இதில், தொகுபகுதி, அ- பெயரெச்ச விகுதி, ககரம் இரட்டி இறந்தகாலம் காட்டிற்று. 'மக்கள்' என்பது முதலாகு பெயராய் அவர்களின் உடம்புகளை யுணர்த்திநின்றது. 'பெரும்பயனும்' என்பதில், உம்-உயர்வு சிறப்புப் பொரு ளது. 'எத்துணையும்' என்பதன் உம்மை- முற்றுப் பொருளது;

'எத்துணையும்' என்பது, 'சிறிதும்' என்னும் பொருளில் நின்றது. ஆனால்- எதிர்கால வினையெச்சம்; 'ஒழுகாது' என்னும் எதிர்மறைவினைகொண்டு முடிந்தது; இதில் உயர்வு சிறப்பும்மை தொக்கது. 'உடம்பிற்கே' என்பதில், ஏ- பிரிநிலை, உம்பர்- முத்தியுலகம். ஒப்புரவு- தக்கசெயல். பண்ணப்படும் - ஒருவகை வியங்கோள்; இதற்குமுன் 'உயர்ந்த அறங்களை' என்னும் சொற்றொடர் இசையெச்ச மாகக் கூட்டி யுரைக்கப்பட்டது; இன்னும் இதனைச் செயப் பாட்டு வினைமுற்றாகவுங் கொள்ளலாம்; இதற்கும் 'அறம்' என்னும் சொல் வருவிக்க வேண்டும். உடம்பிற்கேற்ற ஒப்புரவுகளாவன: உண்பன, உடுப்பன, பூசுவன, முடிப்பன முதலிய அனுபவங்கள். இச்செய்யுளின் முன்னிரண்டிகள் இனவெதுகை யுடையன.

38. *உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி*
இறப்ப நிழற்பயந் தாஅங்- கறப்பயனும்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.

(இ-ள்.) உறக்கும் துணையது- கிள்ளியெடுக்கும் அளவுள்ளதாகிய (அதாவது சிறிய அளவுள்ளதாகிய), ஓர் ஆலம்வித்து- ஆலமரத்தின் ஒருவிதை, (விருத்தியாதற் குரிய நல்ல இடத்தில் வீழ்ந்து மரமாக முளைத்தெழுந்து வளர்ந்து கிளைகளையுடையதாய்), ஈண்டி-(நான்கு பக்கங்களிலும்) நெருங்கி, (விசாலித்து), இறப்ப-மிகுதியாக, நிழல் - நிழலை, பயந்தாங்கு- தருவதுபோல, அறப்பயனும் - தருமத் தாலுண்டாம் பயனான பொருளும், (தானங்கொடுக்கு மிடத்து), சிறிதாயினும்- சிறிய அளவினையுடையதா யிருப் பினும், தக்கார் கைப்பட்டக்கால்- (தானம் பெறுந் தகுதி யினையுடைய) பெரியார்கையிற் சேர்ந்தால், (அதுவே பெரும் புண்ணியமாக விருத்தியடைந்து), வான் சிறிது ஆ- (உலகத்தை மூடிக்கொண்டிருக்கும் பெரிய) ஆகாயமும் தனக்குச் சிறிதாகும்படி, போர்த்துவிடும்- (எல்லா விடங்

களிலும்) மூடி (அத்தர்மஞ்செய்தார்க்கு உயர்கதியை நல்கி) விடும்; எ-று.

ஆலின் ஒருசிறிய வித்தானது நற்பூமியிற் சேர்ந்து மரமாய் முளைத்தெழுந்து விசாலித்து வளர்ந்து பலருக்கும் நிழலைத்தருவது போல மனிதரால் தானஞ்செய்யப்படும் பொருள் சிறிதாயிருப்பினும் அதனை யேற்றுக்கொள்ளத் தக்க பெரியார்கையிற் சேர்ந்தால் அது பெரும்புண்ணியமாய் விருத்தியடைந்து உலகமெங்கும் பரவித் தருமஞ்செய் தார்க்கு உயர்பதவியைக் கொடுத்துவிடும் என்பது இதன் கருத்து.

ஆலின் சிறிய வித்தானது, காகம் முதலிய பறவைகள் அதன் பழத்தைக் கொண்டு போய்த் தின்னுங்காலத்தில் ஓரிடத்தில் வீழும்; அங்ஙனம் வீழ்ந்தபூமி வளமற்றதாயின், அது மரமாக முளைக்காமலே போய்விடும்; வளமுடைய தாயின் முளைத்து வளர்ந்து விசாலித்துப் பலருக்கும் தங்க, நிழலைத்தரும்; இதுபோல் மனிதரால் தானஞ்செய்யப்படும் பொருளும் கெட்டவர் கையிற்சேர்ந்தால் ஒரு பயனுமின்றிக் கெடும்; நல்லோர்கையிற் சேர்ந்தால் மிகுந்த புண்ணியத்தை யுண்டாக்கும்; அப்புண்ணியம் அறஞ்செய்தார்க்கு உயர்கதி யளிக்கும். ஆலின்வித்தைப்போல தானப்பொருள் பயன்தரு மென்றது உவமையணி. இதனால், மனிதர்க்குப் பொருளைத் தானஞ் செய்தலாகிய அறம் இன்றியமையாத தென்பதும், அதனையும் அவர்செய்யுமிடத்திற் செய்தாலே சிறந்தபயனை யடைவரென்பதும் பெறப்படும். இது, தருமத்தை மனிதர் உரியவிடத்தே செய்தல்வேண்டுமென்று வற்புறுத்திக் கூறிய தாகும்.

உறக்கல்- கிள்ளுதல்; ஆலின்வித்து நகத்தாற்கிள்ளி யெடுக்கும் சிறிய அளவினை யுடையதாதலின், 'உறக்குந் துணையது' என்று கூறப்பட்டது; கம்பரும்,

''வகிர்ப்படுத் துரக்கும் பற்றி வாய்களைப்
பிளக்கும்வன்றோல்
துகிற்படுத் துரிக்கும் செந்தீக் கண்களைச் சூலுஞ்
சுற்றிப்
பகிர்ப்படக் குடரைக் கொய்யும் பசையறப் பிசையும்
பல்கால்
உகிர்ப்புரை புக்கோர் தம்மை யுகிர்களா லுறக்கு
மூன்றி''

என்னும் (இராமாயணம்- இரணியன் வதைப்படலம்- 138-ஆம்) செய்யுளில் 'கிள்ளும்' என்றபொருளில், 'உறக்கும்' என்பதை பிரயோகித்திருத்தல் காண்க.

ஆலின் சிறியவித்து மரமாய்ப் பலர்க்கும் நிழல் தருமென்பதை,

''தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினு மண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே''

என்னும் நறுந்தொகைச் செய்யுளானு முணர்க.

பொருள் தருமத்தினாலேயே உண்டாதல் இயற்கை யாதலின் அதனை 'அறப்பயன்' என்றார் முனிவர்; இங்ஙனம், அறத்தினாற் பொருளுண்டா மென்பதை,

''சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு''

''அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை''

என்னும் திருக்குறட் செய்யுட்களானுணர்க. இனி, 'அறப் பயன் என்பதற்கு, 'தருமஞ் செய்தற்குரிய பொருள்' எனப் பொருளுரைப்பினுமாம். தக்கார் கையிலிடுந் தானப் பொருள் சிறிதாயினும் அதன் பயன் பெரிதாகு மென்பதை,

''இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்''

என்ற குறட்பாவினாலும், பரிமேலழகர் அதனுரையில் '' பொருளளவு'' தான்சிறிதாயினுந் தக்கார்கைப் பட்டக் கால் - வான்சிறிதாப் போர்த்துவிடும்' ஆகலின், இனைத் துணைத் தென்பதொன்றில்லை என்றுங் கூறினார்'' என்று இச்செய்யுளடிகளையே இடைப்பெய் துரைத்திருத்த லானும்,

''கயந்தரு நறும்புனல் கையிற் றீண்டலும்
பயந்தவர் களுமிகழ் குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பி னோங்கினான்
உயர்ந்தவர்க் குதவிய வுதவி யொப்பவே''

என்னும் (கம்பர் இராமாயணம்- வேள்விப்படலம் 35-ஆம்) செய்யுளானு முணர்க. தக்கார்- தகுதியுடையவர்; தகுதி யாவது - ஞான வொழுக்கங்களாற் பெற்ற உயர்வாம்; அவ்வுயர்வுடையார்-

''ஐவகைப் பொறியும் வாட்டி யாமையி னடங்கி யைந்தின்
மெய்வகை தெரியுஞ் சிந்தை விளக்குநின் றெரிய விட்டுப்
பொய்கொலை களவு காம மவாவிருள் புகாது போற்றிச்
செய்தவ நுனித்த சீலக் கனைகதிர்த் திங்க ளொப்பார்''

வாய்ச்சிவா யுறுத்தி மாந்தர் மயிர்தொறுஞ் செத்தி
னாலும்
பூச்சுறு சாந்த மேந்திப் புகழ்ந்தடி பணிந்த போதுந்
தூக்கியிவ் விரண்டு நோக்கித் தொல்வினை யென்று
தேறி
நாச்செறும் பராவுங் கொள்ளார் நமர்பிற ரென்று
முள்ளார்''

பாற்கதிர்த் திங்கட் கொட்பிற் பருமித்த களிறு போல
நூற்கதி கொண்டு கண்ணா னுகத்தள வெல்லை
நோக்கி
மேற்கதிக் கேணியாய விழுத்தவர்.................

.... ,,

என்று (சீவகசிந்தாமணி - முத்தியிலம்பகம் -226- 227- 228-ஆம்) செய்யுட்களில் தானம் பெறற்குரியாராகக் கூறப்பட்ட வர்; இவர்களே தானம் கோடற்கேற்ற சற்பாத்திரங்களாவர். சற்பாத்திரங்களில் நவபுண்ணியக் கிரமத்தால் செய்யப்படும் தானமே உத்தமமான தென்பது ஜைன நூல்களின் துணிபு;

''உத்தமர்க் கொன்பது புண்ணியத்தா லீவ
துத்தம தான மெனல்''

என்னும் அருங்கலச் செப்பு-136-ஆம் செய்யுள் இதனை விளக்கும். ஒன்பது வகைப் புண்ணியங்களாவன:- தானஞ் செய்வோர் பெரியாரை எதிர்கொள்ளல், அவரடியில் வீழ்ந்து வணங்கல், அவரைத் துதித்தல், அவர்க்கு அமர்தற்குத் தூமணி நிலங்காட்டல், அவர் பாதங்களைச் சுத்திசெய்தல், அவற்றிற்குஅருச்சனை புரிதல், மனந்தூயராதல், வாக்குத் தூயராதல், மெய்தூயராதல் என்பனவாம். இன்னும் சற்பாத் திரங்களில் இடுந்தானமே மிக்க பயனுடைத் தென்பதை,

''கேத்திர நன்ற தாகிற் கேடின்றி யிட்ட வித்து
வாய்த்ததா வெழுந்து நன்றாய் விளைதலைக் காட்டு மாபோல்
ஏத்தருந் தவத்தின் மிக்க வெல்லையில் குணத்தி னார்க்குப்
பாத்திர தான மீந்தாற் பயனுமற் றதனை யற்றே''

என்னும் நரிவிருத்தம்17. ஆம் செய்யுளும்,

''நன்னிலத் திட்ட வித்தினயம்வர விளைந்து செல்வம்
பின்னிலம் பெருக வீனும் பெறலருங் கொடையும் பேசிற்
புன்னிலத் திட்ட வித்திற் புற்கென விளைந்து போக
மின்னெனத் துறக்குந் தானத் தியற்கையும் விரித்து மன்றே''

என்னும் (சீவகசிந்தாமணி- முத்தியிலம்பகம்-225) ஆம் செய்யுளும், இப்பாடலின், உபமான உபமேயங்களையும் கருத்துக்களையும் தழுவி யுணர்த்துதல் உய்த்துணரத் தக்கதாம்.

'ஆலம் வித்து' என்பதில், அம்-சாரியை. 'நிழற் பயந்தா அங்கு' என்பதற்கேற்ப 'வித்து ஈண்டி' என்ற சொற்களுக் கிடையில் சில சொற்றொடர்கள் இசையெச்சமாக வருவித்துரைக்கப் பெற்றன. பயந்தாஅங்கு- செய்யுளிசை நிறைக்கவந்த அளபெடை; இதில், ஆங்கு- உவமையுருபு. 'அறப்பயனும்' என்பதில், உம்மை- முன் வந்த உவமையைத் தழுவியதாகலின் இறந்தது தழுவிய எச்சப் பொருளது; அசை நிலையெனலுமாம். தான்- அசை. 'பயந்த' என்பது அகரஈறு தொகுத்து 'ஆங்கு' என்பதனோடு புணர்ந்து 'பயந்தாஅங்கு' என அளபெடுத்து வந்தது; பயத்தால் என்னும் வினையெச்சம் 'பயந்து' எனத் திரிந்து புணர்ந்த தெனினுமாம். 'சிறிதாயினும்' என்பதிலுள்ள உம்மை-

இழிவுசிறப்புப் பொருளது. 'போர்த்துவிடும்' என்பதில், விடு- துணிவுப் பொருளு ணர்த்தும் விகுதி. அறப்பொருள் தக்கார் கைப்படுதலால் உண்டாவது புண்ணியமே யாதலின், அக்குறிப்புநோக்கி, 'வான் சிறிதாப் போர்த்துவிடும்' என்பதன்முன் 'புண்ணிய மாக விருத்தியடைந்து' என்னும் சொற்றொடர்கள் இசை யெச்சமாக வருவித்துரைக்கப் பட்டன. புண்ணிய மிகுந்தால் உயர்கதியை நல்குமாதலின்; அதுவும் அப்புண்ணிய மிகுதியோடு கூட்டியுரைக்கப் பட்டது. (அ)

39. *வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்*
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.

(இ-ள்). வைகலும்- நாள்தோறும், வைகல்- நாள் கழிதலை, தம்வாழ்நாள்மேல்- தம்முடைய ஆயுள் நாட் களிலே, வைகுதல் வைத்து- கழிதலாகவைத்து, வைகலை- (அவ்வாறு) நாள்கழிதலை, உணராதார்- அறியாதவர்கள், வைகலும்- நாள்தோறும், வைகல்-நாள்கழிதல், வர-வந்து கொண்டே யிருக்க, கண்டும்-(அதனைப்) பார்த்தும், அஃது உணரார்- அதனை அறியாதவர்களாய், (அதன் கழிவுத் தன்மையையுணர்ந்து ஆயுள் விரைந்து முடிந்து உடம்பழியு மென்றஞ்சி மறுமைக்குதவியாய அறத்தைச் செய்யாதவர் களாய்), வைகலும்- தினந்தோறும், வைகலை-(அங்ஙனம் ஆயுள்) நாள்கழிதலை, வைகும் என்று- (எப்பொழுதும் அது நிலைத்து) இருக்குமென்று நினைத்து, இன்புறுவர்- மகிழ்ச்சி அடைவார்கள்; (இச்செய்கை மதியற்றதாகும்; ஆயுள் கழிதலையுணர்ந்து விரைந்து அறஞ்செய்வோரே அறிஞ ராவார்); எ-று.

தினந்தோறுமுண்டாகும் நாட்கழிவானது மனிதரு டைய ஆயுளைக் கழித்து வருகின்றது. அதனை யுணராதவர்

கள், அங்ஙனம் நாட்கழிவு வந்து ஆயுள்சென்று கொண்டிருத் தலைப்பார்த்தும், அதன் போக்கையுணர்ந்து விரைவில் அறஞ் செய்யாதவர்களாய் எப்பொழுதும் அவ்வாயுள் நிலைத்திருக்கு மென்று உலகபோகங்களை அனுபவித்து மகிழ்வர்; இச்செய்கை பேதைமை யுடையதாகும்; ஆயுள் நிலையற்ற தென்றெண்ணி அறம்புரிவோரே அறிஞராவர் என்பது இதன் கருத்து.

இங்ஙனம் கூறியதனால், மனிதர் ஆயுள் நிலையற்ற தாதலின் அஃதிருக்கும்போதே அவர் மறுமைக்குரிய தர்மத் தைத் தேடிக்கொள்ள வேண்டுமென்று அறஞ்செய்தலை வற்புறுத்தியதாகும். 'வைகல்' என்பது தங்குதல், கழிதல் என்னும் இருபொருள்களையும் தரும். நாள் சூரியோதயந் தொடங்கி மறு உதயம்வரை அறுபது நாழிகையுடையதாய்த் தங்குதலும், பின்னர்க்கழிதலு முடையதாகலின், அவ்விரு பொரு ளொரு சொல்லாகிய 'வைகல்' என்பதற்கு நாள் என்றும், நாட்கழிவு என்றும் பொருள்கள் உரைக்கப்பட்டன. இங்ஙனம் இம்மொழி இருபொருள்களையும் தருவதை,

''ஆடலின் னரவ்வமு மங்கைகொட்டி நெஞ்சுணப்
பாடலின் னரவமும் பணைமுழவ் வரவமும்
கூடுகோலத் தீஞ்சுவைக் கோலயா ழரவமும்
வாடலில்ல வோசையால் வைகனாளும்
வைகின்றே''

என்னும் (சீவகசிந்தாமணி- நாமகள் இலம்பகம்-156-ஆம்) செய்யுளில் 'வைகல் நாளும் வைகின்றே' என்பதற்கு, 'நாள் கள்தோறும் நாள்கழியா நின்றது' என நச்சினார்க்கினியர் பொருள்வரைந் திருத்தலானு முணர்க. 'வைகலும்' என்பதன் உம்மை - முற்றுப் பொருளது 'கண்டும்' என்பதிலுள்ள உம்மை - இழிவு சிறப்புப்பொருளது. உணரார்- முற்றெச்சம். நாள்மேல்- ஏழாம் வேற்றுமை விரி; மேல்- ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. இச்செய்யுளில் சொல்லும்

பொருளும் பின்னும் பன்முறைவந்தது சொற்பொருட் பின் வருநிலையணி;

''முன்வருஞ் சொல்லும் பொருளும் பலவயின்
பின்வரு மென்னிற் பின்வரு நிலையே''

என்னும் தண்டி யலங்கார சூத்திரத்தால் இது துணியப்படும்: இவ்வணி,

''சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்''

என்ற திருக்குறளுரையில், 'சொல்லின் என்பது- இருவழியும் மிகையாயினும், சொற்பொருட்பின் வருநிலையென்னும் அணிநோக்கி வந்தது; ''வைகலும் வைகல்வரக்கண்டும்'' என்பதுபோல' என இச்செய்யுளையே எடுத்துக்காட்டிப் பரிமேலழகரால் விளக்கப்பட்டிருத்தலுங் காண்க; இன்னும் திருக்குறள் ''சொல்லுக சொல்லை.........'' என்னும் 645ஆம் செய்யுளிலும் இவ்வலங்காரம் அமைந்திருத்தல் உய்த் துணரற்பாலது. 'அஃதுணரார்' என்ற கூவிளங்காய்ச் சீரில் ஆய்தம் மெய்போல் ஒலித்து அகரக்குறிலையடுத்து நேரசை யமைய நின்றது. *(கூ)*

40. *மான வருங்கல நீக்கி யிரவென்னும்*
ஈன விளிவினால் வாழ்வேன்மன்-ஈனத்தால்
ஊட்டியக் கண்ணு முறுதிசேர்ந் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்கு மெனின்.

(இ-ள்.) (சிலர் உடல் நிலைக்குமென் றெண்ணி அதனை வளர்த்தற்பொருட்டு இழிதொழில்களைச் செய்து, அதற்குணவூட்டி வருகின்றார்கள்; அங்ஙன மூட்டினும் அது நிலைபெறாது; அவர்களுடைய எண்ணத்தின்படி), இ உடம்பு- (என்னுடைய) இந்த உடம்பானது, ஈனத்தால்- இழி

வாகிய தொழில்களினால், (நான் உணவுகளைத்தேடி), ஊட்டியக் கண்ணும்- (இதற்கு) ஊட்டி (இதனை வளர்த்த) விடத்தும், உறுதிசேர்ந்து- வலிமையடைந்து, (நாட்கள் செல்லச்செல்ல அவ்வன்மை குறைந்து அழிந்துவிடாமல்), நீட்டித்து-(நெடுங்காலம் வரை நிலைபெறுதல்) அதிகரித்து, நிற்கும் எனின்- நிலைபெற் றிருக்குமானால், (நானும்) மானம் அருக்கலம் - மானமாகிய பெறுதற்கரிய ஆப ரணத்தை, நீக்கி - தள்ளி, இரவு என்னும் - (உணவுப்பொருள் முதலியவற்றை) யாசித்தல் என்கின்ற, ஈனம் இளிவினால் - மிக்க இழி வினாலே (அதாவது மிக்க இழிவைத்தரும் தாழ்ந்த செய்கையால்), வாழ்வேன்மன் - (உடலை வளர்த்து) உயிர் வாழ்வேன்; (அது நிலைபெறுதலுமில்லை, நான் இழி வினால் வாழ்வது மில்லை); எ-று.

இச்செய்யுள், இதனாசிரியரால் தன்மையிடத்திற் கூறப்பட்டதாகும். 'நான் இங்ஙனம் இதனைச் செய்வேன்' என்றதனால் 'மற்றையரும் செய்வாராக' என்று எல்லோ ருக்கும் தர்மத்தை வற்புறுத்திக் கூறியதாகும்.

சிலர், நிலையற்ற உடம்பு நிலைக்குமென்றெண்ணி, அதனை வளர்த்தற்பொருட்டு ஈனத் தொழில்களைச் செய்து உணவுதேடி அதற்கூட்டுகின்றார்கள்; அங்ஙனமூட்டினும் அது நிலைபெறாது. அவரெண்ணப்படி அவ்வாறு அவ் விழிந்த தொழில்களால் வரும் உணவை அதற்கூட்டி அதனை வளர்த்தவிடத்தும் அது நிலைபெற்றிருக்குமானால், நான் ஈனத்தொழில் புரிதலால் அதனைப்போற்றி உயிர்வாழ் வேன்; அஃதங்ஙனம் நிலைபெறவு மாட்டாது, நானும் அதனை இழிதொழிலால் வளர்த்து உயிர்வாழவுமாட்டேன் என்பது இதன்கருத்து.

இங்ஙனம் கூறியதனால், மனிதர்தேகம் நிலை பெறாது; அத்தகைய அதனை வளர்த்தற் பொருட்டு மனிதர் இழிதொழில்களைச் செய்துழலுதல் கூடாது; அஃதிருக்கும்

பொழுதே நற்கதியைத்தரும் அறத்தைத் தேடிக்கொள்ளல் வேண்டு மென்பதை விளக்கியதாகும். மனிதர் அணியும் மற்ற ஆபரணங்கள் நிலையற்ற வுடம்பினுக்கழகுசெய் தொழிவன; மானமாகிய ஆபரணமோ நிலைபெற்றவுயிர்க் கழகுசெய்து என்றும் அழியாதிருப்பது; ஆபரணத்தை மனிதர் இழந்தாலும் மீண்டும் பெறலாம்; மானத்தை யிழப்பின் பெறலரிது. ஆகலின், அது, 'அருங்கலம்' என்று கூறப்பட்டது. 'மானவருங்கலம்' என்றது உருவகவணி. 'மன்' என்னும் இடைச்சொல் இங்கு ஒழியிசைப் பொருளில் வந்ததாகலின், அதனையுடைய, ''ஈனத்தாலூட்டியக் கண் ணும்.... இவ்வுடம்பு நீட்டித்து நிற்குமெனின், மானவருங் கல நீக்கி யிரவென்னும் ஈனவிளிவினால் வாழ்வேன்மன்'' என்ற சொற்றொடர்கள், ''உடம்பு எதனாலும் நீட்டித்து நில் லாது; ஆதலால் யான் அதன்பொருட்டுப் பொருள்யாசித்து ஈனப்பட்டு வாழேன்'' என்னும் பொருள்பயந்து நின்றன. ஒழியிசையாவது- எச்சமாய் ஒழிந்த சொற்பொருளைச் சேர்ப்பிப்பது;

> *''கழிவே யாக்க மொழியிசைக் கிளவியென்*
> *றான்மூன் றென்ப மன்னைச் சொல்லே.''*

என்னும் (தொல்-சொல்-இடை-4ஆம்) சூத்திரத்தான் இது துணியப்படும். மக்களாயினார்க்கு மானம் சிறந்ததென்பது,

> *''மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்*
> *உயிர்நீப்பர் மானம் வரின்''*

என்னும் திருக்குறட் செய்யுளானும், யாசித்தல் இழிவென் பது,

> *''ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்*
> *கிரவி னிளிவந்த தில்''*

என்னும் அந்நூற்பாவானும் விளங்கும். ஈன இளிவு- ஒரு பொருட்பன்மொழி. ஊட்டியக்கண்- எதிர்கால வினையெச்சம்; இதில், கண்- விகுதி; இதனோடு சார்ந்துவந்த உம்மை - இழிவுசிறப்புப் பொருளது. ஊட்டு- பிறவினைப் பகுதி. 'நீட்டித்து' என்பதில் டகரவொற்று- விரித்தல் விகாரத்தால் வந்தது. (க0)

அதிகாரம் 5

தூய்தன்மை

'தூய்தன்மையைக் கூறுவது' என்பது இதன் பொருள். 'தூய்தன்மை' யென்பது இரட்டுறமொழிதலால், 'தூய்து + அன்மை' எனவும் பிரிக்கப்படும். 'தூய்தன்மை' என் பது - பண்புத்தொகை நிலைத்தொடரும், 'தூய்து அன்மை' என்பது - எழுவாய்த் தொகாநிலைத் தொடருமாம். இவ்வதி காரம் மகளிருடம்பினை இழித்துக் கூறுவதாகலின், 'தூய் தன்மை' எனக் கொள்ளுமிடத்து அதற்குத்தக 'மகளி ருடம்பை விரும் பாத சுத்தமான தன்மையைக் கூறுவது' என்றும், 'தூய்து + அன்மை' எனக்கொள்ளுமிடத்து 'மனித சரீரத்தின் - மகளி ருடம்பின் சுத்தமுடைய தல்லாத தன்மையைக் கூறுவது' என்றும் இது பொருள்படும். இனி, இதனை, 'தூயதன்மை' எனக்கோடலு மொன்று. அங்ஙனங் கொள்ளுமிடத்தும் 'தூய தன்மை' 'தூயது + அன்மை' என இரண்டுவகையாகப் பிரித்து இவ்வாறே பொருள்கொள்க. தூயதன்மை- குறிப்புப் பெய ரெச்சத் தொடர். பெண்களின் உடம்பின் இழிவை உணராமல் அது சிறந்ததென மதித்து மனிதர் மயங்குதல், அவரதுமனம் அறநெறிக்கட்புகாமல் கெடுதற் கேதுவாமாகலின், அங் ஙனம் மயக்குறாதிருத்தற் பொருட்டு அவ்வுடம்பின் இழிவு இவ்வதிகாரத்திற் கூறப்படுகின்றது. இது, மனிதரை அற

நெறிக்கட் புகுத்துவ தாதலின் அறன் வலியுறுத்தலின் பின் வைக்கப்பட்டது.

41. *மாக்கேழ் மடநல்லா யென்றரற்றுஞ் சான்றவர்*
நோக்கார்கொ னொய்யதோர் துச்சிலை -
யாக்கைக்கோர்
ஈச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல்.

(இ-ள்). (மகளிர் உடம்பு மிக்க அருவருப்புடையது) யாக்கைக்கு-(அந்த) உடம்பில், ஓர் ஈசிறகு அன்னது - ஈயின் ஒரு பக்கத்துச் சிறகின் அளவினை யுடையதாகிய, ஓர்தோல் -மிகச் சிறியதோல், அறினும்- அறுபட்டுப் போனாலும், (அது மிகப்புண்ணாகி அதைக் குத்துவதற்குக் காக்கை அதனிடத்தேவந்து சேரும்; அப்போது) காக்கை-(அங்ஙனம் நெருங்கும்) அக்காக்கையை, கடிவது - (அடித்து) ஓட்டுவ தாகிய, ஓர்கோல்- ஒருகொம்பு, வேண்டும்- வேண்டியிருக் கும், (அங்ஙனமிருந்தும் பெண்ணாசைக்குட்பட்ட ஆடவர் அவ்வுடம்பினை விரும்பி அதனையுடைய மாதரைப் புகழ் கின்றார்கள்; அவ்வாறு கொண்டாடத் தொடங்கி அவர் களைப் பார்த்து), மாக்கேழ்- மாந்தளிரின் நிறம்போன்ற நிறத்தினையும், மடம்-இளமையையும் (உடைய), நல்லாய் -பெண்ணே!, என்று அரற்றும்- என்றுசொல்லிக்கதறுகின்ற, சான்றவர்- பெரியோர் (அறிவற்றசிறியர்), நொய்யது- அற்பத் தன்மை யுடையதாகிய, ஓர்-ஒரு, துச்சிலை-ஒதுக்கிடமாகிய அவ்வும்பின் இழிவை, நோக்கார் கொல்- (ஆராய்ந்து) பார்க்க மாட்டார்கள் போலும், (அங்ஙனம் ஆய்ந்துணர்ந் திருந்தால் அதனைப் புகழ்ந்து அதன்மீது விருப்பம் வைக்கமாட் டார்கள்) எ-று.

மாதரின் உடம்பு, தன்னிடத்தே சிறு புண்ணுண்டா னாலும் அதில் காக்கைபாய்ந்து குத்தத்தக்க அருவருப்புடை யது; அங்ஙனமிருந்தும் அவ்வுடம்பினை யுடையாராகிய

மாதரைச் சிலர் விரும்பிப் புகழ்கின்றனர்; அவர் அச்சரீரத்தின் இழிதகவை உணராரர்போலும்; அறிந்திருந்தால் அதனை அவ்வாறுவிரும்பார் என்பது இதன்கருத்து.

இங்ஙனங் கூறியதனால் உயர்கதியிற் சேரவிரும்பு வோர், இழிந்த தன்மையையுடைய மாதரின் உடல் நலத்தை விரும்பாமல் தூய தன்மைபெற்று அறநலத்தை அவாவுதல் வேண்டுமென்பது பெறப்படும்.

'மாக்கேழ் மடநல்லாய்' என்பதற்கு, 'மா- அழகை யும், கேழ்-ஒளியையும், மடம்- இளமையையும், நல்லாய்- நற்குணத்தையுமுடைய பெண்ணே!' எனப் பொருள் கூறினு மாம். 'மாக்கேழ்' என்பதற்கு 'சிறந்த நிறத்தையும்' என வுரைத்தலுமொன்று. அரற்றுதல்- பெருந்தொனி யுண்டாகக் குறைவுபாடு குறித்த வார்த்தைகளைக்கூறிக் கதறுதல்; அஃதிங்கு இழிவுகுறித்து மாதரைப்புகழ்ந்து கூறுதற்கு வந்தது. சான்றவர்- நற்குண நற்செயல்களால் நிறைந்தவர்; சால்பு- நிறைவு; அதனையுடையார்- சான்றவர்' என்றது, இழிவை விளக்கும் பிறகுறிப்பில் வந்தது; சோறுண்ணா நின்றான் கற்கறித்து அடுதற் றொழிலினனிடத்து, 'நன்கட் டாய்' என்றவழித் 'தீங்கட்டாய்' என்று பொருள்படுதல் போல இதனையுங்கொள்க. அணி இலக்கணங் கூறுவோர், இன்னோ ரன்னவற்றைப் பிறிதுமொழிதலென்பதோ ரணி யென்ப; இன்னும் இது 'எதிர்மறை யிலக்கணை' என்றுஞ் சொல்லப்படும்;

''தெரிபுவேறு நிலையலுங் குறிப்பிற் றோன்றலு
மிருபாற் றென்ப பொருண்மை நிலையே''

என்னும் (தொல்-சொல்-பெய. 3ஆம்) சூத்திரவுரை பார்க்க. ஓர் துச்சில், ஓர்தோல் என்னுமிரண்டிடங்களினும் வந்த 'ஓர்' என்னுஞ் சொல் 'அற்பம்' என்னும் பொருள் குறித்து நின்றது. துச்சில்-ஒதுக்கிடம்; அதாவது குப்பை முதலியவற்றை

ஒதுக்கிச் சேர்க்குமிடம்; உடம்பும் அழுக்கு முதலியன சார்ந் திருக்கு மிடமாகலின், அவ்வொதுக்கிடம் உவமையாகு பெயராய் அதனையுணர்த்தி நின்றது; இன்னும் 'துச்சில்' என்பதற்கு, 'தங்குமிடம்' என்றும் பொருளாதலின் 'உயிர் தங்குமிடமாகிய உடம்பு' எனப் பொருள் கோடலுமொன்று; 'புக்கில்' என்றும் பாடமுண்டு; இப்பாடங்கொள்ளுமிடத்து இதற்கு, 'உயிர்புகுந்து தங்கியிருக்கு மிடமாகிய உடம்பு' எனப் பொருள் கொள்க. இனி, 'துச்சில்' எள்பதற்கு 'ஒதுக் கிடம்' எனப் பொருள் கொள்ளுமிடத்து, அது, சிறிதுகாலம் உயிர் ஒதுங்கித்தங்கியிருக்கும் வேற்றிடம், அதாவது, வாதம் முதலியன தங்குமிடம் எனப் பொருளுரைப்பினும் பொருந் தும்; இக்கருத்து திருக்குறள் 340 -ஆம் செய்யுளுரையால் உணரப்படும். 'நோக்கார்கொல்' என்பது 'மாதருடம்பின் இழிவை அவர் ஆராய்ந்து பார்த்திருப்பாராயின் இங்ஙனம் அவரைப்புகழார் என்பதை விளக்கிநின்றது.

நல்லாள்-பெண்; இங்கு விளியில் ஈற்று ளகரவொற்று யகர வொற்றாய்த் திரிய 'நல்லாய்' என நின்றது;

''வினையினும் பண்பினு
நினையத் தோன்று மாளெ னிறுதி
யாயா கும்மே விளிவயி னான''

என்னும் (தொல்-சொல்-விளி.29-ஆம்.) சூத்திரம் பார்க்க. சான்றவர்- வினையாலணையும் பெயர்; இதில் 'சால்' என் னும் உரிச்சொல் பகுதி, அர்- விகுதி, ற்- இறந்தகால இடை நிலை, அதன்பின், அ-சாரியை, 'சால்' என்பதனீற்று லகர வொற்று னகர வொற்றானது- விகாரம்; விகுதிக்குமுன் வகர வுடம்படுமெய் தோன்றிற்று. கொல்-வினாவொடு இரக்கம். நொய்யது - பண்படியாகவந்த பெயர்; இதில், நொய்-பகுதி; து-ஒன்றன்பால் விகுதி, அ-சாரியை; 'தனிக்குறின் முன் னொற்றுயிர்வரி னிரட்டும்' (நன்-மெய்.2) என்னும் விதிப் படி யகரவொற்றிரட்டியது. 'யாக்கைக்கு' என்பதில், குவ்

வுருபு இடப்பொருளில் வந்தது, உருபுமயக்கம். 'அறினும்' என்பதன் உம்மை-இழிவுசிறப்புப் பொருளது. கடிவது-வினையாலணையும் பெயர்; அது, கோல் என்பதனோடு சேர 'கடிவதுகோல்' என்னும் இருபெயரொட்டுப் பண்புத் தொகையாயிற்று. 'வேண்டுமே' என்பதில், ஏ-அசை; இகழ்ச் சிக்குறிப் பெனினுமாம். 'ஓர் துச்சில், ஓர்தோல், ஓர்கோல்' என்பவற்றில், மெய்ம்முதல் மொழிவந்த விடத்தும் ஒன்று, ஓர் என்றாய்நின்றது, செய்யுண் முடிபுபற்றி வந்ததென்க; யகரமுதல் வருமொழிக்குப்பிறிதுவிதி வகுத்த (தொல்-எழுத்-குற்-பு. 74-ஆம்) சூத்திரவுரையில் ஆசிரியர் நச்சினார்க் கினியர் யகரமுதல் மொழி வந்து புணருமிடத்து, ஒன்று, இரண்டு என்னும் எண்கள் ஓர், ஈர் என நிற்குமென்பதும், பிறவுங்கூறி, ''இவை செய்யுண்முடிபு; இன்னும் இதனானே இங்ஙனம் வருவன பிறவும் அறிந்து முடித்துக் கொள்க'' என்றதனானே இது துணியப்படும். இச்செய்யுளின் மூன்றா மடி இனவெதுகை. இது ஒரு விகற்பநேரிசை வெண்பா. (க)

42. *தோற்போர்வைமேலுந் துளைபலவாய்ப்*
பொய்ம்மறைக்கு
மீப்போர்வை மாட்சித் துடம்பானான்-
மீப்போர்வை
பொய்ம்மறையாக் காமம் புகலாது மற்றதனைப்
பைம்மறியாப் பார்க்கப் படும்.

(இ-ள்) உடம்பு - (மாதரின்) உடம்பானது, (தான் போர்த்துக் கொண்டிருக்கும் இழிவான), தோல் போர்வை மேலும் - தோலாகிய போர்வையின்மீதும், துளைபல ஆய்-பலதுளைக ளுண்டானதாய், (ஓர் இழிந்தவேடந்தாங்கி), மறைக்கும்- அதனை மறைக்கின்ற, மீப்போர்வை- மேலணி யும் ஆடையாகிய போர்வையினால், (உண்டாய), மாட் சித்து- அழகினையுடையது, ஆனால்-, (அவ்வழகு இயற்கை யானதன்று), பொய்-பொய்யாகும், (அதாவது வேடமாகும்), (ஆதலால், அங்ஙனம்) மீப்போர்வை- அந்த மேற்போர்வை

யானது மறைஆ- மறைத்து நிற்பதாக, பொய்- அப்பொய்த் தோற்றத்தினிடத்தே, (உள்ள), காமம்- இன்பத்தை, புகலாது- விரும்பாமல், அதனை- அவ்வேட வுடம்பினை, பை மறி ஆ- ஒருபையின் திருப்புதலாக, (அதாவது உட்பக்கம் புறம்பே தெரியத் திரும்பிய ஒருபையைப் போல), பார்க்கப்படும்- (ஆராய்ந்து) பார்க்கவேண்டும்; எ-று.

மாதர் உடம்பானது, பலதுளைகளை யுடையதாய்த் தோற்போர்வையை மேலே போர்த்துக் கொண்டிருக்கும் இழிவினை யுடையதாயிருந்தும், அதனை மறைக்கும் ஆடை யாகிய மேற்போர்வையால் ஒருவித அழகைச் செய்து கொண்டிருக்கின்றது; ஆனால் அவ்வழகானது பொய்த் தோற்றமாகும். அங்ஙனம் மேற்போர்வை மறைக்க வெளித் தோற்றத்தி லுண்டாகும் பொய்யழகின் இன்பத்தை விரும் பாமல் அத்தோற்றத்தோடு கூடியவுடம்பினை, உட்பக்கம் வெளிப்பக்கமாகத் திருப்பப்பட்ட ஒருபையின் ஆபாசத் தைப் பார்ப்பது போல அதனுட்பொதிந்த ஆபாசங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்பது இதன்கருத்து.

உடம்பு-ஆண், பெண் இருபாலார்க்கும் பொது வெனினும் அதிகாரப் பொருண்மைநோக்கி ஈண்டு அது பெண்ணுடம்பெனக் கூறப்பட்டது. துளை- நவத்துவாரங் கள்; அவை: கண் இரண்டு, காதிரண்டு, மூக்கின் துளை இரண்டு, வாய், குதம், குய்யம். உடம்பானது இவ்வொன்பது துவாரங்களையு முடையதாய் உள்ளே பல அசுத்தப் பொருள் கள் நிரம்பப்பெற்றுத் தோற்போர்வையால் மூடப்பட்டி ருக்கும்; அதனால், உட்பொதிந்த ஆபாசங்க்ள் வெளித் தோற்றுவதில்லை; அங்ஙனம் அவை மறைக்கப்பட்டி ருப்பினும், அத் தோற்போர்வையுடம்பும் மேலே ஒன்று மில்லாவிடின் அருவருப்புடையதாகவே யிருக்கும்; அவ்வரு வருப்பு மறையுமாறு ஆடை முதலியவற்றால் அது மூடப் பட்டபோது வெளித்தோற்றத்தில் அழகுடையதுபோல் விளங்கும். அம் மேற்போர்வையை நீக்கி அவ்வுடம்பின்

உட்பாகத்தை வெளிப்பக்கமாகத் திருப்பிப் பார்க்கின் அது மிக்க ஆபாசங்கள் பொதிந்த பைபோற் காணப்படும். அப்போததனைப் பார்ப்பார்க்கு மிக்க அருவருப்புண்டாகும். ஆதலின், அஃதியற்கை யழகுடைய தன்றென்றும், அதன் மீது விருப்பங்கொள்ளாது, பையைத் திருப்பி உட்பக்கத்தி லுள்ள அழகற்றதன்மையைத் தெரிந்து கொள்ளுதல்போல அதன் உட்பக்கத்திற்சேர்ந்த அசுத்தங்களை ஆராய்ந்துணரல் வேண்டுமென்றும் கூறினார் முனிவர். பையானது தையல் முதலிய வேலைப்பாடுகளால் வெளிப்பக்கம் அழகுடைய தாயிருக்கும்; உட்பக்கம் அவ்வலங்கார மின்றியதாயிருக்கும்; ஆதலின் அதனுட்பக்கத்தைத் திருப்பினால் ஆபாசங்கள் வெளிப்படும். இங்ஙனமே உடம்பினுட் பக்கத்தைத் திருப்பிப்பார்க்கும்போதும் அசுத்தப் பொருள்கள் தோன்று மாகலின், அப்பையைத் திருப்பிப் பார்ப்பதுபோல அதனை யும் திருப்பி அதனுட்பக்கத்தை ஆராய்ந்துபார்த்து அதன்மீது வெறுப்புறுதல் வேண்டுமென்றார்.

இச்செய்யுள், மொழிமாற்றுப் பொருள்கோளதாக லின், இதன்கணுள்ள சொற்கள் முன்னும் பின்னும் பொரு ளெதிரியையுமாறு மாற்றிக் கொள்ளும் வழிக் கொளுவப் பெற்றன; (தொல்-சொல்-எச்-13-ஆம்) சூத்திரம் பார்க்க) இன்னும் இதில் சில சொற்கள், இசை யெச்சமாகவும் வருவித்துரைக்கப் பெற்றுள்ளன. உடம்பின் மேல் தோன்றும் அழகு, ஆடைமுதலியன அணிதலாகிய செயற்கையால் உண்டாய் ஒழிவதாகலின் அது, 'பொய்' எனப்பட்டது. உடம்பினுட்பக்கத்தின் ஆபாசம், பையின் மறிக்கு (அதாவது திருப்புதலாகிய உட்பக்கத்திற்கு ஒப்பிடப்படுவது, (இறை யனாரகப்பொருள் சூ-1உரையில்) ''பைம்மறியா நோக்கப் பருந்தார்க்குந் தகைமைத்து'' என வருதலானு முணரப்படும். புகலுதல்- விரும்புதல்; இஃதிப்பொருளில் வருமென்பதை, சீவகசிந்தாமணி 9ஆம் செய்யுளில் 'புகல்' என்பது, 'மகிழ' என்ற பொருளிலும், 108ஆம் செய்யுளில் 'புகற்சி' என்பது, 'விரும்பப் பண்ணுதல்' என்ற பொருளிலும், 870ஆம்

செய்யுளில் 'புகற்றும்' என்பது, 'விரும்பப்பண்ணும்' என்ற பொருளிலும், 388-ஆம் செய்யுளில் 'புகன்று' என்பது, 'மகிழ்ந்து' என்ற பொருளிலும் வருதலால் உணர்க. இனி, 'காமம் புகலாது' என்பதற்கு, (அப்பொய்யழகின்மேலுண் டாகும்) மோகத்தை எடுத்துக் கூறாமல்' என்றும், (அப்பொய் யழகைப் பற்றிப்) புனைந்துரை கூறாமல்' என்றும் பொருள் கொள்ளலாம். புனைந்துரையாவது- ஒன்றில் இல்லாததை ஏற்றி அதனை அலங்கரித்துக் கூறுதலாம்; இஃதப் பொருளின் (காமத்தை) விருப்பத்தை யுடையாரிடத்தே அதுகாரணமாக நிகழ்வதாதலின் 'காமம்' என்றும் சொல்லப்படும்; ''காமஞ் செப்பாது கண்டது மொழிமோ'' என்ற இறையனார் கூற்றுக் களில் 'காமம்' என்பது இப்பொருள் குறித்து நிற்றல் காண்க.

போர்வை- போர்க்கப்படுவது; இதில், ஐ- செயப்படு பொருள் விகுதி, வ்- எழுத்துப்பேறு. மாட்சித்து- குறிப்பு வினைமுற்று. மறை- மறைப்பது; இதில், வினைமுதற் பொருள் விகுதிகுறைந்து நின்றது. மறி- முதனிலைத் தொழிற் பெயர்; மறித்தல்- திருப்புதல். ஆ- செயவென் வாய்ப்பாட்டு வினையெச்சம்; இஃதீறு குறைந்து நின்றது. மற்று-அசை பார்க்கப்படும்- ஒருவகை வியங்கோள் வினைமுற்று. இச் செய்யுளின் முதலிரண்டடிகள் இனவெதுகையுடையன; மூன்றாமடி ஆசிடையிட்டவெதுகை.

43. *தக்கோலந் தின்று தலைநிறையப் பூச்சூடிப்*
பொய்க்கோலஞ் செய்ய வொழியுமே-எக்காலும்
உண்டி வினையு ளுறைக்கு மெனப்பெரியோர்
கண்டுகை விட்ட மயல்.

(இ-ள்.) (உணவு முதலியவற்றால் உறுதியாகி வனப் புடையது போல் தோன்றுகின்ற உடம்பின் அசுத்தங்களைப் பெரியோருணர்ந்து வெறுத்திருக்கின்றனர்; அத்தகைய அசுத் தங்களையுடைய உடம்பினை மனிதர், பிறர் கண்டு மகிழ்வ ரென்று வேறு சில பொருள்களால் அலங்கரிக்கின்றனர்;

அங்ஙனம்), எக்காலும்- எந்தநேரத்திலும், உண்டி- (மனிதர் உண்ணும்) உணவின், வினையுள்- தொழிலினாலேயே, உறைக்கும்- (உடம்பு) அழுத்த முடையதாகும், (இதில் ஆபாசமேயன்றி வேறொரு சிறப்புமின்று), என- என்று, பெரியோர்-(அறிவிற்சிறந்த) பெரியோர்கள், கண்டு- ஆராய்ந் துணர்ந்து, கைவிட்ட- (வெறுத்து) நீக்கிய, மயல்- (அத்தேகத் திலுள்ள) செத்தைகளாகிய அசுத்தங்கள், (அவ்வுடம்பினை யுடையார்), தக்கோலம் தின்று வால்மிளகு முதலிய முகவாசனை வஸ்துக்களை(வாயிலிட்டு) மென்றுதின்று, தலைநிறைய - தலையிலுள்ள கூந்தல் நிறைய, பூசூடி- மலர் களைச் சூட்டிக்கொண்டு, பொய்க்கோலம் செய்ய- வேட மாகிய அலங்காரத்தை (அவ்வும்பினுக்குச்) செய்வதனாலே, ஒழியுமே - நீங்கி விடுமோ? (ஒருபோதும் நீங்கமாட்டா; அவற்றையுடைய தேகம் எப்போதும் அருவருக்கத் தக்கதே யாகும்); எ-று.

உடம்பின் அசுத்தங்களைப் பெரியோர் உணர்ந்து வெறுத்திருக்கின்றனர்; அங்ஙனமிருந்தும் சிலர் அவ்வசுத் தங்கள் மறையும்படி உடம்பினை வேறுபொருள்களால் அலங்கரிக்கின்றார்கள்; அந்தப் பொய்யலங்காரத்தால் அச் சரீரத்திலுள்ள ஆபாசங்கள் ஒழியவே மாட்டா; எப்போதும் உடம்பு அசுத்தமலங்கள் நிறைந்ததே என்பது இதன் கருத்து.

இங்ஙனங் கூறியதனால், உடம்பு இயற்கையில் அசுத் தப்பொருள்கள் நிறைந்த தென்பதும், அதற்கு வாசனை யேற்றிப் பூச்சூடி அலங்கரிப்பியற்றினும் அவ்வாபாசங்கள் ஒழியமாட்டா வென்பதும், அத்தகைய தேகத்தின் மேல் தோற்றத்தில் அவாவுறாது பேரின்பத்தைப் பெறற்குரிய அறத்தைப் புரிதல் வேண்டுமென்பதும் விளங்கும்.

தக்கோலம்- வால்மிளகு; இது, பஞ்சமுக வாசனைத் திரவியங்களுளொன்று; முகவாசப் பண்டங்கள் ஐந்தாவன: ‘‘தக்கோலந் தீம்பூ தகைசா லிலவங்கம், கற்பூரஞ் சாதியோ

டைந்து'' என்பனவாம். மனிதர் முகத்திற் சுகந்தமுண்டாதற் பொருட்டு இந்த ஐந்தினையும் சேர்த்திடித்து வாயிலிட்டு மென்றுதின்றல் இயற்கை; இவற்றை, வெற்றிலை பாக்குக் காய் தொடக்கத்தன மெல்லுங்காலத்து அவற்றுடன் கூட்டிக் கொள்ளுதலு முண்டு; இவைமுகத்திற்கு வாசனையுண் டாக்குவன வாதலின் முகவாசப் பண்டங்களெனப் பெயர் பெற்றன. இவற்றுள் தக்கோலம் முதன்மை பெற்றதாகலின், தனித்து மற்ற நான்கினையுங் கோடற் குரியதாய் நின்றது; ''ஒரு மொழி யொழிதன் இனங்கொளற் குரித்தே'' என்னும் (நன்.பொ.7ஆம்) சூத்திரவிதியால் இஃதமைந்தது; இதனை உபலக்ஷண மென்பர் வடநூலார். மனிதரால் உடம்பிற்குச் செய்யப்படும் அலங்காரம், அதனிடத்துள்ள அசுத்தங்களை அறவே மாற்றமுடியாத தாகலின், அது 'பொய்க்கோலம்' எனப்பட்டது. தலை - அதிலுள்ள கூந்தலை யுணர்த்தி நின்றது. நிறைய- வினையெச்சம். 'ஒழியுமே' என்பதில் ஏ- எதிர்மறைப் பொருளது. உறைத்தல்- உறுதியாதல்; உணவு கள் சாரத்தையுதவலால் உடல் உறுதிபெறுமாதலின், அது 'உண்டிவினையுளுறைக்கும்' எனப்பட்டது. 'வினையுள்' என்பதில், உள்- ஏழனுருபு; இது ஏழன் இடப்பொருள தாகாமல் மூன்றன் காரணப்பொருளதாய் மயங்கிவந்தது; இங்ஙனம் வருதல் உருபுமயக்க மெனப்படும். 'எக்காலும்' என்பதன் உம்மை- முற்றுப்பொருளது. 'கைவிட்ட' என்பதில், கை- உபசர்க்கம்; அஃதாவது, அடையுருபு; இனி, கை- இடமெனக் கொண்டு 'கைவிட்ட' என்பதற்கு 'தம்மிடத் திற் சேராதகற்றிய' எனப் பொருளுரைப்பினுமாம். மயல், துரால், செத்தை என்பன அசுத்தப் பொருள்களை உணர்த்து வன; 'மயல்' என்பது மனிதரால் ஒதுக்கித் தள்ளப்படும் அசுத்தப் பொருள்களை உணர்த்துவதை ''வம்புண் கோதை யர் மாற்று மயலரோ'' என்னும்(சீவக சிந்தாமணி-128-ஆம்) செய்யுளடியாலும் உணர்க. இச்செய்யுளின் இரண்டாமடி ஆசிடையிட்ட வெதுகையாக அமைந்தது. இவ்வெதுகை யும், இச்செய்யுட் கருத்தும்,

''மெய்ப்படு சாந்தும் பூவு மிகநனி கமழுமேனும்
கைப்படு சாந்தும் பூவுங் கொண்டலாற் கலக்கலாகா
ஐப்படு பித்து நெய்த்தோ ரசும்புசோ ரழுகற்
புன்றோற்
பொய்ப்பட வுரைத்த துண்டோ பொன்னனீர்
நம்முணாமால்''

என்னும் (சிந்தாமணி -முத்தியிலம்பகம் 340-ஆம்) செய்யுளி லும் அமைதல் காண்க. (ரு)

44. *தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று*
கண்ணில்புன் மாக்கள் கவற்ற விடுவேனோ
உண்ணீர் களைந்தக்கா னுங்குசூன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன்.

(இ-ள்) (பெண்களுடைய கண்களுக்கு நிலைபெற்ற அழகில்லை; அவற்றிலுள்ள நீர் நீங்கிவிட்டால் அவற்றின் வடிவமே யில்லாமற் போய்விடும்; அத்தகைய கண்களை அழகுடையன வென்று நினைத்துச் சிலர் புகழ்கின்றனர்; இஃதறியாமை யென்பது எனக்குத் தெரியும்; அங்ஙனம்), உள்நீர்- (கண்களின்) உள்ளேயிருக்கின்ற நீரை, களைந்தக் கால்- எடுத்துவிட்டால், சூன்றிட்டநுங்கு அன்ன- சத்தைத் தோண்டி யெடுக்கப்பெற்ற பனங்காயைப் போன்ற, கண் நீர்மை- கண்களின் தன்மையை, கண்டு- பார்த்து, (அதனைப் புகழ்வாரையும் இகழ்ந்து), ஒழுகுவேன்- (மயக்கவழியிற் புகாமல் நன்மார்க்கத்தில்) நடக்கின்றநான், கண் இல்- அறிவில்லாத, புல்- அற்பமாகிய, மாக்கள்- மனிதர்கள், கண்ணீர்மை- அக்கண்களின் தன்மையை, கண்டு பார்த்து, (இவை), தெள்நீர்-தெளிந்த நீரிலே தோன்றிய, குவளை- நீலோற்பலமலர்கள் போலும், பொரு-போர்செய்து பிறழு கின்ற, கயல்- இரட்டைக்கயல் மீன்கள் போலும், வேல்- வேல்கள் போலும் என்று- என்று சொல்லிப்புகழ்ந்து, கவற்ற - (என்மனத்தைக்) கவலைப்படுத்துவதனால் (நான் மயங்கி),

விடுவேனோ - (என் துறவொழுக்கத்தினை விட்டு விடு வேனோ? ஒருபோதும் விடேன்); எ-று.

மாதரின் கண்களுக்கு நிலைபெற்ற அழகில்லை; அவற்றிலுள்ள நீர், களைந்தெடுக்கப் பட்டால், அவை, சத்துள்ள வழுக்கையும் நீரும் தோண்டியெடுக்கப்பெற்ற பனங்காயின் குழிகளைப் போன்று பெருங்குழிகளுள்ளன வாய்க் காணப்படும். அத்தகைய கண்களை அறிவில்லார் புகழ்கின்றனர்; அங்ஙனம் சிறப்பித்துக் கூறினும், அவற்றின் மீது வெறுப்புற்ற நான், மயங்கி, என் துறவொழுக்கத்தை விட்டு அவற்றை விரும்பேன் என்பது இதன்கருத்து. இஃதா சிரியர் தன்மையிடத்திற் கூறியதாகும். எனினும் அறிஞர் பலரும், இந்நீதியைக் கடைப்பிடித் தொழுகவேண்டு மென்பது இதனாற்பெறப்படும்.

குவளை - நிறத்தாலும், மென்மையாலும், அழ காலும், வடிவாலும் கண்களுக்குவமையாம்; கயல்கள்- வடிவத்தினாலும், பிறழ்ச்சியாலும் உபமானமாம்; வேல்- வடிவாலும், கூர்மையாலும், ஆடவரை வருத்துந்தன்மை யாலும் உவமையாம். இரண்டு கண்களும் இணைந்திருக்கும் தோற்றம் இரண்டு கயல்மீன்கள் எதிர்த்துப் போர்செய்து பிறழுந்தன்மையை நிகர்த்திருக்கு மாதலின், பொரு கயல் கள்அவற்றிற்குபமானமாகக் கூறப்பட்டன. ‘பொரு’ என்பதை வேலுக்கடையாக்கினும் அமையும். இழிவுகுறித்து அறிவில்லாமனிதரை ‘மாக்கள்’ என்றார் முனிவர்; மன வுணர்ச்சியின்றி ஐம்பொறியறிவு மாத்திரமேயுடைய ஒரு வகை மனிதர்களுண்டு; இவர்க்கும் ஐம்பொறி யுணர்ச்சி மட்டுமேயுடைய விலங்கினங்கட்கும் வேற்றுமையின்றாக லின் இவர் மாக்களெனப்படுவர்; மாக்கள்- விலங்குகள்; ஐம்பொறியுணர்ச்சியோடு மனவுணர்ச்சியு முடைய ஒரு சாராருண்டு; இவர், உயர்ந்தவராகலின் மக்களெனப் படுவர்.

“மாவு மாக்களு மையறி வினவே”

''மக்கள் தாமே யாறறி வுயிரே''

என்னும் தொல்காப்பியச் சூத்திரங்கள் இவ்வகுப்புக்களை விளக்குவனவாம். 'கவற்றவிடுவேனோ' என்பதற்கு 'கவலைப்படுத்தி மயக்கும்படி என்மனமானது அம் மயக்க வழியிற் செல்லுமாறு அதனை நான் விட்டுவிடுவேனோ' என்றும் பொருளுரைக்கலாம். நுங்கு- பனங்காய்; இதனுள் நீரும் வழுக்கையும் சேர்ந்தபாகங்களுண்டு; அவை வித்துண் டாவதற் கிடமானவை; அவை கண்களைப் போன்றிருக்கும்; அதனால் அவை கண்களெனவுங் கூறப்படும்; காய்க்குரிய நுங்கென்னும் பெயரும் அவற்றிற்குண்டு; அவை இளம் பருவ முள்ளனவா யிருக்கும்போது மனிதர் அவற்றைத் தோண்டி, அவற்றிலுள்ள வழுக்கை முதலியவற்றைத் தின்பர்; அங்ஙனம் அவை தோண்டப் பெற்றபின் வெறுங் குழிகளாய் விளங்கும்; நீர்களையப்பட்ட கண்களும் அக் குழிகளைப் போன்றே விளங்குமாதலின், அக்கண் தோண்டப்பெற்ற பனங்காய் அவற்றிற்குவமையாயிற்று.

என்று- வினையெச்சம். 'இல்புன்' என்பதில், ''இல் லென்கிளவி..........'' என்னும் (தொல்-எழுத்-புள். 77ஆம்) சூத்திர விதியால், லகரம் இயல்பாயிற்று. கவற்ற- பிறவினை யின் வினையெச்சம்; இதில்- கவற்று- பிறவினைப்பகுதி, அ- வினையெச்ச விகுதி; 'கவற்று' என்ற பிறவினைப்பகுதியில், கவல்- தன்வினைப்பகுதி, று-பிறவினை விகுதி. விடு வேனோ' என்பதில், ஓ-எதிர்மறைப் பொருளது. சூன்றிட்ட நுங்கு அன்ன- எனமாற்றுக; 'சூன்றிட்டன்ன' என்பதில் அகரந்தொக்கது. சூன்றிட்ட- பெயரெச்சம்; இதில், சூல்- பகுதி; இடு - துணைவினை; சூலுதல்- குடைதல். 'கண் ணீர்மைகண்டு' என்பது இரண்டிடங்களினுங் கூட்டப் பட்டது. ஒழுகுவேன்- தன்மைவினையாலணையும் பெயர். இது- ஒருவிகற்ப இன்னிசை வெண்பா. (ச)

45. *முல்லை முகைமுறுவன் முத்தென் றிவைபிதற்றுங்*
கல்லாப்புன் மாக்கள் கவற்ற விடுவேனோ
எல்லாருங் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன்.

(இ-ள்.) (மாதர்கள் இறந்தபின் சுடுகாட்டில் எரிக்கப் பட்ட அவர்களுடைய பற்களும், எலும்புகளும் சிதறிக்கிடக் கின்றன; இவைஇழிவுடையன வென்பதை நான் நன்குணர் வேன்; இவை இங்ஙனம் தாழ்ந்தனவாயிருந்தும் சிலர், பெண்களின் பற்களை விரும்பிப் புகழ்கின்றனர்; எனினும், அவ்வாறு), எல்லாரும் காண- யாவரும் பார்க்கும்படி, புறங் காட்டு- (ஊருக்குப்) புறத்திலுள்ள சுடுகாட்டில், உதிர்ந்து உக்க- வீழ்ந்து சிதறிய, பல்- (பெண்களுடைய) பற்களையும், என்பு- எலும்புகளையும், கண்டு பார்த்து, (அவற்றின்மீது அருவருப்புற்றுப் பெண்மயக்கத்திற் புகாமல்), ஒழுகுவேன்- (நன்மார்க்கத்தில்) நடக்கின்ற நான், முறுவல்- (அப்பெண் களின்) பற்களை (கண்டு இவை), முல்லைமுகை- முல்லை யரும்புகள் போலும், முத்து- முத்துக்கள்போலும், என்ற இவை- என்ற இப்புகழ்ச்சிகளை, பிதற்றும்- சொல்லிக் கொண்டு திரிகின்ற, (அந்த), கல்லா- (அறநூல்களைப்) படித் துணராத, புல்மாக்கள்- அற்பமனிதர்கள், (அவ்வலங்கார மொழிகளைக்கூறி), கவற்ற- (என்மனத்தைக்) கவலைப் படுத்த, விடுவேனோ- (என் துறவொழுக்கத்தினை) விட்டு நீங்குவேனோ? (நீங்கேன்); எ-று.

மாதர்களுடைய பற்களும் எலும்புகளும் இடுகாட் டில், பார்ப்போர் அருவருக்கும்படி சிதறிக்கிடத்தலைப் பார்த்து அவர்களை வெறுத்துத் துறவடைந்த நான், சில புல்லறவினர் அப்பற்களை முல்லையரும்புகளென்றும், முத்துக்களென்றும் கூறிப்புகழ்வதால் மனவுறுதிகெட்டு என்பரிசுத்த நெறியைவிடேன் என்பது இதன்கருத்து.

இச்செய்யுட் கருத்தும், மேலைச் செய்யுட்கருத்தும் பெரும்பான்மையும் ஒப்புடையன. முல்லையரும்புகளும், முத்துக்களும், நிறத்தாலும், வடிவாலும், அழகாலும் பற்களுக்கு உவமைகளாம். பிதற்றுதல்- அறிவுமயங்கி உளறுதல்; அஃதிங்கு இழிவுநோக்கி மாதரின் பற்களைப் புகழ்ந்து கூறுதலுக்கு வந்தது. 'என்ற இவை' என்பது, விகாரத்தால் அகரந்தொகுத்தலாய் 'என்றிவை' என்றாயது. கல்லா- எதிர்மறைப் பெயரெச்சம். 'எல்லாரும்' என்பதன் உம்மை முற்றுப் பொருளது. சுடுகாடு ஊருக்குப் புறத்திருப்பதாதலின், 'புறங்காடு' எனப்பட்டது. 'உதிர்ந்து உக்க' என்பதை ஒருபொருட் பன்மொழியாகவுங் கொள்ளலாம். உக்க - பெயரெச்சம்; இதில் உகு-பகுதி. 'பல்லென்பு' என்பதை இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகக் கொண்டு, 'பல்லாகிய எலும்பு' எனப் பொருள் விரிப்பினுமாம்.

46. *குடருங் கொழுவுங் குருதியு மென்புந்*
தொடரு நரம்பொடு தோலு-மிடையிடையே
வைத்த தடியும் வழும்புமா மற்றிவற்றுள்
எத்திறத்தா ளீர்ங்கோதை யாள்.

(இ-ள்) (மாதரை விரும்பும் மானிடரே!), ஈர்கோதையாள்- குளிர்ச்சிபொருந்திய மாலையை அணிந்தபெண், குடரும் - குடலும், கொழுவும்- கொழுப்பும், குருதியும்- இரத்தமும், என்பும்- எலும்பும், தொடரும்- (தசை முதலியவற்றைப்) பிணித்திருக்கின்ற, நரம்பொடு - நரம்பும் தோலும்- சர்மமும், இடை இடையேவைத்த - (இவற்றின்) நடுவிலே நடுவிலே சேர்த்த, தடியும்- தசையும், வழுப்பும்- வழுக்கையும், ஆம்- ஆவள், (இவற்றின் சேர்க்கையாலாகிய ஒருதோற்றமேயாவள்; இவற்றைப் பிரித்தால் ஒவ்வொன்றும் ஒவ்வொருபெயர்பெறும்; அங்ஙனமாகும் போது), இவற்றுள்- இவ்வகைளுள், (ஈர்ங்கோதையாள்), எத்திறத்தாள்- எந்தப் பகுதியைச்சார்ந்தவளாவாள்?, (எதையுஞ் சாராதவளாவாள்; எதிலும் பெண் என்ற தன்மையைக் காணுதல்

முடியாது; ஆதலின் இத்தகைய பெண்வடிவத்தில் விருப்பம் வைத்தல் அறிவின்மையாகும்); எ-று.

பெண்வடிவமானது குடல், கொழுப்பு முதலிய வற்றால் அமைக்கப்பெற்றதாகும்; அவற்றைப் பிரித்துப் பார்க்கும்போது அதற்கென ஒருவடிவமில்லாமற் போய் விடும். இத்தகைய பெண் தன்மையை அறிஞர் விரும்ப லாகாது என்பது இதன்கருத்து.

குடர் முதலியன மிக்க அசுத்தமானவை; இவையே பெண்ணின் வடிவம்; பெண்ணுக்கெனத் தனித்தொரு தன்மையுமில்லை என்றதனால், பெண்மையின் இன்மைத் தன்மையும், அதன் ஆபாசமும் நன்குவிளங்கும்; ஆகவே அதனை அறிஞர் விரும்பலாகா தென்பது தானே அமையும். இங்ஙனம் உடம்பு ஆபாசப் பொருள்களால் அமைக்கப்பட்ட தென்பது,

''என்பினை நரம்பிற் பின்னி யுதிரந்தோய்த் திறைச்சி மெத்திப்
புன் புறந் தோலைப் போர்த்து மயிர்புறம் பொலிய வேய்ந்திட்
டொன்பது வாயி லாக்கி யூன்பயில் குரம்பை செய்தான்
மன்பெருந் தச்ச னல்லன் மயங்கினார் மருள வென்றான்.''

என்னும் (சீவகசிந்தாமணி-1577-ஆம்) செய்யுளானு முணரப் படும். ''இவற்றுள் ஈர்ங்கோதையாள் எத்திறந்தாள்'' எனக் கூட்டி, ''இந்த அசுத்தங்களுள் தோன்றும் ஈர்ங்கோதையாள் எவ்வகை மேம்பாடுடையாள்? (மிக இழிந்தவளே)'' எனப் பொருளுரைப்பினுமாம். 'ஈர்ங்கோதையாள்' என்பது இரண் டிடங்களினுங் கூட்டப்பட்டது. முன்னும் பின்னும் சில சொற்றொடர்கள் இசை யெச்சங்களாகக் கூட்டியுரைக்கப்

பட்டன. இச்செய்யுள், அருவருப்பு விளங்கக் கூறப்பட்டிருத்தலின் இழிப்புச் சுவையணி அமையப்பெற்றதாகும். 'குடல்' என்பது 'குடர்' என வந்தது மொழியிறுதிப்போலி. உம்மைகள்- எண்ணுப் பொருளன. ஒடு- எண்ணிடைச் சொல். 'இடைஇடையே' என்னும் அடுக்கு- தொறுப் பொருளது. ஏ, மற்று-அசைகள். வழும்பு- வழுக்கையான நீர். ஈர்ங்கோதை- பண்புத்தொகை; ஈரம் என்னும் பண்புப் பெயர், அம்- விகுதிகெட்டு, ஈர்- எனநின்று 'கோதை' என்பதனோடு புணர்ந்தது.

''யாழ வென்னு மூன்று மொற்றக்
கசதப ஙஞநம வீரொற் றாகும்''

என்னும் (தொல்-எழுத்-மொழிம-15ஆம்) சூத்திர விதிப்படி இதில் ஈரொற்றுக்கள் தோன்றின. (சூ)

47. *ஊறி யுவர்த்தக்க வொன்பது வாய்ப்புலனுங்*
கோதிக் குழம்பலைக்குங் கும்பத்தைப்-பேதை
பெருந்தோளி பெய்வளா யென்னுமீப் போர்த்த
கருந்தோலாற் கண்விளக்கப் பட்டு.

(இ-ள்.) (மாதர்உடம்பு எவரும் அருவருக்கத்தக்கது; அங்ஙனம் பலரும் வெறுக்குமாறு), மீபோர்த்த- மேலே போர்க்கப்பட்டுள்ள, கருந்தோலால் - கரியதோலினால், கண் - நேத்திரமென்னும் உறுப்பு, (தன்னைப் பார்ப்பவர்களுக்கு அழகுள்ளதுபோல் தோன்றும்படி), விளக்கப்பட்டு- (தன்னிடத்தே) தோற்றுவிக்கப்பட்டு, (அதனோடு), குழம்பு- மலங்களாகிய சேறுகள், ஊறி- சுரந்து, உவர்த்தக்க - வெறுக்கத்தக்க, ஒன்பது வாய்ப்புலனும்- நவத்துவாரங்களின் இடங்களெல்லாம், குழம்பு-அந்த மலக்குழம்புகளை, கோதி- சீய்த்து, அலைக்கும்- அசைத்து வெளிப்படுத்துதற் கிடனாயுள்ள, கும்பத்தை- (உடம்பாகிய) பாண்டத்தை, (அது பெண் வடிவமாகத் தோன்ற), பேதை- அறிவில்லாத

வன், (அக்கண் முதலியவற்றால் அஃதழகுடையதென்று நினைத்து), பெருந் தோளி- நல்லதோள்களை யுடையவளே!, பெய்வளாய்- (கைகளில்) இடப்பட்ட வளையல்களை யுடையவளே!, என்னும்- என்று புகழ்ந்து பேசுவான்; எ-று.

கரியதோலினாலே கண்ணென்னும் உறுப்புண்டாக் கப்பட்டு, நவத்துவாரங்களும் மலங்களை ஒதுக்கித்தள்ளுதற் கிடனாயமைந்த பாண்டம் போன்ற பெண்ணுடம்பை, அறிவில்லாதவன் விரும்பி 'நல்லதோள்களை யுடையவளே! கையில் அணியப்பட்ட வளையல்களை யுடையவளே! என்று புகழ்வான் என்பது இதன் கருத்து.

பேதை இங்ஙனம் புகழ்வான் எனவே, அறிஞன் அவ் வுடம்பின் இழிவினை யுணர்ந்து அதனை விரும்பாமல் துறவு பூண்டு முத்தியின்பத்தைப் பெறுவானென்பது சொல்லாதே அமையும். மாதர் உறுப்புக்களில் கண்ணே ஆடவரை மயக்கத்தக்கது; ஆகலின், அதற்கும் இயற்கை யழகில்லை; அது கருந்தோலால் உருவமுடையதாக விளக்கிக் காட்டப் படுகின்றது; அதனை விரும்புவது பேதைமை யென்று அதனை இழித்துரைத்தற் பொருட்டு, 'கருந்தோலாற் கண் விளக்கப்பட்டு' என்றார் முனிவர். கண்ணின் மேலுள்ள கருந் தோலை எடுத்து விட்டால் கண்ணென்னும் உருவமே இராது. இனி, 'மீப்போர்த்த கருந்தோலாற் கண் விளக்கப் பட்டு' என்பதற்கு, '(மலங்களை உள்ளே நிறைத்து) மேலே போர்க்கப்பட்ட (பெண்களின்) பெரியதோலால் (அவர் களின் உடற்) பெருமை விளக்கப்பட்டு' எனவுரைத்தலு மொன்று; இப்பொருள் கூறுமிடத்து, கருமை- பெருமை, கண்- பெருமை; 'கண்' என்பதை இடமெனக்கொண்டு 'உடம்பினிடம்' எனப் பொருள் கூறினும் அமையும்; இன்னும்'கருந்தோலாற் கண் விளக்கப்பட்டு' என்பதற்கு 'பெண்களின் உடம்பின் மேலுள்ள பெரியதோலால், ஆடவர் கண்கள் (ஆசை) விளங்குவனவாகச் செய்யப்பட்டு' என்று கூறலுமொன்று; விருப்பமுற்றார் கண்களில் அவ்வவா

பிரகாசிப்பதுஇயற்கை. உடம்பு அசுத்தப் பொருள்கள் நிறைத்து வைக்கப்பட்ட பாண்டம் போன்றதாதலின், கும்ப மெனப்பட்டது. மலங்கள் குழம்புபோன்றன வாகலின், குழம்பெனப்பட்டது.

ஊறி- செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சம்; இஃதுவர்த்தலுக்குக் காரணமாதலின் பிறகர்த்தா வினை யொடு முடிந்தது; இனி, ஊற- என்னும் செயவெனெச்சம், ஊறி- எனத்திரிந்து வந்ததாகக் கொண்டு இதற்கு, 'மலங்கள் சுரக்க' எனப் பொருள் கொள்ளினுமாம். 'உவர்க்கத்தக்க' என்பது, 'உவர்த்தக்க' எனத் தொகுத்தலாயிற்று. 'வாய்ப் புலனும்' என்னும் எழுவாய் 'அலைக்கும்' என்னும் உடம் பின் வினையைக் கொண்டது. புலம்-இடம்; இஃதஃ றிணைப் பெயராகலின் இதனீற்று மகரவொற்று னகரவொற் றாயிற்று. 'புலனும்' என்பதன் உம்மை- முற்றுப் பொருளது. குழம்பு- இரண்டிடங்களினுங் கூட்டப்பட்டது. 'பெருந் தோளி' என்பதில், பெருமை நன்மையை விளக்கி நின்றது; நன்மையாவது - அழகு, அல்லது மென்மை; 'நன்னு பெரி தாகும்' என்ற (தொல்- சொல்- உரி, 47-ஆம்) சூத்திரத்தால் இது துணியப்படும். இனி, சிலப்பதிகாரம்- அரங்கேற்று காதை அடி-6-ல், ''பெருந்தோண் மடந்தை'' என வருதற்கு, அதன் அரும்பதவுரையில், ''பெருந்தோண் மடந்தை - மகளிர்க்குத் தோள் பெருக்கை இலக்கணம்; என்னை? .... தோள்கண்ணென மூவழிப் பெருகி' என்றாராகலின்'' எனவருதலானும், இக்கருத்தினை அதில் உதாரணமாக வரும் '...தோள்கண்ணென' என்ற (கலித்தொகை-109) சொற் றொடர் விளக்குதலானும், மகளிர் தோள் பருத்திருத்தல் நல்லிலக்கண மெனக்கொண்டு ''பெருந்தோளி'' என்பதற்கு 'பருத்ததோள்களை யுடையவளே' எனப் பொருளுரைப்பினு மாம்; தோள்பருத்தலாவது- அதற்குரிய அளவில் பருவத்தில் பூரித்தலாம். பெய் வளை- வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; ஈறுதிரிந்து, 'பெய்வளாய்' என விளி

யாயிற்று. இச்செய்யுளின் முன்னிரண்டடிகளும் இன வெதுகை யுள்ளன. (எ)

48. *பண்ட மறியார் படுசாந்துங் கோதையுங்*
கண்டுபா ராட்டுவார் கண்டிலர்கொன்- மண்டிப்
பெடைச்சேவல் வன்கழுகு பேர்த்திட்டுக் குத்தன்
முடைச்சாகா டச்சிற் றுழி.

(இ-ள்.) (பெண்களின் உடம்பு மிக்க ஆபாசங்கள் நிறைந்ததாயிருந்தும் அவர்களால் சந்தனம் மாலை முதலிய வற்றால் அலங்கரிக்கப் பட்டுச் சிறப்புடையதுபோல் விளங்குகின்றது. அத்தகைய) பண்டம் - (உடம்பாகிய) பொருளின் இழிந்ததன்மையை, அறியார்- (ஆராய்ந்து) உணராதவர்கள், படுசாந்தும்- அதன்மேலே பூசப்படுகின்ற சந்தனத்தையும், கோதையும் - மாலையையும், கண்டு-பார்த்து, (மயங்கி), பாராட்டுவார் - (அவ்வலங்காரத்தை யுடைய உடம்பினைக்) கொண்டாடுவார்கள், (இங்ஙனம் கொண்டாடும் இவர்கள்), முடை- புலால் நாற்றத்தை யுடைய, சாகாடு- (அவ்வுடம்பாகிய) பண்டி, அச்சு இற்ற உழி- (உயிராகிய) அச்சு முறிந்து ஒழிந்தபோது, (அதனை), பெடைசேவல்- பெட்டையும் ஆணுமாகிய, வன்கழுகு- வலிய கழுகுகள், மண்டி- நெருங்கி, பேர்த்திட்டு- (தசையைப்) பெயர்த்து, குத்தல்- குத்தித் தின்னுதலை, கண்டிலர்கொல் - பார்த்திலர் போலும்?, (அங்ஙனம் பார்த் திருந்தால் அதனைக் கொண்டாட மாட்டார்கள்); எ-று.

மாதர் உடம்பு, மிக்க அசுத்தங்கள் நிறைந்ததா யிருந்தும், அவ்வசுத்தங்களை யுணராதவர்கள் அதன்மேல் அணியப்பட்டிருக்கும் சந்தனம், மாலை முதலியவற்றைக் கண்டு மயங்கி, அதனைக் கொண்டாடுவார்கள். அவ் வுடம்போ, உயிர் நீங்கினபின் கழுகுகளால் குத்திப்

பெயர்த்துத் தின்னப்படும். இத்தன்மையை அவர்கள் உணராார்கள் போலும்? அறிந்திருந்தால் அங்ஙனம் அந்நாற்ற வுடம்பினை விரும்பார் என்பது இதன்கருத்து. இதனால், அவ்வுடம்பு எத்தகைய அலங்காரஞ் செய்யப்படினும் சிறப்படையா தென்பதும், கழுகுகள் குத்தி யெடுத்துத் தின்னத்தக்க துர்நாற்றமுடைய தசைவடிவமான தென்பதும், அதனை விரும்பாது அறிஞர், துறந்து தவஞ்செய்து மேற்கதிக்குச் செல்லவேண்டு மென்பதும் பெறப்படும்.

'பாராட்டுவார்' என்பதற்குப்பின், 'இங்ஙனம் கொண் டாடும் இவர்கள்', என்பது வருவித்துரைக்கப்பட்டது. 'அறியார் என்பதை முற்றெச்ச மாகக்கொண்டு, 'அறியாத வராய்.... பாராட்டுவார்.... கண்டிலர்கொல்' எனமுடித்தலு மொன்று. பெடை-பறவைப்பெண்; சேவல் - பறவை ஆண். பெடைச்சேவல்- உம்மைத்தொகை முடை- புலால்நாற்றம். சாகாடு- சகடமென்னும் வடமொழிச் சிதைவு; இது, சகடு என்றும், சாடு ன்றும் வழங்கும். அச்சு - சக்கரங்களில் கோக்கப்படும் ஆணி; இஃது, அக்ஷம் - என்னும் வடசொற் சிதைவு; 'அச்சு' என்பது வடமொழியில் உயிரென்றும் பொருள்தருதலின் இங்குச் செம்மொழிச் சிலேடையாய் அச்சாணியெனவும், உயிரெனவும் பொருள்படும். வண்டி அச்சில்லாமல் நடைபெறாதது போல, உடம்பு உயிரின்றி யியங்காதாகலின், உடல் வண்டியாகவும், உயிர் அச்சாகவும் உருவகஞ் செய்யப் பட்டன. சாகாடு, அச்சு இரண்டும் உடலுக்கும், உயிருக்கும் உவமையாகு பெயர்களுமாம். 'கண்டு பாராட்டுவார்' என்பது, 'கொண்டு பாராட்டுவார்' எனவும், 'குத்தல்' என்பது, 'கொத்தல்' எனவும் வரும் பாடபேதமுண்டு. இப் பாடத்தில், 'கொண்டு பாராட்டுவார்' என்பதற்கு, 'சாந்துங் கோதையு மணிந்துகொண்டு உடம்பை ஆதரிப்பவர்' எனப் பொருளுரைத்தல் வேண்டும். 'இற்ற உழி' என்பது 'இற்றுழி' எனத் தொகுத்த லாயிற்று. (அ)

49. *கழிந்தா ரிடுதலை கண்டார்நெஞ் சுட்கக்*
குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி- ஒழிந்தாரைப்
போற்றி நெறிநின்மி னிற்றிதன் பண்பென்று
சாற்றுங்கொல் சாலச் சிரித்து.

(இ-ள்) (மகளிர் உடம்பு நிலையற்றதும், இழிவுற்றது மாம்; அங்ஙனமாகி யிருத்தல் வெளியாம்படி), இடு- சுடுகாட்டிற் போட்டெரிக்கப்படுகின்றவர்களும், கழிந்தார்- (உலகைவிட்டு) நீங்கினவர்களும் (இறந்தவர்களும் ஆகிய) மனிதர்களுடைய, தலை- வெண்தலைகள், கண்டார்- (தம்மைக்) கண்டவர்களுடைய, நெஞ்சு- மனம், உட்க- பயப்படும்படி, குழிந்து ஆழ்ந்த - மிகவும் ஆழ்ந்திருக்கின்ற, கண்ணஆய் - கண்களையுடையனவாகி, தோன்றி - காணப் பட்டு, ஒழிந்தாரை - (இறவாமலிருக்கும்) மற்றவர்களுக்கு, (நீங்கள் மிக்க ஆபாசமான பெண்ணுடம்பினை விரும்பு வதை விடுத்து), நெறி - முத்திமார்க்கத்தை, (அதாவது துறவினை), போற்றி- பாதுகாத்து, (அவ்வழியிலே), நில்மின் - நில்லுங்கள், இதன் - (நீங்கள் விரும்பும்) இவ்வும்பினது, பண்பு- குணம், இற்று- இப்படிப்பட்டது, என்று—, சால - மிகவும், சிரித்து- நகைத்து, சாற்றும்- சொல்லும், (அதாவது, நீங்கள் அருவருக்கத்தக்க பெண்ணுடம்பை விரும்பாமல் முத்தி மார்க்கத்தைப் பேணிக் கொள்ளுங்கள்; இவ்வுடம்பு இப்படிப்பட்ட இழிந்த தன்மையுள்ளது என்று சிரித்துக் கூறுவது போல் பற்களை இளித்துக்கொண்டு கிடக்கும்; ஆகலின் அறிஞர் அதனை விரும்பாமல் முத்திமார்க்கத்தைத் தேடிக் கொள்ளவேண்டும்); எ-று.

மாதருடம்பின் இழிதன்மை வெளியாம்படி, உலகத் தில் இறந்துசுடுகாட்டிலிட் டெரிக்கப்பட்டவர்களுடைய தலைகள், தம்மைக் கண்டாரஞ்சும்படி ஆழ்ந்த கண்களை யுடையனவாய் விளங்கி 'பெண்கள் உடம்பின்தன்மை இதுவாகும்; ஆதலின் மனிதரே! அதனை விரும்பாது நற்கதி யடையும் மார்க்கத்தில் நிற்பீராக' என்று சொல்லிச் சிரிப்பன

போன்று பற்களைத் திறந்துகொண்டு கிடப்பனவாம்; ஆதலின், அறிஞர் அத்தகைய பெண்ணுடம்பை விரும்பாது அறநெறியைக் கடைப்பிடித் தொழுக வேண்டும் என்பது இதன் கருத்து.

இறந்தபின் சுடுகாட்டிலிட் டெரிக்கப்பட்டவர் களுடைய தலைகள் தசையின்றி வெண்மை நிறத்தனவாய்க் கிடக்கும்; அவற்றில், கண்களிருந்த விடங்கள் ஆழ்ந்த குழிகளாய்த் தோன்றும்; முகங்களிலுள்ள பற்கள், இதழ்கள், ஈறு முதலியன இன்றிச் சிரிப்பனபோன்று விகாரவடிவ முள்ளனவாய் விளங்கும். இத்தகைய தலைகளைக் கண்டார் விரும்புதலின்றி அஞ்சுவர்; இங்ஙனம் பார்த்தோர் பயங் கொள்ளும் படி கிடந்த இவை, 'நீங்கள் விரும்பும் பெண் ணுடம்பும் இந்நிலையை அடையக்கூடியதே; ஆதலின் இதனை விரும்பாது முத்திமார்க்கத்திற்சேர முயலுவீராக' என்று சிரித்துக்கொண்டு மனிதரை நோக்கிக் கூறுவனபோல் வனவாம். ஆதலின், இங்ஙனம் பற்களைத் திறந்துகொண்டு கிடக்கும் தலைகளை, மனிதர்க்கு நன்னெறி சாற்றுவன வாகக் கூறினார் முனிவர்; இங்ஙனம் கூறியது தற்குறிப்பேற்ற வணி.

தலை -பால்பகா வஃறிணைப் பெயராதலின் பொதுமையாய் நின்று பன்மையை விளக்கிற்று. குழிந்து ஆழ்ந்த- ஒருபொருட்பன்மொழி. கண்ண- சினையடியாகப் பிறந்த பலவின்பாற்பெயர்; குறிப்பு வினை முற்றெனலு மாம். இற்று- இகரச் சுட்டடியாகப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்புவினை முற்று; இன்- என்னும் இடைச்சொல் லடியாகப் பிறந்த தெனினுமாம்; று- விகுதி. ஒழிந்தாரை- நான்கனுருபு இரண்டனுருபாக மயங்கிவந்த உருபுமயக்கம். ''றவ்வொரு கரவும்மை.........'' என்னும் (நன்-பத-18-ஆம்) சூத்திரத்தில், ''செய்யுநிகழ் பெதிர்வும்'' என்றதனால், இங்குச் 'சாற்றும்' என்பது நிகழ்காலத்தில் வந்தது.

''இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்''

என்னும் (தொல்-சொல்-கிள-19-ஆம்) சூத்திரவிதிப்படி இயல்பு காட்ட வந்ததெனினுமாம். கொல்-அசை. (கூ)

50. *உயிர்போயார் வெண்டலை யுட்கச் சிரித்துச்*
செயிர்தீர்க்குஞ் செம்மாப் பவரைச்- செயிர்தீர்ந்தார்
கண்டிற் றிதன்வண்ண மென்பதனாற் றம்மையோர்
பண்டத்துள் வைப்ப திலர்.

(இ-ள்.) உயிர் போயார்- உயிர் நீங்கி இறந்தவர் களுடைய, வெள்தலை- வெண்மையான தலைகள், (சுடு காட்டிலே கழிந்துகிடந்து), உட்க-(தம்மைக் கண்டவர்) அஞ்சும்படி, சிரித்து- (பற்களைத்திறந்தபடி) நகைத்து, செம்மாப்பவரை- (உலக இன்பத்தாற்களித்து) இறுமாந் திருப்பவர்களுக்கு, (மனிதர் உடம்பின் இயல்பினைக் காட்டி), இதன் வண்ணம்- இவ்வுடம்பின் குணம், இற்று- இத்தன்மையுள்ளது, என்பதனால்- என்று விளக்குவதனால், செயிர்- (அவ்விறுமாப்பாகிய) குற்றத்தை; தீர்க்கும்- அகற் றும், (அதனால்), செயிர்தீர்ந்தார்- அக்குற்றம் நீங்கியவர், கண்டு-(அவ்வுடம்பின் இழிவினைப்) பார்த்து, (அருவருப் புற்று), தம்மை- தம் உடம்பினை, ஓர் பண்டத்துள்- ஒரு வகைப்பொருளில், வைப்பது இலர்- வைத்து எண்ணுத லாகிய தொழில் இல்லாதவராவர்(ஒரு பொருளாக மதியார்) எ-று.

இறந்தவர்களுடைய வெண்தலைகள் சுடுகாட்டில் பார்ப்போர் அஞ்சும்படி சிரிப்பனபோல் பற்களைத் திறந்து கொண்டு கிடந்து, உலக இன்பத்தால் இறுமாந்து உடம்பு சிறந்ததென்று நினைப்பவர்களுக்கு, அதன்குணம் இத் தன்மையதாகும் என்று அதனிழிவினை விளக்கிக்காட்டி அவருடைய இறுமாப்பாகிய குற்றத்தைத் தீர்க்கும்; அதனால் அவ்விறுமாப்பு நீங்கியவர்கள் அத்தகைய இழிவினை

யுடைய தம் முடம்பினை ஒருபொருளாக மதியார் எஎன்பது இதன் கருத்து.

இங்ஙனம் செயிர்தீர்ந்தார் உடம்பினை மதியார் எனவே அதனை வெறுத்துத் தவஞ்செய்து முத்தியடைவ ரென்பது பெறப்படும். அவர், தம்முடம்பினையே மதியா ரெனவே, தவத்தைக் கெடுத்தற் கேதுவான மயக்கத்தைச் செய்யும் பெண்களின் உடம்பினை மதியாரென்பது தானே அமையுமென்க. இதனால், மாதருடம்பைப் பழிக்கும் இவ்வதிகாரப் பொருளும் கூறாதே பெறப்படும்.

'போயார்' என்பதில், ய் - இறந்தகால இடை நிலை. சுடுகாட்டிலிட்டெரிக்கப்பட்ட பிணங்களின் தலைகள் தோல், தசை முதலியன இன்றி வெள்ளெலும்புகளாகவே கிடப்பனவாதலின் 'வெண்டலைகள்' எனப்பட்டன. உட்க -வினையெச்சம். 'சிரித்து' - என்பதும் வினையெச்சம். செம் மாப்பவரை- வேற்றுமைமயக்கம். செம்மாப்பவர் - ஒரு சொன்னீர்மைத்து; இறுமாப்பவர், அல்லாப்பவர், சோகாப் பவர் என்பன போன்றது. வைப்பது- தொழிற்பெயர்; இதனை எழுவாயாகவும், இரண்டாம் வேற்றுமையாகவுங் கொள்ளலாம்.

அதிகாரம் 6

துறவு

அதாவது:- துறவைப் பற்றிக் கூறுவது. துறவாவது:- அகப்பற்றையும், புறப்பற்றையும் விடுதலாம். அகப்பற்றை விடுதலாவது- அகமாகிய உடம்பினிடத் துண்டாகின்ற 'யான்' என்னும் உட்பற்றினை யொழித்தலாம்; புறப்பற்றை விடுதலாவது- புறமாகிய செல்வத்தினிடத் துண்டாகின்ற, 'எனது' என்னும் வெளிப்பற்றினை அகற்றுதலாம். மனிதன், தானல்லாத உடம்பினை யானென்றுகருதி அதனிடத்துப் பற்றுவைத்தலாகிய அகப்பற்று 'அஹங்காரம்' என்றும், தன்னோடு தொடர்பில்லாத பொருளை எனதென்று கருதி அதன் பால் அபிமானஞ் செலுத்துதலாகிய புறப்பற்று 'மமகாரம்' என்றும் வடநூலிற் கூறப்படும்.

மனிதர்க்கு நிலையாமையை உணர்த்துதற்கு முதலில் செல்வம், இளமை, யாக்கை முதலியவற்றின் தன்மைகள் கூறப்பட்டன; அவற்றின்பின் நிலையுடைமையை விளக்கு தற்கு அறத்தின் இயல்பு கூறப்பட்டது; அதன்பின் அவ் வறத்தைச் செய்யவொட்டாமல் மனத்தை மயக்கிக் கெடுக்கும் மகளிர் உடம்பின் அசுத்தத் தன்மையை விளக்கும் தூய்தன்மை கூறப்பட்டது; அதன்பின் அவ்வுடலபிமான மாகிய அகப்பற்றினையும், முன்னுரைத்த பொருளபிமான

மாகிய புறப்பற்றினையும் நீக்கி நிலைத்த அறத்தைத் தேடுதற் காம் துறவு இங்குக் கூறப்படுகின்றது.

துறவு- தொழிற் பெயர்; இதில், துற- பகுதி, உ- விகுதி, வ் - உடம்படுமெய்; வு- விகுதி யெனலுமாம்.

51. *விளக்குப் புகவிருண் மாய்ந்தாங் கொருவன்*
தவத்தின்முன் னில்லாதாம் பாவம்- விளக்குநெய்
தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
தீர்விடத்து நிற்குமாந் தீது.

(இ-ள்.) விளக்கு - தீபவொளியானது, புக- (ஓரிடத் தில்) நுழைய, இருள்- (அதற்குமுன் அங்கே தங்கியிருந்த) இருளானது, மாய்ந்தாங்கு- அழிவதுபோல, ஒருவன்- ஒரு மனிதனுடைய, (ஒருமனிதன் செய்கின்ற), தவத்தின்முன்- தவத்திற்கு முன்னே, பாவம்- தீவினையானது, நில்லாது நிற்காதொழியும், விளக்கு- (பிரகாசித்துக் கொண்டிருந்த) அவ்விளக்கில். நெய்- (அஃதெரிதற்குக் காரணமாயிருந்த) நெய்யானது, தேய்விடத்து - குறைந்துபோமிடத்து , இருள் - இருட்டானது, சென்று - போய், பாய்ந்தாங்கு- பரவுதல் போல, நல்வினை - (தவம்பூர்த்தியாதற் கின்றியமையாதன வாகிய) புண்ணிய காரியங்கள், தீர்விடத்து - நீங்குமிடத்தில், (அத்தவம் முடிதலின்றி), தீது- பாவமானது, நிற்கும்- நிலை பெறும்; எ-று.

தீபவொளி யானது பிரவேசித்த விடத்து இருள் நீங்குவது போல ஒருவன் செய்த தவத்திற்கு முன்னே பாவம் நிலைபெறாது; விளக்கெரிதற்குக் காரணமான நெய் இல்லாமற் போனபோது அவ்விளக்கெரிந்து பிரகாசித்த லின்றி அஃதிருந்த விடத்தே இருள்பரவி விடுவதுபோல, தவம் பூர்த்திபெறுதற் கின்றியமையாதனவாகிய நற்காரியங் கள் இல்லாமல் நீங்கியவிடத்தில் தவம் முற்றுறாதுபாவஞ் சேரும் என்பது இதன்கருத்து.

இங்ஙனம் கூறியதனால், தவஞ்செய்வா ரிடத்துப் புண்ணியஞ் சேர்ந்து அவரைப் பேரின்ப வீட்டிற் புகுவிக்கு மென்பதும், அத்தவமில்லார்பால் பாவங்கூடி அவரைத் தீக் கதியுட் சேர்ப்பிக்கு மென்பதும் விளங்கும். இங்குக்கூறிய வாறு அறம் வளருமிடத்தே பாவம் நீங்குமென்பதை,

''அல்லவை தேய வறம் பெருகு நல்லவை
நாடி யினிய சொலின்''

என்னும் திருக்குறட் செய்யுளும் விளக்கும். த்வம் இவ்வாறு வீடு பேற்றிற் கின்றியமையாததா யிருத்தலின் இதனை மனிதர் தவறாது செய்தல் வேண்டு மென்பது பெறப்படும். தவமாவது,

''படநாகந் தோலுரித்தாற் போற்றுறந்து
கண்டவர்மெய்
பணிப்ப நோற்றிட்
டுடனாக வைம்பொறியும்
வென்றார்.................... ''
(சீவகசிந்தாமணி-கேம-135)

'ஓவா திரண்டுவவு மட்டமியும் பட்டினிவிட்
டொழுக்கங் காத்தல்
தாவாத் தவமென்றார்............ '' (சீவக - கே-136)

என்பவற்றிற் கூறியாங்கு, நாகந் தோலுரித்தல் போன்று அகப்பற்று புறப்பற்றுக்களை யொழித்துப் பார்த்தோர் மெய்ந்நடுங்கும்படி அமாவாசி, பௌர்ணமி, அட்டமி ஆகிய திதிகளில் பட்டினியிருந்து நோன்பியற்றி ஒழுக்கங்காத்து ஐம் பொறிகளையும் வாட்டுதல் முதலியவற்றைக் கொண்டிருத்த லாம். அவை: எண்பத்துநான்கு நூறாயிரம் குணவிரதங் களும், நூற்றுக்கோடி மகாவிரதங்களும், பதினெண்ணாயிரம் சீலாசாரங்களுமாம்; இவை பெரும்பான்மையும் துறவறத்

திற்கே உரியனவாம்; அங்ஙனம் துறவிகளாகிய முனிவர்க் குரியன வென்பதை,

''ஏத்தருந் திருமணி யிலங்கு நீர்மைய
கோத்தன போற்குண நூற்றுக் கோடியும்
காத்தன காவல பதினெண் ணாயிரம்
பாத்தன பண்ணவர் சீல மென்பவே''

என்னும் சீவகசிந்தாமணிச் செய்யுளானும், அதன் உரையானு முணரலாம். இவற்றின் விரிவு ஜைன நூல்களிற் காணப் படும்.

விளக்கு - முதனிலைத் தொழிற்பெயர்; (பொருள் களை) விளங்கச் செய்தல் என்று விரியும்; இஃது அத் தொழிலைச் செய்வதாகிய தீப்பிழம்புக்கு ஆகுபெயராய் வந்தது; இன்னும் இதனை, வினைமுதற் பொருள் விகுதி யாகிய அம்- புணர்ந்துகெட்ட பெயரெனக் கோடலு மொன்று. புக- காரணப் பொருளதாய் இறந்த காலங்காட்டிய பெயவெனெச்சம். ஆங்கு- உவமவுருபு. காரணமாகிய நெய் யின்தேய்வு கூறியதனால், அதன் காரியமாகிய விளக்கின் தேய்வு தானே அமைந்தது. அதிகாரப் பொருள்நோக்கி, 'நல்வினை' என்பது, துறவினையுணர்த்தி நின்றது. ஆம் இரண்டும் - அசைகள். தேய்விடத்து - என்பன எதிர்கால வினையெச்சங்கள்; தேய் இடத்து, தீர் இடத்து - என்பன வகர வொற்றாகிய மெய்யீற்றுடம்படுமெய்பெற்று, தேய்விடத்து, தீர்விடத்து என வந்தன; இனி இவற்றை, தேய்வு இடத்து, தீர்வு இடத்து எனப்பிரித்து, தேய்வு, தீர்வு இரண்டனையும் தொழிற்பெயர்களாகக் கொண்டு அவற்றிற்கு, 'தேய்தல் உண்டாமிடத்தில், தீர்தல் உண்டாமிடத்தில்' எனப் பொருள் கூறினும் அமையும். துறவறத்திற்கு விளக்கும், பாவத்திற்கு இருளும் உவமை கூறப்பட்டன; இஃதுவமையணி. தவம்- தபஸ் என்னும் வடசொற்றிரிபு. பாவம்- பாபம் என்னும் வடமொழிவிகற்பம். தீது- குறிப்பு வினையாலணையும்

பெயர். 'முன் நில்லாதாம்' என்பதை, 'முன் இல்லாதாம்' எனவும் பிரிக்கலாம். இச்செய்யுளின் இரண்டா மடியும், நான்காமடியும் இனவெதுகை யுள்ளன. (க)

52. *நிலையாமை நோய்மூப்புச் சாக்காடென் றெண்ணித்*
தலையாயார் தங்கருமஞ் செய்வார் -
தொலைவில்லாச்
சத்தமுஞ் சோதிடமு மென்றாங் கிவைபி தற்றும்
பித்தரிற் பேதையா ரில்.

(இ-ள்.) தலை ஆயார்- (அறிவினால்) மேலானவர்கள், நிலையாமை என்று - (செல்வம் யாக்கை முதலியன) நிலையில்லா திருத்தலையும், நோய் என்று (சரீரத்திற்கு வரும்) வியாதியினையும், மூப்பு என்று- கிழத்தன்மையையும், சாக்காடு என்று - மரணத்தையும், எண்ணி - நினைத்து, (உலக வாழ்வு பயனற்றதென் றுணர்ந்து நிலைத்தவாழ்வாகிய முத்தியை அடைதற்கு), தம்கருமம் - தம்முடைய (தாம் செய்தற்குரிய) காரியமாகிய துறவறத்தை, செய்வார்- புரிவார்கள், (அவ்வாறு அவற்றை ஆய்ந்துணராதவர்கள் ஞான நூல்களைப் படித்துத் துறவுபூணுதலை விடுத்து உலகவாழ்வு நிலைத்ததென்றெண்ணி அதனை மேலும் இனிமைப்படுத்திக்கொள்ளுதற்கும், அதில்வரும் நலங்களையுணர்தற்கும் சங்கீதம், சோதிடம் முதலிய நூல்களை ஆராய்ந்து காலத்தை வீணே போக்குவர்; இவர் முடிவில் அடைவது மரணமும் துர்க்கதியுமே. ஆதலின் இங்ஙனம் ஞானநூல்களைக் கற்றுத் துறவடையாமல்), தொலைவு இல்லா- முடிவு இல்லாத, சத்தமும் - நாதத்தைப்பற்றிய சங்கீதசாஸ்திரமும், சோதிடமும்- (கிரகநிலை முதலியவற்றைக் கணக்கிட்டுப் பயன் உணரும்) கணிதசாஸ்திரமும், என்ற இவை- என்று சொல்லப்பட்ட இவற்றை, பிதற்றும் - (ஆராய்ந்து அவற்றால் நற்பயன் கொண்டார்போல இடைவிடாமல்) சொல்லிக் கொண்டு திரியும், பித்தரின்- பைத்தியம் பிடித்தவர்போன்ற, பேதையார் - அறிவிலிகள், இல்-(எவரும்) இல்லை; எ-று.

அறிவினால் மேம்பட்டவர்கள், தங்கள் செல்வம் யாக்கை முதலியவற்றின் நிலையாமையையும், உடம்பிற்கு வரும் நோய், விருத்தாப்பியம், மரணம் முதலியவற்றையும் ஆராய்ந்துணர்ந்து, அச்செல்வம் யாக்கை முதலியவற்றையும் அவற்றாற் பெறப்படும் நிலையற்ற இன்பத்தையும் விரும் பாது, நிலைத்த பேரின்பத்தைத் தருவதாகிய முத்தியை அடைதற்குரிய ஞானநூல்களை ஓதியுணர்ந்து தாம் மேற் கொண்டொழுகத்தக்க துறவினைக் கொள்வர்; அவ்வுணர்ச்சி யில்லாதார், நிலையற்ற உலகவாழ்க்கைக்கு, இன்பம், நலம் முதலியன செய்வனவாகக் கருதப்படும் மயக்க சாஸ்திரங் களைக் கற்று அவற்றை மனிதர் கூட்டங்களில் எடுத் துரைத்துத் தற்பெருமை கொண்டலைவர்; அங்ஙனம் உயிர்க் குறுதி பயக்காதனவாகிய சங்கீதம், சோதிடம் முதலிய நூல் களைக் கற்றுப் பிதற்றிக் கொண்டு திரியும் பைத்தியம் பிடித்த வர்களைப் போன்ற அறிவீனர்கள் இல்லையென்பது இதன் கருத்து.

இங்ஙனங் கூறியதனால், மனிதரின் செல்வம், யாக்கை முதலியன நிலையற்றனவென்பதும், அவை நிலைப்பனவென்றெண்ணி அவற்றாலாமின்ப நுகர்தற் கேற்றனவாகிய நூல்களைக் கற்றுப் பிதற்றித் திரிவோர் பேதையரென்பதும், அவற்றின் அநித்தியத் தன்மையை யுணர்ந்து நித்திய சுகமாகிய முத்தியை அடைதற்குரிய ஞான நூல்களைக் கற்றுத் துறவுபூண்டு தவஞ்செய்வாரே அறிஞ ரென்பதும் விளங்கும். மனிதரின் உலகவாழ்க்கைக் குபயோகமாம் நூல்கள் பல விருப்பினும், சங்கீதம் இன்பந் தருவனவற்றில் முதன்மை பெற்றதாலானும், சோதிடம் மனிதர்க்கு வரும் நன்மை தீமைகளை யுணர்த்தி, அவர், தீமை நீங்குதற்குரிய பரிகாரங்களைத் தேடிச் சௌக்கியத் தைப் பெற முயலுதற்குரியதா யிருத்தலானும் இவ்விரண் டுமே மனிதரால் மிகுதியும் விரும்பப்படுவனவாம். ஆதலின், இவையே இங்குக் குறிப்பிடப்பட்டன. இவை, உலகவாழ்வை விரும்புவோரால் உயர்ந்தனவாகக் கருதப்

படினும் ஆத்மலாபத்தை அளிக்கக்கூடியனவல்ல; ஆதலின் இழித்துக் கூறப்பட்டன. சோதிடநூல் மிகுதியும் கணக்கே நிறைந்ததாகலின் அதைக் கணிதநூலென்றும், சோதிட சாஸ் திரியைக் கணியென்றும் கூறுதல் மரபு. சங்கீதம் நாதபேதங் களைக் கூறுவதாதலின் சத்தம் எனக் கூறப்பட்டது. இனி, இலக்கணநூலும், கணக்கு நூலும் மனிதர்க்குச் சிறப்பைத் தருவனவாகலின், 'சத்தம்' என்பதை இலக்கணமென்றும், 'சோதிடம்' என்பதைக் கணக்கு என்றும் கூறுதலும் அமை யும்;

''எண்ணென்ப வேனை யெழுத்தென்ப
இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு''

என்னுங் குறட்பாவும் இவ்விரண்டனையுஞ் சிறப்பித்துக் கூறுதல் உணர்க. சங்கீதம், சோதிடம், இலக்கணம், கணக்கு முதலியன மனிதர்க்கு இம்மையில் இன்பம், சிறப்பு முதலிய வற்றைப் பயப்பனவாயிருப்பினும், நுண்ணிதின் அவற்றின் உட்பொருள்களை, யுணர்வார்க்கு நித்தியாநித்திய வஸ்துக் களை யுணர்த்துங் கருவிகளுமாம். மதிநுட்பமுடையார் அவற்றி னுட்பங்களையும் முடிபுகளையும் ஆய்ந்து அவற் றாலாம் உலக இன்பம் முதலியவற்றை விரும்பாது அவற்றா லுணர்த்தப்படும் அறப்பொருளை யுணர்ந்து சிறப்புறுவர்; பேதையர் அந்நூல்களால் மேற்போக்காகக் காணப்படும் நிலையற்ற இன்பம் முதலியவற்றையே அவற்றின் பய னெனக்கொண்டு அவற்றை உயர்த்திக் கூறிப்பெருமிதங் கொள்வர்; அவர் கற்றறி மோழைகளாவர். அவரால் அங்ஙனம் அச்சாஸ்திரங்கள் கருதப்படுதல் குறித்தே, அவ ரோடு அவையும் இழித்துரைக்கப்பட்டன. இங்குக் கூறிய வற்றால், நூல்கள் பலவும் நன்மை தீமை இரண்டையும் உணர்த்தக்கூடிய நுண்பொருள்களைத் தம்மகத்தடக் கினவையா யிருக்குமென்பதும், அவற்றைப் பயில்வார், அவற்றினுட்பொதிந்த உண்மைப்பொருளாகிய ஞானத்தை

யுணரவேண்டுமென்பதும், அநித்தியப் பொருள்களைப் பாராட்டலாகாதென்பதும் துணியப்படும்.

மூப்பு சாக்காடுஎன்பன- தொழிற்பெயர்கள்; 'மூப்பு' என்பதில், மூ- பகுதி, பு- விகுதி; 'சாக்காடு' என்பதில், சா- பகுதி, காடு- விகுதி; இடையில் பகரவொற்றும், ககர வொற்றும் தோன்றியது சந்தி. 'என்று' என்னும் எண்ணிடைச் சொல்,

''என்று மெனவு மொடுவு மொரோ வழி
நின்றும் பிரிந்தெண் பொருள்தொறு நேரும்''

என்னும் (நன்- இடை. 10-ஆம்) சூத்திரவிதிப்படி நிலையாமை முதலிய நான் கிடங்களினுங் கூட்டப்பட்டது. இவ்வியல் 9-ஆம் சூத்திரத்தால் இது தொகை பெறாமல் வந்தது. தலையாயார்- முதன்மையானவர்; தலை - முதன்மை; 'ஆயார்' என்பதில், ய்- இறந்தகால இடைநிலை. 'தலையாயார்தங்கருமஞ்செய்வார்' என்பதை, தங்கருமஞ்செய்வார் தலையாயார் என மாற்றி, தமது காரியமாகிய துறவினை மேற்கொள்பவரே தலைமையானவர் எனப் பொருளுரைப் பினும் பொருந்தும். 'கர்மம்' என்னும் வடசொல், 'கருமம்' எனத் திரிந்து வந்தது. சாஸ்திரங்கள், தம்மைக்கற்பார் முடிவுறக் கற்றற்கு ஆயுள் போதாதபடி பரந்திருத்தலின் அவற்றிற்கு 'தொலைவில்லா' என்ற அடை கொடுக்கப் பட்டது. தொலைவு - தொழிற்பெயர். இல்லா - ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்; இன்னும் இதனை வினையெச்சமாகக் கொண்டு, 'தொலைவு இல்லா' என்பதற்கு, 'ஓய்வில்லாமல்' என்று பொருளுரைப்பினும் அமையும். சத்தம் - ஸப்தம் என்னும் வடமொழிச் சிதைவு. சோதிடம் - ஜ்யோதிஷம் என்னும் ஆரியச்சொற்சிதைவு. சத்தம்- நாதரூபமான சொல்; அஃதாகுபெயராய் அச்சொல்லின் இலக்கணத்தையும், ஓசை(சங்கீத) இலக்கணத்தையும் உணர்த்தும்.

என்ற- என்னும் பெயரெச்சத்தின் அகரவீறு தொக்கது. ஆங்கு - அசை. பித்தரில்- என்பதில் ஐந்தனுருபாகிய, இல் - ஒப்புப் பொருளது; எல்லைப் பொருளதெனினுமாம்; எல்லைப் பொருளில், 'பித்தரைக் காட்டினும்' என விரியும். இல் - இல்லையென்பதன் விகாரம்; ''வேறில்லை யுண்டைம் பான்மூ விடத்தன'' என்னும் (நன் - வினை20ஆம்) சூத்திர விதிப்படி இச்சொல், இருதிணை ஐம்பான் மூவிடங்கட்கும் பொதுவான குறிப்புமுற்றுப் பகாப்பதமாதலின் 'பேதையார்' என்ற எழுவாய்க்குப் பயனிலையாய் முடிந்தது. (உ)

53. *இல்ல மிளமை யெழில்வனப்பு மீக்கூற்றஞ்*
செலவம் வலியென் றிவையெல்லா- மெல்ல
நிலையாமை கண்டு நெடியார் துறப்பர்
தலை யாயார்த் தாமுய்யக் கொண்டு.

(இ-ள்) நெடியார்- (அறிவினாலுயர்ந்த) பெரியார், இல்லம்- மனைவாழ்க்கையும், இளமை - யௌவனமும், எழில்- வளர்ச்சியும், வனப்பு- அழகும், மீக்கூற்றம்- உயர்ந்த சொல்லும்; செல்வம்- ஐசுவரியமும், வலி- வலிமையும், என்ற இவை எல்லாம் -என்று சொல்லப்பட்ட இவையாவும், நிலையாமை - நிலையில்லா தொழிதலை, மெல்ல கண்டு - நிதானமாக ஆராய்ந்தறிந்து, (அவற்றை விரும்பாமல்), தாம் உய்ய - தாம் (முத்தியடைந்து) கடைத்தேறுதற்கு, தலை ஆயார் - (ஞானவுணர்ச்சியால்) முதன்மை பெற்றவரை, கொண்டு - குருவாகக் கொண்டு, (அவரால் ஞானோபதேசம் பெற்று), துறப்பர்- (உலகப் பற்றினை விட்டு) நீக்குவர்; எ-று.

அறிவினாலுயர்ந்த பெரியார், இல்வாழ்க்கை, இளமை முதலியன நிலைநிற்கமாட்டா வென்றுணர்ந்து நித்தியமாகிய முத்தியின்பத்தை அடைதற்கு முதன்மை பெற்ற ஞானிகளை ஞானாசிரியராகக் கொண்டு உலகப் பற்றினை யொழித்துத் தவஞ்செய்வர் என்பது இதன் கருத்து.

'நெடியார் துறப்பர்' எனவே, துறதவர் சிறியர் என்பது கூறாதே அமையும். உலகத்தில் மனிதர்க்கு இன்பஞ் செய் வனபோலத் தோன்றும் இல்வாழ்க்கை, இளமை முதலியன அறிஞர்க்கு நிலையற்றனவாய்த் தோன்றும்; அங்ஙனந் தோன்றுதல் ஏககாலத்தில் உண்டாகாது; ஒவ்வொன்றையும் அவர் சிறிது சிறிதாக ஆராயும் போது அவற்றின் நிலை யின்மை அவர்க்குப் படிப்படியாகத் தோன்றிச் சின்னாட் களில் முடிவுக்கு வரும்; அதன் பின்னரே அவர் அவற்றைத் துறப்பர். ஆதலின், ''மெல்ல நிலையாமைகண்டு நெடியார் துறப்பார்'' என்றார் முனிவர். 'தலையாயார்' என்பதை எழு வாயாகவும், 'நெடியார்' என்பதை எதிர்மறை முற்றெச்ச மாகவுங் கொண்டு, 'தலையாயார்.... நிலையாமை... கண்டு...நீடியாதவர்களாய் (காலதாமதஞ் செய்யாதவர் களாய்த்) துறப்பார்' எனப் பொருளுரைத்தலுமொன்று; இங்ஙனங் கொள்ளுமிடத்து, 'தாமுய்யக்கொண்டு' என்ப தற்கு, 'தாம்கடைத்தேற (வாழ்வு முதலியவற்றின் நிலை யாமையை மனத்திற்) கொண்டு' என்று பொருள் விரிக்க. 'உலகவாழ்வின் நிலையாமையை முடிவாகக் கண்ட அறிஞர் அதன்மேலும் துறவாமல் வாளாவிரார் ஆதலின், 'நெடியா ராய்த் துறப்பர்' என்றார் முனிவர்' என்க. 'இவையெல்லாம்' என்பதை 'நிலையாமைகண்டு' என்பதனோடும், 'துறப்பர்' என்னும் வினைமுற்றோடுங் கூட்டி 'இவையெல்லாம் நிலை யாமை கண்டு இவையெல்லாம் துறப்பர்' என இருவகை யாகவும் முடிக்கலாம். துறவடைவோர், உயர்ந்த ஞானா சிரியரை யடுத்து அவர்பால் ஞானோபதேசம் பெற்றுக் கொள்ளுதல் முறைமை யாகலின் தலையாயார்க் கொண்டு துறப்பார்' என்றார் முனிவர்.

இல்- மனை; இதனோடு அம்- சாரியைசேர்ந்து 'இல்லம்' என்றாயது; இஃதிடவாகு பெயராய் மனை வாழ்க்கையை யுணர்த்தி நின்றது. இல்லம் - உயர்குடிப் பிறப்பெனினுமாம். இளமை- இன்பச் செழிப்புண்டாகும் பருவம். எழில்- எழுச்சி; அதாவது, யௌவன வளர்ச்சி; அவ்

வளர்ச்சியாவது, யௌவனம் தனக்குரிய அளவுவரை வளர்ந்து பூர்த்தியடைந்தும் மேலும் வளர்வதுபோன்று விளங்குதல்; ''எழிலாவது - வளர்ந்தமைந்த பருவத்தும் இது வளர்ந்து மாறியதன்றி இன்னும் வளருமென்பது போன்று காட்டுதல்'' என்று (தொல்-பொரு-53-ஆம்) சூத்திரவுரையில், நச்சினார்க்கினியர் வரைதலால் இது துணியப்படும்;

''நுண்மா ணுழைபுல மில்லா னெழிலை
மண்மாண் புனைபாவை யற்று''

என்னுங் குறட்பாவில் வரும் 'எழில்' என்பதற்கு, உரையில் பரிமேலழகர், 'எழுச்சி' என்று பொருள் எழுதுதலுங் காண்க. இனி 'எழில்' என்பதற்கு 'யௌவனத்தாலுண்டாம் நிமிர்ச்சி' எனப் பொருளுரைப்பினுமாம்; யௌவனத்தில் மனிதர் தளர்ச்சியின்றி நிமிர்ச்சி யுட னுலவுதல் இயற்கை. 'எழில் வனப்பு' என்பதை ஒருபொருட் பன்மொழியாகக் கொண்டு 'மிக்க வனப்பு' எனினும் அமையும். இந்த 'எழில்' என்பது தொழிற் பெயர்; இதில், எழு- பகுதி, இல்- விகுதி. மீக்கூற்றம்- உயர்ந்த சொல்; அதாவது, அதிகாரத்துடனமைந்த சொல்; இது, செல்வாக்கு, சொற்செலவு எனவும் படும்; இனி இதற்கு, 'மேன்மையுள்ள சொல்லாகிய புகழ்' எனப் பொருளுரைப்பாரு முளர்; ''ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற், பொன்றாது நிற்பதொன் றில்'' என்னும் குறளின்படி புகழ் அழியாவியல் புடையதாகலின் இது பொருந்தா தென்க. கூற்று- கூறப்படுவது; இதனுடன் அம்- சாரியை சேர்ந்து கூற்றமென்றாயது; அம்- செயப்படுபொருள் விகுதியுமாம். என்ற +இவை= என்றிவை; இதில் 'என்ற' என்னும் பெயரெச்சத்தின் ஈற்று அகரம் தொக்கது; இனி 'என்று' என்னும் எண்ணிடைச் சொல் 'இவை' என்னும் பன்மைச்சுட்டோடு புணர்ந்து இங்ஙனமாயிற் றெனலுமாம். நெடியார்- வினையாலணையும் பெயர்; நெடு- பகுதி, ஆர்- விகுதி, இ- சாரியை, யகரவுடம்படுமெய்- சந்தி. மெல்ல- மென்மையடியாகவந்த குறிப்புவினையெச்சம்.

54. *துன்பம் பலநா ளுழந்து மொருநாளை*
இன்பமே காமுறுவ ரேழையார்- இன்பம்
இடைதெரிந் தின்னாமை நோக்கி மனையா
றடைவொழிந்தா ரான்றமைந் தார்

(இ-ள்) (மனிதரின் இல்லற வாழ்க்கையில் பலதினங்களில் அவர்க்குத் துன்பங்களே யுண்டாகும்; ஒருநாளில் சிறிது இன்பமு முண்டாகும்; இல்லறவியல் அங்ஙனமிருந்தும் அதனை வெறுக்காமல்), ஏழையார்- அறிவில்லாதவர்கள், (அவ்வில்லறத்தி லமர்ந்து கொண்டு), பலநாள் - பலதினங்கள், துன்பம் உழந்தும் - துன்பங்களை அனுபவித்தும், ஒருநாளை இன்பமே - ஒருநாளில் உண்டாகும் (அவ்வற்ப) இன்பத்தையே, காமுறுவர் - விரும்புவார்கள், (அங்ஙனம் அவர்களால் விரும்பப்படும் இன்பமும் நிலைபெற்றிருப்பதில்லை; விரைவில் மாறிவிடும்; ஆதலின்), ஆன்று - (அறிவால்) நிறைந்து, அமைந்தார் - (அதற்கேற்றபடி) அடங்கியவர், இன்பம்- அவ்வின்பமானது, இடை - இடைதலை, (அங்ஙனம் மாறுபடுவதை), தெரிந்து - அறிந்து, இன்னாமை(மேற்கூறியவாறு இல்வாழ்க்கையிலுண்டாம்) துன்பத்தையும், நோக்கி- கண்டு, மனை ஆறு- இல்வாழ்க்கையின் வழியில், அடைவு- சேர்தலை, (விட்டு), ஒழிந்தார்- நீங்கினார்; (துறவுபூண்டார்) எ-று.

இல்வாழ்க்கையில் மனிதர்க்குப் பல தினங்களில் துன்பங்களும், ஒருநாள் சிறிது நிலையற்ற இன்பமும் உண்டாவது அதன்இயற்கை; அஃதங்ஙனமிருந்தும், அறிவில்லாதார் அந்தப் பலதினங்களு முண்டாம் துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டு ஒருநாளை யின்பத்தினை விரும்பி அவ்வில்லறத்திலேயே இருப்பர். அறிவிற் சிறந்தடங்கிய பெரியார், அவ்வின்பம் நிலைபெறாமையையும், அவ்வில்வாழ்க்கைத் துன்பத்தையும் ஆராய்ந்துணர்ந்து இல்லறம் துன்பம் நிறைந்ததெனத் துணிந்து அதனை வெறுத்துத் துறப்பர் என்பது இதன் கருத்து.

மனிதர்க்கு அறிவின் நிறைவே செல்வம்; அஃதின்மையே வறுமை; ஆகலின், அறிவுடையார் செல்வர் எனவும், அஃதில்லார் ஏழையர் எனவுங் கூறப்படுவர். இங்ஙனங் கூறப்படுதல், ''நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை, பண்ணப்பணைத்தபெருஞ் செல்வம்....'' என்னும் (இந்நூல்-251-ஆம்) செய்யுளால் உணரப்படும்; இந் நியாயம்பற்றியே அற்ப இன்பத்தை விரும்பிப் பெருந் துன்பத்தை அனுபவிக்கும் மூடரை 'ஏழையார்' என்றார் ஆசிரியர். 'உழந்தும்' என்பதில், உம்- இழிவு சிறப்புப் பொருளது. 'நாளை' என்பதில், ஐ- சாரியை. 'இன்பமே' என்பதில், ஏ- பிரிநிலை; இழிவு சிறப்பினதுமாம். 'காமம் உறு' என்பது, ''காமுறு'' என விகாரப்பட்டு வந்தது; இது, 'ஐயுறு' என்பது போன்றது. காமம் - விருப்பம்; அதனையுறுவோர்- காமுறுவர். இடை - முதனிலைத் தொழிற்பெயர்; 'இடைதல்' என்பது, தல்லீறுகெட்டு இங்ஙனம் நின்றது; இடைதல் - மாறுபடுதல், நீங்குதல். இனி, 'இடை' என்பதற்கு, இடையூறெனப் பொருள் கூறுவாருமுளர். 'இனிமை' என்னும் பண்புப் பெயர், ஈறுபோய் இடை இகரங்கெட்டு, எதிர்மறை ஆகாரமும் மைவிகுதியும் பெற்று, னகரவொற்றிரட்டி, 'இன்னாமை' என நின்றது; இஃதெதிர் மறைப் பண்புப் பெயர். மனை- வீடு; அஃதிடவாகுபெயராய் அதில் மனிதராற் செய்யப்படும் ஒழுக்கத்தினை யுணர்த்தி நின்றது. 'ஆன்று' என்னும் இறந்தகால வினையெச்சத்தில், ஆல்- பகுதி; 'அகன்று' என்பது 'ஆன்று' என மரூஉவாயிற்று. இனி, 'சால்' என்னும் பகுதி, 'ஆல்' என மரூஉவாயிற் றெனவும், ஆன்றல் என்பதே தனித்த ஒரு சொல் எனவுங் கூறுவாருமுளர். அடைவு-தொழிற்பெயர். ''ஆன்றமைந்தார்...... தெரிந்து.... நோக்கி.... ஒழிந்தார்'' என முடிக்க. 'ஆன்றவிந்தார்' என்றும் பாடபேதமுண்டு; அதற்கும் இங்கக் கூறிய பொருளே. இச்செய்யுட்கருத்து இந்நூலின் 60-ஆம் செய்யுட்களிலும் அமைந்திருத்தல் காண்க. (௪)

55\. *கொன்னே கழிந்தன் றிளமையு மின்னே*
பிணியொடு மூப்பும் வருமாற்- றுணிவொன்றி
என்னொடு சூழா தெழுநெஞ்சே போதியோ
நன்னெறி சேர நமக்கு.

(இ-ள்.) நெஞ்சே- மனமே! (நீ உலக வாழ்வு நிலைத்த தென்றெண்ணி அதனை விரும்பியிருக்கின்றாய்; அங்ஙனம் விருப்பமுற்றிருக்கும் பொழுதே), இளமையும்- நம்முடைய இளமைப்பருவரும், கொன்னே- (மறுமைப்பயனை யடைதற்குரிய அறத்தைச் செய்யாமல்) வீணாக, கழிந்தன்று- நீங்கிவிட்டது, (அங்ஙனம் நீங்கியதோடு உடம்பும் ஒழிதற்கு), இன்னே- இப்பொழுதே, பிணியொடு- நோயும், மூப்பும்- கிழத்தன்மையும், வரும்- வந்து சேரும், (இவற்றின் நிலை இங்ஙனமிருந்தும் உலகவாழ்வு நிலையற்றதென்று), துணிவுஒன்றி- துணிதலைப்பொருந்தி, (நற்கதியடையும் மார்க்கத்தை), என்னோடு- என்னுடனே, (கூடி), சூழாது- ஆராயாமல், போதி- (அந்த நிலையற்ற வாழ்க்கையின் மார்க் கத்திலேயே) செல்கின்றாய், (இதனால் ஒரு பயனுமில்லை; நாம் முத்தியடைய வேண்டுமாயின் நம்மிடத்தில் நன் மார்க்கம் சேர்ந்திருத்தல் வேண்டும்; ஆதலின்), நமக்கு-, நல் நெறிசேர- அத்தகைய நன்மார்க்கம் கிடைக்க, எழு- (துறவு பூண்டு தவஞ்செய்தற்கு) எழுவாயாக; எ-று.

நிலையற்ற உலகவாழ்க்கையில், தன்னை மனம் இழுத்துச்செல்ல, அது சென்றவழியே சென்று இன்பதுன்பங் களை யனுபவித்த ஒருவன், தன் இளமை நீங்கியபின் உலக வாழ்வு நிலைத்திராதென்றுணர்ந்து, அதனைவிடுத்து முத்தி யடைதற்குரிய மார்க்கத்தைத் தேடிக்கொள்ளுமாறு அம்மனத் திற்கு வற்புறுத்திக் கூறியதாக இச்செய்யுள் முனிவரால் அமைக்கப்பட்டது. இதனால், அநித்தியமாகிய உலக வாழ்வை விரும்பியிருக்கும் ஒவ்வொருவரும், அதன்வழி யிற் செல்லும் மனத்திற்கு இங்ஙனம் அறிவுகூறி அதனை

நன்மார்க்கத்திற் றிருப்பித் துறவுபூண்டு முத்திமார்க்கத்திற் செல்ல வேண்டுமென்பது பெறப்படும்.

மனமே! நீ உலகவாழ்வு நிலையுள்ளதென் றெண்ணி அதனை விரும்புகின்றாய்; அங்ஙனம் விரும்பி யிருக்கும் போதே நம் இளமை வீணாகக் கழிந்துவிட்டது; உடம்பொழி தற்குப்பிணியும் கிழப்பருவமும் வந்து சேரும். உலகவாழ் வின் தன்மை இத்தகையதா யிருந்தும் அதனைவெறுத்து, என்னோடு கூடி முத்தியடையும் மார்க்கத்தை ஆராய்ந்து செய்யாமல், மேலும் அந்த நிலையற்ற உலக வாழ்க்கையின் மார்க்கத்திலேயே சென்றுகொண்டிருக்கின்றாய்; இதனால் ஒருபயனுமில்லை; ஆதலின், முத்திமார்க்கத்தை அடைதற் குரிய அறமியற்றமுயலுவாயாக என்பது இதன் கருத்து.

மனிதர்க்குரிய இளமைப்பருவமானது, பிணி முதலிய துன்பங்கள் வரினும் பொறுத்து இன்பமுடைய தாகவே விளங்கும்; அப்பருவத்தில் நோய் முதலியன வரினும் அவற்றின் வன்மையைக் காட்டமாட்டா; முதுமைப் பருவத்திலோ சிறுபிணிவரினும் பெரிதாகி விருத்தியடை யும்; அதனால் உடம்பும் நாசத்தை அடையும்; ஆதலின், ''நமக்கு இனிமை செய்யும் இளமை வீணாகக் கழிந்தது; வருத்தத் தைச் செய்யும் பிணியும் கிழப்பருவமும் வரும்'' என்றார் ஆசிரியர். இதனால் மனிதர் இளமையிலேயே துறவுபூண்டு தவஞ்செய்தல் வேண்டுமென்பது கூறியதாகும். 'நமக்கு' என்பதை முன்னே கூட்டி, ''நமக்கு ..... கழிந்தன் றிளமை, பிணியொடு மூப்பும்வரும்'' என்று முடிப்பினும் அமையும்; இங்ஙனம் முடிக்குமிடத்து, 'நன்னெறிசேர' என்ப தற்கு ''நாம் நல்லமார்க்கத்தில் சேர'' என்று பொருளுரைத்தல் வேண்டும். இனி, ''......... என்னொடு சூழாதெழு நெஞ்சே! இளமையும் கழிந்தன்று, பிணியொடு மூப்பும் வரும், நமக்கு நன்னெறிசேரப் போதியோ என மாற்றி, என்னொடு கூடிச் செய்யத் தக்கதை ஆராய்ந்து செய்யாமல் புலன்களின்மேற் செல்கின்ற மனமே! இளமை யுங் கழிந்தது, பிணியும் மூப்பும்

வரும்; ஆதலால், இனியாயினும் நமக்கு முத்திநெறி கிடைக் கத் துறவுக்குச் செல்வாயோ'' எனப் பொரு ளுரைப்பாரு முளர்; இவ்வுரையில் 'போதியோ' என்பதற்குமட்டும், 'இவ்வாறானபின்பும் அவ்வாறே புலன்களின்மேற் செல் வாயோ' என மாற்றிப் பொருளுரைக்கும் ஒருசாராருமுளர். இவையின்றி இச்செய்யுள், உலகவாழ்க்கையிலிருந்த ஒருவ னுடைய மனம் திடீரென்று துறவைநாட அவன் அம் மனத்தை நோக்கிக் கூறியதாக அமைந்ததெனக் கொண்டு, இதற்கு, ''இளமையும்..... கழிந்தது, இப்பொழுதே பிணியும் மூப்பும்வரும், ஆதலால் துணிவைப்பொருந்தி என்னோடு ஆலோசியாமல் முத்தியைநாடி எழுகின்ற மனமே' நமக்கு நல்வழி கிடைப்பதற்குப் போகிறாயோ'' எனப் பொருள் கூறுவர் மற்றொரு சாரார்.

நமக்கு - உனக்கும், எனக்கும். உனக்கும் என்பது மனத்தையும், எனக்கும் என்பது ஆத்மனையும் குறிக்கும். 'பிணியொடு மூப்பும் வரும்' என்பதற்கு, 'நோயோடு கூடிய கிழத்தன்மையும் விரைவில்வரும்' எனப் பொருளுரைப் பினுமாம். கொன்- பயனின்மைப் பொருள்தரும் இடைச் சொல். கழிந்தன்று- ஒன்றன்பால் வினைமுற்று; இதில், கழி- பகுதி, று- விகுதி, த்- இறந்தகால இடைநிலை, த்- சந்தி, அன்- சாரியை, சந்தியால் வந்த தகரவல்லொற்று நகரமெல் லொற்றானது விகாரம். 'இன்னே' என்பது விரைவையும் தேற்றத்தையும் குறித்தது; இன்- இடைச்சொல். 'இளமை யும்' என்பதிலுள்ள உம்மை- எதிரது தழுவியது; பிணி, மூப்பு என்பவற்றிலுள்ள உம்மைகள்- இறந்தது தழுவியன; எண்ணி நிற்றற் பொருளனவெனினுமாம். ஆல் - அசை. 'துணி வொன்றி' என்பதை 'போதி' என்பதனோடுங் கூட்டலாம். போதி - முன்னிலை யொருமை நிகழ்காலமுற்று; இதில், போ - பகுதி, இ - விகுதி, த் - எழுத்துப்பேறு; தி-என்பதும் விகுதியாம்; இப்பதம் இங்ஙனம் நிகழ்காலத்துக்கு வருதலே யன்றி எதிர்காலத்திலும், ஏவற்பொருளிலும் வரும். 'செல்

வாயோ' என்று பொருள்கூறுமிடத்து இது எதிர்கால முணர்த் திற்று. 'போதியோ' என்பதில், ஓ- அசை.

56. *மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெனினும்*
பூண்டான் கழித்தற் கருமையாற்-பூண்ட
மிடியென்னுங் காரணத்தின் மேன்முறைக் கண்ணே
கடியென்றார் கற்றறிந் தார்.

(இ-ள்.) (ஒருபெண்ணிடத்தே), மாண்டகுணத் தொடு - மாட்சிமைப்பட்ட நற்குணங்களும், மக்கள்பேறு- பிள்ளைகளைப் பெறுவதும், இல் எனினும்- இல்லையென் றாலும், பூண்டான்- அவள்மணத்தைப் பூண்டவன், (அவளை மணஞ்செய்து கொண்டவன்), கழித்தற்கு- (அவளை அக் காரணங்களால்) நீக்குதற்கு, அருமையால்- முடியாமையா மாதலானும், (அங்ஙனம் நீக்கமுடியாம லேற்படும் அக்கலி யாண பந்தமானது), பூண்டமிடி- சேர்ந்த துன்பமேயாகும், என்னும் - என்று (பலரும்) சொல்லுகின்ற (இழிசொல் லாகிய), காரணத்தின்- காரணத்தினாலும், கற்றறிந்தார்- (நூல்களைப்) படித்து (அவற்றினுட்பொருளைத்) பெரிந் தவர்கள், மேல்- மேலாகிய, முறைக் கண்ணே- (ஒழுக்கங் களைக் கூறும்) நூல்களிலே, (கலியாணம் என்றும், நீக்குதற் குரியது என்றும் இருபொருள்களைத் தரும் 'கடி' என்ற ஒருசொல்லாலே அதன்பெயரும், அதனை நீக்குதல் அவசிய மென்பதும் விளங்கும்படி அக்கலியாணத்தை), கடி- (கலி யாணம்) நீக்கத்தக்கது, என்றார்- என்று கூறினார்; (ஆதலின், கலியாணம், துன்பமற்ற நிலையை விரும்பும் அறிஞரால் கொள்ளத் தக்க தன்றாம்); எ-று.

ஒருவனுடைய இல்லக்கிழத்தி, இல்லறத்திற்கேற்ற நற்குணங்களும், மக்கட்பேறும் இல்லாதவளாயிருப்பினும், அவளை, அவன் நீக்கல் முடியாதாதலானும், அத்தகைய, கலியாணபந்தம் துன்பமே யென்று பலரும் சொல்லுத

லானும், கற்றறிந்தோர் 'கலியாணம் கடியத்தக்கது' என்று கூறினார். ஆதலின், துன்பமற்ற பேரின்பத்தையடைய விரும்புவோர் அதனை நீக்கித் துறவுபூண்டு தவஞ்செய்ய வேண்டுமென்பது இதன்கருத்து.

மாதர்க்கு மாட்சிமைப்பட்ட குணங்களாவன:— நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, கற்பு, அடக்கம் முதலியவைகளாம். மக்கட்பேறாவது - சற்புத்திரர்களைப் பெறுதலாம். இத்தகைய குணங்களும், மக்கட்பேறு முடையாரே மனையறத்துக் குரியாராவர். இதனை,

''மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு''

என்பதனா லுணர்க. 'இவை யில்லாதவளையும் மணஞ் செய்து கொண்டவன் நீக்குதல் அருமை' என்றதனால், அவற்றையுடையாளை நீக்குதல் முற்றுங் கூடாதென்பது விளங்கும். ஒருவனுடைய மனைவி, நற்குண நற்செய்கைகளையுடையவளாயிருந்து இல்லறத்தை ஒழுங்குற நடத்தினும் அதிலும் அவனுக்குப் பலதுன்பங்கள் நிகழாதிருப்பதில்லை. கெட்ட மனைவி யமைந்தாலோ அவளால் நடத்தப்படும் அவ்வில்லற முழுவதுமே புல்லறமாய்த் துக்க வடிவமாய்த் திகழும். ஆகலின் எவ்வகையிலும் ஒருவன் ஒரு பெண்ணை மணந்து இல்வாழ்க்கை நடத்துதல் அவனுக்குத் துன்ப ஏதுவேயாம். இஃதிங்கனமிருப்பினும் ஒருவன் ஒருத்தியை மணந்துகொண்டபின் எக்காரணத்தானும் நீக்குதல் இயலாது. ஆதலின், இதனைச் செய்யாமலே நீக்கிவிட்டு இளமையிலேயே துறப்பது நல்லதென்பதை இச்செய்யுளால் விளக்கினார் ஆசிரியர். இளமையிற்றுறத்தலே சிறந்ததென்பது ஜைனர் கொள்கையாகலின் முனிவர். இங்ஙனம் கூறினாரென்க. இனி, ''கற்றறிந்தார் மேன்முறைக்கண்ணே கடி என்றார்'' என்பதற்கு ''கற்றறிந்த பெரியோர் மேலாகிய

துறவொழுக்கத்திலே நின்று, 'மனிதனே! வினையை நீக்கு' என்றபடி'' என்றுபொருள் கூறுவாருமுளர்; 'மேன்முறைக் கண்ணே' என்பதற்கு, ''(மணஞ்செய்வதற்கு) முற்பொழு திலே (முந்தியே)'' என்றும் பொருள் விரிப்பர் ஒருசாரார்.

மாண்ட - மாண்பு என்னும் பண்படியாப் பிறந்த இறந்தகாலப் பெயரெச்சம். உம்மை- இழிவு சிறப்புப் பொரு ளது. ஒடு- எண்ணிடைச் சொல். பூண்டான்- வினையாலணை யும் பெயர். 'அருமை' என்பது, 'கூடாமை' என்னும் பொருள் பயந்து நின்றது. பூண்ட- இறந்தகாலப் பெயரெச்சம். மிடி- வறுமை; இஃதிங்குத் துன்பத்திற்கு ஆகுபெயராய் வந்தது. 'காரணத்தின்' என்பதில், இன்னுருபு- ஏதுப் பொருளது. 'முறை' என்பது- ஒழுக்கம், நூல், காலம்என்னும் பொருள் களைத் தரும். 'கடி' என்பது, 'நீக்கப்படுவது' என்று பொருள் விரிக்கப்படும்போது செயப்படுபொருள் விகுதி குன்றிய பெயர்; 'நீக்கு' என்று பொருளுரைக்கப் படும்போது, ஏவ லொருமை வினைமுற்று; 'மணம்' என்று பொருள் விரிக்கப் படும்போது இடுகுறிப்பெயர். இவ்விடுகுறிப் பெயர்க்கு 'கடிதற்குரியது' என்றும் காரணப் பொருள் கற்பித்து ஆசிரியர் கூறியது பிரிநிலை நவிற்சியணி யெனப்படும்; வடமொழி யில் இது, 'நிருத்தி' என்று கூறப்படும். 'கடி' என்பது இங்ஙனம் நீக்குதல், மண வினைச் சிறப்பு முதலிய பொருள் களைத் தருவது, ''கடி யென்கிளவி....'' என்னும் (தொல்- சொல்-உரி-87-ஆம்) சூத்திரத்தாலுணரப்படும். (கூ)

57. *ஊக்கித்தாங் கொண்ட விரதங்க ளுள்ளுடையத்*
தாக்கருந் துன்பங்க டாந்தலை வந்தக்கால்
நீக்கி நிறூஉ முரவோரே நல்லொழுக்கங்
காக்குந் திருவத் தவர்.

(இ-ள்) ஊக்கி- முயன்று, தாம்கொண்ட- தாங்கள் (செய்து முடித்தற்கு) எடுத்துக்கொண்ட, விரதங்கள்- தவ வொழுக்கங்கள், உடைய - கெடும்படி, உள்- மனத்தில்,

தாக்கு அரும்- தாங்குதற்கரிய, துன்பங்கள் - தீங்குகள், தலை - தம்மிடத்தில், வந்தக்கால்- வந்து சேர்ந்தால், நீக்கி- (அவற்றைத்) தள்ளி, நிறூஉம்- (அவ்விரதங்களை) நிலை பெறச் செய்கின்ற, உரவோரே- மனோவல்லமை யுடையவரே, நல் ஒழுக்கம் - நல்ல துறவொழுக்கத்தினை, காக்கும் - (விடாமல்) காக்கின்ற, திருவத்தவர்- சிறப்பினையுடையவராவார்; எ-று.

தங்கள் தவவிரதங்கள் கெடும்படி துன்பங்கள் வந்தாலும் அவற்றை நீக்கி அவ்விரதங்களை நிலைநிறுத்தும் மனோதிட முடையாரே துறவொழுக்கத்தினைக் காக்கும் சிறப்பினையுடையவராவர் என்பது இதக் கருத்து.

துறவிகள் விரதங்களை அனுஷ்டிக்குங் காலத்தில் அவற்றிற்கிடையூறாகப் பலதுன்பங்களுண்டாகும்; எனினும் அறிவின் மிக்கார் அவற்றிற்கஞ்சி அவ்வொழுக்கங்களை விட்டுவிடமாட்டார்கள்; அறிவிற் குறைந்தவர்களோ அவற்றால் மனந்தளர்ந்து விரதங்களை விட்டொழிவர். ஆதலின், துன்பங்கள் வந்தவிடத்தும் விரதங்களை அறவொழுக்கம் பூண்டாரெவரும் தமக்கு எத்தகைய துன்பங்களுண்டாயினும், மனந்தளராமல் அத்துறவிற்குரிய விரதங்களை நிறைவேற்றல் வேண்டு மென்பது பெறப்படும்.

இங்குக்குறித்த விரதங்களாவன:- ஜைன நூல்களிற் கூறப்படும் அணுவிரதம், குணவிரதம், சிக்ஷாவிரதம், மகாவிரதம் என்னும் நான்குவகை விரதங்களுள் துறவிகட்குரிய மகாவிரதவகையைச் சார்ந்தவைகளாம். இவற்றின் விரிவுகளைச் சீவகசிந்தாமணி, மேருமந்திரம் முதலிய ஜைன காவியங்களுட் காணலாம். துன்பங்களாவன: ஜைனமத நூல்களிற் கூறப்படும் 22 - வேதனைகளாம்; இவை பரீஷகங்களெனப்படும்; இவற்றுள், அப்பியந்தர பரீஷகங்கள், பாஹ்ய பரீஷகங்கள் என இருவகையுண்டு; அப்பியந்தர பரீஷகங்கள் - மனோசம்பந்தமாயுண்டாகும் துன்பங்கள்; பாஹ்யபரீஷ

கங்கள்- காயசம்பந்தமாயுண்டாகும் கஷ்டங்கள். தண்ணீர்த் தாகம், பசி, நோய், யாசகம், விரும்பியதைப் பெறாமை, யோகத்திலிருத்தல், ஆகாராதிகளின் பொருட்டுச் செல்லல், படுத்தல், ஆடையணியாமை, அதரிசனம், (அதாவது, பார்க்கத் தகாததைப் பார்த்தல்), பிரஜ்ஞா, (அதாவது, அறிவோடு கூடியசெயல்), அஞ்ஞானம், (அதாவது, அறியாமையால் நேரும் செயல்), சித்தங்கலங்கி நிலைபெறா திருத்தல் என்னும் பதின்மூன்றாலும் உண்டாகுந் துன்பங்கள் அப்பியந்தர பரீஷகங்களாம்; வெப்பம், குளிர், மலஸ்ஃபரிசம், ஸத்காரபுரஸ்காரம், (அதாவது, துதியாலும் உபசரிப்பாலும் மனம் வேறுபடல்), வெஞ்சொற்செப்பல், கொலை, தின்றல் குத்தல், (அதாவது, பிராணிகள் உடலைத்தின்றும் குத்தியும் வருத்தல்), தீயஸ்பரிசம், ஸ்திரீசேர்க்கை என்னும் ஒன்பதாலும் உண்டாகுந் துன்பங்கள் பாஹ்யபரீஷகங்களாம். இவை, தவத்தைக் கெடுப்பனவாம்; இவற்றை வெல்லுதல் தவத்தினர்க் குரியதாம்; இது பரீஷகஜயமென்று சொல்லப் படும். இவற்றின் விவரம்,

''வேடைக்கையிற் பசியி னோயில் வேண்டலிற் பெருமை தன்னில்
தாட்சியி லிருத்தல் போதல் கிடத்தலி லுடாமை தன்னிற்
காட்சியி லறிவின் ஞான மின்மையிற் கலங்கிச் சித்த
மாட்சியைச் செலாத கத்துப்பரிசைபன் மூன்றும் வென்றான்''

''வெப்பமுங் குளிருமாசுஞ் சிற்பமுந் துறலும் வெஞ்சொற்
செப்பலுங் கொலையுந் தின்றல் குத்தலுந் தீய வூறுந்
துப்புறழ் வாயி னார்தந் தொடர்ச்சியாம் பரிசையுள்ளிட்
டொப்பிலாப் புறத்துநின்ற வொன்பது மொருங்கு வென்றான்''

என்னும் (மேருமந்தரபுராணம்- சக்கராயுதன் முத்திச் சருக்கம் -38-39ஆம்) செய்யுட்களால் உணரப்படும்.

இனி, வேறு சில மத சித்தாந்தங்களில் இத்துன்பங் களின் வகைகள் வேறுவிதமாகக் கூறப்படுகின்றன; அவை யாவன:- ''துன்பங்க ளென்பன: ஆத்யாத்மிகத்தாலும், ஆதி பௌதிகத்தாலும், ஆதிதைவிகத்தாலும் நேரும் அல்லல் களாம்; ஆத்யாத்மிகத்தா லுண்டாவன:- சரீரத்தைப் பற்றி வரும் பிணிகளால் ஏற்படும் துன்பங்களும், மனத்தைப் பற்றி வரும் காமக்குரோதாதிகளால் உண்டாம் உபத்திரவங்களு மாம்; ஆதிபௌதிகத்தா லுண்டாவன:- மனிதர், மிருகம், பைசாசம் முதலியவற்றா லுண்டாம் இன்னல்களாம்; ஆதி தைவிகத்தா லுண்டாவன:- தெய்வச் செயலால் ஏற்படும் இடி, காற்று, மழை, வெயில், நெருப்பு, நீர் முதலியவற்றால் நேருந்தீங்குகளாம்.'' என்பனவே. இத்துன்பங்களை நீக்குத லாவது- இவற்றிற்கு மனத்தில் இடங்கொடாதிருத்தல். விரதங்களை நிறுத்துதலாவது- அவை நிறைவேறுமாறு செய்தல்.

'உரவோர்' என்பதற்கு 'அறிவுடையோர்' எனப் பொருளுரைப்பினும் அமையும். ஊக்கி- ஊக்கு என்னும் வினைப்பகுதியி னடியாகப்பிறந்த இறந்தகால வினையெச் சம். கொண்ட- இறந்தகாலப்பெயரெச்சம். விரதம்- வ்ரதம் என்னும் வடசொற்றிரிபு. 'தாங்கரும்' என்பது வலித்தல் விகாரம்பெற்று, 'தாக்கரும்' எனவந்தது; தாக்கு- முதனிலை திரிந்த தொழிற்பெயர். 'துன்பங்கள் தாம்' என்பதில், தாம்- அசை. 'நிறுவும்' என்பது விகாரம்பெற்று, 'தாக்கரும்' என வந்தது; தாக்கு - முதனிலை திரிந்த தொழிற் பெயர். 'துன்பங் கள்தாம்' என்பதில், தாம் - அசை. 'நிறுவும்' என்பது விகாரப் பட்டு, 'நிறூஉம்' என அளபெடுத்து நின்றது; இது சொல் லிசை யளபெடை யெனப்படும். 'உரவோரே' என்பதில், ஏ- பிரிநிலை; தேற்றமுமாம். 'திருவத்தவர்' என்பதில், திரு- பகுதி, அத்து, அ - இரண்டும்- சாரியைகள், அர்- விகுதி; 'திரு

வர்' என்பது அத்து, அ- என்னும் இருசாரியைகளைப் பெற்று இங்ஙனம் 'திருவத்தவர்' எனவந்தது; இதில், உகரஈறு வேற்றுமைக் கண் அத்துப்பெற்றது, தொல் - எழுத் - குற் - 78-ஆம் சூத்திரத்தான் அமையும். இனி, 'திருவத்தவர்' என்பதை, 'திரு - அத்தவர்' எனப் பிரித்து, 'திரு - சிறப்புள்ள, அத்தவர் - அத்தகைய தவசிகள்' எனப் பொருள் கூறினும் அமையும். இச்செய்யுள் - ஒரு விகற்ப இன்னிசை வெண்பா. (எ)

58. *தன்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்*
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா- லும்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்.

(இ-ள்) தம்மை - (பிறர்க் கெவ்வித தீங்குஞ் செய்யாத) தங்களை, இகழ்ந்தமை - (பிறர்காரணமின்றி) நிந்தித்ததை, தாம் - தாங்கள், பொறுப்பது அன்றி - சகித்துக்கொள்வது மாத்திரமே யல்லாமல், மற்று - பின்னரும், எம்மை இகழ்ந்த - (இவர்) எம்மைப் பழித்த தனாலாய, வினைபயத்தால் - தீவினையின் பலனால், உம்மை - மறுமையில், எரிவாய் - எரிதல் பொருந்திய, நிரயத்து - நரகத்துள், வீழ்வர் கொல் என்று - வீழ்ந்து வருந்து வார்களே என்று, பரிவதூஉம் - இரக்க முறுவதும், சான்றோர் கடன் - துறவொழுக்கம் நிறைந்தவரின் கடமையாம்; எ-று.

துறவொழுக்கம் நிறைந்தவர்களாக யிருப்பவர்கள், பிறர் தங்களைக் காரணமின்றி நிந்திப்பதைப் பொறுத்துக் கொள்வதுமின்றி, 'இவர் நம்மைப்பழித்த பாவத்தால் நரகத்தில் வீழ்ந்துவருந்துவரே' என்று, அவர் அதன்பொருட்டு அடையும் தண்டனைக் கிரங்குவதும் அப்பெரியார்க்குரிய கடமையாம் என்பது இதன்கருத்து.

பெரியாரைப் பழிப்போர் நிச்சயமாக நரகிடை வீழ்ந்து வருந்துவர். இவ்வுண்மையை அப்பெரியார் உணர்

வர். ஆதலின், தம்மை நிந்தித்தார்மீது கோபங்கொள்ளாமல் அவர் செய்த குற்றத்தைப் பொறுத்து, அவர் நரகிடை வீழ்வதன் பொருட் டிரங்குவர்; இவற்றைச் செய்வதனால் அப்பெரியார்க்குரிய முக்கிய குணங்களாகிய சினமின்மை, பொறுமை, அருளுடைமை முதலியன விளங்கும். ஆதலின், இவற்றை விளக்கும் அச்செய்கைகள் அவர்க்குரியனவாக ஆசிரியராற் கூறப்பட்டன. இங்ஙனம் கூறியதனால் இக் குணஞ்செயல்களையுடையாரே துறவிற்சிறந்த சான்றோ ரென்பதும், இவை யில்லாதவர் சான்றோராகா ரென்பதும் பெறப்படும். இன்னும் பொறுமை யற்றார்க்குப் பெருமை யும் கெடும். இதனை,

''நோவ உரைத்தாரைத் தாம்பொறுக்க லாகாதார்
நாவின் ஒருவரை வைதால் வயவுரை
பூவிற் பொலிந்தகன்ற கண்ணாய் அதுவன்றோ
தீயில்லை ஊட்டும் திறம்''

என்னும் பழமொழி-58-ஆம் செய்யுளால் உணர்க.

இகழ்ந்தமை- இறந்தகாலத் தொழிற் பெயர்; இதில், மை- தொழிற்பெயர் விகுதி. 'பொறுப்பது' என்பதில், எதிரது தழுவிய எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. மற்று - வினை மாற்றுப் பொருளது. எம்மை - இயற்கைபற்றிய தனித் தன்மைப் பன்மை; மனிதர் ஒவ்வொருவரும் தம்மைப் பற்றிக் கூறுங்கால் பன்மையாகக் கூறுதல் இயல்பு; இஃதன்றித் தம்மைப்போன்ற பிறரையும் உளப்படுத்திய பன்மை யெனினுமாம். இகழ்ந்த - பெயரெச்சம்; காரணப் பொருளது. உம்மை- மறு உலகம்; இதில், மை - இடப்பொரு ளுணர்த்துவது; இது, 'இம்மை' என்பதற் கெதிர்மொழி; இம்மை - இவ்வுலகம். எரிவாய் நிரயம்- அழல் வெப்பத்தை யுடைய நரகம்; ''ஜைனநூல்களிற் கூறப்படும் இரத்தினப் பிரபை, சருக்கராப்பிரபை, வாலுகாப் பிரபை, பங்கப் பிரபை, தூமப்பிரபை, தமப்பிரபை, தமத்தமப்பிரபை

என்னும் எழுவகை நரகங்களுள் வெப்பமுள்ள ஒன்றாம்; இங்குக் கூறியவற்றுள் வாலுகாப்பிரபை - சுடுமண் நிலமுள் ளது; தூம பிரபை - புகையும் நெருப்புமுள்ளது; இவ்விரண் டும் வெப்பமுள்ளன்வாதலின் எரிவாய் நரகமெனப்படும்; இங்கே 'எரிவாய் நிரயம்' என்றது இவ்விரண்டனு ளொன்றை யென்க. இனி, பாவஞ் செய்தார் அதற்குத்தக்க நரகத்தை யடைந்து நெருப்பு முதலியவற்றால் வருத்தப்படுவராதலின், 'எரிவாய் நிரயம்' என்பதற்கு, 'பாவஞ்செய்தாரை வருத்தும் நெருப்புள்ள நரகம்' எனப் பொருள் கூறினுமாம். பாவஞ்செய்தார் நெருப்பு முதலியவற்றால் வருத்தப்படும் நரககதி துன்பங்களை, சீவகசிந்தாமணி 2762 முதல், 2776 வரையுள்ள செய்யுட்களால் உணரலாம். 'எரிவாய் நிரயம்' என்பதற்கு, 'எரிகின்ற வாயையுடைய நரகம்' எனப் பொரு ளுரைத்தலு மொன்று. நிரயம் - தற்சமமாய் வந்த வடசொல்; தற்சமமாவது - ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொதுவெழுத் தாலாகி விகாரமின்றித் தமிழில் வந்து வழங்கும் வடமொழி; தத்+ ஸமம் = தற்சமம்; இதன் பொருள்- அதை நிகர்த்தது என்பதாம். கொல்-அசை; வினா வகையால் இரக்கத்தை யுமுணர்த்தும். பரிவதூஉம் - இன்னிசையளபெடை; 'பரிவ தும்' என நிற்பினும் செய்யுளோசை குன்றாது; ஆயினும் இனிய ஓசை தருதற்குறில் நெடிலாகி அளபெடுத்தது; ஆதலின், இஃதின்னிசையளபெடையாயிற்று. இதிலுள்ள உம்மை - இறந்தது தழுவிய எச்சப் பொருளது; உயர்வு சிறப்புப் பொருளதுமாம். *(அ)*

59. *மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற*
ஐவாய வேட்கை யவாவினைக்- கைவாய்க்
கலங்காமற் காத்துய்க்கு மாற்ற லுடையான்
விலங்காது வீடு பெறும்.

(இ-ள்). மெய்- உடம்பும், வாய்- வாயும், கண்- நேத்திரமும், மூக்கு- நாசியும், செவி- காதும், என - என்று பேர்பெற்ற- பெயரைக் கொண்ட, ஐவாய - ஐந்தின் வழி

யானும் (மனத்தில்) எழுவனவாகிய, வேட்கை- (நுகர் பொருள்களின்) பற்றுக்களாகிய,அவாவினை- ஆசைகளை, கலங்காமல்- அவற்றால் (அம்மனங்) கலங்காதபடி, காத்து- (நிலையற்ற இன்பப் பொருள்களில் அவை செல்லாமல்) தடுத்து, கைவாய்- நல்லொழுக்கத்தில் (அதாவது துற வொழுக்கத்தில்), உய்க்கும்- செலுத்துகின்ற, ஆற்றலுடை யான்- வல்லமையுடையவன், விலங்காது- தப்பாமல், வீடு- முத்தியை, பெறும்- அடைவான்; எ-று.

ஐம்பொறிகளின் வழியாக நுகர் பொருள்களின் மேல் மனத்தில் உண்டாவனவாகிய ஆசைகள் நிலையற்ற இன் பத்திற் செல்லாமல் அவற்றைத்தடுத்து நிலைத்த இன்பத்தை யடைதற்குரிய துறவொழுக்கமாகிய நல்லொழுக்கத்திற் செலுத்தும் மனோதிடமுடையவனே தவறாமல் மோக்ஷத்தை யடைவானென்பது இதன்கருத்து.

உலகத்தில் நுகர்பொருள்களை ஐம்பொறிகளும் அணுகும்போது அவற்றின் வழியாகப் புலன்கள் செல்ல, மனம் அவற்றின் வழிச்சென்று அப்பொருள்களைப் பற்று கின்றது; அப்போது அம்மனத்தில் அப்பொருள்களின் விருப் பங்க ளுண்டாகின்றன; அவற்றால் அவற்றின் நுகர்ச்சி, பொறிபுலன்கட்கும், மனத்திற்கும் அமைகின்றது. இத் தகைய மனப்பற்றுக்கள் தாழ்ந்த நுகர்ச்சிகளின் வழியிலும் செல்லும், உயர்ந்த நுகர்ச்சியின் வழியிலும் செல்லும்; தாழ்ந்த உலக அனுபவங்களிற் செல்வன அவற்றை யுடை யார்க்கு ஜனனமரண வேதனையை யுண்டாக்கும்; உயர்ந்த பேரின்பானுபவத்திற் செல்வன அவற்றிற் குரியார்க்கு முத்தியின்பத்தை யுண்டாக்கும். ஆதலின், ''ஐவாய வேட்கை அவாவினை... காத்துக் கைவாய் உய்க்கும் ஆற்றலுடை யான்.... வீடுபெறும்'' என்றார் ஆசிரியர். வேட்கை அவாவினைத் துறவொழுக்கத்திற் செலுத்துதலாவது, உலக இன்பநுகர்ச்சிகளையும், பேரின்ப நுகர்ச்சிகளையும் பற்றும் இயல்பினையுடைய மனவிருப்பங்கள் நிலையற்ற உலகக்

காரியங்களில் செல்லாமல் நித்தியமாகிய முத்தியின்பத்தை யடைதற்குரிய செயல்களாகிய தவம், விரதம் முதலியவற்றிற் செல்லுமாறு அவற்றைச் செலுத்துதலாம். இது,

''சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு''

என்பதா லுணரப்படும். மனவிருப்பங்களைத் தாழ்ந்த ஒழுக்கங்களிற் செலுத்தலாவது- நிலையற்ற உலக இன்ப நுகர்ச்சிகளில் புகுத்துதலாம். இங்குக் கூறியவாறே மனவிருப் பங்கள் பொறிபுலன்களின் வழியே நுகர்ச்சிகளிற் செலுத்தப் படு மென்பதை, திருக்குறள்- 26-ஆம் செய்யுளுரையில், ''செயற்கெளிய வாவன: மனம் வேண்டியவாறே அதனைப் பொறிவழிகளால் புலன்களிற் செலுத்தலும், வெஃகலும், வெகுடலும் முதலாயின'' எனப் பரிமேலழகர் கூறுவன வற்றாலுணர்க. இதனால், மனவிருப்பங்களைத் தாழ்ந்த வழியிற் செலுத்தல் எளிய செயலென்பதும், உயர்ந்த நெறியிற் செலுத்துதல் அரிய செயலென்பதும் பெறப்படும்.

இனி, இச்செய்யுளுக்கு ''மெய், வாய் முதலாகிய ஐந்துவழிகளாலும் உண்டாகின்ற வேட்கைகளாகிய அவாக் கள் மனத்திலெழாமல் அவற்றைத் தடுத்து, மனங் கலங்கா மல், அந்தமனத்தினைத் துறவொழுக்கத்திற் செலுத்துகின்ற வன்மையுடையான் தவறாமல் முத்தியடைவான்'' என்று பொருள்கூறுதலு மொன்று. இங்ஙனம் பொருளுரைக்கும் முறை வெவ்வேறாக அமையினும், மனமே நன்னு கர்ச்சி கள், தீயநுகர்ச்சிகள் ஆகிய இருவகை களிலும் செல்லக்கூடிய தாதலினாலும், ஆசைகள் மன வடிவமேயாதலானும், ''மனம் தாழ்ந்த பற்றுக்களிற் செல்லாமல் உயர்ந்த துற வொழுக்கத்திற் செல்லுமாறு அதனைச் செலுத்துவோனே முத்தியடைவான்'' என்ற கருத்தே எவ்வகையிலும் அமையு மென்க. 'ஐவாயவேட்கையவா' என்பதற்கு 'ஐம்பொறிகளை

வழியாகவுடைய வேட்கையவா' எனப் பொருளுரைத்தலு மொன்று.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்தும் ஐம் பொறிகள்; ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்பன ஐம் புலன்கள்; இவை முறையே உடம்பு, வாய் முதலியவற்றின் உணர்ச்சிகள்; இவற்றின் வழியாகவே நுகர் பொருள்களின் ஆசைகளுண்டாகும். ஊறு - ஸ்பரிச வுணர்ச்சி, அதாவது உடம்பில் பிறபொருள் தீண்டுவதைத் தெரிவிப்பது; சுவை- நாவில் உருசியைத் தெரிவிப்பது; ஒளி - கண்ணில் எப்பொரு ளும் தோற்றச் செய்வது; நாற்றம் - நாசியில் மணம் தெரியச் செய்வது; ஓசை - செவியில் தொனிகள் கேட்கச் செய்வது. 'வாய்' என்பது நாவையுணர்த்தி நின்றது. 'என' என்னும் எண்ணிடைச் சொல், மெய், வாய் முதலிய ஐந்தோடும் கூடும். 'பெயர்' என்பது, 'பேர், என மரூஉவாகிவந்தது. ஐவாய் - பண்புத்தொகை; இஃதகரவிகுதி பெற்று, 'ஐந்தி னாலும் வருவன' என்னும் பொருள் தோன்ற 'ஐவாய' என நின்றது; இது, தத்திதம்; தத்திதமாவது- பகுபதம். 'ஐந்தாலும் வருவன' என்பது பெயராமாதலின், 'ஐவாய வேட்கை' என்பது இரு பெயரொட்டுப் பண்புத்தொகையாம்; 'ஐவாய வேட்கை' என்பதைப் பெயரெச்சத் தொடராகக் கொண்டு இதற்கு, 'ஐந்தின்வழியாலும் எழுகின்ற வேட்கை' எனப் பொருள் விரித்தலுமொன்று; இங்ஙனம் கொள்ளுமிடத்து, 'வாய்' என்பது- குறிப்புப் பெயரெச்சம்; வாய் - பகுதி, அ- பெயரெச்ச விகுதி. வேட்கைகளாவன- நுகர் பொருள்களின் மேலுண்டாம்பற்று; அதாவது, சம்பந்தம். அவாக்களாவன- அப்பற்றுக்கள் அப்பொருள்களை அடைய வேண்டு மென்று மேன்மேலும் அதிகரித்தல்; இவ்விரண்டும் ஒன்றேயாகலின் சிறப்புப்பற்றி வந்த ஒருபொருட் பன்மொழியாம்; இந்த 'வேட்கையவா' என்பது, 'வேணவா' என்பது போன்றது; 'வேட்கைகளாலாகிய அவாக்கள்' எனப் பொருள் விரிக்கு மிடத்து, 'வேட்கையவா' என்பது மூன்றாம் வேற்றுமைத்

தொகையாம்; இதில், வேட்கை வேறாகவும், அவா வேறாக வும் கொள்ளப்படும். கை - ஒழுக்கம்; இதனோடு சேர்ந்து நின்ற 'வாய்' என்பது - ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. இங்குக் 'காத்து' என்பது, 'தடுத்து' என்னும் பொருளில் நின்றது; ''செல்லிடத்துக் காப்பான்.............'' என்ற 301-ஆம் குறளில், 'காப்பான்' என்பதற்குப் பரிமேலழகர், 'தடுப்பானே' எனப் பொருள் வரைந்திருத்தல் காண்க. வீடு- (சகல பற்றுக்களையும்) விட்டெய்தும் இடம்; இது, காரணப் பெயர்; 'முத்தி' என்னும் வடசொற் பொருளுடையது. பெறும் - செய்யுமென்னும் முற்று; ஈண்டு ஆண்பாலுக்கு வந்தது. இச் செய்யுளின் முதலடியில், யகர வொற்று ஆசெதுகை. (௫௯)

60. *துன்பமே மீதூரக் கண்டுந் துறவுள்ளார்*
இன்பமே காமுறுவ ரேழையார்- இன்பம்
இசைதொறு மற்றத னின்னாமை நோக்கிப்
பசைதல் பரியாதா மேல்.

(இ-ள்.) (இல்வாழ்க்கையில் நிலையற்றதாகிய சிற்றின்பஞ்சிறிது உளதெனினும் மேலும் மேலும் துன்பமே அதிகரித்துக் கொண்டிருக்கும்; அங்ஙனம்), துன்பமே- வருத்தமே, மீது ஊர- மேலேறிவர, கண்டும்- பார்த்தும், ஏழையார்- அறிவில்லாதவர்கள், துறவு- (அவ்வில் வாழ்க்கை யைத்) துறத்தலை, உள்ளார்- நினையாதவர்களாய், இன்பமே - (அவ்வில்வாழ்க்கை யிலுண்டாம் அற்பமாகிய அச்) சிற்றின் பத்தையே, காமுறுவர் - (அடைய) விரும்புவார்கள், மேல்- (விவேகத்தால்) மேலோராகியவர், இன்பம்- அச் சிற்றின் பம், இசைதொறும்- (தம்மிடத்தேவந்து) சேரும்போதெல் லாம், அதன்- அதனுடைய, (அதாவது அதனால் பின்னர் ஏற்படும்), இன்னாமை- துன்பத்தை, நோக்கி- கண்டு, பசைதல்- (அதனை) விரும்புதலை, பரியாது- கொள்ளார், (அறவினையே மேற்கொள்வர்); எ-று.

இல்வாழ்க்கையில் ஏற்படும் சிற்றின்பம் சிறிதே ஆகும்; அத்தகைய குறைந்த அளவுள்ள சிற்றின்பத்தை விரும்பி அவ் வில்வாழ்க்கையில் தங்குவார்க்கு அவ்வின்பத் திற்குக் காரணமான பொருள்களைக் காத்தல், வளர்த்தல் முதலியவற்றால் மிகுந்ததுன்ப முண்டாகும்; துறவடை யாமல் அச்சிற்றின்பத்தை அனுபவித்தலாலும் பிறப்பு முதலிய துன்பங்களுண்டாகும். இத்தகைய சிற்றின்பத்தை விரும்புவோர் அறிவற்றவராவர்; அதனை விரும்பாது பேரின்பத்திற் கேதுவாகிய துறவினை விரும்புவோர் அறிவால் நிறைந்த மேலோராவர். ஆதலின், சிற்றின்பத்தை விரும்புவோரை, 'ஏழையார்' என்றும், அதனை விரும் பாதாரை, ''மேலோர்'' என்றும் கூறினார் முனிவர். இச்செய் யுளின் இரண்டாமடியும், இந்நூலின் 51-ஆம் செய்யுளின் இரண்டா மடியும் சொற்களானும் பொருளானும் ஒரே தன்மையன; இங்ஙனம் வெவ்வேறு ஆசிரியர்களின் கருத் துக்களும் சொற்களும் ஒற்றுமை யுடையனவாய் அமைதல் இயற்கை.

'துன்பமே' 'இன்பமே' என்பவற்றிலுள்ள, ஏ- பிரி நிலை, மீது-மேல். ஊர்தல்- ஏறுதல்; இஃதிங்குச் சேர்தற் பொருளில் நின்றது; மீதூரலாவது- மேலும்மேலும் அடுக்கி வருதல். 'கண்டும்' என்பதன் உம்மை - இழிவு சிறப்புப் பொருளது. உள்ளார்- எதிர்மறைத் தெரிநிலை முற்றெச்சம். இசைதொறும்- வினைத்தொகை; இதில், தொழிற் பன்மைப் பொருளைத்தரும், 'தொறும்' என்னும் இடைச்சொல் பெயர்ச்சொன் னீர்மைத்தாய் 'நேரங்களிலெல்லாம்' என்னும் பொருள்பயந்து நின்றது; இசை என்னும் வினைத்தொகை முதல், 'இசைகின்ற' என விரிதற்பாலதாய் அதனை விசேடித்து நின்றது; இனி 'இசைதல் தொறும்' என்பது, 'தல்' கெட்டு, 'இசைதொறும்' என வந்ததெனக் கோடலு மொன்று; அங்ஙனங் கொள்ளுமிடத்து இசை- முதனிலைத் தொழிற் பெயர்; தொறும் - தொழிற்பன்மையைத் தரும் இடைச்சொல். மற்று - அசை; வினைமாற்றுப் பொருளது

மாம். பரிதல் - தாங்குதல்; அது கோடற் பொருளிலும்வரும்; ஆதலின், 'பரியாது' என்னும் எதிர்மறை, 'கொள்ளார்' என்னும்பொருள்தந்தது. மேல்- என்பது பண்பாகுபெயராய், மேன்மைக் குணமுடையாரை உணர்த்தி நின்றது. 'மேல்' என்னும் எழுவாய் பொருளால் உயர்திணைப் பன்மை யெனினும் சொல்லால் பால்பகா வஃறிணைப் பெயராக லின், 'பரியாது' என்னும் அஃறிணையொருமை வினை முற்றை யேற்றது; 'மேல்' என்பதை உயர்திணையொருமை யெனக் கொள்ளினுமாம்; அஃதிம் முடிபையேற்றற்கும் இவ்விதியேயாம். ஆம் - அசை.

அதிகாரம் 7

சினமின்மை

சினமின்மை யென்பது- ஒருவன் கோபித்தற்குக் காரணமான குற்றத்தை மற்றொருவன் செய்தவிடத்தும் அவன்மீது கோபங் கொள்ளாதிருத்தலாம். பொதுவாக மனிதரிடத் துண்டாகுங் கோபமானது, செல்லுமிடத்தும், உண்டாகுமிடத்தும் தீமை பயக்கத்தக்கது. அங்ஙனம் எல்லோரிடத்தும் இன்னல் புரிவதெனினும், முனிவர், சபித்தலும், அனுக்கிரகித்தலும் விரைந்து பலிக்கத்தக்க ஆற்றலைப் பெற்றவராதலின், அவரிடத்துண்டாம் சீற்றம் நிச்சயமாகவும், கடிதாகவும் துன்பியற்ற வல்லதாம். ஆதலின், மற்றையரினும் அவரே கோபத்தை மிகுதியும் அடக்கத் தக்கவராவர்; அங்ஙனம் அடக்காவிடின், அவர் கொண்டகோபத்தால் பிறர்கெடுவதுடன், அவர்தம் தவமும் கெடும்; இக்காரணத்தால், ஜைனமுனிவர்கள், தமக்குப் பிறர் எத்தகைய தீங்குகளைச் செய்யினும் பொறுத்துக் கோபங் கொள்ளாதிருத்தல் இயற்கை; இதனை ஜைனகாவியங் களாகிய மேருமந்தர புராணம் முதலியவற்றில் காணலாம். இங்ஙனம் கோபத்தையடக்கல் துறவிகட்கே உரியகடமையா யிருத்தலின், இது, துறவின் பின் வைக்கப்பட்டது.

61. *மதித்திறப் பாரு மிறக்க மதியா*
மிதித்திறப் பாரு மிறக்க- மிதித்தேறி
ஈயுந் தலைமே லிருத்தலா லஃதறிவார்
காயுங் கதமின்மை நன்று.

(இ-ள்). (உலகத்தில் அறிஞர் பெரியாரை மதித்தலும், அறிவில்லாப் புல்லர் அவமதித்தலும் அவர்களின் இயற்கை களாம்; ஆதலின், அங்ஙனம் பெரியாரை), மதித்து- மேன்மைப்படுத்தி, இறப்பாரும்- (நல்வழியில்) நடப் பாரும், இறக்க - நடக்க, மதியா - (அங்ஙனங்) கௌரவப் படுத்தாமல், மிதித்து- கீழ்ப்படுத்தி, இறப்பாரும்- (தீயவழி யில்) செல்பவரும், இறக்க - செல்க, (இந்தமதிப்பாலும் அவமதிப்பாலும் அவர்க்கு உயர்வோ தாழ்வோ உண்டாவ தில்லை; அங்ஙனம் பெரியாரை மதிப்பாரும் அவமதிப் பாரும் அவற்றாலுண்டாகும் புண்ணிய பாவங்களை அவரே அனுபவிப்பார்; ஆதலின் புல்லர்தம்மை அவமதித்தாலும் பெரியார் அவரைக் கோபித்தல் அவசியமின்று), ஈயும் - (அற்பபிராணியாகிய ஈயும்,மிதித்து - (எத்தகையினரையும் தன்காலால்) மிதித்து, தலைமேல் ஏறி - (அவர்) தலைமீது ஏறி, இருத்தலால்- இருத்தலினாலே, (புல்லர் பெரியாரை இகழ்தல் இயற்கை யென்பதும், அங்ஙனம் இகழ்வாரைப் பெரியார் கோபித்தல் இல்லை யென்பதும், விளங்கும்; ஆதலின்), அஃதறிவார்- அத்தன்மையை உணர்பவர்கள், (அங்ஙனம் கீழோர் தம்மை அவமதித்த விடத்தும் அவர்மீது மேற்கூறியவாறு), காயும் - (அவரையுந் தம்மையும்) சுடும் படியான, கதம் இன்மை- கோபம் இல்லாதிருத்தல், நன்று- நல்லது; எ-று.

உலகத்தில், அறிஞர், பெரியாரை மதிப்பர்; புத்தி யில்லார் அவமதிப்பர்; இவற்றா லுளவாம் புண்ணிய பாவங் களை அவரே அனுபவிப்பர்; இவற்றால் பெரியார்க்கு உயர்வுமில்லை; தாழ்வுமில்லை; அங்ஙனமில்லாதிருத்த

லால், பெரியார் தம்மை இகழ்வாரைக் கோபித்தலும் அவசியமில்லை; ஆதலின், ஒருவரை மதிப்பார் மதிக்க, இகழ்வார் இகழ்க; இங்ஙனம், அற்பர், பெரியாரை இகழ்தல் இயற்கையென்பதும், அன்னாரை அவர் அதன்பொருட்டுக் கோபித்தல் அவசியமின்றென்பதும், ஈ எவர்தலைமீதும் ஏறியிருப்பதாலும், அவர் அதனைக் கோபியாதிருத்தலாலும் உணரப்படும். ஆதலின், அந்த ஈயின் தன்மையினை யுணர்வார், அவ்வாறு தம்மை இகழ்வாரைக் கோபியாதிருப்பதே நன்று என்பது இதன்கருத்து. அற்பபிராணியாகிய ஈ, மனிதர் தலைமீது ஏறியிருந்தாலும் அஃதறிவற்ற பிராணியென்பது குறித்து அவர் அச்செய்கை தமக்குக் குறைவை யுண்டாக்கக் கூடியதென்று கருதுவதுமில்லை; அதன்பொருட்டதனைக் கோபித்தலுமில்லை. அதைப்போல் அற்பர் தம்மை அவமதித்தாலும் அவர் அறிவற்றாரென்பது குறித்து அவர் செய்கை தமக்குத் தாழ்வினை யுண்டாக்கத் தக்கதென்று கருதிப் பெரியார் அதன் பொருட்டவரைக் கோபியாதிருத்தல் வேண்டும்.

இறத்தல்- இங்கு நடக்கையை உணர்த்திநின்றது. ஒருவர் ஒன்றையோ ஒருவரையோ மிதித்தலாவது- காலின் கீழ்ப்படுத்துதலாம்; அஃதிங்குத் தாழ்மைப்படுத்துதலை விளக்கிநின்றது; நிந்தித்தல், அடித்தல் முதலியன இதில் அடங்கும். இறக்க- வியங்கோள். மதியா- மல்லீறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். 'மதித்திறப்பாரும்' என்பதிலுள்ள உம்மை - உயர்வு சிறப்போடு எதிரது தழுவிய எச்சப் பொருளது. 'மிதித்திருப்பாரும்' என்பதன் உம்மை - இழிவு சிறப்போடு இறந்தது தழுவிய எச்சப்பொருளது; இவற்றை எண்ணும்மைகளாகக் கொள்வாரு முளர்; இவை வெவ்வேறு வாக்கியத் தொடர்களில் வருவன வாதலின், அங்ஙனங் கொள்ளுதல் சிறப்பன்று. 'ஈயும்' என்பதன் உம்மை- இழிவு சிறப்புப் பொருளது. பதவுரையின் இடையில் சில சொற்றொடர்கள், பொருண்முடிபுக்கேற்ப வருவித்துரைக்கப்

பட்டன. 'அஃதறிவார்' என்பது, ஆய்தம் மெய்போ லொலிக்க, கூவிளங்காய்ச்சீராகி வெண்டளைக் கியைந்தது.

(க)

62. *தண்டாச் சிறப்பிற்றம் மின்னுயிரைத் தாங்காது*
கண்டுழி யெல்லாந் துறப்பவோ- மண்டி
அடி பெயரா தாற்ற விளிவந்த போழ்தின்
முடிகிற்கு முள்ளத் தவர்.

(இ-ள்.) (சிறந்த வொரு காரியத்தைச் செய்யத் தொடங்கிய விடத்து), ஆற்ற - மிகவும், இளி- தாழ்வு, மண்டி - நெருங்கி, வந்த போழ்தின் - வந்தகாலத்திலும், அடி - (முன் வைத்த) காலை, பெயராது- (அதற்கஞ்சிப்) பெயர்த்துப் பின் வைக்காமல், (அக்காரியத்தை), முடிகிற்கும்- நிறைவேற்றும் படியான, உள்ளத்தவர்- மனோதிட முள்ளவர்கள், தண்டா - நீங்காத, சிறப்பின் - சிறப்பினையுடைய, தம் - தமது, இன் உயிரை - இனிய பிராணனை, தாங்காது- தரியாமல், கண்ட உழி எல்லாம் - கண்ட இடங்களிலெல்லாம், (பிறர் அவமதித் தலால் வரும் தாழ்வுகுறித்துக் கோபங்கொண்டு உயிர் நீங்கு தற்கேதுவான காரியங்களைச் செய்து), துறப்பவோ - விடு வார்களோ? (விடார்); எ-று.

தவம் முதலியவற்றைச் செய்யத்தொடங்கிய துறவி கள் முதலிய பெரியார், அக்காலத்தில் பிறர் தம்மை இகழ் வதால், தமக்கிழிவுண்டாயினும் அதன்பொருட்டுக் கோபங் கொண்டு, அங்ஙனம் இகழ்ந்தாரோ டெதிர்த்தோ, வேறு பல கொடுங்காரியங்களைச் செய்தோ தம்முயிரைப் போக்கிக் கொள்ளமாட்டார்கள் என்பது இதன் கருத்து.

மானிடத் தேகமானது அரியதவத்தை ஆத்மன் செய் தற்கே துவாயிருந்து அவனை முத்தியிற் சேர்க்கவல்லது; அத் தகைய தேகம் ஒழியும்படி, பிறர்செய்யும் இகழ்ச்சி குறித்து அவன் கோபங்கொண்டு உயிரைப்போக்கிக் கொள்வானா

யின், நித்தியசுகமாகிய முத்தியை இழந்தவனாவான்; ஆதலின், மோக்ஷத்தை விரும்பும் பெரியார், சிறியார் செய்யும் அவமதிப்பால் கோபங்கொண்டு அச்சீற்றத் தால் உயிர்விடத்துணியார். இதனால், துறவிகள் பிறர் செய்யும் நிந்தை முதலியவற்றைக் கருதாமலும், அவற்றால் கோபங் கொண்டு வீணே உயிரைப் போக்கிக் கொள்ளாமலுமிருந்து தாம் கொண்ட விரதத்தை நிறைவேற்றிப் பேரின்பத்தைப் பெறல் வேண்டுமென்பது துணியப்படும். மனிதர் கோபத் தால் உயிர்விடுதலாவது, தம்மை யிகழ்ந்தாரோடெதிர்த்துச் சண்டையிட்டு மடிதல், தற்கொலை புரிந்து கொள்ளல் முதலியனவாம். இங்ஙனம், பெரியார் பிறரால் வரும் நிந் தனை முதலியவற்றிற்கஞ்சி உயிர்க்கிறுதி யுண்டாக்கித் தாம் கொண்ட விரதத்தைக் கைவிடாமல், பொறுமை யோடிருந்து அதனை முடித்தே தீருவர் என்பதை,

> *''மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்*
> *எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்- செவ்வி*
> *அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்*
> *கருமமே கண்ணாயி னார்''*

என்னும் நீதிநெறிவிளக்கம்-53ஆம் செய்யுளானு முணரலாம்.

'சிறப்பின்' என்பதில், இன்- சாரியை. 'தண்டாச் சிறப்பின்' என்பதை, 'சிறப்பின்தண்டா' என மாற்றி, இதற்கு, 'சிறப்பின் நீங்காத' எனவும் பொருளுரைக்கலாம்; இங்ஙனங் கூறுமிடத்து, ஐந்தனுருபாகிய இன்- நீக்கப் பொருளில் வந்தது. கண்டுழி- கண்ட உழி என்பதன் விகாரம்; இதில், 'கண்ட' என்பதன் ஈற்றகரந் தொக்கது. கண்டுழியெல்லாம்- இருபெயரொட்டுப் பண்புத்தொகை. 'துறப்ப' என்பதில், ப- பலர்பால் விகுதி. 'துறப்பவோ' என்பதன் ஈற்றோகாரம்- எதிர்மறைப் பொருளது. 'அடிபெயராது' என்பது, இழிவின் மிகையைக்காட்டி நின்றது. 'போழ்தின்' என்பதில், உயர்வு சிறப்பும்மை தொக்கி நின்றது. 'முடிகிற்கும்' என்பதில், முடி

- பகுதி, உம்- எதிர்காலப் பெயரெச்சவிகுதி, கில் - ஆற்றற் பொருண்மையில் வந்த இடைநிலை, கு - சாரியை. தன் வினைப் பொருள்தரும், 'முடிகிற்கும்' என்பதற்குப் பொருள் முடிபுக்கேற்ப, 'முடிக்கிற்கும்' என்னும் பிற வினைப் பொருள் கொள்ளப்பட்டது. (உ)

63. *காவா தொருவன்றன் வாய்திறந்து சொல்லுஞ்சொல்*
ஓவாதே தன்னைச் சுடுதலால்- ஓவாதே
ஆய்ந்தமைந்த கேள்வி யறிவுடையா ரெஞ்ஞான்றும்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து.

(இ-ள்.) ஒருவன்- ஒருமனிதன், தன் வாய்- தனது வாயை, காவாது- காத்துக் கொள்ளாமல், திறந்து - (தம் மீதுண்டாகிய கோபத்தால்) திறந்து, சொல்லும்- உரைக் கின்ற, சொல்- கொடுஞ்சொல்லானது, ஓவாதே- நீங்காமல், தன்னை - தம்மை, சுடுதலால்- வெதுப்பி வருத்தலினால், ஓவாதே- ஒழியாமல், கேள்வி- நூற்கேள்விகளை, ஆய்ந்து- ஆராய்ந்து, அமைந்த (அதனால்) பொருந்திய, அறிவுடை யார் - விவேகத்தையுடைய (துறவிகளாகிய) பெரியோர், எஞ்ஞான்றும்- எக்காலத்தும், கறுத்து- (பிறரைக்) கோபித்து, காய்ந்து அமைந்த- வெப்பமாகிப் பொருந்திய சொற்களை, சொல்லார்- (அவர்மீது) சொல்லமாட்டார்கள்; எ-று.

ஒருவன், பெரியாரைக் கோபித்துத் தீமொழிகளை அவர்மீது கூறுவானாயின், அக்கூற்றுக்கள் அப்பெரியார் மனத்தைச்சுட்டு வருத்தும்; அவ்வருத்தத்தைக் கொண்டே அவர்கள் சீற்றமொழியாலுண்டாம் தீமையை யுணர்ந்து கொள்வார்கள்; ஆதலின், 'நாம் கூறும் கோபக்கூற்றும் இவ்வாறுதானே பிறரை வருத்தும்' என்றுன்னிக் கோப மொழியினை எக்காலத்தும், எவ்விடத்தும் கூறமாட்டார்கள் என்பது இதன் கருத்து.

இங்ஙனங் கூறியதனால், கோபம் எவர்க்கும் மிகுந்த தீமை பயப்பதென்பதும், அறிஞராகிய துறவிகள் அதனைக் கைக்கொள்ளலாகாதென்பதும் அமையும்; கோபச்சொல் இவ்வாறு மனிதரை வருத்தத்தக்கதென்பதையும், அறிவுடையார் அதனை அகற்றுதல் வேண்டுமென்பதையும்;

''எள்ளிப் பிறருரைக்கு மின்னாச்சொற்
றன்னெஞ்சில்
கொள்ளிவைத்தாற் போற் கொடிதெனினும் -
மெள்ள
அறிவென்னு நீரா லவித் தொழுக லாற்றின்
பிறிதெனினும் வேண்டாதவம்.''

என்னும்(அறநெறிச்சாரம்-101) ஆம் செய்யுளானே யுணரலாம்.

''தீயினாற் சுட்டபுண் உள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு''

என்னும் (திருக்குறள்-129-ஆம்) செய்யுளும் இதனை விளக்கும். இனி, 'தன்னைச் சுடுதலால்' என்பதற்கு, 'கோபமொழி கூறினவன் றன்னையே அது சுடுதலால்' எனப் பொருள் கொண்டு, ''அத்தன்மை யுணரும் பெரியார், 'நாமும் பிறர்மீது கோபமொழியுரைத்தால் அஃதவரைச் சுடுவது மின்றி நம்மை யுஞ்சுடும்' என்று நினைத்து அத்தீமொழி பகரார்'' என விரிப்பினும் அமையும். இக்கருத்தின்படி சினம் தன்னைத் தோற்றுவித்தாரையும் வருத்துமென்பதனை,

''தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்''

என்னும் (திருக்குறள்-305-ஆம்) செய்யுளா னுணர்க.

காவாது - எதிர்மறை வினையெச்சம்; இதில், கா - பகுதி, ஆ- எதிர் மறை விகுதி, து-வினையெச்ச விகுதி. 'ஓவாது' என்னும் இரண்டும்- இவ்வெச்சங்களே; இவற்றுள், ஓ அல்லது, ஓவு- பகுதி. 'அறிவுரையார்' என்பதற்கேற்ப, 'தம்மை' எனவருதற்பாலது, 'தன்னை' என வந்தது, பால் வழுவமைதியான் அமைந்த ஒருமைப்பன்மை மயக்க மென்க; 'தம்மை' எனப் பாடங்கொள்வதுநேர். 'ஆய்ந் தமைந்த' என்பதற்கு, 'நூல்களை ஆராய்ந்து கற்று அடங்கிய' எனப் பொருளுரைப்பினும் பொருந்தும்; இதிலுள்ள 'அமைந்த' என்பது பெயரெச்சம். கேள்வி- நூற்களைக் கற்றுணர்ந்தோராற் கூறப்படும் உயர்ந்தபொருள்களைக் கேட்டலாம்; இது, தொழிற்பெயர்; இதில் கேள்- பகுதி, வி-தொழிற்பெயர் விகுதி. 'காய்ந்தமைந்த' என்பதில், 'அமைந்த' என்பது அன்சாரியை பெறாத பலவின்பால் வினையா லணையும் பெயர்; அன்சாரியை பெறும்போது 'அமைந்தன' எனவரும். அமைந்த சொல்லார் - இரண்டாம் வேற்றுமைத் தொகை. 'எஞ்ஞான்றும்' என்பது, 'ஒருவன்மீது கோபஞ்செய்தற்குக் காரணம் அவனிடத்துண்டானபோதும்' என்பதை விளக்கி நின்றது; இதில், வினாவாகிய, எ - எஞ் சாமைப் பொருளது; உம்மை- முற்றுப் பொருளது. கறுத்தல்- கோபத்தையுணர்த்தும் உரிச்சொல்; (௩)

''கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள''

என்னும் (தொல்- சொல்-உரி-76-ஆம்) சூத்திரம் இதனையுணர்த்தும்; 'கருமை' என்னும் பண்படி, விகாரப் பட்டு வினைத்தன்மை பெற்று இங்ஙனம், 'கறுப்பு' என வந்தது.

64. *நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்*
வேர்த்து வெகுளார் விழுமியோர்- ஓர்த்ததனை
உள்ளத்தா னுள்ளி யுரைத்துரா யூர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டுமாங் கீழ்.

(இ-ள்) விழுமியோர்- (துறவினால்) சிறந்தோர், நிகர் அல்லார் - (தமக்கு) ஒப்பாகாதவர்கள், நீர் அல்ல- நற்றகுதி யல்லாத சொற்களை, நேர்த்து - (தம்மை) எதிர்த்து, சொல் லியக்கால்- சொன்னால், (அவற்றின் பொருட்டு), வேர்த்து - (மனம்) புழுங்கி, வெகுளார்- கோபிக்க மாட்டார்கள், கீழ் - கீழ்மகனோ, அதனை- அந்நிந்தனையை, ஓர்த்து- ஆராய்ந்து, உள்ளத்தான் - மனத்தினாலே, உள்ளி- நினைந்து, (பொறுக்க முடியாமையால்), ஊர்கேட்ப- ஊரிலுள்ளா ரெல்லோரும் கேட்கும்படி, உரைத்து- (பலரிடத்தும்) சொல்லி, உராய்- (சுவர் முதலியவற்றில் உடம்பினை) உராய்ந்து, துள்ளி- (காலால்) எழும்பிக்குதித்து, தூண்- தூணிலே, முட்டும்- (தலையால்) முட்டிக்கொள்வான்; எ-று.

அறிவற்றவர், பெரியோரை நிந்திப்பதால் அவர்க் குண்டாம் குறைவொன்று மில்லையென்பதையும், அதன் பொருட்டு அவர் கோபித்தல் அவசியமின் றென்பதையும், அங்ஙனம் அவசியமில்லாத கோபத்தைக் கொள்ளின் அத னால் எவர்க்கும் தீங்கேயுண்டாகுமென்பதையும் அப் பெரியார் உணர்வாராதலின், தமக்கு நிகரில்லாத சிறியர் தம்மை நிந்தித்தாலும் அவர்மீது கோபங்கொள்ளார். கீழ் மகன், தனக்கொரு சிறப்பில்லாவிடினும், உலகத்தில், தானே சிறந்தவனென்றும், தனக்குச்சிறு நிந்தை நேரினும் பெருமை கெடுமென்றும், தான் உலகத்தில் நீண்டகாலம்வரை பெருமையுடன் வாழ்பவனென்றும் தற்பெருமைகொண் டிருப்பான்; ஆதலின், அவன், பிறர்தன்னை நிந்திப்பதைக் கேட்டவுடனே தன்பெருமைக் கிழிவுவந்த தென்று கருதி அந்நிந்தனையைச் சகிக்காமல் சினந்து, இங்குரைத்தவாறு துள்ளுதல், தூண்முட்டுதல் முதலிய செய்யத்தகாத காரியங் களைச் செய்வான். இதனால், கோபத்தை அகற்றியவர் பெரியாரென்பதும், அதனைக் கொண்டோர் சிறியாரென் பதும் துணியப்படும்.

நேர்ந்து, ஓர்ந்து என்பன, வலித்தல் விகாரம் பெற்று, நேர்த்து, ஓர்த்து, என வந்தன. 'நீர்மை' என்னும் பண்புப் பகுதி 'அல்ல' என்பதனோடு புணருங்கால் மைவிகுதி கெட்டு 'நீர்' என நின்று; நீர்மை-குணம், தகுதி; இங்கு நற்றகுதியை யுணர்த்தி நின்றது. அல்ல- பலவின்பெயர்; 'நீரல்ல' என்பது இங்கு நற்றகுதியற்ற சொற்களையுணர்த்திற்று. விழுமியோர் என்பது, சிறப்புணர்த்தும் 'விழுமம்' என்னும் உரிச்சொல்லடியாகப்பிறந்தபெயர்; 'விழுமம்' என்பது, அம்-கெட்டு 'விழும்' என நின்று, இ-சாரியையும், ஓர்- விகுதியும் பெற்று 'விழுமியோர்' என்ற பெயராயிற்று. இனி, விழுமு-பகுதி, ஆர்- விகுதி, இன்- இடைநிலை, ஆர் விகுதி ஓர் ஆயிற்று, இடைநிலையின் ஈற்று னகரவொற்றுக் கெட்டது எனக் கூறலுமொன்று; விழுமம்- சிறப்புணர்த்தும் உரிச்சொல்லென்பதை,

''விழுமஞ் சீர்மையுஞ் சிறப்பு மிடும்பையும்''

என்னும் (தொல்-சொல்-உரி-57-ஆம்) சூத்திரமுணர்த்தும். ஊர்- இடவாகுபெயராய் ஊரிலுள்ள மனிதரையுணர்த்தி நின்றது. உராய்- பகுதி; இப்பகுதியே இங்கு வினையெச்சமாகி நின்றது; 'வரிப்புனை பந்து' என்பதில், 'வரி' என்பது 'வரிந்து' என வினையெச்ச மாகியதுபோல ஆகியதென இதனைக்கொள்க. கீழ்-தாழ்மை; அஃதாகுபெயராய் அதனையுடையானை யுணர்த்திற்று; இனி, 'கீழ்' என்பதற்கு, 'கீழோர்' எனப் பொருள் கொண்டு, 'கீழ்முட்டும்' என்ற முடிபை, முன்-60-ஆம் செய்யுளில், 'மேல்பரியாது' என்றதைக் கொண்டதுபோல அமைத்துக்கோடலுமொன்று. 'ஊர்கேட்பத்துள்ளித் தூண் முட்டும்' என்பதற்கு, 'துள்ளல் முட்டல் ஆகியவற்றின் ஓசையை ஊரார் கேட்கத்துள்ளித் தூண்முட்டும்' எனப்பொருளுரைப்பினுமாம். 'முட்டுமாம்' என்பதில், ஆம் - அசை. தூண்- ஸ்தூணா என்னும் வடமொழித்திரிபு. இச்செய்யுளில் மேலோரது தன்மையையும், கீழோரது தன்மையையும் உள்ளவாறு கூறுதல் தன்மை

நவிற்சியணியின் பாற்படும். இது மற்றையவணிகளுட் சிறந்ததாகும். (ச)

65. *இளையா னடக்க மடக்கங் கிளைபொருள்*
இல்லான் கொடையே கொடைப்பயன் - எல்லாம்
ஒறுக்கு மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை.

(இ-ள்.) இளையான்- வாலிப வயதுடையவனது, அடக்கம்- அடக்கமே, (அதாவது, யௌவன முடையவன் சிற்றின்பமார்க்கத்திற் செல்லாமல் அடங்கியிருப்பதே), அடக்கம் - சிறந்த அடக்கமாம், கிளைபொருள்-(மேலும் மேலும்) விருத்தியாகும்படியான திரவியம், இல்லான்- இல்லாதவனுடைய, கொடையே- கொடுத்தற்றொழிலே, பயன்- நற்பயனைத் தருவதாகிய, கொடை-ஈகையாம், (இவற்றைப் போல), எல்லாம்- யாவற்றையும், ஒறுக்கும்- (கோபம்வந்த காலத்தில்) அழிக்கத்க்க, மதுகை-(தவ) வலிமையையும், உரன்-(ஐம்புலன்களையும் வென்ற) வெற்றியையும், உடையாளன்- உடையவனாகிய துறவி, பொறுக்கும் - (பிறர் செய்த பிழைகளுக்குக் கோபிக்காமல் அவற்றைப்) பொறுத்துக் கொள்கின்ற, பொறையே-பொறுமையே, பொறை-(உயர்ந்த) பொறுமையாம்; எ-று.

முதிர்ந்த வயதுடையவனுக்கு உடம்பில் வன்மை குறைந்திருக்கும்; அதனால் அவனுடைய பொறிபுலன்களும் மனமும் சிற்றின்ப மார்க்கங்களிலும், வேறு தீய செயல் களினும் செல்லமாட்டா; அங்ஙனம் அவனிடத்து யாவும் ஒடுங்கவே அடக்கம் இயற்கையாகவே ஏற்பட்டுவிடும். மிகுந்த செல்வமுடையவன், சிறிது பொருளைப் பிறர்க்குக் கொடுத்தற்கு அஞ்சான்; ஆதலின், அவனிடத்தே ஈகைக்கு எவ்வித இடர்ப்பாடுமிராது. பிறரை அடக்கும் ஆற்றலில்லாத வன், தன்னைப் பிறர் நிந்தித்தாலும் அவரை எவ்வகையாலும் தண்டிக்க முடியாதவனாய் அவர்செய்த தீங்கினைப்

பொறுத்துக் கொண்டிருந்துவிடுவான்; இக்காரணத்தால் பொறுமை அவன்பால் இயற்கையாகவே அமைந்துவிடும். ஆதலின், முதியவன் அடங்கியிருத்தலும், செல்வமிக்குடையான் பொருட்கொடை நல்கலும், தீயரை அடக்கும் ஆற்றலில்லாதவன், அவர் செய்யும் இடரைச் சகித்துக் கொண்டிருத்தலும் சிறந்தவனவாகா.

இளமைப்பருவ முடையானது மனமும், பொறிபுலன்களும் அவனதறிவையும் மீறி, அதன் தடைக்குள் அடங்காது செல்லும் இயல்பினவாதலின், அவன் அவற்றைத் தடுத்துச் சிற்றின்ப வழியிற் செல்லாமல் அடங்கியிருத்தல் அவனால் இயலாது; கைப்பொருள் இல்லாதவனால் பிறர்க்குச் சிறு பொருளையும் அளித்தல் இயலாது; தனக்குத் தீங்குசெய்யும் பிறரை அடக்கிவிடும் வல்லமையுடையவன், அவர், தகாதன செய்தபொழுதே கோபித்து அவரை ஒழித்துவிடுதல் கூடும். ஆதலின், இத்தகைய இளைஞன், சிற்றின்ப வழிகளிற் செல்லாமல் மனத்தை அடக்கிக் கொண்டிருத்தலும், பொருளில்லாதவன், தன்னால் இயன்ற பொருளைப் பிறர்க்குக் கொடுத்தலும், எவரையும் தனது வல்லமையால் அடக்கிவிடக்கூடியவன், பிறர் தனக்குத் தீங்கு செய்தவிடத்து அவர்மீது கோபங் கொள்ளாது அத்தீங்கினைச் சகித்துப் பொறுமையோடிருத்தலும் சிறந்தனவாம்.

அடக்கமாவது -மனம், பொறிகளின் வழியாகச் சிறற்றின்ப விஷயங்களிற் செல்லாமல், மனிதன், அதனை அடக்கிக்கொள்ளுதலாம்; பொறையாவது- ஒருவன், பிறர் தனக்குச் செய்த தீங்கினைச் சகித்துக் கோபமில்லாதிருத்தலாம். இச்செய்யுளில் பொதுவாக மூன்று பொருள்கள் கூறப்பட்டிருப்பினும், அதிகார இயல்புக்கேற்பச் சினமின்மையே முக்கியமாகக் கூறப்படவேண்டுமாகலின், முதலிரண்டையும் உபமானங்களாகவும் மூன்றாவதை உபமேயமாகவுங் கொண்டு, "இளையானடக்கமே சிறந்த

அடக்கம், பொருளில்லான் கொடையே பயனுடைய கொடை; இவைபோல எல்லா மொறுக்கு மதுகையுரனுடை யாளன் பொறுக்கும் பொறையே சிறந்த பொறுமை'' என்று கோபமின்மை சிறப்பித்துக் கூறப்பட்டது; இங்ஙனங் கூறியது எடுத்துக்காட்டுவமை யணியின் பாற்படும்; எடுத்துக்காட்டுவமையணியாவது- உபமான உபமேயங் களைத் தனித்தனியாக நிறுத்தி அவற்றினிடையில் உவம வுருபு கொடாமல் பிம்பப்பிரதி பிம்ப பாவந் தோன்றக் கூறுவது; இது வடநூலில், 'திருஷ்டாந்தாலங்காரம்' எனப் படும்; இனி, இதனை, ஒப்புமைக்கூட்டம்' என்னு மணியின் பாற் படுத்தினு மமையும்; ஒப்புமைக் கூட்டமாவது- பல பொருள்களை ஒரு தருமத்தின் முடித்துவமானித்தல். இதனுள் விதியலங்காரமும் அமைந்துளது. 'எல்லாம் ஒறுக்கும் மதுகை உரனுடையாளன்' என்றது- எல்லாவற்றை யும் அழிக்கவல்ல அரசனைக் குறிப்பதெனினும், தவ மிகுதி யுள்ள துறவிகட்கும் அவ்வல்லமை யுண்டாகலின், இங்கு அதிகாரப் பொருள்நோக்கி அன்னாரையே குறித்து நின்றது. இங்ஙனங் கூறியதனால், எல்லாவற்றையும் கோபத்தால் அழிக்கும் ஆற்றலைப்பெற்ற துறவிகள் கோபத்தை நீக்குதல் அவர்க்குரிய முக்கிய கடமையாமென்பது பெறப்படும்.

இளையான்- இளமை யென்னும் பண்படியாகப் பிறந்த ஆண்பாற் பெயர்; 'இளமை' என்னும் பண்புப் பெயரில், ஈறுபோய், இடை அகரம் ஐயாயிற்று. 'இளை யான்' என்பது, எதிர்மறைக் குறிப்பு வினையாலணையும் பெயருமாகும்; அங்ஙனமாகும்போது, 'இளையாதவன்' என்னும் பொருளைத் தரும். அடக்கம்- தொழிற்பெயர்; இதில், அடங்கு-பகுதி, அம்- விகுதி, பகுதி வலித்தது- விகாரம். கொடை, பொறை- தொழிற்பெயர்கள்; இவற்றுள் முறையே கொடு, பொறு. பகுதிகள், ஐ-விகுதி. நன்- உயி - பு - 14-ம் சூத்திரத்தில்; ''முற்றுமற்றொரோவழி'' எனக் கூறப் படும் விதிகொண்டு இப்பகுதிகளின் உகரம் கெட்டது. கிளை பொருள்- வினைத்தொகை. இல்லான்- எதிர்மறைக் குறிப்பு

வினையாலணையும் பெயர். 'கொடையே' என்பதிலுள்ள ஏ- பிரிநிலைப் பொருளது; இதனை, 'அடக்கம்' என்பத னோடுங் கூட்டுக. 'கொடைப்பயன்' என்பதை, 'பயன் கொடை' என மாற்றுக. உடையாளன்- உடையனாதலை ஆள்பவன். பொறுக்கும்- பெயரெச்சம். (ரு)

66. *கல்லெறிந் தன்ன கயவர்வா யின்னாச்சொல்*
எல்லாருங் காணப் பொறுத்துய்ப்பர்- ஒல்லை
இடுநீற்றாற் பையவிந்த நாகம்போற் றத்தம்
குடிமையான் வாதிக்கப் பட்டு.

(இ-ள்.) இடுநீற்றால் - (மந்திர வித்தைக்காரன் மந் திரித்து மேலே) போட்ட விபூதியினாலே, (தடுக்கப் பட்டுத் தன்னை வருத்தினார்மீது கோபிக்கத்தக்க காலத்திலும் சீறித் தலையெடாமல்), ஒல்லை- விரைவில், பை அவிந்த-படம் அடங்கின, நாகம்போல்- சர்ப்பத்தைப் போல, (துறவிகள்), தம்தம் - தங்கள் தங்களுடைய, குடிமையால் - நல்லொழுக் கத்தால், வாதிக்கப்பட்டு - (கீழ்மக்கள் தம்மைப் பழித்த காலத்தும் தாம் அவர்மீது கோபங்கொள்ளாமல்) தடுக்கப் பட்டு, எறிந்த கல்அன்ன- (துஷ்டர் ஒருவர்மீது) எறிந்த (கல்லைப்போல, வருத்தத்தைச் செய்யத்தக்க), கயவர் வாய்- (தம்மைப்பற்றிக்) கீழ் மக்களது வாயில் உண்டாகிய, இன்னா சொல்- கொடுஞ் சொற்களை, எல்லாரும் காண- யாவரும் அறியும்படி, பொறுத்து-சகித்து, உய்ப்பர்-(அதனை மனத்திற் கொள்ளாமல் வெளியில்) செலுத்திவிடுவார்கள், (அதாவது தள்ளிவிடுவார்கள்); எ-று.

மனிதர், தனக்கு இடர்செய்ய எதிர்பட்டபோது கோபங்கொண்டு சீறித் தலையெடுத்துப் படம்விரித்தாடக் கூடிய நாகத்தின் மேல், மாந்திரீகன் விபூதியை மந்திரித்து எறிந்தால், அஃதந்த மந்திரத்துக்குக் கட்டுப்பட்டுப் படத்தைச்சுருக்கி அடங்கிவிடும்; அப்போது அதனைப் பிறர் வருத்தினும் அஃதவர்மீது கோபங்கொண்டு அவரைத்

தீண்டமாட்டாது; மந்திரமானது அங்ஙனம் அதனைக் கட்டுப்படுத்திவிடுகின்றது; மந்திரத்துக்குக் கட்டுப்படும் இயற்கை அதற்குண்டு. அதைப்போலத் துறவிகள், தங்கள் ஆச்சிரம ஒழுக்கத்தினின்றுந் தவறாமல் அதற்குக் கட்டுப் பட்டு நடக்கும் இயல்புடையவராவர்; ஆதலின், அவர்க்குப் பிறர் தீங்கியற்றுங்காலத்தில் அவர் கோபிக்கத் தொடங் கினும் அவர்களுடைய துறவொழுக்கமானது, 'இக்கோபம் உம்முடைய பெருமையைக் கெடுத்துவிடும். ஆதலின் நீர் கோபத்தைக் கொள்ளலாகாது' என்று கூறி அவரைத் தடுத்து விடும்; அதாவது, 'பிறர் நம்மை வருத்தினும் நாம் கோபங் கொள்ளலாகாது; அப்பொறுமையே நம் தவவொழுக்கத் திற்குத் தக்கதாகும்' என்னும் உணர்ச்சி அவர்க்குண்டாகும்; அங்ஙனமாகவே அவர் தமக்குத் தீங்கியற்றினார் மீது சீற்றங் கொள்ளா தடங்கிப் பொறுமையை மேற்கொண்டிருப்பர்.

துறவிகள் எல்லோரும், 'முனிவர் குலம்' என்னும் ஒருவகுப்பில் அடங்குவர்; குலம்-இனம், கூட்டம்; ஆதலின், 'குடிமை' என்பதற்கு, 'முனிவர் குலவொழுக்கம்' எனப் பொருள் கூறப்பட்டது; குடி- குலம்; குடிமை - குலத்திற் குரிய வொழுக்கம்; இனி, முனிவர் குடியாவது- அவர்களின் ஆச்சிரமமேயாகலின், 'குடிமை' என்பதற்கு, 'முனிவரின் ஆச்சிரமவொழுக்கம்' எனப் பொருள் கூறினும் அமையும். 'குடிமை' என்பதில் மை- தன்மைப் பொருளுணர்த்தும் விகுதி. ஒருவரால் மற்றொருவர்மீது எறியப்பட்டகல், தவறாது, அவர்மீது பட்டு அவர்க்கு மிகுந்த வருத்தத்தைச் செய்யும்; அதைப் போல் கயவர்வாயின்னாச் சொல்லும் நிச்சயமாகப் பெரியாருள்ளத்தே தாக்கி வருத்தத்தைச் செய்யும்; ஆதலின், அதற்கு அக்கல் உவமை கூறப்பட்டது. 'உய்ப்பர்' என்பதற்கு, 'தமது விரதத்தை நடத்துவர்' எனப் பொருளுரைத்தலு மொன்று.

'தம் தம்' என்பது, ஒரு மகரங்கெட்டுத் தகரமிக்கு, 'தத்தம்' என வந்தது; தம்- தாம் என்பதன் விகாரம்; ''தா நா

மென்னும்..............'' (தொல்-எழுத்-உருபி-16ஆம்) சூத்திரத்தில் 'ஏனை யிரண்டு நெடுமுதல் குறுகும்' என்பத னால் அமைந்தது. கயமை - கீழ்மை - அதனையுடையார் - கயவர்; கீழ்மையாவது- நற்குணங்கள் யாவும் இலராய கீழ்மக்கள் தன்மை. 'கல் எறிந்தன்ன' என்பதை, 'எறிந்தகல் அன்ன' என மாற்றுக; இதனை நேராகவே கொண்டு, 'கல்லால் எறிந்தது போலிருக்கிற' எனப் பொருள் கூறினும் அமையும்; 'கல் எறிந்து' என்பதை இரண்டாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டு, 'கல்லை எறிந்து' எனவும் பொருள் கூறலாம்; 'எறிந்த கல் அன்ன' என மாற்றும்போது, எறிந்த- பெயரெச்சம்; கல் அன்ன- இரண்டாம் வேற்றுமைத் தொகை. உய்ப்பர் - பிறவினை; உய்- தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவான பகுதி. காண, பொறுத்து- வினையெச்சங்கள். ஒல்லை- விரைவைக்காட்டும் இடைச்சொல். இடுநீறு- வினைத்தொகை. 'ஒல்லை' என்பதை, 'வாதிக்கப்பட்டு' என்பதனோடுங் கூட்டலாம். வாதிக்க - பாதிக்க என்னும் வடமொழித்திரிபு. நாகம்- வடசொல்; சர்ப்பம் நகத்தில் வசிக்குங் காரணத்தால் இப்பெயர் பெற்றது; நகம்- மலை, மரம்; இனி அது நாகில்வாழ்வதனால் இப்பெயர் பெற்ற தெனலு மொன்று; நாகு- புற்று. 'துறவிகள்' என்பது தோன்றா எழுவாயாக வருவித்துரைக்கப்பட்டது. 'இடுநீற்றாற் பைய விந்த நாகம்போல் துறவிகள் குடிமையால் வாதிக்கப் பட்டுக் கயவர்வாயின்னாச் சொல் பொறுத்துய்ப்பர்' என்றது- உவமையணி. (சு)

67. *மாற்றாராய் நின்றுதம் மாறேற்பார்க் கேலாமை*
ஆற்றாமை யென்னா ரறிவுடையார்- ஆற்றாமை
நேர்த்தின்னா மற்றவர் செய்தக்காற் றாமவரைப்
பேர்த்தின்னா செய்யாமை நன்று.

(இ-ள்.) (பிறர் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளுதல் துறவிகளுக்குரிய முக்கிய கடமையாம்; அங்ஙனம் அவர்கள்), மாற்றாராய் நின்று- (தம்மிடத்தே)

பகையுள்ளவர்களாய் நின்று, தம்மாறு - தம்முடைய பகைமைக்குரிய செயல்களை, ஏற்பார்க்கு- மேற்கொண்டவர்களின் பொருட்டு, ஏலாமை-(தாமும் அவற்றை) மேற்கொள்ளாம லிருப்பதை, (அதாவது அவர்கட்குத் தீங்கு செய்யாமல் அவர்கள் செய்த தீங்கைப் பொறுத்துக் கொண்டிருப்பதை), அறிவுடையார்- புத்தியுள்ளவர்கள், ஆற்றாமை என்னார்- (அவர்களின்) வல்லமையற்ற தன்மை (அதாவது, முடியாமை) என்று சொல்லமாட்டார்கள், (ஆதலால்), அவர் -அப்பகைவர், ஆற்றாமை- பொறுமையில்லாமல், நேர்த்து- (அத்துறவிகளை) எதிர்த்து, இன்னா - கொடுமையான காரியங்களை, செய்தக்கால்- (அவர்களுக்குச்) செய்தால், தாம் - தாங்களும் (அத்துறவிகளும்), அவரை- அவர்களுக்கு, பேர்த்து - மீட்டு, இன்னா- அக்கொடுமையான செய்கைகளை, செய்யாமை- செய்யாதிருத்தல், நன்று- நல்லது; எ-று.

பிறர், தமக்குத் தீங்கு செய்யினும் அவர்மீது கோபங் கொள்ளாமல் அவர்செய்த தீங்கினைப் பொறுத்துக் கொள்ளுதல் துறவிகளுக்குரிய 'கடமையாகலின், அத்துறவிகள் அங்ஙனம் பொறுத்துப் பகைவர்க்கு, எதிராகத் தீங்கு செய்யாம லிருப்பதை, அவர்களின் வல்லமையற்ற செயலென்று அறிஞர் கூறமாட்டார்கள்; ஆதலின், அவர்கள், தமக்கின்னல் புரிவார்க்குத் தாமும் அதனைச் செய்யாதிருப்பதே நன்மையாகும் என்பது இதன் கருத்து. பகைவர் செய்யும் தீங்கினைச் சகித்து அவரைத் தண்டியாதிருத்தல் க்ஷத்திரியருக்கே இழிவாம்; துறவிகட்குச் சிறப்பாகும்.

மாறு- முதனிலைத் தொழிற்பெயர்; தல்லீறு கெட்டு நின்றது; மாறுதலுடையார்- மாற்றார்; மாறுதலாவது- மனம் வேறுபடல்; 'மாற்றார்' என்பதில், மாறு- பகுதி, ஆர்- விகுதி, ''ஈரெழுத்து மொழியு முயிர்த்தொடர் மொழியும், வேற்றுமையாயி னொற்றிடையின மிகத், தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி'' என்னும் (தொல் எழுத்- குற்றியலு- பு.6-ஆம்) சூத்திரவிதியால் இடையில் வல்லொற்

றாகிய, ற்-மிக்கது; இனி இதனை, ‘மாற்று-ஆர்’ எனப்பிரித்து ‘மாற்றுபவர்’ எனப்பொருளுரைப்பினுமாம்; மாற்றுதலாவது - மனப்பற்றுதலை மாற்றுதலாம். ‘தம்மாறு’ என்பதில், ‘மாறு’ என்னும் பகைமையை உணர்த்துஞ் சொல் ஆகு பெயராய் அதற்குரிய காரியங்களை உணர்த்தி நின்றது. ஏற்பார்க்கு- பொருட்டுப் பொருளில் வந்த நான்காம் வேற்றுமைவிரி; இனி இதனை, ஏழாம் வேற்றுமை நான்காவதாக மயங்கிவந்த உருபு மயக்கமெனக் கொண்டு, இதற்கு, ‘மேற்கொண்டவர்கள் விஷயத்தில்’ எனப் பொரு ளுரைத்தலு மொன்று. ஏலாமை- எதிர்மறைத் தொழிற் பெயர்; முதலில் வரும்; ‘ஆற்றாமை’ என்பது மதுவே. பின்வரும், ஆற்றாமை- எதிர்மறை வினையெச்சம். மற்று- அசை; வினைமாற் றெனினுமாம். அவரை- நான்காம் வேற்றுமை இரண்டாம் வேற்றுமையாக மயங்கிவந்த உருபு மயக்கம்;

‘‘யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்’’

என்னும்(தொல்-சொல்- வேற்றுமை ம-23-ஆம்) சூத்திர விதியால் இது பெறப்படும். இன்னா- பண்படியாகப் பிறந்த எதிர்மறைப் பலவின்பாற் பெயர். (எ)

68. *நெடுங்கால மோடினு நீசர் வெகுளி*
கெடுங்கால மின்றிப் பரக்கும்- அடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போற் றானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்.

(இ-ள்) நீசர்- கீழ்மக்களுடைய, வெகுளி - கோப மானது, (உண்டானபின்), நெடுங்காலம் ஓடினும்- நீண்ட காலம் கழிந்தாலும், கெடும்காலம் இன்றி- அழியுங்காலம் இல்லாமல், பரக்கும் (மேலும் மேலும்) வளரும்,

சீர்கொண்ட- சிறப்பை அடைந்த, சான்றோர்- துறவொழுக் கம் மிக்க) பெரியாரது, சினம்- கோபமோ, நீர்- நீரானது, அடுங்காலை- (நெருப்பேற்றிக்) காய்ச்சப்படுங் காலத்தில், கொண்ட- அடைந்த, வெப்பம்போல்- சூட்டைப்போல், தானே தணியும்- (விரைவில்) தானே தணிந்துவிடும்; எ-று.

கீழ்மக்கள், தம்மை மேம்பட்டவராக எண்ணித் தற்பெருமை கொண்டிருப்பவராதலின், பிறர் சிறுகுற்றஞ் செய்யினும் அவர்மீது கோபங்கொள்வர்; அக்கோபம், பிறர் ஆற்றுவதாலும் தணிதலின்றி, நீண்டகாலம் சென்றாலும் மறைதலின்றி வளர்ந்து கொண்டேயிருக்கும்; அவர் களிடத்தே அருளென்னும் தண்ணிய தன்மையில்லாமையின் அக்கோபம் அங்ஙனம் தணிவதில்லை. வெகுளியானது இயற்கையாய் மனிதரிடத்தே அமைந்து வருகின்ற முறைமைபற்றித் துறவிகளாகிய பெரியாரிடத்தும் ஏதேனு மொரு சமயத்தில் உண்டாதல் கூடும்; அங்ஙனம் தோன்றினும்,

''அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்''

என்னும் 30-வது குறளின்படி அவரிடத்தே தண்ணிய அருள் குடிகொண்டிருத்தலின் விரைவில் அதனைத் தணித்துவிடும்; அதனால் அவ்வெகுளி கணப்பொழுதே நின்று நீங்குவ தாகும்; அங்ஙனம் துறவிகளிடத்தில் எழும் சீற்றம் சிறிது பொழுதே நிற்பதென்பது,

''குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது''

என்னும் 29-வது குறட்பாவினுரையில், 'கணமேயும்' என்ப தற்குப் பரிமேலழகர், 'தானுள்ளவளவு கணமேயாயினும்' எனப் பொருள் கூறுதலானே துணியப்படும். தண்ணீரில்

இயற்கையாகவே குளிர்ச்சி அமைந்துளது; அதனால், அது காய்ச்சப்படும்போது வெம்மையடையினும் தன்னை ஆற்றுவாரின்றியே தானே தணிந்து தண்ணிதாய் விடும்; இதைப்போலவே, இயற்கைத் தண்ணருளுடைய துறவிகட்குப் பிறர் தீங்கு செய்வதால் சீற்றந் தோன்றினும் அத்தண்ணருளால் அது, தானே தணிந்துவிடும்; ஆதலின், அவர்க்கு அவ்வடுநீர் உவமை கூறப்பட்டது; இஃதுவமையணி. இங்குக் கூறியவாறு கீழ்மக்கள் வெகுளி வளருமென்பதனையும், துறவிகளாகிய பெரியாரிடம் தோன்றும் வெகுளி உடனே மறையு மென்பதையும்,

''கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே -
விற்பிடித்து
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்''

என்னும் வாக்குண்டாம் 23-ஆம் செய்யுளானு முணர்க.

'ஓடினும்' என்பதில், உம்- இழிவு சிறப்புப் பொருளது. வெகுளி- இகரவிகுதி பெற்ற தொழிற்பெயர். இன்றி - எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம். பரக்கும் - செய்யுமென் முற்று; இதில், பர- பகுதி, 'தானே' என்பதில், ஏ - பிரிநிலை. 'தணியுமே' என்பதன் ஏ - அசை; தேற்றப் பொருளதுமாம்; வியப்பினை யுணர்த்துவ தெனினுமாம்.

(அ)

69. *உபகாரஞ் செய்ததனை யோராதே தங்கண்*
அபகார மாற்றச் செயினும் - உபகாரந்
தாஞ்செய்வ தல்லாற் றவற்றினாற் றீங்கூக்கல்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கில்.

(இ-ள்) உபகாரம் செய்ததனை- (தாம் ஒருவனுக்கு) உதவி செய்ததை, ஓராதே- (அவன்) நினையாமல், தம்கண்- தம்மிடத்தில், அபகாரம்- தீங்கை, ஆற்ற- மிகுதியாக, செயினும் - செய்தாலும், தாம் - தாங்கள், உபகாரம்செய்வது அல்லால்- (அவனுக்கு மேலும்மேலும்) உதவிசெய்வதே யல்லாமல், தவற்றினால், (அவன் செய்த) குற்றத்தினாலே, (அதாவது குற்றங்காரணமாக), (அவன்மீது கோபங் கொண்டு), தீங்கு - தீமையை, ஊக்கல் - (தாமும் அவனுக்குச் செய்ய) முயலுதல், வான்தோய் - சிறப்புப் பொருந்திய, குடிபிறந்தார்க்கு - உயர்குடியிற்பிறந்த துறவிகளாகிய பெரியார்க்கு, இல் - இல்லை; எ-று.

உயர்குடியிற் பிறந்த துறவிகள், பிறனுக்கு உபகாரஞ் செய்ததை அவன் நினைத்து அவருக்குப் பிரதியுபகாரஞ் செய்யாமல் அத்னை மறந்து மிகுதியாகத் தீங்கையே செய் தாலும், அவர் அவனுக்கு மிக்க உபகாரஞ் செய்வதல்லாமல் தீங்கு செய்ய முயலமாட்டார்கள் என்பது இதன்கருத்து. இங்ஙனங் கூறியதனால், ஒருவர் செய்ந்நன்றியை மறந்து அந்நன்றிசெய்தார்க்குத் தீங்கியற்றுவோன் கீழ்மகனென் பதும், அங்ஙனம் தீங்குசெய்பவனிடத்தும் கோபித்துத் தீங்கி யற்றாமல் நலமே புரிவார் பெரியோரென்பதும் பெறப்படும்.

இதில் பொருண்முடிபுக்குத் தக இடையில் சிற்சில சொற்கள் இசை யெச்சங்களாக வருவித்துரைக்கப்பட்டன. 'தவற்றினால்' என்பதற்கு, 'தாம் நன்னெறியை விட்டுத் தவறுதலினாலே' எனப் பொருளுரைத்தலு மொன்று. 'தீங்கு ஊக்கல்' என்பதற்கு, 'தீங்கினை எழுப்புதல்' என வுரைப் பினு மமையும்; எழுப்புதலாவது - உண்டாக்குதல். வான்- சிறப்பு, தோய்தல்- பொருந்துதல்; இனி, 'வான் தோய்குடி' என்பதற்கு (கீர்த்தியால்) தேவலோகத்தை அளாவியகுடி எனப் பொருளுரைப்பினுமாம்; 'ஆகாயத்தைப்போன்ற (அதாவது ஆகாயத்தைப் போலுயர்ந்த) குடி' என்றலு மொன்று. 'ஆகாயத்தைப் போன்றகுடி' என்றதனால் அதன்

உயர்வு குறித்ததாகும்; இங்ஙனங் கூறியது இலக்கணை வழக் கெனப்படும்; இலக்கணையாவது - உரியபொருளைவிட்டு அதன் சம்பந்தியை உணர்த்துவது;

''வானுயர் தோற்ற மெவன் செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்''

என்னும் 272-ஆம் திருக்குறட்செய்யு ளுரையில், ''வானுயர் தோற்ற மென்பது, 'வான்றோய்குடி' என்றாற்போல இலக் கணை வழக்கு'' எனப் பரிமேலழகர் இதனையே உதாரணங் காட்டி எழுதியிருப்பதனால் இஃதுணரப்படும். 'குடிப்பிறந் தார்' என்பது அதிகார இயல்பு நோக்கித் துறவினரைக் குறித்தது. 'வான்றோய் குடி' என்பது இந்நூல், 'குடிபிறப்பு' என்னும் 15-ஆம் அதிகாரம் - 'சான்றாண்....' என்னும் 2ஆம் செய்யுள், 2-ஆம் அடியிலும் வருதல் காண்க.

இங்குக் கூறியபடி, தீங்கு செய்தார்க்கு எதிராகத் தீங்கு செய்யாமையும், நலமே செய்தலும் பெரியார்க் குரியன வென்பதை, திருக்குறள்,

''கறுத்தின்னா செய்தவக் கண்ணு மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்''

என்னும் 312-ஆம் செய்யுளும்,

''இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு''

என்னும் 987-ஆம் செய்யுளும் உணர்த்துவனவாம். 'செய்யப் பட்டதை' என்பது, 'செய்ததனை' என வந்தது; ''செயப்படு பொருளை..........'' என்னும் (தொல்-சொல்-வினை -49-ஆம்) சூத்திரம் பாாக்க. 'ஓராதே' என்பதில், ஏ- தேற்றம்; இரக்கப்பொருளதுமாம். ஆற்ற - வினையெச்சம்; இதில்,

ஆற்று-பகுதி, அ- வினையெச்ச விகுதி. 'செயினும்' என்பதன் உம்மை- உயர்வு சிறப்புப் பொருளது. தவற்றினால்- தவறு என்னும் பெயரின் மூன்றாம் வேற்றுமைவிரி. அல்லால்- குறிப்பு வினையெச்சம். தீங்கூக்கல்- இரண்டாம் வேற்றுமை யுருபு தொக்க தொகை. தோய்குடி- வினைத்தொகை. இல்- ஐம்பால் மூவி டங்கட்கும் பொதுவாய குறிப்பு வினைமுற்று. (கூ)

70. *கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயாற்*
பேர்த்துநாய் கௌவினா ரீங்கில்லை- நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்க டம்வாயான் மீட்டு.

(இ-ள்.) நாய்- நாயானது, கூர்த்து - (கோபம்) மிகுந்து, கௌவிக்கொள - (தம் உடம்பை வாயாற்) பற்றிக்கொள்ள, (அதாவது கடிக்க), கண்டும்- பார்த்தும், தம்வாயால்- தங்க ளுடையவாயினாலே, பேர்த்து-(அச்செய்கையைத்) திருப்பி, நாய் - அந்த நாயை, கௌவினார் - கடித்தவர்கள், ஈங்கு- இவ்வுலகில், இல்லை- இலராவர், (அதைப்போல), கீழ் மக்கள்- தாழ்ந்த மனிதர்கள், நீர்த்து அன்றி-நற்குண முடைய தல்லாமல், கீழாய-தாழ்வாகிய சொற்களையே, சொல்லியக் கால்- (தம்மைக்குறித்துச்) சொன்னபோது, மேல்மக்கள் மேலோராகிய மனிதர்கள் (துறவிகள்), தம்வாயால்- தம் முடைய வாயினால், மீட்டு - (அச்சொற்களையே) திருப்பி, சொல்பவோ - சொல்வார்களோ?, (சொல்லமாட்டார்கள்); எ-று.

தம்மைக் கடித்தநாயை எதிர்த்துக் கடிப்பாரில்லை; அதைப் போல, தம்மை நிந்தித்துப் பேசிய கீழ்மக்களைப் பெரியோர் கோபித்து எதிர்த்து நிந்திக்கமாட்டார்கள் என்பது இதன் கருத்து. நாய் மிக இழிந்த பிராணியாதலின், அஃதொரு வரைக் கடித்துவிட்டாலும், அவர் அதற்கெதிராக அதனுட லைக் கடித்தல் அருவருப்பும் இழிவும் பொருந்திய செய்கை

யாம்; அதைப்போலவே கீழ்மக்களும் மிகத் தாழ்ந்தவர் களாதலின், அவர்கள் பெரியோரை நிந்திப்பினும் அப்பெரி யார் அந்நிந்தனைக் கெதிராக அவரைக் கோபித்து வைதல் மிக இழிந்த செய்கையாம். ஆதலின், துறவிகள், தம்மைக் கீழ்மக்கள் தாழ்த்திக் கூறினும், தாம் அவரைக் கோபித்துப் பழிக்கமாட்டார்கள். இதனால், கீழ்மக்கள் தம்மைப்பழித்த போதும் பெரியோர் அவர்மீது கோபியாது அவர் நிந்தையைச் சகித்துக் கொள்ளுதலே அவர்க்குச் சிறப்பாகுமென்பது பெறப்படும். அதனை,

''நீர்த்தக வில்லார் நிரம்பாமைத் தம்நலியில்
கூர்த்தவரைத் தாம்நலிதல் கோளன்றால்
சான்றோர்க்குப்
பார்த்தோடிச் சென்று கதம்பட்டு நாய்கௌவிற்
பேர்த்துநாய் கௌவினா ரில்''

என்ற (பழமொழி-49ஆம்) செய்யுளானும்,

''ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்''

என்னும் (திருக்குறள்-139-ஆம்) செய்யுளானு முணர்க. கீழ்மக்களின் இழிவு புலப்படுதற்கு நாயை அவர்கட்கு உவமைகூறினார் முனிவர். 'சொல்பவோ' என்றதனாலேயே 'வாயாற் சொல்வாரோ' என்பது அமைந்திருத்தலின், 'வாயால்' என்பது மிகையெனினும், 'பெரியார்வாய் எப் பொழுதும் தீயனபுகன்றறியாதது' என்னும், சிறப்பை விளக் கற்கு, 'தம்வாயால்' என்பது கூட்டியுரைத்தார் ஆசிரியர். இச்செய்யுள் உபமான உபமேயங்களைத் தனித் தனி நிறுத்தி இடையில் உவமவுருபு கொடாமற் கூறப்பட்டி ருத்தலின் எடுத்துக் காட்டுவமையணியில் அமைந்தது.

'கண்டும்' என்பதில் உள்ள, உம்- இழிவு சிறப்புப் பொருளது. நீர்த்து- நீர்மையென்னும் பண்படியாப் பிறந்த ஒன்றன்பாற்குறிப்பு வினையாளணையும் பெயர்; நீர்மை- குணம்; இஃதிங்கு நற்குணத்தின் மேனின்றது. 'கௌவிக் கொள' என்பதனை வினைப்பெயர் போலக் கொள்க. கீழாய- கீழ்மையென்னும் பண்படியாப் பிறந்த பலவின்பால் வினை யாலணையும் பெயர். சொல்ப- பலர்பால் வினைமுற்று; ப - பலர் பால்விகுதி. 'செல்பவோ' எதிர்மறையெச்சம்; இது 'சொல்லார்' என்ற பொருளைத் தரும்; இதனீற்றோகாரம் எதிர் மறைப்பொருளது;

''எதிர்மறை யெச்ச மெதிர்மறை முடிபின''

என்னும் (தொல்-சொல்-எச்-30-ஆம்) சூத்திரம் பார்க்க. (கo)

துறவறவியல் முற்றுப்பெற்றது.

2-வது

இல்லறவியல்

இல்லற வியலாவது- இல்லறத்தைக் கூறும் பிரிவாம்: துறவற வியலின் தொடக்கத்திற் கூறியபடி, செல்வ நிலையாமை முதல், சினமின்மை யிறுதியாகவுள்ள ஏழதிகாரங்களால் துறவறவியல் கூறப்பட்டன. இனி இல்லறவியல் கூறப்படுகின்றது. இஃதாறு அதிகராங்களை யுடையது. இல்லறமாவது-இம்மை மறுமை என்னும் இரண்டிலும் இன்பமடைதற் கேதுவாக மனிதன் இல் வாழ்க்கையில் கற்புடைய மனைவியுடன் கூடியிருந்து அதற்குரிய ஒழுக்கத்தினின்றும் வழுவாது செய்யும் தருமமாம்.

அதிகாரம்-8

பொறையுடைமை

பொறையுடைமை யாவது- ஒருவன், ஒரு காரணங் குறித்தாவது, அறியாமையினாலாவது, தீங்கு செய்தபோது, இல்லறத்தை மேற்கொண் டொழுகுவோர், தாமும் அவனுக் கதனைச் செய்யாது பொறுத்துக் கொள்ளுதலை யுடையவ ராதலாம். இல்லற. நெறி நின்றார்க்குரிய பல நற்குணங்களில் இது சிறந்ததாகலின் இவ்வியலின் முன் வைக்கப்பட்டது. சின மின்மையும், பொறையுடைமையும் பொருள் வகை யால் ஒருதன்மையன வெனினும் வெவ்வேறு இயல்களின் பாற் பட்டன வாகலின் வெவ்வேறாம். ஆகவே இது 'கூறியது கூறல்' என்னும் குற்றத்தின்பாற் படாதென்க.

71. *கோதை யருவிக் குளிர்வரை நன்னாட*
பேதையோ டியாது முரையற்க- பேதை
உரைப்பிற் சிதைந்துரைக்கு மொல்லும் வகையான்
வழுக்கிக் கழிதலே நன்று.

(இ-ள்) கோதை- மாலைபோல விளங்குகின்ற, அருவி- நீரருவிகளையுடைய, குளிர்- குளிர்ச்சி பொருந்திய, வரை - மலைகளையுடைய, நல்- நல்ல, நாட- பாண்டிய நாட்டையுடைய மன்னனே! (உன்னோடு கூடிய அறிவில்லா தவனொருவன் குற்றஞ்செய்தவிடத்தும் அவனை நீ

கோபித்து), பேதையோடு- அவ்வறிவில்லாதவனிடத்தில், யாதும்- எந்தக் கடின வார்த்தையையும், உரையற்க- சொல்லா திருக்கக் கடவை, (அங்ஙனமிராமல் எதையேனும்), உரைப் பின் - சொன்னால், பேதை- அவ்வறிவில்லாதவன், சிதைந்து - (நெறி) கெட்டு, உரைக்கும்- (உன்மீது பழிப்பான வார்த்தை களைக்) கூறுவான், (ஆதலின், அங்ஙனம் அவனிடம் ஒன்றுங் கூறாதிருந்து), ஒல்லும்வகையான்- கூடியவிதத் திலே, வழுக்கி (அவனுடைய நிந்தனை யினின்றும்) தப்பி, கழிதலே- (அவன் தொடர்பைவிட்டு) நீங்குதலே, நன்று- நல்லது; எ-று.

அறிவில்லாதவன், ஒருவர்க்குத் தீங்குசெய்தவிடத்து, அவர், அவனைக் கண்டித்து ஏதேனும் கூறினால் அவன் அடங்கி நன்னெறிக்கண் திரும்பமாட்டான்; புத்திகூறிய அவரையே பழித்துத் தீயன பகர்வான்; அதனால் அவரின் மேன்மைக்குப் பங்கம்வரும். ஆதலின், அவன் அங்ஙனம் குற்றஞ் செய்போதும், மேலும் மரியாதைகெடும் வார்த்தை களைக் கூறாதிருக்கும்படி அவர் அக்குற்றத்தைப் பொறுத்து வேறொன்றும் பேசாமல் அவனுடைய தொடர்பினின்றும் நீங்குதல் அவர்க்கு நன்மை பயக்கும். இங்ஙனம் பேதை யர்க்குப் புத்தி கூறல் தீமைபயக்கு மென்பதை,

''கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை ஒருவற்கு- நல்லாய்
இழுக்கத்தின் மிக்க இழிவில்லை இல்லை
ஒழுக்கத்தின் மிக்க உயர்வு''

என்னும் (பழமொழி-15ஆம்) செய்யுளும் விளக்கும்.

'கோதையருவிக் குளிர்வரை நன்னாட' என்பது ஆடூஉ முன்னிலை. மலை, நாட்டிற் குறுப்பாதலானும், நிலவளத்திற்கு இன்றியமையாத நீர்வளத்திற்குக் காரண மாதலானும், 'வரைநன்னாட' என்றார் முனிவர். நாட்டின்

சிறப்பை விளக்கற்கு மலைகூறப்படுதலின் காரணம் இந் நூலின் -10-ஆம் செய்யுளுரையிலும் விரித்துக்காட்டப்பட் டுள்ளது. மலையில் மேலிருந்து கீழ்நோக்கி அருவிபாய்ந் தொழுகும் தோற்றம் ஒருமாலை நாலுதல் போன்றிருக்கும்; ஆகலின், அதற்குக் கோதை உவமை கூறப்பட்டது; இங்ஙனங் கூறப்படுதல், ''மாலை வெள்ளருவிசூடி மற்றிதா தோன்றுகின்ற, சோலைசூழ்வரை...............'' என்னும் (சீவகசிந்தாமணி-பது-67-ஆம்) செய்யுளானும், (ஷிநாம-6, காந்த-33, இலக்-1-ஆம்) செய்யுட்களானும் விளங்கும். இனி, 'கோதை' என்பதற்கு 'ஒழுங்கு' எனப்பொருள் கூறினுமாம்; இது, சிலப்பதிகாரம்-5வது இந்திரவிழவூ ரெடுத்தகாதைச் செய்யுளில், ''பயில்பூங்கோதை பிணையலிற் பொலிந்து'' எனவரும் 193-வது அடிக்குப் பொருள் கூறுமிடத்து அடியார்க்கு நல்லார், ''கோதையாகிய பிணையலெனப் பண்பொட்டு விரிக்க; ஒழுங்குமாம், 'கோதையருவி' போல'' என்று இத்தொடரையே உதாரணங் காட்டி யிருத்த லால் துணியப்படும்.

கோதையருவி - உவமைத்தொகை. குளிர்வரை - வினைத்தொகை.வரை- மலைக்கு இருமடியாகு பெயர்; வரை- கணு; அஃததனையுடைய மூங்கிலுக்காய், மூங்கில் மலைக்காயிற்று. 'பேதை', 'பேதைமை' என்னும் பண்படி மையீறுகெட்டு நின்றது; பேதை- அறியாமை; அஃதிங்குப் பண்பாகு பெயராய் அறிவில்லாதவனை யுணர்த்தி நின்றது. 'பேதையோடியாதும்' என்பதில், 'ஓடு' என்னும் குற்றுகரத் தின்முன் யா- வர, அக்குற்றுகரங் கெட்டு, இகரம் வந்து அரை மாத்திரை பெற்றுநின்றது; இது, புணர்மொழி யகத்துவந்த குற்றியலிகரம்; இது,

> *''யகரம் வருவழி யிகரங் குறுகு*
> *முகரக் கிளவி துவரத் தோன்றாது''*

என்னும்(தொல்-எழுத்-குற்றியலுகரப் புண-5ஆம்) சூத்திர

விதிப்படி அமைந்தது. உரையசை யிடைச் சொல்லாகிய, ‘மியா’ என்பதில் மகரத்தின் மேனிற்கும் இகரமும் குற்றிய லிகரமாம்; தொல்- எழுத்- மொழிமரபு-1ஆம் சூத்திரத்தான் இஃதமையும். உரையற்க- எதிர்மறை வியங்கோள்; இதில், உரை- பகுதி, அல் - எதிர்மறை விகுதி, க - வியங்கோள் விகுதி. உரைப்பின்- எதிர்காலவினையெச்சம்; இதில், உரை- பகுதி, இன் - வினையெச்சவிகுதி, ப்- எழுத்துப்பேறு, இஃதிரட்டியது விகாரம்; இனி, ப்- எதிர்காலவிடை நிலை யென்பாருமுளர்; இதில், விகுதியே காலங்காட்டு தலின் அஃதிடைநிலையன்றென்க. ‘ஒல்லும்வகை’ என்பதில் உள்ள - மகரக்குறுக்கம்; “வகாரமிசையும் மகாரங்குறுகும்”, என்னும்(தொல்-எழுத்-புள்ளிம-35-ஆம்) சூத்திரவிதியால் அமைந்தது. ‘கழிதலே’ என்பதன் ஏகாரம்- தேற்றப் பொருளது. நன்று- ஒன்றன்பாற் குறிப்பு முற்று. இச்செய்யுள் ஈற்றடிகளிரண்டினு முள்ள எதுகை- இன வெதுகை. (க)

72. *நேரல்லார் நீரல்ல சொல்லியக்கான் மற்றது*
தாரித் திருத்த றகுதிமற்- றோரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலஞ்
சமழ்மையாக் கொண்டு விடும்.

(இ-ள்.) (பெரியோராயினார்), நேர் அல்லார்- (தமக்குச்) சமமாகாதவர், (தாழ்ந்தவர்), நீர் அல்ல- நற்றன்மை யல்லாதன வாகிய சொற்களை, சொல்லியக்கால்- சொன்னால், அது- அவ்வாறு கூறிய அப்பிழையை, தாரித்து இருத்தல் - பொறுத்துக்கொண்டிருத்தலே, தகுதி- (அவர்க் குத்) தக்கதாம், (அங்ஙனமின்றி), மற்று- அதற்கெதிராகிய பொறுமை யின்மையை, (அவர் கொள்வாராயின் அக் குணத்தை), பொங்குநீர் அதிகரிக்கின்ற நீரையுடைய கடலாற் சூழப்பட்ட, ஞாலம் - பூமியிலுள்ள உயர்ந்தவர்கள், புகழ்மை ஆ கொள்ளாது- புகழத்தக்கதாகக் கருதாமல், சமழ்மை ஆ- பழிக்கத்தக்கதாக, கொண்டுவிடும் - கருதிவிடு வார்கள்; எ-று.

பெரியாராயினார், தமக்கு நிகராகாத கீழ்மக்கள், தம்மைக் குறித்து இழிசொற்களைக் கூறினும் அக்குற்றத்தைப் பொறுத்திருத்தலே அவர் பெருந்தகைமைக் கேற்ற செயலாம்; பொறாது தாமும் எதிர்த்து அத்தகைய சொற்களைக் கூறுதல் அவர்க்கிழிவையே உண்டாக்கும்; அச்செயலைப் பெரியார் புகழ்ச்சிக்குரியதாகக் கொள்ளார்; பழித்தற்குரியதாகவே எண்ணுவர் என்பது இதன்கருத்து.

பெரியார், சிறியார் செய்த பிழைகளைப் பொறுத்திருப்பாராயின் அவர் பெருந்தன்மை மிகைப்பட்டு அவர்க்குப் புகழ்ச்சியை விளைவிக்கும்; அங்ஙனம் பொறாது தாமும் அவர்க்கெதிராய் இழிசொற் பகர்வராயின் அக்குணங் கீழ்மையின்பாற்பட்டு அப்பெரியார்க்குப் பழிப்பையுண்டாக்கும். இங்ஙனம் கீழ்மக்கள் சொல்லும் தகுதியற்ற சொற்களைப் பொறுத்திருத்தல் பெரியார்க்குரிய செயலென்பதை,

''தெரியா தவர்தம் திறனில்சொல் கேட்டால்
பரியாதார் போல இருக்க- பரிவில்லா
வம்பலர் வாயை அவிப்பான் புகுவாரே
அம்பலம் தாழ்க்கூட்டு வார்.

என்னும் பழமொழி(55) ஆம் செய்யுளானு முணர்க. நேர்- பகுதியே பெயராயினது. 'நீர்' என்பது மன்னதே. அல்ல- பலவின்பாற் பெயர். அல்லார்- குறிப்புவினையாலணையும் பெயர். 'மற்றது' என்பதில், மற்று- அசை. 'தரித்து' என்பது, 'தரித்து' முதல் நீண்டு நின்றது. இரண்டாமடியிலுள்ள 'மற்று' என்பது பொறுத்திருத்தலுக் கெதிராகிய பொறுமையின்மையை உணர்த்திநிற்றலால் 'பிறிது' என்னும் பொருளது; ''வினைமாற் றசைநிலை பிறிதெனுமற்றே'' என்னும் (நன்-இடை-14) சூத்திரம் பார்க்க. ஓரும்- அசை; ''யாகாபிற...............'' என்னும் (நன்-இடை-22-ஆம்) சூத்திரம் பார்க்க. ''அஞ்சுவதோரு மறனே யொருவனை, வஞ்சிப்பதோரு மவா'' என்னும் (திருக்குறள்-366-ஆம்)

செய்யுளில் 'ஓரும்' என்பது இரண்டிடங்களினும் அசையாக வருதல் காண்க. புகழ்மை, சமழ்மை- என்பவற்றில், மை- தன்மை குறித்தவிகுதி. ஆ- ஆக என்பதன் விகாரம்; இது, 'சாவ' என்னும் மொழி ஈற்றுயிர்மெய் கெட்டு நின்றதுபோல நின்றது. 'பொங்குநீர்' என்பது வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாய்க் கடலை யுணர்த்தி நின்றது; ஞாலம் - இடவாகு பெயராய் அதிலுள்ளாரை யுணர்த்தி நின்றது; ''உலக மென்ப துயர்ந்தோர்மாட்டே'' என்பதனால் அங்ஙனமுணர்த்தியதினும் பெரியாரையே குறித்ததென்க. ''ஞாலம்'' என்பதற்கேற்ப, 'கொண்டு விடும்' என்னும் முடிபு கூறப்பட்டது; இது சொல் நிலைநோக்கிய முடிபெனப்படும். 'நேர்அல்லார்' என்பதற்கு, 'செவ்விய குணமில்லார்' என்றுரைத்தலுமொன்று. கொண்டு விடும்- என்பதில், விடு- துணிவுப் பொருளுணர்த்தும் விகுதி. (உ)

73. *காதலார் சொல்லுங் கடுஞ்சொ லுவந்துரைக்கும்*
ஏதிலா ரின்சொலிற் றீதாமோ- போதெலாம்
மாதர்வண் டார்க்கு மலிகடற் றண்சேர்ப்ப
ஆவ தறிவார்ப் பெறின்.

(இ-ள்.) போது எல்லாம்- (புன்னை தாழைமுதலிய நெய்தனில மரங்களில் மலர்ந்திருக்கும்) மலர்களிலெல்லாம், மாதர்- விருப்பத்தையுடைய, வண்டு- வண்டுகள், (நெருங்கி மகரந்தம் தேன் முதலியன நுகர்ந்து களிப்பால்), ஆர்க்கும்-ஒலிக்கின்ற, மலி-நீர் நிறைந்த, தண்- குளிர்ச்சிபொருந்திய, கடல்சேர்ப்ப-கடற்கரையையுடைய அரசனே!, (ஒருவர்), ஆவது- (தமக்கு) நலமாவதை, அறிவார் - அறிந்து தமக்கிதஞ்செய்யும் நல்லாரை, பெறின்- (அவர் நேயமுடையராக) அடைந்தால், (தாம் தீநெறிக்கட் புகுமிடத்து அன்னார் கடிந்திடித்துரைத்துத் தம்மை நன் னெறியிற் றிருப்பித் தமக்கு நலம்புரியுங் கடன்பூண்ட வராகலானும், அவர் கடுஞ்சொல்லும் இன்பந்தருவதாக லானும், அதனை மிகுதியும் பொறுத்துக்கொள்ளுதல்,

வேண்டும்; அங்ஙனம் பொறுத்தால் அத்தகைய), காதலார்- அன்புடையார், சொல்லும்- உரைக்கின்ற, கடுஞ்சொல்- கொடியசொல், ஏதிலார்- பகைவர்கள், உவந்து- மகிழ்ந்து, உரைக்கும்- சொல்லுகின்ற, இன்சொல்லின் - இனிய சொல்லைப்போல, தீது ஆமோ- தீமையைத் தருவதாகுமோ? (ஆகாது; நன்மையையேதரும்); எ-று.

ஒருவர்க்குப் பகைஞராயிருப்பவர் இன்சொற் கூறினும் அது தீமையையே பயப்பதாகும்; அன்புடைய பெரியார் கடுமொழி கூறினும் அது நன்மையையே தருவ தாகும்; ஆதலின் ஒருவர், தமக்கு நலமாவதை யுணர்ந்து இதஞ்செய்யும் பெரியாரை அடைந்தால் அவர் தம்மிடத்துக் கூறும் கடுஞ்சொல்லைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்; அச்சொல் பகைவர் கூறும் இன்சொல்லைப் போன்று கெடுதியைத் தராது; நன்மையையே தரும் என்பது இதன் கருத்து.

ஒருவர்க்குத் துணைபுரியும் நற்குணமுடையார் எந்நிலையினும் அவர் நலத்தையே நாடுபவராகலின் கடுஞ்சொல்லையும் அன்னார் நலன்கருதியே கூறுவர்; பகைவர் எக்காலும் அவர் கேட்டையே கருதுபவராகலின் இன்சொல்லையும் அன்னார் கேடுகுறித்தே உரைப்பர். ஆகவே, அன்புடையாரின் கடுஞ்சொல் இன்பத்தையும், அன்பிலா ஏதிலாரின் இன் சொல் துன்பத்தையும் தருவன வாம். இவை குறித்தே முனிவர், 'காதலார் சொல்லுங் கடுஞ் சொல்..... ஏதிலார் இன்சொலிற் றீதாமோ' என்றார். இங்ஙனங் கூறியதனால், மனிதர்க்குப் பொறுமை நலந்தருவ தென்பதும், அதிலும் அன்புடையார் கூறும் கடுமொழியைப் பொறுத்துக்கொள்ளல் மிக்க நன்மை பயக்குமென்பதும் பெறப்படும். 'ஆவதறிவார்' என்பதற்கு, 'ஒரு செய்கையால் ஆகும்பயனை உணர்வார்' எனப் பொருளுரைத்தலு மொன்று; ஒன்றாலாம்பயனை அறிதலாவது, ஒருவர் ஒன்றனைச் செய்யுமிடத்து, இதனால் இன்னதாமென்று

ஆராய்ந்து நன்மை தீமைகளை யுணர்தல்; இக்குணம் பெரியார்க்கே அமையுமாதலின் இவர் துணையைப் பெற்றார்க்கு நலமே விளையும். இங்குக் கூறியாங்குப் பெரியார் ஒருவரோ டுறவுகொள்ளின் அவர் தீநெறிக்கட்புக்க விடத்து இடித்துக்கூறி அவரை நன்னெறிக்கட் புகுத்தி அவர்க்கு நலமே புரிவரென்பதையும், அவர் அன்னாரையே துணைவராகக் கோடல் வேண்டு மென்பதனையும், அவர் கடுமொழியைப் பொறுக்கவேண்டுமென்பதையும், அப் பெரியார் கடுஞ்சொல் இன்பத்தையும், ஏதிலாரின் சொல் துன்பத்தையும் தருவனவென்பதையும்,

''நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு'' (திருக்குறள்-784)

''அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார் நட் பாய்ந்து கொளல்'' (திருக்குறள்-795)

''உளைய வுரைத்து விடினு முறுதி
கிளைகள்வாய்க் கேட்பதே நன்றே- விளைவயலுள்
பூமிதித்துப் புட்கலாம் பொய்கைப் புனலூர
தாய்மிதித்த ஆகா முடம்'' (பழமொழி-353)

''இனியவ ரென்சொலினு மின்சொல்லே யின்னார்
கனியு மொழியுங் கடுவே- அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினு நோய்தீர்க்கு
மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கொலும்''
(நீதிநெறிவிளக்கம்-59)

''மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி
தேனையவர்
பேசுற்ற வின்சொற் பிறிதென்க - ஈசற்கு

நல்லோ னெறிசிலையோ நன்னுதா லொண்கருப்பு
வில்லோன் மல்ரோ விருப்பு'' (நன்னெறி-2)

என்று முன்னோர் பின்னோர் செய்யுட்களும் ''அழஅழச் சொல்லுவார் தமர், சிரிக்கச் சிரிக்கச் சொல்லுமார் பிறர்'' என்னும் பழமொழியும் நன்குணர்த்துவனவாம்.

உவப்பு- உவகை (மகிழ்ச்சி)யை யுணர்த்தும் உரிச் சொல்; ''உககப்பேயுயர்தல் உவப்பேயுவகை'' என்னும் (தொல்-சொல்-உரி-9-ஆம் சூத்திரத்தால் இது துணியப்படும். ஏதும் இலார்- ஏதிலார்; 'தமக்குச் செய்யத்தக்க நன்மையில் எதுவுமில்லாதவர்' என்பது இதன் பொருள். 'இன்சொல்' என்பதில் இனிமையின் - மை, விகுதியும் இகரமுங் கெட்டன. 'சொலின்' என்பதில், ஐந்தனுருபாகிய இன் - ஒப்பு பொருளது; இனி இதனை எல்லைப் பொருளதாகக் கொண்டு, 'சொலின்' என்பதற்கு, 'சொல்லைக்காட்டினும்' எனப் பொருளுரைத்தலு மொன்று. தீதாமோ- எதிர்மறை யெச்சம்; 'தீதாகாது' என்னும் பொருள்பயந்துநின்றது; ''எதிர்மறை யெச்ச மெதிர்மறை முடிபின'' என்னும் (தொல் - சொல்- எச். 39-ஆம்) சூத்திரம் பார்க்க. இதில் மகடூஉ முன்னிலைக்குக் கூறப்பட்டிருப்பது நெய்தல்வளச் சிறப் பாகலின் 'போதெலாம்' என்பதற்குமுன், நெய்தனிலத்துக் குரிய புன்னை, தாழை முதலிய மரங்கள் வருவித்துரைக்கப் பட்டன; இவை இசையெச்சத்தின்பாற் படும்; ''அவைதாம், தத்தங்குறிப்பி னெச்சஞ் செப்பும்'' என்னும் (தொல் - சொல் - எச் - 44 - ஆம்) சூத்திரவுரைபார்க்க; 'மலி' என்பதற்கு முன் கூட்டிய, 'நீர்' என்பதும் இதன்பாற் படுவதே. மாதர் - காதலையுணர்த்தும் உரிச்சொல்; ''மாதர்காதல்'' என்னும் (தொல்- சொல்-உரி 32-ஆம்) சூத்திரத்தான் இது பெறப்படும். ஆவதறி யாரைப் பெறல் அருமையாகலின் அவ்வருமை தோன்ற, 'பெறின்' என்றார் முனிவர். (ரு)

74. *அறிவ தறிந்தடங்கி யஞ்சுவ தஞ்சி*
உறுவ துலகுவப்பச் செய்து- பெறுவதனால்
இன்புற்று வாழு மியல்புடையா ரெஞ்ஞான்றுந்
துன்புற்று வாழ்த லரிது.

(இ-ள்.) அறிவது- அறியத்தக்கவைகளை யெல்லாம், அறிந்து- (ஆராய்ந்து) உணர்ந்து, அடங்கி- பொறுமையுற்று, அஞ்சுவது- அஞ்சத்தக்க பழிபாவங்களுக்கு, அஞ்சி- பயந்து உறுவது- (நீதிக்குப்) பொருந்துவனவாகிய செயல்களை யெல்லாம், உலகு உவப்ப- பூமியிலுள்ளவர் மகிழும்படி, செய்து- இயற்றி, பெறுவதனால் - (இவற்றால்) அடையும் புண்ணியப்பயனாலே, இன்பு உற்று- இன்பத்தையடைந்து, வாழும்- வாழ்கின்ற, இயல்பு உடையார்- தன்மையை யுடையவர், எஞ்ஞான்றும்- எக்காலத்தும், துன்பு உற்று- துன்பத்தையடைந்து, வாழ்தல்- வாழுதல், அரிது- இல்லை; எ-று.

உலகத்தில் ஆராய்ந்தறிய வேண்டிய நன்மை தீமைகளைப் பகுத்துணர்ந்து அடக்கம்பெற்று அஞ்சத்தக்க தீயகாரியங்களுக்கஞ்சி, நீதிக்குப் பொருந்திய அறச்செயல் களைப் புரிந்து, அவற்றாற் பெறும் புண்ணியப்பயனால் இன்பத்தை யடைந்து வாழும் தன்மையுடையவர்கள் எப் பொழுதும் துன்பத்தைப் பெற்று வாழமாட்டார்கள் என்பது இதன் கருத்து.

ஒருவர், நன்மை தீமைகளைப் பகுத்துணர்ந்து, அவற்றுள் அஞ்சி விலக்கத்தக்கனவாகிய தீமைகளை விலக் கிச் செய்யத்தக்கனவாகிய நன்மைகளைப் புரிவாராயின் அவர்க்குப் புண்ணியங் கைகூடும்; அப்புண்ணியத்தால் உலக வாழ்க்கைக் கின்றியமையாததாய செல்வப் பொருள் சேரும்; அப்பொருளால் இன்பநுகர்ச்சியுண்டாம்; முடிவில் அவர் நித்திய சுகத்தை யடைவர்; அதனால் எப்பொழுதும் அவரி

டத்துத் துன்பஞ்சேராது. இத்தகைய குணங்கள் அறிவின் மிக்காராகிய பெரியார்க்கே அமையும்; இதனை,

''அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர்'' (திருக்குறள்-427)

''அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்'' (திருக்குறள்-428)

''உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்'' (திருக்குறள்-140)

''நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினு மாணப் பெரிது'' (திருக்குறள்-124)

என்பவற்றா லுணர்க. 'உறுவது உலகுவப்பச் செய்து' என்ப தற்கு, 'நியாயவழியில் தம்மிடத்துவந்து சேரும்பொருளை உலகம் மகிழத்தானம்செய்து' எனப் பொருளுரைப்பினும் அமையும். ''பெறுவதனால் இன்புற்று' என்பதற்கு 'தாம் பெறும் பொருள் எவ்வளவாயினும் அதனால் இன்புற்று' - எனப் பொருளுரைத் தலுமொன்று; அதனால் இன்புறுத லாவது, பேராசையின்றிக் கிடைத்ததுகொண்டு மனத்திருப்தி யடைதல். இச்செய்யுளில், அறிவன அறிதலாகிய உணர் வுடைமை, தீவினையச்சம், உலகத்திற்குப் பொருந்துவன செய்தலாகிய ஒப்புரவு, பெற்றன கொண்டுவத்தல் முதலியன கூறப்பட்டிருப்பினும், 'அடங்கி' என்பதை முதன்மையாக்கி இஃதிவ்வதிகாரத்திற் சேர்க்கப்பட்டுள்ளது.

அறிவது, அஞ்சுவது, உறுவது, பெறுவது என்பன- செய்தது போல்வந்த செயப்பாட்டுவினையாலணையும் பெயர்கள்; சாதியொருமையாக அமைந்தவை. உலகு- இடவாகு பெயராய் உலகத்திலுள்ள மக்களை யுணர்த்தி நின்றது; லோகமென்னும் வடசொற் றிரிபு. அரிது- இன்மைப் பொருளது. (௪)

75. *வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்*
தேற்றா வொழுக்க மொருவன்க ணுண்டாயின்
ஆற்றுந் துணையும் பொறுக்க பொறானாயின்
தூற்றாதே தூர விடல்.

(இ-ள்.) இருவர்- இரண்டுபேர், வேற்றுமை இன்றி- மனவேறு பாடில்லாமல் (ஒன்றுபட்டு), கலந்து- கூடி, நட்டக் கால்- உறவுகொண்டால், (எவனேனும் ஒருவனிடத்தில் தீச்செயல் உண்டாவது இயற்கை; அங்ஙனம்), ஒருவன்கண்- (அவ்விருவருள்) ஒருவனிடத்து, தேற்றா - (பிறர்க்குத்) தெரி விக்கக்கூடாத, ஒழுக்கம் - (அயோக்கிய) நடக்கையானது, உண்டு ஆயின்- ஏற்படுமானால், (அவனோடு சிநேகங் கொண்ட மற்றொருவன் அதனை), ஆற்றும் துணையும்- பொறுக்கக் கூடியவரையிலும், பொறுக்க- சகித்துக் கொள்ளக்கடவன், பொறான் ஆயின் - (அங்ஙனம்) பொறுக்க இசையானாயின், (அவனால் பொறுக்க முடியாவிடில்), தூற்றாதே- (பலரும் அறியுமாறு அதனை) வெளிப்படுத் தாமல், (அவனுடைய சிநேகத்தை), தூர- தூரத்தில், (அகலும் படி), விடல்- (நீக்கி) விடக்கடவன்; எ-று.

இருவர் மனமொத்துக் கலந்து நண்பினரானபின், அவருள் ஒருவனிடத்தே தீயவொழுக்கமுண்டாயினும் மற் றொருவன் தன்னால் கூடியவரையில் அதனைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்; அங்ஙனம் பொறுத்தல் முடியாவிடின் அவனுடைய நடக்கையைப் பலர் அறியுமாறு வெளிப்படுத் தாமல் சிநேகத்தை விட்டுவிடவேண்டும் என்பது இதன் கருத்து.

நட்பாளருள் ஒருவன் தீங்கியற்றினும் மற்றொருவன் அதனைப் பொறுத்திருத்தலே நட்புமுறையில் சிறந்த தாகலின் 'ஆற்றுந் துணையும் பொறுக்க' என்றார் முனிவர். எத்தகைய தீயொழுக்கமுடையானும், பலர் தன்னைப் பழித்தலுக்கு மனம் வருந்துதல் இயற்கை; ஆதலின்,

அத்தகைய வருத்தத்தை, நட்பாளன் தீங்குடையானாயினும், அவனுக்கு ஒருவன் உண்டாக்குதல் நட்பிற்குரியதன்றாம்; அதுபற்றியே, அவன் அங்ஙனம் வருந்துதற் கேதுவாயிருக்கும் பிறர் பழித்தல் அவனுக்குண்டாகுமாறு அவனுடைய தீயவொழுக்கத்தைப் பலர் அறியத் தூற்றலாகாதென்றும், தன்னால் பொறுத்தல் இயலாவிடின் தூற்றாமல் அவனுடைய நேயத்தை அகற்றிவிட வேண்டுமென்றும் கூறினார். ஒருவன் நட்புமுறையில் இத்தகைய குணங்களைப் பெற்றிருத்தல் வேண்டுமென்பதை,

''அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்''

என்னும் (திருக்குறள்-807-ஆம்) செய்யுள் விளக்குவதாகும். 'தேற்றா ஒழுக்கம்' என்பதற்கு, 'தான் நல்லதென்று தெளியத் தகாத தீய நடக்கை' என வுரைப்பினுமாம். 'தூரவிடல்' என்பதற்கு, 'தூர்ந்து போகும்படி (அழியும்படி) விடக் கடவன்' என்றுரைத்தலு மொன்று. நட்டக்கால்- எதிர்கால வினையெச்சம்; இதில், நள்- பகுதி, கால்-விகுதி, ளகரம் டகரமானது - சந்தி, ட்- எழுத்துப்பேறு, அ- சாரியை, க்- சந்தி, தேற்றா- பெயரெச்சம்; இதிலுள்ள பகுதியாகிய, தேற்று- என்பது, தன்வினை பிறவினை இரண்டுக்கும் பொதுவானது; 'பிறர்க்குத் தெரிவிக்கக் கூடாத' என்று பொருள் கொள்ளுமிடத்துப் பிற வினைப் பொருள்தரும்; 'தான் நல்லதென்று தெளியத்தகாத' எனப்பொருள் விரிக்குங்கால் தன்வினைப் பொருள்தரும்; இங்ஙனம் இதனைத் தன்வினைக்குக் கொள்ளும் போது, தேற்று - என்னும் பிற வினைப்பகுதி தன்வினையில் வந்ததென்றும், பிறவினைக்குக் கொள்ளும்போது, தேறு - என்னும் தன்வினைப்பகுதி விரித்தல் விகாரத்தால் இடையில் றகரமெய் மிக்குத் தேற்று என்றாய்ப் பிறவினைப் பொருளில் வந்ததென்றும் கோடல் வேண்டும். இஃதிங்ஙனம் தன்வினைக்கு வருமென்பதை, (சிவஞான போதமாபாடியம் - சூ - 9-அதிகரணம்) ''காட்டிய வென்பது தன்வினைப்

பொருள்பட நின்றது......... தேற்றா வொழுக்கம்..... என்புழிப்போல'' எனக் கூறுமிடத்து இச் செய்யுளையே உதா ரணங்காட்டி யிருத்தலானு முணர்க; இஃதிருவினைக்கும் பொதுவாமென்பதை, (இ- கொ-சூ-67, நன்-வி.சூ-322) உணர்த்துவனவாம். தேற்றல், தெளிதற் பொருட்கண்வருதல், ''வாணிகமொன்றுந் தேற்றாய்'' (சீவகசிந்- காந்- 278) எனவும், ''தேற்றாய்பெரும பொய்யே'' (புறநா-59) எனவும், வாயினாற் பேசறேற்றேன்'' (சீவகசிந்-நா-228) எனவும், ''சில சொல்ல றேற்றாதவர்'' (குறள்-649) எனவும், வருவன வற்றால் துணியப்படும். விடல் - அல்லீற்று உடன்பாட்டு வியங்கோள்வினைமுற்று. இச்செய்யுள்- ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா. (ரு)

76. *இன்னா செயினு மினிய வொழிகென்று*
தன்னையே தானோவி னல்லது- துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானக நாட
விலங்கிற்கும் விள்ள லரிது.

(இ-ள்) கானகம் - காடுசூழ்ந்த, நாட- நாட்டை யுடைய பாண்டியனே!, (உலகத்தில்) விள்ளல் - (முதலிற் கூடிவிட்டுப்பின்) பிரிதல், விலங்கிற்கும்- மிருகங்களுக்கும், அரிது - அருமையாம், (ஆதலின் மனிதனும்), துன்னி- (முன்னே) நெருங்கி, கலந்தாரை - உறவு கொண்டவரை, கைவிடுதல் - தன்னிடத்து நின்றும் நீக்கிவிடுதல், அரிது- இல்லை, (ஆகவே தன்னுடைய நண்பர்), இன்னா- தீய காரி யங்களை, செய்யினும்- (தனக்குச்) செய்தாலும், (அவரை வெறுத்து நீக்கிவிடாமல்), இனிய- (அவை யெல்லாம் நமக்கு) இனியனவே, ஒழிக- ஒழிவனவாக, (அவர்மீது தவறில்லை; இங்ஙனம் நம் நேயரும் நமக்குத் தீங்கு செய்யு மாறு நாமே முற்பிறப்பில் பாவஞ் செய் துளேம்), என்று- என்றெண்ணி, தன்னையேதான் - தன்னைத் தானே, நோவின் - நொந்துகொள்ளின், (அது), நல்லது- நன்மையுடையதாம்; எ-று.

கூடிப்பிரிதல் மிருகங்களிடத்து மில்லையாதலின், மனிதன், நட்பினரை நீக்கிவிடுதல் எப்பொழுதுமில்லை. அதனால், ஒருவன் தன்னுடைய நட்பாளர் தீங்குகள் செய்யினும் அவற்றின் பொருட்டு அவரை வெறுத்து நீக்கிவிடாமல், 'அவையெல்லாம் நமக்கு இனியனவே; நம் மனத்தைவிட்டு நீங்குவனவாக' என்று அவற்றைப் பொறுத் துக் கொண்டு, ''அவர்மீது தவறில்லை; மனமொத்த நண்பின ராகிய அவரும் நமக்கு இத்தகைய தீமைகள் செய்தற்குத்தக்க பாவத்தை நாம் செய்திருக்கின்றோம்'' என்று தன்னைத் தானே நொந்து கொண்டால் அக்குணமானது அவனுக்கு மிகுந்த நன்மை தருவதாகும் என்பது இதன் கருத்து.

இதனால், ஒருவன், தனக்கு நண்பராயினார் எவ் வகைத் தீங்குகளைச் செய்யினும் பொறுத்து அவருடைய சிநேகத்தைவிடலாகாதென்பது பெறப்படும். ''விலங்கிற் கும் விள்ளல் அரிது'' என்றதனால், 'கூடிப்பிரிதல் மனிதர்க்கு அறவே கூடாது' என்பது நன்கு புலனாம். இங்ஙனம் கூடிப் பிரிதல் விலங்குகள் முதலியவற்றினிடத்து மில்லையென் பதையும், மனிதர்க்கது கூடாதென்பதையும்,

> *''விலங்கேயுந் தம்மோ டுடனுறைதன் மேவுங்*
> *கலந்தாரைக் கைவிடுத லொல்லா- விலங்கருவி*
> *தாஅ யிழியு மலைநாட வின்னாதே*
> *பேஎயொ டானும் பிரிவு''*

என்னும் (பழமொழி-126-ஆம்) செய்யுளும் விளக்கும். இதில் இசையெச்சமாகச் சில சொற்கள் வருவித்துரைக்கப்பட்டன. 'செயினும்' என்பதிலுள்ள உம்மை- இழிவு சிறப்புப் பொருளது; இது, 'அவ்வாறு செய்தல் பெரும்பான்மையும் இல்லை' என்பதை விளக்கி நின்றது. 'ஒழிக என்று' என்பது, அகரந்தொகுத்தலாய், 'ஒழிகென்று' எனவந்தது. 'நோவின்' என்பது- செயினென்னும் வாய்பாட்டு வினையெச்சம்;

இதில், இன்- வினையெச்ச விகுதி. நல்லது - குறிப்பு முற்று. கலந்தார் - வினையாலணையும் பெயர். கைவிடுதல்- தொழிற் பெயர். 'விலங்கிற்கும்' என்பதில் உம்மை-இழிவு சிறப்புப் பொருளது. அரிது- இல்லையென்னும் பொருண் மேனின்றது; இது, கைவிடுதல், விள்ளல் இரண்டனோடும் கூட்டி முடிக்கப்பட்டது;

''நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது''

என்னும் திருக்குறள் 235-ஆம் செய்யுளுரையில், 'ஆகும்' 'அரிது' என்ற சொற்கள் இரண்டிடங்களிற் கூட்டி முடிக்கப் பட்டிருத்தல் போலமைந்ததென்க; இங்ஙனங்கொள்ளல் தாப்பிசைப் பொருள்கோளின்பாற் படும்; இங்ஙனம் கூட்டப்படுஞ் சொல்லினை, மத்திம தீபம் என்பர் வட நூலார். விலங்கு - குறுக்கு; இஃதிங்கு ஆகுபெயராய் மனி தரைப்போல் நேரே நிற்பதின்றிக் குறுக்காய் நிற்கும் மிரு கத்தை யுணர்த்தி நின்றது; 'திர்யக்' என்னும் வடசொல்லின் பொருள்கொண்டது. அரசர்க்கும் நாட்டிற்குமுரிய நீர், மண், மலை, காடு என்னும் நால்வகை யரண்களுள் இங்குக் காட்டைச் சிறப்பித்து, 'கானகநாட' என்றார் முனிவர்;

''மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண்''

என்னும் (திருக்குறள் - 742 - ஆம்) செய்யுளால் மன்னர்க்கும் நாட்டிற்கும் நால்வகை யரண்களுண்டெனப் துணரப்படும்.

77. *''பெரியார் பெருநட்புக் கோடறாஞ் செய்த*
அரிய பொறுப்பவென் றன்றோ- அரியரோ
ஒல்லெ னருவி புயர்வரை நன்னாட
நல்லசெய் வார்க்குத் தமர்.

(இ-ள்.) ஒல் என்- ஒல் என ஒலிக்கின்ற, அருவி- நீர் அருவிகளையுடைய, உயர்- உயர்ந்த, வரை - மலைகளை யுடைய, நல்நாட - நல்ல நாட்டையுடைய பாண்டியனே!, நல்ல செய்வார்க்கு- நல்ல காரியங்களையே செய்பவர் களுக்கு, தமர்- நண்பராவார், அரியரோ- அரியராவாரோ? (இலர்; எளிதில் பலர் கிடைப்பர்; எனினும், இவர் தமக்கு நலஞ்செய்வாரிடத்தே சிறிது தவறு காணப்படின் அதனைப் பொறாது அவரை வெறுத்துக் கைவிடுவர்; ஆதலின், நலங்குறித்து உறவினராகும் இத்தகையினரது நட்புச் சிறந்த தன்றாம்; பெரியார், அங்ஙனமின்றித் தம் நேயர்செய்த பொறுத்தற்கரிய குற்றங்களையும் பொறுத்துக் கொள்வர்; அன்னார் நேயங்கிடைத்தல் அரிதினுமரிதாம்; அறிஞர், அவர் நட்பையே தேடிக்கொள்வர்; (அங்ஙனம் அவர்), பெரியார்- (அறிவொழுக்கங்களாற் சிறந்த) அப்பெரியாரது, பெருநட்பு- உயர்ந்த சிநேகத்தை, கோடல்- (விரும்பின்) கொள்ளுதல், (எதன்பொருட்டெனின் அவரிடத்தே பொறுத்தற்குண மிருத்தலினாலே), தாம் செய்த - தாங்கள் புரிந்த, பொறு- (பொறுத்தற்கு) அரியனவாகிய குற்றங்களையும், பொறுப்ப- (அவர்கள்) பொறுத்துக்கொள்வார்கள், என்று - அன்றோ- என்று நினைத்தல்லவோ? (ஏற்படுகின்றது) (ஆகவே, நேயர் செய்த குற்றங்களைப் பொறுத்துக் கொள்வோரே பெரியோ ராவர்); எ - று.

நலம்புரிவார்க்குப் பலரும் நண்பராவர்; அங்ஙன மாவோர், நலம் புரிவாரிடத்தே சிறிது தவறு காணப்படினும் அதனைப் பொறாமல் அவர் நேயத்தை விடுப்பர்; ஆதலின், அன்னார் உறவு சிறந்ததன்று; பெரியார், தம்மோடு பழகின வர் செய்யும் பொறுத்தற்கரிய குற்றங்களைப் பொறுத்துக் கொள்வர்; அவர் நேயம் கிடைத்தல் அரிது; அத்தகையாரது நட்பையே அறிஞர் தேடிக் கொள்வர்; அங்ஙனந் தேடிக் கொள்ளுதல் எதனால் எனின், அவரிடம் பொறுமையிலிருத் தலினாலே தாம் செய்யும் குற்றங்களையும் அவர் பொறுத்துக் கொள்வர் என்று நினைத்தல்லவா ஏற்படுகின்றது. ஆதலின்,

நட்பினர் செய்யும் குற்றங்களைப் பொறுத்துக்கொள்வோரே பெரியோராவர் என்பது இதன்கருத்து.

இதனால் நேயர் செய்யுங் குற்றங்களைப் பொறுத்துக் கொள்வார்க்குப்பெருந்தகைமை யுண்டாமென்பது பெறப் படும். இச் செய்யுளிடையில் சில சொற்றொடர்கள் இசை யெச்சமாக வருவித்துரைக்கப்பட்டன. கோடல்- முதனிலை நீண்ட தொழிற்பெயர்; இதில், கொள்- பகுதி, தல்- விகுதி, முதனீட்சி- விகாரம், தகரம் டகரமாகத் திரிய ளகரம் கெட் டது; இத்தொழிற்பெயரை எழுவாயாக வைத்து, 'ஏற்படுகின் றது' என்னும் பயனிலை கூட்டியுரைக்க. அரிய, நல்ல என்னும் மொழிகள் அஃறிணைப் பலவின்பாற் பெயர்கள். 'அன்றோ' என்பதில், ஓ- தேற்றப்பொருளது; பிரசித்தத்தைக் காட்டிநின்றது. பொறுப்ப- பலர்பால் வினைமுற்று. 'அரி யரோ' என்பதில், ஓ- எதிர்மறுத்தற் பொருளது. 'அரிய' என்ப தில் இறந்தது தழுவிய எச்சவும்மை தொக்கது. ஒவ்லெனல்- ஒலிக்குறிப்பு. உயர்வரை- வினைத்தொகை. தமர்- தாம் என்னும் கிளையடியாக வந்தபெயர். (எ)

78. *வற்றிமற் றாற்றப் பசிப்பினும் பண்பிலார்க்*
கற்ற மறிய வுரையற்க- அற்றம்
மறைக்குந் துணையார்க் குரைப்பவே தம்மைத்
துறக்குந் துணிபிலா தார்.

(இ-ள்.) (புகழை விரும்பும் மனிதர்) வற்றி- (வறுமை யால் உணவின்றித் தம் உடல்) உலர்ந்து, ஆற்ற - மிகுதியாக, (வயிறு) பசிப்பினும் - பசித்தாலும், (இவ்வறுமைத் துன்பத் தால் உயிர் நீங்கினும் நீங்குக என்று உயிர்விடுதற்கும் துணிவு பூண்டு அதனைப் பொறுத்துக்கொண்டு), அற்றம் - அத் தகைய வறுமையை, பண்பு இல்லார்க்கு -(தம் துயர்தீர்க்கும்) நற்குணமில்லாதவர்க்கு, அறிய - (அவர்) அறியும்படி, உரை யற்க - கூறாதொழிவாராக, (தம்மிடம் தவறு கண்டவிடத்

தும்) தம்மைத் துறக்கும்- தங்களை வெறுத்து நீக்கி விடும், துணிபு இல்லாதார் - நோக்கமில்லாதவர்களாகிய, (தம் சிநேகத்தை நீக்காதவர்களாகிய), அற்றம் - (தம்முடைய) வறுமையினை, மறைக்கும்- நீக்கத்தக்க, துணையார்க்கு - நண்பர்க்கு மட்டும், உரைப்ப- (அறிஞர்) சொல்லுவார்கள்; எ-று.

புகழை விரும்பும் மனிதர் உணவின்றி உடல்வற்றிப் பசியும் மிகும்படியான வறுமைத் துன்பத்தை யடையினும், 'இதனால் இறந்தொழியினு மொழியலாம்; இதனை நட்புக் குணமில்லாத பிறரிடம் சொல்லிக்கொள்ளுதல் கூடாது' என்று சாவுக்குந் துணிந்து, அக்குணமில்லாரிடம் கூறாதிருப் பாராக; தம்மிடத்தே குற்றங் கண்ட விடத்தும் வெறுப்புற்றுத் தமது நட்பை நீக்கிவிடாமல் தமக்கு வறுமைத் துன்பம் நேர்ந்தவிடத்து அதனை நீக்கவல்லாரிடத்தில் மட்டும் அவ்வறுமையினை அறிஞர் கூறுவர் என்பது இதன்கருத்து.

இதனால், சிறப்புற விரும்புவோர், வறுமைத்துன்பம் மிகுந்தவிடத்தும் அதனை நீக்கத்தக்க நட்புக் குணமில்லா ரிடம் கூறலாகாதென்பதும், அக்குணமுள்ளாரிடம் கூறலா மென்பதும் பெறப்படும். நம்பினர் துயர்களையும் நற்குண மில்லார்பால், வறுமையுற்றார் தம் எளிமையைக் கூறின், அன்னார் அவர்க்கிரங்கி உதவி செய்தலின்றி, அவரின் எளிமையை எங்குங்கூறி அவர்க்கு மிக்க இழிவையுண் டாக்குவர்; நண்பரின் துன்பந் துடைக்கும் நறுங்குணம் பூண்டாரிடம் சொன்னால் அவர், அங்ஙனங் கூறினாரது வறுமையை வெளியிடாமல் மறைத்து அவர்க்குத் துணை புரிவர். ஆதலின், மனிதர், 'வற்றி...பசிப்பினும் பண் பிலார்க்கு அற்றம் அறிய உரையற்க' என்றும், 'அற்ற மறைக் குந் துணையார்க்குரைப்ப' என்றுங் கூறினார் முனிவர். இங் ஙனம் மனிதர் தம் குறையை தீர்ப்பார்க் குரைக்கலா மென்பதை,

''தெற்றப் பரிந்தொருவர் தீர்ப்ப ரெனப்பட்டார்க்
குற்ற குறையை யுரைப்பதாம்- தெற்ற
அறையார் அணிவளையாய் தீர்த லுறுவார்
மறையார் மருத்துவர்க்கு நோய்.''

என்னும் (பழமொழி-133-ஆம்) செகய்யுளானுணர்க. மற்று - அசை; வினைமற்றெனினுமாம். பண்பு- குணம்; அஃதிங்கு மனிதர் தமக்குரிய கடமைகளை யுணர்ந்து அவற்றின் வழியில் நடக்கும் நல்லொழுக்கத்தை யுணர்த்தி நின்றது; கடமைகளாவன: நட்பிற் பிழைபொறுத்தல், நண்பர்க்குத் துணைபுரிதல், இனியனகூறல், மெய்ம்மை யுரைத்தல் முதலியனவாம். இது, ''பண்பெனப்படுவது பாடறிந்தொழு கல்'' எனவரும் கலித்தொகைச் செய்யுளடி யால் உணரப் படும்; பாடு - கடமை. அற்றம் - தொழிற்பெயர்; பொருள் களெல்லாம் அறுதல்- அதாவது இல்லாமற் போதல் என்பது இதன் கருத்து. இது, பொருளின்மையாகிய வறுமையை யுணர்த்தி நின்றது; இதில் அறு- பகதி, அம்- விகுதி, ற்- விரித்தல் விகாரம். உரையற்க- எதிர்மறை வியங் கோள் வினைமுற்று. மறைத்தலென்பது- இங்கு நீக்குதற் பொருளில் நின்றது; இஃதிப்பொருளில் வருமென்பதை, ''தம்வயிற்குற்றம் மறையாவழி'' எனத் திருக்குறளில் வருந் தொடர் உணர்த்தும். இனி, 'மறைக்கும்' என்பதற்கு 'வெளி யிடாதிருக்கும்' எனப் பொருள் கூறினுமாம். 'உரைப்பவே' என்பதில், ஏ- அசை. துணிவிலாதார்- முற்றெச்சம்; இதனை, 'துணையார்க்கு' என்பதனோடு கூட்டி, 'துணிவிலாதாராகிய 'துணையார்க்கு' என முடிக்க; இங்ஙனம் முடித்தல் மொழி மாற்றுப் பொருள்கோளின் பாற்படும். (தொல்- சொல்- எச்- 13ஆம் சூத்திரம் பார்க்க)

இதில், மனிதர், வறுமையைப் பண்பிலார்க் குரை யாமற் பொறுத்திருக்க வேண்டுமென்ற வகையில் பொறை யுடைமை அமைந்திருத்தலின் இஃதிவ்வதிகாரத்திற் சேர்க் கப்பட்டது. *(அ)*

79. *இன்பம் பயந்தாங் கிழிவு தலைவரினும்*
இன்பத்தின் பக்க மிருந்தைக்க - வின்பம்
ஒழியாமை கண்டாலு மோங்கருவி நாட
பழியாகா வாறே தலை.

(இ-ள்.) ஓங்கு - உயர்ந்த, அருவி- நீரருவிகளை யுடைய, நாட- பாண்டியநாட்டையுடையவனே!, (நீ இன்பந் துய்க்குமிடத்து இழிவு நேரினும் அதற்கு நாணாது அவ்வின் பத்தையே விருத்தி செய்யத்தக்க மார்க்கத்தைப் புரிந்து கொண்டிருக்கின்றாய்; அதனால் அவ்வின்பம் உன்னை விட்டு நீங்காதிருக்கின்றது; அங்ஙனம்), இன்பம் பயந்த ஆங்கு- (உனக்கு) இன்பத்தைக் கொடுத்த அவ்வழி யில், இழிவு- இழிவானது, தலை- உன்னிடத்து, வரினும்- வந்தாலும், (அதை நினையாமல்), இன்பத்தின் பக்கம்- அவ்வின் பம் வருகிற பக்கத்திலேயே, இருந்தைக்கு- (விரும்பி) இருந்துவந்த உனக்கு, அவ்வின்பம் - அந்த இன்பமானது, ஒழியாமை-.நீங்காதிருத்தல், கண்டாலும்- (நீ) பார்த்தாலும், (அது சிறப்பன்று; இழிவுநேராத மார்க்கத்தில் நடப்பதால் துன்பம் வருவதாயிருந்தாலும் அதைச் சகித்துக் கொண் டேனும் அந்நன்னெறியில் ஒழுக வேண்டும். அங்ஙனம் கைக்கொள்ளும்), பழி ஆகா ஆறே - பழிப்புண்டாகாத வழியே, தலை- சிறந்ததாம்; எ-று.

அருவி நாட்டையுடைய பாண்டியனே! நீ இன்ப மனுபவிக்குங் காலத்து இழிவுநேரினும் அதற்கு நாணாது அவ்வின்பத்தையே விருத்திசெய்யும் மார்க்கத்தைப் புரிந்து வருகின்றாய்; அதனால் அவ்வின்பம் உன்னைவிட்டு நீங்கா திருக்கின்றது; அங்ஙனம் ஒழியாதிருத்தலை நீ பார்த் தாலும் அது சிறப்பாகாது; நன்மார்க்கத்தில் நடப்பதால் உனக்கு இன்பமின்றித் துன்பமிகுவதா யிருந்தாலும் பழிப் பில்லாத அம்மார்க்கமே சிறந்ததாம் என்பது இதன் கருத்து.

உலகத்தில் இன்பமே பெரிதென நினைப்போர், அதற்குரிய மார்க்கங்களில் இழிவுவரினும் அதனைக் கருதாது அவ்வின்பத்தினை விருத்தி செய்வதிலேயே நோக்கமுடைய வர்களா யிருப்பர்; இவர்க்கு எவ்வகைச் சிறப்புமிராது. இன்ப மில்லாவிடினும் பழிப்பற்ற வழியில் ஒழுகு வோர்க்கே சிறப்புண்டாம். ஆதலின், செல்வத்தால் இன்ப மனுபவித்துக் கொண்டிருந்த பாண்டியனிடம் இழிவுக் கஞ்சாத் தன்மை யிருத்தல் கூடும்; அதனை யொழிக்குமாறு கூறவேண்டும் என்றே முனிவர் அவனை முன்னிலைப் படுத்தி இந்நீதி கூறினார். இதனால் மற்றையரும் இந்நீதி யைக் கடைப்பிடித் தொழுக வேண்டு மென்பது பெறப் படும்.

இதில், மனிதர் இழிவை யேற்றேனும் இன்பமனுப விக்க நாடாமல் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டாவது பழிப்பற்ற மார்க்கத்தில் நடக்கவேண்டுமென்று கூறுதல் வாயிலாகப் பொறுமையையே விளக்குதலால் இஃதிங்குச் சேர்க்கப்பட்டதென்க.

பயந்த - பெயரெச்சம்; ஈறுதொகுத்தலாய், 'ஆங்கு' என்பதனோடுகூடி, 'பயந்தாங்கு' எனவாயிற்று. முதலடி யிலுள்ள தலை-இடப் பொருளது; ஈற்றிலுள்ளது- சிறப்புப் பொருளது. பக்கம்- பக்ஷம் என்னும் வடசொற்றிரிபு. இருந்தை- முன்னிலையொருமை இறந்தகால வினையா லணையும் பெயர். இதில், ஐ-விகுதி. 'இருந்தைக்கு' என் பதில், கு- நான்கனுருபு. இதன்பின் நின்ற 'இன்பம்' என்பத னோடு கூடிய அகரச்சுட்டைச் சாரியை யெனக் கொண்டு அது குவ்வுருபின்மேலேற, 'இருந்தைக்கு' என்பது, 'இருந்தைக்க' என நின்றது எனக்கோடலுமொன்று. 'கண்டாலும்' என்பதன் உம்மை உயர்வு சிறப்புப் பொருளது. (கூ)

80. *தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க*
தன்னுடம்பின்
ஊன்கெடினு முண்ணார்கைத் துண்ணற்க-
வான்கவிந்த
வையக மெல்லாம் பெறினு முரையற்க
பொய்யோ டிடை மிடைந்த சொல்.

(இ-ள்.) (என்றும் உயர்வுற விரும்பும் மனிதன்) தான்கெடினும் - (வறுமையால்) தான் கெட்டாலும், (அவ் வறுமையை நீக்கிக் கொள்ளும்பொருட்டு), தக்கார்கேடு- (செல்வத்தால்) மேம்பட்டவரது கெடுதலை, எண்ணற்க- நினையாதிருக்கடவன், தன் உடம்பின் - தனது உடம்பி லுள்ள, ஊன்- தசை, கெடினும்- (வறுமையால் உணவின்றி மெலிந்து) அழிவதாயினும், (அதனை வளர்த்துக்கொள்ளும் பொருட்டு), உண்ணார் கைத்து- உண்ணத்தகாதவரது கையினால் வரும் உணவை, உண்ணற்க - உண்ணாதிருக்கக் கடவன், (தான் வறுமைத் துன்பமடைந்து கொண்டிருக்குங் காலத்தில் அது நீங்கும்படியாகப் பொய்கூறுவதனால்), வான்கவிந்த - ஆகாயத்தாற் கவியப்பெற்ற, வையகம் எல் லாம் - பூமி முழு வதையும், பெறினும்- அடைவதாயிருந் தாலும், பொய் யோடு- அப்பொய்யுடனே, இடைமிடைந்த- நடுவிற்கலந்த, சொல்- சொல்லையும், உரையற்க - சொல்லா திருக்கக் கடவன்; எ-று.

உலகத்திற் சிறப்படைய விரும்பும் மனிதன், தான் வறுமையால் கெட்டாலும், பெரியாரது செல்வத்தைக் கவர்ந்து அதை நீக்கிக்கொள்ளும் பொருட்டு அவர்க்குக் கெடுதல் நினைத்தல்கூடாது; வறுமையால் உணவின்றி உடல் மெலிந்தாலும் உண்ணத்தகாதவர்களிடத்தில் உண வுண்ணலாகாது; வறுமையுற்ற காலத்தில் அது தீரப்பொய் சொல்வதால் பூமி முழுவதையும் பெறுவதாயிருந்தாலும் அப்பொய்யோடு கலந்த சொல்லையும் கூறலாகாது என்பது இதன் கருத்து.

பிறர் செல்வத்தைக் கவர்ந்து தன் வறுமையை அகற்றிக் கொள்ளும் மனிதன் சிறிது சுகத்துடன் வாழினும் அவனுக்குப் பழியும் பாவமுமே சேருமன்றிச் சிறப்பிராது. உண்ணத் தகாதவிடத்தில் உணவுண்ணும் மனிதனுக்குப் பசிதணிந்து உடல்மெலிவு சிறிது நீங்கினும் அவ்வுணவு திருப்தியைத் தராது; மேலும் அவனை உலகத்தார் பழிப்பர்; அதனால் அவன் சிறப்படையான். பொய் கூறுவதால் மிகுந்த செல்வத்தைப் பெறுவோன் வறுமை நீங்கி வாழினும் அவனை உலகத்தார் பொய்யன் என்று எப்பொழுதும் தூற்றுவர்; அதனால் அவனுக்கும் சிறப்புண்டாகாது. ஆதலின், சிறப்புற விரும்புவோன் இவற்றைச் செய்தல் கூடாதென்றார் முனிவர். இதனால், இவற்றைச் செய்யாது வறுமைத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருப்பவர்க்கே சிறப்புண்டாமென்பது பெறப்படும்.

முன்னிரண்டடிகளினுமுள்ள உம்மைகள்- இழிவு சிறப்புப் பொருளன. மூன்றாமடியில், உள்ள உம்மை - உயர்வு சிறப்புப் பொருளது. கைத்து- கையினால் வருவது; அஃதிங்கு உணவை விளக்கி நின்றது. வை+அகம்- வையகம்; பொருள்கள் வைக்கப்படும் இடம் என்பது இதன் பொருள்.

அதிகாரம்9

பிறர்மனை நயவாமை

பிறர்மனை நயவாமையாவது- மனிதர், காமமயக்கால் அன்னியருடைய மனையாளை விரும்பாதிருத்தலாம். இவ்வதிகாரம் இதனை யுணர்த்துவதாகலின் இப்பெயர் பெற்றது. இல்லறத்தார்க்குப் பொறையுடைமை முக்கிய மானது; அதனைக் கெடுப்பது காமமயக்கம்; அம்மயக்கத்தை யொழிப்பார்க்கே அப்பொறையுடைமை நிலைபெறுவதாம்; ஆதலின், பொறுமையை விரும்புவோர் காமத்தை யொழிக்க வேண்டும் என்பது தோன்ற இது பொறையுடைமையின் பின் வைக்கப்பட்டது. மனை- இடவாகு பெயராய் அதற்குரிய பெண்ணை உணர்த்தி நின்றது.

81. *அச்சம் பெரிதா லதற்கின்பஞ் சிற்றளவால்*
நிச்ச நினையுங்காற் கோக்கொலையால்- நிச்சலுங்
கும்பிக்கே கூர்த்த வினையாற் பிறன்தார
நம்பற்க நாணுடை யார்.

(இ-ள்.) (ஆடவர், பிறர்மனையாளைச் சேர விரும்புங்காலத்து அவர் மனத்துண்டாகும்), அச்சம் பெரிது- பயம் அதிகமானது, அதற்கு - அச்செய்கைக்கு, இன்பம் - (ஏற்படும் காம) இன்பம், சிறு அளவு- சிறிய அளவினை

யுடையதாம். (இன்னும் அச்செய்கையை), நினையுங்கால்- நன்றாக ஆராயுமிடத்து, நிச்சம் - தினந்தோறும், (அக் காமத்தை விரும்புவார்க்கு), கோகொலை - (இவ்வுலகில்) அரசனாலேற்படும் கொல்லுதல் தண்டனையுமாம், (அன்றியும் அது மறுமையில்), நிச்சலும்- தினமும், கும்பிக்கே- நரகத்திற்கே- (ஏதுவாய்), கூர்த்த- அதிகரித்த, வினை- (பாவச்) செயலாம், (ஆதலின்), நாண் உடையார் - (இவ் விழிவுகட்கு) நாணுதலுடையவர், பிறன்தாரம்- அயலானுடைய மனைவியை, நம்பற்க- விரும்பாதிருப்பாராக; எ-று.

பிறர் மனையாள்மீது காதல்கொண்டு அதனை நிறைவேற்றிக் கொள்ள விரும்புவார்க்கு அதனால் பெரிய அச்சமுண்டாகும்; ஏற்படும் இன்பமோ அற்பம்; கொற்றவனால் கொலைத்தண்டனை கிடைக்கும்; இன்னும் அச்செய்கை நரகத்திற் கேதுவாகிய பாவச்செய்கையுமாம்; ஆதலின், இவ் விழிவுகட்கு நாணுபவர் பிறர்மனையாளை விரும்பாதிருக்கக் கடவர் என்பது இதன் கருத்து.

பெரியாரே இழிவுகட்கு நாணுவார்; ஆதலின், அங்ஙனம் அவற்றிற்கு நாணிப் பெரியாராக விரும்புவோர், அவற்றை விளைவிக்கத்தக்க பிறர்மனை நயத்தலை ஒழித்தல் வேண்டுமென்பது தோன்ற 'நாணுடையார் பிறன்தாரம் நம்பற்க' என்றார் முனிவர். இங்ஙனங் கூறியதனால் பிறன் தாரம் விரும்பார் பெரியாரென்பதும், விரும்புவார் சிறியாரென்பதும் பெறப்படும். அச்சமாவது - ஒருவன் பிறன் மனையாளிடத்தே செல்லுங்கால் அவளுக்குரியார் தன்னை அடித்தல் முதலிய துன்பங்களுக்குட்படுத்துவர் என்றஞ்சுதலாம். மாதர் இன்பம் நிகழுங்கால் இனிமையாய்த் தோன்றி நிகழ்ந்தபின் வெறுப்பாய் மாறுதலின் அது சிற்றின்பமெனப் பட்டது. கோக்கொலையாவது - ஒருவன் பிறன் மனையாளைக் கற்பழிக்கத் துணிந்த குற்றம் வெளிப்படுமிடத்து அவனுக்கு அரசன் மரண தண்டனை விதித்தலாம். அயலான்

மனையாளை விரும்புவோன் நரகத்தை அடைவது நிச்சய மாதலின், அது 'கும்பிக்கே கூர்த்தவினை' எனப்பட்டது. பிறர்மனை நோக்காத் தன்மை பெரியார்க்குரியதென்பது.

பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில்''

என்னும் (திருக்கு-141-ம்) செய்யுளால் உணரப்படும். பிறன் தாரத்தை விரும்பியவர் மறுமையில் நரகதுன்பத்தை யடைவரென்பதை,

''காதலாள் கரிந்துநையக் கடியவே கனிந்து கன்றி
ஏதிலான் றார நம்பி யெளிதென விறந்த பாவத்
தூதுலை யுருக வெந்த வொள்ளழற் செப்புப் பாவை
ஆதகா தென்னப் புல்லி யலறுமால் யானை வேந்தே''

என்னும் (சீவகசிந்தாமணி-2769)ஆம் செய்யுள் விளக்கும். அச்சம்- தொழிற்பெயர்; இதில், அஞ்சு-பகுதி, அம்- தொழிற் பெயர் விகுதி, ஞகரவொற்று சகரவொற்றானது- வலித்தல் விகாரம். ஆல் நான்கும் - அசைகள். 'அதற்கு' என்பதில் குவ்வுருபு இடப்பொருளில் வந்தது; இஃதுருபு மயக்கம். நிச்சம், நிச்சல் என்னும் இரண்டும் 'நித்யம்' வடசொற் றிரிபுகள். நினையுங்கால் - எதிர்காலப் பெயரெச்சத் தொடர்; நினையும்- பெயரெச்சம்; கால் - காலத்தை யுணர்த்தும் பெயர்; காலமென்னும் வடசொல்லின் திரிபு. கொலை - தொழிற்பெயர்; கொல்-பகுதி, ஐ- விகுதி, கும்பிக்கு என்ப தில், குவ்வுருபு பொருட்டுப் பொருளில் வந்தது. நம்பற்க- விருப்பத்தை யுணர்த்தும் 'நம்பு' என்னும் உரிச்சொல்லடி யாய் பிறந்த எதிர்மறை வியங்கோள்; 'நம்பு' என்பது 'விருப்பம்' எனப் பொருள்படுமென்பதை,

''நம்பு மேவு நசையா கும்மே''

என்னும் (தொல்-சொல்-உரி-33-ஆம்) சூத்திரத்தாலுணர்க; நசை- விருப்பம்; இன்னும், 'நயந்து நாம்விட்ட நன்மொழி நம்பி' (அகம்- 198) என்பதில், 'நம்பி' என்பது 'விரும்பி' எனப் பொருள்பட்டு நிற்றலாலும் இது துணியப்படும். நாண்- முதனிலைத் தொழிற்பெயர். நாணாவது- செய்யத் தகாதவற்றைச் செய்ய மனமெழாமல் ஒடுங்குதல். தாரம்- தாரா; என்னும் வடசொற்றிரிபு. (க)

82. *அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்*
பிறன்தார நச்சுவார்ச் சேரா- பிறன்றார
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்.

(இ-ள்). பிறன்தாரம்- அன்னியன் மனைவியை; நச்சுவார்- விரும்புவோரை, அறம்- தருமமும், புகழ்- கீர்த்தியும், கேண்மை- பிறர்சிநேகமும், பெருமை- உயர்வும், (ஆகிய), இ நான்கும்- இந்த நான்கு பொருள்களும், சேரா- சேரமாட்டா, பிறன்தாரம்- அயலான் மனைவியை, நச்சுவார்- விரும்புவோரை, பகை என்று- (பலர்) விரோதமும், பழி என்று - நிந்தையும், பாவம் என்று - பாவமும், அச்சத்தோடு - அச்சமும், (ஆகிய), இ நால்பொருள்- இந்த நான்கு பொருள்களும், சேரும் - அடையும்; எ-று.

பிறன்மனையாளை விரும்புவோரைத் தருமம், கீர்த்தி, பிறர்நேயம், கௌரவம் ஆகிய நான்கும் சேரமாட்டா; பலர்பகையும், பழியும், பாவமும், அச்சமும் சேரும் என்பது இதன்கருத்து.

ஒருவன், பிறன்தாரத்தை விரும்புவது தரும விரோத மான காரியமாதலால் அவனிடத்தே அறம் நிலைபெறாது; அன்னியர் மனையாளை விரும்புவோன் அவர் நேயத்தைச்

சிறிதும் கருதாது அப்பாதகத்தைச் செய்வானாதலின் அவனிடத்தில் நட்புத்தன்மை யிராது; அவனைப் பலரும் நன்கு மதியாராதலின் அவன்பால் கௌரவம் நிலைபெறாது; அவன் செய்கை பலரும் வெறுக்கக்கூடியதாகலின் அவன் மீது பகைகொள்வர்; அவனை நிந்திப்பர்; காமம் பஞ்சமா பாதகங்களுள் ஒன்றாகலின் அதனை யுடையானுக்குப் பாவமே அதிகரிக்கும். ஆதலின், பிறன்தார நச்சுவார்க்கு அறம் முதலியன சேராவென்றும்; பகை முதலியன சேரு மென்றும் கூறினார் முனிவர். இவற்றால் இத்தகையினர்க்கு இம்மை, மறுமை என்னும் இரண்டிடங்களினு மின்ப மில்லையென்பது பெறப்படும். இங்ஙனம் பிறர்மனை விழைவானிடத்தில் நல்லனசேரா, தீயன சேருமென்பதை,

''அறனு மறனறிந்த செய்கையுஞ் சான்றோர்
திறனுடைய னென்றுரைக்குந் தேசும் - பிறனில்
பிழைத்தர னெனப்பிறராற் பேசப் படுமேல்
இழுக்கா மொருங்கே யிவை''

என்னும் (அறநெறி-149ஆம்) செய்யுளானும்,

''பகைபாவ மச்சம் பழியென நான்கும்
இகவாவா மில்லிறப்பான் கண்''

என்னும் (திருக்-146-ஆம்) செய்யுளானு முணர்க. அறம் முதலிய நான்கும் செவ்வெண் ஆதலின் ஈற்றில் தொகை பெற்றன; பகை முதலிய நான்கும் இத்தகையனவே;

''அவற்றின் வரூஉ மெண்ணி னிறுதியும்
பெயர்க்குரி மரபிற் செவ்வெ ணிறுதியும்
ஏயி னாகிய வெண்ணி னிறுதியும்
யாவயின் வரினுந் தொகையின் றியலா''

என்னும் (தொல்-சொல்-இடை-42-ஆம்) சூத்திரவிதிப்படி இவை அமைந்தன. 'என்று' என்னும் எண்ணிடைச்சொல் பிரிந்து பகை, பழி, பாவம் என்பவற்றோடும் சேர்ந்தது;

''என்று மெனவு மொடுவுந் தோன்றி
ஒன்றுவழி யுடைய வெண்ணினுட் பிரிந்தே''

என்னும்(தொல்-சொல்-இடை-46-ஆம்) சூத்திரவிதிப்படி இஃதமையும். ஒடு-எண்ணிடைச்சொல். இச்செய்யுளில், பிறன்றார நச்சுவார்க்கு அறம் முதலிய நான்கும் போய், பகை முதலிய நான்குஞ் சேருமென்றதனால் இது, 'பரிவர்த்தனை' என்னும் அலங்காரமாம்; வடமொழியில், 'பரிவர்த்தநாலங்காரம்' என்றும், தமிழில், 'மாற்றுநிலையணி' என்றும் சொல்லப்படும்; பரிவர்த்தனையாவது பொருள்களை மாற்றிக்கொள்ளுதல்; அதாவது ஒன்றைக் கொடுத்து மற்றொன்றைப் பெறுதல்; ''பொருள் பரிமாறுதல் பரிவர்த்தனையே'' என்னும் தண்டியலங்கார சூத்திரத்தால் இஃதுணரப்படும்.

83. *புக்க விடத்தச்சம் போதரும் போதச்சம்*
துய்க்கு மிடத்தச்சந் தோன்றாமற் காப்பச்சம்
எக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ
உட்கான் பிறனில் புகல்.

(இ-ள்.) (ஒருவன், பிறன்மனையாளைச் சேர விரும்பி), புக்க இடத்து- (அவளிருக்கும் இல்லிற்குள்) புகுந்தபொழுது, அச்சம் பயமே யுண்டாகும், போதரும் போது - (அங்ஙனம் புகுந்து திரும்பிய) போகும்போதும், அச்சம் - பயமாம், துய்க்கும் இடத்து- (அங்ஙனம் அவ் வில்லத்திற் புகுந்து அவளுடன்கூடி இன்பத்தை) அனுபவிக்கும் காலத்திலும், அச்சம்- பயமாம், (அந்த இழிந்த செய்கையானது), தோன்றாமல்- (வெளிக்குத்) தெரியாமலிருக்கும்படி, காப்பு-(அதனை அடக்கிக்) காப்பதிலும், அச்சம் - பயமாம், (இவ்வாறு இச்செயல், தன்னை விரும்பு

கிற மனிதனுக்கு), எக்காலும் - எந்தக் காலத்திலும், அச்சம் - பயமாம், (இவ்வாறு இச்செயல் தன்னை விரும்புகிற மனிதனுக்கு) எக்காலும் - எந்தக் காலத்திலும் அச்சம் தரும் பயத்தையே கொடுத்துக்கொண்டு வரும், (ஆதலால்), பிறன் இல் புகல் - அயலானுடைய மனையாளிடம் செல்வ தற்கு, எவன் உட்கான் - எவன் தான் பயப்படமாட்டான்?, (எல்லோருமே பயப்படுவார்கள்; அதனால், அதில் அச்சமின்றி வேறெவ்வித இன்பமுமில்லை) எ-று.

ஒருவன், பிறன்மனையாளை விரும்புந்தொழில், அவனுக்கு எவ்வகையிலும் எப்பொழுதும் அச்சத்தையே கொடுத்துக்கொண்டிருக்கும்; ஆதலின் எல்லோருமே அதற்கஞ்சுவார்கள்; அதில் அச்சமின்றி வேறெவ்வித இன்பமுமில்லை என்பது இதன் கருத்து.

அயலான் மனைவியை விரும்பி அவளிருக்குமிடத்திற்குச் செல்லுவோன் அங்கே புகுங்காலத்தில், 'அவள் கணவனோ, அவளைச் சார்ந்த மற்றவரோ நம்மைக்காணின் அடித்துவருத்துவரே' என்று அச்சங்கொள்வான். அவன் அங்ஙனஞ் சென்று அவளோடு கூடி இன்பம் அனுபவிக்குங் காலத்திலும் அனுபவித்து வெளியேறிப் போகுங்காலத்திலும் அத்தகைய அச்சமே அவனுக்குண்டாகும். அங்ஙனம் அவன் வெளிச்சென்ற பின்பும் தான் செய்த களவொழுக்கம் பிறருக்குத் தெரியாதிருக்கும் பொருட்டு அதனை மறைத்துக் கொண்டு, நம் செய்கை இதனால் வெளியாகிவிடுமோ, அதனால் வெளியாகிவிடுமோ என்று, செய்யத் தொடங்கும் ஒவ்வொரு செயலையும் அஞ்சியே செய்வான்; ஆதலின், இச்செய்கையில் அவனுக்கு எப்பொழுதும் அச்சமே யுண்டாய்க்கொண்டிருப்பதன்றி இன்பம் ஏற்பட மாட்டாது. இது குறித்தே ஆசிரியர்; 'இதற்கு எல்லோரும் அஞ்சுவார்கள்' என்றார். இதனால், இச்செய்கை செய்வார்க்கு மறுமையில் துன்பமிகுவதன்றி, இம்மையிலும் அவர்கள் விரும்பிய இன்பம் சித்தியாதுஎன்பதும், அச்சமே எப்பொழுதும் மிகு

மென்பதும், ஆகவே இத்தீச்செய்கையை எவரும் விரும்ப லாகாதென்பதும் பெறப்படும்.

ஆசிரியர் பிறர்மனையாளை விரும்புகிறவனுக்குப் பகை, பழி, பாவம், அச்சம் என்னும் நான்கும் சேரும் என்று முன்செய்யுளிற் கூறி, அவற்றுள் அச்சம் அவ்வின்பத்தினைக் கெடுப்பதும், மிகக் கொடிதுமாகலின், அதனை இச்செய் யுளில் தனியாக எடுத்துக் கூறினர்.

புக்க - பெயரெச்சம்; இதில், புகு- பகுதி, அ- பெய ரெச்ச விகுதி, ககரமிக்கு இறந்தகாலங் காட்டிற்று. 'போதா' என்னும் பகுதியில், தா- என்னும் துணைவினையாகிய தனிநெடில் குறுகி, ரு- என்னும் உயிர்மெய் விரிந்து, அது 'போதரு' என்றாய், உம்- என்னும் பெயரெச்ச விகுதியோடு சேர்ந்து, 'போதரும்' எனவந்தது. போது- பொழுது என்பதன் மரூஉ; இது, போழ்து எனவும் மருவி வழங்கும். காப்பு- தொழிற்பெயர். 'எக்காலும் அச்சம் தரும்' என்பதற்கேற்ப, 'இச்செயல்' என்பதும், பிறசொற்களும் வருவித் துரைக்கப் பட்டன. 'எக்காலும்' என்பதிலுள்ள உம்மை - முற்றுப் பொருளது. ஆல்- அசை; ஆதலால் என்பதன் விகாரமென்று மாம். கொல், ஓ- அசைகள். உட்கான்- எதிர்மறைத்தெரிநிலை வினைமுற்று; 'எவன் உட்கான்' என்பது 'குறிப்பால், எல்லோரும் அஞ்சுவர்' என்னும் பொருள் பயந்துநின்றது; 'உட்கான்' என்பதில், உட்கு- பகுதி; ஆன்- விகுதி, எதிர்மறை ஆகாரம் புணர்ந்து கெட்டது. 'எவன்கொலோ உட்கான் பிறனில் புகல்' என்பதற்கு, (ஒருவன்) உட்காதவனாய்ப் பிறன் இல்புகுதல் எவ்வாறோ' எனப் பொருளுரைத்தலு மொன்று; அங்ஙனங் கூறுமிடத்து, 'உட்கான்' என்பது- எதிர்மறைத்தெரிநிலைமுற்றெச்சம்; கொல்- இழிவு குறித்தது; ஓ- இரக்கப்பொருளது. 'புகல்' என்பதற்கு, 'போவதை' என இரண்டாம்வேற்றுமை விரித்து. 'போவதை எவன் பயப்படமாட்டான்' என முடிவுகொள்ளினும் அமையும். புகல் - இடக்க ரடக்கல்.

''எனைத்துணையா ராயினு மென்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்''

என்னும் திருக்குறள் 144-ஆம் செய்யுளினும் இஃதமைந் திருத்தல் காண்க. இஃதொரு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா. (ங)

84. *காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையு*
மாணின்மை செய்யுங்கா லச்சமா- நீணிரயத்
துன்பம் பயக்குமாற் றுச்சாரி நீகண்ட
இன்ப மெனக்கெனைத்தாற் கூறு.

(இ-ள்.) துச்சாரி- (பிறர்மனை நயத்தலாகிய) கெட்ட காரியம் செய்பவனே!, (நீ) மாண் இன்மை- மாட்சிமை யில்லாத அத்தீக் காரியத்தை, செய்யுங்கால்- செய்யும்போது, (அதனால்) அச்சம் ஆம்- (உனக்கு) பயமே யுண்டாகும், (அச்செய்கையை) காணின்- (பிறர்) பார்த்தால், குடி பழி ஆம்- (உன்) குலத்திற்கே (அவரால் நிந்திக்கப்படும்) பழிப்பு உண்டாகும், கை உறின் - (நீ அக்குற்றஞ் செய்யுங் காலத்தில் தண்டத் தலைவரிடம்) அகப்பட்டுக் கொண்டால், கால் குறையும் - (அவர் தண்டனையால் உன்னுடைய) கால் குறைவுபடும் (அவர்களால் உன் கால் வெட்டப்படும்), (இன்னும் அத்தீச்செயலானது உனக்கு), நீள்நிரயத் துன்பம்- (நீ) நெடுங்காலம் அனுபவிக்கும்படியான நரக வேதனையை, பயக்கும் - உண்டாக்கும், (ஆதலால், இதில்), நீ கண்ட - நீ அனுபவித்துப் பார்த்த, இன்பம் - சுகம், எனைத்து - எவ்வளவினது?, எனக்குக் கூறு- (அதனை) எனக்குரைப் பாயாக; எ-று.

பிறர்மனை நயத்தலாகிய தீச்செயல் புரியும் ஒரு வனை நோக்கிக் கூறி அச்செயலில் பலவகைத் துன்பங்களே

யல்லாமல் இன்பம் சிறிதுமில்லை யென்பதை, அவனுக்கு விளக்கிக் காட்டியதாக இச்செய்யுள் அமைந்தது.

முன் செய்யுளில், 'துய்க்குமிடத் தச்சம்' என்றபடி ஒருவன் பிறர்மனை நயத்தலாகிய தீச்செயலைச் செய்யுங் காலத்தில் அவனுக்குப் பலவகையிலும் அச்சம் மிகுவது இயற்கை; அச்செய்கையைப் பிறர்காணின், 'இவன் உயர் குடியிற் பிறந்தவனாயிருந்தால் இதைச் செய்யமாட்டான்' என்று அவனை நிந்திப்பார்கள்; அதனால் அவன் குலத்துக்கு இழிவுண்டாகும். அவன் இக்குற்றத்தைச் செய்யுங் காலத்தில் தண்டத் தலைவர்களிடம் அகப்பட்டுக் கொண்டால் அரச னுடைய கட்டளைப்படி அவர்களால் அக்குற்றத்திற்காக அவனுடைய கால் வெட்டப்படும்; இதன் பயனாக அவனுக்கு இவ்வுலகத்தில் இவை நேர்வதோடு, இப்பாவத் தால் மறுமையில் நீண்டகாலம் வரை நீங்காத நரகவாதனையு முண்டாகும். ஆதலால், இதில் பலவகைத் துன்பங்களே யன்றி இன்பஞ் சிறிதுமில்லை.

மாண் இன்மை- மாட்சிமையில்லாத, அதாவது அழகில்லாத செய்கை; அழகில்லாத செய்கையாவது- தீச் செய்கை; அஃதிங்கு அதிகாரப் பொருண்மை நோக்கிப் பிறர்மனை நயத்தலைக் குறித்தது; இஃதிடக்கர டக்கலின் பாற்படும். ''விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற், றீமைபுரிந் தொழுகு வார்'' என்னும் (திருக்குறள்- 43-ஆம்) செய்யுளில், 'தீமை' என்பது இங்ஙனம் இடக்கரடக்கலாய்ப் பிறர்மனை நயத்தலை உணர்த்தி நிற்றல் காண்க. இனி, 'மாண் இன்மை' என்பதை, 'ஆண் இன்மை' எனப் பாட பேதங்கொண்டு, இதற்கு, 'ஆண்மைக் குணமில்லாததாகிய தீச்செயல்' எனப்பொருள் கோடலுமாம்; ஆண்மைக் குண மாவது- இந்திரியங்களை அடக்குதலாம்; அவ்வடக்க மின்மை ஆண்மையின்மையாம்; இந்திரிய வடக்கமாகிய ஆண்மை உததம புருஷனுக்குரிய குணம்; அஃதின்மை துச்சாரியாகிய கீழ்மகனுக்குள்ள குணம். இவை, ''பிறன்

மனை நோக்காத பேராண்மை சான்றோர்க், கறனொன்றோ வான்ற வொழுக்கு'' என்னும் (திருக்.148ஆம்) செய்யுளில், பிறர்மனை நோக்காமை பெரிய ஆண்டகைமை என்று கூறப்பட்டிருத்தலானும், அதனுரையில் பரிமேலழகர், ''புறப்பகைகளை யடக்கும் ஆண்மை யுடையார்க்கும் உட்பகையாகிய காமம் அடக்குதற்கு அருமையின், அதனை யடக்கிய ஆண்மையைப் பேராண்மையென்றார்'' எனக் கூறுதலானும் உணரப்படும். கை- கரம்; கை உறல்- கையில் சிக்குதல்; அஃதிங்குத் தண்டத்தலைவரிடம் அகப்படுதலை விளக்கிநின்றது. துச்சாரி- வடசொல்; 'தீச்செயல் புரிபவன்' என்பது இதன் பொருள். 'ஆல்' இரண்டும்- அசைகள்; முதலதை ஏதுப்பொருளதாகக் கொள்ளினுமாம். 'இன்பம் எனக்கெனைத்தாற் கூறு' என்பது, 'இதில் இன்பஞ் சிறிது மில்லை' என்பதை விளக்கி நின்றது. எனைத்து- எத்தனைத்து என்பதன் மரூஉ. ஒரு துச்சாரியை முன்னிலைப்படுத்தி இங்ஙனம் கூறியது, அத்தகையினர் எல்லோர்க்கும் கூறியதாகும். இதனால் அவர் அத்தீச்செயலை விடல் வேண்டுமென்பது பெறப்படும். (ச)

85. *செம்மை யொன்றின்றிச் சிறியா ரினத்தராய்க்*
கொம்மை வரிமுலையா டோண்மரீஇ- உம்மை
வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே யிம்மை
அலியாகி யாடியுண் பார்.

(இ-ள்.) உம்மை- முற்பிறப்பில், செம்மை ஒன்று இன்றி- நற்குணம் சிறிதுமில்லாமல், சிறியார் இனத்தர் ஆய்- கீழ்மக்களின் கூட்டமுடையவராய், பிறர்மனை- அன்னியருடைய மனையாளாகிய, கொம்மை- திரட்சியும், வரி- சுணங்கிரேகையும், (பொருந்திய), முலையாள்- தனங்களை யுடையவளது, தோள்- தோள்களை, (அவள் தமக்கு இணங்காதபோதும்), வலியால்- (தம்முடைய) வல்லமையினாலே, (துராக்கிருதமாகவோ, அவட்குப் பொருள் கொடுத்து அவளை இணங்குவித்தோ), மரீஇ- சேர்ந்து, (மகிழ்ச்சியுற்றி

ருந்து), மேல்- அதன்மேல், சென்றாரே - (அவ்வாழ்வை விட்டு மரணமடைந்து) போனவரே, இம்மை- இப்பிறப் பில், அலி ஆகி- நபும்சகராய், ஆடி- கூத்தாடி, (பிச்சை வாங்கி), உண்பார் - உண்டு ஜீவிப்பாராவர்; எ-று.

முற்பிறப்பில் நற்குணம் சிறிதுமில்லாமல், தீச் செய்கையுடைய சிறியாரோடு கூடித் தம்முடைய வல்லமை யினாலே துராக்கிருதமாகப் பிறன்மனையாளைக் கற்பழித்து இறந்துபோனவரே இப்பிறப்பில் அலிகளாய்ப் பிறந்து கூத் தாடிப் பிச்சை யேற்றுண்டு சீவிப்பவர் என்பது இதன் கருத்து.

'கொம்மை வரிமுலையாள் தோள்மரீஇ.... வலியாற் பிறர்மனை மேற்சென்றார்' என்பதற்கு, கொம்மை வரிமுலை யாளின் தோளின் சேர்க்கையையே (மனத்திற்) கொண்டு (அதாவது அத்தகைய பெண்ணையே சேரவேண்டுமென்று நினைத்து) அதன் பொருட்டு அச்சிறப்புக்களையுடைய பிறர் மனையாளிடம், தமக்குள்ள வலிமையால் அஞ்சாமல் சென்றவர்கள்' என்று பொருளுரைத்தலுமொன்று. 'மேற் சென்றார்' என்பதற்கு, (தங்களுடைய வல்லமையினாலே பிறர் மனையாளைக் கற்பழித்து அவர்களையும் அடக்கி அவர்களுக்கு) மேற்பட்டு அகங்கரித்து நடந்தவர்கள்' எனப் பொருள்கூறினும் அமையும்; இன்னும் இதற்கு, 'பிறர்மனை யாள் தோள்மரீஇ அவர் தம்மைக் கண்டு சினந்தவிடத்துத் தமக்குள்ள வலிமையினாலே அஞ்சாது அவர்மீது போருக் கெழுந்தார்' எனப் பொருளுரைத்தலுமொன்று.

உடற்கட்டும், பணச்செருக்குமுடைய சிலருக்குத் துர்க்குணமதிகரிக்கும்; அங்ஙனம் தீக்குணம் மிகவே உலகத் தில் இளமையும் அழகுமுடைய பெண்களின் தோள் களையே சேரவேண்டுமென்னும் துராசை மிகும். அதனால் அவர்கள் வனப்புள்ள பிறர்மனையாளைக் கண்டவிடத்துத் தமக்குள்ள வலிமையால், அவர்க்கஞ்சாமல் அவளிடம் செல்வர்; அவள் தமக்கிணங்காவிடினும், அவளைச்

சார்ந்தோர் தம்மோடெதிர்ப்பினும் அவர்களை அடக்கி அவளுடைய கற்பைக் கெடுத்து அகங்கரித்து அகங்களித்துத் திரிவர்; அல்லது அவர்க்குப் பணங்கொடுத்தேனும் அவர்தம் நோக்கத்திற்கிணங்குமாறு செய்து, அத்தூர்த்த காரியத்தைப் புரிந்து திரிவர். இவர்கள் இங்ஙனம் எவ்வழியினாலேனும் பிறரை அடக்கி, அவர் மனைவியர் கற்பினைக் கெடுத்துத் திரியினும் இறந்தபின் அப்பாவத்தால் பலரும் தம்மைப் பார்த்து இகழ்ந்து சிரிக்கும்படி ஆணும் பெண்ணுமற்ற அலியாய் மறுஜன்மத்திற் பிறந்த கூத்தாடிப் பிச்சையெடுத் துண்டு வாழ்வர். உலகத்தில் இவ்வடிவம் பெற்றாரனை வரும் இப்பாவம் புரிந்தோரேயாவர். ஆதலின், ''வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே இம்மை அலியாகி ஆடி யுண்பார்'' என்றார் முனிவர்.

செம்மை - செவ்விய குணம்; அஃதிங்கு நடு நிலைமையை யுணர்த்தி நின்றது; நடு நிலைமையாவது- ஒருவன், ''நம்மனையாளின் கற்பைப்போலவே, பிறன் மனையாளின் கற்பும் பாதுகாத்தற் குரியதே'' என்று பார பக்ஷமின்றித் தன் காரியத்தைப்போலப் பிறன்காரியத்தையும் கருதுதல். சிறியார்- திருக்குறள் 46-ஆம் அதிகாரத் தொடக் கத்தில் பரிமேலாகர் குறிப்பிட்ட, நல்லதனலனும், தீயதன் றீமையும் இல்லென்போரும், விடரும், தூர்த்தரும், நடரு மாவர். இவருள் 'நல்லதனலனும் தீயதன்றீமையும் இல் லென்போரும்' என்பார் புறநானூறு-29-ல் கூறப்பட்டவர்; இவர் நன்மை தீமையுணராதவர், விடர்- உயர்ந்த அறி வில்லாத இளைஞர், தூர்த்தர்- காமுகர்., நடர்- நடிப்புக்காரர்;. இனி, சிலப்பதிகாரம் 16-வது கொலைக்களகாதை-63, 64- ஆம் அடிகளில், ''வறுமொழி யாளரொடு வம்பப் பரத்த ரொடு, குறுமொழிக் கோட்டி....'' என்று கோவலனாற் கூறப் பட்டவராகக் குறிக்கப்பட்டிருக்கும், வறுமொழியாளர், வம்பப்பரத்தர், குறுமொழிக் கோட்டியார் என்போருமாவர்; வறுமொழியாளர் - பயனிலகூறுவோர். வம்பப்பரத்தர்- புதிய காம நுகர்ச்சியை விரும்பும் காமுகர், அல்லது

பரத்தையை நுகர்வோர்; குறுமொழிக்கேட்டி- (பிறரை நிந்தித்துக் கூறுதலாகிய) சிறு சொல்லையுடைய கூட்டத்தார். கொம்மை - பருமை, இளமை, அழகு, வன்மை யென்னும் பொருள்களையும் தரும். வரி- தொய்யிலில் எழுதப்படும் இரேகையெனினுமாம். மருவி- என்னும் சொல் மரீஇ' என விகாரப்பட்டு அளபெடுத்தது; இது சொல்லிசையளபெடை யெனப்படும். 'உம்மைச் சென்றார்' என இயைக்க. 'பிறர் மனை மேற்சென்றார்' என்பது, ''அறன்கடை நின்றா ருளெல்லாம் பிறன்கடை, நின்றாரிற் பேதையா ரில்'' என்னும் (திருக்குறள்-142-ஆம்) செய்யுளில் 'நின்றார்' என்றதுபோல இடக்கரடக்கல். அவி - ஆணுறுப்பு மிகுந்து பெண்ணுறுப்புக் குறைந்த பிறவி. இது ஆண்பாலாக வழங் கப்படும்; பெண்ணுறுப்பு மிக்கு ஆணுறுப்புக் குறைந்த பிறவி பேடி யெனப்படும்; இது பெண்பாலாகக் கொள்ளப் படும்; பேடி என்பது இரண்டற்கும் பொது. 'கொம்மைவரு' என்றும் பாடப்பபதமுண்டு. இப்பாடங் கொள்ளுமிடத்து வரு என்பதற்கு 'வளர்கின்ற' எனப் பொருளுரைத்தல் வேண்டும்.

(ரு)

86. *பல்லா ரறியப் பறையறைந்து நாட் கேட்டுக்*
கல்யாணஞ் செய்து கடிபுக்க- மெல்லியற்
காதன் மனையாளு மில்லாளா வென்னொருவன்
ஏதின் மனையாளை நோக்கு.

(இ-ள்.) ஒருவன்- ஒரு மனிதன், நாள் கேட்டு- (கணிதனிடம் மணத்திற்குரிய) நல்லநாளை விசாரித்து, (அந்நாளில்), பல்லார் அறிய- (அச்சிறப்பினைப்) பலரும அறியும்படி, பறை அறைந்து - கலியாண வாத்தியங்களை முழக்குவித்து, கல்யாணம் செய்து, மணவினை முடிக்க, (அதனால்), கடிபுக்க - (தன்) காவலிற் புகுந்த, (தன் பாது காப்புக் குட்பட்ட), மெல் இயல் - மெல்லிய தன்மையை யும், காதல்- விருப்பத்தையும், (உடைய), மனையாளும்- மனைவியும், இல்லாள்ஆ- (தன்) வீட்டி லிருப்பவளாக,

(வீட்டிலிருப்ப), ஏதில் மனையாளை- அயலானுடைய மனைவியை, நோக்கு - (விரும்பிப்) பார்பபது, என் - யாது காரண முடையதோ? (எக்காரணத்தால் அவன் பார்க்கின் றானோ); எ-று.

மனைவியில்லாதவர், உள்ளவர் ஆகிய எல்லோர்க் குமே பிறர் மனை நோக்குதல் எப்பொழுதும் தீமைபயப்ப தாகும்; அங்ஙனமிருந்தும் அவ்விரு வகுப்பினருமே இப் பாவத்தைச் செய்கின்றனர். ஆதலின், அத்தகையினர் எல்லோர்க்குமே அது கூடாதென்னும் நீதியை ஜைன முனிவர் கூறத்தொடங்கி அவர்களுட் சிலர், சில செய்யுட் களால், எல்லோரும், பிறர்மனை விரும்புவதின் தீங்கையும், அதனால் இன்பமில்லையென்பதையும் விளக்கினர்; இச்செய்யுளை இயற்றியவர், மனைவியுள்ளவர், அச்சமின்றி இன்பமனுபவிக்கக்கூடிய மனைவியர் தம்மிடத்தேயிருக்க, அச்சமிகுந்த பிறர்மனை நயத்தலைக்கொள்வது பயனற்ற செய்கையென்பதையும், அதனால் தீமையுண்டாமென்பதை யும் விளக்கினார். ''காதல் மனையாளும் இல்லாளா என்னொருவன், ஏதில் மனையாளை நோக்கு'' என்பது, ''(மனைவியில்லாதவர் தாம், பிறர்மனை விரும்புதல் தீமை பயப்பதாயிருந்தும், அதனை மறந்து 'எங்கட்கு மனைவி யரில்லாததால் எம்மனத்திலெழும் போக இச்சையை நிறைவேற்றிக் கொள்ள நாங்கள் அயலார்- மனைவியை விரும்புகின்றோம்' என்று மூடத்தனமான சமாதானத்தை நினைத்தும் சொல்லிக் கொண்டும் அக்காரியத்தைச் செய்கின்றனர்) மனைவியுள்ள ஒருவன், அச்சமற்று இன்பந் துய்க்கக்கூடிய காதல் மனையாள் வீட்டிலிருக்க, வேறு எதை யுத்தேசித்து அச்சமுந் தீமையுமுள்ள பிறர் மனையாளை நோக்குதலை விரும்புகிறான்'' என்னும் பொருளைத் தரும். இதனால் இவனையும், மனைவியில்லாமல் பிறன்மனை நோக்குவாரையும் இழித்துக்கூறியது பெறப்படும். சிலர், இச்செய்யுளில், 'மனைவியுள்ளார் பிறர்மனை விரும்புதல் தக்கதன்று' என்று கூறியதால் மனைவியில்லாதவர் அதனைச்

செய்யலாமென்று குதர்க்க புத்தியால் கருதுதல் கூடும்; அன்னார் இங்குக் கூறியவற்றை ஆராய்வாராயின் அது தவறென்பது அவர்க்கு விளங்கும். இன்னும் இச்செய்யுளின் உண்மைக்கருத்து: ''மனிதர் எல்லோருமே பிறர்மனை விரும்புவது பாவச்செயல், அவர்களுள் மனைவியுள்ளார் அயலான் மனையாளை நினைத்தல் மிகுந்த பாவச்செயல்'' என்பதேயாகும்; இவர்க்குப் பிறர்மனை விரும்பும் பாவத் தோடு, தன் மனையாள் வயிறெரியச் செய்த பாவமும் சேர்தலால் இவர்கள் மிகைப்பட்ட பாவமுடையவராவர்; இங்ஙனம் இவர்கள் மிகுந்த பாவிகளென்பதை,

''வம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து
பிறன்பொரு டாரமே யெண்ணி
நம்பினா ரிறந்தா னமன்றமர் பற்றி
யெற்றிவைத் தெரியெழு கின்ற
செம்பினா லியன்ற பாவையைப் பாவி
தழுவென மொழிவதற் கஞ்சி
நம்பனே வந்துன் னடியிணை பணிந்தே
னைமிசா ரணியத்து ளெந்தாய்''

என்னும் திருமங்கையாழ்வார் அருளிய (பெரிய திருமொழி. 1ஆம் பத்து, 4ஆம்) பாசுரமும் உணர்த்துவதாகும். 'கடிபுக்க' என்பதற்கு 'கல்யாணபந்தத்திற் கட்டுப்பட்ட' என்றும் பொருளுரைக்கலாம். மெல் இயல்- பெண்களுக்குரிய மிருதுத்தன்மை. பிறர் மனையாளிடம் செல்வோன், தன் மனைவியிடம் விருப்பமின்றியே செல்வான்; அங்ஙனம் செல்லினும் அவன் மனையாள் அவன்மீது விருப்பமுடைய வளாகவே யிருப்பாள்; ஆதலின் அவளை, 'காதல் மனையாள்' என்றார் ஆசிரியர். 'மனையாளும் இல்லாளர்' என்பதற்கு 'மனைவியும் தனக்கு உரிமையில்லாதவளாகும் படி (அவளைவிட்டு) எனப் பொருளுரைப்பாருமுளர்; அஃதத்துணைச் சிறப்பன்று. அறைந்து- தன்வினை வினை யெச்சம்; இஃதிங்குப் பிறவினைப்பொருளில் வந்தது;

இதற்கு 'ஒருவன்' என்பதை ஏவுதற் கருத்தாவாகக் கொள்ளின் பொருள்நேராம். கடி- காவல், மணம் என்பவற்றை உணர்த்தும் உரிச்சொல்; ''கடியென் கிளவி.........'' என்னும் (தொல்-சொல்-உரி-87-ஆம்) சூத்திரம் பார்க்க. கல்யாணம்- வடசொல். 'மனையாளும்' என்பதிலுள்ள உம்மை- உயர்வு சிறப்புப் பொருளது. என்- எவன் என்னும் வினாவினைக் குறிப்பு முற்றின் விகாரம்; 'எவன்' என்பதில் இடைநின்ற வகரவுயிர்மெய் குறைந்தது. ஏதில் - அயல்; இது பண்பாகு பெயராய் அயலானை உணர்த்தி நின்றது. செயவென்னெச்சம் செய்தெனெச்சமாகத் திரிந்து 'செய்து' என வந்தது; ''சொற்றிரியினும் பொருள் திரியா வினைக்குறை'' என்னும் (நன்-சொல்-வினை-27-ஆம்) சூத்திரம் பார்க்க. நோக்கு-முதனிலைத் தொழிற்பெயர்; விகுதி கெட்ட தொழிற்பெயரெனினுமாம். இந் 'நோக்கு' என்பது, 'நோக்கனோக்கம்' எனப்படும்; நோக்கு+ அல்+ நோக்கம்= நோக்க னோக்கமாவது கட்பார்வை யல்லாத பார்வை: அதாவது, மனப் பார்வை (மனத்திலெண்ணுதல்); இவ்விவரம் சீவக சிந்தாமணி உரையில் நச்சினார்க்கினியரால் சிலவிடங்களிற் காட்டப்பட்டுளது. பிறர்மனையாளைக் கூடுதலை, இங்ஙனம், 'நோக்கு (மனத்தினுட்கொள்ளல்'), என்றார் ஆசிரியர்; இங்ஙனங்கூறியது இடக்கரடக்கலின் பாற்படும்;

''பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ வான்ற வொழுக்கு''

என்னும் (திருக்-148-ஆம்) செய்யுளில், 'நோக்காத' என்பது இக் கருத்துடனமைந்திருத்தலும், பரிமேலழகர் அதற்கு, 'உட்கொள்ளாத' என்று பொருள்கூறி யிருத்தலும் காண்க. (சூ)

87. *அம்ப லயலெடுப்ப வஞ்சித் தமர்பரீஇ*
வம்பலன் பெண்மரீஇ மைந்துற்று-நம்பு
நிலைமையி னெஞ்சத்தான் றுப்புரவு பாம்பின்
தலைநக்கி யன்ன துடைத்து.

(இ-ள்.) அயல்- அயலார், அம்பல் எடுப்ப- (தன் செய்கையை உணர்ந்து தன்னைப்) பழித்தலைச்செய்ய, தமர்- உறவினர், அஞ்சி- (தன் தீச்செயல் கண்டு 'இவனுக்கெசன்ன தீங்கு நேருமோ' என்று) பயந்து, பரீஇ- வருந்தவும், வம்பலன்- விரோதமில்லாதவனாகிய சினேகிதனுடைய, பெண்- மனையாளை, மரீஇ - சேர்ந்து, மைந்து உற்று- களிப் படைந்து, (அதனாலே), நம்பும் - (நண்பராயினார், தான் நல்லவெனென்று தன்னை) நம்பத்தக்க, நிலைமை இல்- நிலைமையில்லாத, நெஞ்சத்தான்- மனம் பொருந்திய வனுடைய, துப்புரவு- அச்சிற்றின்ப நுகர்ச்சியானது, (அனு பவிக்குங் காலத்திலேயே துன்பத்தைத் தருவதாதலின்), பாம்பின்- பாம்பினது, தலை- தலையை, நக்கி - அன்னது உடைத்து- நக்கினதைப்போன்ற தன்மையை உடையதாகும்; எ-று.

அயலார் தூற்றவும், சுற்றத்தார் அஞ்சி வருந்தவும், தன்னை நம்பியிருக்கும் நண்பனுடைய மனையாளைக் கூடிக்களித்து, நேயர், தன்னை நல்லவனென்று நம்பத்தக்க தன்மையில்லாத நெஞ்சத்தோடு கூடி யிருக்கின்றவனுடைய சிற்றின்ப அனுபவமானது, பாம்பின் தலையை நக்கிய தைப்போலத் தீமை பயக்கத்தக்கதாம் என்பது இதன் கருத்து.

ஒருவன், தான் நல்லவனென்று தன்னை நம்பி யிருக்கும் நண்பனுடைய மனையாளைச் சேர்தலைக் கொண்டிருப்பானாயின், அவனைப் பார்த்த அயலார், 'இவன், தன் நண்பனுக்குத் துரோகஞ்செய்யும் பாவி' என்று பழிப்பார்கள். அவனுக்கு அச்செயல் எப்பொழுதும் தீமை பயக்கக்கூடியதாயிருத்தலின், அவனுடைய சுற்றத்தார் அவனடையும் அத்தகைய தீங்கு குறித்து வருந்துவர். அவன் தன்னை நம்பிய நண்பனுக்குத் துரோகஞ்செய்யும் வஞ்சக னாதலின், பிறரால் நம்பத்தகாதவனாவன்; அது பற்றியே அவன், ''நம்பும் நிலைமையில் நெஞ்சத்தான்'' எனப் பட்டான். பாம்பின்தலை பளப்பளப்பா யிருக்கிற தென்று

அதனை ஒருவன் நக்கினால், உடனே பாம்பு சீறி அவன் முகத்திற் கடிக்கும்; அதன் விடத்தால் அவன் மடிவான். இச்செயல் போலவே, நண்பன் மனைவி அழகுடையவளா யிருக்கின்றாளென்று ஒருவன் அவளை விரும்பிச் சேர்வா னாயின், அச்சேர்க்கையானது விரைவில் அவனுக்கு அழிவை யுண்டாக்கிவிடும். ஆதலின், ஒருவன் பாம்பின் தலையை நக்குந்தொழில் இதற்குவமையாகக் கூறப்பட்டது; இங்ஙனங் கூறியது உவமையணி. தம்மை நம்பிய நேயரின் இல் லாளைக் கெடுப்பவர் அழிந்தவரே யாவரென்பதை,

> *''விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்*
> *றீமை புரிந்தொழுகு வார்''*

என்னும் (திருக்-143-ஆம்) செய்யுளும் விளக்கும். அயல்- வேற்றுமை; இஃதாகுபெயராய் இதனை யுடையாரை யுணர்த்திற்று. அம்பல்- சொல் வெளிப்படாமல் முணு முணுத்து வாய்க்குட்பேசி ஒருவரைப் பழித்தல்; இச் சொல்லின் இனமாகிய, 'அலர்' என்பதும் பழித்தலை யுணத்துவதே; எனினும், அது, ஒருவனுடைய இழிவைப் பலரறியுமாறு வெளிப்படையாகச் சொல்லி அவனைத் தூற்று தலாம். இவ்விருசொற்களின் பொருள்களும் இங்ஙனம் வெவ்வேறு பாகுபாடுடையன வென்பதை, தொல் காப்பியம்- களவியல்-48-ஆம் சூத்திரம், நச்சினார்க்கினியர் உரை யானும், இறையனாரகப்பொருள் 22- ஆம் சூத்திர வுரை யானுமுணர்க. 'பரிய' என்னும் செயவெனெச்சம், 'பரிந்து' என்னும் செய்தெனெச்சமாய்த் திரிந்து, பரீஇ' என அள பெடுத்து நின்றது; இது சொல்லிசை யளபெடை யெனப் படும்; 'மரீஇ' என்பது மதுவே. இச்செய்யுளில், 'பெண்' என்றது, 'மனைவி' என்ற பொருளில் நின்றது. 'மகள்' என்பது, 'மனைவி' என்ற பொருளிலும், 'மகன்' என்பது, 'கணவன்' என்ற பொருளிலும் அமைதல் போல இஃதமைந்த தென்க. இவை இப்பொருளனவாதல்,

''புண்டோய்த் தெடுத்த பொருவேலெனச்
சேந்துநீண்ட
கண்போன்ற மாமன்கள் கண்மணிப் பாவையன்ன
பெண்பாலமிர்தி னலம்பெற்றதும் பொறப்பச்
செங்கோல்
தண்பான் மதிதோய் குடைதண்ணிழற்பாயவாறும்''

என்னும் (சீவகசிந்தாமணி- பதிகம்-26-ஆம்) செய்யுளில், 'மாமன் மகள்' என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க் கினியர், 'மாமன் மனைவி' என்று பொருள் கூறியிருத்த லானும், சிலப்பதிகாரம் - கொலைக்களக் காதையில், ''நோக வுண்டோ நும்மகனார்க்கினி'' எனவரும் 17-ஆம் அடியின் உரையில், அடியார்க்கு நல்லார், ''நும் மகனார்க்கு- மக னென்பது ஆண்பாற்பெயர்; நும்முடைய புருடனுக்கென்ப தாயிற்று; 'நினக்கிவன் மகனாய்த் தோன்றியதூஉ, மனக் கிளியாற்கு நீ மகளாயதூஉம், பண்டும் பண்டும் பல பிறப்புள வாற், கண்ட பிறவியேயல்ல காரிகை' (மணிமே.21: 29-32) என்றார் மணிமேகலையிலும்; 'கண்போன்ற மாமன்மகள்' என்றார் சிந்தாமணியிலும்'' என உரைப்பவனவற்றாலும் உணரப்படும். இவ்வுரையிற் காட்டப்பட்டுள்ள மணி மேகலை அடிகளுள், 'மகனாய்' என்பது 'கணவனாய்' என் றும், 'மகளாயதூஉம்' என்பது, 'மனைவியானதும்' என்றும் பொருள் பயந்துநின்றன. (எ)

88. பரவா வெளிப்படாப் பல்லோர்கட் டங்கா
உரவோர்கட் காமநோ யோ ஓ கொடிதே
விரவாரு ணாணுப் படலஞ்சி யாது
முரையாதுள் ளாறி விடும்.

(இ-ள்.) காமநோய்- காமமென்னும் வியாதியானது, உரவோர்கண்- அறிஞரிடத்தும், (சில பெண்களால் தோன்றி விட்டால்), பரவா - அதிகரிக்காமலும், வெளிப்படா- (மனத்தைவிட்டு) வெளியாகாமலும், பல்லோர்கண் தங்கா-

(அவர் குறித்த சில பெண்களையன்றி மற்ற) பலரிடத்தும் சென்று தங்காமலும், (அவர் விரும்பியும்), விரவாருள்- (அவ்விருப்பந்தீரச்) சேராமலிருக்கின்ற அப்பெண்க ளிடத்தே, நாணுப்படல் அஞ்சி- வெட்கப்படுவதற்குப் பயந்து, யாதும் உரையாது- (தங்கள் விருப்பத்தை வெளிப் படுத்தும் வார்த்தை) எதுவும் சொல்லாமல், (அவர் மிக வருந்தி இருக்குமாறு செய்து), உள்- (அவர்களின்) மனதிற் குள்ளேயே, ஆறிவிடும் - துணிந்துவிடும், (ஆதலின், அது), ஓஒ கொடிது- மிகவுங் கொடியது; எ-று.

தீயக்காரியங்களை விரும்பாத அறிஞரிடத்தும் சில பெண்களால் காம முண்டாகிவிட்டால், அதிகரிக்காமலும், வெளிப்படாமலும், அவர் விரும்பிய சிலரையன்றி மற்ற பலரிடத்தும் சென்று தங்காமலும், அவர் விரும்பியும் சேராம லிருக்கின்ற அப்பெண்களிடம் வெட்கப்படுவதற்குப் பயந்து தங்கள் ஆசையை வெளிப்படுத்தும் வார்த்தையெதுவும் சொல்லாமல் வருந்தியிருக்குமாறு செய்து, அவர்களின் மனத்திற்குள்ளேயே தணிந்துவிடும்; ஆதலின் அது மிகச் கொடிது என்பது இதன் கருத்து.

அறிவற்றாரே காமவயப்பட்டுச் செய்யத்தகாதன செய்து துன்புறுவர்; அறிஞர் தீச்செயல்களை விரும்பார்; எனினும் அவர்கள், சில பெண்களைப் பார்ப்பதனால் அவர் களிடம் காமம் உற்பத்தியாகி விடுமானால், அது பரவாதபடி, அவர்கள் அறிவால் அதனைத் தடுப்பார்; அதனால் அஃததி கரிக்காமலிருக்கும்; இன்னும் அவர்கள், அது வெளித்தோற்றி னால் தமக்கு மானக்கேடுண்டாகுமென்று பகிரங்கமாகாத படி அதனை மனத்தினுள் அடக்குவர்; அதனால் அது வெளிப் படாது. அவர்கட்கு ஒருசமயம் அவ்வாறு சில பெண்களி டத்து விருப்பமுண்டானாலும் அவ்விருப்பம் அவ்வள விலேயே நிற்கும்படி அவர்கள் அறிவால் அதனைத் தடுத்துக் கொள்வர்; அதனால், அவர்களிடத்துண்டான அந்தக்காமம், மற்ற தூர்த்தரின் ஆசை செல்வது போல் பல பெண்களிடத்

தும் செல்லமாட்டாது. அவர்கள் சில பெண்கள்மீது மோகங் கொண்டாலும் முயன்று அவர்களோடு கலக்கமாட்டார்கள்; அங்ஙனம் சேராதவரிடம் தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்க நெருங்கினால் அவர்கட்கு மிக்க நாணமுண்டாகும்; அவ்வெட்கத்திற்கஞ்சி அவர்கள் அம்மாதரிடம் அதைப்பற்றி எந்தவார்த்தையும் பேசமாட்டார்கள். அவர்களிடமுண்டா குங் காமம் இத்தன்மையதெனினும், அவர்கள் தான் பரவாமலும், வெளிப்படாமலும், பல்லோர்கட் டங்காமலும் தன்னை யடக்குவதாலும், வெட்கத்திற்கஞ்சி அப்பெண் களோடு பேசாமலிருப்பதாலும் அவர்க்கு மிக்க வேதனை யையே செய்து கொண்டி ருந்து பின் தானே தணியும். இங்ஙனம் இது அறிஞர்க்கும் துன்பம் விளைவிக்கக்கூடியதா யிருத்தலினால் இது கொடி தெனப்பட்டது. அறிஞரிடத்தும் இது தோன்றினால் துன்பத்தை யுண்டாக்கிவிடும் என்றத னால், அறிஞர் மனத்தில் சிறிதும் இதற்கு இடங்கொடுக்க லாகா தென்பது பெறப்படும். இங்ஙனம் காமத்தை அகற்ற வேண்டுமென்பது குறிக்கப்பட்டதனால் பிறர்மனை நயவாமை கூறியதாகும்.

இனி, 'விரவாருள் நாணுப்படலஞ்சி' என்பதற்கு, 'அக்காமநோய் கலவாத பரிசுத்த உள்ளமுடையவரிடத்தில் வெட்கப்படுதற்கு அஞ்சி' என்றேனும், 'தம்மோடு கலந்துறவு கொள்ளாத வேற்றோரிடத்தில் வெட்கப்படுதற் குப் பயந்து' என்றேனும் பொருள் கூறலாம். ''அறிஞர் தவறுதலாகச் சில மாதர்பால்கொண்ட காமம் அதனை அகற்றிய பரிசுத்தர் கூட்டத்திலேனும், அன்னியரிடத்தேனும் வெளிப்படின் அக்கூட்டத்தார் அக்காமமுடையாரைப் பரிகசிப்பர்; அதனால் அவர்க்கு நாணமுண்டாகும்; ஆதலால் அவர் அதற்கஞ்சுவர். இப்பொருள்கள் கொள்ளுமிடத்து, 'யாது முரையாது' என்பதற்கு அவர்கள் அது வெளியாம்படி அக்காமத்தைப்பற்றிய எந்த வார்த்தையையும் அம்மாதரிடத் தேனும், மற்றவரிடத்தேனும் பேசாதிருக்கும்படி'' என்று பொருள் கூறுதல் வேண்டும். விரவுதல்- கலத்தல்.

பரவா, வெளிப்படா, தங்கா என்பன- ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சங்கள்; இனி, இவற்றை, பரவாது, வெளிப்படாது, தங்காது என்ற எதிர்மறை யொன்றன்பால் முற்றுக்கள் ஈறுகெட்டு நின்றனவெனக் கொள்ளினுமாம்; இங்ஙனங் கொள்ளுமிடத்து வெளிப்படா' என்பதற்குப்பின், 'பல்லோர்' என்பது புணருமிடத்து, வலிமிகாது இயல் பாகும்; ஆதலின், 'வெளிப்படா பல்லோர்' எனப் பாட பேதங் கொள்ள வேண்டும். 'யாது முரையாது' என்பதற்கு, 'பிறர் எதுவுங் கூறிப்பழிக்க இடமில்லாதபடி' எனப் பொருளுரைப்பினுமாம். உரம்- அறிவு; அதனையுடையோர்- உரவோர். ஓ- சிறப்புப் பொருளது; இதிலுள்ள அளபெடை- செய்யுளிசை நிறைக்க வந்தது. விரவாருள்- என்பதில், உள்- ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. 'உரவோர்கண்' என்பதில், உயர்வு சிறப்பும்மை தொக்கது. காமம் தற்சம வடமொழி. ஏ- தேற்றம். 'நாணு' என்பதில், உ- சாரியை. (அ)

89. *அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறும்*
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்- வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காம
மவற்றினு மஞ்சப் படும்.

(இ-ள்.) அம்பும்- பானமும், அழலும்- நெருப்பும், அவிர் - விளங்குகின்ற, கதிர் - கிரணங்களையுடைய, ஞாயிறும்- சூரியனும், (மனிதர் மீது பட்டால் அவரைச் சுட்டு விடக்கூடியனவாம்; அங்ஙனம்; அவைபட்டு), வெம்பி- வெப்பங்கொண்டு, சுடினும்- (அவரைச்) சுட்டாலும், புறம்- புறமாகிய அவருடம்பையே, சுடும்- சுடுவன வாம், காமம்- பெண்ணாசையோ, (மனிதர் உள்ளத்தே தோன்றிவிடின், அந்த மனத்தையே கவலைக்குள்ளாக்கிச் சுட்டுவிடும் அங்ஙனம்), வெம்பி- வெதும்பி, மனத்தை- உள்ளமாகிய நெஞ்சத்தை, கவற்றி- கவலைப்படுத்தி, சுடுதலால்- எரித்த லால், அவற்றினும்- அந்த அம்பு முதலியவற்றைக் காட்டி னும், (அதிகமாக), அஞ்சப்படும்- அஞ்சத்தக்கதாம்; எ-று.

அம்பு, நெருப்பு முதலியவை மனிதர் உடம்பில் பட்டமாத்திரத்தில் அவர்க்கு வேதனை செய்வனவெனினும், உடம்பை மட்டும் சுடுவதால், அவ்வேதனை, சூடுபட்ட போது மாத்திரம் மனத்திற்றோன்றி யிருந்து பின்னர்த் தணிந்துவிடும். அதனால் மனத்திற்கு அதிகநேரம் வேதனை யிராது, பெண்ணாசையோ, ஒருவர் மனத்திலுண்டாய் விட்டால், அந்த உள்ளத்தைக் கவலைக்குள்ளாக்கி எப் பொழுதும் சுட்டுக்கொண்டே யிருக்கும்; மனம் அங்ஙனம் காமவெப்பத்தால் சுடப்படுவதால் உடம்பும் எப்பொழுதும் வெதும்பி அந்த மனத்திற்கு வேதனை யதிகரித்தற்கேதுவா யிருந்துகொண்டிருக்கும். ஆதலின், அக்காமமானது, அவற்றைக்காட்டினும் துயர்செய்வதும், அஞ்சத்தக்கதுமாம்.

உடம்பைச் சுடும் அம்பு முதலியவை- உபமானப் பொருள்கள் மனத்தைச் சுடுங் காமம்- உபமேயப்பொருள். இவ்விரண்டின் தன்மையிலும் வேற்றுமை தோன்ற இச் செய்யுள் கூறப்பட்டிருத்தலின் வேற்றுமை யணியின்பாற் படும். அம்பு, அழல், ஞாயிறு என்பவற்றிலுள்ள உம்மைகள்- எண்ணுப்பொருளன. சுடினும் என்பதன், உம்மை- சிறப்புப் பொருளது. வெம்பி- வினையெச்சம். ஞாயிறு- நாயிறு; இது முதற்போலி. கவற்றி- பிறவினை வினையெச்சம்; இதில் ‘கவல்’ என்பதன் பிறவினையாகிய, ‘கவற்று’ என்பது பகுதி; இதில், று- பிறவினை விகுதி. ‘காமம்’ என்பதை இரண்டாம் வேற்றுமையாகக் கொண்டால், ‘அஞ்சப்படும்’ என்பது ஒருவகை வியங்கோள் வினைமுற்றாய், ‘அஞ்சவேண்டும்’ என்ற பொருளைத்தரும். இச்செய்யுளில் ஈற்றுச்சீரன்றி ஏனையவை ஆசிரிய வுரிச்சீர்களாகிய இயற்சீர்களாம்; ஈற்றிலுள்ளது ஓரசைச் சீராம்.

இதில், காமம், அம்பு முதலியவற்றினும் அஞ்சத் தக்கதாகும் என்றதனால் அதற்கு மனத்தில் இடங்கொடுத்த லாகாதென்பது பெறப்படும். அதனால், பிறர்மனை நயத்தல் கூடாதென்பது தானே அமையும். (கூ)

90. *ஊரு ளெழுந்த வுருகெழு செந்தீக்கு*
நீருட் குளித்து முயலாகு- நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
ஒளிப்பினுங் காமஞ் சுடும்.

(இ-ள்.) ஊருள்- ஓர் ஊர்நடுவில், (இருக்கும் ஒருவன் வெளியேறி ஓடமுடியாதபடி சுற்றிலும் நெருப்பு வளைந்து பற்றிக் கொண்டால்), எழுந்த- அவ்வாறு பற்றி மேலோங்கிய, உருகெழு- அச்சம் விளங்காநின்ற, (அதாவது அச்சத்தோடுகூடிய), செம் தீக்கு - சிவந்த நெருப்புக்கு, (அவன் தப்பிப்பிழைத்தற்கு உயர்ந்த மலை சமீபத்திலிருப்பினும், அதில் வருந்தியேற முயலாமல் ஆங்குள்ள சிறு குளத்திலோ, கிணற்றிலோ, வேறெவற்றிலோ இருக்கும்), நீருள்- தண்ணீருக்குள்ளே, குளித்தும்- மூழ்கியும், உயல் ஆகும்- தப்பிப் பிழைத்தல் கூடும், காமம்- காமமாகிய நெருப்பு, (ஒருவன் மனத்தை வளைந்து பற்றிக்கொள்ளுமானால், அவன்), நீருள்- அத்தகைய தண்ணீருக்குள், குளிப்பினும்- மூழ்கினாலும், சுடுமே- (நிச்சயமாக அவனைச்) சுட்டுவருத்தும், (அவன் அதற்குப் பயந்தோடி), குன்று ஏறி- (ஆங்குள்ள) மலைமீதிலேறி, ஒளிப்பினும் - ஒளித்துக்கொண்டாலும், காமம்- அக்காமவெப்பமானது, சுடும்- (அவனைச்) சுட்டுத் துன்புறுத்தும்; (ஆதலின், மனிதர், அக்காமத்திற்கு மனத்தில் இடங்கொடுத்தலாகாது); எ-று.

ஓர் ஊரில் அக்கினிப்பற்றிச் சுற்றிலும் வளைந்து கொண்டபோது அதனடுவில் அகப்பட்ட மனிதன், தான் தப்பிக்கொள்வதற்கு அங்கே உயர்ந்த மலையிருப்பினும் அதிலேறாமல் கீழேயிருக்கும் தடாகம், கிணறு முதலியவற்றின் நீரிலும் மூழ்கி அந்நெருப்பின் வெப்பத்துக்குத் தப்பிப் பிழைத்துக் கொள்ளலாம்; அவனைக் காமமென்னும் நெருப்புப்பற்றி வளைந்து கொள்ளுமானால், அவன் அந்நீரில் மூழ்கினும் அது தணியாது அவனைச் சுட்டுவருத்தும்; அந்நீரினும் மிக்க பாதுகாப்பைத் தனக்குச் செய்யும் உயர்ந்த

மலைமீதேறி அவன் ஒளித்துக் கொண்டாலும் அக்காம வெப்பம் அவனை வெதுப்பித் துன்புறுத்தும்; ஆதலின், மனிதர், அக்காமத்திற் கிடங்கொடுத்தலாகாது என்பது இதன் கருத்து.

இதில், நெருப்பு உபமானம், காமம் உபமேயம்; இவ் விரண்டின் செயல்களினும் வேறுபாடு தோன்றக்கூறியது வேற்றுமையணி; இது வடமொழியில் வ்யதிரேகாலங்காரம் எனப்படும்.

ஊரில்பற்றிய நெருப்பின் வெப்பம் நீரால் தணியும், மனிதர்க் குண்டாம் காமவெப்பமானது, அவர்கள் நீரில் குளித்தாலும் தணியாது அவர்களைச் சுடுமென்பதை, ''ஊர்தலைக்கொண்டு கனலுங் கடுந்தீயு, ணீர்பெய்தக்காலே சினந்தணியு மற்றிஃதோ, ஈரமில்கள்வ னுறீஇய காமத்தீ, நீருட்புகினுஞ் சுடும்'' என்னும் (கலி) அடிகளானுமுணர லாம். இன்னும் காமத்தீக் கொடிதென்பதை,

> *''கூலத்தா ருலக மெல்லாங் குளிர்ப்பொடு வெதுப்பு நீங்க*
> *நீலத்தா ரரக்கன் மேனி நெய்யின்றி யெரிந்த தன்றே*
> *காலத்தால் வருவ தொன்றோ காமத்தாற் கனலும் வெந்தீச்*
> *சீலத்தா லவிவ தன்றிச் செய்யத்தா னாவ துண்டோ''*

என்னும் (இரா-ஆர-மாரீ-வ-ப.104) செய்யுளும் விளக்கும். காமத்திற்குக் குன்றேறி யொளித்தல் கூறப்பட்ட குறிப்பு நோக்கி, 'செந்தீக்கு நீருட்குளித்து முயலாகும்' என்பதற்கு முன்னும், 'அவன் தப்பிப் பிழைத்தற்கு மலை சமீபத்திலிருப் பினும் அதில் வருந்தியேற முயலாமல்' என்ற சொற்கள் வரு வித்துரைக்கப்பட்டன. 'நீருட்குளித்தும்' என்பதிலுள்ள உம்மை, குன்றேறி யொளித்தலினும் 'நீருட்குளித்தல் குறைந்ததென்பதைச் சிறப்பித்து நின்றது. உரு- அச்சத்தை விளக்கும் உரிச்சொல்; ''உருவுட்காகும் புரையுயர் பாகும்''

என்னும் (தொல்-சொல்- உரி-4ஆம்) சூத்திரம் பார்க்க; இனி, ‘உருகெழு’ என்பதற்கு, ‘உருவம் விளங்காநின்ற’ எனப் பொருளுரைப்பினுமாம்; அங்ஙனங் கொள்ளுமிடத்து, ‘உரு’ என்பது ரூபமென்னும் வடசொற்றிரிபெனக் கொள்ளப் படும். காமம் தான் சேர்ந்த இடத்தை எரித்து அழிக்கக்கூடிய தாகலின் நெருப்பாக உருவகஞ்செய்யப்பட்டது. ‘உய்யல்’ என்பது தொகுத்தலால், ‘உயல்’ என நின்றது; இது தொழிற் பெயர்; இதில், உய்- பகுதி, அல்- விகுதி.

இச்செய்யுளில் காமத்தின் கொடுமை கூறியதனால் அதனை அகற்றவேண்டு மென்பது விளக்கியதாகும்; அத னால் பிறர்மனை விழைதல் கூடாதென்பதும் தானே அமையும். (கo)

அதிகாரம் 10

ஈகை

ஈகை யென்பது- இல்லறத்திலிருப்போர், வறுமை யினால் தம்மிடம் பொருள்வேண்டி வந்தார்க்கு இல்லை யென்னாமற் கொடுத்தலாம். இவ்வதிகாரம் அதனை விளக்குவதாதலின், இப்பெயர் பெற்றது. இல்லறத்தார்க்குப் பிறர்மனை நயவாமை இம்மையில் நிலைநிற்கும் புகழை யும், மறுமை இன்பத்திற்குதவியாம் புண்ணியத்தையும் விளைவிக்கும்; பிறர்மனை நயத்தல் இம்மையிற் பழியை யும், மறுமையில் நரகதுன்பத்தை யுண்டாக்கத்தக்க பாவத்தையும் விளைவிக்கும். இவற்றைப்போலவே ஈகை இம்மையிற் புகழையும், மறுமையில் இன்பத்திற்குரிய புண்ணியத்தையும், ஈகையின்மை இம்மையிற் பழியையும், மறுமையில் தீககதியடைவதற்கேதுவாம் பாவத்தையும் உண்டாக்குவனவாம். ஆதலின், ஈகை, பிறர்மனை நயவாமையின்பின் வைக்கப்பட்டது. ஈகை- தொழிற்பெயர்; ஈ- பகுதி, கை- தொழிற்பெயர்விகுதி.

91. *இல்லா விடத்து மியைந்த வளவினால்*
உள்ள விடம்போற் பெரிதுவந்து- மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்
கடையாவா மாண்டைக் கதவு.

(இ-ள்) (வறுமைப்பட்டவர் தம்மிடம் எதையேனும் பெறவிரும்பிவந்தால்), இல்லாவிடத்தும்- (தம்மிடத்தே செல்வம்) இல்லாத காலத்திலும், உள்ள இடம்போல்- (செல்வம்) இருக்கின்ற காலத்தில் (வருவார்க்கு மகிழ்ந்து பொருள்கொடுத்தல்) போல, பெரிது உவந்து- (அவர் வருகைக்கு) மிகவும் மகிழ்ந்து, இயைந்த அளவினால் - (தம்மால்) இயன்ற வரையில், மெல்ல- சாந்தமாக, கொடை யொடு- (அவர்க்கு விருப்பமுள்ள பொருளைக்) கொடுத்த லோடு, பட்ட- கூடின, குணன் உடை- நல்ல குணமுள்ள, மாந்தர்க்கு- மனிதர்க்கு, ஆண்டைக்கதவு- அந்த மேலுலகத்தி லுள்ள (பல நற்பதவிகளின்) கதவுகள், (அவர்கள் மறுமை யில் ஆங்குச் செல்லுங்காலத்தில் உட்புகுதற்குத் தடை களாக), அடையாவாம்- மூடப்பட்டிராதனவாகும், (அவர் கள் புகுதற்குத் தடையின்றி அவை திறக்கப்பட்டிருக்கும்); எ-று.

செல்வமில்லாத காலத்தும், தம்மிடம்வரும் யாசகர்க் குத் தம்மால் இயன்றவரை பொருள் கொடுப்போர்க்குச் சுவர்க்கத்திலுள்ள பல நற்பதவிகள் தடையின்றிக் கிடைக்கு மென்பது இதன் கருத்து.

மனிதர், செல்வமில்லாதபோதும் யாசகர்க்கு இயன்ற அளவு பொருள் கொடுக்கவேண்டுமென்பது இங்குக் கூறப் பட்டதனால், உள்ளவிடத்துக் கொடுக்கவேண்டு மெனப்து தானே அமையும். ஒருவன், இரப்பாரைக் கண்டபோது அவர்க்கு முகமலர்ச்சி காட்ட வேண்டும்; அவர் நெருங்கிய பின்னர் சாந்தத்தோடு அவரிடம் இன்மொழிக் கூறிப் பொருள்கொடுத்தல் வேண்டும்; இவை ஈகைக்கு இன்றி யமையாதனவாம். இங்ஙனமின்றி அக்கொடையாளன், இரப்பாரைக் கண்டபோது முகஞ்சுளித்துக் கடுகடுத்துப் பேசி, எதையேனும் விரைந்தெடுத்து அவர் கையில் எறிந்து, 'செல்லுங்கள், செல்லுங்கள்' என்று அவர்களைத் துரத்துதல் கொடைக்குரிய செயல்களல்ல; அவ்வாறு அவனால்

கொடுக்கப்படும் கொடை பயனற்றதாம். ஆதலின், அக் கொடைக்குரிய நற்குணங்கள் விளங்குமாறு, ''பெரிதுவந்து, மெல்லக், கொடையொடு பட்டகுணன்'' என்றார் முனிவர். இத்தகைய ஈகைக்குணம், தாம் செய்யத் தகுவனவற்றை யுணர்ந்த இயற்கை யறிவுடையார்க்கே அமையும்; இதனை,

''இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்''

என்னும் (திருக்குறள்-218-ஆம்) செய்யுளுணர்த்தும். ஈங்குக் கூறியபடி கொடை முதலியனவியற்றும் புண்ணியமுடை யார்க்கு மேலுலக வாயில் திறக்கப்பட்டிருக்கு மென்பதை,

''ஒன்றாக நல்ல துயிரோம்ப லாங்கதன்பின்
நன்றாய்ந் தடங்கினார்க் கீத்துண்ட லென்றிரண்டு
குன்றாப் புகழோன் வருகென்று மேலுலக
நின்றது வாயில் திறந்து''

என்னம் (அறநெறிச்சாரம்-62-ஆம்) செய்யுளானு முணரலாம். 'இல்லாவிடத்து' 'உள்ளவிடம்' என்பவற்றிற்கு முன், 'செல்வம்' என்பது இவையெச்சமாக வருவித்துரைக் கப்பட்டது. 'இல்லாவிடத்தும்' என்பதிலுள்ள உம்மை- இழிவு சிறப்புப்பொருளது; எச்சப்பொருளதுமாம். 'இடம்' என்பது- இரண்டிடங்களினும் காலத்தை யுணர்த்திநின்றது. பெரிது- குறிப்புமுற்று; இஃதிங்கு வினையெச்சமாகி, உவத்தலுக் குரியாய்நின்றது; இதனை வடநூலார், 'க்ரியா விசேஷணம்' என்பர். கொடை- தொழிற்பெயர்; கொடு- பகுதி, ஐ- விகுதி. 'குணம்' என நின்றது. உடை- ஈற்றகரந் தொக்க குறிப்புப் பெயரெச்சம். மாந்தர்- எப்பொழுதும் ஒருமையில்லாமல் பன்மையிலேயே வரும் பெயர்; வட நூலார் இதனை, 'நித்ய பஹுவசநம்' என்பர். 'கதவு அடையா' என்பது செயப்படுபொருளைச் செய்தவினை

முதல்போலத் தொழிற்படச்சொல்லிய மரபுவழுவமைதி; இது, 'கரும கருத்தன்' எனவும் பெயர்பெறும்;

''செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே''

என்னும் (தொல்-சொல்-வினை-49-ஆம்) சூத்திரம் பார்க்க. 'ஆண்டு' என்னும் சுட்டு; மென்றொடர்க் குற்றியலுகர மாதலின், ''ஐயீற்றுடைக்குற் றுகரமு முளவே'' என்னும் (நன்-உயி-பு-35-ஆம்) சூத்திரவிதிப்படி ஐகாரச் சாரியை பெற்று, 'ஆண்டை' என நின்றது. ஆம்- அசையுமாம். இச் செய்யுளில், ஆண்டைக் கதவுகள் மூடப்படா திருத்தற்கேது வான ஈகை கூறப்பட்டது; இந்நூலின், 'ஈயாமை' என்னும் அதிகாரத்தின் முதற்செய்யுளில் ஆண்டைக்கதவு மூடப்படு தற்கேதுவான ஈயாமை கூறப்படுகின்றது; இவ்விரு செய்யுட் களும் ஒப்பு நோக்கத்தக்கன. (க)

92. *முன்னரே சாநாண், முனிதக்க மூப்புள*
பின்னரும் பீடழிக்கு நோயுள- கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதுங்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து.

(இ-ள்.) (இல்வாழ்க்கையிற் பொருந்தி யிருப்பவர் களே!) முன்னரே- (உங்களுக்கு) முன்னேயே, சாம்நாள்- (மனிதர் பலர்) இறக்கும் மரணகாலமும், முனிதக்க- (பலரும்) வெறுத்தற்குத் தக்க, மூப்பு- (அவர்களின்) கிழத் தன்மையும், பின்னரும் - (அவை மாத்திரமின்றி) மேலும், பீடு அழிக்கும் - (அவர்களின்) வலிமையைக் கெடுக்கின்ற, நோய்- பிணிகளும், உள- (காணப்படுவனவாய்) இருக் கின்றன, (இவற்றை நீங்கள் பார்ப்பதனால் இவை உங்களுக்கு முண்டென்பது நிச்சயமாக விளங்கும்; இவற்றை அடைதற்குமுன் அறஞ்செய்து புண்ணியத்தைத் தேடிக் கொள்ள வேண்டும்; ஆதலின், (உங்களிடம்), கைத்து

உண்டாம்போழ்து- கைப்பொருள் உண்டாகின்ற காலத்தில், (நீங்கள்), கொன்னே - வீணாக, (மேலும் பொருளைத் தேட நினைத்துப் பலரிடத்தும் சென்று தாழ்மையான காரியங் களைச் செய்து, அவர்களை), பரவன்மின்- துதிக்காதீர்கள், (உங்களிடம் சேர்ந்தபொருளைப் புண்ணியகாரியங்களில் செலவிடாமல்), பற்றன்மின்- இறுகப் பிடித்து வைத்துக் கொண்டிராதீர்கள், யாதும்- உண்ணத்தக்க எதையும், (நாடி வருவோர்க்கு), கரவன் மின்- மறைக்காதீர்கள், பாத்து- பங் கிட்டு, உண்மின் - அவர்க்குக் கொடுத்து நீங்களும்) உண் ணுங்கள்; எ-று.

இல்வாழ்க்கையி லுள்ளவர்களே! உங்களுக்கு முன் னாலேயே பலர் இறக்குங்காலமும், அவர்களின் கிழத் தன்மையும், அவர்களுடைய வலிமையைக் குறைக்கும் நோயும் பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகின்றன; இவற்றை நீங்கள் பார்ப்பதனால் உங்களுக்கும் இவை உண்டென்பது விளங்கும்; ஆதலின், இவை உங்களுக்கு சேர்வதன் முன் நீங்கள் அறத்தைத் தேடிக்கொள்ளவேண்டும்; அங்ஙனம் தேடிக்கொள்வதால் இருமையிலும் உங்களுக்கு நன்மை ஏற்படும் அந்நன்மையை அடையும்பொருட்டு நீங்கள், உங்களிடம் கைப்பொருள் உண்டாகின்ற காலத்தில் கிடைத் ததே போதுமென்றிராமல் மேலும் பொருளைச் சேர்க்க விரும்பி அதன்பொருட்டுப் பலரிடத்துஞ் சென்று அவர் களைத் துதியாதிருங்கள்; உள்ள பொருளை நல்லவழியிற் செலவிடாமல் இறுகப் பிடித்துக் கொண்டிராதீர்கள்; எந்த உணவையும் பிறருக்கு மறைக்காதீர்கள்; பங்கிட்டுக் கொடுத்து நீங்களு முண்ணுங்கள் என்பது இதன் கருத்து.

''முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள, பின்னரும் பீடழிக்கும் நோயுள'' என்பதற்கு, ''நீங்கள் பிறப்பதற்கு முந்தியே செய்த வினைகட்கீடாக மரணகாலம். மூப்பு, நோய் முதலியன அமைக்கப்பட்டுள்ளன'' எனப் பொருளுரைத்தலு மொன்று; இங்ஙனம் பொருள்கூறுமிடத்து, ''முன்னரே சாவு

முதலியன உங்களுக்கு அமைக்கப்பட்டுள்ளன; அவை நிச்சயமாக உங்களையடையும்; அவ்வாறடையுமுன் நீங்கள் அறத்தைத் தேடிக்கொள்ளவேண்டும்'' என்று மற்றவற்றோடு இதனைக்கூட்டி முடித்துக் கொள்ளல் வேண்டும். 'பரவன் மின்' என்பதற்கு, '(மேலும் பொருளைச் சம்பாதித்தற்கு) அலையாதீர்கள்' எனப் பொருளுரைப்பினுமாம். மனிதர், தம்மிடம் பொருளிருக்கும்போது மேலும் பொருள்தேட அலைதல், அறஞ்செய்து புண்ணியமாகிய பயன் அடைய வொட்டாமற் தடைசெய்து விடக் கூடியதாதலின் பயனற்ற செய்கையாம்; ஆதலின், அதனை விளக்கற்கு முனிவர், 'கொன்னே பரவன்மின்' என்றார்.

இதிற்கூறியபடி இல்வாழ்வோர் உணவு முதலிய வற்றைப் பலர்க்கும் பங்கிட்டுக் கொடுத்துண்டலே சிறந்த அறமென்பதனை,

''பகுத்துண்டுபல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை''

என்னும் (திருக்குறள்-322-ஆம்) செய்யுள் விளக்கும். முன், பின் என்பன அர்சாரியை பெற்று, 'முன்னர், பின்னர்' என நின்றன. சாம்- நாள் - பெயரெச்சத்தொடர். முனி- முத னிலைத் தொழிற்பெயர்; முனிதக்க- நான்காம் வேற்றுமைத் தொகை. உள - பலவின்பால் குறிப்புமுற்று. கொன்- பய னின்மைப் பொருள்தரும் இடைச்சொல். பரவன்மின், பற்றன்மின், கரவன்மின் என்பன எதிர்மறை ஏவற்பன்மை வினைமுற்று. உண்மின்- உடன்பாட்டேவந்த பன்மை வினைமுற்று. பாத்து- என்பதில், பகு என்பதன் மரூஉ. மருவாகிய பா- பகுதி. (உ)

98. *நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்*
கொடுத்துத்தான் றுய்ப்பினு மீண்டுங்கா- லீண்டு
மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்.

(இ-ள்) நடுக்கு உற்று - (வறுமைத்துன்பத்தால்) நடுங்குதலையடைந்து, தன் சேர்ந்தார்- (அத்துன்பத்தை நீக்கிக் கொள்ளும் பொருட்டுத்) தம்மை அடைந்தவர்களது, துன்பம்- அத்துன்பத்தை துடையார்- (தம்மிடமுள்ள பொருளை அவர்க்குக் கொடுத்து) நீக்காதவர்களாகிய உலோபிகள், செல்வம்- (தங்களுடைய) செல்வத்தை; (அங்ஙனம் செலவுசெய்யாமல்), இடுக்குற்று- இடுக்கி, (அதாவது நெருக்கி), பற்றினும் - பிடித்துக்கொண்டிருந் தாலும், விடுக்கும்- (செல்வத்தை அவர்களிடம்) சேர்க்கும், வினை (அவர்களால் முற்பிறப்பில் செய்யப்பட்டிருந்த) நல்வினையானது, உலந்தக் கால்- முடிந்துவிட்டால், நில் லாது- (அச்செல்வம்) நிலைபெற்றிராது,(தானே ஒழிந்து போய்விடும்), (ஈகைக்குணமுள்ள ஒருவன்), செல்வம்- அச்செய்வத்தை, கொடுத்து- (பிறர்க்கும்) கொடுத்து, தான் துய்ப்பினும்- தானும் அனுபவித்தாலும், (அது), ஈண்டும் கால்-வளர வேண்டிய நல்வினை யிருக்குங்காலத்தில், (குறையவே மாட்டாது), ஈண்டும்- வளர்ந்துகொண்டே யிருக்கும், (ஆதலின், இவ்வாழ்வோர் பொருளை நல்வழி யில் செலவிடாமலிருப்பதால் அது சேருமென்றும், அதனைச் செலவிடுவதால் அஃதழியுமென்றும் கருதாமல் வறுமைத் துன்புற்றுத் தம்மிடம் வருவார்க்கு வேண்டுவன நல்குதல் வேண்டும்); எ-று.

மனிதர்களுடைய செல்வமானது நல்வினையிருந் தால் விருத்தி யடையும்; அது குறைந்தால் நீங்கிவிடும்; அவர்கள் அதைச் செலவு செய்யாமலிருப்பதால் சேர்த்துக் கொள்ளுதலும், செலவிடுவதால் அழித்துவிடுதலுமில்லை; ஆதலின், அவை பழவினைப்படி நடக்குமெனத் துணிந்து,

தம்மிடம்வரும் தரித்திரர்க்குப் பொருள் கொடுத்தல் வேண்டும் என்பது இதன் கருத்து.

இது, பொருளை யாசகர்க்குக் கொடுத்தால் அது குறைந்து விடுமென்று எவர்க்கும் எதையும் கொடாமலிருக்கும் உலோபிகளுக்கறிவுறுத்தக் கூறியதாகும். பொருள் விருத்தியும், குறைவும் பழவினைப்படி நடக்கும்; நம்மால் ஆவனவல்ல என்று நினைத்துத் தம்மிடமுள்ள பொருளை அறநெறியிற் செலவிடுவார்க்குப் புண்ணியமிக்கு அதனால் அவர்கள் மறுமையில் உயர்வுறுவார்கள்; அங்ஙனம் செலவிடாமல் உலோபகுணத்துட னிருப்பவர் மறுமையின் பத்தை யிழப்பர். ஆதலின், மனிதர் அங்ஙனம் ஈகையின்றி யிருத்தல் கூடாதென்பதை ஆசிரியர் இதில் விளக்கினார்.

'இடுக்குற்று' என்பதை, 'மிடுக்குற்று' எனப்பிரித்து, அதற்கு, வலிமை பொருந்தி' எனப் பொருளுரைப்பினுமாம். 'இடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம் விடுக்கும் வினையுலந்தக்கால்' என்பதை, வினையுலந்தக்கால் செல்வம் இடுக்குற்றுப்பற்றினு நில்லாது விடுக்கும்' எனமாற்றி, 'நல்வினை கெட்டகாலத்தில் ஒருவன் தன் செல்வத்தை இறுக்கிப் பிடித்தாலும் நில்லாது; அவனைப் பிரிந்துவிடும் எனப் பொருளுரைப்பினும் பொருந்தும்.

தற்சேர்ந்தார்- பன்மை வரவேண்டியவிடத்து ஒருமை மயங்கி வந்த வழுவமைதி; ஒருமை பன்மை மயக்கம். 'கொடுத்துத் தான் துய்ப்பினும்' என்பதற்குமுன், 'ஈகைக்குணமுள்ள ஒருவன்' என்னும் எழுவாய் வருவித்துரைக்கப்பட்டது. இன்னும் இவ்வுரையின் முதலிலும், இடையிலும், ஈற்றிலும் சில சொற்றொடர்கள் இசையெச்சங்ளாகக் கூட்டி யுரைக்கப்பட்டன. நடுக்கு, மிடுக்கு- முதனிலைத் தொழிற்பெயர்கள். 'துய்ப்பினும்' என்பதிலுள்ள உம்மை- உயர்வு சிறப்புப் பொருளது. 'விடுக்கும்' என்பதில், கு- சாரியை. 'செல்வம்' என்பது இரண்டிடங்களிற்

கூட்டப்பட்டது. இதில், சொற்கள் மாற்றியமைத்துப் பொருள் கொள்ளப்பட்டதாகலின், இது, மொழிமாற்றுப் பொருள்கோள் அமையப்பெற்றதாம்; ''மொழி மாற்றி யற்கை......'' என்னும் (தொல்-சொல்-எச்-13-ஆம்) சூத்திரம் பார்க்க.

இது, ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா. (ந)

94. *இம்மி யரிசித் துணையானும் வைகலு*
நும்மி லியைவ கொடுத்துண்மி- னும்மைக்
கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத்
தடாஅ வடுப்பி னவர்.

(இ-ள்.) உம்மை- முற்பிறப்பில், (இரப்பார்க்கு எதையும்), கொடாதவர்- ஈயாதவரே, குண்டுநீர்- ஆழமான நீரையுடைய கடலாற் சூழப்பட்ட, வையத்து - இவ்வுலகத்தில், அடா அடுப்பினவர்- (உணவு) சமைக்காத அடுப்பினையுடையவராவர் (சோறு சமைக்காமல் பிச்சை யெடுத்துண்டு திரிபவராவர்), என்பர்- என்று கூறுவர் அறிஞர், (இல்லறத்திலிருந்து வாழ்பவர்களே! நீங்களும் இரப்பார்க்கெதையும் கொடாத உலோபிகாளயிருப்பீர்களேயானால் மறுபிறப்பில் பிச்சைக்காரராய்ப் பிறப்பீர்கள்; ஆதலின், வறுமை யடைந்து உம்மிடம் பொருள்பெற விரும்பி வருவார்க்கு), வைகலும்- தினந்தோறும், நும்மில் இயைவ- உம்மால் கொடுக்கக் கூடியவற்றை, இம்மி அரிசி துணையானும்- மத்தங்காய்ப் புல்லரிசி யவ்வளவாயினும், கொடுத்து- அளித்து, உண்மின்- (மீதியை உண்ணுங்கள்); எ-று.

இல்லறத்திலிருப்பவர்களே! இவ்வுலகத்தில் பிச்சைக்காரராய்த் திரிவோரெல்லாரும் முற்பிறப்பில் யாசகர்க்கொன்றுங் கொடாதவர்களே; நீங்களும் இப்போது ஈகையற்றவர்களா யிருப்பீர்களானால் மறுபிறப்பில் யாசக

ராய்ப்பிறப்பீர்கள்; ஆதலின், உம்மிடம் வரும் யாசகர்க்குக் குறைந்த அளவாகவாவது உம்மால் கொடுக்கக்கூடியவற்றை கொடுங்கள் என்பது இதன் கருத்து.

இங்ஙனங் கூறியதனால், இம்மையில் யாசகர்க்குப் பொருள் கொடுப்பவர் மறுமையில் நற்பதவிபெற்று மீண்டும் உலகத்திற் பிறந்தாலும் செல்வமுடையவராய்ப் பிறப்பதென்பதும், அங்ஙனங் கொடாதவர் மறுமையிற் தீக்கதியிற் சேர்ந்து துன்புற்று மீண்டும் பிறங்குங்கால் பிச்சையேற்போராய்ப் பிறப்பரென்பதும், இருமையிலும் நலம்பெற விரும்புவோர் ஈகையுடையராயிருத்தல் வேண்டு மென்பதும் பெறப்படும்.

இனி, ''உம்மைக் கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத்தடாஅ வடுப்பினவர்'' என்பதற்கு, ''(இல்வாழ்க்கை நடத்துவோரே! நீங்கள் யாசகர்க்குப் பொருள்கொடாம லிருப்பீர்களானால்) உங்களை, குண்டுநீர் வையத்திலுள்ள அடாவடுப்பினராகிய பிச்சைக்காரர்கள், 'ஏழைகட்குப் பொருள்கொடாத உலோபிகள்' என்று நிந்திப்பார்கள்'' என்று பொருள்கூறி இதனை முன்னிரண்டடிகளோடு சேர்த்து முடித்தலுமுண்டு. இம்முடிபு கொள்ளுமிடத்து, ''இல்லறத் தார்களே நீங்கள் ஈகையற்றவர்களாயிருந்தால் மறுமையில் தீக்கதிபுகுந்து யாசகராய்ப்பிறத்தலன்றி, இம்மையிலும் புகழிழந்து பல்லோராலும் இகழப்படுவீர்கள்; ஆதலின், சிறிதளவேனும் யாசகர்க்குப் பொருள்கொடுங்கள்'' என்னும் கருத்து விளங்கும்.

இம்மியரிசி- மத்தாங்காய்ப் புலலரிசி; மத்தாங் காய்ப்புல்- ஒரு வகைப்புல்; இதனுடைய கதிர் கேழ்வரகுக் கதிர்போன்றிருக்கும்; இதிலுள்ள அரிசி மிக நுண்ணியதா யிருக்கும். ஆதலின், அளவின் சிறுமையைக் காட்டுதற்கு தினையளவு, கடுகளவு எனத் தினை, கடுகு முதலியன கூறப்படுதல்போல இதுவும் கூறப்பட்டது. இனி, ஒன்றைப்

பத்துலட்சத்து எழுபத்தையாயிரத்து இருநூறு பங்காக்கு வதால் கிடைக்கும் ஒவ்வொரு பங்குக்கும் இம்மியென்று பெயராதலின், அரிசியில் அவ்வளவு குறைந்த அளவைக் காட்டுதற்கு இது கூறப்பட்ட தெனினுமாம்; ஒன்றிற்கு இருபதுமா; மாவொன்றிற்குப் பதினாறு முந்திரி; ஒரு முந்திரிக்கு மூவாயிரத்து முந்நூற்றறுபது இம்மி. இக் கணக்கின்படி ஒன்றுக்குப் பத்துலட்சத்து எழுபத்தையா யிரத்து இருநூறு இம்மியாகும். இக்கணக்கை வேறுசிலர் வேறுவிதமாகவுங் கொள்வதுண்டு; எங்ஙனங்கொள்ளினும், இம்மி- எண்ணின் மிகக் குறைந்த பாகத்தை யுணர்த்துவ தெனக் கொள்க. இங்ஙனம், 'இம்மி' என்பது மத்தங்காய்ப் புல்லரிசியையும், குறைந்ததோர் எண்ணையும் உணர்த்து மென்பதை,

''இம்மியன நுண்பொருள்க ளீட்டிநிதி யாக்கிக்
கம்மியரு மூர்வர்களி றோடைநுதல் சூட்டி
அம்மிமிதந் தாழ்ந்துசுரை வீழ்ந்ததறஞ் சால்கென்
றும்மைவினை நொந்துபுலந் தூடலுணர் வன்றே''

என்னும் (சீவகசிந்தாமணி-காந்-3-ஆம்) செய்யுளின் உரை யில் ஆசிரியர் நச்சினார்க்கினியர், ''இம்மி- மத்தங்காய்ப் புல்லரிசி; குறைந்ததோர் எண்ணுமாம்'' எனப் பொருள் விளக்கி யிருத்தலானு முணரலாம். ஆனும்- இழிவு சிறப் போடு விகற்பத்தைக் காட்டுமோ ரிடைச்சொல்; ஏனும் என்பது போன்றது. 'வைகலும்' என்பதிலுள்ள உம்மை- முற்றுப்பொருளது. இயைவ- பலவின்பால் வினையா லணையும் பெயர். 'கொடாஅதவர், அடாஅ' என்பவற்றி லுள்ள அளபெடைகள்- செய்யுளோசை நிறைக்க வந்தவை; இரண்டினுமுள்ள அகரங்கள் பிரிந்திசைத்து நேரசைகளாக இவை புளிமாச்சீர்களாயின. 'அடாவடுப்பினவர்' என்பது சோறு சமைக்கவும் ஏதுவில்லாமலிருக்கும் வறுமைத் தன்மையைக் குறித்தது. (ச)

மறுமையு மிம்மையு நோக்கி யொருவர்க்
குறுமா றியைவ கொடுத்தல்- வறுமையால்
ஈத லிசையா தெனினு மிரவாமை
ஈத லிரட்டி யுறும்.

(இ-ள்.) (இல்லறத்தி லிருப்போர்க்கு), வறுமையால்- (பொருள்) இல்லாமையால், ஒருவர்க்கு- (பொருள் யாசித்துத் தம்மிடம் வரும்) ஒருவருக்கு, ஈதல் இசையாது எனினும்- (பொருளைக்) கொடுத்தல் முடியாதாயினும், (அவர்), இரவாமை- (பிறரிடம் பொருளை) யாசியாமல், (ஈகையால் வரும்) மறுமையும்- (மேலுலகத்துப் பயனையும், இம்மையும்- இவ்வுலகத்துப்பயனையும், நோக்கி- ஆராய்ந்து பார்த்து, உறுமாறு- (அவை தமக்குக்) கிடைத்தற் பொருட்டு, இயைவ- (தம்மால்) கொடுக்க முடிந்தவற்றை, கொடுத்தல்-(அந்த யாசகர்க்குக்) கொடுக்கக்கடவர்; ஈதல் - (அவ்வாறு) கொடுத்தல், இரட்டி உறும்- (செல்வமுள்ள போது ஈதலினும் இரண்டுமடங்கு அதிகமாகும்; எ-று.

இல்லறம் நடத்துவோர், வறுமையால் தம்மிடம் வரும் யாசகர்க்குப் பொருள்கொடுக்க முடியாதவர்களாயிருப்பினும், தாம் பிறரிடம் போய்ப் பொருளை யாசிக்காமல், ஈகையால், இம்மை மறுமைகளிற் கிடைக்கும் நற்பலன்களை உணர்ந்து அவற்றை அடையும்பொருட்டுத் தம்மாலியன்றவற்றை அந்த யாசகர்க்குக் கொடுத்தல் வேண்டும்; அங்ஙனங்கொடுத்தல், பொருளுள்ள காலத்தில் கொடுப்பதைக் காட்டினும் இரட்டிப்பான நன்மை தருவதாகும் என்பது இதன் கருத்து.

''நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினு மீதலே நன்று''

என்னும் (திருக்கு-222-ஆம்) செய்யுளிற் கூறியபடி மனிதர்க்கு யாசித்தல் தீதும், ஈதல் நன்றுமாதலின், இதில் மனிதர்

வறுமை யுற்ற காலத்தும் பிறரிடம் பொருளை யாசிக்காமல் பிறர்க்குக் கொடுத்தலே சிறந்ததென்பதை முனிவர் விளக்கினார். கையிற் பொருளில்லாதவன், யாசகர்க்குத் தன்னாலியன்றதைக் கொடுத்தல் மிகச்சிறந்ததென்பதை, இந்நூலின் 65-ஆம் செய்யுளில், ''கிளைபொருள் இல்லான் கொடையே கொடைப் பயன்'' என முனிவர் குறிப்பிட்டிருத்தலினாலு முணரலாம். ''வறுமையால் ஈதல் இசையாதெனினும்- இயைவ கொடுத்தல்'' என்று கூறியதனால், மனிதர், பொருளிருக்கும்போது பிறர்க்குக் கொடுத்தல் வேண்டுமென்பது கூறாதே அமையும். ஈகையுடையார்க்கு மறுமையிற் சுவர்க்க இன்பமுண்டாகும்; இம்மையிற் புகழுண்டாகும்; ஆதலின், ''மறுமையும் இம்மையும் நோக்கி யொருவர்க் குறுமாறியைவ கொடுத்தல்'' என்றார் முனிவர்.

இச்செய்யுள் மொழிகளைமாற்றிப் பொருள்கொள்ளுமாறமைந்த தாகலின் மொழிமாற்றுப் பொருள்கோளுடையதாம். மறுமை, இம்மை என்பன ஆகுபெயர்களாய் அவற்றின் பயன்களை உணர்த்தி நின்றன. கொடுத்தல்- தல்லீற்று உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று. இரட்டி- இரட்டுதலுடையது; பெயர்; இரட்டு- பகுதி, இ- பெயர்விகுதி. இதில் மூன்றாமடி முற்றுமோனையுடையது; முற்று மோனை யாவது- சீர்தோறும் மோனை அமைந்திருப்பது. (ரு)

96. *நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க*
படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணா மாக்க
ளிடுகாட்டு ளேற்றைப் பனை.

(இ-ள்) பலர்நச்ச - பலரும் (தம்மிடம் வந்து வேண்டுவன பெற்றுத் தம்மை) விரும்பும்படி, வாழ்வார்- (தம்முடைய பொருள்களில் பிறர்க்கு விருப்பமானவற்றைக் கொடுத்து) வாழ்பவர், நடுஊருள்- ஊர் நடுவில், சுற்றுக்கோள்- (எல்லாப்புறமும்) சூழ்ந்து கொள்ளுதலையுடைய,

வேதிகை- திண்ணையின்மேல், புக்க- சேர்ந்திருந்த, படு- (நுங்கு, பழம் முதலாகிய பயன்கள் பிறர் எளிதில் அனுபவிக் கும்படி) உண்டாகின்ற, பனை- (பெண்) பனைமரத்தை, அன்னர்- நிகர்ப்பார்கள், குடி- (தம்முடைய) குடித்தனம், கொழுத்தக் கண்ணும்- (செல்வத்தால்) செழித்திருக்கும் போதும், கொடுத்து (உணவு முதலியவற்றைப் பிறர்க்குக்) கொடுத்து, உண்ணா- (தாமும்) உண்ணாத, மாக்கள்-மனிதர், (தன்னை நெருங்கி வந்தார்க்குப் பயன்படுமாறு பழம் முதலியவற்றை உற்பத்தி செய்தலின்றி), இடுகாட்டுள்- சுடுகாட்டில் இருக்கின்ற, ஏற்றைப்பனை- ஆண் பனை மரத்தை, அன்னர் - நிகர்ப்பார்கள்; எ-று.

தம்பொருளைப் பிறர்க்கும் கொடுத்து, அவர் தம்மை விரும்பும்படி வாழ்வோர், நுங்கு, பழம் முதலியவற்றை யுடையதாயும், அவற்றைப் பிறர் கீழ் நின்றபடியே பறித் துண்ணுமாறு சுற்றிலும் உயர்ந்த திண்ணையாற் சூழப்பட்ட தாயு மிருக்கும் பெண்பனையை நிகர்த்துப் பயனுடைய மனிதராவார்; தம்குடி செல்வத்தாற் செழித்திருக்குங் காலத் திலும் உணவு முதலியவற்றைப் பிறர்க்குக் கொடுத்துத் தாமும் உண்ணாத மனிதர், நுங்கு முதலிய பயன்களற்ற தாயும், மனிதர் தன்னிடம் வேறு எதையேனும் பெறவிரும் பினும் வருந்தி மேலேறும்படி மிகவும் உயர்ந்துள்ளதாயும், மனிதர் நெருங்க அருவருக்கும் சுடுகாட்டிலுள்ளதாயுமிருக் கின்ற ஆண்பனையை நிகர்த்துப் பயனற்றவராவர் என்பது இதன் கருத்து.

சுற்றிலும் திண்ணையால் சூழப்பட்டு நுங்கு முதலிய வற்றை யுடையதாயிருக்கும் பெண்பனையானது, எவரும் திண்ணைமேல் நின்றபடியே தன்பயனை எளிதில் கைப் பற்றி அனுபவிக்கக்கூடியதாயிருக்கும்; தம் பொருளைப் பிறர்க்குக் கொடுக்கும் குணமுடையார் எவரும் தம்மிடம் வந்து தமக்கு வேண்டுவன பெற்றின் புறத்தக்க உபகாரிகளா யிருப்பர்; ஆதலின், அப்பெண்பனை அவர்க்கு உவமை

யாகக் கூறப்பட்டது. நுங்கு, பழம் முதலியன இன்றிச் சுடுகாட்டில் உயர்ந்து நிற்கும் ஆண்பனை எவரும் தன்னிடம் நெருங்காதபடி பயனற்றிருக்கும்; ஈகைக்குணமில்லாதார் எவரும் தம்மிடம் நெருங்கி வரத்தக்க உபகாரகுண மற்றிருப் பர்; ஆதலின், அந்த ஆண் பனை அவர்க்குவமையாகக் கூறப்பட்டது. இங்ஙனம் இவர்க்கு இவற்றை உவமை கூறியது உவமையணியாம். இந்த உவமைகள் கூறப்பட்ட தனால், ஈகையுடையவர் வீடு பெண்பனையைச் சுற்றிய வேதிகைபோலப் பிறர் நெருங்குதற்கு யோக்கியமானதா யிருக்குமென்பதும், அவர் அப்பனையைப் போல பிறர் எளிதில் பொருள் பெற்றுக் கொள்ளக் கூடியவராயிருப்ப ரென்பதும், அவரிடமுள்ள பொருள்கள் அப்பெண் பனை யிலுள்ள பயன்களைப் போல எளிதிற் கைக்கொள்ளக் கூடியனவா யிருக்குமென்பதும், ஈகையற்றாருடைய வீடு சுடுகாட்டைப்போலப் பிறர் நெருங்குதற்கு யோக்கிய மில்லாததா யிருக்குமென்பதும், அவர் அச்சுடுகாட்டிலுள்ள தும், பிறர் ஏறமுடியாதபடி உயர்ந்திருப்பதுமாகிய ஆண் பனையைப்போல யாசகர் நெருங்குதற்கு யோக்கியமற்றவரா யிருப்பரென்பதும், அவரிடமுள்ள பொருள்கள் அவ்வாண் பனையிலுள்ள பூ, மட்டை, ஓலை முதலியன போல பிறர் உண்டனுபவித்தற்கு உதவாதனவா யிருக்குமென்பதும் பெறப்படும். இச்செய்யுட்கருத்திற்கு ஒருவாறு இணங்க, ஈகையுடையானிடத்தே செல்வமுண்டாவதை நடுவூருள் மனிதர்க்குப் பயன்படும் மரம் பழுத்தற்கும், பிறரால் விரும்பப்படாத உலோபியினிடத்துச் செல்வமுண்டாவதை நடுவூருள் மனிதர்க்குப் பயன்படாத நச்சுமரம் பழுத்ததற்கும் ஒப்பிட்டு,

''பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின்'' (216)

''நச்சப் படாதவன் செல்வ நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று'' (1008)

என்னும் திருக்குறட் செய்யுட்கள் விளக்குதல் காண்க. இங்ஙனம், ஈகையுடையார் மனிதர்க்குப் பயன்தரு பனையை யும், ஈகையில்லார் பயன்படாத பனையையும் நிகர்ப்பர் என்று கூறியதனால், ஈகைக்குணமுடையார் இம்மையிற் பலராலும் கொண்டாடப்படும் புகழினைப் பெற்று மறுமை யில் நற்கதியடைவரென்பதும், ஈகையில்லார் பலராலும் இகழப்படும் நிந்தையை இவ்வுலகிற்பெற்று மறு உலகத்தில் தீக்கதியிற் சேர்வர் என்பதும், நற்கதிபெற விரும்புவோர் ஈகையுடையவரா யிருத்தல் வேண்டுமென்பதும் விளக்கிய தாகும்.

'ஊர்நடு' என்பது, 'நடுவூர்' என முன்பின்னாக மாறி வந்தது; இஃதிலக்கணப்போலி; ஆறாம் வேற்றுமைத் தொகையுமாம். சுற்றுக் கோளுக்குக் கர்த்தா- வேதிகை - வேதிகா' என்னும் வடசொல் ஈறு திரிந்து, 'வேதிகை' என நின்றது. சுற்றுக்கோள் - முதனிலை திரிந்த தொழிற்பெயர்; 'சுற்றுக் கொள்' என்னும் முதனிலை இங்ஙனம் திரிந்து நின்றது. புக்க- பெயரெச்சம்; பனையென்னும் பெயர் கொண்டு முடிந்தது. படுபனை- வினைத்தொகை. 'அன்னர்' என்பது இரண்டடி களினுங் கூட்டப்பட்டது. கொழுத்தக் கண்- வினையெச்சம்; கண்- வினையெச்ச விகுதி; இதிலுள்ள உம்மை - சிறப்புப் பொருளது. செல்வமுள்ளபோதும் பிறர்க்கு வேண்டுவன கொடுத்துண்ணாதவர் மிருகங்களைப் போல் இழிந்த பிறப்பினராகலின் அவர்களை, 'மாக்கள்' என்றார் முனிவர். மா - என்பது மிருகத்தின் பெயராகலின், அதன் பன்மை யாகிய, 'மாக்கள்' என்பது மிருகத்தன்மை யுள்ள மனிதரைக் குறித்தது. இப்பெயர் அறிவற்ற மனிதர்க்கு வந்த காரணம் முதலியன இந்நூலின் 44 - ஆம் செய்யுளுரை யில் விளக்கப்படுகின்றனவாகலின் ஆங்குக் கண்டுணர்க. இடுகாடு- (இறந்த வரைக் கொண்டுபோய் எரித்தற்கோ, புதைத்தற்கோ) வைக் கும் காடு; வினைத்தொகை. 'சுடுகாடு' என்றும் பாடபேத முண்டு. ஏற்றை- ஆற்றலோடு கூடிய ஆணின் பெயர்; இது, ''ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற்

கெல்லாம், ஏற்றைக்கிளவி யுரித்தென, மொழிப'' என்னும் (தொல்-மர-49) சூத்திரத்தில், 'எல்லாம்' என்றதனால் சிறு பான்மை இங்கு ஆற்றலில்லாத பனைக்கும் கொள்ளப் பட்டது. ஷி சூத்திரவுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர், 'எல்லாம் என்றதனால் சிறுபான்மை ஆற்றலில்லாதனவுங் கொள்க' என்று கூறி அதற்கு இச் செய்யுளில்வரும், 'இடு காட்டு ளேற்றைப்பனை' என்பதை உதாரணங் காட்டியிருப் பதே இதற்காதாரமாம். 'ஏறு' என்பதும் ஆண்பாற் பெயராக லின் அது, ஐகாரச்சாரியை பெற்று, ''ஏற்றை'' என வந்த தெனக் கொள்வாருமுளர்; தொல்காப்பியர், ''ஏறும் ஏற்றை யும்....'' என்ற சூத்திரத்தில் இரண்டையுங் கூறியிருத்தலால், 'ஏறு' என்பதுபோலவே, 'ஏற்றை' என்பதும் ஒரு பெய ரென்று துணியப்படுமாதலின் அங்ஙனங் கொள்வது இங்குப் பொருந்தாதென்க. இனி, 'ஏறு' என்பதும் ஆண்பாற் பெயரா யிருத்தலால், 'ஏறு' என்பது போலவே, 'ஏற்றை' என்பதும் ஒரு பெயரென்று துணியப் படுமாதலின் அங்ஙனங் கொள் வது இங்குப் பொருந்தா தென்க. இனி, 'ஏறு' என்பதும் ஆண்பாற் பெயராயிருத்த லினால், 'ஏற்றுப்பனை' என்று பாடங்கொண்டு அதற்கு, 'ஆண்பனை' என்று பொரு ளுரைத்தலோடு, முன்னுரைத்தபடி அது வருந்தி யேறக்கூடிய உயரமுள்ளதாயிருப்பதால், ஏற்றமுள்ள (வருந்தி யேறுதலை யுடைய) பனையென்றும் பொருளுரைப்பினும் பொருந்தும், எனினும், மேற்குறித்த தொல்காப்பிய சூத்திரவுரையில், இச்செய்யுளின் ஈற்றடியை உதாரணங்காட்டியதில், 'ஏற்றைப் பனை' என்பதே குறிக்கப் பட்டிருத்தலின், இப்பாடங் கோடலே சிறப்புடைத்தாம். இச்செய்யுள் ஒருவிகற்ப இன்னிசை வெண்பா. (கூ)

97. *பெயற்பான் மழைபெய்யாக் கண்ணு முலகஞ்*
செயற்பால செய்யா விடினுங்- கயற்புலால்
புன்னை கடியும் பொருகடற் றண்சேர்ப்ப
என்னை யுலகுய்யு மாறு.

(இ-ள்.) கயல் - மீன்களின், புலால் - மாமிச நாற்றத்தை, புன்னை- புன்னைமலர்கள், (தம் வாசனையால்), கடியும்- நீக்கப்பெற்ற, பொரு- (அலைகளாற்கரையை) மோதுகின்ற, கடல்- கடலின், தண்- குளிர்ச்சி பொருந்திய, சேர்ப்ப- துறையை யுடையவனே! பெயல்பால்- (உயிர்கள் வாழும்பொருட்டு நீரைப்) பெய்தற்குத் தக்கதாகிய, மழை- மேகமானது, பெய்யாக்கண்ணும்- பெய்யாவிட்டாலும், உலகம் -(உலகத்தாராகிய) உயர்ந்தோர், செயல்பால- (பிறர்க்குச்) செய்யத்தக்க உதவிகளை, செய்யாவிடினும்- செய்யாவிட்டாலும், உலகு - உலகத்திலுள்ள உயிர்கள், உய்யும் ஆறு- பிழைக்கும்வழி, என்னை- யாது? (எதுவு மில்லை); எ-று.

உலகத்தில் உயிர்கள் வாழ்தற்குப் பெய்யத்தக்க மழை காலத்திற் பெய்யாவிட்டாலும், இல்லறத்தாராகிய மனிதர்கள் பிறருக்குச் செய்யத்தக்க உதவிகளைச் செய்யாவிட்டாலும் உயிர்கள் பிழைப்பதற்கு வேறு மார்க்கமில்லை; அவை பிழைக்கமாட்டா என்பது இதன் கருத்து.

மழை நீரைக் கொண்டே எல்லா வுயிர்களும் வாழ்கின்றன; உயர்ந்தோர் செய்யும் உதவிகளைக்கொண்டே, கைப்பொருளில்லாத பிறர் பிழைக்கின்றனர்; அம் மழையில்லாதபோது யாவும் வாடிப்போம்; பெரியார் உதவியில்லாதபோது வறிஞர் பிழைத்தல் அரிதாம். ஆதலின், மழைபெய்தலும், பெரியார் உதவியும் இல்லாவிடத்து உயிர்கள் பிழைக்கமாட்டா என்றார் ஆசிரியர். இங்ஙனங் கூறியதனால், பொருளுள்ள பெரியார், வறிஞர்க்கு அன்னம் முதலியன கொடுக்க மிகவும் கடன்மைப்பட்டிருக்கிறார்களென்பது விளக்கியதாகும்.

பெயற்பால் - நான்காம் வேற்றுமைத்தொகை நிலைத்தொடர்; இனி, 'பெயற்பால்' என்பதற்கு, 'பெய்தற்றன்மையுள்ள' என்றும் பொருள் விரிக்கலாம்; 'பெய்யப்படுந் தன்மையுடைய நீரை' எனப் பொருள் விரித்து, இதனை

அன்மொழித்தொகையாகக் கொள்ளினுமாம்; இங்ஙனங் கொள்ளுமிடத்து, பால் - தன்மை, அல்லது உரிமை. இன்னும், 'பெயற்பால் மழை பெய்யாககண்ணும்' என்ற தொடருக்கு, ''பெய்யத்தக்க காலத்தில் மழை பெய்யா விட்டாலும்'' என்று பொருளுரைப்பினும் பொருந்தும்; இதில், பால் - காலத்தை யுணர்த்தும். பெய்யாக்கண்-கண்ணீற்று எதிர்மறை வினையெச்சமாகிய ஒருமொழி; எதிர்மறைப் பெயரெச்சத்தொடர் எனினுமாம். 'கண்ணும்' என்பதிலுள்ள உம்மை- எதிரது தழுவியது. உலகம் இடவாகு பெயராய் உலகத்திலுள்ளாராகிய உயர்ந்தோரை உணர்த்தி நின்றது. செயற்பால - நான்காம் வேற்றுமைத் தொகை நிலைத் தொடராகிய பெயர்; இதன் ஈற்றிலுள்ள, அ- பலவின்பால் விகுதி. 'செய்யாமல்' என்னும் எதிர்மறை வினையெச்சம், மல்- விகுதி குறைந்து, 'செய்யா' என நின்றது; 'செய்யாவிடின் என்பதை ஒரு சொன்னீர்மைத் தெனக் கொள்ளலும் பொருந்தும்; 'விடினும்' என்பதன் உம்மை - இறந்தது தழுவியது. சேர்ப்ப- விளி; சேர்ப்பு-கடற்றுறை, அல்லது கரை. 'எவன்' என்னும் குறிப்புமுற்று, இடைகுறைந்து ஐகாரச் சாரியைபெற்று னகரவொற்றிரட்டி, 'என்னை'என நின்றது; இஃது அகரச்சாரியை பெற்று, 'என்ன என்றும் வரும். 'கயற்புலால் புன்னைகடியும்' என்ற தனால் நெய்தனிலக்கருப் பொருளாகிய புன்னை மலரின் மண மிகுதி குறிப்பிடப்பட்டது. 'என்னை உலகுய்யுமாறு' என்பது, குறிப்பால் 'உலகம் உய்யாது' என்னும் பொருளை விளக்கிநின்றது. 'உலகு' இடவாகு பெயராய் உலகத்திலுள்ள உயிர்களை உணர்த்தி நின்றது.

உபமானமாகிய மழையின் தொழிலும், உபமேய மாகிய உயர்ந்தோர் செயலும், 'உலகுய்யுமாறு என்னை' என்ற ஒரே தன்மையில் கூட்டி முடிக்கப்பட்டது தீபகாலங் கார மெனப்படும்; இது, தமிழில் 'விளக்கணி' எனப்படும்.

(எ)

98. *ஏற்றகை மாற்றாமை யென்னானுந் தாம்வரையா*
ராற்றாதார்க் கீவதா மாண்கட - னாற்றின்
மலிகடற் றண்சேர்ப்ப மாறீவார்க் கீதல்
பொலிகட னென்னும் பெயர்த்து.

(இ-ள்.) மலி - (வளங்கள்) மிகுந்த, கடல்- கடலின், தண்- குளிர்ச்சி பொருந்திய, சேர்ப்ப துறையையுடைய பாண்டியனே, (இல்லறத்திலுள்ள மனிதர்) ஆற்றாதார்க்கு- (பிரதியுபகாரம் செய்ய முடியாதவர்க்கு, ஏற்ற (அவர் இரந்து பொருளை வாங்குதற்கு) ஏந்திய கை- கரங்களை, மாற்றாமை- (ஒன்றுங்கொடாது அவை வெறுங்கரங்களாகும்படி) திருப்பிவிடாமல், என் ஆனும்- எதையாயினும், தாம் வரையார். (இஃதின்னார்க்குக் கொடுக்கத்தக்கது, கொடுக்கத்தகாதது என்று) தாம் மதிப்பிடாதவர்களாய், ஆற்றின்- முறைமையால், ஈவது- கொடுப்பதே, ஆண்கடன் ஆம்- (சிறந்த) ஆண் மக்களின் கடமையாம், மாறு ஈவார்க்கு - (தாம் பெற்றுக் கொண்ட பொருளுக்குக்) கைம்மாறாகிய பொருளைக் கொடுக்கும் இயல்பினையுடையார்க்கு, ஈதல் - (பொருளைக்) கொடுப்பது, பொலி- மிகுந்த, கடன் என்னும் பெயர்த்து - கடன் என்னும் பெயரினையுடையதாம்; எ-று.

மனிதர், தம்முடைய பொருள்களில் எதையாவது, 'இஃதின்னார்க்குக் கொடுக்கத்தக்கது, இன்னார்க்குக் கொடுக்கத்தகாதது' என்று சிந்திக்காமல், தாம்பெற்ற பொருளுக்குக் கைம்மாறு செய்யமுடியாத வறிஞர்க்குக் கொடுத்தலே சிறந்த ஆண்மக்களுக்குரிய கடமை; பிரதியுபகாரஞ்செய்வார்க்குக் கொடுத்தல் மிகுந்த கடன் கொடுத்ததாகும் என்பது இதன் கருத்து.

மனிதர், பிரதிபயன் கருதாமல் ஒருவருக்குப் பொருளைக் கொடுத்தால் அதற்கீடாகப் புண்ணியத்தைப் பெறுவர்; பிரதி பயன்கருதிக் கொடுத்தால் கைம்மாறாகிய பொருள்மட்டுமே பெறுவர்; அங்ஙனம் பெறுதல் கடன்

கொடுத்து வாங்குதலை நிகர்க்கும். அதனால் அவர்க்குப் புண்ணியம் சேராது; புண்ணியமில்லாதவர்க்கு நற்கதி யில்லை. ஆதலின், இல்லறத்திலிருப்போர், கையிலொன்று மில்லாத வறிஞர்க்குக் கொடுத்தலே ஆண்மக்களுக்குரிய கடமை யென்பதையும், கைம்மாறு கொடுப்பவர்க்கீதல் கடன் கொடுப்பதாகுமென்பதையும் இதில் விளக்கினார் முனிவர். சிலர், பிறர்க்குக் கொடுக்கத்தக்க பொருள்களில் உயர்ந்தவற்றை தம் சுற்றத்தார், உறவினர் முதலியவர்க்குக் கொடுத்தல் வேண்டுமென்றும், தாழ்ந்தவற்றை அன்னியர்க் குக் கொடுக்கவேண்டுமென்றும் வரையறை ஏற்படுத்திக் கொண்டு அவ்வாறே கொடுத்து வருவர்; சிலர், தமக்கு விருப்ப மானவர்க்குப் பொருள்கொடுத்தும், பிறர்க்குக் கொடாம லிருப்பர்; இவ்வகையான தானங்களும் பய னற்றனவாம்; கொடையாளர், வறிஞரெல்லோரையும் ஒரே தன்மையை ராகக் கருதி எல்லோர்க்கும் சமமாகக் கொடுப் பன கொடுத்தலே சிறந்ததும், பயனுடையதுமான ஈகையாம், ஆதலின், பொருளை வரையாது கொடுத்தலே சிறந்ததென்ப தையும், முனிவர் விளக்கினார். இவற்றால் வறிஞர்க்குப் பொருள்கொடுத்தலே சிறந்ததென்பதும் பொருளுள்ளார்க் குக் கொடுத்தல் சிறந்ததன்றென்பதும் பெறப்படும். இவற்றை,

''வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து,''

என்னும், (திருக்கு-221-ஆம்) செய்யுளானும் உணரலாம். 'வரையாது' என்றும் பாடபேதமுண்டு; வரையார்- முற் றெச்சம்; வரையாது- எதிர்மறை வினையெச்சம். 'வரையார்' என்பதற்கு, 'தமக்கென எதையும் வரைந்து (நிச்சயித்து) வைத்துக்கொள்ளாதவராய்' என்று பொருளுரைப்பினுமாம். மாற்றாமை- எதிர்மறை வினையெச்சம்; இதில், மை- விகுதி, 'ஏற்ற' என்பதில்; ஏல்- பகுதி. கை மாற்றாமை' என்பது இரண்டாம் வேற்றுமைத்தொகை;

''ஔநம யவவெனு முதலாகு மொழியு
முயிர்முத லாகிய மொழியு முளப்பட
வன்றி யனைத்து மெல்லா வழியு
நின்ற சொன்மு னியல்பா கும்மே''

என்ற (தொல்-எழுத்-தொகைம-2-ஆம்) சூத்திரவிதிப்படி இதில் மெலிமிகா தியல்பாயிற்று. 'என்னானும்' என்பதி லுள்ள உம்மை- இழிவு சிறப்பு. 'ஆற்றாதார்க்கு' என்பதற்கு, 'வறுமைத் துன்பத்தைச் சகியாதவர்க்கு' எனப் பொருளுரைப் பினும் பொருந்தும். 'ஆண் கடன்' என்பதை, 'மாண்கடன்' எனக்கொண்டு, அதற்கு, 'சிறந்த கடமை' எனப் பொருள் கொள்ளுதலும் அமையும். கடலுக்கு வளங்களாவன: ''ஓர்க்கோலை சங்கம் ஒளிர் பவளம் வெண்முத்தம், நீர்ப்படு முப்பினோ டைந்து'' என்று கூறப்பட்டவைகளாம்; ஓர்க் கோலை- ஒருவகை வாசனைப்பொருள், பெயர்த்து- குறிப்பு வினைமுற்று. 'இல்லறத்திலுள்ள மனிதர்' என்னும் எழுவாய் வருவித்துரைக்கப்பட்டது. (அ)

99. *இறப்பச் சிறிதென்னா தில்லென்னா தென்றும்*
அறப்பயன் யார்மாட்டுஞ் செய்க- முறைப்புதவின்
ஐயம் புகூஉந் தவசி கடிஞைபோற்
பைய நிறைத்து விடும்.

(இ-ள்) (இல்லறத்திலிருப்போர், யாசகர் வந்தபோது, அவர்க்குக் கொடுக்கத்தக்க பொருள் தம்மிடம் குறைந்த அளவினையுடையதா யிருந்தபோதிலும்), இறப்ப சிறிது என்னாது - (நம்மிடமுள்ள பொருள்) மிகவுஞ் சிறியது (ஆதலின் இதிற்கொஞ்சம் இவர்க்குக் கொடுத்தல் தகாது) என்று நினையாமலும், (அவருள்), யார்மாட்டும்- எவரிடத் தும், இல் என்னாது- (உங்களுக்குக் கொடுத்தற்குப் பொருள்) இல்லையென்று சொல்லாமலும், என்றும்- எப்பொழுதும், அறப்பயன்- தருமமாகிய பயனுடைய செய்கையை, (அதா வது பொருளீதலை), செய்க- செய்யக்கடவர், (அங்ஙனஞ்

செய்வது அற்பமானதாயிருப்பினும் சிறிது சிறிதாகச் சேர்ந்து புண்ணியத்தையும் சிறிது சிறிதாகச் சேர்த்துக்கொண்டே வந்து முடிவில் பெரிதாகி), முறை- கிரமமாக, புதவின்- வாயில்கள் தோறும், ஐயம்- பிச்சைக்கு, புகூஉம்- செல்கின்ற, தவசி - சந்நியாசியினது, கடிஞைபோல் - பிச்சைப் பாத்திரத் தைப்போல், பைய - மெல்ல மெல்ல, அறப்பயன்- தருமப் பயனாகிய அப்புண்ணியத்தை, நிறைத்துவிடும்- (அவரிடத்தே) பூரணமாக்கிவிடும்; எ-று.

இல்லறத்தார், தம்மிடம் பொருள் குறைவாயிருக்குங் காலத்திலும், யாசகர் வந்தால், 'நம்மிடமுள்ள பொருள் கொஞ்சமாயிருப்பதால் இதில் இவர்க்குச் சிறிது கொடுத்தல் தகாது' என்று நினையாமலும், அவர்க்கொன்று மில்லை யென்னாமலும், எவரிடத்தும் தம் வசதிக்கியன்ற அளவு சிறிது பொருளையேனும் கொடுத்து வரவேண்டும். அங் ஙனம் செய்துவரின், அச்சிறுதானமும் நாடோறும் சேர்ந்து, தவசிகளுடைய பிச்சைப் பாத்திரம் சோற்றை வீடுகள் தோறும் சிறிதுசிறிதாக ஏற்று நிறைத்து விடுவது போலத் தானப்பயனாகிய புண்ணியத்தை அவர்க்குச் சேர்த்து விடும் என்பது இதன் கருத்து.

'இறப்பச் சிறிதென்னாது' என்பதற்கு, 'யாசகர்க்குக் கொடுக்கும் பொருள் மிகவும் சிறிதென்று நினையாமல்' என்று பொருள் கொள்ளுதலுமொன்று; இங்ஙனங் கொள்ளு மிடத்து, குறைந்த பொருளுள்ளவர்கள் தம் சக்திக் கியன்றபடி யாசகர்க்குச் சிறிது பொருளே கொடுக்கக் வடியவராயிருப்பர்; ஆதலின், அவர்கள், தம்மிடம் யாசகர் வந்த காலத்தில், 'நாம் இவர்க்குக் கொடுக்கும்பொருள் மிகக் குறைந்ததாயிருக் குமே; இதைக் கொடுக்காமலே யிருந்து விடலாமே' என்று நினைத்து அவர்க்கில்லை யென்று சொல்லிவிடாமல் இயன் றதைக் கொடுத்துவரின் அதற்குத் தக்கபடி புண்ணியம் சிறிது சிறிதாகச் சேர்த்து அவர்பால் நிறைந்துவிடும்; ஆதலின், மனிதர் இக்காரணத்தாலும் இல்லையென்று சொல்லாமல்

இயன்றவரை வறிஞர்க்குப் பொருள் கொடுத்தல் வேண்டு மென்பதைக் குறிப்பிட்டார் முனிவரென்க.

மனிதர், இக்காரணத்தால், வறிஞர்க்குப் பொருள் கொடாதிருத்தலும், மேலுரைத்தவாறு செல்வம் குறைந் திருக்கும்போது தானஞ்செய்தால் பொருள் குறைந்துவிடு மென்னும் காரணத்தால் கொடாதிருத்தலும் புண்ணியத்தைக் கெடுக்கக்கூடியன வாதலின், இவ்விரண்டினாலும் யாசகர்க் குப் பொருளில்லையென்னாது கொடுத்தல் வேண்டுமென்று முனிவர் கூறினார்.

தவசிகளின் பிச்சைப் பாத்திரம் சோற்றைச் சிறிது சிறிதாகச் சேர்த்து நிறைத்துவிடுதல்போல இல்லறத்தார் சிறிதளவாகச் செய்யும் தானமும் புண்ணியத்தைக் கிரமமாகச் சேர்த்து நிறைத்து விடும்; ஆதலின், அப்பாத்திரம் இதற் குவமையாகக் கூறப்பட்டது; இஃதுவமையணியின் பாற் படும். 'அறப்பயன்' என்பது இரண்டிடங்களினுங் கூட்டப் பட்டது; முன் கூட்டப்பட்டதில், 'பயன்' என்பது பயன்றரு காரியத்தை உணர்த்திநின்றது; பின்னதில் அறத்தின் பயனாகிய புண்ணியத்தை உணர்த்திநின்றது. 'யார்மாட்டும்' என்பது, 'உற்றார் மற்றார் என்னும் பேதமின்றி எவரிடத்தும்' என்பதை விளக்கி நின்றது.

இல்- ஈறுகெட்ட குறிப்பு வினைமுற்று. 'புதவின்' என்பதில் இன்- ஏழனுருபு. 'புகும்' என்பது செய்யுளோசை நிறைத்தற் பொருட்டு, 'புகூஉம், என அளபெடுத்து நின்றது; 'கு' என்பதில் ஒரு மாத்திரையே யிருத்தலால் அது செய்யு ளோசையை நிரப்பாது; அங்கு மூன்று மாத்திரை யிருந்தாலே புளிமாச்சீராய்ச் செய்யுளோசை நிரப்பும்; ஆகலின், இரண்டு மாத்திரையுள்ள, 'கூ' ஒரு மாத்திரையுள்ள, 'உ' இரண்டும் சேர்ந்துமூன்று மாத்திரையாய் அவ்வோசையை நிரப்பின; இஃதின்னிசை யளபெடை யன்று. தவசி- தபஸ்வீ என்னும்

வடசொற்றிரிபு; 'தவஞ்செய்பவன்' என்பது இதன்பொருள். தவசிகள், பசியைத் தணித்துக் கொள்ளுதற்கு இல்லறத்தார் பால் பிச்சையேற்றுண்பவராகலின், பிச்சைப்பாத்திரம் அவர்க்குரியதெனக் கூறப்பட்டது. பைய குறிப்பு வினை யெச்சம்; இதில், பை- பகுதி; இது, 'மெதுவாதல்' என்னும் பொருள்தரும் அ- விகுதி. 'நிறைத்து விடும்' என்பதில், விடு- துணைவினை; அசையெனவும் படும்.

100. கடிப்பிடு கண்முரசங் காதத்தோர் கேட்பர்
இடித்து முழங்கியதோர் யோசனையோர்- கேட்பர்
அடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்
கொடுத்தா ரெனப்படுஞ் சொல்.

(இ-ள்) கடிப்பு இடு- குறுந்தடியால் அடிக்கப்படு கின்ற, கண்- (வட்டமான இடத்தையுடைய, முரசம்- பேரிகையின் ஒலியை, காதத்தோர்- ஒருகாத தூரத்திலுள்ள வர்கள், கேட்பர்- கேட்பார்கள், இடித்து- (மேகம்) இடி இடித்து, முழங்கியது- ஒலித்ததை, ஓர் யோசனையோர்- ஒருயோசனை தூரத்திலிருப்பவர்கள், கேட்பர்- கேட்பார்கள், சான்றோர்- பெரியோரால், கொடுத்தார் எனப்படும் சொல் - (இவர் யாசகர்க்குப் பொருளைக்) கொடுத்தார் என்று சொல் லப்படும் சொல்லானது, (ஒருருவர்க்குண்டாகுமானால், அது) அடுக்கிய-(ஒன்றின்மே லொன்றாக) அடுக்கப்பட்டி ருக்கிற, மு உலகும் - மூன்றுலகத்தார்களும், கேட்கும்- கேட்பார்கள்;

முரசின் ஒலியைக் காததூரத்திலிருப்பவர்கள் கேட் பார்கள்; மேகம் இடி இடித்து முழங்கும் ஒலியை ஒரு யோசனை தூரத்திலிருப்பவர்கள் கேட்பார்கள்; யாசகர்க்குப் பொருள் கொடுப்பாரைப் பார்த்துப் பெரியோர், 'இவர், இரப்பவர்க்குப் பொன் கொடுத்தார்' எனச் சொல்லுஞ்சொல் மூன்றுலகத்தாரும் கேட்பார்கள் என்பது இதன் கருத்து.

இதனால், யாசகர்க்குப் பொருள்கொடுப்பவரின் புகழானது மூன்றுலகங்களிலும் பரவுமென்பது பெறப்படும். இங்ஙனம் புகழ்பரவு மென்றதனால் அப்புகழ்ச்சிக்குரிய தானத்தை இல்லறத்தார் செய்தல் வேண்டுமென்பது விளக்கியதாகும்.

கடிப்பு- முரசறையும் சிறுகோல்; ''கடிப்பிகு முரசின் முழங்கு'' (குறுந்-270), ''முரசு கடிப்பிகுப்பவும்''(புற-158) என்பவற்றில், முரசறையுங் கோலுக்கு, 'கடிப்பு' என்னும் பெயர்கள் வருதல்காண்க. கண்- இடம்; இஃதிங்கு முரசில் அடிக்கப்படும் இடத்தை யுணர்த்திநின்றது. முரஜன், யோஜநா என்ற வடசொற்கள் திரிந்து முரசம், யோசனை எனநின்றன. காதம் - ஏழரை நாழிவழி; நான்கு காதம் கொண்டது ஒரு யோசனை; சீவகசிந்தாமணி- 1901-ஆம் செய்யுளுரையில் இவற்றின் விவரங்கள் காணப்படும். முழங்கியது- வினையாலணையும் பெயர். மூவுலகு- மேல், நடு, கீழ் என்பன. 'கேட்குமே' என்பதில், ஏ- தேற்றப் பொருளது. 'சான்றோர்' என்பதை, 'எனப்படும்' என்பத னோடு கூட்டி, 'சான்றோர் எனப்படும்' என முடிக்க வேண்டும்; இது மூன்றாம் வேற்றுமைத்தொகை. 'சான்றோ ரால் எனப்படும் எனவிரியும். இச்செய்யுள் ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா. (௧௦)

அதிகாரம் 11

பழவினை

பழவினை - முற்பிறப்புக்களில் செய்யப்பட்ட செயல்; அது நல்வினை, தீவினையென்னும் இரண்டு வகை களையுடையது. அத்தகைய பழவினையின் தன்மையைக் கூறுவதாகலின் இவ்வதிகாரம் இப்பெயர்பெற்றது. பழ வினையின் இயற்கையைக் கூறுவதாவது, முற்பிறப்புக்களில் மனிதராற் செய்யப்பட்ட அது இப்பிறப்பில் அவரை இன்ன விதமாகச் சேர்ந்து அவர்க்கு இவ்வித பயனை யளிக்கு மென்பதைக் கூறுதலாம். அங்ஙனங் கூறுவதில், நல்வினை செய்தார் நல்ல அனுபவங்களைப் பெறுவரென்பதையும், தீவினை செய்தார் தீய அனுபவங்களைப் பெறுவரென்பதை யும் விளக்கும். ஆதலின், ஈகை முதலிய நல்வினைகளை யுடையார் அடுத்தபிறப்பில் நலமடைவரென்பதையும், அவையில்லாதவர் வறுமையால் துன்புறுவரென்பதையும் விளக்குதற்கு இது, ஈகை என்பதற்குப் பின் வைக்கப்பட்டது. பழவினை- பண்புத்தொகை; பழமையாகிய வினையென விரியும். இது, ஊழ்என்றும் சொல்லப்படும்.

101. *பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று*
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்- தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு.

(இ-ள்.) குழக்கன்று- இளம்பசுவின் கன்றானது, பல் ஆவுள்- (தன் தாயோடு கூடிநிற்கும்) பல பசுக்களின் நடுவில் உய்த்துவிடினும்- செலுத்திவிடப்பட்டாலும், தாய்- (தனது) தாயை, நாடிக் கோடலை- (தானே) தேடி அடைதலில், வல்லது ஆம்- வல்லமையை யுடையதாம், தொல்லை பழ வினையும்- (மனிதர் முன் பிறப்புக்களிற் செய்த) 'மிகப் பழமையான கருமமும், (பலகோடி ஜீவர்களுள்ளும்), தன் செய்த- தன்னைச் செய்த, கிழவனை- உரிமை யுடையவனை, நாடி- கொளற்கு- தேடி, அடைவதில், அன்னதகைத்தே- அப்படிப்பட்ட தன்மையை (அதாவது வல்லமையை) உடையதே; எ-று.

பெருங்கூட்டமான பசுக்களைப் பரிபாலிக்கும் கோபாலர்கள் எப்பொழுதும் இளங்கன்றுகளை ஒரு பக்கத் திலும், பசுக்களை ஒரு பக்கத்திலும் பிரித்தே நிறுத்தி யிருப் பார்கள்; காலைமாலை ஆகிய இரண்டு நேரங்களிலும் கன்றுகள், தாய்ப் பசுக்களினிடத்தில் பால் பருகுமாறு அவற்றை ஒவ்வொன்றாக விடுவார்கள்; அங்ஙனம் அவர் களால் விடப்படும் ஒவ்வொரு கன்றும், பெருங்கூட்டமாக நிற்கும் பசுக்களினிடையில் உள்ள தன்தன் தாயை, ஐய மின்றித் தெரிந்தடையும். பழவினையும் அவ்வாறே, உலகத் திலுள்ள எண்ணிறந்த மனிதர்களுள், தன்னைச் செய்தவனை எளிதி லுணர்ந்தடையும். ஆதலின், அவ்விளம் பசுக்கன்று பழவினைக்குவமையாகக் கூறப்பட்டது; இஃதுவமையணி.

இங்ஙனங் கூறியதனால், பழவினையானது, தன்னை முற்பிறப்பில் செய்தார், இப்பிறப்பில் எங்கிருப்பினும் அவரை விடாமல் தேடி அடையுமென்பதும், அது நல் வினை யாயிருந்தால் அவர்க்கு நற்பயனை அளிக்கு மென்பதும், தீவனையாயிருந்தால் கெட்டபயனை அளிக்கு மென்பதும், இம்மை மறுமைகளில் நன்மையடைய நாடு வோர் நற்கரு மங்களைச் செய்யவேண்டுமென்பதும் விளங்கும்.

பல்ஆ- பண்புத்தொகை; 'பல' என்னும் சொல், தன் முன் பிறவர ஈற்றகரங் கெட்டு, 'பல்' என நின்றது;

''தொடர லிறுதி தம்முற் றாம்வரின்
லகரம் றகரவொற் றாகலு முரித்தே''

என்னும் (தொல்-எழுத்-உயிர்ம-12-ஆம்) சூத்திரவுரையால் இது துணியப்படும். 'பல்லாவொளித்துவிடினும்' எனவும் பாடபேதமுண்டு; இப்பாடத்துக்கு, '(தாய்ப் பசுவைப்) பலபசுக்களினிடையே மறைத்து வைத்துவிட்டாலும்' என்று பொருள்விரித்தல் வேண்டும். 'விடின்' என்றசொல், இப் பாடபேத வுரையில் செய்வினைப் பொருள்தரும், முன் உரையில் செயப்பாட்டு வினைப்பொருளை உணர்த்தும்; அங்ஙனம் செயப்பாட்டு வினைப்பொரு ளுணர்த்துங்கால், இதில், அகரச்சாரியையும் படுவிகுதியும் செய்யுள் விகாரத் தாற் றொக்கனவெனக் கொள்ளல் வேண்டும். 'விடினும்' என்பதிலுள்ள உம்மை - சிறப்புப் பொருளது. குழ- இளமையை உணர்த்தும் உரிச்சொல்; ''மழவுங் குழவு மிளமைப்பொருள்'' என்னும் (தொல்-சொல்-உரி-15-ஆம்) சூத்திரத்தால் இது துணியப்படும். குழக்கன்று- பண்புத் தொகை; இது, 'குழவாகிய கன்று' என விரியும். வல்லது- பண்படியாய்ப்பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு வினைமுற்று; இதில், வல் - பகுதி, அ - சாரியை, து - ஒன்றன்பால் விகுதி, லகரம் இரட்டியது சந்தி. ஆம்- அசை; இதற்கு, 'ஆகும்' எனவும் பொருள்கொள்ளலாம்; அங்ஙனங் கொள்ளும் போது, 'வல்லது' என்பதைப் பண்படியாகப் பிறந்த பெய ரென்றேனும், குறிப்பு முற்றாலடைந்த பெயரென்றேனும் கொள்ளல்வேண்டும். தாய்- இருதிணைப் பொதுப்பெயர்; ''பெண்மை சுட்டிய வெல்லாப்பெயரும், ஒன்றற்கு மொருத் திக்கு மொன்றிய நிலையே'' என்னும் (தொல்-சொல்-பெய-26-ஆம்) சூத்திரம் பார்க்க- கோடலை' என்பதில், ஐ - என் னும் இரண்டனுருபும், 'கொளற்கு' என்பதில், கு- என்னும் நான்கனுருபும், ஏழாம்வேற்றுமை இடப் பொருளில் மயங்கி

வந்தன; இங்ஙனம் வந்தது உருபு மயக்கமெனப்படும். தொல்லை - பண்புப்பெயர்; இதில், தொல்- பகுதி, ஐ- விகுதி; 'தொல்' என்னும் பகுதி, மை விகுதி பெற்று, 'தொன்மை' என்றும், று விகுதி பெற்று, 'தொன்று' என்றும் வரும். 'பழமை' என்னும் பண்புப்பெயர், மை விகுதி கெட்டு, 'பழ' என நின்றது. 'தொல்லைப்பழமை' என்பது ஒருபொருட்பன்மொழி; வினை, மிக நீண்ட காலத்திற்கு முன்னரே ஏற்பட்டு மனிதரைத் தொடர்ந்து வருதலைச் சிறப்பித்தற்கு வந்ததாம். இனி, 'தொல்லை' என்பதை, முற் பிறப்பையுணர்த்தும் பண்பாகு பெயரெனக் கொண்டு, 'தொல்லைப் பழவினை' என்பதற்கு, 'முற்பிறப்பிற்செய்த - பழமையாகிய வினை' எனப்பொருளுரைப்பினும் பொருந் தும். 'வினையும்' என்பதிலுள்ள, உம்மை- இறந்தது தழுவிய எச்சப்பொருளது. அன்ன - சுட்டடியாய்ப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம்; இதில், அ - பகுதி, அ - விகுதி, ன் - சாரியை, மற்றொரு, ன்- சந்தி; அன்- பகுதியெனக் கொள்வாருமுளர். 'தன் செய்த' என்பது, 'தற்செய்த' என்றாயிற்று; இதில் னகரம் றகர மாயிற்று; 'தான்' என்பது முதல் குறுகி, 'தன்' என நின்றது. தகைத்து- குறிப்புமுற்று; இதில், தகை- பகுதி, து- விகுதி; 'தகை' என்பது குணத்தையுணர்த்தும்; தகு- என்னும் வினைப்பகுதி, ஐ - என்னும் தொழிற்பெயர் விகுதி பெற்று, தகை- என நின்றது; எனினும் இது பொருளால் பண்பையே உணர்த்தும்; 'தகைத்தே' என்பதிலுள்ள, ஏ - தேற்றம், கிழவன் - பண்படியாகப் பிறந்தபெயர்; இதில், கிழமை- பகுதி, அன் - விகுதி; 'கிழமை' என்பதில் மையீறு கெட்டது. இப்பொரு ளில் பெண்பாலுக்கு, 'கிழத்தி' என்பது பெயராம்; 'கிழவன்' என்னும் பெயர், 'வயதுமுதிர்ந்தவன்' என்னும் பொருளிலும் வரும்; அங்ஙனம் வருமிடத்து அதற்கு, 'கிழம்' என்பது பகுதியாம்; பெண்பால் - கிழவி.

102. *உருவு மிளமையு மொண்பொருளு முட்கு*
மொருவழி நில்லாமை கண்டு- மொருவழி
ஒன்றேயு மில்லாதான் வாழ்க்கை யுடம்பிட்டு
நின்றுவீழ்ந் தக்க துடைத்து.

(இ-ள்) (உலகத்தில், உருவம், இளமை, பொருள், பிறர் அஞ்சத்தக்க மதிப்பு முதலியன எல்லா மனிதரிடத்தும் ஒரே விதமாக நிலைபெற்றிரா; அவரவர் முற்பிறப்பிற்செய்த நல்வினை தீவினைகளின் அளவுக்குத் தக்கவாறு சிலர்க்கு அவையெல்லாம் ஒருங்கே அமையும்; சிலர்க்குச் சில அமையும், சிலர்க்கு ஒன்றுமே அமையாது; உலகத்தார் இவற்றைப்பெற்று இம்மைப்பயனாகிய இன்பத்தை யடையவேண்டுமாயின் முற்பிறப்பில் நல்வினை செய்திருத் தல் வேண்டும்; இவ்வாறு பழவினையால்), உருவும்- அழகும், இளமையும்- யௌவனமும், ஒண்பொருளும்- மேன்மையான செல்வமும், உட்கும்- (பலரும் தம்மைப் பார்த்து) அஞ்சுதலும், (அதாவது பிறர்பார்த்து அஞ்சத்தக்க மதிப்பும்), ஒருவழி-(எல்லோரிடத்தும்) ஒரேவிதமாக, நில்லாமை- நிலைபெறாதிருக்கும் தன்மையை, கண்டும்- பார்த்தும், (முற்பிறப்பில்), ஒரு வழி- (யாதாயினும்) ஒரு வழியால், ஒன்றேயும்- ஒரு சிறிதுநல்வினையையாயினும், இல்லாதான்- (செய்தல்) இல்லாதவனுடைய, வாழ்க்கை- வாழ்வானது, உடம்பு இட்டுநின்று-உடம்பைச் (சிறிது காலம்) பெற்று நின்று, (அதனாலாம் இம்மைப் பயனைக் கொள்ளாமல்), வீழ்ம்தக்கது உடைத்து - வீழும் தன்மையை யுடையது; எ-று.

உருவம், இளமை, பொருள் முதலியவைகளெல் லாம் எல்லோரிடத்தும் ஒரேவிதமாக அமையமாட்டா; அவரவர் பழவினைக்குத் தக்கபடி சிலரிடம் எல்லாம் அமைந்தும், சிலரிடம் அவற்றுட் சில அமைந்தும், சிலரிடம் ஒன்றும் அமையாமலுமிருக்கும். ஆதலின், இவற்றை ஒருங்கே பெறவிரும்புவோர் நல்வினை புரியவேண்டும்;

அங்ஙனம் புரிவோரே மறுபிறப்பில் இம்மைப்பயன்களாகிய இவற்றைப்பெற்று, இவற்றினால் மறுமைக்குரிய தருமங்களையும் செய்து உயர்வுறுவர்; உருவிளமை முதலியன இங்ஙனம் பழவினையால் ஒரு வழியே நில்லாமையைப் பார்த்தும் முற்பிறப்பில் சிறிதேனும் நல்வினை செய்யாதவனுடைய வாழ்க்கையானது இவ்வுலகத்தில் ஒரு பயனுமில்லாததாகும் என்பது இதன் கருத்து.

உருவு, இளமை, பொருள் முதலியன மனிதர்க்கு ஏற்படின் அவற்றால் அவர்கள் இன்பத்தை அனுபவிப்பார்கள்; அவ்வனுபவமே இம்மைப்பயனாம். இப்பயனைத் தரும் உரு முதலியன முற்பிறப்பில் நல்வினை செய்தார்க்கே கைகூடும்; எங்ஙனமெனில் அந்நல்வினை செய்தார், எப்பொழுதும் நீங்காத அழகைப்பெற்றிருப்பர்; இளமையை அதற்குரிய காலம்வரை குறைவின்றிப் பெற்றிருப்பர்; ஆயுள்வரை குறைவுறாத செல்வத்தை யுடையவராயிருப்பர்; பிறர் அஞ்சத்தக்க மதிப்பை என்றும் பெற்றிருப்பர். முற்பிறப்பில் நல்வினை செய்யாதவர் அழகற்றவராயிருப்பர்; நோய் முதலியவற்றால் இளமை யின்பத்தை யிழந்து வருந்துவர்; செல்வமின்றி வறுமை கொண்டுழல்வர்; எவராலும் மதிக்கப் படாமல் இகழப்படுவர். நல்வினை தீவினை கலந்து செய்திருப்பவர் மேற்கூறியவற்றுள் சில பெற்றும் பெறாமலுமிருப்பர். இக்காரணத்தாலேயே உருவம் முதலியன எல்லோரிடத்தும் ஒரே தன்மையுடையனவாயிராமல் விகற்பப்பட்டிருக்கின்றன. இவை பிரிதியக்ஷமாயிருப்பதால் இவற்றைக் கண்டும் நல்வினை செய்யாதவன் உலகில் ஒரு பயனுமின்றி உடலெடுத்து மாய்வான்.

உட்கு- கருவிப்பொருள் விகுதி புணர்ந்து கெட்ட பெயர்; 'அஞ்சுவது' என்பது இதன் பொருள்; இஃதிங்குப் பிறர் அஞ்சுதற்குக் காரணமான மதிப்பை யுணர்த்திநின்றது; இனி, இதனை முதனிலைத் தொழிற்பெயரெனக் கொண்டு, அஃதாகுபெயராய் அஞ்சுதலுக்குக் காரணமான மதிப்பை

யுணர்த்திற் றெனலுமாம். முதலடி நான்கிலுமுள்ள உம்மைகள்- எண்ணுப்பொருளன. 'கண்டும்' என்பதிலுள்ள உம்மை - உயர்வு சிறப்புப் பொருளது. 'ஒன்றேயும்' என்பதன் உம்மை - இழிவு சிறப்பு; விகற்பப் பொருள தெனினுமாம். நின்று- அசையுமாம். 'வீழும்' என்னும் எதிர்காலப்பெயரெச்சம் நடுமகரமெய்யின்மேல் ஏறிநின்ற உகரங்கெட, 'வீழ்ம்' என நின்றது; உகரக் கேட்டைத் தொகுத்தலெனக் கோடலு மொன்று. தக்கது- தகை, தகுதி என்பனபோல குணத்தை யுணர்த்துந் தொழிற் பெயர். (உ)

103. *வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை*
அளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லைக் களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்.

(இ-ள்.) (உலகத்தில்), வளம்பட- (தமக்குச்செல்வம் முதலியவற்றால்) செழிப்புண்டாக, வேண்டாதார்- விரும்பாதவர், யார்- எவருளர்?, யாரும் இல்லை- எவரும் இல்லை, (எல்லோருமே விரும்புவர்; எனினும், அஃதவரின் விருப்பப்படி அமையாது; வினைக்குத் தக்கவாறு அமையும்) போகம் - (அவை அமைந்து அவற்றாலுண்டாம்) சுகானுபவங்கள், அவர் அவர் ஆற்றான்- (முற்பிறப்பில்செய்த) அவரவருடைய புண்ணியச் செய்கையினாலே, அளந்தன- அளந்து வைக்கப்பட்டிருக்கின்றன, (அவ்வளவின்படியே தான் அவர்கள் அவற்றை அனுபவித்தல் இயலும்), விளங்காய் - விளங்காயை, திரட்டினார் - உருட்டி உருண்டை வடிவினதாகச் செய்துவைத்தவர், இல்லை - எவருமிலர், களங்கனியை - களாப்பழத்தை, கார் என - கரிய உருவினதாக, செய்தாரும் - செய்தவர்களும், இல்- இல்லை, இவை தங்கள் இயற்கையால் அங்ஙனம் அமைந்திருக்கின்றன; இவற்றைப் போலவே மனிதர் சுகானுபவங்களும் பழவினையின் இயற்கையாக அமைந்திருக்கின்றன; ஆதலின், அவற்றை அவ்வாறு செய்வாரெவருமிலர்; எ-று.

உலகத்தில் எல்லோரும் செல்வம்பெற்றுச் சுகானு பவங்களை அனுபவித்தற்கு விரும்பக் கூடியவர்களே யெனி னும், அவை, அவரவர்களுடைய புண்ணியச் செய்கைக்குத் தக்கவாறே அவர்க்குக் கிடைக்கும் என்பது இதன் கருத்து.

இங்குக் கூறியபடி, உலகானுபவங்கள் மனிதரின் பழவினைக்குத் தக்கபடி அவர்க்கு அளந்து வைக்கப்படு மென்பதை,

''அளந்துதாங் கொண்டு காத்த வருந்தவ
முடைய நீரார்க்
களந்தன போக மெல்லா மவரவர்க் கற்றை நாளே
அளந்தன வாழு நாளு மதுவெனக்
குரைய லென்றான்
விளங்கொளி மணிகள் வேய்ந்த விடுசுட
ரிமைக்கும் பூணான்''

என்னும் (சீவகசிந்தாமணி- நாம- 184-ஆம்) செய்யுளானு முணரலாம். இச்செய்யுளில் விளங்காய், களங்கனி என்ப வற்றின் இயற்கைகளை, மனிதரின் புண்ணியச் செயலுக்குத் தக்கபடி பழவினையால் அளந்து வைக்கப்பட்டு அவர்க்கு இயற்கையில் இங்கு அமைந்திருக்கும் சுகானுபவங்களுக்கு உவமையாக எடுத்துக்காட்டி உவமவுருபு விரிக்காமல் நிறுத் தியது எடுத்துக்காட்டுவமையணி. ''யார்; யாருமில்லை' என வினாவும், விடையுமாகக் கூறியது, 'எவருமில்லை' என் புதை உறுதிப் படுத்துதற்கு. 'யாரும்' என்பதிலுள்ள உம்மை- முற்றுப்பொருளது. அளந்தன- செயப்பாட்டுவினை செய் வினைபோல் வந்தது. இல்- என்னும் எதிர்மறைக் குறிப்பின் பகுதி, 'இல்லை' என்னும் முற்றுப்பொருளைத் தந்தது. ''மரப்பெயர்க்கிளவி மெல்லெழுத்து மிகுமே'' என்னும் (தொல்-எழுத்- உயிர்ம-15) சூத்திரவிதிப்படி விள, கள என்னும் மரப்பெயர்கள் காய், கனி யென்பவற்றோடு புணருங்கால் மெல்லெழுத்து மிக்கு விளங்காய், களங்கனி

என முடிந்து நின்றன. 'இல்லை' என்பதன்முன், 'களங்கனி' என்னும் வல்லெழுத்து முதன்மொழிவர, வல்லெழுத்து மிக்கது;

''இல்லென் கிளவு யின்மை செப்பின்
வல்லெழுத்து மிகுதலு மையிடை வருதலும்
இயற்கை யாதலு மாகாரம் வருதலும்
கொளத்தகு மரபி னாகிட னுடைத்தே''

என்னும் (தொல் - எழுத் - புள் -ம-77-ஆம்) சூத்திர விதியால் இது துணியப்படும். இச்செய்யுள் இருவிகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா. (ரு)

104. உறப்பால நீக்க லுறுவர்க்கு மாகா
பெறற்பா லனையவு மன்னவா மாரி
வறப்பிற் றருவாரு மில்லை யதனைச்
சிறப்பிற் றணிப்பாரு மில்.

(இ-ள்.) மாரி- மழையானது, (உலகத்தில்), வறப்பின் - (பெய்யாமல்) வறண்டால், அதனை- அம்மழையை, தரு வாரும் - கொடுப்பவரும், இல்லை- இலராவர், சிறப்பின்- (அது) அதிகப்பட்டால், அதனை - அதை, தணிப்பாரும்- அடக்கிவிடத்தக்கவர்களும், இல் - இல்லை, (இவற்றைப் போல), உறல்பால- (பழவினையால் தம்மிடம் வந்து) சேருந்தன்மை யுடையனவாகிய துன்பங்களை, நீக்கல் - அகற்றுதல், உறுவர்க்கும் - (மற்ற எதையும் நீக்கத்தக்க ஆற்றல் மிகுந்த) முனிவர்களுக்கும், ஆகா - முடியாது, அனைய- அப்பேர்ப்பட்டனவாகிய (அவற்றைப்போலவே பழவினையால் வருவனவாகிய) பெறல் பாலவும் - (தாம்) பெறத்தக்க நன்மைகளும், அன்னவாம் - அத்தகையனவே யாம் (அவ்வாறே அவர்களால் அகற்றிட முடியாதனவாம்); எ-று.

உலகத்திலுள்ள உயிர்கள் வருந்தும்படி மழை பெய்யாமல் வறண்டகாலத்தில் அத்துன்பம் நீங்கும்படி அம்மழை பெய்யுமாறு செய்வாரெவருமிலர்; உயிர்கள் மகிழும்படி மழை சிறந்து பெய்யுங் காலத்தில், பெய்யாமல் அதனை அடக்குவாரெவருமிலர்; இச்செயல்கள் இயற்கையாகவே நடந்து கொண்டிருக்கும்; இவற்றைப் போலவே, மனிதர்க்குப் பழவினையால் வந்துசேரும் துன்பங்களை நீக்கிக் கொள்ளுதல் முனிவர்களாலும் ஆகாது; மனிதர்கள் பழவினையால் அடையும் நன்மைகளும் அவ்வாறே நீக்க முடியாதனவாம் என்பது இதன் கருத்து.

இங்ஙனங் கூறியதனால், மனிதர்க்கு அவரது பழவினையால் நன்மை தீமைகள் அமையும்; அவற்றை மனிதர் தம்செயலால் மாற்றிக்கொள்ளுதல் முடியாதென்பது பெறப்படும். இச்செய்யுளும் எடுத்துக்காட்டுவமையணி அமையப் பெற்றது; முறைநிரனிறைப் பொருள்கோள் அமைந்தது.

உறற்பால- வந்துசேருந் தன்மையுடையன; உறல்- சேர்தல், பால்- தன்மை, பால- தன்மையுடையன, இதில் அ- பலவின் பால் விகுதி; 'உறற்பால்' என்பது, 'சேருந்தன்மையுடையன' என்ற பொருளை மட்டுமே தருவதெனினும், பின், 'நீக்கல்' எனவருஞ் சொற்குறிப்பினால் துன்பங்களை விளக்கிற்று; நீக்கற்குரியவை துன்பங்களேயாதலின் இங்ஙனம் பொருள் கொள்ளப்பட்டது. இதற்கு இவ்வகைப் பொருள் கொள்ளப்பட்டதனால், இதற்கெதிராக வந்த, 'பெறற்பாலனைய' என்பதற்கு, நன்மைகள் எனப் பொருள் கொள்ளப்பட்டது. உறு- மிகுதி; உறுவர்- மிகுதிப்பாட்டையுடையவர்; முனிவர்க்கு மிகுதிப்பாடாவது பிறர்செய்தற்கியலாததையும் செய்யும் ஆற்றலாம். 'ஆகாது' என்பது ஈறுதொகுத்தலாய், 'ஆகா' என நின்றது. 'பெறற்பாலனைய' என்பதில், 'பால்' என்பதன் ஈற்றகரந் தொக்கது. அன்ன- குறிப்பு வினைமுற்று; வினையாலணையும் பெயருமாம். வறப்பின் - செயினென்னும் வாய்பாட் டெதிர்கால வினை

யெச்சம்; ப்- இடைநிலை, இன்- விகுதி, பகரமிடட்டியது- சந்தி. ‘சிறப்பின்’ என்பதையும் இங்ஙனமே கொள்க. *(௪)*

105. தினைத்துணைய ராகித்தந் தேசுள் ளடக்கிப்
பனைத்துணையார் வைகலும் பாடழிந்து வாழ்வர்
நினைப்பக் கிடந்த தெவனுண்டா மேலை
வினைப்பய னல்லாற் பிற.

(இ-ள்,) பனைதுணையார்- பனையளவாகிய பெரியார், வைகலும்- நாள்தோறும், பாடுஅழிந்து - (தமது) பெருமைகெட்டுதினைதுணையார் ஆகி- தினையளவாகிய சிறியவர்களாய், தம்- தம்முடைய, தேசு- பிரகாசமான சொரூபத்தை, உள் அடக்கி- உள்ளே அடக்கிக்கொண்டு, வாழ்வர்- வாழ்வார்கள், நினைப்ப- (இதற்குக் காரணமாக) எண்ணுதற்கு, கிடந்தது- அமைந்திருந்தது, மேலை வினைப் பயன் அல்லால்- முற்பிறப்பில் செய்த தீவினையின் பயனே அல்லாமல், பிற எவன் உண்டாம்- வேறு யாது உளதாம்? (எதுவுமில்லை); எ-று.

செல்வத்தாற் சிறந்து பெரியாராய் வாழ்ந்தவர்களும், வறுமையால் தாழ்ந்து பெருமைகெட்டு வாழ்வர்; இதற்குக் காரணம் அவர்கள் முற்பிறப்பிற் செய்த தீவினையே என்பது இதன் கருத்து.

இதனால், முற்பிறப்பில் நல்வினைசெய்தார் இப் பிறப்பில் சிறந்த வாழ்க்கையை யுடையவராவரென்பதும், தீவினை செய்தார் தாழ்ந்த வாழ்க்கையை அடைவரென்பதும் பெறப்படும். சிறு நல்வினையும், பெருந் தீவினையும் செய்தவர், அந்நல்வினையாற் சிறிதுகாலம் செல்வம் பெற் றிருந்து பின்னர்த் தாழ்வுறுவர். ‘பனைத்துணையார் தினைத் துணையராகி.... பாடழிந்து வாழ்வர்’ என்று இச்செய்யுளில் முனிவர் கூறியது இத்தகையினர்களைக் குறித்ததாம்.

தேசு - ஒளி; அதாவது பலரும் மதிக்குமாறு செல்வத் தாலேற்படும் பொலிவான தோற்றம்; புகழுமாம்; சீவக சிந்தாமணி - 771-ஆம் செய்யுளில், ''திருவுந் தேசு நோக்கு மின்'' என வருவதில், 'தேசு' என்பது புகழ் என்னும் பொருளில் வருதல்காண்க. தினை- சிறுமைக்கு எடுத்துக் காட்டப்படும் அளவு; பனை பெருமைக்குக் காட்டப்படும் அளவு;

''தினைத்துணை நன்றி செயினும்
பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்''

என்னும் (திருக்-104-ஆம்) செய்யுளும்,

''தினைத்துணையாங் குற்றம் வரினும்
பனைத்துணையாக
கொள்வர் பழிநாணு வார்''

என்னும் (திருக்-433-ஆம்) செய்யுளும்,

''தினைத்துணையு மூடாமை வேண்டும்
பனைத்துணையுங்
காம நிறைய வரின்''

என்னும் (திருக்-1282-ஆம்) செய்யுளும் இவற்றை விளக்கு வனவாம். இவை இங்குப் பிரமாணத்தைக் குறிக்காமல் மனிதரின் தாழ்வு, உயர்வுகளைக் குறித்தன. தினை- ஒரு வகைச் சிறு தானியத்தின் பெயர்; பனை - உயர்ந்த மரத்தின் பெயர். தேசு- தேஜஸ் என்னும் வடசொற்றிரிபு. 'வைகலும்' என்பதன் உம்மை- முற்றுப்பொருளது. நினைப்ப- எதிர்கால வினையெச்சம். எவன்- வினாவினைக் குறிப்பு வினையா லணையும் பெயர்; இதில், எ- பகுதி, அ- சாரியை, ன்- விகுதி; இது, அகரச் சாரியையின்றி 'என்' எனவும், அதன்மேல்

ஐச்சாரியையேற்று, 'என்னை' எனவும், அகரச்சாரியை பெற்று, 'என்ன' எனவும் வரும். இனி, 'எவன்' என்பதைப் பகாப்பதமாகக் கொள்ளுதலுமுண்டு; அங்ஙனங் கொள்ளு மிடத்து, 'என்' என்பதை இடைக்குறையெனக் கொள்ளல் வேண்டும். 'பிற எவனுண்டாம்' என்பது எதிர்மறையெச்சம். இச்செய்யுளும் ஒரு விகற்பத்தான் முடிந்த இன்னிசை வெண்பா. (ரு)

106. *பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவுங்*
கல்லாதார் வாழ்வ தறிதிரேற் - கல்லாதார்
சேதன மென்னுமச் சேறகத் தின்மையாற்
கோதென்று கொள்ளாதாங் கூற்று.

(இ-ள்.) (மனிதர்களே!) ஆன்ற - (நீதிகள்) நிறைந்த, பல்கேள்வி - பலநூற் கேள்விகளின், பயன் - பயனை, உணர்வார் - அறிந்தவர்கள், வீய - இறக்க, கல்லாதார் - படியாத மூடர்கள், வாழ்வது - அவ்வாறு விரைவில் மரணமடை யாமல் நெடுங்காலம்) உயிரோடிருப்பதை, அறிதிர் - (நீங்கள்) அறிந்திருக்கிறீர்கள், (இச்செயல்கள் அவரவரின் பழவினை யால் நேர்வனவே. அங்ஙனம் பழவினை சம்பந்தத்தால்), கூற்று - யமன், (அறிஞர் அவ்வறிவென்னும் சாரமுள்ளவராத லின் அவரை விரைந்து பற்றிக்கொண்டு), சேதனம் என்னும் - அறிவென்கின்ற, அசேறு - அந்தச்சாரம், கல்லாதார் அகத்து - படியாதவர்களிடத்தில், இன்மையால் - இல்லாமை யினாலே, (அவரை), கோது என்று - சக்கையென்று, கொள் ளாது - கொள்ளமாட்டான், (இக்காரணங்களாலேயே அறிஞர் அழிதலும், மூடர் வாழ்தலும் ஏற்படுகின்றன); எ-று.

கற்றுணர்ந்த மேலோர் இறக்க, கல்வியறிவில்லா மூடர் இறவாமல் ஜீவித்திருப்பதற்குக் காரணம் அவர்களின் பழவினைப் பயனே என்பது இதன் கருத்து. 'அறிதிர்' என்பதற்குப்பின், 'இச்செயல்கள் அவரவரின் பழவினை யால் நேர்வனவே' என்பன முதலிய சில சொற்றொடர்கள்,

அதிகாரப் பொருண்மைநோக்கி இசை யெச்சமாக வருவித்துரைக்கப்பட்டன. மனிதரின் பழவினையால், அறிஞர் இறப்பதையும், மூடர் இருப்பதையும் கூற்றுவனுடைய செயல்களாக்கி, அவன், அறிஞர் அறிவென்னும் சாரமுள்ளவராகலின் அவரைக்கொண்டு, மூடர் அஃதில்லாதவராகலின் அவரைக்கொள்வதில்லையென்று அச்செயல்களுக்குக் காரணங் கற்பித்துக் கூறியது கவி சாதுரியமாம்; இஃது ஏதுத்தற்குறிப்பேற்றவணியின் பாற்படும்.

அகன்ற - என்பது, ஆன்றவென ஆயிற்று. உணர்வார்- வினையாலணையும் பெயர். வீய்- செயவென் வாய்பாட்டு வினையெச்சம்; இதில், வீ- பகுதி, அ- விகுதி, ய்- உடம்படு மெய். உம்- அசை. அறிதிர் - முன்னிலைப்பன்மை இறந்த கால வினைமுற்று; இதில், அறி- பகுதி, த்- இடைநிலை, இர்-விகுதி. ஏல்- அசை. சேறு- சாரம்; இஃதிப்பொருளதாதலை, சீவகசிந்தாமணி-426-ஆம் செய்யுளில், ''சேறுபடு மலர்'' என்றும், 2019-ஆம் செய்யுளில் ''சேறுபடு கோதை'' என்றும் வருவனவற்றால் உணரலாம். தேவர்களை இரு திணையாகவுங் கூறுதல் மரபாகலின், யமனுக்கு இங்கு, 'கூற்றுக்கொள்ளாது' என அஃறிணை முடிபு கூறப்பட்டது. ஆம்- அசை. (சு)

107. *இடும்பைகூர் நெஞ்சத்தா ரெல்லாருங் காண*
நெடுங்கடை நின்றுழல்வ தெல்லாம்- அடம்பம்பூ
அன்னங் கிழிக்கு மலைகடற் றண்சேர்ப்ப
முன்னை வினையாய் விடும்''

(இ-ள்.) அடம்பம்பூ- அடம்பங்கொடியின் மலர்களை, அன்னம்- அன்னப்பறவைகள், கிழிக்கும்- (மூக்கினாற்கோதிக்) கிழித்து விளையாடுகின்ற, அலை- அலைகளையுடைய, கடல்- கடலினது, தண்- குளிர்ச்சி பொருந்திய, சேர்ப்ப- துறையையுடைய பாண்டியனேஃ, உலகிற்சிலர்), இடும்பைகூர்- (வறுமைத்) துன்பம் மிகுந்த,

நெஞ்சத்தார்- மனமுடையவர்களாய், எல்லாரும் காண- யாவரும் தம்மைப் பார்க்கும்படி, நெடும்கடை- பெரிய (பலவீடுகளின்) வாயில்களில், நின்று- (பிச்சைபெற) நின்று, உழல்வதெல்லாம்- வருந்தும் செயல்களெல்லாம், முன்னை வினை ஆய்விடும்- (அவர்கள்) முற்பிறப்பிற் செய்த தீவினை யின் பயனேயாம்; எ-று.

சிலர், துன்பமிகுந்த மனத்தோடு பல வீட்டு வாயில் களிலும் சென்று பிச்சைக்குக் காத்துநின்று வருந்தும் செயல் களெல்லாம் அவர்களின் கெட்ட பழவினைப்பயனே என்பது இதன் கருத்து.

இதனால், மனிதர் இன்பதுன்பங்களை யடைதற்குக் காரணம் அவரவர் செய்த நல்லனவும், கெட்டனவுமாகிய பழவினைகளே யென்பது பெறப்படும். இதில், சிலர் இயற்கையிலேயே வறிஞராய்ப் பிறந்து வருந்துதலும் பழவினைப்பயனே என்பது கூறப்பட்டது.

'இடும்பைகூர் நெஞ்சத்தார் எல்லாரும்காண' என்பதற்கு, 'எல்லோரும் (தம்முடைய தாழ்ந்த நிலை மையை நோக்கி அதன் பொருட்டிரங்கித்) துன்பமிக்க மனத்தினராய்த் தம்மைப்பார்க்க' என்று பொருளுரைப் பினுமாம். 'நெடுங்கடை' என்பதற்கு, 'நீண்டகாலம்' எனப் பொருளுரைத்தலு மொன்று.

இடும்பை கூர் - எழுவாய்த்தொடர். கூர் நெஞ்சம்- வினைத்தொகைநிலைத்தொடர். கூர்- மிகுதி அல்லது சிறப்புப்பொருளைத் தரும் உரிச்சொல்;

''கூர்ப்புங் கழிவு முள்ளது சிறக்கும்''

என்னும் (தொல்-சொல்-உரி-18-ஆம்) சூத்திரத்தால் இது துணியப்படும். காண- வினையெச்சம். நெடுமை-

மிகுதிப்பொருளை யுணர்த்திப் பன்மையை விளக்கிநின்றது. உழல்வது - சாதியொருமை 'உழல்வன' எனப் பொருள் படும். உழலுந்தொழில் ஒன்றேயெனினும் பலவாயில் களிலும் பலவிதமாக நிகழ்வதாதலின் பன்மையாகக் கூறப் பட்டது. 'அடம்பு' என்பது அம் - சாரியை பெற்றது;

''மரப்பெயர்க் கிளவிக் கம்மே சாரியை''

என்னும் (தொல்-எழுத்- குற்றியலுகரப் புணரியல்-10ஆம்) சூத்திரவுரை பார்க்க. ஆய்விடு- ஒரே பகுதி; இதில், விடு- துணிவுப்பொருளை யுணர்த்திற்று. 'அடம்பம்பூ அன்னங் கிழிக்கும் அலைகடற்றண் சேர்ப்ப' என்றது ஆடுஉ முன் னிலை. இதில் அடிகளை மாற்றிப் பொருள்கொள்ளப் பட்டமையின், இது அடிமறிமாற்றுப் பொருள்கோளதாம்;

''அடிமறிச் செய்தி யடிநிலை திரிந்து
சீர்நிலை திரியாது தடுமாறும்மே''

என்னும் (தொல்-சொல்-எச்.11-ஆம்) சூத்திரம் பார்க்க. (எ)

108. *அறியாரு மல்ல ரறிவ தறிந்தும்*
பழியோடு பட்டவை செய்தல்- வளியோடி
நெய்த னறவுயிர்க்கு நீள்கடற் றண்சேர்ப்ப
செய்த வினையான் வரும்.

(இ-ள்.) வளி- காற்று, ஓடி- வீசுதலாலே, நெய்தல்- நெய்தல் மலர்கள், நறவு உயிர்க்கும்- தேனைச் சொரிகின்ற, நீள்கடல்- பெரிய கடலினது, தண்- குளிர்ச்சி பொருந்திய, சேர்ப்ப- கரையையுடைய பாண்டியனே!, (சிலர் அறிவுடை யவர்களாயிருந்தும் செய்யத்தக்காத காரியங்களைச் செய்கின் றார்கள்; அங்ஙனம்), அறியாரும் அல்லர்- அறியாருமல்ல ராகி, அறிவது- அறியவேண்டியவைகளை, அறிந்தும்- உணர்ந்திருந்தும், பழியோடு பட்டவை- நிந்தனையோடு

கூடிய காரியங்களை, செய்தல்- செய்வது, செய்தவினை யான்- முற்பிறப்பில்செய்த தீவினையால், வரும்- உண் டாகும்; எ-று.

சிலர் அறிவுடையவர்களாயிருந்தும் செய்யத்தகாத காரியங்களைச் செய்கிறார்கள்; அவ்வாறு செய்வது, அவர்கள் முற்பிறப்பிற் செய்த தீவினையால் நேரும் என்பது இதன் கருத்து.

இதனால், 'தவமுந் தவமுடையார்க்காகும்' என்றபடி முற்பிறப்பில் நல்வினை செய்தார்க்கே இப்பிறப்பில் நல் வினை சேருமென்பதும், தீவினை செய்தார்க்குப்பிறர் பழிக் கத்தக்க செயல்களே யுண்டாகுமென்பதும் பெறப்படும். அறிவுடையார் நற்செய்கைகளே செய்யத் தக்கவர்கள்; அப்பேர்ப்பட்டவர்களும் தீவினை செய்யுமாறு அவர் களுடைய அறிவினைப் பழவினை கெடுத்துவிடுமென்பது இதிற் குறிப்பிடப்பட்டது.

அறியாரும், அறிந்தும் என்பவற்றிலுள்ள உம்மை கள்- சிறப்புப் பொருளன. அல்லர்- குறிப்பு முற்றெச்சம். அறிவது- சாதியொருமை. பழி- பழிக்கப்படுவது; செயப்படு பொருள் விகுதி புணர்ந்து கெட்டபெயர். 'ஓட' என்னும் செயவேனெச்சம், 'ஓடி' எனச் செய்தெனெச்சமாகத் திரிந்து வந்தது. 'வளிஓடி நெய்தல் நறவுயிர்க்கும்' என்பதற்கு 'காற்று விரைந்து சென்று நெய்தல் மலரின் வாசனையை வீசுகின்ற' எனப் பொருளுரைப்பினுமாம். நெய்தல் - ஒருவகை நீர்ப்பூக் கொடி; இது பொருளாகுபெயராய் இதன் மலரை புணர்த் திற்று. நறவு- நறா என்பதன் விகாரம். 'வழியோடி' என்றும், 'நீள் கழித்தண் சேர்ப்ப' என்றும் பாடபேதங் கொள்வாரும், 'வழியோடி' என்பதற்கு, 'காற்றின் வழியேபோய்' எனப் பொருளுரைப்பாருமுளர். இச்செய்யுளின் முதலடி முற்று மோனையாக அமைந்தது; முற்றுமோனையாவது சீர்தோறும் மோனைத்தொடை அமைவது. முன்னிரண்டடிகளினும்

உள்ள எதுகை உயிரெதுகை; அதாவது இரண்டாமெழுத் தொன்றா விடினும் அதிலேறிய உயிர் ஒன்றி நிற்பது. (அ)

109. *ஈண்டுநீர் வையத்து ளெல்லாரு மெத்துணையும்*
வேண்டார்மற் றீய விழைபப னல்லவை
வேண்டினும் வேண்டா விடினு முறற்பால
தீண்டா விடுத லரிது.

(இ-ள்.) நீர் ஈண்டு- சமுத்திரம் நெருங்கிச் சூழ்ந்த, வையத்துள்- இந்நிலவுலகத்தில், எல்லாரும்- யாவரும், எத்துணையும் - எவ்வளவும், தீய- கொடியனவாகிய துன்பங் க்ளை, வேண்டார்-(அடைய) விரும்பமாட்டார்கள், விழை பயன்- விரும்பும்பயன், நல்லவை- நல்லனவாகிய இன்பங் களே, (அங்ஙனம் அவர்கள் அவற்றை), வேண்டினும்- விரும்பினாலும், வேண்டாவிடினும்-விரும்பாவிட்டாலும், உறற்பால- (பழவினையால் வந்து) அடையத்தக்கனவாகிய இன்பதுன்பங்கள், தீண்டாவிடுதல்- (அவர்களை) அடை யாமல்- விடுவது, அரிது- இல்லை; எ-று.

உலகத்திலுள்ள எல்லோரும் துன்பங்களை விரும்ப மாட்டார்கள், இன்பங்களையே விரும்புவார்கள்; எனினும், அவை அவர்களின் எண்ணப்படி வருவனவல்ல; அவர்கள் அவற்றை வேண்டினும் வேண்டாவிடினும், பழவினைப்படி அவர்களைச் சேரத்தக்கனவாகிய இன்பதுன்பங்கள் தாமே வந்தடையும் என்பது இதன் கருத்து.

'ஈண்டுநீர் வையத்து' என்பதை நேராகவே கொண்டு, அதற்கு, 'நெருங்கிய கடலாற் சூழப்பட்ட உலகத்தில்' எனப் பொருளுரைப்பினுமாம். 'விழைபயனல்லவை' என்பதை, 'விழைபயன் அல்லவை' எனப் பிரித்து, தீய என்பதனோடு கூட்டி, அத்தொடருக்கு, ''விரும்பப்படும் பயனல்லாதன வாகிய தீயவற்றை'' எனப் பொருள் விரித்து, 'வேண்டார்'

என்பதனோடு கூட்டி முடிப்பினுமாம்; இங்ஙனம் பொருள் கொள்ளுமிடத்து, 'நன்மையையே விரும்புவார்' என்பது வருவித்துரைக்கவேண்டும். 'உறற்பாலது ஈண்டா விடுதல் அரிது' எனப்பிரித்து, அதற்கு, 'அடையக்கூடியவைகள் நெருங்காமல் விடுதல் இல்லை' எனப் பொருள்கூறினுமாம்; இப்பொருள் கொள்ளுமிடத்து உறற்பாலது- சாதியொருமை யெனக் கொள்ளவேண்டும். இச்செய்யுளின் பின்னிரண்டடி களும் பழமொழி-230-ஆம் செய்யுளின் பின்னிரண்டடிகளாக அமைந்துள்ளன.

நீர்- கடலுக்கு ஆகுபெயர். மன்- அசை. தீய- தீமையடி யாகப் பிறந்த பலவின்பாற்பெயர். அரிது- அருமையடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று; இன்மைப்பொருள் தந்தது; இஃதின்மைப் பொருள் தருமென்பதை,

''தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க்
கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது''

என்னும் (திருக்குறள்-7-வது) செய்யுளில் இப்பொருள்பட்டு நிற்றலானும், அதனுரையில் பரிமேலழகர், 'உறற்பால- தீண்டாவிடுதலரிது' என்றாற்போல ஈண்டு அருமை இன்மை மேனின்றது'' என இச்செய்யுளையே உதாரணங்காட்டிப் பொருள்கூறி யிருத்தலானுந் துணியப்படும். தீண்டா - ஈறு தொக்க எதிர்மறை வினையெச்சம், 'எத்துணையும்' என்பதி லுள்ள உம்மை - இன்மை குறித்துநின்றது; ''மன்னாப் பொருளு மன்ன வியற்றே'' என்னும் (தொல்- சொல்- கிள-34 - ஆம்) சூத்திரவுரை பார்க்க.

'எட்டுணையும்' என்றும், 'விழைப்பயனல்லது' என்றும் பாட பேதங்களுண்டு. இஃதொரு விகற்ப இன்னிசை வெண்பா. (கூ)

110. *சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா*
உறுகாலத் தூற்றாகா வாமிடத்தே யாகுஞ்
சிறுகாலைப் பட்ட பொறியு மதனால்
இறுகாலத் தென்னை பரிவு.

(இ-ள்.) (மனிதர்க்கு), சிறுகாலை- சிறிது பொழுதில், பட்ட- உண்டாகிய, பொறி- பழவினைப் பயன்கள், சிறுகா- (தமக்கேற்பட்ட அளவினின்றும்) குறையமாட்டா, பெருகா - வளரமாட்டா, முறை பிறழ்ந்து- கிரமந்தவறி, வாரா- வர மாட்டா, உறுகாலத்து- துன்பம் வருங்காலத்தில், ஊற்று ஆகா- ஊன்றுகோலாகமாட்டா (அதாவது ஊன்றுகோல் போல் நின்று உதவி செய்து அத்துன்பத்தை நீக்கமாட்டா), ஆம் இடத்தே ஆகும்- உண்டாகுங் காலத்திலேயே உண் டாகும், (ஆதலின்); அதனால்- அத்தகைய பழவினையால், இறு காலத்து- (மனிதர்) கெடுங்காலத்தில், பரிவு- துன்பப் படுவது, என்னை-ஏன்; எ-று.

பழவினைப் பயன்கள் தமக்கேற்பட்ட அமைப்பின்படியே மனிதரிடம் சாரும்; அவருடைய முயற்சியால் அவற்றை நீக்கிக் கொள்ளுதல் முடியாது; ஆதலின் கேடுவருங்காலத் தில் அவர் பரிவதால் பயனில்லையென்பது இதன் கருத்து.

பொறி-பழவினை; அஃதிங்குப் பழவினைப்பயனை யுணர்த்திநின்றது. பொறி- பழவினை யென்பதை, பழ மொழி - 228-ஆம் செய்யுளில், ''பொறியின் வகைய கருமம்'' என வருதலானும், ஷை 297ஆம் செய்யுளில், ''போகும் பொறியார்'' என வருதலானும்உணரலாம்; பழவினைப் பயன்கள் நீண்டகாலம் மனிதரைத் தொடர்வன வெனினும், அப்பழவினைகள் ஒவ்வொன்றும் மனிதரால் செய்யப்படுங் காலத்தில் சிறிது நேரத்திற்குள் முடிவுபெறு வனவாம்; ஆதலின், பழவினை, 'சிறுகாலைப்பட்ட பொறி' என்று கூறப்பட்டது. இனி, 'பொறி' என்பதற்கு 'பழவினையால் (மனிதர் கருவிலுதிக்குங் காலத்தில்) ஏற்பட்ட விதி' எனப்

பொருள் கூறினுமாம்; இப்பொருள் கூறுமிடத்து, மனிதர் கருவிலுதிக்குங்காலம் சிறிதே. ஆதலின் அதைக் குறிப்பிட்டு, 'சிறுகாலைப்பட்டபொறி' என்றார் முனிவர் என்க. மனிதர், கருவிலுதிக்குங் காலத் திலேயே பழவினையால் அதன்பயன்கள் அவர்க்கு இன்ன இன்னகாலத்தில் இவ்விதம் நடைபெறுமென்று அவரிடம் எழுத்தைப்போல் அமைக்கப் பட்டு விடும்; ஆதலின் அவ்வமைப்பாகிய விதியைப் பொறி யென்றுரைத்தார் ஆசிரிய ரென்க; பொறி, விதியென்னும் பொருள் தருதலை,

''பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி''

என்னும் (திருக்கு-618-ஆம்) செய்யுளுரையில் பரிமேலழகர், 'பொறி' என்பதற்கு, 'பயனைத் தருவதாகிய விதி' என்று பொருள் கூறி யிருத்தலால் உணர்க.

முறைபிறழ்ந்து வாராமையாவது- முன்னால் வரத் தக்கவை பின்னாகவும், பின்னால் வரவேண்டியவை முன்னாகவும் மாறிவராமல் அமைப்பின்படி வருதல். ஒருவர்க்குப் பழவினையால் நற்பயன்கள் ஏற்பட்டிருந் தாலும் அவை வரவேண்டியகாலத்தில் மாத்திரந்தான் வரும்; துன்பம் நேர்ந்தவிடத்து வந்து அதனைநீக்கி உதவிசெய்யா; ஆகலின், ''உறுகாலத் தூற்றாகா ஆமிடத்தே ஆகும்'' என்றார் முனிவர்.

சிறுகா, பெருகா, வாரா, ஆகா என்பன- எதிர்மறைப் பன்மைவினைமுற்றுக்கள்; இவற்றை ஈறுதொக்க வினை யெச்சமாகக்கொண்டு, 'ஆகும்' என்பதனோடு கூட்டியும் முடிக்கலாம். 'பொறியும்' என்பதிலுள்ள உம்மைக்கு வேறு பொருளின்மையின் அஃதசையென்க. இதுவும் ஒருவிகற்ப இன்னிசை வெண்பா.

அதிகாரம் 12

மெய்ம்மை

மெய்ம்மை - உண்மை; அதாவது பொருள்களின் இயற்கையான தன்மை; இவ்வதிகாரம் அதனை யுணர்த்துவ தாகலின் இப்பெயர் பெற்றது. பொருள்களின் இயற்கைத் தன்மையாகிய இது ஊழ்வினையால் நேர்வதாகலின், அதன்பின் வைக்கப்பட்டது.

111. *இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும்*
வசையன்று வையத் தியற்கை- நசையழுங்க
நின்றோடிப் பொய்த்த னிரைதொடீஇ செய்ந்நன்றி
கொன்றாரிற் குற்ற முடைத்து.

(இ-ள்.) நிரைதொடீஇ- ஒழுங்காகிய வளையல் களை யணிந்தவளே!, (மனிதர்), இசையா- கொடுக்க முடி யாத, (அதாவது தம்மிடத்தில் இல்லாத), ஒருபொருள் - ஒரு பொருளை, யார்க்கும்- (யாசகர்) எவர்க்கும், இல் என்றல் - இல்லையென்று சொல்லுதல், வசை அன்று- (அவர்க்குப்) பழிப்பாகாது, ஓடி- (யாசகர் தம்மிடம்) ஓடி வந்து, நின்று- (பொருள்கிடைக்குமென்று நெடுநேரம் காத்து) நின்று, (பொருள் கிடைக்காமல்), நசை அழுங்க- (அவருடைய) ஆசைகெடும்படி, பொய்த்தல் - (தம்மிடம் பொருளிருக்கும்

போது அவர்க்கு இல்லையென்று) பொய்கூறுதல், செய்நன்றி- (தமக்குப் பிறர்) செய்த நன்றியை, கொன்றாரின்- மறந்தவருடைய குற்றத்தைக்காட்டினும், (அதிகரித்த), குற்றம் உடைத்து - குற்றத்தை யுடையதாகும், (இவை இங்ஙனம் கருதப்படுவது), வையத்து இயற்கை- உலகத்தின் இயற்கையாம்; எ-று.

கையிற் பொருளில்லாதவர்கள், யாசகர்க்கு இல்லையென்று சொல்லிவிடுதல் அவர்க்குப் பழிப்பாகாது; பொருளுள்ளவர்கள், யாசகர் தம்மிடத்தே அது கிடைக்குமென்று விரைந்தோடி வந்து காத்துநின்று ஒன்றும்பெறாமல் அவர்களின் ஆசைகெடும்படி அவர்க்குப் பொருள் இல்லையென்று பொய்கூறுதல், செய்ந்நன்றி மறந்த குற்றத்தினும் அதிகரித்த குற்றமுடையதாகும்; இவை இங்ஙனம் கருதப்படுதல் உலக இயற்கை என்பது இதன் கருத்து.

இங்ஙனங் கூறியதனால், கைப்பொருளில்லாமல் யாசகர்க்கு இல்லையென்போர் யோக்கியரென்பதும், பொருளுள்ளபோது இல்லையென்று பொய்கூறுவோர் அயோக்கியரென்பதும் பெறப்படும். செய்ந்நன்றி மறத்தல் எல்லாக்குற்றங்களினும் அதிகரித்ததாம்; இதனை,

''எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாமுய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு''

என்னும் (திருக்-110-ஆம்) செய்யுள் விளக்கும். இதைக்காட்டினும், பொருளிருக்கும்போது யாசகர்க்கில்லையென்று பொய்கூறுதல் குற்றமுடைத்தென்று கூறியதனால் அது எல்லாவற்றினும் மிகைப்பட்ட பாவமென்பது பெறப்படும். 'செய்ந்நன்றி மறந்தவரிடமுள்ள குற்றத்தையுடையதாகும்' எனப் பொருள்கூறினும் பொருந்தும். இப்பொருள் கூறுமிடத்து, 'கொன்றார்' என்பதற்குப் பின்னுள்ளதை ஏழாம்

வேற்றுமை இல்லுருபாகக் கொள்ள வேண்டும்; முன்னுரைத்த பொருள்கொள்ளுமிடத்து, ஐந்தாம் வேற்றுமை இன்னுருபாகக் கொள்ள வேண்டும்; 'கொன்றார்' என்பதனோடு, 'குற்றம்' என்பது வருவித்துரைக்க வேண்டும். அன்று - எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று. நிரைதொடீஇ- பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. ஈறு நீண்டு அளபெடுத்து விளியாயிற்று; இது, மகடூஉ முன்னிலை. அளபெடை- விளியுருபு.

''இசைவ கொடுப்பதூஉ மில்லென்ப தூஉம்
வசையன்று வையத் தியற்கை யஃதன்றிப்
பசைகொண் டவனிற்கப் பாத்துண்ணா னாயின்
நசை கொன்றான் செல்லுலக மில்''

என்னும் (பழமொழி-225-ஆம்) செய்யுளும் இக்கருத்தினை விளக்குதல் காண்க. 'வையத்தியற்கை' என்பதை, 'வசை யன்று' என்பதனோடு கூட்டி முடிப்பினும் பொருத்தமாம். (க)

112. தக்காருந் தக்கவ ரல்லாருந் தந்நீர்மை
எக்காலுங் குன்ற விலாரவர்- அக்காரம்
யாவரே தின்னினுங் கையாதாங் கைக்குமாந்
தேவரே தின்னினும் வேம்பு.

(இ-ள்) அக்காரம்- சர்க்கரையானது, யாவரே தின்னினும்- (தன்னை) எவர் தின்றாலும், கையாது- கசவாது, (தித்திக்கும்), வேம்பு- வேம்பானது, தேவரே தின்னினும்- (தன்னைத்) தேவர்கள் தின்றாலும் கைக்கும்- கசக்கும், (இவற்றைப்போலவே), தக்காரும்- நற்றகுதி யுடையோரும், தக்கவர் அல்லாரும்- நற்றகுதி யுடையோரல்லாதவரும், எக்காலும்- எப்பொழுதும், (பெரியோரிடத்தும் சிறியோரிடத்தும்), தம்நீர்மை- தம்முடைய இயற்கைத் தன்மை, குன்றல் இலர் ஆவர்- குறைதல் இல்லாதவராவர்; எ-று.

சர்க்கரை எவர் தின்றாலும் தித்திக்கும்; வேம்பு தேவர் தின்றாலும் கசக்கும்; இவற்றைப்போல நற்குணமுடைய பெரியோர் எவரிடத்திலும் தங்கள் உயர்ந்த குணத்தையே காட்டுவர்; துர்க்குணமுடைய சிறியோர் யாவரிடத்தும் தமது இழிந்த குணத்தையே காட்டுவர் என்பது இதன் கருத்து.

நற்குணமுள்ளவர்கள், பெரியோரைக்காணினும், சிறியோரைக் காணினும் அவர்களிடத்தில் நன்மையாகவே நடந்துகொள்வர்; துர்க்குணமுள்ளவர்கள் பெரியோரிடத்தும் தங்கள் துர்ச்செய்கையையே காட்டுவர்; சிறியோரிடத்தும் தீயவராகவே நடந்துகொள்வர்; இவை இவர்களுடைய இயற்கைக் குணங்களாம். ஆதலின், எவரிடத்தும் தன் இயற்கைக் குணமாகிய மதுரத்தையே காட்டும் சர்க்கரையும், கசப்பையேதரும் வேம்பும் இவர்களுக் குவமையாகக் கூறப்பட்டன. இங்ஙனம் கூறப்பட்டது- எடுத்துக்காட்டுவமையணி.

தக்கார் - தகு என்னும் பகுதியடியாகப் பிறந்த வினையாலணையும் பெயர். அக்காரம்- கரும்பின் சாரத் தாலுண்டாம் வெல்லம், சர்க்கரை, கற்கண்டு முதலியவற்றிற்கெல்லாமாகும்; இச்சொல் இக்ஷுஸாரம் என்னும் வடமொழிச் சிதைவென ஊகிக்க இடந்தரும். 'யாவரே' என்பதிலுள்ள ஏகாரம் - இழிவு சிறப்புப்பொருளது; 'தேவரே' என்பதிலுள்ள உயர்வு சிறப்பு. ஆம் இரண்டும்- அசைகள். (உ)

113. காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர்- ஏலா
இடரொருவ ருற்றக்கா லீர்ங்குன் றநாட
தொடர்புடையே மென்பார் சிலர்.

(இ-ள்) ஈர்- குளிர்ச்சி பொருந்திய, குன்றம்- மலைகள் சூழ்ந்த, நாட- பாண்டியநாட்டையுடைய அரசனே!, ஒருவர் —காலாடு போழ்தில் - செல்வமுடையவரா யிருக்குங் காலத்

தில், (அவருக்கு), வானத்துமேல் ஆடும்- ஆகாயத்தின் மீது சஞ்சரிக்கும், மீனின் - நக்ஷத்திரங்களைப்போல, பலர்- அநேகர், கழிகிளைஞர் ஆவர்- மிக்க உறவினராவர், (அவர்), ஏலா- தாங்கமுடியாத, இடர் உற்றக்கால்- துன்பமடைந்தால், (அவர்க்கு), தொடர்பு உடையேம்- நாங்கள் உறவுடையோம், என்பார்- என்று சொல்லி உதவிசெய்பவர், சிலர்- சிலரே யாவர்; எ-று.

ஒருவர், செல்வமுடையவரா யிருக்குங்காலத்தில் அவரிடத்தில் பலரும் சிநேகமுடையவரா யிருப்பார்கள்; வறுமையுற்றுத் துன்பமடையுங்காலத்தில் அவரிடம் நெருங்குவோர் உண்மைச் சிநேகிதர் சிலரேயாவர் என்பது இதன் கருத்து.

இதனால் செல்வமுள்ளவரிடத்துப் பலரும் பொய் யுறவுகாட்டிச் சூழ்வதும், வறுமைத் துன்ப முற்றாரிடத்து உண்மைச் சிநேகிதர் சிலரே நெருங்கி உதவிசெய்வதுமாகிய உலகியற்கை கூறப்பட்டது.

''இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பு''

என்னும் (திருக்-752-ஆம்) செய்யுளும் இக்கருத்தினை விளக்கும். 'கழிகிளைஞர்' என்பதற்கு, '(கெடுங்காலத்தில்) கழிந்து போகத்தக்க உறவினர்' எனப் பொருளுரைப்பினுமாம். 'மீனிற்பலர்' என்பதற்கு, 'ரக்ஷத்திரங்களைக் காட்டினும் அதிகரித்த பலர்' எனப் பொருளுரைத்தலுமொன்று. கால் ஆடுதல் - பாதம் எங்கும் செல்லுதல்; செல்வமுடை யவர் பாதம் அவர் நினைத்த விடங்கட்கெல்லாம் தட்டின்றிச் செல்லுமாதலின், அச்செல்லுகையானது, அதற்குக் காரண மான செல்வமுடையராதலை இலக்கணை வகையால் உணர்த்தி நின்றது. செல்வாக்கு, சாய்கால் என்பனவும் இது போன்றனவே. இங்குக் கால் செல்லும்போது என்பதற்கு,

'காலாடுபோழ்து' என்ற சொற்றொடர் கூறப்பட்டிருப்பது போல, 'கண்சென்று' என்பதற்கு, 'கண்ணாடி' என்ற சொற்றொடரைத் திருத்தக்கதேவர், சீவகசிந்தாமணி-2337-ஆம் செய்யுளில் உபயோகித்திருக் கின்றனர்; அதற்கு நச்சினார்க்கினியர் உரை கூறுமிடத்து; ''கண் எல்லாரிடத்தும் உலாவி'' என்று பொருள்கூறி அதற்கு, 'காலாடுபோழ்தின்' என்ற இத்தொடரையே உதாரணங் காட்டியிருக்கின்றனர். 'எல்லாரிடத்தும் வீரச்செயலைக் காட்டி' என்ற பொருளைத்தந்தது. இவற்றாலும் இப்பொருண்முடிபு துணியப்படும்.

போழ்து- பொழுது என்பதன்மரூஉ. கழி- மிகுதியைக் காட்டும் உரிச்சொல்; ''கூர்ப்புங் கழிவு முள்ளது சிறக்கும்'' என்னும் (தொல்-சொல்-உரி-18-ஆம்) சூத்திரத்தால் இது துணியப்படும். கிளை- மரத்தின்கவர்; அது மரத்தைச்சார்ந்து வளைந்து கொண்டிருப்பதுபோல ஒரு மனிதனை, அவனுடைய சுற்றத்தார் சார்ந்து வளைந்துகொண்டிருப்பர்; ஆதலின், அவர்க்குக் கிளைஞர் என்னும் பெயர் ஏற்பட்டது; இது முறைப்பெயர்; இதில் ஞ்- பெயரிடைநிலை; கிளையர் என்பது, யகரத்துக்கு ஞகரம் போலியாக இங்ஙனம் வந்த தெனலுமாம். மீன்- மின்னுவது. சமுத்திரம் போல கரிய நிறத்துடன் விளங்கும் ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் மீன்கள் போல் தோற்றும் காரணத்தால் அவற்றிற்கு மீன் எனப் பெயர் வந்த தெனலுமாம். (ந)

114. வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த விருதலையு மெய்தும்
நடுவண தெய்தாதா னெய்தும் உலைப்பெய்
தடுவது போலுந் துயர்.

(இ-ள்.) வடு இலா- குற்றமற்ற, வையத்து- இவ்வுலகத்திலே, (மனிதர்க்கு இன்றியமையாதனவாகிய அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கனுள்ளும் இம்மையில் அவர் அடையத்தக்கனவாய்), மன்னிய- பொருந்திய, மூன்

றில் - (அறம், பொருள், இன்பம் என்னும்) மூன்றனுள்ளே, நடுவணது - நடுவிற் சொல்லப்பட்டதாகிய பொருளை, எய்த - (ஒருவன்) அடைய, (அதனால்), இருதலையும் - (மற்ற) இரண்டு பக்கங்களிலுமுள்ள அறத்தையும் இன்பத் தையும், எய்தும் - அடைவான், நடுவணது - அந்நடுவிலுள்ள பொருளை, எய்தாதான்- அடையாதவன், உலைப்பெய்து - (ஒரு பிராணியைக் கொல்லனது) உலைக்களத்திலே இட்டு, அடுவதுபோலும்- காய்ச்சுவதனால் அதற்குண்டாகுந் துயர் போன்ற, துயர்- (வறுமைத்) துன்பத்தை, எய்தும்- அடைவான்; எ-று.

உலகத்திற் பொருளைப் பெற்றவன் அறத்தையும், இன்பத்தையும் அடைவான்; அதனைப்பெறாதவன் மிக்க வறுமைத் துன்பத்தை அடைவான் என்பது இதன் கருத்து.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் மனிதர் அடையவேண்டிய பயன்கள்; அவற்றுள் முன்னைய மூன்றும் இம்மையிற் பெறத்தக்கன; வீடு மறுமையில் அடையத்தக்கது; இம்மையில் அடையத்தக்க மூன்றில் பொருளே மற்ற இரண்டையும் அவர்க்கு உண்டாக்கத் தக்கது; பொருளால் தான தருமங்கள் நடைபெறும்; அதனால் அறங்கைகூடும்; அப்பொருளால் அவர் விரும்பியவற்றை அனுபவிக்க ஏதுவுண்டாகும்; அதனால் இன்பம் அவர்க்குச் சித்திக்கும்; அப்பொருளை அடையாதார் தான தருமங்கள் செய்ய இயலாதாவராவர்; அவர்க்கு இன்பானுபவத்திற்கும் ஏதுவிராது; வறுமை மிகுதியால் துன்பங்களே அதிகரிக்கும். ஆதலின், பொருள் பெற்றார்க்கு அறமும் இன்பமும் கிடைக்குமென்றும், பெறார்க்குத் துன்பமிகுமென்றும் முனிவர் கூறினார். இதனால், செல்வத்தின் இயற்கையும், வறுமையின் இயற்கையும் கூறப்பட்டன. வறுமைத்துன்பம் மிக கொடிதென்பதை யுணர்த்தற்கு, கொல்லனுலைக் களத்தில் பிராணிகள் சுடப்படுவதாலுண்டாம் துன்பம் அதற

குவமையாகக் கூறப்பட்டது. இதிற் கூறியபடி பொருள் பெற்றார் மற்ற இரண்டையும் பெறுவாரென்பதை,

''பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே யம்மூன்றும்
ஆராயிற் றானே யறம்பொரு ளின்பமென்
றாரா ரிவற்றி னிடை யதனை யெய்துவார்
சீரா ரிருதலையு மெய்துவர்''

என்னும் திருமங்கயையாழ்வார்- சிறிய திருமடல் அடிகளானும் உணரலாம். பொருளில்லார்க்கு இவ்வுலகத்தில் இன்பமில்லை யென்பதை,

''அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லா கியாங்கு''

என்னும் (திருக்குறள்-247-ஆம்) செய்யுள் விளக்கும். இருதலை- இரண்டு பக்கங்கள்; அவையாவன: அறம், பொருள், இன்பம் என்பவற்றில் நடுவிலுள்ள பொருள் என்ற சொல்லுக்கு இரண்டு பக்கங்களிலுமுள்ள இடங்கள்; அவற்றில் உள்ளவை அறம், இன்பம் என்னும் இரண்டுமே யாதலின், 'இருதலை' என்பது அவ்விரண்டையும் உணர்த்தி நின்றது. நடுவணத- என்பதில், நடு- பகுதி, அண்-இடத்தைக்காட்டும் விகுதி, இவ்விரண்டு சேர்ந்தது - நடுவண்; இதன்மேல் வந்த, அ- சாரியை, து - அஃறிணை யொன்றன்பால் விகுதி-எய்தும்- 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று; ''பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற், செல்லாதாகுஞ் செய்யு மென்முற்றே'' என்னும் (நன்-வினை-29-ஆம்) சூத்திரவிதியால் படர்க்கை ஆண்பாலுக்கு வந்தது. (ச)

115. *நல்லாவின் கன்றாயி னாகும்விலைபெறூஉங்*
கல்லாரே யாயினுஞ் செல்வர்வாய்ச் சொற்செல்லும்
புல்லீரப் போழ்தி னுழவே போன் மீதாடிச்
செல்லாவா நல்கூர்ந்தார் சொல்.

(இ-ள்) நாகும்- இளம் பெண்கன்றும், நல் ஆவின் கன்று ஆயின்- நல்ல சாதிப் பசுவின் கன்றாயிருக்குமானால், விலை பெறூஉம்- அதிக விலையை அடையும், (அது போல), செல்வர்- பொருளுடையவர், கல்லாரே ஆயினும்- கல்வி கற்றுக்கொள்ளாத மூடர்களாயிருந்தாலும், வாய்ச் சொல்-(அவருடைய) வாயிலிருந்துவருஞ் சொற்கள், (இழிந்தனவாயினும்), செல்லும்- (எவரிடத்தும்) செல்லும், (அதாவது பலராலும் ஏற்றுக்கொள்ளப்படும்); புல் ஈரப் போழ்தின்- அற்ப ஈரமுள்ள காலத்தில், (நிலத்தில் மனிதரால் உழப்படும்), உழவே போல்- உழவைப்போல, (அதாவது உழவு பூமிக்குள்ளிறங்காமல் மேலெழுந்தவாறாய்ச் செல்வது போல), நல்கூர்ந்தார்- பொருளில்லாமல் வறுமைப் பட்டவர் களுடைய, சொல்- சொற்கள், (உயர்ந்தனவாயினும்), மீதாடி- (பிறருடைய மனத்தில்) மேலே மாத்திரம் உலவி, செல்லா- உள்ளே செல்லமாட்டா, (அதாவது அவரால் தம்மனத்தில் அழுத்தமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா); எ-று.

செல்வமுடையார், கல்வி கல்லாத மூடராயினும் அவர் சொற்கள் எங்கும் செல்லும்; வறிஞர், படித்த விவேகி யரா யிருப்பினும் அவர் சொற்களை எவரும் மதியார் என்பது இதன் கருத்து.

நல்ல சாதிப்பசுவின் கன்று இளமையுடையதா யிருப் பினும் பின்னால் மிகுந்த பால் கொடுக்கக் கூடியதாயிருப்ப தால் மனிதர் அதற்கு அதிக விலை கொடுப்பார்கள்; இச்செய்கைபோல செல்வமுடையவர்கள் கல்வி கல்லாத மூடர்களா யிருப்பினும், அவர்கள் வாய்ச்சொற்கள் தகாதன வாயிருப்பினும் அவற்றால் பயனுண்டாகுமாதலால் அவற்றை மனிதர் நன்கு மதித்து ஏற்றுக்கொள்வர். ஈரமில்லாத நிலத்தில் இளகிய தன்மை இராததலால் மனிதர் உழுங்காலத்தில் கலப்பை ஆழத்தில் இறங்கி உழாமல் மேல் போக்காகச் செல்லும்; அதேபோல் செல்வமில்லாதவர்கள், உயர்ந்த கல்விகற்ற விவேகிகளா யிருப்பினும், அவர்கள்

சொற்கள் உயர்ந்தனவாயிருப்பினும் அவற்றால் மனிதர்க்குப் பயனொன்று மிராதாதலின் அவரிடத்தே மேற்போக்காகச் செல்லும்; அதாவது அச்சொற்களை மனிதர் கேட்பினும் மனத்தில் அழுத்தமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இதனால் செல்வத்தின் சிறப்பும், வறுமையின் தாழ்வும் கூறப்பட்டன. இக்கருத்தினை,

''கல்லானே யானாலுங் கைப்பொருளொன்
றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்- இல்லானை
இல்லாளும் வேண்டாண்மற் றீன்றெடுத்த
தாய்வேண்டாள்
செல்லா தவன் வாயிற் சொல்.''

என்னும் (நல்வழி-34-ஆம்) செய்யுளும் விளக்கும். ''நல்லாவின் கன்றாயின் நாகும் விலைபெறூஉங், கல்லாரேயாயினுஞ் செல்வர் வாய்ச் சொற்செல்லும்'' என்பது எடுத்துக் காட்டுவமையணி; ''புல்லீரப்போழ்தின் உழவேபோன் மீதாடிச், செல்லாவா நல்கூர்ந்தார் சொல்'' என்பது முற்றுவமையணி; இவ்விரண்டும் இச்செய்யுளில் சேர்ந்து வந்தமையால் சேர்வையணியுமாம். நாகும், ஆயினும் என்பவற்றிலுள்ள உம்மைகள்- இழிவு சிறப்புப்பொருளன. நாகு- இளமையையும், விலங்கின் பெண்மையையும் உணர்த்தும் பெயர்; இஃது இளமையை உணர்த்துதல், ''குருளையே மழவு வெண்மை குழவுகோ மளமே கொம்மை, புருவை யௌவனமே நாகு போதகந் தருண நவ்வி, முருகிளை யிளமை...'' என்னும் (சூடாமணி நிகண்டு - பண்பு பற்றிய பெயர்த் தொகுதி-27ஆம் செய்யுள்) அடிகளில் இளமை குறித்து வருஞ்சொற்களோடு சேர்க்கப் பட்டிருத்தலானே யுணரப்படும். விலக்கின் பெண்ணை யுணர்த்துதல், ''பிடி பிணை பெட்டை மந்தி பிணாவோடா நாகு பாட்டி, கொடு விலங்கின் பெண்பாலாம்......''என்னும் (சூடாமணி நிகண்டு விலங்கின் பெயர்த் தொகுதி- 34-ஆம் செய்யுள்)

அடிகளில் கூறப்பட்டிருக்கும் விலங்கின் பெண் மரபுப் பெயர்களில் ஒன்றாகக் கூறப்பட்டிருத்தலால் உணரப்படும். இங்ஙனம் இளமையையும், விலங்கின் பெண்மையையும் உணர்த்தும் இப்பெயர், ''எருமையே மரையே பெற்ற மேற்ற நீர்ச்சாதி நாகாம்'' என்னும் (சூடாம-நி-விலங்கின் பெயர்த் தொகுதி 36-ஆம் செய்யுளடியின்படி எருமை, மரை, பெற்றம், நீர்ச்சாதி ஆகியவற்றிற்கு உரியதாதலின் இங்கு அவற்றில் ஒன்றாகிய பசுவின் கன்றிற்கு வந்தது; ''எருமையு மரையும் பெற்றமு நாகே'' என்னும் தொல்காப்பியச் சூத்திரத் தாலும் இது துணியப்படும். ஆகவே இச்சொல் பசுவின் இனம் பெண்கன்றை உணர்த்தி நின்றது. பெறூஉம் - இன்னிசை நிறைக்கவந்த அளபெடை. நல்கு, ஊர் என்னும் இரண்டு சொற்கள், ஒரு சொன்னீர்மையனவாய், 'நல்கூர்' என நின்றன; நல்கு- தல்லீறு கெட்ட தொழிற்பெயர்; கொடுத் தல் - என்னும் பொருளது; ஊர்தல்- செல்லுதல்; நல்கூர்தல்- நிமித்தகாரண காரியப் பொருளான நான்காம் வேற்றுமைத் தொகை; (பிறர்பொருளைக்) கொடுத்தலுக்கு (அதாவது பிறர் கொடுக்கும் பொருளைப் பெறுதற்குச்) செல்லுதல் என விரியும்; இங்ஙனம் செல்லுதற்குக் காரணம் வறுமையே யாதலின் இது வறுமையைக் குறித்தது. இங்ஙனம் வறுமை யின் காரியத்தை அதன் காரணமாகிய வறுமையாகக் கூறியது உபசார வழக்கு. உழவு- தொழிற்பெயர்; உழு- பகுதி. (ரு)

116. இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்றும்
அடங்காதா ரென்று மடங்கார்- தடங்கண்ணாய்
உப்பொடு நெய்பா றயிர்காயம் பெய்தடினுங்
கைப்பறா பேய்ச்சுரையின் காய்.

(இ-ள்) தடம்- விசாலமாகிய, கண்ணாய்-கண்களை யுடையவளே!, உப்பொடு - உப்பையும், நெய் - நெய்யை யும், பால்- பாலையும், தயிர்- தயிரையும், காயம்- பெருங் காயத்தையும், பெய்து- சேர்த்து, அடினும் - சமைக்கப்பட் டாலும், பேய்ச்சுரையின் காய்- பேய்ச்சுரையின் காய்கள்,

கைப்பு அறா - (தமக்கு இயற்கையான) கசப்பு நீங்காதன வாம், (இவற்றைப்போலவே), அடங்காதார்- (இயற்கை யில்) அடங்குந்தன்மை யில்லாதவர்கள், மெய்ஞானம்- உண்மை ஞானத்தைப் போதிக்கும் நூல்களை, இடம்பட- அதிகமாக, என்றும், எப்பொழுதும், கற்பினும்- படித்து வந்தாலும், என்றும் அடங்கார்- எக்காலத்தும் அடக்காதவரே யாவர்; எ-று.

பேய்ச்சுரைக்காய்கள், உப்பு நெய் முதலியவற்றைச் சேர்த்து சமைக்கப்பட்டாலும் அவற்றின் இயற்கையான கசப்புத் தன்மை நீங்கமாட்டா; இவற்றைப்போல இயற்கை யிலேயே அடங்குந்தன்மையில்லாதவர்கள் உண்மையான ஞான நூல்களை அதிகமாகக் கற்றாலும் அடக்க முடையவ ராகமாட்டார் என்பது இதன் கருத்து.

உப்பு, நெய், பால் முதலியவை, ஒரு பொருளின் இயற்கைச் சுவையை மாற்றி அதற்கு வேறு சுவைகளை உண்டாக்குவதில் சிறந்தவை; எனினும், பேய்ச்சுரைக்காய் கள் எதனாலும் தம் கசப்புச் சுவை நீங்காதவன்மை பெற்றன வாதலின், இவற்றாலும் அக்கசப்பு நீங்கி நற்சுவையுடையன வாகச் செய்தற்கு இயலாதனவாம். இவற்றைப்போலவே உண்மை ஞானத்தைப் போதிக்கத்தக்க நூல்கள் மனிதர்களின் தீக்குணங்களை மாற்றி நற்குணங்களை யுண்டாக்கத் தக்கன வாம்; எனினும் பிறப்பிலேயே அடக்கமின்மை பொருந்திய வர்கள் எதனாலும் தம் இயற்கை நீங்காத தன்மை பெற்றவ ராதலின் அந்நூல்களாலும் அவர்களை அடக்க முடையவ ராகச் செய்தல் இயலாது. ஆதலின், உப்பு முதலியவற்றாலும் பேய்ச்சுரைக்காய்கள் கசப்பு நீங்காவென்றும், ஞான நூல் களைக் கற்றாலும் இயற்கையடக்க மில்லாதவர் அடங்கா ரென்றும் கூறினார் ஆசிரியர்.

இச்செய்யுளால் அடக்கமில்லாதவரியல் கூறப்பட்டது. தட- பெருமையைக் காட்டும் உரிச்சொல்; ''தடவுங் கயவு நளியும் பெருமை'' என்னும் (தொல்- சொல்- உரி- 24-ஆம்) சூத்திரத்தால் இஃதுணரப்படும்; இஃதிங்குக் கண்ணின் விசாலத்தை யுணர்த்தி நின்றது; இனி இது கோட்டத்தையும் (வளைவையும்) உணர்த்தும். இது, இச்சூத்திரத்தின் அடுத்த சூத்திரத்தானுணரப்படும். 'தடங்கண்' என்னும் உரிச்சொற் புணர்ச்சியில், ''அகர விறுதிப்பெயர் நிலை முன்னர்....'' என்னும் (தொல்.எழுத். உயிர்ம- 1-ஆம்) சூத்திர விதிப்படி இனமெல்லெழுத்து மிக்கது. கண்ணாய்- கண்ணாள் என்ப தன்விளி; ''வினையினும் பண்பினு, நினையத்தோன்று மாளெனிறுதி, யாயாகும்மேவிளிவயினான'' என்னும் (தொல்-சொல்-விளிம-29-ஆம்) சூத்திரம் பார்க்க. 'தடங் கண்ணாய்' என்பது மகடூஉ முன்னிலை. அறுசுவையுள்ளும் உப்புத் தலைமை பெற்றதாதலாலும், கசப்பை நீக்கும் வன்மையுடையதாதலாலும் அத்தகைய அதன் சிறப்புத் தோன்ற ஆசிரியர், 'உப்பொடு' என ஒடுக்கொடுத்து அதனைப் பிரித்தார் ஆசிரியர். இனி, 'ஒடு' என்பது எண்ணொடுவுமாம்; இதனை நெய் முதலியவற்றோடுங் கூட்டுக. 'அடினும்' என்பதன் உம்மை உயர்வு சிறப்புப் பொருளது. அடுதல்- காய்ச்சுதல்; அஃதிங்குச் சமைத்தலை யுணர்த்தி நின்றது. 'சுரைக்காய் கைப்பறா' என்பது, ''உயர் திணைதொடர்ந்த.....'' என்னும் (நன்-பொது-26-ஆம்) சூத்திர விதியினாலமைந்தது. 'இடம்' என்பது இங்கு விசாலத்தை யுணர்த்தி நின்றது; அதாவது புத்தி விசாலமாம். நூலின் காரியமாகிய ஞானம், காரிய வாகுபெயராய் அந் நூலை யுணர்த்தி நின்றது. 'கற்பினும்' என்பதிலுள்ள உம்மையும் உயர்வு சிறப்புப் பொருளதேயாம். இச்செய்யுளின் முன்னிரண்டடிகளும், பின்னிரண்டடிகளும் பிம்பப் பிரதி பிம்ப பாவந் தோன்ற நிற்பது எடுத்துக்காட்டுவமையணி இதில் பேய்ச் சுரைக்காய்களின் தன்மையையும், அடங்காதார் குணத்தையும் ஒரு தன்மையனவாகக் கூறுவது ஒப்புமைக் கூட்டவணியின்பாற்படும். (சூ)

117. *தம்மை யிகழ்வாரைத் தாமவரின் முன்னிகழ்க*
என்னை யவரோடு பட்டது - புன்னை
விறற்பூங் கமழ்கானல் வீங்குநீர்ச் சேர்ப்ப
உறற்பால யார்க்கு முறும்.

(இ-ள்.) விறல் - வெற்றியையும், கமழ் - மணக்கின்ற, பூ - மலர்கள் பொருந்திய, புன்னை - புன்னைமரங்க ளடர்ந்த, கானல் - சோலைகள் சூழ்ந்த, வீங்குநீர் - மிக்க நீர் நிறைந்த கடலினது, சேர்ப்ப - துறையையுமுடைய பாண்டியனே! (மனிதர்), தம்மை இகழ்வாரை - தம்மோடு முன்னே பழகி யிருந்தும் கண்டபோது பழக்கமில்லாதவர்போல தம்மை உப சரித்து நட்புரிமைகாட்டாது) இகழ்ந்து நீங்குவாரை, (எவ் வாற்றானும் விரும்பாது), தாம் - தாமும், அவரின் முன் (அங் ஙனம் அவமதித்து நீங்கும்) அவருக்கு முந்தியே, இகழ்க - (அவர்நேயத்தை) இகழ்ந்து நீக்கிவிடக்கடவர், அவரோடு பட்டது - அவரால் உண்டான நன்மை, என்னை - யாது?, (ஒன்றுமில்லை; அவர் நேயம் நீங்குவதாலும் கெடுதி யொன்றுமில்லை), யார்க்கும் - எவருக்கும், உறற்பால - வந்து சேரக்கூடியனவாகிய இன்ப துன்பங்கள், உறும் - தாமே வந்து சேரும்; எ-று.

உலகத்தில் எவருக்கும் வரக்கூடிய நன்மை தீமைகள் பழவினைப்பயனால் தாமே வந்து சேரும்; மனிதரால் ஏற்படுவனவல்ல; ஆதலின், மனிதர், தம்மோடு முன்னே பழகியிருந்தும், பின்னர்க் கண்டபோது பழக்கமில்லாதவர் போலத் தம்மை உபசரிக்காமல் அவமதிப்போரைத் தாமும் அவமதித்து அவர் நட்பை விரும்பாதொழித்துவிட வேண் டும்; அவர் பழக்கமிருந்தபோ துண்டான நன்மையொன்று மில்லை, அதை விட்டுவிடுவதாலுண்டாம் தீமையுமில்லை என்பது இதன் கருத்து. ஒருவரிடத்தே மெய்ந்நட்புப் பூண்டவ ருள்ளும் சிலர் நலம் புரிகின்றனர்; சிலர் ஒன்றுஞ் செய்யா திருக்கின்றனர். ஆதலின் மனிதர்க்குவரும் நன்மையும், தீமையும் பழவினைப்பயனால் வருவனவேயன்றித்

தம்மைப் போன்ற பிறரால் வருவனவல்ல. உலக இயல் அங்ஙனமிருப்ப, சிலர் அறியாமையால், அவை மனித ராலேயே நடக்கின்றனவென்று கருதுகின்றனர். அவ்வெண் ணத்தினால், பணம் படைத்தோரிடம் சார்ந்தால் நன்மை யுண்டாமென்று நினைத்து அவரோடு நெருங்கிப் பழகு கின்றனர்; அவர்கள் தம்மைப் புறக்கணித்த காலத்தும் அப்பழக்கத்தை விடாதிருக்கின்றனர். வேறு சிலர், செல்வ மற்றிருந்த காலத்தில் பிறரோடு பழகுகிறார்கள்; செல்வம் பெற்ற காலத்தில் அப்பழக்கமுடையாரைக் கண்டால், அவர் தம்மிடம் நலம்பெறக் கருதி வந்தனரென்று அவரை அறியா தார் போன்று புறக்கணிக்கின்றனர். இவ்விருவர் செயல் களும் அறிவற்றனவேயாம். உண்மை நட்புடையாரிடத்தே பழகுவார்க்கு அவர்களால் பழவினைப்படி உதவி யிருப் பினும் இல்லாவிடினும் மனிதர்க்கு இனிமையுண்டு; நட்பில்லாமல் தம்மைப் புறக்கணிப்பாரோடு வலிந்து சிநேகஞ் செய்வார்க்கு எவ்வகைப் பயனுமில்லை. ஆதலின், ''தம்மை இகழ்வாரைத் தாம் அவரின் முன்இகழ்க'' என்றும், ''என்னை அவரோடு பட்டது'' என்றும் வற்புறுத்திக் கூறி னார் முனிவர். இதனால் மனிதர் தம்மிடம் நட்பில்லாதவரு டைய பழக்கத்தை அடியோடு விட்டுவிட வேண்டுமென்பது பெறப்படும். இக்கருத்தினை,

''கண்டறிவார் போலார் கெழீஇயின்மை செய்வாரைப்
பண்டறிவார் போலாது தாமும் அவரேபோல்
விண்டொரீஇ மாற்றி விடுதல் அதுவன்றோ
விண்டற்கு விண்டல் மருந்து''

என்னும் (பழமொழி-140-ஆம்) செய்யுளும் விளக்குதல் காண்க. இப்பழமொழிச் செய்யுளுரையில், திருவாளர் தி. செல்வகேசவராய முதலியாராவர்களால், ''தம்மை யிகழ் வாரைத் தாமவரின் முன்னிகழ்க, என்னையவரோடுபட் டது'' என்ற இந்நாலடிச்செய்யுளடிகள் உதாரணங் காட்டப்

பட்டிருத்தலால், இஃதிக் கருத்துள்ளதே யென்பது நன்கு துணியப்படும். இதன் கருத்திங்ஙனமிருப்ப, இதற்கு உரை கண்டார் சிலர், ''தம்மை யிகழ்வாரைத் தாமவரின் முன் னிகழ்க'' என்பதற்கு, ''தம்மை நிந்திப்பவர்களைத் தாமும் அவர்களுக்கு முன்னே நிந்திக்கக்கடவர்'' என்று பொரு ளுரைத்திருக்கின்றனர். ஒருவர், தம்மை நிந்திப்பவரைத் தாமும் நிந்தித்தல் அறிவுடைமையாகாதென நீதி நூல்கள் பலவும் கூறுகின்றன; இந்நூலிலும், ''நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால், வேர்த்து வெகுளார் விழுமி யோர்......'' என 64-ஆம் செய்யுளும், ''..........நீர்த்தன்றிக் கீழ் மக்கள் கீழாயசொல்லியக்காற் சொல்பவோ, மேன்மக்கடம் வாயான் மீட்டு..........'' என 70-ஆம் செய்யுளும் இதனை வற்புறுத்திக் கூறுகின்றன. ஆதலின், இப்பொருள் கூறுதல் முன்னுக்குப் பின் முரணாவதுமின்றி நீதிக்கும் பொருந்தா தாம். இப்பொருளுக்காதாரமாக அவர்கள் உதாரணங் காட்டி யிருக்கும், ''கதநன்று சான்றாண்மை தீதுகழிய, மதநன்று மாண்பில்லார் முன்னர்'' என்ற செய்யுளடிகள், ''நற்குண மில்லாது தீமை செய்வோரிடத்துச் சாந்தங் காட்டாது கோபங் காட்டி அவர்களை அடக்கவேண்டும்'' என்னும் தண்ட நியாயங் குறித்தனவாம். ஆதலின் அவ்வுதாரணமும் இதற்குப் பொருந்தாதென்க. மனிதர்க்கு வரும் நன்மையும், தீமையும் நண்பராலோ, நண்பில்லாதவராலோ நடப்பன வல்ல; அவரால் வரும் இன்ப துன்பங்கள் ஊழின்படி நடப்பனவே யென்பதை,

''பேராசை யாலீனர் பின்சென் றுழன்றும்
தீராத மிடியாளர் சிலர்பாரி லுண்டே
நேராக வரில்வாழ்வு நினையாமல் வருமால்
வாராத தார்தாம் வருந்திடினும் வாராதே''

என்னும் பிரபோத சந்திரோதயச் செய்யுளானும்,

''ஆமே யொருவ ரொருவர்ச் கிடரை யகற்றுவது
மாமே யொருவ ரொருவர்க் கிடைநன்மை
யாக்குவதும்
தாமேது செய்தன ரன்னது தாமே புசிப்பதன்றிப்
போமே தலையிற் பொறித்தான் பிறழ்ந்து
நினைப்பினுமே''

என்னும் விநாயகபுராணச் செய்யுளானு முணரப்படும்.

இங்கு இகழ்ச்சி, புறக்கணித்தற் பொருளை யுணர்த்தி நின்றது. 'அவரின்' என்பதிலுள்ள, இன்- என்னும் ஐந்தாம் வேற்றுமை யுருபு, 'முன்' என்னுங்காலத்திற்கு எல்லையாய் நின்றதால், எல்லைப் பொருள் குறித்ததாம். இகழ்க-வியங்கோள். இச்செய்யுளில் புன்னை, விறல் முதலிய சில சொற்கள் மாற்றியமைத்துப் பொருள் கொள்ளப்பட்டன. 'விறல்' என்பது அரசனுக்குரிய அடை; இதனைப் பூவிற்குக் கொண்டு, ''கடலின் துர்க்கந்தத்தைப் போக்கும் பெருமை அல்லது வெற்றி வாய்ந்த பூ'' என்று பொருளுரைப்பாரு முளர். இவ்வடை மலருக்குப் பெரும்பான்மையும் பொருத்த மற்றதாதலின் இப்பொருள் சிறவாமையுணர்க. வீங்குநீர்-வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. முன்னிரண்டடிகளில் அமைந்த எதுகை, இனவெதுகை. இனவெதுகையாவது, வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய் எழுத்துக்களுள் ஒன்றற்கொன்று ஒன்றி நிற்பது. இச்செய்யுள் 'கூடாநட்பு' என்னும் அதிகாரத்திற் சேர்க்கத் தக்கதெனினும், ஈற்றில், 'உறற்பால யார்க்குமுறும்' என்னும் உலக இயற்கைத் தன்மையை விளக்குதலால் இவ்வதிகாரத் திற் சேர்க்கப்பட்டது. (எ)

118. ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம்- பால்போல்
ஒருதன்மைத் தாகு மறநெறி யாபோல்
உருவு பலகொள லீங்கு.

(இ-ள்.) ஆ- பசுக்கள், வேறு உருவின ஆயினும்- வெவ்வேறு நிறங்களை யுடையனவா யிருப்பினும், ஆ- அப்பசுக்கள், பயந்த- கொடுத்த, பால்- பால்கள், வேறு உருவின அல்லஆம்- (வெண்ணிற மொன்றேயுடையன வன்றி) வெவ்வேறான நிறங்களை யுடையனவாகா, பால் போல்- அந்தப் பால்போல, அறம்- தருமமானது, ஒருதன் மைத்து ஆகும்- ஒரே தன்மையுடையதாகும், நெறி- (அத்தரு மத்தின்) மார்க்கங்கள், ஈங்கு- இவ்வுலகத்தில், ஆ போல்- அப்பசுக்களைப் போல, உருவு பல கொளல்- பல வடிவங் களைக் கொண்டிருத்தல், (ஆகும்); எ-று.

பசுக்கள் பல நிறங்களைக் கொண்டனவாயிருப் பினும் அவற்றின் பால்கள் வெண்மை நிறமொன்றே யுடைய னவாய் ஒரு தன்மை பெற்றனவாயிருத்தல்போல தருமத்தைச் செய்யும் மார்க்கங்கள் பலவாயிருப்பினும் அவற்றாலுண் டாம் தருமம் ஒரே தன்மைத்தாகும் என்பது இதன் கருத்து. இங்ஙனங் கூறியது உவமையணியின்பாற் படும். இதனால் தருமத்தின் தன்மை கூறப்பட்டது. தருமத்தைத் தேடுமார்க் கங்கள், தானம், தவம், விரதம், தெய்வவழிபாடு முதலிய பல வகைகளாக ஏற்பட்டிருக்கின்றன. அவற்றாலுண்டாம் தருமம் நன்மை யொன்றையே தருவதாய் ஒருதன்மைப் பட்டிருக்கும். ஆதலின், தரும மார்க்கங்கள் பல துறைகளை யுடையனவென்றும், அறம் ஒரு தன்மைத்தென்றும் கூறினார் முனிவர். இதனால், மனிதர், பல துறைப்பட்ட தரும நெறி களில், தங்களுக் கியன்றவாறு எதனாலாவது தருமத்தைத் தேடிக்கொள்ளலா மென்பதும், தருமம் எம்மார்க்கத்தில் வந்ததெனினும் நன்மையே பயக்குமென்பதும் பெறப்படும்.

உரு - என்னும் சொல் நிறத்தையும், வடிவத்தையும் உணர்த்தும்; இங்கு முதலிரண்டடிகளில் நிறத்தையும், நான்காமடியில் வடிவத்தையும் உணர்த்தி நின்றது. இது, நிறத்தையும், வடிவத்தையும் உணர்த்துமென்பதை, சூடா

மணிநிகண்டு, ஒரு சொல் பல்பொருட் பெயர்த்தொகுதி 32-ஆம் செய்யுளில், ''உருநிறம் வடிவட்டைப்பே ரோதனஞ் சோறே யுண்டி'' என்னும் ஈற்றடியால் உணரலாம். ஆ- பால் பகாவஃறிணைப்பெயர். உரு- என்பது உகரச் சாரியை பெற்று, உருவு - என நின்றது; தெருவு, நடுவு என்பனபோல. 'உருவின்' என்பதில், உருவு - பகுதி, இன்- சாரியை, அ- பல வின்பால் விகுதி. தன்மைத்து- குறிப்பு வினையாலணையும் பெயர். கொளல்- தொழிற்பெயர். ஈங்கு- சுட்டு நீண்டது. 'ஆகும்' என்னும் பயனிலை இசையெச்சமாக வருவித்துரைக் கப்பட்டது. இனி, ''நெறி ஆ போல் உருவு பல கொளல்'' என்பதற்கு, ''அறநெறிகளைப் பசுக்களைப்போல பல வடி வங்களாகக் கொள்க'' என்றும் பொருளுரைக்கலாம்; இவ் வுரையில் 'கொளல் என்பதைத் தொழிற்பெயராகக் கொள்ளா மல், அல்லீற்று உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்றாகக் கொள்ளல் வேண்டும். இச்செய்யுளின் இரண்டாமடி, லகரவொற்றிடை வந்த ஆ செதுகையில் அமைந்தது. (அ)

119. *யாஅ ருலகத்தோர் சொல்லில்லார் தேருங்கால்*
யாஅ ருபாயத்தின் வாழாதார்- யாஅர்
இடையாக வின்னாத தெய்தாதார் யாஅர்
கடை போகச் செல்வமுய்த் தார்.

(இ-ள்.) தேரும்கால்- (நாம் உலக இயலை) ஆராயு மிடத்து, உலகத்து- இவ்வுலகத்தில், ஓர் சொல் இல்லார்- (நிந்தை புகழ்ச்சி ஆகியவற்றில் ஏதேனும்) ஒரு சொல்லை அடையாதவர், யார்- எவர், (எவருமிலர்), உபாயத்தின்- ஓர் ஏதுவினாலே, வாழாதார்- வாழாதவர்கள், யார்- எவர்? (ஒரு வருமிலர்), இடை ஆக (வாழ்நாளின்) இடையில், இன்னா தது எய்தாதார்- துன்பத்தை அடையாதவர், யார் - எவர்?, (எவருமிலர்), கடைபோக- (வாழ்நாளின்) முடிவுவரையில், செல்வம் உய்த்தார்- செல்வத்தை அனுபவித்தார், யார்- எவர்? (எவருமிலர்); எ-று.

உலகத்தில் நிந்தை புகழ்ச்சி அகிய இரண்டில் ஏதேனுமொரு சொல்லை ஏற்றுக்கொள்ளாதவர்களும், ஓர் உபாயத்தைக் கொண்டு வாழாதவர்களும், வாழ்நாட்களின் இடையில் ஒரு துன்பத்தையேனும் அடையாதவர்களும், வாழ்நாள் முடிவு வரையிலும் செல்வத்தை அனுபவிப்பவர் களுமில்லை என்பது இதன் கருத்து.

குற்றமில்லாமல் நடக்கும் பெரியாரையும், சில பேதையர் ஏதேனுமொரு வகையில் நிந்திப்பார்கள்; குற்ற முள்ளவர்களையும் ஒருவகையில் புகழ்வார்கள்; மனிதர் ஒவ்வொருவரும் உயிர் வாழ்தற்கு ஏதேனுமோருபாயத்தைக் கைக்கொண்டே யிருப்பார்கள்; எத்தகைய உயர்ந்த வாழ் வுடையார்க்கும் இடையில் ஏதேனும் துன்பம் நேர்ந்தே தீரும்; ஒருவர் செல்வம் பெற்றாலும் ஆயுள் முடிவு வரை அதை அனுபவித்தல் முடியாது; இடையில் செல்வ நிலை மாறிவிடும். இவற்றைக் கூறியதால் உலக வியற்கையை விளக்கினர் ஆசிரியர். இங்ஙனம் விளக்கியதுகெண்டு மனிதர், எவர்க்கும் இகழ்ச்சியும் புகழ்ச்சியும் வருதல் இயற்கையாதலின், தமக்கு வரும் இகழ்ச்சிக்கு வருந் தாமலும், புகழ்ச்சிக்கு மகிழாமலும், எவர்க்கும் உயிர்வாழ் தற்கோர் உபாயம் ஏற்பட்டிருப்பது இயற்கையாதலின், தமக்கு நேரும் குறைந்த வாழ்க்கை ஏதுவுக்கு வருந்தாமலும், உயர்ந்த வாழ்க்கை ஏதுவுக்கு மகிழாமலும், எவர்க்கும் துன்பஞ் சேர்தல் இயற்கையாதலின் தமக்கு வருந்துன்பத் திற்குக் கலங்காமலும், எவரிடத்தும் செல்வம் நிலைத்திரா மல் வறுமையும் ஒரு காலத்தில் சேர்தல் இயற்கையாதலின் தமக்கு நேரும் வறுமைக்கு வருந்தாமலும் மனத்தைச் சமத்துவமான நிலையில் வைத்து அறநெறி யொன்றினையே பற்றித் தவஞ்செய்து முத்தியடைதல் வேண்டுமென்பது குறிப்பால் உணரப்படும்.

முதல் வாக்கியத்தோடு சார்ந்திருக்கும், 'உலகத்து' 'தேருங்கால்' என்ற சொற்கள் மற்ற வாக்கியங்களிலும்

சென்றியையும்; அங்ஙனம் இயைவது, 'முதனிலைத்தீவகம்' எனப்படும். 'யார்' என்னும் ஒரே சொல் ஒரே பொருளிற் பன் முறை வந்தது, 'சொற்பொருட் பின்வரு நிலையணியின்பாற் படும். அளபெடைகள்- செய்யுளோசை நிறைக்க வந்தன. உபாயம்- உழவு, வாணிபம், சேவகம், பிச்சை முதலிய வற்றுள் ஒன்று. சாமம், பேதம், தானம், தண்டம் என்னும் நால்வகை உபாயங்களில் ஒன்றெனக் கூறுவாருமுளர். இவை, அரசர், பகைவரை வெல்லற்கு உபயோகிக்கப்படு வனவாதலின், பொதுவாக எல்லா மனிதரின் உயிர் வாழ்க் கைக்கு ஏற்றனவாகக் கொள்ளப்படா. 'கடைபோக' என்ப தற்கு, 'முடிவுவரை (அனுபவம்) நடைபெற' எனப் பொருள் கொள்ளுதல் நேர். ''ஈறு கடைபோக வெனக்கரு ளென்ற லும்'' என்ற மணிமேகலையடி இங்கு ஆராயத்தக்கது. இச்செய்யுளில் அளபெடைகள் பல வந்தது- அளபுத்தொடை யெனப்படும். 'உபாயத்தின்' என்பதில், இன்- ஏதுப் பொரு ளில் வந்த ஐந்தனுருபு. 'வாழாதாரியார்' என்றும், 'செல்வ முற்றார்' என்றும் பாடபேதங்களுண்டு. (கூ)

120. *தாஞ்செய் வினையல்லாற் றம்மொடு செல்வதுமற்*
றியாங்கணுந் தேரிற் பிறிதில்லை- ஆங்குத்தாம்
போற்றிப் புனைந்த வுடம்பும் பயமின்றே
கூற்றங்கொண் டோடும் பொழுது.

(இ-ள்.) தேரில்- (நன்றாக) ஆலோசித்துப் பார்க்கு மிடத்து, கூற்றம் - யமன், கொண்டு ஓடும் பொழுது- (மனித ரின் உயிரைக்) கொண்டு விரைந்து செல்லுங்காலத்தில், தம்மொடு செல்வது- அவர் தம்மோடு கூடச் செல்வது, தாம் செய்வினை அல்லால்- தங்கள் செய்த கருமமே அல்லாமல், பிறிது - வேறொன்று, யாங்கணும்- எவ்விடத்தும், இல்லை-; தாம் போற்றி புனைந்த உடம்பும்- தாம் பாதுகாத்து (ஆடை யாபரண முதலியவவைகளால்) அலங்கரித்த தேகமும், ஆங்கு- அப்படியே, (அதாவது, மற்ற அனுபவங்களில்

ஒன்றும் கூட வராதது போலவே), பயம் இன்று- பிரயோசன மாவதில்லை; எ-று.

மனிதர் உயிரை யமன் பற்றிக்கொண்டு செல்லுங் காலத்தில், அவர்கூடச் செல்வது அவர் செய்த கருமமே யல்லாமல் வேறொன்றுமில்லை; அவருடைய உடம்பும் பயன்படுவதின்று என்பது இதன் கருத்து.

மனிதர், மனைவி, மக்களோடும், செல்வத்தோடும் உலகத்தில் பல இன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்த போதிலும், அவர் இறக்குங் காலத்தில் அவ்வின்பங்களில் எதுவும் கூடச் செல்லமாட்டாது; அவர் நல்வினையையோ தீவினையையோ செய்திருந்தால் அக்கருமமாத்திரம் அவரைத் தொடர்ந்து சென்று அவர்க்கு அதற்குரிய பலனைக் கொடுக்கும்; அதாவது அவர் செய்தது நல்வினையாயிருந் தால் நற்பதவியையும், தீவினையாயிருந்தால் நரக முதலிய துன்பங்களையும் அவர்க்குக் கொடுக்கும். அவரால் போற்றப் பட்ட உடம்பும் பயனற்றதாய் நெருப்பிடைப்பட்டோ, மண்ணிடை மறைந்தோ ஒழியும். இவ்வுண்மை களை,

''ஈட்டிய வொன்பொருளு மில்லொழியுஞ் சுற்றத்தார்
காட்டுவாய் நேரே கலுழ்ந்தொழிவர் - மூட்டும்
எரியி னுடம்பொழியு மீர்ங்குன்ற நாட
தெரியி னறமே துணை''

என்னும் அறநெறிச் சாரம் 147-ஆம் செய்யுளானும்,

''மனையாளு மக்களும் வாழ்வுந் தனமுந்தன் வாசல் மட்டே
இனமான சுற்ற மயானமட் டேவழிக் கேதுதுணை

தினையா மளவெவ் வளவா கினுமுன்பு செய்த தவந்
தனையாள வென்றும் பரலோகஞ் சித்திக்குஞ்
சத்தியமே''

''அத்தமும் வாழ்வு மகத்துமட் டேவிழி யம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு
கைத்தலை மேல்வைத் தழுமைந்த ருஞ்சுடு
காடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய
பாவமுமே''

என்னும் பட்டினத்தார் பாடல்களாலும் உணரலாம். ஆகவே, முத்தியடைய விரும்புவோர், இவ்வுலகத்திலுள்ள எல்லா அனுபவங்களும், உடம்பும் தாம் இறங்குங் காலத்தில் கூட வரமாட்டா வென்றும், தாம் செய்த கருமமே தம்மைத் தொடருமென்றும், அது நல்வினையாயிருந்தால் நன்மையையும், தீவினையாயிருந்தால் தீமையையும் தமக்குத் தருமென்றும் கருதி, உலக போகங்களை விரும்பாது நற்கதிக் கேதுவாம் நல்வினையைத் தேடிக்கொள்ளவேண்டு மென்பது இதனாற் பெறப்படும்.

மற்று - அசை. யாங்கண் - பண்புத்தொகை; இதில், யா - வினாவிடைச் சொல், கண் - இடப்பெயர், விகாரத்தால் இடையிவ் நகரம் தோன்றிற்று; 'யாக்கன்' என்பதன் மெலித்தல் எனக் கோடலுமொன்று. ஆங்கு - உலகறிசுட்டு. மற்றியாங்கண் - குற்றியலிகரம் 'பயமின்றே' என்பதில், ஏ - தேற்றம். 'கூற்றம்' என்பதில், அம் - சாரியை. இச்செய்யுளின் முன்னிரண்டடிகளும் இனவெதுகையாக அமைந்தன.
(கo)

அதிகாரம் 13

தீவினையச்சம்

தீவினையச்சம்- பாவத்தைத் தரும் கொடிய தொழிலைச் செய்தற்கு அஞ்சுதல்; இவ்வதிகாரம் அதைப் பற்றிக் கூறுவதாகலின் இப்பெயர் பெற்றது. பொருள்களின் இயற்கைத் தன்மைகளை யுணர்ந்தாலன்றிக் கெட்டவை இன்னவை யென்றுணர்ந்து அவற்றிற்கஞ்சி நடத்தல் இயலாது. ஆதலின், பொருள்களின் இயற்கையை யுணர்தற் கேதுவாகிய, 'மெய்ம்மை' என்னும் அதிகாரம் முன்வைக்கப் பட்டு, இவ்வதிகாரம் அதன் பின் வைக்கப்பட்டது.

121. துக்கத்துட் டூங்கித் துறவின்கட் சேர்கலா
மக்கட் பிணத்த சுடுகாடு- தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்குங் காடே புலங்கெட்ட
புல்லறி வாளர் வயிறு.

(இ-ள்) சுடுகாடு- (உலகத்தில் உள்ள) ஈமங்கள், துக்கத்துள் - சம்சார துன்பங்களிலே, தூங்கி - சோர்வுற்றுத் தங்கியிருந்து, துறவின்கண் - துறவறத்தினிடத்திலே, சேர்கலா - சேராத, மக்கள் - மனிதர்களுடைய, பிணத்த- பிணங்களையுடையன; புலம்கெட்ட- நல்லறிவில்லாத, (புலாலுணவுண்கிற), புல் அறிவு ஆளர் - அற்ப அறிவினை யுடையவர்களின், வயிறு- வயிறுகள், தொக்க - கூட்டமான,

விலங்கிற்கும்- மிருகங்களுக்கும், புள்ளிற்கும்- பறவைகளுக் கும், (உரிய), காடு- சுடுகாடுகளாம்; எ-று.

சுடுகாடுகளெல்லாம், துறவடையாமல் சம்சார துன்பங்களில் சிக்கி வருந்தி யிறக்கும் மனிதர்களின் பிணங் களை யுடையன; நன்மை தீமைகளைப் பகுத்துணரும் அறி வில்லாத புல்லறிஞர்களுடைய வயிறு மிருகங்களின் உடம்பு களுக்கும், பறவைகளின் உடம்புகளுக்கும் சுடுகாடாகும் என்பது இதன் கருத்து.

சுடுகாடுகள் இறந்த மனிதர்களுடைய உடம்புகளை எரித்துச் சாம்பலாக்குவது போல அறிவில்லாதவர்களுடைய வயிறுகள் அவர்களால் கொல்லப்படும் மிருகங்கள், பறவை கள் ஆகியவற்றின் உடம்புகளின் தசைகளை எரித்து ஜீரண மாகச் செய்வதால் அவை அவற்றிற்குச் சுடுகாடுகளெனப் பட்டன. ''அரிதரிது மானிடராதலரிது'' என்றபடி மனிதர் பிறப்பு உயர்ந்தது; அத்தகைய பிறப்பையுடைய மனிதரும் இறந்து பிணங்களாய் விட்டால் அப்பிணங்கள் இழிந்தவை களாகவே மனிதராற் கருதப்படும்; ஆதலின் அவை சேரும் சுடுகாடுகள் இழிந்தனவாம்; அவைகளே அங்ஙனம் இழிந் தனவாம்போது, மனிதரினும் தாழ்ந்த மிருகங்களும், பறவை களும் சேரும் சுடுகாடுகள் இழிந்தனவாம்; அவைகளே அங்ஙனம் இழிந்தனவாம் போது, மனிதரினும் தாழ்ந்த மிரு கங்களும், பறவைகளும் சேரும் புல்லறிவாளருடைய வயிறு கள் மிகவும் இழிந்தனவாம். இவ்விழிவை ஆசிரியர் இச்செய் யுளில் குறிப்பிட்டிருக்கின்றார்; இங்ஙனம் குறித்ததனால், விலங்குகளையும், பறவைகளையும் கொன்று தின்போர் மிகவும் இழிந்தவர்களென்பதும், கொடியரென்பதும், அவர் களுடைய செயல் தீவினையாகு மென்பதும், அதற்கஞ்ச வேண்டு மென்பதும் பெறப்படும். புல்லறிவாளர்க்கு முத்தி யடைதற் கேதுவான ஆத்ம ஞான மிராதாதலின், அவர்களை, 'புலங்கெட்ட புல்லறிவாளர்' என்றார் முனிவர். துறவடை யாதவர்களுடைய பிணங்களே இழிந்த சுடுகாட்டிற் சேர்க்கப்

படும்; துறவிகளுடைய உடம்பு, அவர்கள் விட்டபோது புனிதமான விடத்திற் சேர்த்தெரிக்கப்படும். சிலர், அவர் களுடைய உடம்பு புனிதமான விடத்திற் சேமித்துப் போற்றப் படும்' என்று கூறுவர். அது ஜைன மதத்திற்கு முற்றும் விரோதமாதலின் பொருந்தா தென்க.

சேர்கலா- ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; சேர்- பகுதி, கல்- ஆற்றற் பொருண்மையை யுணர்த்தும் விகுதி, ஆ- எதிர்மறை விகுதி. பிணத்த- அன்சாரியை பெறாத பல வின்பால் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று. தொக்க- பெயரெச்சம். 'காடே' என்பதில், ஏ- தேற்றம்- புல்லறி வாளர்- புன்மையான அறிவை ஆள்பவர். (க)

122. இரும்பார்க்குங் காலரா யேதிலார்க் காளாய்க்
கரும்பார் கழனியுட் சேர்வர்- சுரும்பார்க்குங்
காட்டுளாய் வாழுஞ் சிவலுங் குறும்பூழுங்
கூட்டுளாய்க் கொண்டுவைப் பார்.

(இ-ள்.) (இப்பிறப்பில்) சுரும்பு - வண்டுகள், ஆர்க் கும் - ஒலிசெய்கின்ற, காட்டுள்- வனத்திலே, ஆய்- உண் டாகி, வாழும்- வாழ்கின்ற, சிவலும்- கவுதாரிகளையும், (அவை போன்ற மற்றப் பறவைகளையும்), குறும்பூழும்- காடைகளையும், (உயிருடன் பிடித்து), கூட்டுள் - கூட்டி னுள்ளே, ஆய்- இருப்பனவாகும்படி, (அதாவது இருக்க), கொண்டு வைப்பார் - கொண்டுபோய் வைத்து வளர்த்துத் துன்புறுத்துவோர், (மறு பிறப்பில் காவலரால் சிறைக்கூடத்தி லடைக்கப்பட்டு), இரும்பு - இருப்பு விலங்குகள், ஆர்க்கும் - ஒலிக்கின்ற, காலர் ஆய் - கால்களையுடையவர்களாய், ஏதிலார்க்கு - பகைவர்களுக்கு, ஆள் ஆய்- அடிமைகளாய், கரும்பார் - கரிய பாறைதங்கிய கடின நிலங்களிலும், கழனி யுள் - (பயிர்கள் விளைதற்கிடமாகிய) வயல்களிலும், சேர்வர் - (வேலை செய்தற்குப் போய்ச்) சேருவார்கள்; எ-று.

காட்டில் சுயேச்சையாய் மகிழ்ச்சியோடு வாழ்கின்ற கவுதாரி, காடை முதலிய பறவைகள் வருந்தும்படி இப் பிறப்பில் அவற்றைப் பிடித்துக் கூட்டில் அடைத்து வைத்து வளர்ப்பவர்கள், மறு பிறப்பில் பகைவரால் சிறைப்படுத்தப் பட்டு இருப்பு விலங்கு பூட்டப்பட்ட கால்களை யுடையவர் களாய் வலிய பாறை நிலங்களிலும், விளை நிலங்களிலும் வேலை செய்யச் சேர்ந்து கடின வேலைகளைச் செய்வார்கள் என்பது இதன் கருத்து.

இதனால், பறவைகள் முதலியவற்றைக் கொன்று தின்பதேயன்றி அவைகளைப் பிடித்துக் கூட்டில் அடைத்து வைத்து வளர்ப்பதும் தீவினை யென்பதும், அதற்கஞ்ச வேண்டு மென்பதும் விளக்கப்பட்டன. பறவைகள் முதலிய வற்றைக் கூண்டிலடைத்து வைப்போர் அவையடைந்த துன்பத்தை அடைவரென்பதை, தசகுமார சரிதத்துள், ''அன்னப் பார்ப்பை நூலிட்டுக் காலைக்கட்டிய பாவத்தாற் பின்பு வெள்ளி விலங்கு காலிற் கிடந்தது'' என்று ஆசாரிய தண்டி கூறியதாலும், சீவக சிந்தாமணியுள் சீவகனுக்கு முற்பிறப்புணர்த்திய சாரணர், அவன், முற்பிறப்பில் அன்னப் பார்ப்பைச் சுற்றத்தினின்றும் பிரித்துச் சிறைவைத்த தீவினை யால் சுற்றத்தினின்றும் பிரிந்து பிறர் காவலுக்குட்பட்டா னென்று கூறியதாக வருவதாலும், அவர் அவனுக்குக் கூறிய தாக வரும்,

''பூவைகிளி தோகைபுண ரன்னமொடு பன்மா
யாவையவை தங்கிளையி னீங்கியழ வாங்கிக்
காவல் செய்து வைத்தவர்கள் தங்கிளையி னீங்கிப்
போவர்புகழ் நம்பியிது பொறிபிலது கண்டாய்''

என்னும் சீவக சிந்தாமணி - முத்தியிலம்பகம். 277-ஆம் செய்யுளானுமுணரலாம்.

பார் - கற்பாறை; இது சில இடங்களில் பூமியின் மேற்பாகத்திலும், அடிப்பாகத்திலும் இருக்கும்; கருமை, வெண்மை, செம்மை ஆகிய பல நிறங்களோடு கூடியதாயு மிருக்கும்; இவற்றுள் கருமை நிறத்தோடு கூடியது மிகவுங் கடினமானதாயும், உடைத்து வேலை செய்வதற்கு மிக்க சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டியதாயு மிருக்கும்; இத் தகைய பாறைகளை உடைத்து நிலத்தைப் பண்படுத்தவோ, கிணறு தோண்டவோ மனிதர் இவையுள்ள நிலங்களில் வேலை செய்வது இயல்பு; இது கடினமான வேலையாதலின் சிறைப்பட்டவர்க்கே அதிகாரிகள் இவ்வேலையைக் கொடுப்பர்; இஃதன்றி விளைநிலங்களிலும் வேலை செய்யு மாறு அவர்களை ஏவுவர். ஆதலின், ''கரும்பார் கழனியுட் சேர்வர்'' என்றார் ஆசிரியர். இனி, கரும்பார் - என்பதற்கு, வலிய பூமியென்றும், கரிசற்பூமி யென்றும் பொருள் கொள்ளினு மமையும். வலியபூமி - கடினமாகிய புன்செய் முதலிய மேட்டு நிலம்; கரிசற்பூமி - கரிய நிறமுள்ள களிமண் பூமி; இவற்றில் வேலை செய்வதுந் துன்பந்தருவதா யிருக்கும். 'கரும்பார் கழனி' என்பதை, 'கரும்பு + ஆர்+ கழனி' எனப் பிரித்து, 'கரும்புகள் பொருந்தி வளர்கிற நிலங்கள்' எனப் பொருள் கோடலுமொன்று. இஃதன்றி, 'கரும்பார்' என்பதற்கு, 'இருளுலகமாகிய நரக பூமி' எனப் பொருளுரைப்பாருமுளர். 'கரும்பார்கழனி' என்பது முதலிற் குறிப்பிட்ட பொருளுரைக்குமிடத்து உம்மைத் தொகை; 'கரும்பு பொருந்திய கழனி' எனப் பொருள் கொள்ளுமிடத்து வினைத்தொகை. இரும்பு விலங்குக்குக் கருவியாகுபெயர், 'இரும்பு ஆர்க்கும்' என்பதற்கு, 'விலங்கினாற் கட்டப்பட்ட' என்றும் பொருளுரைக்கலாம். ஏதுஇலார் = ஏதிலார்- யாதொரு சம்பந்தமும் இல்லாதவர்; பகைவர் எவ்வித பற்றுமற்றவராகலின் இப்பெயர் பெற்றனர். 'ஆய்' என்னும் சொற்கள் நான்கனுள் முன்னைய மூன்றும் செய்தென்னும் வாய்பாட்டு ஆகியென்னும் வினை யெச்சங்கள்; பின்னது செயவென்னும் வாய்பாட்டு ஆக வென்னும் வினையெச்சத் தின் திரிபு, வைப்பார்- வினையாலணையும் பெயர். சிவல்,

குறும்பூழ் என்பன மற்றப் பிராணிகட்கும் உபலட்சணமாத லின், இவற்றைக் கூறியதி லிருந்து மற்றவைகளையுங் கொள்ளவேண்டும். (உ)

123. அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித்
துக்கத் தொழுநோ யெழுபவே- யக்கால்
அலவனைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்.

(இ-ள்.) (மனிதர்) அ கால்- அந்தக் காலத்தில், (முற் பிறப்பில்), அலவனை- நண்டை, காதலித்து- விரும்பி, கால் முரித்து - (அதன்) காலை ஒடித்து, தின்ற- (அதனைத்) தின்றத னாலாகிய, பழவினை- பழைய தீவினை, வந்து அடைந்தக் கால்- (பிற்பிறப்பில் அவரிடம்) வந்து சேர்ந்தால், (அவர் கள்), அங்கை- உள்ளங்கை மட்டும், ஒழிய- நீங்கி நிற்க, விரல்- விரல்கள், அக்கேபோல்- சங்குமணிபோல, அழுகி- அழுகித்தசை கழிந்து வெண்ணிறமாகி விழ, துக்கம்- மிகுந்த துன்பத்திற்கிடமான, தொழுநோய் எழுப- குஷ்ட வியாதி உண்டாகப் பெறுவர்; எ-று.

மனிதர், முற்பிறப்பில் நண்டின் காலை முரித்துத் தின்று அத்தீவினை இப்பிறப்பில் வந்து அவர்களைச் சாரு மாயின், அவர்கள், கைவிரல்கள் இற்றுவிழக் குஷ்டநோய் கொண்டு வருந்துவர் என்பது இதன் கருத்து.

இங்கு நண்டு, மற்றப் பிராணிகட்கும் உபலக்ஷண மாதலின், இதைக் கூறியதைக் கொண்டு மற்றப் பிராணி களையும் கால் முறித்துத் தின்னலாகாதென்பது பெறப்படும். இங்ஙனம் நண்டு முதலியவற்றைக் கால் முறித்து தின்னும் தீவினையால் பெருநோயுண்டாகுமெனவே அதற்கஞ்ச வேண்டு மென்பது தானே அமையும். இங்ஙனம் முன்னே பிற பிராணிகட்குத் துன்பஞ் செய்வோர்க்குப் பின்னே அத்துன்பஞ் சேருமென்பதை,

''நெடியது காண்கிலாய் நீயெளியை நெஞ்சே
கொடியது கூறினாய் மன்ற- அடியுளே
முன்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு
பின்பகல் கண்டு விடும்''

என்னும் பழமொழி. 130-ஆம் செய்யுளானும்,

''பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்''

என்னும் திருக்குறள், 319-ஆம் செய்யுளானும் உணரலாம். பெருநோய் கொண்டவர்க்கு விரல்கள் அழகித் தசை நீங்கி வெண்மை நிறமுள்ள துண்டுகளாய் விழும்போது சங்கு மணிகள் போன்றிருக்கும்; ஆதலின், 'அக்கேபோல் விரல் அழுகி, என்றனர் முனிவர்.

அகம்+கை- அங்கை என்றாயிற்று.

''அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே
முதனிலை யொழிய முன்னவை கெடுதலும்
வரைநிலை யின்றே யாசிரி யர்க்கு
மெல்லெழுத்து மிகுத லாவயி னான''

என்னும் (தொல் - எழுத் - புள்ளிமயங்கியல்- 20-ஆம்) சூத்திரம் பார்க்க. தொழு- குஷ்ட நோய்; தொழுநோய் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை; தொழுவாகிய நோய் என விரியும். அழுதி- அழுக வென்னும் செயவெனெச்சத் திரிபு.

''உயர்திணை தொடர்ந்த பொருள்முத லாறும்
அதனொடு சார்த்தி னத்திணை முடிபின''

என்னும் (நன் - பொது - 26 - ஆம்) சூத்திரவிதியால், 'நோய்' என்னும் அஃறிணை யெழுவாய், 'எழுப' என்னும் உயர்

திணை யெழுவாயின் முற்றைக்கொண்டு முடிந்தது; இது, திணை வழுவமைதி. அகரம் சேய்மைச் சுட்டாதலின், 'அக்கால்' என்பது முற்பிறப்பை யுணர்த்தி நின்றது. 'காலம்' என்பது அம் விகுதிகுன்றி, 'கால்' என நின்றது. 'தின்றபழ வினை' என்பதில், 'தின்ற' என்னும் பெயரெச்சம் காரணப் பொருளதாய்க் காரியபெயரைக் கொண்டது, 'சங்குசுட்ட சுண்ணாம்பு' என்பதிற்போல. பின்னிரண்டடிகள் - இன வெதுகை. (ந)

124. நெருப்பழற் சேர்ந்தக்கா னெய்போல் வதூஉ
மெரிப்பச்சுட் டெவ்வநோ யாக்கும்- பரப்பக்
கொடுவினைய ராகுவர் கோடாருங் கோடிக்
கடுவினைய ராகியார்ச் சார்ந்து.

(இ-ள்) நெய்போல் வதூஉம் - (உடம்பிற்கு இதத் தைத் தரும்) நெய்யும், நெருப்பு அழல்- தீயின் வெப்பத்தை, சேர்ந்தக் கால்- சேர்ந்தால், (அப்போது தன்னைத் தொட்டவர் களுக்கு), எரிப்ப- (புண்ணானது உடம்பை) எரிக்கும்படி, சுட்டு(அவர்களை) வெதும்பி, எவ்வம்- துன்பந் தரும்படி யான, நோய்- நோயை, ஆக்கும் - உண்டாக்கும்; (அது போலவே), கோடாரும் - (நல்லொழுக்கத்தினின்றும்) தவறாதவர்களும், கடுவினையர் ஆகியார்-கடுமையான தீச் செயல்களையுடையாராகியவர்களை, சார்ந்து- கூடுவதால், கோடி- (நல்லொழுக்கத்தினின்றும்) தவறி, பரப்ப- மிகுதி யாக, கொடுவினையர் ஆகுவர் - கொடிய செய்கைகளை யுடையவராவர்; எ-று.

மனிதர் உடம்புக்குப் பலவகையாலும் இதத்தைச் செய்வதாகிய நெய்யும் நெருப்போடு சேர்ந்தால் மிகுந்த சூடுள்ளதாகித் தன்னைத் தீண்டினாரைச் சுட்டு அவர்க்கு வருத்தத்தை யுண்டாக்கும்; அதே போல், நன்னெறி யினின்றும் நீங்காத யோக்கியரும் தீயரோடு சேர்வதால் நீதிதவறிக் கெட்ட செய்கை யுடையவராகிவிடுவர் என்பது

இதன் கருத்து. இங்ஙனங் கூறியது எடுத்துக்காட்டுவமை யணியின்பாற்படும்; இது வடமொழியில் 'த்ருஷ்டாந் தாலங்காரம்' எனப்படும்.

பிறரோடு சேர்வார்க்கு அவர்களுடைய அறிவே மிகுமென்பதை,

''நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு''

என்னும், திருக்குறள்-452ஆம் செய்யுளானு முணர்க. இங் ஙனம் தீயவரோடு கூடுவோர் தீயோராவர் என்று கூறிய தனால், அவரோடு சேர்தற்கு அஞ்சவேண்டு மென்பது விளக் கப்பட்டது. 'நெய்யும்' என்பதிலுள்ள உம்மை- உயர்வு சிறப் புப்பொருளது. நெய் மென்மைத் தன்மையையும், குளிர்ச்சி யையும், எத்தகைய புண்களையும் ஆற்றும் இயல்பையும், ஆயுளை வளர்க்கக்கூடிய தன்மையையு முடையதாதலின், உயர்வு சிறப்பும்மை கொடுத்து உயர்ந்த தென விளக்கப் பட்டது. போல்வது- ஒப்பில்போலி; ஒப்பில் போலியாவது - ஒன்றற்கொன்று ஒக்குமென்னும் பொருள் தன்னிடத்தின்றி வரும் அசைச்சொல்; போலும், போல்வது முதலியன இதில டங்கும்; இவை இங்ஙனம் வருமென் பதனை, 'ஒப்பில் போலியு மப்பொருட் டாகும்'' என்னும் (தொல் - சொல் - இடை - 30 - ஆம்) சூத்திரம் சேனாவரையர் உரையில், ''ஒப்புமை யுணர்த்தாத போலிச் சொல்லும் ஆங்கவென்பது போல உரையசையாம்'' என்றும், ''போலும், போல்வது என்னுந் தொடக்கத்துப் பலவாய்ப் பாடுந் தழுவுதற்குப் போலியென்றார். 'நெருப்பழற் சேர்ந்தக்கா னெய்போல்வதூ உம்' (நாலடி-124) என்பதுமது'' என்றும் வருவனவற்றாலும், அவற்றுள் இச்செய்யுளின் முதலடியே உதாரணங் காட்டப் பட்டிருத்தலாலும் உணரலாம். இனி 'நெய்போல்வதூஉம்' என்பதற்கு, 'நெய்போன்ற தண்ணிய பொருளும்' எனப் பொருளுரைப்பினுமாம். போல்வதூஉம்- செய்யுளோசை

நிறைக்கவந்த உயிரள பெடை. 'கோடார்' என்பதில், கோடு-பகுதி, ஆ- எதிர்மறை விகுதி; புணர்ந்து கெட்டது, ஆர்-விகுதி; வினைப்பகுதி இடைநிலையின்றி ஆர் விகுதியோடு சேர்ந்தாலும் எதிர் மறையைக் காட்டும். (ச)

125. *பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்*
வரிசை வரிசையா நந்தும்- வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு.

(இ-ள்.) பெரியவர் கேண்மை- (அறிவிற் சிறந்த) பெரியோர்களுடைய உறவு, பிறைபோல- (முற்பக்கத்து) இளஞ் சந்திரன்போல, நாளும்- தினந்தோறும், வரிசை வரிசை ஆ- முறை முறையாக, தானே- தானாகவே, நந்தும்- வளரும், சிறியார் தொடர்பு- (அறிவற்ற) சிறியவரது நேயமோ, வான்ஊர்- ஆகாயத்திற் செல்லும், மதியம்போல்- பூரண சந்திரன் போல, வைகலும்- நாள்தோறும், வரிசையால்- முறையாக, தானே- (பிறர் முயற்சி யின்றித்) தானாகவே, தேயும்- குறைந்துவிடும்; எ-று.

பெரியார் நட்பு வளர்பிறைபோலத் தினந்தோறும் வளர்ந்து கொண்டே யிருக்கும்; சிறியார் உறவு பிற்பக்கத்துச் சந்திரன்போலத் தினந்தோறும் குறைந்துவிடும் என்பது இதன் கருத்து.

இவர் நட்பு இங்ஙனமா மென்பதனை,

''நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு''

என்னுந் திருக்குறள்-782 -ஆம் செய்யுளும் விளக்கும். இங்ஙனங் கூறியதனால் சிறியார் நட்பு பயனற்றதும், தீங்கு

செய்வதுமாகலின் அதற்கஞ்சி அதனை நீக்கவேண்டுமென் பது குறிப்பால் விளக்கியதாயிற்று. முற்பக்கம் அமாவாசைக் குப்பின் வருவது; பிற்பக்கம் பௌர்ணமிக்குப்பின் வருவது. முற்பக்கத்திலுள்ள பிறை பூரணைவரை வளர்ந்து கொண்டே போகும்; பூரண சந்திரன் பௌர்ணமியிலிருந்து பிறபக்கத்தில் அமாவாசைவரை குறைந்து கொண்டேபோய் முடிவில் வடிவந்தெரியாததாய்விடும். பெரியோர், தாங்கள் சிநேகஞ் செய்வோரை முதலில் ஆராய்ந்து அவர்கள் குணமுள்ள வர்களா யிருந்தால் மாத்திரம் அவர்களோடுறவு கொள்வார் கள்; அங்ஙனம் செய்துகொண்டபின் அவரிடம் பெருந்தவறு சில சமயங்களில் நேரினும் அதனைப் பாராட்டாது அவர் களுடைய சிநேகத்தை விருத்திசெய்து கொண்டே போவார் கள்; சிறியார் மனிதருடைய குணங்களை ஆராயாமலே தீக்குணமுடையாரிடத்தும் விரைந்து நட்புக்கொள்ளுவர்; அங்ஙனம் கொண்டு அவர்களிடம் சிறு தவறு காணப்படினும் அவர்களுடைய சிநேகத்தை விட்டுவிடுவர். ஆதலின், பெரி யார் சிநேகம் விருத்தியடையும், சிறியார் சிநேகம் குறையும்.

இக்கவியின் கருத்தும், இந்நூல் 138ஆம் கவியின் கருத்தும் பெரும்பான்மையும் ஒரு தன்மையன.

''வானூர்மதியம்'' என்பதில், ஊர்தல்- செல்லுதற் பொருளில் வந்தது. இது, ''குன்றமார் பரிந்து வெள்வேற் குடுமிமா மஞ்ஞையூர்ந்து'' என்னும் சீவகசிந்தாமணி - நாமகளிலம்பகம் 257-ஆம் செய்யுளுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர், ''ஊர்தல்- ஈண்டும் போதன்மேற்று; 'வானூர்மதியம்' (நால- தீவினை-5) போல' என இதனையே உதாரணங்காட்டி எழுதியிருப்பதால் துணியப்படும். நாளும், வைகலும் என்பவற்றிலுள்ள உம்மைகள்- முற்றப் பொருளன. 'தானே' என்பது இரண்டிடங்களினுங் கூட்டப் பட்டது.

126. *சான்றோ ரெனமதித்துச் சார்ந்தாய்மற் சார்ந்தாய்க்குச்*
சான்றாண்மை சார்ந்தார்க ணில்லாயிற்
- சார்ந்தோய்கேள்
சாந்தகத் துண்டென்று செப்புத் திறந்தொருவன்
பாம்பகத்துக் கண்ட துடைத்து.

(இ-ள்.) சார்ந்தோய் - (சிலரை நன்றாக ஆராய்ந்து பாராமல்) சேர்ந்த மனிதனே!, கேள்- (நீ) கேட்பாயாக, (நீ அங்ஙனம் ஆராயாக்குறைவால்), சான்றோர் எனமதித்து- (அவர்களை நற்குணங்களால்) நிறைந்தவர் என்று கருதி, மன் - மிகுதியாக, சார்ந்தாய்- (சினேகித்துச்) சேர்ந்தாய், (ஆராயும் போது அவர்கள் தீக்குணமுடையவர்களா யிருப்பினு மிருத் தல்கூடும்; அங்ஙனம்), சார்ந்தார் கண் - சேர்ந்த அவரிடத்து, சான்றாண்மை- அந்தச் சற்குணநிறை வுடைமை, இல்லா யின்- இல்லாவிடின், (அது), சார்ந்தாய்க்கு - (அவ்வாறு அவர் களோடு) நேசித்துச் சேர்ந்த உனக்கு, ஒருவன்- ஒருமனிதன், செப்பு அகத்து- ஒரு செப்பினுள்ளே, சாந்து உண்டு என்று- வாசனைப்பொருள் இருக்கிறதென்று நினைத்து, திறந்து- (அச்செப்பைத்) திறந்து, அகத்து- அதனுள்ளே, பாம்பு கண் டது- பாம்பைக்கண்ட தன்மையை, உடைத்து- உடைய தாகும், (அதாவது, போன்றதாகும்); எ-று.

இச்செய்யுள், பிறருடைய குணங்களை ஆராயாமல் அவர்களை நற்குணங்கள் நிறையப் பெற்றவரென்று நினைத்து அவர்களோடு சிநேகங்கெண்ட ஒருவனை விளித்து, 'நீ ஆராயாமலே சிலரை நல்லவரென்று நினைத்து நேசித்திருக்கிறாய்; அவர்களிடம் நற்குணமில்லாமற் போயி னும் போகும்; அங்ஙனம் அவர்களிடம் நற்குண மில்லாமல் தீக்குணங்களிருக்குமானால், அச்சேர்க்கை யானது ஒருவன் வாசனைப் பொருள் இருக்கிறதென்று நினைத்து ஒரு செப் பைத் திறந்து அதனுள் பாம்பிருக்கக் கண்டு நடுங்கியதைப் போல நடுக்கத்தைத் தரத்தக்கதாகும்' என்று கூறியதாக அமைந்தது.

இங்ஙனங் கூறியதனால், மனிதர், பிறரை ஆராய்ந்து நற்குணமுள்ளவரோடு சிநேகங் கொள்ளவேண்டு மென்பதும், அங்ஙனம் ஆராயாமல் பிறரோடு உறவு கொள்ளலாகாதென்பதும், ஆராயாமற் செய்யும் சிநேகிதர்களில் கெட்டவர்களுமிருத்தல்கூடு மென்பதும், அவர்கள் இயற்கை வெளியாயின் அஞ்சுதற்கிடமுண்டா மென்பதும் விளக்கப்பட்டன. இவ்வதிகாரப் பொருளுக்குத் தகக் கெட்டவர்களோடு சிநேகங் கொள்ளுதற்கு அஞ்ச வேண்டுமென்பது இதில் குறிப்பாக அமைந்திருத்தல் காண்க.

'சான்றோர்' என்பதில், சால் - பகுதி (அதாவது நிறைவு), ஆர்- விகுதி, றகரம்- இடைநிலை, லகரம் னகரமானது சந்தியும், விகாரமுமாம், விகுதி ஆகாரம் ஓகாரமானது,

''ஆவோ வாகும் பெயருமா ருளவே
யாயிட னறிதல் செய்யு ளுள்ளே''

என்னும் (தொல்-சொல்-பெய-41-ஆம்) சூத்திர விதியாலமைந்தது. மன்- மிகுதிப் பொருள் தந்து நின்றமையான் உரிச்சொல்; அசையெனினுமாம். சான்று ஆண்மை- வினையெச்சத்தொடர்; 'நற்குணங்களால் நிறைந்து அவற்றை ஆளுந்தன்மை' என்று பொருள்படும். சார்ந்தாய்- முன்னிலை வினையாலணையும் பெயர். சார்ந்தோய்- விளி; இதில் ஈற்றுனகரம் யகரமானது விளியுருபு. சாந்து - சந்தநம் என்னும் வடசொற்றிரிபு; சந்தனத்துக்கு மாத்திரம் உரிய இச்சிறப்புப் பெயர், 'வாசனைப் பொருள்' என்னும் பொதுப் பொருள் குறித்து நின்றது. கண்டது- வினையாலணையும் பெயர்; இங்குக் காணப்பட்ட உபமானத்தை யுணர்த்தி நின்றது.

127. *யாஅ ரொருவ ரொருவர்த முள்ளத்தைத்*
தேருந் துணைமை யுடையவர் - சாரற்
கனமணி நின்றிமைக்கு நாடகேண் மக்கண்
மனம்வேறு செய்கையும் வேறு.

(இ-ள்) சாரல்- மலைச்சார்பான இடங்களிலே, கனம்- பெருமை பொருந்திய, மணி- இரத்தினங்கள், நின்று- நிலை பெற்று, இமைக்கும்- பிரகாசிக்கின்ற, நாட- பாண்டி நாட்டையுடைய அரசனே!, கேள்- (சொல்வதைக்) கேட்பாயாக, மக்கள்- மனிதர்களின், மனம் வேறு- எண்ணம் வேறு, செய்கையும் வேறு- தொழிலும் வேறு, (ஆதலின்), ஒருவர் தம்- ஒரு மனிதருடைய, உள்ளத்தை- மனத்தை, தேரும்- ஆராய்ந்தறியக்கூடிய, துணைமை- வல்லமையை, உடையவர்- உடையவராகிய, ஒருவர்- ஒருத்தர், யார்- எவருளர்?, (ஒருவருமில்லை); எ-று.

உலகத்திலுள்ள மனிதர் பலர்க்கும் மனமுஞ் செயலும் ஒன்று பட்டிரா; வெவ்வேறாகவே யிருக்கும்; ஆதலின், அவர்கள் செய்கையைக் கொண்டு மனம் இன்ன தன்மையுடையது என்று தீர்மானித்தல் எவராலுமியலாது என்பது இதன் கருத்து.

இங்ஙனங் கூறியதனால், ஒருவரைப் பல நாட்களிலும் பல வழிகளிலும் ஆராய்ந்து நிச்சயமாக அவர்கள் நல்லவர்கள் என்று தெரிந்தால் மாத்திரம் அவர்களோடு உறவு கொள்ளவேண்டு மென்பதும், அங்ஙனங் கொள்ளாவிடின் தீயாரோடும் உறவேற்பட்டுத் துன்பமுண்டா மென்பதும், அத்தீவினைக்கு அஞ்சவேண்டு மென்பதும் பெறப்பட்டன. ''மக்கள் மனம் வேறு செய்கையும் வேறு'' என்பது, முன்னிரண்டடிகளிலுள்ள பொருளை உறுதிப்படுத்தி நின்றது; இங்ஙனம் நிற்பது- தொடர்நிலைச் செய்யுட் குறியணியாம். துணை- உதவி; அது வலிமை தருவதாதலின், 'வல்லமை' என்னும் பொருள் தந்து நின்றது; இதில், மை- பண்புப் பெயர் விகுதி. சாரல்- தொழிற் பெயர்; இஃதாகு பெயராய் மலையைச் சார்ந்த இடத்தை உணர்த்தி நின்றது. வேறு- ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவான குறிப்பு வினைமுற்றுப் பகாப்பதம்;

''வேறில்லை யுண்டைம் பால்மூ விடத்தன''

என்னும் (நன்- வினை-2-ஆம்) சூத்திரமும், ''முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி, யின்மை செப்பல் வேறென்கிளவி...... '' என்னும் (தொல் -சொல்- வினை- 26 ஆம்) சூத்திரமும் பார்க்க. உடையவர் - முற்றெச்சம். 'செய்கையும்' என்பதில் உள்ள, உம்மை - இறந்தது தழுவியது. நாட- விளி. (எ)

128. உள்ளத்தா னள்ளா துறுதித் தொழிலராய்க்
கள்ளத்தா னட்டார் கழிகேண்மை - தெள்ளிப்
புனற்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட
மனத்துக்கண் மாசாய் விடும்.

(இ-ள்) புனல்- அருவி நீரானது, செதும்பு- சேற்றை தெள்ளி- கொழித்து, நின்று- நிலைபெற்று, அலைக்கும்- அசைத் தொதுக்குகின்ற, பூகுன்றம் - அழகிய மலையை யுடைய, நாட- பாண்டி நாட்டையுடைய, அரசனே!, உறுதித் தொழிலர் ஆய்- (அடிக்கடிமாறாத) திடமான செய்கைகளை யுடையவர்களாய், உள்ளத்தால்- (உறவை உண்மையாக விரும்பிய) மனத்தால், நள்ளாது- உறவு கொள்ளாமல், கள்ளத்தால்- வஞ்சனையால், நட்டார்- (ஒருவரோடு) சிநேகஞ் செய்தவரது, கழிகேண்மை- மிகுதியாகிய நட்பு, மனத்துக்கண்- (அவர்களால் அவ்வாறு சிநேகஞ் செய்யப் பட்டவர்களுடைய) மனத்தினிடத்தே, மாசுஆய் விடும்- பின்னால் குற்றமாய்விடும்; எ-று.

உறுதியான செய்கை யுடையவர்களாய் மனப்பற்றுத லோடு ஒருவரிடம் சிநேகஞ் செய்யாமல் வஞ்சனையாக உறவு கொண்டவர்களுடைய சிநேகமானது, அவர்களால் அங்ஙனம் சிநேகம் செய்யப்பட்டவர்களுடைய மனத்தில் பின்னால் குற்றமுடையதாகக் காணப்படும் என்பது இதன் கருத்து.

ஒருவர், மற்றொருவரோடு நடிப்பாக வஞ்சனையான சிநேகங்கொள்ளினும் அது பின்னால் எப்படியும் வெளிப் பட்டுவிடும்; அப்படி வெளியானபோது அவரால் சிநேகிக் கப்பட்டவர்கள், 'நாம் இவரோடு சிநேகம் செய்தது குற்றம்'' என்று மனத்திற் கருதி வருந்துவார்கள். இதனைக் கூறிய தனால் நடிப்புக்காரரோடு சிநேகஞ் செய்தால் தீங்குண்டாகு மென்பதும், அதற்கஞ்சி அவர்களோடுறவு கொள்ளாதிருக்க வேண்டு மென்பதும் அமையும்.

'உறுதித் தொழிலராய்' என்பதை, உள்ளவாறே, 'உள்ளத்தானள்ளாது' என்பதற்குப் பின்னே நிறுத்தி, அதற்கு, '(அவர்களுக்கு மெய்யான சிநேகிதர்களைப்போல) உறுதி யான காரியங்களைச் செய்பவர்களாய் (நடித்து)' என்றேனும், '(தங்களுடைய நன்மையைக் கோரியே செய்யும்) உறுதிச் செய்கைகளை யுடையவர்களாய்' என்றேனும் பொருள் கொள்ளினும் அமையும்.

செதும்பு- சேறு; மண்ணும் நீரும் கலந்து குழம்பானது சேறு; இதைக் கொழித்தலாவது மண்ணைத் தனியாகப் பிரித்தல்; அலைத்தல்- அதனை அசைத்துக் கரைப் பக்கங் களில் ஒதுக்குதலாம். 'நள்ளாது' என்பதில், நள்- பகுதி, ஆ- எதிர்மறை விகுதி, து- வினையெச்ச விகுதி. நட்டார்- வினை யாலணையும் பெயர்; இதில், நள்- பகுதி, ஆர்- விகுதி, ட்- இடைநிலை, பகுதியின் ளகரம் டகரமானது- சந்தி- கழி- ஒன்று, முன்னுள்ளதினும் சிறந்து நிற்றற் பொருளைக் காட்டும் உரிச் சொல்;

''கூர்ப்புங் கழிவு முள்ளது சிறக்கும்''

என்னும் (தொல்-சொல்-உரி-18ஆம்) சூத்திரத்தா லிஃதுணரப் படும். 'கேண்மை' என்பதில், கேள்- பகுதி, மை- பண்புப் பெயர் விகுதி. தெள்ளி- வினையெச்சம்; இதில், தெள்ளு-

பகுதி. 'அலைக்கும்' என்பது, 'அலையச்செய்கிற' எனப் பொருள் பயந்து நிற்றலால் பிறவினைப் பெயரெச்சம். ''அல்வழி யெல்லா முறமெழன மொழிப'' என்னும் (தொல்-எழுத்-புள்ளிம-73-ஆம்) சூத்திர விதியால், 'புனற் செதும்பு' என்பதில் லகரம் றகரமாயிற்று.

129. *ஒக்கிய வொள்வாடன் னொன்னார்கைப் பட்டக்கா*
லூக்க மழிப்பதூஉ மெய்யாகு- மாக்க
மிருமையுஞ் சென்று சுடுதலா னல்ல
கருமமே கல்லார்கட் டீர்வு.

(இ-ள்.) ஒக்கிய - (ஒருவன், யுத்தத்தில் பகைவரைக் கொல்லுதற்கு) மேலே தூக்கிய, ஒள்- பிரகாசம் பொருந்திய, வாள் - வாளாயுதமானது, தன் ஒன்னார்கை - அவனுடைய பகைவர் கையில், பட்டக்கால், -அகப்பட்டு விட்டால், ஊக்கம் அழிப்பதூஉம் - (அப்பகைவரைக் கொல்லாமை யோடு அவனுடைய) வல்லமையைக் கெடுப்பதும், மெய் ஆகும் - (இவ்வுலகில்) உண்மையாம், (ஒருவன் கல்லாத மூடர்களுக்கு உதவி செய்து செல்வத்தை உண்டாக்கி விட் டாலோ அஃதவனை இம்மை, மறுமை யென்னும் இரண்டி டங்களினும் வருத்தும்; அங்ஙனம் அவர்களுக் குண்டாக் கிய), ஆக்கம்- செல்வமானது, இருமையும்- (இம்மை, மறுமை ஆகிய) இரண்டிடங்களினும், சென்று- தொடர்ந்து, சுடுதலால் - எரித்து வருத்தஞ் செய்தலால், (அங்ஙனம் மூடர்க்கு உதவி செய்யாமல்), கல்லார்கண்- அறிவைக் கற்றுக்கொள்ளாத அம்மூடர்களிடத்தி னின்றும், தீர்வு- நீங்குதல், நல்ல கருமமே- நல்ல காரியமேயாம்; எ-று.

ஒருவன், சண்டையில் பகைவரை வெட்டிக் கொல்லு வதற்கு மேலே தூக்கி ஓங்கிய வாளானது அவ்வெதிரிகளின் கையில் அகப்பட்டு விட்டால் (அதாவது அவன் கை சோர்ந்து வாளை எதிரிகள் கைப்பற்ற விட்டுவிடுவானாகில்) அது இம்மையில் அப்பகைவரை நிலைபெறச் செய்வதோடு

அவனுடைய வல்லமையையும் ஒழித்துவிடும்; அறிவைக் கற்றுக்கொள்ளாத மூடர்களுக்கு ஒருவன் உதவியாகக் கொடுத்த செல்வமோ, இம்மை, மறுமை என்னும் இரண்டிடங்களினும் அவ்வாறு கொடுத்தவனுக்கு வருத்தத்தைச் செய்யும்; ஆதலின், அத்தகையினர்க்ளுக்கு ஓருதவியும் செய்யாமல் அவர்களை விட்டு நீங்கிவிடுவது நல்லதாகும் என்பது இதன் கருத்து.

ஒருவனுடைய கை வாளானது சண்டையில் பகைவரிடம் அகப்பட்டால் அப்பகைவருக்கு வல்லமை அதிகரிக்கும்; வாளிழந்தவனுக்கு ஊக்கங் குறையும்; அங்ஙனம் புதிதாகக் கிடைத்தவாளினால் வல்லமை பெற்ற அவ் விரோதிகள் வாளற்று வலியிழந்த அவனை அழித்து விடுவர். இச்செயல்கள் இம்மையிலேயே நடைபெறுவனவாம். அவன் இவ்வாறு இம்மையில் வருத்தங்களை அடையினும் மறுமையில் வீரன் அடைதற்குரிய நலத்தையடைவான். மூடர்களுக்கு ஒருவன் பொருளுதவி செய்தால், அதனால் அவர்கள் விருத்தியடைந்து உதவி செய்தவனையே அழிக்க வழி தேடுவார்கள்; பிறருக்கும் மிகுந்த கெடுதிகளைச் செய்வார்கள்; அவைகளைக் கண்டு இவ்வுலகத்திலுள்ளவர்கள் அவர்களுக்கு உதவி செய்தவனையே பழிப்பார்கள்; அவன் இறந்த பின்னரும் மறுமையில், அவனால் மேற்கூறியபடி உதவி பெற்றவர்கள் செய்த பாவத்தில் தானும் பங்கு பெற்று அதற்காகத் துர்க்கதியிற் சேர்வான். ஆதலால், வாளை எதிரி கைப்பற்ற விட்டவனைக் காட்டினும், மூடர்களுக்குப் பொருளுதவி செய்தவன் மிக்க துன்பத்தை அடைவானென்பது இதிற் குறிப்பிடப்பட்டது. இதனால், மூடர்களுக்கு உதவி செய்யும் தீவினைக்கு அஞ்சவேண்டுமென்பது தானே அமையும்.

ஒக்கிய-பிறவினைப்பெயரெச்சம்; இதில், ஒக்கு-பிறவினைப் பகுதி, ஒங்கு- தன்வினைப்பகுதி, மெல்லொற்று வல்லொற்றானது பிறவினைக்குறி, இன்- இடை

நிலை ஈறுதொக்கது, அ- பெயரெச்ச விகுதி, யகரம்- உடம்படுமெய். ஒக்குதல்- மேலோங்கச் செய்தல், அதாவது மேலே உயரச் செய்தல். ஒள்- ஒண்மையென்னும் பண்படி. ஒன்னார்- ஒன்றார் என்பதன் மரூஉ; சேராதவரென்பது இதன் பொருள். அழிப்பதூஉம்- இன்னிசை யளபெடை. ஆக்கம்- ஆகுதல்; தொழிற்பெயர்; இஃதாகு பெயராய் விருத்தியாதற் கேதுவான பொருளை யுணர்த்தி நின்றது; இதில், அம்- தொழிற்பெயர் விகுதி; இனி, 'ஆக்கம்' 'ஆக்கப்படுவது' என்னும் செயப்படுபொருட்பெயரென்றும், அது பொரு ளென்றும், அம்- செயப்படு பொருள் விகுதியென்றும் உரைத்தலும் அமையும். சுடுதல்- வெப்பஞ் செய்தல்; அது பொதுவாக வருத்தத்தை யுண்டாக்குவதாதலால் இங்கு வருத்துதற் பொருள்பட்டு நின்றது. கண்- ஏழாம் வேற்றுமைச் சொல்லுரு; இங்கு நீக்கப் பொருளில் வந்தது. ''ஆக்கமிருமை யுஞ் சென்று சிதைத்தலால்'' என்றும் பாடபேதமுண்டு; இதற்கு, ''மூடர்க்குக் கொடுத்த ஆக்கம், கொடுத்தவனுடைய நன்மையை, இம்மை, மறுமையென்னும் இரண்டிடங் களினுங் கெடுத்தலால்'' என்று பொருளுரைத்தல் வேண்டும். (கூ)

130. மனைப்பாசங் கைவிடாய் மக்கட்கென் றேங்கி
யெனைத்தூழி வாழ்தியோ நெஞ்சே- யெனைத்துஞ்
சிறுவரையே யாயினும் செய்தநன் றல்லா
லுறுபயனோ வில்லை யுயிர்க்கு.

(இ-ள்) நெஞ்சே - மனமே! மக்கட்கு என்று ஏங்கி- பிள்ளைகளுக்காக இரங்கி, மனைபாசம்- மனையாளிடத் துள்ள அன்பையும், கைவிடாய்- (நீ எப்பொழுதும்) கைவிட மாட்டாய், (இங்ஙனம் நீ மறுமைக்குத் துணையாகும் அறத்தைத் தேடிக்கொள்ளாமல் அதற்குத் துணையாகாத மனைவி மக்களிடத்து அன்பு செலுத்தி), எனைத்து ஊழி வாழ்தியோ - எவ்வளவு நீண்டகாலம் வாழ்வாயோ?, (வாழ் வது சிறிது காலமே அதற்குள் மறுமைக்குத் துணையாகிய

அறத்தைத் தேடிக்கொள்ள வேண்டும்), உயிர்க்கு- மனிதனுடைய உயிருக்கு, சிறுவரையேயாயினும்- சிறிய அளவேயானாலும், செய்த நன்று அல்லால்- (அம்மனிதன்) செய்த நன்மையல்லாமல், உறுபயனோ- (வேறாக) அடையத்தக்க நற்பயனோ, எனைத்தும் இல்லை- எவ்வளவும் இல்லை. (ஆதலின், மனைவி மக்களின் பாசத்தை விடுத்து அறத்தைத் தேடிக்கொள்வாயாக; எ-று.

''மனமே! நீ உலக வாழ்க்கையை விரும்பிப் பிள்ளைகளுக்காக இரங்கி மனைவியின் பாசத்தையும் எப்பொழுதும் கைவிடமாட்டாய்; அவர்களோ மறுமைக்குத் துணைசெய்ய மாட்டார்கள்; நீ அத்தகையவர்களை விரும்பி வாழ்ந்தாலும் நெடுங்காலம் வாழப்போகிறதில்லை; மனிதன் செய்த நன்மை சிறிய அளவினையுடையதாயினும் அவனுயிர்க்கு அது மறுமையிற் பயன்தரும்; அஃதல்லால் வேறு பயன் எவ்வளவுமில்லை; ஆதலின் நீமறுமைக்குத் துணையாகும் அறத்தைச் செய்வாயாக'' என்பது இதன் கருத்து.

இஃது, ஆசிரியர் தம் மனத்தை விளித்து, அதனிடத்தே கூறியதாக அமைந்தது. இங்ஙனங் கூறியதனால், மனிதர் ஒவ்வொருவரும், மறுமைக்குத் துணையாம் அறத்தை நாடாமல் மனைவி மக்கள் பாசத்திற், செல்லும் மனத்தை விளித்து அதனிடம் இவ்வாறுரைத்து. அதனை நல்வழிக்குத் திருப்பவேண்டு மென்பது குறிப்பித்ததாகும். உயிர்க்கு மறுமையில் நற்பயனைத் தருவதாகிய அறத்தைத் தேடவேண்டுமென்பதும் இதிற்கூறப்பட்டன. ''எனைத்தூழி வாழ்தியோ'' என்றது, ''நெடுங்காலம் வாழமாட்டாய்'' என்பதையும், ''நீ வாழும் அற்பகாலத்திற்குள் நல்வினையைத் தேடிக்கொள்ள வேண்டும்'' என்பதையும் விளக்கி நின்றது. ''மனைப்பாசங் கைவிடாய் மக்கட்கென்றேங்கி'' என்பது, ''மனைவி மக்களால் மறுமைக்கு ஒரு பயனு

மில்லை'' என் பதைக் குறிப்பால் விளக்கி நின்றது. இச்செய்யுளின் பின்னிரண்டடிகளி லமைந்த பொருளும், 120-ஆம் செய்யுளின் முன்னிரண்டடிகளின் பொருளும் பெரும் பான்மையும் ஒப்புமையுடையன.

மனை- மனையாளுக்கு ஆகுபெயர். என்று -வினைப் பொருண்மையை யுணர்த்தும் இடைச்சொல்;

''வினையே குறிப்பே யிசையே பண்பே
யெண்ணே பெயரோ டவ்வறு கிளவியுங்
கண்ணிய நிலைத்தே யெனவென் கிளவி''

என்னும் (தொல்-சொல்-இடை-10-ஆம்) சூத்திரமும்,

''என்றென் கிளவிய மதனோ ரற்றே''

என்னும் (தொல்-சொல்-இடை-11-ஆம்) சூத்திரமும் பார்க்க. பாசம்- கயிறு; மனைவி மக்களிடத்துள்ள பற்றுதல், கயிறுபோல மனிதரைக் கட்டுப்படுத்தலால் அது பாசம் எனப் பெயர் பெற்றது; ஆதலின், 'பாசம்' என்பது உவமை யாகுபெயர். கை- இடம்; ''கைவிடாய்'' என்பது, 'உன்னிடத் தினின்றும் விடாய்'' என்று பொருள்படும். ஊழி- நெடுங் காலம். 'எனைத்து' என்பதில், 'என்' என்பதன் மேல் அளவைக் குறிக்கும் ஐவிகுதி பெற்ற 'எனை' என்பது பகுதி, து- விகுதி, த்- சந்தி; பகுதியின் முதலிலுள்ள, எ- என்னும் வினாவின் மேல், னகரச்சாரியை வந்ததெனவுங் கொள்ள லாம். 'வாழ்தி' என்பதில், வாழ் - பகுதி, இ - முன்னிலை விகுதி; த் - எழுத்துப்பேறு; தி- விகுதியெனக் கொள்ளல் நேர்; 'வாழ்தி' என்பது எதிர்காலத்தில் வந்தது. 'வாழ்தியோ' என் பதில், ஓ- எதிர்மமறைப் பொருளைத் தந்து நின்றது. சிறு

வரை- சிறிய அளவு. 'பயனோ' என்பதிலுள்ள ஓகாரம்- முன் சொன்ன பொருளினின்றும் வேறாந்தன்மையைக் குறித்து நின்றது. 'எனைத்தும்' என்பதை, 'பயனோ' என்பதன் பின் கூட்டுக. (௪௦)

இல்லறவியல் முற்றுப்பெற்றது.

அறத்துப்பால் முற்றுப்பெற்றது.

2-வது

பொருட்பால்

பொருட்பால் என்பது - இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனுமுடன் தொக்கதொகை. ‘பொருளை உணர்த்தும்பாகம்’ என விரியும். பொருளைப்பற்றிய நெறிகள் பல இதிற் கூறப்படுகின்றமையின், இஃதிப்பெயர் பெற்றது. இல்வாழ்வோர் அறத்துப்பாலிற் கூறப்பட்ட துறவறவியல், இல்லறவியல் ஆகிய இரண்டனுள், முதலில் இல்லறவியலாகிய தருமத்தை யுணர்ந்து, அங்ஙனமுணர்ந்த அறநெறியால் பொருளைத்தேடி, அப்பொருளால் இன்ப நுகர்தல் முறைமையாகலின், இல்லறவியலின் பின்னும், அறத்துப்பாலின் பின்னும் இப்பொருட்பால் வைக்கப் பட்டது. பொருளாவது- மனிதனால் நல்வழியில் ஈட்டப் பட்டு, தன் நலத்திற்குச் செலவிடப்படுதலினாலே இவ் வுலகத்தில் அவனுக்கு இன்பானுபவங்களைத் தரத்தக்க தாயும், தான தருமங்களிற் செலவிடப்படுதலினாலே மேலுலகத்தில் நற்பயனை அளிக்கவல்லதாயும் அமைந் திருப்பதாம். இதில், பொன், மணி, அணி, ஆடை, உணவுப் பொருள்கள் முதலியன அடங்கும். இப்பொருட்பால் அரசியல், நட்பியல், இன்பவியல், துன்பவியல், பொது வியல், பகையியல், பன்னெறியியல் என்னும் ஏழு பகுப் புக்களையுடையது. இருபத்துநான்கு அதிகாரங்களை

யுடையது. உலகத்தில் மனிதரிடத்துப் பொருள் நிலை பெறு வதற்கு அரசனது நீதியே துணையாயிருப்பதாம். அஃதின் றேல் பொருள் நிலை பெறுவதரிதாம். ஆகவே, அரசனது நீதியைக் கூறின் பொருள் இயல்பு கூறியது தானே அமையும் ஆதலின், இப்பாலில் அமைந்த இருபத்துநான்கு அதிகாரங் களாலும் அது கூறப்படுகின்றது.

1-வது

அரசியல்

அரசியல் என்பது- அரசனது இயல்பை விளக்கும் பாகம். அரசனது இயலாவது- அரசன் செங்கோல் நடாத்தும் முறைமை. அது வடமொழியில் இராஜதருமமெனப்படும். அரசனுடைய நீதியைக் கூறத்தொடங்கும்போது அவனது இயற்கையை முதலிற் கூறுதல் முறைமையாகலின், அவ்வியல் முதலில் வைக்கப்பட்டது.

அதிகாரம் 14

கல்வி

கல்வி- (அரசன் கற்கவேண்டிய நூல்களைக்) கற்றல்; இது தொழிற் பெயர்; இதில், கல்- பகுதி, வி- தொழிற்பெயர் விகுதி. இஃதிங்கு ஆகுபெயராய்க் கற்றலைப்பற்றிக் கூறும் அதிகாரத்தை யுணர்த்திநின்றது. கற்றற்குரிய நூல்களாவன- அறநூல், பொருள்நூல் முதலியனவாம். ஒருவன் பொரு ளீட்டுதற்கும், ஈட்டிய பொருளைப் போற்றுதற்கும், உத்த மர்க்குக் கொடுத்துத் தானும் அனுபவித்து அறத்தைத் தேடு தற்கும் உரிய மார்க்கங்களை விளக்கிக் காட்டுவது கல்வியே யாகலின், இக்கல்வியைப்பற்றிய அதிகாரம் முதலில் வைக்கப்பட்டது. கல்வி எல்லோருக்கும் பொது வெனினும், அரசன் மனிதரை ஆளும் தலைவனாகலாலும், அவன் செய் வதையே அவனாளுகைக்குட்பட்ட மனிதரும் செய்வராக லானும், அரசனுக்குக் கூறிய நீதி குடிகளுக்கும் உரியதாக லானும், இங்கு மன்னனுக்குக் கல்வி கூறவே மனிதர்க்கும் கூறியதாகுமென்று அரசனுக்குரியதாக அதனைக் கூறினார் முனிவர். ஆதலின், இதனை உலகத்து மனிதரெல்லோருக் கும் பொதுப்படக் கூறியதாகவே கொள்ள வேண்டும். இப் பால், இயல்களில் வரும் ஏனையவற்றையும் அங்ஙனமே கொள்க. அரசனுக்கே சிறப்பாய் வருவனவற்றை மட்டும் அவனுக்குரியனவாகக் கொள்க.

பழைய வுரையில் இவ்வதிகார விளக்கங் கூறு மிடத்து, ''கல்வியாவது- தத்தங்குலத்திற்கேற்ப ஓதுதலும், பொருள்களை விளங்கக் கேட்டறிதலும், பின்பு அவற்றைத் தான் வகுத்துக் கூறவல்லனாதலுமாம்'' என்பது வரையப் பட்டுள்ளது.

131. *குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்*
மஞ்ச ளழகு மழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு.

(இ-ள்.) குஞ்சி அழகும்- (ஆடவர்க்கு) மயிர் முடியின் அழகும், (ஆடவர்க்கும் மகளிர்க்கும்) தானை- ஆடையின், கொடும் கோட்டு அழகும்- வளைவான கோடுகளின் அழகும், மஞ்சள் அழகும்- (பெண்களுக்கு) மஞ்சளின் அழகும், அழகு அல்ல - அழகுகள் ஆகமாட்டா, (இரு பாலாரும்), நெஞ்சத்து - (தங்கள்) மனதிற்குள்ளேயே, நடுவு நிலைமையால் - (எப்பக்கமுஞ்சாயாத) நடுவுநிலைமையை கொள்ளுவதால் மாத்திரமே, யாம் நல்லம் - நாம் நல்லவர் களாவோம், என்னும் - என்று சொல்லி அறிவையடைதற்கே துவாயிருக்கும், கல்வி அழகே- படிப்பாலேற்படும் அழகே, அழகு- (அவர்களுக்குச் சிறந்த) அழகாகும்; எ-று.

ஆடவர்க்கும், பெண்களுக்கும் மயிர் முடியினாலும், ஆடைகளின் வளைந்த கோடுகளாலும், மஞ்சட் பூசுவதாலும் உண்டாம் அழகுகள் சிறந்தனவாகமாட்டா; நாம் நடுநிலை யில் நின்று நீதியைக் கடைப்பிடித் தொழுகுவதனாலேயே நல்லவர்களாவோம் என்னும் அறிவையுண்டாக்கத்தக்க கல்வியழகே உயர்ந்த அழகாகும் என்பது இதன் கருத்து.

இதனால் ஆடவரும், பெண்டிரும் மயிரைச்சீவி முடித்தும், வளைந்த கோடுகளுள்ள ஆடைகள் புனைந்தும், மஞ்சள் பூசியும் தங்கள் தங்களுக்குரிய அலங்காரங்களைச்

செய்து கொள்வதால் பயனில்லையென்பதும், மனத்தில் நடுவுநிலைமையான அறிவை விருத்தி செய்யும் கல்வியைக் கற்றுக்கொள்வதால் மாத்திரமே பயனுண்டென்பதும் விளக்கப்பட்டன. அலங்கரிப்பதால் உண்டாகும் அழகானது பிறருக்கு மாத்திரம் சிறிது நேரம் இனிமையாகத் தோன்றிப் பின் மாறுதலடைந்துவிடும். கல்வியினாலுண்டாம் அழகோ, அதனைக் கற்றுக் கொண்டவருடைய மனத்தில் விவேகத்தை யுண்டாக்கி அவர்களுக்குத் திருப்தியளிப்பதோடு மற்றை யரும் எப்பொழுதும் அவரைப் பார்த்து மகிழச்செய்யும்; இம்மையிற் புகழையும், இன்பத்தையும், மறுமையில் நற்கதியையும் அளிக்கும். ஆதலின், அலங்கரிப்பழகு பயனற்றதென்றும், கல்வியழகு பயனுடையதென்றும் கூறினார் முனிவர். கல்வி கற்றவர்க்கு, ''நாம், மனிதரிடத்தில் உறவினரென்றும், பகைவரென்றும் வேற்றுமை பாராட்டி உறவினர்க்கு நன்மையும், பகைவர்க்குத் தீங்கும் செய்யாமல் எல்லோரிடத்தும் நீதியொன்றையே செலுத்தி நடுவுநிலை யினின்று அறத்தைக் கடைபிடித்தொழுக வேண்டும்; அங்ஙனம் ஒழுகினால் மாத்திமே நல்லவர்களாவோம்'' என்னும் அறிவுண்டாகும்; இதுகல்வியினாலேயே ஏற்படுவ தாகும். ஆதலின், 'நடுவுநிலைமையால் நல்லம்யா மென்னும் கல்வி' என்றார் ஆசிரியர். தலைமுடியைச்சீவி முடிப்பது ஆடவர்க்கு மிக்க அழகைத்தரும்; ஆடைகளில் வளைவாகச் சித்திரவேலை செய்யப்பட்ட கோடுகள் அவற்றையணியும் ஆடவர்க்கும் பெண்களுக்கும் மிக்க வனப்பைத் தருவனவாம்; மஞ்சள் பூசுவதால் பெண்களுக்கு மிகுந்த அழகுண்டாகும். ஆதலின், 'குஞ்சியழகுங் கொடுந் தானைக் கோட்டழகும் மஞ்சளழகும்' என்றார்; இவற்றி லுள்ள உம்மைகள் உயர்வு சிறப்புப் பொருளனவும், எண்ணுப் பொருளனவுமாம். தலைமுடியைச் சீவி முடித்தல் ஆண், பெண் ஆகிய இருபாலர்க்கு முரியன வெனினும், 'குஞ்சி' என்பது ஆண்மயிரை உணர்த்துவதாதலின், அஃதிங்கு ஆண்பாலுக்குக் கூறுப்பட்டது. 'கொடுந்தானைக் கோட்டழகு' என்பது ஆண், பெண் ஆகிய இருபாலர்க்கு

முரியது. இருபாலார்க்கும் ஆடை அழகு செய்வதாகும். 'மஞ்சள் என்பது பெண்பாலுக்குரியது. கல்வி, இருபாலர்க்கு முரியதாதலின், அதனை விளக்குதற்கு, இருபாலார்க்கும் அழகு செய்வனவற்றைக்கூறி அவற்றானுண்டாம் அழகு களிலும் கல்வியழகே சிறந்ததென்று கூறினார்.

சிலர், எல்லாவற்றையும் ஆண்பாலுக்கே கொண்டு, 'மஞ்சள்' என்பதற்கு, 'மஞ்சள் நிறமான வாசனைப் பொருள் களின் கலவைப் பூச்சு' என்று பொருளுரைப்பர்; சந்தனத் தோடு குங்குமப்பூ முதலியன சேர்க்கப்படும். வாசனைக் கலவைகளிற் சில மஞ்சள் நிறமுள்ளனவா யிருக்கும். அதனால் ஒரு வகையில் இவ்வுரை பொருந்துமெனினும், மஞ்சள் நிறமில்லாத வாசனைக் கலவைகள் பலவிருப்ப தாலும், 'மஞ்சள் பிரசித்தியானதாய்ப் பெண்களுக்குரிய பொருளென்பது வெளிப்படையாக விளங்குவதாலும் இங்ஙனம் பொருள்கொள்ளல் அத்துணைச் சிறப்பன்று; அது வலிந்து பொருள் கோடலாம். இச்செய்யுளிற் கூறியபடி மனிதர்க்கு, மயிர் முடி முதலியவற்றின் அழகுகள் சிறந்தன வல்ல வென்பதையும், கல்வியழகே உயர்ந்த தென்பதையும்,

''மயிர்வனப்புங் கண்கவரு மார்பின் வனப்பும்
உகிர்வனப்புங் காதின் வனப்புஞ்- செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு''

என்னும் (சிறுபஞ்சமூலம்-37-ஆம்) செய்யுளும்,

''இடைவனப்புந் தோள்வனப்பு மீடின் வனப்பும்
நடைவனப்பு நாணின் வனப்பும்- புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல வெண்ணோ
டெழுத்தின் வனப்பே வனப்பு''

என்னும் (ஏலாதி-75-ஆம்) செய்யுளும் உணர்த்துவனவாம்.

குஞ்சி- ஆண்மயிர்; உளை, நவிர், குடுமி, பித்தை, ஓரி, குழல், கார், தளை, சிகை, தொங்கல், பங்கி என்பனவும் ஆண் மயிரின் பெயர்களே; பெண் மயிரின் பெயர்கள்: - குருள், குழல், விலோதம், ஓதி, கூழை, குந்தளம், மராட்டம், குரல், ஐம்பால், அளகம், கூந்தல் என்பனவாம். ஆண் மயிர்க்கும் பெண் மயிர்க்கும் பொதுப்பெயர்கள்:- குழல், கதுப்பு, கேசம், சுரியல் என்பனவாம். இவற்றைச் சூடாமணி நிகண்டு மக்கட் பெயர்த்தொகுதி-99-100-ஆம் செய்யுட்களால் உணரலாம்.

கொடுமை- என்னும் பண்புப்பெயர் மையீறுகெட்டு, 'கொடு' என நின்றது; கொடுமை- வளைவு; கொடுங்கோல், கொடுவாள், கொடுமரம், கொடுங்கை முதலியவற்றிலும், 'கொடுமை' என்பது இப்பொருள்பட்டு நிற்றல்காண்க. குஞ்சி- மற்ற உறுப்புக்களுக்கும் கொடுந்தானைக்கோடு- மற்ற ஆடையாபரணங்கட்கும், மஞ்சள்- அழகு தரும் மற்ற பூச்சுவகைகளுக்கும் உபலக்ஷணங்களாம்; இவற்றைக் கூறியதனால் ஒவ்வொன்றின் இனமாகிய மற்றவற்றையும் கொள்ள வேண்டும். ''ஒருமொழி யொழிதன் இனங்கொளற் குரித்தே'' என்னும் (நன்-பொது-எ-ஆம்) சூத்திரம் பார்க்க. நல்லம்- தன்மைப் பன்மைக் குறிப்பு வினைமுற்று; அம்- தன்மைப் பன்மை விகுதி அழகே- என்பதில், எ- பிரிநிலைப் பொருளது. *(க)*

132. ***இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற்***
றம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்கணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து.

(இ-ள்) (கல்வியானது தன்னை யடைந்தவர்க்கு), இம்மை- இவ்வுலகத்தில் அடையவேண்டிய பயனை, பயக்கும்- கொடுக்கும், ஈய- (அதனைக் கற்றவர் பிறர்க்குக்) கொடுக்க (அதாவது போதிப்பதனால்), குறைவு இன்று-

குறைவுபடுதல் இல்லை, தம்மை- (அதனைக்) கற்றார் தங்களை, விளக்கும்- (புகழால் எங்கும்) விளங்கச்செய்யும், தாம்- (அக்கல்வியைக்) கற்றார்தாம், உளர்ஆ-(உலகத்தில் உள்ளாராக, (உயிருடனிருக்க), கேடு-(அது) கெடுதல், (அதாவது அவர்களைவிட்டு நீங்குதல்), இன்று- இல்லை, (ஆதலால்), எம்மை உலகத்தும்- எவ்விடத்திலுள்ள உலகத் திலும், கல்விபோல்- கல்வியைப் போல, மம்மர்- (மனிதரது அறியாமையாகிய) மயக்கத்தை, அறுக்கும்-(துண்டுபடுத்தி) ஒழிக்கின்ற, மருந்து- மருந்தினை, யாம்- நாம், காணேம்- கண்டோமில்லை; எ-று.

கல்வியானது, தன்னைக் கற்றுக் கொண்டவர்க்கு இவ்வுலகத்தில் அடையத்தக்க நற்பயனை யளிக்கும்; அவர் பிறர்க்குப் போதிப்பதனாலும் குறைவுபடாது; தன்னைக் கற்றுக் கொண்டவர்க்கு மிக்க புகழையுண்டாக்கி, அப் புகழால் அவர் பெயர் எங்கும் விளங்கச் செய்யும்; அவர் உயிரோடிருக்குமளவும் அவரைவிட்டு நீங்காது ஆதலால், கல்வியைப்போன்று மனிதர்க்கு அஞ்ஞான மயக்கத்தைத் தீர்த்து நல்லறிவை யுண்டாக்கும் மருந்தை யாம் எந்த வுலகத்திலும் காணோம் என்பது இதன் கருத்து.

இதனால், கல்வி, மனிதர்க்கு உயர்ந்த பல நலங் களைத் தரத் தக்க தென்பதும், ஒவ்வொருவரும் அதனை அடைதல் வேண்டுமென்பதும் விளக்கப்பட்டன. இம்மைப் பயனாவது- மனிதர் செல்வம் பெற்று அறஞ்செய்து சுகத் துடன் வாழ்தலாம். கல்வியானது, அஞ்ஞானமாகிய மயக் கத்தை யொழித்தலாலும், சுகத்தைக் கொடுத்தலாலும் மருந் தெனப்பட்டது. மற்ற மருந்துகள் சுகத்தைக் கொடுத்தாலும் பிறர்க்குக் கொடுப்பதனால் குறையும்; அவற்றை வைத்தி ருப்பவர் இருக்கும்போதே கெட்டுவிடும்; கல்வியோ, பிறர்க் கீவதால் குறைவுபடாது; அதனைக் கற்றவர் இருக்கும்போது கெட்டுமறையாது; ஆதலின், அதனை மற்ற மருந்துகளினுஞ்

சிறப்புடையதாக, ''யாங்காணேங் கல்விபோன் மம்மரறுக்கு மருந்து'' என்று கூறினார் ஆசிரியர்.

இம்மை - இவ்வுலகத்திலுண்டாம் பயனுக்கு ஆகு பெயர்; இதிலுள்ள மை விகுதி இடப்பொருளை உணர்த் திற்று. 'எம்மை' என்பதிலுள்ள மை விகுதி தன்மைப் பொருளை உணர்த்தி நின்றது; இடப்பொருளையும் உணர்த்தும். ஆல் நான்கும் அசைகள். (உ)

133. *களர்நிலத் துப்பிறந்த வுப்பினைச் சான்றோர்*
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்.
கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

(இ-ள்.) களர்நிலத்து - (தாழ்ந்த) உவர்நிலத்தில், பிறந்த - உண்டான, உப்பினை- உப்பை, சான்றோர்- (அறி வால் நிறைந்த) பெரியோர்கள், விளைநிலத்து நெல்லின் - (நல்ல தானியங்கள்) விளைகின்ற நிலத்திலே உண்டாகின்ற நெல்லைக்காட்டினும், விழுமிது ஆ- உயர்ந்த பொருளாக, கொள்வர்- கொள்வார்கள், (அதைப்போலவே) (கல்வி கற்றவர்கள்) கடைநிலத்தோர் ஆயினும் - தாழ்ந்த இடத்திற் பிறந்தவர்களானாலும், (இழிகுலத்தில் தோன்றியவர்களா னாலும்), கற்று அறிந்தோரை - (அங்ஙனம் நூல்களைப்) படித்து (அவற்றினுட் பொருள்களை) உணர்ந்தவர்களை, தலைநிலத்து - மேலான இடத்தில், வைக்கப்படும்- வைத்துக் கௌரவிக்க வேண்டும்; எ-று.

உவர்நிலத்திலே உண்டான உப்பை, அதன் சுவை குறித்து மேலோர் நல்ல நிலத்தில் விளைந்த நெல்லைக் காட்டிலும் உயர்ந்த பொருளாகக் கொள்வர்; அதைப் போலவே நூல்களைக் கற்று அவற்றின் பொருள்களை உணர்ந்தவர்கள் தாழ்ந்த குலத்திற் பிறந்தவர்களா யிருந்

தாலும் அவர்களை மேலான இடத்தில் வைத்துக் கௌரவிக்க வேண்டும் என்பது இதன் கருத்து.

உப்பு தாழ்ந்த நிலத்தில் உண்டானாலும் அதன் சுவை, எல்லா உணவுப் பொருள்களையும் இனிமையுடையனவாகச் செய்யக்கூடிய தாயிருப்பதனாலே அதனைப் பலரும் சிறந்த பொருளாகக் கொள்வர். கல்விமான்கள் தாழ்ந்த குலத்திற் பிறந்தாலும் அவர்களுடைய அறிவு எவர்க்கும் நலஞ்செய்யக் கூடியதா யிருத்தலினாலே அவர் பலராலுங் கொண்டாடத் தக்கவராவர். அத்தகையினர்களைக் கல்வியருமையறியாத மூடர்களே அவமதிப்பர். கற்றோர் இழிகுலத்தோராயினும் உயர்ந்தோராகவே மதிக்கப்படுவ ரென்பதை,

''எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வரு கென்பர்''

என்னும் வெற்றிவேற்கை அடிகளும்,

''வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே''

என்னும் புறநானூற்றுச் செய்யுளடிகளானும்,

''மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு''

என்னும் (திருக்குறள், 41-ஆம் அதிகாரம்9-ஆம்) செய்யுளானும் உணரலாம்.

'உப்பினை' என்பதில், இன்- சாரியை. விளைநிலம்- வினைத்தொகை. 'நெல்லின்' என்பதில், இன்- என்னும் ஐந்தனுருபு ஒப்புப் பொருளில் வந்தது. விழுமிது- விழுமம்

என்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர்; இதில், விழுமு- பகுதி, து- ஒன்றன்பால் விகுதி, இன்- இடைநிலை; ஈறுதொக்கது. வைக்கப்படும் - ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவான ஒருவகை வியங்கோள் வினைமுற்று; விதிப்பொருளை யுடைய வினைமுற்றென்றுங் கூறப்படும். இது செய்வினை செயப்பாட்டு வினையன்று; இனி, 'வைக்க' என்னும் செயவெ னெச்சத்தைத் தொழிற்பெயர்த் தன்மைப்பட்டு வந்ததெனக் கொண்டு, ''வைக்க-வைத்தல், படும்- தகும்,'' என்று பொரு ளுரைப்பினுமாம்.

''முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா
வஞ்சரை யஞ்சப் படும்''

என்னும்(824-ஆம்) திருக்குறட் செய்யுளில் உள்ள, 'அஞ்சப் படும்' என்பது இத்தகைய பொருள்கட்கிடனாய் நிற்றல் காண்க.

இச்செய்யுளில் முன்னிரண்டடிகளினும் அமைந் திருப்பது வருக்கவெதுகை; பின்னிரண்டடிகளினும் உள்ளது உயிரெதுகை; உயிரெதுகையாவது- இரண்டாமெழுத்து ஒன்றாவிடினும் அதன் மேலேறிய உயிர் ஒன்றிநிற்பது. (ந)

134. வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பி னரசர் செறின்வவ்வார்
எச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற.

(இ-ள்.) விச்சை- (ஒருவன் கற்ற) கல்விகள், வைப்பு உழி - வைக்கப்பட்ட இடத்தில், கோள்படா- (பிறரால்) அபகரிக்கப்பட மாட்டா, வாய்த்து- (கொடுத்தற்குத் தகுதி யானவர்) கிடைத்து ஈயின்- (அவர்க்கு அவற்றைக்) கொடுத் தாலும், கேடு இல்லை (அவை) அழிவதில்லை, மிக்க-

மிகுதியான, சிறப்பின்-படைச்சிறப்பினையுடைய, அரசர்-மன்னர், செறின்- (அக்கல்விகளை யுடையாரிடத்தே பொறாமைகொண்டு அவர்களைக்) கோபித்தாலும், வவ்வார் - (அவர்களிடத்திலிருந்து அக்கல்விகளைக்) கைப்பற்றிக் கொள்ள மாட்டார்கள்,(ஆதலால்), ஒருவன் - ஒருமனிதன், மக்கட்கு- (தன்) பிள்ளைகளுக்கு, எச்சம் என - (தன் சம்பாத்தியத்தில்) மிஞ்சின ஐசுவரியம் என்று, செய்வன - சேர்த்து வைக்கத்தக்கவை, விச்சை- கல்விப் பொருள்களேயாம், பிற அல்ல - மற்ற செல்வப் பொருள்கள் அல்ல; எ-று.

ஒருவரிடத்தே உள்ள கல்விகள், அவற்றை வைத்திருக்கும் இடமாகிய மனத்தினின்றும் பிறரால் அபகரித்துக் கொள்ளப் படமாட்டா; அவற்றை உத்தமர்களுக்குக் கொடுத்தாலும் அவை அழிய மாட்டா; அவற்றை யுடையாரிடத்தே அரசன் கோபங்கொண்டு கைப்பற்ற நினைத்தாலும் அஃதியலாது; ஆதலின், ஒருவன், தன் மக்களுக்கு மிஞ்சியனவாகச் சேர்த்து வைக்கக்கூடியவை கல்விப் பொருள்களே; மற்றவையல்ல என்பது இதன் கருத்து.

ஒரு மனிதனால் தேடிவைக்கப்பட்ட செல்வப் பொருள், எவ்வளவு பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த போதிலும் ஒரு நாளில் திருடராலோ, சுற்றத்தாராலோ, அவர்களோடு நெருங்கிப் பழகிய வஞ்ச நேயராலோ அபகரிக்கப்படும்; அவன், பிறர்க்கதனைக் கொடுத்தால் நாளடைவில் அஃதழிந்துவிடும்; அரசன் அவன்மீது கோபங் கொண்டால் அப்பொருளைக் கைப்பற்றிக் கொள்வான்; கல்விப் பொருள் இத்தகைய கேடுகளை யடையமாட்டாது; ஆதலின் அத்தகைய கல்விப்பொருள்கள் செல்வப் பொருளினும் சிறந்தவையென முனிவரால் கூறப்பட்டன. இங்ஙனம் கல்விப் பொருளுக்கும், செல்வப் பொருளுக்கும் வேற்றுமை தோன்றக்கூறியது வேற்றுமையணி.

கல்வியானது, பிறர் கைப்பற்றக்கூடிய தோற்ற மில்லாததாய்த் தன்னைக் கற்றாரின் மனத்தினுள் தங்கி யிருக்கக் கூடியதாதலின், பிறரால் கைப்பற்ற முடியாமலும், உரியாரால் மனமொப்பிப் பிறர்க்குக் கொடுக்கப்படினும் குறையாமலுமிருப்பது இயற்கை. தந்தையாயிருப்பவன், பிள்ளைகட்குச் சிறந்த பொருளையே தேடி வைக்க வேண்டு மாதலின், எவற்றினும் மேம்பட்ட கல்விப் பொருள்களே அதற்குத் தக்கனவென்றார் ஆசிரியர். இங்ஙனம் கல்விப் பொருள்கள் எவ்வகையிலும், அழிவும் குறைவுமற்றவை யென்பதையும், செவ்வப்பொருள் அத்தகையதன் றென் பதையும்,

''கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றைய வை''

என்ற (திருக்குறள் - 400 - ஆம்) செய்யுளானும், ''அழி வின்மையானது- தாயத்தார், கள்வர், வலியர், அரசரென்றி வராற் கொள்ளப்படாமையும், வழிபட்டார்க்குக் கொடுத் துழிக் குறையாமையுமாம்.... மணி, பொன் முதலிய வற்றிற்கு இவ்விரண்டு மின்மையின் அவற்றை மாடல்ல வென்றார்'' என்னும் அதன் (பரிமேலழகர்) விசேடவுரை யாலும் உணரலாம். தந்தை, மகனுக்குச்சேர்த்துவைக்கத்தக்க பொருள் கல்வியே யென்பதை,

''தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்''

என்னும் (திருக்குறள் -67-ஆம்) செய்யுளானும், அதன் உரையானும் நன்குணரலாம்.

வைப்பு - வைத்தல், உழி- இடம்; வைப்பு உழி- வைத் தலையுடைய இடம்; இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனு முடன் றொக்க தொகை. கோள்- கொள்ளுதல்; இது

முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; கொள்- என்னும் முதனிலைத் தொழிற்பெயர் முதல் நீண்டு விகாரம் பெற்றது. 'சிறப்பின்' என்பதில், இன் - சாரியை. எச்சம் - (சம்பாத் தியத்தில்) மிச்சமான பொருள்; எஞ்சு - பகுதி, அம் - கருத் தாப்பொருள் விகுதி, மெலிவலியானது- விகாரம். செய்வன - செய்வதுபோல் வந்த செயப்பாட்டு வினையாலணையும் பெயர். விச்சை - வித்யா என்னும் வடமொழிச் சிதைவு. விச்சைகள் என வருதற்பாலது சாதியொருமையால் விச்சை யென நின்றது. மற்று - அசை; வினைமாற்றுமாம். பிற- பல வின்பாற் பெயர்; வேற்றுமைப்படும்போது அற்றுச்சாரியை பெறும். 'மற்று, பிற' என்பவற்றை ஒரு பொருட் பன்மொழி யெனக் கோடலுமாம். இச்செய்யுளின் முன்னிரண்டடிகளும் இனவெதுகை; பின்னிரண்டடிகளும் வருக்கவெதுகை. 132-ஆம் செய்யுளில் 'ஈயக்குறைவின்று' என வருவது போன்றே இப்பாடலிலும், 'ஈயிற்கேடில்லை' என்பது கூறப் பட்டுள்ளது; இங்ஙனம் வருவது, கூறியது கூறலென்னும் குற்றத்தின்பாற் படாதோ எனின், இந்நூற் செய்யுட்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொருவரால் இயற்றப்பட்டதாகலின் அங்ஙனமாகாதென்க. இங்ஙனம் வருவனவற்றிற் கெல்லாம் இதனையே சமாதானமாகக் கொள்க. (ச)

135. கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல- தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து.

(இ-ள்) கல்வி - கல்விகளோ, கரைஇல- முடிவற்றன, கற்பவர் - (அவற்றைக்) கற்பவருடைய, நாள் - வாழ்நாட் களோ, சில - சிலவேயாம். மெல்ல- பொறுமையோடு, நினைக்கின் - (மனித வாழ்க்கையை) ஆராய்ந்து பார்த்தால், (அவர்களுக் கேற்பட்ட அக்குறைந்த வாழ்நாட்களுள்ளும்), பிணிபல - பலநோய்கள் உள்ளன. (இத்தகைய குறைந்த வாழ் நாட்களையும், பல நோய்களையுமுடைய அவர்கள் எல்லை

யற்ற கல்வி முழுவதையும் கற்றல் அவர்களால் இயலாது; ஆதலின்), (அறிவுடையவர்கள் நீரொடு கலந்த பாலில்), நீர் ஒழிய- நீர்மாத்திரம் நீங்க (அதனைப் பிரித்து விட்டு), பால்- (தனிப்) பாலைமாத்திரம், உண்- பருகுகின்ற, குருகின்- அன்னப்பறவைபோல, தெரிந்து - (நூல்களின் தன்மை களைப் பகுத்துணர்ந்து தெள்ளிதின் தெளிவாக, ஆராய்ந்து- (அவற்றின் உயர்வு தாழ்வுகளை) ஆராய்ச்சி செய்து, அமைவு உடைய - (அவற்றுள் தாம் கற்றுக் கொள்ளப்) பொருத்தமான வற்றை, கற்ப- கற்பார்கள்; எ-று.

உலகத்தில் ஏற்பட்டிருக்கும் கல்விகளோ அள வற்றன; அவற்றைக் கற்கும் மனிதரின் வாழ்நாட்களோ சில; அந்தக் குறைந்த நாட்களுள்ளும் அவர்களுக்குப் பல நோய்கள் உண்டாகும்; இத்தகைய இயற்கைகளையுடைய அம்மனிதர் எல்லாக் கல்விகளையும் முற்றுறக் கற்றல். முடியாது. ஆதலின், அன்னப்பறவையானது, நீரொடு கலந்த பாலில், நீரைப் பிரித்துவிட்டுப் பாலைமாத்திரம் பருகுதல் போல, நல்லனவும், தீயனவுமாய் எல்லையற்றுத் தோன்றி யிருக்கும் பன்னூட்களையும் ஆராய்ந்து அவற்றுள் தீயன நீக்கி நல்ல நூற்களைமாத்திரம் அறிஞர் கற்றுக்கொள்வார்கள் என்பது இதன் கருத்து.

இதனால் குறைந்த வாழ்நாட்களையுடைய மனிதர், உலகத்தில் பயனுடையனவும், பயனற்றனவுமாய்ப் பரவி யிருக்கும் எல்லா நூற்களையும் கற்கத் தொடங்கிப் பயனற்ற நூல்களைப் படிப்பதிலும் வீணே நாட்களைப் போக்கி விடாமல் தங்கள் ஆயுள் முடிவதற்குள் பயன் தரும் நூல்களைக் கற்று யாக்கை யெடுத்ததன்பயனை யடைய வேண்டு மென்பது விளக்கப்பட்டது. உலகத்தில் பலவகை களிலும் நூல்கள் எல்லையற்றுத்தோன்றிப் பரவியிருத் தலின், 'கல்விகரையில' என்றார் ஆசிரியர். மனிதர்க்கு வயதோ நூறு; அதற்குள்ளும் இடையில் மரணம் நேர்ந்து விடும்; அவர் நூறு வயதளவு மிருப்பினும் சில நாட்களில்

அவர்க்குப் பல வியாதிகளும், துன்பங்களுமுண்டாகும்; இத்தகைய பிணிகளில் கழிந்த நாட்கள் போக எஞ்சிய நாட்களில் மரணம் வருவதற்குள் அவர், சிற்சில நூல் களையே படித்தல் முடியும்; ஆதலின், இத்தகைய இயற்கை களையுடைய மனிதர் எல்லா நூல்களையும் கற்கப்புகுந்தால் நல்ல நூற்கள் சிலவற்றிற்கூடத் தேர்ச்சி பெறுதல் முடியாது. ஆதலின், முனிவர், 'பொருத்தமான நூற்களையே அறிஞர் கற்றுக்கொள்வர்' என்றார்.

அமைவுடைய நூல்களாவன:- நன்னெறிகளையும், ஆத்ம ஞானத்தையும் போதிக்கத்தக்க நூல்கள். அன்னம் பாலையும், நீரையும் வேறு பிரித்துப் பாலைமாத்திரம் பருகுதல் அதன் இயற்கை. இது, ''பானிறக்குருகினாய்ந்து'' என்று சிந்தாமணியில் திருத்தக்க தேவர் கூறியிருத்தலான் உணரப்படும்.

கல்வி, நாள், பிணி என்பன சாதியொருமைகள். கல்வி- என்பது இங்குக் கற்கப்படுபவை என்று பொருள் படுதலின், செயப்படுபொருள்; இதில், கல்- பகுதி, வி- செயப்படுபொருள் விகுதி. இது, கற்றல் என்று பொருள் படும்போது தொழிற்பெயர். கற்பவர் - வினையாலணையும் பெயர். மெல்ல - மென்மையடியாகப் பிறந்த குறிப்பு வினை யெச்சம். கற்ப- பலர்பால் வினைமுற்று. இச்செய்யுளில் பின்னிரண்டடிகளும் இனவெதுகை; ஏகாரமும் லகரமும் இடையினம்; முன்னிரண்டடிகளும் வருக்கவெதுகை. (ரு)

136. ***தோணி யியக்குவான் றொல்லை வருணத்துக்***
காணிற் கடைப்பட்டா னென்றிகழார்- காணாய்
அவன்றுணையா வாறுபோ யற்றேநூல் கற்ற
மகன் றுணையா நல்ல கொளல்.

(இ-ள்) தோணி- மரக்கலத்தை, இயக்குவான்- செலுத்துகிறவனை, காணின்- (மனிதர்) பார்த்தால்,

தொல்லை வருணத்து- பழமையான சாதிகளுள், கடைப் பட்டான் என்று- இழிந்த குலத்திற் பிறந்தவன் என்று, இகழார்- இகழமாட்டார்கள், (அவனைத் துணைக்கொண்டு ஆற்றைக் கடப்பர்), (அதுபோல), நூல்கற்ற- நூற்களைப் படித்துணர்ந்த, மகன்- மனிதனை, (அவன் இழிகுலத்தவனா யிருப்பினும்), கடைப்பட்டானென்று இகழார்-, (அவனிடம் உயர்ந்த கருத்துக்களைக் கேட்டுக்கொள்வர்); துணையா- (அங்ஙனம் அவன்) துணையாக, நல்லகொளல்- (அவனிடம்) நல்ல பொருள்களைத் தெரிந்து கொள்ளுதல், (எதைப்போலுமெனின்), அவன் துணையா- அந்தத் தோணி செலுத்துவோன் துணையாக (படகிலேறி), ஆறு போய் அற்று - ஆற்று வெள்ளத்தைக் கடந்து சென்றதைப் போன்ற தாம்; எ-று.

ஆற்றில் தோணியைச் செலுத்துவோன் இழிகுலத் தானாயினும் அவனைத் தாழ்ந்தவனென்று மனிதர் இகழா மல் அவன் துணைக்கொண்டு படகிலேறி ஆற்றைக் கடப்பர்; அதைப்போலவே நூற்களைக் கற்றவன் இழிகுலத்தானா யிருந்தாலும் அவனைத் தாழ்ந்தவனென்று கருதாமல் அவ னிடத்தே நல்ல நூற்பொருள்களைக் கேட்டுணர்ந்து கொள் வர்; அங்ஙனம் உணர்ந்து கொள்ளுதல் எதைப்போலு மெனில் அந்தப் படகோட்டியின் துணைக் கொண்டு ஆற்றைக் கடந்ததுபோலும் என்பது இதன் கருத்து. இங்ஙனம் கூறியது உவமையணி.

இதனால், நூல்களைக் கற்றவன் இழிகுலத்தானா யினும் அவனைத் தாழ்ந்தவனென்று கருதாமல் அவனிடத் தில் உயர்ந்த நூற்கருத்துக்களைக் கேட்டுணர்ந்து கொள்ள வேண்டு மென்பதும், ஒருவனுக்குக் கல்வியினாற் பெருமை யுண்டாகுமே தவிரப் பிறப்பினாலுண்டாகா தென்பதும் பெறப்படும். 'கற்றவனே மனிதவகுப்பைச் சேர்ந்தவன், கல்லாதான் விலங்கினத்தைச் சார்ந்தவனாவான்' என்பது தோன்ற, 'நூல் கற்றமகன்' என்றார் முனிவர். சாதிகள் ஆதி

தீர்த்தங்கரர் காலத்திலிருந்தே பழமையாக ஏற்பட்டனவாக லின், தொல்லை வருணத்து' என்றார்.

இதிற்சில சொற்றொடர்கள் இசையெச்சமாக வருவித் துரைக்கப்பட்டன; சில மொழிகள் மாற்றி அமைக்கவேண்டு மிடங்களிலமைத்துப் பொருள் கொள்ளப்பட்டது. (தொல்-சொல்- எச்-13-ஆம்) சூத்திரம் பார்க்க. 'கடைப்பட்டானென் றிகழார்' என்பது இரண்டிடங்களினுங் கூட்டப்பட்டது. தோணி- த்ரோணி என்னும் வடசொற்றிரிபு. காணாய் - முன்னிலையசை; கண்டை யென்பது போன்றது;

''கேட்டை யென்றா நின்றை யென்றா
காத்தை யென்றா கண்டை யென்றா
வன்றி யனைத்து முன்னிலை யல்வழி
முன்னுறக் கிளந்த வியல்பா கும்மே''

என்னும் (தொல்-சொல்-எச்-30-ஆம்) சூத்திரவுரைபார்க்க. இனி, 'காணாய்' என்பதற்கு, 'மனமே! நீ அறி' என்று பொருளுரைப்பினும் பொருந்தும். இயக்குவான்- பிறவினை வினையாலணையும் பெயர்; இயக்கு- பிறவினைப்பகுதி, இயங்கு- தன்வினைப்பகுதி. தொல்லை- பண்புப்பெயர்; தொல் - பகுதி, ஐ- விகுதி. தொல்லைவருணம்- பண்புத் தொகை. போயற்று- போயது அற்று என்பதன் விகாரம். அற்று - உவமையைக் காட்டும் குறிப்பு வினைமுற்று. நல்ல- பலவின்பாற் பெயர். நல்லகொளல்- இரண்டாம் வேற்றுமைத் தொகை. ஆறு- ஆகுபெயராய் வெள்ளத்தை யுணர்த்திநின்றது. இச்செய்யுளின் பின்னிரண்டடிகளில் உயிரெதுகையும், மூன்றாமெழுத்தொன் றெதுகையும் அமைந்துள்ளன; மூன்றா மெழுத்தொன்றெதுகையாவது- இரண்டாமெழுத்து எதுகையாக இயையாது மூன்றா மெழுத்துப் பொருந்தி நிற்பது. (கூ)

137. *தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்*
இகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பா மகல்வானத்
தும்ப ருறைவார்பதி.

(இ-ள்.) தவல்அரு- குற்றமற்ற, தொல்- பழமையான, (அதாவது, தொன்று தொட்டு வழிவழியாக வருகின்ற), கேள்வி- (நூற்) கேள்விகளைக் கேட்கும், தன்மை உடையார்- இயற்கையை உடையவர்களும், இகல் இலர்- பகைமைக் குண மில்லாதவர்களும், எஃகு உடையார் தம்முள்- கூர்மை யான புத்தியுடையவர்களுமாகிய கல்வியாளர் கூட்டத் தினுள்ளே, குழீஇ- கூடியிருந்து (உயர்ந்த கருத்துக்களைப் பேசி) நகலின்- (மகிழ்ந்து) சிரித்தலைக்காட்டினும், அகல் வானத்து- விசாலமாகிய வானத்தில் உள்ள, உம்பர்- சுவர்க் கத்தில், உறைவார்- வாசஞ்செய்கின்ற தேவர்களுடைய, பதி- நகரத்தின் அனுபவம், இனிது ஆயின்- இன்பமுடையதா யிருக்குமானால், காண்பாம்- (யாம் சென்று அதனைப்) பார்ப்போம், (கண்டின்புறுவோம் என்றபடி); எ-று.

குற்றமற்ற பழைய நூற்கேள்விகளையுடையாரும், பகைமைக் குணமில்லாதவரும், கூர்மையான புத்தியுடைய வர்களுமாகிய கல்விமான்களோடுகூடி அளவளாவிப்பேசி மகிழ்வதைக்காட்டினும் தேவருலகத்தின் அனுபவம் இன்ப முடையதா யிருக்குமாயின் யாம் அதனைக் கண்டின்புறு வோம் என்பது இதன் கருத்து.

இங்ஙனங் கூறியதனால், கல்விமான்களோடு பேசிக் களித்தின்புறுவது சுவர்க்கலோகத்து இன்பத்தினும் சிறந்த தென்பது பெறப்படும். சுவர்க்கலோகத்தின்பம் அனுபவிக் குங் காலத்தில் மட்டும் களிப்பைத்தரும்; அவ்வனுபவத்தை யடைந்தவர், அது முடிந்தவுடன் பிறவியையே யெடுத்துழல் வர்; கல்விமான்களோடு கூடி உயர்ந்த நூற்கருத்துக்களைப் பேசுவதால் இம்மையில் பேரானந்தமுண்டாவதோடு

மறுமையில் நித்திய இன்பமாகிய முத்திப்பதவியும் கிடைக்கும். ஆதலின், இது தேவலோகத்து இன்பத்தினும் சிறந்ததெனக் கூறப்பட்டது. சிலர் கல்வி மாத்திரம் கற்றி ருப்பர்; அவர்களிடத்தில் பகைமைக் குணமும், மூடத் தன்மையும் மிகுந்திருக்கும்; அத்தகையினரோடு கூடி நூற்கருத்துக்களைப் பேசத்தொடங்கினால் அவர்கள் ஒவ்வொன்றிலும் தர்க்கம் செய்து கோபம் மிகுந்து சண்டை யிட்டுத் தம்மிடம் பேசினவர்களின் மனத்தைப் புண்படுத்தி விடுவர். அதனால் அவர்களோடு கூடுவார்க்கு மகிழ்ச்சி ஏற் படாது. கல்வியோடு பகைமைக் குணமின்மையும், புத்திக் கூர்மையுமுடையார் கூட்டுறவே இன்பம் பயக்கும்; ஆதலின், ''தவலருந் தொல் கேள்வித் தன்மையுடையார், இகலிலர், எஃகுடையார் தம்முள் குழீஇ'' என்றார் முனிவர். இவ்வாறு நற்குணங்களையுடைய கல்விமான்கள் சேர்க்கை யில் என்றும் இன்பமுண்டாவதையும், துர்க்குணங்களை யுடைய படிப்பாளிகளால் துன்பமுண்டாவதையும் எல்லோரும் அனுபவத்திற் காணலாம்.

இச்செய்யுள், கல்விமான்களோடு கூடி மகிழவேண்டு மென்பதை விளக்கியதாகும்.

இனி, 'தவலருந்தொல் கேள்வித் தன்மையுடையார்' என்பதை எழுவாயாக்கி, அவர்கள், 'இகலில ரெஃகுடையார் தம்முட்குழீஇ நகலின்' எனக் கூட்டி முடிப்பினும் அமையும்.

'இனிதாயிற் காண்பாம் அகல்வானத்து உம்பர் உறைவார்பதி' என்பது, 'விண்ணுலகத்தின் அனுபவம் கற்றாரோடு கூடி மகிழ்வதைக் காட்டினும் இன்பமுடைய தாகாது' என்பதைக் குறிப்பால் விளக்கி நின்றது;

''தெரிபுவேறு நிலையலுங் குறிப்பிற் றோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே''

என்னும் (தொல்-சொல்-பெய-3-ஆம்) சூத்திரவுரை பார்க்க. 'தவலரு' என்பதில், அருமை- இன்மைப்பொருளுணர்த்தி நின்றது;

> *''அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்*
> *தீவினை செய்யா னெனின்''*

என்னும் (திருக்குறள்-210-ஆம்) செய்யுளுரையில் பரிமேலழகர், 'அருமை- இன்மை' என வரைந்திருத்தலால் இது துணியப்படும். தவல்- தொழிற்பெயர்; இதில் 'தபு' என்பதன் மருவாகிய, தவு- பகுதி. கேள்வி- தொழிற் பெயர்; கேள்வியாவது, கேட்கத்தக்க நூற்பொருள்களைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்டலாம். எஃகு- கூர்மை; அஃதிங்கு ஆகுபெயராய்க் கூரிய புத்தியை உணர்த்திநின்றது; புத்திக் கூர்மையாவது - புத்தி நுட்பம். குழுமி, அல்லது குழூவி என்பது விகாரப்பட்டு, குழீஇ- என அளபெடுத்து நின்றது; இது சொல்லிசையளபெடையின்பாற்படும்; இது செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சம். நகலின்- என்பதில், இன் ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபு; எல்லைப்பொருளது. காண்பாம்- தனித்தன்மைப்பன்மை வினைமுற்று; ஒவ்வொருவனும் தன்னைப் பன்மையாகவே கூறுதல் இயற்கை; 'ஒருவரைக் கூறும் பன்மைகிளவியும்...'' என்னும் (தொல்-சொல்-கிளவியா-27-ஆம்) சூத்திரவுரை பார்க்க. அகல்வானம்- வினைத்தொகை. உம்பர்- மேலிடம்; அஃதிங்குச் சுவர்க்கத்தை யுணர்த்தி நின்றது; தேவர்களையும் உணர்த்தும். தொல்காப்பியம்- பொருளதிகாரம்- நச்சினார்க் கினியர் உரையில், அறிவினால் உவகை யுண்டாதற்கு இச்செய்யுளை உதாரணங் காட்டி யிருக்கிறது. (எ)

138. ***கனைகடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை***
நுனியிற் கரும்புதின் றற்றே- நுனிநீக்கித்
துரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈரமி லாளர் தொடர்பு.

(இ-ள்) கனை-ஒலிக்கின்ற, கடல் - கடலினது, தண்-குளிர்ச்சி பொருந்திய, சேர்ப்ப - துறையையுடைய பாண்டியனே! கற்று - (சிறந்த நூல்களைப்) படித்து, அறிந்தார்- (அவற்றின் உட்பொருள்களை) உணர்ந்தவர் களின், கேண்மை- உறவானது, கரும்பு- கரும்பை, நுனியில் - நுனிப்பக்கத்தி லிருந்து, தின்று அற்று- தின்றுகொண்டு போனதைப் போன்றதாகும். (நாட் செல்லச் செல்ல இனிமையை அதிகப்படுத்துவதாகும்), பண்புஇலா - (நூல்களைக் கற்றுணர்ந்திருத்தலாகிய அக்) குணமில்லாதவர்களும், ஈரம் இலாளர்- அன்பில்லாதவர்களுமாகிய மனிதர்களுடைய, தொடர்பு - சிநேகமானது, நுனிநீக்கி- (அக் கரும்பை) நுனியிலிருந்து தின்னுதலை நீக்கி, தூரில்- அடியி லிருந்து, தின்று அன்னதகைத்து- தின்றுகொண்டு போனதை நிகர்த்ததன்மையையுடையதாகும் (நாட்செல்லச்செல்ல இனிமையைக் குறைத்துவிடத் தக்கதாகும்); எ-று.

நூல்களைக் கற்றறிந்த புலவர்களுடைய சிநேகம், கரும்பை நுனிப்பக்கத்திலிருந்து தின்றுகொண்டு போகும் போது ஒவ்வொரு முளிக்கும் அப்பால் இனிமை அதிகரித்துக்கொண்டு போவதுபோல நாளேற நாளேற இனிமைமிகச் செய்யும்; அக்குணமும், அன்பு மில்லாதவர்களுடைய உறவானது, கரும்பை அடியிலிருந்து தின்று கொண்டு போகும் போது ஒவ்வொரு கணுவுக்கும் அப்பால் இனிமை குறைந்து கொண்டு போவதுபோல வரவர அவ்வினிமை குறையச் செய்யும் என்பது இதன் கருத்து.

கரும்பை நுனிப்பக்கத்திலிருந்து தின்றுகொண்டு போனால் முதலில் சுவையின்றி யிருந்து ஒவ்வொரு கணுவையும் கடக்கக் கடக்கத் தித்திப்புச் சுவை அதிகரித்துக் கொண்டேபோய் அடிப்பாகத்தில் மிக்க இனிமை யுண்டாகும்; இதைப்போல் நூல்களைக் கற்றுணர்ந்தவர் களோடு சிநேகஞ் செய்தால் அவ்வுறவானது ஆரம்பத்தில் குறைவா

யிருந்து நாளேற நாளேற வளர்ந்து முடிவில் மிக்க இனிமையைத் தரும். கரும்பை அடிப்பாகத்திலிருந்து தின்று கொண்டுபோனால் ஆரம்பத்தில் மிகுந்த தித்திப்பா யிருந்து ஒவ்வொரு முளிக்கும் அத் தித்திப்புச் சுவை குறைந்து கொண்டே போய், முடிவில் குருத்தின்பாகம் வந்தவுடன் ஒரு சுவையுமில்லாமற் போய்விடும்; அதுபோலக் கல்வியறிவும், அன்புமில்லாதவர்களுடைய நட்பானது தொடக்கத்தில் இனிமையைக்காட்டி நாளேற நாளேறக் குறைந்து கொண்டே போய் முடிவில் எட்டுணை யின்பமுமற்றதாகி விடும். ஆதலின், கரும்பை நுனியிலிருந்து தின்பதைக் கல்விமான் களின் சிநேகத்துக்கும் அடியிலிருந்து தின்பதைக் கல்வியறி வும் அன்புமில்லாதவர்களுடைய உறவினுக்கும் உவமை களாகக் கூறினர் முனிவர். இங்ஙனம் கூறியது பயனுவமை யணியின்பாற்படும்.

இதனால், கல்வியாளர் உறவையே கொள்ள வேண்டு மென்பதும் கல்வியற்றாரின் உறவைத் தள்ளவேண்டு மென்பதும், கல்வியே உயர்ந்த தென்பதும் குறிப்பிடப் படுகின்றன. இந்நூலின் 125, 166, 211-ஆம் செய்யுட்களின் கருத்துக்களும், இச்செய்யுட் கருத்தும் பெரும்பான்மையும் ஒற்றுமையுடையன.

கனை- ஒலியை உணர்த்தும் உரிச்சொல். கனைகடல்- வினைத்தொகை நிலைத்தொடர். 'தின்றற்று' என்பது, 136-ஆம் செய்யுளில், 'போயற்று' என்பதிற் கூறிய இலக்கண முடிபினை யுடையதாகும். நுனியில், தூரில்- என்பவற்றி லுள்ள ஐந்தாம் வேற்றுமை இல்லுருபுகள் எல்லைப் பொருளன. பண்பிலா, ஈரமில் என்ற பெயரெச்சங்கள், ஆளர்- என்ற ஒருபெயரைக் கொண்டு முடிந்தன;

''உருபுபல வடுக்கினும் வினைவே றடுக்கினும்
ஒருதம் மெச்ச மீறுற முடியும்''

என்னும் (நன்-பொது-4-ஆம்) சூத்திரவுரையால் இது துணியப்படும். ஆளர் என்பது, மனிதர் என்ற பொருளில் நின்றது. ஏ- அரோ- அசைகள். (அ)

139. கல்லாரே யாயினுங் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளுந் தலைப்படுவர்- தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.

(இ-ள்) தொல்- பழமையான, சிறப்பின்- சிறப்பினை யுடைய, ஒள் நிறம்- பிரகாசமான நிறம்பொருந்திய, பாதிரிபூ- பாதிரிமலரை, புது ஓடு- புதியபாண்டத்தின் ஓடானது, சேர்தலால்- அடைதலால், (அதன் வாசனையைப் பெற்று), தண்ணீர்க்கு - (தன்னோடு சேர்ந்திருக்கும்) குளிர்ந்த நீருக்கு, பயந்து ஆங்கு- கொடுத்ததைப்போல, (மனிதரிற் சிலர்), கல்லாரே ஆயினும் - (நூல்களைப்) படித்துணராதவர்ளா யிருந்தாலும், கற்றாரைச் சேர்ந்து- (கல்வி) கற்றவர்களைக் கூடி, ஒழுகின்- நடந்தால், (அச்சேர்க்கையால்), நாளும்- தினந்தோறும், நல்அறிவு தலைப்படுவர் - நல்லறிவு வளரப் பெற்றுத் (தம்மைச்சார்ந்தவர்க்கும் அதனை உண்டாக்குவர்); எ-று.

புதிய பாண்டத்தின் ஓடானது பாதிரிப்பூவைச் சேர்ந்து அதன் வாசனையைப்பெற்றுத் தன்னோடு கலந்திருக்கும் தண்ணீருக்கும் கொடுத்தாற்போலச் சிலர், கல்வி கற்காதவர் களா யிருந்தாலும் கற்றவரைக் கூடினால் நல்லறிவுடையவர் களாகித் தங்களோடு சேர்வார்க்கும் நல்லறிவு புகட்டுவர் என்பது இதன் கருத்து.

இதனால், நூல்களைப் படியாதவர்களும், கற்றாரைச் சார்ந்து அவர்களிடம் நூற்பொருள்களைக் கேட்டுணர்ந்து அறிவு பெற்றுத் தாங்கள் கற்றுக் கொண்டவற்றைத் தம்மைச்

சாரும் பிறர்க்குணர்த்தி அவர்களையும் நல்வழிப் படுத்த வேண்டு மென்பதைக் குறிப்பாற் காட்டி அதன்மூலம் தமிழின் உயர்வை விளக்கினார் ஆசிரியர்.

வாசனை நீர் செய்பவர், ஒரு புதுப்பாண்டத்தில் பாதிரிப் பூவைப் போட்டுத் தண்ணீர் ஊற்றி வைப்பர். புதுப் பாண்டம் தன்னிடம் சேரும் வஸ்துக்களின் சத்துக்களை இழுத்துக் கொள்ளும் இயற்கையுடையதாதலின், அம்மலரின் வாசனையை இழுத்து நீரில் படியச் செய்யும்; அதனால் நீர் வாசனையுடையதாகிவிடும். பின்னர் அதனை வடிகட்டி யெடுத்து அத்தொழிலாளர் உபயோகிப்பர். இதைப்போல் கல்வி யறிவில்லாதவர், நூல்களைப் படித்துணர்ந்தவர் களைச் சேர்ந்தால் அவர்களிடம் நூற்கல்விகளையும் அறிவையும் கற்றுக் கொள்வர்; பின்னர்த் தாங்கள் கற்ற வற்றை, தங்களிடம் சேர்ந்தவர்களுக்குப் போதிப்பர்; அதனால் அவர்களும் கல்வியறிவுடையவர்களாவர். ஆதலின், அப்புதுப் பாண்டத்தின் இயற்கை, முதலிற் கல்வி கற்றுக்கொள்ளாம லிருந்து, கல்வியாளரைச் சேர்ந்து கல்வி கற்று அதனைப் பிறர்க்கு உணர்த்துவாரின் செய்கைக்கு உவமையாகக் கூறப்பட்டது. ''புத்தோடு பாதிரிப்பூவைச் சேர்தலால் அதன் வாசனையைப் பெற்றுத் தண்ணீர்க்குக் கொடுத்ததைப்போல'' என்று சொன்ன உவமைக்கேற்ப, ''நல்லறிவு நாளுந் தலைப்படுவர்'' என்பதற்கு, ''தினந் தோறும் நல்லறிவு வளரப்பெற்றுத் தம்மைச் சார்ந்தவர் களுக்கும் அதனை யுண்டாக்குவர்'' என்று பொருள் விரிக்கப் பட்டது. இதில் இசை யெச்சமாகச் சில சொற்றொடர்கள் வருவித்துரைக்கப்பட்டன.

இங்குப் புத்தோடு புதுப்பாண்டத்தை யுணர்த்தி நின்றது; பாண்டமே ஓடும், ஓடே பாண்டமுமாதலின் இரண்டற்கும் வேற்றுமை கருதப்படாது. புத்தோடு- கல்லார்க்கும், பாதிரிப்பூ கற்றார்க்கும், நல்ல வாசனை-

நல்லறிவுக்கும் - உவமைகளாம். இத்தகைய உபமான உபமேயங்களோடு அமைந்த இச்செய்யுள் உவமையணி யுடையது.

இங்ஙனம் நற்குணமுள்ள பொருள் அக்குணமற்ற பொருளைச் சேர்ந்தால், அந்தக் குணமற்ற பொருளும் சிறந்தகுணமடைவதைப்போல, கல்லாதவரும் கற்றவரைச் சேர்ந்தால் அறிவுடையராவரென்பதை,

''தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினு மவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே
உருண்ட வாய்தொறும் பொன்னுரு ளுரைத்துரைத் தோடி
இருண்ட கல்லையுந் தன்னிற மாக்கிய விரதம்''

என்னும் (கம்பராமாயணம்- பாலகாண்டம்- வரைக்காட்சிப் படலம்- 8-ஆம்) செய்யுளானும்,

''பூவோடு சேர்ந்த நாறும் மணம் பெறும்''

என்ற முதுமொழியானும் உணரலாம். 'கல்லாரே யாயினும்'' என்பதிலுள்ள உம்மை- இழிவு சிறப்புப் பொருளது. 'அறிவு தலைப்படுவர்' என்பதில், உயர்திணை யெழுவாயோடு, அஃறிணையாகிய 'அறிவு என்பது சேர்ந்த அவ்வுயர்திணை முடிபைப்பெற்றது; இது திணை வழுவமைதி; 'உயர்திணை தொடர்ந்த பொருண் முதலாறும், அதனோடு சார்த்தினத் திணை முடிபின'' என்னும், (நன்-பொ-26-ஆம்) சூத்திரவுரை யால் இது துணியப்படும். இனி, 'அறிவுதலைப்படுவர்' என்பதை, மூன்றாம் வேற்றுமைத் தொகையாக்கி, 'அறிவினாலே சிறந்தவராவர்' என்று பொருள் விரிப்பினும் பொருந்தும். புதுமை ஓடு-என்பது புத்தோடு என்றாயிற்று; இதில், புதுமை என்னும் பண்புப்பெயர் ஈறு, போய்த் தன்னொற்றிரட்டிற்று. தான்- அசை. (கூ)

140. *அலகுசால் கற்பி னறிவுநூல் கல்லா*
துலகநூ லோதுவ தெல்லாங்- கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்.

(இ-ள்.) (மனிதர்), அலகுசால்- அளவில் மிக்க, கற்பின்- நூல்களுக்குள்ளே, அறிவு நூல்- (ஆத்ம) ஞானத்தை உணர்த்தும் நூல்களை, கல்லாது கற்றுக்கொள்ளாமல், உலக நூல் - இவ்வுலக வாழ்க்கைக்கு மட்டும் பயன்படுகிற நூல் களை, ஓதுவது எல்லாம்- படிப்பது முழுவதும், கலகல கூஉந் துணை- (கற்றோமென்றிறுமாந்து எவ்விடத்தும்) கலகல வென்று பேசி ஆரவாரிக்கும் அவ்வளவினை மாத்திரமுடை யதே, (ஆதலின், அங்ஙனம் கலகலவென்று கூவிக் கொண்டு திரிவதை மாத்திரந்தான் அதனால் அடைதல் முடியும்), அல் லால்- அப்படியல்லாமல், கொண்டு- (அவ் வுலகநூலோது வதைக் கொண்டு, தடுமாற்றம்- (பிறவித் துன்பத்தில்) தடு மாறுதலினின்றும், போம் துணை- (நீங்கிச்) செல்லும் (ஓர்) உதவியை, அறிவார்- அறிந்து முத்தியின் பத்தை அடைபவர், இல்- எவருமில்லை; எ-று.

மனிதர், அளவில்மிகுந்த நூல்களுள்ளே, ஆத்ம ஞானத்தைத் தருகின்ற நூல்களைக் கல்லாமல், உலக வாழ்க் கைக்குரிய நூல்களைப் படிப்பது முழுவதும், கற்றோ மென்று தற்பெருமைகொண்டு கலகலவென்று ஆரவாரித் துப் பேசித்திரியும் அளவினை மாத்திரம் உடையது (அதா வது, அவர்கள்தற்பெருமை கொண்டு கலகலவென்றிரைந்து பேசிக்கொண்டு திரிவதற்கே அஃதுதவியா யிருக்கும். ஆதலின், அத்தகைய மனிதர், அந்தத் தற் பெருமையை மாத் திரந்தான் அடைவார்கள்); அங்ஙனமின்றி அவ்வுலக நூலோ துவதைக் கொண்டு பிறவித் துன்பத்தில் தடுமாறுதலினின் றும் நீங்கி முத்தி மார்க்கத்திற் செல்வதற் கேதுவா யிருக்கும் உதவியை அடைபவர் எவருமில்லை என்பது இதன் கருத்து.

அறிவு நூல்கள் - யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை முதலியவற்றையும், துறவு நெறியையும், முத்தி மார்க்கத்தையும், உணர்த்தும் நூல்கள்; உலக நூல்கள்- இலக்கியம், இலக்கணம், மந்திரம், கணிதம், வைத்தியம், சோதிடம், காவியம், புராணம் முதலியவற்றைப்பற்றிய நூல்கள்.

இச்செய்யுளினால், கல்வி கற்பதில் இன்னதைத்தான் முக்கியமாகக் கற்கவேண்டு மென்பதை முனிவர் வற் புறுத்திக் கூறினார். முத்தி மார்க்கத்தைப் போதிக்கும் நூல்கள் நிலைத்த வாழ்வு இன்னதுதானென்றுணரும் உயர்ந்த அறிவை விருத்தி செய்யக்கூடியனவாதலின் அறிவு நூல் களென்று கூறப்பட்டன; மற்றைய நூல்கள், நிலையற்ற உலக போகங்களை விளக்கி அவற்றின் மயக்கிலேயே மனிதர் ஆழ்ந்து கிடக்கும் மார்க்கங்களை அவர்க்குப் போதித்து அவர்களை உலக வாழ்க்கையோடொழியச் செய்வனவாக லான் உலக நூலென்று கூறப்பட்டன. உலக நூல்களைக் கற்றவர், மயக்கிடைப்பட்டு உண்மை மார்க்கத்தை யுணராது கற்றோமென்றிறுமாந்து ஆரவாரித்துத் திரிவர்; ஆகலின், அவற்றை, 'கலகலகூஉந்துணை' என்றுங் கூறினார் முனிவர். இவற்றைக்கொண்டு, 'தடுமாற்றம்போஒந்துணை யறி வார்ரில்' என்றதனால், அறிவு நூல்களைக் கொண்டு மனிதர் அதனை அறிதல் இயலும் என்பது தானே பெறப்படும். ஆகவே, மனிதர் உலக நூற்களைமட்டும் ஓதுவதை விடுத்து அறிவு நூற்களை யோதி, முத்தியின்பத்தை யடையும் மார்க்கத்தைத் தேடவேண்டுமென்பது இதனால் விளக்கப் பட்டது. இங்ஙனங் கூறியதைக் கொண்டு உலக நூல்களைக் கற்றலை அறவே ஒழித்துவிடல் வேண்டுமென்று துணிதல் கூடாது; அறிவு நூல்களைக் கற்றற்கு உலக நூல்களின் பயிற்சியும் ஓரளவு பயன்படக்கூடியதா யிருத்தலின், அவ்வளவுவரை அவற்றைக் கற்றுப் பயன்படக்கூடியதா யிருத்தலின், அவ்வளவுவரை அவற்றைக் கற்றுப் பின்னர்

அவற்றை விடுத்து அறிவு நூல்களைக் கற்றல் வேண்டு மென்று கொள்ளல் வேண்டும். சிலர் முதலில் உலக நூல்களைக் கற்றுப் பின்னர் அவற்றை விடுத்து அறிவு நூல்களைக் கற்றல் வேண்டுமென்னும் உணர்ச்சியற்றவராய், உலக நூல்களே பயனுடையனவென்று அவற்றையே கற்க விரும்புவர்; அன்னார்க் கறிவுறுத்தற்பொருட்டே முனிவர் இங்ஙனம் அவற்றை விடுத்து அறிவு நூல்களை ஓதல் வேண்டுமென்று கூறினார்.

இனி, 'அறிவனூல்' என்றும் பாடபேதமுண்டு. இப்பாடத்திற்கு, 'ஞானவடிவினனாகிய கடவுளைப்பற்றிய நூல்கள்' என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். 'இறைவனால் கூறப்பட்ட ஆகம நூல்கள் என்று இதற்குப் பொருள் கூறுவாருமுளர்; அருகக் கடவுளால் அருளப்பட்ட ஜைன ஆகமங்களில் உலக நூல்களும் அடங்குமாகலின் அவ்வுரை பொருந்தாதென்க. இந்நூல் 52-ஆம் செய்யுளில் ''சத்தமுஞ் சோதிடமு மென்றாங்கிவை பிதற்றும், பித்தரிற் பேதையாரில்'' என்னும் பின்னிரண்டடிகளின் கருத்தும், இச்செய்யுட்கருத்தும் ஒப்புமையுடையன.

சால்- மிகுதிப்பொருளைக் காட்டும் உரிச்சொல். சால் கற்பு- வினைத்தொகை. கற்பு- கல்வி; இது தொழிற் பெயர்; இதில், பு- தொழிற்பெயர் விகுதி; இன்- ஏழனுருபு. இஃதாகு பெயராய்க் கற்கப்படும் நூலை யுணர்த்திற்று. அறிவுநூல் - இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனு முடன் றொக்க தொகை. கல்லாது- எதிர்மறை வினையெச்சம். ஓதுவ தெல்லாம்- ஒருமையிற் பன்மைவந்த பால்வழுவமைதி. கலகல- அநுகரண வோசையைக் காட்டவந்த இரட்டைக் கிளவி; அநுகரணம்- வேறொரு பொருளின் செயல்போன்று அதனைக் காட்டுவது; இஃதிங்குப் பயனற்ற தன்மையை விளக்கி நின்றது; இவ்விரட்டைக்கிளவி பிரிந்து நின்று பொருள் பயவாது; இதனை, ''இரட்டைக்கிளவி யிரட்டிற்

பிரிந்திசையா'' என்னும் (தொல்- சொல்- கிளவியாக்கம்- 48-ஆம்) சூத்திரவுரை பாரக்க. பின்னிரண்டடிகளினும் வந்த அளபெடைகள் செய்யுளிசை நிறைக்க வந்தன. கூம், போம்- பெயரெச்சங்கள்; கூவும், போகும் என்பன ஈற்றயல் உயிர் மெய் கெட்டு, 'கூம், போம்' என நின்றன. பின்னிரண்டடி களும் அளபுத் தொடை அமையப்பெற்றவை; அளபுத் தொடையாவது-அளபெடை இயைந்து வருவது. (கo)

அதிகாரம் 15

குடியிருப்பு

குடி- நற்குலம், பிறப்பு- பிறத்தல். இது, நற்குலத் திற் பிறத்தலின் மேன்மையைக் கூறுவதாகலின், இப்பெயர் பெற்றது. கல்வி, உயர்குடிப் பிறந்தார்க்கே இன்றியமையாத தாகலின், இஃதக்கல்வி யின்பின் வைக்கப்பட்டது.

141. *உடுக்கை யுலறி யுடம்பழிந்தக் கண்ணுங்*
குடிப்பிறப் பாளர்தங் கொள்கையிற் குன்றார்
இடுக்கண் டலைவந்தக் கண்ணு மரிமா
கொடிப்புற் கறிக்குமோ மற்று.

(இ-ள்.) அரிமா- சிங்கமானது, இடுக்கண்- (பசியினா லாகிய) துன்பம், தலைவந்தக்கண்ணும்- தன்னிடத்தே உண்டான பொழுதும், கொடிபுல்- கொடியாகப் படர்ந் திருக்கும் புல்லை, கறிக்கமோ- தின்னுமோ?, (தின்னாது; தான் உண்ணுமுணவையே உண்ணும்); (அதுபோல), குடிப்பிறப்பாளர்- உயர்குடியிற் பிறந்தவர்கள், உடுக்கை உலறி- (வறுமையால் தங்கள்) ஆடையுங்கெட்டு, உடம்பு அழிந்தக் கண்ணும்- (உணவில்லாமையால்) தேகம் கெட்டு வன்மையொழிந்த போதும், தம் கொள்கையில்- (நல் லொழுக்கங்களைக் கடைப்பிடித்தொழுகுதலாகிய) தம்

கோட்பாட்டில், குன்றார்- குறைவுபடார்; (தமக்குரிய ஒழுக்கத்தின் மேம்பட்ட செயல்களையே செய்வர்); எ-று.

சிங்கமானது, பசித்துன்பம் வந்தவிடத்தும் புல்லைத் தின்னாது தனக்குரிய உணவையே உண்ணுவதுபோல, உயர்குலத்திற் பிறந்தவர்கள் வறுமையுற்று ஆடைகெட்டு உடல்மெலிந்த காலத்தும் தங்களுடைய உயர்ந்த ஒழுக்கங் களினின்றும் குறைவுபடாராய் நற்செயல்களையே புரிவ ரென்பது இதன் கருத்து.

மிருகங்களுக் கிறையாகிய சிங்கம் கொடிப்புல்லைத் தின்னாது எனவே, அதற்குக் கீழ்ப்பட்ட மாடு முதலிய மிருகங்களே அதைத் தின்னுமென்பதும், உயர்குடியிற் பிறந் தார் இழிந்த காரியங்களைச் செய்யார் எனவே கீழ்மக்களே அவற்றைச் செய்வாரென்பதும் தாமே அமைந்தன.

இங்ஙனம் உயர்குலத்திற் பிறந்தார் வறுமை முதலிய வற்றால் நேருந் துன்பங்களை யடைந்த காலத்தும் இழிந்த செயல்களைச் செய்யாரென்பதையும், புலி பசியால் வருந் தினும் புல்லையோ, மற்ற பயிரையோ தின்னாதென் பதையும்,

''ஒற்கந்தா முற்ற விடத்து முயர்ந்தவர்
நிற்பவே நின்ற நிலையின்மேல் - வற்பத்தாற்
றன்மே னலியும் பசிபெரி தாயினும்
புன்மேயா தாகும் புலி''

என்னும் (பழமொழி-70-ஆம்) செய்யுளும்,

''நல்லா றொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார்- பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னாவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ்''

என்னும் (நீதிநெறி விளக்கம்-61-ஆம்) செய்யுளும் விளக்கு வனவாம். ''புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது'' என்னும் முதுமொழியும் இச்செய்யுட் கருத்தினை விளக்கும்.

'உடுக்கை உலறி' என்பதை மூன்றாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டு, '(கெட்ட) ஆடையால் அழகிழந்து' எனப் பொருள் கொள்ளினுமமையும்; உலறுதல்- காய்தல்; இஃதிங்குக் கெடுதல் பொருள் பயந்துநின்றது. 'வரிமா' என்றும் பாடபேதமுண்டு; இதற்கு 'கோடுகளையுடைய புலி' என்று பொருள் கோடல் வேண்டும்; மா- மிருகங்களின் பொதுப்பெய ரெனினும் சிறப்புப்பற்றி ஈண்டுப் புலியை உணர்த்திற்றென்க. உடுக்கை- உடுக்கப்படுவது; ஆடைக்குக் காரணப்பெயர்; தொழிலாகு பெயரெனினுமாம். பிறப்பாளர் - பிறப்பினை ஆள்பவர். உம்மைகள் இரண்டும்- இழிவு சிறப்புப் பொருளன; இவை எப்பொழுதும் நிலை வேறு படாமையைக் குறிப்பித்தன. குடிப்பிறப்பினர் கொள்கை களாவன:- ஈகை, அன்புடைமை, மெய்ம்மை, பரோபகாரம், நல்ல ஆசாரம் முதலியனவாம். தலை- இடம்; தலைவருதல் - தன்னிடத்தே வருதல்; 'தலை' என்பதற்கு, 'மிகுதி' எனப் பொருள்கொண்டு, 'தலைவந்தக்கண்ணும்' என்பதற்கு, 'மிகுதியாக வந்தவிடத்தும்' எனப் பொருள் கோடலு மொன்று; தலை- உயர்வு; இஃதிங்கு மிகுதிப்பொருளை உணர்த்தி நின்றதென்க. அரி- சிங்கம், மா- மிருகம்; அரிமா- சிங்கமாகிய மிருகம்; இருபெயரொட்டுப் பண்புத்தொகை. உலறி- செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சம்; உலறு- பகுதி. இ- வினையெச்ச விகுதி. அழிந்தக்கண், வந்தக்கண் என்பன- செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம். ஓ- எதிர்மறைப் பொருளது. மற்று-அசை. (க)

142. *சான்றாண்மை சாய வொழுக்க மிவைமூன்றும்*
வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது - வான்றோயு
மைதவழ் வெற்ப படாஅ பெருஞ் செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு.

(இ-ள்) வான்தோயும்- ஆகாயத்தை அளாவியதும், மை தவழ்- மேகங்கள் தவழப்பெற்றதுமான, வெற்ப- மலையையுடைய பாண்டியநாட்டரசனே!, சான்றாண்மை- நற்குணங்களின் நிறைவும், சாயல்- மென்மையும், ஒழுக்கம்- நன்னடக்கையும், இவை மூன்றும்- (ஆகிய) இவைகள் மூன்றும், வான்தோய்- (புகழால்) மேலுலகத்தை அளாவிய, குடி- (உயர்ந்த) குடியில், பிறந்தார்க்கல்லது- பிறந்தவர் களுக்கே யல்லாமல், பிறர்க்கு- மற்றையோர்க்கு, பெருஞ் செல்வம் எய்தியக் கண்ணும்- மிக்க செல்வம் உண்டான விடத்தும், படா- உண்டாகமாட்டா; எ-று.

நற்குணங்களின் நிறைவு, மென்மைத்தன்மை, நன்னடக்கை ஆகிய மூன்றும் உயர்குடியிற் பிறந்தார்க்கே உண்டாகும்; மற்றையர் மிக்க செல்வமுடையவர்களா யிருப் பினும் அவர்க்குண்டாகமாட்டா என்பது இதன் கருத்து.

வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது மற்றையர்க்குச் சான்றாண்மை முதலிய மூன்றும் உண்டாகா' எனவே, அவ்வுயர் குடியிற் பிறந்தார்க்கே அவை அமையுமென்பது தானே பெறப்பட்டது. மேற்குலத்திற் பிறந்தார் செல்வமற்ற வர்களா யிருப்பினும் நற்குண நற்செயல்களை யுடையவர் களாகவே விளங்குவர்; கீழ்மக்கள் செல்வம்ஈ மிகப்பெற்றி ருப்பினும் இழிநத் குணங்களையும், தாழ்ந்த செயல்களையு முடையவர்களாகவே யிருப்பர்; இவ்விருவகையினரும் இத்தகையினராய் அமைவது உலக இயற்கை. ஆகலின், அவ்வியற்கையை இச்செய்யுளில் விளக்கினர் முனிவர்.

சான்று+ ஆண்மை= சான்றாண்மை- நற்குணங்கள் நிறைந்து அவற்றை ஆளுதல்; அதாவது, நிறைந்த நற் குணங்களைப் பெற்றிருத்தல். சாயல்- மென்மைத்தன்மை; ஐம்பொறிகளாலும் நுகரப்படும் பலவகை மென்மைகளும் இதில் அடங்கும்; உயர்குலத்தார்க்கு ஏற்படும் மென்மை யாவது, அவர்கள் உடம்பிலும், பேச்சிலும், பார்வையிலும்,

பிறசெயல்களிலும் மென்மைத் தன்மையுடையவராகக் காணப்படுதல். சாயல்- என்பது மென்மையை உணர்த்து முரிச்சொல் என்பதனை, ''சாயல் மென்மை'' என்னும் (தொல்-சொல்-உரி.29-ஆம்) சூத்திரத்தா லுணர்க. இங்ஙனம், சாயல்- என்னும் இச்சொல், ஐம்பொறிகளாலும் நுகரப்படும் மென்மைகளை உணர்த்துமென்பதை,

''சேந்தொத் தலர்ந்த செழுந்தாமரை யன்ன வாட்கட்
பூந்தொத் தலர்ந்த பசும்பொற்கொடி யன்ன பொற்பின்
ஏந்தொத் தலர்ந்த முனையின்னமிர் தன்ன சாயல்
வேந்தற் கமுதாய் விளையாடுதற் கேது வாமே''

என்னும் சீவகசிந்தாமணி பதிகம்- 8-ஆம் செய்யுளுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர், ''அமிர்தம் கட்கினிதாகிய மென்மையும், தன்னை நுகர்ந்தார் பிறிது நுகராமற் றடுக்கு மென்மையு முடைமையின், 'அமிர்தன்னசாயல்' என்றார்; 'சாயல் மென்மை' (தொல்-சொல்- உரி-29) என்று பொதுப் படச் சூத்திரம்செய்தது ஐம்பொறியால் நுகருமென்மை யெல்லா மடங்குதற்கு; 'மயிலன்ன சாயல்' (ஏலா-28), 'சாயன் மார்பு' (கலித்-65) என ஒளிக்கும், ஊற்றிற்கும் வந்தன; பிறவுங்காண்க.'' என எழுதியவற்றாலுணர்க; இவற்றால், ஐம்புலன்களில் கட்புலனாகிய ஒளியாலும், மெய்ப்புலனாகிய ஊற்றினாலும் நுகரும் மென்மைகள் விளக்கப்பட்டன.

இனி, சாயல் என்பதற்கு, 'ஒளி' அல்லது, 'அழகு' என்று பொருள் கூறினுமாம்.

உயர்குடியிற் பிறந்தாருடைய கீர்த்திச் செயல்கள், விண்ணுலகம் வரையிலும் எட்டும்; அவ்வுலகத்தாரும் அவற்றைக் கொண்டாடுவர்; ஆகலின், 'வான்தோய்குடி' என்பதற்கு, 'புகழால் மேலுலகத்தை அளாவியகுடி' என்று

பொருள் கூறப்பட்டது; இனி, சிறப்புப்பொருந்தியகுடி' என்றும், 'ஆகாயத்தைப்போ லுயர்ந்தகுடி' என்றும் இரு வகைப் பொருள்கள் கூறினும் அமையும்; வான்- சிறப்பு, தோய்தல்- பொருந்துதல்; 'ஆகாயத்தைப் போலுயர்ந்த குடி என்று பொருள்கூறுமிடத்து, வான் - 'ஆகாயத்தைப்போல, தோய் - (உயர்வு) பொருந்திய' என்று பதப்பொருள் கொள்ளல் வேண்டும்; இந்நூல் 69-ஆம் செய்யுளுரையில் இதைப்பற்றி யெழுதியிருப்பனவற்றை உய்த்துணர்க. 'வான்தோயும் வெற்பு' என்பதில், 'வான் தோயும்' என்பது மலையின் உயர்வையும், சிறப்பையும் விளக்கும். 'வான் தோயு மைதவழ் வெற்ப' என்பதில், மலைக்கும் மேகத் துக்கும் தொடர்பின்றி யிருந்தும் தொடர்பைக் கற்பித்துக் கூறியது தொடர்புயர்வு நவிற்சியணி. இச்செய்யுளின் முதலடியில், பெயர்ச்செவ்வெண் ஈற்றில் தொகைபெற்றது;

''அவற்றின் வரூஉ மெண்ணி னிறுதியும்
பெயர்க்குரி மரபிற் செவ்வெ ணிறுதியும்
ஏயி னாகிய வெண்ணி னிறுதியும்
யாவயின் வரினுந் தொகையின் றியலா''

என்னும்(தொல்-சொல்-இடை-42-ஆம்) சூத்திரம் பார்க்க. ஆண்மை- வினைப்பகுதியடியாகப் பிறந்த பண்புப்பெயர்; தொழிற்பெயரெனினுமாம். வெற்ப - விளி. படா- எதிர் மறைப் பலவின்பால் வினைமுற்று. அளபெடை- அசை நிறைக்க வந்தது. (உ)

143. *இருக்கை யெழலு மெதிர்செலவு மேனை*
விடுப்ப வொழிதலோ டின்ன- குடிப்பிறந்தார்
குன்றா வொழுக்கமாக் கொண்டார் கயவரோ
டொன்றா வுணரற்பாற் றன்று.

(இ-ள்) இருக்கை எழலும்- (பெரியோரைக் கண்ட விடத்து) ஆசனத்தை விட்டு எழுந்து நிற்றலும், எதிர் செல

வும்- எதிர் செல்லுதலும்(அதாவது, எதிரேசென்று அவரை அழைத்து வருதலும்), ஏனை- பின்னும், (அவர்கள் திரும்பிச் செல்லுங்காலத்தில் பின் சென்று வழிவிட்டு), விடுப்ப - (அவர்கள் போகலாம் என்று) விடைகொடுக்க, ஒழிதலோடு -(அவரைவிட்டுப்) பிரிந்து வருதலும், (ஆகிய), இன்ன- இத் தன்மையான செயல்களை, குன்றா - குறைவுபடாத, ஒழுக் கமா - நன்னடக்கைகளாக, கொண்டார்- கொண்டவர்களே, குடிப்பிறந்தார் - உயர்குடியிற் பிறந்தவராவர், (இந்நல் லொழுக்கங்களைப் பெறாதோர் மூடராவர்; இவ்விரு வகையாரும் வெளித்தோற்றத்தில் மானிடர் என்றே ஒரே தன்மையராகக் காணப்படுவார்; எனினும்), கயவரோடு- (அந்நல்லொழுக்கங்களில்லாத) மூடரோடு, ஒன்றா- (அவ் வுயர்குடிப்பிறந்தாரை) ஒரு தன்மையாக, உணரல் பாற்று அன்று- மதிப்பது நற்பான்மை யுடையதன்று, அவர்களின் செயல்களைக் கண்டு வேறுபிரித்துணரல் வேண்டும்); எ-று.

இதனால், நற்குடியிற் பிறந்தார், பெரியோரைக் கண்டவிடத்து இருக்கையெழல், எதிர்செல்லல் முதலிய நற்செயல்களைக் கொண்டிருப்பரென்பதும், மூடர் அச்செயல்க ளற்றவர்களாயிருப்ப ரென்பதும், வெளிப் பார்வைக்கு இருவகையினரும் ஒரே மனிதவடிவினரா யிருப்ப ரென்பதும், அங்ஙன மிருப்பதுகொண்டு இருவரை யும் ஒரே தன்மையினராகக் கருதுதல் கூடாதென்பதும் அவரவர்களுடைய செயல்களைக் கொண்டு உயர்குடிப்பிறந் தாரையும், கயவரையும் வேறு பிரித்தறியவேண்டுமென்ப தும் விளக்கப்பட்டன. இவற்றைக் கொண்டு நற்குலத்தாரின் உயர்வும், மூடரின் இழிவும் உணரப்படும். இருக்கை யெழல், எதில்செலல் முதலியவற்றைக் குன்றாவொழுக்க மாக் கொண்டார் குடிப்பிறந்தார் எனவே, அவற்றைக் கொள்ளாதார் கீழ் மக்களாகிய மூடர் என்பது தானே பெறப் பட்டது. உயர் குடியிற் பிறந்தார் மிக்க செல்வமுடையரா யிருப்பினும் பெரியாரைக் கண்டபோது சிறிதும் செல்வச்

செருக்கின்றி இருக்கைவிட்டெழுந்து அவரை நன்கு மதித்து உபசரிப்பார்; கீழ்மக்களோ, செல்வமற்றிருக்குங் காலத்திலும் பெரியோரைக் கண்டவிடத்து மதியாமல் இறுமாப்புற்றிருப்பர். ஆதலின், உயர்குடியிற் பிறந்தாரைச் சிறப்பித்தும், மூடரை இழித்துங் கூறினார் முனிவர்.

'குடிப்பிறந்தார் குன்றா வொழுக்கமாக் கொண்டார்' என நேராகவே கொண்டு பொருளுரைப்பினுமாம். 'இன்ன' என்றதனால் மற்றுமுள்ள நல்லொழுக்கங்களுங் கொள்ளப்படும்; இங்ஙனம் பெரியோர்களைக் கண்டவிடத்துக் கைக்கொள்ளத்தக்க ஒழுக்கங்களை ஒன்பது வகைகளாகப் பிரித்து, நவபுண்ணியங்களென்று ஜைன நூல்கள் கூறும்; நவபுண்ணியங்களாவன:- எதிர்கொள்ளல், அடியில் வீழ்ந்து வணங்கல், துதித்தல், அமர்தற்குத் தூமணி நிலங்காட்டல், பாதங்களைச் சுத்திசெய்தல், அவற்றிற்கு அருச்சனை புரிதல், மனந் தூயராதல், வாக்குத் தூயராதல், மெய்தூயராதல் என்பனவாம்; இச் செய்யுளிற் கூறியவையன்றி, இவைகளும் உயர்குடியிற் பிறந்தார்க் குரியனவாம். இருக்கை- தொழிற்பெயர், கை- தொழிற் பெயர் விகுதி; இது தொழிலாகு பெயராய் இருத்தற்குரிய ஆசனத்தை யுணர்த்திற்று. எழல்- தொழிற்பெயர்; எழு- பகுதி; அல்- விகுதி, உகரங்கெட்டது. செலவு- தொழிற்பெயர்; செல்- பகுதி, உ- விகுதி, அ- சாரியை. ஏனை- வினை மாற்றுப்பொருளில் வந்த இடைச்சொல். ஓடு- எண்ணிடைச்சொல். இன்ன- சுட்டி னடியாகப் பிறந்த பலவின்பாற்பெயர். கயவர்- கயமை என்னும் பண்படியாகப் பிறந்த பெயர்; கயமை- நற்குணங்கள் இல்லாத தன்மை; அதனையுடையார் கயவர். உணரற்பாற்று- உணரலாகிய பான்மையை உடையது; உணரல்+ பால்+ று- எனப் பிரிக்க. இச் செய்யுளின் முதலடி முற்றுமோனையாக அமைந்தது; முற்றுமோனையாவது - சீர்தோறும் மோனை வருதல். (ரு)

144. நல்லவை செய்யி னியல்பாகுந் தீயவை
பல்லவர் தூற்றும் பழியாகும்- எல்லாம்
உணருங் குடிப்பிறப்பி னூதிய மென்னோ
புணரு மொருவர்க் கெனின்.

(இ-ள்.) (உயர்குடியிற் பிறந்தவர்கள்) நல்லவை செய்யின்- நற்காரியங்களைச் செய்தால், இயல்பு ஆகும்- (அச்செய்கை அவர்களுக்கு) இயற்கையாக அமைந்ததாகி விடும், (ஆதலின், அதுபற்றி அவர்களை எவரும் மிகப் புகழ்ச்சி செய்யமாட்டார்கள்) தீயவை செய்யின்- (அவ்வுயர் குடியிற் பிறந்தவர்கள்) தீயகாரியங்களைச் செய்தால், அவர் களுக்கு), பல்லவர் தூற்றும்- பலரும் நிந்தித்துப் பரப்பிவிடத் தக்க, பழி ஆகும்- பழிப்பு உண்டாகி விடும், (ஆதலின்), ஒரு வர்க்கு—, புணரும் எனின்- (உயர் குடிப் பிறப்பு) அமையு மானால், எல்லாம் உணரும்- (நல்லன, தீயன, அவற்றாலுண் டாம் பயன் ஆகிய) எல்லாவற்றையும் உணர்ந்து நற்காரியங் களையே செய்யும், குடிப்பிறப்பின்- உயர்குடிப்பிறப் பினால், ஊதியம்- (ஏற்படும்) பயன், என்னோ- யாதோ? (எதுவுமில்லை); எ-று.

உயர்குடியிற் பிறந்தவர்கள் நற்காரியங்களை மிகுதி யாகச் செய்தாலும் அச்செயல் அவர்களுக்கு இயற்கை யாகவே அமைந்ததாகலின் உலகத்தார் அதுபற்றி அவர்களை அதிகமாகக் கொண்டாடமாட்டார்கள்; அவர்கள் தீச் செயலைப் புரிந்தாலோ அது சிறிதாயிருப்பினும் பலரும் அதனைப் பெரிதாக்கி அதன்பொருட் டவர்களைப் பெரிதும் நிந்திப்பர். தாழ்ந்த குடியிற் பிறந்தவர்கள் பெருந் தீங்கு களைப் புரியினும் அங்ஙனம் செய்தல் அவர்களின் இயற்கைக் குணமாகலின் அதுபற்றி மனிதர்கள் அவர்களை அதிகமாகப் பழிக்கமாட்டார்கள்; அக்கீழ்மக்கள் சிறிது நன்மை செய்தாலும் அதன் பொருட்டு உலகத்தார் அவர் களை அதிகமாகப் புகழ்வார்கள். இவையாவும் உலகத்தில் உள்ள பொதுவான மனிதர்களின் இயற்கைகள். எனினும்,

அறிஞர் எப்பொழுதும் உயர்குடியிற் பிறந்தாரை உயர்ந் தோராகவும், கீழ் மக்களைத் தாழ்ந்தோராகவுமே என்றும், எந்நிலையிலும் கருதுவர். அவர் மதிப்பே உலகில் உயர்ந்த தாம். ஆகவே நற்குடியிற் பிறந்தார் எப்பொழுதும் உயர்ந்த வர்களே, கீழ்மக்கள் கீழ்மக்களே, இங்ஙனம், இயற்கை உயர்வுடைய நற்குடியிற் பிறந்தாரை, உலகப் பொதுவியல் கூறுவதன் மூலம் தாழ்த்திக் கூறுவார்போன்று உயர்த்திக் கூறினார் முனிவர்; இங்ஙனம் கூறியது- வஞ்சப்புகழ்ச்சி யணி; வடமொழியில் நிந்தாஸ்துதி யெனப்படும். உயர்குடி யிற் பிறந்தாரிடத்தே தோன்றும் குற்றம் சிறிதாயினும் பெரிதாக எங்கும் விளங்குமென்பதை,

> *''குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்*
> *மதிக்கண் மறுப்போ லுயர்ந்து''*

என்னும் (திருக்குறள்-959-ஆம்) செய்யுளாலுணர்க. இக் குறிப்பினால், உயர்குடிப் பிறந்தார் சிறு குற்றத்தையும் செய்யலாகா தென்பதும்விளக்கியதாகும்.

பல்லவர்- என்பதில், பல்- பகுதி, அர்- பலர்பால் விகுதி, அ- சாரியை, வகரம்- உடம்படுமெய்; பல் என்பதில் லகரம் இரட்டித்து, தனிக்குறில் முன்னொற்றாதலின். 'செய்யின்' என்பது இரண்டிடங்களினுங் கூட்டப்பட்டது. 'பிறப்பின்' என்பதிலுள்ள, ஐந்தனுருபாகிய, இன்- ஏதுப் பொருளது. இச்செய்யுளின் முதலடியில், 'நல்லவை' 'தீயவை' என ஒன்றுக் கொன்று முரண்பட்ட சொற்கள் வந்தது- முரண்தொடை. (ச)

145. கல்லாமை யச்சங் கயவர் தொழிலச்சஞ்
சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்சம்- எல்லாம்
இரப்பார்க்கொன் றீயாமை யச்ச மரத்தாரிம்
மாணாக் குடிப்பிறந் தார்.

(இ-ள்.) (உயர்குடிப்பிறந்தாரிடத்து), கல்லாமை அச்சம்- தாம் கல்வி கற்றுக்கொள்ளாமைக்கு அச்சமாம், கயவர் தொழில் அச்சம் - கீழ்மக்களுடைய தொழிலுக்கு அச்சமாம் (அதாவது, அவர்கள் செய்யும் கெட்ட காரியங் களில் எதையேனும் செய்தற்கு அச்சமாம்), சொல்லாமை யுள்ளும் - (தீயசொற்களைச்) சொல்லாம லிருப்பதிலும், ஓர் சோர்வு அச்சம் - ஒரு சோர்வுக்கு அச்சமாம், (அதாவது, மறந்து ஒன்றைச் சொல்லிவிடுதற்கு அச்சமாம்), எல்லாம் - தாம் விரும்பினவற்றை யெல்லாம் இரப்பார்க்கு - யாசிப்பவர் களுக்கு ஒன்று- ஏதேனுமொன்றை, ஈயாமை அச்சம் - கொடாமைக்கு அச்சமாம், (அதாவது ஒரு பொருளைக் கொடுக்கக் கூடாமற் போனால் அதற்கச்சமாம்), (ஆதலின்) இ மாணாகுடி பிறந்தார்- மாட்சிமையில்லாத இந்த உயர் குடியிற் பிறந்தவர்கள், மரத்தார்- மரக்கலத்திலுள்ளவராவர், (அதாவது, கடலின் மத்தியிற் செல்லும் கப்பலிலிருப்பவர் கள் எப்பொழுதும் அச்சமுடையவர்களா யிருத்தல் போன்று அச்சமுள்ளவராகவே யிருப்பர்); எ-று.

உயர்குடியிற் பிறந்தவர்கள், கல்வி கல்லாதிருத்தலும், கீழ்மக்களுடைய இழிதொழிலைச் செய்தலும், மறந்தும் சொல்லத்தகாததைச் சொல்லுதலும், பிறர் விரும்பி இரந்து கேட்பவற்றில் எதையேனும் கொடுக்க முடியாதிருத்தலும் அவர்கட்கிழிவை யுண்டாக்குவனவாம். ஆதலின், அவர்கள் அவற்றிற்கஞ்சி, அவை நேர்ந்துவிடாதபடி கல்வி கற்றலிலும், இழிதொழிலைச் செய்யாதிருத்தலிலும், கெட்ட வார்த்தை சொல்லாதிருத்தலிலும், பிறர் விரும்பியதைத் தடையின்றிக் கொடுத்தலிலும் மிக்க கவலையுடையவர்களா யிருப்பார்கள், அதனால் எப்பொழுதும் அச்சத்தினின்றும் நீங்காதவராவர். ஆகலின், அவர்கள் உயர் குடிப்பிறப்பின ரெனினும், அவர்களை, 'இம்மாணாக் குடிப்பிறந்தார் மரத்தார்' என்றார் முனிவர். இங்ஙனம் கூறியதும் வஞ்சப் புகழ்ச்சியணியாம்.

இவ்வாறு கூறியதுகொண்டு, கல்வி கற்றுத் தீத் தொழில் செய்யாது, தீமொழிபகராது, இரப்பார்க்கு வேண்டு வது கொடுத்து வாழ்வோரே உயர் குடியிற் பிறந்தாரென்ப தும், இவையில்லாதோர் கீழ்மக்களென்பதும் துணியப் படும். தீமொழி பகர்தல் உயர் குடியிற் பிறந்தார்க்குத் தகாததென்பதை,

''ஒன்றானுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயின்
நன்றாகா தாகி விடும்''

என்னும் (திருக்குறள்-128-ஆம்) செய்யுளும் உணர்த்தும். இனி, 'மாணாக்குடி' என்பதை, மாண்+ஆ+குடி- எனப் பிரித்து 'மாட்சிமை யாகுங்குடி' எனப் பொருளுரைப்பினும் பொருந்தும். கல்லாமை அச்சம், தொழிலச்சம், சோர்வச்சம், ஈயாமை அச்சம் என்பன- நான்காம் வேற்றுமைத் தொகை கள். கல்லாமை, சொல்லாமை, ஈயாமை - எதிர்மறைத் தொழிற்பெயர்கள். மரம் - கருவியாகு பெயராய் அதனாலாம் மரக்கலத்தை யுணர்த்தி நின்றது; மரக்கலத்திற்கு, 'கலம்' என்ற பெயர் வழங்குதல்போல, இங்கு, 'மரம்' என்பது வந்தது; நடுக்கடலில் மரக்கலத்திலிருப்பவர்களுக்கு எந்தச் சமயத்தில் என்ன விபத்து நேருமோ என்னும் அச்சமே அதிகரித்திருக்கும்; அதுபோலவே உயர் குடியிற் பிறந்தார்க் கும் குற்றங்கள் நேர்ந்து விடாமல் தம்மைக் காத்துக் கொள்வதில் எப்பொழுதும் அச்சம் அதிகரித்துக் கொண்டிருக் கும்; அதலின், அவர்கள் மரக்கலத்திலிருந்து கலங்கு வோராகக் கூறப்பட்டார்கள். 'மணாக்குடி' என்பதற்கு எதிர் மறைப் பொருளுரைக்கும்போது, மாணா- ஈறு கெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்; மாண்- பகுதி, ஆ- எதிர்மறை விகுதி.

இனி, இச்செய்யுளுக்கு, 'ஈயாமை அச்சம்' என்ற வரையில், இங்குக் கூறிய பொருளையே வைத்து, அதன் மேல், ''(ஆதலால், இவர்கள் எப்பொழுதும் இவற்றிற்கஞ்சி

நல்லொழுக்கங்களை மேற்கொண்டவர்களாகவே விளங்குவர்; அதனால் அறிவுடையா ரென்று பலராலுங் கொண்டாடப்படுவர்;)'' இம்மாணாக் குடிப்பிறந்தார்- இப்படிப்பட்ட மாட்சிமையில்லாத தாழ்ந்த குடியிற்பிறந்த கீழ்மக்கள், மரத்தார்- மரத்தின் தன்மையை யுடையவராவர், (அதாவது, மரத்தைப் போல் அறிவற்றவராவர்)'' என்று பொருளுரைப்பினும் பொருந்தும்; இப்பொருள் கொள்ளுமிடத்து, 'மரத்தார்' என்பதற்கு, 'மரத்தினாற் செய்யப்பட்ட பாவை போன்றவர்' என்று பொருள் கூறுவாருமுளர். கீழ்மக்கள், கல்லாமை முதலியவற்றிற்கு அஞ்சும் உணர்ச்சி யற்றவராகலின், 'மரத்தார்' என்று கூறப்பட்டார்கள். அறிவில்லாதவர் மரத்திற்கு நிகராவரென்பதை,

''அரம்போற் கிளையடங்காப் பெண்வியக்கத் தொண்டு
மரம்போன் மகன்மாறாய் நின்று- கரம்போலக்
கள்ளநோய் காணு மயலைந்து மாகுமேல்
உள்ளநோய் வேண்டா வுயிர்க்கு''

என்ற (சிறு பஞ்சமூலம் -62-ஆம்) செய்யுளில், 'மரம்போன் மகன்' என்பதும்,

''கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்லமரங்கள்- சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்''

என்னும் (வாக்குண்டாம்-13-ஆம்) செய்யுளும் உணர்த்துவனவாம். அதிகாரப் பொருண்மை நோக்கி, முதலில், 'உயர்குடியிற் பிறந்தாரிடத்து' என்னும் சொற்கள் வருவித் துரைக்கப்பட்டன. (ரு)

146. *இனநன்மை யின்சொலொன் றீதன்மற் றேனை*
மனநன்மை யென்றிவை யெல்லாங்- கனமணி
முத்தோ டிமைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப
இற்பிறந்தார் கண்ணே யுள.

(இ-ள்). கனம்- மிகுதியாகிய, மணி - இரத்தினங்கள், முத்தோடு - முத்துக்களுடனே கூடி, இமைக்கும் - பிரகாசிக்கின்றதும், முழங்கு - ஆரவாரிக்கின்றதுமாகிய, உவரி- சமுத்திரத்தினது, தண்- குளிர்ந்த, சேர்ப்ப - கரையையுடைய பாண்டியநாட்டிறைவனே! இனம் நன்மை என்று- சுற்றத்தார்க் குரிய நன்மையும், (அதாவது, சுற்றத்தார்க்கு நன்மை செய்தலும்), இன்சொல் என்று- இனிய சொற்களைப் பேசுதலும், ஈதல் என்று - (பொருளை விரும்பிக் கேட்டவர்க்குக்) கொடுத்தலும், ஏனை - மற்றும், மனம் நன்மை என்று- மனப் பரிசுத்தமா யிருத்தலும், (ஆகிய), இவை எல்லாம்- இந்நற்செயல்களெல்லாம், இல்பிறந்தார் கண்ணே - உயர்குடியிற் பிறந்தவரிடத்தே, உள- உள்ளன; எ-று.

சுற்றத்தார்க்கு நலஞ்செய்தல், இன்சொற் கூறுதல், இரப்பார்க்குப் பொருள் கொடுத்தல், பரிசுத்த மனத்தோடு கூடியிருத்தல், ஆகிய இவைகளெல்லாம் உயர்குடியிற் பிறந்தவரிடத்தே இயல்பாக அமைந்துள்ளவை என்பது இதன் கருத்து.

உயர்குடியிற் பிறந்தவர்களே இந் நற்செயல்களோடு கூடியிருப்பார்களென்பதை இதனால் விளக்கினார் முனிவர். இங்ஙனங் கூறவே, தாழ்ந்தகுடியிற் பிறந்தவர்களிடத்து இச்செயல்கள் இராவென்பது தானே பெறப்படும். 'இன நன்மை' என்பதற்கு, 'சிநேக நன்மையை (அதாவது, நன்மையான சிநேகிதரைப்) பெற்றிருத்தல்' என்று பொருளுரைப்பினுமாம். உயர்குடியிற் பிறந்தார்க்கு இந் நற்செயல்கள் உரியன வென்பதை,

''நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு''

என்னும் (திருக்குறள்-953-ஆம்) செய்யுளும் விளக்கும்.

இன்சொல்- பண்புத்தொகை. மற்று- அசை. என்று- எண்ணிடைச்சொல்; இனநன்மை முதலிய ஏனையவற் றோடுங் கூட்டப்பட்டது; இனி, 'என்ற இவை' என்னும் பெயரெச்சத் தொடர் விகாரப்பட்டு, 'என்றிவை' என வந்ததாகக் கொள்ளினும் அமையும். 'கனம்' என்பது மணியின் உயர்வு குறித்து நின்றது. முத்தோடு- உடனிகழ்ச் சிப் பொருளில் வந்த மூன்றாம் வேற்றுமை விரி. சமுத்திரம் பலவகை இரத்தினங்கட்கும் இருப்பிடமாகலின், 'கனமணி முத்தோடிமைக்கும்.... உவரி' எனப்பட்டது; இதுபற்றியே இதற்கு வடமொழியில், 'ரத்நாகரம்' என்னும் பெயர் வழங்கு கின்றது. முழங்கு உவரி- வினைத்தொகை. உவர்- உப்பு; அச் சுவையைக் கடல் உடையதாதலின், 'உவரி' எனப்பட்டது; இதில், இ- பெயர் விகுதி. உள- பலவின்பாற் குறிப்பு வினைமுற்று. இச்செய்யுளின் முதலடி முற்றுமோனை யமைந்தது. (கூ)

147. *செய்கை யழிந்து சிதன்மண்டிற் றாயினும்*
பெய்யா வொருசிறை பேரி லுடைத்தாகும்
எவ்வ முழந்தக் கடைத்துங் குடிப்பிறந்தார்
செய்வர் செயற்பா லவை.

(இ-ள்.) பேர்- இல்- பெரிய வீடானது, செய்கை அழிந்து- வேலைப்பாடுகள் கெட்டு, (அதாவது கட்டுக் குலைந்து), சிதல் மண்டிற்று ஆயினும்- கறையான்கள் நெருங்கியதாயினும், (அதாவது, கறையான்களால் அரிக்கப் பட்டதாயிருந்தாலும்), பெய்யா- (மழைநீர்) ஒழுகாத, ஒருசிறை - ஒருபக்கத்தை, உடைத்தாகும்- உடையதாகும், (அதுபோல), குடிபிறந்தார்- உயர்குடியிற் பிறந்தவர்கள்,

எவ்வம் உழந்தக்கடைத்தும்- (வறுமையால் ஏற்பட்ட) துன்பத்திற் சிக்கி வருந்தினாலும், செயற்பாலவை- தாம் செய்யத்தக்க நற்காரியங்களை, செய்வர் - செய்வார்கள்; எ-று.

பெரிய வீடானது பழமையடைந்து கட்டுக்குலைந்து செற்களால் அரிக்கப்பட்டுச் சிதைந்து போயிருந்தாலும், ஒரு பக்கத்திலாவது மழைத்தண்ணீரொழுகாத இடமுடையாதாயிருக்கும்; அதனால், முன்பு நல்ல நிலையிலிருந்த காலத்தில் மனிதர்க்கு எவ்வித உதவி புரிந்து வந்ததோ அவ்வுதவியில், அந்நிலையிலும் குறைவுபடாததாகவே யிருக்கும். அது போலவே உயர்குடியிற் பிறந்தவர்களும் வறுமைத் துன்பத்தை அனுபவிக்குங் காலத்திலும் தம்முடைய நற்செயல்களிற் குறைவுபடாது புண்ணியச் செயல்களைப் புரிந்து வருவர். ஆகலின், இவர்க்கு அப்பெரியவீடு உவமையாகக் கூறப்பட்டது. இங்ஙனங் கூறியது எடுத்துக்காட்டுவமையணி. இதில், உயர்குடியிற் பிறந்தார், வறுமைத் துன்பத்திற் சிக்கி வருந்துங் காலத்திலும் நற்காரியங்களையே செய்வர் என்பது விளக்கப்பட்டது.

செய்கை- தொழிற்பெயர். அழிந்து- வினையெச்சம். மண்டிற்று- ஒன்றன்பால் வினைமுற்று. இவ்விரண்டும், 'இல்' என்பதைக் கொண்டு முடிந்தன. சிதல்- சாதியொருமை. பாலவை- பலவின்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர்; பான்மையென்னும் பகுதியடியாகப் பிறந்தது; இதில் இரண்டனுருபு தொக்கது.

இச்செய்யுட் கருத்தை,

''வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று''

என்னும் (திருக்குறள்-955-ஆம்) செய்யுளும்,

"ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டும்- ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து''

என்னும் (நல்வழி-9-ஆம்) செய்யுளும் விளக்குவனவாம். இன்னும் இந்நூல் *148, 150, 153, 184, 185*-ஆம் செய்யுட்களும் இக்கருத்தையே விளக்குவனவாம். (எ)

148. *ஒருபுடை பாம்பு கொளினு மொருபுடை*
யங்கண்மா ஞாலம் விளக்குறூஉந் - திங்கள்போற்
செல்லாமை செவ்வனேர் நிற்பினு மொப்புரவிற்
கொல்கார் குடிப்பிறந் தார்.

(இ-ள்.) ஒருபுடை- (தனது) ஒரு பக்கத்தை, பாம்பு கொளினும்- பாம்பு பற்றிக்கொண்டாலும், ஒருபுடை- மற்றொரு பாகத்தால், அம்கண்மா ஞாலம் - அழகிய இடமுள்ள பெரிய பூமியை, விளக்குறூஉம்- பிரகாசிக்கச் செய்கின்ற, திங்கள்போல்- பூரண சந்திரனைப்போல, குடி பிறந்தார்- உயர்குடியிற் பிறந்தவர்கள், செல்லாமை- (மனம்; வாக்கு, காயம் என்கின்ற திரிகரணங்களாலும் நிகழக்கூடிய எண்ணமும், சொல்லும், தொழிலும் ஆகிய செயல்கள்) நடைபெறாமை, (அதாவது, வறுமை), செவ்வன்- நன்றாக, (அதாவது, தன் இயற்கையில் குறைவுபடாமல்), நேர்நிற் பினும்- (தம்மிடம்) நேர்ந்து நின்றாலும், ஒப்புரவிற்கு- (பிறர்க்கு) உபகாரஞ் செய்தற்கு, ஒல்கார்- பின்வாங்க மாட்டார்கள்; எ-று.

சந்திரனின் ஒரு பாகத்தைப் பாம்பு பற்றிக் கொண் டாலும், அது மற்றொரு பாகத்தால் ஒளியைப்பரப்பி உல கத்தை விளக்கிக் கொண்டிருக்கும்; அதைப்போல உயர்குடி யிற் பிறந்தோரை வறுமை பற்றியிருந்தாலும் அவர்கள்

அவ்வறுமையை அனுபவித்துக் கொண்டே தம்மிடம் எஞ்சியிருக்கும் சிறிது பொருளைக் கொண்டாவது பிறர்க்கு உபகாரஞ் செய்துகொண்டிருப்பார்கள் என்பது இதன் கருத்து. இங்ஙனங் கூறியது- உவமையணி. இச்செய்யுட் கருத்து 141-ஆம் செய்யுட் கருத்தோடொப்புமையுடையது.

இராகுவென்னும் கரும்பாம்பும், கேதுவென்னும் செம்பாம்பும் சந்திர சூரியர்களிடத்தில் தமக்கேற்பட்ட பழம் பகையால் அவர்களைப் பற்றுகின்றன வென்பதும், அவ்வாறு பற்றுங்காலமே கிரகண காலமென்பதும் புராணகதை. அக்கதையைத் தழுவி இங்குச் சந்திரனைப் பாம்பு பற்றுவது கூறப்பட்டது. சில புராண கதைகள் ஜைனர்களுக்கும் உடன்பாடு; அவர்களுக்குடன்பாடில்லை யெனினும், இது எல்லோர்க்குங் கூறிய பொதுநீதியாகலின், பிறர் நூற் கொள்கைகளையுந் தழுவிக் கூறினார் முனிவர் என்க. ஜைனர் கொள்கைக்கு மாறாகவரும் வேறு சில இடங்களிலும் இச்சமாதானமே கூறுதல் பொருத்த முடைத்தாம். கிரகண காலத்தில் பூமியின் சாயையே சந்திர சூரியர்களை மறைக்கின்றதென்பது ஒரு சாரார் கொள்கை. மனிதர்க்கு வறுமை வந்த காலத்தில் அவர்களுடைய எண்ணம் நிறைவேறாது, சொல் எவ்விடத்தும் செல்லாது, காரியமொன்றும் நடைபெறாது; ஆகலின், 'செல்லாமை' என்பது இவை நடைபெறாத் தன்மையைப் பொதுவில் உணர்த்தி வறுமையைக் குறித்தது. விளங்குறூஉம்- என்பதில், உறு- துணைவினை. அளபெடை- இன்னிசை நிறைக்க வந்தது. செவ்வன்- பண்புப் பெயர். நேர்- 'நேர்ந்து' என்னும் வினையெச்ச விகாரம்; 'வரிப்புனை பந்து' என்பதில், 'வரிந்து' என்பது, 'வரி' என வந்ததுபோல வந்தது. ஒப்புரவு- உலகத்திற்குப் பொருந்தும் விவேகச் செயல்; விவேகச் செயலாவது அறிவோடுகூடிச் செய்யும் நற்செயல்; நற்செயல்கள் பல விருப்பினும், அவற்றுள் உபகாரச் செயலே முதன்மை பெற்றதாகலின், அத்தலைமைபற்றி இங்கு நற்செய

லென்பது உபகாரத்தை யுணர்த்திற்று; ஒப்பு- ஒப்புகின்ற, உரவு- அறிவு; இங்கு அறிவு அதனாலாம் செய்கையை உணர்த்திநின்றது. ஒல்குதல்- சுருங்குதல்; ஒல்கு- பகுதி. இங்குக் கூறியபடி பாம்பு பற்றிய காலத்தும் சந்திரன் ஒளி பரப்பு மென்பதை,

''அணங்குவாள் விடவரா வினுக்கு மெல்லையும்
குணங்கெடா தொளிவிரி குளிர்வெண் டிங்கள் போல்
பிணங்குவான் பேரிடர் பிணிக்க நண்ணவும்
உணங்குவா யல்லைநீ யுறங்கு வாயென்றாள்''

என்னும் (இராமாயணம்- அயோத்தியாகாண்டம், மந்தரை சூழ்ச்சிப் படலம்- 45-ஆம்) செய்யுளும் விளக்கும். உயர்குடியிற் பிறந்தார் வறுமையுற்ற காலத்தும் பிறர்க்குபகராஞ் செய்வதில் குறையார் என்பதை,

''இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்''

என்னும் (திருக்குறள்-218-ஆம்) செய்யுளும் உணர்த்தும். *(அ)*

149. *செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன*
செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர்- புல்வாய்
பருமம் பொறுப்பினும் பாய்பரி மாபோற்
பொருமுர ணாற்றுத லின்று.

(இ-ள்) புல்வாய்- (மானினங்களுள் ஒன்றாகிய) புல்வாயென்னும் மானானது, பருமம் பொறுப்பினும்- பருத்திருத்தலைத் தாங்கி யிருந்தாலும், (அதாவது பருத் திருந்தாலும்), (மெலிந்த விடத்தும்), பாய்பரிமோபோல்-

பாய்ந்தோடுகின்ற குதிரையைப்போல, (அதாவது குதிரை செய்வதுபோல), பொருமுரண்- எதிர்க்கின்ற போரை, ஆற்றுதல் இன்று- செய்தல் இல்லை, (இதைப்போலவே), செல்லா இடத்தும் - (பொருள் விருத்தி) நடைபெறாத போதும், (அதாவது வறுமையுற்ற காலத்திலும்), குடிப் பிறந்தார் - உயர்குடியிற் பிறந்தவர்கள், செய்வன- செய்யும் நற்காரியங்களை, சிறியவர்- தாழ்ந்தகுடியிற் பிறந்தவர்கள், செல் இடத்தும் - (பொருள் வளர்ச்சி) நடைபெறும் போதும், (அதாவது செல்வம் மிகுந்த காலத்திலும்), செய்யார்- செய்ய மாட்டார்கள்; எ-று.

புல்வாய் பருத்திருந்தாலும், மெலிந்திருக்குங் காலத்திலும் குதிரை செய்யும் போர்த்தொழிலைச் செய்யமாட்டாது; அதைப் போல உயர்குடியிற் பிறந்தார் வறுமையுற்ற காலத்திலும் செய்யக் கூடிய நற்காரியங்களை, கீழ்மக்கள் செல்வம் பெற்றிருக்கும்போதும் செய்யமாட்டார்கள் என்பது இதன் கருத்து. இதனால் உயர்குடியிற் பிறந்தார் எந்நிலையிலும் நற்காரியங்களையே செய்வர் என்று அவர்களின் உயர்வை விளங்கினார் முனிவர்.

இச்செய்யுளில் உயர்குடியிற் பிறந்தார் செய்கைக்கும், கீழ்மக்கள் செய்கைக்கும், குதிரையின் செயலும், புல்வாயின் செயலும் திருஷ்டாந்தங்களாக எடுத்துக்கூறியது திருஷ்டாந்தாலங்காரம். குடிப்பிறந்தார்க்குச், 'செல்லா விடத்தும்' என்று சொன்னதற்கேற்ப, 'பாய்பரிமா' என்பதற்கு முன், 'மெலிந்த விடத்தும்' என்பது இசை யெச்ச மாகக் கூட்டப்பட்டது. 'பருமம்' என்பதற்கு, 'குதிரை மேற்ற விசு' எனப் பொருள் கொண்டு, 'பருமம் பொறுப்பினும்' என்பதற்கு, 'சேணத்தை மேற்கொண்டிருந்தாலும்' எனப் பொருள் கோடலுமொன்று; இங்ஙனம் பொருள் கொள்ளின், இதற்கேற்ப, 'பாய்மரிமா போல்' என்பதற்கு, '(சேணமில்லாத போதும்) போர்த் தொழில் செய்யும் குதிரைபோல்' என்று பொருள் விரித்தல்

வேண்டும்; சேணமில்லாது குதிரை போர்த்தொழில் செய்தல் இல்லையாதலின், இவ்வுரை அத்துணைச்சிறப்புடைய தன்று. புல்வாய் - மானினங்களுள் ஒருவகை; இது பருத்த தேக முடையதாயிருக்கும்; இது, மானினங்களுள் தனிப் பட்ட ஓரினமென்பது, சூடாமணி நிகண்டு- மூன்றாவது விலங்கின் பெயர்த்தொகுதி 22-ஆம் செய்யுளில், ''இரலை புல்வாய்க்கும் பேராமென்றனர் குன்றா நூலோர்'' என்பது கொண்டு துணியப்படும்; இனி, புல்வாய்- என்பது கலை மானுக்கும் பெயராதலால், அதனைக் கலைமானெனக் கொள்ளலுமாம். புல்வாய் - இரண்டாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப் பெயர்; புல்லைத்தின்னும் வாயை யுடையது என விரியும். செய்வன- வினையாலணையும் பெயர்; செய்- பகுதி, அ- விகுதி, வ்- இடைநிலை, அன்- சாரியை; இடைநிலை காலங் காட்டாது தன்மையைக் காட்டி நின்றது. பொருமுரண்- வினைத்தொகை. 'பெருமுரண்' எனவும் பாடபேதமுண்டு. இச்செய்யுளும் இந்நூலின் *184, 358*-ஆம் செய்யுட்களும் ஒப்புமையுடையன. *(௯)*

150. *எற்றொன்று மில்லா விடத்துங் குடிப்பிறந்தார்*
அற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத் தூற்றாவர்
அற்றக் கடைத்து மகல்யா றகழ்ந்தக்காற்
றெற்றெனத் தெண்ணீர் படும்.

(இ-ள்) அகல்யாறு - விசாலமான நதியானது, அற்றக் கடைத்தும் - நீர் வறண்டபோதும், அகழ்ந்தக்கால்- (தன்னைத்) தோண்டினால், தெற்றென- விரைவாக, தெள்நீர் படும்- தெளிந்த நீர் உண்டாகப்பெறும்; (அதுபோல), குடிப்பிறந்தார்- உயர்குடியிற் பிறந்தவர்கள், எற்று ஒன்றும்- யாதொரு பொருளும், இல்லா இடத்தும்- (தம்மிடம்) இல்லாத காலத்திலும், அற்று- வேறு ஆதரவில்லாமல், தன் சேர்ந்தார்க்கு- தம்மை அடைந்தவர்க்கு, அசைவு இடத்து-

தளர்ச்சி நேர்ந்த போது, ஊற்று ஆவர்- ஊன்றுகோலா யிருப்பர், (ஊன்றுகோலைப் போல உதவி செய்வர்), எ-று.

ஆறானது வெள்ளம் பெருகியோடுங் காலத்தில், நீரின் பொருட்டுப் பிறர் தன்னைத் தோண்டுதல் வேண்டா மலே, பல விடங்கட்குஞ் சென்று பலர்க்கும் தண்ணீரை உதவும்; நீர் வறண்டு போன காலத்தில் மனிதர் நீர் வேண்டித் தன்னிடத்தே வந்து தன்னைத் தோன்டினால் தெளிந்த நீரைச் சுரப்பித்து அவர்க்குதவும்; அதைப்போல உயர்குடியிற் பிறந் த்வர்கள், தம்மிடம் பொருளிருக்கின்ற காலத்தில் எவரும் தம்மிடம் வந்து யாசிக்காம லிருக்கும்போதே எங்கும் சென்று பிறர்க்குதவுவர்; பொருளற்றிருக்கும்போது தம்மிடம் வந்து யாசிப்பவர்க்குத் தம்மாலியன்றவளவு உள்ள பொருளைக் கொடுத்து உதவி செய்வர். இதனால், உயர்குடியிற் பிறந்தார் செல்வமற்றிருக்குங் காலத்திலும் தம்மை யடுத்தவர்க்குத் தம்மிடம் உள்ள பொருளை விரைந்து கொடுப்பரென்பது விளக்கப்பட்டது; இங்ஙனங் கூறியது கொண்டு அவர்க்கு இக்குணம் இன்றியமையாத தென்பது துணியப்படும். இச் செய்யுட் கருத்தை இந்நூலின் 185-ஆம் செய்யுளும் விளக் கும்; இன்னும்,

''ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டும்- ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து''

என்னும் (நல்வழி-9-ஆம்) செய்யுளானும் இஃதுணரப்படும். இச்செய்யுளும் திருஷ்டாந்தாலங்காரம் அமையப்பெற்றது. எற்று - வினாவடியாகப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு வினை யாலணையும் பெயர்; என்- பகுதி, று- விகுதி, னகரம் றகர மானது வலித்தல் விகாரம். தற்சேர்ந்தார்- ஒருமைப் பன்மை மயக்கம்; பால் வழுவமைதி; 'தஞ்சேர்ந்தார்- என வருதல் வழாநிலை. 'ஊன்று' என்னும் முதனிலைத் தொழிற்பெயர்,

இடைநின்ற னகரம் றகரமாக வலித்தல் பெற்று, 'ஊற்று' என நின்றது; இது தொழிலாகுபெயராய் ஊன்று கோலை யுணர்த்தி நின்றது. தெற்றென- விரைவுக் குறிப்பு. 'தண்ணீர் படும்' என்றும் பாடபேதமுண்டு; இப்பாடங் கொள்ளு மிடத்து, 'தெற்றென' என்பதற்கு, 'தெளிவாக' என்று பொருள் விரித்தல் வேண்டும். 'யாறுநீர்படும்' என்றது, இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின் மேலேற்றிக் கூறப்பட்ட உபசார வழக்கு. (கo)

அதிகாரம் 16

மேன்மக்கள்

இவ்வதிகாரம் பெரியார்களது தன்மையைப்பற்றிக் கூறுவதாகலின் இப்பெயர் பெற்றது. பெரியராவார்- நற்காரியங்களைச் செய்வோர். உயர்குடிப் பிறப்புடையாரே மேன்மக்களாதற் குரியாராகலின், இஃதக் குடிப்பிறப்பென்னும் அதிகாரத்தின்பின் வைக்கப்பட்டது.

151. *அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்*
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற் - றிங்கண்
மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்.

(இ-ள்) அம்- அழகிய, கண்- இடத்தையுடைய, விசும்பின் - ஆகாயத்திலே, (தங்கி), அகல்- பரந்த, நிலா- பிரகாசத்தை, பாரிக்கும்- பரப்புகின்ற, திங்களும்- சந்திரனும், சான்றோரும்- (உலகத்திலே எங்கும் அறிவென்னும் பிரகாசத்தைப் பரப்புகின்ற) பெரியார்களும், மன்- பெரும்பாலும், ஒப்பர்- (பிரகாசித்தலினாலும் தண்ணிய தன்மையாலும் பெரும்பாலும் தம்மில்) ஒத்திருப்பர்; (எனினும் சான்றோர் சந்திரனைக்காட்டிலுஞ் சிறந்தவராவர்; எங்ஙனமெனில்), திங்கள்- சந்திரன், மறுஆற்றும்- களங்கத்தைப்

பெற்றும் அதனைத் தாங்கிக்கொண்டிருக்கும், சான்றோர் - பெரியார்களோ, அஃது ஆற்றார்- அந்தக் களங்கத்தைப் பொறுக்கமாட்டார்கள்; ஒருமாசு உறின் - (தம்மிடத்தே) சிறிதுகளங்க முண்டானாலும், தெருமந்து- (அதனால்) வருந்தி, தேய்வர்- அழிந்து போவர்; எ-று.

பிரகாசத்தாலும், குளிர்ந்த தன்மையாலும் சந்திரனும் பெரியாரும் பெரும்பாலும் ஒத்தேயிருப்பர்; எனினும், சந்திரன் களங்கத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும்; பெரியார் அதனைத் தாங்கமாட்டார்; சிறிது குற்றம் தம்மைச் சார்ந்தாலும் வருந்தி அழிவர்; ஆதலின், இதனை நோக்குமிடத்துப் பெரியார் சந்திரனினும் சிறந்தவராவர் என்பது இதன் கருத்து.

சந்திரன், உலகத்தில் தோன்றும் புறவிருள் நீங்கப் பிரகாசத்தைப் பரப்பி, எங்கும், எவர்க்கும், குளிர்ச்சியைத் தரும்; பெரியார், மனிதரின் மனத்திலுள்ள அஞ்ஞானமாகிய அகவிருள் நீங்க அறிவென்னும் பிரகாசத்தைப் பரப்பி உயிர்களிடத்தில் அருளாகிய குளிர்ச்சியைச் செலுத்துவர்; இப்பொதுத் தன்மையால் திங்களுக்குஞ் சான்றோர்க்கும் ஒப்புமை கூறப்பட்டது. ''திங்கள் மறுவாற்றுஞ் சான்றோர் அஃதாற்றார், தெருமந்து தேய்வர் ஒருமாசு உறின்'' என்று கூறிய குறிப்பால், திங்களுஞ் சான்றோரும் பொதுத் தன்மையால் ஒப்பர் எனினும், திங்களைப் போல் சான்றோர் மறுவாற்றாமையால் திங்களினுஞ் சிறந்தவர் என்பது பெறப்பட்டது; இது, குறிப்பால் வந்த வேற்றுமை யலங்காரம்; வேற்றுமை யலங்காரமாவது - உபமான உபமேயங்களுள் ஏதேனுமொன்றை வெளிப்படையாகவேனும், குறிப்பாகவேனும் விசேடமுடையதாகக் கூறுவது; இதில், உபமானமாகிய சந்திரனைக் காட்டினும் உபமேயமாகிய சான்றோர்க்கு, அவர் சிறிதுமாசையும் தாங்காமையாகிய விசேடம் கூறப்பட்டது காண்க; இது வடமொழியில் வ்யதிரேகாலங்காரம் என்று கூறப்படும். 'மறு' என்பது செம்மொழிச்

சிலேடையாக நின்று சந்திரனுக்குக் கூட்டும்போது, 'கறை' என்ற பொருளையும், சான்றோர்க்குக் கூட்டும்போது, குற்றம் என்ற பொருளையும், தரும்; இங்ஙனம் பொருள் தருமிது சிலேடையணி; இது, முன் கூறப்பட்ட வேற்றுமை யலங் காரத்துக்கு அங்கமாக நின்றது. சந்திரனுக்கு, 'அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்கும்' என்ற அடைகொடுத்ததற் கேற்ப, சான்றோர்க்கு, 'உலகத்திலே எங்கும் அறிவென்னும் பிரகாசத்தைப் பரப்புகின்ற' என்ற அடைமொழிகள் கூட்டி யுரைக்கப்பட்டன. உபமானப் பொருளாகிய திங்களுக்கு, 'அங்கண் விசும்பின்' என்று உயர்ந்த இடங்கூறியதனால், உபமேயமாகிய மேன்மக்கள், உயர்ந்த குடியிற் பிறந்தவ ரென்பது பெறப்படும். எக்காலத்தும் தமது ஒழுக்கத்தினின் றும் தவறாமையும், தாழ்வு நேர்ந்தவிடத்து உயிர் வாழாமையு மாகிய உயர் குடிப்பிறந்தாரின் இயற்கைகள் இதிற் கூறப் ப ட்

இச்செய்யுளுரையில், பொருண்முடிபுக் கேற்பச் சில சொற்றொடர்கள் வருவித்துரைக்கப்பட்டிருக்கின்றன. அங் கண் - பண்புத்தொகை. அகல் நிலா- வினைத்தொகை. மன்- மிகுதிப்பொருளைக் காட்டும் இடைச்சொல்.

''மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கங்
கழிவு மிகுதி நிலைபே றாகும்''

என்னும் (நன்-இடை-13-ஆம்) சூத்திரம் பார்க்க. 'திங்களும் சான்றோருமொப்பர்' என்பதில், 'திங்கள்' என்னும் அஃறிணையும், 'சான்றோர்' என்னும் உயர்திணையும் கலந்து சிறப்பினால், 'ஒப்பர்' என்னும் உயர்திணை முடிபை பெற்றன; திங்களைப்போல சான்றோர் மறுவைத்தாங்க இயலாதவராயிருப்பதே அவர்க்குச் சிறப்பாம்; இன்னும் சான்றோர் உயர்திணையா யிருத்தலையே சிறப்பாகக் கொள்ளலாம்; இங்ஙனம் வந்தது- திணைவழுவமைதி;

''பார்ப்பா ரறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டு''

என்னும் (சிலப்பதிகாரம்- வஞ்சினமாலை) அடிகளிலும்,

''பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்
மூத்தா ரிளையார் பசுப்பெண்டி ரென்றிவர்கட்
காற்ற வழிவிலங்கி னாரே பிறப்பிடைப்
போற்றி யெனப்படு வார்''

என்னும் (ஆசாரக்கோவை- 64-ம்) செய்யுளிலும் இத்திணைவழுவமைதி அமைந்திருத்தல் காண்க.

''திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்
மிகவினு மிழிபினு மொருமுடி பினவே''

என்னும் (நன்-பொது-27-ஆம்) சூத்திரவிதிபடி அமைந்தது இத் திணைவழுவமைதி.

''பலவயி னானு மெண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே''

என்னும் (தொல்-சொல்-கிளவியாக்கம்-51ஆம்) சூத்திரவுரையும் இங்கு ஆராயத்தக்கது. திங்கள்- என்பது பொருளால் இருதிணைப் பொதுவெனினும் சொல்லால் அஃறிணையாம். 'தேவர்களை உயர்திணையாகவும் அஃறிணையாகவும் கொள்ளலாம்' என்னும் விதிபற்றித் திங்களை உயர்திணையாகக் கொள்ளின், இம்முடிபு வழாநிலையாம்.

இது, தனிச்சொற்பெற்றுப் பல விகற்பத்தின் வந்த இன்னிசை வெண்பா; யாப்பருங்கலவிருத்தி 8-ஆம் செய்யுளும், யாப்பருங்கலக்காரிகை 5-ம் செய்யுளும் பாாக்க. 'சான்றோ ரஃதாற்றார்' என்பதில், ஆய்தத்தை மெய்போ

லொலித்ததாகக் கொண்டு, 'சான்றோரஃ+ தாற்றார்' என்று சீர்கள் பிரித்துத் தேமாங்காய் முன்நேர் வந்ததாகக் கொண்டு வெண்டளை யமைத்துக் கொள்ளல் வேண்டும். ஆய்தத்தை உயிர்போலொலித்ததாகக் கொண்டு, 'சான்றோ+ ரஃதாற்றார்' எனச் சீர்கள் பிரித்தால், 'அஃதாற்றார்' என்பது புளிமாங்காய்ச் சீராகும்; அங்ஙனமாயின், அதன் பின், 'தெரு' என்னும் நிரைவருதலால் வெண்பாத்தளைக்கு வழுவாம். (க)

152. *இசையு மெனினு மிசையா தெனினும்*
வசைதீர வெண்ணுவர் சான்றோர்- விசையின்
நரிமா வுளங்கிழித்த வம்பினிற் றீதோ
வரிமாப் பிழைப் பெய்த கோல்.

(இ-ள்.) அரிமா - சிங்கமானது, பிழைப்ப- (குறிப் பிட்ட இலக்குத் தவறிப்) பிழைக்கும்படி, எய்தகோல்- (அதன்மேல் ஒருவர் தவறுதலாகச்) செலுத்திய அம்பானது, விசையின்- (எய்த) வேகத்தினால், (விரைந்துசென்று), நரிமா- நரியின், உளம் கிழித்த- மார்பைப் பிறந்த, அம்பினில்- அம்பைக்காட்டினும், தீதோ- தீமையுடைய தாமோ?, (அன்று; சிறப்புடையதே), (இதேபோல, பெருங் காரியத்தை முடிக்கச் செய்த முயற்சியானது, அக்காரியம் முடிவுபெறாமற் போயினும், சிறிய காரியத்தை விரைந்து செய்து முடிந்த முயற்சியைக் காட்டினும் சிறந்ததேயாகும்; ஆதலின்), சான்றோர்- பெரியோர்கள், இசையும் எனினும்- (காரியசித்தி தமக்குக்) கைகூடினாலும், இசையாதெனினும்- கைகூடாவிட்டாலும், வசைதீர- பழிப்பு நேராதபடி, (பெருங் காரியங்களையே செய்ய), எண்ணுவர்- நினைப்பர்; எ-று.

சிங்கத்தின்மீது செலுத்திய அம்பானது அதனைக் கொல்லாது தவறிவிடுமாயினும் அதற்குப் பெருமையுண்டு; நரியின்மேற் செலுத்திய அம்பானது அதன் மார்பைப் பிளந்து அதனைக் கொன்றாலும் அதற்குப் பெருமையில்லை; இதைப்போல பெரியகாரியத்தை முடிக்க எடுத்துக் கொண்ட

முயற்சியால் அக்காரியம் முடிவு பெறாவிடினும் அதற்குச் சிறப்புண்டு; சிறு காரியத்தை முடிக்கச் செய்த முயற்சியால் அது விரைவில் முடிவுபெற்றாலும் அம்முயற்சிக்குச் சிறப்பில்லை. ஆதலின், பெரியார் தம்முடைய முயற்சி பலித்தாலும் பலிக்காவிட்டாலும், தமக்குப் பழிப்புண்டாகாதபடி பெருங்காரியத்தைச் செய்ய எண்ணுவர் என்பது இதன் கருத்து.

இதனால் மேன்மக்கள், எப்பொழுதும் செயற்கரிய காரியங்களையே செய்யத் துணிவரென்பது கூறப்பட்டது.

தாழ்ந்த மிருகத்தைக் கொல்லும் ஆயுதத்தைக் காட்டினும், உயர்ந்த மிருகத்தின்மேற் செலுத்தும் ஆயுதம் அதனைக் கொல்லாவிடினும் சிறந்ததாகு மென்பதையும், பெரியார் காரியசித்தி கை கூடினும் கூடாவிடினும் செயற்கரிய பெருங் காரியத்தையே செய்ய நாடுவ ரென்பதையும்,

''கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது''

என்னும் (திருக்குறள் 722-ஆம்) செய்யுளும், பெருமையுடையவராற்றுவாற்றின் - அருமையுடைய செயல் என்றும், (திருக்குறள்-975-ஆம்) செய்யுளும் விளக்குவன்வாம். இச்செய்யுளுரையில் பொருண்முடிபுக்குத்தகச் சிலசொற்களும், சொற்றொடர்களும் இசையெச்சங்களாகக் கூட்டி யுரைக்கப்பட்டிருக்கின்றன. இச்செய்யுளின் பின்னிரண்டடிகளும், 'பெரிய காரியத்தை முடிக்கச்செய்த முயற்சியால் அக்காரியம் முடிவு பெறாவிடினும் அது, சிறிய காரியத்தைச்செய்து முடித்த முயற்சியினும் சிறந்ததாகும், என்னும் வேறு பொருளைக் குறிப்பால் உணர்த்தின; இங்ஙனம் விளக்கியது பிறிது மொழிதலணி. இச்செய்யுளில் பின்னிரண்டடிகளிற் கூறிய கருத்து, முன்னிரண்டடிகளிற் கூறப்படும் பொருளுக்

குக் காரணமாம்; இவ்வாறு ஒன்றைக் காரணங் காட்டி மற்றொரு பொருளை உறுதிப்படுத்தல் ஏது வலங்காரமாம்.

விசையின்- ஏதுபொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமை விரி; உடனிகழ்ச்சிப் பொருளில் வந்த மூன்றாம் வேற்றுமைத் தொகை யெனினுமாம்; இவ்வாறு பொருள் கொள்ளு மிடத்து, இன் - சாரியை. நரிமா, அரிமா என்பன இரு பெய ரொட்டுப் பண்புத்தொகைகள்; நரியாகியமா, அரியாகியமா என விரியும்; மா- மிருகம். உளம்- மனம்; அது, தானியாகு பெயராய்த் தான் உள்ள இடமாகிய மார்பையுணர்த்தி நின்றது. அம்பினில்- ஐந்தாம் வேற்றுமைவிரி; இதிலுள்ள இல்லுருபு- உறழ்பொருவுப் பொருளது; இஃதெல்லைப் பொருளில் அடங்கும். 'பிழைப்ப' என்னும் செயவெனெச் சத்தின் ஈற்றகரந் தொக்கது. 'தீதோ' என்பதிலுள்ள ஓ- எதிர் மறைப் பொருளது; இசையுமெனினும்' என்பதிலுள்ள உம்மை - உயர்வு சிறப்புப் பொருளது. 'இசையாதெனினும்' என்பதிலுள்ள உம்மை- இழிவு சிறப்புப்பொருளது. இச் செய்யுளின் முதலடி தொடைமுரண் அமைந்தது. (உ)

153. *நரம்பெழுந்து நல்கூர்ந்தா ராயினுஞ் சான்றோர்*
குரம்பெழுந்து குற்றங்கொண் டேறார்- உரங்கவறா
உள்ளமெனு நாரினாற் கட்டி யுளவரையாற்
செய்வர் செயற்பா லவை.

(இ-ள்.) சான்றோர்- பெரியோர், நரம்பு எழுந்து- ((உணவின்மையால் உடல்மெலிந்து அதனாலே) நரம்புகள் மேலே வெளிப்படையாகக் காணப்பெற்று, நல்கூர்ந்தார் ஆயினும்- வறுமையுற்றார்களானாலும், குரம்பு எழுந்து - (தம்முடைய நல்லொழுக்கமாகிய) வரம்பினின்றும் கடந்து, குற்றம்கொண்டு - தவறான செய்கையை மேற்கொண்டு, ஏறார்- (அச்செய்கையில்) மிகுந்து செல்லாராய், உரம்- (தமது) அறிவையே, கவறுஆ- (ஒருபொருளை அசையாமல்

இரண்டு பக்கங்களிலும் பற்றிக்கொள்ளும்) இருபிளவாகிய பனை மட்டையாகச் சேர்த்துவைத்து, உள்ளம் என்னும் நாரினால் - முயற்சி யென்கின்ற கயிற்றினாலே, கட்டி- (மனத்தை அசையாமல்) பிணித்து, உளவரையால் - (பொரு ளானது தமக்கு) இருக்கின்ற அளவினாலே, (அதாவது தம்மிடமிருக்கும் பொருளளவிற்குத் தக்கபடி), செயற் பாலவை- செய்யத்தக்க நற்காரியங்களை, செய்வர்- செய்வார்கள்; எ-று.

மேன்மக்கள், உணவின்மையால் உடல்மெலிந்து நரம்புகள் வெளியே தோன்ற வறுமையடைந்தாலும் தமது நல்லொழுக்கத்தினின்று நீங்கிக் குற்றமான செய்கையை மேற்கொண்டு செய்யமாட்டார்கள்; கெட்ட வழியிற் செல் லும் மனத்தைத் தம் அறிவினாலும் முயற்சியினாலும் அடக்கிச் செய்யத்தக்க நற்காரியங்களையே செய்வர் என்பது இதன் கருத்து.

இதில், மேன்மக்கள் எந்நிலையிலும் ஒழுக்க மென்னும் வேலியைக் கடவாரென்பதும், நற்காரியங் களையே செய்வார்களென்பதும் விளக்கப்பட்டன.

கவறு- பிளப்புள்ள பனைமட்டை; மனிதரின் கை கால் முதலிய அங்கங்களில் ஏதேனுமொன்று ஒடிந்தோ, நொருங்கியோ நிலை பிசகியோ கோணிக்கொண்டபோது அதை நேருடையதாக அமைப்பதற்கு, அம்மட்டையை, பின்னப்பட்ட அவ்வங்கத்தில் வைத்து நாரிட்டுக் கட்டுவது நம் நாட்டு இரணவைத்தியர்களின் வழக்கம்; இவ்வாறு மட்டைவைத்துக் கட்டுவதால் பின்னப்பட்ட அங்கம் நேராகிவிடும்; பிறவியில் அமைந்த அங்கக் கோணல்மட்டும் இதனால் தீர்வதில்லை; இது குறித்தே, ''பிறவிக் குணத்திற்கு மட்டை வைத்துக் கட்டினால் தீருமோ?'' என்னும் பழ மொழியும் வழங்குகின்றது. இங்ஙனம் பனைமட்டையும்

கயிறும் கோணலான அங்கத்தை நேராக்குதல் போல அறிவும், முயற்சியும் கெட்ட வழியிற் செல்லும் மனத்தை அடக்கி ஒழுங்கான மார்க்கத்தில் செலுத்தக்கூடியனவா யிருத்தலினாலே அறிவு பனைமட்டையாகவும், முயற்சி கயிறாகவும் உருவகப்படுத்திக் கூறப்பட்டன; இங்ஙனங் கூறியது உருவகவணி.

'நரம் பெழுந்து' என்பதில், 'எழ' என்னும் செய வெனெச்சம், 'எழுந்து' எனச் செய்தனெச்சமாகத் திரிந்து வந்தது; இதனைச் செய்தெனெச்சமாகவே கொண்டு பொருள் விரித்து, இச்சினைவினை, 'நல்கூர்ந்தார்' என்னும் முதலொடு முடிந்தது எனக் கோடலுமாம். குரம்பு -வரம்பு; மேன் மக்களுக்கு வரம்பு நல்லொழுக்கமே யாதலின் அக்குறிப்பு நோக்கி, அதற்குமுன், 'நல்லொழுக்கமாகிய' என்பது வரு வித்துரைக்கப்பட்டது. ஏறார்- அதிகப்படார். உரம்- வலிமை; இஃதெல்லாவற்றிற்கும் பொதுவெனினும் அறிவின் பலமே நல்லொழுக்கத்திற்குக் காரணமாதலின் இங்கு அறிவின் வன்மையை உணர்த்தி நின்றது; ஆகலின், 'உரம்' என்பதற்கு அறிவெனப் பொருள் கூறப்பட்டது. உள்ளம்- முயற்சி. செயற்பாலவை- செய்தற்குரிய பான்மையை யுடையவை. இங்கே அறிவாலும்; முயற்சி யாலும் கட்டுதற்குரியதாம் நின்றது மனமேயாகலின், 'கட்டி' என்பதற்கு முன், 'மனம்' இசை யெச்சமாக் வருவித்துரைக் கப்பட்டது. குரம் பொழுந்து - நீக்கப்பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமைத் தொகை. மேன்மக்கள் வறுமையுற்ற காலத்தும் செய்யத் தகாதன செய்யாரென்பதையும், உயர்ந்த காரியங்களையே செய்வாரென்பதையும்,

''சலம்பற்றிச் சார்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார்''

என்னும் (திருக்குறள் -956-ஆம்) செய்யுளும்,

''நல்லா றொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார்- பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னாவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ்''

என்னும் (நீதிநெறி விளக்கம்- 61--ஆம்) செய்யுளும் விளக்கு வனவாம். (ரு)

154. *செல்வுழிக் கண்ணொருநாட் காணினுஞ் சான்றவர்*
தொல்வழிக் கேண்மையிற் றோன்றப் புரிந்தியாப்பர்
நல்வரை நாட சிலநா ளடிப்படிற்
கல்வரையு முண்டா நெறி.

(இ-ள்) நல்வரை- நல்ல மலைகளையுடைய, நாட- பாண்டி நாட்டரசனே!, சிலநாள்- சில தினங்கள், அடிபடின் -மனிதர் பாதம் பட்டுவருமாயின், கல்வரையும்- கல்மலை யிலும், நெறி உண்டு ஆம்- வழியுண்டாகும், (இதைப்போல நேசப்பான்மையில்லாத வன்னெஞ்சர்களிடத்திலும் அடுத் தடுத்து வலிந்து பழகினால் சிநேகமுண்டாகிவிடும்; அத் தகைய நண்பு சிறப்புடையதன்று; ஒருவர், உத்தமரைக் கண்டபோதே சிநேகங்கொண்டு அதனை எப்பொழுதும் உறுதியாகப் பற்றி விருத்தி செய்தலே சிறந்ததாம்; ஆதலின், இதற்கிசைய) சான்றவர்- மேன்மக்கள், செல்வுழிக்கண்- போகுமிடத்திலே, (சிநேகஞ் செய்யத்தக்க உத்தமரை), ஒரு நாள்- ஒரே தினத்தில் மாத்திரம், காணினும்- பார்த்துப் பழகி யிருந்தாலும், (அவர்களுடைய நண்பானது), தொல் வழி கேண்மையின் - பழய உறவு மார்க்கத்தால் வந்த சிநேகத் தைப்போல, தோன்ற- விளங்க, புரிந்து- விரும்பி, யாப்பர்- (அவரை நண்பராகப்) பிணித்துக் கொள்வார்கள், (அவர் களுடைய உறவைப் பற்றிக்கொள்வார்கள்); எ-று.

கல்மலையிலும் மனிதர், தங்கள் பாதம்படப் பல தினங்கள் சென்று கொண்டிருப்பார்களேயானால் வழியுண்

டாகி விடும்; அதே போல் நட்பின் தன்மையுணராத வன் னெஞ்சரிடத்திலும் மனிதர் அடுத்தடுத்துப் பழகினால் சிநேக முண்டாகும்; ஆனால் அத்தகைய சிநேகம் சிறப்புடைய தன்று; மனிதர் ஒருவரோடொருவர் ஒருநாட் பழகிய பழக் கத்தாலும் அவரிடத்தே மெய்யன்புண்டாய் அதன் மூலம் ஏற்பட்டு நெடுநாட் பழகிய பழக்கத்தா லுதித்தது போன்று எப்பொழுதும் விருத்தியடையும் சிநேகமே சிறந் தது; ஆதலின், மேன்மக்கள் அங்ஙனமே ஒருவரை ஒருநாட் கண்டு அவரோடு பழகியிருந்தாலும், பல தினங்கள் பழகியவர் களைப் போன்று, அவருடைய சிநேகம் பழமையான தென்று தோன்றும்படி விரும்பி அவரிடத்தே நண்பு கொள்வர் என்பது இதன் கருத்து.

''எறும்பூரக் கல்லுந் தேயும்'' என்ற பழமொழிப்படி கல்லினும் பல தினங்கள் மனிதர் அடிபட்டு வந்தால் வழி யுண்டாகி விடுதல் இயற்கை. இதைப்போலவே சிநேகத்தை விரும்பாத வன்னெஞ்சரிடத்திலும் பல தினங்கள் பழகி வந்தால் உறவுண்டாதலும் இயற்கை. எனினும், மனத்தில் அன்பின்றி இவ்வுறவு நீண்ட பழக்கத்தால் மட்டும் ஏற்படு வதால் இதனால் எவ்வகைப் பயனு முண்டாகாது. ''ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை, இருநிலம் பிளக்க வேர்வீழ்க்கும்மே'' என்ற(நறுந்தொகை-30) படிபெரியோர் ஒருவரோடு ஒருநாட்பழகி யிருந்தாலும் அவ்வொருநாட் பழக்கத்தாலேற்பட்ட அவ்வுறவானது, மரம் நிலம்பிளக்க வேரை இறக்கி வன்மை பெறுதல் போல உறுதியுடைய தாகும்; இஃதன்போடு கூடிய நட்பாதலால் இந்நட்பினைப் பெற்றார்க்குப் பெரும்பயனுண்டாம். இத்தகைய பயனுடைய உறவானது மேன்மக்களிடத்திலேயே ஏற்படும்; கீழ்மக்களிடத்தில் உண்டாகமாட்டாது; கல்லின் மேல் மனிதர் பல தினங்கள் நடந்து வழியை உண்டாக்கிக் கொள்ளு தல் போலவே இக் கீழ்மக்களிடத்தில் வலியச்சென்று அடிக் கடி பழகுவதனால் மாத்திரமே சிநேகத்தை உண்டாக்கிக் கொள்ளவேண்டும்; அப்படிச் சிநேகங் கொண்டாலும்

அவ்வறிவிலிகள் அவ்வுறவை விரைந்து கைநழுவ விட்டு விடுவர்; அவ்வுறவினரைக் கண்டபோதும் வார்த்தையாடாது செல்வர்; இவ்வழக்கம் இக்காலத்தில் பலர்பாலுண்டு; அதிலும் தமிழ் விற்பத்தியுடைய சிலரிடத்து மிகுதியாக வுண்டு; இவர்கள் கீழ்மக்களிலும் கீழ்மக்களேயாவர். இருவர் ஒரு தேயத்தாராய்ச் சேர்ந்திருத்தலாலும், அடிக்கடி பழகுவ தாலும் உண்மை நட்புண்டாகா தென்பதையும், அவர்க்கு மனமொத்த அன்பின் உணர்ச்சி ஏற்படுவதாலேயே மெய்ந் நட்புண்டாகு மென்பதையும்,

''புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சி தான்
நட்பாங் கிழமை தரும்''

என்னும் (திருக்குறள்-785-ஆம்) செய்யுளுணர்த்தும். இதனால் மேன்மக்களின் மெய்ந்நட்பின் தன்மையும், கீழ்மக்களின் பொய்யுறவினியற்கையும் கூறப்பட்டன. மலை- ''கறியொடு கோட்ட மிக்க காரகி லொடுதக் கோலம், நறியகுங்குமமைந்ததென்பமலைபடி திரிவியப்பேர்'' என்ற (சூடாமணி நிகண்டு- பன்னிரண்டாவது பல்பெயர்க் கூட்டத் தொருபெயர்த் தொகுதி-48-ஆம்) செய்யுளடிகளிற் கூறுகிற படி மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமப்பூ என்னும் மலைபடு திரவியங்களும், மற்றும் பல வளங்களு முடையதாகலின், 'நல்வரை' என்று கூறப்பட்டது. 'சில நாளடிப்படின் கல்வரையு 'முண்டாநெறி' என்றது, 'நேசப் பான்மையில்லாத வன்னெஞ்சர்களிடத்திலும் அடுத் தடுத்துப் பழகினால் நட்புண்டாகும்' என்பதை விளக்கி நின்றது; இது பிறிது மொழிதலணி, 'வரை' என்பதே மலையை உணர்த்துவதாயிருக்க, 'கல்' என்பது கூறவேண்டு வதில்லை; எனினும், இங்கு மலையின் திண்மையை உணர்த்தற் பொருட்டு அதனையும் சேர்த்து, 'கல்வரை' என்றார் முனிவர். 'செல்வுழிக்கண்' என்பதில் 'உழி, கண்' என்பன ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபுகளெனினும்,

இங்கு உழி- வீடு என்பதுபோல ஓர் இடங்குறித்து நின்றது; கண்- ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபாக வந்தது. புரிந்தி யாப்பர்- குற்றியலிகரம். (ச)

155. *புல்லா வெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி*
கல்லா வொருவ னுரைப்பவுங் கண்ணோடி
நல்லார் வருந்தியுங் கேட்பரே மற்றவன்
பல்லாரு ணாணல் பரிந்து.

(இ-ள்.) பொருள் இல் - அர்த்த ஞானமில்லாத, வறுங் கோட்டி- பயனற்ற மனிதர் கூட்டத்தில், கல்லா ஒருவன்- (நூற்களைக்) கல்லாத ஒருவன், புல்லா எழுத்தின்- (இலக் கணத்தோடு) பொருந்தாத எழுத்துக்களாகிய சொற்களாலே, உரைப்பவும்- சொல்வனவற்றையும், நல்லார்- பெரியோர், (அவை தாங்கள் கேட்கக்கூடாதவை களாயிருப்பினும் அவற்றை வெறுத்தால் பலரும் அவனை இழித்துக் கூறி ஏளனம் செய்வர்; அதனால் அவன் மிகுந்த வெட்கத்தை யடைவான்; அங்ஙனம்), அவன் - அந்தக் கல்வியறிவில்லாத மனிதன், பல்லாருள் - பலர் முன்னிலையில், நாணல் - அவமானமடைவதற்கு, பரிந்து - மனமிரங்கி, கண்ஓடி - (அவனிடத்துப்) பட்சம் வைத்து, வருந்தியும் - வருத்த மடைந்தும், கேட்பர் - (பொறுமையோடிருந்து) கேட்பார் கள்; எ-று.

கல்வியறிவில்லாத ஒருவன், பொருள் ஞானமில்லாத மனிதர் கூட்டத்திற் சேர்ந்து இலக்கணத்தோடு பொருந்தாத சொற்களால் பேசுவன அறிஞர்க்கு அருவருப்பை யுண்டாக் கத்தக்கன வெனினும் அவற்றைக் கேட்டு அறிவுடையார் வெறுத்தால் அவனைப் பலரும் ஏளனம் செய்வர்; அதனால் அவன் மிகவும் வெட்கத்தையடைவான்; ஆதலின், அவன் அவ்வாறு பலரிடத்து நாணித் தலைகுனிந்து வருந்துதற்கு இரங்கி அவன்மீது தாட்சணியமுற்று வருத்தப்பட்டுக் கொண்டாவது அவற்றையுங் கேட்பர் என்பது இதன் கருத்து.

இதனால், மேன்மக்கள், கல்வியறிவில்லாதவர்கள், பொருளுணர்ச்சியற்ற மூடர் கூட்டத்தில், அருவருக்கத்தக்க வழுவுரைகளை வழுத்தினும் அவர்களை இழித்துக் கூறி அவர்களுக்கு அவமதிப்புண்டாகுமாறு செய்யமாட்டார்க ளென்பதும், அவர்கள் தலைகுனியத்தக்க இழிவு அவர்க் குண்டாகா திருக்கும் பொருட்டு, அவ்வழுவுரைகளைக் கேட்கத் தங்களுக்கு விருப்பில்லாவிடினும் வருத்தத்தோடா வது கேட்டுக் கொண்டிருப்பர் என்பதும் விளக்கப்பட்டன. இவற்றால் அவர்களுடைய பெருங்குணம் விளங்கும்.

இச்செய்யுட் கருத்தும், இந்நூலின் 316-ஆம் செய்யுட் கருத்தும் பெரும்பான்மையும் ஒப்புமையுடையன. பொருள் - அதைப்பற்றிய அறிவுக்கு ஆகுபெயர். எழுத்து- ஆகு பெயராய் அதனாலாம் சொல்லை யுணர்த்திநின்றது. எழுத்தின் உரைப்ப - கருவிப்பொருளில் வந்த மூன்றாம் வேற்றுமைத் தொகை; இன்- சாரியை. கோட்டி- கோஷ்டியென்னும் வடமொழித் திரிபு. 'உரைப்பவும், வருந்தியும்' என்பவற்றிலுள்ள உம்மைகள்- இழிவு சிறப்புப் பொருளன. ஏ- அசை; தேற்றப் பொருளில் வந்ததெனினு மாம். மற்று- அசை. நாணல் பரிந்து- பொருட்டுப் பொருளில் வந்த நான்காம் வேற்றுமைத் தொகை. வறுமை- ஒன்று மில்லாத்தன்மை; அஃதிங்கு அர்த்தஞானம் சிறிதுமில்லாத் தன்மையை யுணர்த்திநின்றது. பொருளில்வறுங் கோட்டி யாவது - அர்த்த ஞானமில்லாது பயனற்ற பேச்சுக்களைப் பேசும் மூடர்கூட்டம்; இத்தகைய கோட்டி சிலப்பதிகாரத் தில், 'வெள்ளைக் கோட்டி' என்றும், மணிமேகலையில், 'வம்பக்கோட்டி' என்றும் உரைக்கப்படுதல் காண்க. கல்லா தவர்களின் பேச்சை இத்தகைய மூடக்கூட்டத்தாரே கொண் டாடுவராகலின், அவர்கள் இக்கூட்டத்தாரிடையே தங்கள் இழிந்த பேச்சைப் பேசி மகிழ்வர். கோட்டி- ஆகு பெயராய்க் கூட்டமாகச் சேரும் மனிதரை யுணர்த்திநின்றது; ''அரங் கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய, நூலின்றிக் கோட்டி கொளல்'' என்னும் (திருக்குறள்-401-ஆம்) செய்யுளுரையில்

பரிமேலழகர், 'கோட்டி' என்பதை ஆகுபெயரெனக் கூறி அதற்கு, ''புல்லா வெழுத்திற் பொருளில் வறுங் கோட்டி'' என்னும் இச்செய்யுளடியையே உதாரணங் காட்டியிருத்தல் காண்க. (ரு)

156. *கடித்துக் கரும்பினைக் கண்டகா நூறி*
இடித்துநீர் கொள்ளினு மின்சுவைத்தே யாகும்
வடுப்பட வைதிறந்தக் கண்ணுங் குடிப்பிறந்தார்
கூறார்தம் வாயிற் சிதைந்து.

(இ-ள்.) கரும்பினை - கரும்பை, கடித்து- (பல்லினால்) கடித்தும், கண் தகர- கணுக்கள் நொறுங்கும்படி, நூறி- (ஆலையிற் போட்டுச்) சிதைத்தும், இடித்து- (உலக்கை, கல் முதலியவற்றால்) நசுக்கியும், நீர் கொள்ளினும்- (அதன்) இரசத்தைக் கொண்டாலும், இன்சுவைத்தே ஆகும்-(அது) இனிய உருசியையுடையதே யாகும், (அது போல), வடுபட- குற்றமுண்டாகும்படி, வைது இறந்தக் கண்ணும்- (தம்மைப்பிறர்) திட்டிச்சென்ற விடத்தும், குடி பிறந்தார்- உயர்குடியிலே தோன்றிய மேன்மக்கள், சிதைந்து- (தமது பொறுமைக்குணம்) கெட்டு, தம் வாயின்- தங்கள் வாயினாலே, கூறார்- (அவர்களைத் திட்டிக் கெட்ட வார்த்தைகள்) கூறமாட்டார்கள்; எ-று.

கரும்பை வாயினாற் கடித்தும், கணுக்கள் சிதறும்படி ஆலையிலிட்டு ஆட்டியும், உரலிற்போட்டு உலக்கை கல் முதலியவற்றால் சிதைத்தும் அதன் சாற்றைக் கொண்டாலும், அது மதுரச்சுவை பொருந்தியதாகவே யிருக்கும்; அதைப் போல உயர்குடியிற் பிறந்தவர்கள், தங்களைப் பிறர் குற்றமுண்டாகும்படி திட்டிச் சென்றாலும் தங்களுக்குள்ள இயற்கையாகிய பொறுமைக் குணம் மாறிப் பதிலுக்கு அவரைத் திட்டத் தொடங்கிக் கெட்ட சொற்களைத் தங்கள் வாயினாற் கூறமாட்டார்கள் என்பது இதன் கருத்து.

இங்ஙனங் கூறியது எடுத்துக்காட் டுவமை யணி. இதனால் மேன்மக்கள், எந்நிலையிலும் தங்களுடைய இயற்கைக் குணமாகிய பொறுமையி னின்றும் நீங்கமாட் டார் என்பது கூறப்பட்டது.

பெரியோர்களின் வாய் நல்ல வார்த்தைகளையே பேசக்கூடிய தென்பதைக் குறிப்பிடுதற்கே, ''வாயிற் கூறார்'' என்றார் முனிவர். அடுத்தசெய்யுளிலும் 172-ஆம் செய் யுளிலும், 'வாய்' என வருமிடங்களிலும் இக்கருத்தே கொள்க. சுவைத்து- ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணை யும் பெயர். கடித்து, நூறி, இடித்து என்பவற்றில் எண் ணும்மைகள் தொக்கன. இறத்தல்- இங்குப் போதற் பொருள் குறித்து நின்றது. 'சுவைத்தே' என்பதில் ஏகாரம்- தேற்றப் பொருளது. வடு-வைவதாலேற்படுங் குற்றம். கொள்ளினும், வைதிறந்தக் கண்ணும் என்பவற்றிலு உம்மைகள்- இழிவு சிறப்புப் பொருளன. இறந்தக்கண்- ஒருவகை வினை யெச்சம்; இற- பகுதி; கண்- விகுதி; தகரம் எழுத்துப்பேறா யிரட்டித்தது; இரட்டித்த தகரங்களில் முன்னது மெலிந்தது; நகரமும், தகரமும், எழுத்துப் பேறெனலுமாம். சிதைந்து- என்பது, 'சிதைய' என்னும் செயவெனெச்சம் திரிந்துவந்த தாகக் கொண்டு, அதற்கு, 'தமது பொறுமைக் குணம் கெட' எனப் பொருளுரைப்பினுமாம். 'சிதைந்து' என்ற குறிப் பினால், 'கெட்ட வார்த்தைகள்' என்பது இசையெச்சமாக வருவித் துரைக்கப்பட்டது. (சு)

157. *கள்ளார்கள் ளுண்ணார் கடிவ கடிந்தொரீஇ*
எள்ளிப் பிறரை யிகழ்ந்துரையார்- தள்ளியும்
வாயிற்பொய் கூறார் வடுவறு காட்சியார்
சாயிற் பரிவ திலர்.

(இ-ள்.) கடிவகடிந்து- (நீதி நூல்களின் உணர்ச்சியால் தீயனவென்று) விலக்கத் தக்கவைகளை வெறுத்து, (செய் யாமல் தள்ளி), ஒரீஇ- (அவற்றினின்றும்) நீங்கி, (அத

னாலே), வடுஅறு- குற்றமற்ற, காட்சியார்- அறிவினை யுடைய மேன்மக்கள், கள்ளார்-(அன்னியர் பொருளைக்) களவாடமாட்டார், கள் உண்ணார்- மதுவை அருந்தமாட் டார்கள், பிறரை - அயலாரை, எள்ளி- ஏளனம்செய்து, இகழ்ந்து உரையார்- நிந்தித்துப் பேசமாட்டார்கள், தள்ளியும்- (நினைவிலிருந்து) விலகியும், (அதாவது மறந்தும்), வாயின்- (தங்கள்) வாயினாலே, பொய் கூறார் - பொய்யைச் சொல்ல மாட்டார்கள், சாயின்- (தாம் வறுமையினால்) தளர்ந்தாலும், பரிவது இலர்- (அதன் பொருட்டு) வருந்துதல் இல்லாதவ ராவார்; எ-று.

விலக்கத்தக்கவைகளை வெறுத்துத் தள்ளி, அத னாலே குற்றமற்ற அறிவினையுடைய மேன்மக்கள் பிறர் பொருளைத் திருடார், மது வருந்தார், அயலாரை இகழ்ந் துரையார், மறந்தும் பொய் கூறார், வறுமையால் தளர்ந் தாலும் அதன் பொருட்டு வருந்தார் என்பது இதன் கருத்து.

இதனால், மேன்மக்கள் எத்தகைய தீச்செயல் களையும் செய்ய மாட்டார்களென்பது கூறப்பட்டது. இங்ஙனம் அவர்களுடைய தன்மையைக் கூறியது தன்மைநவிற்சியணி.

கடிவ- பலவின்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர். கடிந்தொரீஇ, எள்ளிஇகழ்ந்து என்பவற்றைச் சிறப்பினால் வந்த ஒரு பொருட் பன்மொழிகளாகக் கொள்ளினுமாம். 'ஒருவு' என்னும் பகுதி இகர விகுதி புணர்ந்து கெட்டு ஈற்றுயிர் மெய்யும்போய், உகரம் இகரமாகி, 'ஒரீஇ' என அளபெடுத்தது; இது சொல்லிசை யளபெடை. 'பொய்கூறார்' என்பதற்கேற்ப, 'மறந்தும்' என்பதே வரவேண்டுமாதலின், அப்பொருள் இயையுமாறு, 'தள்ளியும்' என்பதற்குமுன், 'நினைவிலிருந்து' என்பது இசையெச்சமாக வருவித்துரைக்கப்பட்டது; 'நினைவி லிருந்து விலகியும்' எனவே, 'மறந்தும்' என்பதுதானே

அமைந்தது. கண்ணால் ஒன்றைக் காணுதல் போலவே அறிவினாலும் காணக்கூடுமாதலால், அறிவுக்குக் 'காட்சி' என்னும் பெயர் வந்தது. அறிவுக்குக் குற்றமாவது - ஐயம், திரிபு, அறியாமை முதலியன உண்டாதலாம். 'சாயின்' என்பதில் இழிவு சிறப்பும்மை தொக்கது. 'தள்ளியும்' என்பதிலுள்ள உம்மை- இழிவு சிறப்புப் பொருளது. (எ)

158. *பிறர்மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்*
தேதிலா ரிற்கட் குருடனாய்த் தீய
புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா வவற்கு.

(இ-ள்.) (ஒருவன்), திறன் அறிந்து- (மேன்மக்களுக்குரிய நல்லொழுக்கத்தின்) வகையை உணர்ந்து, பிறர் மறையின்கண்- அன்னியருடைய இரகசியத்தில், செவிடு ஆய்- செவிடனாயும், ஏதிலார்- அயலாரின், இல்கண் குருடன் ஆய்- மனையாளிடத்தே குருடனாயும், புறம்- ஒருவரைக் காணாதவிடத்தே, (சொல்லும்), தீய- தீமையை யுடையதாகிய, கூற்றில்- சொல்லில், மூங்கையாய்- ஊமையாயும் (நல்ல நெறியில்), நிற்பான் ஏல்- நிற்பானானால், (அவன் எல்லா அறங்களையும் அறிந்து செய்தவனாவான்; ஆதலின்), அவற்கு- அவனுக்கு, அறம் யாதும் கூறவேண்டா- எந்தத் தருமத்தையும் (பிறர்) கூறுதல் வேண்டியதில்லை; எ-று.

ஒருவன், மேன்மக்களுடைய நல்லொழுக்கத்தின் வகையைத் தெரிந்து பிறர் இரகசியத்தில் செவிடனாயும், அயலார் மனைவியிடத்தே குருடனாயும், புறங்கூறுவதில் ஊமையாயும், இருப்பானேயானால் அவன் எல்லாத் தருமங்களையும் உணர்ந்து செய்தவனாவான்; ஆதலின் அவனுக்குப் பிறர் எந்தத் தருமத்தையும் எடுத்துக் கூற வேண்டியதில்லை என்பது இதன் கருத்து.

'ஒருவன் மேன்மக்களுடைய நல்லொழுக்கத்தின் வகையைத் தெரிந்து பிறர் இரகசியத்தை அறிவதில் செவிடனாயிருத்தல் முதலியவற்றைக் கொண்டிருப்பானா யின் எல்லாத் தருமங்களையும் செய்தவனாவான், அவ னுக்குப் பிறர் வேறு எத்தருமத்தையும் கூறல் வேண்டிய தில்லை' என்றதால் இங்குக் கூறிய நற்செயல்களெல்லாம் மேன்மக்களுக்குரியன வென்பது பெறப்பட்டது. இங்ஙனம் இவற்றைக் கூறவே மேன்மக்களின் சிறப்பு விளக்கிய தாயிற்று.

அன்னியரது இரகசியத்தில் ஒருவன் செவிடனா யிருத்தலாவது- பிறர் இரகசியம் பேசும்போது அதைக் கேட்காமலிருத்தலாம். அயலாரின் மனையாளிடத்தே குருடனாயிருத்தலாவது- அயலாரின் மனையாள்மீது கெட்ட இச்சைகொண்டு அவ்விருப்பத்தோடு அவளைப்பாராதிருத்த லாம். ஒருவனைக் காணாதவிடத்தே சொல்லும் தீய சொல்லில் ஊமையா யிருத்தலாவது- அவனைப்பற்றிப் புறங்கூறாதிருத்தலாம். இம்மூன்றும் எல்லாத் தருமங்களுள் ளும் சிறந்தன வாகலின் இவற்றைக் கொண்டிருப்பவன் மற்ற தருமங்களையும் உணர்ந்து செய்தவனாவான்; ஆதலின், 'இவனுக்குப் பிறர் எந்தத் தர்மத்தையும் எடுத்துக்கூறல் வேண்டியதில்லை' என்றார் முனிவர். இதிற் கூறப்பட்ட குணங்கள் மேன்மக்களுக்கே உரியனவாகலின், 'திறனறிந்து' என்பதனோடு, 'மேன்மக்களுக்குரிய நல்லொழுக்கத்தின்' என்ற சொற்றொடர்கள் இசை யெச்சமாக வருவித்துரைக்கப் பட்டன. முதலில், 'ஒருவன், என்பதும், 'நிற்பானேல்' என்பதற்கு முன், 'நல்ல நெறியில்' என்ற சொற்றொடரும், அதன்பின் வேறு சில சொற்றொடர்களும் பொருண் முடிபுக் கேற்ப அங்ஙனமே கூட்டி யுரைக்கப்பட்டன. 'பிறர் மறையின் கட்செவிடாய்' 'தீயபுறங்கூற்றின் மூங்கையாய்' 'யாதுமறங்கூற வேண்டாவதற்கு' என்பவற்றிற்கேற்ப, ஏலாதியில், 'பல்லர்மறையிற் செவியிலன்' 'தீச்சொற்கண் மூங்கை' 'அயல் அயலவர் நூல்' என வருவன ஈண்டு

ஆராயத்தக்கன. மறை- மறைக்கப்படுவது. செவிடு- பண்பாகு பெயராய் அதனை யுடையவனை யுணர்த்தி நின்றது. ஊமையும் அத்தகையதே. 'திறம்' என்பது, 'திறன்' என வந்தது; இது மொழியீற்றுப் போலி. ஏதில்- அயல்; அதனையுடையார்- ஏதிலர். இல்- வீடு; இஃதிடவாகு பெயராய் வீட்டிலிருந்து காரியங்களை நடத்தும் மனைவியரை உணர்த்தி நின்றது. 'தீய' என்பதைப் பலவின்பாற் பெயராகக் கொண்டு, 'தீய புறங்கூற்றின்' என்பதற்கு, 'ஒருவர்மேல் தீயசொற்களை அவர்களைக் காணாதவிடத்திற் சொல்லுவதில்' என்று பொருள்கூறலு மொன்று. 'கூறு' என்னும் முதனிலைத் தொழிற்பெயர் திரிந்து, 'கூற்று' என வந்தது. மூங்கை - மூக என்னும் வட மொழித் திரிபு; இது, 'மூகை' எனவும் வழங்கும். 'வேண்டா' என்பது, 'வேண்டும்' என்பதின் எதிர்மறை யாகலின் ஒரு வகை ஏவல் கண்ணிய வியங்கோள். (அ)

159. பன்னாளுஞ் சென்றக்காற் பண்பிலார் தம்முழை
என்னானும் வேண்டு வென்றிகழ்ப- என்னானும்
வேண்டினு நன்றுமற் றென்று விழுமியோர்
காண்டொறுஞ் செய்வர் சிறப்பு.

(இ-ள்.) பண்பு இலார்- நற்குணமில்லாத கீழ்மக்கள், தம் உழை- தம்மிடத்து, (ஒருவர்) பல்நாளும்- பல தினங்களும், சென்றக்கால்- வந்துகொண்டிருந்தால், என் ஆனும்- யாதாயினும், வேண்டுப என்று- (ஒரு பொருளைப்பெற) விரும்புவர் என்று கருதி, இகழ்ப- (அவர்களை) இகழ்ந்து பேசுவார்கள், விழுமியோர்- மேன்மக்கள், என்ஆனும் வேண்டினும்-(தம்மிடத்தே வருபவர்) யாதாயினும் பெற விரும்பினாலும், நன்று என்று- நல்லதே என்று கருதி, காண்தொறும்- (அவர்களைப்) பார்க்கும்பொழு தெல்லாம், சிறப்பு செய்வர்- (அவர்களுக்குச்) சிறப்பான உபசாரங்களைச் செய்வர்; எ-று.

உயர்ந்த குணமில்லாத கீழ்மக்கள்,' தம்மிடத்தே ஒருவர் பல நாட்களும் வந்துகொண்டிருந்தால், அவர் எதையும் கேளாதிருந்தாலும் யாதேனுமொரு பொருளைக் கேட்பார்கள் என்று கருதி அவர்களை இகழ்ச்சி செய்வார்கள்; நற்குணம் பொருந்திய மேன்மக்கள் தம்மிடத்தே ஒருவர் பலநாட்களும் வந்துகொண்டிருந்தாலும், அங்ஙனம் வருவோர் எப்பொருளையேனும் விரும்பிக் கேட்டாலும் அவ்வாறு கேட்பது நல்லதென்றே நினைத்து அவர்களுக்கு அப்பொருளைக் கொடுத்து உபசாரங்களைச் செய்வார் என்பது இதன் கருத்து.

இதனால் கீழ்மக்களின் இழிந்த குணமும், மேன்மக்களின் உயர்ந்த குணமும் விளக்கப்பட்டன.

பண்பு - என்பது பொதுவாகக் குணம் என்று பொருள்படுவதெனினும் மேல்வரும் கீழ்மக்கள் செய்கை நோக்கி, 'பண்பு இலார்' என்பதற்கு, 'நற்குணமில்லாத கீழ்மக்கள்' என்று பொருளுரைக்கப்பட்டது. 'நாளும்' என்பதன் உம்மை- முற்றுப்பொருளது. 'எவன்' என்னும் குறிப்பு முற்றாலாகிய பெயர், இடைகுறைந்து, 'என்' என வந்தது. ஆனும், என்பதிலுள்ள உம்மை - இழிவு சிறப்புப் பொருளது. 'வேண்டினும்' என்பதன் உம்மையும் அப் பொருளதே. 'நன்று' என்றது அங்கீகரித்தற் பொருளை உணர்த்திநின்றது. 'தம்முழை' என்பதில், உழை- ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. விழுமம்- சீர்மை, அதனை யுடையார்- விழுமியோர்; மேன்மக்கள் சீர்மைக் குணங்களை யுடையாராகலின், 'விழுமியோர்' எனப்பட்டார்; சீர்மை - நன்னடை. விழுமம் சீர்மைப் பொருள்தரு மென்பதை,

''விழுமம் சீர்மையுஞ் சிறப்பு மிடும்பையும்''

என்னும் (தொல்-சொல்-உரி-57-ஆம்) சூத்திரத் தானும், அதனுரையிற் சேனாவரையர், அதற்குதாரணமாக,

''விழுமியோர் காண்டொறுஞ் செய்வர் சிறப்பு'' என்னும் இச்செய்யுட் சொற்றொடர்களையே எடுத்துக்காட்டி யிருத்த லானும் உய்த்துணர்ந்து கொள்க. 'சென்றாக்கால்' என்பதில், உள்ள செலவுச்சொல், 'ஏனையிரண்டு மேனையிடத்த'' என்ற (தொல்-சொல்-கிள-30ஆம்) சூத்திர விதிப்படி படர்க்கையிடத்துக் குரியதாயினும், அதற்கு மாறாக இங்குத் தன்மைக்கு வந்தது இடவழுவமைதி. காண்தொறும்- வினைத்தொகை நிலைத்தொடர். தொறு- என்பது இடைச் சொல் லெனினும். பெயர்ப்பொருளைத் தருதலால் காலங் கரந்த பெயரெச்சமாகிய 'காண்' என்பது அதனைக் கொண்டு முடிந்தது. (கூ)

160. உடையா ரிவரென் றொருதலையாப் பற்றிக்
கடையாயார் பின்சென்று வாழ்வ- ருடைய
பிலந்தலைப் பட்டதுபோலாதே நல்ல
குலந்தலைப் பட்ட விடத்து.

(இ-ள்) (கீழ்மக்கள் தம்மை அடுத்தவர்க்கு எவ்வித உதவியும் செய்யமாட்டார்கள்; அவ்வாறு செய்யா திருந்தாலும் சிலர் அவரிடம் உதவி பெறலாமென்று கருதி எப்பொழுதும் அவரைத் தொடர்ந்து திரிவர்; அங்ஙனம்) உடையார் இவர் என்று- இவர் செல்வமுடையாரென்று கருதி, ஒருதலை ஆ பற்றி- துணிவாகப் பற்றிக்கொண்டு, கடை ஆயார்பின் சென்று- அந்தக் கீழ்மக்கள் பின்னேபோய், (ஒரு பயனுமின்றி), வாழ்வர்- வாழ்கின்றவர்கள், (அவ் வாழ்க்கையை விடுத்து மேன்மக்களோடு சேரவேண்டும்; அவ்வாறு), நல்ல குலம் தலைப்பட்ட இடத்து- உயர்குலத் தாரிடத்தே சேர்ந்தவிடத்து, (அதாவது, சேர்ந்தால் அச் சேர்க்கையானது), உடையபிலம் - (வேண்டும் பொருள் களை யெல்லாம்) உடையதாகிய சுரங்கத்தின், தலைப் பட்டது போலாதே- இடத்தைச் சேர்ந்ததுபோலாகாதா? (ஆகும்); எ-று.

சிலர் கீழ்மக்களிடம் செல்வ மிகுந்திருப்பதைக் கண்டு அவரிடத்திற் சேர்ந்தால் உதவி பெறலாமென்று கருதி அவரைத் தொடர்ந்து திரிவர்; எனினும் அக்கீழ்மக்களால் அவர்க்கு ஒருதவியும் கிடைக்க மாட்டாது; நல்ல குலத்திற் பிறந்த மேன்மக்களைச் சேர்வார்களானால், தாங்கள் விரும் பிய பொருள்க ளெல்லாம் நிரம்பி யிருக்கும் சுரங்கத்தை யடைந்தவர்போல் பெரும் பயனைப் பெறுவார்கள் என்பது இதன் கருத்து.

கீழ்மக்களைச்சேர்வதினால் பயனில்லை யென்பதை யும், மேன்மக்களைச் சேர்வதால் பெரும் பயனுண்டென் பதையும் இச்செய்யுள் விளக்கிற்று.

செல்வமுடையவர்களை, 'உடையார்' என்பது உலகவழக்கு; அவர் செல்வத்தால் எல்லா நலங்களையும் உடையவரா யிருத்தலினாலே இப்பெயர் பெற்றார். தலை- இடம், பக்கம்; ஆதலின், இங்கு, 'ஒருதலை' என்பது, 'ஒரே இடம்' என்று பொருள்பட்டு, ஒரு நிலைப்படுதலாகிய உறுதியை உணர்த்தி நின்றது. மனிதரில் உத்தமர், மத்திமர், அதமர் என மூவகையினருண்டு; இவர், தலையாயார், இடையாயார், கடையாயார் எனப்படுவர்; ஈற்றிலுள்ளவர் நற்குணங்களின்றி மிகுதியும் கடைப்பட்டவர்ராகலின், 'கடையாயார்' எனப் பட்டார். வாழ்வர்- வினையாலணை யும் பெயர். படுதல்- உண்டாதல்; அஃதிங்குச் சார்தல் என்னும் பொருள்குறித்து நின்றதாகலின்; 'தலைப்பட்டது' என்பதற்கு, 'இடத்தைச் சேர்ந்தது' என்று பொருள் கூறப்பட்டது. பதப்பொருள் கொள்ளுமிடத்து இங்ஙனம் கொள்ளப்படுமெனினும், இஃதொருசொன்னீர்மைத்தாய், 'சேர்ந்தது' என்று பொருள்படும். குலம்- இடவாகு பெயராய், உயர் குலத்திற் பிறந்தாரை யுணர்த்தி நின்றது. 'போலாதே' என்னும் எதிர்மறையைக் காட்டும் வினா, 'போலும்' என உடன்பாடுணர்த்தி நின்றது; இதில் இரண்டு எதிர்மறைகள் அடங்கியுள்ளது; போலாது- இடைச்

சொல்லடியாகப் பிறந்த எதிர்மறைமுற்று; ஏகாரம்-வினாவகையால் எதிர்மறையைக் காட்டியது. தலைப்பட்டவிடத்து - ஒருவகை வினையெச்சமாம். இதில் சில சொற்களும், சொற்றொடர்களும் பொருண்முடிபுக் கேற்ப இசை யெச்சங்களாக வருவித்துரைக்கப்பட்டன.

இனி, 'வாழ்வர்' என்பதைப் பலர்பாற் படர்க்கை வினைமுற்றாகக் கொண்டு, முன்னிரண்டடிகளுக்கு, "(உலகத்திலே சிலர்) செல்வமுடையவர் இவரென்று கீழ்மக்கள் பின்னேபோய் வாழ்வார்கள்," என்று பொருளுரைத்து அதன் மேல், (அதனாற் பயனென்ன? அங்ஙனம் வாழ்பவர்கள் அவ்வாழ்க்கையை விடுத்து மேன்மக்களோடு சேரவேண்டும்; அவ்வாறு) என்ற சொற்றொடர்களை வருவித்துப் பின் வரும் உரையோடு கூட்டி முடித்தலுமொன்று. (கo)

அதிகாரம்-17

பெரியாரைப் பிழையாமை

பெரியாரைப் பிழையாமையாவது- பெரியரா யினாரை அவமதித்து ஒழுகாமையயாம். பிழைத்தல்- தவறு தல், பிழையாமை- தவறாமை; அஃதிங்கு அவரை அவ மதித்து நீங்காதிருத்தலையும், அவர்க்குச் செய்யத்தகாதன செய்யாதிருத்தலையும் உணர்த்தும்; ஆகவே இவ்வதிகாரம் பெரியார் நேயம் பெறுதலையும், அவர்க்குப் பொருந்துவன செய்தலையும் பற்றிக் கூறுவதாகும். பிழையாமை- எதிர் மறைத் தொழிற்பெயர். 'பெரியார்' என்பது இரட்டுற மொழிதலால், ஆற்றலாற் பெரியாராகிய அரசரையும், தவத்தாற் பெரியாராகிய முனிவரையும் உணர்த்தி நின்றது. மேன்மக்களது தன்மையை உணர்ந்தபின் அவரை அவமதி யாமல் அவரோடு பழகுதலைத் தெரிந்துகொள்ள வேண்டு மாகலின், இது, 'மேன்மக்கள்' என்னும் அதிகாரத்தின் பின் வைக்கப்பட்டது.

161. *பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்*
வெறுப்பன செய்யாமை வேண்டும்- வெறுத்தபின்
ஆர்க்கு மருவி யணிமலை நன்னாட
பேர்க்குதல் யார்க்கு மரிது.

(இ-ள்). ஆர்க்கும் - ஒலிக்கின்ற, அருவி- நீரருவிகளை யுடைய, அணி- அழகிய மலை- பர்வதத்தையுடைய, நல்நாட- நல்ல பாண்டியநாட்டையுடைய அரசனே!, (பெரியோராயினார், பிறர் செய்த தீங்கினை எப்பொழுதும் பொறுத்துக் கொள்வர்; எனினும், அவ்வாறு அவர்கள்), பொறுப்பர் என்று எண்ணி- பொறுத்துக் கொள்வார்கள் என்று நினைத்து, புரைதீர்ந்தார் மாட்டும்- குற்றம், நீங்கியவர்களாகிய அப்பெரியாரிடத்தும், வெறுப்பன- (அவர்) வெறுக்கத்தக்க (தீமையான) காரியங்களை, செய்யாமை வேண்டும்- செய்யாதிருத்தல் தகுதியாம், (ஏனெனில், அவர்கள் அவற்றைப் பொறுக்கக்கூடியவர்களாயிருப்பினும் அவற்றால் நேருந்துன்பம் அவர்களை வருத்துமாகலின் அவற்றின் மீது வெறுப்படைவர்; அங்ஙனம்), வெறுத்தபின்- வெறுப்படைந்த பிறகு, (தீமையான காரியங்களைச் செய்தவர்களுக்கு அதன் பயனாகப் பல தீமைகள் ஏற்படும்; அங்ஙனம் ஏற்படும் தீமைகளை), பேர்க்குதல் - அகற்றுதல், யார்க்கும்- எவ்வகைப்பட்டவர்க்கும், அரிது - அரிதாகும்; எ-று.

பெரியோராயினார், பிறர்செய்யும் தீங்குகளைப் பொறுத்துக் கொள்வர்; எனினும் அவற்றால் நேருந் துன்பம் அவர்களை வருத்துமாதலின் அவற்றில் வெறுப்படைவர்; அங்ஙனம் வெறுப்படையும் படி அவர்க்குத் தீங்கு செய்தால் அதன்பயனாகப் பல தீமைகள், அதனைச் செய்தவர்க்குண்டாகும்; அங்ஙனம் அவர் வெறுத்தபின் தாங்கள் செய்த தீங்கினாலுண்டாகும் தீமையை நீக்கிக் கொள்ளுதல் எவராலும் முடியாது; ஆதலின், அவர்கள் பொறுத்துக்கொள்வார்களென்று, குற்றமற்ற அப்பெரியாரிடத்திலும் வெறுக்கத்தக்க காரியங்களைச் செய்யாதிருக்க வேண்டும் என்பது இதன் கருத்து.

அறிவற்ற சிறியோர், தங்களுக்கு எத்தகைய தீங்குகளைச் செய்யினும், குற்றமற்ற பெரியார் அவற்றைச்

சகித்திருப்பரென்பதும், தீங்குகளைச் செய்தோர் அப்பாவத் தாற் பல இழிந்த பிறவிகளை எடுத்துப் பெருந் துன்பங்களை யனுபவிப்பரென்பதும் ஜைனமதக் கொள்கை; அதனைத் தழுவியே இங்கு முனிவர், பெரியார் வெறுப்பன செய்தலால் உண்டாகும் தீமையை எவராலும் நீக்கிக் கொள்ளுதல் முடியாதென்றும், ஆதலால், பொறுமையுடைய அவரிடத் தும் அவர் வெறுக்கத்தக்க தீயகாரியங்களைச் செய்யாதிருக்க வேண்டுமென்றும் கூறினார். பெரியோர், பிறர்செய்த தீமைகளைப் பொறுப்பரெனினும் அவை துன்பஞ் செய்வன வென்பதுபற்றி வெறுப்பராகலின், அவற்றை, 'வெறுப்பன' என்றார்; இங்கு வெறுத்தலாவது அவற்றை வேண்டாமை; 'வெறுத்தபின்' என்பதற்கு, 'அப்பெரியார் அத்தீமைகளில் வெறுப்புற்று அவற்றால் பாவம் ஏற்பட்டு அப்பாவத்தால் துன்பம் வரத் தொடங்கியபின்' என்று பொருள்மைத்துக் கொள்ளவேண்டும்.

இங்ஙனமின்றி, 'வெறுப்பன' என்பதற்கு, 'கோபிக் கத்தக்கவை' என்றும், 'வெறுத்தபின்' என்பதற்கு, 'கோபித் துச் சபித்தபின்' என்றும் பொருள் கொள்ளின், 'பெரியோர் பொறுமையற்று வெகுளி மேற்கொண்டு தீங்கு செய்தாரைச் சபித்தா' ரென்பது போதரும்; அது ஜைனமதக்கொள்கைக்கு முரண்பட்டதாகலின், ஜைனமுனிவர் செய்த இதற்கு அவ்வுரை கொள்ளுதல் அத்துணைச் சிறப்பன்று. பெரியோர் பிறர் செய்த தீங்கினைப் பொறுத்திருத்தலே அவர்க்குரிய இலக்கணமென்பதனை,

''வாய்ச்சிவா யுறுத்தி மாந்தர் மயிர்தொறுஞ் செத்தி னாலும்
பூச்சுறு சாந்த மேந்திப்புகழ்ந்தடி பணிந்த போதும்
தூக்கியிவ் விரண்டு நோக்கித் தொல்வினை யென்று தேறி
நாச்செறும் பராவுங் கொள்ளார் நமர்பிற ரென்று முள்ளார்''

என்ற (சீவகசிந்தாமணி-முத்தி-227-ஆம்) செய்யுள் விளக்கும். பெரியார் தீங்கினைப் பொறுத்திருத்தலாவது, பிறர் தீங்கிழைத்தபோது அதன் பொருட்டு அவர்மீது கோபங் கொள்ளா திருத்தலாம்; அத்தீங்கால் ஏற்பட்ட துன்பத்தைச் சகித்திருத்தலன்று; எத்தகையினரும் துன்பத்தால் வருந்துதல் இயற்கை; அவ்வருத்தத்தினாலேயே அத்தீச்செயல்களை வெறுப்பர். ஆதலினாலேயே, 'பொறுப்பரென்றெண்ணிப் புரைதீர்ந்தாரிடத்தும், அவர் துன்பத்தால் வருந்தி வெறுக்கத் தக்க செயல்களைச் செய்யலாகாது' என்று இச்செய்யுளில் கூறினார் ஆசிரியர். இக்கருத்தினை,

''பூவுட்கும் கண்ணாய் பொறுப்ப ரெனக்கருதி
யாவர்க்கே யாயினும் இன்னா செயல்வேண்டா
தேவர்க்கும் கைகூடாத் திண்ணன்பி னார்க்கேயும்
நோவச்செய் நோயின்மை யில்''

என்னும் (பழமொழி-43-ஆம்) செய்யுள் விளக்கும். இவற்றைக் கொண்டு பொறுமையுடைய பெரியாரும் பிறர் துன்புறுத்துவதால் வருந்தி அச்செயலை வெறுப்பராகலின் அத்தகையினரிடத்தும் தீமையான காரியங்களைச் செய்ய லாகாதென்பதும், அங்ஙனம் செய்தால் அவர்க்குத் தீமை விளையுமென்பதும், அதனை அவரால் நீக்கிக் கொள்ள முடியாதென்பதும் பெறப்படும்.

எண்ணி-. வினையெச்சம். 'புரைதீர்ந்தார் மாட்டும்' என்பதில், மாடு- ஏழாம் வேற்றுமையுருபு; உம்மை- உயர்வு சிறப்புப் பொருளது; எச்சப் பொருள தெனினுமாம்; அங்ஙனம் பொருள் கொள்ளின், அதனால், 'எவரிடத்தும் வெறுப்பன செய்யலாகாது' என்பது பெறப்படும். 'வெறுத்த பின்' என்பது எதிர்கால வினையெச்சத்தின் தன்மைத்து. 'யார்க்கும்' என்பதில் நான்காம் வேற்றுமைக் குவ்வுருபு கர்த்தாப் பொருளில் வந்தது. 'போக்குதல்' என்றும் பாடபேத முண்டு. (க)

162. *பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரைக்*
கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்தும்- அன்னோ
பயனில் பொழுதாக் கழிப்பரே நல்ல
நயமி லறிவி னவர்.

(இ-ள்.) நல்ல நயமில் அறிவினவர்- சிறந்த நன்மை யில்லாத அறிவினை யுடையவர்கள், பொன்னே கொடுத்தும்- பொன்னை (அதிகமாகக்) கொடுத்தாலும், புணர்தற்கு அரியாரை- சிநேகித்தற்கரியாராகிய பெரியாரை, கொன்னே- ஒன்றுங் கொடாமலே, தலைக்கூடப் பெற்றிருந்தும்- தம்மிடத்தே (அவர் சிநேகிதராய்ச்) சேரப்பெற்றிருந்தும் (அவரிடத்தே அறிந்துகொள்ளத்தக்க நன்மைகளைப் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல்) அன்னோ, ஐயோ!, (அவரோடு கூடி யிருக்கும் பயனுடைய காலத்தை), பயன் இல்பொழுது ஆ- பயன் இல்லாத (வீண்) காலமாக, கழிப்பர்- கழிப்பார்கள்; எ-று.

சிறந்த அறிவில்லாதவர், பொன் கொடுத்தும் சிநேகிக்க முடியாத அருமை வாய்ந்த பெரியோர் சிநேகம் ஒன்றும் கொடாமலே தங்களுக்குக் கிடைத்திருந்தாலும் அவரிடத்தே அறிந்துகொள்ள வேண்டிய நல்ல மார்க்கங் களைத் தெரிந்து கொள்ளாமல் அவருடன் கூடியிருக்கும் காலத்தை வீண் காலமாக கழிப்பர் என்பது இதன் கருத்து.

இங்ஙனங் கூறியதனால், பெரியோரிடம் சேர்வோர் நற்போதனைகளைக் கேட்டு மேலான பயன்களை யடைய வேண்டு மென்பதும், அங்ஙனம் அடைவோரே அறிவுடைய ராவர் என்பதும், அவ்வாறு பெரியார் நேயம் பெற்றிருந்தும் அவரால் அடையவேண்டிய நற்பயனை அடையாமல் வீணாகக் காலத்தைக் கழிப்பவர் அறிவற்றவராவர் என்பதும் விளக்கப்பட்டன. இதில், 'அறிவில்லாதவர் பெரியார் நேயம் பெற்றிருந்தும் அவரால் அடையத்தக்க நற்பயனையடை யாமல் காலத்தை வீண் பொழுதாகக் கழிப்பர்' என்றதனால்,

பெரியோரை அவமதித்தல் கூறப்பட்டது; 'அன்னோ' 'கழிப்பரே' என்ற இரக்கச் சொற்கள் அங்ஙனம் அவமதித்தல் கூடாதென்பதை விளக்கி நின்றன.

'பொன்னே' என்பதிலுள்ள ஏகாரம் - உயர்வு சிறப்புப் பொருளது. 'கொடுத்தும், பெற்றிருந்தும்' என்பவற்றிலுள்ள உம்மைகளும் உயர்வு சிறப்புப் பொருளனவே. 'கொன்னே' என்பதிலுள்ள, ஏ - அசை; 'பொன்னே கொடுத்தும்' என்ப தற்கு, 'கொன்னே' என்பது எதிராகலின், இதிலுள்ள ஏ- இழிவு சிறப்புப் பொருளதெனினுமாம்; இங்கு இழிவு சிறப்பாவது எளிதாந் தன்மையாம். 'தீலைக்கூட' என்பது வினையெச்சமாகத் தோன்றினும், பொருள் நோக்கத்தில் தொழிற் பெயராய்ச் செயப்படு பொருளாக அமையும். அன்னோ - இரக்கப் பொருள் குறிக்கும் இடைச்சொல். அந்தோ, ஐயோ என்பன போன்றது. 'கழிப்பரே' என்பதி லுள்ள ஏகாரமும் இரக்கப் பொருளே குறித்து நின்றது.

163. அவமதிப்பு மான்ற மதிப்பு மிரண்டும்
மிகைமக்க ளான்மதிக்கற் பால- நயமுணராக்
கையறியா மாக்க ளிழிப்பு மெடுத்தேத்தும்
வையார் வடித்தநூ லார்.

(இ-ள்) அவமதிப்பும்- (ஒருவரைப்பற்றித்) தாழ்ந்த மதிப்பும், ஆன்ற மதிப்பும்- உயர்ந்த மதிப்பும், (ஆகிய), இரண்டும்- இரண்டு விதமான மதிப்புக்களும், மிகைமக்க ளால் - மேன்மக்களாகிய பெரியோராலேயே, மதிக்கற்பால- மதிக்கத்தக்க தன்மையை யுடையனவாம், (அவர்கள் அங்ஙனம் இரண்டு விதங்களாக மதிப்பதனாலேயே ஒருவர்க்கு இழிவுஞ் சிறப்புமுண்டாகும்; அறிவற்ற கீழ்மக்களின் அவமதிப்பினாலும் உயர் மதிப்பினாலும் பயனொன்றுமில்லை; ஆகலின், நயம் உணரா- நன்மையை அறியாதவர்களும், கை அறியா- நல்லொழுக்கத்தை உணராத வர்களும், (ஆகிய), மாக்கள்- கீழ்மக்கள், (செய்கின்ற),

இழிப்பும்- அவமதிப்பையும், எடுத்து ஏத்தும்- உயர்த்திப் புகழ்தலையும், வடித்த நூலார்- ஆராய்ந்து (உயர்ந்தன வென்று கருதி) எடுத்த நூல்களை யுணர்ந்த பெரியோர்கள், வையார்- (ஒருபொருளாக மனத்திற்) கொள்ளார், (மேன் மக்களுடைய மதிப்புக்களையே பொருளாகக் கொள்வர்); எ-று.

ஒருவரைப்பற்றி அவமதித்தலும், நன்கு மதித்தலும் பெரியோர் செய்தால் மாத்திரமே அவற்றால் இழிவும், உயர்வும் உண்டாகும்; கீழ்மக்கள் மதிக்கும் எந்த மதிப் பினாலும் பயனொன்றுமில்லை; ஆதலின், பெரியோர் மேன் மக்களின் மதிப்பையே பொருளாகக் கொள்வர், கீழ்மக்கள் மதிப்பைக் கொள்ளார் என்பது இதன் கருத்து.

மேன்மக்கள், கல்வியிலும், அறிவிலும் சிறந்து, உலகியல் முற்று முணர்ந்து நன்மை தீமைகளை உள்ளபடி பகுத்துணரும் பெற்றிவாய்ந்தவராகலின், ஒருவர் குணஞ் செயல்களை நன்காராய்ந்து அவர்பால் நல்லியற்கைகள் குடிகொண்டிருப்பின் நன்மதிப்பு வைப்பர்; கெட்ட இயற்கைகள் பொருந்தி யிருப்பின் அவமதிப்பு வைப்பர். ஆதலின், இவர் மதிப்பு உண்மையானவையென்று கல்வியறி வுடைய பெரியோராற் கருதப்படும். கீழ்மக்கள் கல்விஞான மில்லாதவர்களாயும், உலகியல்ஞான மற்றவர்களாயும், நன்மை தீமைகளைப் பகுத்தறியுந் தன்மை யில்லாதவர் களாயும், இருப்பாராகலின், கெட்ட செய்கையுடையவர் களை நல்லவர்களென்று மதித்துக் கொண்டாடுவர். நற் செய்கையுடையவர்களைக் கெட்டவர்களென்று மதித்து இகழ்வர்; ஆதலின் இவருடைய மதிப்பை அறிவுடையார் ஒரு பொருளாகக் கொள்ளார். 'நயமுணராக் கையறியா மாக்கள் இழிப்பு மெடுத்தேத்தும் வையார் வடித்த நூலார்' என்றதனால், அவருடைய அத்தகைய மதிப்புக்களை அவர் களைப் போன்ற கீழ்மக்களே பொருளாகக் கொள்வர் என்பது பெறப்படும்.

இதனாற் பெரியாரது மதிப்பின் சிறப்புக் கூறினார் ஆசிரியர். இங்ஙனங் கூறியது கொண்டு, கீழ்மக்களிடம் மதிப்புப் பெறுவதாற் பயனில்லை யென்பதும், மேன்மக்கள் மதிப்பைப் பெறுதலே சிறந்த தென்பதும், அவரை அவமதிக் காமல் அவர் கொண்டாடும்படி மரியாதையுடன் நடந்து அவருடைய நன்மதிப்பைப் பெறவேண்டு மென்பதும் விளங்கும்.

இனி இச்செய்யுளுக்கு, ''அவமதிப்பும், உயர்ந்த மதிப்பும் ஆகிய இரண்டும் மேன்மக்களாலேயே மதிக்கத் தக்கன; கீழ்மக்களால் கொள்ளப்படுவனவல்ல; அவர் களுடைய அவமதிப்பாலும் புகழ்ச்சியாலும் ஒருபயனு மில்லை; ஆதலின், அவர்கள், மேன்மக்களை இகழ்ந்தாலும் புகழ்ந்தாலும் அவற்றை அந்த மேன்மக்கள் ஒரு பொருளாகக் கொள்ளார்'' என்று பொருளுரைப்பினும் அமையும். இங்ஙனம் கூறுவதால், பெரியாரின் உயர்வு விளங்கும். இங்ஙனம் பெரியாரின் சிறப்பை விளக்கியதால் அவர்களை அவமதிக்கலாகாதென்பது பெறப்படும்.

சிலர், அறிவில்லாத கீழ்மக்கள் தன்னை யுணராமல் தங்களைப் புகழ்வதைக் கண்டு மகிழ்வர்; மேன்மக்களிடம் நன்மதிப்பைப் பெற விரும்பாமல் அவரை அவமதிப்பர்; அத்தகைய அறிவிலிகளுக்கு அறிவுறுத்தவே இச்செய்யுள் கூறப்பட்டது. இச்செய்யுட் கருத்து இந்நூலின் 294-ஆம் செய்யுட் கருத்தோடு ஒப்புமை யுடையது.

ஆன்ற- அகன்ற என்பதன் மரூஉ; இதிலுள்ள 'ஆல்' என்ற பகுதி, 'சால்' என்பதன் மரூஉ வெனக் கோடலு மொன்று. மதிப்பு தொழிற்பெயர். அவ- ஒரு வடமொழி உபசர்க்கம்; இன்மைப் பொருளை யுணர்த்தி நின்றது. மிகை- தொழிற்பெயர்; மிகு- பகுதி; ஐ- தொழிற்பெயர்விகுதி; இது, 'மிகுதல்' என்று பொருள்படும். மிகை மக்கள்- இரண்டாம்

வேற்றுமை யுருபும் பயனு முடன் தொக்க தொகை. அறிவில்லா மனிதர் மிருகத்தை நிகர்ப்பராகலின், அவ்விழிவு தோன்ற, 'மாக்கள்' எனப்பட்டார். உணரா, அறியா- என்பன எதிர்மறைப் பெயரெச்சங்கள்; இவை அடுக்கி, 'மாக்கள்' என்னும் ஒரு பெயரைக் கொண்டு முடிந்தன; சீவக சிந்தாமணி முதற்செய்யுளில் ''மூவா முதலா வுலகம்'' என இங்ஙனம் பெயரெச்சங்கள் அடுக்கி ஒருபெயர்கொண்டு முடிதல் காண்க. ''பன்முறையானும்.............'' என்னும் (தொல்-சொல்-வினை-36-ஆம்) சூத்திரவுரை பார்க்க. (ந)

164. *விரிநிற நாகம் விடருள தேனும்*
உருமின் கடுஞ்சினஞ் சேணின்று முட்கும்
அருமை யுடைய வரண்சேர்ந்து முய்யார்
பெருமைமை யுடையார் செறின்.

(இ-ள்.) விரிநிறம்- மிகுந்த ஒளியையுடைய, நாகம்- அரவமானது, விடர் உளது எனும்- (நிலவெடிப்பு அல்லது மலைப்பிளப்புஆகிய) வளையினுள்ளே இருப்பதனாலும், உருமின்- இடியினது, கடுசினம்- மிகுந்த கோபத்தாலுண் டாகிய போன்ற ஒலி, சேண் நின்றும்- ஆகாயத்தில் (நெடுந்தூரத்தில்) இருக்கவும், உட்கும்- (அதற்கு) பயப் பட்டு வருந்தும், (அதுபோல), பெருமை உடையார்- உயர் குணமுள்ள பெரியார், (தூரத்திலிருந்தாலும், பிறர் தமக்குத் தீங்குசெய்ய அதனாலேற்படும் துன்பத்தைச் சகிக்காமல் வருந்தி அத்தீச்செயலை), செறின்- வெறுப்பார்களாயின், (அதனால் பாவம் ஏற்பட்டு அத்தீங்கு செய்தாரைத் தொடர்ந்து வருந்தும்; அங்ஙனம் வருத்தும் போது அத் தீயோர்), அருமை உடைய- (பிறர் புகுதற்கும் அழித்தற்கும்) அரிதாகிய, அரண் சேர்ந்தும்- காவலிடத்தைச் சேர்ந்திருந் தாலும், உய்யார்- அப்பாவத்தி னின்றும் நீங்கிப் பிழைக்க மாட்டார்கள், (அப்பாவம் அங்கும் சென்று அவர்களை வருத்தும்), எ-று,

நாகம் வளைக்குள்ளிருந்தாலும், ஆகாயத்தில் நெடுந் தூரத்தில் இடியோசை உண்டாகவும் அதனால் அஞ்சி வருந்தும்; அதைப் போல, பிறர் தீங்கு செய்யுமிடத்துப் பெரியோர் அதனாலேற்படுந் துன்பத்தைச் சிகிக்காமல் வருந்தி அத்தீச் செயலை வெறுப்பார்களாயின், அவர்கள் நெடுந்தூரத்தி லிருந்தாலும் அதனாலேற்படும் பாவம் அத்தீயோரைத் தொடர்ந்து வருத்தும்; அத்தீயோர் பிறர் நுழைதற்கு முடியாத காவலிடத்திற்குள் ளிருந்தாலும் அத்துன்பத்தினின்று நீங்கிப் பிழைக்கமாட்டார்கள்; அத்துன்பம் அங்கும் அவரைத் தொடர்ந்து வருத்தும் என்பது இதன் கருத்து.

இதனால், பெரியாரை அவமதித்து அவர்க்குத் தீங்கு செய்வோர், எவ்வளவு தூரத்தில் எத்தகைய பாதுகாப்பான விடத்திலிருப்பினும் அப்பாவத்தாலேற்படுந் துன்பத்தி னின்று, நீங்கிப் பிழைக்கமாட்டார்கள் என்பது விளக்கப் பட்டது. பெரியாரை அவமதித்தலாலுண்டாம் தீங்கை திருஷ் டாந்த முகத்தால் இதில் விளக்கினார் முனிவர்; இங்ஙனங் கூறியது எடுத்துக்காட்டுவமை யணி. இடியோசை கேட்டு நாகம் அஞ்சி வருந்துதல் இயற்கை. இடியோசை நெடுந் தூரத்தி லுண்டாயினும் அது நாகத்தை வருத்துதல்போல் பெரியார் நெடுந்தூரத்தி லிருந்தாலும் அவரை அவமதித்து அவர்க்குத் தீங்கியற்றியதா லேற்பட்ட பாவம், அங்ஙனம் செய்தாரை எவ்விடத்தும் தொடர்ந்து வருத்து மென்க.

விரிதல் - பரவுதல்; அஃதிங்கு மிகுதிப்பொருளை யுணர்த்தி நின்றது; இனி, 'விரி' என்பதற்கு, 'படம் விரிக் கின்ற' என்று பொருள்கூறலு மொன்று. நாகம் - நகத்தில் வாழ்வது, நகம் - மலை; மரம்; நாகம்- மலையிலும், மரத் திலும் வாழ்வதாகலின் இப்பெயர் பெற்றது, இது தத்திதாந்த நாமம்; ஒரு பொருளுக்குரிய வட சொல்லானது சிறிது திரிந்து அதன் சம்பந்தமான வேறு பொருளை யுணர்த்துவது. விடர் - நிலவெடிப்பு, மலைப்பிளப்பு ஆகியவற்றை உணர்த்தும்;

எனினும் இங்குப் பாம்பின் வளையை உணர்த்தி நின்றது. கடுஞ்சினம்- இடியோசைக்கு இலக்கணை; இலக்கணை யாவது- உரிய பொருளைவிட்டு அப்பொருளின் சம்பந்தியை யுணர்த்துவது. தன் கருத்தாவின் வினையைக் கொண்டு முடி தற்கேற்ற செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சமாகிய, 'நின்று' என்பது, 'உட்கும்' என்னும் பிற கருத்தாவின் வினையைக் கொண்டு முடிதற்கு ஏலாமையால், அதனை, அம்முடிபுக்கேற்ற, 'நிற்ப' என்னும் செயவெ னெச்சத் திரிபாகக் கொண்டு பொருளுரைக்கப்பட்டது;

''வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று''[1]

என்னும் (திருக்- வான்-[1]-ஆம்) செய்யுளுரையில் இங்ஙனம், 'நின்று' என்பதை, 'நிற்ப' என்பதின் திரிபாகக் கொண்டிருத் தல் காண்க;

''சொற்றிரி யினும்பொருள் திரியா வினைக்குறை''

என்னும் (நன்-வினை- 27-ஆம்) சூத்திவுரை பார்க்க. 'சரணம்' என் வடசொல் திரிந்து, 'அரண்' என வந்தது. (ச)

165. *எம்மை யறிந்திலி ரெம்போல்வா ரில்லென்று*
தம்மைத்தாங் கொள்வது கோளன்று - தம்மை
அரியரா நோக்கி யறனறியுஞ் சான்றோர்
பெரியராக் கொள்வது கோள்.

(இ-ள்.) (சிலர், பெரியோரை மதித்து அவர்க்கு அடங்கி நடந்து அவரால் நன்கு மதிக்கப்படாமல் அவரை அவமதித்து தாமே பெரிய மனிதரென்று தற்பெருமை கொண்டு பலரிடம் சென்று அப்பெருமையைத் தாங்களே கூறித் திரிவர்; அங்ஙனம் பலரிடம் சென்று), எம்மை அறிந்திலிர் - (நீங்கள்) எங்களை அறிந்திருக்கமாட்டீர்கள்,

எம்போல்வார்- எம்மைப்போன்றவர்கள், இல் என்று- (உலகத்தில் எவரும்) இல்லையென்று, தம்மைத்தரம் கொள்வது- தங்களைத் தாங்களே (புகழ்ந்து உயர்ந்தோராகக்) கொள்வது, கோள் அன்று- (நல்ல) கொள்கையாகாது, (பெரியோர் தங்களைப் பார்த்து நல்லவர்களென்று மதிக்கும்படி அவருக்குத் தாழ்ந்து நன்மார்க்கத்தில் நடந்துகொள்ள வேண்டும்; அங்ஙனம்), அறன் அறியும் சான்றோர்- தருமங்களை உணர்ந்த பெரி யோர், தம்மை அரியர் ஆ நோக்கி- தம்மை கிடைத்தற் கருமையானவராகப் பார்த்து, பெரியர் ஆ கொள்வது- பெரியாராக மனத்திற் கொள்வதே, கோள்- சிறந்ததாம்; (ஆதலின், மனிதர் வீணே தற்பெருமை பேசித் திரியாமல் பெரியோர் மகிழ நன்மார்க்கத்தில் நடந்து அவரால் நன்கு மதிக்கப்படவேண்டும்; எ-று.

சிலர், பெரியாரைமதித்து, அவர் கொண்டாடும்படி நன்மார்க்கத்தில் நடந்து அவர்களால் நன்கு மதிக்கப்படா மல், தாழ்ந்த செய்கைகளைச் செய்து கொண்டு, அங்ஙனம் செய்தும் தங்களை உலகத்தில் பெரியாராகக் காட்டிக் கொள்ள விரும்பிப் பலரிடம் சென்று தற்பெருமைபேசித் திரிவர்; அங்ஙனம் தாமே பலரிடம் போய், ''எம்மை நீங்கள் அறியமாட்டீர்கள், எம்மைப்போன்ற பெருமையுடையவர் உலகில் எவருமில்லை'' என்று தம்மைத்தாமே பெருமைப் படுத்திக் கொள்வது சிறந்த கொள்கையன்று; பெரியோர்க் கடங்கி நன்மார்க்கத்தில் நடந்து அவர்களால் நன்கு மதிக்கப்படவேண்டும்; அங்ஙனம் பெரியோர் பார்த்துத் தங்களைச் சான்றோரென மதித்தலே சிறந்ததாம் என்பது இதன் கருத்து.

இதனால், பெரியோரை அவமதித்துத் தம்மைத்தாமே பெருமைப்படுத்திக் கொள்வோர்க்குச் சிறப்பில்லை யென் பதும், பெரியோரை மதித்து அவர் மகிழத்தக்க நன்மார்க்கத் தில் நடந்து அவரால் நன்கு மதிக்கப்படுவோர்க்கே

சிறப்புண்டென்பதும் விளக்கப்பட்டன. இக்கருத்தினை இந்நூலின் - 340 ஆம் செய்யுளும்,

''வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை''

என்னும் (திருக்கு-439-ஆம்) செய்யுளும்,

''தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த நீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றாற்- றன்னை
வியவாமை யன்றே விப்பாவ தின்ப
நயவாமை யன்றே நலம்''

என்னும் (நீதிநெறி விளக்கம்-19-ஆம்) செய்யுளும் விளக்குவனவர்ம்.

எம்- செருக்கை விளக்கும் தன்மைப் பன்மை. அறிந்திலிர் - முன்னிலைப் பன்மை யெதிர்மறை யிறந்தகால வினைமுற்று; இதில், அறி- பகுதி, 'இல்' என்னும் எதிர் மறைப்பண்படி- விகுதி, த்- இடைநிலை, இத் தகரம் இரட்டித்து மெலிந்தது; இவையனைத்துமொரு பகுதி, இர்- முன்னிலைப் பன்மை விகுதி. இல்- விகுதி குறைந்த குறிப்புமுற்று. கோள்- செயப்படுபொருள் விகுதி கெட்டு முதல் நீண்ட செயப்படு பொருட்பெயர்; கொள்ளப்படுவது என விரியும்; இங்குக் கொள்ளப்படும் பொருளாவது பெருமை; இனி இதனை முதனிலை திரிந்த தொழிற் பெயரென்றும், அஃதாகு பெயராய்க் கொள்ளுதலையுடைய பெருமையை உணர்த்திற் றென்றும் கூறுலுமொன்று.

166. *நளிகடற் நண்சேர்ப்ப நாணிழற் போல*
விளியுஞ் சிறியவர் கேண்மை- விளிவின்றி
அல்கு நிழற்போ லகன்றகன் றோட்டுமே
தொல்புக ழாளர் தொடர்பு.

(இ-ள்.) நளி - பெரிய, கடல் - கடலினது, தண்- குளிர்ச்சி பொருந்திய, சேர்ப்ப- துறையையுடையவனே!, சிறியவர் - கீழ்மக்களுடைய, கேண்மை - நட்பானது, நாள் நிழல்போல- காலை நேரத்தின் சாயைபோல, விளியும்- (படிப்படியாகக்) குறையும், தொல்புகழ் ஆளர்- பழமையான கீர்த்தியையுடைய பெரியோரின், தொடர்பு - சிநேகமானது, விளிவு இன்றி- (அங்ஙனம்) குறைதல் இன்றி, அல்குநிழல் போல்- மாலைநேரத்துச் சாயைபோல், அகன்று அகன்று ஓடும் - (படிப்படியாக) வளர்ந்த வளர்ந்து நீளும், (ஆதலின், அப்பெரியாரை அவமதியாமல் அவருடைய நட்பைப் பெறுதல் வேண்டும்); எ-று.

கீழ்மக்களுடைய நட்பானது காலைநேரத்து நிழலைப்போல வரவரக் குறையும்; பழமையான புகழை யுடைய பெரியாரின் நேயம் மாலை நேரத்து நிழலைப்போல வளர்ந்து கொண்டே யிருக்கும்; ஆதலின், பெரியாரை அவமதிக்காமல் அவருடைய நட்பைப் பெற வேண்டும் என்பது இதன் கருத்து.

இதனால் பெரியார் நேயமே கொள்ளத்தக்க தென்பதும், அதனால் நன்மை யுண்டென்பதும் விளங்கும். காலையில் சூரியன் உதிக்கும்போது உலகத்திலுள்ள பொருள்களின் நிழல்கள் மிக நீண்டிருக்கும்; சூரியன் மேலேறவேற அந்நிழல் குறைந்துகொண்டே வந்து நடுப்பகல் நேரத்தில் மிகக் குறுகியிருந்து, பின்னர்ச் சூரியன் பிறபகல் நேரத்தில் மேற்கே சாயச்சாய அங்ஙனம் குறுகிய நிழல்கள் வளர்ந்துகொண்டேபோய் அச்சூரியன் மறையுந் தருணத்தில் மிக நீண்டிருக்கும்; இவற்றைப்போலவே கீழ்மக்களுடைய சிநேகம் ஆரம்பத்தில் அதிகரித்திருந்து நாட்செல்லச் செல்ல குறைந்து முடிவில் சிறிதுமில்லாமல் மறைந்துவிடும்; பெரியார் சிநேகமோ தொடக்கத்தில் சிறிய அளவாகத் தோன்றி நாளேற நாளேற வளர்ந்து கொண்டே போய் அவர் உலகத்தைவிட்டு மறையுங்காலத்தில் மிகவும்

அதிகரித்து விளங்கும். இங்ஙனம் சிறியார் நேயம் ஆரம்பத்தில் மிகுந்து காட்டிப் பின் குறைந்து போவதாலும், பெரியார் நேயம் தொடக்கத்தில் குறைந்து தோன்றி முடிவில் அதிகரிப்பதாலும் சிறியார் நேயத்தால் பயனொன்று முண்டாகாது; பெரியார் உறவால் பெரும்பயனுண்டாகும். ஆதலின், சிறியார் நட்பினை யொழித்துப் பெரியார் நேயத்தைப் பெறவேண்டு மென்றார் முனிவர்.

இச்செய்யுளிற் கூறியவாறு சிறியார் நட்புக்குறையு மென்பதையும், பெரியார் நட்பு வளருமென்பதையும்,

''நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு''

என்னும் (திருக்குறள்-782-ஆம்) செய்யுளும், இந்நூல் 125-ஆம் செய்யுளும் உணர்த்துவனவாம். இச்செய்யுளில் முற்றுவமையணி அமைந்துள்ளது; முற்றுவமையணியாவது - உபமானம், உபமேயம், உவமையுருபு, பொதுத்தன்மை ஆகிய நான்கும் அமைந்திருத்தலாம்; அவை இச்செய்யுளில் அமைந்திருத்தல் காண்க; இது வடமொழியில் பூர்ணோபமாலங்காரம் எனப்படும். நளி- பெருமையை உணர்த்தும் உரிச்சொல்; ''கடவுங் கயவு நளியும் பெருமை'' என்னும் (தொல்- சொல்- உரி-24-ஆம்) சூத்திரத்தானே இது துணியப்படும். சேர்ப்பு- கடற்கரை; அதனையுடையவன் - சேர்ப்பன்; இது, நெய்தல் நிலத்தலைவனுக்கே உரிய பெயர். ஒரு நாளுக்கு மூலமாயிருப்பது .சூரியோதய காலமேயாகலின் அது, 'நாள்' எனப்பட்டது. கேண்மை - பண்புச்சொல்; நட்புடையார் ஒருவரிடத்தொருவர் நலங்களைக் கேட்டுக் கொள்ளும் தன்மை சிநேகத்தில் அமைந்திருக்குங் காரணத்தால் அது கேண்மையெனப் பெயர்பெற்ற தென்க. அல்குதல்வீறு கெட்ட தொழிற்பெயர்; இஃதாகுபெயராய்ப் பகற்பொழுது சுருங்குதலையுடைய மாலைக்காலத்தை யுணர்த்தி நின்றது; அல்குதல்- சுருங்குதல். தொல்புகழ்- பழமையான

புகழ்; புகழுக்குப் பழமையாவது - பரம்பரையாக முன்னோர் காலத் திலிருந்து தொடர்ந்து வருவது, விளிவு- சாவைக் குறிப்ப தெனினும் இங்குக் குறைவை விளக்கி நின்றது. அகன்று அகன்று- மிகுதிப் பொருள்பற்றி வந்த அடுக்கு,

''இசைநிறை யசைநிலை பொருளொடு
புணர்தலென்
றவைமூன்றென்ப வொருசொல் லடுக்கே''

என்னும் (தொல்-சொல்-எச்-15-ஆம்) சூத்திரவுரை பார்க்க. ஓடும் - என்பது, 'அதிகரிக்கும்' என்னும் பொருள் பட்டு நின்றது. (சு)

167. *மன்னர் திருவு மகளி ரெழினலமுந்*
துன்னியார் துய்ப்பர் தகல்வேண்டா- துன்னிக்
குழைகொண்டு தாழ்ந்த குளிர்மா மெல்லாம்
உழைதங்கட் சென்றார்க் கொருங்கு.

(இ-ள்.) குழைகொண்டு தாழ்ந்த- தளிர்களைக் கொண்டு (அக்கனத்தினாலே சுற்றிலும்) தாழ்ந்து கவிந்துள்ள, குளிர்மரம் எல்லாம்- குளிர்ச்சியான மரங்களெல்லாம், தம் கண்துன்னி சென்றார்க்கு- தங்களிடத்தே நெருங்கி வந்தவர் களுக்கு, ஒருங்கு - (வேறுபாடின்றி) ஒரே தன்மையாக, உழை- இடமாம், (இவற்றைப்போலவே மன்னரும், பெண் களும் தம்மிடத்தே நெருங்கி யிருப்பவர்க்கே நலஞ்செய்வர்; ஆகவே), மன்னர் திருவும்- அரசர்களுடைய செல்வத்தை யும், மகளிர் - பெண்களின், எழில் நலமும்- வளர்ச்சியோடு கூடிய அழகையும், துன்னியார்- (இடைவிடாது அவர் களிடம்) நெருங்கி யிருப்பவர்களே, (அதாவது, நெருங்கி யிருந்து அவர்க்கிதமாக நடந்து கொள்பவர்களே), துய்ப்பர்- அனுபவிப்பார்கள், தகல்வேண்டா- (அங்ஙனம் அனுபவித் தற்கு) உயர்ந்த தன்மை (அவரிடத்தே) வேண்டுவதில்லை;

(ஆதலின், மனிதர் பெரியாரை அவமதியாமல் அவரை யடுத்து அவர்க்கிதமாக நடந்து அவர்களால் நற்பயன் பெற வேண்டும்); எ-று.

தழைத்துத் தளிர்களைக்கொண்டு சுற்றிலும் தாழ்ந்து கவிந்த குளிர்ச்சி பொருந்திய மரங்களெல்லாம் தம்மிடம் வந்த எல்லோருக்கும் வேறுபாடின்றி ஒரே தன்மையாக இடந்தருவனவாம்; இவற்றைப்போலவே, மன்னரும், பெண்களும் தம்மிடம் நெருங்கியிருந்து இதமாக நடந்து கொள்வார்க்கே நலஞ்செய்வார்கள்; ஆதலின், பெரியாராகிய அரசர் செல்வத்தையும், பெண்களின் அழகையும் அவர்கள் பால் நெருங்கி யிருப்பவர்களே அனுபவிப்பார்கள்; அங்ஙனம் அனுபவித்தற்குத்தக்க யோக்கியதை அவர்களுக்கு வேண்டுவதில்லை; (அதாவது, நெருங்கியவர்களிடத்தில் அதற்குத்தக்க யோக்கியதை இல்லாவிட்டாலும் அவர்களே அவ்வனுபவத்தைப் பெறுவார்கள்); ஆகவே, மனிதர், பெரியோராகிய அரசரை அவமதிக்காமல் அவர்கள் பாலடுத்து அவர்க்கிதமாக நடந்து அவரால் பெறத்தக்க பயனை அடையவேண்டும் என்பது இதன் கருத்து.

மரங்கள், தம்மிடம் வருவோர் நல்லோராயினும், தீயோராயினும், 'இவர்க்கு இடம் கொடுக்கலாம்' 'இவர்க் குக் கொடுக்கலாகாது' என்னும் வேறுபாடு கருதாமல் எல் லோருக்குமே இடந்தருதல் இயற்கை. அவற்றைப்போலவே அரசரும், பெண்களும் தம்மிடம் அடுத்து இதமாக நடந்து கொள்வோர் எத்தகையராயினும் பேதம் பாராட்டாமல் அடுத்திருப்பவர்க்கே நலம் புரிவது இயற்கை. இங்ஙனம், 'அரசர் செல்வத்தையும், பெண்கள் நலத்தையும் அடுத்தவரே அனுபவிப்பர்' என்று கூறியத னால், 'மனிதர் பெரியாராகிய அரசரை யடுத்து அவர்க்கிதமாக நடந்து அவரிடத்தே நற் பயனை அடைதல் வேண்டு மென்பது தானே பெறப்பட்டது. அரசர் அடுத்தாரெவர்க்கும் நலஞ் செய்வோர் என்று குறித்தத னால், அவர் சிறப்பையும், அவரை அவமதிக்கலாகாதென்

பதையும் விளக்கினார் முனிவர். அரசரைப் போலவே, மாதரும், தங்களிடம் அடுத்து இதமாக நடப்போர்க்கு நலஞ் செய்யக்கூடியவர்களா யிருத்தலினாலே அவர்களும் ஒற்றுமை நோக்கி இங்கு அரசருடன் சேர்த்துக் கூறப்பட்டார்கள்; எனினும், அதிகாரப் பொருண்மை நோக்கி அரசர் தன்மை மட்டும் பொருள் முடிபுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது; மகளிர் தன்மை கூறியது உவமையின்பாற்படும். இதில், 'மன்னர்திரு' மகளிரெழினலாம்' என்னும் இரண்டு பொருள்களையும், 'துன்னியார் துய்ப்பர் தகல்வேண்டா' என்னும் பொதுவாகிய ஒரே தன்மையில் முடித்தது ஒப் புமைக் கூட்டவணி; பின்னிரண்டடிகளில் அமைந்துள்ளது எடுத்துக் காட்டுவமை யணி; இவ்விரண்டணிகளும் சேர்ந்து வந்தது சேர்வையணி. பெரியாராகிய அரசர் செல்வம் அடுத்தாரெல்லோர்க்கும் பயன்படு மென்பதை,

''பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின்''

என்னும் (திருக்குறள்-216-ஆம்) செய்யுளும் உணர்த்தும். துன்னியார்- வினையாலணையும் பெயர்; இதில், துன்- பகுதி, ஆர்- விகுதி, இன்- இடைநிலை, (இதில் ஈறு குறைந்தது), யகரம்- உடம்படுமெய், பகுதியின் னகரம் இரட்டியது. தகல்- தொழிற்பெயர்; தகு- பகுதி, அல்- விகுதி. 'ஒருங்கு' என்னும் பகுதியே வினையெச்சமாயிற்று; நன்- வினை-32-ஆம் சூத்திரவுரை பார்க்க.

'மகளிர் எழில் நலம் துன்னியார் துய்ப்பர்' என்பதற்கு 'பெண்களின் அழகை, அவர்க்குக் கணவராகி நெருங்கி யிருப்பவரே அனுபவிப்பர்' என்று பொருள் கொள்ள வேண்டும்; நெருங்கி யிருப்பவ ரெல்லோரும் அனுபவிப்பர்' என்று கருத்துக் கொள்ளலாகாது; அங்ஙனம் கொள்ளின்அது குலமாதரின் உயர்வை விளக்காது பொது மகளிரின் இயல்பை விளக்கும். (எ)

168. *தெரியத் தெரியுந் தெரிவிலார் கண்ணும்*
பிரியப் பெரும்படர்நோய் செய்யும்- பெரிய
உலவா விருங்கழிச் சேர்ப்பயார் மாட்டுங்
கலவாமை கோடி யுறும்.

(இ-ள்.) பெரிய - பெரிதாகிய, உலவா- (நீர்) ஒழியாத, இருங்கழிச்சேர்ப்ப- விசாலித்த கழிக்கரையை யுடையவனே, தெரிய தெரியும்- விளங்க ஆராய்ந்தறியும், தெரிவு இல்லார் கண்ணும்- அறிவு இல்லாதவரிடத்திலும், பிரிய- (ஒருவர் கூடியிருந்து பின்னால்) நீங்க, (அப்பிரிவானது அவருக்கு), பெரும்படர் நோய்-மிக்க சிந்தனையாகிய துன்பத்தை, செய்யும்-, (இதுவே இங்ஙனம் துன்பத்தைச் செய்யும்போது, அறிவிற் சிறந்த பெரியாரோடு கூடிப் பிரிவதாலுண்டாம் துன்பத்திற்கோர் எல்லை கூறுதல் இயலாது; ஆதலின், அங்ஙனம் பெரியாரோடு கூடிப் பிரியும் சிநேகத்தைக் காட்டிலும்), யார் மாட்டும்- எவரிடத்திலுமே, கலவாமை- சிநேகஞ் செய்யாதிருத்தல், (நலஞ்செய்வதில்), கோடி உறும்- கோடிபங்கு மிகும்; எ-று.

அறிவற்ற சிறியாரிடத்திலும் கூடிப் பிரிந்தால், அப்பிரிவு மனத்தில் எந்நேரமும் சிந்தித்துக் கொண்டிருக்கத் தக்க பெருந் துன்பத்தைச் செய்யும்; இதுவே அங்ஙனம் துன்பஞ் செய்யுமெனில், பெரியாரைக் கூடிப் பிரிதலாலுண் டாந் துன்பம் அளவிடற் கரியதாம்; ஆதலின், அவ்வாறு பெரியாரோடு கூடிப் பிரியும் சிநேகத்தைக் காட்டிலும் அத்தகையினர் எவரிடத்தும் உறவு கொள்ளாதிருத்தல் மிகுந்த நன்மையாகும் என்பது இதன் கருத்து.

இங்ஙனங் கூறியதனால் கண்டவரோடெல்லாம் சிநேகஞ் செய்யாமல் நன்காராய்ந்து நட்பிற்குரியரோடு சிநேகங் கொள்ளவேண்டுமென்பதும், அங்ஙனம் கொண்ட சிநேகத்தை இடையில் விடலாகாதென்பதும், விட்டால் துன்பமுண்டாகு மென்பதும் விளங்கும்.

தொழிலார் - எதிர்மறை வினையாலணையும் பெயர். 'கண்ணும்' என்பதன் உம்மை- இழிவு சிறப்புப் பொருளது. பிரிய - நிகழ்கால வினையெச்சம். படர் - சிந்தனையெனப் பொருள் படும் உரிச்சொல்; சிந்தனையாவது - பிரிவாற் றாமையாலுண்டாம் கவலையை நினைத்துக் கொண்டிருத் தல்; இது நினைத்தற் பொருள் தருதலை, ''படரே யுள்ளல் செலவுமாகும்'' என்ற (தொல்-சொல்-உரி-44-ஆம்) சூத்திரத் தாலுணர்க. திருக்குறள், 'படர் மெலிந்திரங்கல்' என்னுமதி காரத் தில், 'படர்' என்பதற்குப் பரிமேலழகர், 'நினைவு' என்று பொருள் கூறியிருத்தலும் ஈண்டுணரத்தக்கது. கழி- நெடுந்தூரத்திலுள்ள ஊர்களிலிருக்கும் பொருளைத் தோணி களில் ஏற்றிக் கொண்டு வருதல் முதலிய வியாபாரத் தொழில் களுக்குதவியமாறு கடல் நீர் பாயும்படி ஏற்படுத்தப்படும் கால் வாய்களும், ஆறுகளுமாம். 'யார்மாட்டும்' என்பதி லுள்ள உம்மை- முற்றுப் பொருளது. கோடி- நூறிலட்சங் கொண்ட எண்ணின் பெயர்; வடசொல். இச்செய்யுளின் முதலடியும், இந்நூலின் 247-ஆம் செய்யுளின் மூன்றாமடியும் ஒப்புமை யுடையன. (அ)

169. *கல்லாது போகிய நாளும் பெரியவர்கட்*
செல்லாது வைகிய வைகலும்- ஒல்வ
கொடாஅ தொழிந்த பகலு முரைப்பிற்
படாஅவாம் பண்புடையார் கண்.

(இ-ள்.) உரைப்பின்- (பெரியோர் இயற்கையைப் பற்றிப் பேசுமிடத்து, கல்லாது - (படிக்கத் தக்கநூல்களைப்) படிக்காமல், போகிய- கடந்த, நாளும்- தினமும், பெரியவர் கள்- பெரியோர்களிடத்தில், செல்லாது - (நல்லறிவு கற்றுக் கொள்ளும் பொருட்டுச்) செல்லாமல், வைகிய-கழிந்த, வைகலும்- நாளும், ஒல்வ- (தம்மாற்கொடுக்கக்) கூடிய பொருளை, கொடாது-(விரும்பினவர்க்குக்) கொடாமல், ஒழிந்த- நீங்கிய, பகலும் - தினமும், பண்பு உடையார்க்கண்-

நற்குணமுள்ள பெரியாரிடத்தே, படாஆம்- சாராவாம், (என்க); எ-று.

பெரியோர் இயற்கையைப் பற்றிக் கூறுமிடத்து, படிக்கத்தக்க நூல்களைப் படிக்காமல் ஒழிந்த- நாளும், நல்லறிவு கற்றுக்கொள்ளும் பொருட்டுப் பெரியாரிடத்தே செல்லாமற் கழிந்தநாளும், கொடுக்கக் கூடிய பொருளை விரும்பினவர்க்குக் கொடாமல் போனநாளும் நற்குண முடைய பெரியாரிடத்தே ஏற்படமாட்டா என்று சொல்லுக என்பது இதன் கருத்து.

இங்ஙனம் கூறியதனால், நற்குணமுடைய பெரியார், தினந்தோறும் படிக்கத்தக்க நூல்களைப் படித்துக் கொண் டும், நல்லறிவு கற்றுக் கொள்ளும் பொருட்டுக் கல்வியறி வுள்ள பெரியாரிடத்துச் சென்று கொண்டும், கொடுக்கத்தக்க பொருளை யாசிப்பவர்க்குக்கொடுத்துக் கொண்டு மிருப்பார்க ளென்பது பெறப்படும். இதனால் பெரியார் குணச்சிறப்புக் கூறப்பட்டது. இங்ஙனம் பெரியார் சிறப்புக் கூறவே, அத்தகைய பெரியாரைச் சார்ந்திருக்க வேண்டு மென்பது தானே அமையும். பெரியோர் தினந்தோறும் நூல்களைக் கற்றுக் கொண்டே யிருப்பர் என்பதை, இந்நூல் 366-ஆம் செய்யுளின் முதலடியில், ''கல்லாக் கழிப்பர் தலையாயார்'' என்பதும் விளக்கும்.

இச்செய்யுளில், ஒரு பொருளையே குறிக்கும், நாள், வைகல், பகல் என்ற பல சொற்கள் அடுத்து வந்தது சொற்பொருட் பின் வருநிலையணி. கல்லாது போகிய நாளும், பெரியவர்கண் செல்லாது வைகிய வைகலும், ஒல்வ கொடா தொழிந்த பகலும் என்ற மூன்றுக்கும் பொருந்துமாறு ஈற்றில், 'பண்புடையார்கண் படாவாம்' என்ற வினை முற்றை வைத்து முடித்தது கடை நிலைத்தொழில் தீவகவணி எனப்படும். போகிய- பெயரெச்சம்; 'நாள்' என்பதனோடு முடியும்; இதில், போ- பகுதி, அ- பெயரெச்ச விகுதி, இன்-

இடைநிலை, (ஈறுகெட்டது), கு- சாரியை, யகரம் - உடம்படு மெய்; போகு- பகுதியெனக் கோடலுமொன்று. ஒல்வ- வினையாலணையும் பெயர்; இதில், ஒல்- பகுதி, அ- பலவின்பால் விகுதி, வ்- இடைநிலை. படாவாம்- எதிர் மறை வினைமுற்று; 'ஆம்' என்பதை அசையெனக் கொண்டு, 'படா' என்பதையே முற்றாகக் கொள்ளினுமாம். 'கொடாஅ, படாஅ' என்பவற்றிலுள்ள அளபெடைகள் செய்யுளோசை நிறைக்க வந்தன. (கூ)

170. *பெரியார் பெருமை சிறுதகைமை யொன்றிற்*
குரியா ருரிமை யடக்கந்- தெரியுங்கால்
செல்வ முடையாருஞ் செல்வரே -தற்சேர்ந்தார்
அல்லல் களைப வெனின்.

(இ-ள்.) ஒன்றிற்கு - (கல்வி முதலிய சிறந்த பொருள் களில்) யாதாயினு மொன்றிற்கு, உரியார்- உரிமையானவர் களுக்கு, உரிமை- உரிமையான குணமாவது, அடக்கம்- அடங்கி யிருத்தலாம், செல்வம் உடையாரும் - செல்வ முடையவர்களும், தன் சேர்ந்தார்- தம்மை அடுத்தவர்களின், அல்லல்- துன்பங்களை, தெரியுங்கால்- அறிந்தவிடத்து, களைப எனின்- நீக்குவார்களாயின், செல்வரே- செல்வ முடையவர்களேயாவர், (இவர்களைப் போல), பெரியார் பெருமை- பெரியார்க்குப் பெருமையாவது, சிறுதகைமை - (தற்பெருமை கொள்ளாமல், எவரும் தம்மை யடைதற்குரிய பணிவோடு கூடி யிருத்தலாகிய) எளிய தன்மையாம்; எ-று.

கல்வி முதலிய சிறந்த பொருள்களில் ஒன்றைப் பெற்றிருப்பவர்க்கு உரிமையான குணம் அடக்கம்; செல்வ முடையவர்களும் தம்மைச்சார்ந்தவர்களின் துன்பங்களை உணர்ந்தவிடத்து, நீக்குவார்களாயின் செல்வமுடையவர் களாவார்கள்; இவர்களைப்போல பெரியார்க்கும் பெருமை யாவது- தற்பெருமை யில்லாது எவரும் பழகுதற்குரிய எளிய

தன்மையோடு கூடிப் பணிவாயிருத்தலாம் என்பது இதன் கருத்து.

இதில், கல்விமுதலியவற்றில் ஒன்றையுடையார்க்கு அடக்கமும், செல்வமுடையார்க்குத் தம்மை யடுத்தவரின் துயர் நீக்குதலும் பெருமையா யிருத்தல்போல, பெரியார்க்குப் பணிவுடையவரா யிருத்தலே பெருமை யென்பதை விளக்கினார் முனிவர். இங்ஙனங் கூறியது எடுத்துக் காட்டுவமையணி. 'செல்வமுடையாரும் தற்சேர்ந்தார் அல்லல் களைபவெனின் செல்வரே' என்றதனால், செல்வமுடையார், தம்மைச் சேர்ந்தாரின் துன்பத்தைத் தீர்த்தலே அவர்க்குச் சிறப்பென்பதும், அங்ஙனம் தீர்க்காதவர் செல்வமுடையவரா யிருப்பினும் அவர் சிறப்படையா ரென்பதும், பிறரால் செல்வமுடையவராக மதிக்கப்படா ரென்பதும் பெறப்படும். இச்செய்யுளிற் கூறியவற்றால் பெரியார் பெருமை விளக்கப்பட்டது; இங்ஙனம் பெரியார் பெருமை விளக்கவே அத்தகைய பெரியாரை அவமதிக்காமல் அவருடைய நேயத்தைப் பெறவேண்டுமென்பது குறிப்பால் விளக்கப்பட்டது.

''கல்வி யுடைமை பொருளுடமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படு- மில்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின்''

என்னும் (நீதிநெறிவிளக்கம்) செய்யுளும்,

''தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு''

என்னும் (திருக்குறள்-212-ஆம்) செய்யுளும், இச்செய்யுட் கருத்துக்களைப் பெரும்பான்மையும் விளக்குவனவாம்.

சிறுதகைமை - பண்புத் தொகை; சிறுமையாகிய தகைமையென விரியும்; தகைமை- பண்புப் பெயர்; இதில், தகு - பகுதி, ஐ- விகுதி, மை- விகுதிமேல் விகுதி, ஐ- சாரியை எனினுமாம். 'செல்வமுடையார்' என்ற பன்மைக்குத்தக, 'தஞ்சேர்ந்தார்' என வருதல் முறைமை யெனினும், அங் ஙனம் வராமல், 'தற்சேர்ந்தார்' என வந்தது ஒருமைப் பன்மை மயக்கம்; இந்நூலின் 93-ஆம் செய்யுளில், 'நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்' என்ற முதலடியாலும், 150-ஆம் செய்யுளில், 'அற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத் தூற்றாவர்' என்ற இரண்டாமடியிலும், 'தற்சேர்ந்தார்' என்பது இங்ஙனம் வருதல் காண்க. களைப- பலர்பால் வினைமுற்று. (கo)

அதிகாரம் 18

நல்லினஞ்சேர்தல்

நல்லினம் சேர்தலாவது- நல்ல கூட்டத்தைச் சேர்தல்; நல்ல கூட்டமாவது- தாம் நல்ல மார்க்கத்தில் நடப்பதோடு தம்மை யடுத்தவர்களையும் அம்மார்க்கத்திற் செலுத்தும் பெரியோர்களின் கூட்டம். பெரியாரை அவமதிக்காமல் அவரிடத்தே நன்மதிப்பு வைத்த பின்னரே அவரோடு சேர்தல் ஏற்படுமாகலின் இது, பெரியாரைப் பிழையாமையின் பின் வைக்கப்பட்டது.

171. *அறியாப் பருவத் தடங்காரோ டொன்றி*
நெறியல்ல செய்தொழுகி யவ்வு- நெறியறிந்த
நற்சார்வு சாரக் கெடுமே வெயின்முறுகப்
புற்பனிப் பற்றுவிட் டாங்கு.

(இ-ள்.) அறியா பருவத்து - (அறியத்தக்கவைகளை) அறியாத (சிறு) வயதிலே, அடங்காரோடு - அடக்கமில்லாத தீயாரோடு, ஒன்றி - சேர்ந்து, நெறி அல்ல- (நன்) மார்க்கத்தைச் சாராத தீயகாரியங்களை, செய்து- இயற்றி, ஒழுகியவும்- நடந்த தீயமார்க்கங்களும், நெறி அறிந்த - நன்மார்க்கத்தை உணர்ந்த, நல் சார்வு- (பெரியோர் சார்பாகிய) நல்ல சேர்க்கையை, சார - அடைய, வெயில் முறுக- வெயிலானது அதிகரித்தலால், புல் பனி- புல்லிடத்தே சேர்ந்திருந்த-

பனியினது, பற்று விட்டு ஆங்கு- பற்றானது விட்டாற்போல, கெடும்- அழியும்; எ-று.

மனிதர், நன்மார்க்கங்களை உணராத சிறு பருவத்தில், அடக்கமில்லாத தீயாரோடு கூடிக் கெட்ட காரியங்களைச் செய்து நடந்த தீயமார்க்கங்களெல்லாம், வெயிலின் பிரகாசம் அதிகரித்தபோது புல்லிற் சேர்ந்திருந்த பனியின் பற்றானது நீங்கியதுபோல, அவர், பெரியாரிடத்தே சேர்ந்திருப்பதால் நீங்கிவிடும் என்பது இதன் கருத்து. இதில், உபமான உபமேயங்களோடு உவமவுருபு விரித்துப் பொருண்முடிபு கூறப்பட்டது உவமையணி. இதனால் நல்வினத்தைச் சேர்வதா லுண்டாம் பயன் கூறப்பட்டது. இங்ஙனங் கூறவே நல்லறிஞர் கூட்டத்தைச் சார்ந்திருக்க வேண்டுமென்பது தானே அமையும். அறிவு நிரம்பாத சிறு பருவமுடையார்க்கு 'நன்மை இன்னது, தீமை இன்னது' என்று நன்மை தீமைகளைப் பகுத்தறியுந் தன்மை இராதாதலின், அவர், தீயாரோடு கூடித் தீய காரியங்களையும் அச்சமின்றிச் செய்து கொண்டிருப்பர்; அத்தகையினர் நல்லோர் சேர்க்கையை அடையுங்காலத்தில் அவர்களுடைய நற்போதனையால் அத்தீயொழுக்கங்களெல்லாம் நீங்கிவிடும். இராக்காலத்தில் புல்லின்மேல் பனி சேர்ந்திருக்கும்; சூரிய வெப்பம் அப்புல்லின்மேற் பட்டமாத்திரத்தில் அப்பனி காய்ந்து நீங்கிவிடும். இவ்வாறு பனி நீங்கும் செய்கை, மனிதர் அறியாப் பருவத்தில் அடங்காரோடு கூடிச் செய்த செய்கை நல்லோரைச் சேர்ந்தவுடன் நீங்குவதை நிகர்த்த தாதலின் அதற்கிது உவமையாகக் கூறப்பட்டது.

அல்ல- குறிப்புவினையா லணையும் பெயர். ஒழுகிய- இறந்த காலங் காட்டுவதால் தெரிநிலை வினையா லணையும் பெயர். 'நெறியல்ல செய்தொழுகி யவ்வும்' என்பதை, 'செய்தொழுகிய நெறியல்லவும்' எனமாற்றிப் பொருளுரைப்பினுமாம். 'ஒழுகியவ்வும்' என்பதில் விரித்தல் விகாரத்தால் வகர மெய் மிக்கது. நெறி-

அறநூல்களில் விதிக்கப்பட்ட நன்மார்க்கங்கள்; ‘நெறி’ என்பது நன்னெறி, தீ நெறி என்னும் இரண்டிற்கும் பொதுவெனினும் இங்குப்பொருண்முடிபு நோக்கி நன்னெறியெனக் கொள்ளப்பட்டது. சார்வு- தொழிற்பெயர்; இதனைப் பெரியாருக்காக்கி ஆகுபெயரெனக் கோடலுமாம். உம்மை- இழிவு சிறப்புப்பொருளது. சார- காரணப் பொருட்டாய் வந்த இறந்தகாலச் செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். ‘விட்டால்’ என்பது, ‘விட்டு’ எனத்திரிந்து, ‘ஆங்கு’ என்னும் உவமை யிடைச்சொல்லோடு சேர்ந்து, ‘விட்டாங்கு’ என வந்தது. ‘விட்டது’ என்பது ஈறு குறைந்து இங்ஙனம் புணர்ந்த தெனினுமாம். (க)

172. *அறிமி னறநெறி யஞ்சுமின் கூற்றம்*
பொறுமின் பிறர்கடுஞ்சொற் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மையெஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல்.

(இ-ள்.) (நலமடைய விரும்பும் மனிதர்களே!) எஞ்ஞான்றும்- எக்காலத்திலும், அறம் நெறி- தருமமார்க்கத்தை, அறிமின்- அறியுங்கள், கூற்றம்- யமனுக்கு, அஞ்சுமின்- பயப்படுங்கள், பிறர்- அன்னியர் (சொல்லும்), கடுசொல்- கடினமானசொற்களை, பொறுமின்- பொறுத்துக் கொள்ளுங்கள், வஞ்சம்- வஞ்சனையை, போற்றுமின்- (உங்களிடம் சாராதபடி தடுத்துப்) பாதுகாத்துக் கொள்ளுங்கள், வினை தீயார்கேண்மை- தீய செயல்களையுடையாரது சிநேகத்தை, வெறுமின்- வெறுத்துநீக்குங்கள், பெரியார்- பெரியாரது, வாய்சொல்- வாயிலிருந்துவரும் நன்மொழிகளை, பெறுமின்- செவிக்கொள்ளுங்கள், (அதாவது கேளுங்கள்); எ-று.

நலமடைய விரும்பும் மனிதர்களே! எக்காலத்தும் தருமமார்க்கத்தைத் தெரிந்து கொள்ளங்கள்; யமனுக்குப் பயப்படுங்கள்; பிறர் கூறும் கொடுஞ்சொற்களைப் பொறுத்துக் கொள்ளுங்கள்; வஞ்சனைய உங்களிடம்

சேராமல் தடுத்துக் காத்துக் கொள்ளுங்கள்; தீவினை செய் வாருடைய சிநேகத்தை வெறுத்து நீக்குங்கள்; பெரியார் வாய்சொல்லைக் கேட்டுக் கொள்ளுங்கள் என்பது இதன் கருத்து.

அறநெறியை அறிதலாவது- தருமமார்க்கங்களை யுணர்ந்து செய்யத்தக்க தருமங்களைச் செய்வதாம்; அங்ஙனம் செய்வதால் புண்ணியஞ்சேரும்; அப்புண்ணியத்தால் இம்மை மறுமையாகிய இரண்டிடங்களிலும் நலமுண் டாகும்; யமனுக்கு அஞ்சுதலாவது- மரணம் வருங்காலம் நிச்சயமாக உணரப்படுவதன்றாகலின், அஃதெப்பொழுது வருமோவென்றஞ்சி, மரணம் வருவதற்குள் நற்காரியங் களைச் செய்து புண்ணியத்தைத் தேடிக்கொள்ள வேண்டு மென்று துணிந்த விரைந்து அறங்களைப் புரிதலாம்; இங் ஙனம் செய்வதாலும் இம்மை மறுமைகளில் அடைய வேண்டிய நற்பயன்கள் சித்திக்கும். பிறருடைய தீச்சொற் களைப் பொறுக்காவிடில் கோபமும் பகையும் அதிகரிக்கும்; அவற்றால் கொடுங்காரியங்களைச்செய்ய ஏதுவுண்டாகும்; அங்ஙனம் செய்வதால் இம்மையிலும், மறுமையிலும், துன்பமே அதிகரிக்கும்; அக்கடுஞ்சொற் களைப் பொறுப்ப தால் பகைவரும் சிநேகராவர்; அதனால் எப்பொழுதும் எவ்விடத்தும் நலமேயுண்டாகும். வஞ்சனை செய்வதால் பலருடைய பகையும், பாவமும் ஏற்பட்டு இவ்வுலகத் திலும், மேலுலகத்திலும் துன்பஞ்சேரும்; அதனை யகற்றுவ தால் எப்பொழுதும் நலமேயுண்டாகும். தீயாரோடு சிநேகஞ் செய்தால், அவர் தம்மோடு சிநேகஞ் செய்தவரைத் தீயமார்க் கங்களிற் புகுத்துவதோடு தாமும் அவர்க்கு நயவஞ்சகமாகப் பல தீங்குகளைச் செய்வர்; ஆகவே அவரோடு சிநேகஞ் செய்பவர் இவ்வுலகத்திலும் துன்புற்றுத் தீயகாரியங்களைச் செய்த பாவத்தால் மேலுலகத் திலும் தீராத்துயரத்துக் காளாவர். பெரியார் எப்பொழுதும் நல்ல போதனைகளையே செய்வர்; ஆதலின், அவர் சொல்லைக் கேட்பதால் நற் காரியங்களைச் செய்து நன்மையடைதற் கேதுவுண்டாகும்.

இங்ஙனம் இவை எப்பொழுதும் நலஞ்செய்யக் கூடியன வாகலின் நலமடைய விரும்புவோர் இவற்றைச் செய்தல் வேண்டு மென்றார் முனிவர்.

இவ்வதிகாரம் நல்வினஞ் சேர்தலைப்பற்றிக் கூறுவ தாகலின், அதற்கியையத் தீயினஞ்சேர்தலையே முதன்மை யாக விளக்க வந்த தாகும் இச்செய்யுள்; 'வெறுமின் வினை தீயார் கேண்மை' என்றதனால், 'நல்லோர் சிநேகத்தைப் பெறவேண்டு' மென்பது தானே அமையும்; இங்ஙனம் முனிவர் இதனையே சிறப்பாகக் கொண்டு கூறினாரெனி னும், இதுபோல நலந்தருவனவாகிய பிறவற்றையும் இனமாக உடனெடுத்துக் கூறினார்.

அறிமின், அஞ்சுமின், பொறுமின், போற்றுமின், வெறுமின், பெறுமின் என்பன ஏவற்பன்மை வினைமுற்றுக் கள். 'எஞ்ஞான்றும்' என்பது தீபகமாய் இந்த ஆறிடங் களினுஞ் சாரும். இங்குப் போற்றுதல்- காத்தல்; காத்த லாவது - வஞ்சனையை அகற்றி அது நெருங்கி வராதபடி பார்த்துக் கொள்ளுதல்; தினையை அழிக்கும் கிளியை விலக்குதலுக்கு, 'கிளிகாத்தல்' என்பது வழங்குதல் போல இஃதமைந்தது;

''செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா
னல்லிடத்துக்
காக்கிலென் காவாக்கா லென்''

என்னும் (திருக்குறள்-301-ஆம்) செய்யுளில், காத்தல்- இப் பொருளில் வருதல் காண்க. இனி, 'போற்றுமின் வஞ்சம்' என்பதற்கு, 'பிறர் செய்யும் வஞ்சனையினின்றும் உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்' என்று பொருளுரைத்தலு மொன்று. 'அஞ்சுமின் கூற்றம்' என்பதை, 'தீவினை செய்வ தால் யமதண்டனை யுண்டாகுமாதலால் அந்த யமனுக் கஞ்சித் தீவினையை விடுத்து நல்வினை செய்யுங்கள்'-என்று

பொருளுரைப்பினும் பொருந்தும். 'வினைதீயார்' என்பதை 'தீவினையார்' என மாற்றிப் பொருளுரைக்கப்பட்டது; இனி, 'வினைதீயார்' என்பதற்கு, 'செய்கையில் கொடியவர்' என்று பொருளுரைப்பினுமாம். பெரியார் வாய்ச்சொல்- அவர்கள் வாழ்த்துதலுமாம்; இங்ஙனம் பொருள் கொள்ளுமிடத்து, 'பெரியோர் விரும்புமாறு நன்மார்க்கத்தில் நடந்து அவருடைய வாழ்த்துதலைப் பெற்றுக் கொள்ளுங்கள்' என்றுரைக்க.

173. அடைந்தார்ப் பிரிவு மரும்பிணியுங் கேடு
முடங்குடம்பு கொண்டார்க் குறலாற்- றொடங்கிப்
பிறப்பின்னா தென்றுணரும் பேரறிவி னாரை
யுறப்புணர்க வம்மாவென் னெஞ்சு.

(இ-ள்.) உடம்புகொண்டார்க்கு- மனிதவுடம்பைப் பெற்றவர்களுக்கு, அடைந்தார் பிரிவும் - தம்மோடு சேர்ந்தவர்களை (சுற்றத்தார் நண்பர் முதலானவர்களை) நீங்குதலும், அரும்பிணியும்- (தீர்தற்கு) அரிதாகிய நோயும், கேடும்- (மற்றுப்பலவகை) அழிவுகளும், உடங்கு- ஒருங்கே, (அதாவது எல்லாம் ஒருமிக்க), உறலால்- சேர்தலால், தொடங்கு - (உதிக்கும்போதே இவற்றை அடையத்) தொடங்குகின்ற, இப்பிறப்பு - இந்த மனிதப் பிறப்பானது, இன்னாது- கெட்டது, என்று உணரும்- என்று (பிறப்பின் தீமையை ஆராய்ந்து) அறிகின்ற, பேர் அறிவினாரை- பெரிய அறிவினையுடைய நல்லோர்களை, என்நெஞ்சு-எனது மனமானது, உறபுணர்க- மிகுதியாகச் சேர்வதாக; எ-று.

'உடம்பைப் பெற்றவர்களுக்குத் தம்மைச் சேர்ந்தவர்களைப் பிரிதலும், தீராப்பிணியும், கேடும் ஒருங்கே சேர்தலால், தோன்றியது முதலே இவற்றை அனுபவிக்கத் தொடங்குகின்ற இப்பிறப்பானது கெட்டது' என்று பிறப்பினா லுண்டாம் தீமையை அறியும் சிறந்த அறிவுடைய நல்லோரை என்மனம் சேர்வதாக என்பது இதன் கருத்து.

பிறப்பின் தீமையை உணர்த்த பெரியார், அப்பிறப்பு நீங்கும் மார்க்கங்களை யுணர்ந்திருப்பராகலின், தம்மைச் சேர்ந்தார்க்கும் அவற்றை யுணர்த்துவர்; அதனால் அன்னாரைச் சேர்ந்தோர் துக்கத்துக் கேதுவாகிய பிறப்பு நீங்கி முத்தியின்பத்தை யெய்துவர்; ஆதலின், 'பிறப்பின்னா என் றுணரும் பேரறிவினாரை, உறப்புணர்க என்நெஞ்சு' என்றார் முனிவர். 'என் நெஞ்சுசேர்க' என்றதனால் 'பிறர் நெஞ்சும் சேர்க' என்பதும் குறித்த தாகும். இங்ஙனம்கூறவே, 'பிறப்புத் தீயதென்றுணரும் நல்லோரைச் சேர நான் அடைய முயல் கின்றேன்; மற்றை யரும் அடைய விரும்புவாராக' என்று ஆசிரியர் கூறினா ரென்பது தானே அமையும். இங்ஙனம் கூறியதனால் நல்லினஞ்சேர வேண்டு மென்பது குறிப்பிடப் பட்டது.

உடங்கு- ஒருங்கு என்பது போன்ற வினைப்பகுதி; இங்கு வினையெச்சப்பொருட்டாய் வந்தது; இவ்வினை யெச்சம் பொருணோக்கால் வினையுரியாயிற்று. 'தொடங்கி' என்பதற்கு, 'நூல்களைப் படித்துணரத் தொடங்கி' என்று பொருள்கொண்டு அதனை முதலிற் கூட்டிப் பின்னர், அடைந்தார்ப்பிரிவு முதலியவற்றைக் கூட்டி, 'உணரும்' என்பதனோடு சேர்த்து முடிப்பினும் பொருத்தமாம். இனி, 'தொடங்கி' என்பதை, 'உறலால்' என்பதற்கு முன்சேர்த்து 'உடங்குடம்பு கொண்டார்க்கு அடைந்தார்பிரிவு மரும்பிணி யுங்கேடும் தொடங்கி உறலால்' என முடித்தலுமொன்று. அம்மா- அசை. (ந)

174. *இறப்ப நினையுங்கா லின்னா தெனினும்*
பிறப்பினை யாரு முனியார்- பிறப்பினுட்
பண்பாற்று நெஞ்சத் தவர்களோ டெஞ்ஞான்று
நண்பாற்றி நட்கப் பெறின்.

(இ-ள்.) பிறப்பினை- (மனிதர்) பிறப்பை, நினையுங் கால்- ஆலோசிக்குமிடத்து, (அது), இறப்ப- மிகவும்,

இன்னாது எனினும்- கெட்டதானாலும், (அதாவது கெட்ட தாகத் தோன்றினாலும்), பிறப்பினுள்- அந்தப் பிறப்பி னுள்ளே, (அதனை யடைந்தோர்), பண்பு ஆற்றும்- நற் குணத்தைத் தாங்கி யிருக்கின்ற, நெஞ்சத்தவர்களோடு- மனமுடைய நல்லோர்களுடனே, எஞ்ஞான்றும்- எப் பொழுதும், நண்பு ஆற்றி- சிநேகத்தைச் செய்து, நட்கப் பெறின்- (பிரியாமல் அவர்களோடு) கூடி யிருக்கப்பெற்றால், பிறப்பினை- அப்பிறப்பை, யாரும்- எவரும், முனியார்- வெறுக்கமாட்டார்கள்; எ-று.

மனிதர் பிறப்புக் கெட்டதேயானாலும் அப்பிறப் பினை யடைந்தோர், நற்குணம் பொருந்திய நல்லாரோடு எப்பொழுதும் கூடியிருக்கப்பெறின், அவர்களுடைய பிறப்பை எவரும் வெறுக்கமாட்டார்கள்; உயர்ந்ததாகவே கருதுவார்கள் என்பது இதன் கருத்து.

இங்ஙனங் கூறியதனால் நல்லாரோடு கூடியவர் எவராலும் உயர்ந்தோராக மதிக்கப்படுவர் என்பது பெறப் படும். மனிதராய்ப் பிறந்தோர் பெரும்பான்மையும் உலக போகங்களேயே விரும்பி, முத்தி மார்க்கத்தை யுணராமல், நிலையற்ற உலக இன்பத்திற் கின்றியமையாத காரியங் களையே செய்து பிணி, பசி, மூப்பு, குறைந்த வாழ்நாள் முதலியவற்றை யடைந்து, நித்திய இன்பத்தை யிழந்தொழி வர்; ஆதலின், அத்தகைய மனிதர் பிறப்பு இழிந்ததாம்; எனி னும், அத்தகைய பிறப்பினையடைந் தோர், நற்குணங்களை யுடைய நல்லாரோடு கூடினால், அந்நல்லார் அவர்களுக்குப் பிறப்புநீங்கி முத்தி யடைதற் குரிய மார்க்கங்களைப் போதிப்பர்; அப்போதனையால் அவர் நித்திய இன்பமாகிய நற்பயனையடைவர். ஆதலின், பிறப்பு இழிந்ததாயினும் நல்லாரோடு கூடுவாருடைய பிறப்பு எவராலும் வெறுக்கப் படாது' என்றார் முனிவர்.

'இறப்ப நினையுங்கால் இன்னாது' என்றுவருந் தொடரை உள்ள படியே வைத்துப் பொருள் கூறினும் பொருந்தும். 'பிறப்பினை' என்பது இரண்டிடங்களினுங் கூட்டப்பட்டது. நண்பு- பண்புப் பெயர்; நள்- பகுதி, பு- விகுதி, ளகரம் டகரமாகி மெலிந்தது. (ச)

175. *ஊரங் கணநீ ருரவுநீர்ச் சேர்ந்தக்காற்*
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்- ஓரும்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோ னிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.

(இ-ள்). ஊர் அங்கணநீர்- (ஒரு) ஊரிலிருந்து கழியும் சலதாரை நீரானது, உரவு- சிறப்புப் பொருந்திய, நீர் - (குளம், நதி முதலியவற்றின்) நீரை, சேர்ந்தக்கால் - சேர்ந்தால், பேரும்பிறிது ஆகி-(தனக்குப்) பெயரும் வேறாய், தீர்த்தம் ஆம்- பரிசுத்தமான நீராம், (அதுபோல), ஓரும்- அறியத்தக்க, குலம்மாட்சி இல்லாரும் - குலப்பெருமை இல்லாதவர் களும், (அதாவது, உயர்ந்த குலத்திற் பிறவாதவர்களும்), நலம்மாட்சி - நல்ல குணங்களையுடைய, நல்லாரைச் சார்ந்து - உத்தமர்களை அடைந்து, குன்றுபோல் நிற்பர்- மலைபோல (பெருமையையுடையவராய்) நிலைபெற்றிருப்பார்கள்; எ-று.

ஊரிலிருந்து வெளிப்படும் சலதாரை நீரானது, குளம் நதி முதலியவற்றிலுள்ள நல்ல நீரைச் சேர்ந்தால், வேறு உயர்ந்த பெயர் பெற்றுப் பரிசுத்தமான புண்ணியதீர்த்த மாகிவிடும். அதைப்போல உயர்ந்த குலத்திற் பிறவாதவர் களும் நற்குணமுடைய உத்தமர்களைச் சேர்ந்தால் மலை போல உயர்ந்தோராய் விடுவர் என்பது இதன் கருத்து.

இங்ஙனங் கூறியது எடுத்துக்காட்டுவமையணி. இச் செய்யுளால் நல்லாரைச் சேர்வதா லுண்டாகு முயர்வு கூறப்பட்டது. மலையானது, உயர்ந்த பல பொருள்களுள்ள

தாகவும், மழையற்ற காலத்திலும் நீர் சுரக்கும் இயல்பினை யுடையதாயும், அசையாது நிலைபெற்றதாயும், உயர்ந்த தோற்றமுடையதாயு மிருக்கும். அதைப் போலவே, நல்லோரைச் சேர்ந்தவர்களும், சிறந்த நூற்பொருள்கள் நிறைந்த உள்ளத்தவராயும், உலகத்தில் விளைவு குன்றிய காலத்திலும் பிறர்க்குப் பொருளைக்கொடுக்கும் இயல்புள்ளவராயும், எதற்கும் நிலை கலங்காத திடசித்த முடையவர்களாயும், புகழால் எங்கும் தெரியும் உயர்ச்சி பெற்றவராயும் விளங்குவர். ஆதலின், அத்தகைய மலை இவர்க்குவமையாகக் கூறப்பட்டது.

அக்கணம் தீர்த்தம் ஆகியவைகள்- வடசொற்கள். உரவு- வலிமை; இங்குச் சிறப்பை விளக்கி நின்றது. 'பேரும் பெரிதாகி' என்றும் பாடபேதமுண்டு; அப்பாடத்திற்கு, 'பேரும் சிறந்ததாய்' என்று பொருள் கொள்ளவேண்டும். 'ஓரும் என்பது அசை நிலையுமாம்;

"அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா"

என்னும் (திருக்குறள்-366-ஆம்) செய்யுளுரையில் பரிமேலழகர், ஓரு மென்பன அசைநிலை' எனக் கூறுதல் காண்க. (ரு)

176. *ஒண்கதிர் வாண்மதியஞ் சேர்தலா லோங்கிய*
வங்கண் விசும்பின் முயலுந் தொழப்படூஉங்
குன்றிய சீர்மைய ராயினுஞ் சீர்பெறுவர்
குன்றன்னார் கேண்மை கொளின்.

(இ-ள்). ஓங்கிய- உயர்ந்த, அம்கண் - அழகிய இடத்தையுடைய, விசும்பின் - ஆகாயத்திலே, ஒள்- விளக்கமாகிய, கதிர் - கிரணங்களையுடைய, வாள்- பிரகாசமுள்ள, 'மதியம்- சந்திரனை, சேர்தலால்- சேர்ந்திருத்தலினாலே, முயலும்- (அதனிடத்தே காணப்படும்) முசலும்,

தொழப்படூஉம் - (மனிதர் பலராலும்) வணங்கப்படும், (அது போல) (சிலர்), குன்றிய சீர்மையர் ஆயினும் - குறைவான சிறப்பையுடையவர்களானாலும், குன்று அன்னார் - மலையை நிகர்த்த பெருமை வாய்ந்த பெரியோர்களின், கேண்மை - சிநேகத்தை, கொளின் - கொண்டால், (அதனாலே தாங்களும்), சீர் பெறுவர் - சிறப்பினை அடைவார்கள்; எ-று.

சிறப்பில்லாத முயலும் உயர்வாகிய சந்திரனைச் சேர்ந்திருத்தலால் எல்லோராலும் வணங்கப்படும்; அதைப் போல தாழ்ந்தவர்களும் உயர்ந்தவரைச் சேர்ந்தால் சிறப்படைவார்களென்பது இதன் கருத்து.

முயலை எவரும் தொழமாட்டார்; சந்திரனையே தொழுவர்; எனினும், அது சந்திரனைச் சார்ந்திருப்பதால் சந்திரனுக்கு மனிதரால் செய்யப்படும் வணக்கம் அதற்கும் சாருகின்றது; அதைப் போலவே சிறப்பிழந்தவர்க்கு எவரும் மரியாதை செய்யமாட்டார்கள், பெரியோர்க்கே செய்வர்; எனினும், அச்சிறியாரும் அப்பெரியாரைச் சார்ந்திருப்பார்களாயின், அப்பெரியார்க்குப் பிறரால் செய்யப்படும் சிறப்பு அவர்க்கும் சாரும். இதனால் நல்லினஞ் சேர்தலின் உயர்வு விளக்கப்பட்டது. நல்லோரைச் சேர்தலால் உயர்வுண்டாமென்பதை, இனிது நாற்பது, ''கற்றார்முன்'' என்ற செய்யுளின், ''மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்னினிதே'' என்னும் இரண்டாமடியும் விளக்கும்.

இச்செய்யுளும் எடுத்துக் காட்டுவமையணி அமையப்பெற்றது. முயல் - சந்திரனடுவில் தோன்றும் களங்கம்; இதனை மறு வென்றும், மானென்றும், மலையென்றும், முயலென்றும் பலவகையாகக் கூறுதல் உலக வழக்கு; அக்களங்கத்தில் இவ்வடிவங்கள் தோற்றுவதைக் கொண்டே உலகினர் அதனை இப்பெயர்களிட்டு வழங்குவர்; இவ்வழக்குப்பற்றியே அறிஞர் இப்பெயர்களைச்

செய்யுட்களில் எடுத்தாளுவர். ''திங்களுட்டோன்றி யிருந்த குறுமுயால்'' (கலி-144) என்பது காண்க. சந்திரனுடைய பெருமை முயலுக்கு முண்டாமென்பதை, 'ஒருமுயல்' தன் இனத்திற்குக் கேடுசெய்த சதுரதந்தனென்னும் யானைக்குச் சந்திரமண்டலத்தைக் காட்டி அதிலுள்ள முயல் தன்னின மென்பதை விளக்கிப் பயத்தையுண்டாக்கி அதனைத் துரத் திற்று' என்னும் பஞ்ச தந்திரக்கதையும் விளக்கும்.

'ஒள்கதிர்' என்பதில், ளகரம் முதலில் டகரமாகிப் பின்பு ணகரமாக மெலிந்தது. 'வான்மதியம்' என்றும் பாட பேதமுண்டு; இப்பாடங் கொள்ளுமிடத்து இதற்கு, 'சிறந்த சந்திரன்' என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். 'முயலும்' என்பதிலுள்ள உம்மை- இழிவு சிறப்புப் பொருளது. தொழப் படூஉம் - இன்னிசை யளபெடை. 'ஆயினும்' என்பதன் உம்மையும் இழிவு சிறப்புப் பொருளதே. இச்செய்யுள் தனிச் சொல்லின்றி ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா. இதன் நான்கடிகளும் இனவெதுகை யமையப் பெற்றன.

177. *பாலோ டளாயநீர் பாலாகு மல்லது*
நீராய் நிறந் தெரிந்து தோன்றாதாந்- தேரின்
சிறியார் சிறுமையுந் தோன்றாதா நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து.

(இ-ள்.) பாலோடு - பாலுடனே, அளாய - கலந்த, நீர்- நீரானது, பால் ஆகும் அல்லது - அந்தப் பாலேயாகித் தோன்றுமேயல்லாமல், நிறம் தெரிந்து- (தன்னுடைய) நிறம் விளங்கி, நீராய்த் தோன்றாது- நீராய்க் காணப்படாது, (அது போல), தேரின் - (மனிதர் இயற்கையை) ஆராயுமிடத்து, சிறியார் சிறுமையும் - சிறியவர்களின் தாழ்ந்த குணமும், நல்ல பெரியார் பெருமையை- நற்குணமுடைய பெரியோர் களின் உயர்ந்த தன்மையை, சார்ந்து- சார்தலால், தோன்றாது- வெளிப்படாது, (அச்சேர்க்கையால் உயர்ந்த குணமாகவே விளங்கும்); எ-று.

நீரைப் பாலோடு கலந்தால், அந்நீர் தன்னிறம் சிறிதும் தோன்றாமல் அந்தப் பாலாகவே தோன்றுதல் இயற்கை; இதைப்போலவே சிறியார் பெரியார்களோடு கூடியிருப்பார் களேயானால் அவர்களுடைய தாழ்ந்த குணங்கள் பெரியார் களுடைய உயர்ந்த குணங்களால் தம்மைப்போலவே நற் குணங்களாக மாற்றப்பட்டு உயர்ந்த குணங்களாகவே விளங் கும். இதன் கருத்தாவது, சிறியார் பெரியாரோடு கூடுவார் களேயானால் அவர்களுடைய தாழ்ந்த் குணம் நீங்கி உயர்ந்த குணத்தைப் பெற்று விளங்கு வார்கள் என்பதாம். இதனால், சிறியாருடைய தாழ்ந்த குணமும், பெரியாருடைய உயர்ந்த குணத்தைச் சார்தலால் உயர்ந்ததாகிவிடும் என்பது விளக்கப் பட்டது. இங்ஙனம் சிறியாரியற்கை பெரியாரியற்கையைச் சார்தலால் சிறந்த தாகிவிடு மென்பதை,

> *''தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினு மவர்தம்*
> *மருண்ட தன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே*
> *உருண்ட வாய்தொறும் பொன்னுரு ளுரைத்துரைத்*
> *தோடி*
> *இருண்ட கல்லையுந் தந்நிற மாக்கிய விரதம்''*

என்னும் கம்பர் இராமாயணச் செய்யுளும் விளக்கும். இச் செய்யுளில் அமைந்த அணியும் எடுத்துக் காட்டுவமையே. 'அளாவிய' என்னும் இறந்தகாலப் பெயரெச்சம், 'அளாய' என மருவிற்று; 'அளாவு' என்னும் பகுதியில் ஈற்றுயிர் மெய் யாகிய, வு- குறைந்து, இறந்தகாலங் காட்டும் யகர இடை நிலையும், அகர விகுதியுஞ் சேர்ந்து இஃதுண்டாயிற் றென்க. 'நிறம் திரிந்து' எனவும் பாட பேதமுண்டு; இப் பாடத்திற்கு, 'நிறம்' திரிந்து' எனவும் பாட பேதமுண்டு; இப் பாடத்திற்கு, 'நிறம் வேறுபட்டு' என்று பொருளுரைத்தல் வேண்டும். ஆம் இரண்டும்- அசைகள். ஆம்- அசை யாகுமென்பது,

> *''பணியுமா மென்றும் பெருமை சிறுமை*
> *அணியுமாந் தன்னை வியந்து''*

என்னும் (திருக்குறள்-978-ஆம்) செய்யுளில் இரண்டிடங் களினும் வரும் ஆம் என்பனவற்றைப் பரிமேலழகர் அதனுரையில் அசையெனச் கூறுதலானும், தொல்காப்பியம்-சொல்லதிகாரம்- இடையியல்48-ஆம் சூத்திரவுரையில், சேனாவரையர் ஆம்- அசையாக வருமென்பதற்கு உதாரணங் காட்டியவிடத்து, இக்குறட்செய்யுளையே எடுத்துக் காட்டி யிருத்தலானும் துணியப்படும். (எ)

178. *கொல்லை யிரும்புனத்துக் குற்றி யடைந்தபுல்*
ஒல்காவே யாகு முழவ ருழுபடைக்கு
மெல்லியரே யாயினு நற்சார்வு சார்ந்தார்மேல்
செல்லாவாம் செற்றார் சினம்.

(இ-ள்). கொல்லை- தோட்ட நிலங்களிலும், இரு புனத்து - பெரிய வயலிலும், குற்றி -மரக்கட்டையை, அடைந்த - சார்ந்துள்ள, புல்- புற்கள், உழவர்- உழுபவர் களுடைய, உழுபடைக்கு, கலப்பைக்கு, ஒல்காவே ஆகும்-அசையாதவைகளா யிருப்பனவாகும்- அதுபோல பெரி யோரைச் சார்ந்தவர்), மெல்லியரே ஆயினும்- (இயற்கை யில்) பலமற்றவர்களா யிருந்தபோதிலும், நல்சார்வு சார்ந்தார் மேல் - (அங்ஙனம் பெரியோர் சேர்க்கையாகிய) நல்ல சேர்க்கையை அடைந்தவர்கள்மீது, செற்றார் சினம்- பகைவர் களுடைய கோபங்கள், செல்லா ஆம்- செல்லமாட்டாதவை களாய்விடும், (அதாவது, பகைவர் சினத்திற்கு அஞ்சி அவர்கள் கலங்கமாட்டார்கள்) எ-று.

தோட்டங்களிலும், வயலிலும் மரக்கட்டையைச் சார்ந்திருக்கும் புற்கள், உழவருடைய கலப்பைக்கு அசையமாட்டா; அதைப்போல பலமற்றவர்களும் பெரி யோரைச் சார்ந்திருந்தால் பகைவருடைய கோபத்திற்கஞ்சிக் கலங்கமாட்டார்கள் என்பது இதன் கருத்து.

உழவர் உழுங்காலத்தில் கலப்பையானது புறக்களைப் போக்குவதற்கே ஏற்பட்டதாகும்; எனினும், அப்புறக்கள் ஒரு கட்டையை அடுத்திருந்தால், அக்கலப்பையால் அவற்றைப் போக்குதல் இயலாது; ஏனெனில், கலப்பை கட்டையருகிற் சென்றால் அதிற்பட்டு ஒடிந்து விடும்; அது குறித்து உழவர், கட்டைமேற் கலப்பை செல்லாமல் அதனை ஒதுக்கிக் கொள்வர்; அதனால் கட்டையோரத்திலுள்ள புறக்கள் சிதையாமலிருக்கும். இதைப்போலவே, வலிமையற்ற சில மனிதருக்குப் பகைவராயிருப்போர் அவர்களை அழித்து விடக் கூடியவர்களாகவே யிருப்பார்கள்; எனினும், அவ் வலிமையற்ற மனிதர் வலியாரைச் சார்ந்திருப்பாராயின், அப்பகைவர் ஆங்குச் சென்றால் அவ்வலியார் தங்களை ஒடுக்கிவிடுவரென்றஞ்சி அவரிடம் நெருங்கித் தீங்கு செய்யத் துணியமாட்டார்கள். இதனால் நல்லாராகிய பெரியாரை அடுத்தவர்க்குப் பகைவராலும் தீங்கு செய்தல் முடியாதென்பது விளக்கப் பட்டது. இதனை,

''தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்''

என்னும் (திருக்குறள்-446-ஆம்) செய்யுளும்,

''மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்
வலியோர் தமைத்தா மருவிற் - பலியேல்
கடவு ளவிர்சடைமேற் கட்செவியஞ் சாதே
படர்சிறையப் புள்ளரசைப்பார்த்து''

என்னும் (நன்னெறி-9-ஆம்) செய்யுளும் உணர்த்துவனவாம். இச்செய்யுளும் எடுத்துக்காட்டுவமையணியுள்ளது. இச்செய்யுளின் நான்கடிகளுள்ளும் வருக்கவெதுகை. கொல்லை- தோட்டம்; அது மேட்டு நிலத்தில் அமைக்கப்படுவது; இது புன்செய் எனவும் படும். 'கொல்லை இரும்புனத்து' என்பதற்கு, 'தோட்டத்தைச் சார்ந்த அல்லது சோலையைச்

சார்ந்த நிலத்தில்' என்றும் பொருள் கொள்ளலாம். குற்றி-குறுகியதன்மையுடையது; மரக்கட்டைக்குக் காரணப் பெயர்; பகுதி- குறு என்னும் பண்படி, இ- பெயர்விகுதி, குறு என்னும் பண்படி ஒற்றிரட்டிற்று. புல், சினம் என்பன பால்பகா அஃறிணைப் பெயர்கள்; அவை ஒருமை, பன்மை ஆகிய இரண்டு முடிபுகளுக்கும் உரியவையாகலின் பன்மை வினைகொண்டு முடிந்தன. ஒல்கா, செல்லா என்பன- எதிர் மறைப் பலவின்பால் வினைமுற்றுக்கள்; 'ஒல்கா' என்பதில், ஒல்கு- பகுதி, ஆ- விகுதி; 'செல்லா' என்பதில், செல்- பகுதி, ஆ- விகுதி; இவ்விகுதிகளே எதிர்மறைப் பொருளையும் காட்டி நின்றன;

''அஅ ஈற்ற பலவின் படர்க்கை
ஆவே யெதிர்மறைக் கண்ண தாகும்''

என்னும் (நன்-வினை-10-ஆம்) சூத்திரவிதியால் ஆ- பலவின் பால் விகுதியாவதோடு எதிர்மறைப்பொருளையு முணர்த்து மென்பது துணியப்படும். உழுபடை - வினைத்தொகை நிலைத் தொடராய்க் கலப்பைக்குக் காரணப் பெயராயிற்று; படை- கருவி.

179. *நிலநலத்தா னந்திய நெல்லேபோற் றத்தங்*
குலநலத்தா லாகுவர் சான்றோர்- கலநலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றாண்மை
தீயினஞ் சேரக் கெடும்.

(இ-ள்.) நிலம் நலத்தால்- நிலத்தினது வளத்தினாலே, நந்திய- வளர்ந்த, நெல்லேபோல் - நெற்பயிரைப்போல, (அதாவது நிலத்தின் நன்மையால் நெல் வளர்வது போல) (மனிதர்), தம்தம் - தங்கள் தங்களுடைய, குலம் நலத்தால் - கூட்டத்தின் நன்மையாலே, (அதாவது, தாங்கள் தாங்கள் சேர்கிற நல்ல மனிதர் கூட்டத்தின் நன்மையால்), சான்றோர் ஆகுவர்- உயர்ந்தோராவார்கள், தீவளி - கொடிய காற்றானது,

(அதாவது வேகமான சுழிகாற்றானது), சென்று- போய், கலநலத்தை- கப்பலின் பெருமையை, சிதைத்து ஆங்கு- கெடுத்ததுபோல, (அதாவது கொடுங்காற்றிற் சிக்குவ தனாலே மரக்கலம் தன் பெருமை கெட்டுச் சிதைந்தழிவது போல), (மனிதர்), தீ இனம் சேர - கெட்ட குணமுள்ள மனிதர் கூட்டத்தைச் சேர்வதனாலே, சான்றாண்மை - அவர் களுடைய உயர்ந்த தன்மை, கெடும்- அழியும்; எ-று.

நிலத்தின் வளத்தால் நெல்லானது செழிப்புற்று வளர்வது போல மனிதர், தாங்கள் சேரும் நல்ல கூட்டத் தாரின் நன்மையால் உயர்ந்தோராவர்; கெட்ட காற்றிற் சிக்கு வதனாலே மரக்கலம் தன்னுடைய உயர்வு கெட்டழிவது போல மனிதர் தீயகூட்டத்தாரைச் சேர்வதால் அவர் களுடைய உயர்வு கெடும் என்பது இதன் கருத்து.

இனால், நல்லினஞ் சேர்தலின் உயர்வும், தீயினஞ் சேர்தலின் தாழ்வும் கூறப்பட்டன.

'நில நலத்தால் நந்திய நெல்போல்' என்பதற்கு, 'நிலத்தின் வளத்தால் நெல் வளர்வது போல' என்றும், 'கலநலத்தைத் தீவளி சென்று சிதைத்தாங்கு' என்பதற்கு, 'கொடுங்காற்றிற் சிக்குவதனாலே மரக்கலம் தன்பெருமை கெட்டுச் சிதைந்தழிவது போல' என்றும் கருத்துக்கள் அமைத்துக்கொள்ளல் வேண்டும். இச்செய்யுளில் இரண்டி டங்களினும், உவமையுருபு விரித்து உபமான உபமேயங்கள் கூறப்படுதலின் உவமையணிகள் அமைந்தன. 'நந்திய' என்பது பதவுரையிற் கூறிய பொருளில் பெயரெச்சமாகும்; 'நிலத்தின் வளத்தால் நெல் வளர்வது போல்' என்று பொருள் கொள்ளுமிடத்து, ஈறுகெட்ட தொழிற் பெயராம். 'நெல்லே' என்பதில், ஏ- அசை. 'தம்தம்' என்பது வலித்தல் பெற்று, 'தத்தம்' என வந்தது. 'கலம்' என்பது, கப்பல், ஆபரணம், ஆயுதம், கருவி, பாத்திரம், முதலியவற்றிற்கும் பொதுப்பெய ரெனினும் இங்குச் சிறப்பு நோக்கிக் கப்பலைக் குறித்து

நின்றது; இது பலவற்றிற்கும் பொதுவாதல் மரக்கலம், அணிகலம், படைக்கலம், உழுகலம், உண்கலம் என்பன வற்றால் உணரப்படும். 'சிதைத்து' என்பது, 'சிதைத்தால்' என்பதன் திரிபு. குலம், இனம் என்பன கூட்டமாகிய மனிதர்க்கு ஆகுபெயர்கள். கப்பலுக்குப் பெருமையாவது - கட்டு விடாதிருத்தல். ஆங்கு- உவமை யிடைச்சொல். (கூ)

180. மனத்தான் மறுவில ரேனுந்தாஞ் சேர்ந்த
இனத்தா லிகழப் படுவர்- புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனந் தீப்பட்டக் கால்.

(இ-ள்) புனத்து - காட்டைச் சார்ந்த கொல்லையிலே யுள்ள, வெறிகமழ் - வாசனைவீசுகின்ற, சந்தனமும்- சந்தன மரமும், வேங்கையும் - உயர்ந்த வேங்கை மரமும், (நல் லியற்கையுடையன வெனினும்) உழுநிலமாக்குதற்கு மரங் களை வெட்டி ஒரு பக்கத்திற் குவித்துச் செப்பஞ் செய்யப் பட்டிருக்கும் கொல்லையினருகி லிருந்தால், அம்மரங்களில் தீயிடப்படும்; அங்ஙனம்), எறிபுனம் - வெட்டிப் பண்படுத் தப்பட்ட கொல்லையில், (அதாவது கொல்லையில் வெட் டிக் குவிக்கப்பட்டிருக்கும் மரங்களில்), தீ பட்டக்கால்- நெருப்புப் பற்றினால், வேம் - வெந்துபோம், (இதைப் போல), (நல்ல இயற்கையுடைய மனிதர்கள்), மனத்தால் (தங்கள்) மனத்தின் இயற்கையாலே, மறு இலர் எனும்- குற்றமில்லாதவர்களாயினும், (கெட்ட கூட்டத்தாரோடு சேர்ந்தால், அவர்கள் கெட்ட காரியங்களைச் செய்யும்போது அவர்களைப் பிறர் நிந்திப்பதோடுஅவர்களுடன் கூடியவர் களையும் நிந்திப்பார்களாதலின், அவ்வாறு), தாம் சேர்ந்த இனத்தால்- தாங்கள் சேர்ந்த தீய மனிதரின் கூட்டத்தால், (அதாவது, தீய மனிதர் கூட்டத்தால் நேரும் கெடுதியால்), இகழப்படுவர் - (தாங்களும் பிறரால்) நிந்திக்கப்படுவார்கள்; எ-று.

காட்டின் சார்பில் புன்செய்ப் பயிர் செய்வோர், காட்டில் ஓரிடத்திலுள்ள மரங்களை வெட்டிக் குவித்து அவ்விடத்தை விளைநிலமாக்குவான் விரும்பி வெட்டப் பட்ட அம்மரங்களில் நெருப்பிடுவார்கள்; அவை அந்நெருப் பில் எரியுங்காலத்தில் அவ்விடத்திற்குப் பக்கத்திலிருக்கும் கொல்லையைச் சார்ந்துள்ள சந்தனம், வேங்கை முதலிய நல்ல மரங்களும் கெடுதி செய்யாதவைகளா யிருப்பினும் அக்கெட்ட மரங்களை யடுத்திருந்தால் அந்நெருப்பிடைப் பட்டு வெந்துபோம். இதைப்போலவே, கெட்ட இயற்கை யுள்ள மனிதர்களை அறிஞர் இகழ்வார்கள்; அத்தகைய கீழ்மக்களோடு நல்லார் சேரின், அவர்கள் மனத்தில் நல்ல இயற்கையுடையவர்களா யிருந்தாலும், அத்தீயார் இனத்தைச் சேர்ந்ததால், அவர்களும் அந்த அறிஞரால் கெட்டவராகவே கருதப்பட்டு இகழப்படுவர்.

இதனால், தீயினஞ் சேர்தலாண்டாம் கேடு விளக்கப் பட்டது. இதுகொண்டு தீயார் சேர்க்கையை விடவேண்டு மென்பதும், நல்லோர் சேர்க்கையைக் கொள்ளவேண்டு மென்பதையும், தீயார் சேர்க்கையைக் கொள்வார்க்குக் கேடுண்டாகு மென்பதும், தீயார் சேர்க்கையை அகற்று வார்க்கும், நல்லார் சேர்க்கையைக் கொள்வார்க்கும் நன்மை யுண்டாகு மென்பதும் துணியப்படும். இவற்றை,

''ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல்''

என்னும் (திருக்குறள்- 797-ஆம்) செய்யுளும், ''வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேம்'' என இச்செய்யுளில் வரும் தொடர்களையே உரையிற் புகுத்திப் பரிமேலழகரால் எழுதப்பட்டிருக்கும் அதனுரையும்,

'மனத்தானா மாந்தர்க் குணர்ச்சி யினத்தானாம்
இன்னா னெனப்படுஞ் சொல்'' (திருக்-453)

''மனநல மன்னுயிர்க் காக்க மினநலம்
எல்லாப் புகழுந் தரும்'' (திருக்-457)

என்னும் செய்யுட்களும் விளக்குவனவாம்.

சந்தன மரத்தை வேறு மரங்கள் சார்ந்திருந்தால் அவற்றிலும் சந்தனமணங் கமழும்; மூங்கில்கள் அடுத்திருந்தால், அவை ஒன்றோடொன்றுராய்ந்து தீப்பற்றிக் கொள்வதால் அந்த வனமுழுதும் அழிவ்தோடு அச்சந்தனமும் எரிந்து மூங்கில்களும் அழிந்துபோம். இந்த உவமையும் இச்செய்யுளிற் கூறியவாறு நல்லோர் சேர்க்கையால் நன்மையுண்டாவதற்கும், தீயோர் கூட்டத்தால் தீமையுண்டாவதற்கும் எடுத்துக் கூறப்படும்; இதனை,

''சந்தனத்தைச் சேர்தருவுந் தக்க மணங்கமழும்
சந்தனத்தைச் சார்வேய் தழல்பற்ற- அந்தவனந்
தானுமச் சந்தனமுந் தன்னினமு மாள்வதன்றித்
தானுங் கெடச்சுடுமே தான்''

என்னும் (நீதிவெண்பா-99-ஆம்) செய்யுளான் உணர்க.

மனத்தால் - என்பதற்கு, 'மனத்தில்' என்றும் பொருளுரைக்கலாம்; அங்ஙனம் பொருள்கொள்ளு மிடத்து இஃதுருபு மயக்கமென்க. புனம்- காடழித் துண்டாக்கப்பட்ட கொல்லை; காடெனினுமாம். எறிபுனம் - புனத்தில் வெட்டிப் போடப்பட்ட மரங்களுக்கு அடையடுத்த வாகு பெயர். 'வேமே' என்பதில், ஏ-தெளிவை விளக்கி நின்றது. இச் செய்யுளும் எடுத்துக் காட்டுவமையணியுள்ளது. (கO)

அதிகாரம் 19

பெருமை

அஃதாவது - உயர்வை விளக்குவது - மனிதர், எதனா லும் மனக்கலக்க மடையாமல், தாம் செய்ய வேண்டியவற் றைத் தம்மால் இயன்ற அளவு செய்யும் உறுதியாலுண்டாம் பெருமை. பெருமை - பண்புப் பெயர். நல்லினத்தார்க்கு இயற்கைக்குணமா யமைந்திருப்பதும், நல்லினஞ் சேர்வதா லுண்டாவதுமே பெருமையாகலின், இது, நல்லினஞ் சேர்த லின் பின் வைக்கப்பட்டது.

181. *ஈத லிசையா திளமைசே ணீங்குதலாற்*
காதலவருங் கருத்தல்லர் - காதலித்
தாதுநா மென்னு மவாவினைக் கைவிட்டுப்
போவதே போலும் பொருள்.

(இ-ள்.) (மனிதரே! நீங்கள் பொருளையும், இளமை யையும் ஒரு காலத்தில் பெறுவதனால், அவை எப்பொழுதும் நிலைத்திருக்கு மென்றும், பொருளால் ஈகையைச் செய்தும், இளமையால் இன்பத்தை யனுபவித்தும் வாழலாமென்று கருதி யிருக்கின்றீர்கள்; அப்பொருளும், இளமையும் நிலை பெற்றனவல்ல; பொருள் அழிந்து ஈகைக்கிடமில்லாமற் போவதோடு இளமையும் நீங்கிவிடும்; அங்ஙனம், பொருள் குறைந்து), ஈதல் இசையாது - (பிறர் விரும்பிய ஒன்றைக்)

கொடுத்தல் முடியாமல், இளமை- யௌவனமும், சேண் நீங்குதலால்- நெடுந்தூரத்தில் நீங்கிப் போவதனால், (இன் பானுபவத்திற்கேதுவாயிருந்த), காதலவரும்- ஆசையுடைய மாதரும், கருத்து அல்லர் (உம்மீது முன்போல் அன்பு செலுத்தும்) எண்ணமில்லாதவராகின்றனர், (ஆதலின்), காதலித்து - (அவ்வாறு பொருளையும், இளமையையும், மாதரையும்) விரும்பி, நாம்ஆதும்- நாம் வாழக்கடவோம், என்னும்- என்றெண்ணுகின்ற, அவாவினை- ஆசையை, கைவிட்டு - நீக்கி, போவதே - (இளமையிலேயே துறவுக்குச்) செல்வதே, பொருள்- நல்ல காரியமாகும்; எ-று.

மனிதர், தமக்குப் பொருளும், இளமையும் உண் டானபோது பொருளைக் கொண்டு தானஞ்செய்து மறுபிறப் பில் உயர்ந்த பதவியடையலாமென்றும், இளமையைக் கொண்டு மாதரைக் கூடி உலக இன்பத்தை யனுபவிக்கலா மென்றும், கருதி அப்பதவியிலும், இன்பானுபவத்திலும் மிகப் பற்றுடையவர்களா யிருக்கின்றார்கள். ஆனால், ஈகைக் குதவியான பொருளும், இளமையும் எப்பொழுதும் நிலைத் திராமல் நீங்கிவிடுகின்றன; அங்ஙனம் நீங்கவே பிறர்க்குப் பொருளைக் கொடுத்தல் இயலாமற் போய்விடுகின்றது; அவருடைய இளமையை விரும்பி அவர்க்கு இன்பத்தை நல் கிய மாதரும் அவர்மீது கொண்ட ஆசையை நீக்கி விடுகின் றனர்; இவற்றால் அவர்கள் இம்மையில் இன்பத்தை அனு பவித்து மறுமையில் உயர் பதவியை அடையலாமென்று விரும்பிய எண்ணம் கைகூடாமற் போய்விடுகின்றது. ஒரு சமயம் பொருள் நிலைத்து அதைப் பிறர்க்குக் கொடுத்து அப் புண்ணியத்தால் மறுபிறப்பில் உயர் பதவி அவர்க்குண் டாயினும் அப்பதவியும் ஒரு காலத்தில் மாறி மறுபிறப்புண் டாகும்; மாதர் இன்பம் ஒருவரின் ஆயுள்வரை அவர்க்குக் கிடைப்பினும் அதனோடு முடிவடைந்துவிடும்; அது நிலைத்த இன்பமாகாது. ஆதலால், இவற்றால் பயனில்லை யென்றும், முத்தியின்பமே நிலைத்ததாகு மென்றும்,

அதனையடைதற்கு இவற்றை விரும்பாமல் துறவடைய வேண்டுமென்றும் கூறினார் முனிவர்.

'துறவடைவதே நல்ல காரியம்' என்று கூறியத னால் இதனைச் செய்தல் பெருமையுடைய தென்பது விளக்கப் பட்டது.

இதில், சில வாக்கியத் தொடர்கள் பொருண்முடிபுக் குத்தக இசையெச்சமாக வருவித் துரைக்கப்பட்டன. 'இளமை' என்பதில் இறந்தது தழுவிய எச்சவும்மை தொக் கது. 'காதலவரும்' என்பதன் உம்மை-உயர்வு சிறப்புப் பொருளது. கருதது- முதனிலைதிரிந்த தொழிற்பெயர். கருத் தல்லர்-குறிப்புமுற்று. ஆதும்- தன்மைப் பன்மை யெதிர்கால வினைமுற்று; இதில், ஆ- பகுதி, தும் - விகுதி, இவ்விகுதியே காலங்காட்டும். போலும் - உரையசைப் பொருளது; இஃதொப்பில் போலியென்று சொல்லப்படும்; ஒப்பில் போலியாவது- ஒப்புமை யுணர்த்தாத போலிச்சொல்; ''ஒப் பில் போலியு மப்பொருட் டாகும்'' என்னும் (தொல்- சொல்- இடை-30-ஆம்) சூத்திரம் பார்க்க. (க)

182. இற்சார்வி னேமாந்தே மீங்கமைந்தே
மென் றெண்ணிப்
பொச்சாந் தொழுகுவர் பேதையார்- அச்சார்வு
நின்றன போன்று நிலையா வெனவுணர்ந்தார்
என்றும் பரிவ திலர்.

(இ-ள்.) பேதையார்- அறிவில்லாதவர்கள், (உலக பந்தத்திலகப்பட்டு இல்வாழ்க்கையிற் சார்ந்து), இல்சார் பின்- இல்வாழ்க்கையைச் சார்ந்ததனால், ஏமாந்தேம்- (நாம்) களிப்படைந்தோம், ஈங்கு- இவ்வுலகத்தில், அமைந்தேம்- (எல்லா நலங்களாலும்) நிறைந்தோம், என்று எண்ணி-என்று நினைத்து, பொச்சாந்து- (அதனால் பின்வருந்துன்பத்தை) மறந்து, ஒழுகுவர் - (அம்மயக்க வழியில்) நடந்து துன்புறு

வர், அ சார்வு - அத்தகைய நிலையற்ற இல்வாழ்க்கை முதலியவற்றின் சேர்க்கைகள், நின்றன போன்று- நிலை பெற்றவை போன்று நிலையா- (பின்) நிலைத்திராமல் கெடுவனவாகும், என உணர்ந்தார்- என்று உணர்ந்த அறிஞர்), துறவடைந்து நித்திய இன்பமாகிய முத்தியை எய்துவார் களாதலின்) என்றும்- எப்பொழுதும், (அத்தகைய துன்பத்திற் சிக்கி), பரிவது - வருந்துவது, இலர்- இல்லாதவராவர்; எ-று.

இல்வாழ்க்கை ஒருவகையில் உலக இன்பத்தைத் தரினும் அவ்வின்பம் நிலைத்ததாகாது; மேலும் அவ் வாழ்க்கையானது பிறவிக்கிடமானதே; இவ்வுலகத்திலும் பல துன்பங்களுக் கிருப்பிடமானது; துறவோ, இவ்வுலக துன்பங்களை விலக்கி நித்தியானந்த முத்தியின்பத்தை அளிக்கக்கூடியது; ஆதலின், இல்வாழ்க்கை யின்பத்தைப் பெரிதெனப் பாராட்டிக் களிப்போர் பேதையரென்றும், அவர் வருந்துவரென்றும், அவ்வில்வாழ்க்கை முதலிய வற்றா லேற்படும் இன்பங்கள் நிலையற்றனவென்றுணர்ந்து அவற்றை விலக்கத் துறவடைந்தோர் அறிஞரென்றும்; அவர் என்றும் வருந்தாரென்றும் கூறினார் முனிவர். இதனால் துறவடைதல் பெருமையென்பது குறிப்பிடப்பட்டது.

இதிலும், பொருண் முடிபுக்குத்தக இடையிடையே சில சொற்றொடர்கள் பெய்துரைக்கப்பட்டன. 'ஏமாந்தேம்' என்பதில், ஏமா- பகுதி. 'பொச்சாந்து' என்பதில், பொச்சா- பகுதி. 'இங்கு' என்னும் சுட்டு நீண்டு, 'ஈங்கு' என வந்தது. 'பரிவது இலர்' என்பதற்கு, 'அவ்வில்வாழ்க்கையினை விரும்புதல் இலராவர்' என்று பொருளுரைப்பினும் பொருந் தும். இலர்- குறிப்புமுற்று. (உ)

183. *மறுமைக்கு வித்து மயலின்றிச் செய்து*
சிறுமைப் படாதேநீர் வாழ்மின்- அறிஞராய்
நின்றுழி நின்றே நிறம்வேறாங் காரண
மின்றிப் பலவு முள.

(இ-ள்.) நிறம் - (மனிதர்) உருவானது, நின்றுழி நின்றே - இருந்தவிடத்தி லிருந்தே, வேறு ஆம்- வேறுவித மாக மாறிவிடும், (மனிதர் வாழ்க்கையில்), காரணம் இன்றி- ஒருகாரணமு மில்லா மாலே, பலவும் உள - பல மாறுதலான இடையூறுகளும் உள்ளனவாகும், (ஆதலின், மனதர்களே! இவற்றின் தன்மைகளை யுணர்ந்து இவற்றில் பற்று வைக் காமல்) நீர்- நீங்கள், அறிஞர் ஆய்- அறிவுள்ள வர்களாய், மறுமைக்கு - மறுமை யின்பத்துக்கு, வித்து- காரணமாகிய நற்காரியத்தை, மயல் இன்றி - மயக்கமில்லா மல், செய்து- இயற்றி, சிறுமைபடாதே - தாழ்மையிற் பொருந்தாமல், (அதாவது, தாழ்மையடையாமல் முத்தியின்பத்தைப் பெற்று), வாழ்மின்- வாழக் கடவீராக; எ-று.

மனிதர், தம்முடைய வடிவத்தையும், வாழ்க்கையை யும் உயர்ந்தனவென்று கருதி மகிழ்கின்றனர்; எனினும், அவ்வடிவமும், வாழ்க்கையும் நிலைபெற்றிருப்பதில்லை; இருப்பனபோன் றிருந்து மாறுதலடைந்து ஒழிந்துபோம்; அதனால் அவர்கள் மறுமைப் பயனை யிழந்து துன்புறுவர். ஆதலின், அவற்றைச் சிறந்தனவாகக் கொள்ளாமல் முத்தி யின்பத்துக்குக் காரணமாகிய நற்செயல்களைச் செய்ய வேண்டுமென்று கூறினார் முனிவர்.

இதனால், முத்தி யின்பத்தை யடைதற்குக் காரண மான நற்காரியங்களைச் செய்வது பெருமையென்பது விளக்கப்பட்டது.

மறுமை - இறந்தபின் மனிதர் சேருங்கதி. வித்து- காரணம்; அஃதிங்கு ஆகுபெயராய்க் காரணமாயிருக்கும் செய்கையை யுணர்த்திநின்றது. 'படாதே' என்பதில், ஏ- அசை. 'வாழ்மின்' என்பதில், மின்- முன்னிலைப் பன்மை விகுதி, 'நின்று' என்பது இங்கு, 'இருந்து' எனப் பொருள் பட்டு நின்றது. 'நின்ற உழி' என்பது, அகரந்தொக்கு, 'நின்றுழி' என விகாரப்பட்டு நின்றது. உழி- இடப்பொருளை

உணர்த்தி நின்றது. நிறம் - உரு. இதனை, சூடாமணி நிகண்டு பண்புப்பற்றிய பெயர்த்தொகுதி-26-ஆம் செய்யுள் உணர்த்தும்.

184. உறைப்பருங் காலத்து மூற்றுநீர்க் கேணி
இறைத்துணினு மூராற்று மென்பர்-
கொண்டகடனும்
சாஅயக் கண்ணும் பெரியார்போன் மற்றையார்
ஆஅயக் கண்ணு மரிது.

(இ-ள்.) உறைப்பு அருகாலத்தும்- மழைபெய்தல் அருமையான காலத்திலும், (அதாவது,மழை வறண்ட காலத்திலும்) ஊற்றுநீர் கேணி- ஊறுதலால் சேரும் நீரையுடைய குளமானது, இறைத்து உணினும் - (மனிதர் அதனிடத்துள்ள நீரை) இறைத்துப் பருகினாலும், (தன்னிடத்து வரும் மனிதர்க்கெல்லாம் வேண்டிய நீரைக் கொடுத்து), ஊர் ஆற்றும் - ஊரிலுள்ளவரைக் காப்பாற்றும், என்பர்- என்று சொல்லுவர் பெரியோர், (இதனால், பெரியோர் வருவாயற்ற காலத்திலும் தம்மிடமுள்ள பொருளைப் பலர்க்கும் உதவுவர் என்ற குறிப்பு விளங்கும்; ஆதலின்), கொடை கடன்- பொருளைப் பிறர்க்குக் கொடுத்தலாகிய கடமை, சாயக் கண்ணும் - (பொருளின்றித் தளர்ந்தபோதும், பெரியார் போல்- பெரியாரிடத்து (உள்ளது) போல, மற்றையார் - மற்றவராகிய சிறியார், ஆயக்கண்ணும்- செல்வமுடையவரான விடத்தும், அரிது- (அவரிடத்தில் உண்டாதல் இல்லை; எ-று.

மழையில்லாத காலத்திலும், ஊற்று நீரையுடைய கேணி ஊரிலுள்ள எல்லோருக்கும் நீரை உதவும் என்று பெரியோர் கூறுவர்; இதனால் பெரியோர் வருவாய் குறைந்த காலத்திலும் தம்மிடமுள்ள பொருளைப் பிறர்க்குக் கொடுப்பர் என்பது விளங்கும்; ஆதலின், பிறர்க்குப் பொருளைக் கொடுத்தலாகிய கடமை பெரியாரிடத் துண்டாவதுபோல சிறியாரிடத்தே அமையாது என்பது இதன் கருத்து.

இதில், பெரியாரிடத்தே பிறர்க்குப் பொருள் கொடுக்கும் குணம் அமையும், சிறியாரிடத்தில் அஃதமையாது என்று கூறியதனால் பெரியார்க்குரிய குணமாகிய பெருமை விளக்கப்பட்டது.

'பெரியார் போல்' என்பதற்கிடையில், 'உள்ளது' என்பதும், 'அரிது' என்பதற்குப்பின், 'அவரிடத்தில் உண்டாதல்' என்ற சொற்களும் கூட்டி யுரைக்கப்பட்டன. ஊர்- இடவாகுபெயர்; இஃதூரிலுள்ளாரை உணர்த்திற்று. 'கடனும்' என்பதிலுள்ள, உம்மை-அசை. சாயக்கண், ஆயக்கண் என்பன- கண் விகுதிபெற்ற எதிர்கால வினையெச்சங்கள். ஈற்றடிகள் இரண்டினுமுள்ள அளபெடைகள் செய்யுளோசை நிறைக்கவந்தன. 'அரிது' என்பதற்கு, 'கடனும்' என்பது எழுவாய். ஈற்றடிகள் இரண்டும் அளபுத்தொடை. பெரியோரது தன்மையாகிய உபமேயத்தை முன்னிரண்டடிகளி லுள்ள உபமானம் குறித்தது பிறிது மொழிதலணி. (ச)

185. *உறுபுன றந்துல கூட்டி யறுமிடத்துங்*
கல்லூற் றுழியூறு மாறேபோற் - செல்வம்
பலர்க்காற்றிக் கெட்டுலந்தக் கண்ணுஞ்
சிலர்க்காற்றிச்
செய்வர் செயற்பா லவை.

(இ-ள்) உறுபுனல்தந்து- (வெள்ளம் பெருகிச்செழித்த காலத்தில்) மிகுதியான நீரை (உலகத்தாருக்குக்) கொடுத்து, உலகு ஊட்டி - உலகத்தவரை உண்பித்து, அறும் இடத்தும்- (தன்னிடத்தே நீர்ப்பெருக்கு) அற்றகாலத்திலும், கல்ஊற்று - உழி- தோண்டுகிற ஊற்றினிடத்திலே, ஊறும்- (நீர்) சுரக்கும், (அதாவது, நீரைச் சுரப்பித்துச் சிலர்க்கேனும் உதவுகின்ற), ஆறேபோல்- நதியேபோல, (பெரியோராயினார்), (செல்வப் பெருக்குடையவர்களா யிருக்குங்காலத்தில்), செல்வம்- (தம் முடைய) பொருளை, பலர்க்கு ஆற்றி- பலர்க்குத் தானம் செய்து, கெட்டு உலந்தக் கண்ணும்- (தங்கள் நிலைமை)

கெட்டு (அப்பொருள்) ஒழிந்தவிடத்தும், சிலர்க்கு- சிலர்க் காயினும், ஆற்றி - (இயன்ற அளவு பொருளைக் கொடுத்து, அவருடைய வறுமைத் துன்பத்தைத்) தணித்து, செயல் பாலவை- செய்யத்தக்க உதவிகளை, செய்வர்- செய்வார்கள்; எ-று.

ஆறு, வெள்ளம் பெருகிச் செழித்த காலத்தில் பலர்க் கும் நீரை உதவி வெள்ளம் வற்றிய காலத்தில் தன்னிடத்தே தோண்டப்படுகிற ஊற்றின்மூலம் நீரைச் சுரப்பித்துச் சிலர்க் கேனும் உதவும்; அதேபோல பெரியார் தம்மிடத்தே பொருள் மிகுந்துள்ள காலத்தில் பலர்க்கும் அப்பொருளைக் கொடுத்து, அப்பொருள் அற்ற காலத்திலும் சிலர்க்கேனும் தம்மால் இயன்றவரை சிறிது பொருளை யேனும் கொடுத்து உதவி செய்வர் என்பது இதன் கருத்து.

இதில், பெரியார், பொருளற்ற காலத்திலும் ஈகை யுடையவராயிருப்பர் என்றதனால் அவர்களுடைய பெருமை விளக்கப்பட்டது. இந்நூலின், 150-ஆம் செய்யுளும்,

''ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டும்- ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து''

என்னும் (நல்வழி -6-ஆம்) செய்யுளும்,

''இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்''

என்னும் (திருக்குறள்- 218-ஆம்) செய்யுளும் இக்கருத்தையே விளக்குவனவாம். 'ஆற்றி' என்பதற்குத்தக, 'தானம்' என்னுஞ் சொல் கூட்டி யுரைக்கப்பட்டது. உறு- மிகுதிப் பொருளைக் காட்டும் உரிச்சொல்;

''அவைதாம்,
உறுதவ நனியென வரூஉ மூன்று
மிகுதி செய்யும் பொருள வென்ப''

என்னும் (தொல்-சொல்.உரி-3-ஆம்) சூத்திரம் பார்க்க. கல் ஊற்று - வினைத்தொகை. இங்குப் பெரியார் ஈகைத் தன் மைக்கு ஆற்றின் தன்மையை உவமையாக எடுத்துக் கூறியது உவமையணி. 147, 153-ஆம் செய்யுட்களின் ஈற்றடி களும், இச்செய்யுளின் ஈற்றடியும் ஒரே தன்மையுடையன. (ரு)

186. பெருவகை நாட பெரியார்கட் டீமை
கருநரைமேற் சூடேபோற் றேன்றுங் - கருநரையைக்
கொன்றன்ன வின்னா செயினுஞ் சிறியார்மேல்
ஒன்றானுந் தோன்றாக் கெடும்.

(இ-ள்.) பெருவரை - பெரியமலையுள்ள, நாட- பாண்டி நாட்டையுடைய அரசனே!, பெரியார்கண் - பெரி யாரிடத்தே உண்டாகும். தீமை- குற்றமானது, கருநரைமேல்- பெரிய வெள்ளை யெருதின்மேல் இடப்பட்ட, சூடேபோல் - சூட்டின் வடிவைப் போல, தோன்றும்- தெளிவாக விளங் கும், (சிறியார்), கருநரையை - பெரிய எருதை, கொன்று அன்ன - கொன்றதுபோன்ற, இன்னா- கெட்ட காரியங்களை, செயினும் - செய்தாலும், சிறியார்மேல்- அக்கீழ்மக்களிடத்து, ஒன்றானும்- (அவற்றுள்) ஒரு குற்ற மாயினும், தோன்றா- வெளிப்படாமல், கெடும்- மறைந் தொழியும்; எ-று.

பெரியாரிடம் உண்டாகுங் குற்றம் சிறிதேயாயினும் வெளிப்படையாகத் தெரியும்; சிறியாரிடத்தே உண்டாகுங் குற்றம் பெரிதே ஆயினும் அதில் சிறிதளவுந் தோன்றாது என்பது இதன் கருத்து.

இதனால், பெரியோர்கள் சிறு குற்றத்தையுஞ் செய்ய லாகா தென்பதும், அதுவே அவர்க்குப் பெருமையென்பதும் விளக்கப்பட்டன.

இச்செய்யுளிற் கூறியபடி, பெரியார் குற்றம் வெளிப் படையாகத் தெரியுமென்பதும், சிறியார் குற்றம் அங்ஙனந் தோன்றாதென்பதும்,

''கன்றி முதிர்ந்த கழியப்பன் னாள்செயினும்
ஒன்றுஞ் சிறியார்க ணென்னானுந் தோன்றாவாம்
ஒன்றாய் விடினு முயர்ந்தார்ப் படுங்குற்றம்
குன்றின்மே லிட்ட விளக்கு''

என்னும் (பழமொழி-80-ஆம்) செய்யுளால் விளங்கும். வெள்ளை எருதின்மேல் சூட்டுக்கோலால் சுடப்பட்ட வடு வானது கரிய நிறத்துடன் விளக்கமாகத் தெரியும்; மாட்டுக்கு நோய் கண்டபோது அதன் உடம்பின் பலபாகங்களில் அந் நோய் நீக்கத்தின் பொருட்டு மாட்டு மருத்துவர் சூட்டுக் கோலால் சுடுவது வழக்கம்; அதனால் அந்நோய் நீங்கும்; அச் சூட்டுக்கோலால் உண்டான வடுவானது அம்மாடு சாகும் வரை மறையாதிருக்கும். இது, பெரியோர் குற்றம் விளக்க மாகத் தெரிவதற்கு உவமையாக எடுத்துக் கூறப்பட்டது; இஃதுவமையணி. 'கருநரைமேல் சூடே போல்' என்பதற்கு 'கரிய நிற எருதின்மேலுள்ள முசுப்புப் போல' என்று உரை கூறுவாரமுளர்; முசுப்பு- திமில்.

நரை - வெண்மை; அது பண்பாகுபெயராய் அந் நிறத்தை யுடைய எருதை யுணர்த்திற்று. சூடு- சுடப்படுவது; முதனிலை திரிந்தது; இது சுட்டதனாலேற்பட்ட வடுவை யுணர்த்தி நின்றது. தோன்றா- ஈறுகெட்ட எதிர்மறை வினை யெச்சம்; இதன் முன் வல்லொற்று மிகுவது பொருத்த முடைத்தாம். 'தோன்றா கெடும்' என ஒற்றுமிகாமல் பாடங் கொண்டு, 'தோன்றா' என்பதை, அஃறிணைப் பன்மை

முற்றெச்சமாகக் கொள்வாருமுளர்; அங்ஙனங் கொள்ளின், 'ஒன்றானும்' என்ற ஒருமையை அதனோடு கூட்டி முடித்தல் இயலாது 'ஒன்றானும்' என்பதிலுள்ள ஆன்- விகற்பத்தைக் காட்டுமிடைச்சொல்; ஐயத்தையும் காட்டும்; 'ஏன்' என்பதும் இத்தயை பொருள்களைத் தரக்கூடியதே. உம்மை - இழிவு சிறப்புப் பொருளது. 'கருநரையைக் கொன்றன்ன இன்னா' என்றதும் உவமையணி. 'எருதைக் கொன்றதை நிகர்த்த தீமை கள்' என்று கூறியதனால், பசுக்கொலை பெரும்பாவமென் பது குறிப்பிடப்பட்டது. (கூ)

187. இசைந்த சிறுமை யியல்பிலா தார்கட்
பசைந்த துணையும் பரிவாம்- அசைந்த
நகையேயும் வேண்டாத நல்லறிவி னார்கட்
பகையேயும் பாடு பெறும்.

(இ-ள்.) சிறுமை- தாழ்ந்தகுணம், இசைந்த- பொருந் தியவர்களும், இயல்பு இலாதார்கண்- நற்குணமில்லாதவர் களுமாகிய கீழ் மக்களிடத்து, பசைந்த துணையும்- சிநேகித்த அளவும், பரிவுஆம்- துன்பமேயாம், அசைந்த- (நன் னெறியை விட்டுப்) பெயர்ந்த தீச்செயல்களை, நகையேயும்- விளையாட்டிலுங்கூட, வேண்டாத - (செய்ய) விரும்பாத, நல் அறிவினார்கண்- நல்ல அறிவையுடைய பெரியாரிடத்து, பகையேயும்- (ஏற்படும்) பகையும், பாடுபெறும்- பெரு மையை அடையும், (அதாவது, தீங்கியற்றாத உயர்வுள்ளதா யிருக்கும்), எ-று.

அற்பருடைய சிநேகம் எவ்வளவுவரையி லிருக் கிறதோ அவ்வளவு வரையில் துன்பமே அதிகரிக்கும்; பெரியாரிடம் ஏற்படும் பகையும் தீமையைச் செய்யாது என்பது இதன் கருத்து.

ஒருவர், சிறியாரோடு சிநேகங்கொண்டால், அவரி டத்து ஒரு சிறுதவறுநேரினும் அச்சிறியார் அவரோடு

பகைகொண்டு அவர்க்குப் பெருந் தீங்குகளைச் செய்துவிடுவர்; மேலும் அச்சிறியார் பற்பல தீயநெறிகளிற் புகுவராகலின் அவர்க்குப் பல தீங்குகள் நேரும்; அத்தீங்குகள் அவரோடு சேர்ந்தவர்க்கும் நேரும். பெரியாரோடு ஒருவர் பகைகொண்டிருப்பினும் அவர்கள் மிக்க பொறுமையுடையவராகலின் அப்பகையைப் பாராட்டமாட்டார்கள். அதனால் அவர்களோடு பகை கொண்டவர்க்கு அப்பெரியாரால் தீங்கொன்றும் நேரமாட்டாது. ஆதலின், சிறியார் சிநேகம் தீமை பயக்குமென்றும், பெரியார் பகையுந் தீமை செய்யாதென்றுங் கூறினார் முனிவர். இதனால் பெரியார் பெருமை விளக்கப்பட்டது. இச்செய்யுளிற் கூறியவாறு, சிறியார் கேண்மை தீமை பயக்குமென்பதையும், பெரியார் பகையுந் தீமை செய்யாதென்பதையும்,

> *''பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையார்*
> *ஏதின்மை கோடி யுறும்''*

என்னும் (திருக்குறள்-816-ஆம்) செய்யுளும் விளக்கும். சிலர், வேடிக்கையாகத் தம்மை யடுத்தவர்க்கு விசனமோ, கலக்கமோ உண்டாகும்படி அவரிடத்தே, நடக்காத செயல்கள் நடந்தனவென்று பொய் கூறுவர்; அவர் மனந் திடுக்கிடுமாறு அவர்க்குப் பொய்ப்பயங் காட்டுவர்; அச்செயல்களால் அவர்கள் வருந்துவார்கள்; பின் உண்மை தெரிந்தபின் அவ்வருத்தம் நீங்கப் பெறுவார்கள்; அங்ஙனம் அவர்கள் மயங்கித் தெளிவதைக் கண்டு, அச்செயல்களைப் புரிந்தவர் மனங்களித்து நகைப்பார்கள்; இச்செயல்கள் தீமை பயக்காதனவெனினும், அன்னோர்க்கு மனக்கலக்கத்தை உண்டாக்கக் கூடியனவாதலின், பெரியார் விளையாட்டின் பொருட்டுச் செய்யும் இவற்றையும் செய்யார். இனி, 'அசைந்த நகையேயும் வேண்டாத' என்பதற்கு, 'ஒழுங்கை விட்டுப் பெயர்ந்த (அதாவது ஒழுங்குதவறிய) பரிகாசத்தையும் விரும்பாத' என்று பொருளுரைத்தலு மொன்று.

அசைதல் - ஆடுதல்; இங்கு நிலைபெயர்தலை யுணர்த்தி நின்றது; நிலைபெயர்தலாவது நீதியாகிய நிலை யினின்றும் விலகிச்செல்லுதல். அசைந்த - பன்மை வினை யாலணையும் பெயர்; இதற்கு, 'பிறர் நடுங்குதற்குக் காரண மான தீச்செயல்கள்' என்று பொருளுரைத்தலுமொன்று. நகை - தொழிற்பெயர்; நகு - பகுதி, ஐ- விகுதி; நகையே பகுதி யாகும்; அங்ஙனமாகும்போது இது முதனிலைத் தொழிற் பெயரெனக் கொள்ளப்படும்; இஃதிங்குப் பரிகாசத்துக்கு ஆகுபெயர். பெரியார் பகை தீங்குசெய்யாத தாகலின் பெருமையாக கொண்டாடப்படும்; ஆகலின், ''நல்லறி வினார்கட் பகையேயும் பாடுபெறும்'' என்றார் முனிவர்.

188. *மெல்லிய நல்லாருண் மென்மை யதுவிறந்*
தொன்னாருட் கூற்றுட்கு முட்குடைமை யெல்லாஞ்
சலவருட் சாலச் சலமே நலவருள்
நன்மை வரம்பாய் விடல்.

(இ-ள்.) (உலகத்தில் பெருமையடைய விரும்பு வோர்), மெல்லிய- மென்மைத் தன்மையுள்ள, நல்லாருள் - மாதர்களிடத்தில், மென்மை- மெல்லிய தன்மை(காட்டுக), ஒன்னாருள்- பகைவர்களிடத்து, அது இறந்து- அம் மென்மைத் தன்மையைவிட்டு, கூற்று உட்கும்- யமனும் அஞ்சத்தக்க, உட்கு உடைமை- பயமுண்டாக்குந் தன்மை யுடைத்தாதலைக் (கொண்டிருக்க), சலவருள் எல்லாம் - பொய்யுடையவர்க ளிடத்திலெல்லாம், சால- மிகுதியாக, சலமே- பொய்யே (பேசுக), நலவருள்- நற்செய்கை யுடைய வர்களிடத்தில், நன்மை வரம்பாய்விடல்- நன்மைக்கு எல்லையாயிருக்கக் கடவர், (அதாவது, நன்மைக்கு வரம் பாகி அதனைத் தமக்குள் நிறுத்திச் செய்யக்கடவர்), எ-று.

உலகத்தில் பெருமையடைய விரும்புவோர், மெல் லிய தன்மையுள்ள மாதர்களிடத்து மென்மைத் தன்மையுள்ள நடக்கையுடையவர்களா யிருக்கவேண்டுமென்பதும்,

தமக்குத் தீங்குசெய்யும் பகைவரிடத்தில் அவர்கள் மிகவும் அஞ்சத்தக்க செய்கையையுடையவர்களா யிருக்க வேண்டு மென்பதும், பொய் பேசுகிறவர்களிடத்தில் மிகுந்த பொய்யே பேசவேண்டுமென்பதும், நற்செய்கையுடையவர் களிடத்தில் நன்மையே செய்யவேண்டுமென்பதும், இதில் கூறப்பட்டன. இதனால் இச்செயல்களையுடையார்க்கே பெருமையுண்டென்பது விளக்கப்பட்டது.

மனிதர், மென்மைத்தன்மையுள்ள மாதர்களிடத்தில் தாங்களும் மென்மைத் தன்மை காட்டாமல் கடினத்தன்மை காட்டுவார்களானால் அவர்கள் வெறுப்பும், மனத்துயரமுங் கொள்வர்; அவற்றால் அவர்கள், கணவனோடு இல் வாழ்க்கையில் ஒத்துழைக்கமாட்டார்கள்; அதனால் இல்லற தர்மங்கள் செவ்வனே நடைபெறா, ஆதலின், அங்ஙனம் மாதர்க்கிதமாக நடந்துகொள்ளாதவர்க்குப் பெருமையிராது. ஒருவர்க்குப் பகைவராயிருப்பவர் எப்பொழுதும் தீங்குசெய் யும் நாட்டமுடையவர்களாகவே யிருப்பாராதலின், அவர், அப்பகைவர் அஞ்சத்தக்க காரியங்களையே செய்யவேண் டும்; அங்ஙனம் செய்தால் மாத்திரமே அவர்கள் பயந் தொடுங்குவார்கள்; அவர்களால் தமக்குத் தீங்கும் நேராது; அங்ஙனம் அவர்களை அச்சுறுத்தாவிடின் அவர்கள் தலை யெடுத்துத் தமக்குப் பெருங்கேடுகளை விளைவிப்பர்; அதனால் பெருமைகெடும். பொய்பேசுவோர், கட்டுப் பாடான வார்த்தைகளையே பேசிப் பிறரை ஏமாற்றி வஞ்சனை புரிவோராகவே யிருப்பர்; மனிதர் அவர்களுடைய வார்த்தைகளை மெய்யென்று நம்பி அவர்களிடத்தே உண்மைபேசி அவர்களின் நோக்கம்போல் நடக்கத் தொடங் கினால் தாங்கள் ஏமாற்றமடைந்து பல கெடுதிகளுக் குள்ளாவர். அதனால் அவர்களுடைய பெருமைகெடும். அப்பொய்யர், பொய் பேசுங்காலத்தில் அம்மனிதர் அதை நம்பாமல் தாங்களும் பொய்பேசின் அவர்களுடைய ஏமாற்றத்தினின்றும் நீங்கலாம்; அதனால் பெருமையுண்டா கும். மனிதர் நல்லார்க்கு நலஞ்செய்யாவிட்டால் உலகத்தில்

அறிஞரால் வெறுக்கப்படுவர்; அதனால் அவர்களின் பெருமைகெடும். அவர்கள் அந்நல்லார்க்கு நலஞ்செய்யின் அவர்களிடம் செல்வஞ்சிறக்கும்; அவர்களுடைய புகழ் எங்கும்பரவும்; அதனால் பெருமையோங்கும்.

'மெல்லியனல்லாருள்' என்றும் பாடபேதமுண்டு; இதற்கு, 'மெல்லிய இயற்கையுடைய மாதரிடத்து' என்று பொருள் விரித்தல் வேண்டும்; 'மெல்லிய நல்லார்' என்பதற்கு, 'வலிமையில்லாதவரும், பகையில்லாதவருமாகிய நல்லவர்' என்று பொருள் கூறுவாருமுளர்; 'மெல்லிய நல்லார்' என்பது வெளிப்படையாகப் பெண்களை உணர்த்துதலானும், மாதர்க்கிதஞ் செய்தலே மரபாகலானும், தொல்-செய்- சூ- 201. இளம்- உரையில், இஃது, இச்செய்யுளடி உதாரணத்துடன் விளக்கப்பட்டிருத்தலானும், 'நல்லார்' என்பதைப் பெண்கள் என்று கொள்ளுதலே சிறப்புடைத்தாம். 'சலம்' பொய்; அதனையுடையார் - சலவர். நலம்- நன்மை; அதனையுடையவர் - நலவர். 'சலம்' என்பதற்கு, 'கோபம்' என்றேனும், 'வைராக்கியம்' என்றேனும் பொருள் கொள்ளினும் பொருந்தும். 'எல்லாம் சலவருள்' என்பதை, 'சலவருளெல்லாம்' என மாற்றிப் பொருளுரைக்கப்பட்டது. 'எல்லாம்' என்னும் பெயர் இருதிணைக்கண்ணும் பன்மை குறித்து வரும்; இங்கு உயர்திணைப்பன்மை குறித்து வந்தது; சலவர் அனைவரையும் விளக்கி நின்றது; இங்ஙனம் வருவதை, 'எஞ்சாப் பொருட்டாய் வருவதோர் உரிச்சொல்' என்பாருமுளர்;

''எல்லா மென்னும் பெயர்நிலைக் கிளவி
பல்வழி நுதலிய நிலைத்தா கும்மே''

என்னும் (தொல்-சொல்-பெய- 32-ஆம்) சூத்திரம் பார்க்க. 'மென்மை என்ற விடத்தில், 'காட்டுக' என்றும், 'சலமே' என்றவிடத்தில் 'பேசுக' என்றும் வியங்கோள்வினை முற்றுக்கள் கூட்டியுரைக்கப்பட்டன. இம்மூன்றிடங்களினும்,

நன்மை - என்றவிடத்தும் நான்கனுருபுவிரித்து, எண்ணும்மை கூட்டி, 'வரம்பாய் விடல்' என்பதனோடு முடிப்பாருமுளர். சால- உரிச்சொல்லடியாகப் பிறந்த செயவெனெச்சம். விடல்- அல்விகுதி பெற்றுவந்த உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று;

''பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்''

என்னும் (திருக்-196-ஆம்) செய்யுளில், 'மகனெனல்', 'பதடியெனல்' என்பவற்றில் முறையே எதிர்மறையினும், உடன்பாட்டினும் அல் விகுதிபெற்ற வியங்கோள் வருதல் காண்க. 'விடல்' என்பதில், விடு- துணிவுப் பொருளை உணர்த்திற்று. (அ)

189. கடுக்கி யொருவன் கடுங்குறளை பேசி
மயக்கி விடினு மனப்பிரிப்பொன் றின்றித்
துளக்க மிலாதவர் தூய மனத்தார்
விளக்கினு ளொண்சுடரே போன்று.

(இ-ள்). ஒருவன்- ஒரு மனிதன், கடுக்கி- (நெஞ்சத்தைக்) கடுமையாக்கிக்கொண்டு, கடுகுறளை பேசி- (தம்மோடு சேர்ந்தவர்கள் மீது) கொடுமையான கோட்சொற்களைக் கூறி, மயக்கிவிடினும்- (தமக்கு அவர்மீது வெறுப்புண்டாகும்படி தமதறிவை) மயக்கி விட்டாலும், மனம் பிரிப்பு ஒன்று இன்றி, (அதனால்) மனவேறுபாடு சிறிதுமில்லாமல், (அதாவது மனம் வேறுபட்டு அந்நேயரோடு பகைகொண்டு அவரை நீக்கிவிடாமல்), விளக்கினுள் ஒள் சுடரே போன்று - தீபத்தினிடத்துள்ள அழகிய பிரகாசத்தைப் போன்று, (அதாவது, தீபத்தினிடத்துள்ள பிரகாசம் அதைவிட்டு நீங்காதிருப்பதுபோல்), துளக்கம் இலாதவர் - அசைவில்லாதவர், (அதாவது தாம் அவர்மீது வைத்த நட்பைப்

பற்றிக்கொண்டிருப்பவர்), தூய மனத்தார்- சுத்தமான மனமுடையவராவார்; எ-று.

ஒருவர் மற்றொருவரோடு நண்புகொண்டிருக்கும் போது, ஒரு கோட்காரன் அவரிடத்தில், அந்நண்பர்மீது கோட்சொற்களைச் சொன்னதும் அவற்றைக் கேட்டு மன விகற்பமடைந்து அந்நண்பர்பால் வைத்த பற்றினை விட்டு விடாதிருத்தலே சிறந்ததென்பதும், அக்குணத்தினையுடை யாரே தூய மனத்தினரென்பதும் இதனால் விளக்கப்பட்டன. இங்ஙனங்கூறவே இக்குணமுடையார்க்கே பெருமையுண் டென்பதும், மற்றையர்க்குப் பெருமை யிராதென்பதும் குறிப்பால் விளங்கின.

குறளை- கோள்; அதாவது நடவாததைக் கூறுதல். 'ஒன்று' என்பது இங்குச் சிறிது என்பதை யுணர்த்திநின்றது. விளக்கைவிட்டுப் பிரகாசம் எப்பொழுதும் நீங்காது; அது மறையும்போதே தானும் மறையும்; அதைப்போலவே ஒரு வரிடத்தே மற்றொருவர் மீதேற்பட்ட பற்று அகலாதிருக்க வேண்டுமென்பதைக் குறித்தற்கே ஆசிரிய, 'விளக்கினுள் ஒண்சுடரேபோன்று துளக்கமில்லாதவர்' என்றார். இஃது வமையணி. துளக்கம்- அசைவு; இங்கு நீங்குதற் பொருள் குறித்து நின்றது. 'சுடரே' என்பதில், ஏ- உ யர்வு சிறப்பு. இன்றி - குறிப்பு வினையெச்சம்; இஃது, 'இலாதவர்' என் னும் குறிப்பு வினையாலணையும் பெயரைக்கொண்டு முடிந் தது. (க)

190. *முற்றுத்துந் துத்தினை நாளு மறஞ்செய்து*
பிற்றுத்துத் துத்துவர் சான்றவர்- அத்துத்து
முக்குற்ற நீக்கி முடிபு மளவெல்லாந்
துக்கத்து னீக்கி விடும்.

(இ-ள்.) முன்துத்தும்- முன்னே உண்ணுதற்குரிய, துத்தினை- உணவை, நாளும்- தினந்தோறும், அறம் செய்து-

(பிறர்க்கிட்டுத்) தருமஞ் செய்துவிட்டு, பின்துத்து- பின்னால் உண்ணுதற்குரிய உணவை, துத்துவர் சான்றோர்- உண்பார் பெரியோர், அ துத்து- அங்ஙனம் பிறர்க்குக் கொடுக்கு முணவு. முக்குற்றம் எல்லாம் நீக்கி- (அவர்களுடைய காமம், வெகுளி, மயக்கம் என்னும்) மூன்று குற்றங்களையும் போக்கி, முடியும் அளவு (அவர் ஆயுள்) முடிந்து முத்தியடையும்வரை, துக்கத்துள் நீக்கிவிடும்- அவர்களைத் துன்பத்தினின்றும் பிரித்துவிடும், (அதாவது அவர்களுடைய துன்பத்தை அகற்றிவிடும்); எ-று.

பெரியோராயினார், தாம் உண்ணும் பொருட்டு முதலிற் கொண்ட உணவைப் பிறர்க்கிட்டுப் பின்னர்க் கொள்ளுமுணவை யுண்பார்கள்; அங்ஙனம் அவர் பிறர்க்கிட்ட உணவானது, அவருடைய காமம், வெகுளி, மயக்கமென்னும் முக்குற்றங்களையும் நீக்கி, அவரின் ஆயுள்வரை அவரைத் துன்பத்தினின்று விலக்கி முடிவி லின்பமாகிய முத்தியிற் சேர்க்குமென்பது இதன் கருத்து.

எல்லாத் தருமங்களினும் பிறர்க்கு அன்னமிடுந் தருமம் மிகுந்த புண்ணியத்தைத் தரக்கூடியதாதலின், அதனால் மனிதர்க்குத் துன்பம் நீங்கி முத்தி சித்திக்குமென்று கூறினார் முனிவர். இதனால், உணவைப் பிறர்க்கிட்டுண்பாரின் பெருமை விள்க்கப்பட்டது. முதலுணவைப் பிறர்க்கிட்டுப் பின் கொள்ளுமுணவை யுண்பார்க்கு மிக்க வுயர்வுண்டாகுமென்பதை,

''வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்''

என்ற (திருக்-85-ஆம்) செய்யுளும் விளக்கும். காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களும் மனிதர்க்கு மிக்க துன்பத்தையே விளைவித்துப் பிறப்பினையுண்டாக்கும்; அவை நீங்கப்பெற்றார்க்கே உலக துன்பம் நீங்கி

முத்தியின்பங்கைகூடும். இத்தகைய துன்ப நீக்கத்தையும், முத்தியின்பத்தையும் அன்னதானம் தரக்கூடியதாயிருப்ப தனாலேயே, 'அத்துத்து முக்குற்ற நீக்கி முடியுமளவெல்லாந் துக்கத்தி ணீக்கிவிடும்' என்றார் முனிவர்.

துத்தும்- எதிர்காலப் பெயரெச்சம்; இதில், து- பகுதி, உம்- பெயரெச்ச விகுதி, த்- சந்தி, து- சாரியை, இதிலுள்ள உ- விகாரத்தால் கெட்டது. துத்து- வினையாலணையும் பெயர்; உண்ணத் தக்கது' என்பது இதன் பொருள்; இதில், து- பகுதி, து- ஒன்றன்பால் விகுதி, த் - சந்தி. இனி இதனைத் தொழிலாகு பெயரெனக் கோடலுமொன்று. 'துற்றும்' 'துற்றினை', 'துற்று', 'துற்றுவர்', 'துற்று' எனப் பாடங்கொள்வாருமுளர்; இப்பாடங் கொள்ளுமிடத்து, இவற்றிற்கு, துற்று- பகுதி யென்க. 'துக்கத்துள்' என்பதில், ஏழாம் வேற்றுமையுருபு ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் வந்தது. (க0)

அதிகாரம்-20

தாளாண்மை

தாளாண்மையாவது- முயற்சியை ஆளுந்தன்மை; இவ்வதிகாரம் இதைப்பற்றிக் கூறுவதாகலின் இப்பெயர் பெற்றது. முயற்சியானது, எல்லா நற்காரியங்களும் கைகூடச் செய்யும்; இது, பெருமையுடையார்க்கு, இன்றியமையாத தாதலின் 'பெருமை'. என்னும் அதிகாரத்திற்குப் பின் வைக்கப்பட்டது. முயற்சி பெருமையுடையார்க்கே உண் டாகுமாதலின் அச்சம்பந்தம்பற்றி அதற்குப்பின் இது வைக்கப்பட்டதெனினுமாம்.

191. *கோளாற்றக் கொள்ளாக் குளத்தின்கீழ்ப் பைங்கூழ் போல்*
கேளீவ துண்டு கிளைகளோ துஞ்சுப
வாளாடு கூத்தியர் கண்போற் றடுமாறுந்
தாளாளர்க் குண்டோ தவறு.

(இ-ள்) கோள்-)(நீரின்) கொள்கையை, ஆற்ற- மிகுதியாக, கொள்ளா- கொள்ளாத, குளத்தின்கீழ்- ஏரியின் கீழுள்ள, பைங்கூழ்போல்- (தன்விருத்திக்குத் தக்க முயற்சி செய்யாத) பசிய பயிரைப்போல, (அதாவது, பயிர்களின் விளைவுக்குப் போதிய நீர் நிரம்பாத ஏரியின்கீழுள்ள பயிர்,

அதில் நீர் இருக்கும்வரை செழிப்பாயிருந்து அந்நீர் வறண்ட பின் காய்ந்துபோவதுபோல), கிளைகள்- (தம்முடைய வாழ்க்கைக்கு ஒரு முயற்சியும் செய்யாமல் ஒருவருடைய உதவியையே நாடியிருக்கும்) சுற்றத்தார்கள், கேள் ஈவது உண்டு- (நெடுங்காலம்வரை நிலைத்திருக்கும் செல்வத் தைப் பெறாமல் சிறிதுகாலம் இருந்தொழியும் செல்வத்தைப் பெற்றிருக்கும்) உறவினர்கள் கொடுப்பதைப் புசித்து, (அவர் அச்செல்வத்தையிழந்து வறுமையுற்று வருந்துங்காலத்தில்), துஞ்சுப - (தாமும்) வருந்துவார்கள், தடுமாறும்- (மனம்) தடுமாற்றமடைதற்கேதுவாகிய, (அதாவது, மனங்கலங்குதற் கேதுவாகிய), வாள்ஆடு- வாளைக் (கரத்திற் பிடித்துச் சுழற்றி) ஆடுகின்ற, கூத்தியர்- கூத்தியர்களுடைய கண் போல்- (அபாயம்வராத மார்க்கத்தை ஆராய்ந்து பார்க்கின்ற) கண்களைப்போல், தாள்ஆளர்க்கு- முயற்சயைக் கையாள் கின்றவர்களுக்கு, (அதாவது, முயற்சியுடையவர்களுக்கு), தவறு உண்டோ- (அவர்கள் முயன்ற காரியங்களில்) தவறுதல் உண்டாகுமோ? (இல்லை.) (எவ்வித தவறுதலும் நேராமல் அக்காரியங்கள் முடிவுபெறும்); எ-று.

தாம் விருத்தியடைதவற்கு ஆதரவொன்றையும் தேடிக்கொள்ளாத பயிர்கள், தம் விளைவுக்குப் போதிய நீருள்ள குளத்தை நம்பியிருந்தாலும் அக்குளக்கரையுடைந்து நீரகன்றபோது வாடிப்போம்; போதாத நீருள்ள குளத்தை நம்பியிருந்தாலோ, பூரண விளைவையடையாமுன் அக் குளம் வறண்டபோது தாமும் காய்ந்துபோம்; இவற்றைப் போலவே, தம் வாழ்க்கை நடைபெறுவதற்குத்தக்க முயற்சியின்றிப் பிறர் உதவியையே நாடியிருக்கும் மனிதர், செல்வமிக்காராகிய சுற்றத்தாரின் உதவிபெற்று வாழ்ந்து வந்தாலும் அவர் செல்வம் கெடுங்காலத்தில் தாமும் கெட்டு வறுமைத் துன்பத்திற் சிக்கி வருந்துவார்கள்; செல்வங் குறைந்த சுற்றத்தாரின் உதவியைக் கொண்டிருந்தாலோ விரைந்து அவர் செல்வங்கெட்டு வருந்தும்போது தாமும் விரைந்து கெட்டு வருந்துவர்.தங்களுக்குக் கெடுதி வராமல்

ஆராய்ந்து நன்முயற்சிகளைச் செய்வார்க்குக் காரியசித்தி யுண்டாகும்; அதனால் செல்வம் பெருகும்; வறுமைத் துன்பம் நேராது.

இச்செய்யுளால் முயற்சியற்றுப்பிறர் உதவியை எப்பொழுதும் நம்பியிருப்பார்க்கு வறுமைத் துன்பமுண் டாகுமென்பதும், முயற்சியுடையவர் இகழ்ச்சியடையா ரென்பதும் விளக்கப்பட்டன.

கூத்திகள், வாள்களைக் கைகளிற் பிடித்துச் சுழற்றி விளையாடுவார்கள்; கத்திகளை வரிசையாக நட்டு அவற்றின் மேல் நெஞ்சு முதலிய அவயங்கள் உராய்ந்து செல்லும்படி பாய்ந்து தாவியும் விளையாடுவார்கள்; அங்ஙனம் விளை யாடும்போது, அக்கத்திகளால் தம் உறுப்புக்களுக்குப் பின்னம் நேர்ந்துவிடாதிருக்கவும், அவ்வித்தை வெற்றியுடன் நிறைவேறவும் அவர்கள் அச்செய்கைகளில் தம் பார்வையை அழுத்தமாகச் செலுத்திக்கொண்டிருப்பார்கள்; அக்கண்கள் அவர்களுக்கு அபாயத்தை நீக்கிக் காரியசித்தியை யுண்டாக்கு வதிலேயே கூர்மையாகச் சென்றுகொண்டிருக்கின்றன; அக்கண்களாலேயே அக்கூத்தியார்க்கு அபாயம் நீங்கி வெற்றி யுண்டாகிறது. அக்கண்களைப்போலவே, மனிதருடைய நன்முயற்சியும் அவர்களுக்கு வருந்துன்பத்தைத் தீர்த்து, நலத்தை யுண்டாக்கும். ஆதலின், அக்கண்கள் இம்முயற் சிக்கு உவமையாகக் கூறப்பட்டன.

'வாளாடு கூத்தியர்கண்' என்பதற்கு 'கத்தி முனையின் மேலிருந்து கூத்தாடுகின்றவர்களின் கண்கள்' என்றும், 'கூத்தியரின் ஒளிபொருந்திய கண்கள்' என்றும், 'கூத்தாடும் மாதரின் வாள்போன்ற கண்கள்' என்றும் பொருள்கள் உரைப்பினும் பொருந்தும்; கூத்தியர் கத்தியின் முனையி லேறி ஆடுவதும் ஒருவகை விளையாட்டு; கழைக்கூத்தியர் உயர்ந்த மூங்கிலை நட்டு அதன் நுனியிலேறிச் சுழன்றும், வளைந்தும் விளையாடுதல் ஒருவகை விளையாட்டு;

இவ்விளையாட்டுக்களிலும் அவர்களுடைய கண்கள், அவர்களுக்கு அபாயமுண்டாகாமல் காரியசித்தியாகும் மார்க்கங்களிற் சென்று கொண்டிருக்கும். 'பைங்கூழ்போல் கிளைகளோ துஞ்சுப' என்பது - உவமையணி; கூத்தியர்கண் போல் தாளாளர்க்கு' என்பதிலும் அவ்வணியே அமைந் துள்ளது. 'துஞ்சுப' என்பதற்குச் 'சாவா' எனப் பொருளுரைப் பினும் பொருந்தும். ஆற்ற - ஆற்று என்னும்பகுதியடியாகப் பிறந்த செயவெனெச்சம். கூழ்- உணவு; இது காரியவாகு பெயராய் இதற்குக் காரணமான பயிரை யுணர்த்திற்று. பசுமைகூழ்- பைங்கூழ்; 'பசுமை' என்னும் பண்படி, அடி அகரம் ஐ ஆய், மற்றவை கெட்டு நின்று கூழொடு புணருங் கால் இடையில் இன மெல்லெழுத்தாகிய ஙகரவொற்றுத் தோன்றப் பெற்றது. 'கிளைகளோ' என்பதில், ஓ- இரக்கப் பொருளது. கூத்து - பகாப்பதமாகிய தொழிற்பெயர். தடு மாறும் - காரியப் பொரு ளதாய்க்காரணத்தைக்கொண்டு முடி யும் பெயரெச்சம்; 'வாள்' என்பதைக்கொண்டு முடிந்தது. உண்டோ தவறு- எதிர்மறையெச்சம்.

'துங்சுவ' என்றும் 'துஞ்சுவர்' என்றும் பாட பேதங் களுண்டு. (க)

192. *ஆடுகோ டாகி யதரிடை நின்றதூஉங்*
காழ்கொண்ட கண்ணே களிறணைக்குங் கந்தாகும்
வாழ்தலு மன்ன தகைத்தே யொருவன்றான்
தாழ்வின்றித் தன்னைச் செயின்.

(இ-ள்) ஆடு கோடு ஆகி- அசைகின்ற கொம்பாகி, அதரிடை- வழியிலே, நின்றதூஉம்- நின்ற இளமையான சிறு மரமும், காழ்கொண்ட கண்ணே- (தனக்காதாரமான நீரைக் கொண்டு வளர்ந்து முதிர்ந்து) வைரங்கொண்டபோது, களிறு அணைக்கும் - யானையைக் கட்டுதற்குரிய, கந்து ஆகும் - கட்டுத்தறியாகிவிடும், ஒருவன்தான் - ஒரு மனிதன், தன்னை - தாழ்வு இன்றி- (விருத்தியில்) குறைதல் இல்லாமல்,

செயின் - விருத்தி செய்துகொண்டால், வாழ்தலும்- (அவனுடைய) வாழ்க்கையும், அன்னதகைத்தே- அப்படிப் பட்ட தன்மை யுடையதேயாம், (அதாவது, அந்த இளமர மானது முதலில் வலிமையற்றதாயிருந்து நீரைக்கொண்டு வளர்ந்ததால் வைரமுள்ளதாகி யானையைக்கட்டும் தறியாதல்போல, அந்த வாழ்க்கையும் முதலில் குறைந்த சிறப்புடையதாயிருந்து அவன் செய்யும் முயற்சியால் விருத்தியடைந்து பெருமையுள்ளதாகும்); எ-று.

இளமையில் ஆடுகின்ற கொம்பாகி வழியில் நின்ற சிறு மரமானது, தனக்கெவரு முதவிசெய்யாவிடினும் தன் முயற்சியால் மழைநீரைப் பருகி விருத்தியடைந்து பெரிதாகி வைரம்பெற்று விளங்கும்; அங்ஙனம் வலிமை பெற்றபின் வலிய யானையைக் கட்டுந்தறியுமாகும்; பிறர் உதவியை நாடாமல் தன்னைத்தானே விருத்திசெய்து கொள்ளும் முயற்சியுடையவனது வாழ்க்கையும் இவ்வாறே முதலில் குறைவுற்றதாயிருந்தாலும் முடிவில் சிறப்புடையதாய் விளங்கும் என்பது இதன் கருத்து.

இதனால் முயற்சியுடையவனது வாழ்க்கை சிறப் புடையதாகுமென்பது விளக்கப்பட்டது.

களிறு- ஆண் யானை; ''கரியொடு சுறவுபன்றி களி றெனக் காட்டலாமே'' என்னும்(சூடாமணி நிகண்டு- 3-வது விலங்கின் பெயர்த்தொகுதி-32-ஆம்) செய்யுளடியால், களிறென்னும் பெயர் யானை, சுறவு, பன்றி ஆகியவற்றின் ஆண்மரபை யுணர்த்துமென்பதும், அவற்றுள் முதன்மையாக யானையை உணர்த்துமென்பதும் விளங்கும்; ''வேழக் குரித்தே விதந்துகளி றென்றல்'' என்று தொல்காப்பியர் கூறுதலுங் காண்க. களிப்பையுடையது- களிறு; இதில்- களி -பகுதி, று - பெயர் விகுதி; களிப்பு - மதமயக்கம்; அதனை யுடைய யானை செருக்கும் வலிமையுமுடையதாயிருக்கும்; அதனைக் கட்டுந்தறி மிக்க வலிமையுடையதாகும்; ஆதலின்,

தானே விருத்தியடைந்து வைரம்பெற்ற மரம் மிக்க வலிமையுடையதென்பதை விளக்குதற்கு, 'ஆடு கோடாகி யதரிடை நின்றதூஉம், காழ்கொண்ட கண்ணே களிறணைக் குங் கந்தாகும்' என்றார் முனிவர். கொண்டகண்- பெயரெச்சத் தொடர்; இதனைக் 'கொண்டக்கண்' என்று கொள்ளின், கண்ணீற்று எதிர்கால வினையெச்சமென்க. தன் முயற்சியால் தன்னை விருத்தி செய்துகொள்பவனுடைய வாழ்க்கைக்கு தானே விருத்தியடைந்து வைரம்பெற்ற மரத்தின் இயற்கையை உவமை கூறியது- உவமையணி. கந்து- ஸ்கந்தம்' என்னும் வடசொற்றிரிபு. 'அதரிடை நின்றதூஉம்' என்றதனால், அம்மரம் போற்றுவாரின்றித் தானே வளர்ந்ததென்பது பெறப்படும்; இதிலுள்ள உம்மை- இழிவு சிறப்புப் பொருளது. அளபெடை- இன்னிசை நிறைக்க வந்தது. ஏகாரம் இரண்டும் தேற்றப்பொருளன. இரண்டா மடி- முற்றுமோனை. (உ)

193. உறுபுலி யூனிரை யின்றி யொருநாட்
சிறுதேரை பற்றியுந் தின்னும் - அறிவினால்
காற்றொழி லென்று கருதற்க கையினான்
மேற்றொழிலு மாங்கே மிகும்.

(இ-ள்.) உறுபுலி- (வல்லமையில்) மிகுந்த புலி யானது, ஒருநாள்- ஒருதினத்தில், ஊன் இரை இன்றி - (தனக் குகந்த) இறைச்சி யுணவில்லாமல் (அதாவது, மாமிச உண வகப்படாமல்), (தண் பசியைத் தணித்துக் கொள்ளவேண்டி) சிறுதேரை பற்றியும்- சிறிய தவளையைப் பிடித்தும், தின்னும்- புசிக்கும். (அதைப் போலவே மனிதர் தமக்குப் பெருந்தொழில் கிடைக்காமல் சிறுதொழில் கிடைத்த விடத்தும்), அறிவினால் (தம்முடைய) அறிவினாலே, கால் தொழில் என்று- காலினாலே செய்யக்கூடிய அற்பவேலை யென்று, கருதற்க- கருதாதிருப்பாராக, (அதாவது அதனைத் தாழ்ந்த தொழிலென்று நினைத்துத் தள்ளிவிடாமல் செய்வராக), கையினால் - (அங்ஙனம் அதைச் செய்து

கொண்டு மேலும் செய்யும்) முயற்சியால், ஆங்கே- அவ்வாறே, (அதாவது அச்சிறு தொழில் நடந்தவிதமாகவே), மேல்தொழிலும் - உயர்ந்த தொழிலும், மிகும்- (அவரிடத்தே) அதிகரிக்கும், எ-று.

புலியானது தன்குரிய மாமிச உணவகப்படாதபோது சிறிய தவளையைப் பிடித்துத் தின்றும் பசியைத் தணித்துக்கொள்ளும்; அதைப்போல மனிதரும் தமக்குத் தக்க பெரியதொழில் அகப்படாதவிடத்துச் சிறுதொழில் அகப்படினும் அதனையும் தள்ளாது செய்துவரின், அவர்க்கது கிடைத்ததுபோலவே பின்னால் பெருந்தொழிலுங் கைகூடு மென்பது இதன் கருத்து.

புலி தனக்குரிய இறைச்சி யுணவு கிடைக்காவிடின், அஃதன்றி வேறெதையும் புசிக்கலாகாதென்று வாளாலிருப் பின் பசிப்பிணியால் வருந்தி யிறக்கும்; ஆதலின், இறைச்சி கிடைக்காதபோது கிடைக்கும் சிற்றுணவையுமுண்டு உயிருடனிருந்து பெரிய உணவாகிய இறைச்சி கிடைக்கும்போது அதனைப் புசித்து மகிழும். அதைப்போலவே மனிதரும் தமக்குரிய பெருந்தொழில் கிடைக்காதபோது, அதைவிடுத்து வேறு தொழில்செய்தல் தங்களுக்குத் தகுதி யாகாதென்று எத்தொழிலையும் செய்யாமலிருந்தால் வறுமைத் துன்பத்தால் வருந்தியொழிவர்; அப்போது ஒரு சிறு தொழில் கிடைத்தாலும் அதனைத் தள்ளாது செய்தால் வறுமைத்துன்பத்தில் அழுந்தாமலிருப்பர்; அங்ஙனமிருந்து அத்தொழில் நடத்தி வருவதால் தானே பெரிய தொழிலு மேற்பட்டு அவர்க்கு மகிழ்ச்சியையும் புகழ்ச்சியையு முண்டாக்கும்.

இதனால், மனிதர் சிறுதொழில் கிடைத்த காலத்திலும் அதனைத் தள்ளாது செய்ய முயலவேண்டுமென்பதும், அம்முயற்சியால் பெருந்தொழிலும் சித்திக்குமென்பதும் விளக்கப்பட்டன.

இச்செய்யுளில் உவமையுருபு விரிக்காமல் உபமான உபமேயங்கள் கூறப்பட்டிருப்பது எடுத்துக்காட்டுவமை யணி. உறு- மிகுதிப் பொருளைக் காட்டு முரிச்சொல். 'பற்றியும்' என்பதிலுள்ள உம்மை- இழிவு சிறப்புப் பொரு ளது; எச்சப்பொருளதுமாம். கை- முயற்சி- 'கையினால் மேற்றொழிலும்' என்பதற்கு, 'கையாற்செய்யும் மேலான காரியமும்' எனப் பொருளுரைத்தலுமொன்று. ஆங்கு- இடைச்சொல்; இங்கு உவமைப்பொருள் குறித்துவந்தது.

194. இசையா தெனினு மியற்றியோ ராற்றால்
அசையாது நிற்பதா மாண்மை- இசையுங்கால்
கண்ட றிரையலைக்குங் கானலந் தண்சேர்ப்ப
பெண்டிரும் வாழாரோ மற்று.

(இ-ள்.) கண்டல்- தாழையை, திரை- அலைகள், அலைக்கும்- (மோதி) அசைக்கின்ற, கானல் - (நெய்தனிலச்) சோலையையுடைய, அம்- அழகிய, தண்- குளிர்ச்சி பொருந்திய, சேர்ப்ப- கடற்வரையையுடைய பாண்டியனே!, (மனிதர், ஒரு காரியம், தானே எளிதில் முடிவு பெறக்கூடியதா யிருக்கும்போது அதனை முடித்து அதில் வெற்றிபெற்று வாழுதல் ஆண் தன்மையாகாது); இசையுங்கால் - (அங்ஙனம் காரியம் எளிதிற்) கைகூடும்போது, (அதனைச் செய்து முடித்து அதனால் ஊதியம்பெற்று), பெண்டிரும் - பெண் களும், வாழாரோ- (மேன்மையாக) வாழமாட்டார்களோ?' (வாழ்வார்கள்), (ஆதலால், முடித்தற்கரிய காரியத்தை முடிக்கத்தொடங்கி), இசையாது எனினும் - (அது) முடியா விடினும், இயற்றி - (அதில் நேரும் இடையூற்றிற்கஞ்சி அதனை விட்டுவிடாமல் பெரிதும் முயன்று) செய்து, ஓர் ஆற்றால் அசையாது - ஒருவகையினாலும் தளர்ச்சி யடை யாமல், நிற்பது- (அம்முயற்சியிலேயே உறுதியுடன்) நிலைத்து நிற்பது, ஆண்மை- ஆம்- ஆண்தன்மையாகும்; எ-று.

மனிதர், எளிதில் முடியத்தக்க காரியத்தைச் செய்து முடித்து வாழ்வதால் சிறப்பில்லை; முடித்தற்கரிய காரியத்தை முடிப்பதே ஆண்தன்மையாம் என்பது இதன் கருத்து.

இதனால், ஆடவர், அரும்பெருங் காரியங்களைச் செய்வதில், பெண்களுக்கு மேற்பட்ட வல்லமையுடையா ரென்பதும், அவர்கள் முடித்தற்கரிய காரியங்களையே செய்ய முயல வேண்டுமென்பதும் விளக்கப்பட்டன.

'ஓர் ஆற்றால்' என்பதை, 'இயற்றி' என்பதனோடு கூட்டி, 'ஓர் ஆற்றால் இயற்றி' என முடித்து, அதற்கு, 'ஒரு வழியினாற் செய்து' என்று பொருள்கூறினும் அமையும். 'எனினும்' என்பதிலுள்ள உம்மை - உயர்வு சிறப்புப் பொரு ளது. 'ஆண்மை' என்பதில், மை- தன்மைப் பொருளுணர்த் தும் விகுதி. கானல் - கடற்கரைச் சோலை. 'பெண்டிரும்' என் பதிலுள்ள உம்மை- இழிவு சிறப்புப் பொருளது. வாழாரோ - எதிர்மறையெச்சம்; இது மாறு கொளெச்சமெனவும் படும்; அதாவது, வந்தசொல் தனக்கு மாறான பொருள் பயந்து நிற்பது.

''எதிர்மறை யெச்ச மெதிர்மறை முடிபின''

என்னும் (தொல்- சொல்-எச்-39-ஆம்) சூத்திரம் பார்க்க. அம்- அழகைக்குறிக்கும் உரிச்சொல்; சாரியை யெனினுமாம். மற்று- அசை. முடித்தற்கரிய காரியத்தை முடிக்கும் முயற்சியே ஆடவர்க்குப் பெருமையைத் தருமென்பதை,

''அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்''

என்னும் (திருக்- 611-ஆம்) செய்யுளும் உணர்த்தும். (ச)

195. *நல்ல குலமென்றுந் தீய குலமென்றுஞ்*
சொல்லள வல்லாற் பொருளில்லைத்-
தொல்சிறப்பின்
ஒண்பொரு ளொன்றோ தவங்கல்வி யாள்வினை
என்றிவற்றா னாகுங் குலம்.

(இ-ள்.) (நல்லகுலம், தீயகுலம் என்பவற்றைப்பற்றி ஆராயுமிடத்து, அவற்றிற்குச்) சொல் அளவு அல்லால்- சொல்லளவு மாத்திரமே யல்லாமல், (இயற்கையில்), நல்ல குலம் என்றும்- நற்குடியென்றும், தீயகுலம் என்றும்- தீயகுடி யென்றும், பொருள் இல்லை- அருத்தமில்லை, தொல் சிறப்பின் - பழமையான சிறப்பினையுடைய, ஒள் பொருள் ஒன்றோ - ஒள்ளிய செல்வமும், தவம்-தவமும், கல்வி- படிப்பும், ஆள்வினை- முயற்சியும், என்ற இவற்றான் - என்று சொல்லப்பட்ட இவற்றினாலே, குலம் ஆகும்- நற்குல முண்டாகும்; (இவையின்றேல் தீயகுலமுண் டாகும்); எ-று.

நல்லகுலமென்றும், தீயகுலமென்றும் சொல்லப்படுவன சொல்லளவாகமாத்திரம் ஏற்பட்டனவேயன்றி இயற்கையில் அவற்றிற்கு அப்பொருளில்லை; நல்வழியிற் சம்பாதித்துச் சிறந்த செல்வம், தவம், கல்வி, நன்முயற்சி ஆகியவற்றாலேயே நற்குலமுண்டாகும், இவை யில்லாமை யால் தீய குலமுண்டாகும் என்பது இதன் கருத்து.

இதனால், ஒருவர் பிறப்பு மாததிரத்தாலேயே உயர் குலத்தாராகவேனும், இழிகுலத்தாராகவேனும் அறிஞரால் கருதப்படாரென்பதும், செல்வம், தவம், கல்வி, நன்முயற்சி ஆகியவற்றைக் கொண்டிருத்தலால் உயர்குலத்தாராவரென்பதும், அவை யில்லாதிருத்தலால் தீயகுலத்தினராவரென்பதும் விளக்கப்பட்டன. ஒருவர் உயர் குலத்தை யடைதற்கு நன் முயற்சியே முக்கியகாரணம்; ஆதலின், முனிவர் அம்முயற்சி யினுயர்வைக் கூறத்தொடங்கி, அதனுடன் அதைப்போன்ற

சிறப்பினையுடைய செல்வம் முதலியவற்றையும் உடன் கூறினார்; இங்ஙனங் கூறியது, 'ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல்' என்னும் உத்தியின்பாற்படும். இங்ஙனம் பிறப்பினால் உயர்குலமும், இழிகுலமும் ஏற்படுவனவல்ல; அறிவு, நன்முயற்சி முதலியவை உண்மையாலும் இன்மையாலுமே ஏற்படுவனவாம் என்பதை,

''ஆக்கு மறிவா னலது பிறப்பினான்
மிக்கொ ளுயர்விழிவு வேண்டற்க- நீக்கு
பவரா ராவின் பருமணிகண் டென்றுங்
கவரார் கடலின் கடு''

என்னும் (நன்னெறி-22-ஆம்) செய்யுளும்,

''சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்- மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி''

என்னும் (நல்வழி-2-ஆம்) செய்யுளும் விளக்குவனவாம். ஒண்பொருள்- ஒளியையுடைய பொருள்; பொருளுக்கு ஒளியாவது- அது நல்வழியால் தேடப்பட்டு எங்கும் விளங்கு தலாம். நல்வழியால் தேடப்பட்ட பொருள் பழைய நூல் களிற் கூறப்பட்ட அறம் செய்தல், இன்பமனுபவித்தல் ஆகிய சிறப்பினைத் தருவதாகலின், தொல் சிறப்பி ணொண் பொருள்' எனப்பட்டது. ஒன்றோ- எண்ணிடைச் சொல்;

''பிறன்மனை நோக்காத பேராண்மை சாற்றோர்க்
கறனொன்றோ வான்ற வொழுக்கு''

என்னும் (திருக்-148-ஆம்) செய்யுளாலும், அதனுரை யாலும் இஃதுணரப்படும். 'என்றிவற்றான்' என்பதில், 'என்ற' என்னும் பெயரெச்சத்தின் ஈறுதொக்கது. ஆள்வினை-

வினைத்தொகை; ஆளும் வினையென விரியும். பொருண் முடிபுக் கேற்ப முதலிற் சில சொற்றொடர்கள் இசை யெச்சமாகக்கூட்டி யுரைக்கப்பட்டன. (ரு)

196. *ஆற்றுந் துணையு மறிவினை யுள்ளடக்கி*
ஊக்க முரையா ருணர்வுடையா ரூக்கம்
உறுப்பினா லாராயு மொண்மை யுடையார்
குறிப்பின்கீழ்ப் பட்ட துலகு.

(இ-ள்) உணர்வுடையார்- அறிவுடையவர்கள், ஊக்கம் - (பகைவராகிய பிறருடைய) மனவலிமையை, உறுப்பினால் - (அவர்களுடைய முகம் கண் முதலிய) அவயங்களால், ஆராயும்- ஆராய்ந்தறிகின்ற, ஒண்மையுடை யார்- புத்தித் தெளிவையுடையவர்களாய், (உணர்ந்து கொண்டு), ஆற்றும் துணையும் - (தாம் அவரை வெல்லுதற் குரிய காரியத்தைச்) செய்து முடிக்குமளவும், அறிவினை- (அதனைச்செய்து முடிக்கும்) அறிவின் திறத்தை, உள் அடக்கி- (வெளிப்படுத்தாமல்) மனத்திற்குள்ளேயே அடக்கி வைத்து, ஊக்கம்- (தமது) முயற்சியை, உரையார்- (பிறர்க்குச்) சொல்லார், (இவ்வாறு அவர்கள் இவற்றைச் செய்வதால், எடுத்துக்கொண்ட முயற்சி கைகூடப்பெற்று எதிலும் வெற்றியடைவர்; அப்பேர்ப்பட்டவர்களின்), குறிப்பின் கீழ்- கருத்தின் கீழே- உலகு- இவ்வுலகமானது, பட்டது- அடங்கியதாகும்; எ-று.

பகைவர்களாகிய பிறருடைய வன்மையை ஆராய்ந் தறிந்து, அவ்வலியொடுங்கத்தக்க முயற்சி செய்வார்க்கே அவரிடம் வெற்றியுண்டாகும்; அங்ஙனம் ஆராயாது காரியம் செய்வோர்க்குக் குறித்த காரியம் எளிதில் முடியாது; தோல்வியுண்டாகும். பகைவரையொடுக்கத்தக்க காரியத் தைச் செய்ய முயலுவோர், அக்காரியம் முடியுமுன் தம் முயற்சியைப் பிறரிடம் வெளியிடுவார்களானால் அது

பகைவர்க் கெட்டிவிடும்; அதனையுணர்ந்த பகைவர், அம்முயற்சி பயனடையாமற் போகத் தக்க உபாயங்களைச் செய்வர். அதனால் அவர்களுடைய முயற்சி கைகூடாமற் போய்விடும்; அவர்க்குத் தோல்வியேயுண்டாகும். ஆதலின், பகைவரிடம் வெற்றிபெற முயலுவோர், அவர்களுடைய உறுப்புக்களின் குறிப்பால் அவர்களிடத்தே இருக்கும் வன்மையை ஆராயந்தறிந்து, அஃதொடுங்கத்தக்க காரியத்தைச் செய்யத்தொடங்கி அது முடிவுபெறும் வரையில் இம்முயற்சியை வெளியிடாதிருக்க வேண்டும். இத்தகைய செயல்களையுடையாரே அறிவுடையவராவார்; இவர்க்கே பகைவரிடம் வெற்றியுண்டாகும்.

இதனால், பகைவரை யொடுக்குதற்குச் செய்யும் முயற்சியின் இயற்கையும், அதனுயர்வுங் கூறப்பட்டன.

இதிற் கூறியபடி முயற்சி செய்து பகைவரை யொடுக்கி வெற்றிபெறுவோர் உலகத்தாரெல்லோரையும் அடக்கியாளும் முடிமன்னராவராகலின், பலரும் அவருடைய ஆக்ஞைப்படியே நடப்பர்; அதனால், ''ஒண்மையுடையார் குறிப்பின் கீழ்ப்பட்டதுலகு'' என்றார் முனிவர். ஒருவருடைய இயற்கையை அவர்களுடைய உறுப்புக்களால் அறியலாமென்பதை,

''அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம்''

என்னும் (திருக்706-ஆம்) செய்யுளும்,

''பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின்''

என்னும் (திருக்-709-ஆம்) செய்யுளும் உணர்த்துவனவாம்.

'துணையும்' என்பதிலுள்ள உம்மை- முற்றுப் பொருளது. ஒண்மை - ஒளி; அஃதிங்குத் தெளிவையுணர்த்தி நின்றது. ஒண்மையுடையார்- முற்றெச்சம். உலகு- உலகத் திலுள்ளார்க்கு ஆகுபெயர். இச்செய்யுளின் இரண்டாமடி முற்றுமோனை. (கூ)

17. *சிதலை தினப்பட்ட வால மரத்தை*
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்
குதலைமை தந்தைகட் டோன்றிற்றான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்.

(இ-ள்.) (வயது முதிர்ந்து பெரும்பாகம் காய்ந்து), சிதலை- கறையானால், தின்னப்பட்ட- அரிக்கப்பட்ட, ஆலமரத்தை-, அதன்வீழ்- அதனின்று மிறங்கிய விழுதானது, மதலைஆய்- தூணாய் நின்று தாங்கி, ஊன்றி ஆங்கு- நிலைநிறுத்தினாற்போல, தந்தைகண்- பிதாவினிடத்தில், குதலைமை- தளர்ச்சியானது, தோன்றின்- உண்டானால், (அது), தான்பெற்ற புதல்வன் மறைப்ப- அவன் ஈன்ற புத்திரன் (தன்முயற்சியால்) மறைக்க, கெடும்- நீங்கிவிடும்; எ-று.

ஆலமரமானது, வயத முதிர்ந்து பெரும்பாகம் காய்ந்த போது, அதில் செல்லேறி மொய்த்து அதனைத் தின்னத் தொடங்கும். அத்தருணத்தில், அதிலுண்டாகிய வீழானது கீழிறங்கிப்பூமியில் வேரூன்றிவிடும்; அதனால் அம்மரத்தில் வேறு புதிய கிளைகளுண்டாகிப் பரவும்; அங்ஙனமாகவே அம்மரம் முன்னிலும் அதிகரித்த விசாலமும், வன்மையு முடையதாய் நெடுங்காலம்வரை விளங்கிக் கொண்டி ருக்கும். இதைப்போல, ஒருவன், தன் தந்தை வயது முதிர்ந்து தளர்ந்த காலத்தில், முன் அவன் ஏற்றிருந்த குடும்பப் பொறுப்பு தொழில் முதலியவற்றைத் தான் ஏற்று நடத்தி வருவானாயின், அத்தந்தையின் தளர்ச்சி நீங்கி அவனுக்கு

மகிழ்ச்சியும், புகழ்ச்சியும், செல்வமும் முன்னிலு மதிகரிக் கும். இதனால், ஒருவன் தான் உயர்வு பெற முயற்சி செய்வ தோடு, தன் முன்னோர்கள் பெருமை யடையவும் முயல வேண்டுமென்பது விளக்கப்பட்டது. இங்ஙனம், வீழானது ஆலமரத்தைத் தாங்குதல்போல, ஒருவன், தன் தந்தை முதலிய முன்னோர்களைத் தாங்குதல் கடனென்பதை,

''தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்ன
ஓங்குகுல நையவத னுட்பிறந்தவீரர்
தாங்கல்கட னாகுந்தலை சாய்க்கவரு தீச்சொல்
நீங்கன்மட வார்கள்கட னென்றெழுந்து போனான்''

என்னும் (சீவகசிந்தாமணி- காந்தருவதத்தையா ரிலம்பகம் - 6-ஆம்) செய்யுளும்,

''நைந்தடி யற்ற வாலம் நடுங்கிவீழ் கின்ற தென்று
வந்தவீ ழூன்றி வீழா வகைநிலை விளைக்கு மாபோல்
மைந்தர்கள் தமக்குள் நல்ல அறிவினால் மகிழ்ந்து சேர்ந்து
தந்தையைத் தளராவண்ணம் தாங்குவர் தவத்தினென்றான்''

என்னும் இராமாயணம் ஒட்டக்கூத்தர் உத்தரகாண்டச் செய்யுளும் உணர்த்துவனவாம்.

'ஆல்மரம்' என்பது, இடையில் அம்சாரியை பெற்று, 'ஆலமரம்' என வந்தது. 'மதலையாய்' என்பதற்கு, 'பிள்ளை யாய்' எனவும் பொருளுரைக்கலாம். 'மதலை' என்பது பிள்ளைக்கும், தூணுக்கும் செம்மொழிச்சிலேடை. இச்செய் யுளில் உவமையணி அமைந்துள்ளது.

198. *ஈனமா யில்லிருந் தின்றி விளியினும்*
மானந் தலைவருவ செய்பவோ- யானை
வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றாள்
அரிமா மதுகை யவர்.

(இ-ள்) யானை- யானையினது, வரி- புள்ளிகளை யுடைய, முகம்- முகத்தை, புண்படுக்கும்- புண்படச் செய்யும், வள்- கூர்மையுள்ள, உகிர்- நகங்களையும், நோன்- வலிமைபொருந்திய, தாள்- பாதங்களையும் (உடைய), அரிமா- சிங்கத்தினது, மதுகையவர்- வலிமையைப் பெற்ற வர்கள், (அதாவது, சிங்கத்தின் வலிமை போன்ற வலிமை யுடையவர்கள்), ஈனம்ஆய்- (தம் தொழில் முயற்சியில்) குறைவு நேர்ந்து, இல்இருந்து- வீட்டிலேயே இருந்து, இன்றி- (கைப்பொருளொன்றும்) இல்லாமல், விளியினும்- வருந்தினாலும், மானம் தலைவருவ- குற்றம் தம்மிடத்தே வரத்தக்க காரியங்களை, செய்பவோ- செய்வார்களோ?, (செய்யமாட்டார்கள்); எ-று.

சிங்கத்தைப்போன்ற வல்லமை பெற்றவர்கள், ஒருகாலத்தில் தங்களுடைய முயற்சி கெட்டு வறுமையுற்று வீட்டில் வருந்தியிருந்தாலும், அவ்வறுமைத்துன்பங் காரண மாக இழிவான காரியங்களைச் செய்யமாட்டார்கள்; எந் நிலையிலும் உயர்ந்த காரியங்களையே செய்ய முயல்வர் என்பது இதன் கருத்து.

இதனால், மனிதர் வறுமையுற்றுத் துன்பமடையுங் காலத்திலும் உயர்வான காரியங்களையே செய்ய முயல வேண்டுமென்பது விளக்கப்பட்டது.

இங்ஙனம் உயர்ந்தோர் வறுமையுற்ற காலத்திலும் இழிந்த காரியங்களைச் செய்ய மாட்டார்களென்பதை,

''உண்பொழுது நீராடி யுண்டலு மென்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலுந்- தோல்வற்றிச்
சாயினுஞ் சான்றாண்மை குன்றாமை யிம்மூன்றுந்
தூஉய மென்பார் தொழில்''

என்னும் (திரிகடுகம்-27-ஆம்) செய்யுளும்,

''நல்லா றொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார்- பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னாவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ்''

என்னும் (நீதிநெறி விளக்கம்-61)ஆம் செய்யுளும் விளக்கு வனவாம். தலைவருவ- அஃறிணைப்பன்மை வினை யாலணையும் பெயர். விளிதல்- இங்கு வருந்துதலை யுணர்த்தி நின்றது. 'மானம்' என்பது பெருமையையும், இழிவையும் உணர்த்தும். செய்ப- பலர்பால் வினைமுற்று. செய்பவோ- எதிர்மறையெச்சம்; ஓகாரம் - எதிர்மறைப் பொருளது. *(அ)*

199. *தீங்கரும் பீன்ற திரள்கா லுளையலரி*
தேங்கமழ் நரற்ற மிழந்தா அங்- கோங்கும்
உயர்குடி யுட்பிறப்பி னென்னாம் பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை.

(இ-ள்) தீம்- மதுரமான, கரும்பு ஈன்ற - கரும்பு பெற்றதும், திரள்கால் - திரண்ட அடியையுடையதும், உளை- (குதிரை, சிங்கம் முதலியவற்றின்) பிடரிமயிர் போன்றதும், (ஆகிய), அலரி-பூவானது, தேம்கமழ் நாற்றம்= இனிமை யாகப் பரிமளிக்கின்ற நல்ல வாசனையை, இழந்து ஆங்கு - இழந்தாற்போல, (அதாவது, வாசனையற்றுப் பிறரால் கொண்டாடப்படாதிருத்தல் போல), பெயர்ப்பொறிக்கும் - (ஒருவன் தன்னுடைய) பெயரைப் (புலவர்) எழுதி வைக்கத்

தக்க, பேர் ஆண்மை- பெரிய ஆண்தன்மை, (அதாவது, வாசனையற்றுப் பிறரால் கொண்டாடப்படா திருத்தல் போல), பெயர்பொறிக்கும் - (ஒருவன் தன்னுடைய) பெயரைப் (புலவர்) எழுதி வைக்கத்தக்க, பேர் ஆண்மை - பெரிய ஆண் தன்மை, (அதாவது வல்லமை); உயர்குடியுள் - மிக உயர்ந்த குலத்தில், பிறப்பின்- பிறத்தலால், என் ஆம்- என்ன பயன் உண்டாகும்?, (ஒருசிறப்புமுண்டாகாது); எ-று.

இனிய சுவையுள்ள கரும்பினிடத்தே தோன்றி னாலும் அதன் மலர் நல்ல வாசனையைப் பெறாமை யினாலே அதற்குச் சிறப்பில்லை; அதனை எவருங் கொண்டாடமாட்டார்கள்; அதைப்போல், தன் பெயர் உலகத்திற் பரவுமாறு நற்காரியங்களைச் செய்ய முயலாதவன் உயர்ந்த குலத்திற் பிறந்தாலும் அவனுக் கொருசிறப்பு முண்டாகாது; அவனை எவரும் கொண்டாட மாட்டார்கள் என்பது இதன் கருத்து.

கால் - பூவின் அடிப்பாகம்; அதாவது, காம்பு. உளை- குதிரை சிங்கம் முதலியவற்றின் பிடரிமயிர்; இது, மெதுவாய்ச் செறிந்து குஞ்சம் போன்றிருக்கும்; கரும்பின் பூவும் இதைப்போன்றிருக்குமாதலின், இஃததற்கு குவமை யாயிற்று. அலரி- அலர்வது; இதில், இ- கருத்தாப் பொருள் விகுதி. இழந்தாஅங்கு- செய்யுளோசை நிறைக்கவந்த அளபெடை; இழந்+தா+அங்= எனப் புளிமாலங்காய்ச்சீராகி, அடுத்தசீரில் நேர்வருவதற்குத்தக வெண்டளை பிழையாது நின்றது; இங்ஙனம் அளபெடுக்காவிடின், இழந் + தாங்- எனப் புளிமாச்சீராகி, அடுத்த சீரில் நேர்வருவதற்கு இயையாமல் வெண்டளைக்கு வழுவாம்; "காய்முன் நேரும் விளமுன் நேரும், மாமுன் நிரையும் வருவது வெண்டளை" என்பது விதி. ஓங்கும், உயர்- சிறப்பினால் வந்த ஒருபொருட் பன்மொழி;

''ஒருபொரு ளிருசொற் பிரிவில வரையார்''

என்னும் (தொல்-சொல்-எச்-64-ஆம்) சூத்திரத்தாலும்,

''ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழா''

என்னும் (நன்-பொது-47-ஆம் சூத்திரத்தாலும் இது துணியப்படும்; பிறப்பின் - தொழிற்பெயர் ஐந்தனுருபேற்று வந்தது; ஐந்தனுருபு- ஏதுப்பொருளது. பொறித்தல்- அறிஞராகிய புலவர்கள் எழுதுதலாம்; கீர்த்தி மிக்க செய்கை யுடையாரின் பெயர் உலகில் நிலைத்து விளங்கும்படி அவர் சரிதைகளைப் புலவர் புத்தகங்களில் எழுதுவர்; பெயர் பொறிக்கும் பேராண்மை- (புலவர்) பெயரை எழுதி வைத்தற்குக் காரணமான பேராண்மை. இல்லாக்கடை- எதிர்மறை எதிர்கால வினையெச்சம்.

200. *பெருமுத் தரையர் பெரிதுவந் தீயுங்*
கருணைச்சோ றார்வர் கயவர்- கருனையைப்
பேரு மறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரு மமிழ்தாய் விடும.

(இ-ள். கயவர்- யாதொரு முயற்சியுஞ் செய்யுந் திற னில்லாத மூடர்கள், (தம்முயற்சியால் தேடிய பொருளைக் கொண்டு உணவு சமைத்துண்ணுதலின்றி), பெருமுத்தரை யர்- பெரிய முத்துக்களையுடைய அரசர்களாகிய பாண்டி யர்கள், பெரிது உவந்து - மிகவும் களித்து, ஈயும்- அளிக்கின்ற, கருனைசோறு - பொறிக்கறியோடு கூடிய சோற்றை- ஆர்வர்- உண்பார்கள், (அங்ஙனம் உண்டாலும் அது, தம்முயற்சி யின்றிக் கிடைப்பதாகலின் சிறந்ததாக மாட்டாது), கருனையை பேரும்அறியார்- பொரிக்கறியின் பேரையும் அறியாதவர்கள், (தாழ்ந்த உணவுகளை உண்ணக்கூடியவர் களாயிருப்பினும், நன்முயற்சியால் உணவுதேடத் துணி வார்களாயின், அங்ஙனம்), நனி விரும்பும்- மிகவும் விரும்

பிச் செய்கின்ற, தாளாண்மை- முயற்சியால் (உண்டாகிற), நீரும்- நீரின் வடிவமான தாழ்ந்த வுணவும், அமிழ்து ஆய்விடும் - (அவர்க்கு) அமிர்தம்போன்றதாகும்; எ-று.

ஒரு முயற்சியும் செய்யாமல் சோம்பியிருக்கும் மூடர்கள், பாண்டிய மன்னர்களால் அளிக்கப்படும் பொறிக்கறியோடு கூடிய சோற்றை உண்டு காலங்கழிப்பார்கள்; அங்ஙன முண்டாலும் அது, தம்முயற்சியால் கிடைத்த தன்றாகலின் சிறந்ததாக மாட்டாது; பொறிக்கறியின் பெயரைக்கூடக் கேட்டறியாத ஏழைகள் நீர் வடிவமான கூழைக் குடித்தாலும், அஃதவர் முயற்சியாற் கிடைப்பதாகலின், அதுவும் அமுதம் போற் சிறந்ததாகும் என்பது இதன் கருத்து.

இதனால், மனிதர் யாதொரு முயற்சியுமின்றிப் பிறர் கொடுப்பதை வாங்கியுண்பது இழிவென்பதும், முயற்சி செய்து கூழேனுந் தேடிக்குடிப்பதே சிறந்ததென்பதும் கூறப்பட்டன. ''பெருமுத்தரையர் பெரிதுவந்தீயும் கருனைச் சோறு'' என்றதனால் பாண்டியர்களின் அன்னதானச் சிறப்பை விளக்கினார் முனிவர்; இந்நாலடிச் செய்யுட்கள் முனிவர்களால் பாண்டியனை முன்னிலைப்படுத்துக் கூறப்பட்டனவாகலின், இச்செய்யுளை இயற்றிய முனிவரும் பாண்டியரைச் சிறப்பித்துக் கூறினார்; தங்களை ஆதரிக்கும் செல்வர்களைத் தாம் இயற்றும் நூல்களிற் சிறப்பித்துக் கூறுதல் கவிவாணரின் இயல்பு; கம்பர், தாம் இயற்றிய இராமாயணத்தில் திருவெண்ணெய்நல்லூர்ச் சடையப்ப வள்ளலையும், புகழேந்திப்புலவர் தாம்பாடிய நளவெண்பாவில் முரனைநகர்ச் சந்திரன் சுவர்க்கியையும், வில்லிபுத்தூரார் தாம் செய்த மகா பாரதத்தில் வக்கபாகை வரபதி யாட்கொண்டானையும், மண்டல புருடன் தான் இயற்றிய சூடாமணி நிகண்டில் கிருஷ்ணதேவராயனையும், இன்னும் பல புலவர் பல நூல்களையும் பல தலைவர்களையும் புகழ்ந்து கூறுதலால் இஃதுணரப்படும்.

அரையர்- அரசர்; முத்து அரையர்- முத்துக்களை யுடைய அரசர்; பெருமுத்து அரையர்- பெரிய (மிகுந்த) முத்துக்களையுடைய அரசர்; பாண்டியநாட்டில் முத்துக்கள் மிக உற்பத்தியாகும் கடற்பாகங்கள் பாம்பன், தூத்துக்குடி முதலிய இடங்களில் அமைந்திருத்தலால் அச்சிறப்புப் பற்றிப் பாண்டியர்க்கு, 'முத்தரையர்' என்ற காரணப்பெயர் பண்டைக்காலத்தவரால் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. பாண்டிய நாடு முத்துக்கள் மிகப்பெற்றதென்பது,

''வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப் - பூமியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர்
வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து''

என்னும் ஒளவையார் பாடலால் நன்குணரப்படும். 'முத்தரை யார்' என்ற பட்டம் சோழநாட்டில் உள்ள கள்ளர் வகுப் பாருக்கும் பண்டைக்காலத்தில் வழங்கி வந்திருக்கின்றது; இப்போதுள்ள சில கள்ளருக்கும் இப்பட்டப்பெயர் வழ்ங்கி வருகிறது; கள்ளர்க்கு இப்பட்டமுண்டென்பதை, திருவாளர் மு. இராகவையங்காரவர்கள், (செந்தமிழ் தொகுதி 13, பக்கம் 273-ல்), ''நாலடியாரில் முத்தரையரைப்பற்றி இரண்டிடங் களில் குறிப்பிக்கப்பட்டுள்ளது; இன்னோர் தென்னாட்டில் 7, 8-ஆம் நூற்றாண்டுகளிற் பிரபலம் பெற்ற கள்ளர் மரபின ராவர்; இவ்வமிசத்தவர் சங்க காலத்திலேயே சிற்றரசராக விளங்கியவரென்பது, 'கள்வர் கோமான் புல்லி' 'கள்வர் கோமான் தென்னவன்' என்னும் பெயர்கள் அகநானூற்றுட் பயில்வதனால் அறியப்படும்'' என்றெழுதியிருப்பது கொண்டு துணியப்படும். நடுக்காவேரி திருவாளர் மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களால் எழுதப்பட்டிருக்கும், 'கள்ளர் சரித்திரம்' என்னும் நூலிலும், இப்பெயருக்கும் கள்ளருக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றிய விவரங்கள் பல, தக்க ஆதாரங்களோடு எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

"ஸ்ரீரங்கத்துக்கருகிலுள்ள முத்தரசநல்லூரில் முத்தரசன் என்னும் ஓரரசன் இருந்தான்; அவன் ஸ்ரீரங்கநாதனுக்கு முத்துக்களாலேயே குடை, சாமரம், சுருட்டி முதலியவை களையும், திருவாபரணங்களையும் செய்வித்தான்" என்ற ஒரு வரலாறும் சிலரால் கூறப்படுகின்றது; இன்னும் சில ஊர்களுக்கு, 'முத்தனேந்தல்' என்றும், சில வகுப்பாருள் ஆண்மக்களுக்கு, 'முத்தன்' என்றும், 'முத்தையா' என்றும், 'முத்தப்பன்' என்றும், பெண்களுக்கு, 'முத்தி' என்றும், 'முத்தம்மாள்' என்றும் பெயர்கள் வழங்கி வருகின்றன. இப்பெயருடையார்களில், பாண்டியர்கள் முத்தின் மிகுதிப் பாட்டைப் பெற்றிருந்த காரணத்தால் இப்பெயர் பெற்றிருக் கின்றனர்; சரித்திரக்காரர்களால், 'பண்டைக்காலத்தில் முத்தரையர் என்ற ஒரு கூட்டத்தினர் இருந்தனர்; அவர்களும் ஆட்சி புரிந்து வந்தனர்; அவர் கள்ளர் வகுப்பினரே' என்று கூறப்படுவோரும் பாண்டியர்களைப் போலவே முத்தை யுடையவர்களாயிருந்து இப்பெயர் பெற்றிருத்தல் கூடும். பிற்பட்ட காலத்தவர்க்கு இப்பெயர் பாண்டியர் முதலிய அரசர்களால் கொடுக்கப்பட்டதாலும், தாமே சிறப்பு நோக்கி வைத்துக் கொண்டதாலும் வழங்கி வந்திருக்கலாம். முத்தானது சிறந்த பொருளாயிருத்தலால் அதன் சிறப்புப் பற்றி வரும் பெயரைச் சூட்டிக்கொள்வது நம் தமிழ்நாட் டினர்க்குள் உயர்வாகக் கொண்டாடப் பட்டு வந்திருக்கிறது. முத்தைப்பற்றி வரும்பெயர் செல்வ மிக்காருக்குரியதாகக் கொள்ளப்படும்.

இனி, 'முத்தரையர்' என்பதற்கு, 'மூன்று' தேசங் களுக்கு அரசர்களாகிய சேர, சோழ, பாண்டியர் என்னும் தமிழ்நாட்டு மூவேந்தர்' எனப் பொருளுரைப்பினும் பொருந் தும். இங்ஙனம் இப்பெயர் வேறு பலர்க்கிருப்பினும், வேறு பொருள் பயப்பினும் இதற்கு, 'பாண்டியர்' என்று பொருளு ரைத்தலே நூலமைப்பிற்குத் தக்க சிறப்புடையதாம்.

இச்செய்யுட் பதவுரைக்கண் இடையிடையில் சில சொற்றொடர்கள், பொருண்முடிவுக்குத்தக இசையெச்சமாக வருவித்துரைக்கப்பட்டன. கருனை- மற்றைக்கறிகட்கும் உபலக்ஷணம். 'கயவர்' என்பதில், கயம்- பகுதி, உரிச்சொல்; அர்- விகுதி. கருனையை- உருபுமயக்கம்; இனி, 'கருனை யைப் பேருமறியார்' என்பதற்கு, 'கருனையைப் பேரினாலு மறியாதவர்' என்றும் பொருளுரைக்கலாம்; அங்ஙனங் கொள்ளுமிடத்து, 'பேரும்' என்பதில், இன் சாரியையும், ஆலுருபும் தொக்கனவெனக் கொள்க. தாளாண்மை நீரும்- மூன்றாம் வேற்றுமையுருபும் பயனுமுடன் றொக்கதொகை நீர்- என்பது இங்குக் கூழ்முதலிய நீர்வடிவமான உணவை உணர்த்தி நின்றது; உவமையாகுபெயர். 'நீரும்' என்பதி லுள்ள உம்மை- இழிவு சிறப்புப்பொருளது. முயற்சியால் வந்த உணவு நீர்வடிவமாயிருப்பினும் மனதிற்குக் களிப்பை யும், இனிமையையும் பெருமையையுந் தரக்கூடியதாகலின், அமிர்தத்தோடு ஒப்பிடப்பட்டது. இங்ஙனம் முயற்சி யால் வந்தது கூழேயாயினுஞ் சிறந்த தாகுமென்பதை,

''தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தான்தந்த
துண்ணலி னூங்கினிய தில்''

என்னும் (திருக்-1065-ஆம்) செய்யுளுமுணர்த்தும். (௰)

அரசியல் முற்றுப்பெற்றது.

2-வது

நட்பியல்

அதாவது - நட்புடையாரின் தன்மையைக் கூறும் பாகம்- நட்புடையர்- சிநேகிதரும், சுற்றத்தாருமாவர். இவர்கள், ஒருவர்க்குத் துன்பம் நேர்ந்தவிடத்து, அத் துன்பத்தை நீக்கி இன்பத்தை யுண்டாக்குவர்; ஒருவர் நன்மையான காரியங்களைச்செய்யத் தொடங்கி அவற்றை முடிக்கவியலாமல் அயர்ச்சியுறுங் காலத்தில் அவர்க்கு அக்காரியங்கள் எளிதில் முடியுமாறு நட்பினர் துணைபுரிவர். ஆதலின், இவர்களின் சேர்க்கையைப் பெறுதல் மனிதர் ஒவ்வொருவர்க்கும் இன்றியமையாததாம். அதிலும் அரசர்க்கு மிக முக்கியமானதாம். இவர்களின் சேர்க்கையைப் பெறுதற்கு அரசர் முதலியோர் இவர்களின் சேர்க்கை யாலுண்டாம் பயனைத் தெரிந்துகொள்வதோடு இவர்களை நன்காராய்ந்து இவர்களிடத்துள்ள நன்மை தீமைகளையும் ஐயமற வுணர்ந்துகொள்ள வேண்டும்; அங்ஙனமுணர்ந்து இவர்களுள் நல்லோரைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். அங்ஙனமுணர்ந்து இவர்களுடன் கூடுதற்கனுகூலமா யிருக்கும்பொருட்டு இவர்களின் சேர்க்கையாலுண்டாம் பயன், இன்னோரின் இயற்கைகள் முதலியன இவ்வியலுள் நான்கு அதிகாரங்களாற் கூறப்படுகின்றன. அரசர், தம்முடைய நீதிகளில் முதன்மைத்தாகிய அரசியலை

யுணர்ந்தபின், தமக்குச் செல்வம் பெருகுதற் கனுகூலமா யிருக்கும் நட்பின் தன்மையை யுணர்தல் வேண்டுமாதலின் இந்நட்பியல் அரசியலின் பின் வைக்கப்பட்டது. இதிற் கூறப்பட்டவை அரசர்க்குரியனவாகக் கூறப்பட்டிருப்பினும், அவரால் ஆளப்படும் மனிதர்க்கும் உரியனவேயாம்.

அதிகாரம் 21

சுற்றந்தழால்

அஃதாவது- ஒருவன், தன்னுடைய உறவினரைச் சேர்த்துக் கொள்ளுதல். இவ்வதிகாரம் சுற்றத்தாரின் இயல் பினைக் கூறுவதாகலின் இப்பெயர் பெற்றது. செல்வத் தாலும், அதிகாரத்தாலும், புகழாலும் மேம்பாடடையத்தக்க முயற்சிகளைச் செய்வோர்க்கு, உற்ற சமயத்தில் உதவிசெய்யும் சுற்றத்தாரைச் சேர்த்துக்கொள்ளுதல் முதன்மைபெற்றதாகலின், இவ்வதிகாரம், 'தாளாண்மை' என்னும் அதிகாரத்தின் பின் வைக்கப்பட்டது. பலவிதமான முயற்சிகளாலும் பொருளைத் தேடிக்கொண்டவர்க்குச் சுற்றத்தாரைப் பாதுகாத்தல் சிறந்த தருமமாயிருத்தல்பற்றி, இது முயற்சியின் பின் வைக்கப்பட்டதெனினும் அமையும். 'சுற்றத்தாரைப் பாதுகாப்பது சிறந்த தருமமென்பதை, ''தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங், கைம்புலத்தா றோம்பல் தலை'' என்னும் திருக்குறட் செய்யுள் விளக்கும். சுற்றம்- சுற்றுதல்; தொழிற்பெயர்; இஃதாகுபெயராய்ச் சுற்றுதலையுடைய உறவினரையுணர்த் திற்று; தழால்- தழுவுதல்; தொழிற்பெயர்; 'தழுவு' என்னும் பகுதி ஈறுகெட்டு, ஈற்றயலில் நின்ற உகரமும் போய், 'ஆல்' என்னும் தொழிற்பெயர் விகுதியோடு புணர்ந்து, தழால் என வந்தது.

201. *வயாவும் வருத்தமு மீன்றக்கா னோவுங்*
கவாஅன் மகற்கண்டு தாய்மறந் தாஅங்
கசாஅத்தா னுற்ற வருத்த முசாஅத்தன்
கேளிரைக் காணக் கெடும்.

(இ-ள்) வயாவும்- (கருப்பந்தரிக்குங் காலத்திலுண் டாகும்) நோயையும், வருத்தமும்- (கருவைத் தாங்கியிருக் கும்போ துண்டாகும்) பல துன்பங்களையும், ஈன்றக்கால் நோவும் - (குழந்தையைப் பெறுகின்ற காலத்தில் (உண் டாகும்) நோயையும், தாய்- தாயானவள், (குழந்தை பிறந்தபின் அக்குழந்தை மருத்துவச்சியால் எடுத்து அவள் மடியில் வைக்கப்பட்டபோது), கவான்- தனது மடியின் மேல், மகன் - (அங்ஙனம் வைக்கப்பட்ட) புத்திரனை, கண்டு - பார்த்து, (அங்ஙனம் பார்த்தமாத்திரத்தில்), மறந்து ஆங்கு -மறந்து விட்டாற்போல, (ஒருவன்), அசா- (பலவகைத்) தளர்ச்சிகளாலே, தான்உற்ற- தான் அடைந்த, வருத்தம்- துன்பமுழுவதும், உசா- (தன் சுகத்தைப்பற்றி) விசாரித்தலை யுடைய, தன் கேளிரை- தன்னுடைய சுற்றத்தாரை, காண- பார்த்தமாத்திரத்தில், கெடும்- நீங்கிவிடும்; எ-று.

ஒரு குழந்தைக்குத் தாயாயிருப்பவள், பிரசவத்தைப் பற்றிய எல்லாத் துன்பங்களையும், அக்குழந்தையைப் பெற்றபின், அது மடியிலிருக்கக் கண்டு மறந்துவிட்டது போல, (அதாவது, குழந்தையைக் கண்டவுடன் அவளுடைய துன்பங்கள் நீங்கிவிட்டதுபோல) ஒருவன் பலவகைத் தளர்ச்சிகளாலும் அடைந்த துன்பங்கள் அவனுடைய நலத்தை விசாரிக்கும் உறவினரைக் கண்டவுடன் நீங்கிவிடும் என்பது இதன் கருத்து. இங்ஙனங் கூறியது- முற்றுவமை யணி; முற்றுவமையாவது- உபமானப்பொருள் முழுவதும் உபமேயத்தோடு பொருந்துவது.

ஒரு பெண், கருக்கொள்ளுங் காலத்திலும், கொண் டிருக்குங் காலத்திலும், பிள்ளையைப் பெறுங்காலத்திலும்,

மிகுந்த துன்பங்களையடைவாள்; குழந்தையைப் பெற்றுக் கண்ணால் பார்த்ததும், அக்குழந்தையால் தனக்கு இம்மை யிலும் மறுமையிலும் நலங்கிடைக்குமென்னும் மகிழ்ச்சி யும், அக்குழந்தையினிடத்தோரன்பும் அவளின் மனத்தெழு கின்றன; அவற்றால் அவள், தான் அடைந்த துன்பங்களை யெல்லாம் மறந்துவிடுவாள். ஒரு மனிதன், பல காரணங் களால் துன்பங்கள் வந்தபோது மிகுந்த மனவருத்தத்தை யடைந்து கொண்டிருப்பான்; அத்தருணத்தில் அவனுடைய சுற்றத்தார் அவனிடத்தே வருவார்களாயின், அவர்கள் அவனுக்குதவி செய்து அவனைச் சார்ந்த துன்பங்களை நீக்கக்கூடியவர்களாதலின், அவர்களைக் கண்ட மாத்திரத் தில், 'இவர்களால் நம் துன்பங்கள் நீங்கும்' என்னும் நம் பிக்கை அவன் மனத்திலுண்டாகும்; அந்நம்பிக்கையால் அவன் அடைந்திருந்த மனத்துயரங்களெல்லாம் நீங்கி விடும்.

'ஒருவன், தன்னுடைய சுற்றத்தாரைக் காண அவனது துன்பம் நீங்கும்' என்றதனால், சுற்றந்தழூவுதலாலுண்டாம் பயன் கூறப்பட்டது. 'உசாஅத்தன் கேளிர்' என்றதனால், ஒருவனுடைய நலத்தை விசாரித்து, அவனுக்கேற்படும் துன்பங்களை நீக்கி உதவிபுரிவோரே சுற்றத்தாரென்பதும், அவரையே தழூவிக்கொள்ள வேண்டுமென்பதும், சுயநலங் கருதி அவனுக்குதவி செய்யாமல் பொய்ந்நட்புப் பூண்டிருப் பவர் சுற்றத்தாராகாரென்பதும், அவருறவை விடவேண்டு மென்பதும் பெறப்படும்.

வயா- கருக்கொள்ளுங் காலத்திலுண்டாகும் நோவு; இது மசக்கையென்றுஞ் சொல்லப்படும்; இதில் வாந்தி யுண்டாதல், உணவேற்றுக் கொள்ளாமை முதலியன ஏற்படும். வருத்தம்- கருவைச் சுமந்து திரிவதாலுண்டாம் நோவு. ஈன்றக்கால் நோவு- குழந்தையைப் பெறுங்காலத் திலுண்டாம் நோய். தாய் கருக்கொண்டிருந்த காலத்தும், பிள்ளையைப் பெற்ற காலத்தும் உண்டான துன்பங்கள்,

குதுந்தையைக் கண்டவுடன் நீங்கி அவளுக்கு மிக்க மகிழ்ச்சி யுண்டாகுமென்பதை,

''........................ பொன்னனான் பிறந்த போழ்தே
மருளுடை மாத ருற்ற மம்மர்நோய் மறைந்த
தன்றே''

என்னும் சிந்தாமணிச் செய்யுளும்,

''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்''

என்னும் (திருக்-69-ஆம்) செய்யுளும் விளக்குவனவாம்.

ஈன்றக்கால் - எதிர்கால வினையெச்சம்; இங்கு நிகழ் காலத்திற்குக் கொள்ளப்பட்டது. மகற்கண்டு - இரண்டாம் வேற்றுமைத் தொகை; இதில் ஐயுருபு தொகுத்தலாய் உயர்திணைப் பெயரீறு விகாரப்பட்டது. இங்குச் சிறப்புப் பற்றி, 'மகன்' என ஆண்பாலே கூறப்பட்டதெனினும், உபலக்ஷணத்தாற் பெண்பாலையுங் கொள்க. மகன்- இளமை யென்னும் உரிச்சொல்லடியாகப்பிறந்த முறைப்பெயர்; இதில், மக- பகுதி; இளமையைக் குறிக்கும் உரிச்சொல், ன்- ஆண்பால் விகுதி; இதன் பெண்பால் மகள்; இவற்றின் பன்மை- மக்கள். ஆங்கு- சுட்டிடைச்சொல்லடியாப் பிறந்த 'அங்கு' என்பதன் விகாரம்; இங்கே உவமையுருபாக நின்றது. அசா, உசா என்பன- முதனிலைத் தொழிற்பெயர்கள். அள பெடைகள் நான்கும் செய்யுளோசை நிறைக்க வந்தன. (க)

202. *அழன்மண்டு போழ்கி னடைந்தவர்கட் கெல்லா*
நிழன்மரம்போ னேரொப்பத் தாங்கிப்- பழுமரம்
போற்
பல்லார் பயன் றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்.

(இ-ள்.) அழல்- (சூரிய) வெப்பம், மண்டு போழ்தின் - நெருங்கிய காலத்தில், அடைந்தவர்கட்கு எல்லாம்- (தன்னிடம் வந்து) சேர்ந்தவர்கள் எல்லோருக்கும். நிழல் மரம்போல் - (பாரபக்ஷமின்றி) நிழலைத்தரும் (படர்ந்த கிளைகளையுடைய) ஆலமரத்தைப் போல, (துன்பம் நேர்ந்த காலத்தில் அதனைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டுத் தன்னிடம் வரும்), பல்லார்- (உறவினராகிய) பலரையும் நேர்ஒப்ப - சமமாகப்பொருந்த, (அதாவது, சமமாக), தாங்கி- (அவர்களுடைய துன்பங்களை நீக்கி) அவர்களுக்கு இடங் கொடுத்து ஆதரித்து, பயன்துய்ப்ப- (அவர்கள் தன்னிடத்தே) நற்பயன்களை அனுபவிக்குமாறு, பழுமரம் போல்- பழுத்த மரத்தைப்போல, (அதாவது, பல பிராணி களும் மனிதரும் தன்னை வருத்திப் பழம், தளிர், பூ காய் முதலியவற்றைப் புறித்து அனுபவிக்குமாறு அவ்வருத் தத்தையு மேற்றுக் கொண்டு பழங்களுடனிருக்கும் மரத்தைப் போல, அவர்க்குப் பயன்படும் பொருள்களுடன் அமைந்து அவற்றை அவர்க்களித்து), தான் வருந்தி- தான் வருத்தப் பட்டுக் கொண்டாயினும், (அதாவது அவர்க்குதவி செய்த லால் உடல்வருத்தம் முதலியன ஏற்படினும் அதனைச் சகித்து), வாழ்வதே- உயிர்பெற்றிருப்பதே, நல் ஆண்மகற்கு - நல்ல ஆண் தன்மையுள்ள மனிதனுக்கு, கடன்- கடமை யாம்; எ-று.

சூரியவெப்பம் அதிகரித்த காலத்தில், அவ்வெப் பத்தால் வாடி அவ்வாட்டத்தைத் தணித்துக் கொள்ளும் பொருட்டுத் தன்னிடம் வரும் எல்லா மனிதர்க்கும் பாரபக்ஷ மின்றி நிழலைக்கொடுத்து அவருடைய இளைப்பைத் தீர்த்துப் பேருதவி செய்யும் (ஆல) மரத்தைப்போல, வறுமைத் துன்பத்தால் தளர்ந்து அத்தளர்ச்சியை நீக்கிக் கொள்ளும் பொருட்டுத் தன்னிடம் வரும் எல்லா மனிதர்க்கும் தங்க இடங்கொடுத்து அவர் துன்பத்தைத் தீர்த்து அவர்களை ஆதரித்து, பல மனிதரும், பல பிராணிகளும் பறித்துண்ணும்படிக்கும், கிளை, இலை முதலியவற்றை

ஒடித்தும் பறித்துங் கொள்ளும்படிக்கும் கனிகளையும், இலை முதலியவற்றையும் உடையதாய் அமைந்து நிற்கும் மரத்தைப்போல, பலரும் தன்னிடமுள்ள பொருளாலும், உடற்பிரயாசையாலும் உண்டாகும் பயன்களை அனுபவிக்கும்படி தான் வருந்தியாவது வாழ்வதே ஆண்மகனுக்குரிய கடமையாம் என்பது இதன் கருத்து.

இதனால், ஒரு மனிதன் வருத்தப்பட்டாவது உறவினரை ஆதரிக்க வேண்டுமென்பது விளக்கப்பட்டது. முதலிற் கூறிய நிழன் மரத்தின் செயல், தன்னிடம் வறுமைத் துன்பத்தால் தளர்ந்து வருவோர்க்கு ஒருவன் புகலிடம் கொடுத்து அவர்களை ஆதரிப்பதற்கு உவமையாகக் கூறப்பட்டது; இரண்டாவது கூறிய பழுமரத்தின் செய்கை, ஒருவன் தன்னிடம் வருவோர் பலவகை உதவிகளையும் பெற்றுக் கொள்ளுமாறு தான் வருந்தியாவது வாழ்க்கையை நடத்துதற்கு உவமையாகக் கூறப்பட்டது. இங்ஙனங் கூறியது உவமையணி. பழுமரமானது, தன்னிடம் வரும் மனிதர், பழத்தைப் பறித்தலேயன்றி, தளிர், இலை, பூ, காய் முதலியவற்றைப் பறித்துத் தன்னைத் துன்புறுத்தும்போதும் அவ்வருத்தத்தைப் பொறுத்துக் கொண்டு அவரவர்க்கு வேண்டுவன நல்கும்; அதைப்போலவே, தான் செய்ய வேண்டிய கடமையையுணர்ந்த மனிதன், தன்னைச் சார்ந்தவர்க்கு உதவிசெய்வதில் பொருள் செலவாதலோடு மனதிற்கு இளைப்பு, உடல்வருத்தம் முதலியன தோன்றினாலும் அவற்றைப் பொறுத்துக் கொண்டு அவ்வுதவியைச் செய்தல் வேண்டும். ஆதலின், ''பழுமரம்போல் பல்லார் பயன் றுய்ப்பத் தான் வருந்தி வாழ்வதே, நல்லாண் மகற்குக்கடன்'' என்றார் முனிவர். 'வருந்தி வாழ்வது' என்று சொன்ன குறிப்பால், பழுமரத்திற்கு, மனிதர் இலை, பூ, காய் முதலியவற்றைப் பறித்தலாலுண்டாம் வருத்தமும், உறவினர்க்குதவி செய்வோனுக்கு, அவ்வுதவிகளைச் செய்தலாலேற்படும் உடல் வருத்தம் முதலியனவுங் கொள்ளப்பட்டன. வருவோர் பலர்க்கும் நிழல் தருதற்குப் பொருத்தமுடையது பெரும்

பான்மையும் விசாலித்த கிளைகளையுடைய ஆலமரமே யாதலின், 'நிழல்மரம்' என்பதற்கு, 'ஆலமரம்' என்று பொருள் கூறப்பட்டது; ஆலமரம் பலர்க்கும் நிழல் தரு மென்பதை,

''தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே''

என்னும் வெற்றிவேற்கைச் செய்யுளடிகள் விளக்குவனவாம். நல்லார் நிழன்மரத்தைப்போலவும், பழுமரத்தைப்போல வும் தம்மை யடுத்தவர்க்குப் பொருளுதவுவரென்பதை,

''பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின்''

என்னும் (திருக்-216-ஆம்) செய்யுளும், இந்நூலின் 96, 167-ஆம் செய்யுட்களும் விளக்குவனவாம். போழ்து - 'பொழுது' என்பதன் விகாரம். பயன், கடன் என்பன- பயம், கடம், என்பவற்றின் இறுதிப்போலிகள்; 'வாழ்வதே' என்பதிலுள்ள ஏகாரம் - பிரிநிலைப் பொருளது; தேற்றப் பொருளதெனினு மாம். 'வருந்தி' என்பதில் இழிவு சிறப்பும்மை தொக்கது. (உ)

203. *அடுக்கன் மலைநாட தற்சேர்ந் தவரை*
எடுக்கல மென்னார் பெரியோர்- அடுத்தடுத்து
வன்காய் பலபல காய்ப்பினு மில்லையே
தன்காய் பொறுக்கலாக் கொம்பு.

(இ-ள்.) அடுக்கல்- (கற்களின்) அடுக்குகள் அமைந்த, மலை - மலைகள் பொருந்திய, நாட- நாட்டையுடைய பாண்டியனே! அடுத்து அடுத்து - நெருங்கி நெருங்கி,

வன்காய் - வலிய காய்கள், பலபல காய்ப்பினும் - அநேக மாகக் காய்த்தாலும், தன்காய்- தன்னிடத்தே உண்டாகிய அக்காய்களை, பொறுக்கலா- தாங்கமாட்டாத, கொம்பு- மரக்கிளை, இல்லை- (உலகத்தில்) இல்லை, (தான் சிறிதா யிருந்தாலும் அக்காய்களைத் தாங்கிக்கெண்டேயிருக்கும்), (அதைப்போல), பெரியோர்- பெருமைக்குணம் வாய்ந்த வர்கள், (தம்மிடம் உறவினர் பலர் வந்து சேர்ந்தாலும்), தன் சேர்ந்தவரை - (அங்ஙனம்) தம்மை அடைந்தவர்களை, (தாங்கள் எவ்வளவு எளிய நிலையிலிருந்த போதிலும்), எடுக்கலம் என்னார் - தாங்கமாட்டோம் (அதாவது, பாது காக்க மாட்டோம்) என்று கூறி அவர்களை அகற்றி விட மாட்டார், (பாதுகாத்துக் கொள்வர்); எ-று.

மரக்கிளையில் கனமான பல காய்கள் அடுத்தடுத்துக் காய்த்துத் தொங்கினாலும், அவை தன்னிடத்தே உண் டானவைகளாதலின், அவற்றால், அஃதொடிந்து கெடாமல் அவற்றைத் தாங்கிக் கொண்டே யிருக்கும்; அதைப்போலவே பெரியோராயினார், தம்மினத்தவர் பலர், தம்முடைய ஆதரவைப்பெறத் தம்மிடம் அடுத்தாலும் அவர்தம் உறவின ராதலானும், அவரை ஆதரிக்கத் தாம் கடமைப்பட்டிருப்ப தாலும் அவரை விலக்கிவிடாமல் பாதுகாத்துக் கொள்வர்; அதனால் கெட்டுப் போகவு மாட்டார். உவமவுருபு விரிக்காமல் இச்செய்யுளில் இங்ஙனங் கூறியது எடுத்துக் காட்டுவமையணி.

இதனால், சுற்றத்தாரைத் தழுவிக்கெள்ளுதல் பெரி யார்க்கு இயற்கையான செய்கையென்பது விளக்கப்பட்டது. இது பெரியார் இயற்கையெனவே கீழ்மக்களே சுற்றத்தாரை ஆதரியாமல் கை விடுபவர் என்பது தானே பெறப்பட்டது.

அடுக்கல்- தொழிற்பெயர்; பல கற்களின் அடுக்கு களைக் கொண்டதே மலையாகலின், அது, 'அடுக்கல் மலை' என்று கூறப்பட்டது. மலை- காரணப்பெயர்; 'பார்ப்பவர்

களால் மலையப்படுவது' என்பது இதன் பொருள்; மலைதல் - அஞ்சுதல். 'மலை' என்பதில் செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்டது. 'பெரியோர்' என வருதற்கேற்ப, 'தஞ்சேர்ந்தவரை' என வருதற்பாலது, 'தற்சேர்ந்தவரை' என வந்தது ஒருமை பன்மை மயக்கம்; இது வழுவமைதி; இந் நூலின் 93-ஆம் செய்யுளிலும் இவ்வழுவமைதி வந்தளது. 'தன்' என்பதன் ஈற்றுனகரம், வல்லெழுத்தோ டுறழாமல் றகரமாகத் திரிந்து வந்தது; ''இயல்பின் விகாரமும்....'' என்ற (நன்-உருபு-பு- 16-ஆம்) சூத்திரவுரையும், (தொல்- எழுத்-புள் - ம- 58-ஆம்) சூத்திரவுரையும் பார்க்க. எடுக்கலம் - தன்மைப்பன்மை யெதிர்மறை வினைமுற்று; இதில், எடு- பகுதி, அம்- தன்மைப் பன்மைவிகுதி, அல்- எதிர்மறை விகுதி கு- சாரியை. பொறுக்கலா- எதிர்மறைப் பெயரெச்சம். 'அடுத்து அடுத்து' 'பலபல' என்ற அடுக்குக்கள் பொருளோடு புணர்தலாக மிகுதிப் பொருளை விளக்க வந்தன;

''இசைநிறை யசைநிலை பொருளொடு
புணர்தலென்
றவைமூன் றென்ப வொருசொல் லடுக்கே''

என்னும், தொல்-சொல்-எச்-15-ஆம் சூத்திரவுரை பார்க்க.

மரக்கிளையானது கனமுள்ள பல காய்கள் தன் னிடத்தே உண்டானாலும் அவற்றைத் தாங்குமென்பதை, ''கொடிக்குக் காய் பளுவோ'' என்னும் முதுமொழியும் விளக்கும். மரத்தில் படர்ந்து தொங்கும் பறங்கிக்கொடி முதலிய பெரிய பல காய்களைத் தாங்கிக்கொண்டு அறுந்து விழாதிருத்தலை எவருங் காணலாம். (௩)

204. *உலகறியத் தீரக் கலப்பினு நில்லா*
சிலபகலாஞ் சிற்றினத்தார் கேண்மை- நிலைதிரியா
நிற்கும் பெரியோர் நெறியடைய நின்றனைத்தால்
ஒற்க மிலாளர் தொடர்பு.

(இ-ள்.) தீர- திடமாக, உலகு அறிய - உலகத்திலுள்ள வர்கள் எல்லோரும் அறியும்படி, கலப்பினும் - (தாழ்ந்த உறவினரோடு) சேர்ந்தாலும், சிறு இனத்தார் கேண்மை - தாழ்ந்த உறவினருடைய சிநேகங்கள், நில்லா- (நீடித்து) நிற்கமாட்டா, சில பகல் ஆம்- சில தினங்கள் வரையிலுமே இருப்பனவாம், ஒற்கம் இல் ஆளர் தொடர்பு - (நற்குணங் களில்) குறைவில்லாதவர்களாகிய உறவினரின் சேர்க்கை யானது, நிலைதிரியா- (தங்கள் நல்லொழுக்க) நிலையி னின்றும் வேறுபடாமல், நிற்கும்- (அந்த நன்மார்க்கத் திலேயே நிற்கின்ற, பெரியோர்- பெரியோர்கள், நெறி அடைய- முத்திமார்க்கத்தைப் பெறுதற்கு, நின்றஅனைத்து - (மேற்கொண்டு) நின்ற யோகநிலை போன்றதாம், (அதாவது அந்த யோகநிலைபோல உறுதிப் பாட்டையுடையதாம்); எ-று.

தாழ்ந்த குணமுள்ள உறவினருடைய சிநேகங்கள் நீடித்து நிற்கமாட்டா, உயர்ந்த குணமுள்ள உறவினரின் சேர்க்கை, பெரியோர்கள் முத்திமார்க்கத்தை யடையப் புரியும் யோகநிலையைப் போன்று உறுதிப்பாடுடையதாய் எப்போதும் நிலைத்து நிற்கும் என்பது இதன் கருத்து.

அற்பகுணமுள்ள உறவினர்கள், தங்களோடு சிநேகங் கொண்டவர்களிடத்துச் செல்வமிருக்கும்வரை சேர்ந்திருந்து அச்செல்வத்தைத் தாங்களு மனுபவித்து மகிழ்வர்; அச் செல்வம் அவரைவிட்டு நீங்கியவிடத்துத் தாங்களும் நீங்குவர்; உயர்ந்த குணமுள்ள உறவினரோ, தங்களோடு சிநேகங் கொண்டவரிடத்துச் செல்வமுள்ளபோது அதனை அனுபவித்து மகிழ்வதோடு, செல்வம் நீங்கியவிடத்தும் நன்றியறியதலோடு அவரைவிட்டு நீங்காமல் அவர்க்கு நேரும் தளர்ச்சியை நீக்கி உதவிபுரிவர். ஆதலின், அற்பர் நேயம் நிலைத்து நிற்காதென்றும், நற்குணமுள்ள உறவினர் நேயம் எப்பொழுதும் நிலைத்து நிற்குமென்றும் கூறினார் ஆசிரியர். இங்ஙனம் அற்பர்நேயம் நிலைநிற்காதென்பதை

யும், உயர்ந்தோர் நேயம் நிலைத்திருக்குமென்பதையும், அதிவீர ராமபாண்டியன், நறுந்தொகை யென்னும் வெற்றி வேற்கையில், ''நூறாண்டு பழகினு மூர்க்கர் கேண்மை, நீர்க்குட்பாசிபோல் வேர்க்கொள்ளாதே'' ''ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை, இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே'' என்பனவற்றால் விளக்குதல் காண்க. இங்ஙனம் அற்ப உறவினரின் இயற்கையும், நற்குணமுடைய உறவினரின் தன்மையும் கூறியதனால், அற்ப உறவினரின் நேயத்தைத் தள்ளி, உயர்ந்த உறவினரின் நேயத்தைப் பெற வேண்டுமென்பது விளக்கப்பட்டது. சுற்றந்தழுவுதல் இல்லறத்தார்க்குச் சிறந்த தர்மமெனினும் அற்பருறவால் பொருளழிவாவதன்றி வேறொரு பயனுமின்மையின் அவருறவை நீக்குதல் தகுதியென்பதையும், உயர்ந்த உறவினரால் எப்பொழுதும் நன்மையே விளையுமாகலின், அவருறவினைக் கொள்ளுதல் சிறப்புடைத் தென்பதையும் விதந்து இதிற் கூறினார் முனிவர். முத்திநெறியை அடைய விரும்பும் பெரியோரால் செய்யப்படும் யோகம் நிலை தளராததாயிருக்கும்; ஆதலின், அது எப்பொழுதும் நிலை பெற்றிருக்கும் நல்லார் உறவுக்குவமையாகக் கூறப்பட்டது.

உலகு - இடவாகு பெயராய் உலகத்திலுள்ள மனிதரை யுணர்த்திற்று. 'கலப்பினும்' என்பதிலுள்ள உம்மை - உயர்வு சிறப்புப் பொருளது. நில்லா- எதிர்மறைப் பலவின் பால் வினைமுற்று; முற்றெச்சமாகவுங் கொள்ளலாம். 'கேண்மை' என்பது பால்பகா அஃறிணைப் பெயராதலின், 'நில்லா' என்னும் பன்மை வினை கொண்டது. 'சிற்றினத் தார்' என்ற பன்மைக்கேற்ப, 'கேண்மை' என்பதற்கு, 'சிநேகங்கள்' எனப் பன்மையாகப் பொருள் விரிக்கப் பட்டது. 'நில்லா என்பதை, ஈறுகெட்ட எதிர்மறை வினை யெச்சமாகக் கொள்வாருமுளர்; அங்ஙனங் கொள்ளின், 'நில்லா' என்ப தற்கு முன் வலி மிகவேண்டும். அடைய- செயவெனெச்சம்; காரியப்பொருளது; எதிர்காலங் காட்டி நின்றது. இலாளர்- இல்லாமையை ஆளுபவர்; இல்லாதவர்

என்பது இதன் திரண்ட பொருள். 'அனைத்தால்' என்பதில், ஆல்- அசை. (ச)

205. *இன்ன ரினைய ரெமர்பிற ரென்னுஞ் சொல்*
என்னு மிலரா மியல்பினாற்- றுன்னித்
தொலைமக்க டுன்பந்தீர்ப் பாரேயார் மாட்டுந்
தலைமக்க ளாகற்பா லார்.

(இ-ள்) (சுற்றத்தார்களில் செல்வமிக்கார், வறுமை மிக்கார், நாகரிகமுள்ளவர், நாகரிகமில்லாதவர், குடும்ப இழுக்குள்ளார், அவ்விழுக்கற்றவர், ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர், பிற குடும்பத்தைச் சார்ந்தவர் எனப் பலவகைப் பட்டவர்க ளிருப்பினும், அப்பேதங்களை மனத்திற்கருதி, அவர்களைச் சுட்டி), இன்னர்- இவர், இனையர்- இத்தன்மை யுடையவர், இன்னர்- இவர், எமர்- எமது குடும்பத்தைச் சேர்ந்தவர், இன்னர் - இவர், பிறர் - வேறு குடும்பத்தைச் சேர்ந்தவர், என்னும் - என்று பேசுகிற, சொல்-வார்த்தை யானது, என்னும்- யாதும், (அதாவது, சிறிதும்), இலர் ஆம் இயல்பினால்- இல்லாதவராகின்ற தன்மையினாலே, (அதாவது அவ்வாறு பேசும் பேதவார்த்தையின்றி எல் லோரையும் தம் இனத்தவரென்றே சமமாகக் கருதிப்பேசும் இயற்கையையுடையவராகி அக்குணத்தினாலே, செல்வம் முதலியவற்றால் உயர்ந்தாரைப் போற்றியும், தாழ்ந்தோரை அவமதித்தும் வரும் இழிந்த செய்கையை விடுத்து, எல்லோரிடத்தும் சமத்துவமான அன்பு செலுத்தி), துன்னி- (வறுமையோ வேறுவகைத் தாழ்வோ) சேர்தலால், தொலைமக்கள் - கெடுதலடைந்து வருகின்ற (தம்மினத்தவ ராகிய) மனிதர்களின், துன்பம் தீர்ப்பாரே - வருத்தங்களை நீக்குவோரே, யார்மாட்டும்- எல்லோரிடத்திலும், தலை மக்கள் ஆகல் பாலார்- மேன்மக்களாகுந் தன்மை யுடைய வர்கள்; எ-று.

தம் சுற்றத்தார்களில் உயர்ந்தோர், தாழ்ந்தோர், நெருங்கியவர், சற்றுத்தூரத்திலுள்ளவர் ஆகிய பலர் இருப்பினும், அத்தகைய பேதங்களுள்ள சுற்றத்தார்களின் இயற்கைகளை விளக்கிக் காட்டி, 'இவர் இத்தன்மை யுடையவர், இவர் எமக்கு நெருங்கிய உறவினர், இவர் சற்றுத்தூரத்திலுள்ள உறவினர்' என்று பேதம் பாராட்டிப் பேசி உயர்ந்தாரையும், நெருங்கியவரையும் கொண்டாடு தலும், தாழ்ந்தவரையும் சற்றுத்தூரத்திலுள்ள உறவினரையும் இகழ்தலுமின்றி எல்லோரையும் ஒரு தன்மையராகக் கருதி, எல்லோரிடத்தும் ஒரேவிதமான அன்பைச் செலுத்தி வறுமை முதலியவற்றால் தளர்கின்ற சுற்றத்தார்களின் துன்பங்களைத் தீர்ப்பவர்களே சகல மனிதர்க்கும் தலைமைபெற்றவராய் விளங்குவர் என்பது இதன் கருத்து.

முன் செய்யுளில், சுற்றத்தார்களில் நண்பினராகக் கொள்ளத் தக்கவர் நற்குண நற்செய்கையுடையாரே என்பதை விளக்கினார் முனிவர்; இச்செய்யுளில் துன்பத்தால் தளர் கின்ற உறவினர் எத்தகையராயினும் அவர்க்குதவிபுரிதல் வேண்டுமென்பதை விளக்கினார். நல்லொழுக்கமில்லாத சுற்றத்தாரோடு நட்புக் கொள்ளாவிடினும் அவர் துன்பத்தால் வருந்துமிடத்து அத்துயர்தீர்த்து அவரைக் காத்தல் வேண்டு மென்பது இதனால் பெறப்படும்; பயனற்ற சுற்றத்தாரையும் பாதுகாப்போரே மனிதரிற் சிறந்தோராய் விளங்குவர்; இதுபற்றியே, ''நப்போல்வளை' என்று ஔவையாரும் கூறினார்.

இரண்டாமடியிலுள்ள, 'என்னும்' என்பது சிறுமைப் பொருள் குறித்து நின்றது. 'இயல்பினால்' என்பதற்கு, 'இயல்போடு' என்றும் பொருளுரைக்கலாம். 'சுற்றந்தழால்' என்னும் இவ்வதிகாரத்துக்கியைய, 'மக்கள்' என்பதற்கு, 'தம் இனத்தவராகிய மனிதர்' என்று பொருள் கூறப்பட்டது. தொலைமக்கள் - வினைத்தொகை. 'தீர்ப்பாரே' என்பத னீற்றேகாரம்- பிரிநிலைப் பொருளது; மற்றவர்களினின்றும்

அவரைப் பிரித்துக் காட்டியது. யார்- எஞ்சாமைப் பொருள் குறித்து நின்றவினா; எஞ்சாமை- குறையாமை; 'எல்லாம்' என்று பொருள்படும். மாட்டு- ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. தலைமக்கள்- மற்ற அங்கங்களுக்கெல்லாம் முதன்மை பெற்றதாய் உயர்ந்து விளங்கும் தலையைப் போன்று மற்றையரின் மேம்பட்டு விளங்குவோர். பாலார்- பான்மையுள்ளார். (ரு)

206. *பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்கல்*
அக்காரம் பாலோ டமாரார்கைத் துண்டலின்
உப்பிலிப் புற்கை யுயிர்போற் கிளைஞர்மாட்
டெக்கலத் தானு மினிது.

(இ-ள்.) (ஒருவன்) பொன்கலத்து- பொன்னாற் செய்யப்பட்ட பாத்திரத்திலே, பெய்த- இடப்பட்ட, புலி உகிர்- புலியின் நகம்போல, (வெண்மையாய்), வான்- சிறந்த, புழுக்கல்- சோற்றை, அக்காரம் ஓடு- சர்க்கரை யோடும், பாலோடு - பாலோடும், (கலந்து), அமரார்கைத்து- (உறவுள்ள சுற்றத்தாராகப்) பொருந்தாதவருடைய கையால் கொடுக்கப்படும் உயர்ந்த உணவை, உண்டலின் - உண்ணு வதைக் காட்டினும், உயிர்போல்- (தன்னுடைய) உயிரைப் போன்ற, கிளைஞர்மாட்டு- சுற்றத்தாரிடத்தில், உப்புஇலி- உப்பும் இல்லாததான, புற்கை - புல்லரிசிக்கஞ்சியை அல்லது கூழை, எக்கலத்து ஆனும்- எத்தகைய இழிந்த பாத்திரத்திலாயினும்; (உட்கொள்வது), இனிது - இனிமை யுடையதாம்; எ-று.

சோற்றில் பாலும் சர்க்கரையும் கலந்து சித்தப் படுத்திய சிறந்த உணவை, உறவினராகப் பொருந்தாத வருடைய கையால் பொற்பாத்திரத்தில் வாங்கியுண்பதினும் உயிர்போன்ற நட்புவாய்ந்த சுற்றத்தாரிடத்து உப்பிலாத கூழை எந்தப் பாத்திரத்திலாவது வாங்கியுண்பது

இனிமையைத் தருமென்பது இதன் கருத்து. அன்பில்லாதவர் இடும் உணவு உயர்ந்ததாயிருந்தாலும் விடம்போல வெறுக்கத் தக்கதாகும்; அன்புள்ளார் இடும் கூழ்தாழ்ந்த உணவாயிருந்தாலும் அமுதம்போல் இனிமையைத் தரும். விருப்பையுண்டாக்குவது அன்புடைமை; வெறுப்பையுண் டாக்குவது அன்பின்மை; இவை உயர்ந்த பொருளாலும், தாழ்ந்த பொருளாலும் ஏற்படுவனவல்ல. இக்கருத்தினை, ''ஒப்புடன் முகமலர்ந்தே உபசரித்துண்மைபேசி உப்பில்லாக் கூழிட்டாலு முண்பதே யமுதமாகும்'' என்ற செய்யுளானு முணர்க. இதனால் உள்ளன்பிலாத சுற்றத்தாரிடம் உண வுண்டல் இனிமையைத் தராதென்பது விளக்கப்பட்டது.

புலிநகம் சோற்றைப் போன்ற உருவமுடையதா யிருக்குமாதலின் அஃதிங்கு உவமையாக எடுத்துக்கூறப் பட்டது; இஃதுவமையணி; உவமையுருபு தொக்கது. புழுக்கல்- வேகவைத்தல்; இது தொழிற்பெயர்; இஃதாகு பெயராய் வேவித்த சோற்றை யுணர்த்தி நின்றது; இனி, அல்-விகுதியைச் செயப்படு பொருள் விகுதி யெனக்கொண்டு, 'புழுக்கல்' என்பதைச் செயப்படு பொருளெனக் கொள் ளினும் அமையும்; புழுக்கப்பட்டது, அதாவது சமைக்கப் பட்ட சோறு என விரியும். அக்காரம்பால்- உம்மைத்தொகை- ஒடு- இரண்டிடங்களினும் கூட்டப்பட்டது. அமரார்- வினையாலணையும் பெயர்; இதில் எதிர்மறை ஆகாரம் புணர்ந்து கெட்டது. உப்பு- என்பதில் இழிவு சிறப்பும்மை தொக்கது. 'உயிர்போற் கிளைஞர்' என்றது, மிக்க அன் புடையாரென்பதை விளக்கி நின்றது. 'எக்கலத்தானும்' என்பதிலுள்ள உம்மை- இழிவு சிறப்புப் பொருளது. மேல், 'உண்டலின்' என வந்ததற்கேற்ப, ஈற்றடியில், 'கலத்தானும்' என்பதற்குப் பின், 'உட்கொள்வது' என்பது இசையெச்சமாக வருவித்துரைக்கப்பட்டது. இச்செய்யுள் இனவெதுகை யமைந்தது.

207. *நாள்வாய்ப் பெறினுந்தந் நள்ளாதா ரில்லத்து*
வேளாண்மை வெங்கருனை வேம்பாகும்- கேளாய்
அபரானப் போழ்தி னடகிடுவ ரேனும்
தமராயார் மரட்டே யினிது.

(இ-ள்.) கேளாய்- (பாண்டியனே!) கேட்பாயாக, நள்ளாதார்- நட்பில்லாத சுற்றத்தார்களுடைய, இல்லத்து- வீட்டில், வேளாண்மை- உபகாரமாக, (கொடுக்கப்பட்ட), வெம்கருனை- வெப்பத்தோடு கூடிய (அதாவது, சூடு ஆறாத) பொரிக்கறியுணவை, நாள்வாய்- முற்பகலில், (உண வுண்ணத்தக்க) காலத்திலே, பெறினும் - பெற்றாலும், (அது), வேம்பு ஆகும்- (கசக்கின்ற) வேப்பங்காய் போன்றதாம், தமர்ஆயார்- (அன்புள்ள) சுற்றத்தாரானவர்கள், அபரானப் போழ்தின் - (உணவுட்கொள்ளத்தகாத) பிற்பகல் நேரத்திலே, அடகு- இலைக்கறியுணவை, இடுவரேனும் - இடுவாரானாலும், தமர்ஆயார் மாட்டே- அந்த அன்புள்ள சுற்றத்தாரானவர்களிடத்தே, இனிது - (அது) இனிமை யுடையதாம்; எ-று.

நட்புரிமையில்லாத சுற்றத்தார் தக்க நேரத்திலே உபகாரமாகக் கொடுக்கும் பொரிக்கறியும் வேம்புபோல் கசப்பைத் தருவதாகும்; அன்புள்ளவர் உணவுண்ணத்தக்க நேரமல்லாத நேரத்தில் இலைக்கறியுணவை யளிப்பினும் அஃதினிமையைத் தருவதாம் என்பது இதன் கருத்து. இதிலும் அன்புள்ள சுற்றத்தார், அன்பில்லாச் சுற்றத்தார் ஆகியவர்களிடத்திற் கொள்ளும் ஆகாரத்தின் தன்மை களையே விளக்கினார் முனிவர். இவ்வதிகாரம் பத்தாம் பாட்டிலும், ''வெருக்குக்கண் வெங்கருனை வேம்பாம்'' என இக்கருத்தினையே விளக்கியிருத்தல் உய்த்துணர்க.

இவ்வதிகாரம், சுற்றந் தழுவுதலைப்பற்றியதாதலின், 'நள்ளாதார்' என்பதற்கு நட்புரிமையில்லாச் சுற்றத்தா ரென்றும், 'தமராயார்' என்பதற்கு, 'அன்புள்ள சுற்றத்தார்'

என்றும் அதிகார அடைவு நோக்கிப் பொருள் விரிக்கப்பட்டது. இந்நூற் செய்யுட்கள் முழுவதுமே ஜைனமுனிவர்களால், பாண்டியனை விளித்துக் கூறப்பட்டனவாகலின், 'கேளாய்' என்னும் ஏவல் வினைமுற்றுக்கு முன்னர், 'பாண்டியனே! என்னும் விளிவருவித் துரைக்கப்பட்டது. வாய் - முன்; ஆதலின், நாள்வாய் - என்பதற்கு, 'நாளின் முற்பகுதி, அதாவது முற்பகல்' என்று பொருள் கொள்ளப் பட்டது. நள்ளாதார் - எதிர்மறை வினையாலணையும்பெயர். 'கேளாய்' என்பதில், ஆய்- முன்னிலை யொருமை விகுதி. வேளாண்மை - தொழிற் பண்புப் பெயர். வெம் கருனை- என்பதற்கு, 'விரும்பப்படும் பொரிக்கறி' எனப் பொருளுரைத்தலுமாம். வெம்மை, விருப்பமெனப் பொருள் படுதலை, ''வெம்மை வேண்டல்'' என்னும், (தொல்- சொல்- உரி-38-ஆம்) சூத்திரம் விளக்கும். 'வேம்பு' என்னும் மரத்தின் பெயர், முதலாகுபெயராய் அதன் சினையாகிய காயை யுணர்த்திநின்றது. 'அபராந்ஹம்' என்றும் வடசொல் திரிந்து, 'அபரானம்' என வந்தது. 'அபர அந்ஹம்' என்னும் இரண்டு பதங்களும் வடமொழித் தீர்க்க சந்திப் புணர்ச்சியாய், 'அபராந்ஹம்' என்றாயின; அபரம் - பின், அந்ஹம் - பகல்; ஆகவே, 'அபரானம்' என்பது, 'பிற்பகல்' எனப் பொருள்பட்டுநின்றது. இதுபோல 'மத்தியானம்' என்பது, 'நடுப் பகல்' எனப் பொருள்படும். அபரானப்போழ்து- இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. அடகு- இலை; அஃதிங்கு உணவுக்காம் கீரையினங்களை யுணர்த்தி நின்றது. (எ)

208. *முட்டிகை போல முனியாது வைகலுங்*
கொட்டியுண் பாருங் குறடுபோற் கைவிடுவர்
சுட்டுக் கோல் போல வெரியும் புகுவரே
நட்டா ரெனப்படு வார்.

(இ-ள்.) (சுற்றத்தார்களில்), முட்டிகைபோல- (ஒரு பொருளை அடித்து அடித்து ஓயாமல் வருத்தும்) சம்மட்டி யென்னும் கொல்லர் கருவிபோல, முனியாது - (தாம்

செய்யுங் காரியத்திலே) வெறுப்பின்றி, (அதாவது அயர்ச்சி யில்லாமல்), வைகலும்- தினந்தோறும், கொட்டி - (ஒருவர் மனத்தைத்) தட்டியசைத்து வருத்தி, உண்பாரும்- (அவரிடம் பொருள்வாங்கி) உண்டு பிழைப்பவரும், (அன்பில்லாதவர் களா யிருப்பார்களானால், பொருளிருக்கும் வரை சேர்ந் திருந்து, அவர் கைவறண்ட காலத்தில்), குறடுபோல்- ஒரு பொருளைப்பற்றி நெருப்பிலிட்டு அதிற்சூடேறும்வரை உடனிருந்து வெப்பம் அதிகரித்த காலத்தில் அதைவிட்டு நீங்கிவிடும் கொல்லன் கருவியாகிய), குறட்டைப்போல, கைவிடுவர்- (அவரைக்) கைவிட்டு நீங்குவர், (ஆதலின், இவர்உண்மைச்சுற்றத்தாராகமாட்டார். உண்மைச்சுற்றத்தார் எவர் எனில், எப்பொழுதும் அன்புடையவரேயாவர்; அத்தகைய அன்போடு), நட்டார்எனப்படுவார் - நட்புற்றவர் என்று சொல்லப்படும் சுற்றத்தார், சுட்டுக்கோல்போல - (ஒரு பொருள் நெருப்பில் சுடப்படும் காலத்தில் அதனுடன் நீங்காமல் நெருப்பிலேயே இருந்து வெப்பத்தை அனு பவிக்கும் கொல்லர் கருவியாகிய) உலையாணிக்கோல் போல, (தமக்குதவி செய்தவர் இறந்து ஈமத்தில்வைத் தெரிக் கப்படுங் காலத்தில்), எரியும் புகுவர்- அந்த நெருப்பிலும் புகுந்து மாயத்துணிவர்; எ-று.

மனத்தில் அன்பில்லாமல் ஒருவரை வருத்தி அவரிடம் பொருள் பறித்துண்டு ஜீவிக்கும் சுற்றத்தார் அவர் கெட்டகாலத்தில் கைவிடுவர்; ஒருவரிடம் அன்போடு சிநேகித்த சுற்றத்தார் அவர் இறந்து ஈமத்தி லெரியுங்காலத் தில் அவருடன் அந்நெருப்பிலும் புகத்துணிவர் என்பது இதன் கருத்து. அன்புடையார், தமக்குரியவர் இறந்த காலத் துத் தீக்குளித்து மிறப்பர் என்பதனைக் கோவலன் இறந்தது குறித்துத் தீயில்வீழ்ந் திறந்த மாதரியென்னும் இடைச்சி சரிதையாலும், வேறு வகையாலும் உயிர்விடுவர் என்பதைக் கோப்பெருஞ்சோழன் உயிர்நீத்தகாலத் துயிர்விட்ட பிசிராந்தையார் என்னும் தமிழ்ப் புலவர் சரிதையாலும் உணரலாம். இன்னும் உறவல்லாத தமிழ்ப் புலவர் சரிதை

யாலும் உணரலாம். இன்னும் உறவல்லாதாரியல்பினையும், உறவுள்ளாரியல்பினையும் இச்செய்யுட் கருத்திற் கிணங்க,

''அற்ற குளத்தி லறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வா ருறவல்லர்- அக்குளத்தில்
கொட்டியு மாம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுலர்வா ருறவு''

என்னும் ஔவையார் மூதுரைச் செய்யுளும், விளக்கும். நட்புள்ளார் செயலை,

''எல்லைக்க ணின்றார் துறவார் தொலைவிடத்துந்
தொல்லைக்க ணின்றார் தொடர்பு''

என்னும் திருக்குறள் 806-ஆம் செய்யுள் உணர்த்தும்.

சம்மட்டி, குறடு, உலையாணி மூன்றும் கொல்லருடைய கருவிகள். சம்மட்டி, பழுக்கக் காய்ந்த இரும்பு முதலியவற்றை அடித்து நசுக்குவது; குறடு அவற்றை நெருப்பில் வைக்கும்போதும், எடுத்தடிக்கும்போதும் பற்றிக்கொண்டிருந்து பின் விட்டுவிடுவது; உலையாணிக் கோல் எப்பொழுதும் நெருப்பிலேயே இருந்துகொண்டிருப்பது; நெருப்பை எரிப்பதற்குக் காற்றைச் செலுத்தும் துருத்தி வாயில் இது குழாய் வடிவமாகச் சேர்க்கப்பட்டிருப்பது. இம்மூன்றும் முறையே அன்பில்லாச் சுற்றத்தார் ஒருவரை வருந்திப் பொருள் பறிப்பதற்கும், நல்ல நிலையில் அவரோடு சேர்ந்து கெட்டநிலையில் அவரைவிட்டு நீங்குவதற்கும், அன்புள்ள சுற்றத்தார், எந்நிலையிலும் தமக்குரியாரைவிட்டு நீங்காதிருத்தற்கும் உவமையாகக் கூறப்பட்டன. இவற்றால் உறவுள்ள சுற்றத்தார் தன்மையும், உறவில்லாக் கிளைஞர் தன்மையும் விளக்கப்பட்டன. அதிகாரப் பொருளுக்குத் தக, 'நட்டார்' என்பதற்கு, 'உறவுள்ள சுற்றத்தார்' என்று பொருள் கூறப்பட்டது.

சம்மட்டி- கைமுஷ்டிக்குள் அடங்குவதாதலின், முட்டிகையெனப் பெயர்பெற்றது; முஷ்டிகை - கைப்பிடி. முனியாது - எதிர்மறை வினைக்குறை; ஆ- எதிர்மறை, த்- எழுத்துப்பேறு, உ- வினையெச்ச விகுதி; து- வினையெச்ச விகுதி யெனினுமாம். 'வைகலும்' என்பதிலுள்ள உம்மை- தொறுப் பொரு ளுணர்த்தவந்தது. இங்குக் கொட்டுதலாவது - மனத்திற்படியச் சொற்களை இடித்திடித்துக் கூறி அதனை வருத்தித் தம் வழிக்கிழுத்தலாம். உண்பார்- வினையாலணை யும்பெயர்; இதன் உம்மை- உயர்வு சிறப்புப்பொருளது. விடுவர்- வினைமுற்று; பயனிலை. 'எரியும்' என்பதிலுள்ள உம்மை- இழிவு சிறப்புப்பொருளது. (அ)

209. *நறுமலர்த்தண் கோதாய் நட்டார்க்கு நட்டார்*
மறுமையுஞ் செய்வதொன் றுண்டோ- இறுமளவும்
இன்புறுவ வின்புற் றெழீஇ யவரோடு
துன்புறுவ துன்புறாக் கால்.

(இ-ள்.) நறு- நல்ல, (வாசனையுள்ள), மலர்- மலர் களால் தொடுக்கப்பட்ட, தண்- குளிர்ச்சி பொருந்திய, கோதாய்- மாலையை அணிந்த பெண்ணே! நட்டார் உறவுகொண்டவராகிய சுற்றத்தார், நட்டார்க்கு- தம்மோடு நண்புகொண்ட சுற்றத்தார்க்கு, (தாமும் அவரும் உயிரோ டிருக்கும்போதே இவ்வுலகத்தில் அவர் இன்புறுங்காலத்தில் இன்புற்று அவர் சென்ற வழியே நடந்து, துன்புறுங் காலத்தில் துன்புறவேண்டும் அவ்வாறு), இறும் அளவும்- (அவரும் தாமும்) இறந்துபோம் வரையிலும், அவரோடு - அவர் களோடு, (இவ்வுலகத்தில்), இன்பு உறுவ இன்புற்று- இன்ப மடையக் கூடியவைகட்கு இன்பமுற்று, எழீஇ- (எழுச்சி யுற்ற காலத்தே) எழுச்சியுற்று, (அதாவது, உயர்ந்து), துன்பு உறுவ - துன்பங் கொள்ளத்தக்கவற்றிற்கு, துன்பு உறாக்கால் - துன்பப்படாவிட்டால், (பின்னர் அவர்க்குதவி செய்தற்கு வேறொரு சமயம் வாய்க்காது; இறந்தபின் செய்து

கொள்ளலாமென்றாலோ, அவ்வாறு இவ்வுலகைவிட்டு நீங்கியபின்), மறுமையும் - மறுஉலகத்திலும், செய்வது ஒன்று உண்டோ - செய்யத்தக்கதோர் உதவி இருக்கின்றதோ? (இல்லை; இறந்தபின் ஒருவரையொருவர் பார்த்தலும், ஒருவர்க்கொருவர் உதவி செய்தலும் இயலா), எ-று.

நட்புள்ள சுற்றத்தார், தம் உறவினர்க்கு, உலகத்தில் உயிரோடிருக்குங் காலத்திலேயே அவரோடு சேர்ந்தின்புறுங் காலத் தின்புற்று, உயருங்காலத்துயர்ந்து, துன்புறுங் காலத்தில் துன்புற்று உதவிசெய்தல் வேண்டும்; அங்ஙனம் செய்யாவிடில் இறந்தபின் மறுமையில் எதுவும் செய்தல் இயலாது என்பது இதன் கருத்து. இதனால் அன்புள்ள உறவினரின் கடமை இன்னதென்று விளக்கிக் காட்டப்பட்டது. மனிதர், இறந்தபின், இவ்வுலகத்தில் சுற்றத்தாராயிருந்தது போலிருப்பதும், ஒருவர்க் கொருவர் உதவி செய்தலும் மறுமையில் அமையாவாதலின், 'மறுமையுஞ் செய்வதொன்றுண்டோ' என்றார் முனிவர். இஃதில்லை யென்னும் பொருள் பயந்து நிற்றலால் எதிர்மறை யெச்சமாம்;

''எதிர்மறை யெச்ச மெதிர்மறை முடிபின''

என்னும் (தொல்-சொல்-எச்-39-ஆம்) சூத்திரவுரை பார்க்க. 'மலர்த்தண் கோதாய்' என்பதற்கு, 'மலர்களைச் சூடிய குளிர்ச்சி பொருந்திய கூந்தலையுடையவளே!' எனப் பொருளுரைத்தலுமாம். நறுமலர்த்தண் கோதை - அன்மொழித் தொகைக் காரணப்பெயர்; கோதை' என்பதற்கு, 'மாலை போன்றவள்' எனப்பொருள்கொள்ளின், இஃதுவமையாகு பெயராம். 'கோதை' என்பது, 'ஆய்' என்னும் விளியுறு பேற்று, 'கோதாய்' என ஈறுதிரிந்து நின்றது; இது, மகடூஉ முன்னிலை எனப்படும். மறுமையில் ஒன்றும் முடியாதென்பது குறிப்பிடப்பட்டதாகலின், இதிலுள்ள உம்மை- இழிவுசிறப்புப் பொருளது. எழீஇ - சொல்லிசையளபெடை;

எழுச்சி- உயர்வை விளக்கி நின்றது. இதிலும் அதிகாரவரம்பு நோக்கி, 'நட்டார்' என்பது சுற்றத்தார்க்கே கொள்ளப்பட்டது. (கூ)

210. *விரும்பிலா ரில்லத்து வேறிருந் துண்ணும்*
வெருக்குக்கண வெங்கருனைவேம்பாம்-
விருப்புடைத்
தன்போல்வா ரில்லுட் டயங்குநீர்த் தண்புற்கை
என்போ டியைந்த வமிழ்து.

(இ-ள்) (ஒருவன்), விருப்பு இல்லார்- (தன்மீது) அன்பு இல்லாத சுற்றத்தாரது, இல்லத்து- வீட்டில், வேறு இருந்து - (பந்தியில் இருப்பவர்களோடிராமல் தான் மாத்திரம்) வேறாக ஓர் அறையில் தனித்திருந்து, உண்ணும்- உட்கொள்ளுகின்ற, வெருகுகண்- பூனையின் கண்போன்ற, (பளபளப்பையுடைய), வெம்கருனை- சூட்டோடு கூடிய பொரிக்கறியுணவும், வேம்புஆம்- வேப்பங்காய்போல் கசப் புடையதாகும். விருப்புஉடை - (தன்மேல்) அன்புடைய, தன் போல்வார்- தன்னை நிகர்த்த சுற்றத்தாருடைய, இல்உள் - வீட்டிலே, (உண்ணப்படும்), தயங்கும் (தெளிவாக) விளங்கு கின்ற, நீர்- தண்ணீர் வடிவமாயுள்ள, தண் - குளிர்ந்த, புற்கை - புல்லரிசிக் கஞ்சியும், என்போடு இயைந்த - உடம்பிற்குப் பொருந்திய, அமிழ்து - அமிர்த மாகும்; எ-று.

இவ்வதிகாரத்தின் 6-7ஆம் செய்யுட்களின் கருத்தே இதிலும் கூறப்பட்டது. வேறிருந்து- என்பதற்கு, 'அன்போடு கூடி உபசாரம் செய்வதற்கு மாற்றமாய் (அதாவது, உண்மை உபசாரம் செய்யப்படாமல்) இருந்து' என்று பொருள் கூறினும் பொருந்தும். சில சுற்றத்தார், மனத்திற் சிறிதும் அன்பில்லாமல் ஒருவரைக்கண்டவுடன் முகஸ்துதி பேசித் தமக்கு வேண்டியவர்களை ஒருபுறமாக உட்காரவைத்து அவர்கட்கு உயர்ந்த உணவு பரிமாறி விட்டு, அவர்களி னின்றும் வேறுபிரித்துத் தனி அறையில் உட்காரவைத்துச்

சுற்றுத் தாழ்ந்த உணவைப் பரிமாறி மிகவும் உபசரிப்பவர் போல நடிப்பர்; அப்படி நடிப்பவர் இடும் உணவு, பார்வைக்கு உயர்ந்த பொரிக்கறியுணவாகக் காணப்படினும் வேப்பங்காய்போல வெறுக்கத்தக்கதாம். இத்தகையார் சுற்றத்தாராகாரென்பது இதனாற் பெறப்படும்.

விருப்பில்லார்- எதிர்மறைப் பலர்பால் வினையாலணையும் பெயர். வெருகு + கண்- வெருக்குக்கண்; இது, உயிர்த்தொடர்க் குற்றியலுகர வேற்றுமைப் புணர்ச்சியாகலின், வருமொழி முதலின வொற்று இடையில் மிக, நிலைமொழியில் வல்லெழுத்து மிகுதி தோன்றி முடிந்தது;

''ஈரெழுத்து மொழியு முயிர்த்தொடர் மொழியும்
வேற்றுமை யாயி னொற்றிடை யினமிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி''

என்னும் (தொல்-எழுத்- குற்றிய-பு-6-ஆம்) சூத்திரம் பார்க்க. சூட்டோடிருக்கும் கறியே சுவையுடையதாமாகலின், அதனுயர்வு குறித்தற்கு, 'வெம்கருனை' என்றார் ஆசிரியர். கூழினும், கெட்டியில்லாமல் மிகத் தாழ்ந்தது என்பதைக் குறித்தற்கு, 'தயங்குநீர்த் தண்புற்கை' என்றார் முனிவர். இல்லுள் - என்பதில், உள்- ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. என்பு - எலும்பு; இது, சினையாகு பெயராய் உடம்பை யுணர்த்தி நின்றது;

''அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு''

என்னும் (திருக்குறள்-72-ஆம்) செய்யுளில் இஃதாகு பெயராய் வருதல் காண்க. 'கருனை' என்பதில் உயர்வு சிறப்பும்மை தொக்கது. 'புற்கை' என்பதில் இழிவு சிறப் பும்மை தொக்கது. அமிழ்து- அம்ருதம்' என்னும் வடமொழித்திரிபு; இது 'மிருத்யு' என்னும் மரணத்தை நீக்குவதாகலின்,

'அம்ருதம்' என்னும் பெயர் பெற்றதென்க. 'வெக்கருனை வேம்பாகும் என்ற சொற்றொடரும், உபமான மும், இவ்வதிகாரத்தின் 7-ஆம் செய்யுளினும் வந்தமை காண்க. 'என்புக்கு' என வருதற்பாலது, 'என்போடு' என வந்தது- உருபுமயக்கம். 'அமிழ்து' என்பது 'அமிர்தம் போல் இனிமையுடையதாம்' என விரிக்கப்படும்; இஃதுவமை யணி. (௧௦)

அதிகாரம் 22

நட்பாராய்தல்

நட்பாராய்தலாவது - சிநேகத்தன்மையை ஆராய்ந் தறிதலாம். அதாவது; ஒருவனோடு சிநேகங் கொள்ளுமுன்-அவனிடத்தே நட்புக்குரிய நற்குணங்களிருக்கின்றனவா என்று ஆராய்ந்து பின்னர் நட்புக்கொள்ளுதலாம். ஒருவனுடைய குணங்களை ஆராய்ந்துணராமல் அவனோடு சிநேகங்கொண்டால் அவனால் பல தீங்குகள் நேரும்; அவ்வாறு நேரும்போது முன் நேசித்த அவனைக் கைவிடுதல் குற்றமாதலால், நீக்கமுடியாது; அதனால் மேலும் துன்பமே விளையும். ஆதலால் ஒருவனோடு நட்புக் கொள்வதற்கு முன்னரே அவனிடத்து நற்குடிப்பிறப்பு, நல்லொழுக்கம், நற்குணம் முதலியன அமைந்திருக்கின்றனவா என்று ஆராய்ந்து அவையிருந்தால் மட்டுமே அவனை நண்பனாகக் கொள்ளல்வேண்டும். இது, மனிதர்க்கின்றியமையாததாதலின், இவ்வதிகாரத்தில் கூறப்படுகின்றது. மனிதனுக்கு இன்பமோ துன்பமோ நேர்ந்தவிடத்து அவற்றை உடனிருந் தனுபவித்து உதவி செய்யக்கூடியவர் சுற்றத்தாரும், நட்பினருமாகலின், இவ்வதிகாரம் சுற்றந் தழாலுக்குப் பின்வைக்கப் பட்டது.

இங்கே, நட்பு- என அதிகாரத்துக்கு வந்தது தொழிற் பெயர்; இது, தொழிலாகு பெயராய் நட்புடையாரை யுணர்த்தி நின்றது.

211. *கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்*
குருத்திற் கரும்புதின் றற்றே - குருத்திற் (றும்
கெதிர்செலத்தின் றன்ன தகைத்தரோவென்றும்
மதுரமி லாளர் தொடர்பு.

(இ-ள்.) கருத்து- (நல்ல நூல்களின்) உட்பொருளை, (அதாவது, அர்த்தத்தை), உணர்ந்து - அறிந்து, கற்று அறிந்தார்- படித்து (நன்மை தீமைகளை பகுத்து) உணர்ந்தவர் களுடைய, கேண்மை- நட்பானது, எஞ்ஞான்றும்- எக்காலத் தும், கரும்பு - கரும்பை, குருத்தின் - நுனியிலுள்ள குருத்தி லிருந்து, (அடிப்பாகம்வரையில்), தின்றுஅற்று - கடித்துத் தின்றாற்போலும், (அதாவது, தொடக்கத்தில் இனிமை குறை வாயிருந்து மேற்செல்லச் செல்லத் தீஞ்சுவை அதிகரிப்பது போலாம்), என்றும்- எப்பொழுதும், மதுரம் இல்ஆளர் - (கல்வியுணர்ச்சியாகிய) இனிய தன்மையில்லாதவர் களுடைய, தொடர்பு - உறவானது, குருத்திற்கு எதிர்செல்ல - (அக்கரும்பைக்) குருத்திற்கு எதிரே செல்லும்படி, (அதாவது, அடியிலிருந்து நுனிவரையில் செல்ல மாற்றி), தின்று அன்னதகைத்து- தின்னாற்போன்ற தன்மையையுடையது, (அதாவது, முதலில் இனிமை அதிகரித்திருந்து மேற்செல்லச் செல்லத் தீஞ்சுவை குறைந்துபோவது போன்ற தன்மை யுடையது) எ-று.

உட்பொருளை யுணர்ந்து நூல்களைக்கற்று நன்மை தீமைகளை யுணர்ந்தவர்களுடைய சிநேகம் கரும்பை நுனிக் குருத்திலிருந்து அடிவரை தின்பதுபோல ஆரம்பத்தில் இனிமை குறைவாயிருந்து, போகப்போக அதிகரிக்கும்; கல்வியறிவாகிய இனிய தன்மையில்லாதவர்களுடைய

சிநேகம், அக்கரும்பை அடியிலிருந்து நுனிவரை தின்பது போல முதலில் இனிமை அதிகரித்து மேற்போகப்போகக் குறையும் தன்மையையுடையது என்பது இதன் கருத்து. இதனால் சிநேகங் கொள்ளத்தக்கவர் கல்வியறிவுடையவ ரென்பதும், கொள்ளத்தகாதவர் அஃதில்லாதவரென்பதும் விளக்கப்பட்டன. அறிவுடையார் நட்பு முதலிற் சுருங்கி யிருந்து பின் பெருகுமென்பதும், அறிவில்லார் நட்பு முதலிற் பெருகிப் பின் குறையுமென்பதும் உணரப்படும்.

கரும்பு குருத்தில் ஒரு சுவையுமில்லாதிருந்து அடிப் பாகத்திற்குச் செல்லச்செல்லத் தித்திப்பு அதிகரிக்கும்; இக்கருத்து, இந்நூலில் 'கல்வி' என்னும் அதிகாரத்தில் 138-ஆம் செய்யுளிலும் வருதல் காண்க. இன்னும், நற்றகவுடை யார் கேண்மை வரவரப்பெருகுமென்பதும், பேதையர் நட்புக் குறையுமென்பதும்,

''நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு''

என்னும் (திருக்குறள்- 782-ஆம்) செய்யுளானும், இந் நாலடியார்- 125-ஆம் செய்யுளானும் உணரப்படும். கரும்பை நுனியிலிருந்து தின்பதாலும், அடியிலிருந்து தின்பதாலும் உண்டாம் பயன்களைப் போல, அறிவுடையாரோடு சிநேகஞ் செய்வதாலும், அறிவில்லாரோடு சிநேகஞ் செய்வதாலும் பயன்களுண்டாம் என்று இதில் விளக்கியது - பயனுவமை யணியாம். மதுரம் - வடமொழி. அரோ- ஈற்றசை; தேற்றப் பொருளதெனலுமாம். (க)

212. *இற்பிறப் பெண்ணி யிடைதிரியா ரென்பதோர்*
நற்புடை கொண்டமை யல்லது - பொற்கேழ்
புனலொழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட
மனமறியப் பட்டதொன் றன்று.

(இ-ள்.) பொன்- பொன்னோடு சேர்ந்த, கேழ்- நல்ல நிறம் பொருந்திய, புனல்- (அருவி) நீர், ஒழுக- (பெருகி ஒலி யோடு வேகமாகப்) பாய, (அதன் உருவத்தைப் பார்த்தும், முழக்கத்தைக் கேட்டும்) புள்- பறவைகள், இரியும்- (பயந்து) ஓடுதற்கிடமான, பூகுன்றம் - (அழகிய (அல்லது, மலர்கள் மிகுந்த), மலைகளையுடைய, நாட- பாண்டியநாட்டுக் கரசனே! (நட்பாராய்வதில், பெரியோர், நூல்களைக் கற்று ணர்ந்திருத்தலை நட்புக்குரியதாகக் கொண்டிருத்தலோடு, உயர்ந்த பரம்பரையில் பிறந்திருக்கும் தன்மையைச் சிறப் புடையதாகக் கொண்டிருக்கின்றனர்; ஏனெனில், அவர் எப் பொழுதும் தங்கள் உயர்ந்த தன்மை யினின்றும் மாறுபடா ரென்பது குறித்து; ஆதலின், அவ் வாறு), இல்பிறப்பு - (ஒருவருடைய) உயர்குடிப்பிறப் பினை, (அதாவது, உயர்ந்த பரம்பரைப் பிறப்பை), எண்ணி- நினைத்து, (அவர்), இடை- நடுவில், திரியார்- (தமது நற்குணத்தினின்றும்) மாறுபடார், என்பது ஓர் - என்று தீர்மானிப்பதாகிய ஒரு, நல்புடை - நல்ல தன்மையை, கொண்டமை அல்லது- (சிநேகத்துக்குச் சிறந்த தாக அப் பெரியார்) கொண்டதல்லாமல், மனம்- (நம் முடைய) மனத்தால், அறியப்பட்டது- (சிநேகத்துக்குச் சிறந்ததாகத்) தெரிந்து கொள்ளப்பட்டது, ஒன்று அன்று- வேறொன்று மன்று; ஏ-று.

பெரியோர், நட்புக்குரிய தன்மைகளில், உயர்ந்த பரம்பரைப் பிறப்பு மிகச் சிறந்ததெனக் கொண்டிருக்கின் றார்கள்; ஆதலின், அஃதன்றி நட்புக்கு ஆராய்ந்து கொள்ள வேண்டியவைகளில் சிறந்தது வேறெதுவுமில்லையென்பது இதன் கருத்து. சிநேகத்துக்குத் தேர்ந்தெடுக்கும் தன்மை களில் உயர்ந்த பரம்பரைப் பிறப்பு மிகச் சிறந்ததென்பது இதனாற் பெறப்படும். முந்தின செய்யுளில் கல்வியறிவைக் கூறி இதில், உயர்குடிப் பிறப்புச் சிறந்ததென்பதை விளக் கினார் ஆசிரியர். உயர்குடியிற் பிறந்தாருள்ளும் மாறுபாடு டையார் சிலர் இருப்பாரெனினும், பெரும்பான்மையும் உயர்குணமுடையாரோயிருப்ப தியல்பாகலின், இங்ஙன

மதனைச் சிறப்பித்துக் கூறினார். உயர்குடியிற் பிறந்தாருள் மாறுபாடுடையாரும், 'குலவித்தை கல்லாமற் பாதி' 'குலத் தளவேயாகும் குணம்' என்பவற்றிற்கிணங்கச் சில சமயங் களில் நற்குணமுடையாராகவும் விளங்குவர்; ஆகலின், இதுபற்றியும் கூறினாரென்க. இதனால், சிநேகத்துக்கு உயர் குடிப் பிறப்புமட்டு மிருத்தலே போதும்; மற்ற குணங்கள் இல்லாவிடினும் குற்றமன்று என்று கொள்ளுதல் கூடாது; மற்ற நற்குணங்களையும் ஆராய்ந்து கொள்வதோடு உயர் குடிப்பிறப்பையும் சிறப்புடையதாகக் கொள்ள வேண்டும் எனக் கோடலே பொருத்தமுடைத்தாம்.

இனி, ஒருவர், பிறருடைய மனநிலையை உள்ளபடி அறிவது முடியாதாகலின் உயர்குடிப் பிறந்தவர், நற்குணத் தினின்றும் மாறுபடாரென்னுமோர் உறுதிபற்றி நற்குடிப் பிறந்தாருடன் அவரது மனப்போக்கை ஆராயாமலே நட்புக் கொள்ள வேண்டும் என்னும் கருத்துட்படப் பொருள் கூறு வாருமுளர். உயர்குடிப் பிறந்தாருள்ளும் தீக்குணமுடையார் இருத்தலும் கூடுமாகலின், இவ்வுரை அத்துணைச் சிறப்பன் றென்க.

இங்கே இற்பிறப்பு, உயர்குடிப்பிறப்பு, குலம் என்ப வற்றால் குறிப்பிடப்பட்டது சாதியையன்று; உயர்ந்த குணத்தோடு வரும் ஒருவருடைய பரம்பரையையே, இந்த நற்பரம்பரை எல்லாச் சாதிகளிலும் ஏற்படுவதுண்டு; இது, திருக்குறள், 'குடிமை' என்னும் அதிகாரத் தொடக்கத்தில், 'உயர்ந்த குடிப்பிறப்பு நால்வகை வருணத்தார்க்கும் இன்றி யமையாதாகலின்' என்று பரிமேலழகர் கூறியிருத்தலான் உணரப்படும்.

அருவிநீர் பொன்மணல்களோடு சேர்ந்து பிரகார முடையதாயும், விரைந்து மேலிருந்து பாய்தலின் முழக்க முடையதாயுமிருக்கும். இவற்றால் பறவைகள் அஞ்சி யோடும். இது மலையின் சிறப்புக் கூறியவாறாம். இடை

திரியார்- ஏழாம் வேற்றுமைத் தொகை. 'நற்புடை' என்பதில், புடை- பக்கம் என்றும் பொருளது; 'ஒரு பக்ஷம், ஒரு புடை' யென்பன, 'ஒருவகை, ஒருதன்மை' என்று பொருளாதல் போல இங்குத் 'தன்மை' என்று பொருள்பட்டு நின்றது. (உ)

213. *யானை யனையவர் நண்பொரீஇ நாயனையரா*
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லு மெறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கு நாய்.

(இ-ள்.) யானை - வாரணமானது, அறிந்து அறிந்தும்- (பாகன் தன்னை ஆதரிப்பவன் என்று) மிகுதியாக உணர்ந் திருந்தும், பாகனையே- அந்த மாவுத்தனையே, கொல்லும்- (கோபம் வந்த சமயத்தில்) கொலை செய்துவிடும், நாய்- சுணங்கானது, எறிந்தவேல் - (தன்னை வளர்ப்பவன் ஒரு சமயம் கோபித்துத் தன்மீது) வீசிய ஆயுதம், மெய்யது ஆ- (பாய்ந்து தன்) உடம்பில் உள்ளதாகவேயிருக்க, (அப் போதும்), வால்குழைக்கும்- (அவன்மீது வெறுப்புறாமல் தன் அன்பையும் அடக்கத்தையும் காட்டி) வாலை ஆட்டிக் கொண்டு நிற்கும், (ஆதலின்), யானை அனையவர் - அந்த யானையைப் போன்றவர்களுடைய, நண்பு- நேயத்தை, ஒரீஇ- விட்டுநீங்கி, நாய்அனையார்- நாயைப் போன்றவர் களுடைய, கேண்மை - நட்பை, கெழீஇக் கொள்ளல் வேண்டும்- தழுவிக் கொள்ளுதல் வேண்டும்; எ-று.

யானைப்பாகன், அந்த யானைக்கு நெடுங்காலமாக வேண்டிய உணவாதிகளையூட்டி அதனை அன்போடு வளர்த்து வந்தாலும், ஒரு சமயத்தில் அதனை நல்வழிப்படுத் தும் பொருட்டு அடிக்கும் சிறுகுற்றத்தை அது, மனத்தில் அடக்கிவைத்திருந்து பகைகொண்டு மதம் மிக்க காலத்தில் அவனையே முதலிற் றேடிக் கொன்றுவிடும்; இதைப் போலவே சிலர், தமக்குப் பலநாளும் உதவிசெய்து வரு வோர் ஒரு சமயம் செய்யும் சிறு குற்றத்திற்குப் பகை

கொண்டு அவர்க்குத்தீமை புரிவார்; இத்தகையாரோடு சிநேகங் கொள்ளுதலே கூடாது. நாய், தன்னை வளர்ப்பவன் தனக்குக் கூழை ஊற்றிவந்தாலும் அவன்மீது மிக்க விசுவாச முடையதா யிருக்கும்; அவன் ஒருசமயம் தன்மீது கோபங் கொண்டு ஆயுதத்தால் தன்னைக் குத்திவிட்டாலும் அவ் வாயுதம் உடம்பிலிருக்கும்போதுகூட அவன்மீது கோபங் காட்டாமல் தன் வாலை ஆட்டி அன்பையும் அடக்கத்தையும் காட்டும்; இதைப்போலவே சில உத்தம குணமுள்ளார், தம் சிநேகிதர் சிறிய உதவிகளைச் செய்துவந்து ஒருசமயம் பெருங்குற்றத்தைச் செய்துவிட்டாலும் அவர்மீது பகை பாராட்டாமல் நட்புரிமையைக் காட்டுவர்; இத்தகை யாருடைய சிநேகத்தையே எப்பொழுதும் கைக்கொள்ள வேண்டும் என்பது இதன் கருத்து.

இதனால், இன்னவர் சிநேகம் கொள்ளத்தக்கது, இன்னவர் நேயம் தள்ளத்தக்கது என்று கூறினார் முனிவர். இன்ன இன்ன ஏதுக்களால் இன்ன இன்னவை போன்ற வருடைய சிநேகத்தைத் தள்ளுதலும், கொள்ளுதலும் வேண்டும் எனக்கூறியது ஏதுவணி விரவிய உவமையணி யாம். ஓரீஇ, கெழீஇ என்பன - சொல்லிசை யளபெடைகள்; ஒருவி, கெழுவி என்னும் சொற்கள் விகற்பித்து இங்ஙனம் அளபெடுத்தன. 'அறிந்தறிந்து' என்னும் அடுக்கு - மிகுதிப் பொருளது. அயில் என்னும் வேற்படையை உணர்த்தும், 'வேல்' என்பது சிறப்பினால் பொதுவாக ஆயுதத்தை உணர்த்தி நின்றது. வேண்டும்- தேற்றப்பொருளில் வந்த தோர் வியங்கோள்; இதனை, 'உம் ஈற்றான் வந்ததோர் ஏவல் கண்ணிய வியங்கோள்' என்பர் நச்சினார்க்கினியர்; இது, சிந்தாமணி முதலிய சங்கநூல்களில் மிகுதியாகக் காணப் படும். ஒவ்வொரு குணத்திற்கு மாத்திரமே இதில் யானையும் நாயும் உவமை கூறப்பட்டன. நாய் பிறப்பில் இழிந்த தாயினும், நன்றி மறவாத ஒரு தன்மையுடையதாயிருப்பதால் இங்கு உயர்ந்தோர்க்கு உவமையாகக் கூறப்பட்டது. இங் ஙனம் கூறியது இழிவுவமையென்னும் குற்றத்தின்பாற்

படுமோ எனின் படாது பெரியோராற் கூறப்படுதலின்;

"மிகுதலுங் குறைதலுந் தாழ்தலு முயர்தலும்
பான்மாறு படுதலும் பாகுபா டுடைய"

என்னும் தண்டியலங்கார சூத்திரத்தானும், அதன் உரையாலும் இஃதுணரப்படும். (ங)

214. *பலநாளும் பக்கத்தா ராயினு நெஞ்சில்*
சிலநாளு மொட்டாரோ டொட்டார் - பலநாளும்
நீத்தா ரெனக்கை விடலுண்டோ தந்நெஞ்சத்
தியாத்தாரோ டியாத்த தொடர்பு.

(இ-ள்.) (அறிவுடையார்), பலநாளும் - பல தினங்களும், (சிநேகத்துக்குப்பொருத்தமற்றவர்), பக்கத்தார் ஆயினும் - (தமது) பக்கத்திலே வாழ்ந்துகொண் டிருப்பவர்களானாலும், நெஞ்சில் - மனத்தில், ஒட்டாரோடு - பொருந்தாதவர்களாகிய அவர்களுடன், சிலநாளும் - சில தினங்களாயினும், ஒட்டார்- சேர்ந்திருக்க மாட்டார்கள், (சிநேகத்துக்குரியார் பலநாட்கள் தம்மைவிட்டுப் பிரிந்திருப்பினும்), தம்நெஞ்சத்து - தம்முடைய மனத்திலே, யாத்தாரோடு - (சிநேகத்தால்) கட்டப்பட்டவர்களுடனே, (அதாவது, பற்றப்பட்ட அவர்களுடனே), யாத்த- தழுவிய, தொடர்பு - நட்பை, பலநாளும் - பலதினங்களும், நீத்தார்என- (மேற்கூறியபடி) விட்டிருந்தார் என்று, (நினைத்து), கைவிடல்உண்டோ - தம்மிடத்தினின்றும் நீங்கிவிடுதல் (உலகில்) உளதோ?, (இல்லை); எ-று.

அறிவுடையார், தம்மனத்திற்குப்பொருந்தாதவர் நெடுங்காலமாகத் தங்கள் பக்கத்திலிருந்தாலும் அவரோடு சிறிதுகாலமும் சேரமாட்டார்; அன்பினாலே நட்புக்கொண்டவர் நெடுங்காலம் தம்மைவிட்டு விலகியிருந்தாலும் அவர் உறவைக் கைவிடமாட்டார் என்பது இதன் கருத்து.

இதனால், மனதிற்குப்பொருந்தாதவர் பக்கத்திலிருந் தாலும் அவரோடு சிநேகங்கொள்ளலாகாதென்பதும், அன்புடையார் பிரிந்திருந்தாலும் அவர் நேயத்தைக் கைவிடலாகாதென்பதும் பெறப்படும். இதில் சிநேகத்துக் குரியவர் இன்னவரென்றாய்ந்து கொள்ளுதல் விளக்கப் பட்டது.

'பலநாளும்' என்பதிலுள்ள உம்மை- உயர்வு சிறப்புப் பொருளது; இது நாளின் மிகுதிப்பாட்டை விளக்கிற்று. 'சிலநாளும்' என்பதன் உம்மை- இழிவு சிறப்புப்பொருளது; இது நாளின் குறைவை விளக்கிற்று. 'பக்ஷம்' என்னும் வடசொல் திரிந்து, 'பக்கம்' என்றாயது. உண்டோ - எதிர்மறையெச்சம். *(ச)*

215. *கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது*
வேட்டதே வேட்டதா நட்பாட்சி - தோட்ட
கயப்பூப்போன் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரு நட்பாரு மில்.

(இ-ள்.) கோட்டு பூபோல - மரக்கொம்புகளில் மலர கின்ற மலர்களைப்போல, மலர்ந்து - (முதலில்) முகமலர்ச்சி யடைந்து, பின்- பின்பு, கூம்பாது- (அம்மலர்கள் குவிவது போல) முகஞ்சுருங்காமல், வேட்டதே வேட்டது- (இருவர் நேயமானபோது முன் ஒருவர்மீதொருவர்) விருப்பம் வைத்ததுவே விருப்பமாயிருப்பதுவே, நட்பு ஆட்சி ஆம்- சிநேகத்தைக் காப்பதாகும், தோட்ட- தோண்டப்பட்ட, கயம் - தடாகத்திலே (நீரில்) உண்டாகிற, பூ போல்- மலர்களைப் போல, (அதாவது, தடாகத்திலுண்டாகும் மலர்கள் முதலில் மலர்ந்து பின் கூம்புவதுபோல), முன்மலர்ந்து - சிநேகஞ் செய்யுங்காலத்தில்) முதலில் முகமலர்ச்சியுற்று, பின் கூம்பு வாரை - பின்னர் (அம்மலர்ச்சி நீங்கி முகம்) சுருங்குவோரை, நயப்பாரும்- விரும்புகிறவர்களும், நட்பாரும்- நேசிப்பவர் களும், இல்- (உலகத்தில்) இல்லை; எ-று.

மரக்கிளைகளில் உண்டாகு மலர்கள் முதலில் மலர்ந்து பின் குவியாதிருப்பதுபோல இருவர் சிநேகமான போது ஒருவர்மீது ஒருவர் வைத்த அன்பு வைத்தவாறே இருப்பதுவே நட்புரிமையைக் காப்பாற்றுவதாகும்; நீர்ப் பூவினங்கள் முதலில் மலர்ந்து பின் கூம்புவதுபோல சிநேகஞ் செய்யுங் காலத்தில் முதலில் முகமலர்ச்சியுற்றுப் பின் அம்மலர்ச்சியொழிந்து சுருங்குவோரை எவரும் விரும்பிச் சிநேகங்கொள்ளார் என்பது இதன் கருத்து.

இதனால், சிநேகங்கொள்வோர் முதலிற் பழகும் போது எவ்விதமுகமலர்ச்சியோ டிருந்தார்களோ அவ்வித முகமலர்ச்சியோடு எப்போதுமிருத்தல் வேண்டுமென்பதும், அத்தகையினரே சிநேகங் கோடற்குரியாரென்பதும், முதலில் முகமலர்ந்து பின் சுருங்குவோர் நட்புக்குரியராகாரென்பதும் பெறப்படும்.

மரக்கிளைகளிலுண்டாகும் மலர்கள் மலர்ந்தபின் குவியாதிருத்தலும், தடாகங்களில் மலரும் நீர்ப்பூவினங்கள் மலர்ந்து குவிதலும் அவற்றின் இயற்கைகளாம். நட்பாட்சிக்குக் கோட்டுப்பூவையும், சிநேகிக்கத்தகாதவருக்கு நீர்ப் பூவையும் உவமை கூறியது- உவமையணி. பூவகைகள்- கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, புதற்பூ என நால்வகைப் படும்;

''மெல்லிய கொடிப்பூக் கோட்டில் விளங்குபூ
நீர்ப்பூ வேறு
புல்லிய புதற்பூ வென்னப் பொருந்துநால் வகையிற்
பூவாம்''

என்னும் (சூடாமணி) நிகண்டு 12-வது பல்பெயர்க் கூட்டத் தொரு பெயர்த் தொகுதி-18-ஆம்) செய்யுளடிகளால் இவை உணரப்படும். இனி, இவற்றோடு நிலப்பூவொன்று கூட்டிப் பூவகை ஐந்தெனக் கூறுவாருமுளர். 'ஆம் நட்பாட்சி'

என்பதை, 'நட்பாட்சி ஆம், என மாற்றிப் பொருள் கொள்ளப் பட்டது; ஆம்- ஆகும் என்பதன் விகாரம். 'தொட்ட' என்பது நீட்டல் விகாரத்தால்' 'தோட்ட' என்றாயது; இனி, 'தோட்ட' என்பதற்கு, 'தோடுகளையுடைய' எனப் பொருள் கோடலு மாம்; தோடு- இதழ்; இது பூவுக்கடை. (ரு)

216. *கடையாயார் நட்பிற் கமுகனைய ரேனை*
யிடையாயார் தெங்கி னனையர்- தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு.

(இ-ள்.) நட்பில் - சிநேகத்தில், கடைஆயார்- கடைப் பட்டவர்கள்; கமுகுஅனையர் - பாக்கு மரத்தைப் போன்ற வர், ஏனை இடை ஆயார்- மற்றை நடுத்தரமுள்ளார், தெங்கின் அனையர்- தென்னைமரத்தை நிகர்த்தவராவர், தலைஆயார் - முதல் தரமானவர், எண்ணரும் - நினைத்தற் கருமையான (சிறப்பினையுடைய), பெண்ணை போன்று - பனைமரத்தை நிகர்த்து, தொன்மை உடையார்- (முதலிற் கொண்ட சிநேகத்தின்) பழமையான தன்மையை (எப் பொழுதும்) உடையவராவர், தொடர்பு - (அவருடைய) சிநேகம், இட்ட ஞான்று இட்டதே- வைத்த காலத்தில் வைத்ததுவேயாகும், (அதாவது, சிநேகம் ஏற்பட்ட காலத்தில் எப்படியிருந்ததோ அப்படியே இருக்கும்); எ-று.

பாக்குமரத்துக்கு அடிக்கடி நீர்விட்டு உபசரணை செய்து கொண்டு வந்தால் மாத்திரமே அது செழித்துப் பயன் தரும்; ஒருநாள் உபசரணை குறைந்தாலும் பயன் தரமாட் டாது; அதைப்போல கடைப்பட்ட சிநேகருக்குத் தினந் தோறும் உபசரணை செய்து கொண்டு வந்தால் மாத்திரம் அவர் சிநேகத்தை விடாதிருப்பர்; ஒருநாள் உபசரிப்புக் குறைந்தாலும் சிநேகத்தைக் கைவிடுவர்; ஆதலின், கமுகு இவர்க்கு உவமையாகக் கூறப்பட்டது. தென்னைக்குச் சில தினங்கள் இடைவிட்டு உபசரணை செய்துவர அது

பயன்தரும்; அப்படிச் செய்வதில் குறைவுபட்டாலோ பயனைத் தராது; இதைப் போல நடுத்தரமான சிநேகிதர்க்கு இடையிடையே உபசரணை செய்துவர அவர் சிநேகத்தைப் பாராட்டி வருவர்; அதிற் குறைவுபட்டால் அதனைக் கை விடுவர்; ஆதலின், தென்னை இவர்க்கு உவமை கூறப் பட்டது. பனையை ஒருவர் உற்பத்தி செய்யுங்காலத்தில், அதன் வித்தை, மழைபெய்து தரை ஈரமாயிருக்கும்போது மண்ணைத்தோண்டிக் குழியாக்கி, அக்குழியில் போட்டு மேலே மண்ணைத் தள்ளி மறைத்து விட்டால் அது தானே முளைத்து மரமாகிப் பின் தனக்கு நீர்பாய்ச்சல் முதலிய உதவி களைச் செய்யாவிடினும் தன்னை உண்டாக்கிய அவர்க்கு எப்பொழுதும் பயனைக் கொடுத்துக் கொண்டே வரும்; இதைப்போலவே முதல்தரமான சிநேகிதர், தமக்கொருவர் தொடக்கத்திற் செய்த சிறு உதவியை நினைத்து எப்பொழு தும் அவர் சிநேகத்தைக் கைவிடாமல் அவர்க்கு வேண்டிய உதவிகைளச் செய்து கொண்டிருப்பர்; ஆதலின், பனை இவர்க்குவமையாகக் கூறப்பட்டது. இங்ஙனம் உத்தமர், மத்திமர், அதமருக்குப் பனை, தென்னை, கமுகு ஆகியன கொடைத்தன்மையில் பெரியோரால் உவமை கூறப் பட்டிருத்தலை,

''உத்தமர்தா மீயுமிடத் தோங்குபனை போல்வரே
மத்திமர்தாந் தெங்குதனை மானுவரே - முத்தலரும்
ஆங்கமுகு போல்வா ரதம ரவர்களே
தேங்கதலி யும்போல்வார் தேர்ந்து''

என்னும் (நீதி வெண்பா-91-ஆம்) செய்யுளாலுணர்க. உத்தமர் முதலியோர்க்குப் பனை முதலியன உவமை கூறப்பட்டது- உவமையணி.

தொன்மை - பழமை; சிநேகத்தின் பழந்தன்மையை விளக்கி நின்றது; பனை ஆதியில் தன்னை உற்பத்தி செய்த தாகிய பழைய நன்றியை எப்பொழுதும் மறவாமல் பாராட்டக்

கூடியதாதலின், பெண்ணை போன்று தொன்மையுடை யார்' என்றார் முனிவர். இனி, 'தலையாயாராகிய தொன்மை யுடையார் தொடர்பு, எண்ணரும் பெண்ணைபோன்று இட்டஞான்று இட்டதே' என அன்வயங் கொண்டு பொருளுரைத்தலுமொன்று; இங்ஙனம் கொள்ளுங்கால், தலையாயார் தொன்மையுடையார்- இருபெயரொட்டுப் பண்புத்தொகையாம். 'க்ரமுகம்' என்னும் வடசொற்றிரிந்து, 'கமுகு' எனவந்தது. 'தெங்கின்' என்பதில், இன்சாரியை விரிந்து இரண்டனுருபாகிய, ஐ- தொக்கது. 'இட்டதே' என்பதற்குப் பின், 'ஆகும்' என்னும் சொல் வருவித் துரைக்கப்பட்டது; இது, சொல்லெச்சத்தின்பாற்படும்;

> *''சொல்லே னெச்ச முன்னும் பின்னும்*
> *சொல்லள வல்ல தெஞ்சுத லின்றே''*

என்னும் (தொல்-சொல்-எச்-45ஆம்) சூத்திரம் சேனாவரையர் உரை பார்க்க. (சு)

217. *கழுநீருட் காரட கேனு மொருவன்*
விழுமிதாக் கொள்ளி னமிழ்தாம்- விழுமிய
குய்த்துவையார் வெண்சோறே யாயினு மேவாதார்
கைத்துண்டல் காஞ்சிரங் காய்.

(இ-ள்.) ஒருவன் - ஒரு மனிதன், (தனக்கு மற்றொரு வனால் கொடுக்கப்படுவது), கழுநீருள்- (அரிசி) கழுவிய நீரில் (கலந்து) சமைத்த, கார்- கரிய, அடகுஏனும் - இலைக் கறியேயானாலும், விழுமிது ஆ கொள்ளின் - (அன்போடு கலந்த) சிறப்புடையதாகக் கொண்டால், அமிழ்துஆம் - (அது) அமுதத்தைப்போல இனிய சுவையுடையதாகும், (அன்பில்லாரால் கொடுக்கப்படுவது), விழுமிய - சிறந்த, குய்- தாளித்த கறிகளோடும், துவை- புளிங்கறிகளோடும், ஆர்- பொருந்திய, வெள்சோறே ஆயினும் - வெண்மையான நெல்லரிசிற்சோறே ஆனாலும், மேவாதார்- (அவ்வாறு

அன்போடு தன்னை) விரும்பிச் சிநேகிக்காதவருடைய, கைத்து - கையிலுள்ள பொருளாகிய அதனை, உண்டல் - உண்ணுதல், காஞ்சிரங்காய்- எட்டிமரத்தின் காயேயாகும், (அதாவது, எட்டிக்காயை தின்பது போலக் கெட்டதாகும்); எ-று.

அன்போடு கூடிய நண்பனிடத்தே ஒருவன் வாங்கி யுண்பது, கழுநீரிற் சமைத்த இலைக்கறியானாலும் அமுதம் போல் இனிமை செய்வதாகும்; அன்புடன் சிநேகிக்காத வனிடத்தே வாங்கியுண்பது தாளித்த கறிகளோடும், புளிங் கறிகளோடும் கூடிய நல்லரிசிச் சோறேயானாலும் எட்டிக் காயைத் தின்பதுபோலக்கெட்டதாகும் என்பது இதன் கருத்து.

இதனால், அன்புடையாரையே நட்பாளராகத் தேர்ந் தெடுத்துக் கொள்ள வேண்டுமென்பதும், அவரிடத்திலேயே உணவு முதலியன கொள்ள வேண்டுமென்பதும், அன்பில் லாரை நேசிப்பதும், அவர்பால் உணவுன்பதும் கூடாதென் பதும் விளக்கப்பட்டன. இச்செய்யுளின் கருத்தே முந்திய, 'சுற்றந்தழால்' என்னும் அதிகாரத்தின் 6-7-10-ஆம் செய்யுட் களிற் கூறப்பட்டிருத்தல் காண்க. 'கழுவுநீர்' என்பது விகாரப் பட்டு, 'கழுநீர்' என வந்தது. இது, வினைத்தொகை. 'அட கேனும்' என்பதிலுள்ள உம்மை- இழிவுசிறப்புப் பொருளது. விழுமிது, விழுமிய என்பன- 'விழுமம் என்னும் உரிச்சொல் லடியாக வந்தவை; விழுமம் சிறப்புப் பொருள் தரு மென்பது,

''விழுமஞ் சீர்மையுஞ் சிறப்பு மிடும்பையும்''

என்னும் (தொல்-சொல்-உரி-57-ஆம்) சூத்திரத்தாலுணரப் படும். 'துவை' என்பதற்குத் 'துவையல்' எனப் பொருள் கோடலுமொன்று. 'சோறே ஆயினும்' என்பதிலுள்ள

உம்மையும், ஏகாரமும்- உயர்வு சிறப்புப் பொருளன. கைத்து- கையிலுள்ள பொருள். உண்டல்- தொழிற்பெயர்.

218. *நாய்க்காற் சிறுவிரல்போ னன்கணிய ராயினும்*
ஈக்காற் றுணையு முதவாதார் நட்பென்னாம்
சேய்த்தானுஞ் சென்று கொளல்வேண்டுஞ் செய்விளைக்கும்
வாய்க்கா லனையார் தொடர்பு.

(இ-ள்.) ஈகால் துணையும் - ஈயின் காலளவாயினும், உதவாதார் - உதவி செய்யாதவர்கள், நாய்கால் சிறுவிரல்போல் - நாயின் கால்களில் உள்ள சிறிய விரல் களைப்போல், நன்கு அணியர் ஆயினும்- மிகவும் சமீபத்தி லுள்ளவர்களானாலும், நட்பு - (அவர்களுடைய) சிநேகம், என்ஆம் - என்ன பயனுடையதாம்; (ஒரு பயனுடைய) சிநேகம், என்ஆம்- என்ன பயனுடையதாம்; (ஒரு பயனு முள்ளதாகாது; ஆதலின், அவர்களுடைய சிநேகத்தை நீக்கி), செய்விளைக்கும்- நன்செய் நிலத்திலுள்ள பயிர்களை விளையும்படி செய்கின்ற, வாய்க்கால் அனையார்- மடை வாயினின்றும் பாய்கின்ற நீர்க்காலை நிகர்த்துப் பேருதவி செய்கின்றவர்களுடைய, தொடர்பு- சிநேகமானது, சேய்த்து ஆனும்- தூரத்திலுள்ளதா யிருந்தாலும், சென்று - (அங்குப்) போய், கொளல்வேண்டும்- (அந்நட்பைப்) பெற்றுக் கொள்ள வேண்டும்; எ-று.

சிறிதும் உதவியில்லாதவர்கள் நெருங்கியிருந்தாலும் அவர்களுடைய சிநேகம் பயனற்றதாகலின், அதனைத் தள்ளி, மிக்க உதவியுள்ளார் தூரத்திலிருந்தாலும் அவர்களின் நட்பு மிக்க பயனுடையதாகலின் அதனைத் தேடிப்போயா வது பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது இதன் கருத்து. இதனால் மிக்க உதவியுள்ளார் நட்பே கொள்ளத்தக்கதென்பதும், சிறு உதவியும் இல்லார் நேயம் தள்ளத்தக்கதென்பதும் விளக்கப்பட்டன. உதவியுள்ள சிநேகமே சிறந்ததென்பதை,

'உடுக்கை யிழந்தவன் கைபோல் வாங்கே
இடுக்கண் களைவதா நட்பு''

என்னும் (திருக்குறள்-788-ஆம்) செய்யுள் விளக்கும். நெருங்கி யிருப்பவர்க்கு, நாய் விரல்களையும், தூரத்தி லிருக்கும் உயர்ந்தார்க்கு வாய்க்காலையும் உவமை கூறியது - உவமையணி. நாய்க்காலிலுள்ள விரல்கள் மிகவும் நெருக்க மாயிருக்கும். ஈயின்கால் மிகச்சிறிதாயிருக்குமாகலின் இங்குச் சிறுமைக்கு எடுத்துக் கூறப்பட்டது; இது போல் ஈச்சிறகு முதலியனவும் கூறப்படும். 'ஈக்காற்றுணையும்' என்பதிலுள்ள உம்மை- இழிவு சிறப்புப்பொருளது; ஈ- பெயர்ச் சொல்; பறவையினத்தைச் சார்ந்தது.

''ஈகாரவிறுதி யாகார வியற்றே''

என்னும் (தொல்-எழுத்- உயிர்- ம-47-ஆம்) சூத்திர விதிப் படி, ஈயீற்றின்முன் வலிமிக்கது. 'அணியராயினும்' என்பதன் உம்மை- உயர்வு சிறப்பு. உதவாதார்- பலர்பால் எதிர்மறை வினையாலணையும் பெயர். நட்பென்னாம் - எதிர்மறை யெச்சம். 'சேய்த்தானும்' என்பதன் உம்மை- உயர்வு சிறப்பு. செய்- இடவாகு பெயராய் அதிலுள்ள பயிரையுணர்த்தி நின்றது. செய்- பயிர்விளைநிலம்; இதில் நன்செய் என்றும், புன்செய் என்றும் இருவகையுண்டு; நன்செய் ஏரிநீர், ஆற்றுநீர், கிணற்றுநீர் முதலியன பாய்ந்து நெல், கரும்பு, வாழை முதலியன விளையக்கூடியது; புன்செய்- மழைத் தண்ணீர், இறைவைத் தண்ணீர் முதலியவற்றால் சோளம், வரகு, துவரை, கடலை முதலியன விளையக்கூடியது. இங்குச் 'செய்' எனப் பொதுப்படக்கூறினும், சிறப்புநோக்கி, அது, 'நன்செய்' என்று கொள்ளப்பட்டது. நீர்க்கால், மடை வாயிலிருந்து வரக்கூடியதாகலின், 'வாய்க்கால்' எனப் பட்டது; இது நெடுந்தூரத்திலிருந்து வந்து பயிரை விளை விப்பது; ஆதலின் நெடுந்தூரத்திலிருப்பினும் உதவிசெய்யும்

பெரியாருக்குவமை கூறப்பட்டது. நன்கு- மிகுதிப்பொருள் தந்து நின்றது. (அ)

219. *தெளிவிலார் நட்பிற் பகைநன்று சாகல்*
விளியா வருநோயி னன்றால்- அளிய
இகழ்தலிற் கோற லினிதே மற்றில்ல
புகழ்தலின் வைதலே நன்று.

(இ-ள்.) விளியா- (எந்தப் பரிகாரத்தினாலும்) தீராமல், வரும்- (ஒருவனுக்கு நீடித்துத் தொடர்ந்து) வருகின்ற, நோயின்- நோயைக்காட்டினும், சாதல்- இறப்பது, நன்று- நல்லது, அளிய- (ஒருவனுடைய உள்ளம் மிகவும்) புண்படும்படி, இகழ்தலின்- (அவனை) நிந்திப்பதைக் காட்டிலும், கோறல்- கொன்றுவிடுதல், இனிது - நல்லதாம், இல்ல- (ஒருவனிடத்தில்) இல்லாத குணங்களை, (சொல்லி), புகழ்தலின் - (அவனைத்) துதிப்பதைக் காட்டினும், வைதலே- திட்டுதலே, நன்று - நல்லதாம், (இவற்றைப் போல) தெளிவு இல்லார்- தெள்ளிய அறி வில்லாதவர்களுடைய, நட்பின் - சிநேகத்தைக் காட்டினும், பகை - விரோதமே, நன்று- நல்லதாம்; எ-று.

ஒருவனைவிட்டு நீங்காமல் தொடர்ந்து வரும் நோயை அவன்அனுபவிப்பதைக் காட்டினும் இறந்து போவதே நல்லது; ஒருவனை, மற்றொருவன் நெஞ்சு புண்ணாகும்படி நிந்திப்பதைக் காட்டினும் கொன்றுவிடுவது நல்லது; ஒருவன்மீது மற்றொருவன் இல்லாத குணங்களைச் சொல்லி அவனைத் துதிப்பதைக் காட்டினும் திட்டுவதே நல்லது; இவற்றைப்போல தெளிந்த அறிவில்லாதவரோடு சிநேகங் கொள்வதைக்காட்டினும் பகைகொண்டிருத்தலே நல்லது என்பது இதன் கருத்து. இதனால் அறிவற்றாரது சிநேகம் விலக்கத்தக்கதென்பது குறிப்பிடப்பட்டது. இதில் மூன்று உபமானங்களையும், 'தெளிவிலார் நட்பிற் பகை நன்று' என்னுமோர் உபமேயத்தையும் உவமையுருபு

விரிக்காமற் கூறியது- எடுத்துக்காட்டுவமையணியின்பாற் படும்.

அறிவில்லாதவனுடைய சிநேகம் எப்பொழுதும் துன்பத்தையே விளைவித்துக் கொண்டிருக்கும்; பகையினால் அவன் நீங்கியிருப்பானாதலின் பெரும்பாலும் துன்பமுண்டாகாது; ஒரு சமயம் உண்டானாலும் அதனை எளிதில் கூரிய புத்தியால் நீக்கிக் கொள்ளலாகும்; ஆதலின், அவர் நட்பினும் பகை நன்றென்றார் முனிவர். ஒருவனுக்கு மற்ற துன்பங்களைக் காட்டினும் மரணத்துன்பம் மிகக் கொடிது; எனினும் அம்மனிதன் இறந்தபின் அத்துன்பம் அவனுயிரை வருத்துவதில்லை; நோயோ இடைவிடாது துன்பத்தைச் செய்துகொண்டிருக்கும்; ஆதலின், நோயினும் சாவு நன்றென்றார்; ஒருவனை மற்றொருவன் நிந்திப்பது நீங்காத மனவேதனையை உண்டாக்கிக் கொண்டேயிருக்கும்; ஆதலின், அவனை அப்படித் துன்புறுத்துவதைக் காட்டினும், உயிர் நீங்கியபின் வேதனை தெரியாதிருக்கும்படி அவனைக் கொல்வது நன்றென்றார். ஒருவன்மீது மற்றொருவன் இல்லாத புகழ்ச்சிகளையெல்லாம் சொல்லித் துதிப்பதால் அவனுக்கு உலகத்தில் எப்பொழுதும் நீங்காத இழிவே உண்டாகிக் கொண்டிருக்கும்; அந்தப் பொய்ப் புகழ்ச்சியைக் கேட்போரெல்லோரும் அவனைப் பரிகசித்துச் சிரித்துக் கொண்டேயிருப்பார்கள்; அதனால் அவனுக்கு இடைவிடா மனவேதனை உண்டாகிக் கொண்டேயிருக்கும்; இஃது அவனை ஒருவன் திட்டுவதாலுண்டாம் மனவேதனையைக் காட்டினும் அதிகரித்ததாகவே யிருக்கும். ஆதலின், அங்ஙனம் புகழ்வதினும் திட்டுதல் நலமென்றார்.

இனி, 'தெளிவு இல்லார்' என்பதற்கு, 'நட்புக்கு ஆராய்ந்து தேறுதல் இல்லாதவர்' என்று பொருள் கொள்ளினும் அமையும். விளியா- எதிர்மறை வினையெச்சம்; இதனைப் பெயரெச்சமாகக் கொண்டு, 'வரு' என்பதனை, 'அரு' எனக்கொண்டு, 'விலகாத அரிய' என்று பொருள்

கோடலுமொன்று. நட்பின், நோயின், இகழ்தலின், புகழ் தலின் என்பவற்றில் உம்மை தொக்கது. 'இனிதே' என்பதில் ஏகாரம் - பிரிநிலைப் பொருளது. மற்று- அசை. இல்ல- பலவின் பெயர். 'வைதலே' என்பதிலுள்ள ஏகாரமும் - பிரிநிலைப் பொருளதே.

220. *மரீஇப் பலரோடு பன்னாண் முயங்கிப்*
பொரீஇப் பொருட்டக்கார்க் கோடலே வேண்டும்
பரீஇ யுயிர்செகுக்கும் பாம்பொடு மின்னா
மரீஇ இப் பின்னைப் பிரிவு.

(இ-ள்.) பரீஇ- கடித்து, உயிர் செகுக்கும்- (பிற) உயிரைக் கொன்றொழிக்கின்ற,பாம்பொடும்- பாம்புடனும், மரீஇ- (முதலில்) சிநேகஞ் செய்து, பின்னை பிரிவு-பின்னர் அதனைவிட்டு நீங்குதல், இன்னா- துன்பமாவதாம்; (ஆதலின், நட்பாராய்பவர், அவ்வாறு பிரிவுக்கிடமாகாதபடி முதலில் நட்பினரை ஆராய்ந்து சிநேகங் கொள்ளுங்காலத் தில்), பலரோடு - பல மனிதரோடு, மரீஇ - கலந்து, பல்நாள்- பலதினங்கள், முயங்கி- சேர்ந்து, பொரீஇ- (தம்குணம் செயல்களோடு அவர் குணம் செயல்கள்) பொருந்த, (ஆராய்ந்து பார்த்து, அவர்களுக்குள்ளே), பொருள் தக்கார் - (நட்பிற்குரிய) உண்மையாளராகத் தக்கவர்களை, கோடலே வேண்டும் - (நட்பினராகக்) கொள்ளுதலே தகுதியாம்; எ-று.

இதில், கெட்டாரோடும் பழகிப்பிரிதல் துன்பஞ் செய்யுமாகலின், அங்ஙனம் பிரிவுக்கேதுவில்லாத நட்பைத் தொடக்கத்திலேயே நன்கு ஆராய்ந்து கொள்ள வேண்டு மென்பதை விளக்கினார் முனிவர். இங்ஙனங் கொள்ளு தற்குப் பின்னிரண்டடிகளிற் காரணம் விளக்கினமையின், இஃதேதுவணியாம். மருவி, பொருவி, பரிந்து என்னும் இறந்தகால வினைக்குறைகள், மரீஇ, பொரீஇ, பரீஇ, என விகாரமாய் அளபெடுத்தன; நான்காமடியிலுள்ளது, 'மரீஇஇ' என ஈரளபெடுத்தது; இதற்கு மாத்திரை நான்கு. இவை

சொல்லிசை யளபெடைகளாம். பொருள்- உண்மை; இனி, 'பொருள் தக்கார்' என்பதற்கு, 'உபயோகப்படத்தக்கவர்' எனப் பொருளுரைப்பினுமாம். 'பாம்பொடும்' என்பதன் உம்மை- இழிவு சிறப்புப் பொருளது. 'இன்னாது' என்பது ஈறுதொகுத்தலாய், 'இன்னா' என நின்றது. பிரிவு- தொழிற்பெயர். இச்செய்யுளின் நான்கடிகளினும் உயிரள பெடை வந்தது அளபுத்தொடை யெனப்படும்.

முதலிற்கூடிப் பின் பிரிதலாகாதென்பதையும், ஆராய்ந்து தகுதியான நட்பினையே தேர்ந்தெடுக்கவேண்டு மென்பதையும், ''கூடிப்பிரியேல்'' என்னும் ஔவையார் (ஆத்திசூடி - 37ஆம்) சூத்திரமும், ''இணக்கமறிந் திணங்கு'' என்னும் (ஷை 19ஆம்) சூத்திரமும்,

''விலங்கேயுந் தம்மோ டுடனுறைதன் மேவும்
கலந்தாரைக் கைவிடுத லொல்லா- விலங்கருவி
தாஅ யிழியு மலைநாட வின்னாதே
பேஎயோ டானும் பிரிவு''

என்னும் முன்றுறையர் பழமொழிச் செய்யுளும் விளக்கு வனவாம். அளபெடை நான்குமாத்திரை பெற்று நிற்கு மென்பது,

''நீட்டம் வேண்டி னவ்வள புடைய
கூட்டி யெழூஉத லென்மனார் புலவர்''

என்னும் (தொல்-எழுத்-நூன்-ம-6-ஆம்) சூத்திரத்தின் நச்சினார்க் கினியர் உரையால் துணியப்படும். (௧௦)

அதிகாரம் - 23

நட்பிற் பிழை பொறுத்தல்

நட்பிற் பிழைபொறுத்தலாவது - மனிதர், தம்முடைய சிநேகிதரிடத்துண்டாகும் குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளுதலாம். நட்பு - தொழிற் பெயர்; இஃதிங்குத் தொழிலாகு பெயராய் நட்புடையாரை யுணர்த்தி நின்றது. 'பிழைத்தல்' என்னும் தொழிற்பெயர் தல்லீறுகெட்டு முதனிலைத் தொழிற்பெயராய் 'பிழை' என நின்றது. பிழை பொறுத்தல்- இரண்டாம் வேற்றுமைத்தொகை. நட்பிற் பிழை- ஏழாம்வேற்றுமை யுருபும் பயனும் உடன்றொக்க தொகை. ஒருவர் மற்றொருவரை ஆராய்ந்து நல்லாரெனத் தேர்ந்து சிநேகிதராகக் கொள்ளினும் அவரால் பொறுக்கப் படும் சில குற்றங்களைச் சில சந்தர்ப்பங்களில் தவறிச் செய்துவிடுதலுங்கூடும்; அவ்வாறு அவர்செய்த குற்றங்களைப் பொறுத்துக்கொள்ளுதல் அவரோடு சிநேகஞ் செய்தார்க்குக் கடமையாம். ஆதலின், 'நட்பாராய்தல்' என்னும் அதிகாரத்தின்பின் இவ்வதிகாரம் அமைக்கப் பட்டது. திருக்குறளிலும், 'நட்பாராய்தல்' என்னும் அதிகாரத்துக்குப்பின் ஆசிரியர், 'பழமை' என்னும் அதிகாரத்தினை இக்காரணத்தைக் கொண்டே அமைத்திருக்கின்றனர். இதனைப் பரிமேலழகர் உரையலுணர்க. அதை யொட்டியே இவ்வதிகாரப்பொருள் இங்ஙனம் விரிக்கப்பட்டது.

221. *நல்லா ரெனத்தா நனிவிரும்பிக் கொண்டாரை*
அல்லா ரெனினு மடக்கிக் கொளல்வேண்டும்
நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு.

(இ-ள்.) நெல்லுக்கு - (உணவின் பொருட்டு உலகத்தார் எல்லோராலும் சிறந்ததாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளப் படும்) நெல்லினுக்கும், உமி உண்டு - (பயனற்ற) உமியாகிய (குற்றம்) உண்டு, நீர்க்கு - (எல்லோராலும் ஜீவாதாரமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்படுகின்ற) நீருக்கும், நுரை உண்டு - நுரையாகிய குற்றம் உளதாம், பூவிற்கும்- (மனிதராற்சிறந்த பொருளாகக் கொள்ளப்படும்) மலருக்கும், புல்- மேலே சேர்ந்திருக்கின்ற, இதழ் - (பயனற்ற) புறவிதழ், (என்னும் குற்றம்), உண்டு - உளது; (எனினும் மனிதர் இக்குற்றங் களைப் பாராட்டி இவற்றை விலக்காமல் எப்பொழுதும் சிறந்தனவாகவே கொள்வர்; இவற்றைப்போலவே மனிதர், ஆராய்ந்து நல்லாரெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட நண்பர்களுள் ளும் சில குற்றங்கள் காணப்படுவது உலக இயற்கை; அங்ஙனம் காணப்பட்டு அவர்), அல்லார்- எனினும் - (முன்பு அவரிடம் காணப்பட்ட நற்குண நற்செயல்கள் முழுவதும்) உடையவரல்லாதவர்களாயிருப்பினும், தாம் நல்லார் என - தாங்கள் முன்னே நல்லவர் என்று, நனி விரும்பி - மிகுதியாக விருப்பமுற்று, கொண்டாரை- சிநேகிதராகக் கொண்ட அவர் களை, (அதாவது, அவர்களுடைய குற்றங்களை), அடக்கிக் கொளல் வேண்டும் - (பிறர் அறியத் தூற்றாமல்) தம்மனத் திற்குள் அடக்கிவைத்து (அவர் சிநேகத்தை எப்பொழுதும் போல)கொண்டிருத்தலே தகுதி; எ-று.

மனிதரால் சிறந்த பொருள்களாகக் கொள்ளப்படும் நெல், நீர், பூ ஆகியவற்றிற்கும் உமி, நுரை, புறவிதழ் என்னும் குற்றங்கள் உண்டாவது இயற்கை; எனினும் மனிதர் அக் குற்றங்களைப்பாராட்டி அச்சிறந்த பொருள்களை விலக்குவ

தில்லை; இவற்றைப்போலவே நட்பாராய்வோரால் முதலில் நல்லோரெனத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடத்தும் சில குறைகள் காணப்படுவது உலகவியற்கை; எனினும், அக்குறைகளை வெளிப்படுத்தாமல் அடக்கி அந்நட்பாளரோடு அவர்கள் முன்போலவே சிநேகங்கொண்டிருத்தல் வேண்டுமென்பது இதன் கருத்து.

உயர்ந்த குணங்களையுடைய பொருள்களிலும், மனிதரிலும் சில குற்றங்கள் ஏற்படுவது உலகவியற்கையாதலின், குற்றத்தைப் பாராட்டினால், உயர்ந்த பொருளையோ, மனிதரையோ காண்பது அரிதாகிவிடும்; ஆதலின், அறிஞரால் நல்லாரெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட நண்பர்களிடத்துக் குற்றங்காணப்படினும் அவர் அதனைப் பொறுத்துக்கொள்ளுதல் வேண்டுமென்று இதில் கூறினார் முனிவர். இக்கருத்தினை ஔவையாரும், ''குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை'' என்னும் (கொன்றை வேந்தன்-18-ஆம்) சூத்திரத்தால் விளக்கி யிருத்தல் காண்க.

'விரும்பிக் கொண்டாரை' என்பது, 'விரும்பிக் கொண்டவரிடத்துள்ள குற்றங்களை' விளக்கி நின்றது; இங்ஙனங் கொள்ளுமிடத்து, கொண்டார்- கருத்தாவாகு பெயராம். இனி, 'கொண்டாரை அடக்கிக் கொள்ளல் வேண்டும்' என்பதற்கு, 'முன் விரும்பிச் சிநேகங்கொண்ட அவரை இரகசியமாக நல்வழிப்படுத்தி அடக்கி வைத்துக் கொள்ளவேண்டும்' என்று பொருளுரைப்பினுமாம். சிராத்தாதி பூசனைக்கும், உணவிற்கும் நெல்லே சிறந்ததாம். இதனை, ''நெற்பயிர் விளை'' என்னும் (கொன்றை வேந்தன் 71-ஆம்) சூத்திரத்தானுணர்க. உலகத்தில் நீர் எல்லார்க்கும் இன்றியமையாத தென்பதை,

''நீரின் றமையா துலகெனின் யாயார்க்கும்
வானின்ற மையா தொழுக்கு''

என்னும் (திருக்குறள்-20-ஆம்) செய்யுள் விளக்கும். மலர் மனிதர்க்குச் சிறந்த பொருளென்பது,

''மங்கல மாகி யின்றி யமையா
தியாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் வுடையது பூவே''

என்னும் (நன்னூல்- பொதுப்பாயிரம்-30-ஆம்) சூத்திரத்தால் விளங்கும். நெல்லிலிருந்துண்டாகும் சாரமற்றபாகமே உமியாய் அரிசியின் மேலே மூடி யிருப்பது; நீரின் அசுத்த பாகமே நுரையாய் வெளிப்படுவது; பூவின் அடியில் அதன் சாரமற்றபாகமே புறவிதழாயிருப்பது. புல் இதழ் - வினைத் தொகை; பண்புத் தொகையாகக் கொண்டு 'இழிவாகிய புறவிதழ்' எனப் பொருளுரைப்பினுமாம். பின்வரும், 'நன்றியில் செல்வம்' என்னும் அதிகாரம் 6-ஆம் செய்யுளில், 'நாறாத் தகடு' என்பது, 'மணமில்லாத புறவிதழ்' என்று பொருள்பட்டுப் புறவிதழின் இழிதன்மையை விளக்குதல் காண்க. நனி- மிகுதிப் பொருள்தரும் உரிச்சொல். 'பூவிற்கும்' என்பதிலுள்ள உம்மை-இறந்தது தழுவிய எச்சப்பொருளது; எச்சவும்மையாற் றழுவப்படும் எஞ்ச பொருட்கிளவிகள் அடுத்து வரும்போது உம்மை விரியாத சொற்களை முன் வைத்து உம்மை விரிந்த சொல்லைப் பின் வைக்க வேண்டு மென்பது,

''எஞ்சுப்பொருட் கிளவி செஞ்சொ லாயிற்
பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்''

என்ற (தொல்-சொல்-இடை-36-ஆம்) சூத்திரவிதி; ஆகலின், இச்செய்யுளில் நெல்லுக்கு, நீர்க்கு என்னும் உம்மைத் தொகைச் சொற்களை முன் நிறுத்தி, 'பூவிற்கும்' என்னும் உம்மை விரியினைப் பின்வைத்தார் முனிவர். இனி, இவ் வும்மை யினை உயர்வு சிறப்புப்பொருளதாகக் கொண்டு நெல், நீர் என்பவற்றோடு கூட்டினுமமையும். இச்செய்யு

ளின் பின்னிரண்டடிகளிற் கூறிய நென்முதலிய மூன்று உபமானங்களும், 'நற்குணமுள்ளாரிடத்தும் குற்றங் காணக் கூடும்' என்னும் உபமேயத்தை விளக்கின; ஆகலின், இது, பிறிது .மொழிதலணி; பிறிது தொழிதலணியாவது - உபமானங் கூறியமாத்திரத்தில் உபமேயம் பெறவைத்தலாம்.

222. *செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ டூடார்*
மறுத்துஞ் சிறைசெய்வர் நீர்நசைஇ வாழ்நர்
வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம் வேண்டிக் கொண்டார் தொடர்பு.

(இ-ள்). நீர்நசைஇ வாழ்நர்- தண்ணீரை விரும்பி வாழ்கின்ற மனிதர்கள், (அதாவது, தண்ணீர் தங்கட்கு ஆதார மானதென்று கருதி அதனை ஓரிடத்தில் தேக்கிப் பயன்படுத்த விரும்பி வாழ்பவர்), செறுதோறு உடைப் பினும் - (அதனை ஏரியிலோ குளத்திலோ தேக்குதற்கு) அடைக்கும் போதெல் லாம் அது உடைத்துக்கொண்டு போனாலும், செம்புனலோடு - (அந்த) நல்ல தண்ணீருடனே, ஊடார் (சிறிதும்) கோபங் கொள்ளாதவர்களாய், மறுத்தும்- மீண்டும் மீண்டும், சிறை செய்வர் - அணைக்கட்டி (அந்நீரை)க் கட்டுப்படுத்தி வைப் பார்கள், (அதைப் போலவே), தாம்வேண்டி - தாமே (ஒருவரை நல்லவரென்று ஆராய்ந்து) விரும்பி, தொடர்பு கொண்டார்- சிநேகஞ்செய்து கொண்டவர், வெறுப்ப வெறுப்பச்செய்யினும் - (அச்சிநேகிதர்) தாம் வெறுக்கத்தக்க கெட்ட காரியங்களை வெறுப்புண்டாகுமாறு செய்து வந்தா லும், பொறுப்பர்- பொறுத்துக் கொள்வர், (அதாவது, அவர் செய்த குற்றங்களைப்பொறுத்து அவருடைய சேர்க்கையை விடா திருப்பர்); எ-று.

தண்ணீரைப் பயன்படுத்தி வாழ்வோர், அது பன் முறை உடைத்துக்கொண்டு போனாலும் வெறுப்புற்று அதனை விட்டுவிடாமல் மீண்டும் அவ்வுடைப்புக்களை அடைத்து அந்நீரைத் தமக்கு வேண்டுமிடத்தில் தேக்கிக்

கொள்வதுபோல நட்பினரால் பயன் கொள்ள விரும்பி ஒருவரை நேசித்தவர் அவர் குற்றஞ் செய்தாலும் பொறுத்து அவருடைய சேர்க்கையைப் போற்றிக்கொள்வர் என்பது இதன் கருத்து. இதனால், நீரால் பயன் கொள்வோர் அஃதடங்காது மீறியபோதும் பொறுமையோடிருந்து அதனைத் தேக்கிக் கொள்வது போலச் சிநேகத்தால் பயன் கொள்வோர், நட்பினர் குற்றங்களைப் பொறுத்து அவரது சிநேகத்தைப் போற்றிக் கொள்ள வேண்டுமென்பது விளக்கப்பட்டது. நீர் உடைக்குங்கால் வெறுப்புற்று அதனை விட்டுவிட்டால், அதனால் வேளாண்மை செய்து பயனடைய விரும்பியிருந்தவர் அப்பயனை யிழந்துவிடுவர். சிநேகிதரால் பயனடைய விரும்பியவரும் அவர் குற்றத்தின் பொருட்டு அவரைக் கைவிடின் அப்பயனை யிழந்தவராவர். ஆதலின், நட்பினர் குற்றத்தைப் பொறுப்பது நலமென்றார் முனிவர்.

இச்செய்யுளில் உவமையுருபு விரிக்காமல் உபமான உபமேயங்களைக் கூறியிருப்பது- எடுத்துக்காட்டுவமையணி. செறுத்தல்- அடங்குதல்; அதாவது, கட்டுப்படுத்தல்; அடைத்தலே கட்டுப் படுத்தலாதலால், ‘செறுதோறு’ என்பதற்கு, ‘அடைக்குந்தோறும்’ எனப்பொருள் கூறப்பட்டது; செறுதோறு - வினைத்தொகை; தோறு- தொறு என்பதன் நீட்டல் விகாரம்; இஃதிடைச்சொல்; எனினும் இங்குப் பெயர்ச் சொற்றன்மையதாய் நின்றது; ஆகலின், ‘செறு’ என்னும் காலங்கரந்த பெயரெச்சம் அப்பெயர் கொண்டு முடிந்து வினைத்தொகையாயிற்று; இதில் இயல்பாதற்குரிய வல்லெழுத்துச் சந்தவின்ப நோக்கி மிக்கு, ‘செறுத்தோறு’ என வந்தது. நசைஇ- சொல்லிசையளபெடை. ‘வெறுப்ப, வெறுப்ப’ என்னும் இடண்டனுள், முன்னுள்ளது- எதிர் காலப் பலவின்பால் வினையாலணையும் பெயர்; பின்னுள்ளது - செயவென்னும் வினையெச்சம் இனி, ‘துன்பங்களை’ என்னும் ஒருசொல் வருவித்து, இரண்டையும் வினையெச்சங்களாகவே கொண்டு, மிகுதிப் பொருள்பற்றி வந்த அடுக்கெனினும் அமையும். ஊடார்- முற்றெச்சம். (உ)

223. *இறப்பவே தீய செயினுந்தன் னட்டார்*
பொறுத்த றகுவதொன் றன்றோ - நிறக்கோங்
குருவவண் டார்க்கு முயர்வரை நாட
ஒருவர் பொறையிருவர் நட்பு.

(இ-ள்.) நிறம்- பிரகாசம் பொருந்திய, கோங்கு- கோங்கு மரத்தின் மலர்களில், உருவம்- அழகிய வடிவத்தை யுடைய; வண்டு- வண்டுகள், ஆர்க்கும் - ஒலிக்கின்ற, உயர் வரை - ஓங்கிய மலைகளையுடைய, நாட - பாண்டிய நாட்டையுடைய அரசனே!, (நட்புடையார் இருவருள் குற்றம் நேர்ந்தகாலத்தில்), ஒருவர் பொறை- ஒருவருடைய பொறுமையே, (அதாவது, ஒருவர் அக்குற்றத்தைப் பொறுத்துக் கொண்டிருப்பதே), இருவர் நட்பு - இருவ ருடைய நட்பு, (ஆகும்), (அதாவது, இருவருடைய நட்பும் நிலைத்திருப்பதற்குக் காரணமாகும்; ஆதலின், சிநேகத்தைக் காப்பாற்ற விரும்பும் அறிவுடையவன்), தன் நட்டார்- தன்னுடைய சிநேகிதர், இறப்ப- மிகுதியாக, தீய செய்யினும் - தீமையான காரியங்களையே செய்தாலும், பொறுத்தல்- அக்குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளுக் கொள்ளுதல், தகுவது ஒன்று அன்றோ - (அவர்க்குத்) தகுந்தாகிய ஒரு காரியமன்றோ?; எ-று.

சிநேகங்கொண்டார் இருவருள் குற்றம் நேர்ந்த விடத்து அதனை ஒருவர் பொறுத்துக் கொள்ளுதலே அவ் விருவருடைய சிநேகமும் நிலைத்திருப்பதற்கேதுவாம்; ஆதலின், நட்பைக் காப்பாற்ற விரும்புவோன், தன் சிநேகன் மிகுந்த தீமைகளைச் செய்யினும், அவற்றைப் பொறுத்துக் கொள்ளுதல் தகுதியுடைய ஒரு காரியமன்றோ? என்பது இதன் கருத்து. இதனால், நட்பைக் காப்பாற்ற விரும்பு வோன், தன் சிநேகிதன் செய்த குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளுதலே தகுதியான காரியம் என்பது விளக்கப்பட்டது. 'ஒரவர் பொறையே இருவர் நட்புக்கேதுவாம்' என்று கூறியது- ஏதுவணி. 'ஒருவர் பொறை இருவர் நட்பு' என்பது,

''தந்தீமை யில்லாதார் நட்டவர் தீமையையும்
எந்தீமை யென்றே யுணர்பதா- மந்தண்
பொருதிரை வந்துலாம் பொங்குநீர்ச் சேர்ப்ப
ஒருவர் பொறையிருவர் நட்பு''

என்னும் பழமொழிச் செய்யுளினும் வந்துள்ளது காண்க. இறப்பு- மிகுதிப்பொருளது. 'கோங்கு' என்னும் மரத்தின் பெயர் முதலாகுபெயராய், அதன் சினையாகிய மலரை யுணர்த்தி நின்றது. உயர்வரை- உயர்ந்தவரை; உயர்கிறவரை எனக் காலங்காட்டி விரிதற்குரித்தாய் நிற்றலின் வினைத் தொகை. (ரு)

224. *மடிதிரை தந்திட்ட வான்கதிர் முத்தங்*
கடுவிசை நாவாய் கரையலைக்குஞ் சேர்ப்ப
விடுதற் கரியா ரியல்பிலரே னெஞ்சஞ்
சுடுதற்கு மூட்டிய தீ.

(இ-ள்.) (கடலிலிருந்து), மடி-மடிந்து வீழ்கின்ற, திரை - அலைகளால், தந்திட்ட - (கொழித்தொதுக்கிக் கொண்டு வந்து) கொடுக்கப்பட்ட, வான்- சிறந்த, கதிர்- பிரகாசத்தையுடைய, முத்தம்- முத்துக்களையும், கடுவிசை - மிகுந்த வேகத்தையுடைய, நாவாய்- கப்பல்களையும், கரைஅலைக்கும் - (கடல்நீரின் அசைவினால்) கரையிலே அலைத்துக் கொண்டிருக்கின்ற, சேர்ப்ப - கடற்றுறையை யுடைய பாண்டியனே!, (சிநேகங்கொண்டவர் பிரியினும் அவர்க்கு மனவேதனையுண்டாம்; பிரியாதிருப்பினும் இருவரில் ஒருவர் தீக்குணமுடையவரா யிருப்பின் பொறுத் திருப்பார்க்குத் துன்பமுண்டாம்; ஆதலின், நட்பிற் பிழை பொறுப்பார்க்கு, அப் பிழை செய்தார் ஒருசமயத்தில் தவறிச் செய்யினும் எப்பொழுதும் துர்க்குணமுடையவர்களா யிருத்தல் கூடாது; நற்குணமுடையவர்களாயிருத்தல் வேண்டும்; அங்ஙனம்), விடுதற்கு அரியார்- (ஒருவரால் சிநேகம் செய்யப்பட்டு) விடுதற்குக் கூடாதவர்களாயிருப்

பவர்கள், இயல்பு இலரேல்- நற்குணமில்லாதவர்களா யிருப்பார்களாயின், (அவரோடு சிநேகம் செய்தவர் களுடைய), நெஞ்சம்- மனத்தை, சுடுதற்கு- சுட்டெரிப் பதற்கு, மூட்டிய- மூடப்பட்ட, தீ- நெருப்பு, (ஆவர்); எ-று.

சிநேகஞ்செய்தவர் பிரிந்தால் அவர்க்குத் துன்ப முண்டாமாதலின், அவர்க்குள் என்ன குற்றம் நேரினும் பிரியாதிருத்தல் முறையெனினும், இதைக்கொண்டு பொறுமையுடையார்க்கு மற்றையர் எப்பொழுதும் தீமைகளையே செய்துகொண்டிருப்பது கூடாதென்பதும், அங்ஙனம் செய்யும் தீக்குணமுடையார், பொறுமையுள்ள சிநேகிதரின் மனத்தை எரிக்க மூட்டிய நெருப்பை நிகர்ப்பர் என்பதும் இதில் விளக்கப்பட்டன. சிநேகர் இருவரில் ஒரவர் எப்பொழுதும் தீங்குகளையே செய்துகொண்டிருப்பின், மற்றைவர், நீதிப்படி அவரை நீக்குதலும் கூடாது, அவர் தீமைகளைச் சகித்தலும் முடியாது; இவ்விருவகையாலும் அவர்க்கு எப்போதும் மனவேதனை அதிகரித்துக் கொண்டே யிருக்கும்; ஆதலின், அத்தீக்குணமுடையார் அவர் நெஞ் சத்தை எரிக்கும் நெருப்பை நிகர்ப்பர். நட்பிற் பிழை பொறுத் தலுக்கு, நட்பினரில் ஒருவர், ஒருசமயம் பிழைசெய்யினும், மற்ற சமயங்களில் நற்குணமுடையவராயிருத்தல் இன்றி யமையாததாகலின், இதுவும் இவ்வதிகாரத்தோடு சேர்த் துரைக்கப்பட்டது.

மடிதிரை - வினைத்தொகை. கடலில் உண்டாகும் முத்துக்களை அலைகள் ஒதுக்கிக் கரையோரத்தில் சேர்க்கும்; கப்பல்களும் அங்கு வந்து நிற்கும்; இவைகள் கடல்நீரின் அசைவால் அலைந்து கொண்டிருக்கும்; இச்செயலைக் கடற்றுறையின் செயலாகக் கூறினார் ஆசிரியர். இப்பி சங்கு மீன் முதலியவற்றில் முத்துப் பிறக்குமாகலின் அவை வாழும் கடலில் முத்திருப்பதியற்கை. முத்தம், நாவாய் என்பவற்றில் எண்ணும்மைகள் தொக்கன; இவை இரண்டாம் வேற்றுமைத் தொகைகள்; இனி, 'மடிதிரை'

என்பதைக் கடலுக்கு அடையடுத்த வாகுபெயராகக் கொண்டு, 'மடிதிரை தந்திட்ட' என்பதற்கு, 'கடலால் தரப்பட்ட' எனப் பொருள்கொள்ளினுமாம்; 'மடிதிரை... முத்தம்... நாவாய் கரை அலைக்கும்' என்ற தொடருக்கு, 'மடங்குகின்ற அலை தன்னால் தரப்பட்ட முத்துக்களையும், நாவாய்களையும் கரையில் அலைக்கின்ற' என்று பொருளுரைத்தலுமொன்று; 'மடிதிரை தந்திட்ட வான்கதிர் முத்தங்களை நாவாய்கள் கரையிலே அலைக்கும்' எனப் பொருள் விரிப்பினும் பொருந்தும்; இஃதத்துணைச் சிறப்பன்று. கப்பல் அலைத்தல் எப்பொழுதுமில்லையாகலின். 'விடுதற்கரியர்' என்னும் கருத்து, அடுத்த செய்யுளிலும், 226-ஆம் செய்யுளிலும் வருவதுணர்க. 'கடி' என்னும் உரிச்சொல் ஈறுதிரிந்து, 'கடு' என நின்றது; இங்கு மிகுதிப் பொருள்தந்து நின்றது; விரைவுப் பொருளதுமாம்; விரைவுப் பொருளதாகக் கொள்ளுமிடத்து, 'கடுவிசை' சிறப்பின் வந்த ஒரு பொருட் பன்மொழியாம்; 'கடி' என்பது மிகுதிப்பொருளையும், விரைவுப் பொருளையும் தரு மென்பதை,

''கடி யென் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்க மிகுதி சிறப்பே
அச்ச முன்றேற் றாயீ ரைந்தும்
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே''

என்னும் (தொல்-சொல்-உரி-87-ஆம்) சூத்திரத்தாலுணர்க. சுடுதற்கு - எதிர்கால வினையெச்சம்.

225. *இன்னா செயினும் விடற்பால ரல்லாரைப்*
பொன்னாகப் போற்றிக் கொளல் வேண்டும்-
பொன்னொடு
நல்லிற் சிதைத்ததீ நாடொறு நாடித்தம்
இல்லத்தி லாக்குத லால்.

(இ-ள்.) (பொன், வீடு முதலியவற்றை நெருப்பானது எரித்தழிப்பதாயிருந்தாலும் மனிதர்க்கு வேறு காரியங்களில் உதவி செய்யக்கூடியதாயிருப்பதால் எல்லோரும் அதனைத் தினந்தோறும் போற்றி வருவார்கள்; அதைப்போலவே மிகுந்த தீங்குகளைச் செய்யும் சிநேகிதரும் வேறு சமயங்களில் மிகுந்த நன்மைகளைச் செய்துவிடுவராதலின் அறிவுடையார் அவரை வெறுத்து நீக்கமாட்டார்கள்; இந்த நியாயங்களைக் கொண்டே மனிதர் இவ்வாறு) பொன்னொடு - பொன் முதலிய உயர்ந்த பொருள்களுடனே, நல் இல்- நல்ல வீட்டையும், சிதைத்த- எரித்தழித்த, தீ - நெருப்பை, நாள் தொறும்- தினந்தோறும், நாடி - (அது செய்யும் வேறு உதவிகளை) எண்ணி, தம் இல்லத்தில்- தம்முடைய வீட்டில், ஆக்குதலால் - வளர்த்து வருதலால், (இதையுணர்ந்து, நட்பின் பயனையடைய விரும்புவோர், நீக்கமுடியாதவராகிய நட்பினர்) இன்னாசெய்யினும் - துன்பங்களை (மிகுதியாகச்) செய்தாலும், விடற்பாலர் அல்லாரை- கைவிடத்தக்கவர்களல்லாதவராகிய அந்நட் பினரை, பொன்ஆக- பொன்னைப் போலவே, போற்றிக் கொளல் வேண்டும்- பேணிக்கொள்ளுதல் தகுதியாம்; எ-று.

பொன், வீடு முதலியவற்றையெல்லாம் நெருப்பு எரித்தழிப்பினும், உணவு சமைத்தல், வெளிச்சமுண்டாக்கல், குளிர்காய்தல் முதலியவற்றிற்கு இன்றியமையாததாயிருத்தலின் மனிதர் அதனை விடாது தினந்தோறும் வீட்டில் வளர்க்கின்றனர்; அதைப்போலவே சிநேகிதர் ஒருசமயம் மிகுந்த தீங்குகளைச் செய்தாலும் மற்றொரு சமயத்தில் மிக்க நன்மைகளைச் செய்வராதலின், அவை கருதி அவர்களை எப்பொழுதும் பொன்னைப்போல் விரும்பிச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பது இதன் கருத்து.

தீக்குணமுடைய சிநேகிதர்க்கு இங்கு நெருப்பை உபமானங் கூறினமையால், அதனைக் குளிர்காய்தல் முதலியவற்றிற்கு உபயோகிக்குங் காலத்தில் அதனிடத்து

நெருங்காமலும் நீங்காமலுமிருந்து மனிதர் பயன் கொள்ளு தல்போல துர்க்குணமுள்ள சிநேகிதரிடத்திலும் நீங்காமலும் நெருங்காமலுமிருந்து பயன்கொள்ள வேண்டுமென்பது குறித்ததாயிற்று. அவரிடம் மிகநெருங்கினால் அவர் மதி யீனத்தாற் செய்யும் இடர்க்குட்படுதல் நேரும்; அவரைப் பிரிந்துவிட்டாலோ அவரால் அடையவேண்டியிருந்த நன்மைகளை யிழத்தல் நேரும். ஆதலின், மிக நெருங்கா மலும், முழுதும் நீங்காமலுமிருத்தல் வேண்டும். முன் செய்யுளில் தீக்குணமுடையாரை, 'மனஞ்சுட மூட்டிய தீ' என்று சொன்னதுகொண் டஞ்சிச் சிலர் அவர் நேயத்தை விட்டு விடாதிருக்கும் பொருட்டு, 'நெருப்பை அகலாமலும் அணுகாமலும்போற்றுதல்போல அவரையும் பேணிக் கொள்ள வேண்டும்' என்பது இச்செய்யுளிற் கூறப்பட்டது. இதனால் நட்டவரை எக்காலத்திலும், எந்நிலையிலும் கைவிடலாகாதென்பது வற்புறுத்தப்பட்டது. இச்செய்யுளின் முதலடியும், வருஞ்செய்யுளின் முதலடியும் கருத்தினும், தொடையினும் ஒரு தன்மையன. இன்னா- இனிமையென் னும் பண்புச் சொல்லடியாகத் தோன்றிய எதிர்மறைப் பலவின்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர். பொன்- மற்ற உயர்ந்த பொருள்களுக்கும் உபலட்சனைமாய் வந்தது. இதில், துர்க்குணமுடைய நட்பினரையும் நீக்கலாகாதென்ப தற்கு ஏது கூறியது- ஏதுவணி. (ரு)

226. *இன்னா செயினும் விடுதற் கரியாரைத்*
துன்னாத்துறத்த றகுவதோ- துன்னருஞ்சீர்
விண் குத்து நீள்வரை வெற்ப களைபவோ
கண்குத்திற் றென்றுதங் கை.

(இ-ள்) விண்குத்தும்- (வளர்ச்சியால்) ஆகாயத்தைக் குத்துகின்ற, (அதாவது, முட்டுகின்ற) நீள்- நீண்ட, வரை- மூங்கில்களையும், துன்அரும்- (பிறஇடத்தில்) சேர்தல் அருமையான, (அதாவது, சேராத), சீர்- சிறப்புக்களையும் (தம்மிடத்தே உடைய), வெற்ப- மலைகளையுடைய

பாண்டியனே!, (உலகத்தில் உள்ளமனிதர்), தம்கை- தம்முடைய கையானது, (தவறிக் கண்ணைக்குத்திவிட்டால் அவ்வாறு), கண் குத்திற்று என்று- கண்ணைக் குத்திவிட்ட தென்று, (அதனை வெறுத்து அக்காரணத்தால்), கை- அக்கையை, களைபவோ- (வெட்டி) நீக்குவார்களோ?, (ஒருபோதும் ஒழிக்க மாட்டார்கள்; அதைப்போலவே தம் சிநேகிதர்), இன்னா செய்யினும் - (தமக்குத்) துன்பங்களைச் செய்தாலும், விடுதற்கு அரியாரை- நீக்கிவிட முடியாதவர் களாகிய அவர்களை, துன்னா- நெருங்காமல், துறத்தல் தகுவதோ- நீக்கிவிடுதல் தகுந்ததாகுமோ?, (ஆகாது), (ஆதலின், நட்பினர் தீமை செய்யினும் அவரைப் பிரிதல் கூடாது); எ-று.

மனிதர்க்குக் கண் எப்படிச் சிறந்ததோ அப்படியே கையும் சிறந்ததாம். இவற்றுள் ஒருசமயத்தில் கைதவறிக் கண்ணைக்குத்தி விடுதலும் கூடும்; அவ்வாறு குத்திவிட்ட பொழுது அக்கையை அவர் வெட்டிவிடுவது முடியாது; சிநேகிதரும் அக்கையைப் போல் உதவி செய்பவராதலின், அவர் ஒருசமயம் தமக்குத் தீங்கிழைப்பினும் அவரை வெறுத்து நீக்குவது முடியாது என்பது இதிற் குறிக்கப் பட்டது. சிநேகிதர் கைபோல் உதவுகின்றவரென்பது, ''உடுக்கை யிழந்தவன் கைபோல'' என்னும் திருக்குறட் செய்யுளால் உணரப்படும். இங்குக் காட்டிய உபமான உபமேயங்களால் மனிதர்க்குத் தேக உறுப்புகள் எவ்வாறு நீக்கமுடியாத பற்றுடையனவோ அவ்வாறே நட்பாளரும் விலக்கமுடியாத பற்றுடையவரென்பது பெறப்படும். இச்செய்யுள் எடுத்துக்காட்டுவமையணி யுடையது.

'துன்னரும்சீர்' என்பது மலைக்குக் கூட்டப்பட்டது; மலை பலவகைச் சிறப்புக்களையுடையதென்பது, ''அளக்க லாகாவளவும்....'' என்னும் (நன்னூல்- பொதுப்பாயிரம் -28-ஆம்) சூத்திரத்தாலுணரப் படும். இனி இதனை மூங்கிலுக் கடையாக்கினும் அமையும், முத்துப்பிறத்தல்,

விண்ணளாவுதல் முதலிய சிறப்புக்களுடைமையின். வரை- கணு; இது, சினையாகுபெயராய் மூங்கிலையுணர்த்திற்று. கை - இரண்டிடங்களினுங் கூட்டப்பட்டது. களைப- பலர்பால் வினைமுற்று; இதனீற்றோகாரம்- எதிர்மறுத்தற் பொருளது. (சு)

227. *இலங்குநீர்த் தண்சேர்ப்ப வின்னா செயினும்*
கலந்து பழிகாணார் சான்றோர்- கலந்தபின்
தீமை யெடுத்துரைக்குந் திண்ணறி வில்லாதார்
தாமு மவரிற் கடை.

(இ-ள்.) இலங்கு- விளங்குகிற, நீர்- நீர்ப்பெருக்கையுடைய, தண்- குளிர்ந்த, சேர்ப்ப-கடல் துறையையுடைய பாண்டியனே!, சான்றோர்- (நற்குணங்களால் நிறைந்த) பெரியோர், (தம் சிநேகிதர் புத்திக்குறைவினால்), இன்னா- துன்பங்களை, செய்யினும் - (மிகுதியாகச்) செய்தாலும், கலந்து - (முன்னே அவரோடு சிநேகிதராகச்) சேர்ந்து, (பின்னே மேற்கூறியபடி அவரால் செய்யப்படும்), பழி- குற்றங்களை, காணார்- நோக்கமாட்டார்கள், (அதாவது, எண்ணிப் பாராட்ட மாட்டார்கள்), (அவ்வாறின்றி), கலந்தபின் - (ஒருவரோடு சிநேகிதராகச்) சேர்ந்தபின், தீமை - (அவருடைய) குற்றங்களை, எடுத்து உரைக்கும் - எடுத்துக் கூறுகின்ற, திண் அறிவு இல்லாதார்- உறுதியான விவேகம் இல்லாதவர்கள், தாமும்- தாங்களும், அவரின்- அவரைப் போலவே, கடை- கடைப்பட்டவராவர்; எ-று.

ஒருவரோடு சிநேகித்தவர், அவ்வாறு கலந்தபின், அவர் தீமை செய்யினும் அதனை வெளிப்படுத்தியுரைப்பின் அவரைப் போலவே உறுதியான அறிவில்லாதவரும், கடைப்பட்டவரும் ஆவர்; ஆதலின், நற்குணங்கள் நிறைந்த பெரியோர் அவ்வாறு சிநேகிதர் செய்த குற்றங்களைப்

பாராட்டி வெளிப்படுத்தார் என்பத இதன் கருத்து. அறிவில்லாத சிறியோர் குற்றங்களைச் செய்வது இயல்பு; பெரியோர் அவற்றைப் பொறுத்தல் இயல்பு; ஆதலின், அப்பெரியோர் அவ்வாறு அறிவின்மையாற் சிறியோர் செய்த குற்றங்களைப் பெறாவிடில் அவர்க்குள்ள அறிவின்மை யைத் தாமும் கொண்டவராவர்; ஆதலின், அவரைப் போலவே கடைப்பட்டவராய் விடுவர். இதனால், நண்பர் செய்த குற்றங்களைப் பொறுப்பவரது உயர்வும், பொறாத வரது இழிவும் கூறப்பட்டன. அறிவிலார் செய்த குற்றங் களைப் பொறாதவர் அவரைக்காட்டிலும் தாழ்ந்த அறி வுடையவராய் விடுவர் ஆதலின், 'அவரிற்கடை' என்பதற்கு, 'அவரைக் காட்டினும் தாழ்ந்தவர்' எனப் பொருளுரைப் பினும் அமையும்.

இலங்குநீர்-வினைத்தொகை; 'நீர்மை' என்னும் பண்புப்பெயர், மையீறுகெட்டுக் குணவாகுபெயராய், 'நீர்' என நின்று, தண்ணீரை யுணர்த்திற்று; நீர்மை-குணம்; குணமாவது - உணவு சமைத்தற் குதவியாதல், உணவாய் நிற்றல், தாகத்தைப் போக்கல் முதலியன அமைந்திருத்த லாம். பழி- செயப்படு பொருட்பெயர்; 'பழிக்கப்படுவது' என விரியும்; இதில் செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்டது. தீமை- பண்புப்பெயர். 'தாமும்' என்பதிலுள்ள உம்மை- 'முன்கூறிய சிறியார்போல தாங்களும்' என்ற பொருளைத் தருதலால் இறந்தது தழுவிய எச்சப் பொருளது; இனி, 'பிறர் குற்றம் பாராட்டாத தாங்களும்' என அதற்குப் பொருள் விரிப்பினும் அமையும்; அங்ஙனங் கொள்ளின் உம்மை- உயர்வு சிறப்புப் பொருளதாம். காணுதல்- நோக்கு தல்; சந்தர்ப்பநோக்கி, இஃதெண்ணுதலை குறிக்குமாகலின் நோக்கனோக்க மெனப்படும்; ஆதலின், 'காணார்' என்பதற்கு, 'எண்ணார்' என்று பொருள் கொள்ளப் பட்டது. (எ)

228. ஏதிலார் செய்த திறப்பவே தீதெனினும்
நோதக்க தென்னுண்டா நோக்குங்கால்- காதல்
கழுமியார் செய்த கறங்கருவி நாட
விழுமிதா நெஞ்சத்து ணின்று.

(இ-ள்) கறங்கு - ஒலி செய்கின்ற, அருவி- மலை யருவிகளையுடைய, நாட- பாண்டி நாட்டையுடைய அரசனே!, (அறிவுடையார்க்கு), ஏதிலார் செய்தது- அயலார் இயற்றியது, இறப்ப - மிகுதியாக, தீது எனினும்- தீங்கான காரியமே யாயினும், நோக்கும் கால்- (அவர் அதனை ஆராய்ந்து) பார்க்குமிடத்து, (அஃதந்த அயலாரின் அறிவீனத் தால் நேர்வதென்று அவரால் துணியப்படு மாதலின்), நோதக் கது- (அதனால்) வருந்தத்தக்கது, என் உண்டு ஆம்- என்ன உள்ளதாம், (எதுவுமில்லை), (அதுவே அத்தன்மைத்தாகும் போது), காதல் கழுமியார் - (அவரிடத்தே) அன்பு பொருந் திய நண்பர், செய்த- செய்த தீமைகள், விழுமிது ஆம்- (அறி வினால்) சிறந்ததாகி விளங்குகின்ற, நெங்சத்துள்- (அவ ருடைய) மனத்துள்ளே நின்று- நிற்ப, (அதாவது, அவற்றை அவர் மனத்திற்கொண்டாராய்ந்துபார்க்க), என் உண்டு- (அவற்றால் வருந்தத் தக்கது) யாதுள்ளதாம்?, (எதுவு மில்லை); எ-று.

அயலார் மிகுந்த தீங்குகளைச் செய்தவிடத்தும், அவை அறிவீனத்தால் நேர்ந்தனவென்று அறிவுடையோரால் ஆராய்ந்து தள்ளப்படுகின்றன; அவற்றால் அவர்க்கு எவ்வித வருத்தமும் உண்டாவதில்லை; அவைகளே அவ்வாறு அறிஞரால் கருதப்படும்போது அன்புடைய சிநேகிதர் அவர்க்குச் செய்த தீமைகளால் அவர் வருந்துவது என்ன விருக்கின்றது? ஒன்றுமில்லை என்பது இதன் கருத்து.

இதனால், அறிவுடையார், தமக்கு அயலார் செய்த தீங்குகளையும் ஒரு பொருளாக மதித்து வருந்தார் என்பதை

விளக்கி, தன் முகத்தான் நட்பிற் பிழைபொறுத்தலை வலி யுறுத்திக் கூறினார் முனிவர்.

'என்னுண்டு' என்பது இரண்டிடங்களினுங் கூட்டப் பட்டது; இது தாப்பிசைப் பொருள்கோளின்பாற்படும்; இங்ஙனம் ஓரிடத்துள்ளதைப் பலவிடங்களினுங் கூட்டிப் பொருள் கொள்வது,

''நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது''

என்னும் (திருக்குறள்-235-ஆம்) செய்யுளுரையாலும், சிந்தாமணி- பதிகம் 26ஆம் செய்யுளுரையாலும், சிந்தாமணி-265- 2373-ஆம் செய்யுள் உரைகளாலும் உணரப்படும். செய்த-பன்மைப் பெயர். 'இறப்பவே' என்பதன் ஏகாரம்- தேற்றப் பொருளது. நோதக்கது- நோதற்குத்தக்கது; நான்காம் வேற் றுமைத் தொகை; நோ- தல்லீறு கெட்ட முதனிலைத் தொழிற் பெயர். நின்று- நிற்ப என்னும் செயவெனெச்சத்திரிபு. 'உண்டாம்' என்பதில், ஆம்- அசை. (அ)

229. *தமரென்று தாங்கொள்ளப் பட்டவர் தம்மைத்*
தமரன்மை தாமறிந்தா ராயி னவரைத்
தமரினு நன்கு மதித்துத் தமரன்மை
தம்மு ளடக்கிக் கொளல்.

(இ-ள்) (அறிவுடையார்), தமர் என்று- தம் நட்பாளர் என்று, தாம் கொள்ளப்பட்டவர் தம்மை- (முன்பு) தம்மால் விரும்பிச் சிநேகஞ்செய்து கொள்ளப்பட்டவர்களிடத்து, தமர் அன்மை- சிநேகிதர் அல்லாம லிருக்கும் தன்மையை, தாம் அறிந்தார் ஆயின்- தாங்கள்(பின்பு) அறிந்தார்களாயின், அவரை - அவர்களை, (அதன்பொருட்டு வெறுத்துத் தூற்றி விலக்காமல்), தமரினும்- தம் உண்மை உறவினரைக் காட்டி

னும், நன்குமதித்து - (மேன்மையானவராகக் கொண்டு) மிகக் கௌரவித்து, தமர் அன்மை- (அவரிடம் காணப்பட்ட) உற வினராந் தன்மையில்லாமையை, தம்முள்- தம்மனத்திற்குள் ளேயே, அடக்கிக்கொளல் - அடக்கி வைத்துக் கொள்க; எ-று..

அறிவுடையாரால் முன்பு நேசிக்கப்பட்டவர், பின்னர் அந்நட்பிற்குரியரல்லாதவராகக் காணப்படின், அவரை வெறுத்து நீக்காமல் தம் உண்மை யுறவினரினும் உயர்ந் தோராகக் கொண்டு கௌரவித்து, அவர் நேயமற்ற தன்மையை மனத்தில் அடக்கி வைத்துக்கொள்ளுதல் அவ்வறிவுடையார் கடமை என்பது இதன் கருத்து.

நட்பிற்குரிய குணமில்லாதாரை ஒருவர் வெறுத்து நீக்கினால் அவர் மேலும் மேலும் தீமைகளையே செய்து அறிவுகெட்டொழிவர்; அவர் குற்றத்தை மனத்துளடக்கி அவரை உண்மை நட்பினரைப் போல கௌரவித்துவரின், அந்த நற்குணத்தைக் கண்டேனும் அவர்குற்றஞ்செய்து கெடாதிருப்பர்; ஆதலின், 'அவரைத் தமரினும் நன்கு மதித்துத் தமரன்மை தம்முளடக்கிக் கொளல் வேண்டும்' என்றார் முனிவர். தம்மை- ஏழாம்வேற்றுமை இரண்டாம் வேற்றுமையாக மாறி வந்த உருபு மயக்கம். கொளல்- அல்லீற்றுவியங்கோள் உடன்பாட்டு வினைமுற்று;

''பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட்பதடி யெனல்''

என்னும் (திருக்குறள்-196-ஆம்) செய்யுளில், 'எனல்' என்பது இங்ஙனம் வியங்கோள் முற்றாக வருதல் காண்க. இச் செய்யுளில் வந்த சொல்லும் பொருளும் மீண்டும் பலவிடங் களில் வந்தது- சொற்பொருட் பின்வரு நிலையணி. (கூ)

230. *குற்றமு மேனைக் குணமு மொருவனை*
நட்டபி னாடித் திரிவேனேல் - நட்டான்
மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க
அறைகடல்சூழ் வைய நக.

(இ-ள்). ஒருவனை நட்டபின்- (நான்) ஒருவனைச் சிநேகித்த பிறகு, குற்றமும் - (அவனிடத்திலுள்ள) குற்றங் களையும், ஏனை- மற்ற, (அதாவது, அவற்றிற் கெதிரிடை யாகிய), குணமும்- நற்குணங்களையும், நாடி திரிவேனேல்- ஆராய்ந்து திரிவேனானால், அறைகடல்சூழ் - முழங்குகின்ற சமுத்திரத்தாற் சூழப்பட்ட, வையம்- இப்பூவுலகத்திலுள்ள வர் யாவரும், நக- (என்னை நிந்தித்துச்) சிரிக்குமாறு, நட் டான்- சிநேகித்தவனுடைய, மறை- இரகசியத்தை, காவா- (மனத்துள் அடக்கிவைத்துக்) காப்பாற்றாமல், விட்டவன்- (வெளிப்படுத்தி) விட்டபாவி, செல்வுழி- செல்லும் இடத் திற்கு, (அதாவது, செல்லும் தாழ்ந்தகதிக்கு), செல்க- செல் வேனாக; எ-று.

இஃதிச் செய்யுளியற்றிய முனிவரே சபதம் செய்து நட்பிற் பிழை பொறுத்தலை வற்புறுத்திக் கூறியதாகும்; நீதி கூறுவார்' தாமும் அதனைச் செய்து காட்டுதல் முறைமை யாகலின் இங்ஙனம் கூறினாரென்க.

மனிதர் ஒருவரிடத்தே சிநேகஞ் செய்யுமுன் அவர் குணம், செயல் முதலியவற்றை ஆராய்ந்து, அவரை நல்லவ ரென்று தெரிந்த பின் சிநேகங்கொள்ளவேண்டும்; அவ்வா றின்றி நேசித்துவிட்டுப் பிறகு அவர் குற்றத்தையும், குணத்தையும் ஆராய்தல் மிகுந்த பாவமாம்; இது, ஒருவன், தன்னுடைய உண்மையான சிநேகிதன், தனக்கு மாத்திரம் சொல்லிவைத்த அவனுடைய இரகசியமான காரியத்தைத் தான் வெளியிட்டால் என்ன பாவம் நேருமோ அதைப் போன்றதேயாம். ஆதலால், ''ஒருவனை நேசித்த பின் குற்றங் குணங்களை நாடித்திரியின், நட்டவன்மறை காவாவிட்ட

வன் செல்வுழிச் செல்க'' என்றார் முனிவர். உண்மைச் சிநேகிதன், வெளியிட்டால் தனக்கிழி வுண்டாகும் இரகசியத்தையும், நண்பன் தன் மானங்காப்பவனாதலின் அவனிடம் கூசாமற் சொல்வான்; அவ்வாறு நம்பிக் கூறியதை அவன் வெளியிடுவானாயின் அவனுக்குக் கொடிய நரகமே கிடைக்கும்; ஆதலின், அது மகா பாதகமென்பது இங்குக் குறிக்கப்பட்டது. மறை- மறைக்கத்தக்கது. செல்க- வியங்கோள்வினைமுற்று; தன்மைக்கு வந்தது. வையம்- இடவாகு பெயராய் அதிலுள்ள மனிதரை யுணர்த்திற்று; இஃது, 'எல்லாப்பொருள்களையும் வைக்குமிடம்' என்று பொருள்படுமாகலின், காரணப்பெயராம். (கo)

அதிகாரம் 24

கூடாநட்பு

கூடாநட்பாவது - கொள்ளத்தகாத சிநேகமாம்; அதாவது, அக நட்பில்லாது முக நட்புக்காட்டி வெளிக்கு உண்மையான நட்பினரைப்போல் நடித்துத் திரிவாரது நட்பு. இத்தகைய நட்புத் திஜமயே பயக்குமாதலின் ஒருவரோடு சிநேகஞ் செய்யுமுன்னரே இதனை ஆராய்ந்து கண்டு விலக்கி, உண்மை நட்பைக் கொள்ள வேண்டுமென்பது இவ்வதிகாரத்தில் விளக்கிக் காட்டப்படும். இவ்வாறு விலக்கத்தக்க நட்பினை விளக்குவதால் இஃதிப் பெயர் பெற்றது. நட்புக்கு நல்லவரென்று ஒருவரால் தேர்ந்தெடுக் கப்பட்டவர் ஒரு சமயம் தவறித் தீமை செய்துவிட்டால் அதைப் பொறுத்துக் கொள்ளுதலே நட்பிற் பிழை பொறுத்த லாம். கூடா நட்பினரைச் சேர்த்துக் கொண்டு அவரால் நேரும் தீங்குகளைப் பொறுத்தல் வேண்டு மென்பது அதன் கருத் தன்று; கூடா நட்பினரை ஆராய்ந்தகற்றுதலே முறைமை யாம்; ஆதலின், கூடாநட்பை விளக்கும் இவ்வதிகாரம் அதன் பின் வைக்கப்பட்டது.

231. *செறிப்பில் பழங்கூரை சேறணை யாக*
இறைத்து நீரேற்றுங் கிடப்பர் - கறைக்குன்றம்
பொங்கருவி தாழும் புனல்வரை நன்னாட
தங்கரும முற்றுந் துணை.

(இ-ள்.) கறை - கறுப்பாகிய, குன்றம் - மலையிலிருந்து, பொங்கு - பெருகுகின்ற, அருவி- அருவியாக, தாழும்- வழிகின்ற,புனல்- நீர்ப்பெருக்கை, வரை- கொள்கின்ற, நல்நாட- நல்ல பாண்டிநாட்டையுடைய அரசனே!, (சிலர்), தம் கருமம்- தங்கள் காரியம், முற்றும் துணை- முடியும் வ்ரையில், செறிப்பு இல்- (இடைவெளிதோற்றாத படி வேயப்பட்ட) சேர்க்கையில்லாத, (அதாவது, நெருக்கமாக வேயப்படுதல் இல்லாத), பழங்கூரை- பழைய கூரை வீட்டிலே, (மழை பெய்யுங் காலத்தில்), நீர்- (அது பிரிந்து இடைவெளி தோறும் வீடாயிருப்பதனாலே மேலிருந் தொழுகி வழிந்து பெருகிய) நீரை, இறைத்தும்- வெளியில் இறைத்தும், நீர்- அந்நீரினை, ஏற்றும்- (மேலே விழும்போது கையினாலும், பாத்திரங்களாலும்) தாங்கிப் பிடித்தும், சேறு அணையாக- (அதிலுள்ள) சேறே தமக்குப் படுக்கையாக, (கொண்டு), கிடப்பர்- அதிற்படுத்துக் கிடப்பார்கள், (காரியம் முடிந்தபின் அதைவிட்டு நீங்கிவிடுவார்கள்; இவர்களைப் போலவே பொய்ந்நட்பாளர் சிலர், ஒருவரால் ஒரு காரியமாக வேண்டியிருந்தால் அக்காரியம் முடியும் வரையில், அவர் துன்புறுங்காலத்தில் அதனைத் தாங்களும் தாங்கிக் கொண்டிருந்து அக்காரியம் முடிந்தபின் அவரை விட்டு நீங்கிவிடுவர்; ஆதலின், இத்தகையினரோடு சிநேகங் கொள்ளலாகாது); எ-று.

சிலர், மிகப் பிரிந்து கிடக்கின்ற வோர் பழங் கூரை வீட்டில் ஒரு காரியம் ஆகவேண்டி யிருந்தால் அக்காரியம் முடியும் வரையில் அதில் தங்கி, ஒழுகும் மழைத் தண்ணீரை இறைத்தும், கையாலும் பாத்திரத்தாலும் ஏந்தியும் சேற்றையே படுக்கையாகக் கொண்டு வீழ்ந்து கிடப்பர்; அக்காரியம் முடிந்தபின் அதைவிட்டு நீங்கி விடுவர்; அவர் களைப்போலப் பொய்ந்நட்பாளர் ஒருவரால் தமக்கொரு காரியம் ஆகவேண்டி யிருந்தால் அஃதாமளவும் அவரோடு சேர்ந்து அவர் துன்பங்களைத் தாமும் அனுபவிப்பார்போல் நடித்து தம் காரியம் முடிந்தவுடன் அவரைப் பிரிந்து

விடுவார்கள்; இவர்களின் நட்பு கூடா நட்பாம்; ஆதலின், இத்தகைய நட்பைக் கொள்ளலாகாது என்பது இச்செய்யுட் கருத்து. இக்கருத்து பழமொழி-135ஆம் செய்யுளில் அமைந் திருத்தலோடு அதனுரையில் இச்செய்யுளே உதாரணமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இதில், காரிய முடியுமளவும் பழங்கூரை வீட்டி லிருந்து விலகுவார் தன்மையாகிய உவமை கூறிக் குறிப் பினால் கூடாநட்பின் தன்மையை விளக்கினார் முனிவர்; இது குறிப்பெச்சத்தின்பாற்படும்;

''அவைதாம்,
தத்தங் குறிப்பி னெச்சஞ் செப்பும்''

என்னும் (தொல்-சொல்-எச்-44-ஆம்) சூத்திர வுரைபார்க்க; இன்னும் இது, உபமானங்கூறிய மாத்திரத்தில் உபமேயம் பெறவைத்ததால் பிறிது மொழிதல் என்னும் அணியுமாம்.

செறிப்பு- சேர்க்கை; அதாவது, வேய்ப்பட்ட வைக்கோல் முதலியவற்றின் நெருக்கம்; தொழிற்பெயர். கூரை- ஆகுபெயராய் அதனையுடைய வீட்டையுணர்த்தி நின்றது. மலை, தூரத்திலிருந்து பார்க்குக் கறுப்பாகத் தோன்று மாதலின், 'கறைக்குன்றம்' என்று சொல்லப் பட்டது; இன்னும் மரச்செறிவால் எப்பொழுதும் இருள் சூழ்ந்திருக்கு மாகலின், 'கறைக்குன்றம்' என்பதற்கு, 'இருள் சூழ்ந்த மலை' என்று பொருளுரைப்பினுமாம். 'வரைதல்' என்பது, தல்லீறு கெட்டு முதனிலைத் தொழிற்பெயராய் வரை- என நின்றது; வரைதல் - கொள்ளுதல்; மலை யருவியே ஆறுகளிற் கலந்து நாடு முழுதும் பரவுமாதலின், 'குன்றம் பொங்கருவி தாழும்புனல் வரை நன்னாட' என்றார் ஆசிரியர்; புனல்வரை- இரண்டாம் வேற்றுமைத் தொகை. இனி, 'வரை, என்பதை மூங்கிலெனக்கொண்டு, 'பொங் கருவிதாழும் புனலையும், மூங்கிலையுமுடைய கறைக்

குன்றம் பொருந்திய நன்னாட' எனினுமாம்; வரையை கறைக்குன்றத்துக்கு முன்கூட்டி, 'மூங்கிலையுடைய கறைக் குன்றம் பொங்கருவி தாழும் புனல்நிறைந்த நன்னாட' எனக் கோடலுமொன்று. நீர் - இரண்டிடங்களினுங் கூட்டப் பட்டது. (க)

232. *சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்*
மாரிபோன் மாண்ட பயத்ததாம்- மாரி
வறந்தக்காற் போலுமே வாலருவி நாட
சிறந்தக்காற் சீரிலார் நட்பு.

(இ-ள்) வால் - வெள்ளிய, அருவி- மலையருவி பாய்கின்ற, நாட- பாண்டிநாட்டையுடைய அரசனே!, சீரியார்- (நற்குணங்களால்) சிறந்தவர்களுடைய, கேண்மை - நட்பானது, சிறந்த- மிகுந்த, சிறப்பிற்று ஆய்- சிறப்பினை யுடையதாய், மாரிபோல்- (உலகத்துக்கு மிகுந்த பயனைச் செய்யும்) மழையைப்போல, மாண்ட- மாட்சிமைப்பட்ட, பயத்தது ஆம் - பயனையுடையதாகும், சீர் இல்லார் நட்பு- (நற்குணத்தாலேற்படும்) சிறப்பு இல்லாதவர்களுடைய சிநேகமானது, சிறந்தக்கால் - அதிகரித்தால், மாரி வறந்தக் கால் போலும் - மழை வறண்ட காலத்தைப்போல எவ்வித பயனும் இல்லாததாகும்; எ-று.

மழை, பிரதிபயனை விரும்பாது உலகத்துக் குப்பெரும்பயனைச் செய்யும்; அதைப்போல உயர்ந்த நட்பினர், தம்மோடு சேர்ந்தவர்க்குக் கைம்மாறு வேண்டாது உதவிசெய்வர்; நற்குணமில்லாதவரோ' தம் நட்பினர் உதவியை மாத்திரம் பெற்றுக்கொள்வாரேயன்றி அவர்க்குச் சிறு உதவியும் புரியார்; அத்தகையினர் நேயம் அதிகரிக்க அதிகரிக்க அவரை நட்டார்க்கு வீண் விரையமே உண்டாம்; ஆதலின், ஒரு பயனுமின்றிக் கைப்பொருள் செலவாகச் செய்யும் மழை வறண்ட காலம் அவர் நேயத்திற்குவமை கூறப்பட்டது.

சிறந்த - மிகுதிப்பொருள் குறித்தது; பெயரெச்சம். சிறப்பிற்று- ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர்; இதில், சிறப்பு- பகுதி, று- விகுதி, இன்- சாரியை. 'போலுமே' என்பதும் ஏகாரம்- தேற்றப்பொருளது.

சீரியார் கேண்மையின் தன்மையும், சீரிலார் நட்பின் றகவும் இதிற் கூறவே, சீரியார் உறவு கொள்ளப்படுமென் பதும், சீரிலார் உறவு தள்ளப்படுமென்பதும் தாமே அமையும். (உ)

233. *நுண்ணுணர்வி னாரொடு கூடி நுகர்வுடைமை*
விண்ணுலகே யொக்கும் விழைவிற்றால் - நுண்ணூல்
உணர்வில ராகிய வூதிய மில்லார்ப்
புணர்த னிரயத்து ளொன்று.

(இ-ள்) (ஒருவர்), நுண் உணர்வினாரொடு - நுட்பமான அறிவுள்ளவர்களுடனே, கூடி- சேர்ந்து, (அச்சேர்க்கையால் உண்டாகும்) இன்பத்தை), நுகர்வு உடைமை- அனுபவித்தலை யுடையராயிருப்பது, (அவர்க்கு), விண்ணுலகே ஒக்கும்- தேவருலகத்தின் இன்பத்தையே நிகர்க்கும், விழைவிற்று - (மிகவும்) விரும்பப்படுவதுமாம், நுண்ணூல்- நுட்பமான நூல்களை, உணர்வு இலர் ஆகிய - (படித்தறியும்) அறிவு இல்லாதவரான, ஊதியம் இல்லார்- பயனற்றவர்களை, புணர்தல்- (ஒருவர்) சேருதல், நிரயத்துள் ஒன்று- (அவர்க்கு) நரகத்தில் அடையும் துன்பங்களில் ஒன்றாகும்; எ-று.

நுட்பமான அறிவுடையாரோடு கூடி இன்பமனுபவிப்பது மிகவும் விரும்பப்படும் சுவர்க்கலோகத்து இன்பத்தைப் போன்றிருக்கும்; நூலுணர்ச்சியில்லா மூடரோடு சேர்தல் நரகலோக துன்பத்தைப் போன்றிருக்கும் என்பது இதன்கருத்து. அறிவற்றார் எப்பொழுதும் மனத்திற்குப் பொருந்தாத செயல்களையே செய்துகொண்டிருப்பர்;

அவரோடு சிநேகங்கொண்டார்க்கு அவை மிக்க வேதனையைச் செய்துகொண்டே யிருக்கும்; அஃதவர்க்கு நரகவேதனைபோலத் துன்பத்தைச் செய்வதாம். அறிவுடையார் சேர்க்கை விண்ணுலகத்தின் இன்பத்தை நிகர்க்கும் என்று இதில் கூறப்பட்டிருப்பதைப் போலவே, 'தவலருந் தொல்கேள்வி....' என்னும் (இந்நூல்-137-ஆம்) செய்யுளிலும் கூறப்பட்டிருத்தல் உய்த்துணர்க.

விண்ணுலகு - இடவாகுபெயராய் அதிலுள்ள இன்பத்தை யுணர்த்திற்று; 'நிரயம்' என்பதும் அங்ஙனமே அதிலுள்ள துன்பத்தை யுணர்த்திற்று. நிரயம்- வடசொல். ஆல்- அசை. விழைவிற்று- ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர். (ந)

234. பெருகுவது போலத் தோன்றிவைத் தீப்போல்
ஒருபொழுதுஞ் செல்லாதே நந்தும்- அருகெல்லாம்
சந்தன நீள்சோலைச் சாரன் மலைநாட
பந்தமி லாளர் தொடர்பு.

(இ-ள்.) அருகு எல்லாம் - ஓரங்களிலெல்லாம், நீள் சந்தனம் சோலை- நீண்ட சந்தனமரங்களின் சோலைகள் நிறைந்த, சாரல்- பக்கங்களையுடைய, மலை- மலை பொருந்திய, நாட- பாண்டி நாட்டிற்கரசனே!, பந்தம் இல் ஆளர்- (மனத்தில் அன்பென்னும்) பற்றில்லாதவர்களுடைய, தொடர்பு- சிநேகமானது, பெருகுவதுபோலத் தோன்றி - (தொடக்கத்தில்) அதிகரிப்பதுபோல காணப்பட்டு, (பின்னர்), வைதீபோல்- வைக்கோலிற்பிடித்த அக்கினியைப் போல, ஒருபொழுதும் செல்லாது- சிறிதநேரம்வரைகூட அவ்வளர்ச்சி நடைபெறாமல், நந்தும்- குறைந்தழிந்துவிடும்; எ-று.

அன்பில்லாதவர்களுடைய சிநேகம் வைக்கோலிற் பற்றிய நெருப்பைப்போல முதலில் அதிகரித்துக் காணப் பட்டுச் சிறிது நேரத்திற்குள் அழிந்துவிடும் என்பது இதன் கருத்து. இவர் சிநேகம் இத்தகையதென்று கூறியதனால், அது விடத்தக்கதென்பது குறிப்பிடப்பட்டது.

வைக்கோலிற் பற்றிய தீ பற்றியவுடன் ஓங்கி யெழுந் தெரிந்து சில நிமிடங்களில் அமர்ந்து விடுதல் இயற்கை யாதலின், அஃதன்பில்லாதவருடைய சிநேகத்திற் குவமை யாகக் கூறப்பட்டது. இதில், சந்தனச்சாரல் பொருந்திய மலையென்றது - பொதியமலையை; இது பாண்டிநாட்டைச் சார்ந்தது; இதில் சந்தனமரங்கள் மிகுதியுண்டு இதனை,

''சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்
பரமா சாரியன் பதங்கள்
சிரமேற் கொள்ளுதுங் திகழ்தராற் பொருட்டே''

என்னும் தொல்காப்பியம் - சொல்லதிகாரம்- சேனாவரை யம்- ஆசிரிய வணக்கச் செய்யுளடிகளாலும், இன்னும் பலஆன்றோர்செய்யுட்களானு முணரலாம். அருகு - ஓரம் சாரல் - சார்பு; தொழிற்பெயர்; இஃதாகுபெயராய் மலையைச் சார்ந்திருத்தலாகிய இடத்தை யுணர்த்திற்று; மலையடி வாரத்தைச் சார்ந்திருக்குமிடத்திற்கு, 'மலைச்சாரல்' என்று பெயர்; இதுபோலவே நதியைச் சார்ந்திருக்கு மிடத்திற்கு, 'நதிச்சாரல்' என்று பெயர். மலைச் சாரலில் நீர்ச்சத்துள்ள ஓரமான பாகங்களிலேயே மரங்கள் மிகுதியாயுண்டாகி வள ரும்; ஆதலின், 'அருகெல்லாம் சந்தன நீள் சோலைச்சாரல்' என்றார் முனிவர். 'சந்தனநீள்' என்பது, 'நீள் சந்தனம்' என மாற்றிப் பொருளுரைக்கப்பட் டது. ஏ- அசை. சந்தனம், பந்தம் என்பன- வடசொற்கள். (ச)

235. *செய்யாத செய்துநா மென்றலுஞ் செய்வதனைச்*
செய்யாது தாழ்த்துக்கொண் டோட்டலும்-
மெய்யாக
இன்புறூஉம் பெற்றி யிகழ்ந்தார்க்கு மந்நிலையே
துன்புறூஉம் பெற்றி தரும்.

(இ-ள்.) (ஒருவர்), செய்யாத- தம்மாற் செய்யக்கூடாத காரியங்களை, நாம் செய்தும் என்றலும்- 'நாம் செய்வோம்' என்று கூறுதலும், செய்வதனை - தம்மாற் செய்யக்கூடிய காரியத்தை, செய்யாது - செய்யாமல், தாழ்த்துக்கொண்டு- தாமதித்துக் கொண்டு, ஓட்டலும்- (காலத்தைக்) கடத்து தலும், (ஆகிய இரண்டு செயல்களும்), மெய்ஆக - உண்மை யாக, இன்புஉறுஉம் பெற்றி - (அவர் சிநேகத்தால்) இன் பத்தை அடையும் தன்மையை, இகழ்ந்தார்க்கும்- இகழ்ந்து விலக்கியவர்க்கும், (அதாவது, அவருடைய சிநேகத்தை விரும்பாதவர்க்கும்) அந்நிலையே- (அவைஏற்பட்ட) அப் பொழுதே, துன்பு உறூஉம் பெற்றி - துன்பத்தை அடையும் படியான தன்மையை, தரும்- கொடுப்பனவாகும்; (ஆதலின், அவர் சிநேகத்தைக் கொண்டவர்க்கு அவை துன்பந்தரு மென்பது சொல்லாமலே அமையும்); எ-று.

ஒருவர், தம்மாற் செய்யக்கூடாத காரியங்களை, 'நாம் செய்வோம்' என்று சொல்லுதலும், செய்யக்கூடியதைச் செய் யாமற் காலங்கடத்துதலும் அவருடைய சிநேக இன்பத்தை விரும்பாதவர்க்கும் துன்பத்தைத்தருவனவாகும்; ஆதலின், அவர் நட்பை விரும்புவார்க்கு அவற்றால் துன்பமுண்டா மென்பது தானே அமையுமென்பது இதன் கருத்து.

இந்த இரண்டு செயல்களையுடையாரின் சிநேகத்தை விரும்பாதவர்களும், இவை இடம்பமும் மோசமும் பொருந் திய செயல்களாதலாலும், நம்பினவர்க்குக் கேடு செய்வன வாதலாலும் இவற்றைக் கண்டு வருந்துவர்; அப்படி இவை அவர்க்கே வருத்தத்தைச் செய்யும்போது, இச்செயல்களை

யுடையாரின் சிநேகத்தை விரும்பி யிருப்பார்க்கு இவை துன்பஞ் செய்யுமென்பது கூறாமலே அமையும். ‘இகழ்ந் தார்க்கும்’ என்பது கொண்டு, இகழாதார் தன்மை விளக்கப் பட்டது; இஃதர்த்தாபத்தி யலங்காரத்தின் பாற்படும். இங்ஙனம் இச்செயல்களையுடையார் தன்மையைக் கூறியத னால் இத்தகையார் சிநேகம் கூடா நட்பென்பதும் விளக்கப் பட்டது.

செய்யாத - எதிர்மறைப் பன்மைப் பெயர். செய்தும்- தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்று; செய்- பகுதி; தும்- விகுதி. (ரு)

236. *ஒருநீர்ப் பிறந்தொருங்கு நீண்டக் கடைத்தும்*
விரிநீர்க் குவளையை யாம்பலொக் கல்லா
பெருநீரார் கேண்மை கொளினுநீ ரல்லார்
கருமங்கள் வேறு படும்.

(இ-ள்) ஆம்பல்- அல்லிமலர்கள், ஒருநீர்- (குவளை மலர்கள் பிறந்த) ஒரே தண்ணீரில், பிறந்து தோன்றி, ஒருங்கு - ஒருமித்து, நீண்டக் கடைத்தும் - (அவற்றோடு) வளர்ந்த விடத்தும், விரி - மலர்ந்த, நீர்- (பரிமளிக்கும்) தன்மையை யுடைய, குவளையை - (அந்த) நீலோர்ப்பல மலர்களை, ஒக்கல்லா- நிகர்த்திருக்கமாட்டா; (அதைப்போல), நீர் அல்லார் - (அன்பினால்) இனிய தன்மையில்லாதவர், பெரு நீரார் கேண்மை - உயர்ந்த குணமுடையாரது நட்பை, கொள் ளினும் - கொண்டிருந்தாலும், கருமங்கள் - அவருடைய செய்கைகள், வேறுபடும்- (உயர்ந்தார் செய்கைகளைப் போன்றிராமல்) வேறாகியே தோன்றும்; எ-று.

ஆம்பல் மலர்கள், நீலோர்ப்பல மலர்களோடு ஒரே நீரில் பிறந்து ஒற்றுமையாய் வளர்ந்தாலும் தம் இயற்கை யினின்றும் மாறுபடா; அதைப்போலவே அன்பென்னும் இனிய குணமில்லாதவர், நற்குணமுடையாரோடு சேர்ந்

திருப்பினும் அவர் செய்கைகள், நற்குணமுடையார் செய்கைகளுக்கு மாறுபட்டுத் தாழ்ந்தனவாகவே யிருக்கும் என்பது இதன் கருத்து. இஃதெடுத்துக் காட்டுவமையணி.

நீர்ப்பூக்களில் நீலோர்ப்பலம் சிறந்தது; ஆம்பல் அதிற்றாழ்ந்தது. இவைகளை உவமை கூறியதனால், மனிதர், எங்கிருப்பினும் தம்தம் இயற்கையினின்றும் மாறுபடாரென்பது விளக்கப்பட்டது. இதைக்கொண்டு, தாழ்ந்த இயற்கையுடையார் நட்புக் கொள்ளத்தகாததென்பது துணியப்படும்.

முதலடியில் உள்ள நீர் தண்ணீரையும் மற்ற மூன்றிடங்களிலும்உள்ளநீர் குணத்தையும் உணர்த்திநின்றன. முதல்நீரை இந்நூல் 227-ஆம் செய்யுளுரையிற் கூறயபடி மையீறு கெட்ட பண்புப்பெயரென்றும், குணவாகு பெயராய்த் தண்ணீர்க்காயிற்றென்றும் கொள்வதோடு, 'நீரம்' என்னும் வடமொழித் திரிபாகவுங் கொள்ளலாம். இங்குக் கூறப்பட்ட மற்ற நீர்மூன்றும் 'நீர்மை' என்னும் பண்புப் பெயரின் விகாரம்; இவை விகாரத்தால், 'ஈறுபோதல்' என்ற விதிப்படி மையீறு கெட்டுநின்றன. 'கடைத்தும்' என்பதன் உம்மை- உயர்வு சிறப்புப்பொருளது. இதில், கடை- வினையெச்ச ஈறு;

''பின்முன் கால்கடை வழியிடத் தென்னு
மன்ன மரபிற் காலங் கண்ணிய
வென்ன கிளவியு மவற்றியல் பினவே''

என்னும் (தொல்-சொல்-வினை-32-ஆம்) சூத்திரத்தால் இஃதுணரப்படும். ஒக்கல்லா- எதிர்மறைப் பலவின்பால் வினைமுற்று. (சூ)

237. *முற்றற் சிறுமந்தி முற்பட்ட தந்தையை*
நெற்றுக்கண் டன்ன விரலான் ஞெமிர்த்திட்டுக்
குற்றிப் பறிக்கு மலைநாட வின்னாதே
ஒற்றுமை கொள்ளாதார் நட்பு.

(இ-ள்.) முற்றுஅல்- (வயது) முதிர்தலல்லாத, (அதாவது, இளமையான), சிறுமந்தி - சிறிய பெண் குரங்குகள், முன்பட்ட- தமக்கெதிர்ப்பட்ட, தந்தையை- (தம்) தந்தையான கிழக்குரங்குகளை, நெற்று கண்டு அன்ன- பயற்றநெற்றைப் பார்த்தாற் போன்ற, விரலால்- (தம்கை) விரல்களால், ஞெமிர்த்திட்டு - (அவற்றின் கைகளை) நெரித்து, குற்றி - இடித்து, பறிக்கும்- (அவற்றின் கையிலுள்ள காய்கனி முதலியவற்றை)ப் பிடுங்கித்தின்று விளையாடுகின்ற, மலைநாட- மலைகளையுடைய பாண்டிநாட்டிற் கிறைவனே!, ஒற்றுமை கொள்ளாதார் நட்பு- (சிநேகத்தை விரும்பும் உத்தமருடைய மனத்தினோடு) ஒன்றுபடும் தன்மையை அடையாதவருடைய சிநேகமானது, (அதாவது, மனவொற்றுமை யில்லாதவருடைய சிநேகமானது), இன்னாது (அவருக்கு) இனிமையாகாதாம், (அதாவது, கெட்டதரம்); எ-று.

மனவொற்றுமை யில்லாதவருடைய சிநேகம் மிகக் கெட்டது என்பது இதன் கருத்து. மனம் ஒன்று படாதவரோடு ஒருவர் சிநேகங்கொண்டால், தாம் செய்யும் எந்த நற்செயலுக்கும் அவர் ஒத்துவராமல் தாமொன்றைச் செய்து கொண்டிருப்பர்; அதனால் அவருக்குக் காரியக்கெடுதியும், துன்பமுமுண்டாகும்; ஆதலின், அவர் சிநேகம் கெட்டதென்று கூறி இங்கு விலக்கப்பட்டது.

குரங்குகள் ஒன்றின்கையி லிருப்பதை, மற்றொன்று பறித்துத் தின்பது அவற்றின் சாதி இயற்கை; அவ்வாறு பறிப்பதில் தந்தை, தாய் என்றுகூட நினையாமல், பலமுள்ளவை, பலமில்லாதவைகளின் கைப்பொருள்களையே

பறிக்கும்; அவை விஷமமான செய்கைகளையுடைய இன மாகலின் இக்குணங்களைப் பெற்றுள்ளன; இதனாலேயே, 'குரங்குச் சேஷ்டை' என்னும் ஒரு பழமொழியும் உலகில் வழங்குகின்றது; இவற்றுள் குட்டியும், தாயும், தந்தையும் குட்டிகள் சிறியனவாய்த் தாயின் வயிற்றில் தொற்றிக் கொண்டிருக்கும்போது ஒன்றின்மேலொன்று அன்புடையன வாயிருப்பினும், அக்குட்டிகள் பெரியனவாய்ப் பிரிந்தபின், எல்லாம் ஒன்றன்கையிலுள்ள உணவை மற்றொன்று பறிக்கும் இயற்கையுடையனவாகவே யிருக்கும்; குரங்குக் கூட்டத்தில் தின்பண்டத்தை யெறிந்து, சில சிறு தடிகளையும் அங்கே போட்டுவிட்டால் அவை தடிகளைத் தூக்கிக் கொண்டு போர் தொடங்குவதை நாம் அனுபவத்தில் பார்க் கலாம்; ஆகலின், இச்செயலை இச்செய்யுளில் விளக்கினார் முனிவர். இதனால் மலைகளின் சிறப்பு விளக்கப்பட்டது. இனி, 'முற்றல்' என்பதைத் தொழிற்பெயராக்கி தந்தை யோடு கூட்டி, 'முதிர்ந்த தன்மையுள்ள தந்தை' எனப் பொருளுரைப்பினும் பொருந்தும். குரங்கின் விரல்கள் பயற்றின் நெற்றைப்போன்றிருக்கும்; 'நெற்றுக்கண்டன்ன' என்பதற்கு, 'நெற்றைப்போன்ற' என்பது திரண்டபொருள்.

மந்தி- குரங்கின் பெண்மைப் பெயர்; இதனை, சூடாமணி நிகண்டு விலங்கின் பெயர்த்தொகுதி-35-ஆம் செய்யுளில், ''முசுவோடூகம் பேசிய குரங்கு மந்தி'' எனக் கூறுதலானும், ''குரங்கு முகவு மூகமு மந்தி'' என்னும் (தொல்-மர.) சூத்திரத்தாலும், ''கைம்மையுய்யாக் காமர் மந்தி'' என்னும் (தொல்-மர.) சூத்திரத்தாலும், ''கைம்மை யுய்யாக் காமர் மந்தி'' (குறுந்-69) என்பதாலும் உணர்க. தந்தை- இருதிணைப் பொதுப்பெயராகலின் மந்தியைப் பெற்ற ஆண் கிழக்குரங்கை விளக்கி நின்றது. 'அவற்றின் கையிலுள்ள காய் கனி முதலியவற்றை' என்பது இசை யெச்சமாகக் கூட்டி யுரைக்கப்பட்டது.

238. *முட்டுற்ற போழ்தின் முடுகியென் னாருயிரை*
நட்டா னொருவன்கை நீட்டேனேல்- நட்டான்
கடிமனை கட்டழித்தான் செல்வுழிச் செல்க
நெடுமொழி வைய நக.

(இ-ள்.) நட்டான் ஒருவன் - (என்னோடு) சிநேகித்தவனாகிய ஒருவன், முட்டு உற்ற போழ்தில் - இடையூறடைந்த காலத்தில், (நான்), முடுகி- விரைந்து, (அவனை அத்துன்பத்தினின்று நீக்கும் பொருட்டு), என்- என்னுடைய, ஆர் உயிரை - அருமையான உயிரை, கை- அவன் வசத்தில், நீட்டேனேல்- கொடாமலிருப்பேனாயின், நெடுமொழி- உயர்ந்த நீதிநூற் சொற்களையுடைய, (அதாவது, நீதிநூற் சொற்கள் நிலைத்திருக்கின்ற), வையம்- இந்நிலவுலகத்தில் உள்ளவர்கள், நக - (இவன் சிநேகத்துரோகி என்று என்னை இகழ்ந்து பேசி) சிரிக்க, நட்டான் - தன்னோடு சிநேகித்தவனுடைய, கடிமனை- காவலுக்குள் அடங்கியிருக்கின்ற மனைவியின், கட்டு அழித்தான் - உறுதியாகிய கற்பைக் கெடுத்தவன், செல்வுழி- செல்லுமிடமாகிய தீக்கதியில், செல்க- செல்வேனாக; எ-று.

நான், என்னோடு சிநேகஞ்செய்த ஒருவனுக்கு இடையூறு நேர்ந்த காலத்தில், அவ்விடர்ப்பாட்டை நீக்கும் பொருட்டு என் உயிரை அவனுக்குக் கொடாதிருப்பேனாகில், உலகத்தார் பழித்துச் சிரிக்க சிநேகிதன் மனைவியைக் கற்பழித்தவன் செல்லும் தீக்கதியிற் செல்வேன் என்பது இதன் கருத்து.

இஃதிச்செய்யுளாசிரியர் கூற்றாக அமைந்தது. இங்ஙனம் பிரதிக்ஞை செய்ததால், சிநேகனுக்குயிரையுங் கொடுத்து அவன் இடரைத் தீர்க்கும் நன்னட்பாளரின் இயற்கையைக்கூறி, அவ்வாறு நட்பினர் உதவி செய்ய வேண்டுமென்பதையும், அஃதில்லார் தீக்கதியடைவரென்பதையும், அவர் நேயம் கூடாநட்பு என்பதையும்

விளக்கினார் ஆசிரியர். இச்செய்யுள் இக்கருத்துடைமையால் அதிகாரப் பொருண்மை யுணர்த்திற்று.

முட்டு - முதனிலைத் தொழிற்பெயர்; தல்லீறு கெட்டு நின்றது; முட்டு - தடை; அதாவது, சுகத்தைத் தடுத்து விடுவது; அங்ஙனம் தடுப்பதால் நேர்வது துக்கமே; ஆதலின், 'முட்டு' என்பது, 'இடையூறு' என்னும் பொருள் பயந்து நின்றது 'கடிமனை' என்பதற்கு, 'கலியாணம் செய்த மனைவி' என்று பொருளுரைப்பினுமாம். கடி பல பொருள் குறித்த வொருசொல். 'நெடுமொழி' என்பதில், நெடுமை-இங்குயர்வை உணர்த்திற்று; பெரியோரால் கூறப்பட்ட நீதி சாஸ்திரமொழிகள் உலகத்தில் என்றும் நிலைத்திருப்பன வாம்; ஆதலின், 'நெடுமொழிவையம்' என்றார் முனிவர். வையம்-இடவாகு பெயர். நக- வினை யெச்சம். செல்க-தன்மையில் வந்த வியங்கோள் வினை முற்று; 'நக' என்னும் எச்சம் இம் முற்றைக்கொண்டு முடிந்தது. (அ)

239. *ஆன்படு நெய்பெய் கலனு ளதுகளைந்து*
வேம்படு நெய்பெய் தனைத்தரோ- தேம்படு
நல்வரை நாட நயமுணர்வார் நண்பொரீஇப்
புல்லறிவி னாரொடு நட்பு.

(இ-ள்.) தேன்படு- தேன் (மிகுதியாக) உண்டாகின்ற, நல் - சிறந்த, வரை - மலைகளையுடைய, நாட - பாண்டி நாட்டை கொண்ட மன்னனே! நயம் உணர்வார் (நட்பின்) நலத்தை அறிபவர்களுடைய, நண்பு ஒரீஇ - சிநேகத்தை விட்டுநீங்கி, புல் அறிவினாரொடு - அற்பமாகிய அறிவுள்ளா ரோடு, நட்பு - சிநேகங் கொள்ளுதல், ஆன்படு- பசுவினிடத் திலே உண்டாகின்ற, நெய்பெய் - நெய்யை ஊற்றிவைத் திருந்த, கலன் உள் - பாத்திரத்தில், அதுகளைந்து- அந் நெய்யை நீக்கிவிட்டு, வேம்புஅடு - வேப்பங்கொட்டைப் பருப்பை நசுக்கி ஆட்டுவதாலுண்டாகிய, நெய்- நெய்யை,

(அதாவது, வேப்பெண்ணையை), பெய்து அனைத்து - ஊற்றி வைத்ததை நிகர்க்கும், எ-று.

நட்பின் நயமுணர்வாருடைய சிநேகத்தை விட்டு, அற்ப அறிவுள்ளவரோடு சிநேகங்கொள்ளுதல், பசு நெய் ஊற்றிவைத்திருந்த பாத்திரத்தில் அந்நெய்யை நீக்கிவிட்டு, வேப்பெண்ணையை ஊற்றி வைத்ததை நிகர்க்கும் என்பது இதன் கருத்து. இதனால், நெய் போன்றவருடைய நட்புக் கொள்ளத்தக்க தென்பதும், வேப்பெண்ணெய்போன்றவர் நட்புக் கூடாநட்பென்பதும் விளக்கப்பட்டன.

பசு நெய்யை நல்லார் சிநேகத்துக்கும், வேப்பெண் ணையை அறிவில்லார் சிநேகத்திற்கும் உவமை கூறியது- உவமையணி.

'ஆன்படு' என்பதில், படு- காரியப்பொருள் கொண்ட பெயரெச்சம்; 'வேம்படு நெய், என்பதை, 'பகடு நடந்தகூழ்' என்பது போலக் கொள்க; இதிலுள்ள, அடு- காரணப் பொருள்கொண்ட பெயரெச்சம்; அடுதல்- ஆட்டுதல். வேம்பு - முதலாகு பெயராய் அதன் கொட்டையை உணர்த்திற்று; இனி, வேம்படு - என்பதற்கு, 'வேம்பால் அடுத்த, (அதாவது, வேம்பினாலுண்டாகிய)' என்று பொருள் கொள்ளினுமாம். பெய்தனைத்து - அகரந்தொக்கது. அரோ- ஈற்றசை; தேற்றப் பொருளதுமாம். 'தேன்படு' என்பது, 'தேம்படு' எனப் புணர்ச்சிவிதியாலாயது; ''தேனென்கிளவி.....'' என்னும் (தொல்-எழுத்- புள்ளி-ம-45-ஆம்) சூத்திரவுரையும், ''மெல் லெழுத்துமிகினு மானமில்லை'' என்னும் அதற்கடுத்த சூத்திரவுரையும் பார்க்க. ஒரீஇ- சொல்லிசையளபெடை. மலையில், தேன், கூட்டிலும், மலர், பழம் முதலியவற்றிலும் உண்டாதல் இயற்கையாதலின், 'தேன்படு நல்வரை' என்றார் ஆசிரியர். இனி, 'தேம்படு' என்பதற்கு, 'வாசனை பொருந்திய' அல்லது, 'இனிமை பொருந்திய' என்று

பொருளுரைப்பினுமாம். 'ஆன்படு' என்பதற்கு, 'வேம்படு, தேம்படு' என்னும் இரண்டு எதுகைத் தொடைகள்; இங்ஙனம் வருவது- இனவெதுகை. (கூ)

240. *உருவிற் கமைந்தான்க ணூராண்மை யின்மை*
பருகற் கமைந்தபா னீரளா யற்றே
தெரிவுடையார் தீயினத்தா ராகுத னாகம்
விரிபெடை யோடாடிவிட் டற்று.

(இ-ள்) உருவிற்கு - (அரசாளும்) பெருமைக்கு, அமைந்தான் கண்- பொருந்தியவனிடத்து, (அதாவது, அரசாட்சியுரிமையைப் பெற்றவனிடத்தில்), ஊர் ஆண்மை- ஊரில் உள்ளவர்களைக் (கிருபையோடு) ஆளுந்தன்மை, இன்மை- இல்லாதிருத்தல், பருகற்கு- (மனிதர்) குடித்தற்கு, அமைந்தபால்- பொருந்திய (சுவையுள்ள) பசுவின்பாலில், நீர் அளாய அற்று- நீரைக் கலந்ததுபோலாம், (இதைப் போலவே), தெரிவு உடையார் -அறிவுள்ளார், தீ இனத்தார் ஆகுதல்- தீயகூட்டத்தை (அதாவது, கெட்ட சிநேகத்தை) உடையவராதல், நாகம் - (நல்லாசாதி) அரவமானது, விரி பெடையோடு- விரியன் என்னும் பாம்பின் பெட்டையுடனே, ஆடி- (புணர்ந்து) விளையாடி, விட்ட அற்று- (உயிர்) விட்டதற்குச் சமானமாம்; எ-று.

அரசாளும் பெருமை பெற்றவனிடத்தே, ஊரிலுள்ள குடிகளைக் கிருபையோடு ஆளுந்தன்மை யில்லாதிருப்பது, மனிதர் பருகுதற்கேற்ற இனிமையான பாலில் நீரைக் கலந்ததற்குச்சமானமாம்; இச்செயல்போலவே அறிவுள்ளவர் கெட்ட நட்பாளரோடு சேர்தல், நல்ல சாதி நாகம் பெட்டை விரியனோடுகூடியிறந்ததற்கு நேராம் என்பது இதன் கருத்து.

குடிகளுக்கு இதத்தைச் செய்ய ஏற்பட்ட அரசைப் பெற்றவனிடத்தில் அவர்களை ஆளுந்தன்மை யில்லையெனில், நீர்கலந்த பால் எப்படிச் சுவையற்றதாய்விடுமோ,

அப்படியே அச்செயல் பயனற்றதாகிவிடும். இச்செயலால் எவ்வாறு பயனின்மை ஏற்படுகின்றதோ, அவ்வாறே, தீயினத்தாரைச் சேர்வோர்க்கும், விரியன் பெட்டையைக்கூடி உயிர்விடும் நாகத்தின்கதி சம்பவிக்கும். இவற்றால், கூடா நட்பால் தீமை விளையுமென்பது குறிப்பிடப்பட்டது. முன் இரண்டடிகளில் உள்ள உபமான உபமேயங்கள், பின் இரண்டடிகளிலுமுள்ள உபமான உபமேயங்களுக்கு உவமை யாயின. இவ்விரண்டும் தனித்தனி உவமையணி; இவ் விரண்டு வகைக்கு மிடையில் உவமையுருபு கொடாமல் இவற்றை நிறுத்தியது எடுத்துக்காட்டுவமையணியின் பாற்படும்; இவ்விரண்டும் கலந்திருப்பதால் கலவையணியு மாம். ஊராண்மை - ஊரை ஆளுந்தன்மை; அஃதுபகார குணம்; பலர்க்கும் உபகாரஞ்செய்து அவர்களைக் காப்பாற்று தலே ஊராளுந் தன்மையாதலின் அஃதுபகாரகுணமெனப் பட்டது. ''பேராண்மை யென்ப தறுக ணொன் றுற்றக்கா, லூராண்மை மற்றத னெஃகு'' என்னும் (திருக்குறள் 773-ஆம்) செய்யுளுரையில் பரிமேலழகர், ''ஊராண்மை- உபகாரியாந் தன்மை'' எனப் பொருள்கூறியிருத்தல் உய்த்துணர்க.

உரு-பெருமை; பின் ஆண்மை வருதல் நோக்கி அதற்கு, 'அரசாளும் பெருமை' எனப்பொருள் விரிக்கப் பட்டது. நாகம், விரியன் பெட்டையோடு சேர்ந்தால் சாகு மென்று உலகியலுணர்ந்தார் கூறுவர். ஊர்- இடவாகுபெயர். 'அளாயற்று, விட்டற்று' என்பவற்றுள் அகரந்தொக்கது; இவ்விரண்டும் துவ்விகுதி குறைந்து நின்ற ஒன்றன் பெயர்கள். இங்கு ஊர்வனவற்றிற் சேர்ந்த விரியனுக்கு, 'பெடை' என்னும் பெயர் கூறியது மரபு வழுவமைதியின் பாற்படும். 'விரியன்' என்பது அன் விகுதி குறைந்து, 'விரி' எனநின்றது. (கo)

3-வது

இன்பவியல்

'இன்பவியல்' என்பதற்கு, 'மகிழ்ச்சியைப்பற்றிய பிரிவு' என்பது பொருளாம்; அதாவது, மனிதரின் மனத்திற்கு இன்பமுண்டாகும் வகைகளைப் பற்றிக் கூறும்பாகமாம், அவ்வகைகள் இதில் அறிவுடைமை, அறிவின்மை, நன்றி யில் செல்வம் என்னும் மூன்று அதிகாரங்களால் கூறப்படு கின்றன; இவற்றுள் முதல் அதிகாரம் உடன்பாடாகவும், மற்றை இரண்டதிகாரங்களும் எதிர்மறையாகவும் அமைந்து அவற்றைக் கூறுவனவாம்; அறிவுடைமையால் இன்பமுண் டென்பதும், அறிவின்மை, நன்றியில் செல்வம் ஆகிய வற்றால் இன்பமில்லை யென்பதும் விளக்கப்படுகின்றன; இவற்றால் இன்பமுண்டாம் வகைகள் புலனாம். இங்கே, 'இன்பம்' என்பது அதற்குக் காரணமாகிய செயல், பொருள் களை யுணர்த்தி நின்றது. நட்பினர் துணையால் சிறந்த காரியங்களைச் செய்து இன்பமுறல் அமையும். ஆதலின், நட்பியலின்பின் இவ்வின்பவியல் வைக்கப்பட்டது.

அதிகாரம் 25

அறிவுடைமை

அறிவுடைமையாவது- அறிவுடையதன்மை; இஃது, அத்தன்மையோடு கூடிச் செய்யுங் காரியங்களை யுணர்த்தும்; இவ்வதிகாரம் அவற்றைக் கூறுவதாகலின் இப்பெயர் பெற்றது. 'கூடும் நட்பு இன்னது,' 'கூடாநட்பு இன்னது' என ஆராய்ந்து இன்பமடைதற்கு அறிவுடைமையே இன்றியமை யாததாகலின், இது, 'கூடாநட்பு' என்னும் அதிகாரத்தின்பின் வைக்கப்பட்டது. அறிவு- நன்மை தீமைகளைப் பகுத்துண ரும் ஞானம்; இஃதியற்கை யறிவோடு சேர்ந்த செயற்கை யறிவு; மனிதரால் விருத்தி செய்து கொள்ளக் கூடியது.

241. *பகைவர் பணிவிட நோக்கித் தகவுடையார்*
தாமேயு நாணித் தலைச்செல்லார் காணாய்
இளம்பிறை யாயக்காற் றிங்களைச் சேரா
தணங்கருந் துப்பி னரா.

(இ-ள்.) அணங்கு அரு- (பிறர் துன்பத்திற்கு) வருந்து தல் இல்லாத, துப்பின்- வலிமையையுடைய, அரா- (இராகு வென்னும்) கருநாகமும், (தனக்குப் பகையாகிய), திங்களை - சந்திரனை, இளம் பிறை ஆயக்கால்- இளம்பிறைச் சந்திரனா யிருக்கும்போது, சேராது- (வருத்துதற்கு அதனரு

கில்) போகமாட்டாது, (பூரணசந்திரனாயிருக்கும்போதே செல்லும்; ஆதலால், அதுபோல), தகவு உடையார் (அறிவு பெற்றிருத்தலாகிய நல்ல) தன்மையையுடையவர்கள், பகைவர்- எதிரிகளுடைய, பணிவு இடம் நோக்கி- தாழ்வாகிய நிலைமையைப் பார்த்து, (அவர்களை வெல்லது இழிவும் பாவமுமான காரியமென்று), தாமே- (தமக்குள்) தாங்களே, நாணி - (அதைச் செய்வதற்கு) வெட்கப்பட்டு, தலைச் செல்லார்- (வெல்வதற்கு) அவர்களிடம் போகமாட்டார்கள்; எ-று.

பிறர் வருந்துவதற்கு இரக்கப்படாத கரும் பாம்பும் தனக்குப் பகையாகிய சந்திரன் இளம்பிறையா யிருக்கும் போது, அதனை வெல்லுதல் தகுதியுடைய காரியமன்றென்று அதனிடம் போகமாட்டாது; அதைப்போல அறிவுடையார், பகைவர் தாழ்ந்திருக்கும் சமயத்தில் அவரை வெல்லுதற்கு அவரிடம் செல்லமாட்டார்கள் என்பது இதன் கருத்து. இதில் எடுத்துக்காட்டுவமையணி அமைந்துள்ளது.

பகைவர் தாழ்ந்திருக்கும் சமயத்தில் ஒருவர் அவரை வெல்லுதல் எளிதாம்; அப்படி வெல்வதில் அவர்க்கு ஒரு சிறப்பு மிராது; மேலும் அது பாவச்செயலுமாம்; அப்பாவச் செயலால் அவர்க்குத் துன்பமே யுண்டாகும்; ஆதலால் இச்செயலுக்கு அறிவுடையார் நாணுவர்; அவ்வெட்கத்தால் இதைச் செய்யவுமாட்டார். இச்செயலைச் சிறப்பித்தற் பொருட்டே, ''பிறர் வருத்தத்திற் கிரங்காத பாம்பும் இளம் பிறையாயக்கால் திங்களைச் சேராது'' என்றார் முனிவர்; 'அரா' என்பதில் இழிவு சிறப்பும்மை தொக்கது.

இவ்வாறு கூறியதனால், எதிரிகள் இளைத்திருக்கும் போது அவர்களைத் துன்புறுத்தல் இழிவாகிய பாவச்செயலென்பதும், அப்பாவத்தால் துன்பமுண்டாமென்பதும், அவ்வெதிரிகள் நல்ல நிலைமையிலிருக்கும்போது அவர்களை வெல்வதே புகழுக்கும், இன்பத்திற்கும் ஏதுவான

செய்கையா மென்பதும், அஃதறிவுடைய செய்கையா மென்பதும் பெறப்படும்.

மேல்நாட்டார் ஆராய்ச்சியின்படி சூரியகிரகண காலத்தில், சந்திரனது சாயை சூரியமண்டலத்தை மறைக்கும்; சந்திர கிரகண காலத்தில் பூமியின் சாயை சந்திர மண்டலத்தை மறைக்கும்; இவ்வாறு சூரியனை மறைக்கும் சாயையைக் கேதுவென்னும் செம்பாம் பென்றும், சந்திரனை மறைக்கும் சாயையை இராகுவென்னும் கரும்பாம்பென்றும், இவை, சூரிய சந்திரர்களோடு தமக்கேற்பட்ட பகையால் அவர்களை வருத்துகின்றனவென்றும் சைவ வைஷ்ணவ புராணங்கள் கூறும். தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்து அமுதமெடுத்த காலத்தில், மகாவிஷ்ணு, தேவர்களை ஒருபக்கத்தில் வேறாகவைத்து அவர்களுக்கதனைப் பகிர்ந்துகொடுக்க, ஓரசுரன் சூரிய சந்திரர்களுக்கு நடுவில் தேவவடிவெடுத்து வந்து கையேந்த, அவனைச் சூரியசந்திரர் திருமாலுக்குணர்த்த, அவர் அவனைத் தலைவேறு உடல் வேறாகும்படி சிதைக்க, அவன் இராகு, கேது என்னும் இரண்டு கிரகங்களாயினானென்பதும், அவ்விரண்டும் சூரிய சந்திரர்க்கு மேற்கூறிய காரணத்தாற்பகையாயினவென்பதும் புராணிகர் கூற்றுக்களாம். இந்த இராகு கேதுக்களை மேல்நாட்டுக் கொள்கையைத் தழுவிச் சற்று பேதப்படுத்தி சாயாக் கிரகங்களென்றும், அவை சந்திர சூரியரை மறைக்குமென்றும் ஜைன நூல்கள் கூறும். இக்கொள்கைப்படியே திருத்தக்கதேவர் சிந்தாமணி (முத் - 12-ஆம்) செய்யுளில், ''நாகத்தால் விழுங் கப்பட்ட நகைமதிக்கடவுள்'' என்று கூறியிருக்கின்றார்; இதற்கு நச்சினார்க்கினியர்; ''பாம்பாலே தனதொளி மறைக்கப்பட்ட மதி'' என்ற பொருள் கூறியிருக்கின்றார். எனினும், 'பிறநூன் முடிந்தது தானுடன் படுதல்'' என்ற விதிப்படி ஜைனமுனிவர், இதில், பிறர் கொள்கையை ஒப்புக்கொண்டு கூறியிருக்கின்றார். இங்குக் கூறியபடி கரும்பாம்பாகிய இராகு சந்திரனை மறைப்பதென்பதும், செம்பாம்பாகிய கேது சூரியனை மறைப்பதென்பதும்,

''மதியுணு மிராகு நாம மற்றது தமம் கறுப்பாம்
அதிகமாங் கேது செம்மை சிகிகதிர்ப்
பகையு மாமே''

என்னும் (சூடா-நி.தெய்வ-63-ஆம்) செய்யுளின் பின் இரண்டடிகளானும் ஐயமற விளங்கும். இந்த பேதம் உணர்தல் இன்றியமையாததாம்.

தகவு-தன்மை; இஃதிங்கு அறிவோடு கூடியிருத்தலாகிய நற்றன்மையை விளக்கி நின்றது. தாமேயும் - உம்மை- அசை. தலை-இடப்பொருளுணர்த்தி நின்றது. காணாய்- ஏவற்பொருள் தராது நின்றதோர் அசை; 'கண்டீர்' என்பது போன்றது; சீவகசிந்தாமணி- முத்- 2623-ஆம் செய்யுளுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர், ''கண்டீர்- வினாவொடு சிவணாது நின்ற தோரசை'' என்று கூறியிருத்தல் காண்க. இனி, 'காணாய்' என்பதற்கு, 'மனமே! நீ பார்' என்று பொருள் கோடலுமொன்று; இங்ஙனங் கொள்ளுமிடத்து முனிவர் தம் மனத்தை நோக்கிக்கூறி மற்றையரும் இங்ஙனம் கூறி மனத்திற் கறிவுறுத்துமாறு விளக்கினாரெனத் துணிதல் வேண்டும். அணங்கு- தல்லீறு, அல்லது அல்லீறு கெட்ட முதனிலைத்தொழிற் பெயர். (க)

242. *நளிகடற் றண்சேர்ப்ப நல்கூர்ந்த மக்கட்*
கணிகல மாவ தடக்கம்- பணிவில்சீர்
மாத்திரை யின்றி நடக்குமேல் வாழுமூர்
கோத்திரங் கூறப் படும்.

(இ-ள்.) நளி- செறிந்த, (அதாவது, ஆங்காங்கே நெருங்கி யிருக்கின்ற), தண்- குளிர்ச்சிபொருந்திய, கடல் சேர்ப்ப- கடற்றுறை முகங்களையுடைய பாண்டியனே! நல்கூர்ந்தமக்கட்கு- வறுமை யடைந்த மனிதர்க்கு, அணிகலம் ஆவது- அணியத்தக்க ஆபரணமாவது, அடக்கம்- அடங்கி யிருப்பதேயாம், (ஒருவன்), பணிவுஇல் சீர்- அடக்கமற்ற

தன்மையுடனே, மாத்திரைஇன்றி - (தனக்குத் தகுந்த) அளவில்லாமல், (அதாவது, வரம்புகடந்து), நடக்குமேல்- நடப்பானாயின், வாழும்ஊர்- அவன் வாழ்கின்ற ஊரிலுள்ளவர்களால், கோத்திரம் - (அவனுடைய) குலம், (அதாவது, மரபின் இயற்கையானது), கூறப்படும் - (மிகத் தாழ்ந்த தென்று) இழித்துச் சொல்லப் படும்; எ-று.

வறுமையடைந்தவர்க்கு அணியத்தக்க ஆபரணம் அடக்கமாம்; அவ்வாறு ஒருவன் அடக்கமின்றி வரம்புகடந்து நடப்பனானால் அவனுடைய குடிப்பிறப்பானது மிகத் தாழ்ந்ததென்று அவன் வாழும் ஊராரால் பழிக்கப்படும் என்பது இதன் கருத்து.

இதனால், மனிதர்க்குத் தரித்திரம் வந்த காலத்தில் அதற்குத் தக்கபடி அவர் அடங்கியிருக்க வேண்டுமென் பதும், அப்படியிருந்தால் மாத்திரமே பலராலும் ஆதரிக்கப் பட்டு வாழமுடியுமென்பதும், அதனால் இன்பமடையலா மென்பதும், அடக்கமில்லாவிடில் பலராலும் இகழப் பட்டுத் துன்புறுவரென்பதும் விளக்கப்பட்டன. இவற்றைக் கொண்டு அடங்கியிருத்தல் இன்பத்திற் கேதுவாம் அறி வுடைமையென்ப துணரப்படும். இதில், அடக்கம் எல்லோ ருக்குமே இன்றியமையாத தெனினும், வறுமைப்பட் டார்க்கு அவசியம் வேண்டுமென்பது கூறப்பட்டது. பொது வாக அடக்கம் எல்லோருக்கும் நன்மை பயக்குமென்பது,

''அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்''

என்னும் (திருக்குறள்-121-ஆம்) செய்யுளானுணரப்படும். நளி- செறிவு' என்னும் பொருள்தரும் உரிச்சொல்; இது,

''நளியென் கிளவி செறிவு மாகும்''

என்னும் (தொல்-சொல்-உரி-27-ஆம்) சூத்திரத்தா லுணரப்படும்; செறிவாவது- நெருக்கம்; இந்நெருக்கம் கடற்றுறை முகங்களுக்குக் கூறப்பட்டது; பாண்டி நாட்டி லுள்ள கடலில் பற்பல துறைமுகங்கள் பண்டைக்காலத்தில் ஆங்காங்கே பல நகரங்களில் நெருங்கியிருந்தன வென்பது நூல்களாலுணரலாம்; இனி 'நளிசேர்ப்ப' என்பதற்கு, கப்பல்களும், ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களும், மனிதர் கூட்டமும் 'செறிந்த துறைமுகம்' எனலுமாம். ''இயல்பினும் விதியினும்....'' என்னும் (நன்-உயிரீற்றுப்பு புணரியல்- 15-ஆம்) சூத்திர விதியால் நளிகடல்- என்பதில் வலிமிகாதியல்பாயிற்று. ஊர்- இடவாகுபெயர். ஊர் கூறப்படும்- மூன்றாம் வேற்றுமை தொகை. கோத்திரம் - வடசொல். இங்கே கோத்திரம்- சாதியன்று; ஓர் குடிவழி. (உ)

243. *எந்நிலத்து வித்திடினுங் காஞ்சிரங்காழ் தெங்காகா*
தென்னாட் டவரும் சுவர்க்கம் புகுதலால்
தன்னாற்றா னாகு மறுமை வடதிசையுங்
கொன்னாளர் சாலப் பலர்.

(இ-ள்.) எந்நிலத்து- எந்த நிலத்திலே, வித்து இடினும்- ஒருவிதையைப் போட்டாலும், (அதற்குரிய மரம் முளைக்குமே யன்றி நிலத்தின் பேதத்தால்), காஞ்சிரங்காழ் - (ஓரிடத்திற் போடப்பட்ட) காஞ்சிரம் விதையானது, தெங்குஆகா- தென்னமரமாகாது, (இதைப்போல மனிதர் தாங்கள் வாழும் இடபேதத்தால் உயர்பதவியையோ, தாழ்பதவியையோ அடைதல் இல்லை), (சிலர் தென் னாட்டார் சுவர்க்கம் பெறார், வடநாட்டார் சுவர்க்கம் பெறுவர் என்று சொல்கின்றனர்; அங்ஙனம் கூறினும் தென்னாட்டினர் பலர் சுவர்க்க மடைகின்றனர்; வட நாட்டினர் அடையாதிருக்கின்றனர்; அங்ஙனம்) தென் நாட்டவரும்- தெற்குப்பக்கத்திலிருக்கின்ற நாட்டிலுள்ளவர் களும், சுவர்க்கம் புகுதலால்- சவர்க்கலோகத்தை அடைவத னாலே வடதிசையும்- வடக்குத் திக்கிலும், கொன்ஆளர்-

(நற்கதிபெற முயற்சியாமல்) வீண்காலம் கழிப்பவர், சால பலர்- மிகுதியாகப் பலர், (உண்டு ஆதலால்), மறுமை- (ஒருவனுக்கு) மறுமை அனுபவமானது, தன்னால்தான் ஆகும் - தனது முயற்சியினாலேதான் உண்டாகும்; எ-று.

எந்த நிலத்தில் எந்த வித்தைப் போட்டாலும் அந்த வித்துக் குரிய மரம் தோன்றுமேயன்றி, நிலத்தின் பேதத்தால் எட்டிவிதை தென்னமரமாய் விடாது; இதைப்போல் மனிதர் தாங்கள் வசிக்கின்ற இடபேதத்தால் எக்கதியையும் அடைந்துவிட மாட்டார்கள்; சிலர் தென்னாட்டினர்க்குச் சுவர்க்கமில்லை, வடநாட்டார்க்குண்டென்று கூறியிருக் கின்றனர்; அவ்வாறு கூறினும் தென்னாட்டிலுள்ளாரும் தம்முயற்சியால் சுவர்க்கலோக பதவியை அடைகின்றனர்; வடநாட்டிலுள்ளாரும் அம்முயற்சியற்று, அதனையடையா திருக்கின்றனர்; ஆதலின், மனிதனுக்கு மறுமைக்கதி ஏற்படு வது அவனுடைய முயற்சியினாலேயே உண்டாகும் என்பது இதன் கருத்து.

இதனால் மனிதர் எங்கிருப்பினும் நற்கதியடைதற் கேற்ற முயற்சியைச் செய்தலே அறிவுடைமை யென்பதும், அதுவே இன்பத்திற் கேதுவாமென்பதும் விளக்கப்பட்டன.

தென்றிசை இராக்கதர் இருப்பிடமாதலின், அது பாவ பூமியென்பதும், வடதிசை தேவர் முனிவர்க்குரியதாதலின் அது புண்ணிய பூமியென்பதும் சிலருடைய கொள்கை; இது,

''தென்றிசைப் புலையன் வடதிசைக் கேகின்
பழுதற வோதிப் பார்ப்பா னாவான்
வடதிசைப் பார்ப்பான் தென்றிசைக் கேகின்
நடையது கோணிப் புலைய னாவான்''

என்ற கபிலரகவல் அடிகளால் உணரப்படும். இக்கோட்பாடு சரியானதன்று; மனிதர் எங்கிருப்பினும் அவரவர் அறிவுக்

கும், செய்கைக்கும் தக்கவாறு மறுமைப்பயனை அடைவார்களென்பது ஜைனர் கொள்கையாதலின், முனிவர் இதனை இச்செய்யுளால் மறுத்துக் கூறினார். 'காங்சிரங்காழ் தெங்காகா' என்பதற்கிணங்க, ''ஆமணக்கு நட்டு ஆச்சாவாக்கலாகாது'' என்னும் பழமொழி சிந்தாமணி உரையில் நச்சினார்க்கினியரால் எடுத்துக்கூறப்பட்டிருக்கிறது. கொன்- பயனின்மை என்னும் பொருள் தரும் இடைச் சொல்; அதனை ஆள்பவர், 'கொன்னாளர்' எனப்பட்டார். காழ்- பால்பகாவஃறிணைப் பெயர், ஆதலின், 'ஆகா' என்னும் பன்மை முடிபைக் கொண்டது. தென்னாட்டவரும் என்பதிலுள்ள உம்மை- எதிரது தழுவிய எச்சப்பொருளதாம்; இழிவு சிறப்புப் பொருளதுமாம். 'வடதிசையும்' என்பதன் உம்மை- இறந்தது தழுவியது; உயர்வு சிறப்புப் பொருளதுமாம். வித்திடினும்- என்பதன் உம்மை- இழிவு சிறப்புப் பொருளது.

244. வேம்பி னிலையுட் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதுந் திரியாதாம் - ஆங்கே
இனந்தீ தெனினு மியல்புடையார் கேண்மை
மனந்தீதாம் பக்க மரிது.

(இ-ள்.) வாழை வாழைப்பழமானது, வேம்பின் இலையுள்- வேம்பின் இலைகளுக்கிடையில், (போடப் பட்டு), கனியினும் - பழுத்தாலும், தன் தீம்சுவையாதும்- தன்னுடைய தித்திப்பாகிய உருசி சிறிதும், திரியாதுஆம்- மாறுபடாதாம், ஆங்கே - அதைப்போலவே, இயல்பு உடையார்- (நல்லறிவோடு கூடிய) இயற்கையுடையாரது, கேண்மை இனம் தீது எனினும் - நட்பாகிய கூட்டம் தீமையுடையதாயிருப்பினும், மனம்- அந்நல்லியல்புள்ளாரது மனமானது, தீதாம்பக்கம்- கெட்டதாகும் தன்மை, அரிது- இல்லை; எ-று.

வாழைப்பழம் வேப்பிலைக்குள்ளிருந்து பழுத்தாலும் தன் இனிய சுவை சிறிதும் மாறுபடாததுபோல, நல்லறிவுடையார் தீய நட்பினர் கூட்டத்திற் சேர்ந்திருப்பினும் அவர் மனம் நல்ல இயற்கையிலிருந்து மாறிக் கொடியதாகி விடாது என்பது இதன் கருத்து.

கெட்ட சிநேகிதரோடு கூடியிருப்பினும் தங்கள் மனத்தைக் கேடானவழியிற் செலுத்தாதிருப்பவரே அறிவுடையாரென்பதும், அவ்வறிவுடைமையே இன்பத்திற் கேதுவா மென்பதும் இதிற் கூறப்பட்டன. இதனால், ஒவ்வொருவரும் இனிமையையடைய வேண்டுமானால், கெட்ட நட்பாளரோடு சேரினும் நற்குணத்தினின்றும் மாறுபடாதிருக்க வேண்டுமென்பது குறிக்கப்பட்டது.

வாழைக்காய்கள் முதிர்ந்து பழுக்கும் பருவம் அடைந்தவுடன் வியாபாரிகள் அவற்றைக் குலையுடன் வெட்டிக்கொண்டு வந்து பூமியில் மண்ணாற் செய்யப்பட்ட கூண்டுக்குள் போட்டு வாழைச்சருகு, வேப்பிலை முதலிய வற்றை மேலே பரப்பிப் புகைமூட்டி வைத்தூதி உள்ளே புகையைச் செலுத்தி மூடிப் பழுக்கவைப்பது வழக்கம்; சிற்சிலவிடங்களில் புகை செலுத்தாமல் மேற்கூரிய சருகு, இலை முதலியவற்றிலிட்டுப் பழுக்க வைத்தலுமுண்டு; விரைவிற் பழுத்தற்பொருட்டுப் பெரும்பான்மையும் வேப்பிலையில் வாழைக்காயைச் சேர்த்து மூடி வைப்பதுண்டு; ஆதலின், இங்கு, ''வேம்பினிலையுட் கனியினும்'' என்றார் முனிவர். இதில், 'ஆங்கு' என்னும் உவம உருபை இடையில் விரித்து உபமான உபமேயங்கள் கூறப்பட்டிருத்தலின் இஃதுவமையணி. வாழை- முதலாகு பெயராய் அதன் பழத்தையுணர்த்திற்று. தீம்- சுவைக்குணப் பெயர்; இதனடியாகப் பிறக்கும் பெயரெச்சம், 'தீவிய' எனவரும். 'கனியினும்' என்பதன் உம்மை- இழிவு சிறப்பு. 'இனம்' என்பதைக் கேண்மையொடு கூட்டி, 'கேண்மை இனம்' என முடிக்க. இயல்பு - நற்றன்மையை உணர்த்தி நின்றது. 'வாழை

தன் தீஞ்சுவை யாதுந்திரியாது' என்பதில் சினைவினை முதலொடு முடிந்தது. (ச)

245. *கடல்சார்ந்து மின்னீர் பிறக்கு மலைசார்ந்தும்*
உப்பீண் டுவரி பிறத்தலாற் றத்தம்
இனத்தனைய ரல்ல ரெறிகடற்றண் சேர்ப்ப
மனத்தனையர் மக்களென் பார்.

(இ-ள்.) எறி- அலைகளை வீசுகின்ற, கடல்- கடலினது, தண்- குளிர்ச்சி பொருந்திய, சேர்ப்ப- துறையை யுடைய பாண்டியனே!, கடல் சார்ந்தும்- (உப்புச்சுவை பொருந்திய) கடலை அடுத்தும், இன்நீர் - இனிய சுவையுள்ள தண்ணீர், பிறக்கும் - உண்டாகும், மலைசார்ந்தும் - (இனிய அருவிநீர் பாயக்கூடிய) மலையை அடுத்தும், உப்பு ஈண்டு - உப்பு நிறைந்த, உவ்ரி பிறக்கும் - உவர்நீர் உண்டாகும், (இவ் வாறு இவை), பிறத்தலால் - உண்டாவதனாலே, (அதாவது, இவை இவ்வாறுண்டாவது இயற்கையாயிருத்தலினாலே, இவைபோல), மக்கள் என்பார் - மனிதர் என்று சொல்லப்படு கிறவர்கள், தம்தம்- தங்கள் தங்களுடைய, இனத்து அனையர் அல்லர் - சேர்க்கையான மனிதரை யொத்தவராக மாட்டார் கள், மனத்து அனையர்- தங்கள் தங்கள் மனத்தைப்போன்ற அறிவுடையவராவர்; எ-று.

உவர்க்கடலினருகே நல்ல நீருமுண்டாகும்; இனிய அருவிநீர் பாயக்கூடிய மலையருகில் உவர்நீரும் உண்டாகும்; இவை இடங்களின் சேர்க்கையால் இவ்வாறுண்டாக வில்லை; தம் குணவியற்கையின்படியே உண்டாகின்றன; எவ்வாறெனில், ''நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க், கினத்தியல்ப தாகுமறிவு'' என்ற (திருக்குறள்-452-ஆம்) செய்யுளின்படி நிலவிசேடத்திற்குத் தக்கபடி நீரின் குணம் பொதுவாக மாறுபடுவது இயற்கையெனினும் பரிசுத்தத் தன்மை மிகுந்த நீர், தான் உற்பத்தியாகும் கெட்டவிடத்தை

யும் பரிசுத்தமாக்கி நல்லியற்கையுடனிருக்கும்; உவர் முதலிய அசுத்தம் அதிகரித்த நீர், தான் உற்பத்தியாகும் நல்ல இடத்தையும் அசுத்தமாக்கித் தானும் அசுத்தமாகவேயிருக் கும்; இவற்றைப் போலவே மனிதரும், மேற்கூறிய குறளின் படி பொதுவாக இனச்சேர்க்கையால் குணம் மாறுபடக் கூடியவர்களாயிருப்பினும் நல்லறிவு அதிகரித்தவர் கெட்ட வர்களோடு சேர்ந்தாலும் தங்கள் நற்குணம் கெடாமல் அவரையும் நல்லவராக்கிக் கொண்டிருப்பர்; கெட்டகுணம் அதிகரித்தவர்கள் நல்லவர்களோடு சேர்ந்தாலும் தம் மியற்கை மாறுபடாதிருப்பதோடு அவரையும் கெட்டவ ராக்கிக் கொண்டிருப்பர்.

இங்ஙனம் கூறியதனால், மனிதர், கெட்ட இனத் தாரோடு சேர்ந்தாலும் மாறுபடாதிருக்கும் அறிவை வளர்க்க வேண்டுமென்பதும், அங்ஙனம் வளர்த்துத் திடஞானத்தைப் பெறுதலே அறிவுடைமையென்பதும், அவ்வறிவுடை மையே இகத்திலும் பரத்திலும் இன்பமடைதற் கேதுவா மென்பதும் உணர்த்தப்பட்டன.

'கடல் சார்ந்தும்' என்பதன் உம்மை- இழிவு சிறப்புப் பொருளது; மலைசார்ந்தும்' என்பதிலுள்ள உம்மை- உயர்வு சிறப்புப் பொருளது, சேர்ப்பு- தொழிற்பெயர்; 'சேர்த்தல்' என்று பொருள்படும்; இது, தொழிலாகு பெயராய்க் கப்பல் களையும், பல பொருள்களையும் சேர்த்தலையுடைய துறை முகத்தை யுணர்த்திற்று. 'பிறக்கும்' என்ற ஒன்றன்பால் வினைமுற்று இரண்டிடங்களினும் கூட்டிப் பொருளுரைக் கப்பட்டது. இச்செய்யுள் ஏதுவணி இமைந்தது. (ரு)

246. *பராஅரைப் புன்னை படுகடற்றண் சேர்ப்ப*
ஒராஅலு மொட்டலுஞ் செய்பவோ நல்ல
மரூஉச்செய்தி யார்மாட்டுந் தங்கு மனத்தார்
விராஅ அய்ச் செய்யாமை நன்று.

(இ-ள்). பருஅரை- பருத்த அரையையுடைய, புன்னை- புன்னைமரங்கள், படு-உண்டாய்ப் பொருந்திருக் கின்ற, தண்- குளிர்ந்த, கடல்சேர்ப்ப- கடற்றுறையையுடைய பாண்டியனே!, தங்கும் மனத்தார்- (நன்மார்க்கத்தில்) பொருந்தும் மனத்தையுடையவர், நல்ல- நன்மையாகிய, மரூஉ செய்தி - நட்பாகப் பொருந்திய செய்கையையுடைய, யார்மாட்டும் - எவர்களிடத்திலும், ஒராஅலும்- (முதலில் உறவாகிப்பிறகு) நீங்குதலும், ஒட்டலும்- (மீண்டும்) சேர்தலும், செய்பவோ- (செய்வார்களோ?, (செய்ய மாட் டார்கள்) (ஆதலின், அவ்வாறு செய்வதைக்காட்டினும்), விராய்- (எவரோடும்) கலந்து, செய்யாமை- (சிநேகம்) செய்யாதிருப்பது, நன்று- நன்மையாம்; எ-று.

நன்மார்க்கத்தில் பொருந்தும் மனத்தையுடையவர், நட்பாகப் பொருந்திய எவர்களிடத்திலும் முதலிற் சிநேகஞ் செய்து பிரிதலும், பின் கூடுதலும் செய்ய மாட்டார்கள்; ஆதலின், அவ்வாறு செய்வதைக் காட்டிலும், ஒருவரோடு எப்பொழுதுமே கலந்து சிநேகஞ் செய்யாதிருப்பது நல்லறி வுடைமை என்பது இதன் கருத்து.

எவருடனும் சிநேகம் செய்துவிட்டுப் பின்பு பிரிதல் துன்பத்திற்கேதுவாம்; அவ்வாறே அவர் கெட்டவரென்று தெரிந்து பிரிந்தபின் அவரைக் கூடினும், அவருடைய கெட்ட செயலால் தீமை ஏற்படுமாதலின், அதுவும் துன்பத்திற் கேதுவாம்; ஆதலின் ஒருவரை நன்றாக ஆராய்ந்து அவர் நல்லவரென்று தெரிந்தபின் அவரோடு சிநேகஞ் செய்ய வேண்டும்; அவ்வாறு செய்தபின், அவர் ஒருசமயம் தவறிழைப்பினும் அதைப் பொறுத்துக்கொண்டு அவ ருடைய சிநேகத்தை விடாதிருக்க வேண்டும்; இவ்வாறின்றி ஒருவரோடு கூடிப்பிரிவதும், பிரிந்து கூடுவதும் செய்வது கூடாது; அவ்வாறு செய்வதைக் காட்டினும் எவருடனும் சிநேகஞ் செய்யாதிருப்பது அறிவுடைமை என்பன இச் செய்யுளால் விளக்கப்பட்டன. இவ்வறிவுடைமையால்

இன்பமுண்டாமென்பது தானே அமையும்.

பரு+ அரை- பாரரை; பாரரை- பண்புத்தொகை; அரை- மரத்தின் வேருக்கும் கிளைக்கும் இடையிலுள்ள மத்தியபாகம்; இது நடுவிலிருப்பதாதலின், 'அரை' எனப் பட்டது; இது மரங்களின் பேதத்துக்குத் தக்கபடி கோழரை, பொகுட்டரை, பொரியரை, முள்ளரையென நான்கு வகை யாக நூல்களிற் கூறப்படும். அவைபோல இங்குப் பருத்த அடியை, 'பராரை' என்றார் முனிவர். புன்னை- நெய்தனிலக் கருப்பொருள்களுளொன்று. ஓராஅலும், ஒட்டலும் என்ப வற்றின் உம்மைகள் எண்ணுப் பொருளன. 'யார்மாட்டும்' என்பதன் உம்மை- முற்றுப் பொருளது. இதில் எல்லா வடிகளினும் எதுகையில் அளபெடை வந்தது- அளபுத் தொடை; மூன்றாமடியிலுள்ள அளபெடை- இன்னிசையள பெடை. இச்செய்யுளின் கருத்தே இந்நூலின் 168-ஆம் செய்யுளிலும் அமைந்திருத்தல் உணர்க. (கூ)

247. *உணர வுணரு முணர்வுடை யாரைப்*
புணரப் புணருமா மின்பம்- புணரின்
தெரியத் தெரியுந் தெரிவிலா தாரைப்
பிரியப் பிரியுமா நோய்.

(இ-ள்.) உணர- (நன்மை தீமைகளைப் பகுத்து) உணர்தற்கு, உணரும்- (தகுந்த மார்க்கங்களை) அறிந்திருக் கும், உணர்வுடையாரை- அறிவுடையவர்களை, புணர- சேர்தலால், இன்பம் புணரும்- இன்பம் சேரும், தெரிய- (நன்மை தீமைகளைப்பகுத்து) உணர்தற்கு, தெரியும்- (ஏற்ற மார்க்கங்களை) அறிகின்ற, தெரிவு இலாதாரை- உணர்ச்சி யில்லாதவர்களை, புணரின் - (ஆராயாமல்) சேர்ந்தால், ஆம் நோய் - துன்பமுண்டாம், பிரிய - (முன்னரே அவர் தன்மையை ஆராய்ந்து அவரோடு சேராமல்) நீங்க, நோய்- (அவரால் நேரவிருந்த) துன்பமானது, பிரியும்- வந்து சேராமல் நீங்கிவிடும்; எ-று.

நன்மை தீமைகளைப் பகுத்துணரும் அறிவுடை யாரைச் சேர்ந்தால் இன்பமுண்டாகும்; அவ்வறிவில்லா தாரைச் சேர்ந்தால் துன்பமுண்டாகும்; ஆதலால், அவர் தன்மையை ஆராய்ந்து முன்னரே அவரோடு சிநேகங் கொள்ளாமல் நீங்கிவிடின் அத்துன்பம் வராதென்பது இதன் கருத்து.

நல்லாரோடு சேர்தல் இன்பம், தீயாரோடு சேர்தல் துன்பம், கெட்டவரோடும் கூடிப் பிரிதல் துன்பம்; ஆதலின், முன்னரே ஆராய்ந்து நல்லாரோடு சேரவேண்டு மென்பதும், தீயாரோடு சேரலாகா தென்பதும், இச்செயல்களைக் கொண்டிருத்தலே அறிவுடைமையென்பதும் இதில் விளக்கப்பட்டன.

'புணருமாம்' என்பதிலுள்ள, ஆம்- அசை. ஆம் நோய்- என்பதை, நோய் ஆம் என மாற்றிப் பொருள்கொள்க. 'நோய்' என்பது, பொருண்முடிபுக்கேற்ப இரண்டிடங் களினுங் கூட்டப்பட்டது. இதில் அடிதோறும்வந்த சொல்லும் பொருளும் பின்னும் வந்தது சொற்பொருட் பின் வருநிலையணியாம். (எ)

248. *நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை*
நிலைகலக்கிக் கீழிடு வானும்- நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்.

(இ-ள்.) தன்னை நல்நிலைக்கண்- தன்னை நல்ல நிலையிலே, நிறுப்பானும் - நிறுத்துகின்றவனும், தன்னை நிலைகலக்கி - தன்னை (தான் நின்ற உயர்ந்த) நிலையி னின்றும் கலங்கவைத்து, கீழ் இடுவானும்- தாழ்ந்த நிலை யிற் சேர்ப்பவனும், நிலையினும் - தான் நின்ற உயர்ந்த நிலையைக் காட்டினும், மேல் மேல்- மேலும் மேலும்,

உயர்த்து- உயர்த்தி, நிறுப்பானும் - நிற்கச் செய்பவனும், தன்னை தலைஆக செய்வானும் - தன்னைப் (பலருள்ளும்) முதன்மையானவனாயிருக்குபடி செய்பவனும், தான்- (ஒருவன்) தானேயாவான்; எ-று.

தன்னை நன்னிலையில் நிறுத்துவோனும், தாழ்ந்த நிலையிலிருத்து வோனும், தன்னுடைய நல்ல நிலை யிலிருந்து மேலும் மேலும் தன்னை உயர்த்திக் கொள் வோனும், தன்னை எல்லோருள்ளும் தலைமையாயிருக் கும்படி செய்பவனும் ஒரு மனிதன் தானேயாவன் என்பது இதன் கருத்து.

ஒருமனிதன் அறிவுள்ளவனாயிருந்தால் தன்னை உயர்ந்த நிலையில் வைத்துக் கொள்வான்; அறிவற்றவனா யிருந்தால் தாழ்ந்த நிலைமையை அடைவானென்பது இதனால் விளக்கப்பட்டது. இதில் மனிதன் தன்னை உயர்த்திக்கொள்ளும் மார்க்கத்தைத் தேடிக்கொள்ளுதலே அறிவுடைமை யென்பது குறிப்பிடப்பட்டது.

தான்- இருதிணைக்கும் பொதுவான ஒருமைப்பாற் பெயர்; ''தானென்கிளவி யொருமைக்குரித்தே'' என்னும் (தொல்-சொல்-பெய-31-ஆம்) சூத்திரத்தாலிது துணியப் படும். இஃதிங்கு ஆண்பாலொருமையை விளக்கி நின்றது; இதனோடு இரண்டனுருபாகிய, ஐ- புணர, ''தான் தாம் நாம் முதல் குறுகும்.....'' என்ற (நன்-எழுத்-உருபு-பு-8-ஆம்) சூத்திரவிதிப்படி இது முதல் குறுகி, 'தன்னை' என்றாயது. 'நிலையினும்' என்பதன் உம்மை- உயர்வு சிறப்புப் பொருள தாகவேனும், அசைநிலையதாகவேனுங் கொள்ளப்படும். மற்ற நான்கும்மைகளும் எண்ணுப் பொருளன. தன்னை நிறுப்பான், இடுவான், உயர்த்து நிறுப்பான், செய்வான் ஆகிய நான்கும் எழுவாய்; 'தான் என்னும் பயனிலை கொண்டு முடிந்தது. (அ)

249. *கரும வரிசையாற் கல்லாதார் பின்னும்*
பெருமை யுடையாருஞ் சேறல் - அருமரபின்
ஓத மாற்று மொலிகடற் றண்சேர்ப்ப
பேதமை யன்ற தறிவு.

(இ-ள்.) அருமரபின்- (பிறர்பெறுதற்கு) அரியதாகிய பாண்டிய பரம்பரையி லுதித்தவனும், ஓதம்- அலைகள், அரற்றும்- இரைச்சலிடுகின்ற ஒலி- ஒலியையுடைய, தண்- குளிர்ச்சி பொருந்திய, கடல் சேர்ப்ப - கடற்றுறையையுடைய வனுமாகிய அரசனே!, கருமம் வரிசையால்- காரியக் கிரமத் தினாலே,(அதாவது, காரியம் முடிக்கவேண்டிய முறை மையை அனுசரித்து), கல்லாதார் பின்னும் (நல்ல நூல் களைப்) படிக்காத மூடர்களுக்குப் பின்னாலும், பெருமை உடையாரும்- (புத்தியாற் சிறந்த) பெருமையுடையவர் களும், சேறல்- செல்லுதல், பேதைமை - மிகப்பேதைமை யாம், அது அறிவு அன்று- அஃதறிவுடைமையன்றாம்; எ-று.

கல்வி யறிவில்லாத மூடர்களுக்குப் பின்னே, காரியங் கருதிக் கல்வி யறிவிற் சிறந்த பெரியார் செல்லுதல் மிக இழிந்த செய்கை; அஃதறிவுடைமையாகாது என்பது இதன் கருத்து.

கல்வி யறிவில்லாதவர், நன்மை தீமைகளை உணர்ந்து, செய்யத்தக்கதைச் செய்யமாட்டார்கள்; செய்யத் தகாத காரியங்களையே செய்வர்; அதனால், அவர் பின் செல்வார்க்கு எப்பொழுதும் துன்பமே யுண்டாகும்; பெருமையுடையார் அவர் பின்செல்லின் அப்பெருமை முழுவதுமழியும்; ஆதலின், காரியங்குறித்தேனும் பெருந் தன்மையுடையார் அவர்பின் செல்லுதல் பேதைமை யென்றும், அறிவுடைமையன்றென்றுங் கூறினார் முனிவர். அவர்பின் எக்காரணத்தை முன்னிட்டும் செல்லாதிருத்தலே அறிவுடைமை யென்பது இதில் விளக்கப்பட்டது.

இனி, ''சேறல்..... பேதமையன்றததறிவு'' என்பதற்கு, ''காரியத்தின் பொருட்டுச் செல்லுதல் பேதைமையாகாது; அஃததறிவுடைமையாகும்'' என்று பொருள் கூறுவாருமுளர். கல்லாத மூடர் மிகத்தாழ்ந்தவரென்பதும், சுயநலங்கருதி ஒருவர் அவர்பின் இச்சகம் பேசித்திரிதல் இழிந்த செய்கையென்பதும் நீதி நூல்களிற் கூறப்பட்டிருத்தலின் அவ்வுரை அத்துணைச் சிறப்புடையதன்றாம். காரியம் முடிப்போர் முடியுமளவு மவரிடமிருந்து முடிந்தபின் நீங்குதல் முறையேயன்றி அவர்க்குத் தாழ்ந்து பின்சென்று வயிற்றை வளர்ப்பது முறைமையாகாது.

'கல்லாதார் பின்னும்' என்பதிலுள்ள உம்மை-இழிவு சிறப்பு; 'பெருமையுடையாரும்' என்பதிலுள்ள உம்மை-உயர்வு சிறப்பு; இவ்விரண்டும் அசையெனினுமாம். சேறல்-தொழிற்பெயர்; செல்-பகுதி, தல்- தொழிற்பெயர் விகுதி, முதனீட்சி - விகாரம். 'அருமரபின்' என்பது, பாண்டியனுக் கடை.

250. *கருமமு முள்படாப் போகமுந் துவ்வாத்*
தருமமுந் தக்கார்க்கே செய்யா- வொருநிலையே
முட்டின்றி மூன்று முடியுமே லஃதென்ப
பட்டினம் பெற்ற கலம்.

(இ-ள்.) கருமமும் உள்படா- (இன்பத்திற்கேதுவான) காரியங்களையும் உடன்பட்டு (செய்து), போகமும் துவ்வா- (அவற்றாலேற்படும்) இன்பங்களையும் அனுபவித்து, தருமமும் தக்கார்க்கே செய்யா- (ஈதல் முதலியதான) தருமங்களையும் (அவற்றை ஏற்றுக்கொள்ளத்) தக்க உத்தமர்களுக்கே செய்து, மூன்றும்- இம்மூன்று காரியங்களும், ஒருநிலையே - (இவ்வுலகத்தில் பிறந்திருக்கும்) ஒரு நிலையிலேயே, (அதாவது, இந்த ஒரு பிறப்பிலேயே) முட்டு இன்றி - தடையில்லாமல், முடியுமேல்- (ஒருமனிதனுக்கு) முடியுமானால், அது- (இம்மூன்றையும் ஒருகாலத்தில்

பெற்ற) அந்நிலைமை, பட்டினம்பெற்ற கலம் என்ப- (பல நாடு களிலும் சென்று பொருள்களை நிரப்பிக் கொண்டு மீண்டு தான் அடையவேண்டிய) துறைமுகப்பட்டினத்தை அடையப்பெற்ற கப்பல் என்று சொல்வர், (பெரியோர்); எ-று.

ஒருவனுக்கு இன்பத்திற்கேதுவான காரியக்ஙள்ளைச் செய்தலும், இவ்வுலக இன்பங்களை அனுபவித்தலும், உத்தமர்க்குப் பொருளீதலாகிய தர்மங்களைச் செய்தலும் ஒரு பிறப்பிலேயே அமையுமானால்,அவற்றை அவன் பெற்ற அந்நிலை, பல நாடுகளுக்குச் சென்று வேண்டும் பொருள் களை ஏற்றிக்கொண்டு தான் சேரவேண்டிய துறைமுகப் பட்டினத்தையடைந்த கப்பலுக்கு நிகராகும் என்பது இதன் கருத்து.

கப்பல், பல நாடுகளிலும் சென்று சேகரிக்கத்தக்க பொருள்களைச் சேகரித்துக் கொண்டு தனக்குரிய துறை முகத்தை அடைந்து விட்டால் அலைச்சலின்றி அமைதியுற்றி ருக்கும். அதைப்போலவே, மனிதனும் பல விடங்களிற் சென்று செய்யத்தக்க நற்கருமங்களைச் செய்து, பொருள் தேடி இன்பமனுபவித்துத் தானதர்மங்களைச் செய்து முடிப் பானேயானால் அவனிடத்தே புண்ணியம் நிறைந்திருக்கும்; அதனால் அவன் அந்நிலையில் அமைதியுற்று ஆனந்தத் தோடு விளங்குவான்.

இதனால், இப்பிறப்பில் இம்மூன்றையும்செய்து ஆனந்தமெய்துதல் அறிவுடைமை யென்பது விளக்கப் பட்டது.

'கருமமும்' என்பதிலுள்ள உம்மை- எதிரது தழுவிய எச்சப் பொருளது. 'போகமும்' என்திலுள்ள உம்மை- இறந்தது தழுவியதும், எதிரது தழுவியதுமாம். 'தருமமும்' என்பதிலுள்ள உம்மை- இறந்தது தழுவியது. 'தக்கார்க்கே'

என்பதில், ஏகாரம் - பிரிநிலைப் பொருளது. 'மூன்றும்' என்பதன் உம்மை- முற்றுப்பொருளது. மூன்றும் முடிந்த நிலை, பட்டினம்பெற்ற கலமாக உருவகிக்கப்பட்டது. உள் படா, துவ்வா, செய்யா என்பன- உடன்பாட்டு இறந்தகால வினையெச்சங்கள். பட்டினம்- நெய்தனிலத்துள்ளதுறைமுக நகரம். போகம்- வடசொல். உள்படா' என்பதற்குப்பின், 'செய்து' என்னும் சொல் வருவித்துரைக்கப்பட்டது; வேறு சில சொற்களும் இங்ஙனமே இசையெச்சமாக வருவித் துரைக்கப்பட்டன. (கo)

அதிகாரம் 26

அறிவின்மை

அறிவின்மையாவது - நன்மை தீமைகளைப் பகுத்துணரும் அறிவு இல்லத்திருத்தலாம். இவ்வதிகாரம் அத்தன்மையை விளக்கும் செயல்களைக் கூறுவதாகலின் இப்பெயர் பெற்றது. இவற்றைக் கூறுவதால் அறிவுடைமைச் சிறப்பு நன்குணர்த்தப்படும்; முன் அதிகாரத்தில் உடன்பாட்டு முகத்தால் அறிவுடைமை சிறப்பித்துக் கூறப்பட்டது; இவ்வதிகாரத்தில் எதிர்மறைமுகத்தால் அவ்வறிவுடைமை சிறப்பிக்கப்படுகின்றது; இங்ஙனம் இதுவும் அறிவுடைமையைக் குறித்ததாகலின் அவ்வதிகாரத்தின் பின் வைக்கப்பட்டது; இவ்வாறே திருக்குறளிலும் கல்வி யென்னும் அதிகாரத்தின் பின் கல்லாமை யென்னும் அதிகாரம் வைக்கப்பட்டிருத்தல் காண்க. பொருளைத் தீவினைவிட்டீட்டவும், காப்பாற்றவும், அனுபவிக்கவும், நற்றுறையில் செலவிட்டுப் புண்ணியந் தேடவும் அறிவுடைமை இன்றியமையாததாகலின், அதைப்பற்றிக் கூறும் இவ்வதிகாரங்கள் இப்பொருட்பாலிற் சேர்க்கப்பட்டுள்ளன.

251. *நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை*
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்-
எண்ணுங்கால்
பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ
கண்ணவாத் தக்க கலம்.

(இ-ள்) (உலகத்திலுள்ளவர்க்கு), நுண்- நுட்பமாகிய உணர்வு இன்மை - அறிவு இல்லாதிருத்தலே, வறுமை- தரித்திரமாம், அஃது உடைமை அந்த நுண்ணறிவை யுடைத்தாயிருப்பது, பண்ண பனைத்த- மிகவும் அதிகரித்த, பெரு செல்வம் - பெரிய செல்வமாம், எண்ணும் கால்- (நன்றாகச்) சிந்தித்துப் பார்க்குமிடத்து, (இவையன்றி ஆபரணம், நிதி முதலிய செல்வம் இல்லாதிருப்பதும், அஃதுண்டாயிருப்பதும் முறையே தரித்திரமும், செல்வமும் ஆகமாட்டா; அழகிற் சிறந்தவர்களிடத்து அவ்வுலகப் பொருள் இல்லாமலிருக்கும், சிறப்பில்லாதவர்களிடத்தில் அது சேர்ந்திருக்கும்; இந்த இயற்கையின்படியே), கண் அவாதக்க - எல்லாருடைய கண்களும் பார்ப்பதற்கு விரும்பத்தக்க, (உலகப் பொருள்களிற் சேர்ந்தனவாகிய), கலம்- ஆபரணங்களை, பெண் அவாய்- பெண்தன்மை (மிகுதியாகச்) சேர்ந்து, ஆண் இழந்த- ஆண் தன்மையை (மிகுதியாகக்) கைவிட்ட, பேடி- பேடியானவள், அணியாளோ- அணியமாட்டாளோ?, (அணிவாள்); (ஆதலின், மனிதர்க்கு உலகப் பொருள்களை யுடைத்தா யிருத்தலால் சிறப்பும், அவற்றை யடையாதிருத்தலாற் சிறப்பின்மையும் ஏற்படமாட்டா அறிவுடைமையாலும், இல்லாமையாலுமே ஏற்படுவனவாம்); எ-று.

உலகத்திலுள்ளவர்க்கு நுண்ணறிவில்லா திருத்தலே வறுமை, அதனை யுடைத்தாயிருத்தால செல்வம்; நன்றாக ஆலோசித்துப் பார்க்குமிடத்து, இவைகளன்றி ஆபரணம், நிதி முதலிய பொருள்கள் இல்லாதிருப்பதும், உண்டாயிருப்பதும் தரித்திரமும், செல்மும் ஆகமாட்டா; அழகிற் சிறந்தவர்களிடத்தில் அவ்வுலகப்பொருள் இல்லாமலிருக்கும், சிறப்பற்றவர்களிடத்தில் அது சேர்ந்திருக்கும்; இந்த இயற்கையின்படியே பேடியும் கண் கவரத்தக்க ஆபரணங்களை அணிவாள்; ஆதலின், மனிதர்க்கு உலகப்பொருள்களை யுடைத்தாயிருத்தலால் சிறப்பும், அவற்றைப் பெறாதிருத்தலாற் சிறப்பின்மையும் ஏற்படமாட்டா; அறி

வுடைமையாலும், இல்லாமையாலுமே ஏற்படுவனவாம் என்பது இச்செய்யுட் கருத்து.

இதனால், மனிதர்க்கு நுண்ணறிவில்லாதிருத்தலே வறுமையென்றும், அஃதுடைத்தாதலே செல்வமென்றுங் கூறி அறிவின்மையின் இழிவை விளக்கி, அதனால் இன்ப மில்லையென்பதைக் குறிப்பிட்டார் முனிவர்.

''பெண்ணவா யாணிழந்த பேடியணியாளோ, கண்ண வாத்தக்க கலம்'' என்பது எடுத்துக்காட்டுவமை; முன்னிரண் டடிகளின் கருத்து, 'அறிவற்றார் செல்வம் பெற்றாலும் சிறப்படையார்' என்பது; இஃதுபமேயம்; ''பேடியும் நகை யணிவாள்; அணிந்தாலும் சிறந்தவளாகாள்; அவளைப் போல அறிவில்லார் செல்வம் பெற்றாலும் சிறப்படையார்'' என்று இந்த உபமான உபமேயங்கள் கூட்டி முடிக்கப்படும்.

பேடு - நபுஞ்சகம்; ஆணும் பெண்ணும் கலந்த தோற்றம்; பெண் தன்மை குறைந்து ஆண்தன்மை மிகுந்த நபுஞ்சகம் ஆண்பால்; ஆண் தன்மை குறைந்து பெண் தன்மை மிகுந்த நபுஞ்சகம் பெண்பால்; 'பேடு' என்பது இவ்விரண்டுக்கும் பொதுப்பெயர்; இது, உயர்திணையில் ஆண்பால், பெண் பால், பலர்பால் விகுதிகளோடு நேர்ந்து பேடி, பேடர், பேடியர் எனவரும்; இகரவிகுதி ஆண்பால், பெண்பால் இரண்டிற்கும் வருமாகலின், இகர விகுதி பெற்ற பேடி யென்பது பெண்ணிற்கும், ஆணிற்கும் வரும்; இவை,

''பெண்மை சுட்டிய வுயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென வறியுமந் தந்தமக் கிலவே
உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்''

என்னும் (தொல்-சொல்-கிளவி-4ஆம்) சூத்திரவுரை யாலுணரப்படும்; இன்னும் 'பேடி' என்னும் பெயர் ஆண் பாலுக்கும் வருமென்பதை, ''தந்த பெண்டகனே பேடி நபஞ் சகனலியே சண்டன்'' என்னும் (சூடா-ம-நி. மக்கட் பெயர் - 43 -ஆம்) செய்யுளடியாலுமுணரலாம்; ஆண்தன்மை மிக்கது ஆண்பாலென்றும், பெண்தன்மை மிக்கது பெண் பாலென் றும் கொள்ளப்படு மென்பது,

''பெண்மைவிட் டாணவா வுவபே டாண்பால்
ஆண்மைவிட் டல்ல தவாவுவ பெண்பால்
இருமையு மஃறிணை யன்னவு மாகும்''

என்னும் (நன்-பெய-7-ஆம்) சூத்திரத்தாலுணரப்படும். 'பேடி' என்பது இருபாற்கும் பொதுவெனினும், பெண் தன்மை மிக்க நபுஞ்சகம் 'பேடி' என்ற பெயரையே ஏற்கும்; ஆண்தன்மை மிக்கது அலி யென்னும் பெயரை ஏற்கும்; இவற்றையும் முன் உதாரணங்காட்டிய, 'பெண்மை சுட்டிய.....' என்னும் தொல்காப்பியம் சூத்திரவுரையானும்,

''ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை யறிசொற் காகிட னின்றே''

என்னும் (தொல்-சொல்-கிளவி-12-ஆம்) சூத்திரவுரையானு முணரலாம். நகையணிதல் பெண்கட்கே யுரியதாதலின், இங்குப் பெண்தன்மை மிகுந்த நபுஞ்சகத்தை விளக்கி அதற்கு ஆபரணம் புனைதல் கூறப்பட்டது; பெண்தன்மை மிக்கதை உயர்திணைப் பெண்பாலாகவே வழங்குதன் மரபாகலின், 'பேடி அணியாளோ' என்றார் முனிவர்; இங் ஙனம், சீவகசிந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகத்தில், 'வீணாபதி' என்னும் பேடியை, ''ஏயே யிவளொருத்தி பேடியோ வென்றார்'' என்று திருத்தக்க தேவரும் கூறியிருத் தல் காண்க. பேடிகள் ஆபரணங்களை யணிதல் உலகியல்பு; இதனையும் மேற்கூறிய சிந்தாமணியிலம்பகத்தில் வீணா

பதியைப்பற்றிக் கூறுமிடத்துக் காணலாம்.

அவாவுதல்-சார்தல்; ஆதலின், 'அவாய்' என்பதற்குச், 'சேர்ந்து' எனப் பொருளுரைக்கப்பட்டது; இதனைச் சிறப் பித்தற்கு, 'மிகுதியாக' என்பது வருவித்துரைக்கப்பட்டது. இனி, 'பெண்ணவாய்' என்பதற்கு, 'பெண்தன்மைக்குரிய இலக்கணங்கள் சார்ந்து' என்றேனும், 'பெண் தன்மையை விரும்பி' என்றேனும் பொருளுரைப்பினுமாம்.

நுண்ணுணர்வின்மை வறுமை யென்பதும், அஃதுடைமை செல்வமென்பதும்,

''அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்''

என்னும் (திருக்குறள்-430-ஆம்) செய்யுளானுணரப்படும். பிறரால் கவரப்படாமையும், கொடுக்கக் குறையாமையு மாகிய சிறப்புப்பற்றி அறிவுடைமையை, 'பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்' என்றார் முனிவர். பணைத்தல்- பருத்தல்; இஃதிங்கு மிகுதிப்பொருள் குறித்து நின்றது; 'பண்ணப்பணைத்த' என்பது, மிகுதியைச் சிறப்பிக்கவந்த சொல்லடுக்கின் சிதைவு; சின்னஞ்சிறிய, பென்னம் பெரிய என்பன போன்றதெனக் கொள்க. பெண்- பொருளாகு பெய ராய்ப் பெண் தன்மையை உணர்த்திற்று, 'ஆண் என்பதும் அவ்வாறேயாய் ஆண் தன்மையை உணர்த்திற்று. அவாத் தக்க- 'அவாவ' என்னும் செயவெனெச்சத்து ஈற்றுயிர் மெய் யாகி - வ- கெட்டு, இவ்வாறாயது; ''சாவவென்னுஞ் செய வெனெச்சத், திறுதி வகரங்கெடுதலு முரித்தே'' என்னும் (தொல்-எழுத்-உயிர்-ம-7-ஆம்) சூத்திர விதியின் உபலக்ஷ ணத்தாற் கொள்ளப்படும்; இனி, இதனை, 'அவா' என்னும் முதனிலைத் தொழிற்பெயரடியாக வந்த நான்காம் வேற் றுமைத் தொகையெனக் கொண்டு, 'அவாவுதற்குத்தக்க' என விரிப்பினும் அமையும். இவ்வுரைக்கிடையில் பொருண்

முடிபுக் கேற்பப் பல சொற்றொடர்கள் இசை யெச்சமாக வருவித் துரைக்கப்பட்டன.

252. *பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்*
தல்ல லுழப்ப தறிதிரேல்- தொல்சிறப்பின்
நாவின் கிழத்தி யுறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து.

(இ-ள்.) (நீதிகேட்போரே! மனிதர்க்கு அறிவுடைமையே செல்வம், அறிவின்மையே வறுமை; உலகப்பொருள் பொருளாகாது என்று பெரியார் கூறியிருக்க, அறிவுடையார் உலகப் பொருள் இல்லாததால் துன்புறுவதை நீங்கள் உலகத்திற் பார்ப்பீர்கள்; அவ்வாறு), பல்- பலவகையான, ஆன்ற- அறிவுநிறைந்த, கேள்வி- நூற்கேள்வியினாலேற்படும், பயன்- பிரயோசனங்களை, (அதாவது, நற்பயன்களை), உணர்வார்- அறியும் விவேகிகள், (அந்த உலகப் பொருள் இல்லாததால்), பாடு அழிந்து - தங்கள் பெருமை கெட்டு, அல்லல் உழப்பது- துன்பத்தால் வருந்துவதை, அறிதிர்ஏல்- அறிவீர்களாயின், (அதற்குக் காரணங் கூறுகின்றேன் கேளுங்கள்; அவர்களிடத்தில், ஞானத்தை உண்டாக்கக்கூடிய), தொல்- பழமையான, சிறப்பின்- சிறப்பினையுடைய, நாவின்கிழத்தி- (சொல் வெளிப்படும்) நாவிற்குரியாளாகிய சரஸ்வதிதேவி, உறைதலால் - தங்கியிருப்பதனாலே, பூவின் கிழத்தி - (உலகப்பற்றாகிய மாயையை உண்டாக்கித் தாழ்ந்தவர்களிடத்தும் சேர்கின்ற) தாமரைமலரில் வாசஞ்செய்தற்குரியாளாகிய இலக்குமி, புலந்து- பிணங்கி, சேராள்- சேரமாட்டாள்; (அதனால், அவர் நிலையற்ற உலகவின்பம் இல்லாமல் துன்புறுவார்போலக் காணப்படுவர்; எனினும் அத்துன்பம் பார்ப்பவர்க்குத் துன்பம்போற் காணப்படுமேயன்றி, அறிவுடையாராகிய அவர்க்குத் துன்பமாகக் காணப்படாது; அவர் உலக இன்ப துன்பங்களைச் சமமாக நினைப்பவராகலின் அதனால்

வருந்துதல் இலராவர்; ஆதலின், அவர்க்குத் துன்பமுண் டென நினைத்தல் அறிவின்மை); எ-று.

''நீதி கேட்பவர்களே! மனிதர்க்கு அறிவுடைமையே செல்வம், அறிவின்மையே வறுமை, உலகப் பொருள் நிலைத்த இன்பத்திற்கேதுவான பொருளாகாது என்று பெரியார் கூறியிருப்ப, அறிவுடையார் உலகப் பொருள் இல்லாததால் துன்புறுவதை நீங்கள் பார்ப்பீர்கள்; அவ்வாறு நூற்கேள்வியின் பயனையுணர்ந்த விவேகிகள் அந்த உலகப் பொருளின்மையால் பெருமை கெட்டு வருந்துவதைப் பார்ப் பீர்களானால், அதைக் கொண்டு அவர்களைத் தாழ்ந்தவ ரென்று கருதிவிடவேண்டாம்; அதற்கு நான் காரணங் கூறுகின்றேன் கேளுங்கள்; அவர்களிடத்தில் நிலைத்த பேரின்ப ஞானத்தை உண்டாக்கக்கூடிய சரஸ்வதி தேவி தங்கியிருத்தலினாலே, உலகப் பற்றாகிய மாயையை உண்டாக்கித் தாழ்ந்தவரிடத்தும் சேர்ந்திருக்கின்ற இலக்குமி சேரமாட்டாள்; அதனால், அவர் நிலையற்ற உலக வின்பம் இல்லாமல் துன்புறுவார்போலக் காணப்படுவர்; எனினும், அத்துன்பம் பார்ப்பவர்க்குத் துன்பம்போற் காணப்படுமே யன்றி அறிஞராகிய அவர்க்குத்துன்பமாகத் தோற்றாது; அவர் உலக இன்ப துன்பங்களைச் சமமாக நினைப்பவராதலின் அதனால் வருத்தங்கொள்வார்; ஆதலின் அவர்க்குத் துன்ப முண்டென நினைத்தல் அறிவின்மை'' என்பது இதன் கருத்து.

இதனால், உலகப்பொருள் இன்மையால் துன்புறு வார்போற் காணப்படும் அறிஞரைத் தாழ்ந்தவரெனக் கருதுதல் அறிவின்மை யென்பது குறிக்கப்பட்டது. உலகப் பொருள்களையும், அதனாலுண்டாம் இன்பத்தையும், அஃதின்மையாலேற்படும் துன்பத்தையும் கருதாமல் நிலைத்த பேரின்பத்தைப் பெறும் ஞானத்தைத் தேடுதலே அறிவுடைமை என்பது இதனால் விளங்கும். இச்செய்யுள், முந்தின செய்யுளிற் கூறிய அறிவுடையார் சிறப்பையே

பற்றிக் கூறுவதாகலின், அதன்பின் வைக்கப்பட்டது; அதிற் கூறிய கருத்திற்கு மாறாக, அறிவுடையார் வருத்தங்கண்டு ஐயுறுவார்க்குச் சமாதானங் கூறுவதாக அமைந்தது.

இச்செய்யுளிற் சுருங்கக் கூறிய கருத்தை விளங்க வைத்தற்பொருட்டுப் பல சொற்றொடர்கள் வருவித்துப் பொருண்முடிபு கூறப்பட்டது. பொருள் உலக காரியங்கட்கும், இன்பத்திற்கும் இல்லறத்தார்க் கின்றியமையாததெனப் பெரியோராற் கூறப்படினும், நிலையற்றதாதலின் நித்திய இன்பத்தை விரும்பும் அறிஞர் அதனை மதியார் என்றிங்கு இழித்துக் கூறப்பட்டது. சரஸ்வதி தேவி ஞானத்தை உண்டாக்கக் கூடியவளாதலின் உயர்த்திக் கூறப்பட்டாள்; இலக்குமி ஐசுவரியத்தால் உலகமாயையை விருத்தி செய்யக் கூடியவளாதலின் இழித்துக் கூறப்பட்டாள். நல்லோர் இருக்குமிடத்திற்குக் கெட்டவர் போகார்; ஆதலின் ஞான தேவியாகிய சரஸ்வதியிருக்குமிடத்தில் நிலையற்ற பொருளுக் கதிதேவதையாகிய இலக்குமி சேராள் என்றார் முனிவர்; பொருளுக்கிறைவியாகிய திருவின் சேர்க்கை தாழ்ந்தவிடத்து முண்டாமென்பது,

''அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள''

என்னும் (திருக்குறள்-241-ஆம்) செய்யுளானுணரப்படும். இவ்வாறிங்கு இவர்கட் குயர்வுந்தாழ்வுங் கூறப்படினும் இவ்விருவரையும் கல்விக்கும், செல்வத்துக்கும் உரிய தேவியரென்றும், முறையே எல்லாருடைய நாவிலும் பூவிலும் வசிப்பவரென்றும் ஜைனரும், மற்றையரும் பொதுவாகச் சிறப்பித்துக் கூறுவதியல்பு; இதனை,

''நாவீற்றிருந்த புலமாமக ளோடு நன்பொற்
பூவீற்றிருந்த திருமா மகள்...............''

என்னும் (சீவக சிந்தாமணி-நாம-1-ஆம்) செய்யுளடிகளா னுணரலாம்; இன்னும் திருமகள் தாமரை மலரில் வசிப்பவ ளென்பதை,

''அருமணி மரகதத் தங்கணாறிய
வெறிநிறப் பொன்னித ழேந்து தாமரைத்
திருமகள்.......................... ''

என்னும் (சீவக-நா.154-ஆம்) செய்யுளடிகளானுணரலாம். இனி சரஸ்வதி பிரமாவின் நாவிலும், வெண்டாமரையிலும் வசிப்பவளென்றும், இலக்குமி விஷ்ணுவின் மார்பிலும், செந்தாமரையிலும் வசிப்பவளென்றும் சைவ வைணவ புராணங்களும், பிறநூல்களும் கூறும்; இன்னும், சரஸ்வதி, விஷ்ணுபுத்திரனாகிய பிரமாவுக்குப் பாரியாகலின், அவ் விஷ்ணுவின் மனைவியாகிய இலக்குமிக்கு மருமகளென் றும் அப்புராணக் கொள்கைகளாற் பலர் கூறுவர். இவற்றைக் கொண்டு, ஒரு பெண்ணிருக்கு மிடத்தில் மற்றொரு பெண் கூடியிராளென்பதும், மருகியிடத்தில் மாமி மகிழ்ச்சியுடன் சேர்ந்திராளென்பதும் இயற்கையாதலின், 'நாவின்கிழத்தி யிருத்தலால் பூவின் கிழத்தி புலந்து சேராள்' என உரைப்பதும் மற்றொரு வகையிற் பொருந்தும்.

கல்வியறிவால் தத்துவஞானம் பெற்றவர் உலகப் பொருளை விரும்பி அதைக் தேடமுயலார்; அதனால் அவரிடம் அப்பொருள் சேராது; மேலும் ஊழினாற் பொருள் சேராதிருத்தலுமுண்டு; இங்ஙனமிருப்ப, ''நாவின் கிழத்தியுறைதலாற் சாராளே பூவின் கிழத்தி புலந்து'' என்று காரணமல்லாததைக் காரணமாகக் கற்பித்துக் கூறினார் ஆசிரியர்; இங்ஙனங் கூறியது ஏதுத்தற்குறிப்பேற்ற வணி யெனப்படும். அறிதிர்- முன்னிலைப் பன்மைமுற்று; இதில் 'ஏல்' என்னும் வினை யெச்சவிகுதி சேர்ந்து 'அறிதிரேல்' என்பது வினையெச்சமாயிற்று. நாவின் கிழத்தி, பூவின் கிழத்தி என்பன- தகுதிப் பொருள்பற்றி வந்த நான்காம்

வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்கள்; இவற்றிலுள்ள, இன்- சாரியை. கிழமை- உரிமை; கிழத்தி- கிழமையென்னும் பண்பினடியாப் பிறந்த பெண்பாற்பெயர்; கிழவன்- என்பது இதன் ஆண்பால். முதுமையைக் காட்டும் ஆண் பால் பெண்பாற் பெயர்கள்- கிழவன் கிழவி எனவரும்; இவை 'கிழம்' என்னும் பெயரடியாப் பிறப்பவை.

253. கல்லென்று தந்தை கழற வதனையோர்
சொல்லென்று கொள்ளா திகழ்ந்தவன்- மெல்ல
எழுத்தோலை பல்லார்முன் னீட்ட விளியா
வழுக்கோலைக் கொண்டு விடும்.

(இ-ள்.) தந்தை- (தன்) தகப்பன், (தான் இளமைப் பருவமாயிருக்கும்போதே), கல் என்று - (கல்வியைக்) கற்றுக் கொள்வாயக என்று, கழற- (வற்புறுத்தி வற்புறுத்திச்) சொல்ல, அதனை- அச்சொல்லை, ஓர் சொல் என்று - (தனக்கு நன்மையைத் தருவதாகிய) ஒப்பற்ற சொல் என்று, கொள்ளாது- (மனத்திற்) கொள்ளாமல், (அதாவது, மனத்திற் கொண்டு கல்வியைக் கற்றுக்கொள்ளாமல்), இகழ்ந்தவன்- (அதனை) அவமதித்துக் கைவிட்டவன், பல்லார்முன்- பல மனிதர்களுக்கு முன்னே, (அதாவது, பலர் கூடிய சபையிலே), எழுத்து ஓலை- (ஒருவரால் எழுதப்பட்ட) எழுத்து நடை அடங்கிய ஓலையை, மெல்ல- மெதுவாக, (வாசிக்குமாறு), நீட்ட- (ஒருவர்) கைநீட்டித் தன்னிடம் கொடுக்க, (தன்னால் படித்துச் சொல்ல முடியாமையால்), இளியா - பல்லை இளித்து, (அதாவது, தன்னுடைய இழிவு தோன்றுமாறு பல்லைத்திறந்து காட்டி), வழுக்கு- (அவ்விடத்தினின்றும்) நழுவிவிடுதற்கான, ஓலை- (குழறிப் பேசுதலாகிய) ஒலியை, கொண்டு - நாவிற்கொண்டு, விடும்- (அவ்வோலையைக்) கைநழுவ விடுவான்; எ-று

''தன் தந்தை இளம்பருவத்திலேயே கல்வியைக் கற்றுக்கொள்ளென்று வற்புறுத்திக் கூறியும் அதனைக்

கற்றுக்கொள்ளாதவன், பிறகு வயது அதிகரித்த காலத்தில், பலர் கூடியவிடத்து ஒருவர், எழுதத்துநடை எழுதப்பட்ட ஓலையை வாசிக்குமாறு தன்னிடம் கொடுத்தால், அவமானப்பட்டுச் சாக்குப் போக்குகளான வார்த்தைகளைக் குழறிப் பேசி அவ்வோலையைக் கைநழுவவிட்டு அவ்விடத் தினின்றும் நீங்க வழிதேடுவான்'' என்பது இதன் கருத்து.

இதனால், இளமையில் தந்தை சொற்படி கல்வி கல்லாதவன் பின்னர் இழிவடைவான்; அவன் அவ் விழிவைத் தேடிக்கொள்ளுதல் அறிவின்மை யென்பது விளக் கப்பட்டது; இவ்வறிவின்மை இன்பத்திற் கிடையூறாம்.

கல்வி கற்காதவர்களிடத்தில் யாரேனு மொருவர் ஒருபுத்தகத்தையோ, கடிதத்தையோ கொடுத்துப் படிக்கச் சொன்னால், அவர்கள், படிக்கத் தெரியாதென்று சொன்னால் அவமானமுண்டாகுமென்று அதையும் சொல்லாமல், படித்துச் சொல்லவும் முடியாமல் தாழ்மையைக் காட்டும் ஒருவகைப் புன்சிரிப்பைப் பல்லிளித்துக் காட்டி, கண்ணாடி யில்லையென்றோ, அவசரமாக ஓரிடத்திற்குப் போக வேண்டுமென்றோ குழறுபடையாகச் சில வார்த்தைகளைப் பதற்றத்தோடு கூறி, படிக்கக் கொடுத்ததை மீண்டும் அவர் கையிற் கொடுத்துவிட்டு நழுவிவிடுவார்கள்; இச்செயலை இக்காலத்திலும் நாம் அனுபவத்திற் காணலாம். ஓல்- ஒலி; இரண்டனுருபேற்று 'ஓலை' என்றாயது; அவ்வார்த்தைகள் நிரம்புதலில்லாமல் குழறுபடையா யிருக்கும்; ஆதலின், அது, சொல்லென்று கூறப்படாமல் ஒலியென்று சொல்லப் பட்டது. 'வழுக்குதல்' என்னும் தொழிற்பெயர் தல்லீறு கெட்டு முதனிலைத் தொழிற்பெயராய், 'வழுக்கு' என நின்றது; வழுக்குதல்- நழுவுதல்; 'வழுக்கு' என்னுந் தொழிற் பெயரே பெயரெச்சமாய் நின்று, 'ஓலை' என்பதனோடு முடிந்தது; வழுக்கோலை- வினைத்தொகை.

இனி, 'வழுக்கோலைக் கொண்டுவிடும்' என்பதற்கு, 'அடித்தற்குக் குற்றமுடைய கோலை எடுத்துக் கொள்வான்' எனப் பொருள் கோடலுமொன்று; ஓலை படிக்கச் சொல்வோரை, படிக்கத் தெரியாதவர் அடிக்க முயலுதல் பெரும்பாலும் நேராச் செயலாதலின், இவ்வுரை அத்துணைச் சிறப்புடையதன்று.

''தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்''

என்ற (திருக்குறள்- 67-ஆம்) செய்யுளின்படியும், 'தந்தையொடு கல்விபோம்' என்பதனாலும் பிள்ளைக்குக் கல்வி கற்பிக்கவேண்டிய கடமை தந்தையதாகலின், 'கல்லென்று தந்தைகழற' என்றார் முனிவர். 'தந்தைசொன்மிக்க மந்திரமில்லை' என்றபடி, தந்தை சொல் ஒப்பற்ற நலந்தருவதாகலின், அதனை, 'ஓர் சொல்' என்றார். வினைப் பகுதியாகிய, கல் - என்பதே ஓசை வேறுபட்டால் ஏவற்பொருளை உணர்த்தி நின்றது. கழறல்- தொழிற்பெயர்; கழறு- பகுதி, அல்-விகுதி. 'இகழ்ந்தவன் கொண்டுவிடும் என்பதில், செய்யுமென்னும் முற்று ஆண்பாலோடு முடிந்தது;

''பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
யவ்வயின் மூன்று நிகழுங் காலத்துச்
செய்யு மென்னுங் கிளிவியொடு கொள்ளா''

என்னும் (தொல்-சொல்-வினை-30-ஆம்) சூத்திரத்தில், 'செய்யுமென்னும் முற்றோடு பொருந்தா' வென்று விலக்கப் பட்டவைகொண்டு இது துணியப்படும். எழுத்து- எழுத்தாலாம் வாசகத்துக்கு ஆகுபெயர்; எழுத்தோலை- இரண்டாம் வேற்றுமை உருபும் பொருளும் தொக்க தொகை. ஓலையைக் கொடுப்பதற்குக் காரணமாவது- கை நீட்டுதல்; கொடுத்தல் அதன் காரியம்; இங்குக் காரணமாகிய, 'நீட்டுதல்' என்பது, கொடுத்தலாகிய காரியத்தை உணர்த்தி

நின்றது; இஃதுபசார வழக்கெனப்படும். இளியா- உடன் பாட்டு இறந்தகாலவினைக்குறை. இனி இதனை, 'விளியா' எனப் பாடங்கொண்டு அதற்கு, 'விளிந்து, (அதாவது' இறந் ததுபோலாகி), என்று பொருளுரைப்பினுமாம். கோலைக் கொண்டுவிடும்' என்ற பாடத்திற்கு, 'விளியா' என்பதற்கு, 'கோபித்து' எனப் பொருளுரைத்தல் வேண்டும். (ந)

254. *கல்லாது நீண்ட வொருவ னுலகத்து*
நல்லறி வாள ரிடைப்புக்கு- மெல்ல
இருப்பினு நாயிருந் தற்றே யிராஅ
துரைப்பினு நாய்குரைத் தற்று.

(இ-ள்.) கல்லாது- (கல்வியைக்) கற்றுக்கொள்ளா மல், நீண்ட- வளர்ந்த, ஒருவன்- ஒரு மனிதன், நல்- நல்ல, அறிவாளரிடைப்புக்கு- அறிவுடையவர்களின் நடுவிலே புகுந்து, (ஒன்றும் பேசாமல்), மெல்ல- மெதுவாக, இருப் பினும் - இருந்தாலும், (அவ்விருக்கை), நாய் இருந்து அற்று- நாய் இருந்தது போன்றதாம், இராது- (பேசாமல்) இராமல், உரைப்பினும்- (எதையாவது) கூறினாலும், நாய் குரைத்து அற்று - (அந்த நாய் வாய் மூடியிராமல்) குரைத்தது போன்ற தாம்; எ-று.

கல்வியைக் கற்றுக் கொள்ளாத ஒருவன் அறிவுடை யார் கூட்டத்திற் புகுந்து பேசாமல் இருந்தாலும் அவ்விருப்பு நாயிருந்ததைப் போன்றதாம்; அவ்வாறு பேசாதிராமல் எதை யேனும் பேசத்தொடங்கினும் அப்பேச்சு நாய் வாய்திறந்து குரைத்ததைப்போன்ற தாம் என்பது இதன் கருத்து. இதனால், கல்வியில்லாதவர், அறிஞர் கூட்டத்திற் புகவும், பேசவும் தகுதியற்றவரென்பதும், கல்லாமை அறிவின்மையா மென்பதும் விளக்கப்பட்டன.

இங்குக் கல்லாதவரின் இழிவை விளக்கற்பொருட்டு நாய் உவமை கூறப்பட்டது; இது, இருப்பது, உரைப்பது

ஆகியவற்றின் பயன்பற்றி வந்ததாகலின் பயன் குறித்துவந்த உவமையணியாம். உலகம்- லோகமென்னும் வடமொழித் திரிபென்பது சிலர் கொள்கை; தமிழ்ச்சொல்லே யென்பது நச்சினார்க்கினியர் கொள்கை. 'இருப்பினும்' என்பதன் உம்மை- எதிரது தழுவிய எச்சப் பொருளது; 'உரைப்பினும்' என்பதன் உம்மை- இறந்தது தழுவியது. இராஅது- செய்யுளோசை நிறைக்கவந்த உயிரளபெடை. 'அற்றே' என்பதில், ஏ- ஈற்றசை. இருப்பின், உரைப்பின் - வினையெச்சங்கள். (ச)

255. *புல்லாப்புன் கோட்டிப் புலவ ரிடைப்புக்கு*
கல்லாத சொல்லுங் கடையெல்லாங் கற்ற
கடாஅயினுஞ் சான்றவர் சொல்லார் பொருண்மேற்
படாஅ விடுபாக் கறிந்து.

(இ-ள்.) கடை எல்லாம்- கீழ்மக்களெல்லாரும், புல்லா- (கல்வியறிவு) சேராத, புல்- அற்பமான, கோட்டி- சபையில் சேர்ந்திருக்கின்ற, புலவர் இடை- அற்பமான அறிவையுடையவர்களிடத்து, புக்கு- புகுந்து, கல்லாத- (தாம்) கற்றுக்கொள்ளாதவைகளையெல்லாம், சொல்லும் - (அறிந்தவர்போலச்) சொல்லிப் பெருமை யடைவார்கள், (அதனால், அவர்கட்கு எவ்வித பெருமையுமேற்படாது), சான்றவர்- (கல்வியறிவால்) நிறைந்தவர்கள், கற்ற- (தாம்) கற்ற பொருள்களை, கடாயினும் - (அக்கூட்டத்தார் தம்மிடத்திற்) கேட்டாலும், (தாம் சொல்லும் பொருள்களை அவர்கள் முற்றுறத் தெரிந்து கொள்ளாமல் விட்டுவிடுவது இயற்கையாதலின்), அறிந்து- அத்தன்மையை யுணர்ந்து, (அவ்வாறு அவர்களுடைய அறிவு), பொருள் மேல்- (தாங்கள் சொல்லும் அரிய), பொருள்களிடத்து, படா- (முழுதும்) சாராமல் (அதாவது, செல்லாமல்) விடுபாக்கு - விட்டு விடுமாறு, சொல்லார்- சொல்லமாட்டார்கள்; (அதனால் இவர்க்குப் பெருமையுண்டு.) எ-று.

கீழ்மக்கள், கல்வியறிவில்லாத அற்பர் கூட்டத்திற் புகுந்து, தாம் கற்றுக் கொள்ளாதவைகளை யெல்லாம் வழு நிரம்பச் சொல்லித் தற்பெருமை யடைவார்கள்; இதனால் இவர்க்கிழிவேயன்றிப் பெருமையில்லை; கல்வியறிவு நிறைந்த பெரியோர்கள், தாம் கற்ற பொருள்களை, அத் தாழ்ந்த கூட்டத்தார் தம்மிடத்திற் கேட்பினும், அவற்றைச் சொன்னால் அவர்களுடைய புத்திமுற்றுர வுணராதாதலின், அவ்வாறு அறிந்துகொள்ளாமல் விடுமாறுஅவர்களுக்குச் சொல்லமாட்டார்கள் என்பது இதன் கருத்து.

கீழ்மக்கள் அறிவில்லாதவர்களாதலின், வழுப்பட்ட பொருள்களை யெல்லாம் தங்களைப் போன்ற அறிவற்றவர் களுடைய கூட்டத்திற் சொல்லி, அவர் தம்மைக் கொண் டாடக்கண்டு தற்பெருமை கொண்டு மகிழ்வர்; அவ்வாறு மகிழினும் அறிவுடைய கூட்டத்தாரெல்லாரும் அவரைப் பார்த்து நகைப்பர்; ஆதலின், இதனால் அவர்க்கிழிவே யன்றிப் பெருமையில்லை; கல்வி நிரம்பிய அறிவுடை யாரிடத்தே அவ்விழிந்த கூட்டத்தார், அவர்க்குத் தெரிந்த வற்றைக் கேட்டபோதிலும் அவர்கள் அவற்றின் உயர் வுணர்ந்து மகிழாராதலின், அவர்க்குச் சொல்லமாட்டார்கள்; அவ்வாறு சொல்லாததால் அவரை அறிவுடையார் கொண் டாடுவர்; அதனால் எப்பொழுதும் அப்பெரியார்க்குப் பெருமையுண்டு. இக்காலத்திலும் கல்வியறிவில்லாத சில நாடக ஆசிரியர்கள், தம்மைப்போன்ற கூட்டத்தாரிடத்து வழுமிக்க பொருள்களைக் கூறிப் பெருமையடைவதையும், அவரை உலகம் இகழ்வதையும் கண்கூடாகக் காணலாம்.

இதில், புல்லறிவாளர் சபையில் கல்லாதவைகளைக் கீழ்மக்கள் சொல்லிப் பெருமையடைதல் அறிவின்மை யென்பது விளக்கப்பட்டது.

'புன்மை' என்னும் பண்புச்சொல் மையீறுகெட்டு, 'புன்' என நின்றது; மையீறு கெட்டபின் நிற்பது, 'புல்'

என்னும் பகுதியே; இதில் வலி முன் லகரம் னகரமானது, ''குறில் செறியா லள ....'' என்னும் (நன்-மெ-பு.26-ம்) சூத்திரத்தில், 'பிற' என்ற மிகையாற் பெறப்பட்டது; மையீறுசோ, 'புன்மை' என்றானதே ஈறுகெட்டுழி அவ்வாறே நின்று வருமொழிமுதல் வல்லெழுத்துக்கு முன் இயல் பாயிற்றெனினுமாம். புலம் -அறிவு; அதனையுடையார்-புலவர்; 'புல்லாப்புன் கோட்டி' என்ற குறிப்பால், 'புலவர்' என்பதற்கு அற்ப அறிவுடையவர் என்று பொருள் கூறப் பட்டது; இனி, இதனை வித்வான்கள் எனவே கொண்டு 'புல்லாப்புன் கோட்டி' என்றது கொண்டு தாழ்ந்த புலவர் எனப்பொருள்கூறினும் அமையும்; இவ்வாறு கூறியது இகழ்ச்சிக்குறிப்பாம். கடை- தாழ்ந்தகுணம்; இது, பண்பாகு பெயராய்க் கீழ்ப்பட்டவரையுணர்த்திற்று; இது, பொருளால் இங்கு உயர்திணைப் பலர்பால் குறித்தது; எனினும் சொல் வகையால் பால்பகா வஃறிணைப்பெயராம்; ஆதலின், அதற்கேற்ப, 'செய்யும்' என்னும் வாய்பாட்டு முற்றாகிய, 'சொல்லும்' என்னும் முடிபைக்கொண்டது. 'எல்லாம்' என்பது இருதிணைப்பொதுப்பெயர்;

''எல்லா மென்னும் பெயர்நிலைக் கிளவி
பல்வழி நுதலிய நிலைத்தா கும்மே''

என்பது (தொல்-சொல்-பெ-32) சூத்திரம். கடாஅயின்- இன்னிசையளபெடை. இரண்டிடங்களினும் அளபெடை வந்தது அளபுத்தொடையாம். 'கடாஅயினும்' என்பதிலுள்ள உம்மை- உயர்வு சிறப்புப் பொருளது. மேல்- ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. 'விடுபாக்கு' என்பதில், பாக்கு- எதிர்காலத் தெரிநிலை வினையெச்சவிகுதி. இனி, இதனைத் தொழிற்பெயர் விகுதியாகக் கொண்டு, 'விடுபாக்கறிந்து' என்பதற்கு, 'விடுதலையறிந்து' எனப் பொருளுரைத்தலு மாம்; பாக்கு- தொழிற்பெயர் விகுதியாதல், ''செய்து செய்பு.....'' என்னும் (நன்.வினை-24-ஆம்) சூத்திரவுரை

யில், 'உரையிற் கோடலாற் கொள்ளப்படும்' என்பதால் பெறப்படும். படா- எதிர்மறை வினையெச்சம்.

256. *கற்றறிந்த நாவினார் சொல்லார்தஞ் சோர்வஞ்சி*
மற்றைய ராவார் பகர்வர் பனையின்மேல்
வற்றிய வோலை கலகலக்கு மெஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை யொலி.

(இ-ள்.) கற்று- (படிக்கத்தக்க நூல்களைப்) படித்து, அறிந்த-(அவற்றின் உட்பொருள்களை) உணர்ந்த, நாவினார்- நாவையுடைய பெரியார், தம்சோர்வு அஞ்சி - (தம்மாற் சொல்லப்படும் சொற்களில் ஏற்படும்) தம்முடைய குற்றத் திற்குப் பயந்து, சொல்லார் - (எதையும் வாய்க்குவந்தபடி அதிகமாகச்) சொல்லமாட்டார்கள், (நன்காராய்ந்து அளவுப் படி சுருங்கக் கூறுவார்கள்); மற்றையராவார்- (அவ்வாறு கற்றறிந்த நாவினரல்லாத) மற்ற சிறியராவார், பகர்வர்- (அப்படிப்பட்ட குற்றத்திற்குச் சிறிதும் அஞ்சாமல் எதையும் ஆராயாமல் மனம்போனபடி) சொல்வார்கள்; (இச்செயல்கள் எவற்றைப்போன்றனவெனில்:-) எஞ்ஞான்றும் - எக்காலத் தும், பனையின்மேல் - பனைமரத்தின்மேலே, (இருக்கும்), வற்றிய ஓலை- (நீர்ச்சத்து) வறண்டு காய்ந்த ஓலைகள், கல கலக்கும்- கலகலவென்றொலித்துக் கொண்டேயிருக்கும், பசு ஓலைக்கு - (நீர்ச்சத்துள்ள) பசுமையான ஓலைகளுக்கு, ஒலி இல்லை- ஓசை இல்லை; (இவைபோலவென்க); எ-று.

பனையில் காய்ந்திருக்கும் ஓலைகள் எப்பொழுதும் கலகல வென்று ஓசையிட்டுக்கொண்டே யிருக்கும்; காயாத ஓலைகள் அவ்வாறு ஓசையிடமாட்டா; இவற்றைபோலவே நூல்களை முறைப்படி கற்றுணர்ந்தவர், தாம் சொல்வதில் குற்றம் ஏற்படுவது இயற்கை யாதலின் அக்குற்றத்திற் கஞ்சி எதையும் ஆராயாமல் மிகுதியாகப் பேசமாட்டார்கள்; ஆராய்ந்து அளவோடு சுருங்கச் சொல்லுவார்கள்; கல்வியறி வில்லாதவர்கள் அக்குற்றத்திற் கஞ்சாமல் எதையும் ஆலோ

சனையின்றி அதிகரித்துக் கூவிப்பேசுவார்கள் என்பது இதன் கருத்து.

இதனால் மனிதர் எதையும் ஆராயாமலும், குற்றத்திற் கஞ்சாமலும் மிகப்படப்பேசுதல் அறிவின்மையென்பது கூறப்பட்டது.

பனையின் பச்சையோலை நீர்ச்சத்துள்ளதா யிருப்ப தால் எப்போதும் ஓசையிடாமலிருக்கிறது; காய்ந்தஓலை சத்தில்லாம லிருப்பதால் காற்றடிக்கும் போதெல்லாம் அசைந்து கலகலவென்றொலித்துக் கொண்டிருக்கின்றது; கல்வி யறிவுடையவர்களிடத்தில் மானக்கேட்டிற் கஞ்சும் பெருங்குணம் பொருந்தியிருப்பதால் அவ்விழிவு நேரா திருக்கும்பொருட்டு அவர் அடங்கியிருப்பர்; கல்வியில்லாத வரிடத்து இழிவுக் கஞ்சும் பெருங்குணமிராது; அதனால் அவர்கள் எங்கும் வாய்க்குவந்தவற்றையெல்லாம் ஆராயாது இரைச்சலிட்டுப் பேசித்திரிவர். இங்ஙனம். 'அறிஞர் அடங்கிப்பேசுவர், அறிவிலார் அடங்காது பேசுவர்' என்னும் கருத்தினை,

''சிற்றுணர்வோ ரென்றுஞ் சிலுசிலுப்பர் நன்கமைந்த
முற்றுணர்வோ ரொன்று மொழியாரே - வெற்றிபெறு
வெண்கலத்தி னோசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தி னுண்டோ வொலி''

என்னும் (நீதிவெண்பா-35-ஆம்) செய்யுளும் விளக்கும்.

''ஆக்கமுங் கேடு மதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு''

என்னும் (திருக்குறள்-642-ஆ,ம்) செய்யுளிற் கூறியபடி அறிவுடையார் சொற்சோர்வுக் கஞ்சுதல் இயற்கை; இதுபற்றியே ஔவையாரும்,

''சொற்சோர்வு படேல்''

என்றார். இச்செய்யுளில் பின்னிரண்டடிகளில் உபமானங்களைச் சொல்லி, உவமவுருபு விரிக்காமல் நிறுத்தியது எடுத்துக்காட்டுவமையணி. உபமனங்களில் வற்றியவோலை அறிவில்லார்க்குவமை; பச்சோலை கற்றறிந்தார்க்குவமை. இவற்றை உபமேயங்களை நிறுத்திய முறைப்படி நிறுத்தாமல் மாறுபட நிறுத்தி யிருக்கின்றனர் ஆசிரியர்; இவ்வாறு நிறுத்தியது- எதிர்நிரனிறைப்பொருள்கோளாம். மற்றையர்- மற்றையென்னும் இடைச்சொல்லடியாகப் பிறந்த பலர்பாற் பெயர். கலகலக்கும் - இரட்டைக்கிளவி; ஈரடுக்காய்வந்த ஓசைக்குறிப்பு. பசுமை= பச்சோலை. (கூ)

257. *பன்றிக்கூழ் பத்தரிற் றேமா வடித்தற்றால்*
நன்றறியா மாந்தர்க் கறத்தா றுரைக்குங்கால்
குன்றின்மேற் கொட்டுந் தறிபோற் றலைதகர்ந்து
சென்றிசையா வாகுஞ் செவிக்கு.

(இ-ள்.) நன்று அறியா- நன்மையை அறியாத, (இயற்கையை யுடைய), மாந்தர்க்கு - மனிதர்க்கு, அறத்து ஆறு- தருமமார்க்கங்களை, உரைக்கும்கால்- சொல்லும் போது, (அவை), பன்றிகூழ் பத்தரில்- பன்றிக்குக் கூழ்ஊற்றி வைக்கின்ற தொட்டியிலே, தேன்மாவடித் தற்று- தேன் மாம்பழத்தின் இரசத்தைப்பிழிந்து வார்த்தாற்போலும், (இன்னும்), குன்றின்மேல் - மலைப்பாறையின்மேலே, கொட்டும்- வைத்தடிக்கப்படும், தறிபோல்- கட்டுத்தறி போல, (அதாவது பாறையில் வைத்தடிக்கப்படும் கட்டுத்தறி கீழிறங்காமல் முனைமழுங்கி மேலேயே வருவதுபோல), தலைதகர்ந்து - பெருமை கெட்டு, செவிக்கு - (அவருடைய)

செவிகளில், சென்று இசையா ஆகும்- போய்ப் பொருந் தாதனவாம்; எ-று.

நன்மையை உணராத மனிதர்க்குத் தருமமார்க்கங் களை உரைக்குங்காலத்தில், அவை, பன்றிக்குக் கூழ்வார்க் கும் தொட்டியில் இனிய மாம்பழ இரசத்தை வார்த்தது போலச் சிறப்பில்லாதனவாய்ப் போகும்; மேலும், பாறை யில் அடிக்கப்படும் கட்டுத்தறி தலைதகர்ந்து உள்ளே இறங் காமல் மேலேயே நிற்பதுபோல அவருடைய செவிகளில் நுழையா என்பது இதன் கருத்து.

பன்றி, பவ்வீ முதலியவற்றைத் தின்னும் இழிந்த பிராணியாகலின், அதற்குக் கூழ்வார்க்கும் தொட்டி மனிதர் கண்டருவருக்கத் தக்கதாம்; அதில் இனிய மாம்பழ இரசத்தைப் பெய்துவைத்தால் அதனை அப்பன்றியும், பருகாது; எவரும் கையாலுந் தொடமாட்டார்கள்; அதனால் அதன்பெருமை முற்றும் அழிந்துவிடும்; அதுபோல அறி வில்லாருடைய மனத்திற் கெட்ட காரியங்களே பதிந்து கிடக்கும்; அதில் அறநெறிகளைப் புகவிட்டால் அவற்றை அவர் கொள்ளார்; அவை பிறராலும் விரும்பப்படா; அதனால் அவற்றின் பெருமைகெடும். பாறை சிறிதும் இளக்கமற்றதாயிருக்கும்; அதனால், அதில், அடிக்கப்படும் தறி இறங்காமல் நுனி சிதையும்; அதுபோல் அறிவில்லார் செவிகள் மூடத்தால் மூடப்பட்டுக் கெட்டியாயிருக்கும்; அதனால் அறநெறிகள் அவற்றினுட் புகாவென்க.

மூடர்க் கறநெறிகள் கூறினால் அவற்றின் பெருமை கெடும்; மேலும் அவர்களின் செவி அவற்றை ஏற்றுக் கொள்ளவு மாட்டாது; ஆதலின், அவர்க்கறநெறிகள் கூறுதல் அறிவின்மையென்பது அதனாற் பெறப்படும்.

பத்தரிற் றேமா வடித்தல், குன்றின் மேற் கொட்டுந் தறி ஆகிய இரண்டும் அறிவில்லார்க் கறநெறிகள் கூறலுக்

குவமைகளாம்; இங்ஙனம் இவற்றை உவமையாகக் கூறியது உவமையணி. இங்ஙனம், நன்மையறியார்க்குக் கூறப்படும் அறவுரையின் பெருமைகெடும் என்பதை,

''அங்கணத்து ளுக்க வமிழ்தற்றாற் றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல்''

என்னும் (திருக்குறள்-720-ஆம் செய்யுளும் உணர்த்தும்.

பத்தர்- மரத்தினாற் செய்யப்பட்ட தொட்டி; பன்றி, நாய் முதலியவற்றிற்குக் கூழ்வார்ப்பதற்குச் செய்துவைக்கப் படுவது; 'பத்தல்' என்பது மொழியிறுதிப் போலிபெற்று, 'பத்தர்' என வந்தது; லகரத்துக்கு ரகரம்போலி. தேன்மா- தேன்போலும் மா; உவமைத் தொகை;

''மெல்லெழுத் தியையி னிறுதியோ டுறழும்''

என்ற (தொல்-எழுத்-புள்ளி-ம-47-ஆம்) சூத்திரவிதிப்படி, 'தேன்' என்பதனீற்று னகரமெய்கெட்டு, 'தேமா' என்றாயது. மா- ஒருமரம்; இப்பெயர் பழத்திற்காய்ப் பழத்தின்பெயர் இரசத்திற்காய் இருமடியாகு பெயராயிற்று. அற்று- உவமை யுருபு. ஆல்- அசை. ''குன்றின் மேற் கொட்டுந்தறிபோல்'' என்னும் உவமை தொல்காப்பியம் சிறப்புப்பாயிரம் முதற்சூத்திரவுரையில், ''அப்பாயிரந்தான் தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன்போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும்போலவும் நூற்கு இன்றியமையாச் சிறப்பிற்றாயிருத்தலின், அது கேளாக்காற் குன்றுமுட்டிய குரீஇப் போலவுங் குறிச்சிபுக்க மான்போலவும் மாணாக்கன் இடர்ப்படுமென்க'' என்று கூறியவிடத்து ஆசிரியர் நச்சினார்க்கினியராற் கூறப்பட் டுளது; இதில், ''குன்றுமுட்டியகுரீஇ'' என்பது- கற்பாறை யில் முட்டிய தறியாம்; கட்டுத்தறியை பூமியில் வைத்து அடித்திறக்குங்காலத்தில் கீழே கற்பாறையிருந்தால் அதில்

முட்டியவுடன் இறங்காது; குரி-முளை; அதாவது, தறி; இது, 'குரீஇ' என அளபெடுத்து நின்றது; இதனையுணராதார், 'குரீஇ' என்பதற்குக் ''குருவி'' என்றும், வேறு வகையாகவும் பொருள்கூறியிடர்ப்படுவர். செவிக்கு - ஏழாம் வேற்றுமை நான்காம் வேற்றுமையாக வந்த உருபு மயக்கம்.

258. பாலாற் கழீஇப் பலநா ளுணக்கினும்
வாலிதாம் பக்க மிருந்தைக் கிருந்தன்று
கோலாற் கடாஅய்க் குறினும் புகலொல்லா
நோலா வுடம்பிற் கறிவு.

(இ-ள்.) (கரியை), பலநாள்- பலதினங்கள், பாலால் கழீஇ- (வெண்மை நிறமமைந்த) பாலினாலே கழுவி, உணக்கினும்- உலர்த்தி வைத்துக்கொண்டு வந்தாலும், இருந்தைக்கு - (இயற்கையிலேயே கரியநிறமுள்ள) கரிக்கு, வாலிது ஆம்பக்கம்- வெண்மை நிறமாகுந் தன்மை, இருந்தன்று - இராது, (அதைப்போல), (இயற்கையில் அறிவில்லாமல் மூடமே நிறைந்துள்ள ஒருவனை), கோலால் கடாஅய்- தடியினாலே அடித்து, (பயமுறுத்தி), அறிவு குறினும்- அறிவு கூறினாலும், நோலா- (முற்பிறப்பிலே இயற்கை ஞான முண்டாகும்படி) தவஞ்செய்யாத, உடம் பிற்கு - அந்த மனித வடிவமாகிய உடம்பினுக்கு, (அதாவது, அந்த அறிவற்ற மனிதனுக்கு), அறிவு- அந்த ஞானமானது, புகல் ஒல்லா - மனத்தினுள் நுழைதல் பொருந்தாது, (அதாவது, மனதிற் சேராது); எ-று.

இயற்கையில் கருமைநிறம் பொருந்திய அடுப்புக் கரியைப் பலநாள் பால்விட்டுத் தேய்த்துக் கழுவி உலர்த்தினாலும் அது வெண்மை நிறமடையாது; அதைப்போலவே இயற்கையில் மூடனாய்ப் பிறந்திருக்கும் (அஞ்ஞான இருளோடு கூடித் தோன்றியிருக்கும்) மனிதனை கோலால் அடித்து வருத்திப் பயமுறுத்தி அவனுக் கறிவு கூறினும் அவன் மனத்தி லது புகமாட்டாது என்பது இதன் கருத்து.

முந்தின பிறப்பில் தவஞ்செய்தவன் இப்பிறப்பில் இயற்கை ஞானத்தோடு பிறந்து செயற்கை றயிவும்பெற்று மேலும் மேலும் நற்கருமங்களையே செய்து நற்கதியடைவான்; முற்பிறப்பில் தவஞ்செய்யாதவன் இப்பிறப்பில் இயற்கை யறிவுமின்றி மூடனாய்ப் பிறந்து, செயற்கை யறிவையும் ஏற்றுக்கொள்ளாமல் மேலும் மேலும் கெட்ட காரியங்களையே செய்து தீக்கதியிற் சார்வான். ஆதலின், முற்பிறப்பில் தவஞ்செய்து இயற்கையறிவோடு பிறவாதவனுக்கு அறிவு கூறினால் அஃதவன் நெஞ்சத்துட்புகாதென்றார் முனிவர். இதனால், இயற்கை யறிவில்லாதவனுக்கு அறிவுகூறத் தொடங்குதல் அறிவின்மையென்பது விளக்கப்பட்டது. இச்செய்யுட் கருத்தினை, ''இருந்தை யிலங்க வெளிறுபடாதென்செய் தாலு நிம்பத், திருந்தைலந் தித்தியாது........'' என்னும் திருவரங்கத் தந்தாதிச் செய்யுளடிகளும் விளக்கும். இச்செய்யுள் எடுத்துக்காட்டுவமையணி அமைந்தது.

அறிவில்லா மனிதனை, அவன் இகழ்ச்சிதோன்ற, 'உடம்பு' என்றார்; இஃதிழிவுபற்றி உயர்திணையை அஃறிணையாற்கூறிய திணைவழுவமைதி. உணக்கின் - எதிர்காலவினையெச்சம்; இதில், 'உணங்கு' என்பதன் பிறவினையாகிய, உணக்கு- பகுதி; இன்- வினையெச்சவிகுதி. இரண்டும்மைகளும் - உயர்வு சிறப்புப் பொருளன; கழீஇ - சொல்லிசையளபெடை. வாலிது - ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர்; 'வால்' என்னும் நிறப்பெயரடியாகப் பிறந்தது; இதில், இ - சாரியை. இருந்தன்று- எதிர்மறை ஒன்றன்பால் வினைமுற்று. 'குறுக்கல்' என்னும் செய்யுள் விகாரத்தால், 'கூறின்' என்பது, 'குறின்' என நின்றது. ஒல்லா- எதிர்மறை ஒன்றன்பால் வினைமுற்று; ஒல்லாது- என்பது, துவ்விகுதி குறைந்துநின்றது. அறிவு, இரண்டிடங்களினுங் கூட்டப்பட்டது. (அ)

259. *பொழிந்தினிது நாறினும் பூமிசைதல் செல்லா*
திழிந்தவை காமுறூஉ மீப்போ- லிழிந்தவை
தாங்கலந்த நெஞ்சினார்க் கென்னாகுந்
தக்கார்வாய்த்
தேன்கலந்த தேற்றச் சொற் றேர்வு.

(இ-ள்.) பூ - மலரானது, பொழிந்து, (தேனைச்) சொரிந்து, இனிது- இனிமையுடையதாக, நாறினும் - (நல்ல மணம்) வீசினாலும், பூமிசைதல் செல்லாது- அப்பூவிலுள்ள தேனையோ மகரந்தத்தையோ உண்ணுதற்குப் போகாமல், இழிந்தவை- (கெட்டமணம்மிக்கு) இழிவாகிய பொருள் களை, காமுறூஉம் - விரும்புகிற, ஈபோல்- ஈயைப்போல, (உயர்ந்த பொருள்களெல்லாமிருக்க, அவற்றைவிட்டு), இழிந்தவை தாம் கலந்த- தாழ்ந்த பொருள்களைப் பொருந்தி யிருக்கின்ற, நெஞ்சினார்க்கு - உள்ளத்தையுடைய மூடருக்கு, தக்கார்வாய்- (அறிவொழுக்கங்கள் நிறைந்த) தகுதியுள்ளவர் களின் வாயிலிருந்து வெளிப்படுகின்ற, தேன்கலந்த - தேனின் தன்மை (அதாவது, இனிமை) பொருந்திய, தேற்றம்- தெளிவுள்ள, சொல்- நல்லுபதேச மொழிகளின், தேர்வு- தெளிவு, என்ஆகும்- என்ன பயனுடைய தாகும்?, (ஒருபயனையும் தராது); எ-று.

நல்ல மலரானது, தேனைச்சொரிந்து நறுமணம் வீசினாலும், துர்நாற்றமுள்ள தாழ்ந்த பொருள்களையே விரும்பும் ஈயானது அப்பூவிலுள்ள தேனையோ, மகரந்தத் தையோ உண்ணுதற்குச் செல்லாது; அதைப்போல கெட்ட எண்ணங்களே பொருந்தி யிருக்கின்ற மூடருக்கு அறிவு நிறைந்த பெரியோரின் உபதேச நன்மொழிகளின் தேர்ச்சி ஒரு பயனையும் தராது என்பது இதன் கருத்து.

ஈ, நன்மலர்த்தேனையோ, மகரந்தத்தையோ விரும் பாதது போல மூடர் அறிஞர்கூறும் அறவுரையை விரும்பா ரென்பதும் அதன்பயனை அடையாரென்பதும், அவர்க்கறிவு

கூறத் தொடங்குதல் அறிவின்மையென்தும் இதில் விளக்கப்பட்டன.

பூ- என்பது, இரண்டிடங்களிற் கூட்டப்பட்டது; இது, தேனுக்கோ, மகரந்தத்துக்கோ இடவாகுபெயராய் நின்று அவற்றிலொன்றை யுணர்த்திற்று. 'பூ' என்றுரைத்த குறிப்பால், 'பொழிந்து' என்பதற்குமுன், 'தேனை' என்னுஞ் சொல் வருவித்துரைக்கப்பட்டது. இனிது - ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும்பெயர்; இனிமையென்னும் பண்படியாகப் பிறந்தது; இஃதிங்கே வினையெச்சப் பொருண்மையுடைத்தாய், 'நாறின்' என்பதையடுத்து வினையுரியாய் நின்றது. உம்மை- உயர்வு சிறப்புப் பொருளது. காமம் உறு- என்பது விகாரப்பட்டு, 'காமுறு' எனநின்றது. 'தேன்' என்பது முதலாகுபெயராய் அதன் தன்மையை உணர்த்திநின்றது; இனி, 'தேம்கலந்த' என்று பாடங்கொண்டு, 'இனிமை பொருந்திய' எனப் பொரு ளுரைத்தலுமாம். காமுறூஉம் - இன்னிசையளபெடை. (கூ)

260. *கற்றா ருரைக்குங் கசடறு நுண்கேள்வி*
பற்றாது தன்னெஞ் சுதைத்தலான்- மற்றுமோர்
தன்போ லொருவன் முகநோக்கித் தானுமோர்
புன்கோட்டி கொள்ளுமாங் கீழ்.

(இ-ள்.) கீழ்- கீழ்மகன், கற்றார் (நூல்களைப்) படித்துணர்ந்தவர்கள், உரைக்கும் - சொல்லுகின்ற, கசடுஅறு- குற்றமற்ற, நுண்கேள்வி-நுட்பமான நூட்பொருட் கேள்விகளை, தன்நெஞ்சு - தன்னுடைய மனம், பற்றாது- உயர்ந்தனவாக உட்கொள்ளாமல், உதைத்தலால்- (அவமதித்துத்) தள்ளிவிடுவதனால், (அவைகளைவிட்டு), தன்போல்- தன்னைப் போன்ற, மற்றும் ஒருவன் முகம்நோக்கி- பின்னுமொருவனது முகத்தைப்பார்த்து, தானும்- (அறிவில்லாத) தானும், ஓர்புல் கோட்டிக்கொள்ளும்- ஓர் அற்பமான பிரசங்கம் செய்

தலைக் கொள்ளுவான்; (அதாவது ஓர் இழிவான பிரசங் கத்தைச் செய்வான்);

கீழ்மகன், நூல்களைக்கற்ற அறிஞருடைய சொற் பொருள்களை அறியும் புத்தியுடையவனா யிருக்கமாட் டான்; ஆதலால், அவர்களுடைய பிரசங்கத்தைக் கேளாமல், தானும் அவர்களைப்போல் புகழடைய விரும்பித் தன்னைப் போன்ற மூடனிடத்தில் அறிஞர் கேட்டு அருவருக்கத்தக்க வழுச்சொற்களை பிரசங்கிப்பான். கீழ்மகனிடத்தில் புகழுக் குரிய செயல்கள் சிறிதும் இல்லாவிடினும் அவன், போலித் தனமாக எதையும் செய்து புகழடைய விரும்புவான்; உண்மைப் புகழடையும் அறிஞர்மீது பொறாமைகொள் வான்; இக் காரணங்களாலேயே இவ்வாறு தன்னைப்போன்ற மூடனிடத்தில் பிரசங்கம்செய்வான். இச்செயலை இக்காலத் தில் பல கீழ்மக்களிடத்தில் பிரத்தியக்ஷமாகக் காணலாம். இஃதறி வின்மையென்பது இதனால் விளக்கப்பட்டது.

குற்றமாவது- ஐயந்திரிபுகள். கற்றார்- உயர்திணைப் பன்மை யிறந்தகால வினையாலணையும் பெயர். கோட்டி- கூட்டம்; இஃதிடவாகுபெயராய் இதிற்கூறப்படும் சொல்லை யுணர்த்திற்று. ''அரங்கின்றி வட்டாடியற்றே நிரம்பிய, நூலின்றிக் கோட்டி கொளல்'' என்னும் 401-ஆம் திருக்குறட்செய்யுளில், 'கோட்டி' என்பதை, ஆகுபெய ரென்று பரிமேலழகர் உரையிற் கூறியிருத்தல் காண்க. 'தானும்' என்பதிலுள்ள உம்மை- இழிவு சிறப்புப் பொருளது. கீழ்- தாழ்ந்த தன்மை; இது பண்பாகுபெயராய்த் தாழ்ந்த குணமுடையவனை யுணர்த்திநின்றது. ஆம்- அசை. (கo)

அதிகாரம் 27

நன்றியில் செல்வம்

நன்றியில் செல்வமாவது; பயனற்ற செல்வமாம்; அதாவது, தன்னை அடைந்தவனுக்கும், பிறர்க்கும் ஒருபயனையும் தராதசெல்வ மெனப்படும்; இவ்வதிகாரம் அத்தகைய செல்வத்தின் இயற்கையைக் கூறுவது; ஆதலின், இப்பெயர்பெற்றது. செல்வத்தைப் பயனற்றதாகச் செய்வது அறிவின்மையாம்; ஆதலின், இஃதவ்வதிகாரத்தின் பின் வைக்கப்பட்டது. பயனற்ற செல்வத்தால் இன்பமில்லை; ஆதலின், அதன் இயல்பை எடுத்துக்கூறி இன்பம் பெறும் வழியை இவ்வதிகாரம் உணர்த்துதலின், இன்பவியலிற் சேர்க்கப்பட்டது. 'நன்றி' என்பது பண்பாகுபெயராய் நற்பயனை யுணர்த்திற்று. இல் செல்வம்- பண்புத்தொகை.

261. *அருகல தாகிப் பலபழுத்தக் கண்ணும்*
பொரிதாள் விளவினை வாவல் குறுகா
பெரிதணிய ராயினும் பீடிலார் செல்வம்
கருதுங் கடப்பாட்ட தன்று.

(இ-ள்). (விளாமரமானது)அருகலது ஆகி- பக்கத் திலிருப்பதாய், பல பழுத்தக்கண்ணும் - பல பழங்கள் பழுத்தவிடத்தும், பொரிதாள்- பொரிந்த அரையையுடைய,

விளவினை - அவ்விளாமரத்தை, வாவல்-(எளிதாகப் பழங்களைத்தின்னும்) வெளவால்கள், குறுகா- சேரமாட்டா, (அதைப்போல), (ஈகையில்லாதவர்), பெரிது அணியர் ஆயினும் - மிகவும்சமீபத்திலே யிருப்பவர்களாயிருந்தாலும், பீடுஇல்லார்- (எளிதாகப் பிறர்க்கீதலாகிய) பெருமைக் குணம் இல்லாத அவர்களுடைய, செல்வம்- செல்வமானது, கருதும்- (ஏழைகளால் தமக்குக் கிடைக்கும் என்று) கருதப் படும், கடப்பாட்டது அன்று- ஈகைக்குரியதன்று, எ-று.

சமீபத்திலே விளாமரம் அநேக பழங்களையுடையதா யிருப்பினும் அப்பழங்களைத் தின்ன வெளவால்கள் அதனிடத்தே சேர மாட்டா; அதைப்போலவே ஈகையில்லாத பணக்காரர் பக்கத்திலிருந்தாலும் அவர் செல்வம் ஏழை கட்குப் பயன்படாதென்பது இதன் கருத்து.

விளாம்பழம் கெட்டியான மேல்தோட்டை யுடைய தாதலின், வெளவால்கள் அதனைக் கடித்துத் தின்னுதல் இயலாது; அதனால் அவை அவற்றிற்குப் பயன்படுவ தில்லை; அவற்றை உடைத்து, நொறுக்கித் தின்னும் மனிதருக்கும், சில மிருகங்கட்குமே பயன்படும். அதைப் போல ஈகையில்லாதவர்களுடைய செல்வம் மெலிந்த தன்மையுடையராகிய ஏழைகள் பெறுதற்கியலாது; அவரை அடித்துப் பொருள் பறிக்கும் திருடர், முரடர், முதலியவர் களாலேயே கைப்பற்றிக் கொள்ளப்படும் என்பன இதில் விளக்கப்பட்டன.

இதனால், ஏழைகட்குப் பயன்படாத செல்வத்தால் இன்பமில்லை யென்பதும், எளியார்க்குதவும் பொருளே இன்பம் பயக்குமென்பதும் குறிப்பிடப்பட்டன.

முன்னிரண்டடிகளில் உள்ளது உபமானம்; பின்னிரண்டடிகளில் உள்ளது உபமேயம்; இவற்றை உவமையுருபின்றிக் கூறியது- எடுத்துக்காட்டுவமையணி.

அருகல்+அ+து=அருகலது; இது, 'அருகல்' என்னும் தொழிற்பெயரடியாப் பிறந்த உடன்பாட்டு ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர்; அருகல்- பகுதி, து- ஒன்றன்பால் விகுதி, அ- சாரியை; இனி, 'அருகு அல்லது ஆகி' எனப்பிரித்து, 'அருகு' என்னும் வினைப்பகுதி யடியாப் பிறந்த எதிர்மறை யொன்றன்பால் தெரிநிலை வினை யாலணையும் பெயராகக் கொண்டு, 'குறையாததாய்' என்று பொருள் கோடலுமொன்று. உம்மைகள்- உயர்வு சிறப்புப் பொருளன. கண்- தெரிநிலைவினையெச்சவிகுதி. விளாமரம் பொரியரையுள்ளதாதலால், 'பொரிதாள் விளவினை' எனப் பட்டது. விளா மரத்தின் அடிப்பாகம் பொருக்குகளை யுடையதாயிருக்கும். 'விள' என்பது தனிப்பெயராகவேனும், 'விளா' என்பதன் ஆக்குறுகினதாகவேனும் கொள்ளப்படும். 'விளவினை' என்பதில், இன் - சாரியை, ஐ- இரண்டாம் வேற்றுமை யுருபு. 'வாவல்' என்பது, பால்பகாவஃறிணைப் பெயர்; ஆதலின், 'குறுகா' என்னும் பலவின்பால் வினை முற்றைக் கொண்டு முடிந்தது. பெரிது- குறிப்புமுற்று; இஃதிங்கெச்சமாய் வினையுரியாயிற்று. அணியர்- குறிப்பு வினையாலணையும் பெயர்; 'அணிமை' என்னும் பண் பினடியாப் பிறந்தது. கடப்பாடு - ஈகை; முறைமையென லுமாம்; கடப்பாட்டது- கடப்பாடு என்பதனடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர். பாடது- என்னும் உயிர்த் தொடர்க் குற்றியலுகரத்தின் டகரவொற் றிரட்டி, 'பாட்டது' என்றாயது.

262. *அள்ளிக்கொள் வன்ன குறுமுகிழ வாயினுங்*
கள்ளிமேற் கைநீட்டார் சூடும்பூ வன்மையாற்
செல்வம் பெரிதுடைய ராயினுங் கீழ்களை
நள்ளா ரறிவுடையார்.

(இ-ள்) (மலரால் பயனைத்தராத கள்ளிகள்), அள்ளி கொள்வ அன்ன- (கைகளால்) அள்ளி யெடுத்துக்கொள்வன போன்ற, (அழகுமிக்க), குறுமுகிழ ஆயினும்- சிறிய அரும்பு

களை யுடையனவா யிருப்பினும், (அவை), சூடும்பூ அன்மையால் - சூட்டிக்கொள்ளத் தக்க மலர்களல்லாமை யால், கள்ளிமேல்- அந்தக் கள்ளிமரங்களின் மேல், (எந்த மனிதரும்), கைநீட்டார்- (அந்த மலர்களைக் கொய்வதற்குக்) கையை நீட்டமாட்டார்கள்; (அதைப்போலவே பொருளிருந் தும் பிறர்க் குபகாரம் செய்யாத கீழ்மக்கள்), செல்வம் பெரிது உடையர் ஆயினும் - செல்வத்தை அதிகமாக வுடையவர்களா யிருந்தாலும், கீழ்களை- அந்தக் கீழ் மக்களை, அறிவுடை யார்- புத்தி யுடையவர்கள், (பொருள் பெறும்பொருட்டு), நள்ளார்- விரும்பி அடையமாட்டார்கள்; எ-று.

கள்ளி மரங்கள், அழகிய சிறிய அரும்புகளை யுடையனவாயிருந்தாலும் அவை சூட்டிக்கொள்ளத் தக்க மலர்களாகா வாதலால், அவற்றைப் பறிப்பதற்கு மனித ரெவரும் அந்தக் கள்ளிகளின்மீது கையை நீட்டமாட்டார்கள்; அதைப்போலவே பிறர்க்குதவாத இயற்கையுடைய கீழ் மக்களிடத்திலே செல்வம் அதிகரித்திருந்தாலும் அது பிறர்க்குப் பயன்படாத தாகலின் அதனைப் பெறுதற்கு அறிவுடையார் அவர்களை விரும்பி யடையமாட்டார்கள் என்பது இதன் கருத்து.

இதனால், பிறர்க்குதவி செய்யாத கீழ்மக்களிடத்தில் பொருளிருப்பதால் அவர்க்கேனும், பிறர்க்கேனும், இன்பமில்லை யென்பது குறிக்கப்பட்டது.

மனிதர், இனிமை மிக்க பொருள்களைக் கண்டால், அவர்க்கு அள்ளிக்கொள்ளும்படியான அவா உண்டாவது இயற்கை; ஆகலின், ''அள்ளிக்கொள்வன்ன குறுமுகிழ'' என்றார் முனிவர்; இஃதழகின் சிறப்பு நோக்கிக் கூறியது; குணத்தைப்பற்றி யுரைத்ததன்று; அழகிருந்தாலும் சூடிக் கொள்ளும் குணமில்லை யென்பதை விளக்கியதாம். 'கொள்வ அன்ன' என்பது அகரந்தொக்கு, 'கொள்வன்ன' என்றாயது. முகிழ் - முகிழ்ப்பது; இதில், வினை முதற்

பொருள் விகுதி புணர்ந்து கெட்டது. உம்மைகள் இரண்டும்- உயர்வு சிறப்புப்பொருளன. கைநீட்டார்- இரண்டாம் வேற்றுமைத் தொகை; ஆதலின், ''குறில் வழியத் தனியைந்நொது முன்மெலி, மிகலுமாம்'' என (நன்-உயி-பு- 8-ஆம்) சூத்திரத்திற் கூறிய பொது விதிப்படி தனி ஐ முன் மெலி மிகாதாயிற்று. இச்செய்யுளும் எடுத்துக்காட்டுவமை யணி அமைந்தது. (உ)

263. *மல்கு திரைய கடற்கோட் டிருப்பினும்*
வல்லூற் றுவரில் கிணற்றின்கட் சென்றுண்பர்
செல்வம் பெரிதுடைய ராயினுஞ் சேட்சென்று
நல்குவார் கட்டே நசை.

(இ-ள்.) (மனிதர்) மல்கு- மிகுந்த, திரைய- அலைகளை யுடைய, கடல்- சமுத்திரத்தினது, கோடு - கரையிலே, இருப்பினும்- இருந்தாலும், வல்ஊற்று-வலிய ஊற்றை யுடைய, உவர் இல்- உப்புச் சுவையில்லாத, கிணற்றின்கண் கிணற்றினிடத்தே, சென்று- போய், உண்பார்- அதன் நீரைப் பருகுவார்கள், (அதைப்போலவே உலோபகுணத்துடன்), செல்வம் பெரிது உடையர்- ஐசுவரியம் மிகுதியாக உடையவர்கள், ஆயினும் - (சமீபத்தில் இருப்பார்) ஆனாலும் (அவரிடம் செல்லமாட்டார்கள்); (ஈகைக்குணமுள்ளார் தூரத்திலிருந்தாலும்), நசை - (அவர்க்குப் பொருள் பெற வேண்டு மென்னும்) விருப்பமானது, சேண் சென்றும் - அந்தத் தூரமான விடத்திற்குச் சென்றும், (செல்வங் குறைந்தவர்களா யிருந்தாலும்), நல்குவார்கட்டே - (அவ்வாறு பொருளைக்) கொடுப்பவர்களிடத்திலேயே (உளதாகும்) எ-று.

மனிதர், கடற்கரையிலிருந்தாலும், அதன் நீரானது உவர்ச்சுவை யுடையதாய்ப் பருக யோக்கியமற்றிருத்தலினாலே, அதை விரும்பாமல், உவர்த்தன்மையல்லாத நன்னீரையுடைய கிணற்றினிடத்தே சென்று அதன் நீரைப்

பருகுவர்; அதைப்போலவே உலோபத்துவமுடைய செல்வந்தர்கள் சமீபத்திலிருந்தாலும் அவர்களிடம் பொருளைப் பெற விரும்பிச் செல்லமாட்டார்கள்; ஈகையுடையார் நெடுந்தூரத்தி லிருந்தாலும் அங்குச் சென்றாவது அவர்களிடத்தே பொருள்பெறும் விருப்பத்தைச் செலுத்துவார்கள் என்பது இதன் கருத்து.

கடல் மிக்க நீர்ப்பெருக்கையுடையதா யிருப்பினும் அந்நீர் உப்புடையதா யிருத்தலின் அதனை எவரும் விரும்பார்; கிணறு வலிதில் ஊறும் நீரையுடையதா யிருப்பினும் அந்நீர் நற்சுவையுடையதா யிருக்குமாதலின் மனிதர் அதனை விரும்பிக்குடிப்பர்; உலோபிகளிடத்தில் செல்வம் மிகுந் திருப்பினும் பிறர்க்கினிமை தரத்தக்க தன்றாகலின், மனிதர் அதனை விரும்பி அவரிடம் செல்லார்; ஈகையுடையார் செல்வம் குறைந்தவர்களா யிருப்பினும் அது பிறர்க்குப் பயன்பட்டினிமை செய்வதாகலின், அவர்களிடம் பொருள் பெற விரும்புவர். இச்செய்யுளும் எடுத்துக் காட்டுவமை யணியோடு கூடியது. இச்செய்யுளால் ஈகையில்லார் செல்வத்தால் இன்பமில்லை யென்பதும், ஈகையுள்ளார் செல்வத்தால் இன்பமுண்டென்பதும் விளக்கப்பட்டன.

மல்குதிரை- வினைத்தொகை. திரைய- குறிப்புப் பெயரெச்சம்; இருப்பினும், ஆயினும் என்பவற்றிலுள்ள உம்மைகள்- உயர்வு சிறப்புப் பொருளன. 'சென்றும்' என்பதன் உம்மை- இழிவு சிறப்புப் பொருளது. வல் ஊற்று - கடினமான ஊற்று; அதாவது, மண் இளகி நீர் அதிகமாக ஊறாமல் அவ்விடம் கெட்டியாய்ச் சிறிது நீர் ஊறுவது; நீரின் அருமைதோன்ற இங்ஙனம் கூறினார் முனிவர்; சிறிது நீர் மட்டும் ஊறும் ஊற்று, 'அருமூற்று' எனப்படும். வல்- பண்புப்பகுதி. ஊற்று- முதனிலை திரிந்த தொழிற்பெயர்; 'ஊறுதல், என விரியும். கோடு - நீர்க்கரை; இது நெடிற்றொடர்க்குற்று கரமாகலின் டகரவொற்றிரட்டிற்று. இல்-

குறிப்புப் பெயரெச்சம். 'உண்பர்' என்பது பருகுதற் பொருளில் வந்தது. இதில் பொருள் முடிபுக் கேற்பப் பல சொற்கள் கூட்டி யுரைக்கப்பட்டன. 'கட்டே' என்பதில், ஏ- தேற்றப்பொருளது; கண்- பகுதி, து- ஒன்றன்பால் விகுதி, ணகரம் டகரமானது விகாரம். (ந)

264. *புணர்கடல்சூழ் வையத்துப் புண்ணியமோவேறே*
உணர்வ துடையா ரிருப்ப - வுணர்விலா
வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வரே
பட்டுந் துகிலு முடுத்து.

(இ-ள்.) புணர்கடல்- நெருங்கிய சமுத்திரம், சூழ்- வளைந்த, வையத்து - பூமியில், புண்ணியமோ- (மனிதரால், முற்பிறப்பிற் செய்யப்பட்ட) புண்ணியத்தின்பயனோ, வேறே - (அவரவர் செய்யும் முயற்சிகளுக்கும் செய்கைகளுக் கும்) வேறுபட்டதாகும், (ஆதலின்), உணர்வது உடையார் - (அறியத்தக்கவைகளையெல்லாம் அறியும்) அறிவுடையவர் கள், இருப்ப- (செல்வமின்றி) இருக்க, உணர்வு இல்லா- அவ் வறிவேயில்லாத, வட்டும்- கறிமுள்ளியையும், வழுதுணை யும் - கத்தரியையும், போல்வாரும்- நிகர்ப்பவர்களும், (அதாவது, அவற்றைப்போல் அசேதனராயிருப்பவர்களும்), பட்டும் துகிலும் உடுத்து - பட்டாடைகளையும் வேறு வகை நல்லாடைகளையும் கட்டிக்கொண்டு, (செல்வம்மிகுந்து), வாழ்வர்- வாழ்வார்கள், (இவற்றிற்குக்காரணம் அப் புண்ணியப்பயனின் இன்மையும், உண்மையுமாம்); எ-று.

மனிதர், முற்பிறப்பில் செய்த புண்ணியப் பய னானது, இப்பிறப்பில் செய்யும் செய்கைகளோடு சேராமல் வேறாயிருக்கின்றது; அதனாலேயே அறிவுடையவர் செல்வ மின்றியிருக்க, அறிவில்லாதவர் மிக்க செல்வமுடையவர் களாய்ப் பட்டாடை முதலியன வுடுத்தி வாழ்வார்கள் என்பது இதன் கருத்து.

மனிதர் முற்பிறப்பிற் செய்த புண்ணியப்பயன் அவரிடத்திற்றானேவந்து சேரும்; எப்படியெனில் இப் பிறப்பில் அறிவில்லாத ஒருவன் முற்பிறப்பில் பொருள் சேரத்தக்க புண்ணியம் செய்திருப்பானாயின் அச்செல்வம் அவனிடத்து முயற்சியில்லாமலே தானே வந்து சேரும்; அறிவுடைய ஒருவன் முற் பிறப்பில் அப்புண்ணியத்தைச் செய்திராவிடில் அவனிடம் பொருள் சேராது; முற்பிறப்பில் அறிவு சேரத்தக்க புண்ணியத்தைச் செய்தவன் இப்பிறப்பில் அறிவுடையவனாயிருப்பான்; அதைச் செய்யாதவன் அறிவில்லாதவனாயிருப்பான். அறிவுடையார் பொருளின்றி யிருப்பதற்கும், அறிவில்லார் செல்வவான்களாயிருத்தற்கும் இதுவே காரணமாம். ஆதலின், இப்பிறப்பிலும் புண்ணி யத்தைச் செய்வோரே மறுமையில் இன்பமடைவர். அறி வுடையார் செல்வ மில்லாவிடினும் அவ்வறிவைக் கொண்டே நற்காரியங்களைச்செய்து புண்ணியத்தைத் தேடிக் கொள்வர்; அறிவில்லார் செல்வமிருப்பினும் நற்காரியங் களைச் செய்து புண்ணியத்தைத் தேடிக்கொள்ள மாட்டார். ஆகவே, அவர் பட்டுந்துகிலு முடுத்துச் செல்வம் பெற்று வாழினும் அச்செல்வத்தால் மறுமையில் அடைய வேண்டிய இன்பப் பயன் அவர்க்கில்லை. இக்கருத்து இச்செய்யுளால் விளக்கப்பட்டது.

''உணர்விலாவட்டும் வழுதுணையும்போல்வாரும் வாழ்வரே'' என்ற குறிப்பால், அவர் வாழ்க்கையும், செல்வமும் பயனற்றனவென்பதும், பிறவும் வருவித்துரைக்கப்பட்டன; இவை குறிப்பெச்சத்தின் பாற்படும்;

''அவைதாம்,
தத்தங் குறிப்பி னெச்சஞ் செப்பும்''

என்பது (தொல்-சொல்-எச்- 44) சூத்திரம். இச்செய்யுளிற் கூறிய படி அறிவைத்தரும் புண்ணியம் வேறு, திருவைத் தரும் புண்ணியம் வேறு என்பதை,

''இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு''

என்ற (திருக்குறள்.374-ஆம்) செய்யுளால் திருவள்ளுவ னாரும் விளக்கியிருத்தல் காண்க. 'புண்ணியமோ' என்பதி லுள்ள ஓ - சிறப்புப் பொருளது;

''பிரிநிலை வினாவே யெதிர்மறை யொழியிசை
தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ
யிருமூன் றென்ப வோகா ரம்மே''

என்னும் (தொல்-சொல்.இடை-8ஆம்) சூத்திரம்பார்க்க. 'வேறே' என்பதன் ஏகாரம்- தேற்றப் பொருளது. 'வாழ்வரே' என்பதின் ஏ- தெளிவும் பொருளது. வேறு- இருதிணைப் பொதுக்குறிப்பு முற்று. 'போல்வாரும்' என்பதன் உம்மை - இழிவு சிறப்பு; மற்றை நான்கும்மைகளும் எண்ணுப் பொருளன. உணர்வில்லார் மிகத் தாழ்ந்தவரென்பதைக் குறித்தற்குத் தாழ்ந்த செடிகளாகிய கறி முள்ளியும், கத்திரியும் அவர்க்குவமையாகக் கூறப்பட்டன. (*ச*)

265. *நல்லார் நயவ ரிருப்பநயமிலாக்*
கல்லார்க் கொன் றாகிய காரணம் - தொல்லை
வினைப்பய னல்லது வேனெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில்.

(இ-ள்) வேல்- வேலாயுதத்தைப்போன்ற, நெடு- நீட்சியாகிய, கண்ணாய்- கண்களையுடைய பெண்ணே! (அறிஞர் வறிஞராயிருப்ப, அறிவிலார் செல்வம் பெற்றிருக் கின்றனர்; அவ்வாறு), நயவர்- நற்குணத்தை யுடையவரான, நல்லார்- நல்லறிஞர், இருப்ப- (செல்வமின்றி) இருக்க, நயம் இல்லா- நற்குணமில்லாத, கல்லார்க்கு- கல்வியறிவில்லா தவர்க்கு, ஒன்று- ஒருசெல்வம், ஆகிய காரணம்- உண்டாகிய காரணம், (யாதெனில்), தொல்லை- பழமையாகிய,

(அதாவது, முற்பிறப்பிற்செய்த), வினைபயன் அல்லது - நல்வினைப் பயனேயல்லாமல், நினைப்ப- ஆலோசித்துப் பார்க்க, வருவது - (மனத்தில்) தோன்றுவது, ஒன்றுஇல்- வேறொன்றுமில்லை; எ-று.

முந்தின செய்யுளிற் கூறப்பட்ட கருத்தே இதிலும் கூறப்பட்டது. முதலில் உள்ள, ஒன்று- எண்ணலளவை யாகுபெயராய்ச் செல்வத்தை யுணர்த்திற்று; ஈற்றிலுள்ள ஒன்று- ஒரு காரணத்துக்கு எண்ணலளவை யாகு பெயரா யிற்று. நல்லார் நயவர்- இருபெயரொட்டுப் பண்புத் தொகை. வினை-நல்வினை, தீவினை ஆகிய இரண்டுக்கும் பொது வெனினும் செல்வங்கூறிய குறிப்பால் நல்வினையெனக் கொள்ளப்பட்டது. கண்ணின் கூர்மைக்கும், வடிவிற்கும், ஆடவரைத் துன்புறுத்துந் தன்மைக்கும் வேல் உவமை கூறப் பட்டது. கண்ணாய்- மகடூஉ முன்னிலை; கண்ணாள் என்பதன் விளி. (ரு)

266. *நாறாத் தகடே போ னன்மலர்மேற் பொறப்பாவாய்*
நீறாய் நிலத்து விளியரோ- வேறாய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலு
நன்மக்கள் பக்கம் துறந்து.

(இ-ள்.) நாறா- நன்மணம் வீசாத், தகடேபோல்- புற விதழ் போல, நல்மலர்மேல்- (மலர்களெல்லாவற் றுள்ளும்) சிறந்த தாமரை மலரின்மீது வீற்றிருக்கின்ற, பொன்- இலக்குமியாகிய, பாவாய்- பெண்ணே!, நீ-, பொன் போலும்- பொன்னை நிகர்த்துயர்வு பொருந்தி யிருக்கின்ற, நல் மக்கள் பக்கம் - நற்குணமுடைய மனிதர் களின் இடத்தை, துறந்து- விட்டுநீங்கி, வேறு ஆய- (அந்த நல்ல மனிதர்களினின்றும்) வேறுபட்ட, புல்மக்கள் பக்கம்- தாழ்வையுடைய மனிதர்களிடத்தில், புகுவாய்-சேர்வாய், (இதுநின்பெருமைக்கேற்ற செய்கையாகாது; ஆதலின்),

நிலத்து- இவ்வுலகத்திலே, நீறு ஆய்விளி-சாம்பலாகி மடி வாயாக; எ-று.

திருமகளே! நீ நல்ல மனிதரைவிட்டு நீங்கி இழி வானவர்களிடத்திற் சேர்வாய்; ஆதலின், தகுதியற்ற இக் காரியத்தைச் செய்யும் நீ சாம்பலாய் இறந்தொழிவாயாக என்பது இதன் கருத்து.

செல்வம் கீழ்மக்களிடத்தில் ஊழினாற் சேர்கின்றது; எனினும் அதனால் அவர்க்குப் பயனில்லை என்பது முன் செய்யுட்களிற் கூறியிருப்பதற்கேற்ப இச்செய்யுளில், அவ்வாறு அறிவுடையாரைவிட்டு அறிவில்லார்பாற் வேரும் அச்செல்வம் ஊழினாற்சேரினும், அவரிடம் இருப்பதைக் காட்டினும் ஒழிவதே நல்ல தென்பது கூறப்பட்டது. இதனால் அறிவில்லாரிடம் சேரும் செல்வத்தால் ஒரு நன்மை யுமில்லை யென்பது விளக்கப்பட்டது. செல்வத்துக்கு அதி தேவதை திருமகளாதலின் அவளையே செல்வமாகப் பாவித்து விளித்து இங்ஙனம் கூறினார் முனிவர். இச்செய்யுள் ஆசிரியரே இலக்குமியை வெறுத்துக் கூறியதாகும், இவ்வதி காரம் நன்றியில் செல்வத்தைக் கூறுவதாகலின்.

தகடு- மலரின்புறவிதழ்; இது பூவோடு கூடியிருப் பினும் பூவின் மணம் இதற்கில்லை; இலக்குமி எப்போதும் தாமரை மலரில் இருந்தாலும் அதைப்போல் நல்லோரிடம் சேரும் தன்மை அவளுக்கில்லை; ஆதலின், இப்புறவிதழ் அவளுக்குவமையாகக் கூறப்பட்டது; தாமரை மலரைத் தேவர்கள் முதலிய நல்லோரே சூடுவர்.

'தகடே' என்பதில், ஏ- அசை. நல்- சிறப்புப் பொரு ளுணர்த்தி நின்றது. 'மலர்' என்பது பொதுப்பெயரெனினும், 'பூவினுக் கருங்கலம் பொங்குதாமரை' என்பதனாலும், 'பூவெனப்படுவது பொறிவாழ் பூவே' என்பதனாலும் சிறப்பு

நோக்கித் தாமரை மலரை யுணர்த்திற்று. பொன்பாவாய் - இருபெயரொட்டு; பாவை- இலக்குமிக்கு உவமையாகு பெயர்; இதன் விளி, பாவாய். இனி, 'பொன்பாவாய்' என்பதை மூன்றாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப்பெயரெனக் கொண்டு, 'பொன்னாலாகிய பதுமைபோன்ற இலக்குமியே' எனப் பொருள் விரிப்பினும் அமையும்; இங்ஙனங் கொள்ளு மிடத்து இவ்வுவமையால், 'எல்லாராலும் விரும்பப்படும் பொற்பாவைபோன்ற அழகு இலக்குமிக்கிருந்தும் அதற் கேற்ற குணமும் செயலும் இல்லாது கீழ் மக்களிடம் சேர்ந்தாள் என்பது அமையும். நன் மக்கள் அருமை குணமும், நன் மதிப்பும், மங்களகரமும், யாவராலும் விரும்புந் தன்மையும், பிறர்க்குப் பயன்படுந் தன்மையு முடையராக லின், இந் நல்லியற்கைகளனைத்தும் பொருந்திய பொன் அவர்க்குவமையாகக் கூறப்பட்டது. விளி- ஏவலொருமை வினைமுற்று. அரோ- ஈற்றசை. பக்கம்- ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. (௬)

267. *நயவார்க ணல்குரவு நாணின்று கொல்லோ*
பயவார்கட் செல்வம் பரம்பப்- பயின்கொல்
வியவாய்காண் வேற்கண்ணா யிவ்விரண்டு மாங்கே
நயவாது நிற்கு நிலை.

(இ-ள்) வேல் - வேலைப்போலும், கண்ணாய்- கண்களையுடையவளே! (பிறர்க்குதவி செய்யும் நன்மக்க ளிடத்தில் வறுமையும், பிறர்க்குதவாத கீழ் மக்களிடத்துச் செல்வமும் ஊழ்வினையாற் சேர்ந்திருக்கின்றன; எனினும் இவை இவ்வாறு இவரிடத்துப்பற்றி நிற்பது தகாது; இவை தங்கி நிற்றற்குரியார் இவரல்லர்; ஏனெனில், ஈகையாளர் வறுமையை ஒரு பொருளாகவே மதியார்; ஈகையில்லா தவரோ பொருளை நல்வழியிற் பயன்டுத்திச் சிறப்புறச் செய்யார்; ஆதலின் இவை அவரைவிட்டு நீங்கிவிட வேண்டும்; ஆயினும் நீங்காதிருக்கின்றன; அவ்வாறு

நீங்காமல்), நயவார்கண்- (உதவி செய்தலாகிய) நன்மையை உடையவரிடத்து, (தங்கியிருக்கின்ற), நல்குரவு- வறுமை, நாண் இன்று கொல்ஓ- வெட்கமில்லாததோ?, பயவார்கண்- (எவர்க்கும் ஒன்றும்) கொடாதவரிடத்தில், (தங்கியிருக் கின்ற) செல்வம் ஐசுவரியம், பரம்ப- (அவரை விடாமல் பற்றிப்) பரவுதற்கு, (அதாவது, அதிகரித்தற்கு), பயின்கொல்- (ஏற்ற) பிசினோ?, இ இரண்டும் - இந்த இரண்டும், ஆங்கே - (அவையவைநின்ற) அவ்விடத்திலே, நயவாது- நன்மை யுறா மல், நிற்கும்- நிற்கின்ற, நிலை - இந்நிலைக்கு, வியவாய்- (நீ)அதிசயிப்பாயாக; எ-று.

ஈகையுள்ள நன்மக்களிடத்தில் வறுமையும், ஈகை யில்லாத கீழ் மக்களிடத்தில் செல்வமும் ஊழ்வினையாற் சேர்ந்திருப்பினும், நன்மக்கள் வறுமையை ஒரு பொருளாக மதித்து வருந்தார்; கீழ் மக்கள் அச்செல்வத்தை நல் வழியிற் பயன்படுத்தி அதைச் சிறப்புறச் செய்யார்; ஆதலின், இவை அவரிடத்திற் சேர்ந்திருப்பதால் இவற்றிற்குச் சிறப்பில்லை; அங்ஙன மில்லாதிருந்தும் இவை அவர்களைவிட்டு நீங்கா திருக்கின்றன; இவ்வாறு நல்லவரிடத்துத் தங்கி யிருக்கின்ற வறுமைக்கு, மதிப்பில்லாத விடத்திலிருக்க வெட்க மில்லையோ? கீழ் மக்களிடத்தில் இருக்கின்ற செல்வம் நிலைத்து நின்று பரவுதற்குப் பிசினோ? இவ்விரண்டின் நிலைமையைப்பற்றி அதிசயிக்க வேண்டும் என்பது இதன் கருத்து.

நன்மக்களிடத்து வறுமையும், கீழ் மக்களிடத்தில் செல்வமும் பழவினையாற் சேர்ந்திருப்பினும் அவற்றிற்குச் சிறப்பில்லையென்று கூறியதனால் கீழ் மக்களிடத்துள்ள செல்வம் நன்றியில் செல்வமென்பதை விளக்கினார் முனிவர். ஆகவே, செல்வம் படைத்தவர் ஈகை முதலிய அறங்களைச் செய்து பேரின்பத்தை அடைதற்கு முயல வேண்டு மென்பது இதனால் பெறப்படும். வறுமை மனி தரை வருத்தும் இயற்கையுடையது; அதனை யடைந்தவர்

வருந்தினால் மாத்திரமே அதற்கு வெற்றியும் மகிழ்ச்சியு மாம்; அங்ஙனம் வருந்தாவிடில் அதன் காரியம் பலிக்காமற் போகின்றது; அப்படி யாகுமிடத்து அதுவெட்கி அவ் விடத்தை விட்டு நீங்கிவிடவேண்டும். ஆதலின், தன்னால் வருந்தாத அறிஞராகிய நன் மக்களிடத்தில் அஃதிருப்பது தகாது; அப்படியிருந்தும் அஃதிருப்பதால், அதற்கு வெட்க மிலையோ என்றார் முனிவர். பிசின் பட்ட விடத்திலேயே விடாமற் பற்றிக் கொள்வது. ஆதலின், கீழ் மக்களிடத்தில் நீங்காதிருக்கும் செல்வம் பிசின் என்று கூறப்பட்டது.

நயவார்- உயர்திணை உடன்பாட்டுக்குறிப்பு வினை யாலணையும் பெயர்; நயத்தினையுடையவர் என்று விரியும். நயம்- பகுதி, ஆர்- விகுதி; நயம்- என்பது இங்கு உதவி செய்தல் என்னும் பொருள் பயந்துநின்றது; இங்ஙனம் பொருளாதல்,

''பயன்மர முள்ளூர்ப்பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின்''

என்னும் (திருக்கு-216-ஆம்) செய்யுளுரையில், 'நயனுடை யான்' என்பதற்குப் பொருள்கூறி யிருத்தலானுணரப்படும். இக்குறட்பாவினாலும் கீழ்மக்களிடத்துண்டாம் செல்வம் சிறந்ததாகாதென்பது விளங்கும். நாண்- முதனிலைத் தொழிற்பெயர். கொல்- இரண்டிடங்களினும் ஐயவினாப் பொருள் பயந்துநின்றது; இஃதோரிடைச் சொல்; ஓ- அசை. பயவார் - பய என்னும் வினைமுதலடியாகப் பிறந்த உயர் திணை எதிர்மறைத் தெரிநிலை வினையாலணையும் பெயர். வியவாய்- உடன்பாட்டு ஏவலொருமை வினை முற்று. காண் - அசை. 'இரண்டும்' என்பதிலுள்ள உம்மை- முற்றுப் பொருளது. அங்கு- என்பது நீண்டு, 'ஆங்கு' என்றாயது; இதிலுள்ள, ஏ- அசை. (எ)

268. *வலவைக ளல்லாதார் காலாறு சென்று*
கலவைக ளுண்டு கழிப்பர்- வலவைகள்
காலாறுஞ் செல்லார் கருணையாற் றுய்ப்பவே
மேலாறு பாய விருந்து.

(அ-ள்.) வலவைகள் அல்லாதார்- நாணிலிகளல்லாதவர்கள், (அதாவது, நாணமுள்ளவர்கள்), (தரித்திரம் - வந்தாலும் நாணத்தக்க இழிதொழில்களைச் செய்து பொருள் தேடிச் சுகத்தையடையத் துணியாமல்) கால்- கால்களால், ஆறுசென்று - (நெடுந்தூரத்திலுள்ள ஊர்களுக்குச் செல்லும்) வழிகளிலும் நடந்துபோய், (அங்கங்கே பிரயாசைப்பட்டுத் தேடிக்கிடைத்த), கலவைகள்- கலப்புணவுகளை, உண்டு- புசித்து, கழிப்பர்- (காலத்தைக் கௌரவத்தோடு) கழிப்பார்கள், வலவைகள்- நாணிலிகளாகிய கீழ்மக்கள், (தங்களுக்கு வரும் இழிவைச் சிறிதும் கருதாதவர்களாதலின், தாழ்ந்த தொழில்களையும் செய்து பொருளைத் திரட்டிவைத்துக் கொண்டு, அச்செல்வமிகுதியால்), கால் ஆறும் செல்லார்- காலால் நடக்கும் வழியிலும் செல்லாதவர்களாய், இருந்து- (வீட்டிற்குள்ளேயே) தங்கியிருந்து, (பிறர்க்குதவி செய்யாமல்), மேல் ஆறுபாய- (தாம் இருக்கும் வசந்த மண்டபம் முதலிய சுகமுள்ள இடங்களுக்கு) மேலே ஆற்று நீர்த் தாரைகள் சுற்றிலும் பாய்ந்துகொண்டிருக்க, கருனையால் - பொரிக்கறியோடு, துய்ப்ப- (நல்லுணவுகளை) உண்டு மகிழ்வார்கள்; எ-று.

இழிவுக்கு நாணும் யோக்கியர்கள், தங்களுக்கு வறுமை வந்தாலும் தாழ்ந்த காரியங்களைச் செய்து பொருள்தேட விரும்பாமல், நெடுந்தூரத்திலுள்ள ஊர்களுக்கும் காலால்நடந்து சென்று ஆங்காங்கே அரும்பாடுபட்டுக் கிடைக்கும் கலப்புணவையுண்டு மானத்தைக் காப்பாற்றிக் காலத்தைக் கழிப்பர்; இழிவு குறித்து நாணாத இயற்கையுடைய அயோக்கியர்கள், பொருள் குறித்து எத்தகைய இழிதொழிலையும் செய்து செல்வத்தைத் திரட்டி அச்

செல்வச் செருக்கால், எங்கும் காலால் செல்லுதலின்றி வீட்டிற்குள்ளே தங்கி யிருந்து எவர்க்கும் உதவி செய்யாமல், தாமிருக்குமிடத்திற்குமேல் ஆற்று நீர்த்தாரைகள் பாயப் பொரிக்கறிகளோடு நல்லுணவுகளை யுண்டுமகிழ்வர் என்பது இதன் கருத்து.

இதனால், மானமுள்ளார் வறுமைப்பட்டுக் கலவைச் சோறுண்டாலும் அவருடைய அனுபவம் சிறந்ததாகு மென்பதும், மானக் கேட்டிற் கஞ்சாதவர்கள் மிகுந்த செல்வம் பெற்று வாழினும் அச்செல்வ அனுபவம் சிறந்த தாகா தென்பதும் விளக்கப்பட்டன.

செல்வமிக்கார் வசந்த காலத்தில் மண்டபமொன் றமைத்து அதன் மேற்பாகத்தில் ஆற்றுநீரைப் பாய்வித்துச் சுற்றிலும் துவாரங்களமைத்து அவற்றின் வழியாக நீர்த்தாரை கள் சொரியச் செய்து பகற்காலத்தில் அம்மண்டபத்தினு ளிருந்து பொழுதுபோக்குவதியற்கை; இது 'தாராக்கிரகம்' என்று சொல்லப்படும். இதன் நீர்த்தாரை வீழ்ச்சியையே, 'மேலாறுபாய' என்றார் முனிவர்.

வலவை- நாணமில்லாதவன்; இது, ''மாதர்க் கோலத்து வலவையினுரைக்கும்'' என்ற சிலப்பதிகாரச் செய் யுளடியின் உரையில், ''வலவையின்- நாணிலிகளைப்போல: 'வலவைகளல்லாதார்' என்றார் பிறரும்'' என்று அடியார்க்கு நல்லார், இச்செய்யுளில் வரும் இப்பெயரினையே உதாரணங்காட்டி உரைத்தலால் துணியப்படும். கலவை- கலப்புள்ளது; பல உணவுகள் கலந்த கூட்டம்; இதன் ஐ- விகுதி- கர்த்தாப் பொருளது. 'காலாறும்' என்பதன் உம்மை- அசை. 'கருனையான்' என்பதில், 'ஆன்' என்னும் மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு இங்கு உடனிகழ்ச்சிப் பொருளது. துய்ப்ப- என்பதற்கேற்ப, 'நல்லுணவுகளை' என்னுஞ் செயப்படுபொருள் அவாய் நிலையால் வருவித்துரைக்கப்

பட்டது. துய்ப்ப- உயர்திணைப் பலர்பால் வினைமுற்று; இதில், ப- பலர்பால்விகுதி; இதுவே இங்கெதிர்காலங் காட்டிற்று. (அ)

269. *பொன்னிறச் செந்நெற் பொதியொடு பீள்வாட*
மின்னொளிர் வானங் கடலுள்ளுங் கான்றுகுக்கும்
வெண்மை யுடையார் விழுச்செல்வ மெய்தியக்கால்
வன்மையு மன்ன தகைத்து.

(இ-ள்.) பொன் நிறம்- பொன்போன்ற நிறத்தினை யுடைய, செந்நெல் பொதியோடு - சிவந்த நெல்லின் பொதி யுடனே, பீள்- இளங்கதிர்கள், வாட- (நீரின்றி) வாட்ட மடைய, மின் ஒளிர்- மின்னலுண்டாகிப் பிரகாசிக்கின்ற, வானம்- மேகம், (அக்கதிர்களுக்கு மழையைப் பெய்யாமல்), கடல் உள்ளும் - (மழை பெய்தல் அவசியமில்லாத [illegible]), சமுத் திரத்தினிடத்தும், கான்று - (நீரை) வெளிப்ப[illegible]த்தி, உகுக்கும் - சொரியும்; வெண்மை உடையார் [illegible] - வெள்ளறிவையுடை யார், (அதாவது, சிறந்த [illegible] அறிவில்லாதவர்), விழுசெல்வம்- சிறந்த செல்வ[illegible]தை, எய்தியக்கால்- அடைந்தால், வண்மை யும் [illegible] (அவர்களுடைய) ஈகைத் தன்மையும், அன்னதகைத்து- [illegible] மேகத்தின் கொடையாகிய) அத்தன்மையை யுடையது; எ-று.

செந்நெல்லின் இளங்கதிர்கள் பொதியோடுவாட, மேகமானது அவற்றிற்கு மழையைச் சொரியாமல், நீர் வேண்டாத சமுத்திரத்திற் போய்ப் பெய்யும்; அறிவில்லாத வர் செல்வம் பெற்றால் தகுதியற்ற விடத்தில் தானம் செய்வார்; இவருடைய கொடைத்தன்மை அந்த மேகத்தின் கொடைத்தன்மை போன்றது என்பது இதன் கருத்து.

மேகம் வாடிய பயிர்களுக்கு மழையை[illegible]ப் பொழியா மல், மழையை ஏற்றுக்கொள்ளத் தகுதி[illegible]யற்ற கடலிலேயே பெரும்பான்மையும் பெய்வது [illegible]இயற்கை; நெற்கதிர்கள்

பலவுயிர்கட்கும் பயன்படக்கூடியவை; சமுத்திரம் உவர்நீரை யுடையதாதலால் எவர்க்கும் பயன்படாதது. ஆதலின் பயனுடைய நெற்கதிரைவிட்டுப் பயனற்ற சமுத்திரத்துக்கு மேகம் மழைபொழிவது தகாச்செயலாம். அறிவில்லாதவர், நல்லோர் வறுமையால் வருந்தினும் அவர்க்குதவி செய்யா மல் தீயோர்க் குதவி செய்தல் இயற்கை; நல்லோர்பலர்க்கும் பயன்படக்கூடியவர்; தீயோர் எவர்க்கும் பயன்படார்; ஆதலின், பலர்க்கும் பயன்படும் சற்பாத்திரர்களாகிய நல் லோர்க்குப் பொருள் கொடாமல் எவர்க்கும் பயன்படாத தீயோர்க்கு அவர் பொருளீதல் தகாச் செயலாம்; இவ்வாறான மேகத்தின் செயலும், இவர் செயலும் ஒரே தன்மையான வாகலின், இவர் செயலுக் கதன்செய்கை உவமையாகக் கூறப்பட்டது. இங்ஙனம் கூறியது- உவமையணி; 'அன்ன தகைத்து' என உவமையுருபு வந்ததனால் இஃதெடுத்துக் காட்டாகாது.

இதனால் அறிவில்லாரிடத்துள்ள செல்வம் நன்றியில் செல்வமென்பதும் அதனால் இன்பமில்லை யென்பதும் விளக்கப்பட்டன. இதிற் கூறியபடி அறிவுடைய பெரியார்க் குச் செய்யும் உதவியைச் சிறியார்க்குச் செய்தல் தகுதியற்ற தென்பதை,

''பெரியார்க்குச் செய்யுஞ் சிறப்பினைப் பேணிச்
சிறியார்க்குச் செய்து விடுதல் - பொறிவண்டு
பூமேல் இசைமுரலும் ஊர அதுவன்றோ
நாய்மேல் தவிசிடு மாறு''

என்னும் (பழமொழி. 105-ஆம்) செய்யுளுமுணர்த்தும். நெற்களில் உயர்ந்தவைகள் சிவந்த நிறமுள்ளவைகளா யிருக்கும்; ஆதலின், அச்சிறப்பை விளக்குதற்கு, 'செந்நெல்' என்றார் முனிவர், பொதி- இளங்கதிரை உள்ளே வைத்துத் தோகையால் மூடப்பட்டுக் கருக்கொண்ட பச்சைப் பாம்பைப் போன்றிருக்கும் கதிர்க்கருப்பை; இது,

சொல்லருஞ் சூற்பசும் பாம்பின்றோற்றம்போல்' என்று சிந்தாமணியிற் கூறப்பட்டிருத்தலாலுணரப்படும்; இஃது, இளங்கதிரை உள்ளே வைத்துப் பொதிந்திருப்பதாதலின், இப்பெயர் பெற்றது. வானம் - ஆகாயம்; அஃதிடவாகு பெயராய் அங்குச் சஞ்சரிக்கும் மேகத்தை யுணர்த்திற்று; இதில், அம்- சாரியை. 'கடலுள்ளும்' என்பதன் உம்மை- இழிவு சிறப்புப் பொருளது. 'கான்று' என்பதில், கால்- வினைப்பகுதி. வெண்மை நிறம் எதிலும் கலவாதிருத்தல் போல, மூடம் நன்மை தீமைகளைப் பகுத்துணராமல் தன் இயற்கைப்படியே யிருக்கும்; ஆதலின், அது வெண்மையறி வென்று கூறப்பட்டது. இது,

''வெண்மை யெனப்படுவ தியாதெனி னொண்மை
யுடையம்யா மென்னுஞ் செருக்கு''

என்னும் (திருக்கு-844.ஆம்) செய்யுளானும், அதன் உரை யானுமுணரப்படும். 'வண்மையும்' என்பதிலுள்ள உம்மை- இறந்தது தழுவிய எச்சப் பொருளது. (கூ)

270. *ஓதியு மோதா ருணர்விலா ரோதாதும்*
ஓதி யனையா ருணர்வுடையார்- தூய்தாக
நல்கூர்ந்துஞ் செல்வ ரிரவாதார் செல்வரும்
நல்கூர்ந்தா ரீயா ரெனின்.

(இ-ள்) உணர்வு இல்லார்- பகுத்தறிவில்லாதவர்கள், ஓதியும்- (நூல்களைப்) படித்தும், (அதாவது, படித்தாலும்), ஓதார்- படிக்காதவர்களே யாவர், உணர்வு உடையார் - பகுத் தறிவுடையவர்கள், ஓதாதும்- படிக்காமலும், (அதாவது, படிக்காமலிருந்தாலும்), ஓதி அனையார்- படித்தாற் போன்ற வராவர், (இவர்களைப்போல), தூய்து ஆக- (மனம்) பரிசுத்த முடையதாக, இரவாதார்- (எவரிடத்தும் பொருளை) யாசிக் காமலிருப்பவர்கள், நல் கூர்ந்தும் - வறுமையடைந்தும் (அதாவது தரித்திரங் கொண்டிருப்பினும்), செல்வர்- செல்வ

முடையவர்களேயாவர், செல்வரும் - செல்வமுடையவர் களும், ஈயார் எனின்- (சற்பாத்திரர்களுக்கு வேண்டிய பொருளைக்) கொடாராயின், நல்கூர்ந்தார்- வறுமைப்பட்ட வரே யாவர்; எ-று.

அறிவுடையார் நூல்களைப் படிக்காவிட்டாலும் படித்தவராவர்; அறிவில்லார் படித்தாலும் படிக்காதவராவர்; இவர்களைப்போலவே, வறுமை வந்த விடத்தும் யாசகஞ் செய்யாதிருப்பவர் வறுமையுற்றிருந்தாலும் செல்வந்த ராகவே விளங்குவர்; செல்வ முடையார் ஈகை யற்றவரா யிருப்பின் அவரே வறுமைப் பட்டவராவர் என்பது இதன் கருத்து.

இயற்கை யறிவில்லாதவர் எவ்வளவு நூல்களைப் படித்தாலும் அவர்களுக் கறிவுண்டாகாது; அறிவுள்ளவர் படிக்காவிட்டாலும் நன்மை தீமைகளைப் பகுத்துணர்ந்து, நன்மைகளைச் செய்வர்; ஆதலின் அவர் நூற்பொருள்களை யுணர்ந்தவரே யாவர். எந்த நிலையிலும் யாசித்தல் மிக இழிவாதலின், இரத்தல் இல்லாதிருப்பவர் செல்வமுடை யார் போற் சிறப்புடையவராவர்; ஈகையிருந்தால் மாத்திரமே செல்வம் பிரகாசிக்கும்; அஃதில்லாவிடின் செல்வம் சிறப்புறாது; ஆதலின், ஈகையில்லார் செல்வம் பெற்றிருந்தாலும் இல்லாதவரேயாவர். இரவாதிருத்தல் மேன்மை யென்பதை,

''கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும்''

என்னும் (திருக்கு. 1061ஆம்) செய்யுளானுணர்க. ஈகையில்லார் செல்வத்தாற் சிறப்பில்லையென்பதை,

''கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய
கோடியுண்டாயினு மில்''

என்னும் (திருக்கு.1005-ஆம்) செய்யுளானுணர்க. இதில் உபமான உபமேயங்களால் தனித்தனியாக இரண்டு நீதிகள் கூறப்பட்டுள்ளன. எனினும் இவற்றால் ஈகையில்லார் செல்வம் நன்மையில்லாததென்பதே முக்கியமாகக் கூறப் பட்டது, அதிகாரப் பொருண்மைக்கேற்ப. முன்னிரண்டடி களிலுள்ளவை உபமானமும், பின்னிரண்டடிகளிலுள்ளவை உபமேயமுமாம். இங்ஙனங் கூறியது எடுத்துக்காட்டு வமையணி. உபமானங்கள் நிறுத்திய முறைக்கு மாறுபாடாக உபமேயங்கள் இதில் அமைந்தது- எதிர் நிரனிறைப் பொருள் கோள். ஓதியும், செல்வரும் என்பவற்றிலுள்ள உம்மைகள்- உயர்வு சிறப்புப் பொருளன; ஓதாதும், நல் கூர்ந்தும் என்ப வற்றிலுள்ள உம்மைகள்- இழிவு சிறப்புப் பொருளன. ஓதி- எச்சத் திரிபு. (கo)

4-வது

துன்பவியல்

துன்பவியலாவது:- மனிதருடைய மனத்திற்குத் துன்ப முண்டாவது குறித்துக் கூறும் பிரிவாம். துன்பமானது, யாசித்தவர்க்குப் பொருள் கொடாமை முதலிய காரணங் களால் உண்டாவதாம்; இது, ஈயாமை, இன்மை, மானம், இரவச்சம் என்னும் நான்கு அதிகாரங்களாற் கூறப்படும்.

அதிகாரம் 28

ஈயாமை

ஈயாமையாவது:- வறுமைத் துன்பத்தால் பொருள் வேட்டு யாசித்தவர்க்கு அப்பொருள் கொடாதிருத்தலாம். இது, பத்தாம் அதிகாரமாகிய ஈகைக்கு எதிர் மறையானது; ஆதலின், அதன் பின் வைத்தற் குரியது; எனினும், இங்கு வைக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணமென்ன வெனில் இன்பத்திற் கேதுவாகாத நன்றியில் செல்வமே ஈயாமைக் குட்பட்டுத் துன்பந் தருவதாம்; ஆதலின், இஃததன்பின் வைக்கப்பட்டது. ஈயாமை - எதிர் மறைத் தொழிற்பெயர்.

271. *நட்டார்க்கு நள்ளா தவர்க்கு முளவரையால்*
அட்டது பாத்துண்ட லட்டுண்ட - லட்ட
தடைத்திருந் துண்டொழுகு மாவதின் மாக்கட்
கடைக்குமா மாண்டைக்கதவு.

(இ-ள்.) (மனிதர்), நட்டார்க்கும் - (தம்மோடு) சிநேகம் பூண்டவர்களுக்கும், நள்ளாதவர்க்கும் - உறவு கொள் ளாதவர்களுக்கும், உளவரையால்- தமக்கேற்பட்ட அளவுக் குத் தக்கவிதத்தால், (அதாவது, இயன்றவரையில்), அட்டது- (தம் வீட்டில்) சமையல் செய்யப்பட்ட உணவை, பாத்து - பங்கிட்டுக் கொடுத்து, உண்டல்- (பின்பு தாம்) கிரமமாம்,

அட்டது - சமைக்கப்பட்ட உணவை அடைத்து -(உண்ணுஞ் சமயத்தில் பிறர் வராதபடி கதவை) மூடிக் கொண்டு, இருந்து - (தாம் மாத்திரம் உள்ளே) உட்கார்ந்து, உண்டு ஒழுகும்- புசித்து நடக்கின்ற, (அதாவது, புசித்துக் காலந் தள்ளுகின்ற), ஆவது இல்- (தமக்கு) ஆவதாகிய மறுமைப்பயன் இல்லாத மாக்கட்கு- மனிதர்களுக்கு, ஆண் டைக்கதவு - ஆங்குள்ள விண்ணுலகத்தின் கதவு, அடைக்கும் - (உட்புகாவண்ணம்) மூடப்படும்; எ-று.

மனிதர் தமதில்லத்தில் சமைத்த உணவை உறவினர்க்கும், உறவினரல்லாதார் ஆகிய விருந்தினர்க்கும் பகுந்து கொடுத்துப் பின் தாம் உண்ணுதலே சிறந்த இல்வாழ்க்கை; அவ்வாறின்றி அவ்வுணவைப் பிறர்க்குக் கொடாமல் கதவை அடைத்துக்கொண்டு தாம் மாத்திரம் உண்பவர்களுக்குச் சுவர்க்கலோகத்தின் கதவு மூடப்படும், என்பது இதன் கருத்து.

''அட்ட தடைத்திருந்துண்டொழுகு மாக்கட் கடைக்கு மாண்டைக்கதவு'' என்றதனால், உணவை விருந்தினர்க்குப் பகிர்ந்துதவியுண்டவர்க்கு அக்கதவு மூடப்படா தென்பது தானே அமையும்.

இதனால் உணவைப் பிறர்க்குப் பங்கிட்டுக் கொடுத்துண்ணும் ஈகை யுடையார்க்குச் சுவர்க்கலோக பதவியாகிய இன்பங் கிடைக்கு மென்பதும், அவ்வீகையில்லார்க்கு அது கிடைக்காதென்பதும், அத்தகையர்க்கு துர்க்கதி துன்பமே யுண்டாமென்பதும் விளக்கப் பட்டன. உணவை விருந்தினர்க்களிக்கும் ஈகை யுடையார்க்கு விண்ணுலகத்தின் கதவு மூடப்படா தென்பதும், அவ்வீகை மேலுலகத் தின்பத்தை அனுபவித்தற்குத் தேடி வைக்கப்பட்ட நிதி யென்பதும்,

''செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு''

என்னும் (திருக்கு-86-ஆம்) செய்யுளானும்,

''ஒன்றாக நல்ல துயிரோம்ப லாங்கதன்பின்
நன்றாய்ந் தடங்கினர்க் கீத்துண்டல்- என்றிரண்டும்
குன்றாப் புகழோன் வருகென்று மேலுலகம்
நின்றது வாயிற் றிறந்து''

''செல்வத்தைப் பெற்றார் சினங்கடிந்து செவ்வியராய்ப்
பல்கிளையும் வாடாமற் பாத்துண்டு- நல்லவாம்
தான மறவாத தன்மையரே லஃதென்பார்
வானகத்து வைப்பதோர் வைப்பு''

என்னும் (அறநெறிச்சாரம் 63-76-ஆம்) செய்யுட்களானும் உணரப்படும். நட்டார் - உறவினர்; நள்ளார்- உறவினரல்லாத விருந்தினர். இவ்விரண்டிலுமுள்ள உம்மைகள் - எண்ணி நிற்றற் பொருளன- 'உள்ள' என்பது தொகுத்தலாய், உள- என்று நின்றது. அட்டது. ஒன்றன்பால் வினையாலணையும் பெயர். பாத்து- பகுத்து என்பதன் மரூஉமொழி. ஆவது- எதிர்காலவினையாலணையும் பெயர்; ஈகையாலுண்டாம் மறுமைப்பயன். நல்வழியிற் பயன்படுத்தத்தக்க பொருளைப் பெற்றிருந்தும் அவ்வாறு பயன்டுத்தி மேலு லகத்தின்பம் பெறாதவர் மிருகத் தன்மையுடையாராகலின், அவர்களை, 'மாக்கள்' என விலங்குசாதிப் பெயரால் கூறினார் முனிவர். அடைக்கும்- செயப்பாட்டு வினை செய்வினை முடிபைக் கொண்டது;

''செயப்படு பொருளைச் செய்ததுபோலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே''

என்பது (தொல்.சொல்.வினை. 49-ஆம்) சூத்திரவிதி. ஆண்டு- சேய்மைச் சுட்டு; சுவர்க்கத்தை உணர்த்தி நின்றது;

அகரச் சுட்டடியாப் பிறந்து முதல் நீட்சி பெற்றது. ஆம்- அசை. இச்செய்யுளின் முதலடி முரண் தொடை அமைந்தது. (க)

272. *எத்துணை யானு மியைந்த வளவினால்*
சிற்றறஞ் செய்தார் தலைப்படுவர்- மற்றைப்
பெருஞ்செல்வ மெய்தியக்காற் பின்னறிது மென்பார்
அழிந்தார் பழிகட லத் துள்.

(இ-ள்.) எதுணை ஆனும்- எவ்வளவானாலும், இயைந்த அளவினால் - (பொருள்) சேர்ந்த அளவினாலே, (அதாவது, கிடைத்த பொருளளவுக்குத் தக்கபடி), சிறு அறம் - சிறிய தர்மங்களையேனும், செய்தார்- செய்தவர்கள், தலைப்படுவர்-சிறப்படைவார்கள், மற்றை- (சிறித சிறிதாகச் சேரும் பொருளுக்கு) வேறாகிய, பெருஞ்செல்வம்- மிகுந்த பொருள், எய்தியக்கால்- கிடைத்தால், பின்- அதன் பின்பு, அறிதும்- (தர்மஞ் செய்வதைப்) பார்த்துக் கொள்வோம், என்பார் -என்று தீர்மானித்து அறஞ்செய்யாது வீண்காலம் கழிப்பவர், பழிகடலத்துள்- பாவமாகிய சமுத்திரத்தில், (வீழ்ந்து), அழிந்தார்- நாசமடைந்தவராவர்; எ-று.

தமக்குக் கிடைக்கும் குறைந்த பொருளளவுக்குத் தக்கபடி ஈகையாகிய தர்மத்தைச் சிறது சிறதாகவேனும் செய்தார் நற்பதவி பெற்றுச் சிறப்புறுவர்; அவ்வாறு செய்யாமல் மிகுந்த செல்வமுண்டானால் அதன் பிறகு தர்மஞ்செய்து கொள்ளலாமென்று காலத்தை வீணாகக் கழிப்பவர் பாவத்தையுடையவர்களாய்த் துர்க்கதி யடைந்து வருந்துவர் என்பது இதன் கருத்து.

இதனால், இயன்றவரையில் காலமறிந்து தர்மஞ் செய்து புண்ணியத்தைத் தேடிக் கொண்டவர்களே மேலோராய் இன்பமுறுவரென்பதும், அவ்வாறு செய்யா தவர்

பலத்தால் கீழோராய், துன்புறுவரென்பதும் குறிக்கப் பட்டன.

பழி- என்பதை, 'நிந்தை' எனக் கூறினுமாம்; ஈகை யில்லார் உலகத்தாரால் மிகுதியும் பழிக்கப்படுவராதலின். ஈகையில்லார்க்குப் பாவமோ, நிந்தையோ மிகுதியாகச் சேருமாதலின், 'பழிகடலம்' என்றார் முனிவர்; கடல் மிகுதியைக் குறிப்பிடுவது. 'எத்துணையானும் என்பதி லுள்ள உம்மை- இழிவு சிறப்புப் பொருளது. 'ஆனும்' என்பது - 'ஆயினும்' என்பதன் மரூஉ மொழி. தருமஞ் செய் தற்குப் பொருளே உரியதாதலின், 'இயைந்த' என்பதற்குப் பின், 'பொருள், என்பது இசை யெச்சமாக வருவித்துரைக் கப்பட்டது. செய்தார்- இறந்தகால உடன்பாட்டு வினை யாலணையும் பெயர். மற்றை - பிறிதென்னும் பொருள்தரு மிடைச்சொல்; பெருஞ் செல்வம்' என்பதனோடு முடிந்தது. 'கடலத் துள்' என்பதில், அத்து- சாரியை. பழிகடலம்- பண்புத் தொகை; இதில், 'பழிக்கடலம்' என வல்லெழுத்து மிக்கு வரல் வேண்டும்; எனினும் இது ஓசையின்பநோக்கி இயல்பாய் நின்றது. உள்- இடப்பொருளுணர்த்தி நின்றது. பின் - எதிர்காலங்காட்டி நின்றது. 'அழிவார்' என எதிர்காலத் தில் வரற்பாலது, 'அழிந்தார்' என வந்தது, தெளிவு பற்றி வந்த கால வழுவமைதி.

''வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
இறப்பினு நிகழ்வினுஞ் சிறப்பத் தோன்றும்
இயற்கையுந் தெளிவுங் கிளக்குங் காலை''

என்னும் (தொல்-சொல்-வினை-48-ஆம்) சூத்திரவிதியால் இது பெறப்படும். ''மற்றறிவா நல்வினை................'' என்னும் இந்நூல் 19-ஆம் செய்யுளும், ''இன்று கொலன்று கொ........'' என்னும் இந்நூல் 36-ஆம் செய்யுளும் பெரும் பான்மையும் இச்செய்யுட் கருத்தே யுடையன. (உ)

273. *துய்த்துக் கழியான் றுறவோர்க்கொன் றீகலான்*
வைத்துக் கழியு மடவோனை- வைத்த
பொருளு மவனை நகுமே யுலகத்
தருளுமவனை நகும்.

(இ-ள்.) துய்த்து கழியான்- (தான் அருமையாகத் தேடிய பொருளை) அனுபவித்துக் காலத்தைக் கழிக்காத வனாயும், துறவோர்க்கு- துறவறத்தி லுள்ளவர்களுக்கு, ஒன்றுஈகலான் - ஒரு பொருளையேனும் கொடுத்து உதவி செய்யாதவனும், (ஆகி), வைத்துகழியும்- (வீணாக) வைத்து இறந்தொழிகின்ற, மடவோளை அவனை- அறிவில்லா தானாகிய அவனை, வைத்த பொருளும்- (அவன் அவ்வாறு) தேடிவைத்த பொருளும், நகும்- (பார்த்துப் பரிகசித்துச்) சிரிக்கும், உலகத்து அருளும் - உலகத்திலே (மனிதர்க்குச் சிறந்த பொருளாக விளங்கும்) கருணை யென்னும் குணமும், அவனை நகும்- அவனை (நோக்கி ஏளனஞ்செய்து) சிரிக் கும்; எ-று.

தான் அருமையாகத் தேடிய பொருளைத் தான் அனுபவிக்காமலும், துறவறத்தார்க்கு அதிற் சிறிதேனுங் கொடாமலும் இருந்து ஒழியும் உலோபியை அப்பொருளும் பார்த்துப் பரிகசித்துச் சிரிக்கும்; அப்பொருளைக் கொடுத் தற்குத் துணையாயிருக்கும் அருளும் அவனைப்பார்த்துச் சிரிக்கும் என்பது இதன் கருத்து.

இதனால் ஈகையற்றவனுக்கு இழிவே யுண்டாமென் பதும், அதனால் அவன் துன்புறுவானென்பதும் விளக்கப் பட்டன.

பொருள், தானதர்மங்களைச்செய்து மனிதர் நற்கதி யடைதற்கே ஏற்பட்டதாகும்; அத்தகைய பொருளை ஒரு நல்வழியிலும் பயன்படுத்தாம விருப்பதால் அதனை

யுடையானுக்கு எவ்வகைச் சிறப்புமில்லை;ஆதலின், அப் பொருள், தன்னையடைந்தும், தன்னாற் பெறத் தக்க நலத்தைப்பெறாத அவன் மடமையை இகழ்ந்து சிரிக்கும்; மனிதர் பொருளால் தானதர்மங்களைச் செய்து புண்ணி யத்தைத் தேடுதற்கு உதவியா யிருப்பது அருள்; அருள் இருந்தால் மாத்திரமே ஈகை யுண்டாகும். ஈகையில்லாதவன் கருணையை அடையான்; ஆதலின், அவ்வாறு தன்னை யடையாத உலோபியைப் பார்த்து அருள் சிரிக்கும். இங் ஙனம் கூறும் தன்மையில்லாத பொருளையும், அருளையும் கூறியனவாகக் கூறியது தொடர்புயர்வு நவிற்சியணியின் பாற்படும். அருளுடையானுக்கே நற்கதி கிடைக்குமென் பதும், அருளே அறத்தை யுண்டாக்குமென்பதும்,

''அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
இன்னா வுலகம் புகல்''

என்னும் (திருக்கு-243-ஆம்) செய்யுளானும்,

''இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதி ரீன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்''

என்னும் (அறநெறிச்சாரம்-112-ஆம்) செய்யுளானுமுணர்க. பொருளுடையான் அதைத் தானும் அனுபவித்துப் பிறர்க் கும், முக்கியமாகத் துறவிகட்கும் கொடுத்தல் வேண்டுமென் பதை,

''துறந்தார்க்குந் துவ்வாத வர்க்கு மிறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் றுணை''

என்னும் (திருக்கு-42-ஆம்) செய்யுளானும்,

''தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க
றானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை''

என்னும் (திருக்கு- 43-ஆம்) செய்யுளானுமுணர்க். 'பொருளும்' என்பதிலுள்ள உம்மை- எதிரது தழுவிய எச்சப் பொருளது; 'அருளும்' என்பதன் உம்மை -இறந்தது தழுவியது. கழியான், ஈகலான் என்பன-எதிர்மறையில் வந்த முற்றெச்சங்கள். துறவோர், மடவோன் என்னும் உடன் பாட்டுப் பெயர்களில் ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாயிற்று. துறவோர் - என்பதில், துற- பகுதி. மடவோன் - என்பதில், மடம், அல்லது மடமை - பகுதி. 'மடவோனை' என்பதும் 'அவனை' என வந்த இரண்டும் ஒருபொருளின்மேல் வந்த பெயர்கள். 'மடவோனை' என்பதிலுள்ள ஐகாரத்தைச் சாரியையாகக் கொள்வது நேர். இச்செய்யுளில் பொருளும், அருளும் நகும் என்றபடி,

''வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்து மகத்தே நகும்''

என்ற (திருக்கு - 271-ஆம்) செய்யுளும் கூறுதல் உய்த்துணர்க. இரண்டாம் வேற்றுமையில் வரும் செயப்படுபொருள் இயற்றப்படுவதும், வேறு படுக்கப்படுவதும், எய்தப்படு வதுமென மூன்று வகைப்படும்; இவற்றுள் இச்செய்யுளில் வந்த, 'மடவோனை' என்னும் செயப்படுபொருள் எய்தப் படுவதின்பாற்படும். ''காப்பி னொப்பி...'' என்னும் (தொல்- சொல்-வேற்றுமையியல்- 11-ஆம்) சூத்திரவுரை பார்க்க. நகுமே என்பதிலுள்ள ஏ- தேற்றப்பொருளது; அசையெனினு மாம். (ந)

274. *கொடுத்தலுந் துய்த்தலுந் தேற்றா விடுக்குடை
உள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வ மில்லத்
துருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தால்
ஏதிலான் றுய்க்கப் படும்.*

(இ-ள்.) கொடுத்தலும்- (பிறர்க்கு) ஈதலையும், துய்த்தலும்- (தான்) அனுபவித்தலையும், தேற்றா - உணர்ந்து செய்யாத, இடுக்குஉடை- உலோபத்துவமுள்ள, உள்ளத்தான் - மனமுடையவன், பெற்ற- அடைந்த, பெரும் செல்வம் - பெரிய ஐசுவரியமானது, இல்லத்து- (ஒருவர்) வீட்டிலே பிறந்து வளர்கின்ற, உருவு உடை- அழகுடைய, கன்னி யரைப்போல- பெண்களைப்போல், பருவத்தால்- (அனு பவித்தற் குரிய) காலத்தில், ஏதிலான்-அயலனால், துய்க்கப் படும்- அனுபவிக்கப்படும்; எ-று.

தனக்குக் கிடைத்த பொருளைப் பிறர்க்குக் கொடா மலும், தானும் அனுபவியாமலுமிருக்கும் உலோபகுண முடையவனுடைய பெருஞ் செய்வமானது, ஒரு குடும் பத்திற்பிறந்த பெண்ணைப் பருவ காலத்தில் அவளுக்குரிய மணவாளானாகி வந்த பிறனொருவன் அடைவதுபோல, அனுபவித்தற்குரிய பிறனொருவனால் அனுபவிக்கப்படும் என்பது இதன் கருத்து. இங்ஙனங் கூறியது உவமையணி.

ஒரு குடும்பத்திற் பிறந்த கன்னிகையின் அனுபவம் அவ்வீட்டிலுள்ளார்க் கில்லாதிருப்பதும், வேறொரு குடும் பத்திற் பிறந்த மணமகனுக்கே உரியதாயிருத்தலும் இயற்கை; அதுபோலவே உலோபியினுடைய செல்வத்தை அனுபவித் தற்கு. வேறொருவன் வருவான்; ஆதலின் உலோபி அச் செல்வத்தைச் செலவிடாமற் சேர்த்துவைத்திருந்து அவ னுக்குக் கொடுத்தொழிவான். உலோபிக்கு அப்பொருளால் எவ்வித இன்பமுமில்லையாம்.

இதனால் ஈயாமையால் இன்பமில்லையென்பது விளக்கப்பட்டது. இங்குப் பெண்ணை உவமைகூறியது, அவள் தன்னை வளர்த்த வருக்குதவாமல் மற்றொருவனுக் குரியவளாய்விடும் பொதுத் தன்மை யொன்றை மட்டுமே குறித்ததாகும்; வேறு தன்மைகளுக்குக் கொள்ளின் இடர்ப் பாடாம். கன்னியர் இவ்வாறு வளர்த்தார்க் குரியளாகாமல் பிறர்க்குரியளாவளென்பது,

''வலம்புரி யீன்ற முத்தம் மண்மிசை யவர்கட் கல்லால்
வலம்புரி பயத்தை யெய்தா தனையரே மகளிர்....''

என்று சீவகசிந்தாமணியிலும்,

''பலவுறு நறுஞ் சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே''

''சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே''

''ஏழ்பக ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே''

என்று கலித்தொகையிலும் கூறப்பட்டிருத்தலுணர்க. ஈகையில்லாதவனுடைய செல்வத்தைப் பிறன் அனுபவித்தலாவது - அவன் சந்ததியாகவந்த ஒரு தூர்த்தச் செலவுடையவனும், திருடர், மோசக்காரர் முதலியவர்களும் கைப்பற்றிக் கொண் டனுபவித்தலாம். உம்மையிரண்டும்- எண்ணி நிற்றற் பொருளன. 'தேற்றா' என்பது, 'தேறா' என்பதன் விரித்தல்

விகார மென்றேனும், தன்வினைப்பொருளில் வந்த பிற வினைச் சொல்லென்றேனும் கொள்ளப்படும். இது தன் வினையில் வருதல்.

''பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச் சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்''

என்னும் (திருக்கு.187-ஆம்) செய்யுளானும், ''வாணிக மொன்றுந் தேற்றாய்'' எனச்சிந்தாமணியில் வருதலானு முணரப்படும். இடுக்கு - முதனிலைத் தொழிற்பெயர்; 'இடுக்குதல்' என விரியும்; இடுக்குதலாவது- இறுகப் பிடித்த லாம்; இது லோபத்தை உணர்த்தும்; இஃதிந் நூலில், 'இடுக் குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்'' என வருதலானு முணரப்படும். பருவத்தால் - மூன்றாம் வேற்றுமையின் 'ஆல்' உருபு ஏழாம் வேற்றுமை இடப்பொருளில் வந்த உருபு மயக்கம். *(ச)*

275. *எறிநீர்ப் பெருங்கட லெய்தி யிருந்து*
மறுநீர்ச் சிறுகிணற் றூறல்பார்த் துண்பர்
மறுமை யறியாதா ராக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

(இ-ள்.) (மனிதர்), எறி- (அலைகளை) வீசுகின்ற, நீர்- (மிகுந்த) நீர்ப்பெருக்கையுடைய, பெருகடல்- பெரிய கடலினை, எய்தி இருந்தும்- அடைந்திருந்தாலும், (அதா வது, அதன் சமீபத்திலிருந்தாலும்) (அதன் நீர் பருகுதற்கு யோக்கியமின்றி மிக்க உவர்ப்புடையதாயிருத்தலினாலே அதனைப் பருகாமல்), அறு நீர்- (இடைக்கிடையே) அற்று ஊறுகின்ற நீரையுடைய, சிறுகிணறு- சிறிய கிணற்றினது, ஊறல்- ஊற்று நீரை, (அது சிறிதாயிருந்தாலும் பருகுதற்கு யோக்கியமானதாயிரும்மலினாலே), பார்த்து -(அதனைத் தேடிக்) கண்டு, உண்பர்- பருகுவார்கள், (இதைப்போலவே ஈகையில்லாத செல்வவான்களிடம் மனிதர் நெருங்கியிருந்

தாலும் அவர்களுடைய பொருளில் உலோபத்துவமென்னும் உவர் சேர்ந்திருப்பதால் அவனை அடைய விரும்பார்; ஈகையாளர் குறைந்த பொருளுடையவர்களாயிருந்தாலும் அப்பொருளில் ஈகை யென்னும் இன்சுவை பொருந்தி யிருத்தலின் அதனைப்பெற்று மகிழ்வர்; ஆதலின்), மறுமை அறியாதார்- (பொருளைப் பிறர்க்கீந்து அடைதலாகிய) மறுமைப்பயனை அறியாத உலோபிகளுடைய, ஆக்கத்தின் - பெருஞ்செல்வத்தைக் காட்டினும், சான்றோர்- (பொருளைப் பிறர்க்கீந்து மறுமைப்பயனை உணர்ந்த நற்குணங்களால்) நிறைந்த பெரியோர்களுடைய, கழி நல்குரவே- மிகுந்த வறுமையே, தலை-சிறந்ததாகும்; எ-று.

மனிதர், சமுத்திரத்தினருகிலிருந்தாலும் அதன் நீர் பருகுதற்கு யோக்கியமாகாமல் மிக்க உவர்ச்சுவையுடைய தாயிருத்தலின், அதனைப் பருகாமல் அற்று அற்று ஊறும் சிறிய ஊற்றையுடைய கிணற்று நீர் குறைந்த அளவாக இருந்தாலும் குடித்தற்கு யோக்கியமாக இன்சுவையோடு கூடியிருப்பதால் அதைத் தேடிச் சென்றாவது பார்த்துப் பருகுவர்; இதைப்போலவே ஈகையில்லாதவரிடத்துச் செல்வம் அதிகரித்திருந்தாலும் அப்பொருள் உலோபம் பொருந்தியதாதலால் அதைப் பெறார்; ஈகையாளர் குறைந்த பொருளுடையவர்களாயிருந்தாலும் அப்பொருள் ஈகை சேர்ந்ததாயிருப்பதால் அதனைப் பெற்று மகிழ்வர்; ஆதலின்; ஈகையற்றாரின் பெருஞ் செல்வத்தைக் காட்டினும் ஈகை யுற்றாரின் குறைந்த பொருளே, அதாவது, வறுமைத் தன்மையே) சிறந்ததாகும் என்பது இதன் கருத்து.

உலோபிகளுடைய செல்வம் பிறர்க்குப் பயன்படாத தாதலின், அஃதிருந்தும் இல்லாததேயாம்; ஈகையாளர் பொருள் பிறர்க்குப் பயன் படுவதாகலின், குறைந்ததாயிருந் தாலும் அதிகரித்ததேயாம்; ஆதலின், ''சான்றோர் கழி

நல்குரவேதலை'' என்றார் முனிவர். இதனால் ஈயாமையின் இழிவு நன்கு விளக்கப்பட்டது. ஊற்று நீரானது இறைக்கும் போதெல்லாம் ஊறும்; இறைக்காதபோது ஊறாமலிருக்கும்; இங்ஙனம் இடைக் கிடையே ஊற்று அற்று ஊறுதலின், அஃ 'தறுநீர்' என்று கூறப்பட்டது. இச்செய்யுளிற் கூறியபடி சமுத்திர நீர் உண்ணுதற்காகாது; ஊற்று நீர் பருகுதற்கு யோக்கியமானதாம் என்பதை,

> *''மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்*
> *உடல்சிறியா ரென்றிருக்க வேண்டா- கடல்பெரிது*
> *மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்*
> *உண்ணீரு மாகி விடும்''*

என்னும் மூதுரைச் செய்யுளானு முணர்க. இச்செய்யுட் கருத்தே இந்நூலின் 263 ஆம் செய்யுளினும் அமைந்திருத்தல் காண்க. இச்செய்யுளின் முன்னிரண்டடிகளிற் கூறப் பட்டவை. 'உலோபிகளுடைய செல்வம் பிறரால் அனுபவிக் கப்படாது; ஈகையாளருடைய செல்வமே அனுபவிக்கப் படும்' என்பதை விளக்கி நிற்றலால் இது, பிறிது மொழி தலணியாம். குறிப்பெச்சமெனவும்படும்; ''அவைதாம், தத்தங் குறிப்பினெச்சஞ் செப்பும்'' என்னும் தொல்காப்பியச் சூத்திர வுரைபார்க்க. முன்னிரண்டடிகளிற் கூறப்பட்டவை, பின்னிரண்டடிகளில், ''உலோபிகளுடைய செல்வத்தினும் ஈகையாளர் செல்வமே சிறந்தது'' என வருவனவற்றிற்குக் காரணமாய் நிற்றலின், அது ஏதுவணியின்பாற்படும். ஊறல்- தொழிற்பெயர்; இஃது தொழிலாகுபெயராய் ஊறுதலை யுடைய நீரை உணர்த்தி நிற்றது. இதிலுள்ள அல்- விகுதியைக் கருத்தாப் பொருள தெனினுமாம். ஆக்கம்- ஆக்கப்பட்டது; செயப்படுபொருள்; அம்- செயப்படு பொருள் விகுதி; ஆக்குதல்- உண்டாகச் செய்தல், அதாவது, விருத்தி செய்தல்; அதனை யுடையது - ஆக்கம். கழி- மிகுதிப் பொருளை உணர்த்தும் உரிச்சொல். (ரு)

276. *எனதென தென்றிருக்கு மேழை பொருளை*
யெனதென தென்றிருப்பன் யானுந் - தனதாயிற்
றானு மதனை வழங்கான் பயன்றுவ்வான்
யானுமதனை யது.

(இ-ள்.) எனது எனது என்றிருக்கும் - (இது) என்னுடையது என்னுடையது என்று (செலவு செய்யாமல்) வைத்துக்கொண்டிருக்கும், ஏழை - (அறிவில்லாதவனாகிய உலோபியினுடைய, பொருளை- செல்வத்தை, யானும் -, எனது எனது என்று இருப்பன்- என்னுடையது என்னுடையது என்று சொல்லிக் கொண்டிருப்பேன், (ஏனெனில் அந்தச் செல்வம்), தனது ஆயின்- அவனுடையதாயிருக்குமாயின், (அதனை அவன், பிறர்க்குக் கொடுத்துத் தானும் அனுபவிக்க வேண்டும்; அங்ஙனம்), அதனை- அச்செல்வத்தை, வழங் கான்- (பிறர்க்குக்) கொடான், தானும் பயன்துவ்வான்- அவனும் அப்பொருளின் பயனை அனுபவிக்கமாட்டான், யானும்-, அதனை அது- அப்பொருளை அவ்வாறே, (செய் வேன்); (ஆதலின், அப்பொருள் எனக்குச் சொந்தமில்லாதது போலவே அவனுக்கும் சொந்தமில்லை); எ-று.

பிறர்க்குச் செலவு செய்யாமலும், தானும் அனுபவிக் காமலும் என்னுடையது என்னுடையது என்று சொல்லி வைத்துக் கொண்டிருக்கும் அறிவில்லாதவனாகிய உலோபி யினுடைய பொருளை, யானும் அவனைப்போலவே என் னுடையது என்று சொல்லிக் கொண்டிருப்பேன்; ஏனெனில் அந்தச் செல்வம் அவனுடையதா யிருக்குமேயானால் அவன் அதைப் பிறர்க்குச் செலவிடவேண்டும்; தானும் அனுபவிக்க வேண்டும்; அவ்வாறு, அதனைப் பிறர்க்குக் கொடுக்க மாட்டான்; தானும் அதன் பயனை அனுபவிக்கமாட்டான்; அவனைப் போலவே யானும் செய்வது அச்செயலே; அதாவது, அதனைச் செலவு செய்யமாட்டேன், அனுபவிக் கவு மாட்டேன்; ஆதலால், அப்பொருள் எனக்குச் சொந்த

மில்லாததுபோல அவனுக்கும் உரியதாகாது என்பது இதன் கருத்து.

இதனை, உலோபிக்குப் பொருள் சொந்தமில்லை யென்பதை விளக்கி ஆசிரியராற் கூறப்பட்டதாகவே கொள்ள வேண்டும். பொருளுக்குரியவன் அதனை நன்மார்க்கத்திற் செலவிடுவான்; அதன் பயனைத் தானும் அனுபவிப்பான். அப்பொருளுரிமையைப் பெறாதவன், அதனை எவ்வழி யிலும் உபயோகிக்க இயலாதவனா யிருப்பான்; ஆதலால், அவ்வாறு பொருளைச் செலவிடாமலும் தானும் அனுபவி யாமலு மிருக்கும் உலோபி, அப்பொருளுரிமையை அடை யாத தமக்கு நிகராகக் கூறினார் ஆசிரியர். இதனால் ஈகை யில்லாதவனுக்குப் பொருளால்வரும் இன்பமில்லை யென்பது கூறப்பட்டது.

எனது- ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும் பெயர்; யான்- என்னும் உயர்திணைத் தன்மைப் பெயரடியாத் தோன்றி அகரச் சாரியையும், துவ்விகுதியும் பெற்றது. 'எனது எனது' என்னும் சொல்லடுக்குச் செல்வப்பற்றின் மிகுதியை விளக்கி நின்றது. ஏழை- என்பதற்கு, 'அறிவென்னும் பொரு ளில்லாத வறிஞன்' எனப்பொருள் கொள்க. 'ஏழை' என்பதன் முன் வலி இயல்பாயிற்றஃதுயர் திணைப் பெயராகலின். உம்மைகள் - இறந்தது தழுவியனவும், எதிரது தழுவியனவு மாம். (சு)

277. *வழங்காத செல்வரி னல்கூர்ந்தா ருய்ந்தார்*
இழந்தா ரெனப்படுத லுய்ந்தார்- உழந்ததனைக்
காப்புய்ந்தார் கல்லுதலு முய்ந்தார்தங் கைந்நோவ
யாப்புய்ந்தா ருய்ந்த பல.

(இ-ள்.) வழங்காத- (பொருளை நல்லார்க்கும் தமக்கும் பயன்படுமாறு) ஈயாத, செல்வரின்- செல்வ முடையவர்களைக் காட்டினும், நல்கூர்ந்தார் - வறுமைப்

பட்டவர், உய்ந்தார்- (பல துன்பங்களினின்றும்) தப்பினவ ராவர், (எப்படியெனில்), இழந்தார் எனப்படுதல்- (பொருளை அடைந்து இழக்குங்காலத்தில் பலராலும்) இழந்து விட்டார் என்று சொல்லி இகழப்படுதலினின்றும், உய்ந்தார்- தப்பினவராவர், கல்லுதலும் - (அப்பொருளைப் புதைத்துவைத்தற்குப் பூமியைத்) தோண்டுதலாகிய வேலை யினின்றும், உய்ந்தார் - தப்பினவராவர், கல்லுதலும் - (அப்பொருளைப் புதைத்துவைத்தற்குப் பூமியைத்) தோண் டுதலாகிய வேலையினின்றும், உய்ந்தார்- தப்பினவராவர், தம் கைநோவ- தம்முடைய கைகள் நோகுமாறு, யாப்பு- (அப்பொருளை) இறுக்கிப் பிடித்தலினின்றும், உய்ந்தார் - தப்பினவராவர், (இன்னும் இவர்கள்), உய்ந்த பல- (இவ்வாறு) தப்பினவைகள் பல, (உண்டு); எ-று.

பொருளை நன்மார்க்கத்தில் செலவிடாத உலோப குணமுடைய தனவந்தரைக் காட்டினும், அப்பொருளின்றி வறுமையடைந்தவர், பல துன்பங்களினின்றும் தப்பிப் பிழைத்தவராவர்; எப்படியெனில் பொருளை அடைந்து இழக்குங்காலத்தில், இழந்தாரென்று உலகத்தாரால் இகழப் படுதலினின்றுந் தப்பியவராவர்; வருத்தப்பட்டு அதனைக் காக்குந் துன்பத்தினின்றும் நீங்கியவராவர்; அதனைப் புதைத்தற்கு மண்ணிற் குழி தோண்டுதலாகிய சிரமத்தி னின்றும் நீங்கியவராவர்; அப்பொருளைக் கைகள் நோகும் படி இறுகப் பிடித்தலாகிய பிரயாசையினின்றும் நீங்கியவ ராவர். இன்னும் அவர்கள் தப்பினவைகள் பலவுண்டு என்பது இதன் கருத்து.

உலோபிகளுக்கும், பொருளுக்கும் எவ்வாறு சம்பந்த மில்லையோ அவ்வாறே வறுமையுடையார்க்கும் சம்பந்த மில்லை; இத்தன்மையில் இருவரும் ஒரு தன்மையரே; எனினும் உலோபிகட்கு அதனை இழத்தலாலுண்டாம் அபவாதம், காத்தலால் ஏற்படும் துன்பம், முதலிய பல துன்பங்களுண்டு; வறுமையையுடையார்க்கிவையில்லை-

ஆகலின், உலோப குணமுடைய தனவந்தரைக் காட்டினும் வறிஞர் கவலையற்றவராவர் என்பதை விளக்கி அதனால் ஈயாமையால் இன்பமில்லை யென்பதைக் குறித்தார் முனிவர். இங்ஙனம் உலோபத்துவமுடைய செல்வவானைக் காட்டினும் வறுமையுடையான் இழிவற்றவனென்பதை,

''வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலு நனிநல்ல- கொன்னே
அருளில னன்பிலன் கண்ணறைய னென்று
பலரா லிகழப் படான்''

என்ற (நீதி நெறி விளக்கம். 67-ஆம்) செய்யுளு முணர்த்தும். உலோபி, தன் பொருளைச் செலவிடாமற் சேர்த்து வைத் திருந்து இழந்து விடுவது நிச்சயமாதலின், இழந்தா ரெனப் படும் இழிவு அவனுக்குக் கூறப்படும். 'செல்வரின்' என்பதி லுள்ள ஐந்தாம் வேற்றுமையுருபாகிய இன்- தொழிலளவுப் பொருளது. நல் கூர்ந்தார்- வினையாலணையும் பெயர். 'உய்ந்தார்' என வருவன- வினை முற்றுக்கள். (எ)

278. *தனதாகத் தான்கொடான் றாயத் தவருந்*
தமதாய போழ்தே கொடா அர்- தனதாக
முன்னே கொடுப்பி னவர்கடியார் தான்கடியான்
பின்னை யவர்கொடுக்கும் போழ்து.

(இ-ள்.) (உலகத்தில் பொருளைச் சேர்த்துவைத்த உலோபி), தனது ஆக- (அப்பொருள்) தன்னுடையதாக இருக்க, (அப்பொழுதும்), தான் கொடான் - (அதனைப் பிறர்க்குத்) தான் கொடுக்க மாட்டான், தாயத்தவரும்- (அவன் இறந்த பிறகு அப்பொருளைப் பெறுதற்குரிய உலோபி களான) சுற்றத்தார்களும், தமது ஆய போழ்தே - (அப் பொருள்) தமக்குரியதாகியபோதே, கொடார்- பிறர்க்குத் தானமாகக் கொடுக்கமாட்டார்கள், முன்னே - முன்பு,

(அதனைத்தேடி வைத்து வாழ்ந்து கொண்டிருந்தவன்), கொடுப்பின் - பிறர்க்குக் கொடுத்தால், அவர்- (அப் பொருளை அடைதற்குரியாராய் அப்போதிருந்த) அச்சுற்றத் தார் கடியார்- அக்கொடையை விலக்கமாட்டார்கள், பின்னை- பின்பு, (அப்பொருளைத் தேடியவன் இறக்க அச்செல்வம் அத் தாயத்தாரிடம் சேர்ந்திருக்கும் போது அவர் தானம் செய்வாரானால் அப்படி), அவர் கொடுக்கும் போழ்து, தான் கடியான்- அப்பொருளைத் தேடியவன் வந்து அக்கொடைய விலக்கமாட்டான்; எ-று.

பொருளைத் தேடிப் பிறர்க்குக் கொடாமல் சேர்த்து வைக்கும் உலோபியின் செல்வத்தை அவன் இறந்த பிறகு அவனுடைய சுற்றத்தார் கைப்பற்றுவர்; அங்ஙனம் கைப் பற்றக் கூடியவர்களா யிருப்பினும் அவன் அப்பொருளைப் பிறர்க்கீயுங் காலத்தில் அதனைத் தடுக்கும் உரிமை அவர்களுக்கில்லை. அவனுக்குப் பின் அப்பொருளை அடைந்த சுற்றத்தார் பிறர்க்குக் கொடுத்தால் அப்பொருளைத் தேடி வைத்திருந்தவன் பிழைத்து வந்து அதனைத் தடுத்தல் முடியாது. அப்படியிருந்தும் அச்சுற்றத்தாரும் சில குடும்பங்களில் உலோபிகளாய்ப் பொருளைப் பிறர்க் கீயமாட்டார்கள்; அப்பொருளைத் தேடியவனும் உயிரோ டிருக்கும்போது அதனைப்பிறர்க் கீயான்; இந்த ஈயாமைக் குணத்தினால் இவர்க்கு இம்மையிலும் மறுமையிலும் இன்பமில்லையென்பது இதன் கருத்து.

இதனால் உலோபத்தின் இழிவுணர்த்தப்பட்டது. தான் - உயர்திணை யாண்பாலொருமைப் படர்க்கைப் பெயர். ‘தாயத்தவரும்’ என்பதன் உம்மை - இறந்தது தழு வியது. தாயம் - அப்பன், பாட்டன் முதலியவர்களின் மூல மாக வந்த பொருள்; அதனை அடையத் தக்கவர் - தந்தையின் வழியைச் சேர்ந்த சுற்றத்தாரவர்; அவர் தாயம் என்னும் பொருளுக்குரியவராதலின், தாயத்தவர் எனப்பட்டார்.

'போழ்தே' என்பதிலுள்ள, ஏ- இசைநிறைப் பொருளது. 'கொடாஅர்' என்னும் அளபெடை செய்யுளோசை நிறைக்க வந்தது. முன், பின் என்பன விரண்டும் - காலங்குறித்தவை. 'முன்னே' என்பதின் ஏ- சாரியை, 'பின்னே' என்பதில், ஐ- சாரியை. (அ)

279. *இரவலர் கன்றாக வீவாரா வாக*
விரகிற் சுரப்பதாம் வண்மை- விரகின்றி
வல்லவ ரூன்ற வடியரபோல் வாய்வைத்துக்
கொல்லச் சுரப்பதாங் கீழ்.

(இ-ள். இரவலர் - (பொருள்பெற விரும்பிச் செல்லும்) யாசகர், கன்று ஆக - கன்றை நிகர்ப்ப, ஈவார்- (பொருளைக்) கொடுப்பவர், ஆ ஆக- (அக்கன்றைக் கண்ட வுடன் பால் சுரக்கும்) பசுவை நிகர்ப்ப, விரகில்- உற்சாகத் தோடு, (சிரமமின்றி), சுரப்பது - (பொருளைக்) கொடுப் பதே, வண்மை ஆம்- ஈகையாம், விரகு இன்றி - (அத்தகைய) உற்சாகமில்லா மல், வாய்வைத்து கொல்ல - (கன்று மடியில்) வாய்வைத்து இழுத்து வருத்த, வடிஆ போல்- (பாலைச்) சொரிகின்ற பசுவைப்போல, வல்லவர் - வல்லமையுடைய வர்கள், ஊன்ற- அழுத்தி வருத்த, சுரப்பது - (ஒருவன் பொருளைக்) கொடுப்பது, கீழ் ஆம்- (மிகத்) தாழ்ந்த குணமாம்; எ-று.

கன்றின்மீது அன்புடைய பசு அதனைக் கண்ட மாத் திரத்தில் பாலைச் சொரியும்; அன்பில்லாத பசு, கன்று மடியில் வாய்வைத் தழுத்தி யிழுத்த பின் சிறிது பாலைத் தரும்; இவற்றைப்போலவே அன்போடு கூடிய ஈகைக் குணமுடையார் யாசகரைக்கண்ட மாத்திரத்தில் பொருளை உற்சாகத்தோடு கொடுப்பர்; அருளின்றி உலோபத்துவத்தைக் கொண்டிருப்பவர், வல்லமையுடையார் வாய்ப் பேச்சினா லும், உபாயச் செயல்களாலும் அழுத்தித் தமது மனத்தைக்

கசக்கிய பின் அவர்க்குச் சிறிது பொருள் கொடுப்பர். ஆதலின் அன்புடன் பிறர்க்குப் பொருளீதலே சிறந்த ஈகைக்குணமாம்; பிறர் வருத்துதற்காகப் பொருளீதல் மிகத் தாழ்ந்த குணமாம்.

இப்பாட்டினால், ஈகைத் தன்மை இன்ன தென்பதும், ஈகைத் தன்மையிற் சேராத கொடை அதாவது ஈயாமை இன்னதென்பதும் விளக்கப்பட்டன. அன்புள்ள பசுவையும், அன்பற்ற பசுவையும் அறக்கொடையார்க்கும், மறக் கொடையார்க்கும் உவமையாகக் கூறியது - உவமையணி.

'இரவலர்' என்பது, இரத்தலில் வல்லவர் என்றேனும், இரத்தலை யுடையவர் என்றேனும் பொருள்படும்; இரத்தலில் வல்லவர் என்று பொருள் கொள்ளும்போது, இர+வல்+அர்- எனப் பிரித்தல் வேண்டும்; இர- முதனிலைத் தொழிற்பெயர்; இரத்தலையுடையவர் எனப் பொருள் கொள்ளுமிடத்து, இரவல் + அர் எனப் பிரித்தல் வேம்டும். இரவல் - தொழிற்பெயர். இதில், அல்- விகுதி.கன்று - விலங்கினங்களிற் சிலவற்றிற்குரிய இளமைப்பெயர்; இது, யானை, குதிரை, கழுதை, கடமை, பசு முதலியவற்றிற்கு வரும்; இங்ஙனம் வருமென்பது,

''யானையுங் குதிரையுங் கழுதையுங் கடமையும்
ஆனோ டைந்துங் கன்றெனற் குரிய''

என்னும் (தொல்-பொருளதிகாரம் - மரபியல் 15-ஆம்) சூத்திரத்தா லுணரப்படும். ஆக- உவமவுருபு. சுரத்தல்- ஊறுதல்; இஃதிங்குக் கொடுத்தற்பொருடந்து நின்றது. வண்மை- பண்புப் பெயர்; வண் - பகுதி, மை- விகுதி. கொல்லல்- இங்கு வருத்தற் பொருளில் வந்தது; இஃதிப் பொருளதாகு மென்பதை,

''தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்''

என்னும் (திருக்குறள்-305-ஆம்) செய்யுளுரையில் பரிமேல மூகர், 'கொல்லும்' என்பதற்கு, 'கெடுக்கும்' என்று பொரு ளெழுதி, அதற்கு இச்செய்யுளின் ஈற்றடியாகிய, 'கொல்லச் சுரப்பதாங்கீழ்' என்பதனையே உதாரணங் காட்டியிருத்தாலா லுணர்க. வடிஆ- வினைத்தொகை. 'கீழ்மை' என்னும் பண்புப்பெயர் மையீறுகெட்டு, 'கீழ்' என நின்றது.

280. *ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்*
காத்தலு மாங்கே கடுந்துன்பங் - காத்தல்
குறைபடிற் துன்பங் கெடிற்றுன்பந் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்.

(இ-ள்.) (ஈகையில்லாதவர்கள் பொருளைப் பிறருக் குக் கொடாமல் சேர்த்துவைக்க முயன்றாலும் அப் பொருளால் எவ்வித இன்பத்தையும் அடையமாட்டார்கள்; அவர்களுக்கு அப்பொருளை), ஈட்டலும் - சேர்த்தலும், துன்பம் - துன்பமாம், மற்று - பின்பு, ஈட்டிய - (அவ்வாறு) சம்பாதித்த, ஒள்பொருளை - மேன்மையான பொருளை, காத்தலும் - பாதுகாப்பதும், ஆங்கே - அவ்வாறே, கடு துன் பம் - மிகுந்த துன்பமாம், காத்தல் - அப்பாதுகாப்பு, குறை படின் - குறைவுற்றால், துன்பம் - வருத்தமாம், கெடின்- (அச் செல்வமானது) அழிந்து விட்டால், துன்பம்- வருத்தமாம், (ஆதலின்), பொருள் - அப்பொருள், துன்பக்கு உறைபதி - (இவ்வாறு பல வகைப்பட்ட) துன்பங்களுக்கும் இருப்பிட மாகும்; எ-று.

உலோபகுணமுடையவர்கள், பொருளைப் பிறர்க் குக் கொடாமல் சேர்த்துவைக்க முயன்றாலும் அப்பொரு ளால் அவர்களுக் கெவ்வித இன்பமும் ஏற்படமாட்டாது; அப்பொருளைச் சம்பாதிப்பதாலும், அதனைப் பாதுகாப்ப தாலும், அப்பாதுகாப்புக் குறைவதாலும், அப்பொருள் அழிந்து போவதாலும் மிக்க துன்பமே யுண்டாகும்; இவ்வாறு பல துன்பங்களு முண்டாவதால் அப்பொருள்

துன்பங்களுக் குறைவிடமாம்; ஆதலின் இத்தகைய பொருள் சேர்ந்திருக் கும்போதே அதனை நல்வழியிற் செலவு செய்து புண் ணியத்தைத்தேடி இம்மை மறுமை இன்பங்களை அடைய வேண்டு மென்பது இதன் கருத்து.

பொருளை நன்மார்க்கத்தில் செலவிடாமல் சேர்த்து வைப்பினும் அப்பொருள் துன்பங்கட்குக் காரணமா மெனவே ஈயாமையயால் துன்பமேயன்றி இன்பமொன்று மில்லை யென்பது தானே அமைந்தது. இச்செய்யுளிற் கூறிய படி பொருள், பல துன்பங்களுக்கு மேதுவா மென்பதை,

''இன்னல் தரும்பொருளை யீட்டுதலுந் துன்பமே
பின்னதனைப் பேணுதலுந் துன்பமே- அன்ன
தழித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பா
விழத்தலுந் துன்பமே யாம்''

என்னும் (நீதிவெண்பா-46-ஆம்) செய்யுளு முணர்த்தும். இச் செய்யுளில் துன்பத்துக்குக் காரணமாகிய பொருள் முதலியன உபசார வழக்கால் துன்பமெனக் காரியமாக் கூறப்பட்டன. 'ஈட்டலும்' என்பதன் உம்மை- எதிரது தழுவிய எச்சப் பொரு ளது; 'காத்தலும்' என்பதன் உம்மை - இறந்தது தழுவியது. மற்று- இடைச்சொல்; பின்- என்னும் பொருள்தந்து நின்றது. ஈட்டிய - பெயரெச்சம். ஒள்- மேன்மை, சிறப்பு; பொருள் தானதர்மம் முதலிய நற்காரியங்களுக்குப் பயன்படுவது அதற்குச் சிறப்பாம். 'துன்பக்கு' என்பதில் அத்துச்சாரியை தொக்கு நின்றது, 'மாடக்குச் சித்திரமும்' என்பதிற்போல. மற்றை- அசை. (கo)

அதிகாரம் 29

இன்மை

இன்மையாவது - இல்லாமையாம்; அதாவது, மனிதர் ஐம்பொறிகளாலும் அனுபவிக்கப்படும் பொருள்கள் இல்லாதிருத்தலாம்; அது, வறுமையென்று சொல்லப்படும். பொருள் துன்பகாரணமாயிருப்பினும், அதனை நல்வழியில் செலவிட்டால் இன்ப காரணமுமாம். ஆதலின், அஃதில்லா தவர்க்கு அவ்வின்பமில்லாமற் போம்; அத்தகைய வறுமை யின் இயல்பைக் கூறின் பொருள் மனிதர்க்கு இன்றியமை யாததென்பதும், அதனால் புண்ணியத்தைத் தேடி இன்ப முறலா மென்பதும் அமையும். ஆகலின், இன்மையின் இயல்பு இவ்வதிகாரத்திற் கூறப்படுகின்றது. பொருளால் வரும் இன்ப துன்பங்களை அறிவுடையார் கருதார் என்பது முன் சில விடங்களிற் கூறப்பட்டுள்ளது; அங்ஙனம் கூறப் பட்ட அறிஞர் முற்றத் துறந்த மூதறிஞராவர். இல்லறத்தார்க் குப் பொருளும், அதனால் வரும் இன்பமும் உரியனவாக லின் பொருளின்மையால் வருந்துன்பங்கள் அவர் பொருட் டிங்குக் கூறப்படுகின்றன. முற்பிறப்பில் ஈயாத உலோபி கட்கே இப்பிறப்பில் வறுமையுண்டாம். ஆதலால், காரண காரியக் கிரமப்படி, இன்மை, ஈயாமையின் பின் வைக்கப் பட்டது. இன்மை எதிர்மறைப் பண்புப் பெயர். ஈயாமையால் வறுமை யுண்டா மென்பதை விளக்கவே, மனிதர்

பொருளைத்தேடி ஈயவேண்டு மென்னும் அறிவைப் பெறுவர்.

281. *அத்திட்ட கூறை யரைச்சுற்றி வாழினும்*
பத்தெட் டுடைமை பலருள்ளும் பாடெய்தும்
ஒத்த குடிப்பிறந்தக் கண்ணுமொன் றில்லாதார்
செத்த பிணத்திற் கடை.

(இ-ள்.) அத்து இட்ட - செந்நிறம் ஊட்டிய - (அதாவது, காவிதோய்த்த) கூறை- ஆடையை, அரை- இடுப்பிலே, சுற்றி- கட்டிக்கொண்டு, வாழினும் - (ஒருவர் சந்நியாசியாய்) வாழ்ந்தாலும், பத்து - பத்துப் பணமாயினும், எட்டு - எட்டுப் பணமாயினும், உடைமை- உடைத்தா யிருத்தல், பலர் உள்ளும் -பல மனிதர்களுக்குள்ளும், பாடு எய்தும்- பெருமையை அடையும், ஒத்த- (நன்றாக மதித் தற்குப்) பொருந்திய, குடி - உயர்ந்த பரம்பரையிலே, பிறந்தக் கண்ணும்- பிறந்தாலும், ஒன்று - சிறிது பொருள், இல்லா தார்- இல்லாதவர்கள், செத்த பிணத்தின்- இறந்தபிணத்தைக் காட்டினும், கடை- கடைப்பட்டவராவர்; எ-று.

பொருளுள்ளவன் சன்னியாசியாயிருந்தாலும் அவனை உலகத்தார் மதிப்பார்கள்; பொருளில்லாதவன் உயர் குடியிற் பிறந்தாலும் பிணத்தினும் கடைப்பட்டவனாவான் என்பது இதன் கருத்து.

இதனால் பொருளின் உயர்வும், வறுமையின் இழிவும் கூறப்பட்டன. 'பிணத்தினும் கடை' என்றது- பிணத் துக்காயினும் ஈமக்கடன் செய்யும்போது சில சிறப்புக்கள் செய்யப்படும், வறுமையுடையானுக்கு அவ்வகைச்சிறப்புக் களுமில்லை யென்பதை விளக்கியதாகும். வறுமை கொடி தென்பதை,

> ''இன்மை யெனவொரு பாவி மறுமையும்
> இம்மையு மின்றி வரும்''

என்னும் (திருக்குறள்-1042-ஆம்) செய்யுளும் விளக்கும். அத்து- செந்நிறம்; அஃதிங்குக்காவியை உணர்த்தி நின்றது; இனி, 'அத்து' என்பது, 'தையல்' என்றும் பொருளாகுமாதலின், 'அத்திட்ட கூறை' என்பதற்கு, 'பல தையல்களையுடைய கிழிந்த வஸ்திரம்' எனப் பொருள்கொள்ளினும் அமையும்; எனினும், கிழிந்த ஆடையுடையாரிடத்துப் பணமிருப்பது இயலாதாகலின், இப்பொருள் அத்துணைச் சிறப்பன்றென்க. அரை- பாதி; இஃதிங்கு உடம்பின் நடுப் பாகத்திற்கு ஆகுபெயராயிற்று. 'வாழினும்' என்பதன் உம்மை- இழிவு சிறப்புப்பொருளது. பத்து, எட்டு, ஒன்று என்பன- எண்ணலளவையாகு பெயர்களாய் அவ்வளவு பொருள்களை யுணர்த்தி நின்றன. 'பலருள்ளும்' என்பதிலுள்ள உம்மை- முற்றுப்பொருளது; 'பலருள்ளும்' எப்தை, பலர்+ உள்ளும் எனப் பிரிந்து, 'பலருள்ளும் பாடு' என்பதற்கு, 'பலர் கருதும் மதிப்பு' எனப் பொருள்கூறினும் அமையும்; 'பதருள்ளும்' என்றும் பாடம்; இதற்கு, 'சாரமற்றவருள்ளும்' எனப் பொருள் கொள்க. பெருமையடைதற்குக் காரணமாகிய பொருளுடைமையைக் காரியமாக்கிப், 'பாடெய்தும்' என்று கூறியது- உபசார வழக்கெனப்படும். பத்து, எட்டு என்பவற்றுள் ஐயப் பொருள்தரும் உம்மைகள் விகாரத்தாற் றொக்குநின்றன. 'பிறந்தக் கண்ணும்' என்பதன் உம்மை- உயர்வு சிறப்புப்பொருளது. செத்த- அவசியமின்றி வந்த அடைமொழி; எனினும், பிணத்தின் பயனற்ற தன்மையை நன்கு விளக்கற் பொருட்டு வந்தது; இதில், சா- பகுதி. கடை- பண்பாகுபெயராய்க் கடைப்பட்டவரை யுணர்த்தி நின்றது. காவி வஸ்திரம் சன்னியாசிகளுக்குரியது; 'காவிக்கல்' என்னும் செம்மண்ணாலும், மருதம்பட்டைக் கஷாயத்தாலும், பிறவற்றாலும் துறவிகள் வஸ்திரத்துக்குக் காவியேற்றுதல் மரபு. பௌத்த சன்னியாசிகளுக்கு மருதந் துவர் உரியது; இங்ஙனமே ஒவ்வொரு காவி ஒவ்வொரு மத

சன்னியாசிகட்கும் உரியதாம். இங்கே காவியென்று பொருள் கூறிய, 'அத்து' என்பது செந்நிறத்துக்கும், கையலுக்கும் வருமென்பதை,

''அத்தென்ப வரைஞாண் செம்மை சொலோ டிசைப்பு நாற்பேர்'' எனவரும் (சூடாமணி நிகண்டு 11-வது தொகுதி 12-ஆம்) செய்யுளடியானும்,

''அரைப்பட் டிகையுந் துன்னமு மசைச் சொல்லும்
செந்நிற மும்மிவை தெரியில்அத் தென்ப''

என்னும் பிங்கலந்தைச் செய்யுளடிகளானும் உணர்க. (க)

282. ***நீரினு நுண்ணிது நெய்யென்பர் நெய்யினும்***
யாரு மறிவர் புகைநுட்பந் - தேரி
னிரப்பிடும்பை யாளன் புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து.

(இ-ள்.) நீரினும் - (சகல பொருள்களினும் மிக நுண் மையா யிருக்கின்ற) நீரைக் காட்டினும், நெய்- நெய்யை, நுண்ணிது என்பர்- நுட்பமானதென்று (பலரும்) அறிந்து கூறுவர், நெய்யினும்- (அந்த) நெய்யைக் காட்டினும், புகை - புகையானது, நுட்பம்- நுண்மையயானதாம், யாரும் அறிவர் - (இதனை) எவருமுணர்வார்கள், தேரின்- (மனிதரின் இயற்கையை) ஆராய்ந்து பார்க்குமிடத்து, இரப்பு - யாசித்த லாகிய, இடும்பையாளன்- துன்பத்தையுடையவன், புகை யும்- (மிகவும் நுண்ணிதாகிய அந்தப்) புகையும், புகற்கு அரிய - உடபுகுதற்கு முடியாத, பூழை - துவாரத்தில், நுழைந்து புகும் - நுழைந்து செல்லுவான்; எ-று.

பொருளின்றி யாசிக்கச்செல்பவன், புகை நுழையாத இடத்திலும்கூட நுழைந்து யாசிப்பான் என்பது இதன் கருத்து.

புகையும் நுழைய முடியாத இடத்தில் யாசகன் நுழைந்து விடுவான் எனவே, அவன் புகையைக் காட்டினும் நொய்யவனென்பதும், அவமானங் கருதாது தான் செல்லத்தகாத விடத்திலும், செல்வாலென்பதும் பெறப்படும். இதனால், வறுமைக்குட்பட்டு யாசிப்பவனது இழிவுகூறி வறுமையின் கொடுமை விளக்கப்பட்டது. 'இரப்பிடும்பையாளன் புகையும் புகுத்தற்கரிய பூழை நுழைந்துபுகும்' என்றது- உயர்வு நவிற்சியணி; அதாவது, ஒரு பொருளினிடத்து மிகுதியான தன்மையைக் கூறுவது; இது, வடமொழியில் 'அதிசயோக்தி' எனப்படும். 'நீரினும், நெய்யினும், புகையும்' என்பவற்றிலுள்ள உம்மைகள் மூன்றும் இழிவு சிறப்புப் பொருளன. நுண்ணிது- அஃறினைக் குறிப்பு வினையாலணையும் பெயர். 'யாரும்' என்பதிலுள்ள உம்மை- முற்றுப் பொருளது. துன்பத்துக்குக் காரணமான இரத்தலைத் துன்பமென்றது - உபசார வழக்கு. இனி, 'இரப்பிடும்பை' என்பதை மூன்றாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டு, 'இரத்தலாகிய துன்பம்' என்று அதற்குப் பொருள் கூறினுமாம். இரப்பு- என்பதை, 'நிரப்பு' எனப் பிரித்து அதற்கு, 'வறுமை' எனப் பொருள் கூறினுமாம். 'நிரப்பு' என்பது, 'வறுமை' என்னும் பொருளில்,

''இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு''

''நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது''

என்னும் (திருக்குறள் 1048-1049)ஆம் செய்யுட்களில் வருதல் காண்க. நிரப்பு- முதனிலை திரிந்த தொழிற்பெயர்; எல்லாப் பொருள்களும் நிரம்பி யிருத்தலைக்குறிக்கும்; இஃதெதிர் மறை யிலக்கணை யால் ஒன்றுமில்லாமையைக் குறித்தது; எதிர்மறை யிலக்கணையாவது - ஒருசொல் தனது எதிர்மறையான பொருளை யுணர்த்துவது. புழை- என்பது செய்யுள்

விகாரத்தால், 'பூழை' என முதனீட்சி பெற்று நின்றது. 'புகுமே' என்பதில், ஏ- தேற்றம். (உ)

283. *கல்லோங் குயர்வரைமேற் காந்தண் மலராக்காற்*
செல்லாவாஞ் செம்பொறி வண்டினங்- கொல்லைக்
கலாஅற் கிளிகடியுங் கானக நாட
விலாஅ அர்க் கில்லைத் தமர்.

(இ-ள்.) கொல்லை- (தினைக்) கொல்லைகளிலே, கல்லால்- கற்களால், (தினைப்புனங் காவல்செய்வோர்), கிளிகடியும்- கிளிகளை எறிந்தோட்டுகின்ற, கானகம்- குறிஞ்சிநிலக் காட்டையுடைய, நாட- பாண்டிநாட்டிற் கிறைவனே!, கல்ஓங்கு - கற்களால் உயர்ந்திருக்கின்ற, உயர்- மேலான, வரைமேல்- மலையிலே, காந்தள் - காந்தள் மலர் முதலிய நறுமலர்கள், மலராக்கால்- மலராவிட்டால், செம்பொறி- சிவந்த புள்ளிகளையுடைய, வண்டு இனம்- வண்டுக்கூட்டங்கள், செல்லா- ஆம்- (அக்காந்தட்செடி முதலியவற்றினிடத்துப்) போகாவாம்; (அதைப்போல), இல்லார்க்கு - பொருளில்லாத வறிஞர்க்கு, தமர் இல்லை- இனத்தவர் இலராவர்; (அதாவது, இனத்தவரெவரும் அவரிடம் நெருங்கமாட்டார்கள்); எ-று.

காந்தள் மலர் முதலிய நறுமலர்கள் பூத்திருந்தால், அக்காந்தள் முதலிய செடிகளினிடத்துள்ள அம்மலர்களின் தேன், மகரந்தம் முதலியவற்றை நுகர்தற்கு வண்டுகள் போய்ச் சேரும்; மலர்கள் இல்லாவிடின் அவற்றினருகிற் செல்லமாட்டடா; இச்செயல்போலவே, ஒரு மனிதனிடத் துப் பொருளிருந்தால் அதனை அனுபவித்தற்குப் பல இனத்தார்போய்ச் சேருவர்; பொருளில்லாவிடின் எவரும் சேரார் என்பது இச்செய்யுட் கருத்து.

இதனால் பொருளில்லாத வறிஞனை எவரும் விரும்பாரென்பது கூறப்பட்டது. இச்செய்யுளின் முன்னிரண்

டடிகளும் - உபமானம். ஈற்றடி- உபமேயம்; இந்த உபமான உபமேயங்களை, உவமவுருபு விரிக்காமற் கூறியது- எடுத்துக் காட் டுவமையணி. 'கொல்லை' என்னும் தனிச்சீரும், மூன்றா மடியும்- ஆடூஉ முன்னிலை விளி. கல்லோங்கு - மூன்றாம் வேற்றுமைத் தொகை. 'ஓங்குயர்' என்ற சொற் களை, உயர்வைச் சிறப்பிக்கவந்த ஒரு பொருட் பன்மொழி யெனினுமாம். காந்தள்- மலருக்கு முதலாகு பெயர்; உபலக்ஷணத்தால் பிற மலர்களையும் உணர்த்தி நின்றது. கல்லால், இல்லார் என்பன செய்யுள் விகாரத்தால், லகர மெய்தொக்கு, கலால், இலார் எனவந்தன. அளபெடைகள்- செய்யுளோசை நிறைக்க வந்தன; 'இலாஅஅர்க்கு' என்பதில் ஈரள பெடுத்தது; இவ்வளபெடை நான்கு மாத்திரை கொண் டது. தமர்- தம்மவர்; இதில், தாம் - பகுதி; விகாரத்தால் முதல் குறுகிற்று. (ந)

284. உண்டாய போழ்தி னுடைந்துழிக் காகம்போற்
றொண்டா யிரவர் தொகுபவே - வண்டாய்த்
திரிதருங் காலத்துத் தீதிலிரோ வென்பார்
ஒருவரு மிவ்வுலகத் தில்.

(இ-ள்.) உடைந்துழி- (ஒரு பிராணியினுடைய உயிர் நீங்கி உடம்பு) சிதைந்து கிடைக்கும் சமயத்தில், காகம் போல்- (அளவில்லாமல் வந்து கூடி அதனைப் பிடுங்கித் தின்னும்) காக்கைகளைப் போல, (ஒருவர்க்கு), உண்டாய போழ்தின்- (செல்வம்) உண்டான சமயத்தில், (அச்செல்வத் தைப் பறித்துண்பதற்கு), ஆயிரவர்- ஆயிரக்கணக்கான மனி தர்கள், தொண்டு- அடிமையாய், தொகுப- (அவரிடத்தே) வந்து கூடுவார்கள்; (அவ்வாறு செல்வம் பெற்றவரே ஒரு காலத்தில் அதனை யிழந்து தரித்திரராய் உணவு தேடும் பொருட்டு), வண்டு ஆய்- (மதுவுண்ண மலர்தோறும் சென் றலையும்) வண்டைப் போல, திரிதரும் காலத்து- (பலவிடங் கட்கும் சென்று) அலையும் போது, (அவரை நோக்கி), தீது இல்லீரோ - (நீர்) தீங்கின்றியிருக் கின்றீரோ?, என்பார்- என்று

அவர் நலம் விசாரிப்பார், இ உலகத்தில் - இந்த உலகத்தில், ஒருவரும் இல்- ஒருவரும் இலராவர்; எ-று.

உயிர் நீங்கின பிராணிகளின் உடம்பு சிதைந்து விழுந்துகிடக்கும்போது அதனிடத்து அளவின்றி வந்து கூடி அதனைப் பிடுங்கித் தின்னும் காகங்களைப்போல, ஒருவரிடத்தில் செல்வம் சேர்ந்திருக்கும்போது அதனைப் பிடுங்கித் தின்பதற்குப் பல்லாயிரக்கணக்கான மனிதர்கள் அவரிடத்தே தொண்டராய் வந்து சேருவார்கள்; அச்செல்வமுடையார் அதனை யிழந்து வறிஞராய் உணவு தேடும் பொருட்டுப் பற்பல விடங்களிற் சென்றலையுங் காலத்தில் அவரைப் பார்த்து, 'நன்றாயிருக்கின்றீரோ?' என்று எவரும் விசாரிக்க மாட்டார்கள் என்பது இதன் கருத்து.

இதனால் வறுமைப்பட்டவரிடத்து எவரும் இரக்கங் காட்ட மாட்டார்களென்பது விளக்கப்பட்டது.

ஒருவரிடம் பொருளிருக்கும்போது மாத்திரம் வந்து கூடி அதனைப்பிடுங்கித்தின்று அஃதொழிந்த பின் அவரைக் கருதாதவர் மிக இழிந்த செயலுடையவர்ளாதலின், நெஞ்சிரக்கமின்றிப் பிணம் பிடுங்கித் தின்று அப்பிணவூன் தீர்ந்ததும் அவ்விடத்தை விட்டோடும் இழிதகவுடைய காகம் அவருக்குவமையாகக் கூறப்பட்டது. செல்வம் நிலையற்றதாதலின் நிலையற்ற உயிரில் பிணம் அதற்குவமை கூறப்பட்டது. வண்டு பல மலர்களிடத்தும் சென்றலைந்து தேன் பருகுதல்போல, வறிஞர் பலரிடத்தும் போய் அலைந்தலைந்து யாசித்துப்பொருள் பெறுவாராதலின், அவருக்கு வண்டு உவமையாகக் கூறப்பட்டது. இவை உவமையணியின்பாற் படும்.,

உண்டாய- பெயரெச்சம். '[illegible]' என்பதில், இன்- ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. உடைந்த- என்னும் பெயரெச்சம் அகரவீறு தொக்கு, உழி- என்னும் இடப்

பெயரோடு புணர்ந்து, உடைந்துழி- என்றாயது; உடைந்துழி- எதிர்கால வினையெச்சம். ஆயிரவர்- எண்ணடியாகப் பிறந்த உயர்திணைப் பலர் பாற் பெயர். 'காகம் போல்' என்பதற்குப் பின் சில சொற்றொடர்களும், மற்ற இடங்களின் சில சொற் றொடர்களும் எழுவாயும் இசையெச்சமாக வருவித்துரைக் கப்பட்டன. தொகுப - பலர்பால் வினை முற்று; இதனீற்றே காரம்- தேற்றப் பொருளது. 'வண்டாய்' என்பதில், ஆய் - உவமவுருபு. இல்- குறிப்புமுற்று. 'இல் லீரோ' என்பது விகாரத்தால், 'இலிரோ' என நின்றது. (௪)

285. *பிறந்த குலமாயும் பேராண்மை மாயுஞ்*
சிறந்ததங் கல்வியு மாயுங் - கறங்கருவி
கன்மேற் கழூஉங் கணமலை நன்னாட
வின்மை தழுவப்பட் டார்க்கு.

(இ-ள்.) கறங்கு - ஒலிக்கின்ற, அருவி - மலை யாறுகள், (வேகமாகப் பாய்ந்து) கல்மேல்- கற்களின் மேற் பாகத்தை, கழூஉம் - கழுவிச் சுத்தி செய்தற்கிடமாகிய, கணம் - கூட்டமான, மலை- மலைகளையுடைய, நல்- சிறந்த, நாட- நாட்டையுடைய பாண்டியனே!, இன்மை- வறுமையால், தழுவப் பட்டார்க்கு - சேரப்பட்டவர்களுக்கு, பிறந்த- (அவர்கள்) தோன்றிய, குலம்- நன்மரபின் பெருமை, மாயும்- அழியும், பேர் ஆண்மை- பெரிய வலிமை- மாயும்- அழியும், சிறந்த- உயர்வான, தம் கல்வியும் - தங்களுடைய கல்விச் சிறப்பும், மாயும்- அழியும்; எ-று.

பொருளில்லாது வறுமைப்பட்டவர்க்கு நற்குடிப் பிறப்பும், ஆண்மையும், கல்வியும் பொருந்தியிருந்தாலும் அவை சிறப்படைய மாட்டாவென்பது இதன் கருத்து.

ஒருவன் நற்குடியிற் பிறந்திருந்தாலும் அவனிடம் பொருளில்லாவிடின், அவனை உயர் குடியிற் பிறந்தானாக எவரும் மதித்து அவனோடுறவு கொள்ளமாட்டார்கள்;

வறுமைப்பட்டவன் எவ்வளவு கல்வி கற்றிருந்தாலும் அக்கல்வியை எவரும் கொண்டாட மாட்டார்கள்; அவனிடம் இயற்கையில் ஆண்மை ஏற்பட்டிருந்தாலும் அதனைச் செலுத்தத் தக்க ஊக்கம் பொருளில்லாக் காரணத்தால் குறைந்து போமாதலின் அவ்வல்லமையுமில்லாமற் போய் விடும்.

இதனால் வறுமைப்பட்டவனுக்கு எவ்வகையிலும் சிறப்பிராதென்பது விளக்கப்பட்டது. பொருளில்லானுக்கு இங்ஙனம் குலச் சிறப்பும், ஆண்மைச் சிறப்பும், கல்விச் சிறப்பு மில்லாமற் போமென்பதை,

''அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.''

''இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த
சொற்பிறக்குஞ் சோர்வு தரும்.''

''நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.''

என்னும் (திருக்குறள். 1047-1044-1046-ஆம்) செய்யுட்களா னுணர்க. அருவி வேகமாகப் பாய்தலால் கற்களில் உள்ள மாசு நீங்கும்; இதனால் நீர்வறண்டகாலத்தும் நீர் வளந்தரும் மலைச்சிறப்புக் கூறிப் பாண்டி நாட்டுயர்வு விளக்கப் பட்டது. ஆண்மை- வலிமை; அஃதாவது ஆண்மைக்குணம்; ஆண்மை- வலிமை யென்தை,

''மிடல்வயந் திண்மை மைந்து மெய்ந்நலந்
தீர மும்பல்
முடலைகொள் வாய்மை கூளி மூரியே யூக்க மீளி

அடல்விறலீடே யேணேயாண்மையே
திறலே நோன்மை
முடுகலே மல்லல் பாழி மொய்ம்புரன்
முரணே துப்பு.''

என்னும் (சூடாமணி நிகண்டு - பண்பு. பெ-தொ. 28.ஆம்) செய்யுளாலுணர்க. 'கழுவும்' என்பது விகாரப்பட்டு, 'கழூஉம்' என அளபெடுத்தது; இது சொல்லிசையளபெடை. 'கல்வியும்' என்பதிலுள்ள உம்மை- இறந்தது தழுவியது; உயர்வு சிறப்புப் பொருளது மாம். (ரு)

286. *உள்கூர் பசிய ாலுழைநசைஇச் சென்றார்கட்*
குள்ளூ ரிருந்துமொன் றாற்றாதா- னுள்ளூ
ரிருந்துயிர் கொன்னே கழியாது தான்போய்
விருந்தின னாதலே நன்று.

(இ-ள்.) உள்- வயிற்றினுள்ளே, கூர் - மிகுந்த, பசியால்- பசியினாலே, உழை - தன்னிடத்தில் நசைஇ- (உணவை) விரும்பி, சென்றார்கட்கு - வந்து சேர்ந்தவர் களுக்கு, உள்ஊர் இருந்தும்- (தான் பிறந்து வசிப்பதாக) உள்ள ஊரில் இருந்தும், ஒன்று- ஒருதவியேனும், ஆற்றா தான்- செய்யமுடியாத தரித்திரன், உள் ஊர் இருந்து- அந்த உள்ளூரிலே யிருந்து, உயிர் - (தன்னுடைய) உயிர் வாழ்க்கை நாளை, கொன்னே - வீணாக, கழியாது -கழிக்காமல், தான் போய்- தான் (அவ்வுள்ளூரைவிட்டு வேற்றூர்க்குச்) சென்று, விருத்தினன் ஆதலே, (ஒரு மனிதனுக்கு) விருந்தாளியாகி விடுவதே, (அதாவது, ஒரு மனிதனிடத்தில் புதியனாய்ச் சென்று யாசிப்பதே), நன்று- நல்லதாம்; எ-று.

தான் பிறந்து வளர்ந்துள்ள ஊரிலே யிருந்தும், பசி மிகுதியால் உணவுபெற விரும்பித் தன்னிடம் வந்தார்க்கு ஒருதவியும் செய்ய முடியாமலிருக்கும் வறிஞன், அவ்வூரி

லிருந்து வீணே வாழ்நாளைப் போக்கி இழிவடைவதைக் காட்டினும் வேற்றூர்க்குச் சென்று ஒருவனிடம் பொரு ளிரப்பது நல்லதாகும் என்பது இதன் கருத்து.

மனிதனாய்ப்பிறந்தவன் பொருளைத்தேடிப் பசித்து வந்தார்க்குதவி செய்தலே அவனுடைய பிறப்பின் பயனாம்; அது செய்ய முடியாதவன் பயனற்றவனாம்; ஆதலின், அங் ஙனம் பொருளுமின்றிப் பசித்துவந்தார்க் குதவுதலுமின்றி அவன் பயனற்றவனா யிருத்தலைக் காட்டினும் வேற்றூர்க்குச் சென்று ஒருவனிடம் இரந்தாவது பொருள் தேடுதல் நன்றென்றார் முனிவர். ''நல்லாறெனினும் கொளல் தீது'' என்றபடி யாசித்தல் மிகத்துன்பந்தருவதாம்; அந்த யாசகர்க்குப் பொருள் கொடுக்க முடியாத வறுமை அதைக் காட்டினும் துன்பந்தருவதாம். ஆதலின், பொருளிரந்தாவது வறுமைத் துன்பத்தைப் போக்கிக் கொள்வது நல்லதென்று கூறப்பட்டது. தாம் பிறந்த ஊரிலே யிருப்பவர்க்கு எக் காரியத்தையும் செய்யச்சௌகரியம் ஏற்படும்; அங்ஙன மிருந்தும் பசித்தவர்க் குதவிசெய்ய முடியாவிடின், அது மிக இழிவாம்; ஆதலின் அதைக் குறிப்பிடுவதற்கே, 'உள்ளூரி லிருந்து மொன்றாற்றாதான்' என்றார் முனிவர்; இதிலுள்ள உம்மை- உயர்வு சிறப்புப் பொருளது. இதனால், இரந்துண்ப வனைக் காட்டினும் வறுமையுடையான் மிக இழிந்தவ னென்பது கூறப்பட்டது.

ஒருவன் வாழ்கின்ற ஊரை உள்ளூரென்றும், வேற்றூரை அயலூரென்றும் கூறுவது உலகவழக்கு. கூர்- மிகுதிப் பொருள் தரும் உரிச்சொல். 'நசை' என்னும் பெயர்ச்சொல், 'நசைந்து' எனவினையெச்சச்சொல்லாதற்கு, 'நசைஇ' என அளபெடுத்தது; இது சொல்லிசையளபெடை யெனப்படும். உயிர் - உயிர் வாழுகின்ற நாளுக்கு இருமடி யாகு பெயராயிற்று. விருந்து- புதுமையெனப் பொருள்படும் பண்புப் பெயர்; 'விருந்தினன்' என்பது - 'புதியனாய்ச் செல்பவன்' என்று பொருள்படும். (கூ)

287. *நீர்மையே யன்றி நிரம்ப வெழுந்ததங்*
கூர்மையு மெல்லா மொருங்கிழப்பர்- கூர்மையின்
முல்லை யலைக்கு மெயிற்றாய் நிரப்பென்னு
மல்ல லடையப்பட் டார்.

(இ-ள்) கூர்மையின் - கூர்மையினாலே, முல்லை- முல்லை அரும்பை, அலைக்கும் - வருந்தச் செய்கின்ற, எயிற்றாய் - பற்களை யுடையவளே!, நிரப்பு என்னும்- தரித்திரமென்கின்ற, அல்லல்- துன்பத்தினாலே, அடையப் பட்டார்- சேரப்பட்டவர்கள், (அதாவது, வறுமைத் துன் பத்தை யுடையவர்கள்), நீர்மையே அன்றி - (தங்கள்) நற்குண மாத்திரமே யல்லாமல், நிரம்ப எழுந்த - பூர்த்தியாய் உண் டாகியிருந்த, தம்- தம்முடைய, கூர்மையும் - புத்தி நுட்பத் தையும், எல்லாம் - மற்றெல்லாச்சிறப்புக்களையும், ஒருங்கு - முழுவதும், இழப்பர்- இழந்துவிடுவார்கள்; எ-று.

வறுமைத் துன்பமுடையவர்கள் நற்குணம், புத்தி நுட்பம், இன்னும் மற்ற சிறப்புக்கள் ஆகிய எல்லாவற்றை யும் ஒருங்கே இழந்து விடுவார்கள் என்பது இதன் கருத்து.

வறுமையுடையார் நற்குணமுடையவரா யிருந் தாலும் உலகத்தார் அந் நன்னீர்மையைக் கொண்டாடாது அவரைத் துர்க்குணமுடையவரென்றே இழித்துக் கூறுவர்; அவர் நுண்ணிய அறிவுடையராயிருப்பினும் அவ்வறிவைக் கொண்டாடாமல் அவரை மூடரென்றே அவமதிப்பர்; அவருடைய மற்ற சிறப்புக்களையும் அங்ஙனமே போற்றாது இழித்துக் கூறுவர்; இவை உலகவியற்கைகளாம்.

இதனால், வறிஞரிடம் சிறந்த குணங்களிருப்பினும் பிரகாசிக்க மாட்டாவென்பது கூறப்பட்டது. 'நீர்மையே' என்பதனீற்றேகாரம்- உயர்வு சிறப்புப்பொருளை யுணர்த்தி நின்றது; பிரிநிலை பொருள தெனினுமாம். 'கூர்மையே'

என்பதிலுள்ள உம்மை- இறந்தது தழுவியது. ஒருங்கு - இடைச்சொல்; எஞ்சாமைப் பொருளில் வந்தது. முல்லை- முதலாகுபெயராய் அதனரும்பை யுணர்த்திநின்றது. கூர்மை, வெண்மை நிறம், உருவம் முதலியவற்றால் முல்லையரும்பு பெண்களின் பல்லுக்குவமையாம்; எனினும், பல், மற்றவைகளாற் சிறந்திருப்பதோடு கூர்மையால், முல்லை யரும்பினும் மிகச் சிறந்த தென்பதை விளக்குதற்கு, 'கூர்மை யின் முல்லையலைக்கும்' என்றார் முனிவர்; அலைத்த லாவது - வெட்கித் தலைகுனியச் செய்தல். எயிற்றாய்- மகடூஉ முன்னிலை. (எ)

288. *இட்டாற்றுப் பட்டொன் றிரந்தவர்க் காற்றாது*
முட்டாற்றுப் பட்டு முயன்றுள்ளூர் வாழ்தலின்
நெட்டாற்றுச் சென்று நிரைமனையிற் கைநீட்டுங்
கெட்டாற்று வாழ்க்கையே நன்று.

(இ-ள்.) (ஒருவன்), இட்டு - அற்பமாகிய, ஆறு- (தரித்திரத்தின்) மார்க்கத்திலே, பட்டு- சிக்கி, ஒன்று- (ஏதேனும்) ஒரு பொருளை, இரந்தவர்க்கு- யாசித்தவர் களுக்கு, ஆற்றாது - கொடுக்கமுடியாமல், முட்டுஆறு- இடர்பாடான வழியிலே, பட்டு- பொருந்தி, (அதாவது, பொருளில்லாத துன்பத்தை யடைந்து), முயன்று - (தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்கு மாத்திரம்) முயற்சி செய்து, உள் ஊர் - தான் பிறந்து வாழுகின்ற ஊரிலே, வாழ் தலின்- (தங்கியிருந்து இழிவுடன்) வாழ்வதைக் காட்டினும், நெடு ஆறுசென்று- நெடுந்தூரமான வழியிலேபோய், (வேற்றூர்களை யடைந்து அவ்வூர்களில்), நிரை- வரிசை யாயிருக்கின்ற, மனையில் - வீடுகளில், கை நீட்டும்- (உணவு முதலியவற்றை இரந்து) கையைநீட்டுகிற, கெட்ட ஆறு வாழ்க்கையே - கெட்ட வழியில் வாழ்தலே, (அதாவது, பிச்சையெடுத்துண்டு வாழ்வதே), நன்று- நல்லதாகும், எ-று.

ஒருவன், வறுமைத் துன்பத்தால் வந்து பொருள் கேட்டவர்க்குச் சிறிது பொருளேனும் கொடுக்க முடியாமல் தரித்திரனாய் உள்ளூரிலிருந்து அவ்விழிவோடு வாழ்வதைக் காட்டினும், அவ்வூரை விட்டு வெளியேறி நெடுந்தூரத் திலுள்ள ஊர்களையடைந்து வீடுகளில் பிச்சையெடுத்துண்டு பிழைப்பது நல்லதென்பது இதன் கருத்து.

இக்கருத்தும், இவ்வதிகாரத்தின் ஆறாம் செய்யுட் கருத்தும் ஒன்றே. ஆதலின், இது, 'கூறியது கூறல்' என்னும் குற்றத்தின் பாற்படுமோ எனின், படாது, ஒவ்வொரு செய்யுளும் வெவ்வேறு முனிவராற் செய்யப்பட்டதாதலி னென்க.

ஆறு- நெடிற்றொடராகிய ஈரெழுத்தொருமொழிக் குற்றுகரமாகலின் - ஒற்றிடை மிக்கது; வருமொழி முதல் வல் லெழுத்துப் புணர்ச்சியில் வலிமிகுதி தோன்றி முடிந்தது;

''ஈரெழுத்து மொழியு முயிர்த்தொடர் மொழியும்
வேற்றுமை யாயி னொற்றிடை யினமிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி''

என்னும் (தொல். எழுத்-கு-பு-6-ஆம்) சூத்திரவுரை பார்க்க. இட்டாறு - அற்பமானவழி; எல்லாவற்றினும் தாழ்ந்தது வறுமையே யாதலின் அக்குறிப்பைக் கொண்டு, 'ஆறு' என்பதற்கு வறுமைவழி யென்று பொருள் கூறப்பட்டது. ஆற்றாது - எதிர்மறை வினையெச்சம்; 'கொடுக்க' என்பது இதற்குமுன் இசையெச்சமாக வருவித்துரைக்கப்பட்டது. முட்டு-எந்த நல்ல காரியத்தையும் செய்வதற்குத் தடையா யிருப்பது; அது வறுமையாம்; ஆதலின், 'முட்டாற்றுப் பட்டு' என்பதற்கு, 'வறுமைத் துன்பத்தையடைந்து' என்று பொருளுரைக்கப்பட்டது. 'நிறைமனை' என்றும் பாடபேத முண்டு; இதற்கு, 'எல்லாப்பொருள்களும் நிறைந்துள்ள வீடுகள்' எனப் பொருள் கொள்க. கைநீட்டுதல்- கையேந்தி

வாங்குதல். கெட்ட ஆறு- கெட்டாறு; கெட்ட - என்னும் பெயரெச்சத்தின் ஈறு தொக்கது. (அ)

289. *கடகஞ் செறிந்ததங் கைகளால் வாங்கி*
அடகு பறித்துக் கொண் டட்டுக்- குடைகலனா
உப்பிலி வெந்தைதின் றுள்ளற்று வாழ்பவே
துப்புரவு சென் றுலந்தக் கால்.

(இ-ள்.) (அனுபவத்திற்குரிய பொருள்களை அடைந் திருந்தவர்களிடத்தில்), துப்புரவு- அனுபவிக்கப்படும் அந்தப் பொருள்கள், சென்றுலந்தக்கால்- (அவரைவிட்டு) நீங்கியழிந்து விட்டால், (அவ்வாறு பொருள்களை யிழந்த அம்மனிதர்), கடகம் செறிந்த (முன்னே). பொற்காப்புகள் பொருந்தியிருந்த, தம்கைகளால் - தங்களுடைய கைகளி னாலே, வாங்கி - (கீரைச்செடிகளின் கிளைகளை) வளைத்து, அடகு- (அவற்றிலுள்ள) கீரைகளை, பறித்துக்கொண்டு - பறித்து மடியில் நிரப்பிக் கொண்டுபோய், அட்டு- வேவித்துச் சமைத்து, குடைகலன் ஆ- உட்பாகத்தைக் குடைந்துண் டாக்கப்பட்ட (சுரைக்குடுக்கை தேங்காயோடு மரத்தட்டு திருவோடு முதலிய பாத்திரங்களே) உண்கலமாக, (கொண்டு அவற்றில்), உப்பு இலி- உப்பில்லா உணவாகிய, வெந்தை - அந்த வெந்தகீரையை, (போட்டு), தின்று- புசித்து, உள்அற்று - மனவூக்கங்கெட்டு, வாழ்ப- வாழ்வார்கள்; எ-று.

முன்னே அனுபவிக்கும் பொருள்களை அடைந்து இன்ப நுகர்ந்தவர்களிடத்து அப்பொருள்கள் இல்லாமற் போய்விடின் அவர்கள் வறிஞராய்க் கீரை பறித்து உப்பில்லாது சமைத்துத் தாழ்ந்த பாத்திரங்களிலிட்டுண்டு மனவூக்கத்தையும் இழந்து வாழ்வார்கள் என்பது இதன் கருத்து.

பொருளுடையாரும் அதனை யிழப்பரேல் வறுமைத் துன்பத்தால் வருந்துவர் என்பது இதிற் கூறப்பட்டது.

கீரையையும் உப்பில்லாது சமைத்துத் தின்பார் எனவே, கையில் அரைக்காசு மில்லாத தரித்திரக் கொடுமை நன்கு விளக்கப்பட்டது. குடைகலன்- வினைத்தொகை; குடை - செயப்படு பொருட்பெயர் எனக்கொண்டு அதற்கு, 'குடையப்பட்ட பொருள்கள்' எனப் பொருள் கூறினுமாம்; இங்ஙனங் கொள்ளுமிடத்து இதில், செயப்பொருள் விகுதி புணர்ந்து கெட்டதென்க. 'இலி' என்பதில், இ- பெயர் விகுதி. உள்- உடம்பினுள்ளிடம்; இஃதங்கிருப்பதாகிய மனத்திற்கு இடவாகு பெயர். இச்செய்யுளிற் கூறியபடி பொருள் வைத்திருந்திழந்தவர் இழிந்த உணவு சமைத்துண்டு வாழ்வர் என்பதை,

''பாலுடை யமிர்தம் பைம்பொற் கலத்திடைப் பாவையன்ன
நூலடு நுசுப்பி னல்லா ரேந்தவு நேர்ந்து நோக்காச்
சேலடு கண்ணி காந்தட் டிருமணித் துடிப்பு முன்கை
வாலட கருளிச் செய்ய வனத்துறை தெய்வ மானாள்''

என, சீவக சிந்தாமணியில் விஜயை துறவு கூறும் செய்யுளானு முணர்க. (கூ)

290. *ஆர்த்த பொறிய வணிகிளர் வண்டினம்*
பூத்தொழி கொம்பின்மேற் செல்லாவா- நீர்த்தருவி
தாழா வுயர்சிறப்பிற் றண்குன்ற நன்னாட
வாழாதார்க் கில்லைத் தமர்.

(இ-ள்.) நீர்த்து- நீரையுடையதாகிய, அருவி- அருவிப் பாய்ச்சல், தாழா - (எப்பொழுதும்) குறையாத, உயர்- உயர்ந்து வளர்ந்திருக்கின்ற, சிறப்பின்- சிறப்பினையுடைய, தண் - குளிர்ச்சி பொருந்திய, நல்- நலம்மிக்க, நாட - நாட்டையுடைய பாண்டியனே!, ஆர்த்த- (உடம்பில்) நிறைத்த, பொறிய- புள்ளிகளையுடைய, அணிகிளர் - அழகு விளங்கா நின்ற, வண்டு இனம்- வண்டுக் கூட்டங்கள், பூத்து ஒழி

-மலர்கள் மலர்ந்து நீங்கின, கொம்பின்மேல் - மரக்கிளை களின்மீது, செல்லா ஆம்- விரும்பிப்போகமாட்டாவாம் (அதைப்போலவே), வாழாதார்க்கு - (செல்வத்தோடு கூடி) வாழாதவர்களுக்கு, தமர் இல்லை- சுற்றத்தார் எவரும் இலராவர்; எ-று.

இவ்வதிகாரத்தின் மூன்றாஞ் செய்யுளிற் கூறப்பட்ட கருத்தே இதிலும் கூறப்பட்டது. இதில், எடுத்துக்காட்டு வமையணி அமைந்துளது.

ஆர்த்த- என்பதற்கு, 'ஒலிசெய்த' என்று பொருள் கூறினுமாம். பொறிய- அஃறிணைப் பன்மைப் பெயர்; காரணம்பற்றி வந்தது; இஃதிங்குப் பெயரெச்சமாய், 'வண்டினம்' என்னும் பெயர் கொண்டு முடிந்தது. ஒழி கொம்பு- வினைத்தொகை. மேல்- ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. 'செல்லாவாம்' என்பதில், ஆம்- அசை. நீர்த்து - என்பதற்கு, 'நற்றன்மையுடைய' எனப்பொருள் கூறினு மாம். 'நீர்த்தருவி தாழாவுயர் சிறப்பிற்றண்குன்ற நன்னாட' என்பது ஆடூஉ முன்னிலை; விளி. வாழ்க்கை பொரு ளினாலே உண்டாவதாகலின், 'வாழாதார்' என்பதற்கு, 'செல்வ முடையராய் வாழாதவர்' என்று பொருள் கூறப் பட்டது. இல்லை- ஐம்பால் மூவிடங்கட்கும் உரிய குறிப்பு முற்று; இங்குப் பலர்பாலில் வந்தது. (கo)

அதிகாரம் 30

மானம்

மானம் என்பது - பெருமை; அதாவது, உயர் குடிப் பிறந்தார்க்கு இயல்பாக ஏற்பட்ட மரியாதையாம்; இவ்வதிகாரம் மானத்தைக் காப்பாற்றுதலால் உண்டாம் உயர்வையும், அதனை இழத்தலால் ஏற்படும் இழிவையும் கூறி மானத்தின் இயற்கையை விளக்கிக் காட்டுவதாம்; ஆதலின், இப்பெயர் பெற்றது. மானத்தைக் காப்பாற்றுலாவது, உயர் குடிப் பிறந்தார், தம் கௌரவமான நிலையினின்று தாழாமையும், ஊழ்வலியாற்றாழ்வுவரின் உயிர் வாழாமையுமாம். ஒருவருடைய மானத்தைக் கெடுப்பவை இரத்தலும், அதற்குக் காரணமாகிய வறுமையுமே யாதலின், இவ்வதிகாரத்தை, 'இன்மை' என்னும் அதிகாரத்தின் பின்னும், 'இரவச்சம்' என்னும் அதிகாரத்தின் முன்னும் வைத்தார் அதிகாரப் பாகுபாடு செய்தார்.

291. *திருமதுகையாகத் திறனிலார் செய்யும்*
பெருமிதங் கண்டக் கடைத்து- மெரிமண்டிக்
கானந் தலைப்பட்ட தீப்போற் கனலுமே
மான முடையார் மனம்.

(இ-ள்.) திரு- செல்வமானது, மதுகை ஆக- (தம்மிடத்தில்) வன்மையுடையதாக, (அதாவது, அதிகரிக்க), திறன்

இல்லார்- மேன்மைக் குணமில்லாதவர், (அச்செல்வச் செருக் கால் அடாத காரியங்களைச் செய்வர்; அவ்வாறு), செய்யும்- செய்கின்ற, பெருமிதம்- வரம்பு மீறின செய்கையை, மான முடையார் - குடிப்பிறப்பின் மரியாதையுடையவர், கண்டக் கடைத்தும்- கண்ணால் பார்த்த போதுங்கூட, மனம் - அவர் களின் நெஞ்சம், எரிமண்டி- எரிதல் பொருந்தி, கானம் தலைப்பட்ட- காட்டில் பற்றி யெழுந்த, தீபோல்- அக்கினிச் சுவாலைபோல, கனலும்- வெதும்பும், எ-று.

நற்குண மில்லாதவர்கள் செல்வச்செருக்கினால் செய்யும் வரம்பு கடந்த செய்கையைக் கண்ணால் பார்த் தாலும் மானமுடையார் அது பொறாமல் மனம் கொதிப்பர் என்பது இதன் கருத்து.

மானமுள்ளார், அவர் செய்கையைப் பார்த்தாலும் மனம் கொதிப்பர் எனவே, தமக்குத் துன்பம் வந்தபோதும் உதவி பெறுதற்குத் தம்மானத்தை யிழந்து அவரிடம் செல்லா ரென்பது தானே பெறப்பட்டது. இதனால், மானமுடையார், தமக்குத் துன்பம் வந்தபோதும், தகுதியற்ற தனவந்தரிடம் சிறு உதவியும் பெறுதற்குச் சென்று பெருமையை இழக்க மாட்டார்களென் பது கூறப்பட்டது. நற்குணமில்லாதவர்கள் செல்வம் அதிகரித்தபோது அப்பணச் செருக்கால் நற்காரியங் களைச் செய்யார்; நல்லாரைப் போற்றார்; தீச்செயல்களைப் புரிந்து தீயாரையே போற்றுவர்; இத்தகையினரை மான முடையார் சிறிதும் மதியார்.

திறன் - குணம்; இஃதிங்கு நற்குணத்தை யுணர்த்தி நின்றது. திறனிலார்- எதிர்மறைக் குறிப்பு வினையாலணை யும் பெயர். பெருமிதம்- அதிகரித்த அளவு; மிதம்- அளவு; இஃதிங்கு அளவுக்கு மேற்பட்ட செய்கையை விளக்கி நின்றது. 'கண்டக் கடைத்தும்' என்பதிலுள்ள உம்மை-இழிவு சிறப்புப் பொருளது; அசையெனினுமாம். எரி- முதனிலைத் தொழிற்பெயர்; தல்லீறு கெட்டு நின்றது. காட்டுத்தீ அவிப்

பாரற்று மிக்கெரிவதாதலின், மனக் கொதிப்பின் மிகுதியைக் காட்டுதற்கு அதனை உவமையாகக் கூறினார் முனிவர். (க)

292. *என்பா யுகினு மியல்பிலார் பின்சென்று*
தம்பா டுரைப்பரோ தம்முடையார்- தம்பா
டுரையாமை முன்னுணரு மொண்மை யுடையார்க்
குரையாரோ தாமுற்ற நோய்.

(இ-ள்.) தம் உடையார்- தமக்குரிய பொருளாகிய மானத்தையுடையார், (பொருளின்றி வறுமையால் உணவு கிட்டாமல் தம் உடல் மெலிந்து), என்பு ஆய் உகினும் - எலும்பாகிச்சிதைந்துதிர்வதாயிருந்தாலும், இயல்பு இல்லார்- நற்குணமில்லாத தனவந்தரது, பின் சென்று - பின்னே போய், தம்பாடு - தம்முடைய வறுமைத் துன் பத்தை, உரைப்பரோ- கூறுவார்களோ?, (கூறார்), தம்பாடு - தமது வருத்தத்தை, உரையாமை - சொல்லாமலே, முன் உணரும் - முன்னே குறிப்பினால் அறிந்து தமக்குதவி புரியத் தக்க, ஒண்மை உடையார்க்கு - நுண்ணறிவையுடையவர் களுக்கு, தாம் உற்ற நோய்- தாம் அடைந்த வருத்தத்தை, உரையாரோ - கூறாதிருப்பாரோ? (கூறுவர்); எ-று.

மான முடையார், வறுமையால் தாம் உடல் மெலிந்து இறந்தொழிவதாயிருந்தாலும், நற்குணமில்லாத தனவந்த ரிடத்துச் சென்று தம் வருத்தத்தைக் கூறமாட்டார்கள்; தாம் சொல்லாமலே குறிப்பறிந்து தமக்குதவி செய்யத்தக்க பேரறி வாளரிடத்துத் தம் குறையைச் சொல்லுவர் என்பது இதன் கருத்து.

நற்குணமில்லாதவரிடத்தில் மான முடையார் போய்த் தம் வருத்தத்தைக் கூறினால் அவர் சிறிதும் உதவி செய்யாமல் இழிவு கூறுவர்; ஆதலின் அவர்க்கு மானக் கேடுண்டாகும்; குறிப்பறிந்து பிறருக்குதவி செய்யும் நுண்ணறி வுள்ளார்பால், மான முள்ளார் தம் குறை கூறின்

அவர் அவ்வருத்த நீக்கி மானத்தைக் காப்பாற்றுவர். ஆதலின், மானிகள், நற்குண மில்லாரிடத்தில் தம் குறை கூறாரென்றும், நற்குணமுடையவரிடத்துக் கூறுவரென்றும் சொன்னார் முனிவர். இதனால், மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் வகை கூறப்பட்டது. நற்குண முடையாரிடத்து மானமுள்ளார் தம் குறையைக் கூறலா மென்பதை,

''இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு''

என்னும் (திருக்குறள் 1054-ஆம்) செய்யுளானுணர்க. துர்க்குண முடையாரிடத்துக் கூறலாகாதென்பது,

''இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற்
கரப்பா ரிரவன்மி னென்று''

என்னும் (திருக்குறள், 1067-ஆம்) செய்யுளாலுணரப்படும். 'உகினும்' என்பதிலுள்ள உம்மை- இழிவு சிறப்பு. 'உரைப்பரோ, உரையாரோ' என்னும் இரண்டும் எதிர்மறை யெச்சங்கள்; முன்னது 'உரையார்' என்றும், பின்னது, 'உரைப்பார்' என்றும் பொருள் தந்து நின்றன; இங்ஙனம் பொருளானவைகளில் முன்னது எதிர்மறை, பின்னது உடன்பாடு. மானம் உயிரை நிகர்த்ததாதலின், அதனை அவராகவே கொண்டு, 'தம் உடையார்' என்றார். உரையாமை- எதிர் மறை வினையெச்சம், மை- வினையெச்ச விகுதி. பின்- இடத்தை யுணர்த்தி நின்றது. முன்- காலத்தை யுணர்த்தி நின்றது.

293. *யாமாயி னெம்மில்லங் காட்டுதுந் தாமாயிற்*
காணவே கற்பழியு மென்பார்போ - னாணிப்
புறங்கடை வைத்தீவர் சோறு மதனான்
மறந்திடுக செல்வர் தொடர்பு.

(இ-ள்.) யாம் ஆயின் - நாமானால், (எம்மைத் தேடி வரும் பணக்காரராகிய விருந்தினர்க்கு), எம் இல்லம்- எமது வீடு முழுவதையும், காட்டுதும்- (அவரை உள்ளே அழைத்துப்போய் இருக்கச் செய்து உணவுண்பித்து உபசரித்து) காட்டுவோம், தாம் ஆயின்- அந்தப் பணக்காரர் களானால், (பிறர் அவரிடம் விருந்தினராகச் சென்றபோது), காணவே- (அவர் வீட்டினுள் பிறர் சென்று) பார்த்த பொழுதே, கற்பு அழியும் என்பார்போல்- (பணக்காரராகிய தம்முடைய வீட்டில் நடக்கும்) ஒழுங்கு கெட்டுவிடுமென்று கருதுவாராய், நாணி- (அவர்க்குத் தம்முடைய வீட்டைக் காட்டுதற்கு), வெட்கப்பட்டு, (அவரை), புறங்கடை வைத்து- வாயிலின் வெளியிடத்திலே வைத்து, சோறும் ஈவர்- சோற்றையும் கொடுப்பார்கள், அதனால் - அந்தத் தகாத செய்கையினால், செல்வர் தொடர்பு- அந்தப் பணக்காரர் களுடைய சம்பந்தத்தை, (அதாவது, அவர்களைத் தொடர்ந்து திரிதலை), மறந்திடுக- (மானத்தைக் காப்பாற்றக் கூடியவர்) மறந்து விடக்கடவர்; எ-று.

பணக்காரர் விருந்தினராக வந்தபோது நாமானால் அவரை வீட்டிற்குள் அழைத்துக் கொண்டு போய் அவருக்கு வீடு முழுவதையும் காட்டி விருந்திட்டுபசரிப்போம்; பிறர் தம்மிடம் விருந்தினராக வந்தபோது அந்தப் பணக்காரர் களானால் விருந்தினராக வந்த பிறர், அவர்களின் வீட்டிற்குள் நுழைந்து அங்குள்ளவைகளைப் பார்த்தால், அவர்கள் தம் வீட்டிற் கென்று ஏற்படுத்தியிருக்கும் ஒழுங்குதவறிவிடு மென்று, அவருக்குத் தம் வீட்டினுட்பாகத்தைக் காட்ட நாணி அவர்களை வீட்டிற்கு வெளியிடத்தில் வைத்து உண வுண் பிப்பார்கள்; அதனால் அவரிடம் செல்லும் விருந்தினரின் பெருமை கெடும்; ஆதலின், உயர் குடிப்பிறந்தார் எந்த உதவியையும் நாடி அவரைப் பின்பற்றிச் செல்லுதல் கூடா தென்பது இதன் கருத்து.

ஆசிரியர், தம்மையும், தம்போன்ற பிறரையும் சேர்த்து, 'யாமாயின்' என்று கூறினார். யாம்- தன்மைப் பன்மைப் பெயர். இதனால், வந்த விருந்தினரை உள்ளே அழைத்துச் சென்றுபசரிக்கும் செல்வச் செருக்கில்லாத தம்போன்ற நல்லாரியல்பையும், விருந்தினரை வெளியில் வைத்துபசரிக்கும் செல்வச் செருக்குள்ள அறிவிலிகளின் இயல்பையும் விளக்கி, அந்த அறிவிலிகளின்பாற் செல் வோர்க்கு மானங் கெடு மென்பதையும் குறித்தார் முனிவர்.

அறிவற்ற சில பணக்காரர், பிறர் தங்கள் வீட்டிற்குள் வந்து அங்குள்ளவற்றை யெல்லாம் பார்த்தால் தங்கள் கௌரவத்திற்குக் குறைவுண்டாகும் என்பது போன்ற சில மூடக்கொள்கைகளைத் தங்கள் வீட்டின் கௌரவத்திற் குரியனவாகிய கிரமங்களாக ஏற்படுத்தி வைத்துக் கொண்டி ருப்பர்; அந்த ஏற்பாடே இங்குக் 'கற்பு' என்று சொல்லப் பட்டது; கற்பு-முறைமை. இத்தகைய மூடப் பழக்க வழக் கங்கள் பெரும் பான்மையான பணக்காரர்களிடத்திருப்பதை நாம் பலவிடங்களிற் காணலாம். இவர்கள் உலகிற் பிறந்தும் பயனற்ற மனிதராவர்.

'கற்பு' என்பதற்கு, 'கல்லின் தன்மை' அதாவது, வலிமை யென்றும், பெண்களின் பதிவிரதாதர்மமென்றும் பொருள்கொண்டு, 'கற்பழியும்' என்பதற்கு முறையே, 'வீட்டின் வலிமை கெடு' மென்றும், 'மனைவியின் பதி விரதாதர்மங் கெடும்' என்றும் உரை கூறுவாரு முளர். 'பதி விர தாதர்மம்' என்ற பொருளுக்கு, 'இல்லம்' என்பதை இடவாகு பெயராகக் கொண்டு மனைவிக் காக்குதல் வேண் டும்.

காட்டுதும்- தன்மைப் பன்மை வினைமுற்று. 'காணவே' என்பதில், ஏ- விரைவுப் பொருள் குறித்து நின்றது. 'கடைப்புறம்' என்பது, 'புறங்கடை' என இலக்கணப் போலியால் முன் பின்னாக மாறி வந்தது; கடை-வாயில்,

புறம்- வெளி; ஆகவே, 'கடைப் புறம்' என்பது, 'வாயிலின் வெளிப்பக்கம்' என்று பொருள் படும். இங்ஙனம் இலக் கணப் போலியாகக் கொள்ளாது, 'புறங்கடை' என்பதை அவ்வாறே அமைந்ததாகக் கொண்டு, அதற்கு, 'வெளியிடம்' எனப் பொருள் கொள்ளினுமாம்; புறம்- வெளி, கடை- இடம். மறந்திடுக - வியங்கோள்; இடு- துணைவினை; துணிவுப் பொருளுணர்த்தி நின்றது. போல்- ஒப்பில் போலி; உவமப் பொருள் குறித்து வந்ததன்று; இதன் இலக்கணம், இந்நூலின் 124-ஆம் செய்யுளுரையிற் காண்க. (ந)

294. *இம்மையு நன்றா மியனெறியுங் கைவிடா*
தும்மையு நல்ல பயத்தலாற் - செம்மையின்
நானங் கமழுங் கதுப்பினாய் நன்றேகாண்
மான முடையார் மதிப்பு.

(இ-ள்.) நானம்- கஸ்தூரியானது, செம்மையின் - செவ்வையாக, கமழும் - நறுமணம் வீசுகின்ற, கதுப்பினாய் - கூந்தலையுடையவளே!, மானம் உடையார்- மானமுள்ள வர்கள், (அதனைக் காப்பாற்றி), மதிப்பு-(பலராலும்) நன்கு மதிக்கப்படுதல், (அதாவது, மானத்தைக் காப்பாற்றிப் பெருமையடைவது), இம்மையும் - இவ்வுலகத்திலும், நன்றாம்- (புழை உண்டாக்குவதால்) நல்லதாம். இயல்- பொருந்திய, நெறியும் - (அவர்கள் மேற்பதவிக்குச் செல்லும்) மார்க்கத்தையும், கைவிடாது - கைவிடமாட்டாது, (அதாவது, அவ்வுயர்ந்த நெறியையும் அவர்க்குண்டாக்கும்), உம்மையும்- மறுமையிலும், (அதாவது, இவ்வுலகத்தை விட்டு நீங்கி மறு உலகத்துக்குச் சென்ற போதும்) நல்ல-நல்ல அனுபவங்களை, (அவர்க்குக் கொடுக்கும்; அவ்வாறு), பயத் தலால்- உண்டாக்குவதால், நன்றே- (மேலுலகத்தும்) நல் லதே; எ-று.

மானமுள்ளவர் தேடிக் கொண்ட மதிப்பானது, இவ் வுலகத்திலும், மேலுலகத்திலும் புகழையும், இன்பத்தையு

முண்டாக்குவதால் நன்மையுடையதாகும் என்பது இதன் கருத்து.

மானத்தைக் காப்பாற்றுவோர் எல்லோரினும் சிறந்து விளங்குவராதலின், அவரை இவ்வுலகத்தில் பலரும் புகழ்வர்; அதனால் அவர் இன்புறுவர்; அவர் இவ்வுலகத் திலிருக்குங்கால் மானத்தைக்காப்பாற்றுதற்கு நற் காரியங் களையே செய்வராகலின், அவற்றால் அவர்க்குப் புண்ணிய முண்டாம்; அப்புண்ணியத்தால் அவர்கள் இவ்வுலகத்தை விட்டு மேலுலகத்திற்குச் சென்ற பின் அங்கும் இன் பத்தையே அடைவர்.

இவ்வாறு மானம் இருமையிலும் நன்மை பயக்கு மென்று கூறியதனால், இருமைப் பயன்களையும் அடைய விரும்புவோர் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டு மென்பது குறிப்பித்ததாயிற்று. இவ்வாறு மானத்தைக் காப் பாற்றாதவர்க்கு இவ்வுலகிற் புகழுமில்லை, மேலுலகத் தின்பமுமில்லை. இதனை,

''புகழின்றாற் புத்தேள்நாட் டுய்யாதா லென்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை''

என்ற (திருக்குறள்,966-ஆம்) செய்யுளும் விளக்கும். 'இம்மை யும்' என்பதிலுள்ள உம்மை- எதிரது தழுவியது; 'இயல் நெறியும்' என்பதிலுள்ள உம்மை- இறந்தது தழுவியதும், எதிரது தழுவியதுமாம்; இயல் நெறி- வினைத்தொகை. 'உம்மையும்' என்பதன் உம்மை- இறந்தது தழுவியது. நல்ல- நன்மை யென்னும் பண்படியாகப் பிறந்த அஃறிணைப் பன்மைப் பெயர். கஸ்தூரியைத் தைலம் முதலியவற்றோடு கலந்து கூந்தலுக்குப் பூசுவதியற்கை; நெற்றியில் கஸ்தூரிக் குழம்பால் பொட்டிடுதலும், கன்னங்களிலும் சிறு புள்ளிகள் இடுதலும் பெண்களின் அலங்கரிப்பில் உள்ளனவாதலின், கதுப்பு- என்பதற்கு, 'கன்னம்' எனப் பொருள் கொள்ளினு

மாம். மானம் உடையார்- என்பதற்கு, 'மானம் கெடார்' எனப் பொருளுரைப்பினும் பொருந்தும். மதிப்பு- தொழிற் பெயர், 'இசைநெறியும்' என்றும் படாபேத முண்டு. (சு)

295. *பாவமு மேனைப் பழியும் படவருவ*
சாயினுஞ் சான்றவர் செய்கலார் சாத
லொருநா ளொருபொழுதைத் துன்ப மவைபோ
லருநவை யாற்றுத லின்று.

(இ-ள்) சாதல்- மனிதர் இறத்தல், ஒரு நாள்- (இறந்த) ஒரு நாளிலே, ஒரு பொழுதைத் துன்பம்- ஒரு நேரத்துத் துன்பமாம், (அதாவது, இறக்குஞ் சமயத்தில் மாத்திரம் நின்று நீங்கிவிடுந்துன்பமாம்), (பாவமும் பழியும் எப்பொழுதும் நீங்காத பெருந் துன்பத்தைச் செய்வனவாம்; ஆதலின்), அவைபோல்- பாவமும் பழியுமாகிய அவற்றைப்போல், அருநவை- சகித்தற்கரிய பெருந் துன்பத்தைச் செய்வனவாம்; ஆதலின்), அவைபோல்- பாவமும் பழியுமாகிய அவற்றைப் போல், அரு நவை- சகித்தற்கரிய பெருந் துன்பத்தை, ஆற்றுதல் இன்று- செய்தல் இல்லை, (ஆதலின்), சான்றவர்- மானத்தைக் காப்பாற்றும் பெரியார், பாவமும்- (மறுமையில் துன்பத்தை அனுவிக்கும்படியான) குற்றமும், ஏனை- மற்றை, பழியும்- (இவ்வுலகத்தில் மனம் வருந்தத்தக்க) நிந்தனையும், பட- உண்டாகுமாறு, வருவ- நேர்வனவாகிய காரியங்களை, சாயினும் - (அவற்றைச் செய்யாவிடில் தாம்) இறந்துபோவதாயிருந்தாலும், செய்கலார்- செய்ய மாட்டார்கள்; எ-று.

சாதல் ஒரு நாள் ஒரு பொழுதைத் துன்பம், பாவமும், பழியும் உண்டாகத்தக்க தீயகாரியங்களைச் செய்தால் அவை எப்பொழுதும் நீங்காத துன்பத்தைத் தருவனவாம்; ஆதலின், மானத்தைக் காப்பாற்றக் கூடிய பெரியார், அத்தீய காரியங் களைச் செய்யாதிருந்தால் சாவு வருவதாயிருந்தாலும் செய்ய மாட்டார்கள் என்பது இதன் கருத்து.

சாவு வருவதாயினும் செய்யார் எனவே, சான்றோர் இறந்தேனும் மானத்தைக் காப்பாற்றுவாரேயன்றிச் சாவுக் கஞ்சி உயிரோடிருந்து மானங்கெடும் தீயகாரியங்களைச் செய்யமாட்டார்கள் என்பது பெறப்பட்டது. இதனால் உயிரைக் கொடுத்தேனும் மானத்தைக் காப்பாற்ற வேண்டு மென்பது கூறப்பட்டது.

தீயவை எப்பொழுதும் துன்பத்திற் கேதுவாயிருத்த லால் சான்றோர் அவற்றைச் செய்யார் என்று, செய்யாமைக் கேதுவைக் கூறியது- ஏதுவணி. பாவம்- 'பாபம்' என்னும் வடசொற்றிரிபு. ஏனை- சுட்டியதற்கினம். பாவமும், பழியும் என்பவற்றின் உம்மைகள்- எண்ணிநிற்றற் பொருளன. பட- வினையெச்சம். வருவ- அஃறிணைப்பன்மை வினை யாலணையும் பெயர். 'சாயினும்' என்பதன் உம்மை- இழிவு சிறப்புப்பொருளது; சாவு மிகக்கொடிதென்பதை விளக்கும். 'சாவினும்' என்றும் பாடபேதமுண்டு. பொழுதை- ஐயீற் றுடைக் குற்றியலுகரம்;

''ஐயீற் றுடைக்குற் றுகரமு முளவே''

என்னும் (நன்-உயி-பு-35-ஆம்) சூத்திரம் பார்க்க. (ரு)

296. *மல்லன்மா ஞாலத்து வாழ்ப வருளெல்லாஞ்*
செல்வரெனினுங் கொடாதவர் - நல்கூர்ந்தார்
நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார்.

(இ-ள்.) மல்லல்- பல வளங்களையுடைய, மா- பெரிய, ஞாலத்து - பூமியிலே, வாழ்பவருள் எல்லாம் - உயிரோடுகூடி வாழ்ந்திருப்பவரெல்லாருள்ளும், கொடா தவர் - (வறுமையால் வந்திரந்தார்க்குச்சிறிது பொருளேனும்) ஈயாதவர், செல்வர் எனினும்- மிக்க தனவந்தராயிருப்பினும்,

நல்கூர்ந்தார்- தரித்திரமுடையரேயாவர், செல்வரை - (அத்தகைய) செல்வமுள்ளாரிடத்தில், சென்று - போய், இரவாதார்- (வறுமைத் துன்பத்தைச் சொல்லிப் பொருளை) யாசியாதவர், நல்கூர்ந்தக் கண்ணும்- வறுமையுற்றாலும், பெருமுத்து அரையர்- முத்துக் குவியலையுடைய பெரிய அரசராகிய பாண்டியரேயாவர்; (அதாவது, பாண்டிய மன்னரைப்போல் செல்வச் சிறப்புடையவராவர்); எ-று.

ஈகையில்லாதவர் செல்முள்ளவரா யிருப்பினும் தரித்திரரே யாவர்; வறுமையுடையவர்களும் அச்செல்வரிடம் சென்று பொருள் இரவாதிருப்பராயின் பாண்டியரைப் போன்ற கெல்வச் சிறப்புடையவராவர் என்பது இதன் கருத்து.

பொருளுக்குரியவர்க்கே அதனை யெடுத்துப் பிறருக்கீய அதிகாரமுண்டு; அஃதில்லார்க் கவ்வுரிமையில்லை; ஆதலின், அதனை எடுத்துப் பிறக்கீயாதார் அஃதில்லாத வறிஞராவர். ஈயாத அத்தனவந்தரிடத்தில் வறிஞர் பொருள் யாசிக்கச் சென்றால், அவர் இவருடைய வருத்தமுணராமலும், பொருளீயாமலும் இவரைப் பழித்தலும், இழித்தலும் செய்வர்; அதனால் இவருக்கு மானமழியும்; அங்ஙனம் இவர் யாசிக்கச் செல்லாதிருந்தால் மானம் நிலைக்கும்; அப்பெருமையால் பாண்டியரைப்போல் சிறந்த செல்வமுடையவராவர். இங்ஙனம் கூறியதனால் செல்வமுடையார்க் கெவ்வளவு சிறப்புண்டோ அவ்வளவு சிறப்பு அற்பரிடம் யாசகத்திற்குச் செல்லாமல் மானத்தைக் காப்பாற்றுவோருக் குண்டடெனப்து பெறப்பட்டது.

மல்லல்- வளப்பத்தைக் குறிக்கும் உரிச்சொல், ''மல்லன்வளனே'' என்னும்(தொல்-சொல்-உரி-7-ஆம்) சூத்திரம் பார்க்க. மா- பெருமையை விளக்கும் உரிச்சொல். நல்கூர்ந்தார், பெருமுத்தரையர் என்பன- பெயர்ப் பயனிலை

கள். 'செல்வரை' என்பதில், ஐ-உருபு மயக்கம். கொடாதவர், இரவாதார்- எழுவாய்கள். (சு)

297. *கடையெலாங் காய்பசி யஞ்சுமற் றேனை*
யிடையெலா மின்னாமை யஞ்சும்- புடைபரந்த
விற்புருவ வேனெடுங் கண்ணாய் தலையெல்லாஞ்
சொற்பழி யஞ்சி விடும்.

(இ-ள்.) புடைபரந்த- பக்கங்களில் விசாலித்த, வில்- வில்லைப்போன்ற, புருவம்- புருவங்களையும், வேல்- வேலைப்போன்ற, நெடுகண்ணாய்- நீண்டகண்களையுமுடைய பெண்ணே!, கடைஎல்லாம்- கடைப்பட்டவர்களெல்லோரும், காய்- (வயிற்றில்) எரிகின்ற, பசி அஞ்சும் - பசிநோய்க்குப் பயப்படுவார்கள், ஏனை- மற்றைய, இடை எல்லாம்- இடைப்பட்ட மனிதர்களெல்லாரும், இன்னாமை- துன்பத்திற்கு, அஞ்சும் - பயப்படுவார்கள், தலை எல்லாம் - முதன்மையான மனிதர்களெல்லோரும், இன்னாமை- துன்பத்திற்கு, அஞ்சும்- பயப்படுவார்கள், தலை எல்லாம்- முதன்மையான மனிதர்களெல்லோரும், சொல்- (உலகத்தார் நிந்தித்துச்) சொல்லுகின்ற, பழி - பழிக்கு, அஞ்சிவிடும் - பயப்படுவார்கள்; எ-று.

கடைப்பட்டவர்கள் பசிக்கஞ்சுவர், இடைப்பட்டவர் துன்பத்திற் கஞ்சுவர், தலைப்பட்டவர் பழிக்கஞ்சுவர் என்பது இதன் கருத்து. மனிதரை முதல்வர், இடையவர், கடையவர் என மூன்று வகையினராகப் பிரித்து அவர் தன்மைகளை இங்குக் கூறினர் முனிவர்; இவர் முறையே வடமொழியில் உத்தமர், மத்திமர், அதமர் எனப் கூறப்படுவர்.

கீழ்மக்கள் பசிப்பிணியைத் தாங்கமுடியாமையால் அதனை நீக்கிக் கொள்ளும் பொருட்டுச் செய்யத்தகாத காரியங்களையும் செய்து மானத்தை இழப்பர்; ஆதலின்,

அவர் கடை எனப்பட்டார்; நடுத்தரமான மனிதர், இயற்கை யாகவரும் பசிப்பிணி முதலியவற்றைச் சகித்துத் தாமே மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளாமல், தாம் குற்றஞ் செய்தால் அரசர் முதலியோர் தண்டிப்பராதலின், அத்துன்பத் திற்கஞ்சிக் கெட்ட காரியங்களைச் செய்யாதிருப்பர்; அதனால் அவரிடம் மானம் ஒருவாறு தங்கியிருக்கும்; ஆதலின் அவர் இடையெனப்பட்டார்; மேன்மக்கள் பிறர்க் கஞ்சி ஒழுக்கத்தைக் கைக் கொள்வதின்றி, இயற்கை யறிவினாலேயே தாங்களே மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பிப் பசிப்பிணி முதலியவற்றைச் சகித்துத் தாமே மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளாமல், தாம் குற்றஞ்செய்தால் அரசர் முதலியோர் தண்டிப்பராதலின், அத்துன்பத்திற்கஞ்சிக் கெட்ட காரியங்களைச் செய்யாதிருப் பர்; அதனால் அவரிடம் மானம் ஒருவாறு தங்கியிருக்கும்; ஆதலின் அவர் இடையெனப்பட்டார்; மேன்மக்கள் பிறர்க் கஞ்சி ஒழுக்கத்தைக் கைக்கொள்வதின்றி, இயற்கை யறி வினாலேயே தாங்களே மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பிப் பசிப்பிணி முதலியவற்றையும் சகித்து, இழிந்த காரியங்களைச் செய்யாமல் தம் குடிப்பிறப்பின் பெருமை யைக் காப்பாற்றிக் கொள்ளுவர்; ஆகலின், இவர் தலை யெனப்பட்டார்.

இதனால், மானத்தைக் காப்பாற்றுவோர்க்கு வரும் பெருமையும், அதனை யிழப்பார்க்குண்டாம் இழிவும் கூறப் பட்டன. கடை, இடை, தலை என்பன- பொருளால் உயர் திணைப் பலர்பாற் பெயர்கள்; சொல்லால் பால்பகா அஃறிணைப் பெயர்கள்; ஆதலின், 'அஞ்சும்' என்னும் முற்றைக்கொண்டு முடிந்தன. மற்று- அசை. வில்லுக்கு வளைந்த வடிவமும், ஆடவரை வருத்துங் குணமுமுண்டு; இவ்விரு தன்மைகளும் புருவத்திற்குமுண்டு; ஆதலின், வில்லின் உவமை அதற்குக் கூறப்பட்டது. புடைபரத்தல் - புருவத்திற்கழகாம். கண்ணாய் - மகடூஉ முன்னிலை. விடு - துணைவினை; துணிவுப் பொருளுணர்த்தி நின்றது.

208. *நல்லர் பெரிதளியர் நல்கூர்ந்தா ரென்றெள்ளிச்*
செல்வர் சிறுநோக்கு நோக்குங்காற் - கொல்லன்
உலையூதுந் தீயேபோ லுள்கனலுங் கொல்லோ
தலையாய சான்றோர் மனம்.

(இ-ள்.) (சான்றோர் வறுமையுற்று அத்துன்பத்தை நீக்கிக் கொள்ளும் பொருட்டு உலோப குணமுடைய தனவந்தரிடத்திற் சென்றால்), செல்வர்- அத்துர்க்குணமுடைய பணக்காரர், (அவரை அவமதிக்கத் தொடங்குவர்; அவ்வாறு பசிகசிக்கத் தொடங்கி அவரைக் கண்டமாத்திரத்தில்), நல்லர் - (இவர்) நல்லவர், பெரிது அளியர்- மிகவும் கருணையுடையவர், நல்கூர்ந்தார்- (ஏதோ கெட்ட காலத்தால்) வறுமையடைந்து விட்டார், என்று எள்ளி- என்று சொல்லிப் பரிகசித்து, சிறு நோக்கு நோக்குங்கால் - தாழ்ந்த பார்வையாகப் பார்க்கும்போது, கொல்லன்- (இரும்படிக்குந் தொழிலைச் செய்யும்) கருமான், உலை- உலைக்களத்திலே, ஊதும்- ஊதி எரிவிக்கின்ற, தீயேபோல்- நெருப்புப் போல, தலை ஆய- சிறந்த சான்றோர்- (அவ்வாறு அவமதிக்கப் பட்ட) பெரியோர்களுடைய, மனம்- உள்ளமானது, உள் கனலும்- உள்ளே கொதிக்கும்; எ-று.

உயர்குடிப் பிறந்த சான்றோர் வறுமையுற்று அதனால் வருந்துன்பத்தை நீக்கிக் கொள்ள, துர்க்குணமுடைய பணக்காரரிடத்திற் சென்றால் அவ்வீகையற்ற பணக்காரர் அவரை அற்பமான பார்வையாற் பார்த்து இழிவான வார்த்தைகளைக் கூறிப் பசிகசிப்பர்; அப்படிப் பரிகசிக்கும்போது அச்சான்றோருடைய மனம் எரியும் என்பது இதன் கருத்து.

தனவந்தர் கவலையின்றி விரும்பியவற்றை யெல்லாம் தின்று கொழுத்துத் தாம் நினைத்த துர்க்காரியங்களை யெல்லாம் தட்டின்றிச் செய்து திரிவார்கள்; கண் தெரியாத களிப்பிலும், செருக்கிலும் மூழ்கியிருப்பார்கள்; இக்காரணங்களால் வறுமைப்பட்டவருடைய துன்பம அவரை வருத்தத்

தக்க தென்பதைச் சிறிதும் உணரார்; மேலும் அவர் எவ்வரைக் கண்டாலும் ஏளனவார்த்தைகளையே பேசிக் கொண்டிருப் பதும் வழக்கம். ஆதலின், ஏழைகளைக் கண்டால் இரங் காமல் ஏளன வார்த்தைகள் கூறுவர்; இக்காலத்தில் இத் தகைய பணக்காரரில் பலரை நாம் பார்க்கலாம். இவர் இவ் வாறு பரிகசிக்கவே சான்றோர் மனம் கொதிக்கும் எனவே, அவரிடம் சென்றார்க்கு மனவேதனையுண்டாகு மென்பதும், மானமழியு மென்பதும், ஆதலால் அவரிடம் செல்லலாகா தென்பதும் பெறப்பட்டன. கொல்லன் உலையை, ஊது குழலினால் ஊதுங்காலத்தில் நெருப்பு அதிகப் பிரகாச முடையதாகவும், மிகுந்த காந்தலுடையதாகவும் எரியும்; பணக்காரரால் இழிவு நேர்ந்தபோது சான்றோர் மனம் அது போல் மிகக் கொதிக்கும்; ஆதலின், கொல்லன் உலையூது நெருப்பு அம்மனக் கொதிப்புக் குவமையாகக் கூறப்பட்டது; இஃதுவமையணி.

தனவந்தர், தரித்திரரைக் கண்டபோது மனதிற்குள் வெறுப்பேயடைவார்கள்; எனினும் வெளிக்கு உபசரிப் பவரைப் போல நடித்து, ''ஆ! ஆ!! வரவேண்டும்; மகா பெரியோரே! நீங்கள் நல்லவர்கள், நல்லவர்கள்; ஏதோ கெட்டகாலத்தால் இப்படி என்வீட்டு வாயிலைத்தேடி வந்துவிட்டீர்கள்'' என்று உபசார மொழிகள் கூறுவர்; இவ்வாறு கூறுவது பரிகாசம் செய்வதாம்; ஆதலின், ''நல்லர் பெரிதளியர் நல்கூர்ந்தாரென்றெள்ளி'', என்றார் முனிவர். இவ்வாறு கூறியது - வஞ்சப் புகழ்ச்சியணியாம்; ஒழியிசை யெச்சத்தின்பாற் படுவதுமாகும்; ஒழியிசை யெச்சத்திற்கு, மன்னை தில்லை, ஓகாரம் ஆகிய மூன்றிலொன்று வரல் வேண்டும்; இதில் அங்ஙனம் வரவில்லை யெனினும், அவ்வெச்சப் பொருளையே தருதலின், அதன்பாற்படு மெனல் பொருந்துமென்க.

''ஒழியிசை யெச்ச மொழியிசை முடிபின''

என்னும் (தொல்-சொல்-எச்-38-ஆம்) சூத்திரவுரை பார்க்க. கொல், ஓ- இரண்டும் - அசை. சிறுநோக்கு - சுருங்கிய பார்வை; அதாவது, அன்பில்லாது நோக்குதல். 'தீயே' என்பதில், ஏ- அசை; சிறப்புப் பொருளதுமாம். 'காலம்' என்பது செய்யுள் விகாரத்தால், 'கால்' என ஈறு குறைந்து நின்றது. (அ)

299. *நச்சியார்க் கீயாமை நாணன்று நாணாளும்*
அச்சத்தா னாணுதனாணன்றா- மெச்சத்தின்
மெல்லிய ராகித்தம் மேலாயார் செய்தது
சொல்லா திருப்பது காண்.

(இ-ள்.) (ஒருவர்) நச்சியார்க்கு - (பொருள் பெறலாமென்று தம்மை) விரும்பிவந்தார்க்கு, ஈயாமை- பொருளைக் கொடாதிருப்பது, நாண் அன்று- வெட்கப்படத்தக்க செய்கையன்று, நாள் நாளும்- தினந் தினமும், அச்சத்தால்- (தமக்கு மேற்பட்டவர்க்கு மரியாதை செய்ய வேண்டும் என்னும்) பயத்தினாலே, நாணுதல்- (அவர் முன்) நாணி அடக்கமாய் மரியாதை காட்டிக்கொள்ளுதல், நாண் அன்றாம் - வெட்கமாகாது, (தாம்), எச்சத்தின் - செல்வக் குறைவினாலே, மெல்லியர் ஆகி- பலஹீனப்பட்ட சிறியாராக, (அதாவது, வறிஞராகிவிட அக்காலத்தில் முற்செய்யுளிற் கூறியவாறு), தம்மேலாயார்- தமக்கும் மேற்பட்டவராகிய பணக்காரர், செய்தது- தமக்குச் செய்த அவமதிப்பை, சொல்லாதிருப்பது- (பலருமறிய வெளிப்படுத்திச் (சொல்லாதிருப்பதற் கேதுவானதாயுள்ள நாணமே, நாண்- நாணமாம்; எ-று.

ஒருவர், தம்மிடம் வந்தவர்க்குப் பொருள்கொடாதிருப்பது நாணத்தக்க செய்கையன்று; பெரியோரிடம் அச்சத்தால் மரியாதை காட்டி நடக்கும் போதேற்படும் நாணம் நாணமன்று; தாம் தரித்திரரானகாலத்துத் தம்மைப் பார்த்துத் தமக்கும் மேற்பட்ட பணக்காரர் அவமதித்ததைப்

பிறரறிய வெளிப்படுத்தா திருப்பதற் கேதுவான நாணமே சிறந்ததாம் என்பது இதன் கருத்து.

நாணமாவது- மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்னும் அச்சத்தாலும், மரியாதையாலும், ஒருவர்க்குமுன் ஒன்றைச் செய்ய இசையாததாலும், இவை போல்வன பிறவற்றாலும் ஏற்படும் மன அடக்கம்; அதாவது, மனவெழுச்சி குன்றி யொடுங்குதலாம்; மனக்கிளர்ச்சி வெளிப்படாமல் சுருங்குதலுமாம்; இம்மன வொடுக்கம் இல்லாவிடின் மனிதர், பிறர் பழிக்கத்தக்க காரியங்களைத் துணிந்து செய்துவிடுவர்; அவ்வாறு செய்யும்போது அவர்க்கு வெட்கக்கேடுண்டாகின்றது; இது மானக்கேட்டிற் கேதுவா யிருத்தலால்,இந்த நாணமுண்மையே மானமும், இன்மையே மானக்கேடுமாம்; இக்காரணத்தைக் கொண்டே மானங் கெட்டவரை வெட்கங்கெட்டவரென்றும், வெட்கங் கெட்ட வரை மானங்கெட்டவரென்றும் இரண்டற்கும் பேதமின்றி உலகத்தார் கூறுகின்றார்கள். இந்த நாணம் முற்காலத்திற் பெரும்பான்மை மகளிர்க்கும், சிறுபான்மை ஆடவர்க்கும் உரியதாகக் கொள்ளப்பட்டிருந்ததால் மகடூஉக் குணம் நான்கிலொன்றாக நூல்களிற் கூறப்பட்டிருக்கின்றது.

இந்த நாணம் பல இடங்களிற் கொள்ளக்கூடிய தானாலும் இரப்பார்க்குப் பொருளீய முடியாதபோதுண்டாம் நாணமும், பெரியோர்க்கஞ்சி மரியாதை காட்டுமிடத்துண் டாம் நாணமும், தனவந்தர் தம்மை இகழ்ந்ததை வெளிப் படுத்துவதில் உண்டாம் நாணமுமே சிறந்தனவாம்; இம் மூன்றிலும் ஈற்றிற் கூறப்பட்டது சிறந்ததாம்; ஆதலின், இம்மூன்றில் முதலில் உள்ள இரண்டிடங்களினும் உண்டாம் நாணம் நாணமன்றென்றும், ஈற்றிலுள்ள நாணமே நாண மென்றும் கூறினார் முனிவர். ஈற்றிற் கூறிய நாணத்தைக் கொள்ளாமல் ஒருவர், தனவந்தர் தம்மைப் பழித்ததை வெளியிட்டால் மானம் கெடும்; எல்லாவற்றினும் சிறந்து உயிரினும் போற்றத்தக்கது மானமே யாதலின், அதனைக்

காப்பாற்றுதற்குரிய வெட்கம் சிறந்ததாகக் கூறப்பட்டது. இதனால் மானங்கெடாமையே மனிதர்க்குச் சிறப்பென்பது குறிக்கப்பட்டது.

சொல்லாதிருப்பதற்குக் காரணமாகிய நாணம், 'சொல்லாதிருப்பது' எனக் காரியப்பெயர் கொண்டு முடிந்தது. நச்சியார்- இறந்தகால வினையாலணையும் பெயர்; இதில் நச்சு- பகுதி. நாணாள்- தொறுப்பொருளில் வந்த இருசொல்லடுக்கு; இதிலுள்ள உம்மை- முற்றுப்பொருளது. 'ஆக' என்னும் எச்சம், 'ஆகி' எனத் திரிந்து வந்தது. (கூ)

300. கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும்- இடமுடைய
வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மான மழுங்க வரின்.

(இ-ள்.) கடமா- காட்டுப்பசுவை, தொலைச்சிய - (இரையின் பொருட்டுக்) கொன்ற, கான் உறை- காட்டில் தங்கி யிருக்கின்ற, வேங்கை - வரிப்புலியானது, இடம் வீழ்ந்தது- (தன்னாற் கொல்லப் படுகின்ற பிராணிகளில்) இடப்பக்கத்தில் வீழ்ந்ததை, உண்ணாது- தின்னாமலிருந்தே, இறக்கும்- சாகும்; (அதைப்போலவே), விழுமியோர்- (மானத்தைக் காப்பாற்றும்) சிறப்புள்ள பெரியோர், இடம் உடைய - (மிக்க) செல்வத்தையுடைய, வான்அகம் கைஉறினும் - விண்ணுலகத்திடம் தம்மிடத்துச் சேர்வதாயிருந்தாலும், மானம் அழுங்கவரின்- (அது, தமது) மானங்கெட வருவதாயிருந்தால், வேண்டார் - (அதனையும்) விரும்ப மாட்டார்; எ-று.

வேங்கை தன்னால் அடித்துக் கொல்லப்படும் பிராணிகளில் இடப்பக்கத்தில் வீழ்வதைத் தின்னாமலே யிருந்து உயிர்விடும்; அதைப்போல மானத்தைக் காப்பாற்றும் பெரியோர் சுவர்க்கலோக இன்பத்தை அடைவ

தாயிருந்தாலும் அது தம்மானங் கெடும்வழியில் வருவதா யிருந்தால் அதனையும் பெறவிரும்பார்கள் என்பது இதன் கருத்து.

இதனால் பெரியார் எவ்வகைப்பட்ட உயர்வுள்ள பொருளையும் பெரிதாக மதிக்கமாட்டார்; மான மொன்றையே சிறந்த பொருளென மதிப்பர் என்பது கூறப்பட்டது. இதில் வேங்கையின் மானச்செயலை, உவமையுருபு விரிக்காமல் உவமை கூறியது- எடுத்துக் காட்டுவமையணி. புலி மிகப் பசித்திருப்பினும் புல்லைத் தின்னாதுதான் அடித்துக் கொன்ற மிருகத்தை வலப்பக்கத் தில் விழும்படி யாகவே சாய்க்கும்; அவ்வாறு வீழ்த்தி அப்பக்கத்தில் வீழ்வதையே தின்னும்; இஃததனுடைய மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் வீரச்செயலாம்; அதனால் அடித்துக் கொல்லப்பட்டது அங்ஙனம் வலப்பக்கத் தில் வீழாமல் இடப்பக்கத்தில் வீழின் அதைத் தின்றால் தன்வீரமும், மானமும் கெடுமென்று வேறு இரையும் தேடாமல் அஃதவ்விடத்திலேயே இருந்து உயிரைவிடும்; இஃததன் இயற்கையென உலகியலுணர்ந்த பெரியோர் கூறியிருக்கின்றனர்; இதனை,

''கடுங்கட் கேழ லிடம்பட வீழ்ந்தென
அன்றவ ணுண்ணா தாகி வழிநாட்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழூந்
திருங்களிற் றொருத்தல் நல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்
துரனுடை யாளர் கேண்மையோ
டியைந்த வைக லுளவா கியரோ''

என்னும் புறநானூற்றுச் செய்யுளடிகளானும், பிறவற்றானு முணரலாம். உவமையில் புலி உண்ணாதிருந் திறக்கு மென்பது கூறப்பட்டிருத்தலால், பெரியாரும் மானங்கெட வரும்பொருளை அடையாதிருப்பதோடு, மானத்துக்

கழிவுநேரின் உயிரையும் இழப்பர் என்பதும் கொள்ளப் படும்.

கடம் + ஆ= கடமா; கடம்- காடு; ஆ- பசு; கடம்+ மா எனப் பிரித்து, 'காட்டுமிருகம்' என்றும் பொருள் கொள்ள லாம் இனி; 'கடம்' என்பது, 'மதம்' என்றும் பொருள் படுமாகலின் கடமா - என்பதற்கு, 'மதத்தை யுடைய யானை' என்று பொருள் கூறினுமாம்; ஆனால், யானையை அடிப்பது சிங்கமாதலின், இவ்வுரை சிறந்ததன்றாம். 'இடமுடைய' என்பதற்கு, 'விசாலமான' என்றும் பொருள் கூறலாம். 'தொலைச்சிய' என்பதில், பகுதி- தொலைச்சு; இது, தன் வினையாகிய, 'தொலை' என்பதன் பிறவினையாம். 'உறினும்' என்பதன் உம்மை- உயர்வு சிறப்புப் பொருளது. 'மானம் மழுங்க' என்றும் பிரித்துப் பொருளுரைத்தலாம். (கo)

அதிகாரம் -31

இரவச்சம்

இரவு - யாசித்தல்; அதாவது, ஒருவர், மற்றொருவரிடம் சென்று ஒரு பொருளைக் கேட்டு வாங்குவதாம்; அச்சம்- அஞ்சுதல்; அதாவது, அதற்கு அஞ்சுதலாம்; ஆகவே, இரவச்சம் - என்பது, ஒருவர், பிறரிடம்சென்று ஒரு பொருளை யாசிப்பதற்குப் பயப்படுதல் என்று பொருளாகும்; இவ்வதிகாரம் அதைப்பற்றிக் கூறுவதாகலின், இப்பெயர் பெற்றது. இரப்பது மானக்கேடாம்; ஆதலின், மானத்தைக் காப்பாற்ற வேண்டுவோர்க்கே இரவச்சம் இன்றியமையாததாம்; ஆகலின், இது, 'மானம்' என்னும் அதிகாரத்தின் பின் வைக்கப்பட்டது. இரவு, அச்சம்- தொழிற்பெயர்கள்; இரவச்சம்- வேற்றுமைத் தொகை; நான்காம் வேற்றுமைத் தொகையாக வேனும், இரண்டாம் வேற்றுமைத் தொகையாகவேயேனும் கொள்ளலாம்; நான்காம் வேற்றுமைத் தொகையெனில், 'இரவுக் கஞ்சுதல்' என்றும் இரண்டாம் வேற்றுமைத் தொகையெனில் 'இரவை அஞ்சுதல்' என்றும் விரியும். இரந்து பொருளைத் தேடுதல் மிக இழிவாம்; இதனை இவ்வதிகாரம் கூறுவதால் யாசித்தலைவிட்டு, 'தீவினைவிட்டீட்டல் பொருள்' என்பதற்கிணங்கி, நல்ல வழிகளில் பொருளைத் தேட வேண்டுமென்பதை யுணர்த்துவதாயிற்று. இக்காரணம் பற்றியே இவ்வதிகாரம் பொருட்பாவிற் சேர்க்

கப்பட்டது. இப்பாலிலுள்ள மற்ற அதிகாரங்கட்கும் இவ்வாறே காரணம் அமைக்கப்படும்.

301. *நம்மாலே யாவரிந் நல்கூர்ந்தா ரெஞ்ஞான்றுந்*
தம்மாவா மாக்க மிலரென்று - தம்மை
மருண்ட மனத்தார்பின் செல்பவோ தாமுந்
தெருண்ட வறிவி னவர்.

(இ-ள்.) யாசிக்கச் செல்வோரை நோக்கி), இ நல் கூர்ந்தார்- இந்த வறிஞர், நம்மாலே - நம்மாலேயே, (அதாவது, நாம் பொருள் கொடுத்து உதவி செய்வதனாலேயே), ஆவர்- பொருளுடையவராவர், (இவ்வாறன்றி), எ - ஞான்றும் -எ ந்தக் காலத்திலும், தம்மால் ஆம் ஆக்கம்- தமது பிரயாசையினாலே உண்டாகும் செல்வம், இலர்- இல்லாதவராவர், என்று - என்று சொல்லித் தற்பெருமை பேசி, தம்மை மருண்ட - தமக்குள் மயங்கின, மனத்தார் பின்- மனத்தையுடைய பணக்காரர் பின்னே, தெருண்ட அறிவின வர்தாமும் - தெளிவான அறிவுடையவர்களும், செல்பவோ - (தமக்கு வறுமைவந்த காலத்தும் பொருளை யாசித்தற்குச்) செல்வார் களோ?, (செல்லமாட்டார்கள்); எ-று.

யாசிக்கவந்த வறிஞரை நோக்கி, ''இவர், எம் மாலேயே கையிற் காசுடையவராய் வாழ்கின்றனர்; தம் முயற்சியால் பொருள்தேடும் சாமர்த்திய முடையவரல்லர்'' என்று தற்பெருமை பேசும் மயங்கிய அறிவுள்ள தனவந்த ரிடத்தில், அறிவுடையவர்கள் வறுமைப்பட்டாலும் பொருளை யாசிக்கச் செல்ல மாட்டார்கள் என்பது இதன் கருத்து.

பணக்காரரில் பெரும்பான்மையோர் யாசகர்க்கிரங் கிப் பொருள் கொடுக்கவே மாட்டார்; சிறுபான்மையோர் கொடுக்க இசையினும், 'எம்மாலே தான் தரித்திரர் வாழ் கின்றார்கள்' என்று தாம் பிறர்க்குப் பொருள் கொடுப்பதைப்

பெருமையாகப்பேசி, வறுமையால் துன்புற்றுத் தம்மிடம் வருவாரை இழிவு படுத்துவர்; இத்தன்மையுடைய தனவந்தர் பலரை இக்காலத்தில் எங்கும் காணலாம்; இத்தகைய அறிவிலிகளிடம் சென்று இழிவடைவது மிக மானக் கேடாம்; அதைக் காட்டினும் இறப்பதே நல்லதாம்; ஆத லின், அறிவுடையார் இவரிடம் செல்லார் என்றார் முனிவர். இதனால் யாசகரை அவமதிப்பாரிடம் யாசகத்திற்குச் செல்வதற்கு அஞ்சவேண்டுமென்பது கூறப்பட்டது.

தற்பெருமை பேசுதல் அறிவின்மையாம்; ஆதலின், அத்தகையினரை, 'மருண்ட மனத்தார்' என்றார் ஆசிரியர். நம்மால் - தற்பெருமையால் தனவந்தர், தம்மை உயர்த்திக் கொள்ளுதற் பொருட்டு வந்த தன்மைப் பன்மை; இதனீற்றே காரம் - பிரிநிலைப் பொருளது. 'எஞ்ஞான்றும்' என்பதி லுள்ள, உம்மை - முற்றுப் பொருளது. இலர்- குறிப்பு முற்று. தம்மை- உருபு மயக்கம். பின்- இடப்பொருள்பற்றி வந்த இடைச்சொல். 'செல்பவோ' என்பதில், ஓ- எதிர்மறைப் பொருளது. தாம்- அசை. 'தாமும்' என்பதிலுள்ள உம்மை- உயர்வு சிறப்புப் பொருளது; அசையெனினுமாம். (க)

302. ***இழித்தக்க செய்தொருவ னாரவுணலிற்***
பழித்தக்க செய்யான் பசித்த றவறோ
விழித்திமைக்கு மாத்திரை யன்றோ வொருவ
னழித்துப் பிறக்கும் பிறப்பு.

(இ-ள். ஒருவன் - ஒரு மனிதன், இழித்தக்க- (பிறர்) இழிவாகக் கூறுதற்குத் தகுதியான இரத்தல் முதலிய காரியங்களை, செய்து- இயற்றி, (அவற்றின் மூலம் பொருளைச் சம்பாதித்து அப்பொருளினால்), ஆர- வயிறு நிறைய, உணலின்- உணவுண்ணுதலைக் காட்டினும், பழித்தக்க - (பிறர்) பழிக்கத்தக்க காரியங்களை, செய்யான் - செய்யாதவனாகி, பசித்தல்- (வயிற்றுக்குணவகப்படாமல்) பசியோடிருந்து வருந்துதல், தவறோ - குற்றமாகுமோ?

(ஆகாது); (அப்பசிக் கொடுமை சகிக்காமல் உயிரையும் விட்டுவிடலாம்; அதனாலும் கவலையில்லை; ஏனெனில்), ஒருவன்- ஒரு மனிதன், அழித்து- இறந்து, பிறக்கும் பிறப்பு - (மீண்டும்) பிறக்கின்ற பிறப்பானது, விழித்து இமைக்கும் மாத்திரை - (மூடின கண்ணைத்) திறந்து இமைக்கின்ற (அதாவது திறந்து மூடுகின்ற), அளவுடையதாம்; எ-று.

ஒருவன் இரத்தல் முதலிய இழிவான காரியங்களைச் செய்து பொருளைத் தேடி வயிறு நிரம்ப உணவுண்டு வாழ்வதைக் காட்டினும், அவ்விழிவான காரியங்களைச் செய்யாது, பசித் துன்பத்தை யடைந்திருப்பது குற்றமாகாது; அவ்வாறு பசிக்கொடுமையைச் சகித்து உயிரையும் விட்டுவிடலாம்; அங்ஙனம் இறப்பதில் கவலை யில்லை; ஏனென்றால், இறந்தவன் மறுபிறப் பெடுப்பது கண்ணிமைக்கும் அளவுடையதாகும் என்பது இதன் கருத்து.

இதனால் பசிக்கொடுமையால் இறந்தாலு மிறக்கலாம்; யாசகம் முதலிய இழிவான காரியங்களைச் செய்து வயிறு நிறைய உணவுண்டு உயிர் வாழ்வது கூடாதென்பது கூறப்பட்டது. இவ்வதிகாரப் பொருண்மைக்கேற்ப, 'இழித்தக்க' என்பது இரத்தல் முதலியவற்றைக் குறித்தது; இரத்தல் முதலிய பல இழி செயல்கள் கூறப்பட்டிருப்பினும் இரத்தல் சிறப்பாகக் கொள்ளப்படும். 'உடலை விட்டுப் போகின்றோமே' என்னுங் கவலையினாலேயே மனிதர் சாவுக் கஞ்சுவர்; அவ்வச்சத்தினாலேயே இழிவான காரியங்களையும் செய்து உடம்பைப் பாதுகாப்பர்; ஆதலின், அவ்வச்சமுங் கவலையுங் கொள்ள வேண்டுவதில்லை யென்பதை விளக்குதற்கே, இவ்வுடம் பொழிந்தால் வேறுடம் பெடுத்தல் விரைவில் அமையும் என்றார் முனிவர். இறப்பும், பிறப்பும் விரைவிலுண்டா மென்பதை,

''உறங்கு வதுபோலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு''

என்னும் (திருக்குறள்.339-ஆம்) செய்யுளும் விளக்கும். இச் செய்யுளிற் கூறியபடி, இறந்தாலும் இழிவான காரியங்களைச் செய்து மானத்தை இழக்கலாகாதென்பதை, இந்நூல் 295-ஆம் செய்யுளும் உணர்த்தும். இழித்தக்க, பழித்தக்க - நான்காம் வேற்றுமைத் தொகைகள்; இழி, பழி முதனிலைத் தொழிற் பெயர்களாம். ஆர- என்பதற்குத் 'திருப்பதியுண்டாக' என்றும் பொருளுரைக்கலாம். மாத்திரை- கண்ணிமைக்கும் நேரம்; ''இயல்பெழுமாந்தரிமை நொடிமாத்திரை'' என்பது நன்னூற் சூத்திரம். 'தவறோ' என்பதில் ஓகாரம்- எதிர்மறைப் பொருளது. 'அழிந்து' என்பது, 'அழித்து' என வலித்தல் விகாரம் பெற்றது; இனி அதனை இருந்தவாறே கொண்டு, 'உடம்பை அழித்து' எனப் பிறவினைப் பொருள் கொள் ளினும் அமையும்.

இச்செய்யுளில் முன்னிரண்டடிகளினும் கூறப்பட்ட பொருளைப் பின்னிரண்டடிகளானும் காரணங்காட்டி நிறுத்தியிருப்பது - ஏதுவணி யெனப்படும். பின்னிரண்டடி களில், 'அழித்துப் பிறக்கும் பிறப்பு' என்னும் உபமேயத் துக்கும், 'விழித்திமைக்கும் மாத்திரை' என்னும் உபமானத் துக்கும் ஐக்கியம் கூறப்பட்டது; இது, காட்சியணி யெனப் படும். அன்றோ- அசை. (உ)

303. *இல்லாமை கந்தா விரவு துணிந்தொருவர்*
செல்லாரு மல்லர் சிறுநெறி- புல்லா
வகம்புகுமி னுண்ணுமி னென்பவர்மாட் டல்லான்
முகம்புகுத லாற்றுமோ மேல்.

(இ-ள்.) இல்லாமை- பொருளில்லாமை யென்னும் வறுமையானது, கந்தா- (தம்மைத் தாங்கிக் கொண்டுபோய்ப் பொருளுள்ளார் பலரிடத்தும் செலுத்தும்) பண்டியாக, (அதாவது, தரித்திரம் தம்மைப் பலரிடத்தும் செலுத்த), இரவு - பொருளிரத்தலை, துணிந்து- நிச்சயித்து, ஒருவர்- ஒரு மனிதர், சிறுநெறி - யாசித்தலாகிய) அந்த அற்பமான வழி

யில், செல்லாரும் அல்லர்- போகாதவர்களாக மாட்டார்கள், (சென்றே தீருவார்கள்), (ஆயினும், யாசகரைக் கண்டால் உபசரிப்பவரிடம் செல்லுதலே தகுதியாம்; உபசரியாத வரிடத்துச் செல்லுதல் மானக்கேடாம்; ஆதலால், அவ்வாறு) மேல் - உயர்ந்த குணமுடைய மேலோர், (யாசகரைக் கண்ட வுடன் அன்போடு), புல்லா - தழுவிக்கொண்டு, அகம்புகு மின்- எம்முடைய வீட்டுக்குள் நுழையுங்கள், உண்ணுமின் - ஆகாரம் புசியுங்கள், என்பவர் மாட்டு அல்லால்- என்று சொல்லி உபசரிக்கின்றவர்களிடத்தல்லாமல், (தம்மானங் கெடும்படி, உசரியாத மற்றையருடைய), முகம் புகுதல் - (வீட்டு) வாயிலைச் சேர்தலை, ஆற்றுமோ - செய்வார்களோ? (செய்யமாட்டார்கள்) (அதாவது, யாசகத்தின் பொருட்டு அங்குச் செல்லமாட்டார்கள்); எ-று.

உலகத்தில், மனிதர், தரித்திரக் கொடுமையால் பிறரிடம் பொருள் யாசிக்கச் சென்றே தீருவார்கள்; ஆயினும், தம்மானத்தைக் காக்கும் மேலோர், யாசகரை அன்போடு உபசரியாத பணக்காரரிடம் தம்மானங் கெடும்படி செல்ல மாட்டார்கள்; உபசரிப்பவரிடத்திலேயே செல்வார்கள் என்பது இதன் கருத்து.

இதனால், எத்தகைய வறுமைத் துன்பம் நேர்ந் தாலும், யாசகர்க்குப் பொருள் கொடாமல், அவரை இழி வாகப் பேசும் உலோபத்துவமுடைய பணக்காரரிடம் சென்று, மேன்மக்கள் தம் பெருமையை யிழக்கலாகா தென்பது பெறப்பட்டது.

கந்து - பண்டி; இது, பொருள்களைச் சுமந்து, குறிப் பிட்ட இடங்களிற் கொண்டுபோய்ச் சேர்ப்பது; தரித்திரமும் மனிதரை இழுத்துக் கொண்டுபோய்ப் பணக்காரரிடம் சேர்ப்பதாகும்; ஆதலின், அது பண்டியென்று கூறப்பட்டது; இனி, 'கந்து' என்பதற்கு, 'காரணம்' எனப் பொருள் கூறலு மொன்று; இப்பொருள் கொள்ளுமிடத்து, 'கந்து' - கிழங்கு

என்றும், மூலம் என்பதுபோல காரணத்துக்கு இலக்கணை யென்றும் கொள்க. 'செல்லாரும் அல்லர்' என வந்த இரண்டெதிர்மறைகளும் உடன்பாடுணர்த்தி நின்றன. 'ஆற்றுமோ' என்பதிலுள்ள, ஓ- எதிர்மறைப் பொருளது. மேல்- உயர்வு; இது, பண்பாகு பெயராய் மேலோரை யுணர்த்திற்று; இது பொருள் வகையால் உயர்திணைப் பலர்பால்; எனினும் சொல்லால் பால்பகா வஃறிணைப் பெயர்; ஆதலின், 'ஆற்றும்' என்னும் அஃறிணை வினை முற்றைக்கொண்டு முடிந்தது. 'அகம் புகுதும்' என்றும் பாட பேதமுண்டு. முகம்- இடமெனலுமாம். 'புகுதல், ஆற்றும்' என்பன ஒரு சொன்னீர்மையனவாய்ப் புகுதலை யுணர்த்தி நின்றன.

304. *திருத்தன்னை நீப்பினுந் தெய்வஞ் செறினு*
முருத்த மனத்தோ டுயர்வுள்ளி னல்லா
வருத்தஞ் செறிக்கு மறிவிலார் பின்சென்
றெருத்திறைஞ்சி நில்லாதா மேல்.

(இ-ள்.) மேல்- உயர்ந்த குணமுடையவன், தன்னை- திருநீப்பினும் - செல்வமகள் கைவிட்டு நீங்கினாலும், தெய்வம் - ஊழ், செறினும் - சினந்து வருத்தினும், உருத்த மனத்தோடு - (தளர்ச்சியின்றி) திடம் அதிகரித்த மனத்துடனே, (அதாவது, திடசித்தத்தோடு), உயர்வு உள்ளின் அல்லால்- (தன்னுடைய) மானத்தை நினைப்பதல்லாமல், (அதாவது, மானத்தைக் காப்பாற்ற நினைத்து அத்துன்பங்களைச் சகித்துக் கொண்டேனும் உலோபத்துவமுடைய பணக்காரரிடம் யாசகத்துக்குச் செல்லாமல் இருப்பதன்றி), அருத்தம் செறிக்கும் - (பொருளை நன்மார்க்கத்திற் செலவிடாமல்) சேர்த்து வைத் தொழிகின்ற, அறிவு இல்லார்- விவேகமில்லாத உலோபிகளின், பின்சென்று - பின்னே (பொருள்பெற விரும்பிச்) சென்று, எருத்து இறைஞ்சி - பிடர் வளைந்து, (அதாவது, தலைவணங்கி), நில்லாது - நிற்கமாட்டான்; எ-று.

மானத்தைக் காப்பாற்றும் உயர்ந்த குணமுள்ளவன், தனக்கு வறுமைத் துன்பம் வந்தாலும், ஊழினாற் பல துன்பங்கள் வரினும், அவற்றைச் சிகித்துக் கொண்டாவது இருந்து மானத்தைக் காப்பாற்றுவதல்லது, பொருள்தேடி நன்மார்க்கத்திற் செலவிடாமற் புதைத்து வைத்திறக்கும் உலோபிகளிடம் பொருள் யாசிக்கச் சென்று தலை வணங்கி நின்று தன் மானத்தை இழக்கமாட்டா னென்பது இதன் கருத்து.

இதனால், மானத்தைக் காப்பாற்ற விரும்புவோர் தமக்கென்ன துன்பம் வரினும் உலோபரிடம் யாசிக்கச் செல்லாதிருத்தல் வேண்டுமென்பது குறிக்கப்பட்டது. திரு- இலக்குமி; செல்வத்துக்கு அதிதேவதை; இலக்குமி நீங்கினால் செல்வம் நிலைக்காது; ஆதலின், இங்குச் செல்வ நீக்கம், 'திருநீப்பின்' என்று கூறப்பட்டது. தெய்வம் - ஊழ்; இஃதிவ்வாறு பொருள்படுதல் திருக்குறள், 'ஊழ்' என்னும் அதிகாரப் பொருட் குறிப்பில் பரிமேலழகர் வரைந்திருத்த லானுணரப்படும்; கெட்ட ஊழின் கொடுஞ்செயலை, 'தெய்வஞ் செறினும்' என்றார் முனிவர். உம்மைகள்- உயர்வு சிறப்புப் பொருளன. உருத்தல்- மிகுதி; அதனோடு, 'திடம்' என்பது இசை யெச்சமாக வருவித்துரைக்கப்பட்டது. பொருளைத் தாமும் அனுபவியாது, நல்லாராகிய பிறர்க்குங் கொடாது சேர்த்துப் புதைத்துவைப்பவர் மூடரே யாதலின் அவரை, 'அருத்தஞ் செறிக்கும் அறிவிலார்' என்றார் முனிவர். பிடர் வளைந்தால் மாத்திரமே தலை வணங்கும்; ஆதலின், முனிவர் தலைவணக்கத்தை, 'எருத்திறைஞ்சி' என்றார். ஆம்- அசை. (௪)

305. *கரவாத திண்ணன்பிற் கண்ணன்னார் கண்ணு*
மிரவாது வாழ்வதாம் வாழ்க்கை - யிரவினை
யுள்ளுங்கா லுள்ள முருகுமா லென்கொலோ
கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு.

(இ-ள்.) கரவாத - (இரப்பார்க்குப் பொருளை) ஒளிக்காத, (அதாவது, மறைக்காமல் தம்மிடம் இருப்பதைக் கொடுக்கின்ற), திண் - உறுதியான, அன்பின் - அன்பினை யுடைய, கண் அன்னார் கண்ணும்- கண்ணை நிகர்த்த உத்தமரிடத்தும், இரவாது- (ஒரு பொருளை) யாசித்து வாங்காமல், வாழ்வது- வாழ்வதே, வாழ்க்கை- (மனத்தைக் காப்பாற்றும் மனிதர்க்குச்) சிறந்த வாழ்க்கையாம். இரவினை - (இந்த இழிவான) யாசகத்தை, உள்ளும்கால்- நினைக்கும் போதே, (அதன் இழிவு குறித்து அறிஞர்க்கு), உள்ளும்கால்- நினைக்கும் போதே, (அதன் இழிவு குறித்து அறிஞர்க்கு,) உள்ளம்- மனம், உருகும்- இளகிக் கலக்கத்தை யடையும். (இதன் தன்மை இங்ஙனமிருப்ப), கொள்ளுங்கால்- (பணக் காரரிடத்துத் தாம் ஒருபொருளை யாசித்துக்) கையில் ஏற்றுக்கொள்ளம்போது, கொள்வார் - (அப்படிப்) பெற்றுக் கொள்பவரது, குறிப்பு - எண்ணமானது, என்கொல்- என்ன தன்மைத்தா யிருக்கும்?, (மிகக் கலங்கி வேதனையடையும் என்றபடி); எ-று.

அன்போடு பொருளை ஒளிக்காமல் யாசகர்க்குக் கொடுக்கும் உத்தமர்களிடத்தும் மனிதர் இரந்து பொருள் பெறாமல் உயிர் வாழ்தலே சிறந்த வாழ்க்கை; யாசித்தலை நினைக்கும்பொழுதே அதன் இழிவு குறித்து மனம் கலங் கும்; அங்ஙனமிருப்ப யாசித்து அப்பொருளைப் பெற்றுக் கொள்வோருடைய மனம் என்ன பாடுபடாது? பெருங்கலக் கத்தை அடையும் என்பது இதன் கருத்து.

இங்ஙனம் கூறியதால் யாசகம் எவ்வழியிலும் கொடி தென்பதும், இழிவினையுடைய தென்பதும் குறிக்கப் பட்டன. எவரிடத்தும் இரத்தல் இழிவென்பதையும், இரவாதிருத்தலே எவர்க்கும் சிறப்புடைமை யென்பதையும், யாசகப் பொருள் பெறுவாரின் உள்ளம் கலங்குமென்பதை யும்,

''கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும்''

என்னும் (திருக்குறள் -1061-ஆம்) செய்யுளானும்,

''இரவுள்ள முள்ள முருகுங் கரவுள்ள
உள்ளதூஉ மின்றிக் கெடும்''

என்னும் (திருக்குறள்-1069-ஆம்) செய்யுளானுமுணர்க. 'இரவினை உள்ளுங்காலை உள்ளமுருகும்' என்ற ஏதுவினால் யாசகப் பொருள் பெறுவாரின் உள்ளம் மிகக் கலங்குமென்பது குறிக்கப் பட்டதாதலின், இஃதேதுவணியாம். அன்பிற்குத் திண்மையாவது - கெடாதிருத்தலாம். கண் அன்னார் - கண்ணைப்போல் அருமையானவர். ஆம், ஆல், கொல்- அசைகள். 'கண்ணும்' என்பதன் உம்மை- உயர்வு சிறப்புப் பொருளது. குறிப்பு - தொழிற்பெயர். (ரு)

306. *இன்னா வியைக வினிய வொழிகென்று*
தன்னையே தானிரப்பத் தீர்வதற் கென்னைகொல்
காதல் கவற்று மனத்தினாற் கண்டாழ்பட்
டேதி லவரை யிரவு.

(இ-ள்.) (இன்பத்தை இன்பமாகவும், துன்பத்தைத் துன்பமாகவும் கருதாத சமசித்தமுடையவனுக்கு வறுமைத் துன்பம் வரினும் அது துன்பமாகவே தெரியாது; அவ்வாறு ஒருவன் இன்பதுன்பங்களைச் சமமாக பாவிக்கும் இயல்புடையவனாய்), இன்னா- துன்பங்கள், இயைக- (நமக்கு வரக்கூடியனவாயிருந்தால்) வந்து சேர்வனவாக, இனிய - இன்பமானவைகள், ஒழிக- (நம்மை விட்டு ஒழியக்கூடியனவாயிருந்தால்) நீங்கக்கடவனவாக, (அவற்றால் நமக்கெப்பொழுதும் நிலைத்திருக்கும் இன்பதுன்பங்கள் இல்லை), என்று - (உலக நிலையாமை, செல்வநிலையாமை, தேக நிலையாமை முதலியவற்றால்) நினைத்து, தன்னையே- தன்

மனத்தினையே, தான் நிரப்ப- தான் (சமத்துவபாவனையால்) நிரப்பிவிட, (அதாவது, தன் மனத்தைச் சமத்துவ பூரண நிலையில் நிறுத்திக் கொள்ள), தீர்வதற்கு - (எளிதில்) ஒழிந்து போகக்கூடியதாகிய வறுமைக்காக, (அதாவது வறுமைத் துன்பத்தை நீக்கிக் கொள்வதற்காக), காதல்- பொருளாசை யானது, கவற்றும்- கவலைப்படுத்துகின்ற, மனத்தினால்- மனத்தோடு கூடி, கண்பாழ்பட்டு - கண்கள் (களிப்பின்றிப்) பாழ்பட, (அதாவது, கண்ணில் மருட்சியான பார்வையைக் காட்டி), ஏதிலவரை- அயலாரிடத்தில் இரவு- யாசித்தல், என்னைகொல்- யாதுகாரணம் பற்றியோ; எ-று.

உலகத்தில் ஒருவன், இன்பத்தை இன்பமாகவும், துன்பத்தைத் துன்பமாகவும் கருதாவிடில், வறுமை முதலிய வற்றால் ஏற்படும் துன்பம் அவனை ஒன்றும் செய்யாது; அவ்வாறு இன்பதுன்பங்களைச் சமமாகப் பாவிக்கும் கருத் தினைக் கொண்டு, 'நமக்கு வரக்கூடிய துன்பங்க ளெல்லாம் வரட்டும்; இன்பங்களெல்லாம் ஒழியக் கூடியனவாயிருந் தாலும் ஒழியட்டும்; அவற்றால் ஆவதொன்றுமில்லை' என்று தன் மனத்தைத் தானே சமாதானப்படுத்திக் கொள்வ தால் ஒழிந்து போகும் வறுமைத் துன்பத்தை அகற்றவேண்டி ஒருவன் பொருளாசையால் கலக்கப்படும் மனத்தினோடு கண்மருண்டு தன் இழிவைக் காட்டி அயலாரிடம் பொருளை யாசித்துச் செல்வது எக்காரணம் பற்றியோ? என்பது இதன் கருத்து.

இன்பமும், துன்பமும் மனத்தால் நினைத்தால் மாத்திரமே உண்டு; நினைக்காவிடில் இல்லை; ஆதலின், வறுமைத் துன்பமும் தன்னைச் சிந்தியாதவரிடத்து இருந்தும் இல்லாததாகிவிடும்; இப்படி எளிதான மார்க்கத்தில் நீங்கி விடத்தக்க வறுமைத் துன்பத்தை அகற்றுவதற்கு ஒருவன், மானங்கெடப் பிறரிடம் பொருள் யாசிக்கச் செல்வது அறிவின்மையாமென்பது இதனால் பெறப்பட்டது. இவ் வாறு இன்பதுன்பங்களைச் சட்டைபண்ணாது, இன்பத்தைத்

துன்பமாகவும், துன்பத்தை இன்பமாகவுங் கருதுவோன் கவலையற்ற வாழ்க்கையை அடைவா னென்பதை,

''வைததனை யின்சொல்லாக் கொள்வானு நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானு- மூறிய
கைப்பதனைக் கட்டி யென் றுண்பானு மிம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார்''

என்னும் (திரிகடுகம்-48-ஆம்) செய்யுளானுணர்க.

'தன்னையே' என்பதில், ஏ- பிரிநிலைப்பொருளது. இன்னா,இனிய - குறிப்பு வினையாலணையும் பெயர்கள். கொல்- இடைச்சொல்; வினாப்பொருளில் வந்தது. காதல்- காதுதல்; அதாவது, வருத்துதல்; ஆசை மனத்தை வருத்து மியல்பினை யுடையதாகலின், இக்காரணத்தா லிஃதிப் பெயர் பெற்றது. கவற்று - கவல் என்பதன் பிறவினை. பாழ் படுதல்- ஒன்றுமில்லாதொழிதல்; அஃதிங்குக் கண்களிப் பற்றிருக்கும் தன்மையைக் காட்டிற்று. இரவு- தொழிற் பெயர். (௬)

307. *என்றும் புதியார் பிறப்பினு மிவ்வுலகத்*
தென்று மவனே பிறக்கலான்- குன்றின்
பரப்பெலாம் பொன்னொழுகும் பாயருவி நாட
விரப்பாரை யெள்ளா மகன்.

(இ-ள்.) குன்றின்- மலைகளினுடைய, பரப்பு எல்லாம்- பரந்த இடங்களிலெல்லாம், பொன் ஒழுகும் - பொன்சென்று பரவுதற்குக் காரணமான, பாய்- (விரைந்து) பாய்கின்ற, அருவி- அருவிகளையுடைய, நாட- பாண்டிய நாட்டிற் கிறைவனே!, இஉலகத்து- இந்த உலகத்திலே, (முன் இறந்து மேலுலகத்துக்குச் சென்றவர்கள் மீண்டும் மீண்டும் புதியராய்வந்து பிறப்பது இயல்பு; அவ்வாறு), என்றும்-

எப்பொழுதும், புதியார் பிறப்பினும் - புதியார்வந்து பிறப்பது இயல்பா யிருப்பினும், (பிறவாதவனும் உண்டு; அங்ஙனம்), என்றும்- எப்பொழுதும், பிறக்கலான்- பிறவாதவன், (யாரெனில்?), இரப்பாரை- (வறுமையால் பிறரிடம் சென்று பொருள்) யாசிப்பவரை, எள்ளாமகன் அவனே- இகழாத மனிதனாகிய அவனே; எ-று.

இவ்வுலகத்தில் இறந்தவர்கள், மீண்டும் மீண்டும் புதியவர்களாய் வந்து பிறப்பது இயல்பாயிருப்பினும், யாசிப்பவரைப் பார்த்து இகழாதவர் என்றும் பிறக்கமாட்டார்கள் என்பது இதன் கருத்து.

பிறக்க மாட்டார்கள் எனவே, இரப்பாரை இகழாத புண்ணியத்தால் இவ்வுலகை விட்டுச் சென்றபின், பிறப்பற்ற மோக்ஷநிலையை அடைவார்கள் என்பது பெறப்பட்டது. இரப்பவர்கள், அதன் இழிவு குறித்து மனங்கூசி, முகம்வாடி யாசகர்த்துக்குச் செல்வர்; அவரைப் பார்த்துப் பிறர் இகழ்ந்தால், அவர் மரணத்துக்கு நிகரான வேதனையை அடைவார்கள்; ஆதலால், அது கொலைக்கு நிகரான பாவமாம்; அப்பாவத்தைச் செய்யாதிருப்பது பெரும் புண்ணியமாம்; அதனால் பிறப்பு நீங்கி மோக்ஷமுண்டாம்.

இரப்பாரை இகழாதவனுக்குயர்வு கூறிய முகத்தால் இரத்தலும், அதற்கஞ்சுதலும் இதிற் கூறப்படுதலின், இஃதிவ்வதிகாரத்திற் சேர்க்கப்பட்டது.

பிறக்கலான் - எதிர்மறை வினையாலணையும் பெயர். பரப்பு- பரத்தல்; தொழிற்பெயர்; இது, தொழிலாகு பெயராய்ப் பரந்த இடத்தை யுணர்த்தி நின்றது. ஒழுகுதல்- நடத்தல்; இஃதிங்குச் சென்று பரவுதலை யுணர்த்தி நின்றது. ஒழுகும்- காரியப் பெருளதான பெயரெச்சம்; இனி, 'ஒழுகும்' என்பதற்கு, 'சொரிகின்ற' எனப் பொருள் கூறினுமாம்; பொன் சொரிதலாவது, பொன்னைக் கொழித்தலாம்.

'அவனே' என்பதில், ஏ- பிரிநிலைப் பொருளது. மகன் அவன்- இருபெயரொட்டு; அவன்- சுட்டுப் பெயர். (எ)

308. புறத்துத்தன் னின்மை நலிய வகத்துத்தன்
நன்ஞான நீக்கி நிறீஇ யொருவனை
ஈயா யெனக் கென்றிரப்பானே லந்நிலையே
மாயானோ மாற்றி விடின்.

(இ-ள்.) (ஒருமனிதன்,), புறத்து - (தன்னுடைய) வெளிப்பக்கத்திலே, (அதாவது, உடம்பிலே), தன் இன்மை- தனது வறுமைத் துன்பமானது, நலிய- வருத்த, (அதாவது அதனியல்பைக் கெடுத்து அதனை வாட்ட, (அதனால்), தன்- தன்னுடைய, நல்- உயர்ந்த, ஞானம் நீக்கி- விவேகத்தை அகற்றி, நிறீஇ- (அவ்வறிவு நீங்குதலால் ஏற்பட்ட அறியாமையை) நிலைநிறுத்தி, (அதாவது அறியாமையைக் கொண்டு), ஒருவனை- (பணம் வைத்திருந்தும் பிறருக்குக் கொடாத) ஒரு மனிதனிடத்து, எனக்கு ஈயாய் என்று- எனக்குப் பொருள் தருவாயாக என்று, இரப்பானேல்- யாசிப்பனாயின்,(அவன் அந்தப் பொருளைக் கொடுத்தால் மாத்திரமே அந்த யாசகனுடைய மனம் சிறிது ஆறுதடையும்; அவ்வாறின்றி), மாற்றிவிடின்- (அவன் விருப்பத்தை) மாற்றி விட்டால், (அதாவது, அவன் விரும்பியபடியே அப் பொருளைக் கொடுக்க மறுத்துவிட்டால், அஃதவனுக்கு மரணவேதனையை உண்டாக்கும்; ஆதலின்), அந்நிலையே- அவ்விடத்திலேயே, மாயானோ- (அந்த யாசகன்) இறந்து படமாட்டானோ? (இறந்தேபோவான்); எ-று.

ஒருவன் தன்னுடைய வறுமைத் துன்பமானது உடம்பை வாட்ட அதனால் மெலிந்த மேனியோடு, நல்ல அறிவையும் நீக்கி ஒருவனிடம் போய்ப் பொருள் யாசிப்பானாயின் அவன் பொருள் கொடுத்தால் மாத்திரமே அந்த யாசகனது மனம் சிறிது திருப்தியடையும்; இல்லை

யேல் மரணவேதனையை அடைவான். ஆதலின், அவன் பொருள்கொடுக்க மறுத்துவிடுவானாயின் அந்த யாசகன் அவ்வேதனையால் அவ்விடத்திலேயே இறந்தொழிவான் என்பது இதன்க ருத்து.

இதனால், இரத்தற்றொழிலோ மிக இழிவானது; ஒருவன் அதிலும் இரந்தவிடத்தில் பொருள் கிடைக்காவிடில், மேலும் அவமானம் அதிகரித்து அவனுக்கு மரணத்தையும் உண்டாக்கும்; ஆதலின், யாசித்தல் மிக அஞ்சத்தக்க தென்பது கூறப்பட்டது. பணமுடையார், இரப்பார்க்குப் பொருள் கொடாவிடத்தவர் உயிர்போ மென்பது,

''கரப்பவர்க் கியாங்கொளிங்குங் கொல்லோ விரப்பவர்
சொல்லாடப் போஒ முயிர்''

என்னும் (திருக்குறள்- 1070-ஆம்) செய்யுளானு முணரப் படும். 'நன்ஞானம் நீக்கி' எனவே, அறிவின்மை தானே பெறப்படும்; ஆதலின், 'நிறீஇ' என்பதற்கு, 'அறியாமையை நிலைநிறுத்தி' என்று பொருள் கூறப்பட்டது. நலிய- இங்குப் பிறவினைப் பொருள் தந்து நின்றது. நிறீஇ- சொல்லிசையளபெடை. ஈயாய்- ஏவலொருமை வினைமுற்று; ஆய்- ஏவலொருமை விகுதி. ஈ- இரக்கப்படுவோனின் இழிந்த இரவலன் கூற்றாம்;

''அவற்றுள்,
ஈயென்கிளவி யிழிந்தோன் கூற்றே''

என்பது, (தொல்-சொல்-எச்- 445-ஆம்) சூத்திரம். 'அந் நிலையே' என்பதில், நிலை- இடப்பொருளது; ஏ- தேற்றத் தோடு விரைவு. (அ)

309. *ஒருவ ரொருவரைச் சார்ந்தொழுக லாற்றி*
வழிபடுதல் வல்லுத லல்லாற்- பரிசழிந்து
செய்யீரோ வென்னானு மென்னுஞ்சொற்
கின்னாதே
பையத்தான் செல்லு நெறி.

(இ-ள்.) ஒருவர்- ஒரு மனிதர், (வறுமையடைந்து அந்நிலையில் வாழ்க்கையை நடத்துதற்கு), ஒருவரை- மற்றொரு பணக்காரரை, சார்ந்து - சேர்ந்து, ஒழுகல் ஆற்றி- (அவர் சொற்படி) நடத்தலைச்செய்து, (அதாவது, அவர் கருத்தின்படி நடந்து), வழிபடுதல்- (அவரிடம்) வணக்கத் தோடிருத்தல், வல்லுதல்- திறமையாம், (அதாவது, அவர்க்கு ஒழுங்காம்), அல்லால்- அவ்வாறல்லாமல், (அவ்வறுமைத் துன்பத்தால் அத்தனவந்தரிடம் ஒரு பொருளைக் கெஞ்சிக் கேட்டு வாங்குதல் ஒழுங்காகாது), (அவ்வாறு), பரிசு அழிந்து - தம் பெருமைகெட்டு, என்னானும் - (எனக்கு) ஏதாவதொரு (உதவி), செய்யீரோ - செய்ய மாட்டீரோ?, என்னும் சொற்கு - என்று செல்லி இரத்தலுக்கு, பைய- மெல்ல, செல்லும் நெறி- செல்லுகின்ற அற்பமாகிய யாசக மார்க்கமானது, இன்னாது- கெட்டது; எ-று.

ஒருவர், வறுமையடைந்த காலத்தில் தம்முடைய வாழ்க்கையை நடத்துதற்கு மற்றொரு தனவந்தரிடம் சென்று வேலைக்கமர்ந்து அவர் சொற்படி நடந்து வணக்கத் தோடிருந்து, அவர் தம் வேலைக் கீடாகக் கொடுக்கும் ஊதியம்பெற்று வாழ்தலே ஒழுங்காம்; அவ்வாறன்றி அவ்வறுமைத் துன்பத்தால் அப்பணக்காரரிடம் பொருளை யாசிக்க விரும்பி, 'எனக்கேதேனுமோர் உதவி செய்ய மாட்டீர்களா?' என்று கெஞ்சிக் கேட்கச் செல்லும் அற்பமான யாசக மார்க்கம் கெட்டது என்பது இதன் கருத்து.

ஒரு மனிதன், தனக்கு வறுமைத் துன்பம் வரினும் அதனைத் தீர்த்துக் கொள்ள மற்றொருவரிடம் பணியாளாக அமர்ந்து அவர் கருத்தின்படி நடந்து வேலைகளைக் கிரம மாக முடித்து அவ்வேலைகளுக் கீடாக அவர் கொடுக்கும் பொருளை வாங்கி அதனால் தன் வாழ்க்கை நடத்த வேண் டுமே யன்றித் தன் பெருமை கெட அவரிடம் பொருளை யாசிக்கச் செல்லுதல் கூடாதென்பது இதிற் கூறப்பட்டது.

'சொற்கு' என்பதிலுள்ள, சொல்- சொல்லி யாசித் தலை விளக்கி நின்றது; சொற்கு - காரண காரியப் பொருளில் வந்த நான்காம் வேற்றுமை விரி, 'வல்லுதல்' என்பது- 'ஒழுங்கு' என்றும் பொருள் படுமாகலின், இதற்கு, 'ஒழுங்கு' என்று பொருள் கொள்ளுதலுமாம். 'பைய' என்பதற்கு, 'துன்பமுண்டாக' என்று பொருள் கூறினுமாம்; பைதல் - துன்பம்; பைய- பை என்பதனடியாகப் பிறந்த வினை யெச்சம். யாசகத்துக்குச் செல்லுவோர் மனங்குன்றி, உட லொடுங்கித் துளர்ந்து செல்வது இயற்கையாதலின், 'பையச் செல்லும் நெறி' என்றார் முனிவர். வல்லுதல்- தொழிற் பெயர்; வல்- பகுதி. செய்யீர் - முன்னிலைப் பன்மை எதிர் மறை வினைமுற்றாகவேனும், உடன் பாட் டேவற் பன்மை வினைமுற்றாகவேனும் கொள்ளப்படும்; இதிலுள்ள - ஓ- வினாப்பொருளது. ஏ- தேற்றப் பொருளது. தான்- அசை. (க)

310. *பழமைகந் தாகப் பசைந்த வழியே*
கிழமைதான் யாதானுஞ் செய்க- கிழமை
பொறாஅ ரவரென்னிற் பொத்தித்தந் நெஞ்சத்
தறாஅச் சுடுவதோர் தீ.

(இ-ள்.) (இரத்தல் இழிவாதலினாலே, அவ்விழிவு குறித்து இரவாமல் வறுமைத் துன்பத்தால் வருந்தும் மானமுள்ளார்க்கு, அவருடைய பழைய நண்பர் அவருடைய

வருத்தத்தை நீக்குவதற்குரியவராவர்; ஆதலின், அப்பேர்ப் பட்டவர்க்கு), அவர்- அந்நண்பர், பழமை - பழைய நட்பானது, கந்துஆக- தொடர்பாக, பசைந்த வழியே - (தாம் முன்பு) அன்பு கொண்ட வழியாகவே, கிழமை (தாம் செய்தற்கு) உரிமையாகிய, யாதானும் - ஏதாவதொரு உதவியை, செய்க- செய்யக்கடவர், கிழமை- அந்த உரிமையை, பொறாஅர் என்னில்- மேற்கொள்ளாராயின், (அதாவது, அவ்வாறு அவ்வுரிய உதவியைச் செய்யாராயின்) (அங்ஙனம் செய்யாதிருக்கும் அச்செய்கை), தம் நெஞ்சத்து - (வறுமைப்பட்ட சிநேகிதராகிய) அவர் தம்மனத்திலே பொத்தி - வியாபித்து, அறாஅ- நீங்காமல், சுடுவது-= எரிக்கும்படியான, ஓர் தீ - ஒரு நெருப்பாகும்; எ-று.

இரத்தல் இழிவாகையினாலே, மானத்தைக் காப்பாற்ற விரும்பி, யாசித்தல் செய்யாது வறுமைத் துன்பத்தை அனுபவிக்கும் உயர் குடிப்பிறந்தார்க்கு, அவ்வருத்தம் நீங்குமாறு அவர்களுடைய பழைய நண்பர்கள் அவர்க்குதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்; ஆதலின், அந்நண்பர் பழைய அன்பின் வழியே தம்மா லியன்ற உதவியைச் செய்வாராக; அவர்களும் அவ்வாறு செய்யா விடின் வறுமைத் துன்பத்திலாழ்ந்த அப்பழைய நண்ப ருடைய மனத்தில் அச்செயல் நெருப்பைப் போல் நீங்கா திருந்து வேதனை செய்யும் என்பது இதன் கருத்து.

இதுவரை ஆசிரியர் இரத்தல் இழிவென்பதைக் கூறி, இதில் இரத்தற்கஞ்சி வறுமைத் துன்பத்தை யடைவோர்க்கு, அவருடைய பழைய நண்பர் உதவிசெய்ய வேண்டு மென்பதைக் கூறினார். இதனால், இரக்கச் செல்லாமல் வறுமைத் துன்பத்திலழுந்துவோர், தம் நண்பரால் அதனைத் தீர்த்துக் கொள்ளலாமென்பது கூறப்பட்டது; 'உடுக்ககை யிழந்தவன் கைபோல வாங்கே இடுக்கண் களைவதா நட்பு'' என்றபடி ஒருவனுக்கு நண்பன், அவனுடைய துன்பத்தைத் தீர்த்தற்குரியவனாயிருத்தலின், அவன், அந்நண்பனிடம்

உதவி பெறுதல் இழிவன்றென்பதும், அந்நண்பன் அவசியம் உதவிசெய்ய வேண்டுமென்பதும், அவ்வாறு செய்யாவிடின் அவனை நண்பனாகக் கொண்டவனுடைய மனம் வேமென்பதும் இதில் விளக்கப்பட்டன. சிநேகிதர் உதவி செய்யாவிடின், வறுமைப்பட்டவர், பிறரிடம் யாசித்தலுக் கஞ்சி வருந்துவர் என்று கூறியதன் மூலம் இரவச்சமும் அமைந்ததாகலின் இச்செய்யுளும் இவ்வதிகாரத்திற் சேர்க்கப்பட்டது.

இச்செய்யுளின் பின்னிரண்டடிகளில் உபமான உபமேயங்கட்கு ஒற்றுமை கூறப்பட்டிருப்பது - காட்சியணி. அளபெடைகளிரண்டும் செய்யுளோசை நிறைக்கவந்தன.
(கo)

5-வது

பொதுவியல்

அதாவது, அரசியல் முதலியவற்றில் கூறப்படாமல் பொதுவாய் நின்றவற்றின் இயல்பைக் கூறும் பிரிவாம்; அஃதவையறிதலென்னும் ஒரே அதிகாரத்தாற் கூறப்படும்.

அதிகாரம் 32

அவை யறிதல்

அவையறிதலாவது, சபையின் தன்மையை உணர்த லாம்; அஃதாவது, அச்சபையிலுள்ளவர்களின் கல்வி, அறிவு முதலியவற்றை அறிந்து, அவர்களுக்குத் தக்கபடி மனிதர் நடந்து கொள்ளுதலாம். ஒருவன், பலர் நிறைந்த சபையின் தகுதிக்கேற்ப நடந்து கொள்ளாவிடின் அவனுக்கு மிக்க மானக்கேடுண்டாகும்; மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமாயின் அச்சபையின் இயற்கைக்குத் தக்கபடி நடந்துகொள்ள வேண்டும்; அங்ஙனம் அவை யறிந்து நடந்து கொள்ளும் தன்மையை இவ்வதிகாரம் கூறுவதாகலின், இப்பெயர் பெற்றது. இது, மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் தன்மை யைக் கூறுவதாகலின், இதைப்போலவே மானத்தைப் பாதுகாக்கும் இரவச்சத்தைக் கூறும் அதிகாரத் தின் பின் வைக்கப் பட்டது. அவை- இருமடியாகு பெயராய் அவையிலுள் ளாரின் குணங்களை யுணர்த்திற்று.

311. *மெய்ஞ்ஞானக் கோட்டி யுறழ்வழி விட்டாங்கோ*
ரஞ்ஞானந் தந்திட் டதுவாங் கறத்துழாய்க்
கைஞ்ஞானங் கொண்டொழுகுங் காரறி வாளர்முன்
சொன்ஞானஞ் சோர விடல்.

(இ-ள்.) மெய்ஞ்ஞானம் - உண்மையான சாஸ்திர அறிவையுடைய, (அதாவது, தத்துவ சாஸ்திர வுணர்ச்சியுடையார் கூடிய), கோட்டி - சபையிலே, உறழ் வழி- சேர்ந்து பழகும் முறைமையை, விட்டு - கைவிட்டு, ஆங்கு - அச்சபையிலே, ஓர் அஞ்ஞானம் - ஓர் அறிவற்ற வார்த்தையை, தந்திட்டு - கொண்டு வந்து சொல்லி, அது - அந்த அறிவற்ற வார்த்தையை, ஆங்கு - அச்சபையிலே, அற- மிகுதியாக, துழாய் - பரப்புதல் செய்து, கை- அற்பமான, ஞானம் கொண்டு- அறிவைக் கொண்டு, ஒழுகும்- நடக்கின்ற, கார் அறிவு ஆளர்முன்- கரிய அறிவையுடையவர்களின் முன்னே, சொல்ஞானம் - புகழ்ந்து கூறத்தக்க தம்முடைய சிறந்த ஞானத்தை, சோரவிடல் - தளரவிடக்கடவர் (அறிவுடையார்) எ-று.

நல்ல சாஸ்திரமுடையவர்களின் சபையிற் சேர்ந்து பழகி நல்லறிவு கற்றுக் கொள்ளாமல் மூடமான அறிவையே கொண்டு விவேகமற்ற வார்த்தைகளைச் சபையிற் கூறிப் பரப்பும் அஞ்ஞான விருள்மூடிய மூடருக்கு முன்னே, அறிஞர் தம்முடைய உயர்ந்த ஞானத்தைச் சொல்லாதிருக்கக் கடவர் என்பது இதன் கருத்து.

மூடர்கள், சபையிலிருந்து தம்மைப்போன்ற மூடர்களை வசப்படுத்தி அவர்களிடம் தங்கள் அறிவற்ற வார்த்தைகளைச் சொல்லிப் பரப்பி எல்லோரும் உளறி மகிழ்ச்சியடையும்போது அவர்க்கு முன்னே அறிஞர் எந்த உயர்ந்த ஞானத்தைக் கூறினும் அம்மூடர் அதனை மதிக்கார்கள்; அவ்வறிஞரைப் பரிகசித்தலும் செய்வர்; அதனால், விவேகிகளுக்கு மதிப்பீனமும், மானக்கேடு முண்டாம்; ஆதலின், அவர்முன் அறிஞர் ஒன்றுஞ் சொல்லாதிருத்தலே நலமென்றார் முனிவர். இத்தகைய அஞ்ஞானக்கோட்டிகளை இக்காலத்தில் நாடக ஆசிரியர் கோட்டி முதலிய சில கோட்டிகளில் மிகுதியாகக் காணலாம். இங்ஙனம், மூடர்முன் ஞானமொழிகள் கூறலாகா தென்பதை,

''புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார்''

என்னும் (திருக்குறள்-719-ஆம்) செய்யுளானு முணர்க. இச்செய்யுட்கண் ஒரே பொருள் குறித்த, 'ஞானம்' என்னுஞ் சொல் பன்முறை வந்தது- சொற்பொருட் பின் வருநிலை யணி. சபையிலுள்ளாரது மெய்ஞ்ஞானம், சபையின்மேல் ஏற்றிக் கூறப்பட்டது; இங்ஙனம் கூறியது உபசார வழக் கெனப்படும். கை- சிறுமை. மூடர் அறிவு, இருள் மற்றப் பொருள்களை மறைப்பதுபோல் உண்மைப் பொருளை மறைக்கக் கூடியதாகலின், அது, காரறிவெனப்பட்டது. 'தந்திட்டு' என்பதில், இடு - துணைவினை. விடல்- அல்லீற்றுவியங்கோள். *(க)*

312. நாப்பாடஞ் சொல்லி நயமுணர்வார் போற்செறிக்குந்
தீப்புலவற் சேரார் செறிவுடையார்- தீப்புலவன்
கோட்டியுட் குன்றக் குடிபழிக்கு மல்லாக்காற்
றோட்புடைக் கொள்ளா வெழும்.

(இ-ள்.) நாபாடம் சொல்லி- நாவில்வந்த பாடங் களை எடுத்துரைத்து, நயம் உணர்வார்போல்- நூற்பொருள் களின் நயங்களை அறிபவர்போல, (நடித்து), செறிக்கும் - (இடம்பத்தால் மனிதர் கூட்டத்தைச்) சேர்கின்ற, தீபுலவன்- தீமைக்குணமுள்ள புலவனை, செறிவு உடையார்- அடக்க முடைய நல்ல புலவர்கள், சேரார்- சேரமாட்டார்கள்; (எதனா லெனில்), தீபுலவன்- அந்தத் தீயகுணமுள்ள புலவன், கோட்டியுள் - (பலர் கூடிய) சபையிலே, குன்ற- (கேட்பவர் மனம்) குன்றிப் போகும்படி, குடி- அந்த நற்புலவர்களுடைய உயர்குடிப் பிறப்பை, பழிக்கும்- நிந்திப்பான், அல்லாக்கால் - (அப்படி) அல்லாவிடின், (அவர்களோடு சண்டை தொடுப் பதற்கு), தோள்புடை கொள்ளா - தோள்களைத் தட்டிக் கொண்டு, எழும்- (அவர்களை அடிக்க) எழுவான்; எ-று.

முறையாக இலக்கண இலக்கிய நூல்களைப் படிக் காமல் கல்வி மூடங்கொண்டு வாய்க்கு வந்ததைச் சொல்லி, நூற்பொருள்களின் நயங்களை உணர்ந்தவர்களைப்போல நடித்துத் தம்முடைய இடம்ப மொழிகளைக் கேட்டு மனிதர் கூட்டமாகச் சேரும்படி செய்கின்ற மூடர்களோடு அறிஞர் நெருங்கி ஏதேனும் பேச்சு வைத்துக்கொண்டால், அவற்றை அவர் ஏற்றுக்கொள்ள மாட்டார்; நல்லவைகளை எடுத்துக் கூறும் அந்நற்புலவர்மீது வெறுப்புறுவர்; அதனால் அவர் களுடைய குலப்பெருமை கெடும்படி அவர்களை நிந்தித் தலும் செய்வார்; அதுவுமில்லாமல் அவரோடு சண்டை தொடுக்கவும் ஆரம்பிப்பர்; ஆதலால், மானத்தைக் காப் பாற்றும் நற்புலவர்கள் அவர்களிடம் நெருங்கமாட்டார்கள்.

இதனால், முறையான படிப்பில்லாமல் வீண் இடம் பஞ்செய்து வாய்க்கு வந்ததைக் கூறிக் கூட்டஞ்சேர்க்கும் அறிவிலிகளாகிய போலிப் புலவரிடம் பேசும் நற்புலவர்க்கு மானக்கேடுண்டாகு மென்பது கூறப்பட்டது. இத்தகைய போலிப்புலவர் இக்காலத்தில் தமிழ் நாடெங்கும் மலிந் திருப்பதை நாம் காணலாம்.

பாடம் - தப்பாக மனத்தில் ஞாபகப்படுத்தி வைத்தி ருப்பது. இதில், இன்ன காரணத்தால் இன்னது செய்யார் என்று காரணங் காட்டிக் காரியத்தை நிறுத்தி யிருப்பது - ஏதுவணி. செறிக்கும்- பிறவினைப் பொருளில் வந்த பெய ரெச்சம். இதில் உள்ள, 'செறி' என்னும் பகுதி- தன்வினை, பிறவினை ஆகிய இரண்டிற்கும் பொது. புலம் -அறிவு, நூலுணர்வு; இவற்றையுடையார்- புலவர். புலவற்சேரார்- இதில் இரண்டாம் வேற்றுமை யுருபு தொக்கு ஈறு விகாரப் பட்டது. கொள்ளா- செய்யா என்னும் வாய்பாட்டு வினை யெச்சம். குன்றுதல்- எழுச்சி குறைதல்; அதாவது, மகிழ்ச்சி குறைவுபடுதலாகிய வருத்தம். புடை- முதனிலைத் தொழிற் பெயர். (உ)

313. *சொற்றாற்றுக் கொண்டு சுனைத்தெழுதல் காமுறுவர்*
கற்றாற்றல் வன்மையுந் தாந்தேறார்- கற்ற
செலவுரைக்கு மாறறியார் தோற்ப தறியார்
பலவுரைக்கு மாந்தர் பலர்.

(இ-ள்.) சொல்தாறு கொண்டு - (தம் வழுச்) சொற்களாகிய தாற்றுக்கோல்களை (அதாவது, முட்கோல்களைக்) கொண்டு, (எதிர்த்த புலவரைத் தாக்குதற்கு), சுனைத்து- மனத்தினவுகொண்டு, எழுதல் காமுறுவர்- எழுந்து நிற்றலை விரும்புகின்றவர்களையும், கற்ற ஆற்றல் - (பிறர்) படித்த நற்காரியங்களைச் செய்தலையும், வன்மையும்- (அவர்களுடைய) கல்வித் திறமையையும், தாம் தேறார்- தாம் அறியாதவர்களாயும், கற்ற- தாம் படித்துணர்ந்தவற்றை, செல்ல- (கேட்போரது) நெஞ்சிற்புகுமாறு, உரைக்கும் ஆறு அறியார்- சொல்லும் நெறியையும் அறியாதவர்களாயும், தோற்பது அறியார்- (தாம் பிறரோடு வாதஞ்செய்யும்போது தோல்வி யடைந்தால்) அத்தோல்வியையும் அறியாதவர்களாயும், பல உரைக்கும்- பயனற்ற பல வார்த்தைகளைக் கூறும், மாந்தர் பலர் - மனிதர் உலகத்திற் பலராவர், (இவர்களிருக்கும் சபை அறிவுடையார் சேர்தற்குரிய சபையாகாது); எ-று.

கடினமான சொற்களைக் கொண்டு அறிவுடையாரோடு வீண் வாதம் செய்பவரும், பிறர் கல்வித் திறமையையும், அக்கல்வியறிவாற் செய்யும் நற்காரியங்களையும் அறியாதவரும், கற்றவைகளைப் பிறர் மனத்திற் பதியும்படி எடுத்துச் சொல்லும் வழி தெரியாதவரும், தாம்பிறரோடு வாதஞ்செய்வதில் தோல்வியடைவதையும் உணராதவருமாய்ப் பயனற்றபல வார்த்தைகளைப் பேசும் மாந்தர் பலருண்டு; இத்தகையினரிருக்கும் சபை அறிவுடையார் சேர்தற்குரிய சபையாகாது என்பது இதன் கருத்து.

'பலரைக்கு மாந்தர் பலர்' என்று கூறிய குறிப்பால் அவர்களிருக்கும் சபை, அறிவுடையார் சேர்தற்குரிய சபை யாகாது என்பது பெறப்பட்டது. இச்செய்யுளிற் கூறிய குணங்களையுடையார் மிக்க மூடராகையால், அவர்களிருக் கும் சபைக்கு அறிஞர் சென்றால் அவர் வலிய வம்பிழுத்து அறிஞர்க்குத் துன்பம் விளைவிப்பர்; ஆதலின், அவர்களிருக் கும் சபை அறிஞர் சேர்தற்குரிய சபையாகா தென்பதைக் குறிப்பால் விளக்கினார் ஆசிரியர்.

மாடு முதலிய பிராணிகளின்மேற் பாய்ந்து துன்புறுத் தும் தாற்றுக்கோலைப்போல கல்வி யறிவில்லா மூடர் களுடைய கடுஞ்சொல்லும் அறிஞர் மனத்துட் பாய்ந்து துன்பத்தை விளைவிக்கும்; ஆதலின் அச் சொற்கள் தாற்றுக் கோல்களாக உருவகஞ் செய்யப் பட்டன; இங்ஙனம் உரு வகித்தது - உருவகவணி. தாறு+ கொண்டு = என்பது வேற் றுமைப்புணர்ச்சியாகலின் நெடிற்றொடர்க் குற்றியலு கரத்தின் றகரக வொற்றிரட்டி, 'தாற்றுக்கொண்டு' என நின்றது. சுனைத்தல்- தினவாயிருத்தல்; அதாவது நமைச்ச லெடுத்தல்; அஃதுண்டானால் அதன் மேற் சொறிந்தால் மாத்திரமே அஃதொடுங்கும்; அதைப்போலவே அகங்காரி களுக்கு இயற்கையாலுண்டாகும் உள்ளத்தினவு (அதாவது, திமிர்) எவரோடாவது தர்க்கஞ் செய்து அவர்கள் மனத்தோ டுராய்ந்தால் மாத்திரமே தீரும். ஆதலால், அவ்வறிவீனர் எவருடனும் வம்பிழுக்கவே விரும்புவர்; அது பற்றியே, 'சுனைத்தெழுதல் காமுறுவர்' என்றார் ஆசிரியர். கற்ற - கற்றதனால் தெரிந்துகொண்ட நன்னெறிகள்; வினையா லணையும் பெயர். கற்ற + ஆற்றல் என்பது 'கற்றாற்றல், எனச் செய்யுள் விகாரத்தாற்றொக்கு நின்றது. 'துனைந்தெழுதல்' என்றும் பாடபேதமுண்டு; இதற்கு, 'விரைந்தெழுதல்' என்று பொருள் விரிக்கப்படும்.

314. *கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாடத்தாற்*
பெற்றதாம் பேதையோர் சூத்திர- மற்றதனை
நல்லா ரிடைப்புக்கு நாணாது சொல்லித்தன்
புல்லறிவு காட்டி விடும்.

(இ-ள்.) பேதை- மூடனாகிய ஒருவன், கற்றதூஉம் இன்றி - தான் படித்துக் கொண்டதும் சிறிதேனு மில்லாமல், கணக்காயர் - நூல்களை மாணவர்க்குப் போதிக்கும் ஆசிரியர் களின், பாடத்தால்- மாணவ உபதேசமாகிய பாடத்தினாலே, (அதாவது, அவர்கள் மாணவர்களுக்குப் பாடஞ்சொல்லும் போது கேட்டுக்கொண்டிருந்ததனாலே), பெற்றது ஆம்- பெற்றதாகிய, ஓர் சூத்திரம் அதனை- ஒரு சூத்திரத்தை, (அதன் பொருளுணர்ச்சி சிறிதுமின்றி வழுப் பல நிரப்பிப் பலரிடத்தும் சொல்லித் தான் கல்விமானைப் போல பெருமை யடைதல் வேண்டுமெனத் தன் மூடத்தாற் கருதி), நல்லார் இடைபுக்கு - நல்ல கல்வியறிவுடையவர்களிடத்தே சென்று, நாணாது- (தனக்கு வரும் அவமானங்குறித்துச் சிறிதும்) வெட்கப் படாமல், சொல்லி- உரைத்து, தன்- தன்னுடைய, புல் அறிவு- அற்ப அறிவை, காட்டிவிடும் - பலருக்கும் வெளிப்படுத்தி விடுவான்; எ-று.

மூடனாயிருப்பவன், தான் முறையாக எதையும் கற்றுக்கொள்ளாமல், ஆசிரியர் மாணவர்க்குப் பல சூத்திரங்கள் தினந்தோறும் சொல்லிப் போதிக்கும்போது அப்பாடத்தைக் கேட்டுக்கொண்டே வந்ததால் ஒரு சூத்திரத் தைப் பொருளுணர்ச்சியின்றித் தப்புந்தவறுமாக மனப் பாடஞ் செய்து, அதைப் பலரிடத்தும் சொல்லித் தானொரு கல்விமானாக மதிக்கப்படவேண்டுமென்று தன் அறிவீனத் தாற் கருதி நல்ல கல்விமான்கள் கூடியிருக்கும் சபையில் தனக்கு வரும் மானக்கேட்டிற்குச் சிறிதும் வெட்கப்படாமல் சொல்லித் தன் அற்ப அறிவை எல்லோருக்கும் தெரியும் வெளிப்படுத்தி விடுவான் என்பது இதன் கருத்து.

இங்ஙனங் கூறியதனால், மூடர், அறிவாளர் கூடியிருக்கும் சபையின் உயர்வைச் சிறிதும் உணராமல் அங்குத் தம் அறிவீனத்தை வெளிப்படுத்திப் பலராலும் இகழப் படுவார் என்பது பெறப்பட்டது. இந்தச் சபை யறியாத் தன்மையைக் கூறியதன் மூலம், அறிஞர் சபையியற்கையை உணர்ந்து அதற்குத் தக்கபடி நடந்து மானத்தைக் காப்பாற்ற வேண்டுமென்னும் அவை யறிதல் கூறப்பட்டது.

இதில் மூடரின் தன்மையைச் சமத்காரந்தோன்ற உள்ளபடி கூறியது - தன்மை நவிற்சியணி. கற்றதூஉம் - இன்னிசையளபெடை; இதிலுள்ள உம்மை- இழிவு சிறப்புப் பொருளது. கணக்கு- எண்ணும், எழுத்தும்; இவ்விரண்டு மடங்கிய கணக்கினை ஆய்தலுடையார்- கணக்காயர். பேதை - அறிவின்மை; இது, பண்பாகு பெயராய் அறிவில்லாதானை யுணர்த்திற்று. மற்று- அசை. 'நல்லார வைப்புக்கு' என்றும் பாடபேத முண்டு. (ச)

315. *வென்றிப் பொருட்டால் விலங்கொத்து மெய்கொள்*
கன்றிக் கறுத்தெழுந்துகாய்வாரோ- டொன்றிளார்
யுரைவித் தகமெழுவார் காண்பவே கையுட்
சுரைவித்துப் போலுந்தம் பல.

(இ-ள்.) வென்றிப் பொருட்டால் - (பிறரை அடக்கித் தாம் அடையும்) வெற்றி காரணமாக, விலங்கு ஒத்து - (பகுத்தறிவில்லாத) மிருகத்தை நிகர்த்து, மெய்கொள்ளார்- (அறிவுடையார் சொல்லும்) உண்மைப் பொருள்களை ஏற்றுக் கொள்ளாதவர்களாய், கன்றி கறுத்து- மிகவும் கோபித்து, எழுந்து- (உண்மைப் பொருள் கூறும் அறிஞரோடு போர் தொடுப்பதற்கு) எழுச்சியுற்று நின்று, காய்வாரோடு -(அக் கோபத்தால் நெஞ்சம்) கொதிப்பவரோடு, ஒன்றி- பொருந்தி, வித்தகம்- ஞானத்தோடு கூடிய, உரை எழுவார் - நா வார்த்தை யாடுபவர்கள், சுரைவித்து போலும்- சுரை விதையை நிகர்த்த, தம் பல்- தம்முடைய பற்களை, கையுள்- தங்கள்

கையிலே, காண்ப- (உடனே உதிர்ந்திருக்கக்) காண்பார்கள்; எ-று.

கல்வி யறிவில்லாத மூடர்கள், தாம் சொன்னதையே சொல்லி, வாயடியடித்து எப்படியாவது பிறரை வென்றுவிட வேண்டுமென்ற ஒரே நோக்க முடையவர்களாகவே யிருப்பர்; அறிஞர் கூறும் உண்மைப் பொருள்களை ஒப்புக் கொள்ளாமல் அவ்வாறு கூறுவாரோடு மிக்க கோபமே கொண்டு நெஞ்சங்கனன்று அவரோடு போர்செய்யத் தொடங்குவார்; அவரிடம் அறிவுரைகளைக் கூறத் தொடங்கு வாரைக் கன்னத்திலறைந்து அவருடைய பற்களையும் உதிர்த்து விடுவர்; பல்லுதிர்க்கப்பட்ட அறிஞர் அப் பற்களைக் கையிலெடுத்து வைத்துப் பார்த்துக் கொண்டு வருந்துவர்.

இவ்வாறு கூறியதனால், இத்தகைய மூடர் கூட்டத் தின் இயற்கையை உணர்ந்து, அறிஞர் அக் கூட்டத்திற் சேரா திருப்பதே அவர்க்குக் கௌரவமா மென்பது பெறப்படும்.

பகுத்தறிவுடைமை - மனிதத் தன்மை; அஃதில்லா திருத்தல் மிருகத்தன்மை; அவ்வறிவில்லார் மிருகத்துக்கு நிகராவர்; ஆதலின், அவர்களை, 'விலங்கொத்து மெய் கொள்ளார்' என்றார் முனிவர். மூடரோடு ஞானம் பேசத் தொடங்குவோர் கன்னத்திலடிபட்டுப் பல்லுதிர்க்கப்படு வார் என்பதை, ''காண்பவே கையுள் சுரைவித்துப் போலுந் தம்பல்'' என்று வேறு வகையாற் கூறியது- பிறிதினவிற்சி யணி. 'வென்றிப் பொருட்டால்' என்பதில், பொருட்டு- காரணகாரியப் பொருளில் வந்த நான்காம் வேற்றுமைச் சொல்லுருபு; ஈற்றிலுள்ள ஆல்- அசை. கன்றிக்கறுத்து- மிகுதிப் பொருள் பற்றிவந்த ஒரு பொருட் பன்மொழி. கறுத்தல்- உரிச்சொல். 'காண்பவே' என்பதில், ஏ- தேற்றப் பொருளது. 'சுரைவித்துப் போலுந் தம் பல்' என்பது - வடிவுவமை.

316. *பாடமே யோதிப் பயன்றெரித றேற்றாத*
மூடர் முனிதக்க சொல்லுங்காற்- கேடருஞ்சீர்ச்
சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே மற்றவரை
யீன்றாட் கிறப்பப் பரிந்து.

(இ-ள்.) பாடமே ஓதி- (ஒரு செய்யுளைக் குருட்டுப் பாடமாகச் செய்துகொண்ட) பாடத்தை மட்டுமே பலரிடத் தும்(பெருமையாகச்) சொல்லி, பயன்- அதன் பொருளை (அதாவது, அர்த்தத்தை), தெரிதல் தேற்றாத - ஆராய்ந்தறியும் வழியைத் தெரிந்து கொள்ளாத, மூடர் - அறிவில்லா மனிதர், (பெரியோர்களைக் கண்ட விடத்து மதியாமல் தீயமொழி களையே கூறுவர்; அவ்வாறு, கேட்பவர்கள்), முனிதக்க- கோபிக்கத்தக்க தீமையான சொற்களை, சொல்லுங்கால்- சொல்லும்போது, கேடு அரும்- அழிவில்லாத, சீர்- கீர்த்தியை யுடைய, சான்றோர் - அப்பெரியோர்கள், (அவரைச் சபிக்க மாட்டார்கள்), அவரை- அந்த மூடரை, ஈன்றாட்கு - பெற்ற வளுக்கு, இறப்பபரிந்து- மிகுதியாக இரங்கி, சமழ்த்தனர்- (ஒரு பேதைப் பெண்ணுக்குக் கவலையுண்டாமாறு இம் மூடர் அவள் வயிற்றிற் பிறந்தனரே என்று) மனம் வருந் தினவர்களாய், நிற்ப- சாந்த நிலையில் நிற்பார்கள்; எ-று.

அறிவில்லாதவர்கள் செய்யுட்களையும், செய்யுட் பொருள்களையும் முறைப்படி ஓதி யுணரமாட்டார்கள்; தங்களைக் கல்வியுடையார்போல பலரிடத்தும் காட்டிக் கொள்வதற்குச் சில செய்யுட்களை வழுக்களோடு கிளிப் பிள்ளை பாடமாக நெட்டுருச் செய்து கொண்டு பொரு ளுணர்ச்சியின்றிப் பலரிடத்தும் சொல்லித்திரிவர்; தங்கள் மூடத்தாற் பெரியோரை மதிக்காமல் பல தீயமொழி களையும் கூறுவர்; அவ்வாறு கூறும்போது, அவர்கள் குற்றத்திற்குத் தண்டனை யளிப்பது கிரமமமாயிருப்பினும், அப்பெரியார், அவரைச் சபிக்கமாட்டார்கள்; அவர் களைப்பெற்ற தாயாகிய பெண்ணின் பொருட்டிரங்கி, ''தனக்கும் பிறர்க்கும் வருத்தத்தை யுண்டாக்கத் தக்க

இத்தகைய மூடரை அந்தப் பெண் பெற்றனளே பாவம்!'' என்று வருந்துவர்.

ஒரு தாயானவள், தன் பிள்ளைக்குக் கேடுவந்த காலத்தில், அவன் உலக முழுதும் வெறுக்கத்தக்க கொடியனாயிருந்தபோதிலும், பிள்ளைப் பாசத்தால் மிக வருந்துவள்; 'பெண்ணென்றால் பேயும் இரங்கும்' என்றபடி எவரும் பெண்களின் துன்பத்தைக் கண்டிரங்குதல் உலக வியற்கை. ஆதலின், தாயினுடைய அத்தகைய துன்பத் திற்காகச் சான்றோர் இரங்குவர் என்றார் முனிவர். 'சான்றோர் மூடரின் தீய சொற்களைப் பொறுத்துக் கொள்வார்' என்று கூறியதனால், அத்தகைய சான்றோர் கூடியிருக்கும் சபையே தகுதியுடையதென்பதும் மூடர்சபை. அறிஞர் சேரத் தகா தென்பதும் பெறப்படும். பெரியோர்கள் மூடர் செய்த குற்றங் களைப் பொறுத்துக் கொள்ளுதல் அவர்க்கு இயற்கையாக அமைந்த குணம்; அங்ஙனம் இயற்கையி லமைந்த குணத் திற்கு, தாய்க்கிரங்கு தலைக் காரணமாக இதிற் கூறியது- ஏதுத்தற்குறிப் பேற்றவணி.

'பாடமே' என்பதில், ஏ- பிரி நிலை. முனி- முத னிலைத் தொழிற் பெயர். கேடு- முதனிலை திரிந்த தொழிற் பெயர். மற்று- அசை. முனி தக்க- பெயர். சமழ்த்தனர்- முற்றெச்சம். (சூ)

317. *பெறுவது கொள்பவர் தோள்போ னெறிபட்டுக்*
கற்பவர்க் கெல்லா மெளியநூன் - மற்றம்
முறிபுரை மேனிய ருள்ளம்போன் றியார்க்கு
மறிதற் கரிய பொருள்.

(இ-ள்.) நூல்- பனுவல்களின் சொற்கள், பெறுவது- பெற்றுக்கொள்கிற பொருளை, கொள்பவர்- பெற்றுக் கொள்கின்ற விலை மாதர்களின், தோள்போல்- தோள் களைப்போல, நெறிபட்டு- (கற்கும்) மார்க்கத்திற் புகுந்து,

கற்பவர்க்கு எல்லாம்- (மேற்போக்காகப்) படிப்பவரெல்லா ருக்கும், எளிய - (மனப்பாடஞ்செய்து கொள்ளுதற்குச்) சுலபமானவையாம்; பொருள் - (அந்நூற் சொற்களில் அடங்கியிருக்கும்) அர்த்தங்கள், அ- அந்த, முறிபுரை- தளிரை நிகர்த்த, மேனியர்- உடம்பையுடைய வேசையர்களது, உள்ளம்போன்று- மனத்தை நிகர்த்து, யார்க்கும்- எவர்க்கும், அறிதற்கு அரிய- தெரிந்து கொள்வதற்கு முடியாதனவாம்; எ-று.

நூல்களிலுள்ள சொற்களைப் பாடஞ்செய்யுங்கிரமத் தால் நெட்டுருச் செய்தால் அவை எளிதாக மனப்பாடமாகி விடும்; அவற்றின் அர்த்தங்களோ ஆராய ஆராய விரிந்து மனிதர் புத்திக் கெட்டாதனவாயிருக்கும்; அவரவர்களுடைய அறிவிற்குத் தக்கவாறு புலனாகும்; பரத்தையர்களுடைய தோள்கள், அவர்களுக்குப் பணம் கொடுப்பவர்கள் தடை யின்றித் தழுவிக் கொள்வதற்குரியனவாகும்; ஆனால், அவர்களுடைய உள்ளமோ, அவ்வப்பொழுது பணங் கொடுத்தவர்களிடத்து மாத்திரம் நில்லாது வேறு பலரிடத் தும், பல விடத்தும், பல பொருள்களிடத்தும் சென்று கொண்டிருக்கும்; ஆதலின், அதனை எத்தகைய அறிவுள் ளாரும் இச்சமயம் இன்ன தன்மையிலிருக்கின்றது என்று தெரிந்து கொள்ளுதல் முடியாது. ஆதலின் இப்பரத்தையர் களுடைய தோள்கள், நூலின் சொற்களை மனப்பாடஞ் செய்தலுக்கும், உள்ளம் நூற் பொருள்கள் காண முடியாத வியல்பிலிருப்பதற்கும் உவமைகளாகக் கூறப்பட்டன. இங்ஙனம் கூறியது - உவமையணி.

இவ்வாறு கூறியதனால், நூற் சொற்களைக் குருட்டுப் பாடஞ் செய்வது எளிதென்பதும், அவ்வாறு செய்பவர், கல்வியறிவில்லாதவர்களென்பதும், சொற் பொருள்களை உணர்தல் மிக்க பிரயாசை யென்பதும், அவ்வுணர்ச்சி யுடையாரே கல்வியறிவுடையாரென்பதும், இத்தகைய அறிஞர் கூடியிருக்கும் சபையே சான்றோர் சேர்தற்குத்

தகுதியுடைய தென்பதும், மூடர் கூடியிருக்கும் சபை தகுதி யற்ற தென்பதும் விளக்கப்பட்டன.

பெறுவது - எதிர்கால வினையாலணையும் பெயர்; இது- சாதி யொருமை. கொள்பவர்- குறிப்பு விலையாலணை யும் பெயர். எளிய, அரிய என்பன- பண்பினடியாத் தோன்றிய குறிப்பு முற்றுக்கள். மற்று- வினைமாற்றுதற் பொருளது. புரைமேனி- வினைத்தொகை புரை- உவமையுருபு. (எ)

318. *புத்தகமே சாலத் தொகுத்தும் பொருடெரியா*
ருய்த்தக மெல்லா நிறைப்பினு- மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே பொருடெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.

(இ-ள்.) புத்தகமே- புத்தகங்களையே, சால- மிகுதி யாக, தொகுத்தும்- சேர்த்தும், பொருள் தெரியார் - (அவற்றின்) பொருள்களை அறியாதவர்கள், உய்த்து - (அவற்றைக்) கொண்டு வந்து, அகமெல்லாம் - வீடு முழு வதிலும், நிறைப்பினும் - நிறைத்து வைத்தாலும், (புத்தகங் களி னுட்பொருள்களை யுணர்ந்த உண்மைப் புலவராக மாட்டார்கள்; புத்தகங்களைச் சேர்த்துப் பயன் அனுபவி யாமல் பாதுகாக்கும் போலிப் புலவராவார்கள்; அவ்வாறு), அவற்றை - அப்புத்தகங்களை, போற்றும்- (பயனின்றிப்) பாதுகாக்கும், புலவரும் - (நூற்பொருளறியாத போலிப்) புலவர்களும், வேறே- (உண்மைப் புலவர்களினின்றும்) வேறானவரே, பொருள் தெரிந்து - (அவற்றின்) அர்த்தங் களை உணர்ந்து, தேற்றும்- (பிறருக்கும்) தெரிவிக்கும், புலவரும் - உண்மைப் புலவர்களும், வேறு- (அப்போலிப் புலவரினின்றும்) வேறானவரே; எ-று.

கல்வி மூடவகுப்பைச் சார்ந்த சிலர், புத்தகங்களின் பொருள்களைத் தெரிந்துகொள்ளாமல் அவற்றை அதிகமாக வீடு முழுவதிலும் சேர்த்து வைத்துப் புலவர்களைப்போல

நடித்துத் திரிவார்கள்; இத்தகைய போலிப் புலவர், நூற் பொருள்களை உணர்ந்த உண்மைப் புலவரினின்றும் வேறு பட்டவராவர்; அப்புத்தகங்களின் பொருள்களை உணரும் உண்மைப் புலவர், இவர்களினின்றும் வேறுபட்டவராவர் என்பது இதன் கருத்து.

பொருளுணர்ச்சியின்றிப் புத்தகஞ் சேர்த்து வீண் பெருமை காட்டும் போலிப் புலவரையும், உண்மைப் புலவரையும் இங்குக் கூறியதனால் போலிப் புலவர் கூட் டத்தையுடைய சபை அறிவுடையார் சேரத்தகாத தென்பதும், உண்மைப் புலவர் நிறைந்த சபை தகுதியுடைய தென்பதும் அமையும்.

இங்கே பொருளுணர்ச்சியின்றிப் புத்தகந்தொகுத்துச் சேர்ப்பாரைப் புலவரென்றது இகழ்ச்சி குறித்தெனக; இது, புலவரல்லாதவர் என்று பொருள்படும்; இஃதொழியிசை யெச்சமெனப்படும், புத்தகம் - புஸ்தகம் என்றும் வட சொற்றிரிபு; இதன் கண்ணுள்ள ஏ- பிரிநிலைப் பொருளது. 'தொகுத் தும்' என்பதிலுள்ள உம்மை- உயர்வு சிறப்புப் பொருளது. மற்று - வினைமாற்று. வேறு- இருதிணை ஐம் பால் மூவிடங் கட்கும் பொதுவான குறிப்பு வினைமுற்று; இங்கு உயர்திணைப் பலர்பாலாகிய, 'புலவர்' என்ற எழு வாயைக் கொண்டு முடிந்தது;

— *''வேறில்லை யுண்டைம் பான்மூ விடத்தன''*

என்பது, (நன்-வி-20-ஆம்) சூத்திரம். மூன்றாமடியிலுள்ள, 'புலவரும்' என்பதிலுள்ள, உம்மை- எதிரது தழுவியது; நான்காம் அடியிலுள்ள உம்மை - இறந்தது தழுவியது. 'வேறே' என்பதிலுள்ள ஏகாரம் - பிரிநிலைப் பொருளது; இதை நான்காமடியிலுள்ள, 'வேறு' என்பதனோடுங் கூட்டுக. (அ)

319. *பொழிப்பகல நுட்பநூ லெச்சமிந் நாற்கிற்*
கொழித்தகலங் காட்டாதார் சொற்கள் - பழிப்பி
னிரையாமா சேர்க்கு நெடுங்குன்ற நாட
வுரையாமோ நூலிற்கு நன்கு.

(இ-ள்.) பழிப்புஇல்- குற்றமில்லாத, நிரை- கூட்டமாகிய, ஆமா- காட்டுப்பசுக்களை, சேர்க்கும்- (அவற்றிற் குணவுநீர் முதலியன கொடுத்துத் தம்மிடத்திற்) சேரச்செய்கின்ற, நெடும்குன்றம்- நீண்டமலைகளையுடைய, நாட- பாண்டிநாட்டை யுடையவனே!, பொழிப்பு - பொழிப்புரையும், அகலம்- அகலவுரையும், நுட்பம்- நுண்ணுரையும், எச்சம்- எச்சவுரையும், இ நான்கின்- (ஆகிய) இந் நான்கு வகை யுரைகளாலும் கொழித்து - நன்கு ஆராய்ந்து, நூல் அகலம்- ஒருநூலில் அடங்கிய விரிவான அர்த்தங்களை, காட்டாதார்- எடுத்துவிளக்கிக் காட்டாதவர்களுடைய, சொற்கள் - உரைகள், நூலிற்கு - ஒருநூலுக்கு, நன்கு- நன்மையான (அதாவது; சிறந்த), உரை ஆமோ- உரையாகுமோ? (ஆகாது); எ-று.

ஒரு நூலுக்கு உரைகூற வேண்டுமாயின், பொழிப்புரை, அகலவுரை, நுண்ணுரை, எச்சவுரை ஆகிய நான்குரைகளாலும் பொருள்களை விளக்கக் காட்டவேண்டும்; அங்ஙனம் காட்டாத உரை உரையாகாது என்பது இதன் கருத்து.

இதனால் நூற்பொருள்களை நன்குணர்ந்து நூல்களுக்கு உரை கூறத்தக்க உண்மைப் புலவர்களின் தன்மையும், அவ்வாறின்றிப் போலியுரை கூறும் போலிப்புலவரின் இயற்கையும் கூறப்பட்டன. இங்ஙனம் கூறவே, முறைப்படி நூல்களுக்கு உரை கூறத்தக்க உண்மைப் புலவர்களின் சபையே சிறந்த தென்பதும், மற்றையர் சபை சிறந்ததாகா தென்பதும் அமைந்து அதிகாரப் பொருண்மைக் குரியதாயிற்று. இச்செய்யுள்.

இங்கு ஒரு நூலுக்குரியனவாகக் கூறப்பட்ட பொழிப்பு, அகலம், நுட்பம், எச்சம் என்னும் நான்குரைகளு முண் டென்பதை, ''பொழிப்பேயகல நுட்பமெச்சமெனப், பழிப்பில் சூத்திரம் பன்னல் நான்கே'' என்பதா லுணர்க. பொழிப்புரையாவது- மூலப்பாடங்காட்டுதல், பதப் பொருள் சொல்லல், உதாரணங் காட்டடல் என்பவற்றை யுடையதாம்; இது,

''அவற்றுள்,
பாடங் கண்ணழிவு உதாரண மென்றிவை
நாடித் திரிபில வாகுதல் மொழிப்பே''

என்பதா லுணரப்படும். அகலவுரையாவது - உரைகாரன் உரை கூறப்புகுந்த நூலிலும் மற்ற நூல்களிலுமுள்ள ஒற்றுமை வேற்றுமை நயங்களைக் குறித்துத் தானே பல ஆட்சேபனைகளை எடுத்துக் காட்டடல்; இது.

''தன்னூல் மருங்கினும் பிறநூல் மருங்கினும்
துன்னிய கடாவின் புறந்தோன்றும் விகற்பம்
பன்னிய வகல மென்மனார் பலவுர்''

என்னும் சூத்திரத்தா லுணரப்படும். நுட்பவுரையாவது- பொருத்தமான காரணங்களால் தகுந்த சமாதானங்கூறி அநத் ஆட்சேபனைகளை நீக்குதல்; இது,

''ஏதுவி னாங்கவை துடைத்தல் நுட்பம்''

என்னும் சூத்திரத்தா லுணரப்படும். எச்சவுரையாவது - இவ்வாறு ஆட்சேபனை சமாதானங்களால் உறுதிப் படுத்தப் பட்ட பொருளை உரைத்தல்; இது,

''துடைத்துக் கொள்பொரு ளெச்ச மாகும்''

என்பதாலுணர்க. இனி, பதப்பொருளை அநுவயப்படுத்திக் கூறுவது பொழிப்பென்றும், பதப்பொருள் முதலியவை களை நியாயங்காட்டி விரித்துரைப்பது அகலவுரை யென்றும், மூலச் செய்யுளின் சாரமான பொருள்களை நுண்ணிதாக எடுத்துச் சுருங்கக் கூறுவது நுட்பவுரை யென்றும், நூலிற் கூறப்படாதவற்றைப் பிறநூலின் மேற்கோள் கொண்டு எடுத்துரைப்பது எச்சவுரை யென்றும் கொள்ளுதலுமுண்டு. இன்னும், உரை, கண்ணழித்தல், கருத்துரைத்தல், பொழிப்புப் திரட்டல், விசேடங்கூறல் என நான்கு வகைப்படு மென்றும், கண்ணழித்தல்- பதவுரை கூறல் என்றும், கருத்துரைத்தல் - செய்யுட் பொருளின் சாரமான கருத்தைச் சுருங்கக் கூறல் என்றும், பொழிப்புத் திரட்டல்- பதப்பொருளை அறுவயப்படுத்தி நடையாக உரைத்தல் என்றும், விசேடங்கூறல் - பலவகை மேற்கோள் களுடனும், ஆட்சேபனை சமாதானங்களுடனும், இலக் கணங்களுடனும் பொருளை விரித்து விளக்கிக் கூறுத லென்றும் உரைத்தலு மொருவகை.

முதல் அடியிலுள்ள, 'நூல்' என்பதனை, இரண்டா மடியிலுள்ள 'அகலம்' என்பதனோடு கூட்டி முடிக்க. 'அகலம்' என்பது தொழிலாகுபெயராய், அகன்றிருத்தலை யுடைய உரையை விளக்கிற்று. 'நுட்பம்' என்பது- பண்பாகு பெயராய் நுட்பமான உரையை உணர்த்தி நின்றது. 'எச்சம்' என்பது காரியவாகு பெயராய் எஞ்சியதை யுணர்த்தும் உரையை விளக்கி நின்றது. எச்சம்- மிஞ்சியிருப்பது, அல்லது மறைந்து நிற்பது. 'பொழிப்பு, அகலம், நுட்பம், எச்சம்' என்னும் பெயர்ச்செவ்வெண், 'இந்நான்கு' என்ற தொகை பெற்று வந்தது;

''பெயர்ச்செவ்வெண்....'' என்னும் (நன்- இடை- 9- ஆம்) சூத்திரவுரையும், ''உம்மை யெண்ணு மெனவெனெண் ணுந், தம் வயிற் றொகுதி கடப்பா டிலவே'' என்னும் (தொல் - சொல்-இடை-39-ஆம்) சூத்திரவுரையும் பார்க்க. (கூ)

320. *இற்பிறப் பில்லா ரெனைத்துநூல் கற்பினுஞ்*
சொற்பிறரைக் காக்குங் கருவியரோ- விற்பிறந்த
நல்லறி வாளர் நவின்றநூ றேற்றாதார்
புல்லறிவு தாமறிவ தில்.

(இ-ள்.) இல் பிறப்பு இல்லார்- உயர்குடிப் பிறப்பில்லாதவர், எனைத்து நூல் கற்பினும்- எவ்வளவு நூல்களைப்படித்தாலும், (பிறர் சபையிற் பேசும்போது சொற்சோர்வுபடின், அவ்வாறு தவறி வெளியான), பிறர் சொல்லை- பிறருடைய சொற்களை, காக்கும் (இகழாமல்) அடக்கிவைத்துக் காக்கின்ற, கருவியரோ- (அடக்கம் முதலிய) சாதனங்களை யுடையவராவாரோ?, (ஆகார்); இல்பிறந்த- உயர் குடியிற்பிறந்த, நல் அறிவாளர்- நல்ல அறிவையுடையவர்கள், நவின்ற நூல்-பெரியோர் கூறிய நூல்களை, தேற்றாதார்- படித்துணராதவர்களுடைய, புல் அறிவு- அற்ப அறிவை, (அதாவது அற்ப அறிவினால் அவர்கள் கூறிய வழூஉச் சொற்களை), தாம் அறிவதுஇல் - தாம் அறிந்து கொள்வதில்லை, (அதாவது, கவனிப்ப தில்லை); எ-று.

உயர்குடியிற் பிறவாதவர், சபையிற் பேசுவோர் தவறிக் குற்ற முடைய எதையேனும் சொல்லி விட்டால், அதனை வெளிப்படுத்தாமல் அடக்கி அவர்களுடைய மானத்தைக்காப்பாற்றமாட்டார்கள்; உடனே வெளியிட்டு அவர்களைஅவமானப்படுத்த விரைந்து நிற்பர்; உயர்குடியிற் பிறந்தவர், நூலுணர்ச்சியில்லார் சபையில் வந்து தவறுத லாகப் பேசிவிடினும் அக்குற்றத்தைக் கவனித்து வெளிப் படுத்த மாட்டார்கள்; அவர்கள் கூறியவற்றிலுள்ள குற்றங் களைப் பாராட்டாது குணத்தை மாத்திரம் எடுத்துப் பேசுவர் என்பது இதன் கருத்தாகும்.

இதனால், பிறர் குற்றங்கண் டதனையெடுத்துப் பலர்முன் கூறி அவரைத் தாழ்த்தும் கீழ்மக்கள் ஒருசபையிற்

சேரத்தகாதவரென்பதும், அவர் கூடியிருக்கும் சபை அறி வுடையார் சேரத்தகுந்ததன் றென்பதும், பிறர் குற்றம் பாராட்டி அவரை அவமானப்படுத்தாத உயர்குடிப் பிறந் தாரே ஒரு சபையிலிருக்கத் தக்கவரென்பதும், அவர் சேர்ந் திருக்கும் சபையே அறிஞர் சார்தற்குரிய சபையாகு மென்ப தும் விளக்கப்பட்டன.

நூல் - உவமையாகுபெயராய் வந்த காரணக்குறி; பஞ்சினால் நூற்கப்படும் நூல்போலச் சொற்களால் அமைக் கப்படுதலானும், மரத்தின் கோணலைத்தீர்த்து ஒழுங்காக் கும் எற்று நூல்போல் மனக்கோணலைத் தீர்க்கு மியல் பினையுடையதாதலானும் இவ்விருவகைக் காரணங் களைக் கொண்டு இப்பெயர்பெற்றது.

''பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா- எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு''

''உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா- மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு''

என்பன நன்னூற் பொதுப் பாயிரச் செய்யுட்கள்; இவற்றால் நூற்பெயர்க்காரணம் விளங்கும். 'கற்பினும்' என்பதிலுள்ள உம்மை- உயர்வு சிறப்புப்பொருளது. 'சொல் பிறரை' என்பது, 'பிறர் சொல்லை' என உருபு பிரித்துக்கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது. 'கருவியரோ' என்பதில், ஓ- எதிர் மறைப் பொருளது. (௧0)

6-வது

பகையியல்

பகையாவது- மனிதரைக் கெடுக்கும் குணங்களாகிய பகைகளாம்; இஃதவற்றைப்பற்றிக் கூறும் பிரிவாதலின், 'பகையியல்' எனப்பட்டது. மனிதரைக் கெடுக்கும் பகைக் குணங்களாவன: புல்லறிவாண்மை, பேதைமை, கீழ்மை, கயமை யென்பனவாம்; இவை, உட்பகைபோல மனிதர் நெஞ்சத்துணின்று கேடுசெய்யத்தக்கனவாதலின், மனிதர்க் குப் பகைகளெனப்பட்டன; இவை கெடுத்தலாவது பாவத்தை யுண்டாக்கித் தம்மையடைந்த மனிதரைத் துர்க் கதிகளுட் செலுத்துவதாம். புல்லறிவாண்மை முதலிய நான்கும் இவ்வியலில் நான்கு அதிகாரங்களாற் கூறப்படும். அவ்வதிகாரங்கள் இப்பெயர்களையே உடையனவாம். பகை- சாதியொருமை.

அதிகாரம் - 33

புல்லறிவாண்மை

புல்லறிவாண்மையாவது- அற்பமான அறிவை ஆளுந்தன்மையாம்; அதாவது, ஒருவன் சிற்றறிவுடையவனாகி, அவ்வாறாகியும் தன்னை அறிவிற் சிறந்தானாகவே மதித்துப் பெரியோர் கூறும் அறிவுரைகளை மனத்திற் கொள்ளாது, தாழ்ந்த காரியங்களைச் செய்வதாம்; புன்மை+ அறிவு = புல்லறிவு; புணர்ச்சியின் மையீறு கெட்டு லகர வொற்றிரட்டிற்று; அல்வழிப் புணர்ச்சி; பண்புத்தொகை; அறிவாண்மை - இரண்டாம் வேற்றுமையுருபு தொக்க தொகை; ஆண்மை- பண்புப்பெயர்; ஆள்- பகுதி, மை- பண்புப்பெயர் விகுதி. அவையின் இயல்பை உணராதவர் புல்லறிவிடையரேயாதலின், அஃதவையறிதல் என்னும் அதிகாரத்தின் பின் வைக்கப்பட்டது.

321. *அருளி னறமுரைக்கு மன்புடையார் வாய்ச்சொற்*
பொருளாகக் கொள்வர் புலவர் - பொருளல்லா
வேழை யதனை யிகழ்ந்துரைக்கும் பாற்கூழை
மூழை சுவையுணரா தாங்கு.

(இ-ள்.) அருளின்- (பிராணிகளிடத்து ஏற்பட்ட) கருணையினால், அறம் உரைக்கும்- தர்மங்களை எடுத்துக்

கூறுகின்ற, அன்பு உடையார்- அன்புடையவர்களின், வாய் சொல் - வாயிலிருந்து வரும் அறவுரையை, புலவர் - (சிறந்த) அறிவுள்ளவர், பொருள் ஆக கொள்வர்- (பெரும்) பயனாக ஏற்றுக்கொள்வார்கள், அதனை - அச்சொல்லை, பொருள் அல்லா - ஒரு பொருளாக (அறிஞரால்) மதிக்கப்படாத, ஏழை - சிற்றறிவுள்ளவன், பால்கூழ்- பாற்கஞ்சியினது, சுவையை- உருசியை, மூழை உணராது ஆங்கு- அகப்பை அறியாத வாறுபோல, (அச்சொல்லின் பயனை உணராதவனாய்), இகழ்ந்து உரைக்கும் - அவமதித்துப் பேசுவான்; எ-று.

உயிர்களிடத்து அருளும், அன்பும் உடைய பெரி யோர்களுடைய அறவுரையை அறிவுடையவர்கள் பயனுள்ள தாக மதிப்பர்; அறிவற்றவர்கள் மதியார் என்பது இதன் கருத்து.

அறிவுடையவர்களுக்கு, 'பெரியோர் அறவுரையைக் கேட்டு அதன்படி தர்மங்களைச் செய்துவந்தால் புண்ணிய முண்டாம்; அப்புண்ணியத்தால் இம்மையிற் புகழ் முதலியனவும், மறுமையில் உயர்ந்த இன்பங்களுமுண்டா மென்பது தெரியும்; அதனால், அவர்கள் பெரியோர் சொல்லை மதிப்பார்கள்; அறிவில்லாதவர்களுக்கு இன்ன காரியத்தால் இன்பமுண்டாகும், இன்னதால் துன்பமுண் டாகும் என்ற பகுத்தறிவே யிராது; அதனால், அவர்கள் நன்மை தீமை யுணராத மிருகங்களை நிகர்த்திருப்பர்; ஆதலின், பெரியோர் சொல்லை அவமதிப்பார்கள். அகப்பை யானது, பாற்கஞ்சியிற் றுழாவிக்கிடந்தாலும் அக்கஞ்சியின் சுவையை உணராது; அதுபோல அறிவில்லாதவர் எப் பொழுதும் பெரியோர் அறவுரையைக் கேட்டுக்கொண்டே யிருந்தாலும் அதன் நன்மையை உணரமாட்டார்கள்; ஆதலின், இவர்களுக்கந்த அகப்பை உவமையாகக் கூறப் பட்டது; இங்ஙனங் கூறியது- உவமையணி. பாற்கஞ்சியை விரும்பிச் சாப்பிடுவோர்க்கே அதன் சுவை தெரியும்; அது

போல் பெரியோர் சொல்லில் விருப்பமுள்ள அறிஞர்க்கே அதன்பயன் தெரியும். இச்செய்யுளிற் கூறிய கருத்தினை,

''கல்லா வொருவனைக் காரணங் காட்டினும்
இல்லைமற் றொன்று மறனுணர்தல்- நல்லாய்
நறுநெய் நிறைபுழுக்க லுய்ப்பினும் மூழை
பெறுமோ சுவையுணரு மாறு''

என்னும் வெண்பாவும், ''அகப்பை யறியுமோ அடிசிலின் சுவை'' என்னும் பழமொழியும் விளக்குவனவாம். அருளை யும், அன்பையும் சிலர் ஒன்றெனக் கொள்வர்; அவை ஒன்றல்ல; தன்மையால் வெவ்வேறாம்; அருள் என்பது- எவ்வித காரணமும், சம்பந்தமுமின்றி இயல்பாகவே சகல உயிர்களிடத்தும் செல்லும் மன இரக்கமாம்; அன்பாவது- உறவு, முறை முதலிய சம்பந்தத்தாற் றம்மை யடுத்தாற் மேற்செல்லும் விருப்பமாம். இவ்வேறுபாடு,

''அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு''

என்னும் (திருக்குறள் 757-ஆம்) செய்யுளானும், அதனுரை யானு முணரப்படும். ஏழை- செல்வமில்லாதவன்; அறிவும் செல்வமாகலின், அஃதில்லாதவனும் இங்கு, 'ஏழை' என்றிகழப்பட்டான். அறிவுடையானே செல்வமுடையான், அஃதில்லாதவனே வறிஞன் என்பதை,

''அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை
இன்மையா வையா துலகு''

''அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்''

என்னும் (திருக்குறள் 841,430-ஆம்) செய்யுட்களும்,

"நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்.......''

என்னும் இந்நூல் 251-ஆம் செய்யுளடிகளும் விளக்குவனவாம். 'கூழைச்சுவை உணராது' என்ற சொற்றொடரில் கூழோடு சேர்ந்து நின்ற இரண்டனுருபாகிய ஐ, சுவையென்பதனோடு கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது; இனி, 'கூழை' என்பதை உருபு மயக்கமெனக் கொண்டு, 'கூழினது' எனப் பொருள் விரிப்பினுமாம். கூழ்- கஞ்சி. ஆங்கு - உவமவுருபு. (க)

322. *அவ்விய மில்லா ரறத்தா றுரைக்குங்காற்*
செவ்விய ரல்லார் செவிகொடுத்துங் கேட்கலார்
கவ்வித்தோ றின்னுங் குணுங்கர்நாய் பாற்சோற்றின்
செவ்வி கொளறேற்றா தாங்கு.

(இ-ள்.) தோல்கவ்வி தின்னும் - (சத்தில்லாததும், அசுத்தமுள்ளதுமான) தோலைப் (பற்களால்) கடித்துத் தின்கின்ற, குணுங்கர் நாய்- புலையர்களுடைய நாய்கள், பரல்சோற்றின்- பாலோடு சேர்த்துச் சமைத்த சோற்றினது, செவ்வி - சுவையை, கொளல்- கொள்ளுதலை, தேற்றாது ஆங்கு - உணராத தன்மைப்போல, அவ்வியம் இல்லார்- பொறாமை யில்லாதவர்கள், அறத்தாறு உரைக்கும் கால்- தர்ம நெறிகளை எடுத்துரைக்கும் காலத்து, (அவ்வற நெறி களை), செவ்வியர் அல்லார்- அறிவு மாட்சியுடையரல்லாதவர், (அதாவது, சிறந்த அறிவில்லாதவர்), செவி கொடுத்தும் கேட்கலார்- காது சாய்த்துக் கொடுத்துக் கேட்க மாட்டார்கள்; எ-று.

சத்தில்லாததும், துர்நாற்ற முடையதுமான தோலையே கடித்துத் தின்னும் புலைச்சேரி நாய் பாற் சோற்றின் சுவையை உணரமாட்டாது; அதைப்போலவே

பெரியோர் சொல்லும் நீதிகளை அறிவற்றவர் கேட்க மாட்டார் என்பது இதன் கருத்து.

புலையர் வாழும் சேரியில், அவர்கள் மாடுகள் முதலிய பிராணிகளை வதைத்துப் புலாலுண்பவர்களாதலின், துர்நாற்றமுள்ள மாமிசம், எலும்பு, தோல் முதலியவைகளே மிகுந்திருக்கும்; அவைகளே அங்குள்ள நாய்களுக்குணவாகக் கிடைக்கும்; மாமிச முண்ணாதவர்களின் இல்லங்களில் மட்டுமே பாற் சோறு சமைக்கப்படும்; அச்சோறு அவர் தெருக்களில் உள்ள நாய்களுக்குக் கிடைக்கும். ஆதலின், தோலையே கடித்துத் தின்னும் நாய்க்குப் பாற்சோற்றின் சுவை தெரியாதென்றார் முனிவர். பாற் சோறு தின்னும் நாய்களினின்றும் தோல் தின்னும் நாய்களை வேறு பிரித்துக் காட்டுதற்கே, 'குணுங்கர் நாய்' என்றார். பொறாமையுடையவர், தர்மப் பிரசங்கம் செய்வது, உண்மையான தர்ம போதகரைப் பார்த்துப் பொறாமை கொண்டு அவர்களைப் போல தாங்களும் பெருமையடைய வேண்டுமென்ற எண்ணத்தால் போலித்தனமாகச் செய்வதாம்; அத்தகையினர் சொல்லும் அறவுரை பயனற்றதாகும்; அக்குணமின்றி உலக நலங்கருதி உண்மையோடு அறங் கூறுவதே சிறந்ததாம்; இவ்வகைச் சிறப்பினை விளக்கு தற்கே, 'அவ்விய மில்லார் அறத்தாறுரைக்குங்கால்' என்றார் ஆசிரியர். இச்செய்யுளும் உவமையணியுடையதே.

இனி, 'அவ்வியம்' என்பதை, மற்றைத் தீக்குணங்கட்கும் உபலக்ஷணமாகக் கொண்டு, 'அவ்விய மில்லார்' என்பதற்கு, 'பொறாமை முதலிய தீக்குணங்களில்லாதவர்' எனப் பொருளுரைப்பினுமாம். செவ்வி- 'அழகு' என்று பொருள்படும்; இஃதிரண்டாமடியில் அறிவின் மாட்சியையும், நான்காமடியில் சுவை மாட்சியையும் விளக்கி நின்றது. அவ்வியம், கவ்வி என்பன- ஔவியம், கௌவி என்பவற்றின் போலிகளாம். (உ)

323. *இமைக்கு மளவிற்றம் மின்னுயிர்போ மார்க்க*
மெனைத்தானுந் தாங்கண் டிருந்துந் - தினைத்துணையு
நன்றி புரிகல்லா நாணின் மடமாக்கள்
பொன்றிலென் பொன்றாக்கா லென்.

(இ-ள்.) இமைக்கும் அளவில்- கண்ணிமை மூடித் திறக்கும் நேரத்தில் (அதாவது, ஒரு மாத்திரைப் பொழுதளவில்), தம்- தங்களுடைய, இன் உயிர் - இனிமையான உயிரானது, போம்மார்க்கம்- நீங்கிப்போகின்ற வழியை, எனைத்தானும்- எத்தன்மையினாலும் (அதாவது, எல்லா விதங்களாலும்), தாம்- தாங்கள், கண்டிருந்தும்- உணர்ந்திருந்தும், தினை துணையும் - தினையளவாயினும், நன்றி புரிகல்லா - நன்மை செய்யாத, நாண் இல்- (தங்கள் அறிவின்மையைக் குறித்து) வெட்கமில்லாத, மடம்- மூடத் தன்மையுடைய, மாக்கள்- மனிதர்கள், பொன்றில் என்- இறந்தால் உண்டாகும் கேடென்ன?, பொன்றாக்கால் என்- இறவாதிருந்தால் உண்டாகும் நன்மையென்ன?, எ-று.

ஒருமாத்திரைப் பொழுதில் உடலைவிட்டு உயிர் நீங்கி விடுமென்பதை எல்லாப் பிரமாணங்களாலும் அறிந்திருந்தும், உயிரோடு கூடியிருக்கும்போதே சிறிது நன்மை யாவது புரியாதிருக்கின்ற மூட மனிதர்கள் இறந்துபோவதால் உண்டாகிற நஷ்டமுமில்லை, உயிரோடிருப்பதால் ஏற்படு கின்ற இலாபமுமில்லை யென்பது இதன் கருத்து.

இத்தகையினர் உலகத்திற்கு எவ்வகைப் பயனு மில்லாதவர்களாதலின், உயிரோடிருப்பதும், இல்லாததும் ஒன்றே.

உயிரானது, உடம்போடு எவ்வளவு கூட்டுறவா யிருந்தாலும் போகுங்காலம் வந்தவுடன், கண்மூடித் திறப்பதற்குள் ஒருவரிடத்தும் சொல்லாமல் விரைந்து

போய்விடும்; ஆதலின், அறிவுடையோர் இவ்வுலக வாழ்வு அநித்திய மென்பதையுணர்ந்து உயிரோடிருக்கும் போதே அறங்களைச் செய்து புண்ணியத்தைத் தேடிக்கொள்வர்; அப்புண்ணியப்பயனால் இன்பத்தை அடைவர்; அறிவில்லாதவர், இவ்வுண்மையை அறிந்திருந்தாலும் நன்மை செய்ய நாடமாட்டார்கள்; தாங்கள் எப்பொழுது மிருத்தல் கூடுமென்று நினைத்துச் சுய நலத்தை விரும்பி எப்பொருளையும் தமக்கெனவே சேகரித்து வைத்துப் பயன் துய்க்காதுயிரிழப்பர்; இவர்கள் பகுத்தறிவில்லாத மிருகங்களோடொப்பவர்; ஆதலின், இவர்களை, 'மடமாக்கள்' என்றார் முனிவர். இழிவான காரியத்தின் பொருட்டு உள்ளமொடுங்குதலே நாணாம்; இவர்கள், இமையளவில் உயிர் போய்விடு மென்பதை யுணர்ந்திருந்தும் நன்மை செய்யாதிருப்பது இழிவான காரியமாம்; அவ்விழிவு குறித்து இவர் உள்ள மொடுங்காதிருப்பதால், இவர்களை ''நாணில் மடமாக்கள்'' என்றார்.

நேரில் பார்ப்பது, அனுமானத்தாலறிவது, சாஸ்திரத்தாலுணர்வது என்னும் மூவகைப் பிரமாணங்களாலும் என்பதற்கு, 'எனைத் தானும்' என்றார். இமைக்கும் அளவு- ஒரு மாத்திரைப்பொழுது;

''இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை''

என்பது (நன்னூல், எழுத். 45.) சூத்திரம். நன்றி- பண்புப் பெயர்; இது, பண்பாகு பெயராய் நல்ல காரியத்தை உணர்த்தி நின்றது. நாண்- முதனிலைத் தொழிற்பெயர். 'இன்னுயிர் போமாற்றை'' என்றும் பாடபேத முண்டு. (ந)

324. உளநாள் சிலவா லுயிர்க்கேம மின்றாற்
பலர்மன்னுந் தூற்றும் பழியாற்- பலருள்ளுங்
கண்டாரரோ டெல்லா நகாஅ தெவனொருவன்
றண்டித் தனிப்பகை கோள்.

(இ-ள்.) உளநாள் - (மனிதர் இவ்வுலகத்தில்) உயிரோடிருக்கின்ற நாட்கள், சில- சிலவேயாம், (அவ்வாறு சில நாட்களிருந்து நீங்கி விடும்) உயிர்க்கு- மனிதருயிர்க்கு, ஏமம்- (அவ்வாறு போய் விடாமல் தடுக்கின்ற) காவல், இன்று - இல்லை, (இப்படி அற்ப ஆயுளோடு கூடி மனிதர் வாழும் உயிர் வாழ்க்கையிலும்), பலர் தூற்றும் - பலரும் வெளியிட்டுக் கூறும், பழி- பழிச்சொற்கள், மன்னும் மிகுதி யாகப் பொருந்தும், (மனிதர் வாழ்க்கையின் தன்மை இவ் வாறிருந்தும்), ஒருவன்- ஒரு மனிதன், (பலர்க்கும் இனிமை யுடையவனாக நடந்து நற்பெயரெடுக்காமல்), பலருள்ளும்- (உலகத்திலுள்ள) பல மனிதர்களுள்ளும், கண்டாரோடு எல்லாம்- பார்த்தவர்களெல்லாருடனும், நகாது-(உறவோடு கூடி வாழ்ந்து இன்புற்று) மகிழாமல், தண்டி- (மனிதரை விட்டு) விலகி, தனி- தனித்திருந்து, பகை கோள் - (பலருட னும்) விரோதங்கொள்ளுதல், எவன்- யாது பயன்குறித்து?; எ-று.

மனிதர் உயிரோடு கூடிவாழ்வது சில தினங்களே; சொற்ப நாளிருந்து நீங்கிச் செல்கின்ற உயிரைப் போக்க வொட்டாமற் றடுக்கும் காவலு மில்லை; இத்தகைய சில நாள் வாழ்க்கையிலும் உலக நிந்தனை மிகுதியாக ஏற்படும்; மனிதர் வாழ்க்கையின் தன்மை யிப்படி யிருந்தும் ஒருவன் பலருடனும் சிநேகமாய்வாழ்ந்து மகிழாமல் பகைகொண்டு தனித்து வாழ்வதாற் பயனொன்றுமில்லை என்பது இதன் கருத்து.

உலகத்தில் வாழ்வோரில் எவரும் நிந்தனைக்குட் படாதவரில்லை; உலகத்தார் நல்லவர்களையும் சில காரணங்குறித்து நிந்திப்பர்; கெட்டவர்களையும் நிந்திப்பர்; கெட்டவர்கள், நல்லோர் செய்கையில் வெறுப்புற்று அவரை நிந்திப்பர்; நல்லவர் கெட்டோர் செய்கையை வெறுத்து அவரை நிந்திப்பர்; ஆகவே எல்லோரும் பழிக்குட்பட்டவரே யாவர்; ஆதலால், ''பலர் மன்னும் தூற்றும் பழி'' என்றார்

முனிவர். மனிதர் ஆயுள் குறைந்த அளவுள்ளதாயிருத்தலின், அதற்குள் பலருடனும் உறவு பாராட்டி மகிழ்தலே அறிவுடைமையாம்; அவ்வாறின்றிப் பகை பாராட்டித் தனித்து வாழ்வது புல்லறிவாண்மையாம்; அது பயனற்ற தென்பது இதிற் குறிக்கப் பட்டது.

இதில், பலருடனும் பகை பாராட்டாதிருத்தலாகிய காரியத்துக்கு, அற்ப ஆயுள் முதலியன தக்க காரணங்களாக ஏற்பட்டிருந்தும் அக்காரியம் மனிதரிடத்துத் தோன்றாத தன்மை கூறப்பட்டது; இது, காரணவாராய்ச்சியணி யெனப்படும். 'உள்ள' என்பது, செய்யுள் விகாரத்தால், 'உள' என்றாயிற்று; இடைக்குறை விகாரம். ஆல் மூன்றும்- அசைகள். கண்டார் - வினையாலணையும் பெயர்; ஒருவனைக் கண்டவர்களையும், அவனாற் காணப்பட்டவர்களையும் குறிக்கும். நகாஅது- செய்யுளோசை நிறைக்கவந்த அளபெடை. எவன்- அஃறிணைப் பொதுக்குறிப்பு முற்று; இதில், விகுதி- அன்; இவ்விகுதி இவ்விடத்துயர்திணை யாண்பாலைக் குறிப்பதன்று. தனி- என்னும் பகுதியே வினையெச்சத் தன்மைப்பெற்றுத் 'தனித்து' என்னும் பொருள் பயந்து நின்றது; வரிப்புனை பந்து' என்பதில், 'வரி' என்பது வினையெச்சத் தன்மைப்பட்டு, 'வரிந்து' எனப் பொருள் பட்டு நிற்றல் போல. (ச)

325. *எய்தி யிருந்த வவைமுன்னர்ச் சென்றெள்ளி*
வைதா னொருவ னொருவனை- வைய
வயப்பட்டான் வாளா விருப்பானேல் வைதான்
வியத்தக்கான் வாழ்மு மெனின்.

(இ-ள். அவை - (பலர்கூடிய) சபையிலே, எய்தி இருந்த - சேர்ந்திருந்த, ஒருவனை - ஒருமனிதனை, ஒருவன்- மற்றொருவன், முன்னர் சென்று- அவனெதிரிற் போய், எள்ளி - இகழ்ந்து, வைதான்- திட்டினான். (என்று நாம் வைத்துக் கொள்வோம்), வைய- (அவ்வாறு) திட்ட,

வயப்பட்டான் - திட்டப்பட்டவன், (அவனை மறுத்துத் திட்டாமல் அத்திட்டுதலைப் பொறுத்துக்கொண்டு), வாளாதிருப்பானேல்- சும்மா இருப்பானாயின், (அவனைத் திட்டினவன் கெட்டே போவான். அவ்வாறு கெடாமல்), வைதான் - திட்டிய அவன், வாழும் எனின்- வாழ்வாயினாயின், வியத்தக்கான்- ஆச்சரியப் படத்தக்கவனாவான்; எ-று.

பலர் கூடிய சபையிலே புல்லறிவுடைய ஒருவன் மற்றொருவனைத் திட்டினால், அவன் அதனைப் பொறுத்துக் கொண்டு மௌனமாயிருந்து விட்டால் திட்டினவன் நிச்சயமாகக் கெட்டுப்போவான்; அவ்வாறு கெடாமலிருப்பவனாயின் ஆச்சரியப்படத்தக்கவனாவான் என்பது இதன் கருத்து.

''வைதான் வியத்தக்கான் வாழுமெனின்'' என்றதனாலேயே அவன் நிச்சயமாகக் கெடுவான் என்பது குறிக்கப் பட்டது. இதனால், சபையிலிருந்த ஒருவனை வைதவன் புல்லறிவாளனென்பதும், அதைப் பொறுத்துக் கொண்டிருந்த வன் பேரறிவாள னென்பதும், புல்லறிவாளனுக்குத் தானே கேடு நேரு மென்பதும் விளக்கிக் காட்டப்பட்டன.

'வையப் பட்டான்' என்பது, 'வயப் பட்டான்' என வந்தது; மொழிமுதற் போலி. வியத்தக்கான் - நான்காம் வேற்றுமைத் தொகை; விய- முதனிலைத் தொழிற்பெயர். வாளா- தொழிலின் மையைக் காட்டுமோ ரிடைச்சொல். (ரு)

326. ***மூப்புமேல் வாராமை முன்னே யறவினையை***
யூக்கி யதன் கண்முயலாதா - னூக்கிப்
புறத்திரு போகென்னு மின்னாச்சொ லில்லுட்
டொழுத்தையாற் கூறப் படும்.

(இ-ள்.) மூப்பு- கிழப்பருவம், மேல்- (குமாரப் பருவத்துக்கு) மேலே, வாராமை முன்னே- வராதிருத்தற்கு

முந்தியே, அறம் வினையை - தருமச் செய்கையை, ஊக்கி- (மனத்தில்) எழுப்பி, (அதாவது, உற்சாகத்தோடு நினைத்து), அதன்கண்- அக்காரியத்தில், முயலாதான்- முயற்சி செய்யாத வன்- (விரைவில் கிழப்பருவம் தனக்கு வர, அக்காலத்தில்), இல்லுள் - தன் வீட்டிலேயே, நூக்கி- (மனிதத் தன்மை யினின்றும்) தள்ளப்பட்டு, புறத்து இரு- வெளியில் போய் இரு, போகு - போ, என்னும்- என்று அவமதித்துச் சொல்லு கிற, இன்னாசொல்- கெட்ட சொற்களை, தொழுத்தையால்- அடிமைப் பெண்ணாலும், கூறப்படும் - சொல்லப்படுவான், (அமாவது, இத்தகைய கடுஞ்சொற்களை ஏற்றுக் கொள்பவ னாவான்); எ-று.

விருத்தாப்பியம் வருவதற்கு முன்னே தர்ம காரியங் களைச் செய்து புண்ணியத்தைத் தேடிக் கொள்ளாதவன், விரைவில் கிழப்பருவத்தை யடைந்து தன் வேலைக்காரி யாலும் இகழ்ந்து பேசப்படுவான் என்பது இதன் கருத்து.

ஒரு வீட்டுக்குத் தலைவனாயிருப்பவன், குமாரப் பருவத்தோடிருக்குமளவும், உடல் வன்மை, மனோதிடம் முதலியவற்றோடு கூடி யிருப்பானாதலின்சகல காரியங் களையும் ஊக்கமாகச் செய்து, பலரையும் ஏவல்கொண்டு அடக்கியாளுவான்; அதனால் எல்லோரும் அவனுக்கஞ்சி நடப்பார்கள்; அவன் கிழப் பருவமடைந்து விட்டால் அவனால் ஒரு சிறு காரியத்தையும் செய்தல் இயலாது; அவனிடத்து முன்னிருந்த உடற்கட்டு, மனோதிடம் யாவும் தொலைந்து போம்; அந்நிலையில் அவனுடைய தலைமைப் பதவியை அவன் பிள்ளையோ, வேறு யாரோ ஏற்றுக் கொள்வர்; அக்காலத்தில் அவன் ஒரு மனிதனாகவே அங் குள்ளவர்களால் மதிக்கப்படான்; வேலைக்காரி முதலிய வர்களாலும் இகழப்படுவான். ஆதலின், இப்பேர்ப்பட்ட நிலைமை வருவதற்கு முன், நல்ல நிலைமையிலிருக் கும்போதே மனிதன் மறுமைக்குத் துணையாகிய புண்ணியத் தைத் தேடிக்கொள்ளவேண்டுமென்பதும், அவ்வாறு அதடா

விடின், இவ்வுலகத்தில் அவ்வாறு இழி வடைவதோடு மறுமை யின்பத்தையும் இழப்பானென்பதும் இச்செய்யுளிற் கூறப்பட்டன. 'மூப்புவராமுன் அறவினை செய்யாதவன் தொழுத்தையாலும் இகழப்படுவான்' எனவே, இவன் அங்ஙனமிருப்பது புல்லறி வாண்மை யென்பது தானே அமைந்தது.

வாராமை - எதிர்மறைக் தொழிற்பெயர். ஊக்குதல்- எழுப்புதல், உற்சாகங்கொள்ளல். போகு - ஏவல் முற்று. இன்னா - இனிமையில்லாத; எதிர்மறையில் வந்த பெயரெச்சம். 'இல்லுள்' என்பதில், உள்- ஏழாம் வேற்றுமைத் சொல்லுருபு. 'தொழுத்தையால்' என்பதில், இழிவு சிறப்பும்மை தொக்கது. தொழுத்தை- தொழும்பன் என்பதன் பெண்பாற் பெயர். (கூ)

327. *தாமேயு மின்புறார் தக்கார்க்கு நன்றாற்றா*
ரேமஞ்சார் நன்னெறியுஞ் சேர்கலார்- தாமயங்கி
யாக்கத்துட் டூங்கி யவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறிவி னார்.

(இ-ள்.) புல் அறிவினார் - அற்ப அறிவையுடையவர், (தம்மிடம் செல்வம் சேரின் அதைக்கொண்டு), தாமேயும் இன்பு உறார் - தாமாவது இன்பத்தை யடையார், தக்கார்க்கும்- உதவி புரியத்தக்க அறிஞர்க்கும், நன்று ஆற்றார்- (தானமாகிய) நன்மையைச் செய்யமாட்டார், ஏமம்சார்- (தம் உயிர்க்குப்) பாதுகாப்பாகப் பொருந்திய, நல் நெறியும் - நல்ல தர்ம மார்க்கத்தையும், சேர்கலார்- அடைய மாட்டார் கள், (யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை முதலிய வற்றையுணராமல் இவை எப்பொழுதும் நிலைத்திருக்கு மென்று), தாம் மயங்கி - தாங்கள் உலக வாழ்க்கையில் மயக்கங்கொண்டு, ஆக்கத்துள்- செல்வத்திலே, தூங்கி- (மூழ்கி) ஒன்றுந் தோன்றாதிருந்து, வாழ்நாளை- (தம்)

ஆயுளை, அவத்தமே போக்குவர்- வீணாகவே கழிப்பார்கள்; எ-று.

புல்லறிவுடையவர், தாம்பெற்ற செல்வத்தைக் கொண்டு தாமும் இன்பத்தை யடையமாட்டார்; தம் உயிருக் குப் பாதுகாப்பாகிய அறநெறியையும் சேரமாட்டார்கள்; செல்வமும் யாக்கையும் நிலையற்றன வென்பதையுண ராமல் அவை யெப்பொழுதுமிருக்குமென்று நினைத்துச் செல்வத்திலேயே மூழ்கி மயக்கங்கொண்டு ஒன்றுந் தோன்றாதிருந்து தங்கள் வாழ்நாளை வீணே கழிப்பர் என்பது இதன் கருத்து. இதனால், இத்தகையினர் அறிவு புல்லறி வாண்மை யென்பது விளக்கப்பட்டது.

பொருளைச் சேகரித்தவர், தாமும் அனுபவித்துத் தக்கார்க்குதவித் தம் உயிர்க்குப் பாதுகாப்பாகிய அறத்தைத் தேடிக்கொள்ளுதலே அவர் தளர்ந்த காலத்தில் அதாவது இறந்து இவ்வுலகை விட்டு மறு உலகம் செல்லுங்காலத்தில் உதவும் சேமநிதியாகும்; அவ்வாறின்றி ஆயுளை வீணாகக் கழித்தால், அவர் தேடிய உலகப்பொருள் மறுமைக்குதவும் வைப்பு நிதியாக மாட்டாது; இதனை,

''வைப்பதனை வைப்பென் றுணரற்க தாமதனைத்
துய்த்து வழங்கி யிருபாலும்- அத்தகத்
தக்குழி நோக்கி யறஞ்செய்யி னஃதன்றோ
எய்ப்பினில் வைப்பென் பது.''

என்னும் (பழமொழி.358-ஆம்) செய்யுளும்,

''செல்வத்தைப் பெற்றார் சினங்கடிந்து
செவ்வியராய்ப்
பல்கிளையும் வாடாமற் பாத்துண்டு - நல்ல
தான மறவாத தன்மையரே லஃதென்பார்
வானகத்து வைப்பதோர் வைப்பு''

என்னும் அறநெறிச் சாரச் செய்யுளும் உணர்த்துவனவாம். 'தாமேயும்' என்பதிலுள்ள, உம்மை- எதிரது தழுவியது. 'தக்கார்க்கும்' என்பதிலுள்ள, உம்மை- இறந்தது தழுவிய தும், எதிரது தழுவியதுமாம். 'நன்னெறியும்' என்பதிலுள்ள, உம்மை- இறந்தது தழுவியது. தூங்குதல்- செயலற்று மயங்கி யிருத்தல். செல்வச் செருக்குடையவர்களிற் பெரும்பாலார் தின்று கொழுத்துச் சோம்பேறிகளாய் ஒரு தொழிலும் செய் யாமல் எப்பொழுதும் உறக்கத்திலேயே கிடந்தொழிவதை அனுபவத்திற் காணலாம். வாழ்- நாள்- வினைத்தொகை; முக்காலத்துக்கு முரியதாம். (எ)

328. சிறுகாலை யேதமக்குச் செல்வுழி வல்சி
யிறுகிறுகத் தோட் கோப்புக் கொள்ளா - ரிறுகிறுகிப்
பின்னறிவா மென்றிருக்கும் பேதையார் கைகாட்டும்
பொன்னும் புளிவிளங்கா யாம்.

(இ-ள்) சிறு காலையே - இளம்பருவத்திலேயே, செல்உழி (தாம் இறந்த பின்பு) செல்லும் இடமாகிய மறுமைக்கு, தமக்கு- தங்களுக்கு, (உரிய), வல்சி- (தரும மாகிய) சோற்றை, இறுக இறுக- மிகவும் அழுத்தமாக, (மூட்டையாகக்கட்டி), தோள் கோப்பு கொள்ளார்- தோளிற் கோத்துக்கொள்ளும் சுமையாக அமைத்துக் கொள்ளாதவர் களாய், இறுகி இறுகி - (பொருளைச் செலவு செய்யாமல்) மிகவும் கையழுத்தமாகி, பின் அறிவாம்- (தர்மஞ் செய் வதைப்) பின்பு பார்த்துக்கொள்ளலாம், என்று இருக்கும்- என்றெண்ணிக் காலத்தை வீணே கழித்துக் கொண்டிருக் கின்ற, பேதையார்- புல்லறிவினார், (மரணத்தறுவாயில் நாவுள்ளே யிழுத்துக்கொண்டு பேச முடியாமலிருக்கும் போது தர்மஞ்செய்ய நினைத்து, தாம் சேகரித்து உருட்டித் திரட்டி வைத்திருந்த பொன்னுருண்டையைக் கொண்டு வரும்படி மனைவி மக்களிடம் கையினால் அதன் வடி வத்தைக் காட்டுவார்கள்; அவ்வாறு), கைகாட்டும்- அவர் களுடைய கை காட்டுகின்ற, பொன்னும்- பொன்னுருண்டை

யும், (அவர் கைக்குக் கிட்டாது), புளி விளங்காய் ஆம்- புளிப் புள்ள விளாங்காயாகிவிடும், (அதாவது, மனைவிமக்கள், அவர் பொன்னைச் செலவிடுதற்கிணங்காமல், அவர் காட்டிய குறியை விளாங்காய் கேட்கும் குறியாக மாற்றிக் கூறி அப்பொன்னுருண்டையை விளங்காயாகச் செய்து விடுவார் கள்); எ-று.

இளமைப் பருவத்திலேயே, இவ்வுலகத்தை விட்டு மறுமைக்குச் செல்லும்போது அங்கு தமக்கின் பந்தருவதற் குரிய தருமமாகிய கட்டுச்சோற்று மூட்டையைத் தோளில் கோத்துக்கொள்ளாதவர்களாய், (அதாவது, அறஞ்செய்து புண்ணியத்தைத் தேடிக்கொள்ளாதவர்களாய்ப்) பொருளை நன்மார்க்கத்திற் செலவிடாமல் இறுகப் பிடித்து வைத்துக் கொண்டு, தர்மஞ் செய்வதைப் பின்னே பார்த்துக்கொள்ள லாம் என்றெண்ணிக் காலத்தை வீணாகக் கழிக்கின்ற புல்லறிவாளர், மரணங் குறுகியபோது, தருமஞ்செய்ய நினைத்து, நாவுள்ளே யிழுத்துக் கொண்டிருப்பதால் பேச முடியாமல், தாம் சேகரித்து உருட்டித்திரட்டி இரகசியமாக வைத்திருந்த பொன்னுருண்டையைக் கொண்டு வரும்படி மனைவி மக்களிடத்தில், கையால் அதன் வடிவத்தைக் காட்டுவார்கள்; அவர்கள் அதைக் கொடுப்பதற் கிசையாமல், அந்தக் குறிப்பை விளாங்காய் கொண்டுவரச் சொல்லும் குறிப்பாக மாற்றிப் பக்கத்திலிருக்கும் பிறமனிதர்களுக்குத் தெரியும்படி, ''ஐயோ! இவர் தொண்டை அடைத்துக் கொண்டிருக்கும் இச்சமையத்தில் விளாங்காயைக் கேட்கின் றாரே! அதைத் தின்றால் தொண்டை அடைப்பு அதிகரித்து விடுமே'' என்று கூறிப் பாசாங்கு செய்வார்கள்; அதனால், அவர்கள் தர்மஞ் செய்தற்குக் கொண்டுவரச் சொன்ன பொன்னருண்டை விளாங்காயாகிவிடும்.

இங்ஙனம் கூறியதனால், தருமஞ் செய்யவேண்டு வோர் இளம் பருவத்திலேயே அதைச் செய்த புண்ணி யத்தைத் தேடிக்கொள்ள வேண்டுமென்பதும், அவ்வாறு

தேடிக்கொள்ள வேண்டு மென்பதும், அவ்வாறு தேடிக் கொண்டால் மாத்திரமே அப் புண்ணியத்தால் மறுமையில் இன்பத்தை அடையலாமென்பதும், அவ்வாறு செய்யாமல் பின்னே செய்துகொள்ளலாமென்றிருந்தால், மரணத்தறு வாயில் தாம் தேடிவைத்த பொருளே தர்மஞ்செய்தற்குக் கிட்டாமற் போய்விடு மென்பதும், அவ்வாறு கிட்டாமற் போகவே அறமும் அதனாலாம் புண்ணியமும் இல்லாமற் போய்விடுமென்பதும், அங்ஙனம் புணியங் கைகூடாமற் போகவே மறுமையில் அவர்க்குத் தீக்கதித் துன்பமே சம்ப விக்கு மென்பதும், இங்ஙனம் அவர் தர்மத்தைக் கைவிடல் புல்லறிவாண்மை யென்பது பெறப்படும்.

மறுமைக்குரிய தர்மமாகிய கட்டுச்சோற்றை மனிதர் இங்கிருக்கும்போது தேடிக்கொள்ள வேண்டு மென்பதை,

''வேற்றுவரில்லா நுமரூர்க்கே செல்லினும்
வெகுண்டீர்போல
வாற்றுணாக் கொள்ளா தடிபுறத்துவைப்பீரே
யல்லீர்போலும்
கூற்றங் கொண் டோடத் தமியேகொடுநெறிக்கட்
செல்லும் போழ்தின்
ஆற்றுணாக்கொள்ளீ ரழகலா தறிவொன்று
மிலிரேபோலும்''

என்னும் (சீவகசிந்தாமணி- கேமசரியாரிலம்பகம்- 439-ஆம்) செய்யுளும் உணர்த்தும். இளமையில் அறத்திற்குபயோகிக் காத பொருள் மரணத்தறுவாயில் உதவாதென்பதை,

''மாய்வதன் முன்னே வகைப்பட்ட நல்வினையை
ஆய்வின்றிச் செய்யாதார் பின்னை வழிநினைந்து
நோய்காண் பொழுதி னறஞ்செய்வார்க் காணாமை
நாய்காணிற் கற்காணா வாறு''

என்னும் (பழமொழி-361-ஆம்) செய்யுளும்,

''கையாற் பொதித்துணையே காட்டக்
கயற்கண்ணா ளதனைக் காட்டாள்
ஐயா விளாம்பழமே யென்கின்றீ
ராங்கதற்குப் பருவ மன்றென்
செய்கோ வெனச்சிறந்தாள் போற்சிறவாக்
கட்டுரையாற் குறித்த வெல்லாம்
பொய்யே பொருளுரையா முன்னே
கொடுத்துண்டல் புரிமின் கண்டீர்''

என்னும் (சீவகசிந்தாமணி- கேமசாரியாரிலம்பகம்- 142-ஆம்) செய்யுளும் விளக்குவனவாம். 'இறுக இறுக'என்பது, தொகுத்தலாய், 'இறுகிறுக' என்று வந்தது; அங்ஙனமே, 'இறுகி இறுகி' என்பதும், 'இறுகிறுகி' என்றாயிற்று; இவ் வடுக்குகள் இரண்டும் மிகுதிப் பொருள் பற்றி வந்தன. 'பொன்னும்' என்பதிலுள்ள, உம்மை- உயர்வு சிறப்புப் பொருளது. விள+காய்= விளங்காய்; மரப்பெயர் முன்னர் இனமெல்லெழுத்து மிக்கு முடிந்தது;

''மரர்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே''

என்பது (தொல்-எழுத்-உயிர்-ம-15-ஆம்) சூத்திரம். (அ)

329. *வெறுமை யிடத்தும் விழுப்பிணிப் போழ்து*
மறுமை மனத்தாரே யாகி-மறுமையை
யைந்தை யனைத்தானு மாற்றிய காலத்துச்
சிந்தியார் சிற்றறிவி னார்.

(இ-ள்.) சிறு அறிவினார் - புல்லறிவுள்ளவர்கள், வெறுமை இடத்தும் - கையிலொன்றுமில்லாததாகிய வறுமைவந்த காலத்தும், விழுபிணி போழ்தும்- துன்பந் தருகின்ற நோயுற்ற காலத்தும், மறுமை மனத்தாரே ஆகி-

மறுமைக்குரிய தர்மம் பொருந்திய மனத்தினையுடையவ ராகி, (அதாவது, மறுமைக்குரிய தர்மத்தைச் செய்யவேண்டு மென்னுங் கருத்துடையவாகளாய்), ஆற்றிய காலத்து- (வறுமையும், பிணியுமின்றி எண்ணியதைச்) செய்ய வல்லமை யுண்டான காலத்தில், மறுமையை- மறுமைக் குதவியான தருமத்தை, ஐந்தை அனைத்து ஆனும்- சிறிய கடுகினளவாகிலும், சிந்தியார்- நினைக்கமாட்டார்கள்; எ-று.

புல்லறிவையுடையவர்கள், தங்களுக்கு வறுமையும், நோயும் அதிகரித்திருக்கின்ற காலத்தில், பொருளிருந்தால் தர்மஞ் செய்யலாம்; நோயற்ற வாழ்க்கை யுண்டானால் அறஞ்செய்யலாம் என்று கருதுவார்கள்; பொருளும், நோயற்ற வாழ்வும் உண்டானகாலத்தில் அதனைச் சிறு கடுகளவும் சிந்திக்கமாட்டார்கள் என்பது இதன் கருத்து.

நல்லறிவுடையவர்கள், தர்மஞ்செய்தற் கிடையூறா கிய வறுமை வந்த காலத்தும், நோயுற்ற காலத்தும் தருமசிந் தனை யிருந்தாலும் அதனைச் செய்தற் கேதுவில்லையே என்று மனம் வருந்துவர்; பொருளும், நோயற்ற வாழ்வும் எய்தியபோது மகிழ்ச்சியுடன் விரைந்து அறத்தைச் செய்து முடிப்பர். இஃதவர்களின் நல்லறிவின் இயற்கை. புல்லறி வுடையார் அறத்தைச் செய்ய முடியாத காலத்தில் பொரு ளிருந்தால் செய்யலாம், நோயற்றிருந்தாற் செய்யலாம், என்று சிந்திப்பர்; பிறர் கேட்கத் தருமசிந்தனை யுடையார் போல் பேசிக் கொண்டு மிருப்பர்; பொருளும், நோயற்ற வாழ்க்கையும் பெற்று அதனைச் செய்யக்கூடிய காலம் வந்தாலோ அதனைச் சிறிதும் சிந்திக்கமாட்டார்கள்; மறந்து பொருளைப் புதைத்துவைக்க முயல்வர்; இது அவர் களுடைய புல்லறிவின் இயற்கை. இதனால் புல்லறி வாண்மையின் தன்மை கூறப்பட்டது.

வெறுமை - அனுபவித்தற்குரிய பொருளொன்று மில்லாதிருத்தல். விழு-விழுமம் என்ற உரிச்சொல்லின்

விகாரம்; இது சிறப்புப் பொருளையும் தருமாதலின், 'விழுப்பிணி' என்பதற்கு, 'மிகுந்த நோய்' என்றும் பொருள் கொள்ளலாம்; இங்குச் சிறப்பு - மிகுதி. ஆற்றல்- வல்லமை; ஆற்றிய - வல்லமை யுற்ற; அதாவது, முடிந்த, மறுமை- இடவாகு பெயராய் அதற்குரிய தர்மத்தை யுணர்த்தி நின்றது. (கூ)

330. *என்னேமற் றிவ்வுடம்பு பெற்று மறநினையார்*
கொன்னே கழிப்பர்தம் வாழ்நாளை- யன்னோ
வளவிறந்த காதற்றம் மாருயி ரன்னார்க்
கொளவிழைக்குங் கூற்றமுங் கண்டு.

(இ-ள்.) (புல்லறிவுடையவர்கள் இவ்வுலகத்தில் பெறுதற்கரிதாகிய) இ உடம்பு - இந்த மனிதவுடம்பை, பெற்றும்- (தர்மங்களைச் செய்தற்கேதுவாகப்) பெற்றிருந்தும், அளவு இறந்த- அளவற்ற, காதல்- அன்பினையுடைய, தம் ஆர்உயிர் அன்னார்- தம்முடைய அரிய உயிர்போன்ற நண்பர்களை, கொள- கொண்டுசெல்ல, இழைக்கும் - (தக்க முயற்சியைச்) செய்கின்ற, கூற்றம்- யமனுடைய செயலை, கண்டும் - பார்த்துக் கொண்டிருந்தும், அன்னோ- ஐயோ!, அறம் நினையார் - தருமத்தைச் செய்ய நினையாதவர்களாய், தம் வாழ்நாளை- தங்களுடைய ஆயுளை, கொன்னே கழிப்பர்- வீணாகக் கழிப்பார்கள், என்னே- இஃதென்ன அதிசயம்; எ-று.

ஒரு ஆத்மா எந்த ஜன்மமெடுப்பினும், எப்பதவியிற் சேரினும் முடிவான முத்திப் பேற்றினை யடைவதற்கு இவ் வுலகத்தில் மனிததேகமெடுத்துத் தவஞ்செய்து யோக நிஷ்டை கூடவேண்டும்; அங்ஙனம் செய்யாதவர்க்கு முத்தி யில்லை. ஆதலின், இம்மானிட தேகம் பெறுதற்கரியதாம்; அங்ஙனம் நன்மைக் கேதுவாகிய இவ்வுடம்பைப் பெற்றும், இவ்வுடம்பு விரைவில் அழிந்துவிடு மென்பதைத் தம் உறவினரை யமன் கொண்டு செல்வது கண்டு பிரத்தியஷமாக

வுணர்ந்தும் அறம் புரிதற்கேதுவாகிய இவ்வுடம்பிருக்கும் போதே தர்மத்தைச் செய்யாமல் ஆயுளை வீணாகக் கழிப்பது புல்லறிவாண்மை யென்பதும், இச்செய்கை அதிசயிக்கத்தக்க தென்பதும் இதில் விளக்கப்பட்டன.

என்னே- வியப்புப்பொருள் குறித்தது. மற்று- வினை மாற்றுப் பொருளது; அசை யெனினுமாம். அன்னோ- இரக்கப் பொருள் பயந்து நின்றது. 'பெற்றும்' என்பதிலுள்ள உம்மை- உயர்வு சிறப்புப் பொருளது. நினையார்- முற்றெச்சம். கொன்னே- பயனின்மைப் பொருடருமோரிடைச் சொல். 'புல்லறிவுடையவர்கள்' என்னும் எழுவாய் வருவித்துரைக்கப்பட்டது; இது தோன்றா எழுவாயெனப்படும். கூற்றம்- கர்த்தாவாகுபெயராய் யமனுடைய செயலை யுணர்த்திற்று. யமனுடைய தொழில் உயிர் கொள்ளுதலே யாகலின், கொள- என்பதற்கு, 'உயிர்கொள்ள' என்று பொருளுரைக்கப் பட்டது. 'கூற்றமும் கண்டு' என்பதில் உம்மை மாற்றி முடித்துப் பொருள் கூறப்பட்டது. (கo)

அதிகாரம் 34

பேதைமை

பேதைமையாவது-எதனையும் அறியாமையாகும்; அதாவது, அறிவை மயக்கும் மயக்கமாம்; அங்ஙனம் மறைக்கும் (மூடும்) காரணத்தால் மூடமெனவும்படும். சில அறிந்து சில அறியாமை யென்னும் புல்லறிவாண்மை மனிதர்க்கு மிக்க இழிவையுண்டாக்கக் கூடியது; ஒன்று மறியாதிருத்தலாகிய மூடம் அதைக்காட்டினும் தாழ்வை யுண்டாக்கக் கூடியது; ஆதலின், இப்பேதைமையென்பது, புல்லறிவாண்மை யென்னும் அதிகாரத்தின் பின் வைக்கப் பட்டது. இச்சம்பந்தம் பற்றியே திருக்குறளிலும் புல்லறி வாண்மையின் முன் இப்பேதைமை வைக்கப்பட்டிருக் கிறது. இவ்விரண்டையும் பரிமேலழகர், மயக்க வகை களென்றுதிருக்குறள், 'பேதைமை' என்னும் அதிகாரப் பொருள் விளக்கத்திற் கூறியிருக்கின்றனர். பேதைமை-பண்புப் பெயர். இவ்வதிகாரம் அதனியல்பைக் கூறுவதாலிப் பெயர் பெற்றது.

331. *கொலைஞ ருலையேற்றித் தீமடுப்ப வாமை*
நிலையறியா தந்நீர் படிந்தாடி யற்றே
கொலைவல் பெருங்கூற்றங் கோட்பார்ப்ப வீண்டை
வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு.

(இ-ள்.) கொலைவல் - கொல்லுந் தொழிலில் வன்மைபெற்ற பெருங்கூற்றம் - பெரிய யமனானவன், கோள்பார்ப்ப- (தம்உயிரைக்) கொள்வதை எதிர்பார்த்துக் கொண்டிருக்க, ஈண்டை- இவ்வுலக வாழ்க்கையாகிய, வலை அகத்து- வலையினிடத்திலே, (சிக்கி), செம்மாப்பார் - (மிகவும்) களித்திருப்பவரது, மாண்பு- தன்மையானது, (எப்படிப்பட்டதெனில்), கொலைஞர்- (ஆமையைக்) கொன்று தின்பவர், (கொல்லும்பொருட்டு) உலைஏற்றி- நெருப்புள்ள அடுப்பிலே (நீருள்ள பாத்திரத்தில் ஆமையைப் போட்டு) வைத்து, தீ மடுப்ப- நெருப்பை நிறைய எரிக்க, ஆமை- (அந்நீர்ப் பாத்திரத்தில் இடப்பட்ட அந்த) ஆமை யானது, நிலை அறியாது-(தன்னுடைய அந்த ஆபத்தான) நிலைமையை உணராமல், அ நீர் படிந்து- அந்த நீரிலே மூழ்கி, ஆடி அற்று - விளையாடினாற்போலும்; எ-று.

ஆமையைக் கொன்று தின்பவர், அதனை வேவித்தற் பொருட்டு ஒரு பாத்திரத்தில் நீரை நிரப்பி அடுப்பேற்றி அதிற்போட்டுத் தீயை மூட்டி யெரிப்பர்; நீர் சூடாகிக் கொதித்தவுடன் ஆமை யிறந்து போம்; அவ்வாறு அதற்குச் சாவு சமீபத்திருந்தும் அஃததனை யுணராமல், அந்நீர் தனக் கினிமை செய்வதாக வெண்ணி அதில் விளையாடிக் கொண்டிருக்கும்; அதைப்போலவே முழு மூடராகிய மனிதர், இவ்வுலக வாழ்க்கை துக்கமயமாய்த் தங்களுக்குச் சமீபத்தில் மரணத்தை யுண்டாக்கக் கூடியதா யிருந்தும் அதனை யுணராமல் அவ்வாழ்க்கையை இன்பமென்று நினைத்து மகிழ்ச்சியடைவர். இவர் தன்மை அந்த அறிவற்ற ஆமையின் தன்மையைப் போன்றதாதலின், அவ்வாமை இவர்க்குவமையாகக் கூறப்பட்டது; இஃதுவமையணி.

அறிவுடையார் உலக வாழ்வு நிலையற்ற தென்பதை யுணர்ந்து மரணம் வருவதற்குள் விரைந்து அறத்தைச் செய்து புண்ணியத்தைத் தேடிக்கொள்வர். அறிவில்லாத மூடர்களே சாவு தலைக்குமேலிருக்கிற தென்பதை யுணராமல் உலக

வாழ்க்கையில் களிப்புறுவர்; அத்தகைய பேதைமையின் இயல்பு, இதில் ஆமையின் தன்மையை உதாரணங்காட்டிக் கூறப்பட்டது. இதனால், உலகவாழ்வு அநித்தியமாதலின், அதை நம்பாமல் விரைந்து அறத்தைத் தேடிக்கொள்ள வேண்டுமென்பது பெறப்படும்.

உலை- நெருப்புள்ள அடுப்பு; பாகஞ்செய்யப் பாத்திரத்தில் நிரப்பி அடுப்பேற்றிய நீர். மடுத்தல்- நிறைத்தல்; இஃதிங்கு நெருப்பை அதிகமாக மூட்டுதலை விளக்கி நின்றது. ஆடி- ஆடினால் என்னும் எச்சத்தின் திரிபு. ஈண்டை ஐயீற்றுடைக் குற்றுகரம். ஈண்டு- இவ்வுலகம்; இடவாகு பெயராய் இவ்வுலக வாழ்க்கையை யுணர்த்திற்று. இவ்வுலக வாழ்வு, வலையாக உருவகஞ்செய்யப்பட்டது; உருவகவணி; இஃதுவமையணிக்கு அங்கமாயிற்று. சம்சார மானது மனிதரை மேற்கதிக்குச் செல்லும் மார்க்கத்திற் புக வொட்டாது பந்தப்படுத்துவதாதலின், 'வலை' எனப் பட்டது. 'செம்மாப்பார்' என்பதில், செம்மா- பகுதி; ஒரு சொல். மாண்பு- பெருமை; இஃதிங்கு இழிதன்மையை விளக்கி நின்றது; இங்ஙனமாயது- எதிர் மறை யிலக்கணை யெனப்படும்.

இச்செய்யுட் கருத்தும், இந்நூலின் 16-ஆம் செய்யுட் கருத்தும் ஒற்றுமையுடையன. (க)

332. *பெருங்கட லாடிய சென்றா ரொருங்குட*
னோசை யவிந்தபி னாடுது மென்றற்றா
லிற்செய் குறைவினை நீக்கி யறவினை
மற்றறிவா மென்றிருப்பார் மாண்பு.

(இ-ள்.) செய்- இல்லறம் நடத்துகின்ற, இல்- (வீட் டிலே, (உள்ள), குறைவினை - குறைவுகளை, நீக்கி- தீர்த்து, (அதாவது, வீட்டிலுள்ள குறைகளைத் தீர்த்துக் குடும்பத்துக்கு ஆகவேண்டிய எல்லாக் காரியங்களையும் பூரணமாகச் செய்து

முடித்து), மற்று- பின்னர், அறவினை - தர்மகாரியத்தை, அறிவாம்- பார்த்துக்கொள்வாம், என்று இருப்பார்- என்று கருதி அறஞ்செய்யாமல் சும்மா இருப்பவரது, மாண்பு- தன்மையானது, (எத்தகையதெனில்), பெருங்கடல் - பெரிய சமுத்திரத்திலே, ஆடியசென்றார்- மூழ்குவதற்குப் போனவர், ஓசை- (இக்கடலின்) ஒலியானது, ஒருங்கு- முழுவதும், அவிந்தபின்- அடங்கியபின், உடன்- அப்பொழுதே, ஆடுதும் - நீராடுவோம், என்று அற்று - என்று காத்திருந்தாற் போலும்; எ-று.

சமுத்திரத்தின் ஓசை எப்பொழுதும் அடங்காது; அங்ஙனமிருப்ப ஒருவர் அதில் நீராடச்சென்று, 'ஓசையடங் கியபின் மூழ்கலாம்' என்று காத்திருந்தால் எப்பொழுதுமே நீராடல் முடியாது; சம்சார காரியங்களும் எப்பொழுதும் முடிவுபெறா; அங்ஙனமிருப்ப ஒருவர், அக்காரியங்களைக் குறையின்றி முடித்துக் கொண்டு தர்மஞ்செய்யலாமென்று நினைத்து அறஞ்செய்யா திருப்பாராயின், எந்தக்காலத்திலும் அறஞ்செய்தல் இயலாது. ஆதலின், இவர் செயல், சமுத் திரத்து ஓசை யடங்கியபின் மூழ்கலாமென் றிருந்தாரது செயல் போன்றதாம். இங்ஙனம் உவமித்துக் கூறியது- உவமையணி.

ஒருங்கு- எஞ்சாமைப் பொருளுணர்த்தும் இடைச் சொல். உடன் என்பதையும் அங்ஙனமே கொண்டு, ஒருங்கு என்பதனோடு கூட்டி இரண்டையும் ஒருபொருட் பன்மொழி யாகவுங் கொள்ளலாம். என்று- என்றால் என்னும் எச்சத் திரிபு. இச்செய்யுளால், சம்சார காரியங்கள் ஒடுங்கிய பிறகு அறஞ்செய்யலாமென்றிருப்பது பேதைமை யென்பது குறிக்கப்பட்டது. (உ)

333. *குலந்தவங் கல்வி குடிமைமூப் பைந்தும்*
விலங்காம லெய்தியக் கண்ணு- நலஞ்சான்ற

மையறு தொல்சீ ருலக மறியாமை
நெய்யிலாப் பாற்சோற்றி னேர்.

(இ-ள்.) குலம்- நற்குடிப் பிறப்பும், தவம்- விரதமும், கல்வி- படிப்பும், குடிமை- குடும்ப வளப்பமும், மூப்பு- தலைமைத் தன்மையும், (ஆகிய), ஐந்தும்- இவ்வைந்தும், விலங்காமல்- நீங்காமல், எய்தியக் கண்ணும்- (ஒருவரிடத்து) நேர்ந்தவிடத்து, (அவர்), நலம் சான்ற- நன்மை மிகுந்த, மைஅறு- குற்றமற்ற, தொல்-பழமையான, சீர்- சிறப்பையுடைய, உலகம் - முத்தி யுலகத்தின் இயல்பினை, அறியாமை - உணராதிருப்பது, நெய் இல்லா- நெய் இல்லாத, பால் சோற்றின் நேர்- பால்போலும் வெண்மையான சோற்றிற்கு நிகராம்; எ-று.

சோறு வெண்ணிறமுடையதாய்ப் பரிசுத்தமுடையதாய் நல்ல பக்குவத்தோடு கூடியதாயிருப்பினும் அதனோடு நெய் சேர்ந்தால் மாத்திரமே அது உருசியுள்ளதாய்ச் சிறப்படையும்; அஃதின்றேல், ''நெய்யில்லா வுண்டி பாழ்'' என்றபடி சிறப்படையாது; அது போல உயர்குடிப் பிறப்பு முதலியன ஒருவரிடத்து அமைந்திருப்பினும், அவர் மோக்ஷ மார்க்கத்தை யுணராவிடின் சிறப்படையார் என்பது இதன் கருத்து.

இதனால், ஒருவர் மோக்ஷமார்க்கத்தை உணராதிருப்பது பேதைமையென்பது பெறப்படும். நெய்யில்லாச் சோற்றை முத்தி நெறியுணரார்க்குவமையாகக் கூறியது- உவமையணி. தவமாவது- மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்குதலும், கோடைக்கண் வெயினிலை நிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்றாற் றம் முயிர்க்குவருந் துன்பங்களைப் பொறுத்துப் பிறவுயிர்களையோம்புதல். குடும்பவளப்பம்- பொருட் குறைவின்றிக் குடும்ப காரியங்கள் மகிழ்ச்சியுறச் செவ்விதில்

நடந்து வருவதாம். மூப்பு- முதிர்ந்ததன்மை; அஃதிங்குத் தலைமையை உணர்த்தி நின்றது; இனி இதற்கு உலக அனு பவத்தில் முதிர்ந்த தன்மை யெனப் பொருள் கூறினுமாம்.

குலம், தவம், கல்வி, குடிமை, மூப்பு என்னும் பெயர்ச் செவ்வெண் ஐந்து என்னுந் தொகைபெற்று முடிந் தது. குடிமை- பண்புப் பெயர். தொல்சீர்- பண்புத்தொகை. பாற் சோறு- உவமைத் தொகை; பால் உவமை வெண்ணிற முணர்த்துதன் மாத்திரமாய் வந்தது. (ரு)

334. *கன்னனி நல்ல கடையாய மாக்களிற்*
சொன்னனி தாமுணரா வாயினு- மின்னினியே
நிற்ற லிருத்தல் கிடத்த லியங்குதலென்
றுற்றவர்க்குத் தாமுதவ லான்.

(இ-ள்.) சொல் - (மனிதர் சொல்லும்) சொற்களை, நனி- மிகுதியாக, தாம் உணரா ஆயினும் - தாம்(கேட்டு) உணர்ந்து கொள்ளாவாயினும், உற்றவர்க்கு- தம்மிடம் சேர்ந்தவர்க்கு, இன்னினியே- மிக்க இன்பமாகவே, நிற்றல்- (தம்மேலே) நிற்றலும், இருத்தல்- உட்காருதலும், கிடத்தல்- படுத்தலும், இயங்குதல்- நடத்தலும், என்று-, தாம் உதவ லான்- தாம் (இக்காரியங்களுக்கு) உதவி செய்தலினாலே, கல்- கற்கள், கடை ஆய மாக்களின் - (எவ்வகையிலும் பிறர்க் குதவியில்லாமல்) கடைப்பட்ட மனிதர்களைக் காட்டினும், (அதாவது, பேதை மனிதரைக் காட்டினும்), நனி நல்ல- மிகவும் நல்லவையாம்; எ-று.

பேதை மனிதராகிய கீழ்மக்களோ எவ்வகையிலும் பிறர்க்குதவியில்லாதவராவர்; கற்களோ, உயிரற்ற பொருள் களாயிருந்தாலும் தம்மிடம் அடுத்தவர்க்கு நிற்றல், இருத்தல், படுத்தல், நடத்தல் முதலிய காரியங்களுக்கு உதவியாயிருக்கின்றன; ஆதலின் அந்தக் கீழ்மக்களைக் காட்டினும் கற்கள் நல்லவை என்பது இதன் கருத்து.

இதனால் பிறர்க்குதவியில்லாதவர் மூடத்துவமுள்ள கீழ்மக்களென்பதும், அவர் கற்களினும் மிகத் தாழ்ந் தவர்களென்பதும் குறிப்பிடப்பட்டன. கற்கள்- உபமானம்; கடையாய மாக்கள்- உபமேயம்; இந் உபமேயத்தைக் காட்டினும் உபமானத்திற்குச் சிறப்புக் கூறப்பட்டது; இங்ஙனங் கூறியது- வேற்றுமையணி; வேற்றுமையணி யாவது- உபமான உபமேயங்களுள் ஒன்றுக்கு விசேடங் கூறுதல்.இங்ஙனம் பயனற்ற உபமேயத்தினது தன்மையால் உபமானத்துக்குச் சிறப்புக் கூறியது, அகமலர்ச்சி யணி யெனப்படும். இவ்விரண்டணிகளும் வேற்றுமைதோன்றாது கலந்துவந்தது- கலவையணி. இங்ஙனம் கீழ்மக்களைக் கூறியது- பரிகசித்தவாறாம்.

நனி- மிகுதிப்பாடுணர்த்தும் உரிச்சொல். இன்னினி -இனிமை இனிமையென்ற பண்புச் சொல்லடுக்கின் விகாரம்; முதல் இனிமையில் மை விகுதியும் இகரமும் கெட்டன; இரண்டாவது இனிமையில், மை விகுதி கெட்டது; ''ஈறு போதல்....'' என்னும் நன்னூல் சூத்திர விதியால் இவை துணியப்படும். இவ்விரு சொல்லடுக்கும் சிறப்பின் வந்த ஒரு பொருட் பன்மொழி; ஏ- அசையாக வேனும், தேற்றப் பொருளதாகவேனும் கொள்ளப்படும். இனி, 'இன்னினியே' என்பதற்கு, 'அந்தந்தப் பொழுதிலே' என்று பொருள் கூறுவாருமுளர். இப்பொருள் இத் தொடருக்குப் பொருத்தமான தன்றாம்; 'இன்னினியே' என்பது - இப்பொழுதே, அல்லது இந்த இந்தப் பொழுதிலே என்று தான் பொருள் தரும். நிற்றல் முதலிய பெயர்ச் செவ்வெண் இங்குத் தொகை பெறாது வந்தது. 'என்று' என்னும் எண்ணிடைச்சொல் ஓரிடத்தில் நின்று நிற்றல் முதலிய நான் கிடத்தும் பொருந்திற்று.

''என்று மெனவு மொடுவு மொரோவழி
நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும்'

என்பது (நன்-இடை-10-ஆம்) சூத்திரம். 'மாக்களின்' என்பதி லுள்ள ஐந்தனுருபு - எல்லைப்பொருளது. (ச)

335. *பெறுவதொன் றின்றியும் பெற்றானே போலக்*
கறுவுகொண் டேலாதார் மாட்டுங்- கறுவினாற்
கோத்தின்னா கூறி யுரையாக்காற் பேதைக்கு
நாத்தின்னு நல்ல சுனைத்து.

(இ-ள்.) (அறிவில்லாதவன், தீமை கூறுவதால்), பெறுவது ஒன்று இன்றியும்- தன்னாற் பெற்றுக் கொள்ளப் படுகின்ற பயன் சிறிதும் இல்லாமலும், (அதாவது, இல்லா திருந்தாலும்), பெற்றானேபோல- பயனடைந்தவன்போல, ஏலாதார்மாட்டும்- (தான்பகைத்துக் கொள்ள) முடியாதவர் களிடத்தும், கறுவுகொண்டு- சினங்கொண்டு, கறுவினால்- அக்கோபத்தினால், இன்னா - கெட்ட சொற்களை, கோத்து - (வரிசையாகத்) தொடுத்து, கூறி- (அவர் முன்) சொல்லி, உரையாக்கால்- (பிறரிடத்தும்) சொல்லாவிட்டால், பேதைக்கு - அவ்வறிவில்லாதவனுக்கு, நா- நாவானது, தின்னும்- (தன்னைக்கிண்டித்) தின்கின்ற, நல்ல சுனைத்து- மிகுந்த தினவையுடையதாகும்; (அதாவது, நாவானது நமைச்சலெடுத்துக் கொண்டே யிருக்கும்); எ-று.

அறிவில்லாதவன், தான் தீமை கூறுவதால் ஒரு பயனுமில்லா திருந்தாலும், பயனடைபவனைப்போலவே நினைத்து, தான் பகை கொள்ளத் தகாதவர்களிடத்தும் காரண மின்றிக் கோபங்கொண்டு, அக்கோபத்தால் தீமையான சொற்களை அவர் முன் சொல்லி, அவற்றைப் பிறரிடத்தும் கூறாவிட்டால் அவனுடைய நாவு தின வெடுத்துக்கொண்டி ருக்கும் என்பது இதன் கருத்து.

அறவிவில்லாதவன், பகை கொள்ளத் தகாதவரோடு சினங்கொண்டு தீய சொற்களை அவர் முன்னும் பிறரிடத்தும்

சொல்லாவிடில் அவனுடைய நா தினவெடுத்துக் கொண்டிருக்குமெனவே, அவன் அவ்வாறு எப்பொழுதும் தீமை சொல்லாதிருக்க மாட்டான், சொல்லிக்கொண்டே யிருப்பான், என்பது தானே அமைந்தது. தினவெடுத்த உடம்பில் சொறியாதிருத்தல் முடியாது; அதுபோலத் தினவெடுத்த நா எதையாவது சொல்லிக் கொண்டிருந்தால் மாத்திரமே அதன் தினவு தீரும். இங்ஙனம் அறிவில்லாதவன் காரணமின்றி இயல்பாகவே, சினங்கொள்ளத் தகாதவர் மீது சினங் கொண்டு தீமைமொழிதற்குத் தற்குறிப்பேற்ற வுருபு கொடாது, நா தின வெடுத்தலைக்காரணமாகக் கற்பித்துக் கூறியது- உய்த்துணரேதுத் தற்குறிப் பேற்றவணி. இங்ஙனம் நா தினவெடுக்குமென்றது- பரிகாசம். இதில், 'தின்னும் சுனைத்து' என்று தின்னாததைத்தின்பதாகக் கூறியது- வழுவமைதி;

> *''உண்டற் குரிய வல்லாப் பொருளை*
> *யுண்டன போலக் கூறலு மரபே''*

என்னும் தொல்காப்பியம். பொருளதிகாரச் சூத்திரத்தால் இது பெறப்படும். 'பெற்றானே' என்பதில், ஏ- தேற்றப் பொருளது. கறுவு- முதனிலைத்தொழிற்பெயர். ஏலாதார்- நற்குண நற்செய்கை, செல்வம் முதலியவற்றாற் பெரியராய், அந்த அறிவில்லாதவன் சினந்து கொள்வதற்குத் தகுதியில்லாதவர்; அவன் அறிவின்மையால் அப்பேர்ப்பட்டவர்களிடத்தும் கோபங் காட்டுவான். பெறுபவன்போல' என வரற்பாலது, 'பெற்றான்போல்' என வந்தது, துணிவு பற்றிவந்த காலவழுவமைதி. (ரு)

336. *தங்கண் மரபில்லரர் பின்சென்று தாமவரை*
யெங்கண் வணக்குது மென்பவர்- புன்கேண்மை
நற்றளிர்ப் புன்னை மலருங் கடற்சேர்ப்ப
கற்கிள்ளிக் கையிழந் தற்று.

(இ-ள்.) நல்- நல்ல, தளிர்- தளிர்களையுடைய, புன்னை - புன்னை மரங்கள், மலரும்- மலர்கின்ற, கடல் சேர்ப்ப- சமுத்திரத்தின் துறைமுகத்தையுடைய பாண்டியனே!, தம்கண்- தம்மிடத்தில், மரபு இல்லார்பின் - நற்குணமில்லாத பேதையரிடத்திலே, தாம் சென்று- தாங்கள் போய், அவரை- அவர்களை, எம் கண்- எம்மிடத்திலே, வணக்குதும்- வணக்கமாயிருக்கச் செய்வோம், என்பவர்- என்று அவர்களிடத்திலே சேர்பவரது, புன்கேண்மை- அந்த அற்பமான சேர்க்கையானது, கல்கிள்ளி- கல்லை நகத்தாற் கிள்ளி, கை இழந்து அற்று- கையை இழந்தது போலாகும்; எ-று.

இயற்கையில் தம்மிடம் நற்குணமில்லாத மூடரை எமக்கு அடக்க முடையவராயிருக்கும்படி செய்து விடுகின்றோமென்று அவரிடம் நெருங்கிச் சேர்பவரது அந்த அற்ப உறவானது கல்லைக் கிள்ளிக் கையை இழந்தது போன்றதாகும் என்பது இதன் கருத்து.

ஒருவன் ஒரு மலையிலே சிறிது கல்லைக் கிள்ளியெடுக்கத் தொடங்குவானாயின் அவன் கை இரணமாகி அழியுமேயன்றி அதைக் கிள்ளி யெடுத்தல் முடியாது; அதுபோல இயற்கையில் தீக்குணமுடையானை அடக்க முடையவனாகச் செய்ய ஒருவர் முயன்றால் அவன் அடங்காமல் கோபித்து அவரைத் துன்பத்துக் குள்ளாக்கி விடுவான். இதனால் மூடனை அடக்க முடையவனாகச் செய்தல் முடியாதென்று பேதையரின் இயற்கை கூறப்பட்டது. மூடர் சேர்க்கை மிக அற்பமானதாகலின், அது, 'புன் கேண்மை' எனப்பட்டது. அத்தகைய உறவோடு கூடி மூடனைத் திருத்தச் செய்யும் முயற்சிக்குக் கற்கிள்ளிக் கையிழத்தலை உவமையாகக் கூறியது- உவமையணி. கற் கிள்ளிக் கை வருந்துதல், மிக்க செல்வவன்மையுடையாரை அழிக்கத் தொடங்குவாரெய்தும் பயனுக்குவமையாகப் பழமொழி,

''மிக்குடையா ராகி மிகமதிக்கப் பட்டாரை
ஒற்கப் படமுயறும் என்றல் இழுக்காகும்
நற்கெளி தாகி விடினும் நளிர்வரைமேல்
கற்கிள்ளிக் கையுய்ந்தா ரில்''

என்னும் 48-ஆம் செய்யுளிற் கூறப்பட்டுள்ளதுணர்க. மரபு-ஒழுக்கம், நற்குணம். பின்- ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. வணக்குதும்- தன்மைப் பன்மை உடன்பாட்டு வினை முற்று. தளிர்க்கு நன்மையாவது, அழகோடும், மென்மையோடும், இனியநிறத்தோடுங் கூடியிருத்தலாம். புன்னை - கடற்கரையிலுண்டாம் மரம். (சூ)

337. *ஆகா தெனினு மகத்துநெய் யுண்டாகிற்*
போகா தெறும்பு புறஞ்சுற்றும்- யாதும்
கொடாஅ ரெனினு முடையாரைப் பற்றி
விடாஅ ருலகத் தவர்.

(இ-ள்.) அகத்து- (ஒரு மூடப்பட்ட பாத்திரத்தி) னுள்ளே, நெய் உண்டாகின் - நெய் இருக்குமேயானால், ஆகாது எனினும்- (அது தமக்கு உண்ணுதற்குக்) கிடைக்காது என்றாலும், (அந்நெய்யை உண்ணவேண்டு மென்னும் விருப்பத்தினால்), எறும்பு-எறும்புக் கூட்டங்கள், போகாது -(அப்பாத்திரத்தை விட்டுச்) செல்லாமல், புறம் சுற்றும் -(அப்பாத்திரத்தின்) வெளிப்பக்கத்திலே சுற்றிக்கொண்டிருக்கும், (இதுபோல, பொருளுடையார்), யாதும்- எந்தப் பொருளையும், கொடார் எனினும் - (பிறருக்குக்) கொடாதிருப்பாரானாலும், உடையாரை- அப்பொருளுடையவரை, உலகத்தவர்- உலகத்திலுள்ள பேதையார், (அப்பொருளை அடைய வேண்டுமென்னும் விருப்பத்தினால்), பற்றி- தொடர்ந்து, விடார்- எப்பொழுதும் விட்டு நீங்காதிருப்பார்; எ-று.

பாத்திரத்திற்குள்ளிருக்கும் நெய் உண்ணக் கிடைக் காததாயிருப்பினும் அந்த நெய்யின் விருப்பத்தால் எறும்பு கள் அப்பாத்திரத்துக்கு வெளிப்பக்கத்திற் சுற்றிக்கொண்டி ருப்பது அவற்றின் அறிவற்ற தன்மையாலேற்படுவதாம்; அதைப்போல, ஒன்றும் பிறருக்குக் கொடாதவரிடத்திற் பொருளிருந்தால் அது கிடைக்குமென்று மனிதர் அவரைச் சுற்றிக்கொண்டிருப்பது அவர் பேதைமையாலேற்படுவ தாம்.

அகவே, பேதையரே, பொருளீயாத தனவந்தரிடத் துப் பொருள் பெறலாமென்று அவரை விடாது தொடர்ந்து திரிவரென்பது இதனாலமைந்தது. இதில், பேதை மனிதரை எறும்புகளோடு ஒப்பிட்டுக் கூறி உவமையுருபு கொடாதது- எடுத்துக் காட்டுவமையணி.

எறும்பு-சாதி யொருமை. உடைமைகளிற் சிறந்து நிற்பது செல்வமேயாதலின், அச்சிறப்பு நோக்கி, 'உடையார்' என்பதற்குச் 'செல்வமுடையார்' என்று பொருள் கூறப் பட்டது. இவ்வாறு பொதுவாய் நிற்குஞ் சொற்கள் சிறந்த பொருளையே குறிப்பது வழக்கு. கொடாத செல்வரை, அறிவில்லாதவரே தொடர்ந்து திரிவராதலின், அத் தொடர்பு பற்றி, 'உலகத்தவர்' என்பதற்கு, 'உலகத்திலுள்ள பேதையர்' என்று பொருளுரைக்கப்பட்டது. அளபெடைகள் செய்யுளோசை நிறைக்க வந்தவை. பின்னடிகளிரண்டினும் அளபெடை ஒன்றி வந்தது- அளபுத் தொடை. (எ)

338. *நல்லவை நாடொறு மெய்தா றறஞ்செய்யா*
ரில்லாதார்க் கியாதொன்று மீகலா - ரெல்லா
மினியார்தோள் சேரா ரிசைபட வாழார்
முனியார்கொ றாம்வாழு நாள்.

(இ-ள்.) நல்லவை- நற்செயல்களை, நாள்தோறும்- தினந்தோறும், எய்தார்- அடையாதவர்களும், அறம் செய்யார்

- தர்மஞ்செய்யாதவர்களும், இல்லாதார்க்கு - கையில் யாதொன்றுமில்லாத ஏழைகட்கு, யாது ஒன்றும் ஈகலார்- யாதொரு பொருளையும் கொடாதவர்களும், எல்லாம் இனியார்- சகல விதங்களிலும் இனியவர்களாகிய மனைவியரது, தோள் சேரார்- தோளைச் சேராதவர்களும், (அதாவது, மனைவியரைச் சேர்ந்தின்புறாமல் பரத்தையரைச் சேர்வோரும்), இசைபட வாழார்- இவ்வுலகத்தில் புகழுண்டாகும் படி வாழாதவர்களும்,(ஆகிய மூடர்கள்), தாம் வாழும் நாள்- தாம் உலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற காலத்தை, முனியார் கொல்- வெறுக்க மாட்டார்களா? (அதாவது, தம்முடைய பயனற்ற அந்த வாழ்க்கையில் வெறுப்படைய மாட்டார்களா?); எ-று.

நற் செயல்களை அடைந்து, தர்மஞ் செய்து, இல்லா தார்க்குப் பொருட்கொடை நல்கி, இனிய மனைவியரோடு கூடிச் சுகித்துப் புகழுண்டாக இவ்வுலகத்தில் வாழாத மூடர், தங்களுடைய பயனற்ற வாழ்க்கையில் வெறுப்படையா திருப்பது அதிசயிக்கத்தக்க தென்பது இதன் கருத்து.

இதனால் இத்தகைய மூடர் உலகிலிருப்பதாற் பயனொன்று மில்லையென்று பேதையரின் இழிவு கூறப் பட்டது.

நல்லவை - கல்வி, அன்புடைமை, பொய் கூறாமை, தீவினை விட்டுப் பொருளீட்டல், ஆசாரம், தெய்வபக்தி முதலியன; இனி, 'நல்லவை' என்பதை' நல்+அவை= எனப்பிரித்து, 'நல்லவை எய்தார்' என்பதற்கு, 'நல்ல சபையிற் சேரார்' என்றும் பொருளுரைக்கலாம். மனைவியர், இன் சொற் கூறுவது, தம் கணவரின் உடலைப் பேணுவது, அவரை உபசரிப்பது, அன்புடையராயிருப்பது முதலிய எல்லாக் காரியங்களிலும் கணவருக்கினிமையாக நடந்து கொள்பவராகலின், அவரை, 'எல்லாம் இனியார்' என்றார் முனிவர். இனியார் தோள் சேரார்' எனவே, 'பரத்தையரைச்

சேர்வர்' என்பது தானே பெறப்பட்டது. 'மூடர்கள்' என்ற எழுவாய் வருவித்துரைக்கப்பட்டது. நல்லவை யெய்தார், அறஞ்செய்யார், இல்லாதார்க்கீயார், இனியார்தோள் சேரார், இசைபட வாழார் என்ற குறிப்புக்களால் இவர் மூடர் என்பது தானே அமையும். 'மூடர்கள்' என்ற எழுவாயை முன் கூட்டி எய்தார் முதலியவற்றை முற்றுக்களாக முடிப்பினும் அமையும்; இங்ஙனம் முடிக்குமிடத்து ஓரெழுவாய், பல பயனிலைகளைக்கொண்ட தென்க. எய்தார்- எதிர்மறைப் பலர்பால் வினைமுற்று; இதில், எய்து- பகுதி. கொல்- வினாப் பொருளதாகி இழிவை விளக்கி நின்றது. 'இல்லா தார்க்கியாதொன்றும்' என்பதில் உள்ள குற்றியலிகரம் அலகு பெறாததாம்; சீர், தளை முதலியன சிதைந்து வருமிடத்துக் குற்றியலிகரவுகரங்கள், அளபெடை, மெய்யெழுத்து முதலியன அலகுபெறாது நிற்றல் இயற்கை. (அ)

339. *விழைந்தொருவர் தம்மை வியப்ப வொருவர்*
விழைந்திலே மென்றிருக்குங் கேண்மை- தழங்குரற்
பாய்திரைசூழ் வையம் பயப்பினு மின்னாதே
யாய் நல மில்லாதார் மாட்டு.

(இ-ள்.) (நல்லறிவில்லாத மூடரிடத்தில் ஒருவர் வலியப் போய்ச் சிநேகங்கொண்டாலும், அவ்வாறு விரும்பியவரை அம் மூடர் விரும்பார்; அவ்வாறு), ஒருவர்- ஒருமனிதர், தம்மை விழைந்து- தங்களை விரும்பி, வியப்ப- கொண்டாடிச் சிநேகஞ்செய்யத் தொடங்க, ஒருவர்- மற்றொருவர், விழைந்திலேம்-(நாம் இவரை) விரும்ப மாட்டோம், என்றிருக்கும்- என்று தம்மை நேசித்தவரைச் சட்டை பண்ணாதிருக்கின்ற, ஆய் நலம் இல்லாதார் மாட்டு கேண்மை- ஆராய்ந்து கொள்ளத்தக்க நல்லறிவு இல்லாதவ ரிடத்துக் கொள்ளும் சிநேகமானது, தழங்கு குரல்- முழங்கு கின்ற சப்தத்தையுடைய, பாய்திரை - பாய்கின்ற அலை களையுடைய கடல், சூழ்-சூழ்ந்த, வையம்- பூவுலக முழு

வதையும், பயப்பினும்- தருவதாயிருந்தாலும், இன்னாது- இனிமையைத் தராததாகும்; எ-று.

மூடரிடத்தில் ஒருவர் வலியப் போய்ச் சிநேகங் கொண்டாலும் அம்மூடர் அவர் சிநேகத்தை ஏற்றுக் கொள்ளாமல் அவரை அவமதிப்பர்; அவ்வாறு ஒருவர் தம்மை விரும்பத் தாம் அவரை விரும்பாதிருக்கின்ற அந்த மூடர்களுடைய சிநேகமானது இந்த வுலகமுழுவதையும் தருவதாயிருந்தாலும் மிக்க் கெட்ட தென்பது இதன் கருத்து.

இதனால், நல்லோர் சிநேகத்தை விரும்பாத முழுமூடர்களுடைய சிநேகம் யோக்கியமான தன்றென்பது கூறப்பட்டது.

'தழங்கு குரல்' என்பது, 'தழங்குரல்' எனத் தொகுத்தல் விகாரம் பெற்று வந்தது; ''தழங்குரற் பம்பை யிற்சாற்றி நாடெலாம்'' என்று இது, சீவக சிந்தாமணி, நாமகளிலம்பகம்- நாட்டின் சிறப்பிற் கூறப்பட்டிருத்தல் உணர்க. பாய்திரை- வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; இனி, அடையடுத்த சினையாகு பெயரெனினுமாம். 'பயப்பினும்' என்பதிலுள்ள உம்மை- உயர்வு சிறப்புப் பொருளது; இஃதொரு பயனுந் தரா தென்பதை விளக்கும். (கூ)

340. *கற்றனவுங் கண்ணகன்ற சாயலு மிற்பிறப்பும்*
பக்கத்தார் பாராட்டப் பாடெய்துந் தானுரைப்பின்
மைத்துனர் பல்கிமருந்திற் றணியாத
பித்தனென் றெள்ளப்படும்.

(இ-ள்.) (ஒருவன்), கற்றனவும்- கற்றுக் கொண்ட வித்தைகளும், கண் அகன்ற- மிகுதியாகிய, சாயலும் -(அவனுடைய) மென்மைக்குணமும், இல் பிறப்பும்- உயர்குடிப் பிறப்பும், (ஆகிய இவைகள்), பக்கத்தார்-

அயலார், பாராட்ட- கொண்டாட, பாடு எய்தும்- சிறப்புறு வனவாம், (அவ்வாறின்றி அவன் தற்பெருமையை விரும்பி), தான்- தானே, உரைப்பின்- (பலரிடத்தும் எடுத்துச்) சொல்லத் தொடங்கினால், மைத்துனர் பல்கி- (அவனுக்குப் பல) மைத்துனர்கள் அதிகரித்து, (அவர்களால்), மருந்தின்- மருந் தினாலும், தணியாத- அடங்காத, (அதாவது, தீராத), பித்தன் என்று- பைத்தியக் காரன் என்று, எள்ளப்படும்-(அவன்) இகழப்படுவான்; எ-று.

ஒருவன் கற்றுக்கொண்ட வித்தை முதலியவைகள் பிறரால் கொண்டாடப் பட்டால் மாத்திரமே பெருமை யடையும் அவன் தானே அவற்றைப் பலரிடத்தும் கூறு வானே யானால், அவன் பலராலும் இகழப்படுவான் என்பது இதன் கருத்து.

ஒருவன் பெருமையடைய வேண்டுமானால் பலருங் கொண்டாடத்தக்க நற் செய்கைகளைச் செய்துகொண்டு தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளாமல் அடக்க முடையவ னாயிருத்தல் வேண்டும்; அவ்வாறிருப்பின் அவனுக்குப் பலராலுங் கொண்டாடத்தக்க சிறப்புத் தானே உண்டாகும்; அவ்வாறின்றித் தான் எவ்வளவு பெரிய காரியங்களை முடித் திருப்பினும் தற்பெருமை பேசினால், அவன் முடித்த காரியங்கள் சிறந்தவையாக மதிக்கப்படா; 'இவன் தற்பெருமையடையப் பொய்களைக் கூறுகின்றா' னென்றும், 'தன்னைப் புகழ்ந்த பதர்' என்றும் அவனை எல்லோரும் இகழ்வதியற்கை.

தன்னைப் புகழ்ந்து பேசுவோன் பலராலும் இகழப் படுவான் என்றதனால், இத்தகையினன் மூடனென்பதும், இப்பேதைமைக் குணம் மனிதர்க் காகாதென்பதும் விளக்கப் பட்டன.

மைத்துனர் - மனைவியுடன் பிறந்தோர், அத்தை பிள்ளைகளாவர்; இவர்கள் பரிகசித்து விளையாடற்குரிய முறையுடையார்; ஆதலின், பரிகசிப்பாரை, 'மைத்துனர்' என்றார் முனிவர். சாயல்- மென்மைக்குணம்; அதாவது, இரக்கமுள்ள குணம், அல்லது, சாந்தகுணம் என்னும் பொருட்டரு முரிச்சொல்; அழகெனினுமாம்; 'சாயல்' என்பது மென்மைக் குண முணர்த்தும் உரிச்சொல் என்பது, ''சாயன் மென்மை' என்னும்(தொல்.சொல்.உரி-29-ஆம்) சூத்திரத் தாலுணரப்படும். (கo)

அதிகாரம் 35

கீழ்மை

கீழ்மையாவது- தாழ்ந்த தன்மை; அதாவது கீழ் மக்களின் இயற்கையாம்; இக் கீழ்மைத் தன்மை புல்லறிவாண்மை, பேதைமை ஆகியவற்றாலுண்டாவதாகலின், அவற்றின் பின் வைக்கப்பட்டது. இவ்வதிகாரம் கீழ்மையை விளக்கிக் கூறுவதாதலின் இப்பெயர் பெற்றது.

341. *கப்பி கடவதாக் காலைத்தன் வாய்ப்பெயினுங்*
குப்பை கிளைப்போவாக் கோழிபோன்- மிக்க
கனம்பொதிந்த நூல்விரித்துக் காட்டினுங் கீழ்தன்
மனம்புரிந்த வாறே மிகும்.

(இ-ள்.) காலை- காலை நேரத்திலே, கடவதா - (இரைகொடுக்கும்) கிரமந் தவறாமல், (அதாவது, இரை கொடுக்கும் முறைப்படி), கப்பி- தானியத்தை, தன் வாய் பெயினும் - தன்னை வளப்பவர் கொண்டுவந்து) தன்வாயிற் செலுத்தி ஊட்டினாலும், குப்பை கிளைப்பு- (இரையின் பொருட்டுச்சென்று) குப்பை கிளைத்தலாகிய தொழிலை விட்டு, ஓவா- நீங்காத, கோழிப்போல்- கோழியைப்போல, மிக்க கனம் பொதிந்த- மிகுந்த உயர்வு பொருந்திய, நூல் - நூற் பொருளை, விரித்து காட்டினும் - (அறிவுடையார்) தெளிவு

படுத்தி உணர்த்தினாலும், கீழ்- கீழ் மகன், தன் மனம் புரிந்த ஆறே மிகும்- தன்மனம் விரும்பிய கெட்ட மார்க்கத்திலேயே மிகுந்து செல்வான்; எ-று.

கோழி வளர்ப்பவர்கள் காலையில் எழுந்தவுடன் தினந்தோறும் செய்யும் முறைப்படி அதற்கு வயிறு நிறைய இரையூட்டுவார்கள்; அப்படி யூட்டினும் அக்கோழி திருப்தி யடைந்து ஓரிடத்தில் அமைதியாயிராது; விரைந்தோடி நாள் முழுதும் குப்பையைக் கிளறி உடம்பையெல்லாம் அசுத்த மாக்கிக்கொண்டு அதில் அகப்படும் தாழ்ந்த பொருள்களைப் பொறுக்கித் தின்றுகொண்டே திரியும்; இது, அக்கோழிச் சாதியின் இயற்கை; இதைப்போலவே அறிவுடையார், கீழ் மக்களுக்கு உயர்ந்த நூற்பொருள்களை விளக்கமாகப் போதித்தாலும் அவர்கள் அவற்றைக்கேட்டு அவற்றின்படி நேரான வழியில் நடக்க மாட்டார்கள்; தங்கள் மனம் விரும்பியவாறே கெட்ட மார்க்கத்திலேயே சென்று கொண்டிருப்பர்; இது, அக் கீழ்மக்களின் இயற்கை.

இதனால் கீழ் மக்களின் இழிந்த தன்மை கூறப் பட்டது. கீழ் மக்களுக்குக் கோழியை உவமையாகக் கூறியது- உவமையணி. கீழ் மக்களுக்குச் சாஸ்திரப் பொருள்களைப் போதித்தாலும் உணர்ச்சி யுண்டாகாதென்பதை,

''பூத்தாலுங் காயா மரமுள நன்றறியார்
மூத்தாலு மூவார்நூல் தேற்றாதார்- பாத்திப்
புதைத்தாலு நாறாத வித்துள பேதைக்
குரைத்தாலுஞ் செல்லா துணர்வு''

என்னும் சிறுபஞ்ச மூலச் செய்யுளுமுணர்த்தும். கப்பி- குறு நொய் யெனினுமாம். கடவது- முறையாகத் தினந்தோறும் செய்து வருவது. காலை- என்பதற்கு, 'உரிய காலத்திலே' எனப் பொருள் கொள்ளினுமாம். கிளைப்பு- தொழிற்பெயர். ஓவா- ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; இதில்,

ஒவு-பகுதி; இஃது 'ஒருவு' என்பதன் மரூஉ வென்ப. கனம்- இங்கு நூலின் உயர்வையுணர்த்தி நின்றது; உயர்வாவது- அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்களைக் கூறும் தன்மையாம். கீழ்- பண்பாகுபெயராய்க் கீழ் மகனை யுணர்த்திற்று. 'ஆறு' என்பதற்கேற்ப, 'மிகும்' என்பதனோடு, 'செல்வான்' என்னுஞ் சொல் இசை யெச்சமாகக் கூட்டிப் பொருண் முடிபு கூறப்பட்டது. (க)

342. காழாய கொண்டு கசடற்றார் தஞ்சாரற்
றாழாது போவா மெனவுரைப்பிற்- கீழ்தா
னுறங்குவா மென்றெழுந்து போமாமஃதன்றி
மறங்குமா மற்றொன் றுரைத்து.

(இ-ள்.) காழ் ஆயகொண்டு - திடமான (சாஸ்திரப் பொருள்களை) மனத்திற்கொண்டு, (அதாவது, உணர்ந்து), கசடு அற்றார் தம்சாரல்- குற்றமற்ற பெரியோர் பக்கத்தில், தாழாது - தாமதிக்காமல், போவாம்- (நாம்) செல்வோம், என உரைப்பின்- என்று (அறிவுடைய தன் சிநேகிதனொருவன்) சொல்லி அழைத்தால், கீழ்- கீழ் மகன், உறங்குவாம் என்று -(நாம் போய்த்) தூங்குவோம் என்று, (அவனையும் அழைத்து), எழுந்துபோம் - (அவ்விடத்தை விட்டு) எழுந்து போய் விடுவான், அஃது அன்றி- அதுவுமல்லாமல், (மற்றொரு சமயத்து), மற்று ஒன்று உரைத்து - வேறு யாதாயினு மொரு காரணத்தைக் கூறி, மறங்கும் - (அவன் சொல்லை) அசட்டை பண்ணுவான், (அதாவது, மறுப்பான்); எ-று.

அறிவுடையா னொருவன், கீழ்மகனோடுறவாகி அவனை நல்வழிப்படுத்தக் கருதி, நூற்பொருள்களை யுணர்ந்த பெரியோரிடத்தில் நாம் சென்று அறிவு கற்றுக் கொள்ளுவோமென்று அழைத்தால், அவனுக்கது விருப்ப மிராததாகலின், 'தூக்கம் வருகிறது; நாம் உறங்கச் செல்ல லாம்' என்று அவனையும் அழைத்துவிட்டு அவ்விடத்தை விட்டு எழுந்து போய்விடுவான்; அப்படிச் செய்வதுமன்றி

மற்றொரு சமயத்தில் வேறு யாதாயினுமொரு காரணத்தைக் கற்பனை செய்து கூறி அவன் விருப்பத்தை மறுத்து விடுவான் என்பது இதன் கருத்து.

இதனால், கீழ்மகனை ஒரு அறிஞன் நல்வழிப்படுத்த முயன்றால் அவன் சீர்திருத்த மடையாமற் போவதோடு தன் சிநேகிதனாகிய அறிஞனையும் மூடனாக்கிவிட முயல்வா னென்பது கூறப்பட்டது. இதில், கீழ்மனுடைய தன்மை யையே விசேஷமாக எடுத்துக்கூறி விளக்கியது- தன்மை நவிற்சியணி. ஆய- இறந்தகாலங் காட்டும் பலவின்பால் வினையாலணையும் பெயர். சாரல்- சார்ந்திருத்தல்; தொழிற் பெயர்;' இது தொழிலாகு பெயராய்ப் பெரியோர் சார்ந் திருக்குமிடத்தை யுணர்த்திற்று. போவாம், உறங்குவாம் என்பன- முன்னிலையை உளப்படுத்திய தன்மைப் பன்மை கள்; நீயும், நானும் என்னும் எழுவாய்கொண்டு முடிவன வாம்;

''அவைதாம்,

அம்மா மெம்மே மென்னுங் கிளவியு
மும்மொடு வரூஉங் கடதற வென்னு
மந்நாற் கிளவியொ டாயெண் கிளவியும்
பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே''

என்னும் (தொல்-சொல்-வினை-5-ஆம்) சூத்திரவுரை பார்க்க. இனி, 'உறங்குவாம்' என்பதைக் கீழ்மகன் தன்மைப் பன்மையாகக் கூறியதாகவுங் கொள்ளலாம். 'அஃது' என்பதிலுள்ள ஆய்தம் இங்கு மெய்போன்றொலித்தது; அலகிட்டுணர்க. ஒன்று- எண்ணலளவையாகு பெயராய் ஒரு காரணத்தை யுணர்த்திற்று. மறத்தல்- அசட்டை பண்ணல்; இதனடியாப் பிறந்த தன் வினைமுற்று, 'மறங்கும்' என்பது. ஆம் இரண்டும், தானும்- அசைகள். (உ)

343. *பெருநடை தாம்பெறினும் பெற்றி பிழையா*
தொருநடைய ராகுவர் சான்றோர்- பெருநடை
பெற்றக் கடைத்தும் பிறங்கருவி நன்னாட
வற்றா மொருநடை கீழ்.

(இ-ள்.) பிறங்கு- பிரகாசிக்கின்ற, அருவி- மலை யாறுகளையுடைய, நல்- நல்ல, நாட- பாண்டிய நாட்டை யுடைய அரசனே!, சான்றோர் - அறிவால் நிறைந்த பெரியோர், தாம் பெருநடை பெறினும்- தாம் பெரிய செல்வத்தைப் பெற்றாலும், பெற்றி-(தம்முடைய) உயர்குண மாந்தன்மை, பிழையாது- மாறுபடாமல், ஒரு நடையர் ஆகுவர்-(எப்பொழுதும்) ஒரேவிதமான நடக்கையுடையவ ராகவே விளங்குவர், கீழ்- கீழ்மகன் - பெருநடை பெற்றக் கடைத்து- பெரிய செல்வத்தை அடைந்தால், ஒருநடை வற்றுஆம்- (நூதனமான) ஒரு நடக்கையில் வல்லவனாகத் தோன்றுவான் (அதாவது, முன் இருந்ததினின்றும் வேறு பட்ட நடைக்கையுடையவனா யிருப்பன்); எ-று.

அறிவுடைய பெரியோர், தமக்குப் பெருஞ் செல்வம் வந்த காலத்திலும் தம்முடைய இயற்கையான நற்குணத் தினின்றும் மாறுபடா திருப்பர்; கீழ்மகனுக்குச் செல்வம் வந்தால் அவன், முன் இருந்ததினின்றும் வேறுபட்ட நடக்கை யுடையவனாகி விடுவான் என்பது இதன் கருத்து.

அறிவுடையார் இயற்கை மாறாதிருப்பதாவது- முன் எவ்வாறு தற்பெருமை யில்லாதவராயும், இன்சொல்லு டையவராயும், நல்ல தருமங்களையும் செய்பவராயு மிருந்தாரோ அப்படியே இருத்தலாம். கீழ்மகன் வேறுபட்ட நடக்கையுடையவனாகுதல்- முன் தலை யெடுப்பில்லாம லிருந்து செல்வம் பெற்றவுடன் செருக் குடையானாகிப் பெரியோரை மதிக்காமல் செய்யத்தகாத காரியங்களைச் செய்து கொண்டு திரிதலாம்.

இதில் சான்றோர் இயற்கை இன்னதென்பதும், கீழ் மக்கள் இயற்கை இன்னதென்பதும் விளக்கப்பட்டன.

நடை- செல்வம்; இதனை,

'நடை வழி யொழுக்கஞ் செல்வம்.......' எனச் சூடாமணி நிகண்டு 11-வது தொகுதி 23-ஆம் செய்யுளிற் கூறுவதா லுணர்க; செல்வம் பலவிடத்தும் நடந்துகொண் டிருத்தல்பற்றி இப்பெயர்பெற்றதென்க. 'பெறினும்' என்பதி லுள்ள உம்மை - உயர்வு சிறப்புப் பொருளது. பெற்றக் கடைத்து - எதிர்கால வினையெச்சம்; இதிலுள்ள உம்மை- அசை. வற்று- வல் என்னும் பண்பினடியாப் பிறந்த குறிப்பு முற்று. ஆம்- அசை. 'கீழ்வற்று' என அஃறிணையாற் கூறியது கீழ்மகனது இழிவு தோற்றற் கென்க. (ந)

344. தினையனைத்தே யாயினுஞ் செய்தநன் றுண்டாற்
பனையனைத்தா வுள்ளுவர் சான்றோர்-
பனையனைத்
தென்றுஞ் செயினு மிலங்கருவி நன்னாட
நன்றில நன்றியார் மாட்டு.

(இ-ள்.) இலங்கு- விளங்குகின்ற, அருவி - மலை யருவி பாய்கின்ற, நல்- சிறந்த, நாட- (பாண்டி) நாட்டை யுடைய அரசனே!, செய்தநன்று-(ஒருவன்) செய்த நன்றி, தினை அனைத்தே ஆயினும்- (சிறிய தானியமாகிய) தினை யின் அளவே யானாலும், சான்றோர்- (கல்வி கேள்விகளால் நிறைந்த) பெரியோர், உண்டால்- (அதைத் தாம்) அனு பவித்தால், பனை அனைத்து ஆ- பனையின் அளவாக' உள்ளுவர்- நினைப்பார்கள், என்றும்- எப்பொழுதும், நன்று அறியார் மாட்டு- செய்ந்நன்றியின் தன்மையை உணராத கீழ் மக்களிடத்து, பனை அனைத்து - பனையின் அளவு

நன்றியை, செய்யினும்- (ஒருவர்) செய்தாலும், நன்று இல- (அதனால்) நன்மைகள் இலவாம்; எ-று.

பெரியோர், தமக்கொருவர், தினையளவு சிறிய நன்றியைச் செய்யினும், அதனைப் பனையளவு பெரியதாகப் பாராட்டுவார்; கீழ் மக்களுக்கு ஒருவர் பனையளவு பெரிய நன்றியைச் செய்தாலும் அவர்கள் அதனைப் பாராட்ட மாட்டார்கள்; அதனால் சிறப்புக்கள் உண்டாகவே மாட்டா என்பது இதிற் கூறப்பட்டது.

இதனால், கீழ்மக்கள் செய்ந்நன்றி யறியாமாக்க ளென்பதும், பெரியோர் ஒருவர் செய்த சிறு நன்றியையும் பெரிதா மதிக்கத் தக்கவரென்பதும் விளக்கப்பட்டன. பெரியோர், பிறர்செய்த சிறு நன்றியையும் பெரிதாக மதிப்பரென்பது,

''தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்''

என்னும் (திருக்குறள்-104-ஆம்) செய்யுளானு முணரப்படும். கீழ்மக்கள் ஒருவர் செய்த பெரிய நன்றியையும் மறந்து அவர்க்குத் தீமையே புரிவரென்பதை,

''கண்ணில் கயவர் கருத்துணர்ந்து கைமிக
நண்ணி யவர்க்கு நயனுடைய செய்பவேல்
எண்ணி யிடர்வரு மென்னார் புலிமுகத்
துண்ணி பறித்து விடல்''

என்னும் (பழமொழி-109-ஆம்) செய்யுளுணர்த்தும். தினை- சிறிய அளவையும், பனை- பெரிய அளவையும் காட்டுவன. (ச)

345. *பொற்கலத் தூட்டிப் புறந்தரினு நாய்பிற*
ரெச்சிற் கிமையாது பார்த்திருக்கும்- அச்சீர்
பெருமை யுடைத்தாக் கொளினுங்கீழ் செய்யுங்
கருமங்கள் வேறு படும்.

(இ-ள்.) நாய்- நாயை, பொன்கலத்து ஊட்டி- (ஒருவன்) பொற்பாத்திரத்தில் உணவைவைத் துன்பித்து, புறந்தரினும்- பாதுகாத்து வந்தாலும், (அது), பிறர் எச்சிற்கு - அயலார் உண்டு கழித்துத் தெருவிலெறிந்த எச்சிலாகிய சோற்றைத் தின்பதற்கே, (விரும்பி), இமையாது- கண் ணிமை கொட்டாது, பார்த்திருக்கும்- (எச்சில் இலை வெளி யில் போடப்படும் சமயத்தை) எதிர் பார்த்துக் கொண்டிருக் கும், அ சீர்- அத்தன்மையாகவே, கீர் - கீழ்மகன், பெருமை உடைத்தா கொள்ளினும் - (தன்னைப் பிறர்) பெருமையுடை யவனாக மதித்து ஏற்றுக் கொண்டாலும், செய்யும் - அவன் செய்கின்ற, கருமங்கள்- காரியங்கள், வேறுபடும் - (அப் பெருமைக்குத் தக்கவைகளா யிராமல்) வேறுபட்டவை யாகும்; எ-று.

ஒருவன் பொற்கலத்திலே உயர்ந்த உணவை வைத்தூட்டி நாயை வளர்த்துப் பாதுகாத்து வந்தாலும், அது தன் குலவியற்கை மாறாமல் வெளியிற்சென்று பிறர் உண்டு கழித்துத் தெருவிலெறியும் எச்சிற்சோற்றைத் தின்ன விரும்பி அது கிடைக்குமிடத்தில் கண்ணிமை கொட்டாமல் வழியை நோக்கியபடியே இருக்கும்; அதைப் போலவே கீழ்மக் களைப் பிறர் எவ்வளவு உயர்ந்த பதவியிற் சேர்த்தாலும் அவரியற்கைப்படியே இழிந்த காரியங்களையே செய்து கொண்டிருப்பரென்பது இதன் கருத்து.

இதனால் கீழ்மக்களை உயர்ந்த பதவியிற் சேர்ப் பினும் அவர் தாழ்ந்த காரியங்களையே செய்து தம் இழிவை வெளிப்படுத்துவர் என்று அவரியற்கை விளக்கப்பட்டது. இவ்வதிகாரத்தின் முதற் பாட்டின் கருத்தும், இச்செய்யுட்

கருத்தும் ஒரு தன்மையன. நாய் வெளியிற் சென்றால் மாத்திரமே எச்சிற் சோற்றுக் கெதிர்பார்த்திருக்குமாதலின், அதற்குத்தக, 'புறந்தரினும்' என்பதற்கு, 'வெளியில் விட்டா லும்' எனப் பொருள் கூறினுமாம். இதில் கீழ்மக்கள் செய் கைக்கு நாயின் செய்கையை உவமையாகக் கூறியது- உவமை யணி; சீர்- உவமவுருபு- கீழ்மகனின் இழிவு குறித்தற் பொருட்டு, 'கீழ்' என்னும் அஃறிணை யெழுவாயும், 'உடைத்து' என்னும் அஃறிணைப் பயனிலையும் வைத்துக் கூறினார் முனிவர். உம்மைகள் இரண்டும்- உயர்வு சிறப்புப் பொருளன. 'ஊட்டி' என்பதில், 'உண்' என்பதன் பிறவினை யான, ஊட்டு- பகுதி; 'உண்' என்பது முதனீட்சி பெற்று ணகர வொற்று டகரவொற்றாக, டு- என்னும் விகுதி கூடிற்று. 'புறந்தரின்' என்பதில், புறந்தா- பகுதி; ஒரு சொன்னீர் மைத்து. எச்சில்- எஞ்சியது; அதாவது, உண்டதுபோக மீதிப் பட்டது. (ரு)

346. *சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்*
எக்காலுஞ் சொல்லார் மிகுதிச்சொல்- எக்காலும்
முந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை
இந்திரனா வெண்ணி விடும்.

(இ-ள்.) விழுமியோர்- சிறந்தவர்கள், (அதாவது, பெரியோர்கள்), சக்கரம் செல்வம் பெறினும் - ஆக்ஞாசக்கர சம்பந்தமான செல்வத்தைப் பெற்றாலும், (அதாவது, ஆக்ஞா சக்கரத்தைச் செலுத்தி உலகையாளும் சக்கரவர்த்தி பதவி யாகிய ஐசுவரியத்தை அடைந்தாலும்), எ காலும் - எந்தக் காலத்திலும், மிகுதிசொல்- அளவுகடந்த சொல்லை, (அதாவது, அறிவுடையார் பேசும் கிரமமில்லாத கடுஞ் சொல்லை), சொல்லார்- எவரிடத்தும் பேசமாட்டார்கள், கீழ்- கீழ்மகன், எ காலும்- எப்பொழுதாயினும், (தனக்கு), முந்திரி மேல்- (தனக்குக் கிடைத்த) முந்திரியளவு செல்வத் துக்குமேல், காணிமிகுவதேல் - காணியளவுபொருள் அதிகரிப்பதானால், தன்னை-, இந்திரனா எண்ணிவிடும் -

பொன்னுலகத்துக்கு அதிபனாகிய தேவேந்திரனாக மதித்து எவரிடத்தும் வரம்பு கடந்த சொற்களைப் பேச ஆரம்பித்து விடுவான்; எ-று.

பெரியோர்கள் சக்கரவர்த்திகளாய்ப் பெருஞ்செல்வம் பெற்ற போதிலும் பொருட் செருக்குற்று எவரிடத்தும் கிரமந்தவறிப் பேச மாட்டார்கள்; கீழ்மகன் தான் பெற்ற அற்ப செல்வத்திற்குமேல் சிறிதளவு மிகுதியாகப் பெற்றுவிட்டாலும் தன்னை இந்திரனென்று மதித்து, எவரையும் மதியாமல் முறைதவறிய வார்த்தைகளைப் பேசுவான் என்பது இதன் கருத்து.

இதனால் பெரியோரின் அடக்கமாகிய பெருங்குண மும், கீழ்மகனின் அடக்கமின்மையாகிய இழிகுணமும், அவன் அற்பசெல்வத்திற்கும் அகங்கரிக்கும் அறிவின்மை யும் விளக்கப்பட்டன. இதில், சிறு பான்மை உபமான உபமேயத் தன்மையும் தோன்ற மேலோர்க்கும் கீழோர்க்கும் உள்ள வேறுபாடு கூறுவதால், இது- வேற்றுமையணி.

'சக்கர செல்வம்' என்பதற்கு, இந்திரன் செல்வமென் றேனும், விஷ்ணு செல்வமென்றேனும் பொருள் கொள் ளினும் பொருந்தும். உம்மைகள் மூன்றனுள், முன்னது- உயர்வு சிறப்புப் பொருளது; நடுவிலுள்ளது - முற்றுப் பொருளது; ஈற்றிலுள்ளது- இழிவு சிறப்புப் பொருளது. முந்திரி, மிகச் சிறிய அளவுக்கும், காணி, அதனினும் சிறிது மேற்பட்ட அளவிற்கும் கூறப்பட்டன. முந்திரி- ஒன்றை முந்நூற்றிருபது பாகமாக்கியதில் ஒருபாகம்; முந்திரி நான்கு கொண்டது - ஒரு காணி; என்பது காணி கொண்டது- ஒன்று என்னும் எண்ணாகும். 'முந்திரிமேற் காணி மிகுவதேல்' என்பதை, 'காணிமேல் முந்திரி மிகுவதேல்' என மாற்றிப் பொருளுரைப்பினும் அமையும். சக்கரம், இந்திரன் என்பன- சக்ரம், இந்திரன் என்னும் வடசொற்றிரிபுகள். (கூ)

347. *மைதீர் பசும்பொன்மேன் மாண்ட மணியழுத்திச்*
செய்த தெனினுஞ் செருப்புத்தன் காற்கேயாம்
எய்திய செல்வத்த ராயினுங் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும்.

(இ-ள்.) செருப்பு- செருப்பானது, மைதீர் - குற்றமில்லாத, பசும்பொன்மேல்- பசிய பொன்னின்மேல், மாண்ட- மாட்சிமைப் பட்ட, மணி அழுத்தி- இரத்தினங்களைப் பதித்து, செய்தது எனினும்- (ஒருவனால் செய்யப்பட்ட தென்றாலும், தன் காற்கே ஆம்- அவனுடைய காலுக்கே உபயோகப்படுவதாம், (அதைப்போல கீழ் மக்கள்), எய்திய செல்வத்தர் ஆயினும்-சேர்ந்த செல்வத்தையுடைவர்களா யிருந்தாலும், கீழ்களை- அந்தக் கீழ்மக்களை, செய்தொழிலால்- (அவர்கள்) செய்கின்ற தாழ்ந்த தொழில்களினாலே, காண- ஆராய்ந்து பார்க்க, படும்- (அச்செருப்பினது இழிந்த தன்மையே அவரிடத்தும்) உண்டாகும்; எ-று.

செருப்பு, ஒருவனால், பசும் பொன்னில் உயர்ந்த இரத்தினங்களை அழுத்திச் செய்யப்பட்டாலும் அவனுடைய காலில் மாட்டிக் கொள்வதற்கு உபயோகப்படுமேயன்றி வேறு உயர்ந்த இடங்களில் அணிவதற்கு உபயோகப் பட மாட்டாது; அதைப்போலக் கீழ் மக்கள் மிக்க செல்வத்தை யடைந்தாலும் தாழ்ந்த நிலைமையி லிருக்கத் தக்கவரேயன்றி உயர்ந்த நிலையிலிருக்கத் தக்கவராகார் என்பது இதன் கருத்து.

கீழ் மக்கள் செல்வமுடையவரா யிருந்தாலும் இழிவான காரியங்களையே செய்வர்; அக்காரியங்களைப் பார்க்கும்போது அவர்க்குச் சிறிதேனும் நன்மதிப்பு ஏற்பட மாட்டாது; ஆதலின், 'கீழ்களை, அவர்கள் செய்தொழிலால் ஆராய்ந்து பார்க்க அச் செருப்பினது இழிந்த தன்மையே அவரிடத்து முண்டாகும்' என்றார் முனிவர். செருப்பு எவ்வளவு உயர்ந்ததாகச் செய்யப்பட்டாலும் அதன் இயற்கை

யால் தாழ்ந்த ஸ்தானத்தை அடைவதுபோல கீழ் மக்களும் செல்வம் பெற்றாலும் அவர் இயற்கையால் தாழ்ந்த நிலைமையே அடைவர்; இங்ஙனங் கூறியது- எடுத்துக் காட்டுவமையணி. உபமானத்தில் இழிவே கூறப்பட்டிருத்த லின், உபமேயத்திலும் 'படும்' என்பதனோடு, 'செருப்பினது இழிந்த தன்மை' என்பது கூட்டி முடிக்கப்பட்டது; இங்ஙனம் முடித்தலே உபமான உபமேயங்கட்குப் பொருத்தமானதாம்.

பசும்பொன்னிற்குக் குற்றம் நீங்குதலாவது களிம்பு நீங்குதலாம்; களிம்பு நீங்கிய பொன்னை, 'ஓடவைத்த பொன்' என்பர் நச்சினார்க்கினியர் சிந்தாமணி யுரையில். உம்மை- இழிவு சிறப்புப் பொருளது. 'காற்கே' என்பதில், ஏ- பிரிநிலைப் பொருளது; இழிவு சிறப்பதுமாகும். (எ)

348. *கடுக்கெனச் சொல்வற்றாங் கண்ணோட்ட மின்றா*
மிடுக்கண் பிறர்மாட் டுவக்கு- மடுத்தடுத்து
வேக முடைத்தாம் விறன்மலை நன்னாட
வேகுமா மெள்ளுமாங் கீழ்.

(இ-ள்.) விறல்- வலிமை பொருந்திய, மலை- மலைகளையுடைய, நல்- சிறந்த, நாட- பாண்டி நாட்டை யுடைய அரசனே, கீழ்- கீழ் மகனது தாழ்ந்த இயல்பு, கடுக்கென- கடுமையாக, சொல் வற்று- பேசுதலில் வல்லதாம், கண்ணோட்டம் இன்று- (பிறரிடத்து) பட்ச மில்லாதது, பிறர் மாட்டு- பிறரிடத்துண்டாகும், இடுக்கண்- துன்பத்திற்கு, உவக்கும் - மகிழ்ச்சியடையும், அடுத்து அடுத்து- அடிக்கடி, வேகம் உடைத்து - கோபா வேசத்தை யுடையது, ஏகும் (கண்ட விடங்களிலெல்லாம்) செல்லும், எள்ளும்-(பிறரை) இகழ்ச்சி செய்யும்; எ-று.

கீழ்மகனின் இயற்கை கடுஞ்சொற் கூறுதலும், பிறரிடத்துப் பட்சமின்றி யிருத்தலும், பிறர் துன்பங்கண்டு

மகிழ்தலும், அடுத்தடுத்துக் கோபா வேசங்கொள்ளுதலும், கண்ட கண்ட விடங்களுக்கெல்லாம் செல்லுதலும், பிறரை இகழ்ந்து பேசுதலுமாமென்பது இதன் கருத்து.

கீழ் மக்கள் இத்தகைய குணஞ்செயல்களையுடைய வர்களாயிருத்தலை எங்கும் காணலாம். இதில், கீழ்மக்கள் தன்மையை உள்ளவாறெடுத்துக் கூறியது- தன்மை நவிற்சி யணி. கடுக்கென- கடுமையைக் குறிக்குமோரிடைச் சொல். சொல்- முதனிலைத் தொழிற்பெயர்; 'சொல்ல' என்பதன் தொகுத்தலெனினுமாம். கண்ணோட்டம்- கண்சென்ற வழி யுண்டாம் பக்ஷம்; அதாவது, தாக்ஷண்யமாம். அடுத்தடுத்து- பன்முறை வருவதைக் குறிக்கும் அடுக்கு. வேகம்- விரைவு; இஃதிங்கு விரையுந் தன்மையுள்ள கோபத்தை யுணர்த்திற்று. விறல் - பெருமையெனினுமாம்; மலைக்குப் பெருமை யாவது - வறப்பினும் வளந்தருதலும், அளப்பரிய பல் பொருள்களை யுடைத்தாதலும், அரசர்க்கரணாதலுமாம். ஆம் ஐந்தும்- அசைகள். (அ)

349. *பழைய ரிவரென்று பன்னாட்பி னிற்பி*
னுழையினிய ராகுவர் சான்றோர்- விழையாதே
கள்ளுயிர்க்கு நெய்தற் கனைகடற் றண்சேர்ப்ப
வெள்ளுவர் கீழா யவர்.

(இ-ள்.) கள் உயிர்க்கும்- தேனை வெளிப்படுத்து கின்ற, நெய்தல்- நெய்தல் மலர்களையுடைய, கனை- ஒலிக்கின்ற, கடல்- சமுத்திரத்தின், தண்- குளிர்ச்சி பொருந் திய, சேர்ப்ப- துறைமுகத்தையுடைய பாண்டியனே!, (ஒருவர்), பின் நிற்பின் - (தம்மிடம் சிநேகத்தையோ உதவி யையோ பெற விரும்பிவந்து) பின்னே நின்றால், சான்றோர்- (சற்குணங்களால்) நிறைந்த பெரியோர், இவர் பல நாள் பழையர் என்று- இவர்கள் பல தினங்கள் (நம்மோடு பழகிய) பழமையான நேயர் என்று கருதி, உழை- அவர்களிடத்தில்,

இனியர் ஆகுவர்- இனிமை யுடையராயிருப்பர்: கீழ் ஆயவர்- தாழ்ந்த தன்மையுடைய கீழ் மக்களோ, (அவர்களை), விழை யாதே- விரும்பாமலே, எள்ளுவர்- இகழுவார்கள்; எ-று.

மேலோராயிருப்பவர், தம்மிடம் உதவி பெற வேண்டி ஒரு நாள் தம்பின்னே வந்து நின்றவரையும் பழைய நண்பரென்று சொல்லிக் கொண்டாடி அவர்க்கு வேண்டும் உதவி புரிவர்; கீழ் மக்களோ, அவ்வாறு பின்னே ஒருவர் வந்து நின்றால், அவர் பல நாட்கள் பழகியவராயிருப்பினும் அறியார் போன்று கடுங்சொற் கூறி அவரை விலக்குவதோடு இகழ்ந்தும் பேசுவர் என்பது இதன் கருத்து.

இதில் கீழ்மக்கள், பல நாட்கள் பழகியவரையும், புறக்கணிக்கும் அவர்களுடைய இழிந்த தன்மை கூறப் பட்டது. பழையர்- பழமை யென்னும் பண்புச் சொல்லினடி யாப் பிறந்த பலர் பாற்பெயர்; பழமையின் மையீறு போய், இடை அகரம் ஐயாயிற்று. (கூ)

350. *கொய்புற் கொடுத்துக் குறைத்தென்றுந் தீற்றினும்*
வையம்பூண் கல்லா சிறுகுண்டை - யையகே
ளெய்திய செல்வத்த ராயினுங் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும்.

(இ-ள்.) ஐய- ஐயனே! (அதாவது, பாண்டிய மன்னனே), கேள்- கேட்பாயாக, என்றும்- எந்த நாளிலும், கொய்புல் - அறுக்கத் தகுந்த புல்லை, குறைத்து - அறுத்து, கொடுத்து - தின்னக்கொடுத்து, தீற்றினும்- (குளிப்பாட்டுதல் முதலியவற்றால்) சுத்தப் படுத்தினாலும், சிறு குண்டை - சிறிய எருதுகள், வையம்- தேரை, பூண்கல்லா- பூண்டு இழுத்துச் செல்லமாட்டா, (அவைபோல) (கீழ்மக்கள்), எய்திய- சேர்ந்த, செல்வத்தர் ஆயினும் - செல்வமுடைய வர்களாயிருப்பினும், கீழ்களை - அக்கீழ் மக்களை, காண-

ஆராய்ந்து பார்க்க, செய்தொழிலால்- அவர்கள் செய்கின்ற தாழ்ந்த தொழில்களினாலே, (அவ்வெருதுகளைப்போன்ற தாழ்ந்த தன்மை), படும்-(அவர்களிடத்தே) உண்டாகும்; எ-று.

சிறிய எருதுகளுக்குப் புல்லறுத்துப்போட்டு அவற்றைப் குளிப்பாட்டிச் சுத்தப்படுத்தி வளர்த்தாலும் அவை சிறிய வண்டியைத் தம் சக்திக்குத் தக்கவாறு இழுத்துச் செல்லுமேயன்றிப் பெரிய தேரை யிழுத்துச் செல்ல மாட்டா; அவற்றைப்போலவே கீழ் மக்கள் செல்வம் பெற்றாலும் அவர் இயற்கைப்படி தாழ்ந்த செய்கையைச் செய்வாரே யன்றி மேலான செயல்களைச் செய்யார் என்பது இதிற் கூறப்பட்டது. இங்ஙனம் கூறியது- எடுத்துக்காட்டுவமை யணி.

இச் செய்யுளின் பின்னிரண்டடிகளும் இவ்வதிகாரத் தின் ஏழாம் செய்யுட்கண்ணும் வந்துள்ளன; இவ்வாறு பலர் நூல் செய்யும்போது, ஒருவர் கூறிய சொல்லும் பொருளும், மற்றொருவர் நூலில் தாமே வந்தமைவது இயல்பு. இவ்வித ஒற்றுமையைச் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய சங்க காவியங்களிலும், பிற்பட்ட நூல்களிலும் காணலாம்.

கொய்புல்- வினைத்தொகை; கொய்து போடத்தக்க பக்குவம் வந்த(அதாவது, நன்றாய் விளைந்த) புல் என்பது இதன் கருத்து. 'தீற்றினும்' என்பதற்கு, 'தின்பித்தாலும்' எனப் பொருள் கூறினுமாம்; இஃதிப் பொருள் தருமென்பதை,

''தாநட் டொழுகுதற்குத் தக்கா ரெனல்வேண்டா
யார்நட்பே யாயினும் நட்புக் கொளல்வேண்டும்
கானட்டு நாறும் கதுப்பினாய் தீற்றாதோ
நாய்நட்டால் நல்ல முயல்''

என்னும் (பழமொழி.128-ஆம்) செய்யுளானுணர்க. வையம்- தேர் என்பதை,

> *''இரதமே கொடிஞ்சி யோடு மியந்திரங்*
> *குயவு வையம்''*

என்னும், (சூடாமணி நிகண்டு. 7-வது தொகுதி 44-ஆம் செய்யுளடியாலுணர்க. குண்டை- பால் பகா வஃறிணைப் பெயர்; ஆகலின்; 'பூணிகல்லா' என்னும் எதிர்மறைப் பலவின்பால் வினை முற்றைக் கொண்டு முடிந்தது. (கo)

அதிகாரம் 36
கயமை

கயமை யென்பது- நற்குண மின்மையாம்; அதாவது, கீழ்மக்கள் தன்மையாகிய மூடத்தனமாம்; முந்திய கீழ்மை யென்னும் அதிகாரத்திற் கூறப்பட்டனவும் இதைச் சார்ந் தனவே; எனினும் அதிலடங்காது எஞ்சியவை, அதன்பின் இவ்வதிகாரத்திற் கூறப்படுகின்றன.

351. *ஆர்த்த வறிவின ராண்டிளைய ராயினுங்*
காத்தோம் பித்தம்மை யடக்குப- மூத்தொறூஉந்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற்
போத்தறார் புல்லறிவி னார்.

(இ-ள்.) ஆர்த்த அறிவினர் - (நல்ல நூல் கல்வி யினாலும், கேள்வியினாலும்) நிறைவுபெற்ற விவேகத்தை யுடையவர், ஆண்டு இளையர் ஆயினும் - வயதில் குறைந்த வர்களா யிருந்தாலும், காத்து ஓம்பி- (பொறிபுலன்களைத் தீயவழியிற் செல்லவொட்டாது) தடுத்துத் தம்மைப் பாது காத்து, தம்மை- தங்களை, அடக்குப - அடக்கி நன்மார்க்கத்தி லொழுகச்செய்வர், புல் அறிவினார்- அற்ப அறிவை யுடைய கீழ்மக்கள், மூத்தொறூஉம் - வயது அதிகரிக்குந்தோறும், (அதாவது, மூப்பேற மூப்பேற அடக்கமின்றி), தீதொழிலே

கன்றி- தீய காரியங்களையே செய்து மனம் புண்ணாகி வருந்தி), திரிதந்து - (உலகத்தில்) திரிந்து, எருவைபோல்- கழுகைப்போல, போத்து அறார்- குற்றம் நீங்கமாட்டார்கள்; எ-று.

அறிவுடையவர்கள், வயதிற் சிறியவர்களா யிருந் தாலும் பொறிபுலன்களைத் தீயவழியிற் செல்லவொட்டா மல் அடக்கித் தீக்கதியிற் சாராமற் நம்மைப் பாதுகாத்துக் கொள்வார்கள்; அறிவில்லாத கீழ்மக்கள் வயது முதிர்ந் தாலும், மூப்பு அதிகரிக்க அதிகரிக்க அடக்கத்தைக் கொள்ளா மல் மேலும் மேலும் தீயகாரியங்களையே செய்து துர்க்கதி யிற் சேரத்தக்கவர்களாய் ,மனங்கன்றிக் கழுகைப்போல் எப்பொழுதும் குற்றத்தினின்றும் நீங்காதிருப்பர் என்பது இதன் கருத்து.

இதனால் அறிஞரே முதியோராவர்; அறிவில்லாத வரே சிறியர் என்பது விளக்கப்பட்டது. அறிவுடையோருக்கு நன்மை தீமைகளின் தன்மையும், அவற்றின் பயன்களும் தெரியுமாதலின், அவர்கள் வயதிற் குறைந்தவர்களா யிருந் தாலும் தீமை செய்தால் நரகங் கிடைக்கும், நன்மை செய்தால் சுவர்க்கம் கிடைக்கும் என்றுணர்ந்து நற்காரியங்களையே செய்வர்; அறிவில்லாதவர் நன்மை தீமைகளை உணராராத லின், வயது முதிர்ந்தாலும் பகுத்தறிவற்ற தன்மையால் மனம் போனவாறே தீக்கருமங்களைச் செய்து மனங்கன்றுவர்; மறுமையிலும் நரகமெய்துவர்.

அறிஞர், இளைஞராயினும் நற்செயல் புரிவரென் பதை, கரிகாற் சோழன் சரிதையால் உணரலாம். ''கரிகாற் சோழ னென்பான் இளமையிற் பட்டந்தாங்க, வயது சென்றார் பலர், 'இளைஞனாகிய இவன் எங்ஙனம் அரசியல் நடத்துவான்!' என இகழ்ந்தனர். சோழன் அஃதுணர்ந்து நரைத்த மயிரைச் சிரத்திற்சூடி முதுமைவேடந் தாங்கிக் கொலுமண்டபத்திற்கு வந்து, குறை கூறினோர் மகிழ்வுறு

மாறு அரசியற் காரியங்களை நடத்தி நியாயத்தீர்ப்புச் செய்தான்'' என்பது அச்சரிதையாம்; இதனை,

> ''உரைமுடிவு காணா னிளமையோ னென்ற
> நரைமுது மக்க ளுவப்ப- நரைமுடித்துச்
> சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
> கல்லாமல் பாகம் படும்''

என்னும் (பழமொழி-6-ஆம்) செய்யுள் விளக்கும். கழுகு எவ்வளவு வயது முதிர்ந்தாலும் பிணந்தின்னும் தீத் தொழிலை விடாது; வயது முதிர முதிர அதனிடத்து அத்தீய காரியம் அதிகரித்துக் கொண்டே யிருக்கும்; மேலும் அது, பிணம் விழுந்து கிடக்கும் நெடுந்தூரத்திலுள்ள இடங்களுக் கெல்லாம் சென்றுசென்று அலைந்து வருந்தும்; ஆதலின், வயது முதிரமுதிரத் தீயகாரியங்களையே செய்துகொண்டு வருந்தியலையும் மூடருக்கு அக்கழுகு உவமையாகக் கூறப்பட்டது; இஃதுவமையணி.

இனி, 'எருவை' என்பதற்கு, 'நாணல், அல்லது, கொறுக்கை' எனப் பொருள் கூறலுமொன்று; இப்பொருள் கூறுமிடத்து, 'எருவைபோல் போத்தறார்' என்பதற்கு, 'நாணல்போல் உள்துளையாயிருப்பது நீங்கமாட்டார்' என்று பொருள் விரிக்கவேண்டும்; நாணல் எவ்வளவு முதிர்ந்தாலும் உள்ளே துளையுடையதாகவே யிருப்பதுபோல் கீழ்மக்கள் வயது முதிர்ந்தாலும் உள்ளே அறிவென்னும் உறுதிப்பாடில் லாத துளைபொருந் திய நெஞ்சையுடையவராகவே யிருப்பர் என்க.

பொத்து- குற்றம்; இது எதுகை நோக்கி முதனீட்சி பெற்று, 'போத்து' என்றாயது; துளை- யென்ற பொருளுக்கு, 'துளை' என்று பொருள்படும், 'பொந்து' என்பது வலித்தல் விகாரமும், முதனீட்சி விகாரமும் பெற்று, 'போத்து' என்றாய தெனக் கொள்க. மூத்தொறூஉம்- இன்னிசையளபெடை;

இதில், மூ - முதனிலைத் தொழிற்பெயர். ஆண்டு- வருடம்; இங்கு வயதை யுணர்த்தி நின்றது. 'திரிதந்து' என்பதில், தா- துணைவினை; திரிதா- பகுதி. 'ஆத்தவறிவினவர்' என்றும், 'திரியுந்தெரிவைபோல்' என்றும் பாடபேதங்களுண்டு. (க)

352. *செழும்பெரும் பொய்கையுள் வாழினு மென்றும்*
வழும்பறுக்க கில்லாவாந் தேரை- வழும்பில்சீர்
நூல்கற்றக் கண்ணு நுணுக்கமொன் றில்லாதார்
தேர்கிற்கும் பெற்றி யரிது.

(இ-ள்.) தேரை - தவளைகள், என்றும்- எப்பொழுதும், செழும்- செழிப்பாகிய, பெரும்- பெரிய, (நீர் பெருகிய), பொய்கையுள்- குளத்திலே, வாழினும்- வாழ்ந்து வந்தாலும், வழும்பு- (தம்மீதுள்ள) வழுக்கைத் தன்மையான அழுக்கை, அறுக்க கில்லா ஆம்-நீக்கிக் கொள்ள முடியாதன வாம், (அவைபோல), நுணுக்கம் ஒன்று இல்லாதார்- நுட்பமான அறிவு சிறிது மில்லாதவர், வழும்பு இல்- குற்ற மற்ற, சீர்- சிறப்புள்ள, நூல்- நூல்களை, கற்றக் கண்ணும் - (படித்தாலும், தேர்கிற்கும் - (தம் அறியாமை நீங்கி அறிவு பெற்று (அந்நூற்களின் பொருள்களை உள்ளபடி) தெரிந்து கொள்ளும், பெற்றி - தன்மையானது, அரிது- (அவர்க்குண் டாவது) இல்லையாம்; எ-று.

தவளைகள் அழுக்கை நீக்கத்தக்க நீர் நிறைந்த குளத்தில் என்றும் தங்கியிருந்தாலும் தம்மீதுள்ள வழுவழுப்பான அழுக்கைப் போக்கிக்கொள்ள முடியாதனவாம்; அவை போல கீழ்மக்கள் நூல்களைப் படித்தாலும் தங்கள் அறியாமை நீங்கி அந்நூல்களின் உண்மைப் பொருள்களை யுணரும் சக்தி அவருக்கேற்படாதென்பது இதன் கருத்து.

இதில் தவளைகளை மூடருக்குவமையாகக் கூறி உவமையுருபு கொடாது நிறுத்தியது- எடுத்துக்காட்டுவமை யணி. இந்நூலின் 116-ஆம் செய்யுட்கருத்தும், இச்செய்யுட்

கருத்தும் ஒன்றாம். 'வாழினும்' என்பதிலுள்ள உம்மை- உயர்வு சிறப்புப்பொருளது. 'என்றும்' என்பதிலுள்ள உம்மை - முற்றுப்பொருளது. கில்- ஆற்றற்பொருண்மை விகுதி. நூல் - உவமையாகுபெயராய் நுட்பமான அறிவை விளக்கி நின்றது. (உ)

353. *கணமலை நன்னாட கண்ணின் றொருவர்*
குணனேயுங் கூறற் கரிதாற்- குணனழுங்கக்
குற்றமுழைநின்று கூறுஞ் சிறியவர்கட்
கெற்றா லியன்றதோ நா.

(இ-ள்.) கணம்- கூட்டமாகிய, மலை- மலைகள் சூழ்ந்த, நல்- சிறந்த, நாட- பாண்டிய நாட்டிற்கிறைவனே!, ஒருவர்- ஒரு மனிதரின், கண் இன்று- கண்முன் இல்லாமல், (அதாவது, நேரிலில்லாமல் புறத்தில்), குணன் ஏயும்- நல்ல குணத்தையும், கூறற்கு- (அறிவுடையோர் எடுத்துக்) கூறுவதற்கு, அரிது- அருமையாகும்,(அதாவது; கூறுவதற்கு அவ் வறிவுடையார் மனம் உடன்படாது; அங்ஙனமிருப்ப, கயவர் நல்லோர் முன்னின்றே அவர்மீது பொய்க்குற்றங்களைக் கூறுவர் அவ்வாறு), உழைநின்று- நல்லோரிடத்து நின்று, (அதாவது, நேரில்நின்று), குணன் அழுங்க- அந்நல்லோரது நற்குணங்கள் அழியுமாறு, குற்றம் கூறும்- பொய்க்குற்றங் களை யெடுத்துப் பலரும் கேட்கக்கூறி அவர் மனத்தைப் புண்படுத்துகின்ற, சிறியவர்கட்கு- சிற்றறிவுடைய கீழ்மக் களுக்கு, நா- (அவ்வாறு கூறும்) நாவானது, எற்றால் இயன் றதோ- (மெல்லிய தசையினாலல்லாமல்) எந்தக் கடினமான பொருளாற் செய்யப்பட்டதோ?, எ-று.

ஒரு மனிதருடைய நற்குணத்தைப் புறத்தே கூறலாம்; எனினும் அறிவுடையார், 'இவரைக் காணாதவிடத்திற் புகழ்ந்தாலும் நம்மை இச்சகம் பேசும் அற்பர் என்று அவர் இகழ்ந்து விடுவரோ' என்று அவ்வாறு கூறாதிருந்து விடுவர்; நல்லது கூறுதற்கே அறிஞர் அங்ஙனமஞ்சி யிருப்ப, கீழ்

மக்கள், நல்லோர்மீது பொய்க்குற்றங்களைக் கற்பித்து அவர்க்கு முன்னிலையிலேயே பலரறியக்கூறி அவர் மனத்தைப் புண்படுத்தவர்; இத்தகைய கயவரது நா எந்தக் கடினமான பொருளாற் செய்யப்பட்டதோ என்பது இதன் கருத்து.

''குணனழுங்கக் குற்ற முழைநின்று கூறுஞ் சிறியவர் கட்கெற்றாலியன்றதோ நா'' என்றது- ஆசிரியர் கயவர் இழி குணத்தை வியந்துரைத்ததாம்; இங்ஙனம் கூறிய குறிப்பால், ''பெரியோரின் நாவானது மெல்லிய தசையாலமைந்திருத்த லால், இத்தகைய கடின மொழிகளைக் கூறமாட்டாது; சிறியவர் நா கூறுவதால் அது தசையினாலல்லாமல் ஏதோ கடினமான பொருளாற் செய்யப்பட்டிருக்க வேண்டும்'' என்பன விளங்குவதால், இது குறிப்பெச்சமாம்;

''அவைதாம்,
தத்தங் குறிப்பி னெச்சஞ் செப்பும்''

என்பது (தொல்-சொல்-எச்-44-ஆம்) சூத்திரம். இன்று- இன்றி யென்னும் எதிர்மறைக்குறிப்பு வினையெச்சத்திரிபு. (௩)

354. *கோடேந் தகலல்குற் பெண்டிர்தம் பெண்ணீர்மை*
சேடியர் போலச் செயறேற்றார்- கூடிப்
புதுப்பெருக்கம் போலத் தம் பெண்ணீர்மை காட்டி
மதித்திறப்பர் மற்றை யவர்.

(இ-ள்.) கோடு- மேற்பக்கம், ஏந்து- உயர்ந்திருக் கின்ற, அகல்- விசாலித்த, அல்குல்- மர்மஸ்தானத்தை யுடைய, பெண்டிர்- உயர்குலப் பெண்கள், சேடியர்போல- (தம்முடைய) பணிப்பெண்கள்போல, தம்பெண்ணீர்மை- தம்முடைய பெண் தன்மையை, செயல்-(அலங்காரம்)

செய்து கொள்வதை, தேற்றார்- அறியமாட்டார்கள், மற்றை யவர்- (குலமக ளிரினின்றும் வேறுபட்டவராகிய) பரத்தை யரோ, புது பெருக்கம்போல- புதிய நீர்ப்பெருக்கைப்போல, (அதாவது, புதிய வெள்ளத்தைப்போல), தம் பெண்நீர்மை- தம்முடைய பெண் தன்மையை, காட்டி- (அலங்கரித்துப் பிறருக்குக்) காட்டி, மதித்து- (அவ்வலங்காரத்தைத் தாங் களே) மதித்து, (தற்பெருமை கொண்டு), இறப்பர்- நடப் பார்கள்; எ-று.

இல்லறம் நடத்தும் உயர்குடிப்பெண்கள், தங்கள் அழகைப் பிறர் கண்டு மதிக்கவேண்டுமென்னும் எண்ண மில்லாதவர்; ஆதலால், அவர்கள், தாங்களே தம்மை அலங்கரித்துக் கொள்ளுவதை, அறியமாட்டார்கள்; கணவர் கண்டு களிக்கக் குலமகளிர்க்குரிய பெருந்தன்மையான சிறிது அலங்காரம் அவர்க்கின்றியமையாத தெனினும், அதனைச் சேடியரே செய்து முடிப்பர்; விலை மகளிரோ ஆடவரை மயக்கிப் பொருள்கவரும் இயல்பினராதலால் பிறர் பார்த்து விரும்பும் இடம்பமான அலங்காரத்தைப் பெரிதும் விரும் புவர்; ஆதலின், அவர்கள் தாங்களே, தங்களைப் பல விதங்களாக அலங்கரித்துக்கொண்டு அவ்வலங்காரத்தைத் தாமே மதித்துத் தற்பெருமை பேசிப் பிறர்க்குங் காட்டி மகிழ்வர்.

இங்ஙனங் கூறிய குலமகளிர் தன்மையும், பொது மகளிர் தன்மையும், அறிவுடையார் இயற்கைக்கும், அறி வில்லார் இயற்கைக்கும் உபமானங்களாம். இந்த உபமானங் களால் மேன்மக்களாகிய அறிஞர் புகழத்தக்க செய்கை யுடையவராயினும் தற்பெருமை கூறாமல் இடம்பங்காட்டா மல் அடங்கி யிருப்பரென்பதும், கீழ்மக்களாகிய கயவர், தம்மிடம் புகழத்தக்க செய்கை இல்லாவிடினும், பெருங் காரியத்தை முடித்தாற்போல் இடம்பஞ்செய்து திரிவரென்ப தும் பெறப்பட்டன. இங்ஙனம், உபமானங்களால் உபமே யங்களைப் பெற வைத்தது- பிறிது மொழிதலணி.

புதுவெள்ளம், தனக்கெதிர்ப்பட்ட பொருள்களை யெல்லாம் கவர்ந்து செல்லும்; பல மலர்களும், செடிகளும் தன்மேல் மிதந்து வருதலின் அலங்காரத்தோடும், பேரிரைச்ச லோடும் வேகமாகச் சென்று கொண்டிருக்கும்; பரத்தையர் அலங்காரமும் பலவகை மலர்களாலும், ஆடையாபரணங் களாலும், சிறப்புற்று எதிர்ப்பட்டார் கண்களையும், காமுகர் பொருள்களையும் கவர்ந்துகொள்ளும்; ஆதலின், புது நீர்ப்பெருக்குப் பொதுமகளிரின் அலங்காரத்துக்கு உவமை. யாகக் கூறப்பட்டது; இது, தொழில்பற்றிய உவமை 'பெண்டிர், அலங்காரஞ்செய்து கொள்ளுதலைச் சேடியர் போல் அறியார்' என்று சொன்ன குறிப்பால், 'பெண்டிர்' என்பது குலமகளிரெனக் கொள்ளப்பட்டது; இவரினின்றும் வேறுபட்டவர் விலைமகளிரேயாதலின், 'மற்றையர்' என்ப தற்கு, 'பொதுமகளிர்' என்று பொருள் கொள்ளப்பட்டது. கோடு ஏந்து' என்பதற்கு, 'உயர்ச்சியைத் தாங்கிய' என்றும் பொருள் கொள்ளலாம். *(ச)*

355. தளிர்மேலே நிற்பினுந் தட்டாமற் செல்லா
வுளிநீரர் மாதோ கயவ- ரளிநீரார்க்
கென்னானுஞ் செய்யா ரெனைத்தானுஞ் செய்பவே
யின்னாங்கு செய்வார்ப் பெறின்.

(இ-ள்.) கயவர் - மூடர்கள், தளிர்மேலே- நிற்பினும் - (மிகவும் மெல்லிய) தளிரின்மேலே நின்றாலும், தட்டா மல்- (ஒருவர் மேலே) தட்டியிறக்காமல், செல்லா- அத் தளிரைத் துளைத்துக்கொண்டு கீழிறங்கமாட்டாத, உளிநீரர்- உளியின் தன்மையை யுடையவராவர், (அதாவது, சிறு காரியத்திலும் பிறர் செலுத்தாமல் தாமே செல்லும் ஆற்ற லில்லாதவராவர்), அளிநீரார்க்கு- அருள் தன்மையுடைய வர்க்கு, (அதாவது பிறர் வருத்தங்கண்டு அவர்மீதிரக்கங் காட்டும் அருளுடைய நல்லோர்க்கு), என் ஆனும்- ஏதா வதோர் சிறு உதவியையும், செய்யார்- செய்யமாட்டார்கள், இன்னாங்கு செய்வார் பெறின்-(தமக்கு) இடர் செய்வாரைப்

பெற்றால், (அதாவது, கொடியர் வந்து தம்மை வருத்தினால்), எனைத்து ஆனும்- எவ்வளவு பேருதவியானாலும், செய்ப-(அவர்கட்குச்) செய்வார்கள்; எ-று.

உளியானது, மெல்லிய தளிரின்மேல் நின்றாலும், பிறர் தட்டி யிறக்கினால் மாத்திரமே அதனை யூடுருவிச் செல்லும்; அதைப்போல கீழ் மக்கள் சிறு காரியத்தையும் தாமே செய்ய இயலாதவராவர்; பிறர் செய்வித்தால் மாத்திரமே செய்வார்; பிறர்க்குக் கருணைகாட்டும் பெரியோர்க்குச் சிறு உதவியையும் செய்ய மாட்டார்கள்; தமக்குத் தீங்கு செய்வார்க்கு எவ்வளவு பெரிய உதவியையும் செய்வார்கள் என்பது இதன் கருத்து.

உளியைக் கீழ் மக்களுக்கு உவமையாகக் கூறியது - உவமையணி. 'உளி நீரர்' என்பதால், 'கீழ் மக்கள் சிறு காரியத்தையும் தாமே செய்ய மாட்டார்கள்' என்பது பெற வைத்தது- குறிப்பெச்சம். இச்செய்யுளின் முன்னிரண்டடிகளின் கருத்தை,

''விட்டுக் கருமஞ் செயவைத்த பின்னரும்
முட்டா தவரை வியங்கொளல் வேண்டுமால்
தொட்டக்கான் மாழ்குந் தளிர்மேலே நிற்பினும்
தட்டாமற் செல்லா துளி''

என்னும் (பழமொழி.169-ஆம்) செய்யுளு முணர்த்தும். கீழ்மக்கள் நல்லார்க்குதவாமல் வம்பர்க்குதவல் பயனற்றதாம்; இதனை,

''விரும்பி யடைந்தார்க்குஞ் சுற்றத் தவர்க்கும்
வருந்தும் பசிகளையார் வம்பர்க் குதவல்
இரும்பணைவில் வென்ற புருவத்தா யாற்றக்
கரும்பனை யன்ன துடைத்து''

என்னும் (பழமொழி.220-ஆம்) செய்யுளானுணர்க. 'அளி நீரர்' என்பதற்கு, பிறர் இரங்கத் தக்க தன்மையுடையவர், (அதாவது, வறுமைத் துன்பத்தை அனுபவிப்பர்)' என்று பொருளுரைப்பினுமாம்; இது மிகப் பொருத்த முடைத்து. 'இன்னாங்கு செய்வார்க்குச் செய்ப' என்பது- தீமை செய்யுங் கொடியவர்வந்து பொருளைப் பறித்துக்கொள்ளக் கீழோர் இழப்பர்' என்பதைக் குறிக்கும்; இஃதிலக்கணை வகையாற் பெறப்படும். 'நிற்பினும்' என்பதிலுள்ள உம்மை- உயர்வு சிறப்புப் பொருளது. மாது, ஓ- ஈற்றசை. (ரு)

356. *மலைநல முள்ளுங் குறவன் பயந்த*
விளைநில முள்ளு முழவன் சிறந்தொருவர்
செய்தநன் றுள்ளுவர் சான்றோர் கயந்தன்னை
வைததை யுள்ளி விடும்.

(இ-ள்.) குறவன்- வேடன், மலை நலம்- (தன் இருப்பிடமாகிய) மலையினது வளத்தையே, உள்ளும்- நினைப்பான், உழவன்- பயிர்த்தொழில் செய்பவன், பயந்த- (தனக்கு நல்ல பலனைக்) கொடுத்த, விளை நிலம்- (தானியங்கள்) விளைகின்ற நிலத்தை, உள்ளும்- சிந்தித்துக் கொண்டிருப்பான், சான்றோர்- அறிவால் நிறைந்த பெரியோர், ஒருவர் செய்த நன்று- ஒரு மனிதர் தமக்குச் செய்த நன்றியை, சிறந்து- சிறப்பாக, உள்ளுவர்- நினைத்துக் கொண்டிருப்பார்கள், கயம்- கீழ் மகன், தன்னை வைததை- தன்னை ஒருவர் திட்டியதையே, உள்ளிவிடும்- (இடைவிடாது) நினைத்துக் கொண்டே யிருப்பான்; எ-று.

குறவன் மலையிலே வாழக்கூடியவனாதலின், அந்த மலையிற் கிடைக்கும் வேட்டைகளையும், தினைவிளைவு, தேன் முதலியவற்றையும் விரும்பி அம்மலையின் வளத்தையே நாடுவன்; உழுதொழிலோன், நிலத்தில் விளைபொருள்களைக் கொண் டுயிர் வாழ்பவனாதலின்,

அவற்றை அடைதற்கு அந்நிலத்தைப் பண்படுத்துவதிலேயே நாட்டமுடையவனாயிருப்பான்; சான்றோர் செய்ந்நன்றி யறிதல் முதலிய நற் செயல்களால் நம்மையுண்டாகு மென்பதை யுணர்ந்தவர்ளாதலின், பிறர் தமக்குச் செய்த நன்றியை நினைத்து எக்காலத்துமவர் மீது நேயமுடையவ ராகவே யிருப்பர்; இவை இவர்களின் இயற்கைகளாம். கீழ் மகனோ பிறரோடு பகைத்துக் கொள்ளுதலையும், அவர்க் கிடர் செய்தலையுமே தனக்கியற்கைக் குணங்களாகவுடைய வனாதலின், அப்பகை முதலியவற்றிற் கேதுவாகப் பிறர் திட்டியதையே மறவாமல் நினைத்து அவர்க்கிடர் செய்வ திலேயே நாட்டமுடைய வனாயிருப்பான்.

இதனால் கீழ் மகனது இயற்கைக்குணங் கூறப்பட் டது இங்குச் சான்றோர் முதலியவர்களையும் உடன் கூறியது அக்கீழ்மகனின் இழிதகவு தோன்றற்கென்க. கயம்- கீழ்மைக் குணம்; இது குணவாகு பெயராய்க் கீழ்மகனை யுணர்த்திற்று; 'கயம்' என்னும் அஃறிணைப்பெயரால் அவனைக் கூறியதும் அவனிழிவு தோன்றற் பொருட்டேயாம். குறம்- குறி; குறி சொல்வோர்- குறவர்; குறிஞ்சி நிலமக்கள்; இவர்க்குக் குறி சொல்வதியற்கை; குறி சொல்வது- மனதிற்குறித்த காரியத் தைச் சொல்வது; வருங்காரியம் சொல்வது. குறவன்- மலை யில் வாழ்பவன். உழவன்- உழு தொழிலுக்குரிய மருத நிலத்துள்ளான். 'சிறக்க' என்னும் செயவெனெச்சம், 'சிறந்து' எனச் செய்தெனெச்சமாகத் திரிந்து நின்றது. 'உள்ளி விடும்' என்பதில், விடு- துணைவினை; துணிவுப் பொருளை யுணர்த் தும் விகுதியுமாம். (சூ)

357. *ஒரு நன்றி செய்தவர்க் கொன்றி யெழுந்த*
பிழை நூறுஞ் சான்றோர் பொறுப்பர்- கயவர்க்
கெழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயி
னெழுநூறுந் தீதாய் விடும்.

(இ-ள்.) சான்றோர் - (கல்வி கேள்விகளால்) நிறைந்த பெரியோர், ஒரு நன்றி செய்தவர்க்கு - (தமக்கு) ஒரு நன்மை செய்தவரிடத்து, ஒன்றி - (தொடர்ச்சியாகப்) பொருந்தி, எழுந்த- உண்டாகிய, பிழை நூறும்- நூறு குற்றங்களையும், பொறுப்பர்-(தமக்கவர் முன்பியற்றிய நலங்கருதிப்) பொறுத்துக் கொள்வர், கயவர்க்கு- கீழ் மக்களிடத்து, எழுநூறு நன்றிசெய்து, (ஒருவர்) எழுநூறு நன்மைகளைச் செய்து, தீது, ஒன்று ஆயின்- (அவரால்) ஒரு தீமை நேருமாயின், எழுநூறும்- (அவர் செய்த அந்த) எழுநூறு நன்மைகளும், தீது ஆய்விடும்- தீயனவாகிவிடும்; எ-று.

பெரியோர், தமக்கொருவர் ஒரு காலத்தோர் நன்றியைச் செய்துவிட்டுப் பின்னர்ப் பல தீமைகளைச் செய்யினும் அந்த ஒரு நன்றி கருதி அப்பிழைகளைப் பொறுத்துக் கொள்வர். கீழ் மக்களுக்கு ஒருவர் பல நன்மைகளையே செய்து ஒரு சமயத்தில் ஒரு தீங்கைச் செய்துவிட்டால், அக்கீழ்மக்கள் அந்த ஒரு குற்றத்தைக் கருதி அவர் முன் செய்த பல நன்மைகளையும் மறந்து அவர்க்குத் தீங்கு செய்யத் தொடங்கி விடுவர் என்பது இதன் கருத்து.

இதனால், சான்றோர் பொறுமையும், கீழோர் பொறுமையின்மையும் விளக்கப்பட்டன.

''கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்''

என்று (திருக்குறள் 109-ஆம் செய்யுளிற்) கூறியபடி நன்றி யறிதற்குணம் பெரியோரிடத்துண்மையின், அவர், ஒரு நன்றி கருதிப் பல தீமைகளையும் பொறுத்துக் கொள்வர்; கீழ் மக்கள், செய்ந்நன்றி யறியாத் தகவினராதலின் ஒரு பிழை குறித்துப் பல நன்றிகளையும் மறப்பர். இச்செய்யுளிற் கூறியபடி பெரியோரியல்பும், சிறியோரியல்பும்,

''ஒன்றுதவி செய்யினுமவ் வுதவிமற வாமற்
பின்றையவர் செய்பிழை பொறுத்திடுவர் பெரியோர்
நன்றிபல வாகவொரு நவைபுரிவ ரேனுங்
கன்றிடுவ தன்றிமுது கயவர்நினை யாரே.''

என்ற வில்லிபாரதச் செய்யுளிலும் கூறப்படுதலுணர்க. நூறு, எழுநூறு என்ற எண்கள், மிகப் பலவென்னும் பொருள் குறித்து வந்தன. 'செய்தவர்க்கு, கயவர்க்கு' என்பன- ஏழனுருபு நான்கனுருபாக மாறி வந்த உருபு மயக்கங்கள். எழுநூறும் தீது- பன்மை யொருமை மயக்கம். (எ)

358. *ஏட்டைப் பருவத்து மிற்பிறந்தார் செய்வன*
மோட்டிடத்துஞ் செய்யார் முழுமக்கள்- கோட்டை
வயிரஞ் செறிப்பினும் வாட்கண்ணாய் பன்றி
செயிர்வேழ மாகுத லின்று.

(இ-ள்.) வாள்- வாளாயுதம் போன்ற, கண்ணாய்- கண்களையுடைய பெண்ணே!, கோட்டை - (தன்னுடைய) தந்தங்களிலே, வயிரம் செறிப்பினும் - பூண்கட்டினாலும், பன்றி- வராகமானது, செயிர்- கோபத்தையுடைய, வேழம் ஆகுதல் இன்று - யானையாகிப் போர்செய்தல் இல்லை; (அதுபோல), இல் பிறந்தார் - உயர்ந்த குடியிற் பிறந்த மேன் மக்கள், ஏட்டை பருவத்தும்- வறுமையுண்டான காலத்தும், செய்வன செய்யும் நல்ல காரியங்களை, முழுமக்கள்- மூடர்கள், மோட்டு இடத்தும்- (பொருளுடையாராய்) உயர்ந்திருகின்ற காலத்திலும், செய்யார்- செய்யமாட்டார் கள்; எ-று.

பன்றியின் தந்தங்களுக்குப் பூண் கட்டினாலும் அது போர் செய்தற்குரிய யானையாகாது; அதைப்போல, கீழ் மக்கள், பொருளுடைவரா யிருந்தாலும், பெரியோர் வறுமை

யுற்ற காலத்துச் செய்யும் நல்ல காரியங்களைச் செய்ய மாட்டார்கள் என்பது இதன் கருத்து.

யானை, கொம்புக்குப் பூணில்லாவிடினும் போர்த் தொழில் புரியும்; பன்றி, தன் தந்தங்களுக்குப் பூண் கட்டப் படினும் போர் செய்தற்குரிய தாகாது. 'பன்றி கோட்டை வயிரஞ் செறிப்பினும்' என்றதால், 'வேழத்திற்கு வயிரம் செறிக்காவிடினும் அது, போர் செய்யும்' என்பது குறிப்பாற் பெறப்படும்; இது குறிப்பெச்சம். இச்செய்யுள் எடுத்துக் காட்டுவமையணியமைந்தது. பெரியோர் செய்வன சிறியார் செய்யாரென்பது,

''தந்தொழி லாற்றுந் தகைமையார் செய்வன
வெந்தொழில ராய வெகுளிகட்குக் கூடுமோ
மைந்திறை கொண்ட மலைமார்ப வாகுமோ
நந்துழுத வெல்லாம் கணக்கு''

என்னும் (பழமொழி-92-ஆம்) செய்யுளானும்,

''செயற்கரிய செய்வார் பெரியார் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்''

என்னும் (திருக்குறள்-26-ஆம்) செய்யுளானு முணரப்படும். இந்நூல் 149, 184-ஆம் செய்யும் கருத்துக்களும், இச்செய்யுட் கருத்தும் ஒரு தன்மையன. பன்றிக்குச் சிங்கப் பற்கள் கோடு போல் வளர்ந்து வ்ளைந்திருக்கும்; இவையே கொம்புக ளெனப்படும்; இக்காரணம் பற்றியே பன்றிக்குக், 'கோட்டுமா' என ஒரு பெயரும்; வழங்கப்படுகின்றது; இது, சூடாமணிநிகண்டு, விலங்கின் பெயர்த் தொகுதி-19ஆம் செய்யுளாலுணரப்படும்.

ஏட்டை- வறுமை. மோடு- உயர்வு. மூடர்கள், உண்ணல், உடுத்தல் முதலியவற்றில் குறைவுபடாமல்,

கல்வி கற்பது முதலியவைகளால் உடலும் மனமும் வணங்குதலில்லாது மரம்போல் பருத்து நிமிர்ந்திருத்தல் பற்றி, 'முழுமக்கள்' எனப்பட்டார்; அறிவின்றி மனித வடிவத்திற் சிறிதும் குறைவில்லாதவர் என்பது இதன் கருத்து; இது பரிகாசச் சுவைதோன்றக் கூறப்பட்டது. கோட்டை- நான்கனுருபு, இரண்டனுருபாக மயங்கி வந்த உருபு மயக்கம். 'வயிரம் செறிப்பினும்' என்பதற்கு, 'வச்சிர மணி பதித்து அலங்கரித்தாலும்' என்று பொருளுரைப் பினுமாம். (அ)

359. *இன்றாது மிந்நிலையே யாது மினிச்சிறிது*
நின்றாது மென்று நினைத்திருந் -தொன்றி
யுரையின் மகிழ்ந்துதம் முள்ளம்வே றாகி
மரையிலையின் மாய்ந்தார் பலர்.

(இ-ள்.) (கீழ்மக்களாயினாருள், சிறிது செல்வம் பெற்றவர்களில்) இன்று ஆதும்- இன்று தினம் பொருளுடையவராவோம், இந்நிலையே-(இப்போதுள்ள) இந்நிலையிலேயே, (அதாவது, இத்தருணத்திலேயே), ஆதும்- ஐசுவரியமுடையவராவோம், இனி- இனிமேல், சிறிது நின்று- சிறிதுகாலம் தாழ்த்திருந்து, ஆதும்- செல்வமுடையவராவோம், என்று நினைத்து- என்று (தம்மிடமுள்ள சிறிது பொருளைக் கொண்டு மேலும் பொருள் தேடுவதையே ஒவ்வொரு சமயத்திலும்) சிந்தித்து, இருந்து (தருமகாரியங்களைச் செய்யாமல் வீணே காலத்தைக் கழித்து) இருந்து, ஒன்றி - (அந்த மனோராச்சியத்திலே) பொருந்தி, உரையின்-(அவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும் பேராசைமிகுந்த), சொல்லினாலே, மகிழ்ந்து- (தமக்குள் தாங்களே) மகிழச்சியடைந்து, (தாம் நினைத்தபடி பொருள் கைகூடாமையினாலே முடிவில் தம்மிடமிருந்த பொருளும் ஒழிய) தம் உள்ளம் வேறு ஆகி- தம்முடைய மனம் வேறுபாடுற்று; (அதாவது, முன்னிருந்த நிலைமையினின்றும் மாறுபாடடைந்து), மரை இலையின்- தாமரை யிலையைப் போல, (அதாவது, தாமரையிமைல தண்ணீருள்ளவரை

இருந்தவிடத்திலிருந்தே முதலிற் செழிப்புற்றுப் பின் நீர் வற்றியவுடன் கருகி யொழிவது போல), பலர்- அநேகர், மாய்ந்தார் - (ஒரு பயனையும் அடையாமல்) இறந்தொழிந் தார்.-எ-று.

தம்மிடமுள்ள சிறு செல்வத்தைக்கொண்டு, இன்று தினம் செல்வமுடையவராவோம், இப்பொழுதே பணக்கார ராவோம்; சிறிதுநேரஞ் சென்றபின் பொருளுடையராவோம் என்று பொருளைத் தேடுவதிலேயே மனோராச்சியம் பண் ணிப் புத்தியைச் செலுத்தித் தருமஞ் செய்யாமல் வீண்காலம் போக்கி, நினைத்தபடி பொருளையும் பெறாமல் முடிவில் இருந்த பொருளும் தொலைய அறப்பயனையும் இழந்து, கீழ்மக்களுட் பலர், தாமரையிலே இருந்தவிடத்திலிருந்தே நீருள்ளவரை பசழிப்புற்றுப் பின்னர் நீர் வற்றியவுடன் காய்ந் தொழிவதுபோல இறந்தொழிவர் என்பது இதன் கருத்து.

தாமரையிலை உற்பத்தியானதிலிருந்து நீருள்ளவரை செழிப்புற்றிருக்கும்; பின் அந்தத் தண்ணீர் வற்றியவுடன் கருகி யொழியும்; அதைப்போல் கீழ்மக்கள், தம்மிடம் சிறிது பொருளிருந்தால் அதைக்கொண்டு பணக்காரராய்விடு வோம் என்று பலவித மனோராச்சியம் செய்துகொண்டு, அச்சிறு பொரு ளிருக்கும்போதே இயன்றவரை அறஞ்செய்து புண்ணியத்தைத் தேடாதிருப்பர்; பின்னர் அச்சிறு பொருளும் நீங்கிவிடும்; அப்போது அவர் வாட்டமடைவதோடு அறந்தேடுவதற்கும் முடியாமல் வீணே இறந்தொழிவர். இவர்க்கு அறிவின்மையால் ஒரு பயனுமில்லாமற் போய் விடுகின்றது. அறிவுடையார் அப்படியின்றிச் சிறிது பொரு ளிருக்கும் போதே வீண் மனோராச்சியம் பண்ணாமல் நிலைத்த பொருளாகிய அறத்தைத் தேடிக்கொள்வர்.

இதில், ''மாய்ந்தார் பலர்'' என்று பொதுவாக மனிதரைக் குறிப்பிட்டுரைப்பினும் அதிகாரப் பொருண்மை நோக்கி, இதற்கு, 'கீழ்மக்கள்' என்று பொருள் கொள்ளப்

பட்டது; மேலும், இதிற் கூறப்பட்ட செயல்கள் கீழ் மக்க ளுக்கே உரியனவாதலானும், 'கயவர்' என்பது குறிக்கப் படும். கீழ்மக்களுக்கத் தாமரையிலையை உவமை கூறியது - உவமையணி.

'தாமரை' யென்பது முதற்குறை விகாரமாய், 'மரை' யென்றாயது; ''ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே'' என்பது (நன்-உயி-பு-6-ஆம்) சூத்திரம்; இங்ஙனமாவது, செய்யுள் விகாரமாம்- ஆதும்- தன்மைப் பன்மை வினை முற்று. உரையின் - ஏதுப்பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமை விரி. இச்செய்யுளின் முதலடி சீர் தோறும் மோனைபெற்று முற்றுமோனையாய் முடிந்தது. 'இன்னினியே' என்றும் பாடபேதமுண்டு. (கூ)

360. *நீருட் பிறந்து நிறம்பசிய தாயினு*
மீரங் கிடையகத் தில்லாகு- மோரு
நிறைப்பெருஞ் செல்வத்து நின்றக் கடைத்து
மறைப்பெருங்க லன்னா ருடைத்து.

(இ-ள்.) கிடை- சடையானது, நீருள் பிறந்து- தண்ணீரிலேயே உற்பத்தியாகி, நிறம் பசியது ஆயினும்- நிறத்தால் பசுமை யுள்ளதா யிருப்பினும், அகத்து- அத னுள்ளே, ஈரம் இல் ஆகும்- ஈரமில்லாததாகும், (இதைப் போல), ஓரும்- (அறஞ்செய்வதற்கே உரியதாமென) உணர் கின்ற, (அதாவது, அறத்திற்குரிய), நிறை பெரு செல்வத்து - நிறைந்த பெரிய செல்வத்தில், நின்றக்கடைத்தும்- இருந்த போதிலும், அறை- பாறையாகிய, பெரு- பெரிய, கல் அன்னார் - கல்லைப்போன்றவரை, (அதாவது, கல்லைப் போன்ற கடின சித்தமுடையவரை), உடைத்து- (உடைய தாகும், (இவ்வுலகம்); எ-று.

சடையானது நீரியேயே பிறந்து பசியநிறமுடையதா யிருந்த போதிலும் அதனுள்ளே ஈரமில்லாதிருப்பதுபோல

மிகுந்த செல்வத்திலிருந்தாலும் நெஞ்சிரக்கமற்றவர் உண்டு; அவரை இவ்வுலகமுடையது என்பது இதன் கருத்து.

கிடை- நெட்டி. கல் அன்னார்- கயவர். செல்வமானது அறஞ்செயற்கே உரியதென்பது நூற்களின்றுணிபு; ஆதலின், ''ஒரும்................ செல்வம்'' என்பதற்கு ''அறஞ்செய்தற் குரியதா மென்றுணர்கின்ற செல்வம்'' என்று பொருளுரைக் கப்பட்டது. இங்ஙனம் அறத்திற் குரியதாகிய செல்வத்தைப் பெறினும் மனமிரங்கி அதைப் பிறர்க்கீயாத கயவர் அறி வில்லாதவராகலின், அஃறிணைப் பொருளாகிய கடினத் தன்மையுள்ள கல்லோடொப்பவராகக் கூறப்பட்டார். முன் னிரண்டடிகளில் கூறியது எடுத்துக்காட் டுவமையணி. ஈற்றடியில், 'கல்லன்னார்' என்பது- உவமையணி. இச்செய் யுளிற் கூறியபடி கயவர் மனங் கல்லாமென்பதை,

''வைகலு நீருட் கிடப்பினுங் கல்லிற்கு
மெல்லென்றல் சால வரிதாகு மஃதேபோல்
கைவலு நல்லறங் கேட்பினுங் கீழ்கட்குக்
கல்லினு வல்லென்னு நெஞ்சு''

என்னும் (அறநெறிச்சாரம்-51-ஆம்) செய்யுளும் விளக்கும். ஓரும்- அசை யெனினுமாம். வினைத்தொகையில் இயல் பாய் வரவேண்டிய, 'நிறைபெரும்' என்பது, எதுகை யின்ப நோக்கி, 'நிறைப்பெரும்' என வலிமிக்கு வந்தது. 'உலகம்' என்னும் எழுவாய் இசை யெச்சமாக வருவித்துரைக் கப்பட்டது. (கо)

7-வது

பன்னெறியியல்

பன்னெறியியலாவது- பல வகைப்பட்ட நீதிகளைச் சொல்லும் இயலாம். இந்நூலிற்கு அதிகாரம் வகுத்த பதுமனார், இப்பொருட்பாலிற்குப் பொருத்தமான செய்யுட்களில், ஒவ்வொரு அதிகாரத்துக்கும் பொருத்தமான பப்பத்துச் செய்யுட்களை யெடுத்துச் சேர்த்து, அவற்றுள் அடங்காது எஞ்சியவற்றைத் திரட்டி ஓரதிகாரமாக்கி, அவ்வோரதிகாரத்தையே, 'பன்னெறியியல்' என ஓரியலாக்கி இப்பொருட்பாலி னீற்றில் வைத்தனர்; ஆதலின், இதில் ஒன்றோடொன்று தொடர்பில்லாத பலவகை நீதிகளுள்ள செய்யுட்களே காணப்படும். பல+நெறி= பன்னெறி என்றாயது; 'பல' என்பதில் ஈற்றகரங்கெட, லகரவொற்று னகர வொற்றாகத் திரிந்தது; ''வல்லெழுத் தியற்கை யுறழத் தோன்றும்'' என்னும் (தொல்-எழுத்-உயிர்.ம.13-ஆம்) சூத்திரவுரை பார்க்க.

அதிகாரம் 37

பன்னெறி

பன்னெறியாவது, பல நீதிகள், இவ்வதிகாரம் அத் தகைய பல நீதிகளைப்பற்றிக் கூறுவதாகலின், இப்பெயர் பெற்றது.

361. *மழைதிளைக்கு மாடமாய் மாண்பமைந்த காப்பா*
யிழைவிளக்கு நின்றிமைப்பி னென்னாம்-
விழைதக்க
மாண்ட மனையாளை யில்லாதா னில்லகம்
காண்டற் கரியதோர் காடு.

(இ-ள்.) விழைதக்க- விரும்பத்தகுந்த, மாண்ட- (நற்குண நற்செயல்களால்) மாட்சிமைப்பட்ட, மனையாளை- மனைவியை, இல்லாதான்- அடைந்தில்லாதவனது, இல்லகம் - வீடானது, மழை திளைக்கும்- மேகம் சஞ்சரிக்கின்ற, மாடம் ஆய்- மேலுப்பரிகையை யுடையதாகவும், மாண்பு அமைந்த- மாட்சிமை பொருந்திய, காப்பு ஆய்- காவலையுடையதாகவும், (தன்னிடத்தே), இழை விளக்கு- கூட்டமாகிய விளக்குகள், நின்று இமைப்பின்- நின்று பிரகாசித்தாலும், என் ஆம்- என்ன பயனுடையதாம்?, காண்டற்கு அரியது - கண்களாற் பார்த்தற்கும் கூடாததாகிய, ஓர் காடு - ஒரு காடாம்; எ-று.

ஒருவனுடைய வீட்டில் எத்தகைய செல்வச் சிறப் புக்கள் பொருந்தியபோதிலும், அவனுக்கு நல்ல மனைவி அமைந்திராவிடில் அவ்வீடு சிறப்பிழந்த காட்டையே நிகர்த்ததாகும் என்பது இன் கருத்து.

இல்லறத்துக்கு முக்கிய துணைக்கருவியாயுள்ளவள் நற்குணமுள்ள மனையாளே; அவளிருந்தால் மாத்திரமே இல்லற தர்மம் முட்டின்றி நடைபெறும்; இல்லையேல் அவ்வறமின்றாம்; அறமில்லாத வீடு பயனற்றதாம்; ஆதலின் நன்மனையாளில்லாத வீடு காடு போன்றதாமென்றனர் முனிவர். இதனை,

''இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை''

என்னும் (திருக்குறள் 53-ஆம்) செய்யுளாணுணர்க. ''பாழே மடக்கொடியில்லாமனை'' என்பதும் இதனை யுணர்த்தும்.

மாடம் - மாளிகையின் மேற்பாகம்; இதற்கும், மேகத் திற்கும் சம்பந்தமில்லா திருந்தும், 'மழை திளைக்கும்மாடம்' எனச்சம்பந்தங் கற்பித்துக் கூறியது - தொடர்புயர்வு நவிற்சி யணி. காவலுக்கு மாண்பாவது- திடமாகக் காவல் புரிதலாம். விளக்குகள் கூட்டமாகப் பிரகாசிப்பது செல்வச் சிறப்பை விளக்கும்; செல்வமில்லாத வீடு ஒரு விளக்குக்கும் பஞ்ச மாய் இருள் சூழப்பெற்றிருக்கும்; இனி, 'இழைவிளக்கு' என்பதற்கு, 'ஆபரணங்களின் ஒளியாகிய விளக்கு' என்று பொருள் கொள்ளினுமாம்; இதுவும் செல்வ மிகுதியை விளக்கும்; இழை- இரத்தினங்கள் இழைத்துச் செய்யப்படு வது; ஆபரணத்திற்குக் காரணக் குறி; இன்னும், 'இழை விளக்கு' என்பதற்கு, 'நூற்றிரிகளா லேற்றப்பட்ட விளக்கு கள்' எனப் பொருள் கூறுவாருமுளர். (க)

362. *வழுக்கெனைத்து மில்லாத வாள்வாய்க் கிடந்து*
மிழுக்கினைத் தாம்பெறா ராயி -
னிழுக்கெனைத்துஞ்
செய்குறாப் பாணி சிறிதேயச் சின்மொழியார்
கையுறாப் பாணி பெரிது.

(இ-ள்.) அ சில்மொழியார்- அந்த அற்பமான வார்த்தைகளையுடைய கற்பில் மகளிர், வழுக்கு எனைத்தும் இல்லாத- தவறுதல் சிறிதுமில்லாத, வாள்வாய்- வாளின் காவலினிடத்தே, (அதாவது, வாள் கைக்கொண்ட வீரரின் காவலுக்குட்பட்டு), கிடந்தும்- (அடங்கி) இருந்தும், இழுக் கினை - (அக்காவலில்) சோர்வை, தாம் பெறார் ஆயின்- தாம் பெறாராயினும், (அதாவது, அக்காவல் சோர்வில்லாததா யிருந்தாலும்), (அவர்), இழுக்கு எனைத்தும் - (கற்பில் தவறுதலாகிய) குற்றமெவ்வளவும், செய்குறா - செய்யாம லிருக்கின்ற, பாணி- காலம், சிறிதே- சிறிதளவேயாகும், கைஉறா- (கற்பாகிய)நல்லொழுக்கத்தைக் கொள்ளாத, பாணி- காலமோ, பெரிது- பெரிதாகும்; எ-று.

இழிந்த பேச்சுகளையுடைய கற்பில்லாத பெண்கள், சோர்வில்லாத வாள்வீரர் காவலுக் குட்பட்டிருந்தாலும், அக்காவலால் கற்பொழுக்கம் சிறிதும் தவறாமலிருந்த காலம் சிறிதாகும்; கற்புத் தவறிய காலம் பெரிதாகும் என்பது இதன் கருத்து.

கற்பில்லாத பெண்களைக் கடுங்காவலில் வைத்துப் பாதுகாத்தாலும் அவர்கள் மிகுதியும் கற்பொழுக்கத்தில் தவறியே நடந்து கொண்டிருப்பார்கள்; ஆதலால் அக் காவலால் பயனில்லை; கற்பைப் பாதுகாக்கவேண்டு மென்னும் எண்ணம் அவர்களுக்கு இயற்கையாகவே அமைந்திருந்தால் மாத்திரமே அவர்கள் கற்பினைக் காப் பாற்றுவார்கள்; அத்தகையினர்க்குக் காவல் வேண்டிய தில்லை யென்பது இதனால் கூறப்பட்டது. இதனால், பிறர்

காவல் பெண்களின் கற்பைக் காப்பதில்லை யென்பது பெறப்படும்; இதனை,

''சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை''

என்னும் (திருக்குறள்-57-ஆம்) செய்யுள் விளக்கும். கற்பில்லாத மகளிர் காவலி லிருக்கும் போது ஏதோ ஒகு நேரத்தில் மாத்திரம் பிறரை விரும்புதலாகிய தீய எண்ணத்தை மறந் திருப்பர்; மற்ற நேரங்களிலெல்லாம் பிறர் தோள்சேரும் எண்ணமுடையவர்களாகவே யிருப்பர்; அவ்வெண்ணத்தை யும் பலவகை உபாயங்களாற் பூர்த்தி செய்து கொள்வர்; ஆதலின் அவர், 'இமூக்கெனைத்தும் செய்குறாப் பாணி சிறிது' என்றும், 'கையுறாப்பாணி பெரிது' என்றும் கூறினர் முனிவர்.

கற்பொழுக்கமில்லாதவர், எப்பொழுதும் அற்பமான வார்த்தைகளையே பேசிக்கொண்டிருப்பர்; பிறர் நிந்திக்கும் இழி சொல்லுக்கும் இலக்காகுவர்; ஆதலின், இவ்விரு வகைக் காரணங்களைக் கொண்டு அவரைச், 'சின்மொழியார்' என்றார் ஆசிரியர்; சில்-அற்பம். 'சின்மொழியார்' என்ற குறிப்பாலும், 'இமூக்கெனைத்தும் செய்குறாப்பாணி சிறிது, கையுறாப்பாணி பெரிது' என்ற குறிப்பாலும் அவர் கற்பில் மகளிரென்பது தானே பெறப்பட்டது; இங்ஙனங்கொள்ளாமல் இச்செய்யுளிற் கூறப்பட்டவைகளைப் பொதுவாகப் பெண்களுக்குக் கொள்வது பொருத்தமற்றதாம், கற்புடை மகளிர்க்கும் இக்குற்றம் சாருமாகலின், கற்பின்மை அற நெறிக்குப் புறம்பானதாதலின், அதனை விளக்கற்குத் தூரச் சுட்டாகிய அகரச் சுட்டுக் கொடுத்து, 'அச்சின்மொழியார்' என்றுரைத்தார் முனிவர்.

உம்மை- உயர்வு சிறப்புப் பொருளது; 'ஆயின்' என்பதிலும் இவ்வும்மை தொக்கது. இவ்விரண்டையும்

எண்ணும்மைகளாகக் கொள்ளினுமாம். (உ)

363. *எறியென் றெதிர்நிற்பாள் கூற்றஞ் சிறுகாலை*
அட்டில் புகாதா ளரும்பிணி- அட்டதனை
யுண்டி யுதவாதா ளில்வாழ்பே யிம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை.

(இ-ள்). (கணவன், தன் தவறுகண்டு கோபங் கொண்ட பொழுது அடங்கிச் சாந்தமா யிருந்து அக்கோபத் தைத் தணிக்காமல்), எறி- என்னை, நீ அடி, என்று- மேலும் கோபம் அதிகரிக்கும்படி சொல்லி, எதிர் நிற்பாள்- (அஞ்சா மல் சண்டை போடுதற்கு) எதிர்த்து நிற்பவள், கூற்றம்- (அவனைக் கொல்லும்) யமனேயாவாள், சிறுகாலை- உதய காலத் தொடக்கத்திலேயே, அட்டில்- சமையல் வீட்டிலே, புகாதான்- (உணவு சமைத்தற்கு) நுழையாதவள், (அதாவது, அதிகாலையிலேயே சமையல் வீட்டிற் புகுந்து நேரத்தோடு சமையல் செய்யத் தொடங்காதவள்), அரும்பிணி- (அவ னுக்கு மருந்தினால் தீர்த்தற்கு) அரியதாகிய நோயாவள், அட்டதனை- சமைத்த பொருளை, உண்டி- (கணவனுக்கு கந்த) உணவாக, உதவாதாள்- இடாமல்தானே உண்பவள், இல்வாழ் - வீட்டில் வாழ்கின்ற, பேய்- பேயாவாள், இம் மூவர் - இந்த மூன்று வகையான பெண்களும், கொண் டானை- கணவனை, கொல்லும்- வதைக்கின்ற, படை- ஆயுதமாவர்; எ-று.

கணவன் கோபங்கொண்டபோது மனைவி எதிர்த்து நின்றால் அவனுக்கு மேலும் கோபம் அதிகரிக்கும்; அக்கோபத்தால் அவன் தன் உயிர்க்கே கேடுவரும்படியான கொடுங்காரியத்தைச் செய்து விடுவான்; ஆதலால் அவள் அவனுக்கு யமனாவாள். உரிய நேரத்தில் உணவுண்ணாத வனுக்கு நோவுண்டாகும்; ஆகையால் கணவனுக்கு நேரத் தோடு உணவளித்தற் பொருட்டு அதிகாலையிலேயே சமை யல் வேலை தொடங்காதவள் நீங்காத பிணியாவாள்; பிற

வுயிர்களின் மீது அருளில்லாமல் கிடைப்பதைத் தானே தின்று வாழ்வது பேயே; ஆதலின், சமைத்த வுணவைக் கணவனுக்கிடாமல் தானே தின்பவள் பேயாவள்; இந்த மூவரும், ஜீவன்களின் உடம்பைச் சோதிக்கும் ஆயுதம் அவற்றிற்கு மிக்க வேதனையைச் செய்து அவற்றைக் கொல்வது போலக் கணவரைத் துன்பத்திற்குள்ளாக்கி மடிப்பவராதலின், கணவனைக் கொல்லும் ஆயுதமாவர். எ-று.

கணவன் கோபங்கொண்டபோது மனைவி எதிர்த்து நின்றால் அவனுக்கு மேலும் கோபம் அதிகரிக்கும்; அக்கோபத்தால் அவன் தன் உயிர்க்கே கேடுவரும்படியான கொடுங்காரியத்தைச் செய்து விடுவான்; ஆதலால் அவள் அவனுக்கு யமனாவாள். உரிய நேரத்தில் உணவுண்ணாதவனுக்கு நோவுண்டாகும்; ஆகையால் கணவனுக்கு நேரத்தோடு உணவளித்தற்பொருட்டு அதிகாலையிலேயே சமையல் வேலை தொடங்காதவள் நீங்காத பிணியாவாள்; பிறவுயிர்களின் மீது அருளில்லாமல் கிடைப்பதைத் தானே தின்று வாழ்வது பேயே; ஆதலின், சமைத்த வுணவைக் கணவனுக்கிடாமல் தானே தின்பவள் பேயாவள்; இந்த மூவரும், ஜீவன்களின் உடம்பைச் சோதிக்கும் ஆயுதம் அவற்றிற்கு மிக்க வேதனையைச் செய்து அவற்றைக் கொல்வது போலக் கணவரைத் துன்பத்திற்குள்ளாக்கி மடிப்பவராதலின், கணவனைக் கொல்லும் ஆயுதமாவர்.

எறியென் றெதிர்நிற்பாள் யமனாகவும், சிறுகலை அட்டில்புகாதாள் அரும்பிணியாகவும், உண்டியுதவாதாள் பேயாகவும், தனித்தனி உருவகம் செய்யப்பட்டதோடு மூவரும் ஈற்றில் கொண்டானைக் கொல்லும்படையாகவும் உருவகிக்கப்பட்டார்கள். இங்ஙனம் உருவகஞ் செய்தது-உருவகவணி.

இதனால், இல்லறத்துக்கு யோக்கியமற்றவர்களும், கணவனுக்கிதஞ்செய்யாதவர்களுமாகிய பெண்களின் இயற்கைகள்கூறப்பட்டன. 'சிறுகாலை' என்பதில், சிறுமை- காலநீட்டிக்காமையைக் குறிக்கும்; ஆதலின், 'சிறுகாலை' என்பதற்கு, 'உதயகாலத் தொடக்கம்' என்று பொருள் கூறப்பட்டது. 'மூவர்' என்பதில் முற்றும்மை தொக்கது. அட்டில்- 'அட்ட இல்' என்பதன் தொகுத்தல்; சமையல் செய்யுமிடம் என்பது இதன் பொருள். (ங)

364. *கடியெனக் கேட்டுங் கடியரன் வெடிபட*
வார்ப்பது கேட்டு மதுதெளியான்- போர்த்துமோ
ரிற்கொண் டினிதிரூஉ மேமுறுத லென்பவே
கற்கொண் டெறியுந் தவறு.

(இ-ள்.) (இல்வாழ்க்கை துக்கத்திற் கிடமானது; ஆதலின்), கடிஎன- (அதனை)நீக்கி, (இளமையிலேயே துறவு பூணக்கடவாய்) என்று (பெரியோர் நூல்களின் வாயிலாகக்) கூற, கேட்டும் - கேட்டிருந்தும், (யாக்கை நிலையாது என்பதற்கறிகுறியாக உலகத்திற் பலர் இறக்கச் சாப்பறையானது), வெடிபடி- சிரசு வெடிக்கும்படி, ஆர்ப் பது- முழங்குவதை, கேட்டும்- அடிக்கடி கேட்டுக்கொண்டி ருந்தும், (இல்வாழ்க்கை இன்பமானதென்றும், யாக்கை நிலைத்திருக்கு மென்றும், அதனோடிருந்து எப்பொழுதும் இன்பத்தை அனுபவிக்கலாமென்றும் கருதி), அது தெளி யான்- அவ்வில்வாழ்க்கையின் இயல்பையுணராத ஒருவன், கடியான் - (அதனை) நீங்காதவனாகி இளமையில் ஒருத்தியை மணஞ்செய்து அவளிறந்துவிடின், அம்மட்டிலாவது அவ் வில்வாழ்க்கைத் துயர் ஒழியட்டுமென்று துறவு பூணாமல் மீண்டு மோர் மனைவியைக் கொண்டு வாழத்துணிவான்; அவ்வாறு முதல்மனைவி யிறந்தும்), போர்த்தும்- மீண்டும், ஓர் இல் கொண்டு - ஒரு மனைவியை மணஞ்செய்து கொண்டு, இனிது இரூஉம்- மகிழ்ச்சியாயிருக்கின்ற,

ஏமுறுதல்- மயக்கமானது, கல் கொண்டு - கல்லைத் தன் கையிலெடுத்துக் கொண்டு, எறியும்-(தானே தன்மேல்) எறிந்து கொள்கின்ற தவறு - தீச்செயலாகும், என்ப - என்று சொல்லுவர் பெரியோர்; எ-று.

இல்வாழ்க்கை துக்க வடிவமானதென்றும், அதனை நீக்கி இளமையிலேயே முத்திக்கேதுவாகிய துறவு பூண வேண்டுமென்றும் பெரியோர் நூல்களின் மூலம் கூறக் கேட்டும், யாக்கை நிலையற்றதென்பதற் கறிகுறியாகப் பலர் உலகத்திலிறக்கச் சாப்பறை முழங்குவதைக் கேட்டும் இல்வாழ்க்கை இன்பத்திற்கேதுவானதென்றும், உடம்பு நிலைத்திருக்குமென்றும், அதைக்கொண்டு எப்பொழுதும் இன்பத்தை அனுபவிக்கலாமென்றும் கருதி, அவ்வாழ்க்கை யின் நிலையற்ற தன்மையை உணராத ஒருவன், அதனை நீக்காமல் இளமையில் ஒருத்தியை மணஞ்செய்து அவளிறப் பினும் அம்மட்டோடு அவ்விருப்பினை விட்டொழித்துத் தவஞ்செய்ய முயலாமல் மீண்டும் ஒருமனைவியை மணஞ் செய்து மகிழ்வன்; அவ்வாறு மகிழ்வது கல்லை எடுத்துத் தானே தன்மேல் எறிந்துகொள்ளும் அபாயச் செயல்போன்ற தாகும் என்பது இதன் கருத்து.

இது, முதலில் மனைவாழ்க்கையி லகப்பட்டுத் துன் புற்றும், முதல்தார மிறந்தபிறகு மீண்டுமோர் மனைவியைக் கட்டித் துயருறுவோரைக் குறித்துச் சொல்லப்பட்டதாம்.

இல்வாழ்க்கை, ஒருவனுக்கு, மனைவி, மக்கள், பொருள் முதலியவற்றில் பற்றுள்ளத்தை யுண்டாக்கக் கூடியதாம். அப்பற்றினால் அவனைச்சேர்ந்தார்க்கும், பொருளுக்கும் கேடுண்டாகும்போது துக்க மதிகரிக்கும்; இல்லறவொழுக்கங்களைக் காத்தலிலும் பல துன்பங்களுண் டாம்; இத்துன்பங்களால் பிறப்பற்ற நிலையாகிய முத்தியை அடைதற்குரிய தவமுடித்தல் இயலாமற்போம்; ஆதலின், மனிதன், இல்லறத்தை யொழித்து இளமையில் துறவு

கொள்ள வேண்டுமென்பது மோக்ஷமார்க்க முணர்ந்த பெரியோரின் அபிப்ராயம். இதற்கு மாற்றமாக ஒருவன், முதலில் ஒரு தாரத்தை மணந்து துன்பமனுபவித்து அவளிறந்தபிறகும் மற்றொரு மனைவியைக் கொள்வது பெருந் துன்பத்திற் கேதுவாம்; ஆதலின், அதனை, 'கற்கொண்டெரியும் தவறு' என்றார் முனிவர்.

'பேர்த்துமோர் இற்கொண்டு' என்ற குறிப்பால், முதல்மனைவி கொண்டது இசையெச்சமாக வருவித்துரைக் கப்பட்டது. உம்மைகளில் முன்னது- பெரியோருரையின் உயர்வை விளக்கி நின்றது. இரண்டாமடியிலுள்ளது சாப் பறையின் இழிவை விளக்கி நின்றது. 'பேர்த்தும்' என்பதி லுள்ளது- இறந்தது தழுவியது. 'வெடிபட' என்பதற்கு, 'அச்சமுண் டாக' எனப் பொருளுரைப்பினுமாம். இல்- இடவாகுபெய ராய் இல்லிற்குரியாளை யுணர்த்திற்று. 'இருவும்' என்னும், பெயரெச்சம் அளபெடுத்து, 'இருஉம்' என நின்றது; இது, சொல்லிசை யளபெடை. 'ஏமமுறுதல்' என்பது விகாரப் பட்டு, 'ஏமுறு' என்றாயது ஏமம்- மயக்கம். (ச)

365. *தலையே தவமுயன்று வாழ்த லொருவர்க்*
கிடையே யினியார்கட் டங்கல்-கடையே
புணராதென் றெண்ணிப் பொருணசையாற் றம்மை
யுணரார்பின் சென்று நிலை.

(இ-ள்.) ஒருவர்க்கு - மனிதராய்ப் பிறந்த ஒருவர்க்கு, தவம் முயன்று வாழ்தல்- தவத்தை முயன்று செய்து வாழ்வது, தலையே- முதன்மையான வாழ்க்கையேயாம், இனியார்கண்-(நற்குண நற்செய்கைகளால் கணவர்க்கு) இனிமை செய்பவராகிய மனைவியரோடு, தங்கல்- சேர்ந் திருந்து இல்லறத்தில் வாழுதல், இடையே-இடைப்பட்ட வாழ்க்கையே, (உலோபிகளிடம் சென்றால்), பொருள்-

பொருளானது, புணராது - (கைக்குக்) கிடைக்காது, என்று எண்ணி - என்று நினைத்தும், (அதாவது, உலோபிகள் பொருள் கொடாரென்பது தெரிந்தும்), பொருள் நசையால்- அப்பொருளின் விருப்பத்தினாலே, தம்மை- (உயர்குயிற் பிறந்தும் பொருளில்லாமையால் துன்புறும்) தங்களை, உணரார்பின்- அறியாத அந்த உலோபியர் பின்னே, சென்று நிலை- போய்நிற்பது, கடையே- கடைப்பட்ட வாழ்க்கையே; எ-று.

மனிதர், தவஞ்செய்து வாழ்வது உத்தமமான வாழ்க்கை; இல்லறத்தில் வாழ்வது மத்திம வாழ்க்கை; உலோபிகளிடம் பொருள் பெற விரும்பிச் சென்று நிற்பது அதமவாழ்க்கை என்பது இதன் கருத்து.

தவம் பிறப்பிறப்பற்ற பேரின்ப நிலையைத் தருவ தாதலின், முதன்மையானதெனக் கூறப்பட்டது; இல்லறத் தில் பல துன்பங்களிருப்பினும் சகித்து அதனைத் தவறாது நடத்தினால் சுவர்க்கம் முதலிய நற்பதவிகளேனும் அதனால் கிடைக்குமாதலின், அது மத்திம வாழ்க்கை யெனக் கூறப் பட்டது. உலோபிகளிடம் செல்வது, பொருள் கிடைக்காமை யால் சஞ்சலத்தை யுண்டாக்குவதோடு நற்காரியங்களைச் செய்யவொட்டாது காலத்தை வீணே போக்கிவிடுவதால் இம்மையிலும், மறுமையிலும் துன்பத்தை உண்டாக்கும்; ஆதலின், இவ்வாழ்க்கை அதம வாழ்க்கையெனப்பட்டது.

உலோபிகள் பணங்கொடா ரென்பது ஒருவனுக்குத் தெரிந்தாலும், அப்பொருள் விருப்பத்தால் அவன், 'ஏதேனு மொரு சமயத்தில் நம்மீது இவர் கருணை செலுத்த மாட்டாரா' என்று எண்ணிக் கொண்டே அவனைப் பின் தொடர்ந்து திரிவான்; இவனுடைய வாழ்க்கை மிக்க மூடத் தன்மையுள்ள வாழ்க்கையாம்; ஆதலின் இது கூடா தென்பதை இதில் விளக்கினார் முனிவர். இதனால் ஈகை யுள்ளாரிடத்திரப்பது ஒருவகையில் நல்லதென்பது பெறப்

படும். அது, ''............... புல்லா, அகம்புகுமி னுண்ணுமி னென்பவர்மாட்டல்லான், முகம்புகுத லாற்றுமோ மேல்'' ''அருத்தஞ் செறிக்குமறிவிலார்பின்சென், றெருத்திறைஞ்சி நில்லாதாம் மேல்'' என்று இந்நூலில் மேன்மக்க ளியல்பு கூறுமிடத்து வருவனவற்றா லுணரப்படும்.

தலையே, இடையே, கடையே என்பவற்றின் ஏகாரம் பிரிநிலைப் பொருளது; தேற்றப் பொருளதெனினுமாம். இனியார்கண்- உருபு மயக்கம். நிலை- முதனிலைத் தொழிற்பெயர். 'பொருள்' என்பது இரண்டிடங்களிற் கூட்டப்பட்டது. (ரு)

366. *கல்லாக் கழிப்பர் தலையாயார் நல்லவை*
துவ்வாக் கழிப்ப ரிடைகள் கடைக
ளினிதுண்ணே மாரப் பெறேம்யா மென்னு
முனிவினாற் கண்பா டிலர்.

(இ-ள்.) மனிதருள்), தலை ஆயார்- (அறிவிற் சிறந் துள்ள) முதன்மையானவர், (அதாவது, உத்தமர்), கல்லா- (தாம் பேரின்பத்தை யடைதற்குரிய ஞானநூல்களை) கற்று, கழிப்பர்- காலத்தைக் கழிப்பார்கள், இடைகள்- நடுத்தரமான வர், (அதாவது, மத்திமர்), நல்லவை - (அறநெறியாற் கிடைத்த) நல்ல பொருள்களை, துவ்வா- (கிடைத்தவரை யில் திருப்தியடைந்து) அனுபவித்து, கழிப்பர்- (காலம்) கழிப்பார்கள், கடைகள்- கடைப்பட்டவர்களோ, (அதாவது, அதமர்களோ), (எவ்வளவு இனிய உணவுகளை உண்டாலும், எவ்வளவு பொருள்களைப் பெற்றாலும் அம்மட்டில் திருப்தி யடையாமல் பேராசைகொண்டு, யாம்- நாம் இனிது உண்ணோம் -இனிய உணவை உண்ணப் பெற்றிலேம், ஆர-நிறைய, பெறேம்- (ஐசுவரியத்தைப்) பெற்றிலேம், என்னும், என்று கருதுகின்ற, முனிவினால் - வெறுப் பினாலே, (அதாவது- அதிருப்தியினாலே மனம் ஒரு நிலைக்

கொள்ளாமல்), கண்பாடு இலர்- (இராக்காலத்திலும் தூக்க மில்லாதவராவர்; எ-று.

மோக்ஷத்தை யடைதற்குரிய ஞானநூலைப் படிப் பவர் சிறந்த அறிவுள்ளவராதலின் அவரை உத்தமரென்றும், நன்மார்க்கத்தில் கிடைத்தவற்றை அனுபவித்து அம்மட்டில் திருப்தியடைந்து மன அலைச்சலற்றிருப்போர் அவர்க்கடுத்த படியிலுள்ளவராதலின் அவரை மத்திமரென்றும், கிடைத் தவை கொண்டு திருப்தியடையாமல் பேராசைகொண்டு மனங்கலங்கித் தூக்கமின்றிப் பெருந்தீனி தின்பதிலும், மேலும் மேலும் பொருளைத் திரட்டுவதிலும் திரிந்தலை வோர் மூடராகலின், அவரை அதமரென்றும் கூறினார் முனிவர்.

இதனால் உத்தமரும், மத்திமரும் பயனுடைய மனிதவர்க்கத்தைச் சார்ந்தவரென்பதும், அதமர் பயனற்ற மிருகத்தன்மை வாய்ந்தவரென்பதும் விளக்கப்பட்டன.

'கல்லா, துவ்வா' என்பன- செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சங்கள்; உடன்பாட்டுப் பொரு ளன; இறந்தகாலங் காட்டுவன. 'உண்ணேம், ஆரப்பெறேம்' என்பன- எதிர்மறைத் தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள்; வெறுப்பைக் குறிப்பன. கண்பாடு- முதனிலை திரிந்த தொழிற்பெயர். (கூ)

367. *செந்நெல்லா லாய செழுமுளை மற்றுமச்*
செந்நெல்லே யாகி விளைதலா- லந்நெல்
வயனிறையக் காய்க்கும் வளவய லூர
மகனறிவு தந்தை யறிவு.

(இ-ள்.) வளம்- வளம் பொருந்திய, வயல்- வயல் களையுடைய, ஊர- ஊர்களை ஆளுகின்ற அரசனே!, செந் நெல்லால் ஆய- சிவந்தநெற்களாலாகிய, செழும்- செழிப்

பாகிய, முளை- முளைகள் - மற்றும் - பின்னும், அச்செந் நெல்லே ஆகி- அந்தச் செந்நெற்பயிரே ஆகி, விளைதலால் - விளையும் இயற்கையினாலே, அந்நெல்- அந்த முளை களாகும் நெற்கள், வயல்நிறைய - நிலங்கள் நிறையும்படி, காய்க்கும்- காய்ப்பனவாம், (அதுபோல, தந்தையின் தன்மையே மகனிடத்தும் ஏற்படுவது இயற்கையாத லினாலே), தந்தை அறிவு- தகப்பனுடைய அறிவே, மகன் அறிவு- மகனுடைய அறிவாகும், (அதாவது, தந்தையைப் போன்ற அறிவுடையவனாகவே மகனுமிருப்பான்); எ-று.

செந்நெல்லின் முளையே செந்நெற்பயிராகி விளை வது இயற்கை யாதலின், அம்முளையாலாம் நெல்லே வயல் கள் நிறைய விளையும்; அதைப்போலவே தந்தையின் இயற்கையே மகனிடத்து மேற்படுமாதலின், தந்தை யினுடைய அறிவே மகனுக்கு முண்டாகுமென்பது இதன் கருத்து.

இதனால், எப்பொருள் எதிலிருந்துண்டாகுமோ அந்தப் பொருளின் தன்மையே அதற்குண்டா மென்பதுகூறி மனிதர் தன்மையு மவ்வாறே யாமென்பதை விளக்கினார் முனிவர். இங்ஙனம், மகனறிவு தந்தையறிவு' என்பது,

''நோக்கி யறிகல்லாத் தம்முறுப்புக் கண்ணாடி
நோக்கி யறிப வதுவேபோல்- நோக்கி
முகனறிவார் முன்ன மறிப வதுவே
மகனறிவு தந்தை யறிவு''

என்னும் (பழமொழி-145-ஆம்) செய்யுளினுங் கூறப்பட்டி ருத்தல் காண்க.அங்கிது உபமானமாகக் கூறப்பட்டுளது; இங்கு உபமேயமாகக் கூறப்பட்டுளது. ''செந்நெல் .... செழுமுளை .... செந்நெல்லேயாகி விளைதலால், அந்நெல்.......... காய்க்கும்'' என்பது, 'மகனறிவு தந்தையறிவு' என்பதற்கு, எடுத்துக்காட்டு;

ஆகலினிஃதெடுத்துக்காட் டுவமையணி; மகனறிவை யறிதற்குத் தந்தை யறிவை ஏதுவாகக் கூறியது ஏதுவணி; இவ்விரண்டுஞ் சேர்ந்து வந்தது- சேர்வையணி. முளை- முதனிலைத் தொழிற்பெயர்; இஃதாகு பெயராய் முளைத்தலையுடைய பொருளை யுணர்த்தி நின்றது. 'விளைதலால்' என்பதிலுள்ள 'ஆல்' உருபு - ஞாபக வேதுப் பொருளது. காய்க்கும் - முற்று. 'மகனறிவு தந்தையறிவு' என்பதை முன்பின்னாக மாற்றுக. (எ)

368. உடைப்பெருஞ் செல்வருஞ் சான்றோருங் கெட்டுப்
புடைப்பெண்டிர் மக்களுங் கீழும் பெருகிக்
கடைக்கா றலைக்கண்ண தாகிக் குடைக்கால்போற்
கீழ்மேலாய் நிற்கு முலகு.

(இ-ள்.) உடைபெரும் செல்வரும்- உடைத்தாகிய பெரிய செல்வத்தைப் பெற்றிருந்தவர்களும், சான்றோரும்- (கல்வியறிவால்) நிறைந்த பெரியோர்களும், கெட்டு- (தங்கள் செல்வாக்குக் குறைந்து ஒருகாலத்தில்) கெட, (மிகத் தாழ்ந்தநிலையிலிருக்கக்கூடிய) புடை பெண்டிர் மக்களும்- (வீட்டிற்குப் புறம்பாகப்) பக்கத்திலிருக்கும் வைப்பாட்டி களாகிய பெண்கள் பெற்ற பிள்ளைகளும், கீழும்- (அறி வொழுக்கங்களில் மிகக்குறைந்த) கீழ்மக்களும், பெருகி- (ஒருகாலத்தில் செல்வமிக்கோராய்) விருத்தியடைய, உலகு- இந்த உலகமானது, கடைகால்- கடைப்பட்ட இடம், தலைக்கண்ணது ஆகி- உயர்ந்த தன்மையுடையதாக, குடை கால்போல்- குடையின் காம்பைப்போல, கீழ்மேல் ஆய் நிற்கும்- கீழ்மேலாகி நிற்கும் இயல்பினை யுடையதாகும். எ-று.

இந்த வுலகமானது, உயர்ந்தோர் சில சமயங்களில் தாழ தாழ்ந்தவர் சில சமயங்களில் உயர, தாழ்ந்த இடம் உயர்ந்த இடமாகிக் குடைக்காம்பைப்போலக் கீழ்மேலாகி நிற்கும் இயல்பினை யுடையது என்பது இதன் கருத்து.

இதனால், உலகத்தில் உயர்வும், தாழ்வும் அவரவர் ஊழ்வினைப் பயனால் மாறி மாறிவரும்; ஆதலின், செல்வ மிக்கார் செருக்கடைதலும், அஃதில்லார் வருந்துதலும் கூடாவென்பது குறிப்பால் விளக்கப்பட்டது. இச்செய்யுட் கருத்தும், இந்நூலின் 264-ஆம் செய்யுட் கருத்தும் பெரும் பான்மையும் ஒப்பனவாம்.

'கெட்டு, பெருகி, ஆகி' என்பன காரணப்பொருட் டாய் வந்த செயவெனெச்சத் திரிபுகள்; உலகம் கீழ் மேலாவதற்கு இவை காரணமாயின; பிற கர்த்தா வினை கொண்டு முடிந்தன. புடை- பக்கம்; ஆடவர்க்கு அபிமான தாரங்களாய் (வைப்பாட்டிகளாய்) இருக்கும் பெண்கள், அவரின் இல்லக் கிழத்திகளுக் கஞ்சிப் புறத்தே பக்கத் திலுள்ள தெருவிலிருக்கும் வீட்டில் தங்கியிருப்பர்; ஆதலின், இவர் 'புடைப்பெண்டிர்' எனப்பட்டார். மக்களும், கீழும்- என்பவற்றிலுள்ள உம்மைகள் இழிவு சிறப்புப் பொருளன; எண்ணும்மைகளெனினுமாம். கண், கால் என்பன- இடப் பொருளன. குடைக்காம்பில் கைப்பிடியுள்ள பாகம் மேற் பாகமாம்; அதன் நுனி கீழ்ப்பாகம்; இந்த நுனிப்பாகமே குடையின் மத்தியில் தொடுக்கப்பட்டிருக்கும்; ஆதலின், குடையை விரித்துத் தலைக்கு மேலே பிடிக்கும்போது குடைக்காம்பின் கீழ்ப்பாகமாகிய நுனிமேலேயிருக்கும்; மேற்பாகமாகிய கைப்பிடி கீழேயிருக்கும். 'குடைக் கால்போல் கீழ்மேலாய் நிற்கும் உலகு' என்றது- உவமை யணி. (அ)

369. *இனியார்தந் நெஞ்சத்து நோயுரைப்ப வந்நோய்*
தணியாத வுள்ள முடையார்- மணிவரன்றி
வீழு மருவி விறன்மலை நன்னாட
வாழ்வின் வரைபாய்த னன்று.

(இ-ள்.) மணி- இரத்தினங்களை, வரன்றி- வாரிக் கொண்டு, (வேகமாக மேலிருந்து கீழே பாய்ந்து), வீழும்-

வீழ்கின்ற, அருவி, அருவிகளையுடைய, விறல்- (எதற்கும் அசையாதிருத்தலாகிய) வெற்றியைப் பெற்ற, மலை- மலைகளையுடைய, நல்- சிறந்த, நாட-பாண்டிய நாட்டை யுடைய அரசனே!, இனியார்- இனிய நண்பர்கள், (துன்பம் வந்தபோது வருந்தி), தம் நெஞ்சத்து- தம்முடைய மனத் திலேயுள்ள, நோய்- அவ்வருத்தத்தை, உரைப்ப- தம்மிடம் எடுத்துக்கூறவும், (அவ்வாறு கூறிய பிறகும்), அ நோய்- அந்த வருத்தத்தை, தணியாத, - நீக்க இசையாத, உள்ளம் உடையார் - கடின மனமுடையவர்கள், (இவ்வுலகத்தில் உயிர் வைத் துக்கொண்டு திரிவதாகிய), வாழ்வின்- வாழ்க்கையைக் காட்டினும், வரைபாய்தல்- மலையிலேறிக் கீழே வீழ்ந்து உயிரைப் போக்கிக் கொள்வது, நன்று- நல்லதாம்; எ-று.

சிநேகிதர் துன்பமுற்று அதைக் கூறும்போது அதனை நீக்காம லிருப்பவர் உயிரோ டிருப்பதைக் காட்டினும் இறந்துபோவது நல்லது என்பது இதன் கருத்து.

''உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதா நட்பு''

என்ற பொய்யா மொழியார் கூற்றின்படி, மனிதர், தம் நண்பர்க்குத் துன்பம் வருங்கால் அவர் கூறுமுன்பே அதனைக் குறிப்பாலுணர்ந்து நீக்கி உதவி செய்தலே நட்பின் இலக்கணமாம்; அப்படி யிருந்தும், ''தோழனோடும் ஏழைமை பேசேல்'' என்றதையும் ஒருவர், துன்ப மிகுதியாற் கருதாது தம் நண்பரிடம் துயரை வெளிப்படையாகக் கூறி உதவி செய்யுமாறு வேண்டியும் அதனை நீக்க முயலா திருக்கும் அந்நண்பர் மகாபாலிகளாவர்; பாவமூட்டையைச் சுமந்துகொண்டு உலகத்துக்குப் பயனற்று வீண்சுமையா யிருப்பவர்களாவர். ஆதலின், இத்தகைய கடினசித்த முடையார் உயிருடனிருப்பதினும் இறப்பது நலமென்றார் முனிவர். நேயர்க்குதவி செய்யாத பாவிகள், சுய நலத்தை

விரும்புவோராதலின், சாவின் துன்பத்திற்கு மிக அஞ்சி உயிர்விடத் துணியார் ஆதலின், அத்துன்பந் தோன்றாது விரைவில் மாண்டொழிய வேண்டுமென்பதைக் குறித்து, 'வரைபாய்தல் நன்று' என்றும் கூறினார்.

மலைக்கு வெற்றியாவது- எதற்கும் அசையாதிருத்தலாம். 'நோயுரைப்ப' என்பதில் உம்மை தொக்கது. (கூ)

370. *புதுப்புனலும் பூங்குழையார் நட்பு மிரண்டும்*
விதுப்பற நாடின்வே றல்ல- புதுப்புனலும்
மாரி யறவே யறுமே யவரன்பும்
வாரி யறவே யறும்.

(இ-ள்.) புது புனலும்- (ஆற்றில்வரும் வெள்ளமாகிய)புதிய நீரும், பூகுழையார்- அழகிய குழையென்னும் காதணியை யணிந்த பரத்தையருடைய, நட்பும்- சிநேகமும், (ஆகிய), இரண்டும்- இரண்டையும், விதுப்பு அற- அவரசப்படாமல், (அதாவது, நிதானமாக), நாடின்- ஆராய்ந்து பார்த்தால், வேறு அல்ல-(தம்முள் வேறுபடுவனவல்ல, (அதாவது, இரண்டும் ஒரு தன்மையுடையனவே; எவ்வாறெனில்), புதுபுனலும்- (ஆற்றில்வரும்) புதிய நீரும், மாரி அறவே - மழை நீங்கின மாத்திரத்திலேயே, அறும்- ஒழியும், அவர் அன்பும்- அந்தப் பொதுமகளிர் நேயமும், வாரி அறவே- பொருளின் வருவாய் நீங்கின மாத்திரத்திலேயே, அறும்- ஒழிந்துபோகும்; எ-று.

மழையால் சுரந்து ஆற்றில் பெருகிவரும் புது வெள்ள நீரும், பிறரிடமிருந்து வரும் பொருள் வருவாயினால் அவர்மீதுண்டாகும் வேசையர் அன்பும் ஆலோசிக்குமிடத்து ஒரு தன்மையனவாம்; எவ்வாறெனில், ஆற்றில் வரும் புது வெள்ளநீர்ப் பெருக்கு, மழை பெய்யாமல் நின்றவுடனே நின்றுவிடும்; வேசையர் அன்பும் பொருள் வருவாய் அற்றவுடனே ஒழிந்துபோகும் என்பது இதன் கருத்து.

வேசையர், ஒருவரிடத்திலிருந்து தமக்குப் பொருள் வரும் வரை அன்பு செலுத்துவர்; அவ்வன்பும் பொய்யன் பாம்; பொருள் வருவாய் நின்றவுடன் அவ்வன்பும் நீங்கி விடும்; அப்பொய்யன்புடைய பொதுமகளிர், தமக்கு முன் பொருள் கொடுத்தார் செய்த நன்றியையும் மறந்து அவரை வெறுத்து நீக்கிவிடுவர். ஆதலின், இத்தகைய பரத்தையர் சிநேகத்தை எப்பொழுதும் விரும்பலாகாதென்பது இதனால் விளக்கப்பட்டது.

புதுப்புனலை வேசையரன்புக் குவமையாகக் கூறி உவமையுருபு கொடாமல் வைத்தது எடுத்துக்காட்டுவமை யணி. முதலடிக்கண் உள்ள புதுப்புலனலும், நட்பும் என்ப வற்றின் உம்மைகள் - எண்ணுப் பொருளன. தனிச்சீரிலுள்ள 'புதுப்புனலும்' என்பதி லுள்ள உம்மை- எதிரது தழுவியது; அன்பும் என்பதிலுள்ள உம்மை- இறந்தது தழுவிய எச்சப் பொருளது. 'அறவே' என்னும் இரண்டிலுமுள்ள ஏகாரங்கள்- 'அப்பொழுதே' என்னும் விரைவுப் பொருளை விளக்கிக் காரியவுட னிகழ்ச்சியைக் குறித்தன; அசைகளெனினுமாம். 'அறுமே' என்பதிலுள்ள, ஏ- பிரசித்தியைக் குறிக்கும்; அசையுமாம். பின்வரும் அதிகாரத்தின் முதற்செய்யுட் கருத் தோடு இச்செய்யுட் கருத்தொற்றுமையுடையது. பொது மகளிரைப் பற்றிய இச்செய்யுளை இங்கு வைத்தது, அடுத்து வரும் அதிகாரம் இவர்களையே குறித்ததென்பதை விளக்கு தற்கென்க. (கo)

பன்னெறியியல் முற்றுப்பெற்றது.

பொருட்பால் முற்றுப்பெற்றது.

3-வது
காமத்துப்பால்

காமத்துப்பால் என்பது - காமத்தைப்பற்றிக் கூறும் பாகமாம்; காமமாவது- சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புல நுகர்ச்சிகளையும், வாய், கண், உடல், செவி, நாசி என்னும் ஐம்பொறிகளின் வாயிலாக ஐம்புலன் களும் ஏககாலத்தில் அனுபவிக்கும் இன்பமாம்; அது, மன மொத்த அன்புடைய காதலிகளால் காதலர்க்கும், காதலரால் காதலிகட்கும் உண்டாவதாம். இவ்வின்பம் ஆடவர்க்கு மனைவியரிடத் துண்டாகுமென்பதை, ''கண்டுகேட்டுண் டுயிர்த்துற்றறியு மைம்புலனு, மொண்டடி கண்ணேயுள'' என்னும் திருக்குறள்-1101-ஆம் செய்யுள் விளக்கும். மனித ராயினார், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புரு டார்த்தங்கள் நான்கினையும் அடைதல் அவர்க்கின்றியமை யாத தாகலின், முதலில் அறத்தை யுணர்ந்து, அந்த அற நெறியாற் பொருளைத்தேடி, அப்பொருளால் இவ்வுலக வின்பத்தை யடைந்து, பின்னர் அதனையும்விட்டு முத்தி யெய்தல் வேண்டும். ஆதலின், முதலில் அறத்துப்பாலும், இரண்டாவது பொருட்பாலும் கூறப்பட்டு, மூன்றாவது அப்பொருளால் நேரும் இன்பமாகிய காமப்பகுதி இதிற் கூறப்படுகின்றது; இதனை அனுபவித்து விடுதலே வீடாகை யால் வீட்டின்பால் கூறப்படவில்லை.

காமத்துப்பால் என்னும் இது, இன்பதுன்பவியல், இன்பவியல் என்னும் இரண்டு உட்பிரிவுகளையுடையது. இன்பதுன்பவியல், 'பொதுமகளிர்' என்னும் ஒரே அதி காரத்தை யுடையது; இன்பவியல், 'கற்புடை மகளிர்' 'காம நுதலியல்' என்னும் இரண்டதிகாரங்களை யுடையது. இப் பாகுபாடு, ''கடையின்ப வகைதான் கருதினிருவகை, யின்ப துன்ப வதிகார மொன்றே, யேனையின்ப வதிகார மிரண்டே'' என்னும் பழையவுரைச் சூத்திரப்படி, பதுமனாரால் வகுக் கப்பட்தாகும். சில உரையாசிரியர்கள், இப்பாகுபாட்டினை விட்டு, முதலிற் பதின்மூன்றதிகாரங்களை அறத்துப் பாலாகவும், அவற்றிற்குப் பின்னுள்ள இருபத்தாறு அதி காரங்களைப் பொருட்பாலாகவும், ஈற்றதிகாரமொன்றை மாத்திரம் காமத்துப்பாலாகவும் வகுத்திருக்கின்றனர். இதற்குக் காரணம், பதுமனார் காமத்துப்பாலிற் சேர்த்திருக் கின்ற மூன்றதிகாரங்களுள்ளும் முதலிரண்டு அதிகாரங்களில் அகப்பொருட் கிளவித்துறை இல்லாததும், ஈற்றதிகாரத்து மட்டுமே உள்ளதும், திருக்குறளில் ஆசிரியர், கற்புடை மகளிரெனப் பொருள்படும், 'வாழ்க்கைத்துணை நலம்' என்னும் அதிகாரத்தைக் காமத்துப்பாலில் சேர்க்காமல் அறத்துப்பாலிலும், பொதுமகளிரென்று பொருள்படும், 'வரைவின் மகளிர்' என்னும் அதிகாரத்தைக் காமத்துப் பாலில் சேர்க்காமல் பொருட்பாலிலும் சேர்த்திருப்பதுமாம்.

பதுமனார் இவ்வாறு பாகுபாடு செய்தற்குக் காரணம், பரத்தையரின்பம் பயனற்றதெனக் கூறுவதாலும், கற்புடை மகளிரியல்பைக் கூறுவதாலும், அகப்பொருட்கிளவித் துறைகளிற் கூறப்படும் கற்புடைமகளிரின் உண்மைக் காதல் இன்பமே சிறந்ததென்பது விளக்குவதால் இவ்விரண்டும் காமத்துப்பாலிற் சேர்க்கப்படுதல் வழுவாகாதென்று கருதி யதேயாம்.

1-வது

இன்ப துன்பவியல்

இன்ப துன்பவியலென்பது - ஒருவகையில் இன்பத்தையும், ஒருவகையில் துன்பத்தையும் தரும் இயற்கையினைக் கூறும் பிரிவாம். பரத்தையர், பிறரிடமிருந்து பொருள் கைக்குக் கிடைக்கும்வரையில் பொய்யன்பு காட்டுவதால் அவர்க்குச்சிறிது இன்பமும், கைவறண்ட பின் அவர்களை வெறுத்துத் துரத்துவதால் துன்பமும் உண்டாம். இவ்விரண்டுக்கும் காரணமா யிருப்பது அப்பரத்தையர் தன்மையே. ஆதலின், இவ்வியலில் அத்தன்மை, 'பொது மகளிர்' என்னும் அதிகாரமொன்றினாற் கூறப்படுகின்றது.

அதிகாரம் 38

பொதுமகளிர்

அஃதாவது- பொதுமாதராகிய வேசையரைப்பற்றிக் கூறுவது. வேசையர், ஒருவர்க்கே உரியராகாமல், பொருள் கொடுத்தார் பலர்க்கும், 'இவர் தகுதியுடையார், இவர் தகுதியற்றவர்' என்னும் பாகுபாடின்றித் தம் உடல் நலத்தை விற்றுப் பொதுத்தன்மையோடுகூடி யிருப்பவர்களாதலின், 'பொதுமகளிர்' எனப்பட்டார்; இவ்வதிகாரம் இவர் தன்மையை யெடுத்துக் கூறுவதாகலின் இப்பெயரினை யுடையதாயிற்று.

371. விளக்கொளியும் வேசையர் நட்பு மிரண்டுந்
துளக்கற நாடின்வே றல்ல- விளக்கொளியு
நெய்யற்ற கண்ணே யறுமே யவரன்புங்
கையற்ற கண்ணே யறும்.

(இ-ள்.) விளக்கு ஒளியும்- தீபத்தின் பிரகாசமும், வேசையர் நட்பும்- பரத்தையருடைய சிநேகமும் (ஆகிய), இரண்டும்- இரண்டினையும், துளக்கு அற- கலக்கமின்றி, (அதாவது, ஒரே மனதாக), நாடின்- ஆராய்ந்து பார்த்தால், (அவை தம்முள்), வேறு அல்ல- வேறுபட்டனவல்ல, (அதாவது, ஒரே தன்மையனவாம்; எப்படியெனில்), விளக்கு

ஒளியும் - விளக்கின் பிரகாசமும், நெய்அற்ற கண்ணே- (அஃதெரிவதற்காக விடப்பட்ட) நெய் வற்றிய அப் பொழுதே, அறும்- நீங்கும், அவர் அன்பும்- அந்தப் பொது மாதருடைய நேயமும், கை அற்ற கண்ணே-(அவர்க்குப் பொருள் கொடுத்துவந்த) கை பொருளற்றதான அப் பொழுதே, (அதாவது, கைப்பொருளற்றவுடனே), அறும்- நீங்கிவிடும்; எ-று.

விளக்கு, தான் எரியும்பொருட்டு விடப்பட்ட நெய் இருக்குமளவும் எரிந்துகொண்டிருந்து அது வறண்டவுடனே தானும் எரிதலின்றி மறைந்துவிடும்; அதைப்போலவே, பொது மாதரும் ஒருவரிடத்துக் கைப்பொருள் கிடைக்கு மளவும் நேய்ங்காட்டிப் பொருள்வரவு நின்றபோது வெறுப்புக் காட்டிவிடுவர் என்பது இதன் கருத்து. இவ்வாறு கூறியது- எடுத்துக்காட்டுவமையணி.

இதனால், பொய்யன்பு காட்டும் வேசையர் இன்பம் இன்பமாகாது; குலமகளிரோடு கூடிச் சுகிக்கும் இன்பமே இன்பமென்பது குறிக்கப்பட்டது. வேசை- வேஸ்யா என்ற வடசொற்றிரிபு; இதன் பன்மை- வேசையர். நட்பு - பண்பினை விளக்குந் தொழிற்பெயர். நள்- பகுதி, பு- விகுதி. துளக்கு-முதனிலை திரிந்த தொழிற்பெயர்; துளங்கல்- அசைதல். கை என்பதைப் பொருளுக்கு ஆகுபெயராகக் கொண்டு அதற்கு, 'கைப்பொருள்' எனப் பொருளுரைப் பினுமாம். அற்றகண்- பெயரெச்சத்தொடர். (க)

372. *அங்கோட் டகலல்கு லாயிழையா ணம்மோடு*
செங்கோடு பாய்துமே யென்றாண்மன் -
செங்கோட்டின்
மேற்காணமின்மையான் மேவாதொழிந்தாளே
காற்கானோய் காட்டிக் கலுழ்ந்து.

(இ-ள்.) அம்- அழகிய, கோடு- பக்கவுயர்ச்சியை

யுடைய, அகல்- அகன்ற, அல்குல்- அல்குலையுடைய வளும், ஆய் இழையாள் - ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களை யணிந்தவளுமாகிய பரத்தை, (நாம் அவளுக்குப் பணம் கொடுக்கும் நிலையிலிருந்த காலத்தில், நீர் துன்பப்படின் அதைப்பார்த்து நான் சகியேன்; உம்முடைய துக்கத்தை நானும் அனுபவிப்பேன்; நீர் இறந்தால் நானுமிறப்பேன்; உமக்குச் சங்கடம் வந்தபோது நீர் தனித்திறக்க நான் பிரிந் திரேன்; ஆதலால், இருவருமே ஒரே காலத்தில்), செம்கோடு பாய்தும்- செம்மையான மலையினுச்சியில் (ஏறிநின்று) கீழேபாய்ந்திறப்போம். என்றாள்மன்- என்று (அன்புடை யாள்போலக்) கூறினாள், (இப்போது நாமோ தரித்திரமுற்று அத்துயர் சகிக்காமல் மலையின்மேலிருந்து கீழே பாய்ந்திறத் தற்கு இம்மலையின் உச்சியில் வந்திருக்கின்றோம்; இப் போது நம்மிடம்), காணம் இன்மையால் - பணம் இல்லாமை யினாலே, நம்மோடு - நம்முடனே, (அவள் சொன்னபடி இறத்தற்கு), செங்கோட்டின்மேல் - (இந்த மலையின்) செவ்விய உச்சியில், மேவாது - வந்து சேராமல், கால்- காலில், கால்நோய், வாதநோயை, காட்டி - (பொய்யாகக்) காண் பித்து, (என்னால் நடக்க முடியவில்லை; நான் என் செய்வேன் என்று சாக்குச்சொல்லி), கலுழ்ந்து - (நம் பிரிவு குறித்து வருந்துகிறவளைப் போலப் பாசாங்கு செய்து பொய்யாக) அழுது, ஒழிந்தாளே - நீங்கினாளே; எ-று.

நம்மோடுறவாயிருந்த பொதுமகள், நாம் செல்வத் தோடிருந்து அவளுக்குப் பணம் கொடுத்துவந்தகாலத்தில், நம்மிடத்து உண்மையன்புடையவள்போல நடித்து, ''உமக் குத் துன்பம் வரும்போது நீர் இறக்கத் துணிந்தால் நானும் உயிர்விடத் துணிவேன்; ஆதலால், அக்காலத்தில் நாமிரு வருமே மலையின் உச்சியிலிருந்து பாய்ந்திறந்து விடுவோ'' மென்று உறுதியாகக் கூறினாள்; நாம் இப்போது தரித்திர முற்றுத் துன்பஞ் சகிக்காமல் இறந்துபோகத் துணிந்து இம் மலையின் உச்சியில் வந்திருக்கின்றோம்; இக்காலத்தில் நம்மிடம் பணமில்லாததால் அவள் அன்பின்றி, ''எனக்குக்

காலில் வாதநோய்வந்திருக்கின்றது; நடத்தல் கூடாமையா யிருக்கிறது; இந்த நோயில்லாதிருப்பின், உம்முடன் நான் சாவதற்கு மலையின்மீதேறி வருவேண்; உம்முடைய பிரிவோ, எனக்குச் சகிக்கமுடியவில்லை'' என்று பொய்க் காரணங் கூறிப் பொய்யழுகையழுது நம்முடன் வராதொழி ந்தாள் என்பது இதன் கருத்து.

பொதுமகளின் உறவால் தன் செல்வத்தையெல்லா மிழந்து வறுமைத் துன்பத்தால் மலையினுச்சியிலேறி வீழ்ந் துயிரிழக்கத் துணிந்த ஒருவன், அவளால் தான் ஏமாற்ற மடைந்ததை உலகத்தார்க்குக் கூறியதாக அமைக்கப்பட்டது இச்செய்யுள். இதனால், பரத்தையர், ஆடவர்பால் பொருளைக் கவரும் வரையில் பொய்யன்புகாட்டி இன் மொழி கூறிப்பொருளற்றபின் அவரைக் கைவிடுவர் என்ப தும், ஆகவே இத்தகைய பொய்யன்பு காட்டுவாரின் இன்பம் இன்பமாகாதென்பதும் விளக்கப்பட்டன. பொதுமகளிர் பொருள் கவரும் பொருட்டுக் கூறும் இன்பமொழி இன்பமொழியாகாது; ,இழுக்குடையதாகும் என்பதை,

''அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியார்
இன்சொ லிழுக்குத் தரும்''

என்னும் (திருக்குறள்-911-ஆம்) செய்யுள் உணர்த்தும்.

'நம்மோடு செங்கோட்டின்மேல் மேவாது' எனக் கூட்டி முடிக்க. பதவுரையில் பொருண்முடிபுக் கேற்பப் பல சொற்றொடர்கள் இடைக்கிடையே இசை யெச்சமாகக் கூட்டி யுரைக்கப்பட்டன. மலைச்சிகரத்துக்குச் செம்மை யாவது- நிமிர்ச்சி. 'பாய்துமே' என்பதிலுள்ள ஏகாரம் - உறுதிப் பொருள் விளக்கிற்று; அசை யெனினுமாம். பாய்துமே யென்றாள்மன்- மன்னை ஒழியிசை யெச்சம்;

'இப்போது பாய்ந்திலள்' என்று ஒழிந்த இசைப்பொருளை யுணர்த்தும்;

''ஒழியிசை யெச்ச மொழியிசை முடிபின''

என்னும் (தொல்-சொல்-எச்.38-ஆம்) சூத்திரவுரை பார்க்க. இனி, மன்- அசை யெனினுமாம். பாய்தும்- முன்னிலையை உளப்படுத்திய தன்மைப் பன்மை வினைமுற்று; எதிர்காலங் காட்டிற்று; தும்- விகுதியே காலங்காட்டும்; நன்- ப-18-ஆம் சூத்திரவுரை பார்க்க. 'ஒழிந்தாளே' என்பதில், ஏ- வியப்புப் பொருள்பயந்து நின்றது. கால்- வாயு; அது, 'வாதம்' என்னும் தன் பரியாய நாமத்தால் நோயை உணர்த்திற்று; நீலகேசித் திரட்டு - குண்டலகேசி வாதச்சருக்கம் ''முயலுரை'' என்னும் செய்யுளில் 'நீலகேசி' என்னும் பெயருடைய பெண்ணை, ''புயலிருங் கூந்தலி'' என்றும், ஷை நூல் தருமவுரைச் சுருக்கம், ''நுனித்தகு.........'' என்ற செய்யுளில், 'முனிச் சந்திரன்' என்பானை, ''முனிப்பிறையோன்'' என்றும் கூறுதல் காண்க. காணம்- பொற்காசு. *(உ)*

373. ***அங்கண் விசும்பி னமரர் தொழப்படுஞ்***
செங்கண்மா லாயினு மாகமன்- றங்கைக்
கொடுப்பதொன் றில்லாரைக் கொய்தளி ரன்னார்
விடுப்பர்தங் கையாற் றொழுது.

(இ-ள்.) கொய்தளிர் அன்னார்- கொய்யத்தக்க மாந்தளிர் போன்ற மேனியையுடைய பொதுமகளிர், தம்கை கொடுப்பது ஒன்று இல்லாரை- தமது கையிற் கொடுக்கக் கூடிய பொருள் சிறிது மில்லாதாரை, (அவர்), அம்- அழகிய, கண்- இடமகன்ற, விசும்பின்- விண்ணுலகத்திலுள்ள, அமரர்- தேவர்களால், தொழப்படும்- வணங்கப்படுகின்ற, செம்கண்- சிவந்த கண்களையுடைய, மால் ஆயினும் ஆக- திருமாலேயானாலுமாகுக, தம் கையால் தொழுது- தங்கள் கைகளால் பொய் வணக்கம் வணங்கி, (நீங்கள் வருதற்கு இது

சமயமன்று என்று யாதேனுமொரு காரணத்தைக் கூறி), விடுப்பர்- அனுப்பி விடுவார்கள்; எ-று.

பொதுமகளிர், எவராயிருந்தாலும் பொருள் கொடுப் பாரையே கூடுவர்; பொருள் கொடாதவர் திருமாலே யானாலும் அவரைச் சேரார்; அவர்களுடைய மேன்மைக் குத் தக்கபடி பொய் வணக்கங் காட்டி, 'இன்று நீங்கள் வருதற் குரிய நாளன்று' என்று ஏதேனுமொரு காரணங்கூறி அனுப்பி விடுவார்கள் என்பது இதன் கருத்து.

இதனால், விலைமாதர், மனிதரின் உயர்வையோ, அழகையோ விரும்பார்கள்; நேயத்தையுங் கருதார்; பொரு ளையே கருதுவர்; பொருள் தருவார் எவராயினும் அவரைக் கூடுவர்; ஆதலின், இவர் இன்பம் இன்பமாகா தென்பது விளக்கப்பட்டது. உயர்வையும், அழகையும் விளக்குதற்கு அமரரால் தொழப்படும் சிறப்பினையும், செங்கண் அழகினையுமுடைய திருமாலைக் கூறினார் ஆசிரியர். மால்- என்பதற்கு, 'இந்திரன்' எனப் பொருள் கூறினுமாம்.

கண்-இடம்; அஃதிங்கு இடப்பரப்பினை யுணர்த் திற்று. அமரர்- மரணமில்லாதவர். ஆக- வியங்கோள் வினை முற்று. மன்- அசை. அமரர்தொழ- மூன்றாம் வேற்றுமைத் தொகை. (௩)

374. *ஆணமி னெஞ்சத் தணிநீலக் கண்ணார்க்குக்*
காணமில் லாதார் கடுவினையர்- காணவே
செக்கூர்ந்து கொண்டாருஞ் செய்த பொருளுடையா
ரக்கார மன்னா ரவர்க்கு.

(இ-ள்.) காண- ஆராய்ந்து பார்க்குமிடத்து, ஆணம் இல்-அன்பில்லாத, நெஞ்சத்து - மனத்தினையுடைய, அணி- அழகிய, நீலம்- நீலோற்பல மலர்போன்ற, கண்ணார்க்கு - கண்களையுடைய விலைமாதர்க்கு, காணம் இல்லாதார் -

பணமில்லாதவர், (அழகு, குணங்களாற் சிறந்தோராயினும்), கடு அனையர்- விடத்தைப் போன்றவராவர், செக்கு ஊர்ந்து கொண்டாரும்- செக்கைச் செலுத்தும் தொழிலுடையாரும், செய்த பொருள் உடையார்- தேடிய பொருளை உடையவர், (எனில்), அவர்க்கு - அப்பரத்தையர்க்கு, அக்காரம் அன்னார்- சக்கரைபோன்றவராவர்; எ-று.

பொது மாதர் பொருளையே விரும்புவோராதலின், அஃதில்லாதவர் சிறந்தோராயினும் அவர்மீது விருப்பஞ் செலுத்தமாட்டார்; அதனால், பொருளில்லாதவர் அவர்க்கு விடத்தைப்போல வெறுப்பை யுண்டாக்கத் தக்கவராவர்; பொருளுடையார் அழுக்காடை புனைந்து இழிதொழில் செய்வோராயினும், பொருள்விருப்புடைய பொதுமாதர்க்கு அவர்மீது விருப்பமதிகரிக்கும்; அதனால், பொருளுடைய அவர் சர்க்கரைபோல அவ்வேசையர்க்கு இனிமையைச் செய்வர்.

அருவருக்கத் தக்கவரைப் பொருளுடைமை காரண மாக விரும்பியும், விரும்பத் தக்கவரைப் பொருளின்மை காரணமாக வெறுத்தும் உலகத்தில் பயனற்று வாழ்கின்ற பரத்தையர் இன்பம் வெறுக்கத்தக்க தென்பது இதில் குறிக்கப்பட்டது. இவரின்பம் வெறுக்கத்தக்க தென்பதை,

''பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க
மிருட்டறையி
லேதில் பிணந்தழீஇ யற்று''

என்னும் (திருக்குறள்-913-ஆம்) செய்யுளுணர்த்தும். செக் கோட்டுவோர் எண்ணெயிற் புரண்ட அழுக்குத் துணியுடை யோராய்ப் பார்வைக் கினிமையின்றி யிருப்பாராகலின், அவரை இங்குக் கூறினார் முனிவர்; இது தொழிற்றன்மை கூறியதாகும்; சாதியைக் குறித்து இழிவு கூறியதாகாது. 'கொண்டாரும்' என்பதிலுள்ள உம்மை- இழிவு சிறப்பு.

'காண' என்பதை இடைநிலைத் தீபகமாக்கி இரண்டிடங் களினுங் கூட்டுக; இது, செயவெனெச்சம். இனி, காண- என்பதை, 'செக்கூர்ந்து கொண்டாரும்' என்பதினோடு கூட்டி, 'உலகத்தார் காணும்படி செக்கோட்டுவோரும்' எனப் பொருளுரைப்பினுமாம். நீலம்- மலருக்குப் பண்பாகு பெயர். 'காணவே' என்பதில், ஏ- அசை. 'செக்கூர்ந்து கொண்டார்' என்பதில் கொள்- துணைவினை. ''செக்கூர்ந்து கொண்டானுஞ் செய்த பொருளுடையார்'' என்றும் பாட பேதமுண்டு; இப்பாடத்திற்கு 'செக்கோட்டியாவது தேடிய பொருளை யுடையார்' எனப் பொருள் விரிக்க. 'செய்த' என்பது தேடுதற் பொருளில் வந்தது (௪)

375. *பாம்பிற் கொருதலை காட்டி யொருதலை*
தேம்படு தெண்கயத்து மீன்காட்டு- மாங்கு
மலங்கன்ன செய்கை மகளிர்தோள் சேர்வார்
விலங்கன்ன வெள்ளறிவி னார்.

(இ-ள்.) பாம்புக்கு- (தன்னைப் பிடித்துத் தின்ன வருகின்ற பாம்பினுக்க, ஒருதலைகாட்டி- (அதன் இனமாகிய பாம்பின் தலைபோன்ற தலையையுடைய) ஒரு பக்கத்தைக் காண்பித்து, (அவ்வாபத்துக்குத் தப்பிக்கொண்டு, அத னோடும் சேராமல்), ஒருதலை- (மீனின் வால்போன்றிருக் கும் வாலையுடைய) மற்றொரு பக்கத்தை, தேம்படு - இனிமை பொருந்திய, தெள்கயத்து - தெளிந்த நீரையுடைய தடாகத்திலே, மீன் காட்டும்- மீனுக்கு (அதனுடைய இன மென்று) காட்டி (அதனோடும் சேராதிருக்கின்ற), மலங்கு அன்ன- விலாங்கு மீனை நிகர்த்த, செய்கை- (பலரிடத்தும் அவரவர்க்குத் தக்கபடி நடந்து, பொய் நேயங்காட்டும்) செய்கையை யுடைய, மகளிர்- பொதுமாதருடைய, தோள்- தோள்களை, விலங்கு அன்ன- மிருகத்தை நிகர்த்த, வெள்ளறி வினார் - சாரமற்ற அறிவையுடையவர்களே, (அதாவது மூடர்களே), சேர்வர்- தழுவுவார்கள்; எ-று.

பாம்புக்குத் தலையும், மீனுக் குடலும் காட்டி ஒவ்வொன்றிற்கும் இனமாக நடித்து, ஒன்றோடும் சேராத விலாங்கு மீனைப்போலப் பலரிடத்தும் அவரவர்க்குத் தக்கபடி நடித்து எவரிடத்தும் அன்பு கொள்ளாதிருக்கின்ற பொது மகளிரை அறிவில்லாத மூடரே சேர்வர் என்பது இதன் கருத்து.

விலாங்குக்குத் தலை பாம்பின் தலைபோலவும், உடலும் வாலும் மீனின் உடலைப் போலவும், வாலைப் போலவு மிருக்கும். பாம்பு அதனை மீனென்று நினைத்துப் பிடிக்கச் சென்றால், அது தலையைக் காட்டும்; பாம்பு தன் இனமென்று நினைத்து அதைப் பிடிக்காமல் விட்டுப் போய்விடும்; மீன்கள் அதனிடத்து வந்தபோது அது, தன் உடம்பையும், வாலையும் காட்டும்; அம்மீன்கள் தம்மின மென்று அதனை நினைத்து அதன் பக்கத்தில் விளையாடி இரைதேடித் திரிவனவாம்; அவை தேடி யுண்ணும் இரையை அவ்விலாங் கும் தின்று பின் பிரிந்து தன்னிருப்பிடத்திற் சேர்ந்துவிடும்; பாம்போடும் சேர்வதில்லை, மீன்களோடும் சேர்வதில்லை. வேசையர் தம்மிடம் எத்தனை பேதங்களான மனிதர் வந்த போதிலும் அவரவர்க்குப் பிரியமான வழிகளில் நடந்து அவர் களிடமுள்ள பொருள்களைக் கவர்ந்துகொண்டு எவரிடத்தும் உள்ளன்பு சிறிதுமின்றி யிருப்பர். ஆதலின், இவர்களின் செய்கைக்கு விலாங்கு மீனின் செய்கை உவமை யாகக் கூறப்பட்டது. இத்தகைய இவர்களின் வஞ்சச்செயலை அறிவுடையார் தெரிந்து இவர்களோடு உறவு கொள்ளமாட் டார்கள்; அறிவில்லாதவர்களே இவர்களின் பொய்யன்பை மெய்யன்பென்று கருதி இவர்களைக் கூடியொழிவர்; ஆதலின் இவர்கள் தோள் சேர்வார் மூடரேயென்று கூறினார் முனிவர். மூடர்களுடைய அறிவு, பகுத்தறிவில்லாத மிருகங் களின் அறிவைப்போன்றதாதலின், அவர்களை, 'விலங் கன்ன வெள்ளறிவினார்' என்றார்.

வெள்ளறிவாவது- நன்மை தீமைகளைப் பகுத்துணர் தலாகிய சாரமில்லாத அறிவு. 'தெள்' என்பது குணவாகு பெயராய்த் தெளிந்த நீரையுணர்த்திற்று. பொதுமகளிர் செய்கைக்கு மலங்கு மீனையும், மூடர்களின் அறிவுக்கு விலங்கின் அறிவையும் உவமை கூறியது உவமையணி. மீன் காட்டும்- நான்காம் வேற்றுமைத் தொகை. ஆங்கு- அசை. (ரு)

376. *பொத்தநூற் கல்லும் புணர்பிரியா வன்றிலும்போ*
னித்தலு நம்மைப் பிரியல மென்றுரைத்த
பொற்றொடியும் போர்த்தகர்க்கோ டாயினா
ணன்னெஞ்சே
நிற்றியோ போதியோ நீ.

இ-ள்.) நல்நெஞ்சே - (என்னுடைய) நல்ல மனமே! பொத்த- துளை செய்த, கல்லும்- இரத்தினக் கல்லையும், நூல்- நூலையும், புணர் பிரியா- சேர்க்கை நீங்காத, அன்றிலும்- அன்றிற் பறவைகளையும், போல்- போல, நித்தலும்- தினந்தோறும், நம்மை பிரியலாம் - நம்மை நாம் விட்டுப் பிரியமாட்டோம், என்று உரைத்த- என்று (நம் கையிற் பொருளுள்ள காலத்தில்) உறுதி சொல்லிய, பொன்- தொடியும்- பொன்னாலாகிய வளையலணிந்த வேசையும், (நாம் பொருளற்றுத் தரித்திரங்கொண்டிருக்கும் இக்காலத் தில்), போர் தகர் கோடு ஆயினாள்- (அந்த உறுதிப் பாடெல் லாம் நீங்கி) சண்டைபோடும் ஆட்டுக்கடாவின் கொம்பு போன்றவளாயினாள், (அதாவது பின்சாய்ந்து திருகிய ஆட்டுக்கடாவின் கொம்புபோலத் தாழ்ந்து கோணுதலாகிய மனமுடையவளாயினாள்), அவள் தன்மை இவ்வாறாயின படியால் இனி), நீ-, நிற்றியோ- (அவளிடத்தில் நிற்கின் றாயா?, போதியோ- (அல்லது என்னுடன் அவளைவிட்டு) வருகின்றாயா?, (சொல்வாயாக); எ-று.

என்னுடைய நல்ல மனமே! நான் பொருளுடைய வனாய்த் தனக்கு வேண்டியவற்றைக் கொடுத்து வந்தபோது, நூலையும் அதிற்கோக்கப்பட்ட இரத்தினக் கல்லையும் போலவும், இணைபிரியாத அன்றிற் பறவைகளைப் போல வும் நாம் ஒருவரைவிட் டொருவர் பிரியோம் என்றுறுதி கூறிய பொதுமகள், இப்போது நான் பொருளற்று வறுமை கொண்டு அவளுக்கொன்றும் கொடாத நிலையிலிருப்ப தால், அந்த வாக்குறுதி கெட்டுப் போர் செய்யும் ஆட்டுக் கடாவின் கொம்பைப்போல திருகிக் கோணலான மன முடைய ளாய்விட்டாள்; இவ்வாறாய்விட்ட பிறகும் நீ அவளிடம் இருப்பாயா? அவளைவிட்டு என்னுடன் வருவாயா? சொல்வாயாக என்பது இதன் கருத்து.

முன் பொருளுடையவனா யிருந்த ஒருவன், பொது மகளுக்குப் பொருள் கொடுத்து அவளுடைய நடிப்பு வார்த்தைகளால் மயங்கிப் பின் பொருளிழந்து அவளால் புறக்கணிக்கப்பட்டு, அவளுடைய நேயம் எப்பொழுதும் கூடாதென்பதை விளக்கித் தன் மனத்தை நோக்கிக் கூறியதாக இச்செய்யுள் அமைக்கப்பட்டது.

'நிற்றியோ போதியோ!' என்ற ஐயவினா, 'அவளிடத்துச் செல்லுதல் கூடாதென்பதை விளக்கி நின்றது. வஞ்சனைக்காரியாகிய பொதுமகளை முன் நம்பிய நெஞ்சு சூதுவாதறியாத நெஞ்சாதலால், அது, 'நன்னெஞ்சு' என விளிக்கப்பட்டது. இவன் இவ்வாறு கூறியதனால், வேசையர் பால் எவரும் மனத்தைச் செலுத்துதல் கூடாதென்பது விளக்கப்பட்டது.

அன்றில்- காதலிற்சிறந்த ஒருவகைப் பறவை; இது, 'மகன்றில்' எனவும் சிந்தாமணி முதலிய நூல்களிற் கூறப்படும்; இச்சாதியில் ஆணும், பெண்ணும் எப் பொழுதும் இணைபிரியாதிருக்கும்; ஒன்றிறந்தால் மற் றொன்றும் உடனே உயிர்விடும்; இப்பறவைகளும், நூலும்

மணியும் பிரியாத் தன்மைக் குவமையாகக் கூறப்பட்டன; இங்ஙனங் கூறியது - உவமையணி. ஆட்டுக்கடாவின் கொம்பு பின் வளைந்து முறுக்குடையதாயிருக்கும்; இஃதப் பரத்தையுடன் மனம் மாறுபட்ட தன்மையை விளக்கும் ஆதலின், அங்ஙனம் மனம் மாறுபட்ட பொதுமகள், அத்தகர்க் கோடாக உருவகஞ் செய்யப்பட்டாள்; இஃதுருவகவணி. பொத்துதல்- துளையாக்கல்; பொத்த- பெயரெச்சம்; பொத்து- பகுதி, அ- பெயரெச்சவிகுதி; 'பொத்தகல்' எனக் கூட்டுக. நூற்கல் - உம்மைத்தொகை. கல்லும் அன்றிலும் - என்பவற்றிலுள்ள, உம்மைகள்- எண்ணுப்பொருளன. பிரியலம்- தன்மைப்பன்மை யெதிர்மறை வினைமுற்று. நிற்றி போதி- நிகழ்கால வினைமுற்றுக்கள்; இவற்றிலுள்ள ஓகாரங்கள்- வினாப்பொருளன. பொன்தொடி- மூன்றாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப்பெயர். *(சு)*

377. *ஆமாபோ னக்கி யவர்கைப் பொருள்கொண்டு*
சேமாபோற் குப்புறூஉஞ் சில்லைக்க ணன்பினை
யேமாந் தெமதென் றிருந்தார் பெறுபவே
தாமாம் பலரா னகை.

(இ-ள்.) இரைவாங்கித் தின்னுதற்கு, இரைகொடுக்கும் மனிதரை நக்கி அவருக்குப் பிரியமுண்டாக்கு கின்ற), ஆமாபோல் - பசுவாகிய மிருகத்தைப்போல, (அதாவது, பசுவைப்போல), நக்கி- (பொருள் கொடுப்பவரின் வாய் முதலியவற்றை நாவால்) நக்கி அவர்க்கு இனிமையுண்டாக்கி, அவர்- (தம்மிடம் மோகங்கொண்ட) அந்த ஆடவரின், கைப்பொருள் கொண்டு - கையிலுள்ள பொருள்களையெல்லாம் கவர்ந்துகொண்டு, சேமாபோல்- (ஒருவர்க்குங் கட்டுப்படாமல் சுயேச்சையாகத் திரிந்து, மனிதர் எதிர்ப்பட்டால் சீறிக் குப்புற்றுத் தலையைக் கவிழ்த்துக் கொம்புகளை நீட்டிப் பாய வருகின்ற), எருதாகிய மிருகத்

தைப்போல, (அதாவது, தன்னிச்சையாகத் திரியும் அடங்கா எருதைப்போல), குப்புறூஉம்- குப்புற்றுப் பாயவிருக்கின்ற, (அதாவது, எருது குப்புற்றுக் கொம்பால் பாய வருவதுபோல கோபித்துச் சீறிச் சண்டை தொடுக்க ஆரம்பிக்கின்ற), சில்லை கண்- தூர்த்தையாகிய பரத்தையினிடத்துள்ள, (பொருள் காரணமாக உண்டாகும்), அன்பினை- ஆசையை, ஏமாந்து- மயங்கி, எமது என்று இருந்தார் - எமக்கே உரியதென்று நம்பியிருந்தவர், (தம்மிடம் பொருளற்ற காலத்து அவரால் சீறித் துரத்தப்பட்டு இழிவுற்று), பலரால் - பலராலும், நகை பெறுப -(சிரிக்கப்படும்) அவமதிப்பை அடைவார்கள்; எ-று.

தனக்குப் புல் முதலிய இரைகளைக் கொடுக்கின்ற மனிதர்மீது அன்புடையதாய் அவருடம்பை நக்கி அவருக்குப் பிரியத்தை யுண்டாக்குகின்ற பசுவைப்போலத் தனக்குப் பொருள் கொடுப்பார்மீது அன்புகாட்டி நாவால் அவர் முகம் முதலியவற்றை நக்கி அவர்க்குப் பிரியத்தை உண்டாக்கி அவர் கைப்பொருளற்று வறுமையுற்ற காலத்தில், ஒருவருக்கும் அடங்காமல் சுயேச்சையாகத் திரியும் எருது எதிர்ப்பட்டவரைச் சீறித் தலைகவிழ்ந்து பாய வருவது போல அவரைக் கோபித்துத் துரத்துகின்ற தூர்க்குணமுடைய பொது மகளின் ஆசையை எம்முடையதென்று பொருளிருக்குங் காலத்தில் நம்பியிருந்தவர், பொருளற்ற காலத்தில் அவளால் வெறுத்து நீக்கப் பட்டுப் பலரும் தம்மைப் பார்த்துப் பரிகசித்தலைப் பெறுவார் என்பது இதன் கருத்து.

இதனால், ஒருவர் பொருள் கொடுக்குங் காலத்தில் அவர்மீது பொய்யன்பு காட்டி, அவரிடம் பொருளற்றபோது அவரை வெறுத்து நீக்கும் இயல்பினையுடைய விலை மாதரின் உறவு தீமை பயக்குமென்பதும், அவரால்வரும் நிலையற்ற இன்பம் துன்பமாகவே முடியுமென்பதும் விளக்கப்பட்டன.

வீட்டில் மனிதரால் வளர்க்கப்படும் பசு அவருடம்பை நக்கி அவர்மீதன்புடையதா யிருத்தல் இயல்பு; மனிதர்க்குக் கட்டுப்படாமல் சுயேச்சையாகத் திரியும் எருதுக்கு மனிதர் சகாயம் வேண்டிய தில்லையாதலால் அஃதவரைக் கண்டவுடன் அவர் தனக்கிடர்புரியவருகின்றாரென்று நினைத்துக் கொம்பைக் கவிழ்த்துக் கொண்டு அவர் மீது பாயவரும். பசுக்களிலும் சுயேச்சையாகத் திரிவனவும், எருதுகளிலும் மனிதரால் வளர்க்கப்படுவனவும் உண்டெனினும், 'அன்பு காட்டும் ஆமா' என்று குறித்ததால் அது மனிதரால் வளர்க்கப்படும் பசுவெனவும், 'கோபிக்கும் சேமா' என்று குறித்ததால் அது, சுயேச்சையாகத் திரியும் எருதென்றும் கொள்ளப்பட்டன. பரத்தையர் பொருள் வருவாயுள்ளபோது ஆடவர்மீ தன்பு காட்டுதற்குப் பசுவின் தன்மையையும், பொருள்வருவா யற்றபோது அவ்வாடவரை வெறுத்து நீக்குதற்கு எருதின் தன்மையையும் உவமை கூறியது - உவமையணி.

'ஆமா' என்பதற்கு, 'காட்டுப்பசு' என்றும், 'சேமா போற் குப்புஉறூம்' என்பதற்கு, 'எருதைப்போல கவிழ்ந்து படுத்துக் கொள்ளும்' என்றும் பொருள் கூறுவாருமுளர்; காட்டுப்பசு ஒன்றை நக்குவதால் முதலில் அதற்கு இனிமையுண்டாகப் பின்னர் அந்நாவிலுள்ள விஷத் தன்மையால் அதற்கு மரணமுண்டாகு மென்பர் அறிஞர்; அதனால், 'ஆமாபோனக்கி' என்பதற்கு, 'காட்டுப் பசுவைப்போல நக்கி முதலில் இனிமையுண்டாக்கி' என்று கூறினும், 'பின்னர் இடருண்டாக்கி' என்று கூறுதற் கிடமில்லை; மேலும் காட்டுப்பசு மனிதரோடு உறவு கொள்ளுதல் இல்லை; பொதுவாகக் கவிழ்ந்து படுத்துக் கொள்ளுதல் எல்லா எருதுகட்கும் இயற்கையன்று; சண்டி யெருது மட்டுமே வேலைக்குப் பயந்து கவிழ்ந்து படுக்கும்; ஆதலின், எல்லா எருதுகட்கும் கவிழ்ந்து படுத்தல் கூறுவதும் இயற்கை விரோதமாம்; ஒருவாறு சண்டியெருதின் தன்மையை மட்டும்

எடுத்துக் கொண்டாலும் அது பயந்து படுத்தலால், பொருள் வருவாயற்றபோது தாக்ஷிண்யமின்றி வெறுக்கும் வேசையர் தன்மைக்கு அவ்வுவமை இங்குப் பொருத்தமற்றதாம். ஆகவே இவ்விருவகைப் பொருளும் அத்துணைச் சிறப்புடையன வல்லவாம். 'வளர்க்கும் பசுவைப்போல் நக்கிச் சுயேச்சையாகத் திரியும் எருதைப்போல் பாயவரும்' என்ற வுரையே மிகப் பொருத்தமாம். இதில் உவப்பும், வெறுப்பும், நேர்நேராக அமைத்திருத்தல்.

ஆமா சேமா என்னும் இரண்டும் - இரு பெயரொட்டுப் பண்புத்தொகைகள். 'குப்புறூஉம்' என்பது, எருது கோபித்துக் கொம்பைக் கவிழ்த்துக் கொண்டு பாய வருதல்போலக் கோபித்தலை விளக்கி நின்றது; இது பிறிது மொழிதலணி. சில்லை - தூர்த்தை. ஏமாந்து - வினை யெச்சம்; ஏமா- பகுதி. பெறுப- பலர்பால் வினைமுற்று; ப- காலத்தையும், பாலையும் விளக்கி நின்றது. (எ)

378. *ஏமாந்த போழ்தி னினியார்போன் றின்னாராய்த்*
தாமார்ந்த போதே தகர்க்கோடா- மானோக்கின்
றந்நெறிப் பெண்டிர் தடமுலை சேராரே
செந்நெறிச் சேர்துமென் பார்.

(இ-ள்.) செம்நெறி- செவ்வியதாகிய முத்தி மார்க் கத்தை, சேர்தும் என்பார்- சேர்வோம் என்று எண்ணி அதனை விரும்பியிருக்கும் அறிஞர், ஏமாந்த போழ்தின்- (ஆடவர் தங்கள் மையலாகிய வலையிற்சிக்கி) ஏமாப்படைந்த சமயத் தில், இனியார் போன்று- (அவர்க்கு மிக்க) இன்பத்தைத் தருவார்போன்று நடித்து, (அவ்வாடவர் வறுமையுற்று), இன்னார் ஆய்- கெட்டவர்களாய், தாம் ஆர்ந்தபோது- தாம் விரும்பிவந்தபோது, தகர்கோடு ஆம்- ஆட்டுக்கடாவின் கொம்பைப்போல மனம் திரிபவராகின்ற, மான் நோக்கின்- மானின் கண்போன்ற பார்வையையுடைய, தம்நெறி- தமது

வஞ்சக மார்க்கத்திலேயே செல்கின்ற, பெண்டிர்- பொது மகளிருடைய, தடம்- பெரிய, முலை- தனங்களை, சேரார்- சேரமாட்டார்கள்; எ-று.

முத்தி மார்க்கத்தை விரும்புவோர், தம்மிடத்து மோகங்கொண்டு பொருள் தருகின்ற ஆடவர்மீது பொருளுள்ள காலத்தன்புடையரா யிருந்து, பொருள் வறண்ட காலத்து மனந்திரிந்து வெறுப்படைகின்ற பொது மாதரைச் சேரமாட்டார்கள் என்பது இதன் கருத்து.

இதனால், உண்மைப் பொருள் கண்ட அறிஞர் பரத்தையரின்பம் பொய்யென்பதை உணர்வாதலின் அவரைச் சேரார்கள் என்பதும் அறிவில்லார் அவரியற்கை உணராராகலின் அவரைக் கூடுவாரென்பதும் விளக்கப் பட்டன. அறிஞர் பொது மகளிரைக் கூடாரென்பது,

''பொருட் பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு
ளாயு மறிவி னவர்''

என்னும் (திருக்குறள் - 914-ஆம்) செய்யுளா னுணரப்படும்.

இன்னார் - வறுமையால் கேடுற்றவர். ஆர்தல்- விரும்புதல். தகர்க்கோடு முறுக்குடையதாய் வளைந்திருக்கும்; அது, பொதுமகளிரின் மனவேறுபாட்டை விளக்கி நின்றது; பிறிது மொழிதல். 'தம் நெறிப் பெண்டிர்' என்பதற்கு, 'எவருக்கும் கட்டுப்படாமல் தம் மனப்போக்கின் படியே நடக்கும் பரத்தையர்' என்று பொருளுரைப்பினுமாம். செந்நெறி - பண்புத்தொகை. (அ)

379. *ஊறுசெய் நெஞ்சந்தம் முள்ளடக்கி யொண்ணுதலார்*
தேறாமொழிந்த மொழிகேட்டுத்- தேறி
யெமரென்று கொள்வாருங் கொள்பவே யார்க்குந்
தமரல்லர் தம்முடம்பி னார்.

(இ-ள்.) ஒள்நுதலார்- பளபளப்பான நெற்றியை யுடைய விலைமாதர், ஊறு செய்- (பிறர்க்குத்) துன்பத்தைச் செய்கின்ற, நெஞ்சம் - (தமது) உள்ளத்தை, தம் உள் அடக்கி - (பிறர்க்குத் தெரியாதபடி) தமக்குள்ளேயே மறைத்து வைத்துக் கொண்டு, தேற- (பிறர் உண்மையென்று) தெளியும் படி, மொழிந்த- சொல்லிய, மொழி -(நடிப்பான) ஆசை வார்த்தைகளை, கேட்டு-, தேறி- (உண்மையானவை யென்று) உணர்ந்து, (அந்தப் பொது...தரை), எமர் என்று - (இவர்) எமக்குரியவரென்று, கொள்வாரும் - மனத்திற் கொள்வாரும், (அதாவது நினைப்பவரும்) கொள்ப- (அவ்வாறே) கொண்டிருப்பார்கள், தம் உடம்பினார்- தம்முடம்பு தமக்கே உரியது (பிறர்க்குரியதன்று) என்று கொண்டிருக்கும் அப்பரத்தையர், யார்க்கும்- எவர்க்கும், தமர் அல்லர்- உறவினையுடையராகார்; எ-று.

தம்முடைய வஞ்சகத்தை வெளிக்குக் காட்டாமல் மனத்திற்குள் மறைத்து வைத்துக்கொண்டு பொருள் தரும் ஆடவரிடம் அன்புடையவர்போலப் பேசுகின்ற பொது மாதரின் பசப்பு மொழிகளை நம்புவோர் எப்பொழுதும் நம்பிக்கொண்டே யிருப்பர்; ஆனால், தம்முடைய உடம்பைத் தமக்கே உரியதென்று நினைத்திருக்கும் அவ்விலைமாதர் எவர்க்கும் உரியவரா யிருக்கவே மாட்டார்கள் என்பது இதன் கருத்து.

இதனால், அன்பில்லாப் பரத்தையரை அன்புடை யாராகக் கருதுவோர் மூடர் என்பது குறிப்பிடப்பட்டது.

ஊறு - முதனிலைத் திரிந்த தொழிற்பெயர். எமர், தமர்- கிளைப்பெயர்கள். 'கொள்வாரும்' என்பதன் உம்மை- அசை; எதிரது தழுவியதெனினுமாம். 'கொள்பவே' என்பதிலுள்ள, ஏ- உறுதிப் பொருளது. (கூ)

380. *உள்ள மொருவ னுழையதா வொண்ணுதலார்*
கள்ளத்தாற் செய்யுங் கருத்தெல்லாந்- தெள்ளி
யறிந்த விடத்து மறியாராம் பாவஞ்
செறிந்த வுடம்பி னவர்.

(இ-ள்.) ஒள்நுதலார்- (தைலம் முதலியன பூசி மினுக்குதலால்) பிரகாசிக்கின்ற நெற்றியையுடைய பொது மாதர், உள்ளம்- (தங்களுடைய) மனம், ஒருவன் உழையது ஆ- ஒருவனிடத்திலுள்ளதாக, (மற்றொருவனிடத்தில்), கள்ளத்தால்- வஞ்சனையால், செய்யும்- (அன்புடையார் போல் நடித்தலைச்) செய்கின்ற, கருத்து எல்லாம்- (அவர்களின்) உள்ளமுழுவதையும், தெள்ளி - (நன்றாக) ஆராய்ந்து, அறிந்த இடத்தும்- உணர்ந்தபோதும், பாவம் செறிந்த- தீவினை மிகுந்த, உடம்பினவர்- உடம்பினை யுடையவர், (அதாவது, பாவிகள்), அறியார்- (அதன் உண்மையை) உணரமாட்டார்கள்; எ-று.

பொது மாதரிடத்தில் ஒருவர் பணம் கொடுத்துப் பேசிக் கொண்டிருக்கும்போது, அப்பரத்தையின் மனம், மிக்க பொருள் கொண்டு வருவதாகச் சொல்லிச் சென்ற மற்றொருவனிடத்துச் சென்று கொண்டிருக்கும்; அவ்வாறு செல்லினும் அவர், பக்கத்திலிருப்பவனிடத்தில் அன்புடையார்போல் நடிப்பர்; இச்செயல் பலருமறிந்ததே; எனினும் பாவமுடையவன் அதனை யுணராமல் அவளை நம்பி யிருப்பான் என்பது இதன் கருத்து.

பரத்தையர் குணத்தை அறிந்தும் ஒருவன் அறியா திருக்கும் படி செய்வது அவனுடைய தீவினையாம். இதனால், பொது மகளை நம்புவோன் தீவினைப் பயனால் அறிவிழந்தவன் என்பது குறிக்கப்பட்டது. தாசியை விரும்புவது சிறப்பிழந்தார் செய்கை யென்பதை,

''இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்
திருநீக்கப் பட்டார் தொடர்பு''

என்னும் (திருக்குறள்-920-ஆம்) செய்யுளானு முணரலாம். ஆம்- அசை. (*க0*)

2-வது

இன்பவியல்

இன்ப இயலாவது- மனிதர் எய்தும் இன்பத்தைப் பற்றியே கூறும் பிரிவாம். அது கற்புடை மகளிர் சேர்க்கையா லெய்துவதாம். பரத்தையர் சேர்க்கை முதலிற் சிறிது இன்பம் தந்து பின் துன்பத்தையே தருவதாம். ஆதலின், இன்ப துன்பவியலுக்குப் பின், இவ்வின்பவியல் வைக்கப்பட்டது. கற்புடைமகளிர், காமநுதலியல் என்னும் அதிகார மிரண் டும் இதிற் சேர்ந்தவைகளாம்.

இன்பமும், துன்பமும் பொருட்பாலிலுங் கூறப்பட் டுள்ளன; இக்காமத்துப்பாலிலுங் கூறப்படுகின்றன. இவற் றிற்கு வேறுபாடுண்டு; இக்காமத்துப் பாலிற் கூறப்படுபவை காதலால் உண்டாம் இன்பதுன்பங்களாம்; பொருட்பாலிற் கூறப்பட்டவை மனிதச் செயல்கள் பிறவற்றா லுண்டாம் இன்பதுன்பங்களாம்.

காதல் இன்பத்தின் இலக்கணங்கள் தமிழ் அகத் திணை நூல்களுள் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இவ்வின்பம் அகப்பொருளென்று சொல்லப்படும்; மனம் ஒத்த அன்பால் ஒருதலை மகனும், தலைவியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த இவ்வின்பம், அக்கூட்டத்தின் பின்னர்,

அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத் துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதலின், 'அகம்' என்று கூறப்பட்டது; அகத்திணை, அகப்பொருள் என்பன ஒரு பொருட் சொற்கள்; இது,

''கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப''

என்னும் (தொல்-பொரு-அக-1-ஆம்) சூத்திரப்படி கைக் கிளை, குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம், பெருந்திணை என ஏழு வகைப்படும்; இவற்றுள் கைக் கிளை, பெருந்திணை யொழிய மற்றவை ஐந்தும் ஐந்திணை யெனப்படும். கைக்கிளை - ஒருதலைக் காமம்; ஐந்திணை - அன்புடைக்காமம்; பெருந்திணை- பொருந்தாக் காமம். இம்மூன்று வகையுள் அன்புடைக்காமம் சிறந்ததாம்; இதற்கு,

''புணர்தற் பிரித லிருத்த லிரங்க
லூட லிவற்றி னிமித்த மென்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே''

என்னும் (தொல்-பொரு-அக-14-ஆம்) சூத்திரத்திற் கூறிய படி புணர்தலும், புணர்தனிமித்தமும், பிரிதலும், பிரிதல் நிமித்தமும், இருத்தலும், இருத்தனிமித்தமும், இரங்கலும், இரங்கனிமித்தமும், ஊடலும், ஊடனிமித்தமும் என்ற பத்தும் உரியனவாம். புணர்ச்சியும், புணர்ச்சி நிமித்தமும் குறிஞ்சிக்காம்; பிரிவும் பிரிதனிமித்தமும் பாலைக்காம்; இருத்தலும் இருத்தனிமித்தமும் முல்லைக்காம்; இரங்கலும், இரங்கனிமித்தமும் நெய்தற்காம்; ஊடலும், ஊடல் நிமித்தமும் மருதத்திற்காம்.

இன்னும் இவ்வன்புடைக்காமம், களவு, கற்பு என்னும் இருவகை யொழுக்கங்களையுமுடையதாம்; இவற்றுள் களவாவது- தலைவியும், தலைவனும் பிணி மூப்புச் சாக்காடில்லாமல் எப்போதும் ஒரே தன்மையராய் அழகு, செல்வம், வயது, குலம், குணம், அன்பு முதலிய வற்றி லொன்றுபட்டுப் பிறர் கொடுப்பவும், அடுப்பவும் இன்றி ஊழினாற் றாமே யெதிர்ப்பட்டுப் பிறரறியாது கூடி வருவது- கற்பாவது- தலைமகள் தலைமகனைத் தெய்வ மென்று கொள்வது. இவற்றின் விரிவைத் தொல்காப்பியம் பொருளதிகாரம், இறையனாரகப் பொருள் முதலிய நூல்களிற் காண்க. ஐந்திணைக் கோவை முதலிய நூல்களில் அன்புடைக் காமம் பல துறைகளாகக் கூறப்படும். இவை, மனிதர் இல்லறத்தில் அடையும் இன்பத்திற்கு இன்றியமை யாதனவாதலின், நூல்களில் கூறுதல் மரபாம். ஆகலின், இவற்றுள் முக்கியமான சில பகுதிகள் இவ்வியலுட் கூறப் படுகின்றன. இவை, பல முனிவர்களாற் கூறப்பட்டன வாகலின், இவற்றுள் எல்லாத் துறைகளும் அமையாது அவரவர் மனத்திற்றோன்றிய சில துறைகள்மட்டும் அமைந் துள்ளன; அவை ஒருவாறாக வரிசைப் படுத்தி இரண்டதி காரங்களாகப் பதுமனாரால் அமைக்கப்பட்டிருக்கின்றன.

மனிதர் சிற்றின்பத்தை அனுபவித்தலால், அதன் சுவை இன்ன தென்றோர்வர்; ஆனால், அது நிலையற்றதா யிருத்தலின், பின்னர் 'இதைப்போன்று இன்பம் தரும் பொருள் நிலையாயிருத்தலே சிறந்ததாம்; அப்பொருள் யாது?' என்று ஆராய்வர்; அப்போது, அத்தகைய பொருள் முத்தியே யென்பது அவர்க்குப் புலப்படும்; அங்ஙனம் புலனாகவே அவர் அச்சிற்றின்பத்தை விட்டுப் பேரின்பத்தை அடைய முயல்வர்; ஆதலின், இச்சிற்றின்பப்பகுதியைப் பேரின்பப் பகுதிக்குமுன் மூன்றாவதாக நூல்களிற் கூறும் கிரமம் ஏற்பட்டிருக்கின்றது.

அதிகாரம் 39

கற்புடை மகளிர்

கற்புடைமகளிராவார்- பதிவிரதைகளாவர்; இவ்வதிகாரம் அவர் தன்மையைக் கூறுவதாதலின் இப்பெயர் பெற்றது. கற்புடை மகளிர் இன்பமே மெய்யான இன்பமாதலின், அதனை விளக்குதற்குப் பொய்யின்பங் காட்டும் பொது மகளிர் தன்மை கூறியதற்குப் பின் இது வைக்கப்பட்டது.

381. *அரும்பெறற் கற்பி னயிராணி யன்ன*
பெரும்பெயர்ப் பெண்டி ரெனினும்- விரும்பிப்
பெறுநசையாற் பின்னிற்பா ரின்மையே பேணு
நறுநுதலா ணன்மைத் துணை.

(இ-ள்). (கணவராயிருப்பவர்க்கு மனைவியராவார்), அயிராணி அன்ன- இந்திராணியை நிகர்த்த, பெரும்பெயர்- பெரிய கீர்த்தியையுடைய, பெண்டிர் எனினும்- பெண்களே யானாலும், (அவர்களுள்), பெறும் நசையால்- இன்ப நுகர வேண்டுமென்னும் விருப்பத்தால், விரும்பி - தன் நேயத்தை விரும்பி, பின் நிற்பார்- தன் பின்னே வந்து நிற்கும் ஆடவர், இன்மையே - இல்லாதிருத்தலையே, (அதாவது, ஆடவர் தன்னை விரும்பிப் பின் தொடராதபடி நடந்துகொள் வதையே), பேணும் - (விரதமாகக்) காப்பாற்றுகின்ற, அரும்

பெறல் கற்பின்- பெறுதற்கரிய கற்பினையுடைய, நறுநுத லாள் - அழகிய நெற்றியையுடைய பெண்ணே, நன்மை துணை- (தன் கணவனுக்கு) நன்மைமிக்க இல்வாழ்க்கைத் துணையாவாள்; எ-று.

கணவருக்கு மனைவியராக அமைவோர், இந்திராணி போன்ற கீர்த்தி வாய்ந்தவர்களா யிருப்பினும், அவர்களுள், பிற ஆடவர் தன்னை விரும்பிப் பின்னே வந்து நிற்பதற்கே துவில்லாமல் நடப்பதாகிய கற்பினைக் காப்பாற்றும் பெண்ணே கணவனுக்கு நல்ல இல்வாழ்க்கைத் துணை யாவாள் என்பது இதன் கருத்து.

இந்திராணியை உவமைகூறியது அழகிற்கும், செல்வத்திற்கும்; உவமையணி. இதனால், பெண்கள், அழகிலும், செல்வத்திலும் சிறந்து இந்திராணிபோற் புகழ்பெற் றிருப்பதாற் பயனில்லை; அவளைப்போலக் கற்பினைக் காப்பாற்றுதலே சிறப்பு என்பது கூறப்பட்டது; இந்திராணி கற்பிற் சிறந்தவளென்பதை, நகுஷன் இந்திர பட்டம் பெற்று அவளைச் சேர விரும்பிய காலத்தில் அவனுக்கவள் இசையாதிருந்த கதையால் உணரலாம்; இந்திராணிக்குக் கற்புயர்வு கூறியதற்கேற்ப, ''அரும்பெறற் கற்பின்'' என்ற அடையை அவளுக்கே ஏற்றினும் பொருத்த மாம். பெண்களிடம் பிற ஆடவர்க்கு இணங்கும் குறிப்பிருந் தால் மாத்திரம் பிற ஆடவர், அவர்களிடம் நெருங்குவர்; ஆதலின், அவ்விதக் குறிப்பு இல்லாது நடந்து கொள்வதே, பின் னிற்பாரின்மை பேணுதலாம். பிறமாதரை விரும்பு வோர் அஞ்சி மறைந்தொழுகுவோராதலின், அவரை, 'பின் நிற்பார்' என்றார் ஆசிரியர். கற்புடையாளே மிகச் சிறந்தவ ளென்பதை விளக்கற்கு, அவளை, 'நறுநுதலாள்' என்றும், 'நன்மைத்துணை' என்றும் கூறினார். கற்புடையாளே சிறந்தவ ளென்பதை,

''பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்''

என்னும் (திருக்குறள்-54-ஆம்) செய்யுளானுமுணர்க. நல்லொழுக்கமுடையாளே இல்வாழ்க்கைத்துணையாவாள் என்பதை,

''மனைத்தக்க மாண்புடையா ளாகித்தற்
கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை''

என்னும் (திருக்குறள்-51-ஆம்) செய்யுளாலுணர்க. 'அரும் பெறல்' என்பதை, 'பெறல் அரும்' என மொழிமாற்றிப் பொருள் கொள்க. அயிராணி- இந்திராணி யென்னும் வட சொற்றிரிபு. (க)

382. குடநீரட் டுண்ணு மிடுக்கட் பொழுதுங்
கடனீ ரறவுண்ணுங் கேளிர் வரினுங்
கடனீர்மை கையாறாக் கொள்ளு மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்.

(இ-ள்.) (உணவுப் பொருள் எதுவும் அகப்படாமை யால்), குடம் நீர்- குடத்திலுள்ள நீரையே, அட்டு- காய்ச்சி, உண்ணும்- உண்ணுகின்ற, இடுக்கண் பொழுதும்- (வறுமைத்) துன்பம் வந்த காலத்திலும், கடல் நீர்- கடலின் நீர் முழுவதையும், அற- வற்றிப் போகும்படி, உண்ணும்- உண்ணத்தக்க, (பெருங் கூட்டமான), கேளிர்வரினும் - சுற்றத்தார் விருந்தினராக வந்தாலும், கடன்- (தன்னுடைய) கடமையாகிய, நீர்மை- நற்குணங்களையே, கை ஆறு ஆ- ஒழுக்க நெறியாக, கொள்ளும் - கொள்ளுகின்ற, மடமொழி - வஞ்சனையற்ற இன் சொல்லையுடைய பெண்ணே, மாதர்- அழகிய, மனைமாட்சியாள்- இல்வாழ்க்கைக்குத்தக்க பெருமையுடையவளாவாள்; எ-று.

மிக்க வறுமையற்ற காலத்தும், இல்லறத்திற் குரிய நற்செயல்களினின்றும் தவறாதவளே இல்வாழ்க்கைக்குத் தக்க சிறப்புடையவளாவாள் என்பது இதன் கருத்து.

ஒருவனுக்கு வாழ்க்கைத் துணையாயிருக்கும் மனையாளுக்குக் கடமையாவது- துறவியரைப் பேணல், விருந்தினரையுபசரித்தல், சுற்றத்தாரைப் போற்றல், ஏழைக்கிரங்குதல், இல்வாழ்க்கைக்குரிய பொருள்களைக் காப்பாற்றுதல், உண்டி சமைத்தல், கணவனுக்கினியன செய்தல், பரோபகாரம் முதலியனவாம். இவையெல்லாம் பொருளுள்ள காலத்துத் தடையின்றி நடைபெறும்; வறுமை வந்த போது தடைப்படும்; அவ்வறுமைக் காலத்திலும் இவற்றை நடத்துதலே சிறந்த செயலாம்; ஆதலின், அச்சிறப்பினைக் குறித்தற்கு' ''.................. இடுக்கட் பொழுதுங் .... கடனீர்மை.......... கொள்ளும்.......... மாதர் மனைமாட்சியாள்'' என்றார் முனிவர். இதனால், இல்லறத்திற் குரியாள் எந்நிலையிலும் அதற்குரிய தர்மங்களைச் செய்வதிற் றவறலாகா தென்பது விளக்கப்பட்டது.

குடநீரட்டுண்ணல்- வறுமை மிகுதியை யுணர்த்திற்று. கடனீரறவுண்ணல்- சுற்றத்தாரின் மிகுதியை யுணர்த்திற்று. இடுக்கண்- துன்பம்; அது, துன்பத்திற்குக் காரணமாகிய வறுமையை உணர்த்திற்று; இஃதுபசார வழக்கு. மடமொழி- அன்மொழித்தொகை. மாதர்- அழகு; மனைக் கடை. (உ)

383. *நாலாறு மாறாய் நனிசிறிதா யெப்புறனு*
மேலாறு மேலுறை சோரினு- மேலாய
வல்லாளாய் வாழுமூர் தற்புகழு மாண்கற்பி
னில்லா ளமர்ந்ததே யில்.

(இ-ள்.) குடியிருக்கும் வீட்டில்), நால் ஆறும்- நான்கு பக்கங்களிலும், ஆறு ஆய் - (சுவர் இடிந்து) வழியுண்டாகி,

நனி சிறிது ஆய்- (அது) மிகவும் சிறியதாகி, எ புறனும் - எந்தப் பக்கத்திலும், (அதாவது, எல்லாப் பக்கங்களிலும்), மேல் ஆறு - மேலே (கூரை பிரிந்து ஏற்பட்டிருக்கும்) வழியி னின்று, மேல்- தன்மீது, உறை சோரினும்- மழை நீர் வழிந் தாலும், மேல் ஆய- உயர்வாகிய தருமங்களை, வல்லாள் ஆய்- (செய்ய) வல்லவளாய், வாழும் ஊர்- தான் வாழுகின்ற ஊரிலுள்ள மனிதர், தன்புகழும் - தன்னைப் புகழத் தக்க, மாண்- மாட்சிமைப்பட்ட, கற்பின்- கற்பினையுடைய, இல் லாள் - மனைவியானவள், அமர்ந்ததே- தங்கி யிருக்கப் பெற்றதே, இல்- வீடாகும்; எ-று.

நான்கு பக்கங்களிலும் சுவர் இடிந்து வழியுண்டாய் மேற்பாகம் பிரிந்து மழை யொழுகத்தக்க சிறிய வீட்டில் குடியிருக்கும்படியான தரித்திரக் கொடுமை மிகுந்த காலத் திலும் ஊரார் புகழும்படி இல்லறம் நடத்திக் கற்பொழுக் கத்தினின்றும் தவறாதவளெவளோ அவள் குடியிருக்கும் வீடு, அவ்வாறு தாழ்ந்தநிலையி லிருந்தாலும் அதவே சிறந்த தென்பது இதன் கருத்து.

இதனால், கற்புடையாள் எவ்வளவு தரித்திரத்தை அனுபவித்த போதிலும் அவளிருக்குமிடமே சிறந்ததாகு மென்று கற்புடையாளின் உயர்வை விளக்கினார். முனிவர். வீடு சிறிதாயிருப்பதும், நான்கு பக்கங்களிலும் இடிந்து வழியுண்டாகி யிருப்பதும், மேற்கூரை பிரிந்திருப்பதும், மழை நீர் ஒழுகுவதற்கிடமா யிருப்பதும் தரித்திர மிகுதியை விளக்குவனவாம்.

ஊர் - இடவாகுபெயர். இவ்வுரையில் பொருண் முடிபுக்குத் தகச் சில முடிக்குஞ் சொற்கள் இசை யெச்சமாகக் கூட்டி யுரைக்கப்பட்டன. உம்மை- இழிவு சிறப்புப் பொரு ளது. ஆய- பலவின் பால் வினையாலணையும் பெயர். (ரு)

384. *கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவா*
ளுட்குடையா ளூர்நா ணியல்பினா- ளுட்கி
யிடனறிந் தூடி யினிதி னுணரு
மடமொழி மாதராள் பெண்.

(இ-ள்.) கட்கு இனியாள் - (கணவன்) கண்ணுக்கு இனிய வடிவமுள்ளவளாகியும், காதலன் - தன் கணவனுடைய, காதல் வகை- ஆசைக்குத் தக்கவிதமாக, புனைவாள்- தன்னை அலங்கரித்துக் கொள்பவளாகியும், உட்கு உடையாள்- (பிற ஆடவரோடு பேசுதற்கும், அவரிருக்குமிடத்திற்குச் செல்லுதற்கும்) அச்சமுடையவளாகியும், ஊர்- ஊரிலுள்ள பிறரிடத்து, நாண் இயல்பினாள்- (அவரோடு பேசுதற்கும் நெருங்குதற்கும்) வெட்கப்படுகின்ற தன்மையுடையவளாகியும், உட்கி - (தன்கணவனிடத்து அஞ்ச வேண்டிய சமயங்களில்) அஞ்சி, இடன் அறிந்து - சமயமறிந்து, ஊடி - (அவனோடு) பிணங்கி, இனிதின்- இன்பமுண்டாகும்படி, உணரும் - (அவ்வூடல் நீங்கித்) தெளிகின்ற, மடமொழி - கபடமில்லாத வார்த்தைகளையுடைய, மாதராள்- பெண்ணே, பெண்- (இல்லற நடத்துவோர்க்குரிய) மனைவியாவவள்; எ-று.

ஒருவனுக்கு மனைவியா யிருப்பவள், கொடும் பார்வை, முகக்கடுகடுப்பு முதலிய துர்க்குணங்களில்லாமல் இனிய தோற்றமும், அன்பான பார்வையுமுடையவளா யிருத்தல் வேண்டும்; கணவன் எந்தவகை அலங்காரத்தில் பிரியப்படுவானோ அந்தவகை அலங்காரங்களைச் செய்து கொள்ள வேண்டும்; அன்னிய ஆடவரோடு பேசுதற்கும் நெருங்குதற்கும் அஞ்சவேண்டும்; ஊரிலுள்ள மற்றவரோடு பேசுதற்கும், நெருங்குதற்கும் வெட்கப்பட வேண்டும்; கணவனிடத்தே பணிவிடைகள் செய்வதில் அச்சமுடையவளாயிருக்க வேண் டும்; அவனிடத்தே பிணங்கத்தக்க சமயத்தில் பிணங்கி, அதை நீக்கிக் கூடத்தக்க சமயத்தில்

கூடவேண்டும்; இத்தகைய குணஞ் செயல்களையுடையாளே கற்புடையவளும், மனையறத்துக்குத் தக்கவளுமாவாள் என்பது இதிற் குறிக்கப்பட்டது.

ஊடுதல்- தலைவனும் தலைவியும் இன்பமனுபவிக்குங் காலத்தில், அதனை அதிகப்படுத்தும் பொருட்டுத் தலைவன்மீது தலைவி காரணமல்லாத ஒரு காரணத்தைக் காட்டிக் கோபித்துக் கொள்ளுதலாம்; இது, பிணக்கு என்றும், புலவி என்றும் சொல்லப்படும். இவ்வாறு ஊடி உடனே அவ்வூடனீங்கிக் கூடுதல் மிகுந்த இன்பத்தை விளைவிக்கும்; இதனை,

''ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்''

என்னும் (திருக்குறள்-1330-ஆம்) செய்யுளுணர்த்தும்- தெளிதல்; புலவி - ஒருவிதமயக்கம்; அம்மயத்தத்தினின்று நீங்குதல் கூடவேண்டு மென்னும் தெளிவை யுண்டாக்குதலின், புலவி நீக்கம் உணர்வென்று கூறப்பட்டது. இதுபோலவே தூக்கத்தினின்றும் விழித்தலுக்கும் இந்த உணர்ச்சியென்னும் பெயர் வழங்கப்படுகின்றது- ஊர்- இடவாகு பெயர். மாதர்- அழகு; அதனையுடையாள் - மாதராள். (ச)

385. எஞ்ஞான்று மெங்கணவ ரெந்தோண்மேற்
சேர்ந்தெழினு
மஞ்ஞான்று கண்டேம்போ னாணுதுமா-
லெஞ்ஞான்று
மென்னை கெழீஇயினர் கொல்லோ
பொருணசையாற்
பனமாா்பு சேர்ந்தொழுகு வார்.

(இ-ள்.) எம் கணவர் - எம்முடைய நாயகர், எஞ்ஞான்றும்- எந்நாளும், எம்தோள்மேல் - எம்முடைய தோள்

மேலே, சேர்ந்து எழினும் - அணைந்து எழுந்தாலும், (அதாவது, தினந்தோறும் எம் நாயகர் எம்மைக் கூடி இன்பமனுபவித்தாலும்), அ ஞான்று- (புதிதாக மணஞ்செய்து முதல் நாளில் அவரைக் கூடிய) அந்தக் காலத்தில், கண்டேம் போல் - நாம் அவரைக்கண்டு நாணியதுபோலவே, (இப்பொழுதும் அவரைக் கூடுகின்ற ஒவ்வொரு சமயத்திலும்), நாணுதும்- வெட்கத்தை அடைகின்றோம், (நம் இயற்கை இங்ஙனமிருப்ப), எ ஞான்றும்- எந்தநாளும், பொருள் நசையால்- பொருள் விருப்பத்தால், பல்மார்பு - பலருடைய மார்புகளை, சேர்ந்து ஒழுகுவார்- (ஒரே காலத்தில்) கூடித் (தீய மார்க்கத்தில்) நடக்கின்ற பொது மாதர், கெழீஇயினர்- (சிறிதும் நாணமின்றிப் பலரையும்) கூடி வாழ்கின்றார்கள், என்னை கொல்ஓ - (இது) என்ன தன்மையோ?; எ-று.

எம் நாயகர் தினந்தோறுஎம் எம்மைக்கூடி இன்பமனுபவித்தாலும் ஒவ்வொரு நாளிலும் நாம் புதிதாக அவரைக் கூடிய காலத்தில் எப்படி நாணினோமோ அவ்வாறே நாணத்தை அடைகின்றோம்; அங்ஙனமிருப்பப் பொது மகளிர் பொருள் விருப்பத்தால் ஒரேநாளில் நாணமின்றிப் பலரையும் கூடுகின்றார்களே! இஃதென்ன தன்மையோ என்பது இதன் கருத்து.

இது, கற்புடையா ளொருத்தி, நாணமற்ற பரத்தையரின் இழிவான செயலைப்பற்றி வியந்து கூறியதாக அமைக்கப்பட்டது.

இதனால், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் மகடூஉக் குணம் நான்கினையும் தமக்குரிய பொருளாகக் கொண்டிருக்கும் குலமகளிரிடத்தே உண்மை யின்பம் உண்டாமென்பதும், நாணமற்றுப் பலர்க்கும் போகம் விற்கும் பொதுமகளிடத் துண்டாம் பொய்யின்பம் இன்பமாகா தென்பதும் விளக்கப்பட்டன.

கண்டேம்- தன்மைப் பன்மை வினையாலணையும் பெயர். நாணுதும்- தன்மைப் பன்மை முற்று. 'எவன்' என்னும் வினாவினைக்குறிப்பு முற்று, இடைக்குறையாய், ஐகாரச்சாரியை பெற்று, 'என்னை' என நின்றது. கெழுவினர் என்பது, கெழீஇயினர்- என அளபெடுத்தது; சொல்லிசையளபெடை; இதில், கெழுவு- பகுதி, அர்- விகுதி, இன்- இடைநிலை; இது- தெரிநிலை வினைமுற்று. ஆல், கொல், ஓ- அசைகள். (ரு)

386. *உள்ளத் துணர்வுடையா னோதிய நூலற்றால்*
வள்ளன்மை பூண்டான்க ணொண்பொருட் டெள்ளிய
வாண்மகன் கையி லயில்வா ளனைத்தரோ
நாணுடை யாள் பெற்ற நலம்.

(இ-ள்.) நாண் உடையாள்- நாணத்தையுடைய குலமகள், பெற்ற நலம்- அடைந்த அழகானது, உள்ளத்து உணர்வு உடையான்- மனத்தில் நல்லறிவுடையவன், ஓதிய- படித்துணர்ந்த, நூல் அற்று - நூலைப்போன்றது, வள்ளன்மை பூண்டான் கண்- ஈகைத் தன்மையைக் கொண்டிருக்கின்றவனிடத்துள்ள, ஒண்பொருள் அற்று - பிரகாசமான திரவியம் போன்றது, தெள்ளிய - (மனிதர்க்குள்ளே வீரமுடையானென்று) தேர்ந்தெடுக்கப்பட்ட, ஆண்மகன் - ஆண் தன்மையிற் சிறந்த வீரனது, கையில்- கையிலிருக்கின்ற, அயில்வாள் அனைத்து- கூர்மையான வாளயுதம் போன்றது; எ-று.

நாணம் முதலிய நாற்குணங்களையுமுடைய குலமகள் பெற்ற அழகானது நல்லறிவுடையான் கற்ற நூலையும், ஈகையுள்ளான் பெற்ற பொருளையும், வீரன் கைவாளையும் நிகர்க்கும் என்பது இதன் கருத்து.

அறிவுடையான், தான் கற்ற கல்வியை நன்மார்க்கத்திலேயே உபயோகப்படுத்துவான்; ஈகைக்குணமுடையார்,

தாம் பெற்ற பொருளைச் சற்பாத்திரர்கட்கே கொடுப்பர்; வீரன் தன் கைவாளை வீரமிக்க போர் ஒன்றிலேயே உபயோகப்படுத்துவான்; ஆதலால், இவைசிறந்தனவாம்; இவற்றைப்போலக் குலமகளின் அழகு அவளுக்குரிய நாயகனுக்கே உரியதாகும்; ஆதலின், இது சிறந்ததாம். இங்கு அறிவுடையான் கல்வி, கொடையுடையான் பொருள், வீரமுடையான் வாள் மூன்றையும் குலமகளின் அழகுக் குவமை கூறியது- உவமையணி. 'அற்று' என்பதைத் தீபக மாக்கி இரண்டிடங்களிலுங் கூட்டுக.

இனி, வள்ளன்மை பூண்டான் ஒண்பொருளை, உணர் வுடையான் ஓதிய நூலுக் குவமையாகவும், வீரன் கை வாளை, குலமகளின் அழகுக் குவமையாகவும் கூறுவாரு முளர்.

இதனால், குலமகளின் அழகு அவளுக்குரிய நாயகனுக்கே பயன்பட்டு நிற்பதால் சிறந்ததென்பதும், பொதுமகளிர் அழகு பலராலும் துய்க்கப்படுதலால் சிறந்த தன் றென்பதும் விளக்கப்பட்டன. நாண்- மற்ற குணங் களாகிய மடம், அச்சம், பயிர்ப்பு என்பவனவற்றிற்கும் உபலக்ஷணமாம்; ஆதலின், அவற்றையுங் கூட்டிப் பொரு ளுரைக்க. 'வள்ளல் தன்மை' என்பது, 'வள்ளன்மை' என விகாரப்பட்டது. ஒள்+பொருள்= ஒண்பொருள்; பண்புச் சொற்களில் உள்ள லகர ளகரங்கள் பெரும்பான்மையும் னகர ணகரங்களாகத் திரிந்து வருவனவாம்.

இவ்வதிகாரத்தின் இந்த அறு செய்யுட்களாலும் குலமகளிர்க் குரிய நற்குணங்கள் பொதுவாக எடுத்துச் சொல்லப்பட்டன. (கூ)

பவனிபோய் வந்த தலைவன் பள்ளியறைக்குச் செல்லத் தலைவி பிணங்கிக் கூறியது.

387. *கருங்கொள்ளுஞ் செங்கொள்ளுந் தூணிப் பதக்கென்*
றொருங்கொப்பக் கொண்டானா மூர-
னொருங்கொவ்வா
நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்ப னீராடா
தென்னையுந் தோய வரும்.

(இ-ள்.) ஊரன்- (நாட்டுப் புறத்திலிருக்கும் ஒரு) ஊரிலுள்ளவன், கருகொள்ளும்- கறுப்பாகிய கொள்ளையும், செம் கொள்ளும்- சிவந்த கொள்ளையும், ஒருங்கு ஒப்ப- எல்லாம் ஒரே நிகராக, (இரண்டிடற்குமுள்ள வேற்றுமை கருதாது), துணிபதக்கு என்று - (தான் கொடுத்த விலைக்கு) தூணிப் பதக்கென்னு ஒரே அளவாக, கொண்டானாம்- வாங்கிக் கொண்டானாம், (அதுபோல), ஒருங்கு ஒவ்வா - (நாணம் முதலிய குணங்கள் பரிசுத்தம் முதலியன) முழு வதுமே பொருந்தாத, நல்நுதலார்- அழகிய நெற்றியை யுடைய பொதுமகளிரை, தோய்ந்த- சேர்ந்தனுபவித்த, வரைமார்பன்- மலைபோன்ற மார்பினையுடைய என் கணவன், நீர் ஆடாது- நீரின் மூழ்கி உடம்பைச் சுத்தம் செய்து கொள்ளாமல், என்னையும் - (பரிசுத்தமாயிருக்கும் குல மகளாகிய) என்னையும், தோயவரும் - சேர்ந்தனுபவிக்க வருகின்றான்; (இஃதென்ன முறைமையோ?); எ-று.

நாட்டுப்புறச் சிறு கிராமத்திலுள்ள ஒருவன், கருங் கொள்ளையும், செங்கொள்ளையும் பேதங்கருதாது ஒரே விலைக்கு ஒரே அளவாக வாங்கிக் கொண்டதைப்போல என் நாயகன் தீண்டப்படாதாராகிய பரத்தையரைக்கூடி ஸ்நானஞ் செய்யாமல், அவரைப்போலவே என்னையும் நினைத்துக் கூடவருகின்றான்; இஃதென்ன மதியோ? என்பது இதன் கருத்து.

இது, பவனிசென்றுவந்த தலைவன், தலைவியிடம் பற்றியறை யிற்சென்று ஒரு படுக்கையிலிருந்தபோது, தலைவி காதல் மிகுதியால், பிணங்குதற்குக் காரணமில்லா திருக்கவும், அவன் பொது மகளிரைக் கூடிவந்ததாக ஒரு காரணங் கற்பித்து அதனைக் கூறிப் பிணங்கியதான ஒரு துறையை அமைத்துச் செய்யப்பட்ட செய்யுளாகும்.

இதனால் கற்புடைய மகளிர் நாயகரிடத்து அளவற்ற காதலை யடையரா யிருப்பரென்பதும், பிணங்கியும் இணங்கியும் அவர்க்குப் பேரின்பத்தை நல்குவரென்பதும், அவர் விலைமாதரைக் கூடிவரினும் அவர்மீது வெறுப் படையாரென்பதும், ஆனால் அவரைக்கூடி அசூசியானதற்கு அருவருப்புக் கொள்வரென்பதும், அவ்வருவருப்புத்தீர நாயகரை ஸ்நானஞ் செய்துவருமாறு செய்து கூடுவரென்ப தும் விளக்கப்பட்டன.

நாட்டுப்புறத்தான் கருங்கொள்ளையும், செங்கொள் ளையும் ஒரு தன்மையனவாகக் கருதி வாங்கியது உயர்வு தாழ்வுணராத தன்மைக் குவமையாம்; இஃதெடுத்துக் காட்டு வமையின்பாற்படும். கருங்கொள் பொதுமகளிரின் இழிவுக் கும், செங்கொள் குலமகளிரின் உயர்வுக்கும் உவமைகளாம். எத்தகைய அசுத்தமானவர் குளிக்காமல் வரினும் அவரைக் கூடுவது தாசிகளின் இயற்கை; தலை வரும் பரிசுத்தமில்லாத வராய் வரின் அவரைக்கூட மறுப்பது குலமகளின் இயற்கை; ஆதலின், அவன் ஸ்நானஞ் செய்யாமல் வந்த தன்மையைப் பரத்தையரிடம் செல்லும் தன்மையாகவைத்து, 'அவரையும் என்னையும் ஒரு தன்மை யராகக் கருதி வருகின்றான் தலைவன்' என்று தலைவி கூறினாள். விலைமாதர் நின்னை அனுபவித்ததனால் நின் மார்பு அவர் மிச்சிலாம்; ஆதலின் அதை நான் சேரேன்; குளித்து அதனைப் பரிசுத்தப்படுத்தி வந்தால்மாத்திரம் கூடுவேன் என்பது இதன் குறிப்பு; பொதுமாதர் பலரும் அனுபவித்து மிச்சிலாகிய தலைவர் மார்பைத் தலைவியர்கூட மறுத்துக் கூறுவதை,

''பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற்
பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு''

என்னும் (திருக்குறள்-1311-ஆம்) செய்யுளானுணர்க. தூணி- நான்கு மரக்கால்; பதக்கு- இரண்டு மரக்கால்; இவை முகத் தலளவைப் பெயர்கள். ஆம்- அலட்சியத்தை விளக்கி நின்றது. நல்நுதலார்- இழிவை விளக்கிநின்றது; பிறிது மொழிதல்.வரும்- நிகழ் காலம் எதிர்காலத்தில் வந்த கால வழு வமைதி. (எ)

தலைமகனது பிரிவு கூறிய பாணனிடம் தலைவி கூறியது.

388: கொடியவை கூறாதி பாணநீ கூறி
னடிபைய விட்டொதுங்கிச் சென்று- துடியி
னிடக்கண் ணனையம்யா மூரற் கதனால்
வலக்கண் ணனையார்க் குரை.

(இ-ள்.) பாண- பாணனே!, கொடியவை - (தலைவன் பரத்தையர் சேரிக்குச் செல்கின்றாரென்னும்) கொடிய சொற்களை, கூறாதி - (எம்மிடம்) சொல்லாதே, (ஏனென் றால்), யாம்-, ஊரற்கு- இவ்வூரையாள்கின்றவனாகிய தலை மகனுக்கு, துடியின் - உடுக்கையின், இடக்கண் அனையம்- இடப்பக்கம் பயனற்றதாயிருப்பதுபோலப் பயன்படாதிருக் கின்றோம்), அதனால்- அக்காரணத்தினாலே, நீ கூறின்-நீ அத்தகைய சொற்களைக் கூறுவதாயிருந்தால், பைய- மெது வாக, அடிவிட்டு - இவ்விடத்தை விட்டு, ஒதுங்கி சென்று - விலகி அப்புறம்போய், துடியின்- அந்த உடுக்கையின், வலக்கண் அனையார்க்கு - வலப்பக்கத்தைப் போன்ற வர்க்கு, (அதாவது, உடுக்கையின் வலக்கப்பம் பயன்படுத்து வதுபோல தலைவனுக்குப் பயன்படும் அப்பரத்தையைப் போன்ற பரத்தையர்க்கு), உரை- சொல்வாயாக; எ-று.

பாணனே! தலைவன் பரத்தையர் சேரிக்குச் செல்கின் றாரென்ற கொடுஞ்சொற்களை, எம்மிடம் சொல்லாதே; ஏனெனில், யாம் உடுக்கையின் இடப்பக்கத்தைப்போலத் தலைவனுக்குப் பயன்படா திருக்கின்றோம்; ஆதலின், உடுக்கையின் வலப்பக்கத்தைப்போலப் பயன்படும் அப்பரத்தையைப்போன்ற பரத்தையர்க்குச் சொல் என்பது இதன் கருத்து.

இது, தலைவன் பரத்தை வீட்டிற்குச் செல்வதாகிய பிரிவைப் பாணன் தலைவிக்குணர்த்த, அவள் வெறுத்துக் கூறியதாகிய துறையமைத்துச் செய்யப்பட்டது.

தலைவன் தன்னைப் பிரிந்துசெல்வதால் அவனுக்குத் தன்மீது அன்பில்லையென்றும், அதனால்தான், அவன் பிரிவுக்குறித்த வார்த்தைகளைக் கேட்டற்கும், வருந்தற்கும் தகுதியற்றவள் என்றும், அவன் அன்பு செலுத்துகின்ற பரத்தையரே அதுபற்றிக் கவலைகொள்பவரென்றும், அவரே இவற்றைக் கேட்டற்குரியரென்றும் பல கருத்துக் களைத் தலைவி, தலைவன்மீதுண்டாகிய வெறுப்பினால் தன்வார்த்தைகளின் மூலமாக விளக்கினாள். தலைவன் ஒரு பரத்தையிடம் செல்வதை, அவன் விரும்பியிருக்கும் மற்றொரு பரத்தையிடம் கூறினால் அவள் கவலையுறுவாள்; தலைவனுக்கு விருப்பமில்லாத நான் கவலையுற என்ன விருக்கின்றது என்பது இதன் கருத்து. தலைவி இவ்வாறு, 'கவலைகொள்ளற் குரியள் யானவல்லள்' என்று கூறினும் மிக்க வருத்தத்தாலேயே இங்ஙனம் கூறினளாம்; இது, தலைவன்மீது தலைவிக்கு மிக்க அன்புண்டென்பதை வெளிப்படுத்தும். தலைவன் பிரிவுணர்த்தும் வார்த்தைகள் தலைவிக்கு மிக்க வேதனையைச் செய்வனவாதலின், அவற்றைத் தலைவி, 'கொடியவை' என்றாள். 'கொடியவை கூறாதி' என்றதனால், ''தலைவன் பிரிவைப் பற்றிய கொடிய வார்த்தைகளைக் கூறாதே; அவன் பிரியாதிருக்கும் செய்தியுண்டானால் சொல்'' என்ற குறிப்பு விளங்கும்.

தலைவன், பொருள், போர், பரத்தை நேயம் முதலியவற்றால் தலைவி யைப்பிரிதல் உண்டு; அவற்றுள் இது பரத்தையிற் பிரிவாம். வேறுவகைப் பிரிவைப் பாணன் உணர்த்தினானெனினும் அமையும்.

உடுக்கை வலப்பக்கத்தில் மட்டும் அடிக்கப்படும்; இடப்பக்கம் ஒரு வேலைக்கும் உட்படாதிருக்கும். இவ் வுடுக்கையின் இரண்டு பக்கங்களையும் தனக்கும், பரத்தை யர்க்கும் உவமை கூறியது- உவமையணி. வெறுப்பினால் தன் தலைவன் தனக்கன்னியன் என்று பொருள் தொனிக்கும் பொருட்டு, 'ஊரற்கு' என்று அவனைப் படர்க்கையில் வைத்துக்கூறினாள் தலைவி. பாணன்- பாட்டுப்பாடுகின்ற வன்; இவன் தலைவன் தலைவியர்க்குத் தூதுசெல்லுந் தொழிலை மேற்கொண்டிருப்பன். கண்- இடத்தை உணர்த் திற்று. கூறாதி - முன்னிலை யேவலொருமை வினைமுற்று; கூறு- பகுதி, ஆ- எதிர்மறை விகுதி, த்- எழுத்துப்பேறு, இ- வினைமுற்று விகுதி. பைய- குறிப்பு வினையெச்சம். அனையம்- தன்மைப் பன்மை வினைமுற்று. இச்செய்யுளில் உடுக்கையின் இடக்கண்ணும் வலக்கண்ணும் உவமை கூறப்பட்டிருத்தல்போல இவ்வதிகாரத்தின் ஈற்றுச் செய் யுளில் கரும்பின் கடைக்கண்ணும், இடைக்கண்ணும் கூறப் பட்டிருத்தல் உய்த்துணர்க. 'துடியின்' என்பது தீபகமாக இரண்டிடங்களிலுங் கூட்டப் பட்டது.

இதனால், கற்புடைய மங்கையர், தம் நாயகரைப் பிரித்திருக்க மனம் சகியார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனைப்பற்றித் தலைவி தோழிக்குரைத்தது.

389. *சாய்ப்பறிக்க நீர்திகழும் தண்வய லூரன்மீ*
தீப்பறக்க நொந்தேனும் யானேமற் - றீப்பறக்கத்
தாக்கி முலைபொருத தண்சாந் தணியகல
நோக்கி யிருந்தேனும் யான்.

(இ-ள்.) சாய்- (களையாக முளைத்திருக்கும்) கோரையை, பறிக்க - பிடுங்கியெறிய, நீர்- தண்ணீரானது, திகழும் - தெளிவாகப் பிரகாசிக்கின்ற, தண்- குளிர்ச்சி பொருந்திய, வயல்- கழனிகளையுடைய, ஊரன்மீது- ஊர்களையுடைய என் தலைவன்மீது, (என்னோடவன் கூடியிருந்த காலத்திலே), ஈ பறக்க- ஈயானது பறக்க, (அது தீண்டுதற்கும் சகியாமல்), நொந்தேனும்- மனம் வருந்திய வளும், யானே-, (அவன் என்னைப்பிரிந்து பரத்தையர் சேரிக்குச் சென்ற போது), தீ பறக்க - நெருப்புப் பொறி பறக்கும்படி, முலைதாக்கி பொருத- (அப்பரத்தையர் தம் முடைய) தனங்களால் மோதிப்போர் செய்த, (அதாவது, தழு விச் சுகம் அனுபவித்த), தண்- குளிர்ந்த, சாந்து- சந்தனத்தை, அணி அகலம்- அணிந்த (அவனது) மார்பை, நோக்கி இருந்தேனும்- (இங்கு அவன் திரும்பி வந்தகாலத்தில்) பார்த்துச் சகித்துக் கொண்டிருந்தவளும், யான்-யானே; எ-று.

என் தலைவன், என்னோடு கூடியிருந்தகாலத்தில், அவன்மீது ஈப்பறப்பதற்கும் சகிக்காமல் வருந்தியவளும் யானே; அவன் பரத்தையரைத் தழுவி வந்த காலத்தில், அவர்களால் தழுவப்பட்ட அந்த மார்பைப் பார்த்துச் சகித்துக் கொண்டிருந்தவளும் நானே என்பது இதன் கருத்து.

பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனோடு பிணங்கா திருந்த தலைவியிடம் தோழி, 'நீ தலைவன்மீது வெறுப் படையாதிருத்தற்குக் காரணமென்ன?' என்று வினவ, அவளுக்குத் தலைவி கூறியதான துறையை அமைத்துப்

பாடப்பட்டதாகும் இச்செய்யுள். அவ்வாறு வினவிய தோழிக்குத் தலைவி, 'முன் தலைவன்மீது ஈ தீண்டினாலும் பொறாது வருந்தியவளும் நானே; இப்போது அவன் மார்பில் பரத்தையர் நெருப்பெழத் தனங்களால் தாக்கித் தழுவியும் அந்த மார்பைப்பார்த்துச் சகித்துக் கொண்டிருக்கின்றவளும் நானே; முன்னே ஈ தீண்டுதற்கும் பொறாதிருந்த நான் இப்போது இக் கொடுஞ்செயலைப் பொறுத்துக் கொண்டிருத்தற்குக் காரணம் தலைவன்மீதுள்ள அன்புதான்' என்று கூறினாள்.

இதனால், தலைவன் பொதுமகளிரைக் கூடிவந்த போதும் கற்புடைய மங்கையர் அவன்மீதுள்ள அன்பை நீக்கமாட்டார்களென்பது குறிக்கப்பட்டது.

சாய்- ஒருவகைக்கோரை; இக்கோரைகள் பயிருள்ள வயல்களில் முளைத்து வளர்ந்து செறிந்திருக்கும்போது நீர் நிறைந்திருப்பது தெரியாது; இவற்றைப் பிடுங்கி யெறிந்து விட்டால் நீர் நிறைந்திருப்பது விளக்கமாகத் தெரியும். பயிருள்ள வயல்களில் நிறைந்திருக்கும் கோரை, புல் முதலியவை களைகளென்றும், அவற்றைப் பறித்தெறிதலுக்குக் களைபறித்தலென்றும் பெயர்களாம்; பயிர்கள் விருத்தியடைவதற்குக் களைபறித்தல் இயல்பு. பறிக்க- காரணப் பொருட்டாய் வந்த செயவெனெச்சம். மன்- அசை; மிகுதியெனப் பொருள் கூறினுமாம். பொருத- இறந்தகாலப் பெயரெச்சம்; பொரு-பகுதி, த்- இடைநிலை, அ- பெயரெச்ச விகுதி. நொந்தேன், இருந்தேன்- தன்மையொருமை வினையாலணையும் பெயர்கள். உம்மைகள் - எண்ணுப்பொருளன; சிறப்பையும் உணர்த்தும். ஏ- பிரிநிலை. (கூ)

தலைவியின் பிணக்குத் தீர்க்க வந்த பாணனைத் தலைவி பரிகசித்தும், வெறுத்தும் கூறல்.

390. *அரும்பவிழ் தாரினா னெம்மருளு மென்று*
பெரும்பொய் யுரையாதி பாண- கரும்பின்
கடைக்கண் ணனையநா மூரற் கதனா
லிடைக்கண் ணனையார்க் குரை.

(இ-ள்.) பாண- பாணனே! அரும்பு அவிழ்- பூவரும்புகள் மலரப்பெற்ற, தாரினான்- மாலையையணிந்த தலைவன், எம் அருளும்- எமக்கு அருள் செய்வான், என்று-, பெரும்பொய் - பெரிய பொய்வார்த்தைகளை, உரையாதி - (எம்மிடம்) சொல்லாதே, (இம்மொழிகள் யாம் செவிக் கொள்ளத்தக்கனவல்ல; ஏனெனில்), நாம்-, ஊரற்கு- ஊர் களையுடைய தலைவனுக்கு, கரும்பின்- கரும்பினது, கடைக்கண் அனையம்- கடைசியிலுள்ள கணுக்களை நிகர்த் துள்ளேம், (அதாவது, கரும்பின் கடைக்கணுக்களைப் போன்று இனிமையற்ற வர்களாயிருக்கின்றோம்), அதனால், - அக்காரணத்தாலே, (இம்மொழிகளைக் கேட்கத்தகுந்தவர் களாகிய), இடைக்கண் அனையார்க்கு - (அக்கரும்பின்) இடையிலுள்ள கணுக்களை நிகர்த்தவர்களாகிய பரத்தை யர்க்கு, (அதாவது, கரும்பின் இடைக்கணுக்களைப்போல இனிமையைத் தலைவனுக்குத் தருவார்க்கு), உரை- சொல்லுவாயாக; எ-று.

பாணனே! இந்தப் பொய்யான வார்த்தைகளை எம்மிடம் சொல்லாதே; யாம் இவற்றைக் கேட்டற் குரியே மல்லேம்; ஏனெனில், தலைவனுக்குக் கரும்பின் கடைக் கணுவைப்போல இனிமையைத் தராதவாராயிருக்கின் றோம்; ஆதலின், கரும்பின் இடைக்கணுவைப் போன்று இன்பம் பயக்கும் பரத்தையர்க்குக் கூறுவாயாக; அவர்களே இவற்றைக் கேட்டற்குரியர் என்பது இதன் கருத்து.

இது, தலைவன் பொதுமகளிர் இல்லஞ்சென்று மீண்டு வந்தபோது தலைவி அஃதுணர்ந்து பிணங்கியிருப்ப,

அப்பிணக்கினைத் தீர்க்குமாறு தலைவன், பாணனைத் தலைவியிடமனுப்ப, அவன் வந்து, ''நின் பிணக்கினைக் கண்டு தலைவர் உள்ளேவர அஞ்சி நிற்கின்றார்; அவர் உன்மேல் மிக்க அன்புடையார்'' என்று இதமான வார்த்தைகளை அவளிடம் கூற அத்தலைவி அவனைப் பரிகசித்தும், கோபித்தும், ''தலைவன் எம்மீது அன்புடையானென்று நீ பொய்ம்மொழிகளை எம்மிடங் கூறுகின்றாய்; இவற்றை இங்குக் கூறாதே; யாம் தலைவன் அன்புசெலுத்தத்தக்கேமல்லேம்; அவனதன்புக்குரியார் பரத்தையரே; அவர்பாற் கூறுவாயாக; அவர்களே இவற்றைக் கேட்டற்குரியார்'' என்று கூறும் கருத்துடைய துறை யமைத்துச் செய்யப் பட்டது.

இதனால், கற்புடையமகளிர், தலைமகன் பொது மகளிடம் சென்று வரினும் வெறுத்து அவனை நீக்காமல் பிணக்குக்காட்டி அதன் வாயிலாகக் காதலை அதிகரிக்கச் செய்து பின் அவனோடு கூடி மகிழ்வரன்பது பெறப்படும்.

கரும்பின் கடைக்கணுவில் இனிப்பிராது; நடுக் கணுவில் தித்திப்பிருக்கும்; ஆதலின், தலைவி, தித்திப் பில்லாத கடைக்கணுவைத் தலைவனுக்கு விருப்பமில்லாத தனக்கும், தித்திப்பு மிக்க நடுக்கணுவை விருப்பமுள்ள பரத்தையர்க்கும் உவமையாகக் கூறினாள்; இஃதுவமை யணி. எம் அருளும்- நான்காம் வேற்றுமைத் தொகை. (கo)

அதிகாரம் 40

காம நுதலியல்

காமநுதல் இயலாவது- காதல் இன்பத்தின் வகை களைச் சொல்லுகின்ற பிரிவு. காம இன்பமானது கற்புடை மகளிரா லுண்டாவதாகலின், அக்கற்புடை மகளிர் தன்மை கூறிய அதிகாரத்தின் பின் வைக்கப்பட்டது. நுதலுதல் குறித்துச் சொல்லுதல்.

கூடுதலும், ஊடுதலும் காமத்திற் கின்பமென்பது.

391. *முயங்காக்காற் பாயும் பசலைமற் றூடி*
யுயங்காக்கா லுப்பின்றாங் காமம்- வயங்கோத
நில்லாத் திரையலைக்கு நீள்கழித் தண்சேர்ப்ப
புல்லாப் புலப்பதோ ராறு.

(இ-ள்.) வயங்கு- விளங்குகின்ற, ஓதம்- கடலானது, நில்லா- நிலையாயிராமல், திரை- அலைகளால், அலைக் கும்- மோதி அசைக்கின்ற, நீள் - நீண்ட, கழி- உப்பாறுகளின், தண்- குளிர்ந்த, சேர்ப்ப- கரையையுடைய பாண்டியனே!, முயங்காக்கால் - (தலைவி, தலைவனைக்) கூடாவிட்டால், பசலைபாயும் - (பிரிவுத் துன்பத்தால், அத் தலைவிக்கு உடம்பில்) நிற வேறுபாடாகிய பசப்பு நிறம் பரவும், (அத்தலைவி நாயகனோடு) ஊடி - பிணங்கி, உயங்காக்கால்-

வருந்தாவிட்டால், (அவட்கு), காமம்- காம அனுபவமானது, உப்பு இன்று ஆம்- இன்ப மில்லாததாகும், (ஆதலால்), புல்லா- (முதலில் அவள் தலைவனோடு) கூடி, புலப்பது - (பின்) பிணங்குவது, ஓர் ஆறு - (காம வின்பத்தை அடை தற்கு) ஒரு வழியாகும்; எ-று.

தலைவி, தலைவனைக் கூடாதபோது, பிரிவு வருத் தத்தால் அவளுடம்பில் பசலை யென்னும் நிறவேறுபாடு தோன்றும்; அவள் நாயகனோடு ஊடி வருந்தா விட்டால் காமநுகர்ச்சியில் இன்பமிராது; ஆதலின், தலைவி, தலை வனோடு முதலிற் கூடுதலும், பின் ஊடுதலும் காம இன் பத்தை அடைதற்கு ஒரு வழியாகும் என்பது இதன் கருத்து.

இதனால் கூடுதலும், ஊடுதலுமே காமத்திற்கின்ப மென்பது கூறப்பட்டது. இதனை,

''ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்
கூடியார் பெற்ற பயன்''

என்னும் (திருக்குறள் 1109-ஆம்) செய்யுளானும்,

''துனியும் புலவியு மில்லாயிற் காமங்
கனியுங் கருக்காயு மற்று''

என்னும் (திருக்குறள்-1306-ஆம்) செய்யுளானு முணர்க. பசலை- பசுமை கலந்த பொன்மை நிறம்; இது, தலை வனைப் பிரிந்து காம மிக்கிருந்த தலைவிக்கு வருத்தத்தா லுண்டாம் நிறவேறுபாடு. உப்பு- உவர்ப்பு, இனிமை என் னும் பொருள்களையும் தரும்; இங்கு, 'இனிமை' என்னும் பொருள் தந்து நின்றது;

''துப்புறழ் தொண்டைச் செவ்வாய்த் தோழியர் காமத் தூதி
னொப்பவொன் றாதி யாக வாயிரத் தோரெட் டீறாச்
செப்பித்தஞ் செம்பொ னல்கு னலம்வரை வின்றி விற்கு
முப்பமை காமத் துப்பி னவரிட முரைத்து மன்றே''

என்ற (சீவக சிந்தாமணி- நாமகளிலம்பகம்-78-ஆம்) செய்யுளுரையில் நச்சினார்க்கினியர், 'உப்பமைகாமம்' என்பதற்கு, 'உவர்ப்பில்லாத காமம்' என்றும், 'உப்பு- இனிமையுமாம்' என்றும் பொருள் கூறி யிருத்தலால், உப்பு - இவ்விரு பொருளையும் தரு மென்ப துணரப்படும். உப்பாறுகள் துறை முகங்களின் பக்கங்களில் வந்து கடலிற் கலக்கும்; அவ்வாறுகளில் பெருகி வரும் நீரினைக் கடலலை எதிர்த்து அலைத்துக் கொண்டிருக்கும்; அச் சிறப்பினை விளக்கற்கே இதில் முனிவர், ''வயங்கோத நில்லாத்திரை யலைக்கு நீள் கழித் தண் சேர்ப்ப'' என்றார். பசலை- நித்திரையின்மை, உடல் மெலிவு, நுகர் பொருள்களில் வெறுப்பு முதலியவற்றிற்கும் உபலக்ஷணமாம்.

முயங்காக்கால்- செய்யின் என்னும் வாய்ப்பாட்டு எதிர்மறை வினையெச்சம்; காமம் உப்பின்று- 'மாடு கோடு கூரிது' என்பது போல அமைந்தது; நன்னூல் பொதுவியல், ''உயர்திணை தொடர்ந்த-'' என்னும் சூத்திர வுரை பார்க்க. மற்று - அசை. (க)

கார்ப்பருவத்தில் வருவேனென்று பிரிந்து சென்ற தலைவன் அக் கார்ப்பருவம் வந்தும் வராதது குறித்துத் தலைவி வருந்தித் தோழிக்குக் கூறியது.

392. *தம்மமர் காதலர் தார்சூ ழணியகலம்*
விம்ம முயங்குந் துணையில்லார்க்- கிம்மெனப்
பெய்ய வெழிலி முழங்குந் திசையெல்லா
நெய்த லறைந்தன்ன நீர்த்து.

(இ-ள்.) தம்- தமது, அமர்- விருப்பத்தையுடைய, காதலர் - காதலுக்குரிய தலைவரின், தார்சூழ்- மாலையை அணிந்த, அணி- அழகிய, அகலம்- மார்பை, விம்ம- (தனங்கள்) விம்மிதங்கொள்ள, முயங்கும் - தழுவுகின்ற, (சேர்க்கையாகிய), துணை- ஆதரவு, இல்லார்க்கு- இல்லாத தலைவியர்க்கு, (அதாவது நாயகரைப் பிரிந்து ஆதர வற்றிருக்கின்ற மனைவியர்க்கு), இம்மென- இம்மென்னும் ஓசை யுண்டாக, பெய்ய- மழை பொழியும்படி, எழிலி- மேகங்கள், முழங்கும்- இடி இடித் தொலிகின்ற, திசை எல்லாம் - திக்குகளிலெல்லாம், (அம் முழக்கம்), நெய்தல் அறைந்து அன்ன நீர்த்து- சாப்பறை முழக்கினாற்போன்ற தன்மையுடையதாம்; எ-று.

காதலரைக் கூடி யிருத்தலாகிய ஆதரவு இல்லாத வர்க்கு மேகங்கள் மழை பொழிய முழங்குவது சாப்பறை முழங்குவதுபோன்றதாம் என்பது இதன் கருத்து.

தலைவியிடம் கார்காலத்தில் மீண்டு வருவதாகச் சொல்லிப் பிரிந்து சென்ற தலைவன், அக் கார்ப்பருவம் வந்தும் அவன் வராததால் கார் முழக்கங்கேட்டு வருந்திய தலைவி அத்துயர் சகிக்காது தன் வருத்தத்தைத் தோழிக்குக் கூறியதாக அமைக்கப்பட்டது இச் செய்யுள்.

மேகம் முழங்குதலும், மழை பொழிதலும் நாயக ரோடு கூடிக் களிப்பார்க்கு மிக்க இன்பத்தைச் செய்வனவாம்; நாயகரைப் பிரிந்திருப்பார்க்குக் காமக்கிளர்ச்சியை வளர்த்து மிக்க துயரத்தைக் கொடுப்பனவாம்; அத்துயர் மரணத்துக்கு

நிகராம்; ஆதலின், அத்துயரத்தை யுண்டாக்கும் மேக முழக்கத்தை அச் சாவுக்கு முழக்கும் சாப்பறைபோன்ற தென்று தலைவி கூறினாளென்க. தலைவி தலைவனோடு, கூடுதலில்லாதபோது ஆதரவற்றவர்போல் அல்லலுறுவள்; தலைவன் சேர்க்கை யுள்ளபோது ஆதர வுடையவள்போலச் செழிப்புறுவள்; ஆதலின், சேர்க்கை அவளுக்கு ஆதரவாகக் கூறப்பட்டது.

இதனால், கார்ப்பருவம் தலைவியும், தலைவனும் கூடி யின்புறற் குரிய காலமென்பது குறிக்கப்பட்டது. இம் மெனல்- ஒலிக்குறிப்பு. நெய்தல்- சாப்பறை. நீர்த்து- வினைக்குறிப்பு முற்று. (உ)

தலைமகன் பிரிவுக்குத் தலைவி உடன்படாததைத் தோழி தலைமகனுக்குக் கூறல்.

393. *கம்மஞ்செய் மாக்கள் கருவி யொடுக்கிய*
மம்மர் கொண் மாலை மலராய்ந்து பூத்தொடுப்பாள்
கைம்மாலை யிட்டுக் கலுழ்ந்தா டுணையில்லார்க்
கிம்மாலை யென்செய்வ தென்று.

(இ-ள்.) கம்மம் செய்- கம்மியத்தொழிலைச் செய் கின்ற, மாக்கள்- மனிதர்கள், (அதாவது, கம்மாளர்), கருவி- தம்முடைய ஆயுதங்களை, ஒடுக்கிய- (வேலையில்லாமல்) அடங்கச் செய்த, மம்மர் கொள்-(மனிதர்கள்) மயக்கத்தைக் கொண்ட, மாலை- அந்திப் பொழுதில், மலர் ஆய்ந்து- மலர்களை ஆராய்ந்து பறித்தெடுத்து, பூ- அம்மலர்களை, தொடுப்பாள்- மாலையாகத் தொடுப்பவளாகிய தலை மகள், (தலை மகன் பிரிந்து செல்வதை யுணர்ந்து), துணை இல்லார்க்கு - (ஆதரவாகிய தலைவன் இல்லாதவர்க்கு (அதாவது, தலைவனைப் பிரிந்தவர்க்கு), இ மாலை- இந்த மலர் மாலையானது, என் செய்வது- என்ன பயனைச்

செய்வதாகும், (ஒரு பயனையும் தராது), என்று - என்று சொல்லி, கை- தன் கையில், மாலை இட்டு- அந்த மாலையை வைத்துக்கொண்டு, கலுழ்ந்தாள்- மனங்கரைந்து அழுதாள்; எ-று.

மாலை நேரத்திலே வழக்கப்படி தன் நாயகனுக்குச் சூட்டி மகிழ்வதற்கு மலர்களை ஆராய்ந்தெடுத்து மாலை யாகத் தொடுத்த தலைவி, தலைவன் பிரிந்து செல்வதை யுணர்ந்து, நாயகனைப் பிரிந்தவர்க்கு இந்த மாலை ஒரு பயனையும் தர மாட்டாது; இதை நான் ஏன் வீணாகக் கட்டினேன் என்று அதனைத் தன் கையில் வைத்துக்கொண்டு மனங்கலங்கி யழுதாள் என்பது இதன் கருத்து.

தலைவி, தினந்தோறும் மாலைக் காலத்திற் செய்யும் வழக்கப்படி கணவனுக்குச் சூட்டி அவனோடு கூடிமகிழ மலர்களை ஆய்ந்தெடுத்து மாலைகட்டி முடிக்க அப்போது தலைவன் பிரிவுக் கொருப்பட, அதனைத் தோழி தலைவிக் குணர்ந்த அப்பிரிவை யுணர்ந்த தலைவி, இம்மாலை இனி யென் செய்வது என்று அதனைக் கையில் வைத்துக்கொண்டு தலைவன் பிரிவுக் குடன்படாமல் வருந்தியழ, அதனைத் தோழி தலைவனுக்குக் கூறியதாகிய துறை யமைத்து இயற்றப்பட்டதாகும் இச் செய்யுள்.

இதனால், தலைவியர், நாயகர் பிரியுங்காலத்தில் மகிழ்ச்சிக்குரிய எச் செயலையும் விரும்பார்களென்பதும், அவ்ர் கூடியிருக்குங் காலத்திலேயே மலர் புனைதல் முதலிய சிறப்புக்களை விரும்புவார்களென்பதும் விளக்கப்பட்டன. இதைக்கொண்டு குல மகளிரால் தலைமகனுக்கு ஏற்படும் இன்பமே சிறந்ததென்ப துணரப்படும்.

கம்மியத் தொழில் செய்வோர் பகற்கால மெல்லாம் வேலை செய்து மாலைப்பொழுது வந்தவுடன் கருவிகளை

யொடுக்கிவைத்து வேலை யொழிவர்; ஆதலின், அவர் அவ்வாறொடுக்குதல் மாலைப் பொழுதுக்கு அடையாகக் கூறப்பட்டது; இவ்வதிகாரம் எ- ஆம் செய்யுளில், ''ஓலைக் கணக்க ரொலியடங்கு புன் செக்கர், மாலைப் பொழுது'' என்று கூறப்படுவதும் இது போன்றதே. இங்ஙனம் கூறியதனால், 'பகலெள்ளாம் வேலை செய்வோரும் மனைவியரிடம் செல்லுதற்குரியது மாலைப்பொழுது' என்ற குறிப்பு விளங்கும்;

> *''காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி*
> *மாலை மலருமிந் நோய்''*

என்ற (திருக்குறள்.1227-ஆம்) செய்யுளிற் கூறியபடி, பிரிந்தார்க்கெழும் காமநோயானது, சேர்க்கைக்குரிய இரவின் தொடக்கமாகிய மாலைப்பொழுதில் மிகுவது இயற்கை. ஆதலின், அம்மாலையில் தலைவனைக் கூடிக்களிக்க நினைத்த தலைவி, அவன் பிரிவுணர்ந்து மிக வருந்தி னாளென்க. இங்ஙனம், மாலை, காம நோயை மிகுவித்தற் குரிய தாதலின், 'மம்மர் கொள் மாலை' என்பதற்கு, 'காமமயக்கத்தைத் தருகின்ற மாலை' எனப் பொருள் கூறினும் அமையும். 'மனிதர்கள் மயக்கத்தைக்கொண்ட மாலை' என்றது, சூரியன் மறைந்தவுடன் இருள் வரத் தொடங்கிக் கண்ணொளியை மறைத்தலைக்குறித்ததாம்.

மாலை- போகானுபவத்திற்குரிய மற்றப் பொருள் களுக்கும் உபலக்ஷணமாம். 'கலுழ்ந்தாள்' என்பதில்; கலுழ்- பகுதி. 'துணை' என்பது துணையாயிருக்கும் தலைவனை யுணர்த்திற்று. *(ந)*

வினைவயிற் பிரிந்த தலைமகன் வினைமுற்றி மீண்டு வருங்கால் தலைவி நிலைமை குறித்துப் பாகனொடு கூறியது.

394. *செல்சுடர் நோக்கிச் சிதாரிக்கண் கொண்டநீர்*
மெல்விர லூழ்தெறியா விம்மித்தன்- மெல்விரலி
னாள்வைத்து நங்குற்ற மெண்ணுங்கொலந்தோதன்
றோள்வைத் தணைமேற் கிடந்து.

(இ-ள்.) (நம் தலைவியானவள், நாம் மீண்டு வருவதாகச் சொல்லிச் சென்ற நாள் நீட்டித்ததாகலின், நாம் வருவோமென்று ஒவ்வொரு நாளிலும் நாம் இல்லிற் சேர்தற்குரியது மாலைக்கால மாதலின் அக்காலத்தைக் கருதி), செல் சுடர் நோக்கி - (மேற்றிசை நோக்கிச்) செல்கின்ற சூரியனைப் பார்த்து, சிதர்- சிதறிய அரி- செவ்வரி படர்ந்த, கண்- கண்களில், கொண்ட நீர் - (ததும்பி வடிதலைக்) கொண்ட நீரை, மெல்விரல்- தன்னுடைய மெல்லிய விரல் களினாலே, நாள் வைத்து- (நாம் பிரிந்துபோன) நாள்களின் எண்ணிக்கையை வைத்து, (கணக்கிட்டு), அணைமேல் - படுக்கையின் மேலே, தன் தோள்வைத்து கிடந்து - தன் தோளைத் தலையணையாக வைத்துப் படுத்து, அந்தோ- ஐயோ!, நம் குற்றம் எண்ணும் கொல்- நம்முடைய குற்றங் களை எண்ணித்துயருறுவாளோ!; எ-று.

நம் தலைவியானவள், நாம் மீண்டு வருவதாகச் சொல்லிப் பிரிந்து சென்ற நாள் நீட்டித்ததாகலின், நாம் இல்லிற் செல்வது மாலைக்கால மாதலின், ஒவ்வொரு நாளிலும் அம்மாலை நேரத்தில் நாம் வருவோ மென்று, அக் காலத்தை எதிர் பார்ப்பவளாய், மேற்கே செல்கின்ற சூரியனை நோக்கி, கண்கலங்கி அக் கண்களில் ததும்பு கின்ற நீரைக் கைவிரல்களினாலே வழித்தெறிந்து, விம்மியழுது, விரல்களினாலே நாம் பிரிந்து சென்ற நாள்களை எண்ணிக் கணக்கிட்டுப் படுக்கையின்மேல் தன் தோளையே தலை யணையாக வைத்துப் படுத்து, அந்தோ! நம் குற்றத்தை நினைத்துத் துயருறுவாளோ! என்பது இதன் கருத்து.

இது, வினைவயிற் பிரிந்த தலைமகன், வினை முற்றி மீண்டுவருங்கால், வருவதாகச் சொல்லிச் சென்ற நாள் நீட்டித்ததால் தலைவி வருந்திக்கொண்டிருப்பாளோ என்று அவள் நிலைமை குறித்துப் பாகனிடம் கூறியதாகிய துறை யமைத்துச் செய்யப்பட்டதாகும்.

இதனால், உயர் குடியிற் பிறந்த தலைவனும், தலை வியும் மனமொத்த காதலுடையாராயிருப்பார்களென்பதும், பிரிவைச்சகியார்களென்பதும், அவர் இன்பம் சிறந்த தென்ப தும் விளங்கும்.

வெளியிற் சென்ற தலைவன் மீண்டு வருங்காலம் மாலைப்பொழுதாகலின், தலைவி அந்நேரத்தை எதிர் பார்த்து வருந்துவள்; தலைவன் சொன்னபடி வராததால் வழிபார்த்து, கண் கலங்குவாள்; அவன் வருகிற நாளைத் தீர்மானித்தற்கு, அவன் சென்ற நாளிலிருந்து நாட்களை விரல்களால் எண்ணிப் பார்ப்பாள்; பஞ்சணையிற் படுக்கா மல் தரையில் தோளைத் தலையணையாக வைத்துப் படுத்து அழுது கொண்டு கிடப்பாள். இவை பதிவிரதைகளின் இயற்கைக் குணங்கள். தலைவன் குறித்த தினத்திற் செல்லாத தாலல் தலைவி இத்தகைய துன்பங்களை அடைவாளென் பது தலைவனுக்குத் தெரியும்; ஆதலின், அவன், இவற்றைப் பாகனிடம் கூறினான். இவ்வாறு கூறியது, தலைவி மிகத் துயருறுவாள்; நாம் விரைந்து செல்லாவிடின் அவ்வருத்தத் தால் இறப்பள்; ஆதலின் நீ விரைவில் தேரைச் செலுத்த வேண்டும் என்று பாகனுக்குக் குறிப்புக் காட்டியதாகும். செல்சுடர்- வினைத்தொகை; ஆதலின், இயல்பாயிற்று. பெண்களின் கண்களில் செவ்வரி படர்தல்- உத்தமவிலக் கணம். தலைவியர், தலைவன் பிரிந்து சென்ற நாள் கணக் கைச் சுவரில் குறித்து அதை ஓயாமல் விரலால் தடவி யெண் ணிக் கொண்டிருப்பர்; அதனால் விரல் தேய்ந்து மெல்லி தாகும்; அது பற்றியே அது, 'மெல்விரல்' என்று கூறப் பட்டது. தலைவியர், தலைவர் வரும் வழியையே இடை

விடாது பார்த்தலால் கண்கலங்கி நீர் ததும்பிக் கண்ணொளி குறையும்; அதனாலேயே கண் நீர் கொண்டது கூறப்பட்டது. இவை இங்ஙன நிகழு மென்பதை,

''வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்''

என்னும் (திருக்குறள்.1261-ஆம்) செய்யுளானுணர்க. கொல்- ஐயப் பொருளது. அந்தோ- இரக்கக் குறிப்பிடைச்சொல். (ச)

தலைவன், தோழனிடம் தலைவியின் கண்ணயமும், புருவநயமும் பாராட்டிப் புகழ்ந்து கூறியது.

395. கண்கய லென்னுங் கருத்தினாற் காதலி
பின்சென்ற தம்ம சிறுசிரல்- பின்சென்று
மூக்கி யெழுந்து மெறிகல்லா வொண்புருவங்
கோட்டிய வில்வாக் கறிந்து.

(இ-ள்.) கண்- (என்னுடைய தலைவியின்) கண்களை, சிறு சிரல்- சிறிய சிச்சிலிக்குருவி, கயல் என்னும் கருத்தினால்- சேல் மீன்கள் என்கிற நினைவினால், (அதாவது, கண்களைச் சேல் மீன்கள் என்று கருதி), காதலிபின் சென்றது- (அவற்றைப் பிடித்துத் தின்னுதற்கு) அக்காதலியின் பின்னே தொடர்ந்து போயிற்று, பின்சென்றும்- (அங்ஙனம்) பின் தொடர்ந்து போயும், ஊக்கி எழுந்தும்- (அவற்றைக் குத்த) முயற்சி செய்து மேலே கிளம்பியும், ஒள் புருவம் - அவளுடைய ஒள்ளிய புருவமாகிய, கோட்டிய - வளைத்த, வில்வாக்கு- வில்லின் வளைவை, அறிந்து- தெரிந்து, (அதனை வில்லென்று நினைத்தஞ்சி), எறி கல்லா- (நெருங்கி அவற்றைக்) குத்த மாட்டாதது ஆயிற்று. எ-று.

சிறிய சிச்சிலிக் குருவியானது, என் காதலியின் கண்களைக் கயன் மீன்களென்று நினைத்து, அவற்றைக்

குத்தித்தின்ன அவள்பின் தொடர்ந்து சென்றது; அவ்வாறு சென்று அவற்றைக் குத்த முயற்சி செய்தும், அக்கண்களின் மேற் புறத்திலிருந்த புருவம் நாணேறிட்டு வளைத்து வைக்கப்பட்ட வில்லைப் போன்றிருந்தபடியால், அதற் கஞ்சி அவற்றை நெருங்கிக்குத்த முடியாததாய் விட்டது என்பது இதன் கருதது.

இது தலைவியின் கண்ணழகையும், புருவத்தழகை யும் நுகர்ந்து மகிழ்ந்த தலைவன், தன் தோழனிடம் அவற்றின் நயப்புரைத்த தான துறையை அமைத்துக் கூறப்பட்டதாகும்.

தலைவியின் நலத்தைத் தலைவன் தோழனிடத்தும், தலைவனுடைய நலத்தைத் தலைவி தோழியிடத்தும் புகழ்ந்து கூறுதல் அவர்க்கியல்பு. இவ்வாறு கூறுவதால், தலைவன் தலைவியர்க்கிடையிலுண்டாம் காதல் இன்பம் இத்தன்மைத் தென்பது புலனாம். சிச்சிலிக்குருவி - மீன் குத்திக் குருவி; இது, ஆகாயத்திற் பறந்தபடியே நீரிலுள்ள மீனைப் பார்த்து ஒரே பாய்ச்சலில் பாய்ந்து குத்தி யெடுத்து விழுங்கி விடும்; ஆதலின், கண்களை மீன்களென்று இப்பறவை கருதிச் சென்ற தென்றான் தலைவன்; பறவைகட் கிடர் விளைப்பது வில்லாகலின், புருவத்தைக் கண்டு அக்குருவி வில்லென்று நினைத்தஞ்சி அக்கண்களிடம் செல்லாதிருந்தது என்றான். இங்ஙனம் சிச்சிலிக்குருவி கண்களைக் கயலென்றும், புருவத்தை வில்லென்றும் பயங்கியதாகக் கூறியது- மயக்கவணி. இங்ஙனம் கூறியதால் கண்களின் சிறப்பும், புருவவனப்பும் விளக்கப்பட்டன.

அம்ம- வியப்பிடைச் சொல்; இனி, கேட்பித்தற் பொருளையும் தருமாகலின், 'அம்ம' என்பதற்கு, 'தோழனே! நீ கேட்பாயாக' எனப் பொருள் கூறினும் பொருந்தும்; ''அம்ம கேட்பிக்கும்'' என்பது (தொல்-சொல்-இடை-28) சூத்திரம்; அசை யெனினுமாம்; ''அம்மவுரையசை கேண்மினென்றாகும்'' என்பது (நன்.இடை.19) சூத்திரம்.

வாக்கு- வாங்கு என்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர். 'எறி கல்லாது' என்பது, துவ்விகுதி குறைந்து, 'எறிகல்லா' என நின்றது. (ரு)

தலைமகள் தலைமகனுடன் செல்ல, அவள் சென்ற சுரத்தின் கொடுமையும், அவளடியின் மென்மையுங் கூறி நற்றா யிரங்கல்.

396. அரக்காம்ப னாறும்வா யம்மருங்கிற் கன்னோ
பரற்கான மாற்றின கொல்லோ- வரக்கார்ந்த
பஞ்சிகொண் - டூட்டினும் பையெனப்
பையெனவென்
றஞ்சிப்பின் வாங்கு மடி.

(இ-ள்.) அரக்கு ஆம்பல்- சிவந்த அல்லி மலரினது தன்மை, நாறும்- தோன்றுகின்ற, (அதாவது, சிவந்த அல்லி மலர் போன்றிருக்கின்ற), வாய்- வாயையும், அம்மருங் கிற்கு- அழகிய இடையையுமுடைய (என்) மகளுக்கு, அரக்கு ஆர்ந்த- சிவப்பு நிறம் பொருந்திய, பஞ்சிகொண்டு - பஞ்சைக்கொண்டு, ஊட்டினும் - (சாதிலிங்கக் குழம்பைச் செந்நிற முண்டாதற் பொருட்டுப் பாதங்களில்) ஊட்டி னாலும், (அதாவது, தடவினாலும்), பையென பையென என்று- மெதுவாக மெதுவாக என்று (அவள் சொல்லி), அஞ்சி- (அங்ஙனம் பின்னே இழுத்துக் கொள்கின்ற, அடி- (அவளுடைய அந்தப்) பாதங்கள், (இப்போது), அன்னோ- ஐயோ!, (தலைவனோடு செல்லுமிடத்து), பரல் கானம்- பருக்கைக் கற்களையுடைய காட்டினை, (அதாவது நடக்கும் போது காட்டினாலேற்படுந் துன்பத்தை), ஆற்றின் கொல்ஓ- பொறுத்தனவோ?; எ-று.

என் மகளுக்குப் பாதங்களில் செந்நிற முண்டாதற்குப் பஞ்சினால் சாதிலிங்கக் குழம்பை ஊட்டினாலும் அதையும் பொறாமல் மெதுவாக மெதுவாக என்று அஞ்சி அவள்

பின்னே இழுத்துக் கொள்கின்ற அவளுடைய அந்தப் பாதங்கள் இப்போது அவள் காதலனுடன் காட்டு வழியிற் செல்லுங்கால் அக் காட்டின் பரல் முதலிய வற்றாலுண்டாம் துன்பத்தைச் சகித்தனவோ என்பது இதன் கருத்து.

இது, தலைவி, தலைவனுடன் செல்லுதலாகிய உடன் போக்கு நிகழ்ந்தபோது, நற்றாய் மகளின் பொருட் டிரங்குதலாகிய துறை யமைத்துக் கூறப்பட்டதாகும்.

தலைவன், களவு நெறியில், இயற்கைப் புணர்ச்சி, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் என்பவைகளால் தலைவியைக் கூடி, ஊரலர் தூற்றத் தோழியால் விலக்கப் பட்டுப் பின்னர் உடனே அத்தலைவியைப் பலரறிய மணஞ் செய்து கொள்ளுவன்; அங்ஙனம் செய்யா விடின், அத் தூற்றுதலடங்கச் சில நாட்கள் தலைமகளைப் பிரிந்து தங்குவன்; அல்லது, அவளை உடன்கொண்டு தன்னூர்க்குச் செல்லுவன்; அல்லது, தோழியால் வரைவு முடுக்கப்பட்டு அணிகலம் முதலியன தலைவிக்குப்பரியமாகச் செலுத்தி அவளை வரைந்து கொள்ளுவன்; அவற்றுள் இது, தலைவி யைத் தலைவன் உடன்கொண்டு போதலாகும். இவ்வாறு உடன் கொண்டு சென்றதைத் தோழி செவிலிக்குணர்த்தச் செவிலி நற்றாய்க்குணர்த்துவள்; அவள், காட்டின் கொடுமை யையும், மகளின் மென்மையையும் நினைத்துக் கவலை கொண்டு வருந்தி இங்ஙனங் கூறுதல் இயற்கை.

தலைவி தலைவனுடன் செல்லும் வழியில் பாலை நிலத்தையே வருத்தத்திற் கேதுவாகச் சொல்லுவதியற்கை யாதலின், இங்குப் 'பரல்கானம்' என்பது பாலை வனத்தையே குறிக்கும்; பெண்களின் பாதங்களில் சிவப் பேற்றி அழகுண்டாக்கற்பொருட்டுச் சேடியர் பஞ்சில் சாதி லிங்கக் குழம்பையூட்டி அதைத்தடவுவது இயல்பு; செம்பரத் தம்பூவின் இரசத்தைத் தடவுதலுமுண்டு; ஐவணத்தை அரைத்துப் பூசுவது முண்டு. நாறுதல்- தோன்றுதல். 'ஆம்பல்

நாறும்' என்பதற்கு ஆம்பல் மணம் வீசுகின்ற எனப் பொருளுரைப்பினுமாம். மருங்கு - ஆகு பெயராய் அதனை யுடையாளை உணர்த்தி நின்றது. அன்னோ- இரக்கத்தைக் குறிக்கும் இடைச்சொல். பையென- 'பையஎன' - என்னும் அடுக்கு - அச்சப் பொருள் குறித்தாம். கொல்- ஐயப் பொரு டருமிடைச் சொல். ஓ- அசை. அடி- பால் பகா வஃறிணைப் பெயர்; இங்குப் பன்மையை உணர்த்தி நின்றது. (கூ)

தலைவனது பிரிவு குறித்து வருந்திய தலைவியின் நிலைமையைத் தோழி தலைவனுக்குக் கூறியது.

397. *ஓலைக் கணக்க ரொலியடங்கு புன்செக்கர்*
மாலைப் பொழுதின் மணந்தார் பிரிவுள்ளி
மாலை பரிந்திட் டழுதாள் வனமுலைமேற்
கோலஞ்செய் சாந்தந் திமிர்ந்து.

(இ-ள்.) ஓலை கணக்கர்- ஓலையில் கணக் கெழுதும் கணக்கர்களுடைய, ஒலி- (கணக்கைப்பற்றிப் பேசுவதும் எழுதுவதுமாகிய) ஓசை, அடங்கு - அடங்கும்படியான, புல் - செக்கர்- அற்பமான (அதாவது, குறைந்த அளவான) செவ் வானத்தையுடைய, மாலை பொழுதில்- மாலை நேரத்தில், (தலைவி யானவள்), மணந்தார் பிரிவு - தன்னைக் கூடிய தலைவரது பிரிவை, உள்ளி- நினைத்து, (வருந்தித் தன் அலங்காரங்களை வெறுத்து), மாலை - (தான் சூடியிருந்த) மாலையை, பரிந்து இட்டு- அறுத்தெறிந்து, வனம்- அழகிய, முலைமேல்- தனங்களின்மீது, கோலம் செய்- அலங்காரம் செய்த, சாந்தம்- சந்தனத்தையும், திமிர்ந்து- தேய்த்து உதிர்த்தொழித்து, அழுதாள்-; எ-று.

தலைவியானவள், மாலை நேரத்தில், தன்னைக் கூடிய தலைவர் பிரிந்து போவதை யுணர்ந்து, அதனை நினைத்து வருந்தி அலங்காரங்களை வெறுத்துத் தான் சூடி யிருந்த மாலையை அறுத்தெறிந்து, தனங்களில் தொய்யில்

எழுதி அலங்காரம் செய்யப்பட்டிருந்த சந்தனத்தையும் தேய்த்து உதிர்த்தொழித்து அழுதான் என்பது இதன் கருத்து.

இது, தலைவியைக் களவு வழியாற் கூடிய தலைவன், மாலை நேரத்திற் பிரிந்து செல்ல, அதனைத் தலைவி யுணர்ந்து வருந்த, அதனைத் தோழி அத்தலைவன்பாற் கூறியதான துறை அமைத்துப் பாடப்பட்டது.

இதனால் நெறிப்படி காதல் கொண்டு கூடிய காத லரைக் கற்புடைய மகளிர் பிரிந்திருக்க மனமிசையா ரென்ப தும், அவரை மணந்து அவருடனுறைதலையே விரும்புவ ரென்பதும், இத்தகையாரின் இன்பமே காதல் இன்ப மென்ப தும் விளங்கும். தோழி, தலைவனை முன்னிலைப் படுத்திக் கூறியதை, 'மணந்தார்' என்று படர்க்கையிற் சொன்னது இடவழுவமைதி;

''ஒருமையிற் பன்மையும் பன்மையானொருமையும்
ஓரிடம் பிறவிடந் தழுவது முளவே''

என்பது (நன்-பொது.29-ஆம்) சூத்திரம். இனி, இச்செய்யுளிற் கூறியதை, இவ்வதிகாரம் மூன்றாஞ் செய்யுளிற் கூறியது போலத் தலைமகள் பிரிவுடன்படாமையைத் தலை மகனுக் குத் தோழி கூறிதான துறையாகவுங் கொள்ளலாம்; எனினும், அதனையே மீண்டும் கூறுதல் அத்துணைச் சிறப்பன்று. கணக்கர் எழுத்தாணியால் ஓலையில் எழுதுவதாலும், ஒருவரோ டொருவர் கணக்குத் தர்க்கம் பேசுவதாலும் பகலெல்லாம் அவரிருக்கு மிடங்களில் ஓசை யுண்டாகிக் கொண்டே யிருக்கும்; மாலை நேரம் வந்தவுடன் அவர்கள் கணக்கு வேலையை நிறுத்தி விடுவார்கள்; அதனால், அவர் களால் உண்டாகிக் கொண்டிருந்த ஒலி அடங்கிவிடும்; இது மாலை நேரம் வந்ததற்குக் குறிப்பாகக் கொள்ளப்பட்டது; இவ்வதிகாரத்தின் மூன்றாஞ் செய்யுளில், ''கம்மஞ் செய் மாக்கள் கருவி யொடுக்கிய'' என்றதும் இக் குறிப்பேயாம்.

பரிதல்- அறுத்தல்; இட்டு- துணைவினை. மாலைக் காலத்தில் சிறிது செவ்வானம் படந்திருக்கும்; ஆதலின், அது, 'புன் செக்கர்' எனப்பட்டது. அடங்கு புன் செக்கர்- வினைத்தொகை. மணந்தார்- வினையாலணையும் பெயர். உள்ளி- வினையெச்சம்; உள் அல்லது உள்ளு- பகுதி, இ- விகுதி. திமிர்தல்- பூசுதல்; அஃதிங்குத் தேய்த்து நீக்குதற் பொருளை யுணர்த்திற்று. மணந்தார்- களவு நெறியாற் றலைவியைக் கூடியவர். (எ)

தலைவனுடன் போதற் கிசைந்த தலைவி தோழிக்குக் கூறியது.

398. கடக்கருங் கானத்துக் காளைபின் னாளை
நடக்கவும் வல்லையோ வென்றி- சுடர்த்தொடீஇ
பெற்றா னொருவன் பெருங்குதிரை யந்நிலையே
கற்றா னஃதூறு மாறு.

(இ-ள்.) சுடர்தொடி- பிரகாசிக்கின்ற வளையலை யணிந்த தோழியே!, கடக்க அரும்- தாண்டிச் செல்வதற் கரியதாகிய, கானத்து- காட்டில், காளைபின்- (இளமையான) எருதுபோன்ற (உன்) தலைவன் பின்னே, நாளை- நாளைத் தினத்தில், நடக்கவும் வல்லையோ- (நீ) நடந்து செல்லவு மாட்டுவையோ?, என்றி - என்று என்னைப் பார்த்துச் சொன்னாய், பெரு குதிரை - பெரிய குதிரை யொன்றை, பெற்றான் ஒருவன்- அடைந்தவனாகிய ஒருவன், அ நிலையே - (பெற்ற) அச்சமயத்திலேயே, அஃது ஊரும் ஆறு- அதன்மேலேறி அதனை நடத்தும் கிரமத்தை, கற்றான்- தெரிந்துகொண்டவனே, (ஆவன்); (அவனைப்போல நானும் தலைவரை எப்பொழுது மணந்து கொண்டேனோ அப்பொழுதே அவருடன் காட்டிற் செல்லுதல் முதலிய காரியங்களிலும் வல்லவளாவேன்); எ-று.

தோழியே! நாளைத் தலைவருடன் காட்டில் நடந்து செல்ல மாட்டுவையோ? என்று நீ என்னை வினவுகின்றாய்! பெரிய குதிரை யொன்றைப் பெற்றவன் பெற்ற அப்பொழுதே அதனையேறிச் செலுத்தும் முறைமையையும் அறிந்தவனாவான்; அவனைப்போல நானும் தலைவரை மணந்த போதே அவருடன் காட்டில் செல்லுதல் முதலிய காரியங்களிலும் வல்லவளாவேன்; ஆதலால், என்னாலது முடியாத காரியமன்று என்பது இதன் கருத்து.

இது, தலைவியை மணந்த தலைவன் தன்னூர்க்குச் செல்லுங்கால் தலைவியும் உடன் செல்ல இசைந்திருக்கத் தோழி அவளை நோக்கி, ''நீகணவனுடன் செல்ல இசைந் திருக்கின்றாயே; வழியில் உள்ள காடு, நடக்குங்கால் வருத்தத்தைச் செய்வதாமே; அத்துன்பத்தைச் சகித்து நீ அக்காட்டில் செல்ல மாட்டுவையோ'' என்று கூற அதற்குத் தலைவி, 'நான் செல்லவல்லேன்' என்று கூறியதான துறை யமைத்துச் செய்யப்பட்ட தாகும்.

இதனால், கற்புடை மகளிர் எத்தகைய துன்பங்கள் வரினும் அவற்றைச் சகித்துக் கொண்டு கணவருட னுறைதலையே விரும்புவ ரென்பது பெறப்படுவதோடு அவர்க்கு நாயகர் மீதுள்ள அன்பும் இத்தகைய தென்பதும் வெளியாம்.

பின் இரண்டடிகளில் குதிரை பெற்றான் செயலை உபமானங் கூறி அதனால், தலைவி செயலாகிய உபமேயம் பெறவைத்தது- பிறிது மொழிதலணி. 'கடக்க அரும்' என்பது, 'கடக்கரும்' எனத் தொகுத்த லாயிற்று. காளை- தலைவனுக்கு உவமையாகுபெயர்; காம்பீரம், நடை, வல்லமை முதலியவற்றால் இளவெருது ஆண் மகனுக்கு உவமையாகக் கூறப்படும். 'வல்லை, என்றி' என்பதை முன்னிலையொருமை வினைமுற்றுக்கள். 'வல்லை' என்பதில், ஐ- விகுதி; 'என்றி' என்பதில், இ- விகுதி. சுடர்த்தொடிஇ -

வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; 'பிரகாசத்தையுடைய வளை' என விரித்தால், இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; இன்னிசையளபெடை; அளபெடையே விளியுரு பாயிற்று. நிலை- இங்குக் காலத்தை யுணர்த்திற்று; இட மெனினுமாம். ஆய்தம்- உயிரொலிபெற்று நின்றது. 'ஆவன்' என்பது இசை யெச்சமாக வருவித் துரைக்கப்பட்டது. (அ)

மகளை அவள் காதலனுடனனுப்பிய தாய், அவள் பொருட்டிரங்கிக் கூறுதல்.

399. முலைக்கண்ணு முத்து முழுமெய்யும் புல்லு
மிலக்கணம் யாது மறியேன்- கலைக்கணம்
வேங்கை வெரூஉ நெறிசெலிய போலுமென்
பூம்பாவை செய்த குறி.

(இ-ள்.) (என்மகளின்) முலை கண்ணும் - (முலைக் கண்களும், முத்தும்- முத்து மாலையும், முழுமெய்யும்- (என்னுடைய) முழு உடம்பிலும், (அதாவது, முலைக் கண் களும், முத்து மாலையும் என் உடம்பு முழுவதிலும் அழுந்த என் மகள் தழுவிய) இலக்கணம்- தன்மையை, யாதும் அறியேன்- (அப்போது நான்) சிறிதும் உணர்ந் திலேன், (இப் பொழுது அதனை யறிந்துகொண்டேன்; யாதெனில்), என் பூபாவை- என்னுடைய அழகிய சித்திரப்பதுமை போன்ற மகள், செய்தகுறி- (அப்பொழுது அவ்வாறு) செய்த அடை யாளம், கலைகணம் - மான் கூட்டங்கள், வேங்கை வெரூஉம் - வேங்கைப் புலிக்குப் பயந்து (அதன் கண்ணெதிர்ப்படாமல் மறைந்து) சஞ்சரிக்கின்ற, நெறி- காட்டு மார்க்கத்தில், செலிய போலும் - (தன் காலலனுடன்) செல்லுதற்குப் போலும்; எ-று.

என் மகள் நேற்றுத் தன் முலைக்கண்களும், முத்து மாலையும் என் உடம்பு முழுவதும் அழுந்தும்படி என்னைத்

தழுவிக் கொண்டாள்; அக்குறிப்பை நான் அப்பொழுது தெரிந்து கொள்ளவில்லை, இப்பொழுது தெரிந்துகொண் டேன்; அஃதியாதெனில், அவள் செய்த குறிப்பு தன் நாயகனுடன் இன்று காட்டு நெறியிற் செல்வதற்குப்போலும் என்பது இதன் கருத்து.

இது, தாய், தன் மகளை அவள் காதலனுடன் அனுப் புவதற்கு முதல் நாள், மகள், ''நாம் தாயைப் பிரிகின்றோம்; இனி எப்பொழுது பார்க்கப் போகின்றோம்'' என்று கவலை கொண்டு தாய்மீதுள்ள அன்பினால் அவளை இறுகத் தழுவிக்கொண்டிருந்து மறு நாள் தலைவனுடன் செல்ல, இவ்வுண்மையை முதல்நாள் தாய் அறியாமலிருந்து, மறுநாள் மகள் சென்ற பின், 'அவள் இவ்வாறு செல்வதற்கே நம்மை அவ்வாறு அன்பு ததும்பத் தழுவினாள்' என்றுணர்ந்து அவள் பிரிவு குறித்திரங்கிக் கூறியதாக துறையை அமைத்துப் பாடப்பட்டதாகும்.

இதனால், தலைவி, தாய்மீது மிக்க அன்புடைய வளாயிருப்பினும் ஒரு தலைவனுக்கு வாழ்க்கைப் பட்டபின், அவனுடன் செல்லுதல் முறைமை யென்றுணர்ந்து செல்வா ளென்பதும், செல்லினும் தாயின் அன்பினை எப்பொழுதும் மறவாளென்பதும், தாயும் மகள்மீது மிக்க அன்புடையவளா யிருப்பினும் ஒருவனுக்கவளை மணஞ்செய்து கொடுத்தபின் அவனுக்கவளுரியா ளென்பதை யுணர்ந்து அவனுடனவளை யனுப்ப இசைவா ளென்பதும், அவ்வாறனுப்பினும் மகளை மறவாது நினைத்து எப்பொழுதும் அவள் பிரிவு குறித்துக் கவலை கொள்வாளென்பதும் விளங்கும்.

மகள் தழுவியது, 'முலைக்கண்ணும் முத்தும் புல்லும்' என்று அவற்றின் வினையாகக் கூறப்பட்டது. 'கலைக்கணம் வேங்கை வெரூஉம் நெறி' என்றது- காட்டின் கொடுமையை விளக்கிற்று. வேங்கை வெரூஉம்- நான்காம் வேற்றுமைத் தொகை; 'வேங்கைக்கு வெருவும்' என

விரியும்; இது உலக வழக்கு; அச்சப்பொருளில் இதை ஐந்தாம் வேற்றுமைத் தொகையாகவேனும் இரண்டாம் வேற்றுமைத் தொகையாக வேனும் கொள்ள வேண்டு மென்பது தொல் காப்பியவிகுதி;

''அச்சக் கிளவிக் கைந்து மிரண்டும்
எச்ச மிலவே பொருள்வயி னான''

என்பது (தொல்.சொல்.வேற்றுமை-ம-17-ஆம்) சூத்திரம். 'வெருவும்' என்பது, 'வெரூஉம்' என அளபெடுத்தது; சொல்லிசையளபெடை. செலிய- செய்யிய வென்னும் வாய்பாட்டெதிர்கால வினை யெச்சம். போலும்- ஒப்பில் போலி; 'செல்லுதற்கு' என்னும் குறிப்புணர்த்து முருபாய் நின்றது; அசை யெனினுமாம். 'பூம்பாவை' என்பதற்கு, 'தாமரை மலரில் உறையும் இலக்குமிபோன்றமகள்' எனப் பொருளுரைப்பினுமாம். பாவை- உவமையாகுபெயர்.

தலைமகள் தலைவனைப் பிரிந்ததாலுண்டாம் வருத்தத்தைத் தோழிக்குக் கூறியது.

400. *கண்மூன் றுடையானுங் காக்கையும் பையரவு*
மென்னீன்ற யாயும் பிழைத்ததென்- பொன்னீன்ற
கோங்கரும் பன்ன முலையாய் பொருள்வயிற்
பாங்கனார் சென்ற நெறி.

(இ-ள்.) பொன் ஈன்ற- பொன்போலும் தேமல் பொருந்திய, கோங்கு அரும்பு அன்ன- கோங்கரும்பினை நிகர்த்த, முலையாய்- தனங்களையுடைய தோழியே (என் தலைவர் பிரிந்து சென்றதால் தனித்திருக்கும் என்னை, மன்மதவேதனையும், குயில் சத்தமும்; சந்திரனும், நான் எடுத்த பெண் பிறப்பும் வருந்துகின்றன; ஆனால், இவை இப்படி என்னை வருத்துமாறு), கண் மூன்று உடையானும்- (மன்மதனுடலை எரித்தும் மீண்டும் அவன் உயிரோடு

லாவும்படி செய்த) மூன்று கண்களையுடைய சிவனும், காக்கையும்- (தன்னுடைய இன மில்லாதிருந்தும் குயிலை உற்பத்தி செய்த) காகமும், பை அரவும் (சந்திரனை விழுங்கி யும் அப்படியே உட்கொண்டு விடாமல் மீண்டும் கக்கி வெளிப்படுத்தி உயிருடனிருக்கும்படி செய்த ராகு வென் னும்) படத்தையுடைய சர்ப்பமும், என் ஈன்ற - (என்னைப் பெற்ற காலத்திலேயே கொன்று விடாமல் வளர்த்துவர விரும்பி) என்னைப்பெற்ற யாயும் - தாயும், பிழைத்தது - (எனக்குக்) குற்றஞ் செய்தது, என் - யாது?, (ஒன்றுமில்லை), பொருள் வயின்- பொருளிடத்து, (இச்சையால்), பாங்கனார்- என் தலைவர், சென்ற- (அப்பொருளைத் தேடப்) போன நெறி - மார்க்கமே; (எனக்கு இடர் செய்தது); எ-று.

தோழியே! என் தலைவர் என்னைப் பிரிந்து சென்றதால் தனித்திருக்கும் என்னை மன்மத வேதனையும், குயில் சத்தமும், சந்திரனும், எனது பெண்பிறப்பும் வருத்து கின்றன; ஆனால் இவை இவ்வாறு வருத்தத்தைச் செய்யும் படி மன்மதனைக் கொன்றும் மீண்டும் உயிர் பெற்றுலகத்தில் சஞ்சரிக்கச் செய்த சிவனும், குயிலை உற்பத்தி செய்த காக்கையும், சந்திரனை விழுங்கியும் கொல்லாமல் மீண்டும் கக்கி உயிருடனிருக்கச் செய்த இராகுவென்னும் பாம்பும், என் பெற்ற தாயும் எனக்குச் செய்த பிழையொன்று மில்லை; என் நாயகர் பெற்ற தாயும் எனக்குச்செய்த பிழையொன்று மில்லை; என் நாயகர் பிரிவே இவை வருத்துதற் கேது வாயிற்று; ஆதலின், அவர் பொருள் வயிற் பிரிந்து சென்ற வழியே எனக்கிடர் செய்ததாயிற்று என்பது இதன் கருத்து.

இது, தலைவன், தலைவியை விட்டுப் பொருள் வயிற் பிரிந்து செல்ல மன்மத பாணத்தாலும், குயிற் சத்தத் தாலும், நிலவினாலும், பெண் தன்மையினாலும் அவளுக் குக் காம வேதனை அதிகரிக்க, அத்துயர் சகிக்க முடியாமல் அத்தலைவி, ‘எனக்கிவ்வேதனை யுண்டாம் படி இவற்றைத் தோற்றுவித்த சிவனும், காக்கையும், இராகுவும், என் தாயும்

செய்த தவறொன்று மில்லை; தலைவர் பொருள் வயிற் பிரிந்து சென்ற மார்க்கமே இடர் செய்ததாகும்' என்று தோழியிடம் கூறியதாகிய துறை அமைத்துச் செய்யப்பட்டதாகும்.

இதனால், தலைவனைப் பிரிந்த தலைவிக்குக் காம வேட்கை அதிகரிக்கு மென்பதும் அதனைச் சகிக்காதவர் பல பல சொல்லி வருந்துவரென்பதும், குலமகளிரால் மணவாளர்க்குண்டாம் காதல் இன்பம் இத்தகைய தென்பதும் புலனாம்.

விரக தாபங்கொண்டிருப்போர்க்கு மதன அம்சமாகிய காமம் மேன்மேலும் வளரும்; இதனை மன்மதன் மலர் அம்புகளை ஏவி அவரை வருத்துவதாகக் கற்பித்துக் கூறுவது மரபு; குயிலின் குரலும் தணந்தார்க்குக் காதலை வளர்க்கும்; நிலவும் ஆசையை மேலோங்கச் செய்யும்; நாயகரோடு கூடியிருப்பார்க்கு இவை இவ்வாறு செய்தல் இனிமையைத் தரும்; கணவரைப் பிரிந்திருப்பார்க்கு அக் காதலைப் பூர்த்திசெய்து கொள்ளுதல் முடியாமையால் துன்பத்தைச் செய்வனவாம்; பெண் பிறப்பும் அவ்வாறே இரண்டு சந்தர்ப்பங்ளிலும் இன்பத்தையும், துன்பத்தையும் முறையே தருவதாம். ஆதலின் காதலரைப் பிரிந்திருப்போர் இவற்றையும், இவற்றிற்கு ஏதுவாயிருப்போரையும், ஏதுவாயிருப்பவைகளையும் நிந்தித்தல் இயற்கை. அவ்வாறே இங்கு நிந்திக்கத் தொடங்கிய தலைவி அவற்றின் இயற்கைகளை விளக்கி, ஆனால் இவற்றின்மேலும், இவற்றின் உற்பத்திக்குக் காரணமாயிருந்தவர் மீதும் குற்ற மில்லை; இவை அதிகரிக்குமாறு என்னைத் தலைவர் பிரிந்து சென்ற நெறியே எனக்குத் தீங்கு செய்ததாகும் என்று கூறி னாள். இவைகள் துயர் செய்வனாவயிருப்பினும் தலைவர் பிரியாதிருந்தால் இவற்றால் நேரும் துயர் ஒன்றுமில்லையென்று இதனால் குறிப்பிட்டாள்.

'நெறியே பிழை செய்தது' என்றது - ''அந்நெறி யில்லாவிட்டால் தலைவர் போயிருக்க மாட்டார்; அந்நெறி யிருந்ததே அவர் பிரிந்து செல்வதற்கனுகூலமாகி விட்டது'' என்பதைக் குறிப்பித்ததாம். சிவன் மன்மதனை எரித்து மீண்டும் உயிர்த்தெழச் செய்ததும், இராகு சந்திரனை விழுங்கி உமிழ்வதும் புராணப் பிரசித்தம். குயில் காக்கைக் கூட்டில் அஃதில்லாத சமயம் பார்த்து அதன் முட்டையோடு தன் முட்டைகளையிட்டு விடும்; காகம் அவற்றைத் தன் முட்டைகளென்றே நினைத்து அடைகிடந்து அவற்றின் மூலமாகக் குஞ்சுகளைப் பொரித்து விடும்; குயில் தன் குஞ்சுகளுக்கு மாத்திரம் இரையூட்டி அவற்றை இரகசியமாக வளர்த்து அவற்றிற்குப் பறக்கும் பருவம் வந்தவுடன் அவைகளைத் தன்னோடு அழைத்துக் கொள்ளும்; முட்டையிடுவது குயில், குஞ்சைப் பிறப்பிப்பது காக்கை.

பொன்-ஆகு பெயராய்த் தன்னைப்போன்ற நிறத்தை யுடைய தேமலை யுணர்த்திற்று. பையரவு - இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனு முடன்றொக்கத் தொகை. பிழைத்தது - தொழிற்பெயர்; 'இடர் செய்தது' என்னும் பயனிலை வருவித்துரைக்கப்பட்டது. வயின்- ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. (கo)

காமத்துப்பால் முற்றுப் பெற்றது.

நாலடியார் மூலமும் உரையும் முற்றுப்பெற்றன.